www.tntextbooks.in

தமிழ்நாடு அரசு

மேல்நிலை இரண்டாம் ஆண்டு

வரலாறு

தமிழ்நாடு அரசு விலையில்லாப் பாடநூல் வழங்கும் திட்டத்தின் கீழ் வெளியிடப்பட்டது

பள்ளிக் கல்வித்துறை

தீண்டாமை மனிதநேயமற்ற செயலும் பெருங்குற்றமும் ஆகும்

XII History_FM.indd 1 02-01-2023 16:41:54

www.tntextbooks.in

தமிழ்நாடு அரசு

முதல் பதிப்பு – *2019*

திருத்திய பதிப்பு – *2020, 2022, 2023*

மறுபதிப்பு – *2021, 2024*

(புதிய பாடத்திட்டத்தின் கீழ்
வெளியிடப்பட்ட நூல்)

விற்பனைக்கு அன்று

**பாடநூல் உருவாக்கமும்
தொகுப்பும்**

மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி
மற்றும் பயிற்சி நிறுவனம்

© SCERT 2019

நூல் அச்சாக்கம்

கற்க கசடற

தமிழ்நாடு பாடநூல் மற்றும்
கல்வியியல் பணிகள் கழகம்

www.textbooksonline.tn.nic.in

XII History_FM.indd 2 23/12/2023 16:51:18

புத்தகத்தைப் பயன்படுத்தும் முறை

கற்றலின் நோக்கங்கள்	பாடத்தின் நோக்க எல்லை குறிக்கப்படுகிறது.
அறிமுகம்	பாடத்தில் பேசப்படும் துறைசார்ந்த செய்தி அறிமுகப்படுத்தப்படுகிறது.
விரைவுக் குறியீடு	மாணவர்களின் கூடுதல் புரிதலுக்காக அனிமேஷன் காட்சிகளை வழங்குகிறது.
உங்களுக்குத் தெரியுமா?	மாணவர்களின் ஆர்வத்தைத் தூண்டும் வகையில் பாடத்துடன் தொடர்புடைய கூடுதல் தகவல்களைப் பெட்டிச் செய்தியாக வழங்குகிறது.
விளக்கப்படம்	கடினமான கருத்துகளை எளிதாக்கும் நோக்கத்துடன் செய்திகளைப் படங்கள் வாயிலாக விளக்குகிறது.
பாடச் சுருக்கம்	முக்கியமான கருத்துகள் மாணவர்களின் மனதில் பதியும் வண்ணம் ஒன்று அல்லது இரண்டு வரிகளில் நினைவுறுத்துகிறது.
பயிற்சி	மாணவர்கள் தாங்களே பயில்வதற்கும் மதிப்பீடு செய்வதற்கும் உதவுகிறது.
செயல்பாடுகள்	மாணவர்கள் தனியாக அல்லது குழுவாகச் சில செயல்பாடுகளில் ஈடுபட்டு கற்க உதவுகிறது.
மேற்கோள் நூல்கள்	பாடநூல் ஆக்கத்திற்கு ஆசிரியர்கள் பயன்படுத்திய மூல நூல்களின் பட்டியலை அளிக்கிறது. மாணவர்களின் விரிவான கற்றல் பயன்பாட்டிற்கு இது உதவுகிறது.
கலைச்சொற்கள்	முக்கியச் சொற்களையும் தொழில்நுட்பச் சொல்லாடல்களையும் பாடத்தின் முடிவில் விளக்குகிறது.
இணையச் செயல்பாடு	கற்றல் செயல்பாடுகளுக்காக மின்னணு ஊடகச் சான்றுகளைப் பயன்படுத்தி மாணவர்கள் தங்கள் பாடம் தொடர்பான புரிதலை மேம்படுத்திக்கொள்ள உதவுகிறது.

XII History_FM.indd 3 02-01-2023 16:41:55

பொருளடக்கம்

அலகு	பொருளடக்கம்	பக்க எண்	மாதம்
1	இந்தியாவில் தேசியத்தின் எழுச்சி	1	ஜூன்
2	தீவிர தேசியவாதத்தின் எழுச்சியும் சுதேசி இயக்கமும்	17	ஜூன்
3	இந்திய விடுதலைப்போரில் முதல் உலகப்போரின் தாக்கம்	34	ஜூன்
4	காந்தியடிகள் தேசியத் தலைவராக உருவெடுத்து மக்களை ஒன்றிணைத்தல்	47	ஜூலை
5	ஏகாதிபத்தியத்திற்கு எதிரான போராட்டங்களில் புரட்சிகர தேசியவாதத்தின் காலம்	68	ஜூலை
6	தேசியவாத அரசியலில் வகுப்புவாதம்	82	ஜூலை
7	இந்திய தேசிய இயக்கத்தின் இறுதிக்கட்டம்	93	ஆகஸ்ட்
8	காலனியத்துக்குப் பிந்தைய இந்தியாவின் மறுகட்டமைப்பு	111	ஆகஸ்ட்
9	ஓர் புதிய சமூக – பொருளாதார ஒழுங்கமைவை எதிர் நோக்குதல்	128	ஆகஸ்ட் & செப்டம்பர்
10	நவீன உலகம்: பகுத்தறிவின் காலம்	146	அக்டோபர்
11	புரட்சிகளின் காலம்	170	அக்டோபர்
12	ஐரோப்பாவில் அமைதியின்மை	200	அக்டோபர் & நவம்பர்
13	ஏகாதிபத்தியமும் அதன் தாக்கமும்	222	நவம்பர்
14	இரண்டாம் உலகப்போரும் காலனிய நாடுகளில் அதன் தாக்கமும்	251	நவம்பர்
15	இரண்டாம் உலகப்போருக்குப் பிந்தைய உலகம்	280	டிசம்பர்
	காலக்கோடு	304	

T0IN8

மின் நூல்

SNZD5

மதிப்பீடு

XII History_FM.indd 4 02-01-2023 16:41:55

அலகு 1

இந்தியாவில் தேசியத்தின் எழுச்சி

கற்றலின் நோக்கங்கள்

கீழே குறிப்பிடப்பட்டவைகளோடு அறிமுகமாதல்

- வேளாண் செயல்களில் ஏற்பட்ட மாற்றங்களும் ஆங்கிலேய உற்பத்தியாளர்களின் இறக்குமதியும் இந்தியக் கைவினைத் தொழில்களையும் கைவினைஞர் வாழ்வையும் சீரழித்தது
- குறிப்பிட்ட இடைவெளிகளில் ஏற்பட்ட பஞ்சங்கள் நிலமற்றத் தொழிலாளர்களையும் வேலையில்லாக் கைவினைஞர்களையும் புலம்பெயரச் செய்தது
- மேற்கத்தியக் கல்வியின் அறிமுகமும் தேசிய எழுச்சியின் உதயமும்
- இந்தியாவில் தேசிய எழுச்சிக்குப் பங்களிப்புச் செய்த ஏனைய காரணிகள்
- நவீன இந்தியாவின் படித்த வகுப்பினர் இந்திய தேசிய காங்கிரசுக்கான அடித்தளம் அமைத்தல்
- தொடக்ககாலத் தேசியவாதிகளும் அவர்களின் பங்களிப்பும் குறிப்பாக நௌரோஜியும் அவருடைய செல்வச் சுரண்டல் கோட்பாடும்

அறிமுகம்

இந்தியாவை முன்னைக் காட்டிலும் அதிகமாகச் சுரண்டுவதற்காகவும் கட்டுப்படுத்துவதற்காகவும் இந்திய அரசியலை, பொருளாதாரத்தை ஒருமுகப்படுத்துவதில் ஆங்கிலேயர் வெற்றி பெற்றனர். இவ்வெற்றி தவிர்க்க இயலாத வகையில் தேசிய உணர்வின் வளர்ச்சிக்கும், தேசிய இயக்கம் தோன்றுவதற்கும் இட்டுச் சென்றது. பத்தொன்பதாம் நூற்றாண்டில் சமூகச் சீர்திருத்தங்களுக்காக மேற்கொள்ளப்பட்ட இயக்கங்கள், போராட்டங்கள் அவற்றைத் தொடர்ந்து மேலைக்கல்வி பயின்ற இந்தியர்கள், குடிமை உரிமைகளுக்காக முன்வைத்த வேண்டுகோள்கள், சமர்ப்பித்த மனுக்கள் ஆகியவற்றை ஆரம்பப் புள்ளிகளாகக் கொண்டு இந்திய தேசிய இயக்கத்தின் வரலாறு தொடங்குகிறது. கி.பி. (பொ.ஆ) 1915இல் மோகன்தாஸ் கரம்சந்த் காந்தி தென்னாப்பிரிக்காவிலிருந்து இந்தியா திரும்பி, 1919இல் இந்திய தேசிய இயக்கத்திற்கு அவர் தலைமையேற்றதிலிருந்து இந்திய தேசியம் மிகப்பெரும் மக்கள் இயக்கமாக மாறியது.

தேசியம்: விரிவான தளத்தில் தேசியமென்பது ஒரு நாட்டிற்கு விசுவாசமாகவும் பக்தியோடும் இருத்தல் எனப் பொருள் கொள்ளப்படுகிறது. அது தனது நாட்டை ஏனைய நாடுகளைக் காட்டிலும் உயர்வான இடத்தில் வைத்துப் பார்த்து அல்லது ஏனைய நாடுகளுக்குப் போட்டியாக தனது நாட்டின் பண்பாடும் மற்றும் விருப்பங்களின் வளர்ச்சியில் சிறப்புக் கவனம் செலுத்தும் ஒரு தேசிய உணர்வு அல்லது மனப்போக்காகும்.

காந்தியடிகளுக்கு முன்னர் தாதாபாய் நௌரோஜி, கோபால கிருஷ்ண கோகலே, பிபின் சந்திர பால், லாலா லஜபதி ராய், பால கங்காதர திலகர் போன்றோரும், ஏனையோரும் காலனியச் சுரண்டல் குறித்தும், மக்களின் தேசிய அடையாளம் பற்றியும் இந்தியர்களுக்குக் கற்றுக் கொடுப்பதற்கான முன் முயற்சிகளை மேற்கொண்டனர். இவ்வியலில் இந்திய தேசிய இயக்கத்தின் தோற்றம், வளர்ச்சி ஆகியவற்றின் வழித்தடத்தைக் கண்டறிவதோடு, தொடக்ககாலத் தலைவர்கள் என்றறியப்பட்ட இவர்களின் பங்களிப்பின் மீதும் கவனம் செலுத்துகிறோம்.

1.1 சமூகப் பொருளாதாரப் பின்னணி

(அ) புதிய நிலவுடைமை உரிமைகளால் ஏற்பட்ட பாதிப்புகள்

இந்தியாவின் மரபு சார்ந்த நிலவுடைமை முறையை ஆங்கிலேயர் சிதைத்தனர். ஆங்கிலேயர்க்கு முந்தைய காலங்களில் நிலவரியானது, விவசாயிகளுடன் விளைச்சலைப் பகிர்ந்து கொள்வதாய் அமைந்திருந்தது. ஆனால், ஆங்கிலேயர் பயிர்கள் விளையாமல் போவது, விலைகளில் ஏற்படும் வீழ்ச்சி, வறட்சி, பஞ்சம் போன்ற நிகழ்வுகளைக் கணக்கில் கொள்ளாமல் நிலவரியைப் பணமாகக் கணக்கிட்டு நிர்ணயம் செய்தனர். மேலும் கடனை அடைப்பதற்காக விற்பனை செய்வது என்பதும் பழக்கமானது. வட்டிக்குக்கடன் கொடுப்பவர்களை நிலவுரிமையாளர்களுக்கு முன்பணம் வழங்க ஊக்குவித்து, கடன் கொடுத்தவர்கள் கடன் வாங்கியவரின் சொத்துகளை இதன்மூலம் அபகரிக்க அனைத்து விதமான சூழ்ச்சிகளையும், மோசடிகளையும் மேற்கொண்டனர்.

கிழக்கிந்திய கம்பெனி அறிமுகம் செய்த புதிய நில நிர்வாகக் கொள்கையினால் மேலும் இரண்டு முக்கியப் பாதிப்புகள் ஏற்பட்டன. நிலத்தை விற்பனைப் பொருளாக்குவது, இந்தியாவில் வேளாண்மையை வணிகமயமாக்குவது ஆகிய இரண்டையும் அவர்கள் நிறுவனமாகவே ஆக்கினர். ஆங்கிலேயர் வருகைக்கு முன்பு இந்தியாவில் நிலத்தில் தனிச் சொத்துரிமை என்பது இல்லை. தற்போது நிலம் ஒரு சரக்காக மாற்றப்பட்டு விற்பது அல்லது வாங்குவதன் வழியாக நபர்களிடையே கைமாறியது. மேலும் வரி/குத்தகை செலுத்தப்படவில்லை என்பதற்காக அரசு நிர்வாகம் நில உரிமையாளர்களிடமிருந்து நிலங்களைப் பறிமுதல் செய்தது. இந்நிலங்கள் மற்றவர்களுக்கு ஏலத்திற்கு விடப்பட்டன. இம்முறையால் ஒரு புதுவகையான நிலப்பிரபுக்கள் வர்க்கம் உருவானது. தங்கள் நிலங்களில் வாழாமல் நகரங்களில் வாழ்ந்த இவர்கள் குத்தகையை மட்டும் கறந்து கொண்டனர். மரபு சார்ந்த வேளாண் முறையில் விவசாயிகள் பெரும்பாலும் தங்கள் நுகர்வுப் பயன்பாட்டிற்குத் தேவையானதை மட்டுமே உற்பத்தி செய்தனர். புதிய நிலவருவாய் முறைகள் அறிமுகமான பின்னர் அவர்கள் சந்தைக்குத் தேவையானதை மட்டுமே உற்பத்தி செய்தனர்.

நிலம் விற்பனைச்சரக்காக மாற்றப்பட்டதும் வேளாண்மை வணிகமயமாக்கப்பட்டதும் விவசாயிகளின் வாழ்க்கை நிலையில் எந்த ஒரு முன்னேற்றத்தையும் ஏற்படுத்தவில்லை; மாறாக, விவசாயிகளிடையே மனநிறைவின்மையை ஏற்படுத்தி அவர்களை அமைதி இழந்தவர்களாக, கட்டுப்பாடுகளை மீறுபவர்களாக ஆக்கியது. இந்த விவசாயிகள் பின்னர் ஏகாதிபத்தியவாதிகளுக்கும் அவர்களின் கூட்டாளிகளுக்கும் எதிராகத் திரும்பினர்.

(ஆ) கட்டுப்பாடுகளற்ற வணிகக் கொள்கை, தொழில் நீக்கச் செயல்பாடுகள்: இந்தியக் கைவினைஞர்கள் மீது ஏற்படுத்தியத் தாக்கம்

இங்கிலாந்தில் தொழில் புரட்சி ஏற்பட்டதைத் தொடர்ந்து கம்பெனி பின்பற்றியக் கொள்கையானது, இந்தியாவில் தொழில்கள் நீக்கப்படும் விளைவுகளை ஏற்படுத்தியது. இப்போக்கு முதல் உலகப் போர் தொடங்கும் வரை நீடித்தது. ஆங்கில அரசு கட்டுப்பாடுகளற்ற சுதந்திர வணிகம் (*laissez faire*) எனும் கொள்கையைப் பின்பற்றியது. பருத்தி, சணல், பட்டு ஆகிய கச்சாப் பொருட்கள் இந்தியாவிலிருந்து இங்கிலாந்திற்கு எடுத்துச் செல்லப்பட்டன. இக்கச்சாப் பொருட்களிலிருந்து உற்பத்தி செய்யப்பட்டப் பொருட்கள் மீண்டும் இந்தியச் சந்தைக்கு அனுப்பி வைக்கப்பட்டன. தொழில்நுட்ப வளர்ச்சியின் உதவியுடன் இங்கிலாந்தில் உற்பத்தி செய்யப்பட்டப் பொருட்கள் இந்தியச் சந்தைகளில் மலைபோல் குவிந்தன. இந்தியக் கைத்தறி நெசவுத் துணிகளைக் காட்டிலும் இறக்குமதி செய்யப்பட்டத் துணிகள் குறைந்த விலையில் கிடைத்தன. ஆங்கிலேயரின் வருகைக்கு முன்பாக தனது கைத்தறித் துணிகளுக்காகவும் கைவினைப் பொருட்களுக்காகவும் இந்தியா புகழ் பெற்றிருந்தது. உலகச் சந்தையிலும் நல்ல மதிப்பைப் பெற்றிருந்தது. இருந்த போதிலும் காலனியாதிக்கக் கொள்கையின் விளைவாக இந்தியக் கைத்தறிப் பொருட்களும் கைவினைப் பொருட்களும் தங்கள் உள்நாட்டு, பன்னாட்டுச் சந்தைகளைப் படிப்படியாக இழந்தன. இங்கிலாந்துப் பொருட்கள் இறக்குமதி செய்யப்பட்டதால் இந்தியாவின் நெசவாளர், பருத்தியிழை ஆடை தயாரிப்போர், தச்சர், கொல்லர், காலணிகள் தயாரிப்போர் ஆகியோர் வேலையற்றோர் ஆயினர். கச்சாப் பொருட்களைக் கொள்முதல் செய்வதற்கான இடமாக இந்தியா மாறியது. இங்கிலாந்தின் தொழிற்சாலைகளுக்குத் தேவையான தொழிற்சாலைப் பயிர்களான அவுரி (Indigo) மற்றும் ஏனையப் பயிர்களை உற்பத்தி செய்யும்படி இந்திய விவசாயிகள் வற்புறுத்தப்பட்டனர். இம்மாற்றத்தினால் பல நூற்றாண்டுகளாக இந்தியாவின் மூலாதாரமாக விளங்கிய வேளாண்மை பாதிக்கப்பட்டு உணவுப் பற்றாக்குறைக்கு இட்டுச் சென்றது.

12th_History_TM_Unit_1.indd 2
02-01-2023 16:34:23



அவுரி (இண்டிகோ) சாகுபடி

1859–60இல் வங்காளத்தில் நடைபெற்ற இண்டிகோ கலகம் கம்பெனியின் அடக்குமுறைக் கொள்கைக்கு எதிரான இந்திய விவசாயிகளின் ஒரு எதிர்வினையாகும். பெரும்பாலும் ஐரோப்பியர்களுக்குச் சொந்தமாயிருந்த நிலங்களில் இந்தியக் குத்தகை விவசாயிகள் அவுரியைப் பயிரிடக் கட்டாயப்படுத்தப்பட்டனர். துணிகளுக்கு சாயம் தயாரிக்கப் பயன்படுத்தப்படும் இச்செடிக்கு ஐரோப்பாவில் பெரும்தேவை ஏற்பட்டிருந்தது. சிறியதோர் தொகையை முன்பணமாகப் பெற்றுக் கொள்ளவும் சாதகமற்ற ஒப்பந்தங்களை ஏற்றுக் கொள்ளவும் இந்திய விவசாயிகள் கட்டாயப்படுத்தப்பட்டனர். ஒரு விவசாயி இவ்வொப்பந்தத்திற்கு ஒப்புக் கொள்ளும் பட்சத்தில் அவர் தனது நிலத்தில் அவுரியை மட்டுமே பயிர் செய்தாக வேண்டும். அவுரிக்குப் பண்ணையார் கொடுக்கும் விலையோ சந்தை விலையைவிடக் குறைவாக இருந்தது. இதனால் பல சமயங்களில் தங்கள் நிலங்களுக்கான வரிபாக்கியைக்கூட விவசாயிகளால் செலுத்த இயலாத நிலை ஏற்பட்டது. ஆட்சியாளர்கள் தங்களது குறைகளை நிவர்த்தி செய்வர் என்ற நம்பிக்கையில் விவசாயிகள் அதிகாரிகளுக்குப் பல மனுக்களை எழுதினர். அமைதியான வழிகளில் தங்களின் எதிர்ப்புகளைத் தெரிவித்தனர். இவர்களின் வேண்டுகோள்கள் அனைத்தும் பயனற்றுப் போனதால் முன்பணம் பெறவும் புது ஒப்பந்தம் போடவும் அவர்கள் மறுத்துக் கலகத்தில் இறங்கினர். 1859–60இல் மேற்கொள்ளப்பட்ட இந்த இண்டிகோ புரட்சியின் மூலம் விவசாயிகள் பண்ணையார்களை வடக்கு வங்காளத்திலிருந்து வெளியேற்றினர்.

(இ) பஞ்சங்களும் இந்தியர்கள் ஆங்கிலேயரின் கடல் கடந்த காலனிகளில் குடியேறுதலும்

பஞ்சங்கள்

இந்தியா மேன்மேலும் தொழில் நீக்கம் செய்யப்பட்ட நாடாக மாறியதால் கைவினைத்தொழில்களில் ஈடுபட்டிருந்த கைவினைத் தொழிலாளர்கள் வேலையிழந்தனர். மேலும் நீர்ப்பாசன ஏற்பாடுகள் மராமத்து செய்யப்படாமல் புறக்கணிக்கப்பட்டதாலும் கொடுமையான நிலவரியின் காரணமாகவும் பஞ்சங்கள் மீண்டும் மீண்டும் ஏற்பட்டன. ஆங்கிலேயரின் வருகைக்கு முன்னர் இந்திய ஆட்சியாளர்கள் பஞ்ச காலங்களில் வரி விலக்களிப்பது, தானியங்களின் விலைகளை முறைப்படுத்துவது, பஞ்சத்தால் பாதிப்புக்குள்ளானப் பகுதிகளிலிருந்து உணவு தானியங்கள் ஏற்றுமதி செய்யப்படுவதைத் தடை செய்வது போன்ற நடவடிக்கைகள் மூலம் மக்களின் சிரமங்களைச் சீர்செய்து துயர் துடைத்தனர். ஆனால் ஆங்கிலேயர்கள் பஞ்சங்களின் போதும் தலையிடாக் கொள்கையைப் பின்பற்றினர். இதன் விளைவாக ஆங்கிலேயரின் ஆட்சியில் லட்சக்கணக்கான மக்கள் பட்டினியால் மாண்டனர். 1770–1900 ஆகிய ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலப்பகுதியில் பஞ்சத்தின் காரணமாக இருபத்தைந்து மில்லியன் மக்கள் உயிரிழந்ததாக மதிப்பிடப்பட்டுள்ளது. 1793இல் தொடங்கி 1900 வரையிலான காலப்பகுதியில் உலகில் பல்வேறு பகுதிகளில் நடைபெற்ற போர்களில் மரணமடைந்தோரின் எண்ணிக்கை ஐந்து மில்லியனாக இருக்க 1891 முதல் 1900 வரையிலான பத்தாண்டுகளில் பஞ்சத்தினால் மட்டுமே இந்தியாவில் பத்தொன்பது மில்லியன் மக்கள் உயிரிழந்ததாக மெட்ராஸ் டைம்ஸ் பத்திரிக்கையின் ஆசிரியர் வில்லியம் டிக்பை குறிப்பிட்டுள்ளார்.

இதில் துயரம் யாதெனில், பட்டினியால் மக்கள் மடிந்து கொண்டிருந்த நிலையில் பல மில்லியன் டன் கோதுமை இங்கிலாந்திற்கு ஏற்றுமதி செய்யப்பட்டது. எடுத்துக்காட்டாக 1866இல் ஒரிசா பஞ்சத்தின்போது ஒன்றரை மில்லியன் மக்கள் பட்டினிக்குப் பலியான நிலையில் ஆங்கிலேயர் 200 மில்லியன் பவுண்ட்

12th_History_TM_Unit_1.indd 3 02-01-2023 16:34:23

அரிசியை இங்கிலாந்திற்கு ஏற்றுமதி செய்தனர். ஒரிசா பஞ்சத்தின் தூண்டுதலின் காரணமாக தேசியவாதியான தாதாபாய் நௌரோஜி இந்தியாவின் வறுமை குறித்துத் தனது வாழ்நாள் முழுவதுமான ஆய்வைத் தொடங்கினார். 1876–1878 காலப்பகுதியில் தொடர்ந்து இரண்டாண்டுகள் பருவமழைப் பொய்த்துப் போனதால் மதராஸ் மாகாணத்தில் பெரும் பஞ்சம் ஏற்பட்டது. ஒரிசா பஞ்சத்தின் போது பின்பற்றப்பட்ட தலையிடாக் கொள்கையையே அரசப்பிரதிநிதி லிட்டன் பின்பற்றினார். மதராஸ் மாகாணத்தில் 3.5 மில்லியன் மக்கள் பஞ்சத்திற்குப் பலியானதாக மதிப்பிடப்பட்டுள்ளது.

மதராஸ் பஞ்சம்

ஒப்பந்தக் கூலித் தொழிலாளர்

ஆங்கிலேயப் பேரரசின் காலனிகளான சிலோன் (ஸ்ரீலங்கா), மொரிஷியஸ், ஃபிஜி, மலேயா, கரீபியன் தீவுகள், தென்னாப்பிரிக்கா போன்ற பகுதிகளில் பெருந்தோட்டப் பயிர்களான காபி, தேயிலை, கரும்பு ஆகியன அறிமுகமானபோது அத்தோட்டங்களில் வேலை செய்யப் பெரும் எண்ணிக்கையிலான தொழிலாளர்கள் தேவைப்பட்டனர். 1815இல் சிலோன் ஆளுநர் மதராஸ் மாகாண ஆளுநருக்கு எழுதிய கடிதத்தில் பெருந்தோட்டங்களில் வேலை செய்யக் "கூலிகளை" அனுப்பிவைக்கக் கேட்டுக் கொண்டார். மதராஸ் மாகாண ஆளுநர் இக்கடிதத்தை மேல் நடவடிக்கைக்காகத் தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியருக்கு அனுப்பி வைத்தார். மக்கள் தங்கள் நிலத்தின் மீது அதிகப்பற்றுக் கொண்டிருப்பதால் ஊக்கத் தொகை ஏதேனும் வழங்காமல் அம்மக்களை அவர்களின் சொந்த மண்ணிலிருந்து நகரச் செய்வது சிரமமெனத் தஞ்சை மாவட்ட ஆட்சியர் தெரிவித்தார். ஆனால் 1833, 1843 ஆகிய ஆண்டுகளில் ஏற்பட்ட பஞ்சங்கள் அரசாங்கத்தின் தூண்டுதல் இல்லாமலேயே மக்கள் புலம்பெயர்ந்து செல்லும் நிலையை உருவாக்கியது. ஒப்பந்தக் கூலித் தொழிலாளர் முறையின் கீழ் இலங்கையின் காபி, தேயிலைத் தோட்டங்களில் இந்தியர்கள் கூலிகளாக வேலைசெய்யச் சென்றனர். 1843இல் பிரிட்டிஷ் இந்தியாவில் அடிமைமுறை ஒழிக்கப்பட்டதால் பேரரசின் காலனிகளுக்கு குடிபெயரும் செயல்பாடுகள் ஊக்கம் பெற்றன. 1837இல் தமிழ்நாட்டிலிருந்து குடிபெயர்ந்து இலங்கையில் காபித் தோட்டங்களில் வேலை செய்த தொழிலாளர்களின் எண்ணிக்கை சுமார் 10,000.தொழிலின் வேகமான வளர்ச்சியால் தொழிலாளர்களின் தேவை அதிகரித்தது. 1846இல் 80,000 என மதிப்பிடப்பட்ட தமிழ் தொழிலாளர்களின் எண்ணிக்கை 1855இல் 1,28,000 ஆனது. 1877இல் ஏற்பட்ட பஞ்சத்தினால் இலங்கையில் ஏறத்தாழ 3,80,000 தமிழ் கூலித்தொழிலாளர்கள் பணியமர்த்தப்பட்டிருந்தனர்.

ஒப்பந்தத் தொழிலாளர் முறை: உழைப்புடன் கூடிய கடுங்காவல் தண்டனை போன்ற இவ்வொப்பந்தக் கூலித்தொழிலாளர் முறையின் கீழ் தொழிலாளர்கள் ஐந்து வருட காலத்திற்கு ஒப்பந்தம் செய்யப்பட்டனர். இறுதியில் அவர்கள் குறைந்த அளவு கூலியைப் பெற்றுக் கொண்டு வீடு திரும்பலாம். வறுமையில் உழன்ற பல விவசாயிகளும் நெசவாளர்களும் ஓரளவுப் பணம் சம்பாதிக்கும் நம்பிக்கையுடன் சென்றனர். ஆனால் அது அடிமைத் தொழிலை விடவும் மோசமாக அமைந்தது. வறுமையில் வாடிய ஏழைத் தொழிலாளர்களைச் சூழ்ச்சியின் மூலமோ அல்லது கடத்தியோ கொண்டுவர அரசு தனது முகவர்களை (கங்காணிகள்) அனுமதித்தது. நீண்ட கடல் பயணத்தில் தொழிலாளர்கள் பெருந்துயரங்களுக்குள்ளாயினர். பலர் வழியிலேயே இறந்தனர். 1856–1857இல் கல்கத்தாவிலிருந்து டிரினிடாட் சென்ற கப்பலில் பயணம் செய்த ஒப்பந்தக் கூலித்தொழிலாளர்களின் இறப்பு விகிதம் பின்வருமாறு: ஆண்களில் 12.3 விழுக்காட்டினரும், பெண்களில் 18.5 விழுக்காட்டினரும், 28% சிறுவர்களும், 36% சிறுமிகளும், 55% குழந்தைகளும் இறந்துவிட்டனர்.

இலங்கைக்கு மட்டுமல்லாது ஏனைய ஆங்கிலேய காலனிகளான மொரிஷியஸ், நீரிணைக் குடியேற்றங்கள் (Strait Settlements), கரீபியன் தீவுகள், டிரினிடாட், ஃபிஜி, தென்னாப்பிரிக்கா போன்ற இடங்களுக்கும் ஒப்பந்தக் கூலித் தொழிலாளர்களாகக் குடிபெயர்ந்து செல்ல இந்தியர்கள் விருப்பம் தெரிவித்தனர். 1843இல் மொரிஷியஸில் 30,218 ஆண்களும்

12th_History_TM_Unit_1.indd 4 02-01-2023 16:34:24

4,307 பெண்களும் குடியேறியதாக அரசே அறிவித்தது. நூற்றாண்டின் இறுதியில் 5,00,000 தொழிலாளர்கள் இந்தியாவிலிருந்து மொரிஷியஸ் சென்றனர்.

ஒப்பந்தக் கூலித் தொழிலாளர்கள்

1.2 மேற்கத்தியக் கல்வியும் அதன் தாக்கமும்

(அ) ஆங்கிலேயருக்கு முந்தைய இந்தியாவில் கல்வி

காலனிய காலத்திற்கு முந்தைய இந்தியாவில் கல்வியானது சாதி, மத அடிப்படையில் துண்டுபட்டிருந்தது. இந்துக்களிடையே, பிராமணர்கள் உயர்நிலை சார்ந்த சமய, தத்துவ அறிவினைப் பெறும் தனியுரிமையைப் பெற்றிருந்தனர். கல்வியைத் தங்களின் முற்றுரிமையாக்கிக் கொண்ட அவர்கள் பிரதானமாக அர்ச்சகர்களாகவும் ஆசிரியர்களாகவும் சமூகத்தில் அங்கம் வகித்தனர். வித்யாலயங்கள், சதுஸ்பதிகள் என்றழைக்கப்பட்ட உயர்தரக் கல்விக் கூடங்களில் கல்வி பயின்றனர். புனிதமான மொழி எனக் கருதப்பட்ட சமஸ்கிருத மொழி வழியில் அவர்கள் கல்வி கற்றனர். தொழில் நுட்ப அறிவானது – குறிப்பாகக் கட்டடக்கலை, உலோகவியல் சார்ந்த அறிவுத்திறனானது பரம்பரையாக ஒரு சந்ததியிடமிருந்து மற்றொன்றுக்கு கைமாற்றம் செய்யப்பட்டது. இம்முறை புதிய முயற்சிகளுக்குத் தடையாயிருந்தது. இம்முறையிலிருந்த மற்றுமொரு குறைபாடு பெண்களும் ஒடுக்கப்பட்டோரும் ஏனைய ஏழை மக்களும் கல்வியறிவு பெறுவதிலிருந்து தடை செய்யப்பட்டதாகும். கல்வி கற்பதில் மனப்பாட முறைக்கு முக்கியத்துவம் தரப்பட்டது. புதிய முயற்சிகளுக்கு மற்றுமொரு தடைக்கல்லாயிற்று.

(ஆ) காலனியரசின் பங்களிப்பு: மெக்காலே கல்வி முறை

இந்தியர்களைக் கல்வி கற்றவர்களாகவும் வலிமை பெற்றவர்களாகவும் மாற்ற வேண்டும் என்பதைக் காட்டிலும் வேறுசில காரணங்களுக்காகவும் காலனியரசு இந்தியாவில் நவீனக் கல்வியின் பரவலுக்கு உதவிகள் செய்தது. இந்தியா போன்ற ஒரு பெரிய காலனி நாட்டை ஆள்வதற்கு ஆங்கிலேயர்க்குத் தங்களிடம் பணி செய்ய பெரும் எண்ணிக்கையிலான கல்வி கற்ற நபர்கள் தேவைப்பட்டனர். தேவைப்படும் அளவிற்கான பெருவாரியானப் படித்த நபர்களை இங்கிலாந்திலிருந்து அழைத்து வருவது சாத்தியமற்றது. இந்நோக்கத்தில்தான் 1835இல் இந்தியக் கவுன்சில் ஆங்கிலக் கல்விச் சட்டத்தை

T. B. மெக்காலே

T.B. மெக்காலே 1834 முதல் 1838 வரை கவர்னர் ஜெனரலின் ஆலோசனைக் குழுவில் முதல் சட்ட உறுப்பினராக அங்கம் வகித்தவர். மெக்காலே இந்தியாவிற்கு வருவதற்கு முன்னதாக 1823இல் பொதுக்கல்விக்கான பொதுக்குழு உருவாக்கப்பட்டது. கல்வி தொடர்பாகவும், எம்மொழியில் கல்வி கற்பிக்கப்பட வேண்டும் என்பது குறித்தும் கிழக்கிந்தியக் கம்பெனிக்கு வழிகாட்டுவது இக்குழுவின் பொறுப்பாகும். இவ்வமைப்புப் பின்னர் இரண்டு குழுக்களாகப் பிரிந்தது. கீழ்த்திசைக் குழுவானது கல்வி பிராந்திய மொழிகளில் கற்பிக்கப்பட வேண்டும் எனும் கருத்தை முன்வைத்தது. ஆங்கில மரபுக்குழு மேலைக் கல்வியானது ஆங்கில மொழி வழியில் கற்பிக்கப்பட வேண்டும் எனும் கருத்தை முன் வைத்தது.

மெக்காலே ஆங்கில மரபுக்குழுவின் கருத்துக்கு ஆதரவாக இருந்தார். 1835இல் அவர் தனது புகழ்பெற்ற "இந்தியக் கல்வி குறித்த குறிப்புகள் (*Minute on Indian Education*)" எனும் குறிப்புகளை வெளியிட்டார். இக்குறிப்புகளில் ஆங்கில வழியில் மேற்கத்தியக் கல்வி கற்பிக்கப்படுவதற்கு ஆதரவாக வாதிட்டார். ரத்தத்திலும் நிறத்திலும் இந்தியராகவும் விருப்பத்தில், கருத்தில், ஒழுக்க நெறிகளில், அறிவில் ஆங்கிலேயராய் இருக்கும் ஒரு மக்கள் பிரிவினரை இந்தியாவிற்குள்ளே உருவாக்க அவர் விரும்பியதே அவர் ஆங்கில மரபுக் குழுவை ஆதரித்ததன் காரணமாகும்.

12th_History_TM_Unit_1.indd 5 02-01-2023 16:34:26

இயற்றியது. இந்தியாவில் அறிமுகம் செய்ய வேண்டிய ஆங்கிலக் கல்விமுறையை வடிவமைத்தவர் டி.பி. மெக்காலே ஆவார். இதன் விளைவாகக் காலனிய நிர்வாகம், ஆங்கில நவீனக் கல்வியை வழங்கும் பள்ளிகளையும், கல்லூரிகளையும் பல்கலைக்கழகங்களையும் இந்தியாவில் தொடங்கிற்று. 1857இல் பம்பாய், சென்னை, கல்கத்தா ஆகிய இடங்களில் பல்கலைக்கழகங்கள் நிறுவப்பட்டன. இந்தியர்களில் படித்த வகுப்பினர் ஆங்கிலேயர்க்கு விசுவாசமாக இருப்பதோடு ஆங்கில அரசின் தூண்களாகவும் திகழ்வர் என காலனியரசு எதிர்பார்த்தது.

ஆங்கிலேயர் தங்கள் நலனுக்காக கற்றறிந்த இந்திய மத்தியதர வர்க்கத்தை உருவாக்கி அதை பாபு வர்க்கமென ஏளனப்படுத்தினர். இருந்தபோதிலும் அந்த வர்க்கத்தினரே இந்தியாவின் புரட்சிகர, முற்போக்கானப் படித்த வர்க்கமாக மாறி நாட்டின் விடுதலைக்காக மக்களைத் திரட்டுவதில் முக்கியப் பங்காற்றினர்.

சென்னைப் பல்கலைக்கழகம்

(இ) கற்றறிந்த மத்தியதர வகுப்பினரின் பங்கு

பொருளாதார நிர்வாக மாற்றங்கள் ஒருபுறமும் மேற்கத்தியக் கல்வியின் வளர்ச்சி மறுபுறத்திலுமாக புதிய சமூக வர்க்கங்கள் வளர்ச்சி பெறுவதற்கு இடமளித்தன. இப்புதிய வர்க்கங்களின் இடையேயிருந்து ஒரு நவீன இந்திய கற்றறிந்தோர் பிரிவு உருவானது. ஆங்கிலேயர்களால் உருவாக்கப்பட்ட இந்நவீன சமூக வர்க்கம் இந்தியாவின் வணிக வர்த்தகச் சமூகங்கள், நிலப்பிரபுக்கள், லேவாதேவி செய்வோர் (வட்டிக்குப் பணத்தைக் கடன் கொடுப்போர்) ஆங்கிலம் பயின்ற ஏகாதிபத்திய அரசின் துணை நிர்வாகப் பிரிவுகளில் பணியமர்த்தப்பட்டோர், மருத்துவர்கள், வழக்கறிஞர்கள் ஆகியோரை உள்ளடக்கியதாய் இருந்தது. இவர்கள் தொடக்க காலத்தில் ஆங்கிலேய நிர்வாகத்துடன் இணக்கமான அணுகுமுறையைக் கொண்டிருந்தனர். இருந்தபோதிலும் தங்களது விருப்பங்கள் சுதந்திர இந்தியாவில் மட்டுமே நிறைவேறுமென்பதை இவர்கள் உணர்ந்து கொண்டனர். மேற்சொல்லப்பட்ட வர்க்கங்களைச் சேர்ந்த மக்கள் ஏனைய மக்களிடையே நாட்டுப்பற்றை வளர்த்தெடுப்பதில் சிறப்பானப் பங்காற்றினர். தேசிய அளவில் இந்திய தேசிய காங்கிரஸ் நிறுவப்படுவதற்கு முன்னர் இருந்த பல அமைப்புகளில் இவ்வகுப்புகளைச் சேர்ந்தோரின் உணர்வுகள் தெளிவாகப் பேசப்பட்டதைக் காண முடிகிறது.

நவீன இந்தியக் கற்றறிந்தோர் பிரிவைச் சேர்ந்த ராஜா ராம்மோகன் ராய், ஈஸ்வர சந்திர வித்யாசாகர், சுவாமி விவேகானந்தர், அரவிந்த கோஷ், கோபால கிருஷ்ண கோகலே, தாதாபாய் நௌரோஜி, பெரோஸ்ஷா மேத்தா, சுரேந்திரநாத் பானர்ஜி ஆகியோரும் மற்றோரும் இந்திய அரசியல், சமுதாய, மத இயக்கங்களுக்குத் தலைமையேற்றனர். மேலைநாட்டு அறிஞர்களான ஜான்லாக், ஜேம்ஸ் ஸ்டூவர்ட் மில், மாஜினி, கரிபால்டி, ரூஸோ, தாமஸ் பெயின், மார்க்ஸ் ஆகியோராலும் மற்றவர்களாலும் கூறப்பட்ட தேசியம், மக்களாட்சி, சோசலிசம் போன்ற தத்துவக் கருத்துக்களைக் கற்றறிந்த இந்தியர்கள் அறிந்து கொண்டனர். சுதந்திரமான பத்திரிகை உரிமை, பொதுக்கூட்டங்களில் சுதந்திரமாகப் பேசும் உரிமை, சுதந்திரமாக ஒன்று கூடும் உரிமை ஆகியன இயற்கையான இயல்பான உரிமைகளாகும். கற்றறிந்த இந்தியரின் ஐரோப்பியக் கூட்டாளிகள் இந்த உரிமைகளைத் தங்கள் நெஞ்சுக்கு நெருக்கமாக வைத்திருந்தனர்; அதை அவ்வாறே கடைபிடிக்க இவர்களும் விரும்பினர்; பல அமைப்புகள் உருவாக்கப்பட்டன. அங்கே மக்கள் ஒருவரையொருவர் சந்தித்துத் தங்களைப் பாதிக்கும் அம்சங்கள் குறித்து விவாதித்தனர். இச்செயல் போக்குவரத்து வசதியின் மிகப்பெரும் விரிவாக்கம், இந்தியா முழுவதும் நிறுவப்பட்ட அஞ்சல், தந்தி சேவைகள் ஆகியன இதுபோன்ற விவாதங்கள் தேசிய அளவில் நடைபெறுவதையும் சாத்தியமாக்கின.

(ஈ) சமயப் பரப்பாளர்களின் பங்களிப்பு

இந்திய மக்களிடையே நவீனக் கல்வியைக் கற்றுத்தர மேற்கொள்ளப்பட்ட தொடக்க கால முயற்சிகளிலொன்று கிறித்தவ சமயப்பரப்பு நிறுவனங்களால் முன்னெடுக்கப்பட்டதாகும். மதமாற்ற ஆர்வத்தால் தூண்டப்பெற்ற அவர்கள் இந்துக்களிடையே நடைமுறையிலிருந்த பலகடவுள் நம்பிக்கையையும் சாதிய ஏற்ற தாழ்வுகளையும் தாக்கலாயினர். நவீன மதச்சார்பற்ற கல்வியின்

12th_History_TM_Unit_1.indd 6 02-01-2023 16:34:26

மூலமாக கிறித்தவத்தைப் போதிப்பது சமயப் பரப்பு நிறுவனங்கள் கைக்கொண்ட ஒரு முறையாகும். மரபு சார்ந்த கல்வி முறையில், கல்வி கற்பதற்கான உரிமைகள் மறுக்கப்பட்ட அடித்தட்டு மக்களும், விளிம்பு நிலை மக்களும் கல்வி பெறுவதற்கான வாய்ப்பை இவை வழங்கின. மக்களில் மிகமிகச் சிறிய பகுதியினரே கிறித்தவ மதத்திற்கு மாறினர். ஆனால் கிறித்தவம் விடுத்த சவால்கள் பல்வேறு சமூக, சமய சீர்திருத்த இயக்கங்கள் தோன்ற வழிவகை செய்தது.

கிறித்தவ சமயப் பள்ளி

1.3 சமூக, சமய சீர்திருத்தங்கள்

அரசியல் செயல்பாடுகளில் மக்களை ஈடுபடுத்தும் முன்னர் சமூகத்தை சீர்திருத்த வேண்டியதை ஆங்கிலக் கல்வியைக் கற்றறிந்தோர் உணர்ந்தனர். பத்தொன்பதாம் நூற்றாண்டில் நடைபெற்ற சீர்திருத்த இயக்கங்களைப் பின்வருமாறு வகைப்படுத்தலாம். 1. ராஜா ராம்மோகன் ராயால் நிறுவப்பெற்ற பிரம்ம சமாஜம், டாக்டர் ஆத்மராம் பாண்டுரங் உருவாக்கிய பிரார்த்தனை சமாஜம், சையத் அகமது கானால் பிரதிநிதித்துவப்படுத்தப்பட்ட அலிகார் இயக்கம் ஆகிய சீர்திருத்த இயக்கங்கள். 2. மீட்பு இயக்கங்களான ஆரிய சமாஜம், இராமகிருஷ்ண இயக்கம், தியோபந்த் இயக்கங்கள். 3. புனேயில் ஜோதிபா பூலே, கேரளாவில் நாராயண குரு, அய்யன்காளி, தமிழ்நாட்டில் இராமலிங்க அடிகள், வைகுண்ட சுவாமிகள் பின்னர் அயோத்தி தாசர் ஆகியோரால் முன்னெடுக்கப்பட்ட சமூக இயக்கங்கள் குறித்தும் இவ்வனைத்து சீர்திருத்தவாதிகள் குறித்தும் அவர்களின் பங்களிப்பு குறித்தும் பதினொன்றாம் வகுப்பு பாடப்புத்தகத்தில் விரிவாக விளக்கப்பட்டுள்ளது.

பத்தொன்பதாம் நூற்றாண்டுச் சீர்திருத்தவாதிகள் காரணத்தை அடிப்படையாகக் கொண்டு கற்றறிந்த மேலை நாட்டினர் முன்வைத்த சவால்களைப் எதிர்கொண்டு பதில் கூறினர். இச்சீர்திருத்தவாதிகளால் தூண்டப்பட்ட மீள் சிந்தனையின் விளைவாகவே இந்திய தேசிய உணர்வு உதயமானது. 1828இல் ராஜா ராம்மோகன் ராய் பிரம்ம சமாஜத்தை நிறுவினார். அதனைத் தொடர்ந்து ஏனைய சமூகப் பண்பாட்டு அமைப்புகளான பிரார்த்தனை சமாஜம் (1867) ஆரிய சமாஜம் (1875) ஆகியவை நிறுவப்பெற்றன. ராயின் முன் முயற்சி கேசவ் சந்திர சென், ஈஸ்வர சந்திர வித்யாசாகர் போன்ற சீர்திருத்தவாதிகளால் தொடரப்பட்டன. சதி ஒழிப்பு, குழந்தைத் திருமண ஒழிப்பு, விதவை மறுமணம் ஆகியவைகளின் மீது இச்சீர்திருத்தவாதிகள் அதிக அக்கறை செலுத்தினர். இஸ்லாமியரிடையே அலிகார் இயக்கம் இதே பணியை மேற்கொண்டது. காலப்போக்கில் அரசியல் தன்மை கொண்ட அமைப்புகளும் கழகங்களும் பிரிட்டிஷ் இந்தியாவின் பல பகுதிகளில் தோன்றி மக்களின் குறைகளைப் பற்றி பேசத்தொடங்கின.

1.4 தேசியத்தின் எழுச்சிக்கு ஏனைய முக்கியக் காரணங்கள்

(அ) 1857 குறித்த ஓயாத நினைவுகள்

1857இன் பேரெழுச்சியே இந்திய தேசிய இயக்கத்தின் பிறந்த நாளாகும். புரட்சி ஒடுக்கப்பட்ட பின்னர் ஆங்கில ராணுவம் செய்த அட்டூழியங்கள் 'பழி தீர்க்கப்படாமலே' இருந்தன. ராணுவச் சட்டங்களும் நடைமுறைகளும்கூடப் பின்பற்றப்படவில்லை. ராணுவ நீதிமன்றத்தின் விசாரணை அதிகாரிகள் தங்கள் கைதிகள் குற்றம் புரிந்தவர்களோ அல்லது ஒன்றுமறியாதவர்களோ எப்படியிருப்பினும் அவர்களைத் தூக்கிலிடப் போவது உறுதி எனக் கூறினர். இவ்வாறான பாகுபாடற்ற பழிச்செயலுக்கு எதிராக யாரேனும் குரலை உயர்த்தினால் அதிகாரியின் உடன் பணியாற்றுபவர்கள் கோபத்துடன் அவர்களை அடக்கினர். கேலிக்கூத்தான இவ்விசாரணைகளுக்குப் பின்னர் மரண தண்டனை அளிக்கப்பட்டோர் அது நிறைவேற்றப்படும் வரை அதிகாரிகளுக்கு தெரிந்த வீரர்களால் சித்திரவதை செய்யப்பட்டனர். 1857 ஜுன் – செப்டம்பர் மாதங்களில் ஆங்கிலப் படைகளால் டெல்லி முற்றுகையிடப்பட்டது குறித்து, பம்பாய் மாகாணத்தின் முன்னாள் ஆளுநர் எல்பின்ஸ்டன், அப்போதைய இந்தியாவின் எதிர்கால அரசப்பிரதிநிதி (1864) சர்ஜான் லாரன்ஸுக்கு எழுதியதை இங்கே பதிவு செய்வது பொருத்தமுடையதாகும். "நண்பன் பகைவன் என்ற வேறுபாடின்றி முழுவீச்சிலான பழி வாங்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. கொள்ளையடிப்பதைப் பொறுத்தமட்டில் நாம் உண்மையாகவே நாதிர்ஷாவை மிஞ்சிவிட்டோம்".

12th_History_TM_Unit_1.indd 7 02-01-2023 16:34:26

(ஆ) இனப்பாகுபாடு

ஆங்கிலேயர் இனப்பாகுபாட்டுக் கொள்கையைப்பின்பற்றினர். அரசு உயர்பதவிகளில் இந்தியர்களைப் பணியமர்த்தாமல் திட்டமிட்டு விலக்கி வைக்கப்பட்டதை மக்கள் இந்திய எதிர்ப்புக் கொள்கையின் நடவடிக்கையாகக் கருதினர். இதன் விளைவாக இந்திய உயர் வகுப்பாரிடையே ஏற்பட்ட வெறுப்பு ஆங்கிலேயர் ஆட்சிக்கெதிராக இந்தியர்கள் புரட்சி செய்ய இட்டுச் சென்றது. குடிமைப் பணிக்கானத் தேர்வுகள் அறிமுகமானபோது வயது வரம்பு இருபத்தொன்று என நிர்ணயம் செய்யப்பட்டது. அத்தேர்வுகளில் இந்தியர்கள் வெற்றி பெற்றதைத் தொடர்ந்து அத்தேர்வுகளை இந்தியர்கள் எழுதவிடாமல் தடுப்பதற்காக வயது வரம்பு பத்தொன்பதாகக் குறைக்கப்பட்டது. இதைப்போலவே குடிமைப்பணித் தேர்வுகளை ஒரே நேரத்தில் இங்கிலாந்திலும், இந்தியாவிலும் நடத்த வேண்டுமென இந்தியாவின் கற்றறிந்த நடுத்தர வர்க்கம் வைத்த வேண்டுகோளை ஆங்கில அரசு ஏற்றுக்கொள்ள மறுத்தது.

(இ) இந்தியர்களுக்கு எதிரான அடக்குமுறை, சுரண்டல் நடவடிக்கைகள்

அரசுக்கு எதிராக வெறுப்புணர்வைத் தூண்டும் முயற்சிகளை மேற்கொள்வோரை தண்டனைக்குள்ளாக்கும் இந்திய தண்டனைச் சட்டம் (1870) பிரிவு 124A அடக்குமுறை ஒழுங்காற்றுச் சட்டமும், பத்திரிக்கைகளைத் தணிக்கைக்கு உட்படுத்திய பிராந்திய மொழிச் சட்டமும் (1878) எதிர்ப்புகளைத் தூண்டின. இங்கிலாந்திலிருந்து இறக்குமதி செய்யப்படும் பருத்தியிழைத் துணிகளின் மீதான சுங்கவரி குறைக்கப்பட்டதும், இந்தியாவில் உற்பத்தி செய்யப்படும் பருத்தியிழைத் துணிகளின் மீதான உள்நாட்டுத் தீர்வை உயர்த்தப்பட்டதும் நாடு முழுவதும் மனநிறைவின்மையை ஏற்படுத்தியது. ரிப்பன் அரசப்பிரதிநிதியாக இருந்தபோது இல்பர்ட் மசோதாவின் மூலம் இந்திய நீதிபதிகள் ஐரோப்பியர்களை விசாரிக்க அதிகாரம் பெற்றனர். ஆனால் ஐரோப்பியர் எதிர்ப்பால் ஐரோப்பியரின் விருப்பங்களை நிறைவு செய்யும் வகையில் திருத்தம் செய்யப்பட்டது.

(ஈ) பத்திரிகைகளின் பங்கு

இந்தியாவில் அச்சு இயந்திரம் அறிமுகம் செய்யப்பட்டமை மிக முக்கிய நிகழ்வாகும். அது தன்னாட்சி, மக்களாட்சி, குடிமை உரிமைகள், தொழில்மயமாக்குதல் போன்ற நவீன சிந்தனைகளைப் பரப்ப மக்களுக்கு உதவியது. பத்திரிக்கைகள் அரசியலை விமர்சனம் செய்யத் தொடங்கின. நாட்டினைப் பாதிக்கும் பல்வேறு பிரச்சனைகள் குறித்து மக்களிடம் பேசின. ராஜா ராம்மோகன் ராயின் வங்க மொழிப் பத்திரிகையான சம்வத் கௌமுதி (1821) பாரசீக மொழிப் பத்திரிக்கையான மிராத்–உல்–அக்பர் ஆகியவை மக்கள் நலன் சார்ந்த முக்கியப் பொது விஷயங்களை மக்களுக்குக் கற்றுக் கொடுப்பதில் முற்போக்காக பங்காற்றின. பின்னர், மக்கள் கருத்தை உருவாக்குவதற்காக எண்ணற்ற தேசிய, பிராந்திய மொழிப் பத்திரிகைகள் தொடங்கப்பட்டன. தேசிய உணர்வைப் பேணுவதில் அவை மிகப்பெருந் தொண்டாற்றின. அவைகளுள் அமிர்த பஜார் பத்திரிக்கா, தி பாம்பே கிரானிக்கல், தி ட்ரிப்யூன், தி இண்டியன் மிரர், தி இந்து, சுதேசமித்திரன் ஆகியன முக்கியமானவையாகும்.

(உ) இந்தியாவின் பழம் பெருமையை வணங்குதல்

வில்லியம் ஜோன்ஸ், சார்லஸ் வில்கின்ஸ், மேக்ஸ் முல்லர் போன்ற கீழ்த்திசைவாதிகள் ஆய்வுகளை மேற்கொண்டு அராபிய, பாரசீக, சமஸ்கிருத மொழிகளிலிருந்த மத, வரலாற்று இலக்கிய நூல்களை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து அனைவருக்கும் கிடைக்கச் செய்தனர். இந்தியாவின் மரபு, புலமை ஆகியவற்றின் செழுமையால் கவரப்பட்டப் பல தொடக்ககால தேசியவாதிகள் இந்தியாவின் பண்டையப் பெருமையை மீட்டெடுக்க ஆர்வத்துடன் வேண்டினர். "தேசியத்தின் குறிக்கோளானது இந்தியச் சிந்தனையை, இந்திய குணநலன்களை, இந்திய உணர்வுகளை, இந்திய ஆற்றலை, இந்தியாவின் உன்னதத்தை மீட்டெடுப்பதாகும். மேலும் உலகைத் தடுமாறச் செய்யும் பிரச்சனைகளை இந்திய மனப்பாங்குடன் இந்திய நிலைப்பாட்டில் தீர்த்து வைப்பதாகும்" என அரவிந்தகோஷ் எழுதினார்.

1.5 இந்தியாவில் சங்கங்கள் உருவாதல்

(அ) சென்னைவாசிகள் சங்கம் (Madras Native Association – MNA)

1852 பிப்ரவரி 26இல் சென்னைவாசிகள் சங்கம் எனும் அமைப்பு உருவாக்கப்பட்டது. மக்களை ஒருங்கிணைத்து கம்பெனிக்கு எதிராகக் குறைபாடுகளை எடுத்துரைப்பதற்கு மேற்கொள்ளப்பட்ட முதல் முயற்சிகளில் இது ஒன்றாகும். இதுவும் சென்னை மாகாணத்தைச் சேர்ந்த நிலவுடைமை வணிக வர்க்கத்தினரின்

www.tntextbooks.in

கஜுலா லட்சுமிநரசு

அமைப்பாகும். கம்பெனியின் நிர்வாகத்தில் வருவாய், கல்வி, நீதி ஆகியத் துறைகளில் தங்களுக்குள்ள குறைபாடுகளை இவர்கள் இவ்வமைப்பின் மூலம் எடுத்துரைத்தனர். சென்னையின் மிக முக்கிய வணிகரான கஜுலா லட்சுமிநரசு என்பவரே இவ்வமைப்பு உருவாவதற்கு உந்து சக்தியாய்த் திகழ்ந்தவர்.

இவ்வமைப்புத் தனது குறைகளை இங்கிலாந்துப் பாராளுமன்றத்தின் முன் வைத்தது. இங்கிலாந்துப் பாராளுமன்றம் இந்தியாவில் ஆங்கிலேயக் கிழக்கிந்தியக் கம்பெனியின் ஆட்சி குறித்து விவாதித்து 1853இல் பட்டயச்சட்டத்தை நிறைவேற்றுவதற்கு முன்னர் இது நடைபெற்றது. இவ்வமைப்பு 1852 டிசம்பரில் சமர்ப்பித்த மனுவில் ரயத்துவாரி, ஜமீன்தாரி முறைகள் வேளாண் வர்க்கத்தினரைக் கடும் துன்பங்களுக்கு உள்ளாக்கியதைச் சுட்டிக் காட்டியது. ஜமீன்தார்கள், கம்பெனியின் அதிகாரிகள் ஆகியோரின் அடக்குமுறை சார்ந்த தலையீட்டிலிருந்து விவசாயிகளை விடுவிக்கப் பண்டைய கிராமமுறை மீட்டெடுக்கப்பட வேண்டுமென இவ்வமைப்பு வற்புறுத்தியது. நீதித்துறையானது தாமதமாக செயல்படுவதாகவும், சிக்கல்கள் நிறைந்ததாகவும் குறைபாடுகளுடையதாகவும் இருப்பதாக இம்மனுவில் புகார் கூறப்பட்டிருந்தது. நீதிபதிகளின் நியமனத்தின்போது அவர்களின் நீதித்துறைசார் அறிவுத்திறனும் வட்டார மொழிகளில் அவர்களுக்குள்ளத் திறமையும் மதிப்பீடு செய்யப்படாததால் நீதித்துறையின் திறமை பாதிக்கப்படுவதை இம்மனு சுட்டிக்காட்டியது. மானிய உதவித்திட்டத்தின் கீழ் சமயப்பரப்பு நிறுவனங்களின் கல்விக் கூடங்களுக்கு அரசின் நிதி மடைமாற்றம் செய்யப்படுவதும் இம்மனுவில் எதிர்க்கப்பட்டிருந்தது.

சென்னைவாசிகள் சங்கத்தின் மனு மார்ச் 1853இல் இங்கிலாந்துப் பாராளுமன்றத்தில் விவாதிக்கப்பட்டது. இந்தியச் சீர்திருத்தக் கழகத்தின் தலைவரான H.D செய்மோர் அக்டோபர் 1853இல் சென்னை வந்தார். குண்டூர், கடலூர், திருச்சிராப்பள்ளி, சேலம், திருநெல்வேலி ஆகிய இடங்களைப் பார்வையிட்டார். இருந்தபோதிலும் 1853ஆம் ஆண்டு பட்டயச்சட்டம் இந்தியாவில் ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனியின் ஆட்சித் தொடர அனுமதி வழங்கியது. இதனால் இவ்வமைப்பு இந்தியாவிலுள்ள ஆங்கிலேயருக்குச் சொந்தமான பகுதிகள் மகாராணியாரின் நேரடிக் கட்டுப்பாட்டிற்கு மாற்றப்பட வேண்டுமென ஒரு போராட்டத்தை நடத்தியது. இவ்வமைப்பு இந்தியாவில் கம்பெனியின் ஆட்சி ஒழிக்கப்பட வேண்டுமென்ற கோரிக்கையைக் கொண்ட பதினான்காயிரம் நபர்களால் கையெழுத்திடப்பட்ட தனது இரண்டாவது மனுவை ஆங்கிலப் பாராளுமன்றத்திற்கு அனுப்பி வைத்தது.

இவ்வமைப்பின் ஆயுட்காலம் குறைவானதே. 1866இல் லட்சுமிநரசு இயற்கை எய்தினார். 1881இல் இவ்வமைப்பு இல்லாமல் போயிற்று. சீர்திருத்தங்கள் என்றளவில் இவ்வமைப்புப் பெருமளவில் சாதனைகள் செய்யாவிட்டாலும் இது இந்தியரின் கருத்தினை வெளியே சொல்ல மேற்கொள்ளப்பட்ட ஒருங்கிணைந்த முயற்சியின் தொடக்கமாகும். தனது வாழ்நாளில் இவ்வமைப்பு சென்னை மாகாண எல்லைகளுக்குள்ளே மட்டும் செயல்பட்டது. இவ்வமைப்பு தனது மனுக்கள் மூலம் சுட்டிக்காட்டிய குறைபாடுகளும், நடத்தியப் போராட்டங்களும் செல்வந்தர்களின் குறிப்பாகச் சென்னை மாகாண நிலவுடைமையாளர்களின் எண்ணத்தின்படி நடந்தவையாகும். குறைபாடு யாதெனில் சமூகத்தின் அனைத்துப் பிரிவினரையும் பிரதிநிதித்துவப்படுத்தும், மக்களின் குறைகளை ஓங்கி ஒலிக்கச் செய்து, அக்குறைகளை நிவர்த்தி செய்ய காலனியாதிக்கத்திற்கு எதிராகப் போராடும் தேசிய அளவிலான அரசியல் சார்ந்த அமைப்பாக இல்லாமல் போனதுதான். அந்த இடைவெளியை இந்திய தேசிய காங்கிரஸ் நிரப்பியது.

(ஆ) சென்னை மகாஜன சங்கம் (Madras Mahajana Sabha – MMS)

சென்னைவாசிகள் சங்கம் செயலிழந்த பின்னர் சென்னை மாகாணத்தில் அதைப் போன்ற வேறு அமைப்பு இல்லாமல் போனது. கற்றறிந்த பல இந்தியர்கள் இந்நிலையைக் கவலையுடன் நோக்கினர். ஓர் அரசியல் சார்ந்த அமைப்பின் தேவை உணரப்பட்டது. அதன் விளைவாய் மே, 1884இல் சென்னை மகாஜன சங்கம் நிறுவப் பெற்றது. 1884 மே 16இல் நடைபெற்ற தொடக்க விழாவில் பங்கேற்ற முக்கியப் பிரமுகர்கள் G. சுப்ரமணியம், வீரராகவாச்சாரி , அனந்தா சார்லு, ரங்கையா, பாலாஜிராவ், சேலம் ராமசாமி ஆகியோராவர். இதற்கிடையே இந்திய தேசிய காங்கிரஸ் நிறுவப் பெற்றது. சென்னை மகாஜன சபையின் பிராந்திய மாநாடு நடைபெற்று முடிந்த பின்னர் அதன் தலைவர்கள் பம்பாயில் நடைபெற்ற இந்திய தேசிய காங்கிரசின் முதல் மாநாட்டில் கலந்துகொண்டு சென்னை மகாஜன சபையை இந்திய தேசிய காங்கிரசோடு இணைத்தனர்.

12th_History_TM_Unit_1.indd 9 02-01-2023 16:34:26

www.tntextbooks.in

(இ) இந்திய தேசிய காங்கிரஸ் (Indian National Congress – INC)

காலனிய ஆட்சிக்கு எதிராகக் குறைகளையும் பிரச்சனைகளையும் எழுப்பும் ஒரு அரசியல்சார் அமைப்பை நிறுவும் சிந்தனை வெற்றிடத்திலிருந்து உருவானதல்ல. 1875க்கும் 1885க்கும் இடைப்பட்ட காலத்தில் இந்தியாவில் ஆங்கிலேயரின் கொள்கைகளுக்கு எதிராகப் பல போராட்டங்கள் நடைபெற்றன. 1875இல் இறக்குமதியாகும் பருத்தி இழைத் துணிகளின் மீது இறக்குமதிவரி விதிக்கப்பட வேண்டுமென ஜவுளி ஆலை உரிமையாளர்கள் இயக்கம் நடத்தினர். 1877இல் அரசுப் பணிகள் இந்திய மயமாக்கப்பட வேண்டுமென்றக் கோரிக்கை ஓங்கி ஒலித்தது. 1878ஆம் ஆண்டு வட்டார மொழிப் பத்திரிகைச் சட்டத்திற்கு எதிராகப் போராட்டங்கள் நடைபெற்றன. இல்பர்ட் மசோதாவிற்கு ஆதரவாக 1883இல் கிளர்ச்சிகள் நடைபெற்றன.

ஆனால் இப்போராட்டங்களும் கிளர்ச்சிகளும் ஒருங்கிணைக்கப்படாமல் அங்கொன்றும் இங்கென்றுமாகவே நடைபெற்றன. தேசிய அளவிலான ஒரு அரசியல்சார் அமைப்பு உருவாக்கப்படாத நிலையில் இத்தகையப் போராட்டங்கள், கொள்கைகளை வடிவமைப்போர் மீது தாக்கத்தை ஏற்படுத்தாது என்பது ஆழமாக உணரப்பட்டது. இவ்வுணர்தலில் இருந்து உதயமானதே இந்திய தேசிய காங்கிரஸ். இந்தியா ஒரே நாடு எனும் கருத்து அவ்வமைப்பின் பெயரில் பிரதிபலித்தது. இவ்வமைப்பு தேசியவாதம் எனும் கருத்தையும் அறிமுகம் செய்தது.


A. O. ஹியூம்

W. C. பானர்ஜி

ஆலன் ஆக்டேவியன் ஹியூம் (A.O. Hume) எனும் பணி நிறைவு பெற்ற இந்தியக் குடிமைப் பணி (Indian Civil Service – ICS) அதிகாரி டிசம்பர் 1884இல், சென்னையில் பிரம்ம ஞான சபையின் கூட்டமொன்றிற்குத் தலைமை ஏற்றிருந்தார். இக்கூட்டத்தில் அகில இந்திய அளவில் செயல்படும் ஒரு அரசியலமைப்பை உருவாக்குவது தொடர்பாக விவாதிக்கப்படுகையில் இந்திய தேசிய காங்கிரசை உருவாக்குவது எனும் கருத்து உருவானது. இந்திய தேசிய காங்கிரஸ் 1885 டிசம்பர் 28இல் பம்பாயில் உருவாக்கப்பட்டது. A.O. ஹியூம் தவிர இவ்வமைப்பை உருவாக்கிய முக்கிய உறுப்பினரான W.C. பானர்ஜி இவ்வமைப்பின் முதல் தலைவராகத் தேர்வு செய்யப்பட்டார்.

கோரிக்கைமனுகொடுப்பது, விண்ணப்பங்கள் அனுப்புவது போன்ற செயல்பாடுகளை மட்டுமே காங்கிரஸ் மேற்கொண்ட போதும், தொடக்கத்திலிருந்தே சமூகத்தின் அனைத்துப் பிரிவினரையும் தனது வரம்புக்குள் கொண்டுவரும் பணிகளை மேற்கொண்டது. இந்தியாவை ஒரே நாடாக ஒருங்கிணைப்பதே இந்திய தேசிய காங்கிரசின் இன்றியமையா நோக்கங்களில் ஒன்றாக இருந்தது. இந்தியர்கள் தாங்கள் அனைவரும் ஒரு நாட்டின் குடிமக்கள் என உணர்ந்தால் மட்டுமே காலனியாட்சிக்கு எதிரானப் போராட்டங்கள் வெற்றி பெறுமென்பதை அவர்கள் நன்குணர்ந்தனர். இம்முயற்சியில் வெற்றி பெறும் பொருட்டு நாட்டின் பல பகுதிகளிலும் செயல்பட்டுக் கொண்டிருக்கும் இயக்கங்களின் பொது அரசியல் மேடையாகக் காங்கிரஸ் செயல்பட்டது. நாட்டின் வெவ்வேறு பகுதிகளைச் சேர்ந்த அரசியல் செயல்பாட்டாளர்கள் ஒன்று கூடவும் காங்கிரசின் பதாகையின் கீழ் அரசியல் நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் காங்கிரஸ் இடமளித்தது. இவ்வமைப்பு நூற்றுக்கும் குறைவான உறுப்பினர்களைக் கொண்ட சிறிய அமைப்பாக இருந்தபோதிலும் இந்தியாவின் அனைத்துப் பகுதிகளின் பிரதிநிதித்துவத்துடன் அகில இந்தியப் பண்பைப் பெற்றிருந்தது. இதுவே அகில இந்திய அளவில் மக்களைத் திரட்டும் தொடக்கமாய் ஆனது.

இந்திய தேசிய காங்கிரசின் முக்கிய நோக்கங்களும் கோரிக்கைகளும்:

அரசியல் அமைப்பு

அரசாங்கத்தில் பங்கேற்பதற்கான வாய்ப்பு வழங்கப்பட வேண்டுமென்பது இந்திய தேசிய காங்கிரசின் முக்கியக் கோரிக்கையாகும். அரசில் இந்தியப் பிரதிநிதிகள் இடம்பெற வேண்டுமெனக் காங்கிரஸ் கோரியது.

பொருளாதாரம்

விவசாயிகளின் துன்பநிலைக்கான முக்கியக் காரணங்களில் ஒன்று அதிக நிலவரியாகும். நிலவரி குறைக்கப்பட வேண்டுமெனவும் ஜமீன்தார்களின் சுரண்டலிலிருந்து விவசாயிகள் பாதுகாக்கப்பட வேண்டுமெனவும் காங்கிரஸ் கோரியது. சுதேசிப் பொருட்களுக்கு நன்மை அளிக்கும் விதத்தில் இறக்குமதி செய்யப்படும் பண்டங்களின் மீது அதிகவரி விதிக்கும்படி காங்கிரஸ் பரிந்துரை செய்தது.

12th_History_TM_Unit_1.indd 10 02-01-2023 16:34:26



12th_History_TM_Unit_1.indd 11 02-01-2023 16:34:27

நிர்வாகம்

இந்திய நிர்வாகத்திற்குப் பொறுப்பு வகிக்கும் உயர்நிலை அதிகாரிகள் இங்கிலாந்தில் நடத்தப்படும் குடிமைப்பணித் தேர்வுகளின் மூலம் தேர்வு செய்யப்பட்டனர். இதன் பொருள் தகுதியுடைய கற்றறிந்த இந்தியர்கள் லண்டனுக்குச் செல்லும் வசதியில்லாவிட்டால் நிர்வாகப்பதவிகளில் அமரும் வாய்ப்பு அவர்களுக்கு இல்லை என்பதுதான். எனவே, இந்தியக் குடிமைப்பணித் தேர்வுகளை இங்கிலாந்திலும் இந்தியாவிலும் ஒரே நேரத்தில் நடத்துவதன் மூலம் நிர்வாகப் பணிகளை இந்தியமயமாக்குவது காங்கிரசின் முக்கியக் கோரிக்கையாகும்.

நீதித்துறை

ஆங்கிலேய நீதிபதிகள் இந்திய அரசியல் செயல்பாட்டாளர்களிடம் ஒரு தலைபட்சமாக நடந்து கொள்வதால் சட்டங்களை நடைமுறைப்படுத்தும் நிர்வாகமும் நீதி நிர்வாகமும் தனித்தனியே முற்றிலுமாகப் பிரிக்கப்பட வேண்டுமெனக் காங்கிரஸ் கோரிக்கை வைத்தது.

(ஈ) தொடக்ககால தேசியவாதிகளின் பங்களிப்பு (1885–1915)

இந்திய தேசிய காங்கிரசை சேர்ந்த தொடக்க காலத் தலைவர்கள் சமூகத்தின் உயர்குடிப் பிரிவைச் சேர்ந்தோர் ஆவர். வழக்கறிஞர்கள், மருத்துவர்கள், கல்லூரி, பல்கலைக்கழகப் பேராசிரியர்கள், பத்திரிகை ஆசிரியர்கள் போன்றோர் காங்கிரசை பிரதிநிதித்துவப்படுத்தினர். இருந்தபோதிலும் அவர்கள் இந்தியாவின் வெவ்வேறு பகுதிகளிலிருந்து வந்தவர்களாயினும் இந்திய தேசிய காங்கிரசை உண்மையாகவே ஒரு தேசிய அரசியல்சார் அமைப்பாக ஆக்கினர். காங்கிரசின் இத்தலைவர்கள் அரசியல் சட்டம் அனுமதித்த வழிகளான மனுகொடுப்பது, மன்றாடுவது, விண்ணப்பம் செய்வது போன்ற முறைகளை மேற்கொண்டதால் "மிதவாத தேசியவாதிகள்" என்னும் புனைப் பெயரைப் பெற்றனர். காலனியம் பற்றிய ஒரு வகையான புரிதல் இந்தியாவில் உருவாகிக் கொண்டிருந்த காலமது. பத்தொன்பதாம் நூற்றாண்டில் இந்திய தேசிய காங்கிரஸ் உருவான காலப்பகுதியில் காலனிய எதிர்ப்பு தொடர்பான புரிதல் இருந்ததா என்பது பற்றித் தெரிந்து கொள்ள ஆயத்த நிலைக் குறிப்புகளில்லை. நாம் ஒரே நாடாக என்ற கருத்து வடிவம் பெற உதவியவர்கள் இத் தொடக்ககால தேசியவாதிகளே. அவர்கள் உண்மையாகவே இம்மண் சார்ந்த காலனிய எதிர்ப்புச் சித்தாந்தத்தையும் தாங்களாகவே தங்களுக்கென ஒரு செயல் திட்டத்தையும் உருவாக்கிக் கொண்டனர். இது உண்மையில் காந்தியடிகள் போன்ற எதிர்கால மக்கள் தலைவர்களுக்கு உதவியது.

1890களின் பிற்பகுதியிலிருந்து இந்திய தேசிய காங்கிரசுக்குள்ளே கருத்து வேற்றுமைகள் வளர்ந்தன. பிபின் சந்திரபால், பாலகங்காதர திலகர், லாலா லஜபதிராய் போன்ற தலைவர்கள் வெறுமனே மனுக்கள் எழுதுவது, மன்றாடிக் கேட்டுக் கொள்வது, விண்ணப்பம் செய்வது போன்ற அணுகுமுறைகளுக்கு மாற்றாகத் தீவிரமான அணுகுமுறைகளைப் பரிந்துரைத்தனர். இத்தன்மையுடையோர் மிதவாத தேசியவாதிகளுக்கு நேரெதிராக "தீவிர தேசியவாதிகள்" என்றழைக்கப்பட்டனர். 1897இல் திலகர் "சுயராஜ்ஜியம் எனது பிறப்புரிமை அதை அடைந்தே தீருவேன்" என முழங்கிய போது அவர்களின் நோக்கம் தெளிவாகத் தெரிந்தது. தங்களது மனுக்கள், பிரார்த்தனைகள் மூலமாக மிதவாத தேசியவாதிகள் கேட்டுக் கொண்டிருந்த பொருளாதார அல்லது நிர்வாகச் சீர்திருத்தங்களுக்குப் பதிலாகத் திலகரும் தீவிரப்போக்குடைய அவருடையத் தொண்டர்களும் சுயராஜ்ஜியத்தைக் கோரினர்.

அவர்கள் ஒருவரையொருவர் விமர்சித்துக் கொண்டாலும் அவர்களை எதிரெதிர் துருவங்களில் வைத்துப் பார்ப்பது தவறாகும். மிதவாத தேசியவாதிகள், தீவிர தேசியவாதிகள் ஆகிய இரு தரப்பினருமே மாபெரும் இந்திய தேசியவாதிகளின் இயக்கத்தில் முக்கியக் கூறுகளாவர். உண்மையில் சுதேசி இயக்கம் தோன்றுவதற்கு பங்களிப்புச் செய்தவர்கள் அவர்களேயாவர். நீங்கள் அடுத்த பாடத்தில் படிக்கவுள்ள, 1905இல் ஆங்கிலேயர்களால் மேற்கொள்ளப்பட்ட வங்கப் பிரிவினை இந்தியர்களால் ஆவேசமாக எதிர்க்கப்பட்டது. 1905இல் தொடங்கப்பட்ட சுதேசி இயக்கம் ஆங்கிலேய ஆட்சியை நேரடியாக எதிர்த்ததோடு, சுதேசித் தொழில்கள், தேசியக்கல்வி, சுயஉதவி இந்திய மொழிகளைப் பயன்படுத்துதல் ஆகிய கருத்துகளை ஊக்குவித்தது. தீவிர தேசியவாதிகள் முன்வைத்த பெருமளவிலான மக்களைத் திரட்டுவது, ஆங்கிலப் பொருட்களையும் நிறுவனங்களையும் புறக்கணிப்பது ஆகிய போராட்ட முறைகள் மிதவாத தேசியவாதிகளாலும் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

மிதவாத தேசியவாதிகள், தீவிர தேசியவாதிகள் ஆகிய இருதரப்பினரும் அவர்கள் வழிகாட்டிகளாகப் பொறுப்பு வகித்து, அப்பொறுப்புகளை நிறைவேற்ற வேண்டியத் தேவையுள்ளது எனும் உண்மையை ஏற்றுக் கொள்வதில் ஒரே கருத்தையேக் கொண்டிருந்தனர். பத்திரிகைகள் முதலானப் பல்வேறு வழிகளில் தேசிய உணர்வைப் புகட்டும் முயற்சிகளை அவர்கள் மேற்கொண்டனர். 1885இல் இந்திய தேசிய காங்கிரஸ் உருவாக்கப்பட்டபோது அதன் உறுப்பினர்களின் மூன்றில் ஒரு பகுதியினர்

12th_History_TM_Unit_1.indd 12 02-01-2023 16:34:27

பத்திரிகையாளர்களாக இருந்தனர். தொடக்ககால விடுதலை இயக்கத்தின் வல்லமைமிக்கத் தலைவர்களில் பெரும்பாலோர் பத்திரிகைகளில் எழுதுவதில் ஈடுபட்டிருந்தனர். தாதாபாய் நௌரோஜி இந்தியாவின் குரல் (Voice of India), ராஸ்த் கோப்தார் (Rast Goftar) எனும் இரு பத்திரிகைகளைத் தொடங்கி அவற்றின் ஆசிரியராகவும் பணியாற்றினார். சுரேந்திரநாத் பானர்ஜி பெங்காலி (Bengalee) என்னும் செய்திப்பத்திரிகையின் ஆசிரியராகப் பணிபுரிந்தார். பாலகங்காதர திலகர் கேசரி, மராட்டா ஆகியப் பத்திரிகைகளின் ஆசிரியராகத் திகழ்ந்தார். இவ்வழி முறைகளைப் பயன்படுத்தியே அவர்கள் காலனிய அடக்குமுறை குறித்து மக்களுக்கு கற்பித்துத் தேசியக் கருத்துகளையும் பரப்பினர். இந்திய தேசிய காங்கிரஸ் மேற்கொண்ட முயற்சிகள் பற்றிய செய்திகளை இப்பத்திரிகைகளே மக்களுக்கு எடுத்துச் சென்றன. இந்திய வரலாற்றில் முதன் முறையாக காலனிய அரசின் அடக்குமுறை கொள்கைகளுக்கும் சட்டங்களுக்கும் எதிராகப் பொதுமக்கள் கருத்தை உருவாக்குவதில் பத்திரிகைகள் பெரிய அளவில் பயன்படுத்தப்பட்டன.


சுரேந்திரநாத் பானர்ஜி

தேசிய இயக்கத்தில் மத்தியதர வகுப்பினரும் விவசாயிகளும், கைவினைஞர்களும் தொழிலாளர்களும் மிக முக்கியமான பங்கினை வகிக்க முடியுமென பால கங்காதர திலகர் உறுதியாக நம்பினார். காலனிய அரசின் அடக்குமுறை ஆட்சிக்கு எதிராக இம்மக்கள் பிரிவினரிடையே மன நிறைவின்மையைப் பரப்புவதற்கு அவர் பத்திரிகைகளைப் பயன்படுத்தினார். இந்தியாவில் ஆங்கிலேயரின் ஏகாதிபத்திய ஆட்சிக்கு எதிராக நாடுதழுவிய எதிர்ப்புக்கு அவர் அழைப்பு விடுத்தார். 1897 ஜூலை 27இல் திலகர் கைது செய்யப்பட்டு இந்திய தண்டனைச் சட்டம் பிரிவு 124A யின் கீழ் குற்றம் சாட்டப்பட்டார். திலகர் காங்கிரசில் தீவிர தேசியவாதிகள் பிரிவைச் சேர்ந்தவராக இருந்தபோதிலும் மிதவாத தேசியவாதிகள், தீவிர தேசியவாதிகள் ஆகிய இரு பிரிவினரும் ஒருங்கிணைந்து அவர் கைது செய்யப்பட்டதை எதிர்த்தனர். கருத்துச் சுதந்திரம், பத்திரிகைச் சுதந்திரம் ஆகிய இரு உரிமைகளும் இந்திய விடுதலைப்போராட்டத்தின் முக்கியக் கூறுகளாய் விளங்கின.

பால கங்காதர திலகர்

1.6 நௌரோஜியும் அவர் முன்வைத்த சுரண்டல் கோட்பாடும்

'இந்திய தேசியத்தின் முதுபெரும் மனிதர்' என அறியப்படும் தாதாபாய் நௌரோஜி தொடக்ககால தேசிய இயக்கத்தின் முக்கியத் தலைவர்களில் ஒருவராவார். 1870களில் பம்பாய் மாநகராட்சிக் கழகத்திற்கும், நகரசபைக்கும் தேர்ந்தெடுக்கப்பட்டார். 1892இல் இங்கிலாந்துப் பாராளுமன்றத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட நிலையில் அவர் லண்டனில் 'இந்திய சங்கம் (Indian Society – 1865), கிழக்கிந்தியக் கழகம் (East Indian Association – 1866) எனும் அமைப்புகளை உருவாக்கினார். அவர் மூன்று முறை இந்திய தேசிய காங்கிரசின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.


தாதாபாய் நௌரோஜி

அவர் எழுதிய *'இந்தியாவில் வறுமையும் பிரிட்டிஷ் தன்மையற்ற ஆட்சியும்'* (*Poverty and Un–British Rule in India* – 1901) எனும் புத்தகமே இந்திய விடுதலைப் போராட்டத்திற்கு அவர் செய்த முக்கியப் பங்களிப்பாகும். இந்நூலில் அவர் "செல்வச் சுரண்டல்" எனும் கோட்பாட்டை முன் வைத்தார். எந்த நாடாக இருந்தாலும் வசூலிக்கப்பட்ட வரியை அந்நாட்டு மக்களின் நல்வாழ்விற்காகவே செலவழிக்க வேண்டும். ஆனால் பிரிட்டிஷ் இந்தியாவில் ஆங்கிலேயர் வசூலிக்கும் வரி இங்கிலாந்தின் நலனுக்காகச் செலவு செய்யப்படுகிறது எனக் கூறினார். 1835 முதல் 1872 முடிய ஒவ்வொரு ஆண்டும் சராசரியாக 13 மில்லியன் பவுண்டுகள் மதிப்புடையப் பொருட்கள் இங்கிலாந்திற்கு ஏற்றுமதி செய்யப்பட்டதாகவும் ஆனால் அந்த அளவிற்கானப் பணம் இந்தியா வந்து சேரவில்லை எனவும் கூறினார். லண்டனில் வாழும் கம்பெனியின் பங்குதாரர்களுக்கு லாபத்தில் வழங்கப்பட வேண்டிய பங்கு, இருப்புப்பாதைத் துறையில் (Railways) முதலீடு செய்தவர்களுக்கு உத்திரவாதம் அளிக்கப்பட்டவாறு தரப்பட வேண்டிய வட்டி, பணி நிறைவு பெற்றுவிட்ட அதிகாரிகளுக்கும் தளபதிகளுக்கும் வழங்கப்பட வேண்டிய ஓய்வூதியம் இந்தியாவிலும் இந்தியாவிற்கு வெளியிலும் நாடுகளைக் கைப்பற்ற மேற்கொள்ளப்பட்டப் போர்களுக்காக இங்கிலாந்திடமிருந்து பெற்ற கடனுக்கு செலுத்த வேண்டிய வட்டி ஆகிய இவையனைத்துக்கும் பதிலாகவே அப்பொருட்கள் ஏற்றுமதி செய்யப்பட்டதாக அவர் வாதாடினார். இவையனைத்தும் தாயகக் கட்டணம் (Home Charges) எனும் பெயரில் ஆண்டொன்றுக்கு 30 மில்லியன் பவுண்டுகள் நஷ்டம் ஏற்படுத்துவதாக நௌரோஜி உறுதிபடக் கூறினார்.

12th_History_TM_Unit_1.indd 13 02-01-2023 16:34:27

பாடச் சுருக்கம்

- பதினெட்டாம் நூற்றாண்டு முதல் ஆங்கிலேயக் கிழக்கிந்தியக் கம்பெனி நடைமுறைப்படுத்திய நில, வருவாய்ச் சீர்திருத்தங்கள் இந்திய வேளாண்மைச் செயல்பாடுகளின் மீது தாக்கத்தை ஏற்படுத்தின.
- இங்கிலாந்தில் கனரக இயந்திரத் தொழிற்சாலைகள் வளர்ச்சி பெற்றதால் கம்பெனி இந்தியாவிலிருந்து கச்சாப் பொருட்களை இங்கிலாந்திற்கு ஏற்றுமதி செய்து பின்னர் அங்கு உற்பத்தி செய்யப்பட்டப் பண்டங்களை இந்தியாவிற்கு இறக்குமதி செய்தது. இச்செயல்பாடு இந்தியக் கைவினைத் தொழில்களின் வீழ்ச்சிக்கு இட்டுச்சென்றது. இதனால் கைவினைத் தொழிலாளர்கள் வேலையிழந்தவர்களாக ஆக்கப்பட்டனர்.
- நிலமற்றத் தொழிலாளர்களும், வேலையில்லாக் கைவினைஞர்களும் பட்டினிச் சாவிலிருந்து தப்பித்துக் கொள்வதற்காக ஆங்கிலப் பேரரசின் காலனிகளுக்குக் குடிபெயர்ந்தனர்.
- ஆங்கிலேயர் அறிமுகம் செய்த மேலைக்கல்வியின் விளைவாகக் கற்றறிந்த இந்தியர்கள் எனும் ஒரு வகுப்பு உருவாகி, இந்தியச் சமூகத்தின் சீர்திருத்தங்களுக்காகப் போராடியது.
- 1857ஆம் ஆண்டு பற்றிய கசப்பான நினைவுகள், இனப் பாகுபாட்டுக் கொள்கை, கருத்துவேறுபாடுகளுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட அடக்குமுறை நடவடிக்கைகள் ஆகிய காரணிகள் தேசியவாதம் வளர்வதற்குப் பங்களிப்புச் செய்தன.
- நவீன கற்றறிந்த வகுப்பினர், தங்களின் கருத்துகளையும் குறைகளையும் எடுத்துரைக்க, சென்னைவாசிகள் சங்கம் (1852) சென்னை மகாஜன சங்கம் (1884) இந்திய தேசிய காங்கிரஸ் (1885) ஆகிய அரசியல் அமைப்புகளை உருவாக்கினர்.
- பொதுமக்களுக்கு காலனியாட்சியின் சுரண்டலையும் அது அன்றாட வாழ்க்கையின் மீது ஏற்படுத்தும் தாக்கம் குறித்தும் கற்பிப்பதே தலைவர்களின் தலையாயப் பணிகளில் ஒன்றாக அமைந்தது. தாதாபாய் நௌரோஜியால் முன்வைக்கப்பட்ட செல்வச் சுரண்டல் கோட்பாடு இந்தியாவின் செல்வ வளத்தை ஆங்கிலேயர் கொள்ளையடிப்பதை வெட்டவெளிச்சமாக்கியது.

பயிற்சி

I. சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்.

1. காந்தியடிகள் தென்னாப்பிரிக்காவிலிருந்து எந்த ஆண்டு இந்தியா திரும்பினார்?
(அ) 1915 (ஆ) 1916 (இ) 1917 (ஈ) 1918

2. இந்தியாவில் ஆங்கிலக் கல்வி எந்த ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது?
(அ) 1825 (ஆ) 1835 (இ) 1845 (ஈ) 1855

3. மாறுபட்ட ஒன்றைத் தேர்வு செய்க.
(அ) வில்லியம் ஜோன்ஸ்
(ஆ) சார்லஸ் வில்கின்ஸ்
(இ) மாக்ஸ் முல்லர்
(ஈ) அரவிந்த கோஷ்

4. "சுயராஜ்யம் எனது பிறப்புரிமை, அதை அடைந்தே தீருவேன்" – எனக் கூறியவர்
(அ) பாலகங்காதர திலகர்
(ஆ) தாதாபாய் நௌரோஜி
(இ) சுபாஷ் சந்திர போஸ்
(ஈ) பாரதியார்

5. பின்வருவனவற்றை பொருத்தி சரியான விடையைத் தேர்வு செய்க.

(அ) பாலகங்காதர திலகர்	–	1. இந்தியாவின் குரல்
(ஆ) தாதாபாய் நௌரோஜி	–	2. மெட்ராஸ் டைம்ஸ்
(இ) மெக்காலே	–	3. கேசரி
(ஈ) வில்லியம் டிக்பை	–	4. இந்தியக் கல்வி குறித்த குறிப்புகள்

(அ) 2, 4, 1, 3 (ஆ) 3, 1, 4, 2
(இ) 1, 3, 2, 4 (ஈ) 4, 2, 3, 1

6. பின்வரும் எது ஒன்று சரியாகப் பொருந்தியுள்ளது?

(அ) ஆங்கிலக் கல்விச் சட்டம்	–	1843
(ஆ) அடிமைமுறை ஒழிப்பு	–	1859
(இ) சென்னைவாசிகள் சங்கம்	–	1852
(ஈ) இண்டிகோ கலகம்	–	1835

7. பின்வரும் அமைப்புகள் தொடங்கப்பட்ட சரியான கால வரிசையைத் தேர்வு செய்க
(i) கிழக்கிந்தியக் கழகம்
(ii) சென்னை மகாஜன சங்கம்
(iii) சென்னைவாசிகள் சங்கம்
(iv) இந்தியச் சங்கம்
(அ) ii, i, iii, iv (ஆ) ii, iii, i, iv
(இ) iii, iv, i, ii (ஈ) iii, iv, ii, i

12th_History_TM_Unit_1.indd 14 02-01-2023 16:34:27

www.tntextbooks.in

8. இந்திய தேசிய காங்கிரஸை நிறுவியவர்
(அ) சுபாஷ் சந்திர போஸ்
(ஆ) காந்தியடிகள்
(இ) A.O. ஹியூம்
(ஈ) பாலகங்காதர திலகர்

9. இந்திய தேசிய காங்கிரஸின் முதல் தலைவர்
(அ) சுரேந்திரநாத் பானர்ஜி
(ஆ) பத்ருதீன் தியாப்ஜி
(இ) A.O.ஹியூம்
(ஈ) W.C. பானர்ஜி

10. "இந்தியாவின் முதுபெரும் மனிதர்" என அழைக்கப்படுபவர்
(அ) பாலகங்காதர திலகர்
(ஆ) M. K. காந்தி
(இ) தாதாபாய் நௌரோஜி
(ஈ) சுபாஷ் சந்திர போஸ்

11. "இந்தியாவில் வறுமையும் பிரிட்டிஷ் தன்மையற்ற ஆட்சியும்' (*Poverty and Un–British Rule in India*) என்ற நூலை எழுதியவர்
(அ) பால கங்காதர திலகர்
(ஆ) கோபால கிருஷ்ண கோகலே
(இ) தாதாபாய் நௌரோஜி
(ஈ) எம்.ஜி. ரானடே

12. **கூற்று:** ஆங்கில அரசாங்கம் தடையற்ற வணிகக் கொள்கையைப் பின்பற்றியது.
காரணம் : இங்கிலாந்தின் தடையற்ற வணிகக் கொள்கையினால் இந்தியா நன்மையைப் பெற்றது.
(அ) கூற்று சரி. ஆனால் காரணம் கூற்றை விளக்கவில்லை
(ஆ) கூற்று சரி. காரணம் கூற்றை விளக்குகிறது
(இ) கூற்று சரி; காரணம் தவறு
(ஈ) கூற்று காரணம் இரண்டும் தவறு

13. ஒரிசா பஞ்சம் குறித்த பின்வரும் கூற்றுக்களில் சரியானவை எவை/எது?
கூற்று 1: 1866ஆம் ஆண்டில் ஒன்றரை மில்லியன் மக்கள் ஒரிசாவில் பட்டினியால் இறந்தனர்.
கூற்று 2: பஞ்ச காலத்தில் 200 மில்லியன் பவுண்ட் அரிசியை பிரிட்டனுக்கு ஆங்கில அரசு ஏற்றுமதி செய்தது.
கூற்று 3: ஒரிசா பஞ்சமானது தாதாபாய் நௌரோஜியை இந்திய வறுமை குறித்து வாழ்நாள் ஆய்வை மேற்கொள்ள தூண்டியது.
(அ) 1, 2
(ஆ) 1, 3
(இ) இவற்றுள் எதுவுமில்லை
(ஈ) இவை அனைத்தும்

II குறுகிய விடையளிக்கவும்.

1. தேசியம் என்றால் என்ன?
2. புதிய நிலவுடைமை உரிமைகளால் ஏற்பட்ட பாதிப்புகளை எழுதுக.
3. அவுரி கலகம் குறித்து குறிப்பு வரைக.
4. இல்பர்ட் மசோதாவின் முக்கியத்துவத்தை விவாதி.
5. நவீன கல்வியில் சமயப்பரப்புக் குழுக்களின் பங்கினை விளக்குக.
6. ஆங்கிலப் பாராளுமன்றத்திற்குச் சென்னைவாசிகள் சங்கத்தினர் அளித்த கோரிக்கைகள் என்ன?
7. இந்திய தேசிய காங்கிரசுக்கு முன்னர் தொடங்கப்பட்ட அமைப்புகளின் பட்டியலை தயார் செய்க.
8. தொடக்க கால முக்கிய தேசியவாதிகளைக் கண்டறிக.

III சுருக்கமாக விடையளிக்கவும்.

1. மெக்காலேயின் 'இந்தியக் கல்வி குறித்த குறிப்புகளை' ஆய்க.
2. 1853இல் இந்தியச் சீர்திருத்தக் கழக தலைவரின் சென்னை வருகையைக் குறித்து நீ அறிந்தது என்ன?
3. பிரிட்டிஷ் இந்தியாவில் தேசிய உணர்வினை உருவாக்கியதில் பத்திரிகைகளின் பங்கினை எழுதுக.
4. பிரிட்டிஷ் இந்தியாவில் ஒப்பந்தக் கூலி தொழிலாளர் முறை எவ்வழியில் ஏற்படுத்தப்பட்டது?
5. மே 1884இல் நடைபெற்ற சென்னை மகாஜன சங்கத்தின் தொடக்கவிழாவில் பங்கேற்ற முக்கியத் தலைவர்களின் பெயர்களை எழுதுக.
6. தொடக்க காலத்தில் இலங்கைக்குத் தொழிலாளர்களை அனுப்பி வைக்கப்பட்டது குறித்து எழுதுக.
7. இந்திய நிர்வாகச் செலவின விவரங்களைக் கூறுக.

IV. விரிவான விடையளிக்கவும்.

1. இந்திய நடுத்தர வர்க்கத்தில் மேற்கத்தியக் கல்வியின் தாக்கத்தையும் பின்னர் அது இந்தியச் சமூகத்தைச் சீர்த்திருத்தவும் மற்றும் மீட்டுருவாக்கம் செய்திட ஆற்றிய பங்கினை விவாதிக்கவும்.
2. பிரிட்டிஷ் இந்தியாவில் தேசிய உணர்வு தோன்ற காரணமான சமூகப் – பொருளாதாரக் காரணிகளை ஆய்க.
3. இந்தியாவில் தேசிய விழிப்புணர்வுக்குப் பிரிட்டிஷாரின் அடக்குமுறை மற்றும் இனவெறிக் கொள்கைகள், எந்த அளவிற்குக் காரணமாக இருந்தன?
4. இந்திய தேசிய காங்கிரசின் நோக்கங்களையும் பிரிட்டிஷ் ஆட்சியிலிருந்து விடுதலை பெறுவதற்கு ஆரம்ப கால தேசியவாதிகள் அளித்த பங்கினையும் விளக்குக.

12th_History_TM_Unit_1.indd 15 02-01-2023 16:34:27

V. செயல்பாடுகள்.

1. இந்தியாவில் மேற்கத்தியக் கல்வி அறிமுகப்படுத்தப்படாமலிருந்தால் என்ன நடந்திருக்கும் என்பதை விவாதிக்கவும்.
2. தமிழ்நாட்டிலிருந்த ஆரம்ப கால தேசியவாதிகளின் வாழ்க்கை வரலாறு மற்றும் உருவப் படங்களைத் தொகுக்கவும்.

VI. வரைபடம்.

இந்திய தேசிய காங்கிரஸ் மாநாடுகள் நடைபெற்ற பின்வரும் இடங்களை இந்திய வரைபடத்தில் குறிக்கவும்.

1. பம்பாய்	6. கான்பூர்
2. கல்கத்தா	7. சூரத்
3. சென்னை	8. லாகூர்
4. அகமதாபாத்	9. பூனா
5. லக்னோ	10. அலகாபாத்

மேற்கோள் நூல்கள்

- Bipan Chandra, et al., *India's Struggle for Independence*, Penguin, New Delhi, 2016.
- Desai, A.R., *Social Background of Indian Nationalism*, Popular Prakashan, Bombay, 6th Edition 2011.
- R. Suntharalingam, *Politics and Nationalist Awakening in South India,* 1852–1891, University of Arizona Press, Tucson, 1974.
- Sashi Tharoor, *An Era of Darkness: The British Empire in India*, Aleph, New Delhi, 2016.

இணையதள வளங்கள்

www.brittanica.com

கலைச்சொற்கள்

தடையில்லா வாணிகக் கொள்கை (சுதந்திர வணிகம்)	**laissez faire**	Non-interference of the government in the economic affairs of individuals and society / Free Trade
சீராக்கு, மேன்மையாக்கு	**ameliorate**	to make better
ஒப்பந்தத் தொழிலாளர்	**indentured labour**	a debt bondage worker on a contract
கீழ்த்திசை நாடுகளின் மொழி, பண்பாடு, வரலாறு கற்றவர்	**Orientalist**	someone from the west studying the language, culture and history of countries in eastren Asia
ஆங்கில மொழி இலக்கியம் கற்றவர்	**Anglicists**	an authority on or student of English languages and literature
மதம் மாற்றும் முயற்சி	**proselytizing**	attempting to convert someone from one religion, belief, or opinion to another
பல தெய்வ நம்பிக்கை	**polytheism**	the belief in or worship of more than one god
சுதேச மொழி	**vernacular**	language commonly spoken by the people of a particular a region or a particular group

12th_History_TM_Unit_1.indd 16 02-01-2023 16:34:27

அலகு 2

தீவிர தேசியவாதத்தின் எழுச்சியும் சுதேசி இயக்கமும்

கற்றலின் நோக்கங்கள்

SOE30

- வங்காளத்தில் நடைபெற்ற சுதேசி இயக்கத்தின் இயல்பையும் முக்கியத்துவத்தையும் புரிந்து கொள்வது.
- பிரிட்டிஷ் இந்திய அரசின் அடக்குமுறை நடவடிக்கைகளை அறிந்து கொள்வது.
- 1907இல் ஏற்பட்ட சூரத் பிளவுக்கு (இந்திய தேசிய காங்கிரசில்) இட்டுச் சென்ற நிகழ்வுகளைக் கண்டறிவது.
- வங்காளத்துப் புரட்சிகரத் தீவிர தேசியவாதத்தை நன்கு தெரிந்து கொள்வது.
- தமிழகத்தில் நடைபெற்ற சுதேசி இயக்கப்போராட்டங்களோடு அறிமுகமாதல்
- வ.உ.சிதம்பரம், வ.வே.சுப்ரமணியம், சுப்ரமணிய சிவா, சுப்பரமணிய பாரதி ஆகியோர் வகித்தப் பங்கினைத் திறனாய்வு செய்தல்

அறிமுகம்

பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதிப் பத்தாண்டுகளில் இந்திய தேசிய காங்கிரசுக்குள்ளே மிதவாத அரசியலுக்கு எதிராக வெளிப்படையான வெறுப்பு நிலவியது. இவ்வெறுப்பு முடிவில் ஒரு புதியப் போக்காகத் தோற்றம் பெற்று அது தீவிர தேசியவாதப் போக்கெனக் குறிப்பிடப்பட்டது. இத்தீவிர தேசியவாதிகள் அல்லது முற்போக்காளர்கள் அல்லது போர்க்குணமிக்கவர்கள் என நாம் அழைக்க விரும்பும் இக்குழுவினர் மிதவாத தேசியவாதிகளின் கவனமான அணுகுமுறை, ஆங்கிலேயரிடம் மன்றாடுதல், மனுச் சமர்ப்பித்தல் போன்ற அவர்களின் "இறைஞ்சுதல் கொள்கைகளை" கடுமையாக விமர்சித்தனர். மகாராஷ்டிராவில் பாலகங்காதர திலகர், வங்காளத்தில் பிபின் சந்திரபால், பஞ்சாபில் லாலா லஜபதி ராய் ஆகியோரின் தலைமையில் இப்போர்க்குணம் வளர்ச்சி பெற்றது. இத்தகையப் போக்கு வளர்ச்சி பெற்றதற்கான அடிப்படைக் காரணங்கள்: காங்கிரசுக்குள் உருவான உட்குழுக்கள், மிதவாத தேசியவாதிகளின் அரசியல் நடவடிக்கைகளால் ஏற்பட்ட மனச்சோர்வு, வங்காளத்தைப் பிரித்ததற்காக கர்சன் மீது ஏற்பட்ட கோபம்.

ஆங்கிலேயரின் பிரித்தாளும் கொள்கைக்கு முதன்மையான எடுத்துக்காட்டு 1905 ஆம் ஆண்டு வங்கப் பிரிவினையாகும். அது காலனிய எதிர்ப்பு, சுதேசி, தேசியம் வளர்வதற்கு வினையூக்கியாய் அமைந்தது. பிரிவினைத் திட்டம் முதன்முதலில் மிதவாத தேசியவாதிகளால் எதிர்க்கப்பட்டது. ஆனால் இயக்கத்தின் வளர்ச்சிப் போக்கில் சுதேசி இயக்கத்திற்கான பல உத்திகள் முன்னெடுக்கப்பட்டன. அந்நியப் பொருட்களைப் புறக்கணிப்பது, அரசால் நிர்வகிக்கப்படும் கல்வி

சுதேசி இயக்கம்

www.tntextbooks.in

நிலையங்களைப் புறக்கணிப்பது ஆகியன சுதேசி இயக்கத்தின் ஆக்கபூர்வமானத் திட்டங்களாக இருந்தன. இவ்வியக்கமே (1905–1911) காந்தியடிகளின் சகாப்தத்திற்கு முந்தைய இந்திய தேசிய இயக்கத்தின் மிக முக்கியக் கட்டமாகும். ஏனெனில் இவ்வியக்கத்தின் போக்கில் இந்திய தேசிய இயக்கத்தின் இயல்பில் குறிப்பிடத்தகுந்த மாற்றங்கள் ஏற்பட்டன. அது முன்வைத்த நோக்கங்கள், போராட்ட வழிமுறைகள், அதன் சமூக ஆதரவுத் தளம் ஆகியன மாற்றம் பெற்றன.

ஆங்கில அரசாட்சியின் கீழ் சமூகத்தின் பல்வேறு பிரிவினர் எதிர்கொண்ட பிரச்சனைகள், அவர்களனைவருடைய வாழ்வின் பொது அம்சமாகிவிட்ட காலனியச் சுரண்டல் ஆகியவை வெளிக் கொணரப்பட்டதால் இயக்கத்தின் சமூக ஆதரவுத்தளம் விரிவடைந்தது. இந்திய தேசிய இயக்கத்தின் வரலாற்றில் முதன்முதலாக பெண்களும், தொழிலாளர்களும், விவசாயிகளும், விளிம்பு நிலை மக்களும், நவீன தேசியச் சிந்தனைகளையும் அரசியலையும் அறிந்து கொண்டனர். இக்காலப்பகுதியில்தான் முதன்முதலாக உயர்குடியினர் முழுமுயற்சி மேற்கொண்டு சாமானிய மக்களிடம் பேசி அவர்களையும் அரசியலில் இணைந்து கொள்ள அழைத்தனர். மேலும் இந்தியாவின் பலபகுதிகளில் வட்டார மொழிப் பத்திரிகைகள் பெற்ற வளர்ச்சி சுதேசி இயக்கத்தின் முக்கியச் சாதனையாகும். இக்கால கட்டத்தில் வட்டார மொழிப் பத்திரிகைகளின் தேசியத்தன்மை மிகத் தெளிவாகவே புலப்பட்டது. தமிழ்நாட்டில் சுதேசமித்திரன், மகாராஷ்டிராவில் கேசரி, வங்காளத்தில் யுகந்தர் ஆகிய பத்திரிக்கைகளின் பங்களிப்பு ஒரு சில எடுத்துக்காட்டுகளாகும்.

சுதேசி இயக்கம் மக்களிடையே பெரும் ஆதரவைப்பெற்ற நிலையில், தேசிய இயக்க நடவடிக்கைகளை, அவை எத்தகையதாக இருந்தாலும் அவற்றை நசுக்கும் பொருட்டு ஆங்கில அரசு, பொதுக்கூட்டங்கள் சட்டம் (1907), வெடி மருந்துச் சட்டம் (1908), செய்தித்தாள் சட்டம், தூண்டுதல் குற்றச் சட்டம்(1908),இந்தியப்பத்திரிகைச்சட்டம்(1910)எனபல அடக்குமுறைச் சட்டங்களை வரிசையாய் இயற்றியது. பொதுக்கூட்டங்களைக் கண்காணிப்பதும், பதிவு செய்வதும் அவ்வாறு மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளில் ஒன்றாகும். (பேச்சுகளைப் பதிவு செய்வதற்காக முதன்முறையாக காவல் துறையினர் சுருக்கெழுத்து முறையைப் பயன்படுத்தினர்). இப்பாடத்தில் வங்காளத்திலும் தேசிய அளவிலும் நடைபெற்ற நிகழ்வுகளை விவாதிக்கும்போதே, தமிழ்நாட்டில் நடத்தப்பெற்ற சுதேசி இயக்கத்தையும் விவாதிக்க உள்ளோம். குறிப்பாக வ.உ.சிதம்பரம், வ.வே.சுப்ரமணியம், சுப்ரமணிய சிவா, சுப்ரமணிய பாரதி ஆகியோர் வகித்த பாத்திரத்தின் மீது தனிக்கவனம் செலுத்துகிறோம்.

2.1 வங்கப் பிரிவினை

கர்சன் பிரபு

1899 ஜனவரி 6இல் புதிய தலைமை ஆளுநராகவும் இந்தியாவின் அரசப் பிரதிநிதியாகவும் கர்சன் பிரபு பணி நியமனம் செய்யப்பட்டார். தொடர்ந்து ஏற்பட்டப் பஞ்சங்கள், பிளேக் நோய் ஆகியவை ஏற்படுத்தியத் தாக்கத்தின் விளைவாய் ஆங்கிலேயரின் செல்வாக்கு மேன்மேலும் குறைந்து கொண்டிருந்த காலமது. கற்றறிந்த இந்திய மக்கள் பிரிவினரின் கருத்துகளை மாற்றுவதற்கு கர்சன் சிறியளவிலான முயற்சிகளை மேற்கொண்டார்.



வங்காளம் 1905 – 1911	
பகுதி (கிமீ)^2	366,692
மக்கள் தொகை (mn)	54
முஸ்லிம்கள் (mn)	9
முஸ்லிம்கள்%	16.67

கிழக்கு வங்காளம் மற்றும் அசாம் (1905 – 1911)	
பகுதி (கிமீ)^2	275,938
மக்கள் தொகை (mn)	31
முஸ்லிம்கள் (mn)	18
முஸ்லிம்கள்%	58.06

வங்கப் பிரிவினை

12th_History_TM_Unit_2.indd 18 02-01-2023 16:53:44

www.tntextbooks.in

கற்றறிந்த தேசியவாத அறிஞர்களோடு ஈடுபாட்டை ஏற்படுத்திக் கொள்வதற்கு மாறாக அவர் வரிசையாகப் பல அடக்குமுறை நடவடிக்கைகளை மேற்கொண்டார். எடுத்துக்காட்டாக கல்கத்தா மாநகராட்சிக் குழுவில் அங்கம் வகித்தத் தேர்ந்தெடுக்கப்பட்ட இந்திய உறுப்பினர்களின் எண்ணிக்கையைக் குறைத்தார் (1899). 1904இல் இயற்றப்பட்டப் பல்கலைக்கழகச் சட்டத்தின்படி கல்கத்தா பல்கலைக்கழகம் அரசின் நேரடிக் கட்டுப்பாட்டின்கீழ் வைக்கப்பட்டது. இந்தியச் செய்திப் பத்திரிகைகளின் தேசியவாதத் தன்மையைக் குறைப்பதற்காக அலுவலக ரகசியச் சட்டத்தில் (1904) திருத்தம் கொண்டுவரப்பட்டது. இறுதியாக வங்காளத்தைப் பிரிக்க 1905இல் ஆணை பிறப்பித்தார். இப்பிரிவினை இந்தியா முழுவதும் பரவலான எதிர்ப்புக்கு இட்டுச் சென்று இந்திய தேசிய இயக்கத்தில் ஒரு புதிய கட்டத்தைத் தொடங்கி வைத்தது.

ஒரு நிர்வாகப் பிரிவு எனும் பொருளில் வங்காள மாகாணம் உண்மையிலேயே மேலாண்மை செய்ய இயலாத வகையில் வடிவத்தில் பெரிதாக இருந்தது. பிரிக்கப்பட வேண்டியதின் அவசியம் தொடர்பாக 1860ஆம் ஆண்டு முதலாக விவாதங்கள் நடைபெற்று வந்தன. மார்ச் 1890இல் பிரிவினைக்கானத் திட்டத்திற்குப் புத்துயிர் அளிக்கப்பட்டது. கர்சன் அசாம் சென்றிருந்த போது ஐரோப்பியப் பெரும் பண்ணையார்கள் அவரிடம் ஒரு வேண்டுகோள் வைத்தனர். கல்கத்தாவிற்கு அருகே தங்களுக்கு ஒரு கடல் வழியை ஏற்படுத்திக் கொடுத்தால் அவர்கள் அசாம் – பெங்கால் இருப்புப்பாதையைச் சார்ந்திருப்பதை ஓரளவு தவிர்த்துக் கொள்ள முடியும். என வேண்டினர். இதனைத் தொடர்ந்து டிசம்பர் 1903இல் தன்னுடைய இந்தியாவின் பிரதேச மறுவிநியோகம் தொடர்பான குறிப்புகளில் ஒரு திட்டத்தை கர்சன் தீட்டியிருந்தார். அதுவே பின்னர் திருத்தம் செய்யப்பட்டு ரிஸ்லி அறிக்கை (Risely Papers) என்ற பெயரில் வெளியிடப்பட்டது. இவ்வறிக்கை பிரிவினைக்கு ஆதரவாக இரண்டு காரணங்களை முன்வைத்தது. அவை: வங்காளத்திற்கு சுமை குறைவு, அசாமின் முன்னேற்றம் ஆகியனவாகும். எப்படியிருந்தபோதிலும் இத்திட்டம் எவ்வாறு ஆங்கிலேய அதிகாரிகளின், ஐரோப்பிய வணிகர்களின் வசதிக்கேற்றவாறு உண்மையிலே தீட்டப்பட்டது என்பது பற்றிய செய்திகள் மறைக்கப்பட்டன.

தொடக்கத்தில் வங்காளத்தின் சில பகுதிகளை மாற்றுவது அல்லது ஏனைய பகுதிகளை மாற்றியமைப்பது என்றிருந்த எண்ணம் டிசம்பர் 1903 முதல் 1905க்குள் பிரிவினைக்கான முழுத்திட்டமாக மாற்றப்பட்டது. வங்காளம் இரண்டு மாகாணங்களாகப் பிரிக்கப்பட வேண்டும். புதிய கிழக்கு வங்காளமும் அசாமும் சிட்டகாங், டாக்கா, திப்பேராவிலுள்ள ராஜஷாகி மலையின் சில பகுதிகள், அசாம் மாகாணம் மற்றும் மால்டா ஆகியவற்றை உள்ளடக்கியதாய் இருக்கும்.

இந்து முஸ்லிம்களைப் பிரிக்கும் நோக்கம்

ஆங்கிலேய ஆட்சிக்கு எதிராக வங்காளத்தில் நடைபெறும் அரசியல் நடவடிக்கைகளை அடக்கி இந்து – முஸ்லிம் மக்களிடையே பிரிவினையை உருவாக்குவது என்பதே கர்சனுடைய நோக்கமாகும். குடிமைப் பணியாளர்கள் முன்வைத்த மாற்றுத் திட்டங்களைக் குறிப்பாக, வங்காளத்தை மொழி அடிப்படையில் பிரிப்பது எனும் கருத்து வேண்டுமென்றே புறந்தள்ளப்பட்டது. இத்திட்டம் வங்காள அரசியல்வாதிகளை மேன்மேலும் ஒருங்கிணைத்துவிடும் என்பதால் கர்சன் இத்திட்டத்தை ஏற்க மறுத்தார். கர்சன் பிடிவாதமாக, பிரிக்கப்பட்ட வங்காளம் தெளிவாகத் தனித்தனியாய் பிரிக்கப்பட்ட இந்து – முஸ்லிம் மக்களைக் கொண்டிருக்க வேண்டுமென விரும்பினார். புவியியல் அடிப்படையில் பாகீரதி ஆறு இயற்கையாகவே வங்காளத்தைப் பிரிப்பதாக அமைந்திருந்தது. தனக்கு முன்னர் பணியாற்றியவர்களைப் போலவே கர்சனும் இதனை அறிந்திருந்தார். கிழக்கு வங்காளத்தில் முஸ்லிம்கள் அதிகம் இருந்தனர். மேற்கு வங்காளத்தில் இந்துக்கள் பெரும்பான்மையினராக இருந்தனர். மத்திய வங்கத்தில் இரு சமூகத்தினரும் சமஅளவில் வாழ்ந்து வந்தனர். முஸ்லிம் மக்களின் நன்மதிப்பைப்பெறும் உள்நோக்கத்தோடு அவர்களை நயந்து செல்லும் போக்கை ஆங்கில நிர்வாகம் கடைபிடித்தது. முந்தைய முஸ்லிம் ஆட்சி முதலாக முஸ்லிம் மக்கள் ஒருபோதும் அனுபவித்திராத ஓர் ஒற்றுமையைப் புதிய மாகாணமான கிழக்கு வங்காளத்தில் அனுபவிப்பார்கள் என பிப்ரவரி 1904இல் டாக்காவில் கர்சன், முஸ்லிம்களுக்கு உறுதியளித்தார்.

வங்கப் பிரிவினை வங்காள மக்களை மதத்தின் அடிப்படையில் பிரிப்பதற்குப் பதிலாக அவர்களை ஒன்றுபடுத்தியது. இனம், வர்க்கம், சமயம், வட்டாரம் ஆகியத் தடைகளைத் தாண்டி மக்களிடையே வளர்ந்து கொண்டிருந்த வங்காளிகள் எனும் அடையாளத்தை ஆங்கில நிர்வாகம் ஒருவேளை குறைத்து மதிப்பிட்டிருக்கலாம். பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியில் சமூகத்தின் பெரும்பகுதியினரிடையே

12th_History_TM_Unit_2.indd 19
02-01-2023 16:53:44

வங்காள ஒற்றுமை எனும் வலுவான எண்ணம் வளர்ந்து விட்டது. ரவீந்திரநாத்தாகூரை மையமாகக் கொண்டு வங்க மொழி இலக்கிய மதிப்பைப் பெற்றுவிட்டது. வட்டாரமொழிப் பத்திரிகைகளின் வளர்ச்சி ஒற்றுமை தொடர்பான கதை வடிவிலான விவரிப்புகளைக் கட்டமைப்பதில் பங்காற்றியது. இதைப்போலவே மீண்டும் மீண்டும் தோன்றிய பஞ்சங்கள், வேலையின்மை, பொருளாதார வளர்ச்சியில் ஏற்பட்ட சறுக்கல் ஆகியவை காலனிய எதிர்ப்பு உணர்வுகளைத் தோற்றுவித்தன.

2.2 பிரிவினை எதிர்ப்பு இயக்கம்

டிசம்பர் 1903இல் வங்கப்பிரிவினை அறிவிக்கப்பட்டதில் இருந்தே தீவிர தேசியவாதிகள், மிதவாத தேசியவாதிகள் ஆகிய இருதரப்பினரும் அதை விமர்சனம் செய்தனர். ஆனால் சுரேந்திரநாத் பானர்ஜி, K. K. மித்ரா, பிரித்விஸ் சந்திர ரே போன்றவர்களின் எதிர்வினையானது வேண்டுகோள் விடுப்பது மனுச்செய்வது என்ற அளவோடு சுருங்கிப் போனது. பிரிவினைக்கு எதிராக இங்கிலாந்து மக்களின் கருத்தில் தாக்கத்தை ஏற்படுத்துவது எனும் அளவில் அதன் நோக்கமும் கட்டுக்குள்ளேயே இருந்தது. எப்படியிருந்தபோதிலும், பரவலான எதிர்ப்புகளுக்கிடையே 1905 ஜூலை 19இல் வங்கப் பிரிவினை அதிகார பூர்வமாக அறிவிக்கப்பட்டது.

பிபின் சந்திர பால்

அஸ்வினி குமார் தத்தா

வங்கப் பிரிவினையைத் தடுப்பதில் ஏற்பட்ட தோல்வி, பிபின் சந்திர பால், அஸ்வினி குமார் தத்தா, அரவிந்தகோஷ் போன்ற தலைவர்கள் கொடுத்த அழுத்தம் ஆகியவற்றால் மிதவாத தேசியவாதிகள் தங்கள் உத்திகள் குறித்து மறுபரிசீலனை செய்து புதிய எதிர்ப்பு முறைகளைக் கண்டறிய வற்புறுத்தப்பட்டனர். அவைகளுள் ஒன்றுதான் ஆங்கிலப் பொருட்களைப் புறக்கணிப்பது. நீண்ட விவாதத்திற்குப் பின்னர் இந்திய தேசிய காங்கிரசின் மிதவாத தேசியத் தலைமை இதனை ஏற்றுக் கொண்டது. முதன்முறையாக மிதவாத தேசியவாதிகள் தங்களின் மரபு சார்ந்த அரசியல் முறைகளை மீறினர். 1905 ஜூலை 17இல் கல்கத்தாவில் நடைபெற்ற கூட்டமொன்றில் எதிர்ப்பை மக்களிடையே விரிவுபடுத்துவது என்று முடிவுசெய்யப்பட்டது. அதே கூட்டத்தில் ஆங்கிலப்பொருட்களையும் நிறுவனங்களையும் புறக்கணிக்க சுரேந்திரநாத் பானர்ஜி அறைகூவல் விடுத்தார். ஆகஸ்டு 7இல் கல்கத்தா நகர அரங்கில் (Town Hall) நடைபெற்ற மற்றொரு கூட்டத்தில் சுதேசி இயக்கம் முறையாகப் பிரகடனம் செய்யப்பட்டது.

அரவிந்த கோஷ்

இருந்தபோதிலும் சுதேசி இயக்கத்தின் நிகழ்ச்சி நிரலானது வங்கப்பிரிவினையை ரத்து செய்யப் போதுமானஅளவிற்கு கட்டுக்குள் வைக்கப்பட்டிருந்தது. மேலும் மிதவாத தேசியவாதிகள், இவ்வியக்கத்தைப் பயன்படுத்தி முழு அளவிலான அமைதி வழியில் எதிர்ப்பைத் தொடங்குவதற்கு முற்றிலும் எதிராக இருந்தனர். ஆனால் தீவிர தேசியவாதிகள் இவ்வியக்கம் ஏனைய மாகாணங்களுக்கு விரிவுபடுத்தப்படவும் முழு அளவிலான வெகுஜன இயக்கத்தைத் துவங்குவதற்கும் ஆதரவாக இருந்தனர்.

இயக்கத்தின் பரவல்

தலைவர்களின் திட்டமிடப்பட்ட முயற்சிகளுக்கும் மேலாக வங்கப்பிரிவினைக்கு எதிராகத் தன்னெழுச்சியான எதிர்ப்புகள் ஏற்பட்டன. குறிப்பாக மாணவர்கள் பெருமளவில் பங்கேற்றனர். பிரிவினைக்கு எதிரானப் போராட்டத்தில் மாணவர்களின் பங்கேற்பு அதிகம். இதன் எதிர்வினையாக ஆங்கில அதிகாரிகள் நேரடி நடவடிக்கை நிகழ்வுகளில் பங்கேற்கும் மாணவர்களுக்கு கல்வி உதவித்தொகையும் மானியங்களும் நிறுத்தப்படும் எனப் பயமுறுத்தினர். இதற்கு எதிர்வினையாக தேசிய கல்வி நிறுவனங்களை, பள்ளிகளை உருவாக்குவதற்கான முயற்சிகளை மேற்கொள்வதெனவும் முடிவு செய்யப்பட்டது. வங்காளம் முழுமையிலும் நகரங்களிலும் கிராமங்களிலும் ஆயிரக்கணக்கில் பொதுக் கூட்டங்கள் நடத்தப்பெற்றன. மத விழாக்களான துர்காபூஜை போன்றவற்றை புறக்கணிப்புப் பற்றிய வேண்டுகோள் விடுப்பதற்காகப் பயன்படுத்தப்பட்டன. அதிகாரபூர்வமாக வங்காளம் பிரிக்கப்பட்ட நாளான 1905 அக்டோபர் 16 துக்கதினமாக கடைபிடிக்கப்பட வேண்டுமென அறிவிக்கப்பட்டது. ஆயிரக்கணக்கில் மக்கள் கங்கையில் நீராடி வந்தே மாதரம் பாடலைப் பாடிக்கொண்டு வீதிகளில் ஊர்வலமாகச் சென்றனர்.

12th_History_TM_Unit_2.indd 20 02-01-2023 16:53:45

2.3 புறக்கணித்தலும், வங்காளத்தில் சுதேசி இயக்கமும் (1905 –1911)

G. சுப்பிரமணியம்

திட்டமிடப்பட்ட, தன்னெழுச்சியான போராட்ட முயற்சிகள், ஆங்கிலேயருக்கு எதிரான ஒரு நீண்டகாலப் போராட்டத்திற்கு அடித்தளம் அமைத்தன. புறக்கணிப்பும் சுதேசியமும் எப்போதும் ஒன்றோடொன்று இணைக்கப்பட்டதாகவும் இந்தியாவைத் தன்னிறைவு பெற்ற நாடாக ஆக்குவதும் இவ்விரிவான திட்டத்தின் ஒரு பகுதியாக இருந்தது. சென்னையைச் சேர்ந்த தேசியவாதியான G. சுப்பிரமணியம் சுதேசி இயக்கத்தின் குறிக்கோள் குறித்து "தேசிய வாழ்வின் அனைத்துத் தளங்களிலும் தங்களின் சார்பு நிலைக்கு எதிரான புரட்சி" எனச் சுருக்கமாக விளக்கினார். கோபால கிருஷ்ண கோகலேயின் வார்த்தைகளில் சுதேசி இயக்கமானது நம்முடையத் தொழில்களின் முனனேற்றத்திற்கானது மட்டுமல்ல; நமது தேசிய வாழ்க்கை சார்ந்த அனைத்துத் துறைகளின் மேம்பாட்டிற்குமானது. இயக்கத்தின் வளர்ச்சியோடு சுதேசி இயக்கம் குறித்த பல விளக்கங்கள் முன்வைக்கப்பட்டன. எப்படியிருந்த போதிலும் சுதேசி இயக்கமும் புறக்கணிப்புப் போராட்டங்களும் வாழ்வில் சுதந்திரத்தையும் கண்ணியத்தையும் பெறுவதற்கான சாத்தியமான வழிமுறையாக அல்லாமல் காலனிய எதிர்ப்புப் போராட்டமாகவே நடத்தப் பெற்றது. இவ்விளக்கம் பின்னர் மகாத்மா காந்தியடிகளின் வருகையோடு உட்புகுத்தப்பட்டது.

சுதேசி சிந்தனையின் பரிணாம வளர்ச்சி

விடுதலைப் போராட்டத்தின்போது சுதேசி இயக்கம் என்ற எண்ணம் முதன்முதலாக 1905இல் ஒரு சில காங்கிரஸ் தலைவர்களாலும், பின்னர் 1920களில் மகாத்மா காந்தியடிகளின் தலைமையிலும் ஒரு தத்துவமானது.

'சுதேசி' என்பதன் பொருள் 'ஒருவரது சொந்தநாடு' என்பதாகும். இத்தத்துவத்தின் தோற்றமானது 1872இல் பூனாவில் மகாதேவ் கோவிந்த் ரானடே தனது தொடர் சொற்பொழிவுகளின் மூலம் இச்சிந்தனையைப் பிரபலப்படுத்தியதிலிருந்துத் தொடங்குகிறது. ரானடேயின் கருத்துப்படி ஒருவரது சொந்த நாட்டில் உற்பத்திசெய்யப்படும் பொருட்களுக்கு அப்பொருட்களின் பயன்பாடு குறைவான மனநிறைவைக் கொடுத்த போதிலும் முன்னுரிமை வழங்கப்படல் வேண்டும்.

1920களில் காந்தியடிகள் இதை அனைத்து இந்தியர்களும் தாங்கள் பிறந்த நாட்டிற்குச் செய்யவேண்டிய கடமைகளோடு இணைத்துச் சுதேசி சிந்தனைக்குப் புதிய பொருளைக் கொடுத்தார். காந்தியடிகளைப் பொருத்தமட்டில் சுதேசி என்பது ஒருவர் தனது சொந்த நாட்டில் உற்பத்தி செய்யப்படும் பொருட்களை மட்டும் பயன்படுத்துவது என்பது மட்டுமல்ல. அவர் பின்வரும் வார்த்தைகளில் சுதேசியை விளக்குகிறார். சுதேசி என்பது நமக்குள்ளிருக்கும் ஆன்மபலம் அது வெகு தொலைவிலிருந்து கிடைப்பனவற்றை ஒதுக்கி வைத்து நமக்கு வெகு அருகேயுள்ள சுற்றுப்புறத்திலிருந்து கிடைக்கும் பயன்களையும் சேவைகளையும் பயன்படுத்தும் வண்ணம் இங்கு உள்ளவர்களால் தயார் செய்யப்படும் பொருட்களை மட்டுமே நாம் பயன்படுத்த வேண்டும். அப்படியான தொழில்கள் எங்கு தேவைப்படுகின்றனவோ அங்கே அவைகள் திறம்படவும் முழுமையாகவும் செயல்படச் சேவை செய்ய வேண்டும்.

(அ) ஆக்கபூர்வமான சுதேசி


ரவீந்திரநாத் தாகூர்

ஆக்கபூர்வமான சுதேசி திட்டம் பெருமளவு சுய உதவிக்கு முக்கியத்துவம் கொடுத்தது. அது ஆங்கிலேயரின் கட்டுப்பாட்டிலிருந்து முழுவதுமாக விடுதலை பெற்ற, சுயாட்சிக்கான மாற்று நிறுவனங்களைக் கட்டமைப்பதில் கவனம் செலுத்தியது. மக்கள் தங்களைச் சுயவலிமை உள்ளவர்களாக ஆக்கிக் கொள்ளவேண்டிய தேவைக்கு முக்கியத்துவம் வழங்கியது. அதுவே அரசியல் போராட்டங்களை நடத்துவதற்கு முன்பாக அதற்குத் தகுதியான குடிமக்களை உருவாக்கும்.

தனிச்சிறப்புடையவர்களில் ஒருவரான ரவீந்திரநாத் தாகூர் தனது எழுத்துகள் மூலம் இக்கருத்துகளைப் பிரபலமடையச் செய்தார். சுயஉதவி (ஆத்ம சக்தி) எனும் ஆக்கத் திட்டத்தினை அவர் கோடிட்டுக் காட்டினார். தாகூர் சுய பொருளாதார வளர்ச்சிக்கு அழைப்பு விடுத்தார். கல்வியானது தாய்மொழியில் வழங்கப்பட வேண்டுமென வற்புறுத்தினார். சுயஉதவி (ஆத்ம சக்தி) எனும் செய்தியை மக்களிடம் பரப்புவதற்கு மேளாக்கள் எனும் திருவிழாக்களைப் பயன்படுத்த அவர் அழைப்பு விடுத்தார். இதுவே ஒட்டு மொத்த வங்காளத்தின் தாரக மந்திரமாகி அதன் விளைவாக அனைத்து இடங்களிலும் ஜவுளி, கைத்தறித் துணிகள், சோப்புகள், மட்பாண்டங்கள், தீப்பெட்டி, தோல் பொருட்கள் ஆகியவற்றை விற்பனை செய்யும் சுதேசி விற்பனை நிலையங்கள் பெருகின.

12th_History_TM_Unit_2.indd 21 02-01-2023 16:53:45

> உங்களுக்குத் தெரியுமா?
>
> வட்டார மொழியில் கல்வி, எனும் கருத்து சுதேசி இயக்கத்திற்கு வெகு முன்னரே 1902இல் சதீஷ் சந்திர முகர்ஜியால் விடிவெள்ளிக் கழகம் (Dawn Society) நிறுவப்பட்ட போதே உருவாகி விட்டது.

1905 நவம்பர் 5இல் விடிவெள்ளிக் கழகத்தின் முன்னெடுப்பில் கல்விக்கான தேசிய கழகம் உருவாக்கப்பட்டது. ஆகஸ்ட் 1906இல் வங்காள தேசியக் கல்லூரியும் பள்ளியும் நிறுவப்பட்டன. அடிமை நிறுவனங்களிலிருந்து வெளியே வரும்படி சதிஷ் சந்திரா மாணவர்கட்கு ஒரு உணர்ச்சிகரமான வேண்டுகோள் விடுத்தார். இருந்தபோதிலும் இவ்வாறான முயற்சிகள் வேலைவாய்ப்புக்கான உத்தரவாதம் எதுவும் இல்லாததால் தோல்வியடைந்தன.

(ஆ) சமிதிகள்

பெருவாரியான மக்களை ஒன்று திரட்ட மேற்கொள்ளப்பட்ட மற்றொரு வெற்றிகரமான முறை சமிதிகள் (தொண்டர் படைகள்) எனும் அமைப்புகள் உருவாக்கப்பட்டமையாகும். உறுப்பினர்களுக்கு உடற்பயிற்சி அளித்தல், அறநெறிகளைக் கற்றுக் கொடுத்தல், பஞ்சங்களின்போதும் நோய்களின் தாக்கத்தின்போதும் சேவையாற்றுதல், விழாக்காலங்களில் சுதேசி செய்தியைப் பரப்புரை செய்தல், உள்ளூரளவில் பள்ளிகளையும் நடுவர் நீதிமன்றங்களையும் உருவாக்குதல் போன்ற பல பணிகளில் இச்சமிதிகள் ஈடுபடுத்தப்பட்டன. தனது இயல்பான அமைதிவழிப் போராட்டத்தின் மூலம் ஆங்கில அரசு நிர்வாகத்திற்கு ஒத்துழைப்புத் தராமல் இருப்பதே அதன் நோக்கம்.

மக்களைப் பெருமளவில் ஒன்றுதிரட்ட மேற்கொள்ளப்பட்ட இம்முயற்சிகள் முஸ்லிம் விவசாயிகள், ஒடுக்கப்பட்ட மக்கள் ஆகியோரிடையே தனது தளத்தை விரிவுபடுத்த இயலாமல் போனதால் செழித்தோங்க இயலவில்லை. சமிதிகளின் தொண்டர்களில் பெரும்பாலோர் கற்றறிந்த மத்தியதர வர்க்கத்திலிருந்தும் இந்து உயர் வர்க்கத்திலிருந்தும் அணி திரட்டப்பட்டிருந்தனர். தவிரவும் சுதேசி இயக்கவாதிகள் பல சமயங்களில் சமூக ரீதியாகவும் உடல் ரீதியாகவும் வலுக்கட்டாயமான முறைகளைக் கையாண்டனர். எடுத்துக்காட்டாக அந்நியப் பொருட்களை வாங்குவோரைச் சமூகப் புறக்கணிப்பு செய்வது சாதாரணமாக நடைபெற்றது. அந்நடவடிக்கைகள் சாதி அமைப்புகளின் மூலமாகவும் ஏனைய தேசியவாத அமைப்புகளின் வழியாகவும் மேற்கொள்ளப்பட்டன.

(இ) சாத்வீக செயலற்ற எதிர்ப்பு

வங்கப்பிரிவினையை ரத்து செய்வதற்கான அறிகுறிகள் தென்படாத நிலையில் 1906–லிருந்து சுதேசி இயக்கம் முக்கிய மாற்றம் பெற்றது. பெரும்பாலான தலைவர்கள் இவ்வியக்கத்தைப் பயன்படுத்தி நாடு முழுவதும் அரசியல் சுதந்திரம் அல்லது சுயராஜ்ஜியம் எனும் கருத்தைப் பரப்ப வேண்டுமெனக் கருதினர். ஆக்கச் சார்பான சுதேசிச் செயல்பாடுகள் அரவிந்தகோஷ், பிபின் சந்திரபால் போன்ற தலைவர்களாலும் ஏனைய தீவிர தேசியவாதத் தலைவர்களாலும் கடுமையாக விமர்சனம் செய்யப்பட்டன. அவர்களின் புதிய வழிகாட்டுதலின் கீழ் சுதேசி நிகழ்ச்சி நிரலில் பின்வருவன இணைத்துக் கொள்ளப்பட்டன. அவை அந்நியப் பொருட்களைப் புறக்கணிப்பது, அரசுப் பள்ளிகளையும் கல்லூரிகளையும் புறக்கணிப்பது, நீதிமன்றங்களைப் புறக்கணித்தல், பட்டங்களைத் துறந்து விடுதல், அரசுப் பணிகளைக் கைவிடுதல், ஆங்கிலேயரின் அடக்குமுறை தாங்க இயலாத அளவிற்குச் சென்றால் ஆயுதப் போராட்டத்தைக் கைக்கொள்வது. இத்தகைய இயல்புகளைக் கொண்ட போராட்டங்களுக்கு மிகப் பெருமளவிலான மக்களைத் திரட்டுவது அவசியமாயிற்று. மதத்தோடு பண்டைய பாரம்பரியப் பெருமைகளையும் இணைத்துக் கொள்வது இவ்வியக்கங்களின் மிக முக்கியக் கூறுகளானது.

2.4 தீவிர தேசியவாதம்

முப்பெரும் தலைவர்கள்: லால்–பால்–பால்

முன்னரே குறிப்பிட்டவாறு லாலா லஜபதி ராய், பாலகங்காதர திலகர், பிபின் சந்திர பால் (அடிக்கடி லால் – பால் – பால் (Lal–Bal–Pal) எனக் குறிப்பிடப்படும் முப்பெரும் தலைவர்கள்) ஆகியோரின் இயக்க நடவடிக்கைகளின் விளைவாக மகாராஷ்டிரம், வங்காளம், பஞ்சாப் ஆகிய மூன்றும் சுதேசி இயக்கக் காலப்பகுதியில் தீவிர தேசியவாதத்தின்

www.tntextbooks.in

மையப்புள்ளிகளாகத் திகழ்ந்தன. தீவிர தேசியவாதத் தலைவர்களில் மற்றுமொரு செல்வாக்குப் பெற்ற ஆளுமையாக இருந்தவர் அரவிந்த கோஷ் ஆவார். தொடக்ககால இந்திய தேசியவாதத்துடன் ஒப்பிடுகையில் இவ்வகைப்பட்ட தேசியவாதம் மிகவும் உறுதியுடையதாய் இருந்தது.

மிதவாத தேசியவாதிகள், தீவிர தேசியவாதிகள் ஆகிய இரு குழுவினருமே ஆங்கில ஆட்சியின் தீமைகளை நன்கறிந்தவர்கள் ஆவர். மிதவாத தேசியவாதிகள் பேச்சுவார்த்தைகள், விண்ணப்பங்கள் மூலம் ஆள்வோரைச் சமாதானம் செய்து இந்தியாவைச் சீர்திருத்திவிடலாம் என்ற நம்பிக்கையின் அடிப்படையில் செயல்பட்டனர். மாறாகத் தீவிர தேசியவாதிகள் காலனிய ஆட்சியாளர்கள் பேரரசுக்குச் சாதகமானவற்றை விட்டுத்தர விரும்பமாட்டார்கள்; அதனால் அவர்கள் ஒருபோதும் காரணங்களை ஏற்றுக்கொள்ளமாட்டார்கள் எனக் கருதினர்.

தீவிர தேசியவாதம் அதுவரை தந்துகொண்டிருந்த அரசியல் நெருக்கடியின் தன்மையை மாற்றியது. கற்றறிந்த இந்திய மக்களிடையே பொதுக்கருத்து வழங்கிய நெருக்கடி என்பது வெகுஜனங்களின் எதிர்ப்பு ஏற்படுத்திய நெருக்கடியாக மாறியது. இத்தகைய மாற்றங்கள் நிகழ்ந்தபோதும் தீவிர தேசியவாதக் கூட்டம் மிதவாத தேசியக் கூட்டத்துடன் ஒரு தொடர்பைத் தக்கவைத்துக் கொண்டது. அமைதி வழிப் போராட்ட முறைகளை மீறிச் செல்ல முடியவில்லை என்பதிலும் பெரும்பாலுமான நேரங்களில் தீவிர தேசியவாதம் அறவழிப் போராட்ட முறைகளில் கட்டுண்டு கிடந்ததிலும் இத்தன்மை வெளிப்பட்டது. இருந்தபோதிலும் மக்களின் தேசப்பற்று உணர்வுகளை மதத்தின் அடையாளங்களைப் பயன்படுத்தித் தூண்டினர்.

சுயராஜ்ஜியம் அல்லது அரசியல் சுதந்திரம்

தீவிர தேசியவாதத் தலைவர்களின் பொதுவான குறிக்கோள்களில் ஒன்று சுயராஜ்ஜியம் அல்லது சுயாட்சி என்பதாகும். ஆனால் சுயராஜ்ஜியத்தின் பொருள் குறித்து தலைவர்கள் வேறுபட்டனர். திலகருக்கு சுயராஜ்ஜியம் என்பது நிர்வாகத்தின் மீதான இந்தியர்களின் கட்டுப்பாடு அல்லது சொந்த மக்களின் நிர்வாகம் என்பது மட்டுமே தவிர இங்கிலாந்துடனான உறவுகள் அனைத்தையும் துண்டித்துக் கொள்வதல்ல. பிபின் சந்திரபாலின் கருத்துப்படி சுயராஜ்ஜியம் என்பது அந்நியர் ஆட்சியிலிருந்து முற்றிலுமாக விடுதலையடைதல் என்பதாகும்.

வங்காளம், பஞ்சாப், மகாராஷ்டிரா ஆகியப் பகுதிகளில் வளர்ந்து வந்த புரட்சிகர தேசியவாதம் குறித்து தீவிர தேசியவாதிகள், மிதவாத தேசியவாதிகளிடமிருந்து வேறுபட்டனர். மிதவாத தேசியவாதிகள் புரட்சிகரவாதிகளைப் பற்றி குறைகூறி விமர்சனம் செய்தனர். ஆனால் தீவிர தேசியவாதிகள் அவர்களின் மேல் அனுதாபம் கொண்டனர். ஆனால் அவர்களின் அரசியல் படுகொலைகளையும் தனிநபர் பயங்கரவாதத்தையும் தீவிர தேசியவாதிகள் அங்கீகரிக்கவில்லை. தேசபக்த புரட்சியாளர்களின் நோக்கங்களோடு தங்களை இணைத்துக் கொள்வதில் தீவிர தேசியவாதிகள் மிக்க கவனமுடன் இருந்தனர்.

இந்து மத நம்பிக்கைகளால் முலாம் பூசப்பட்டு வலியுறுத்திச் சொல்லப்பட்ட தேசப்பற்றை முஸ்லீம்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. தங்களின் முந்தையத் தலைவர்களைப் போலவே சுதேசி இயக்கத் தலைவர்கள் சமூகத்தின் பெரும்பகுதி மக்களை ஊடுருவத் தவறினர். 1908 முதல் தீவிர தேசியவாதம் சரியத் தொடங்கியது. 1907இல் ஏற்பட்ட சூரத் பிளவு அதன் வீழ்ச்சிக்கான மற்றுமொரு காரணமாகும்.

சூரத் பிளவு

1906இல் மிண்டோ பிரபு இந்திய அரசப்பிரதிநிதியாகப் பணியமர்த்தப்பட்டதிலிருந்து மிதவாத தேசியவாதிகளுக்கும் தீவிர தேசியவாதிகளுக்கும் இடையில் நிலவிய கருத்து வேற்றுமை மேலும் தீவிரமடைந்தது. வேற்றுமைகள் வளர்ந்து கொண்டிருந்த நிலையில் 1906இல் கல்கத்தா மாநாட்டில் மிதவாத தேசியவாதிகளின் கோரிக்கையை ஏற்று தாதாபாய் நௌரோஜி தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டதால் பிளவு தவிர்க்கப்பட்டது. பெரோஸ்ஷா மேத்தாவின் தலைமையிலான பல மிதவாத தேசியவாதிகள் தேர்தலில் தோற்கடிக்கப்பட்டனர். சுதேசி, புறக்கணிப்பு, தேசியக் கல்வி, சுயாட்சி ஆகியவை தொடர்பான நான்கு தீர்மானங்களைத் தீவிர தேசியவாதிகள் ஒருவாறு நிறைவேற்றினர்.

12th_History_TM_Unit_2.indd 23 02-01-2023 16:53:45

சூரத் காங்கிரஸ் பிளவு

காங்கிரசின் அடுத்த மாநாடு தீவிர தேசியவாதிகளின் கோட்டை எனக் கருதப்பட்ட பூனாவில் நடைபெறத் திட்டமிடப்பட்டது. கல்கத்தா மாநாட்டு முடிவுகளால் அச்சம் கொண்டிருந்த மிதவாத தேசியவாதிகள் மாநாடு நடைபெறுமிடத்தைச் சூரத் நகருக்கு மாற்றினர். காங்கிரசின் அடுத்த தலைவர் பொறுப்புக்கு மிதவாத தேசியவாதிகளின் வேட்பாளரான ராஷ்பிகாரி கோஷ் என்பாருக்கு எதிராகத் தீவிர தேசியவாதிகள் லாலா லஜபதி ராயின் பெயரை முன்மொழிந்தனர். இயக்கத்தில் பிளவு ஏற்படுவதைத் தவிர்ப்பதற்காக லாலா லஜபதி ராய் போட்டியிட மறுத்தார். 1906இல் கல்கத்தா மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட நான்கு தீர்மானங்களைப் பின்பற்றுவதா? இல்லையா என்ற கேள்வியை ஒட்டி நிலைமை கொதி நிலையை எட்டியது. பெரோஸ்ஷா மேத்தாவின் குழு இந்த தீர்மானங்களை நிகழ்ச்சி நிரலில் இருந்து நீக்கப்பட வேண்டுமெனக் கோரியது. பெரோஸ்ஷாவின் இத்தகைய திட்டத்தை எதிர்கொள்ளத் தீவிர தேசியவாதிகள் ராஷ் பிகாரி கோஷ் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்படுவதை எதிர்க்க முடிவு செய்தனர் மாநாடு குழப்பத்தில் முடிந்தது.

பெரோஸ்ஷா மேத்தா

டிசம்பர் 1885இல் உருவான காங்கிரஸ் இப்போது மிதவாத தேசியவாதிகள், தீவிர தேசியவாதிகளென இரு குழுக்களாகப் பிரிந்தது. சூரத் பிளவுக்குப் பின் உருவான காங்கிரஸ் முன்பிருந்ததைக் காட்டிலும் ஆங்கிலேயரிடம் அதிக விசுவாசத்துடன் நடந்துகொண்டது. தீவிர தேசியவாதிகள் இல்லாத புதிய காங்கிரஸ் "மேத்தா காங்கிரஸ்" என அழைக்கப்பட்டது. 1908இல் நடைபெற்ற காங்கிரஸ் மாநாட்டில் மிதவாத தேசியவாதிகள் மட்டுமே கலந்து கொண்டனர். அவர்கள் ஆங்கில அரசின் மீதான தங்கள் விசுவாசத்தை மீண்டும் வலியுறுத்தினர். ஆங்கில ஆட்சிக்கு சவாலாக இருக்கும் எண்ணமில்லாத காங்கிரஸ் ஓர் வலுவற்ற அரசியல்சார்ந்த அமைப்பாயிற்று. தீவிர தேசியவாதிகளினால் அதுபோன்ற அரசியல் சார்ந்த அமைப்பை உருவாக்க இயலவில்லை. முக்கியத் தலைவர்கள் அனைவரையும் கைது செய்து சிறையில் அடைத்த அரசின் அடக்கு முறையே அதற்கான முக்கியக் காரணமாகும்.

2.5 புரட்சிகர தேசியவாதம்

1908இல் தீவிர தேசியவாதம் சரிவுற்று புரட்சிகரச் செயல்பாடுகள் மேலெழுந்தன. வன்முறை சாராத நடவடிக்கைகளிலிருந்து வன்முறையை நோக்கி, எனும் மாற்றத்தை அது சுட்டிக்காட்டியது. மேலும் ஆங்கில ஆட்சிக்கு வெகுஜனங்களின் எதிர்ப்பு என்பதற்குப் பதிலாக சமூகத்தின் உயர்மட்டத்தைச் சார்ந்தோரின் எதிர்ப்பு என்ற மாற்றத்தையும் அது உணர்த்தியது. வங்காளத்தில் புரட்சிகர பயங்கரவாதமானது முன்னதாகவே வளர்ந்துவிட்டது. 1870களில் விவேகானந்தர் விளக்கியவாறு எஃகினாலான உடலையும் நரம்புகளையும் வளர்ப்பதற்காக பல்வேறு இடங்களில் அக்காரா எனப்படும் உடற்பயிற்சி நிலையங்கள் நிறுவப்பட்டன. பங்கிம் சந்திர சாட்டர்ஜியின் ஆனந்மத் (ஆனந்த மடம்) எனும் நாவலும் குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்தியது. அந்நாவல் வங்காளத்துப் புரட்சிகர தேசியவாதிகளால் பரவலாகப் படிக்கப் பெற்றது. அந்நாவலின் ஒருபகுதியான வந்தே மாதரம் பாடல் சுதேசி இயக்கத்தின் கீதமாயிற்று.

பங்கிம் சந்திர சாட்டர்ஜி

சுதேசி இயக்கத்தின் போது தனிநபர் வன்முறை எழுச்சி பெறுவதற்கு மூன்று காரணிகள் பங்களிப்புச் செய்தன.

- அந்நிய அடக்குமுறை ஆட்சியின் கீழ் வெகுவாகப் பொறுமை இழந்து கொண்டிருந்த இளைஞர்கள் அரசியலற்ற ஆக்கசார் செயல்பாடுகளை ஓரளவே ஏற்றுக் கொண்டனர்.

12th_History_TM_Unit_2.indd 24 02-01-2023 16:53:45

- இளம் வயது மக்களுக்குத் தலைமையேற்று அவர்களை ஒரு நீண்டகால வெகுஜனப் போராட்டத்தில் ஈடுபடுத்துவதில் தீவிர தேசியவாதிகள் தோல்வியடைந்தது தனிநபர் செயல்பாடுகள் வளர்வதற்குக் காரணமாயிற்று.
- புரட்சிகர செயல்பாடானது இந்திய வீரத்தை மீட்டெடுக்கும் குறியீட்டு முயற்சியின் ஒரு பகுதியாகவும் கருதப்பட்டது. அத்தன்மையை ஆங்கிலேயர் அடிக்கடி எதிர்ப்பதாயும் இகழ்வதாயும் புரட்சிகர தேசியவாதிகள் நம்பினர்.

இவ்வாறான நடவடிக்கைகள் ரஷ்யாவில் நடந்ததைப் போல திட்டமிடப்பட்ட ஒரு புரட்சிக்கு இட்டுச் செல்லவில்லை. பெரும்பாலுமான புரட்சிகர நடவடிக்கைகள் சில குறிப்பிட்ட அடக்கியாளும் ஆங்கில அதிகாரிகளைக் கொலைசெய்யும் முயற்சிகளாகவே அமைந்தன.

(அ) அலிப்பூர் குண்டுவெடிப்பு வழக்கு

வங்காளத்தில் 1902இல் பல ரகசிய சங்கங்கள் நிறுவப்பட்டதிலிருந்தே புரட்சிகர தேசியவாதத்தின் கதை தொடங்குகிறது. அவைகளுள் ஜதிந்தரநாத் பானர்ஜி, அரவிந்த கோஷின் சகோதரரான பரீந்தர்குமார் கோஷ் ஆகியோரால் கல்கத்தாவில் நிறுவப்பெற்ற அனுசீலன் சமிதி மிகவும் குறிப்பிடத்தக்க ஒன்றாகும். இதைப்போலவே புலின் பிகாரி தாஸ் என்பவரின் முயற்சியினால் டாக்கா அனுசீலன் சமிதி 1906இல் உருவானது. இதன் தொடர்ச்சியாக புரட்சிகர வார இதழான யுகாந்தர் தொடங்கப்பெற்றது. கல்கத்தா அனுசீலன் சமிதி விரைவில் தன்னுடைய செயல்பாடுகளைத் துவங்கியது. இது நிதி திரட்டுவதற்காக ஆகஸ்ட் 1906இல் ரங்பூரில் முதல் சுதேசிக் கொள்ளையை நடத்தியது.

அதே ஆண்டில் ஹேம்சந்திர கனுங்கோ இராணுவப் பயிற்சி பெறுவதற்காக பாரிஸ் சென்றார். 1908இல் நாடு திரும்பிய அவர் மணிக்தலா எனுமிடத்திலிருந்த ஒரு பண்ணை வீட்டில் ஒரு மதச்சார்புப் பள்ளியோடு குண்டுகள் தயாரிப்பதற்கான ஒரு தொழிற்கூடத்தையும் நிறுவினார். அதே பண்ணை விடுதியில் தங்கியிருந்தோர் பல்வேறு உடற்பயிற்சிகளைப் பெற்றனர். இந்து செவ்வியல் நூல்களையும், உலகத்தின் பல்வேறு பகுதிகளில் நடைபெற்ற புரட்சிகர இயக்கங்கள் குறித்த நூல்களையும் வாசித்தனர்.

சுதேசி போராட்டக்காரர்களை கொடூரமாக நடத்திய டக்ளஸ் கிங்ஸ்போர்டு எனும் ஆங்கில அதிகாரியை கொல்வதற்கான திட்டமும் அங்கு தீட்டப்பட்டது. கொலை செய்யும் பொறுப்பு இளம் புரட்சிவாதிகளான 18 வயது நிரம்பிய குதிராம் போஸ், 19 வயதான பிரஃபுல்லா சாக்கி ஆகியோரிடம் ஒப்படைக்கப்பட்டது. 1908 ஏப்ரல் 30இல் அவர்கள் தவறுதலாக ஒரு சாரட் வண்டியின் மீது குண்டை வீச கிங்ஸ் போர்டுக்குப் பதிலாக வேறு இரண்டு ஆங்கிலப் பெண்கள் அதில் கொல்லப்பட்டனர். பிரஃபுல்லா சாக்கி தற்கொலை செய்து கொள்ள, குதிரம் போஸ் கைது செய்யப்பட்டு பின்னர் கொலைக் குற்றத்திற்காகத் தூக்கிலிடப்பட்டார்.

குதிராம் போஸ்

பிரஃபுல்லா சாக்கி

அரவிந்த கோஷ், அவரின் சகோதரர் பரீந்தர் குமார் கோஷ் அவர்களுடன் மேலும் முப்பந்தைந்து நபர்கள் கைது செய்யப்பட்டனர். சித்தரஞ்சன் தாஸ் இவ்வழக்கில் புரட்சிகர தேசியவாதிகளுக்காக வாதாடினார். இது அலிப்பூர் குண்டுவெடிப்பு வழக்கு எனப்படுகிறது.

ஆங்கில ஆட்சிக்கு எதிராக அரவிந்த கோஷ் சதியில் ஈடுப்பட்டார் என்பதற்கான ஆதாரங்கள் ஏதுமில்லை என வழங்கப்பட்ட தீர்ப்பால் அனைத்துக் குற்றச் சாட்டுகளிலிருந்தும் அவர் விடுவிக்கப்பட்டார். பரீந்தர் கோஷ், உல்லாஸ்கர்தத் ஆகியோருக்கு மரணதண்டனை விதிக்கப்பட்டது (பின்னர் அது ஆயுட்கால நாடு கடத்தல் தண்டனையாக மாற்றப்பட்டது) ஏனையோர் ஆயுட்காலத்திற்கும் நாடு கடத்தப்பட்டனர். ஒரு வருடகாலம் நடைபெற்ற அலிப்பூர் வெடிகுண்டு வழக்கு மிகப் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது. பொதுமக்களுக்கு முன்னர் புரட்சிகர தேசியவாதிகளை கதாநாயகர்களாகச் சித்தரித்தது.

விசாரணையும் பின்விளைவுகளும்

அரவிந்த கோஷ் விடுதலைக்குப் பின்னர் ஒரு ஆன்மிகப் பாதையை தேர்ந்தெடுத்து தனது இடத்தைப் பாண்டிச்சேரிக்கு மாற்றிக் கொண்டு 1950இல் தான் இயற்கை எய்தும் வரை அங்கேயே தங்கியிருந்தார். ஒரு ஆயுதமேந்தியப் புரட்சியை முன்னெடுப்பது எனும் அரவிந்தரின் கருத்து நிறைவேறவேயில்லை. அரசு அடக்குமுறை மக்களின் மறுப்பு ஆகிய இரு காரணங்களும் இணைந்து வங்காளத்தில் புரட்சிகர இயக்கம் படிப்படியாக வீழ்ச்சியடையக் காரணமாயிற்று.

புரட்சிகர இயக்கத்தைச் சேர்ந்தவர்களில் பெரும்பாலோர் பிராமணர், காயஸ்தர், வைசியர் ஆகிய மூன்று உயர்வகுப்பைச் சேர்ந்தவர்களாக இருந்ததால் புரட்சிகர பயங்கரவாதம் சில சமூகம் தொடர்பான பாதிப்புக்குள்ளானது.

(ஆ) ஆங்கிலேயரின் அடக்குமுறை

டிசம்பர் 1908இல் மிண்டோ–மார்லி அரசியல் அமைப்புச் சீர்திருத்தங்கள் அறிவிக்கப்பட்டன. சீர்திருத்தங்களை மிதவாத தேசியவாதிகள் வரவேற்றனர். ஆனால் அதிகாரங்கள் எதுவும் மாற்றப்படவில்லை என்பதை அவர்கள் விரைவில் உணர்ந்தனர். ஆனால் மிண்டோ மேற்கொண்ட நடவடிக்கைகள் பிரிவினைகளை ஏற்படுத்துவதாக அமைந்தன. அது வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்தை நிறுவனப்படுத்தி இந்து, முஸ்லிம்களைப் பிரித்தது. மேலும் சில அடக்கு முறைச் சட்டங்களையும் காலனிய அரசு அறிமுகம் செய்தது.

- 1908 செய்தித்தாள் சட்டம் (குற்றம் செய்யத் தூண்டுதல்). இச்சட்டம் ஆட்சேபனைக்குரிய வகையிலான செய்திகளை வெளியிடும் அச்சகங்களின் சொத்துகளைப் பறிமுதல் செய்யும் அதிகாரத்தை நீதிபதிகளுக்கு வழங்கியது. இதனால் ஆங்கிலேயே ஆட்சியை விமர்சிக்கும் எதையும் வெளியிட முடியாத நிலை ஏற்பட்டது.
- 1910 இந்தியப் பத்திரிக்கைச் சட்டம் அச்சக உரிமையாளர்களும் வெளியீட்டாளர்களும் பிணைத்தொகை கட்டுவதைக் கட்டாய மாக்கியது. விரும்பத்தகாத தீங்கு விளைவிக்கக்கூடிய செய்திகளை அவர்கள் வெளியிட்டால் அத்தொகை எடுத்துக் கொள்ளப்படும்.
- இந்தியக் குற்றவியல் சட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட சீர்திருத்தம் விசாரணையின்றி முடிவுகளை மேற்கொள்ள அனுமதித்தது. மேலும் பொது அமைதிக்கு ஆபத்தான அமைப்புகளைத் தடை செய்தது.

அடக்குமுறை நடவடிக்கைகள் பரந்த அளவில் மேற்கொள்ளப்பட்டாலும் இந்திய தேசிய இயக்க கட்சியிலிருந்து புரட்சிகர தேசியவாத செயல்பாடுகளின் வசீகரம் மறையவேயில்லை. செயல்பாடுகளின் மையம் வங்காளத்திலிருந்து பஞ்சாபிற்கும் உத்திரப்பிரதேசத்திற்கும் நகர்ந்தது.

2.6 தமிழ்நாட்டில் சுதேசி இயக்கம்

தமிழ்நாட்டில் அதிலும் குறிப்பாக திருநெல்வேலி மாவட்டத்தில் நடைபெற்ற சுதேசி இயக்கம் பெரும் கவனத்தையும் ஆதரவையும் பெற்றது. ஆங்கில ஆட்சிக்கு எதிராக ஒன்று திரண்ட கோபத்தைப் பொதுச் சரடாகக் கொண்டு தமிழ்நாட்டில் நடைபெற்ற சுதேசி இயக்கம் அனைத்திந்திய பண்புகளைப் பெற்றிருந்தது. அதே சமயம் அது தமிழ் உணர்வாலும் பெருமையாலும் ஆதரிக்கப்பட்டது. தமிழ்நாட்டுக் காங்கிரசில் மிதவாத தேசியவாதிகளுக்கும் தீவிர தேசியவாதிகளுக்கும் இடையே ஆழமானப் பிரிவு இருந்தது.

(அ) வட்டாரமொழி சொற்பொழிவுக் கலையின் வளர்ச்சி

தொடக்கத்தில் இவ்வியக்கம் பெருமளவில் வங்கப்பிரிவினைக்கு எதிரான எதிர் வினையாகவே இருந்தது. வங்கப்பிரிவினைக்கு எதிராகக் கூட்டங்கள் வழக்கமாக நடைபெற்றன. இவ்வாறான கூட்டங்களில் தலைவர்கள், மாணவர்கள், வழக்கறிஞர்கள், தொழிலாளர்கள் என அச்சமயம் கூடியிருப்போரிடம் வட்டார மொழியில் சொற்பொழிவாற்றினர். ஆங்கிலத்தில் சொற்பொழிவாற்றுவதென்பதிலிருந்து வட்டார மொழியில் சொற்பொழிவு நிகழ்த்துவது என ஏற்பட்ட மாற்றம் இக்காலத்தில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க வளர்ச்சியாகும். இது தமிழ்நாட்டின் வெகுஜன அரசியலின் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது.

மெரினாக் கடற்கரையில் சுதேசி கூட்டங்கள் நடைபெறுவது வழக்கமாகக் காணக்கூடிய காட்சியாயிற்று. இவ்வாறான கூட்டங்கள் நடைபெறும் மற்றொரு இடம் மூர்மார்க்கெட் ஆகும். 1905–1907 காலப் பகுதியைச் சேர்ந்த காவல்துறை அறிக்கைகள் மாணவர்களை ஆபத்தானவர்கள், அவர்களின் நடவடிக்கைகள் ஆட்சிக்கு எதிரானவை எனவும் குறிப்பிட்டன. பொது இடங்களில் ஐரோப்பியர்கள் மாணவர்களால் "வந்தே மாதரம்" எனும் முழக்கத்துடன் வாழ்த்தப்பட்டனர். 1907இல் சென்னைக்கு வருகை தந்த பிபின் சந்திர பால் சென்னைக் கடற்கரையில் ஆற்றிய உரைகள் பார்வையாளர்களிடையே உத்வேகத்தை ஏற்படுத்தின. அவருடைய வருகை தமிழகம் முழுவதிலும் ஆழமான தாக்கத்தை ஏற்படுத்தியது. தமிழில் ஆற்றப்பட்ட பொதுச் சொற்பொழிவுகள் தமிழ்நாட்டின் அரசியல் செயல்பாடுகள் கருக்கொள்ளத் தொடங்கிய காலத்தில் காணப்படாதப் புதிய பார்வையாளர்களை உருவாக்கியது.

(ஆ) வ.உ.சி. யும் சுதேசி நீராவிக் கப்பல் கம்பெனியும் (SSNC)

1906இல் வ.உ. சிதம்பரம் ஆங்கிலேயரின் கடற்பயண முற்றுரிமைக்கு எதிராகச் சுதேசி கப்பல் கம்பெனி ஒன்றை ஏற்படுத்தும் கருத்தை

வெளிப்படுத்தியபோது தமிழ்நாட்டின் சுதேசி இயக்கம் தேசத்தின் கவனத்தைப் பெற்றது.

வ. உ. சிதம்பரம்

1906இல் வ.உ.சி. சுதேசி நீராவிக் கப்பல் கம்பெனி (Swadeshi Steam Navigation Company – SSNC) எனும் கூட்டுப்பங்கு நிறுவனத்தைப் பதிவு செய்தார். மொத்த முதலீடான ₹10 லட்சம் 40, 000 பங்குகளாகப் பிரிக்கப்பட்டு ஒரு பங்கு ₹25 வீதம் இந்தியர்கள், இலங்கையைச் சேர்ந்தவர்கள், ஆசிய நாடுகளைச் சேர்ந்தோருக்கு மட்டும் விற்பனை செய்யப்பட்டது. வ.உ.சி. S.S.கலியா, S.S.லாவோ என்னும் இரண்டு நீராவிக் கப்பல்களை வாங்கினார். நாட்டின் ஏனையப் பகுதிகளில் சுதேசிச் செயல்பாடுகள் என்பது மெழுகுவர்த்தி செய்வது, வளையல்கள் செய்வது போன்ற குறிப்புணர்த்தும் அடையாள நடவடிக்கைகளாக இருந்தபோது, சுதேசி நீராவிக் கப்பல் கம்பெனியை உருவாக்குவது என்ற எண்ணம் உண்மையில் கண்ணையும் கருத்தையும் கவர்வதாக அமைந்தது. வ.உ.சி. அப்பகுதியின் வளமான வரலாற்றையும் இந்தியாவின் பண்டையகாலக் கடற்பயணப் பெருமைகளையும் துணையாகக் கொண்டார். சுதேச இயக்கத்திற்கு ஆதரவாக மக்களின் கருத்தைத் தூண்டுவதற்கு மீண்டும் மீண்டும் அவற்றைக் குறிப்பிட்டார்.

வ.உ.சி.யின் சுதேசி இயக்க முன்னெடுப்பு தேசியத் தலைவர்களால் பாராட்டப் பெற்றது. சுதேசி கப்பல் நிறுவனத்தின் வெற்றி குறித்து லோகமான்ய திலகர் தன்னுடைய கேசரி, மராட்டா பத்திரிகைகளில் எழுதினார். அரவிந்த கோஷும் சுதேசி முயற்சிகளைப் பாராட்டி கம்பெனியின் பங்குகள் விற்பனையாவதற்கு உதவினார். பாண்டித்துரையும், ஹாஜி பக்கீர் முகமதுவும் பெரிய பங்குதாரர்களில் இருவராவர்.

வ. உ. சி. யின் கப்பல்

தொடக்கத்தில் ஆங்கில நிர்வாகம் சுதேசிக் கப்பல் கம்பெனியைக் கண்டுகொள்ளாமல் அலட்சியப்படுத்தியது. நாளடைவில் சுதேசிக் கப்பல் கம்பெனிக்கான ஆதரவு பெருகியபோது ஐரோப்பிய அதிகாரிகள் ஒருதலைபட்சமாகவும் இன வேற்றுமை உணர்வுடனும் நடந்து கொண்டனர்.

(இ) கோரல் நூற்பாலை வேலை நிறுத்தம்

சூரத் மாநாட்டில் பங்கேற்ற பின்னர் ஊர் திரும்பிய வ.உ.சி. ஓர் அரசியல் அமைப்பைத் தொடங்குவதற்கானப் பணிகளைச் செய்யத் திட்டமிட்டார். ஒரு நல்ல பேச்சாளரை அவர் தேடிக் கொண்டிருந்த தருணத்தில் சுதேசி இயக்கத்தைப் போதித்து வந்த சுப்ரமணிய சிவாவைச் சந்தித்தார். 1907இல் பிப்ரவரி, மார்ச் மாதங்களில் இருவரும் தூத்துக்குடிக் கடற்கரையில் தினந்தோறும் பொதுக் கூட்டங்களில் பேசினர். மக்களுக்குச் சுதேசி குறித்தும் புறக்கணித்தல் பற்றியும் கற்றுக் கொடுத்தனர். ஆயிரக்கணக்கில் மக்கள் இக்கூட்டங்களில் கலந்து கொண்டனர். இப்பொதுக்கூட்டங்களை அரசு உன்னிப்பாகக் கண்காணித்தது.

1908இல் கோரல்மில் தொழிலாளர்களின் படுமோசமான வேலை, வாழ்க்கைச் சூழல்கள் வ.உ.சி, சிவா ஆகியோரின் கவனத்தைக் கவர்ந்தது. தொடர்ந்து வந்த சிலநாட்களில் தலைவர்கள் இருவரும் தொழிலாளர்களிடம் உரையாற்றினர். அவ்வுரைகளால் தூண்டப்பெற்று கோரல் பருத்தி நூற்பாலைத் தொழிலாளர்கள் மார்ச் 1908இல் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர். இந்தியாவில் திட்டமிட்டு நடத்தப்பட்ட தொடக்ககால வேலை நிறுத்தங்களில் இதுவும் ஒன்றாகும்.

தேசிய செய்திப் பத்திரிகைகள் நூற்பாலைத் தொழிலாளர்களின் வேலை நிறுத்தத்தை முழுமையாக ஆதரித்தன. இருந்தபோதிலும் ஆலை உரிமையாளர்கள் அசைந்து கொடுக்கவில்லை. வேலை நிறுத்தத்தை ஒடுக்க நினைத்த அரசு ஆலை நிர்வாகத்திற்கு ஆதரவாக இருந்தது. தொழிலாளர்களுக்கு நெருக்கடி கொடுக்கும் வகையில் தலைவர்கள் தூத்துக்குடி நகரினுள் கூட்டங்கள் நடத்தத் தடை விதிக்கப்பட்டது. முடிவில் ஆலை முதலாளிகள் தொழிலாளர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தி அவர்களின் கோரிக்கைகளை ஏற்றுக் கொள்ள முடிவு செய்தனர்.

தொழிலாளர்களின் வெற்றி வங்காளத்து தீவிர தேசியவாதிகளிடையே உற்சாகத்தை ஏற்படுத்தியது. வங்காளத்துச் செய்திப் பத்திரிகைகள் இவ்வெற்றியை வாழ்த்தின. இவ்வெற்றி "கற்றறிந்த மக்களுக்கும் பொதுமக்களுக்குமிடையே ஒரு

12th_History_TM_Unit_2.indd 27 02-01-2023 16:53:46

www.tntextbooks.in

இணைப்பை உருவாக்கியுள்ளது. அதுவே சுயராஜ்ஜியத்தை நோக்கி எடுத்து வைக்கப்பட்ட உன்னதமான முதல் அடியாகும். இந்தியத் தொழிலாளியின் ஒவ்வொரு வெற்றியும் நாட்டிற்குக் கிடைத்த வெற்றி…" என அரவிந்த கோஷின் வந்தே மாதரம் புகழாரம் சூட்டியது.

(ஈ) சுப்ரமணிய பாரதி: கவிஞர் மற்றும் தேசியவாதி

சுப்ரமணிய பாரதி

ஆங்கிலத்திலும் தமிழிலும் வெளியான செய்திப் பத்திரிக்கைகளின் வளர்ச்சி தமிழகத்தில் சுதேசி இயக்கத்திற்குத் துணை நின்றது. செய்திப் பத்திரிகையை பயன்படுத்தி தேசியவாதச் செய்திகளை விரிந்துபட்ட பார்வையாளர்களிடையே பரப்புரை செய்த தலைவர்களுள் முதன்மையானவர் G. சுப்ரமணியம். அவர் வேறு ஐந்து நபர்களுடன் இணைந்து தி இந்து (The Hindu) மற்றும் சுதேசமித்திரன் (தமிழில் வெளியிடப்பட்ட முதல் தினசரி) எனும் பத்திரிகைகளை நிறுவினார். 1906இல் பர்சால் காங்கிரஸ் மாநாட்டின் போது ஆங்கிலேயர்கள் மேற்கொண்ட நடவடிக்கைகளை விமர்சித்து அவர் ஒரு புத்தகத்தை வெளியிட்டார். சுதேசமித்திரன் தேசியவாதிகளின் செயல்பாடுகள் குறித்து குறிப்பாக வ.உ.சி. தூத்துக்குடியில் ஆற்றிய உரைகள் பற்றி விரிவான செய்திகளை வெளியிட்டது.

இந்திய தேசியவாதம் ஒரு புதிய வழிகாட்டுதலை எதிர்பார்த்துக் கொண்டிருந்த காலப்பகுதியில் (1904) சுப்ரமணிய பாரதி சுதேசமித்திரன் பத்திரிகையின் துணையாசிரியராகப் பணியமர்த்தப்பட்டார். பாரதி சக்ரவர்த்தினி எனும் மாத இதழின் ஆசிரியராகவும் பணியாற்றினார். அது பெண்களின் மேம்பாட்டிற்காகத் தன்னை அர்ப்பணித்துக் கொண்ட பத்திரிகையாகும்.

இரு நிகழ்வுகள் சுப்ரமணிய பாரதியின் மீது குறிப்பிடத்தக்க தாக்கத்தினை ஏற்படுத்தின. அயர்லாந்து நாட்டுப் பெண்மணியும் விவேகானந்தரின் சீடருமான சகோதரி நிவேதிதாவை அவர் 1905இல் சந்தித்தது முதலாவதாகும். குருமணி (ஆசிரியர்) என அவரால் குறிப்பிடப்பட்ட அப்பெண்மணி அவரின் தேசியவாதச் சிந்தனைகளுக்கு ஊக்கமளித்தார். ஆங்கிலேய ஆட்சியை எவ்வாறு எதிர்கொள்வது என்பது குறித்து காங்கிரசுக்குள் நிலவிய கருத்துக் குழப்பம் மற்றொன்றாகும். இப்பாடத்தில் முன்னர் விவாதிக்கப்பட்டது போல் சட்டத்திற்கு உட்பட்ட முறைகளைப் பின்பற்ற விரும்பிய மிதவாத தேசியவாதிகளை 'யாசிப்பவர்கள்' என தீவிர தேசியவாதிகள் ஏளனம் செய்தனர். ஆங்கில ஆட்சி புதிய அணுகுமுறையில் எதிர்கொள்ளப்பட வேண்டும் என நினைத்த பாரதியாருக்கு தீவிர தேசியவாதிகளின் வழிமுறைகள் அதிகம் ஏற்புடையனவாய் இருந்தன. எடுத்துக்காட்டாக காங்கிரசின் சூரத் மாநாட்டிற்குப் (1907) பின்னர் திலகர் மீது அவர் கொண்டிருந்த ஆர்வமும் பற்றும் மேலும் பெருகியது. திலகரின் *Tenets of New party* எனும் நூலை பாரதி தமிழில் மொழியாக்கம் செய்தார். மேலும் 1907இல் 'சூரத் சென்று வந்த பயணம் சென்னை மாகாணத் தீவிர தேசியவாதிகள் குறித்து' எனும் சிறு புத்தகமொன்றை வெளியிட்டார். பாரதி ஆசிரியராகப் பணியாற்றிய இந்தியா என்ற வார இதழ் தீவிர தேசியவாதிகளின் குரலாக மாறியது.

(உ) வ.உ.சி., சுப்ரமணிய சிவா கைதும் சிறைவாசமும்

சுப்ரமணிய சிவா

ஆறுமாத காலச் சிறை தண்டனைக்கு பின்னர் பிபின் சந்திர பால் 1907 மார்ச் 9இல் விடுதலை செய்யப்பட்டார். அந்நாளை தமிழ்நாட்டுச் சுதேசி இயக்கத் தலைவர்கள் 'சுதேசி தினமாக' திருநெல்வேலியில் கொண்டாட முடிவு செய்தனர். அரசு நிர்வாகம் அனுமதி மறுத்ததையும் மீறி வ.உ.சி., சுப்ரமணிய சிவா, பத்மநாபர் ஆகியோர் செயல்பட்டனர். அவர்கள் 1908 மார்ச் 12இல் தேச துரோகக் குற்றத்திற்காகக் கைது செய்யப்பட்டனர்.

முக்கியமான சுதேசி இயக்கத் தலைவர்கள் கைது செய்யப்பட்டதால் சினம் கொண்ட உள்ளூர் மக்கள் எதிர்வினையாக வன்முறை நடவடிக்கைகளில் ஈடுபட்டனர். எதிர்ப்பைத் தெரிவிக்கும் வகையில் கடையடைப்பு நடத்தப்பெற்றது. திருநெல்வேலியில் நகரசபைக் கட்டடமும் காவல் நிலையமும் தீ வைக்கப்பட்டன. மிக முக்கியமாக சுதேசித் தலைவர்கள் கைது செய்யப்பட்டதை எதிர்த்து நூற்பாலைத் தொழிலாளர்கள் பெருவாரியான எண்ணிக்கையில் ஆலையை விட்டு வெளியே வந்தனர். எதிர்ப்புத் தெரிவித்தக் கூட்டத்தாரோடு ஏற்பட்ட சில மோதல்களுக்குப் பின்னர்

12th_History_TM_Unit_2.indd 28 02-01-2023 16:53:46

பேரரசருக்கு எதிரான வ.உ.சி., சுப்ரமண்ய சிவா வழக்கில் வழங்கப்பட்ட தீர்ப்பின் சில பகுதிகள் (நவம்பர் 4, 1908)

ஆட்சிக்கு எதிராக மக்களைத் தூண்டுவது அது எப்போதானாலும் சரி மிக மோசமான குற்றமென்றே எனக்குத் தோன்றுகிறது. இம்மாகாணத்தில் இவ்வகைப்பட்ட வழக்குகளில் இதுவே முதல் வழக்கு என்பது உண்மை. ஆனால் இக்குற்றம் கால் ஊன்றுவதற்கு எந்த மாகாணங்களிலெல்லாம் இடத்தைப் பெற்றுவிட்டதோ, அவைகளில் நிலவும் இப்போதைய நிலைமைகள், மிதமான தண்டனைகளான சில மாதங்கள் சிறை தண்டனை அல்லது ஒன்று அல்லது இரண்டாண்டுகள் சிறை தண்டனைகளானது தகுதியற்றோர்க்கு வழங்கப்பெற்ற சலுகைகள் எனச் சுட்டிக்காட்டுவதாய்த் தோன்றுகிறது. தண்டனையின் குறிக்கோளானது குற்றவாளிக்கு மட்டுமல்ல, அவருடைய முன்னுதாரணத்தை பின்பற்ற விழையும் மற்றவர்க்கும் அச்சமூட்டுவதாய் அமைய வேண்டும். ஏறத்தாழ ஒரு புரட்சியாக முடிந்து விட்ட ஒரு அரசு எதிர்ப்பியக்கத்தைக் கையாள வேண்டியுள்ளது. கலகங்களை அடக்கும் போது இழக்கப்பட்ட உயிர்களுக்குதார்மீகஅடிப்படையில் இவர்களே பொறுப்பாவர் என்பது அவர்களைக் கைது செய்தலில் உறுதியாகிவிட்டது.

காவல்துறையினர் துப்பாக்கிச் சூடு நடத்தியதில் நால்வர் கொல்லப்பட்டனர்.

1908 ஜூலை 7இல் வ.உ.சி. யும், சுப்ரமணிய சிவாவும் குற்றம் செய்தனர் என அறிவிக்கப்பட்டு தேச துரோகக் குற்றத்தின் கீழ் சிறையிலடைக்கப்பட்டனர். அரசுக்கு எதிராகப் பேசிய குற்றத்திற்காகச் சிவாவுக்கு 10 ஆண்டுகள் நாடு கடத்துதல் தண்டனையும் அவருக்கு உடந்தையாக இருந்ததற்காக வ.உ.சி. க்கு ஆயுள் தண்டனையும் (20 ஆண்டுகள்) விதிக்கப் பெற்றது. வ.உ.சி அரசை எதிர்த்துப் பேசிய குற்றத்திற்காக மேலும் ஒரு ஆயுள் தண்டனை விதிக்கப்பெற்றார். திருநெல்வேலியில் போராட்டங்களை எந்த அளவிற்கு அரசு தீவிரத்துடன் நோக்கியது என்பதை இக்கொடூரமான தண்டனைகள் உணர்த்துகின்றன.

இந்நிகழ்ச்சியின் பின்விளைவாக ஆங்கிலேய அரசின் அடக்குமுறையானது ஒரு சில தலைவர்களைக் கைது செய்ததோடு நின்றுவிடவில்லை. உண்மையில் செயலூக்கத்துடன் எதிர்ப்பியக்கத்தில் கலந்து கொண்ட மக்களும் தண்டிக்கப்பட்டனர். திருநெல்வேலி, தூத்துக்குடி பகுதிகளைச் சேர்ந்த மக்களிடம் காவல்துறை தண்டனையால் வரியும் வசூலிக்கப்பட்டது.

(ஊ) ஆஷ் படுகொலை

தூத்துக்குடியில் சுதேசி முயற்சிகள் அடக்கப்பட்டது. அதனைத்தொடர்ந்து சுதேசி இயக்கத் தலைவர்கள் கைது செய்யப்பட்டு அவமானப்படுத்தப்பட்டது ஆகியவை இளைஞர்களிடையே பெரும் கோபத்தை உருவாக்கின. திருநெல்வேலி நிகழ்வுக்குப் பழி வாங்குவதற்காக ஒரு சதித்திட்டம் தீட்டப்பட்டது. ஆங்கிலேயரின் அடக்குமுறை குறித்து பத்திரிகைகள் தொடர்ந்து பரப்புரை செய்தது. நிர்வாகத்திற்கு எதிராக மக்களிடையே கோபத்தை உண்டாக்குவதில் தீர்மானகரமானப் பங்கை வகித்தது.

வாஞ்சிநாதன்

திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் ராபர்ட் ஆஷ், ஜூன் 1911இல் மணியாச்சி ரயில் நிலையத்தில் வாஞ்சிநாதனால் சுட்டுக் கொல்லப்பட்டார். 1880இல் திருவாங்கூர் அரசின் பகுதியில் பிறந்த வாஞ்சிநாதன் அவ்வரசின் ஆட்சியிலிருந்த புனலூரில் வனத்துறையில் காவலராகப் பணியாற்றினார். 'பாரத மாதா' என்ற புரட்சிகர தேசியவாதக் குழுவில் அவரும் ஒரு உறுப்பினராவார். ஐரோப்பிய அதிகாரிகளைக் கொல்வதன் மூலம் இந்தியர்களைப் புரட்சிக்குத் தூண்டுவதே இவ்வமைப்பின் குறிக்கோளாகும். இச்செயல்பாடுகள் சுயராஜ்ஜியத்திற்கு இட்டுச்செல்லும் என அவர்கள் நம்பினர். திட்டத்தின் ஒரு பகுதியாக வாஞ்சிநாதனுக்கு கைத்துப்பாக்கியைப் பயன்படுத்தும் பயிற்சியை வ.வே. சுப்ரமணியம் பாண்டிச்சேரியில் வழங்கினார்.

மணியாச்சி ரயில் நிலையத்தில் ஆஷை சுட்ட பின்னர் வாஞ்சிநாதன் அதே துப்பாக்கியால் தன்னைச் சுட்டுக் கொண்டார்.


வ.வே. சுப்ரமணியம்

12th_History_TM_Unit_2.indd 29 02-01-2023 16:53:46

www.tntextbooks.in

படுகொலையின் பின்விளைவுகள்

விசாரணையின்போது ஆஷ் கொலையில் குற்றம் சாட்டப்பட்டவர்களுடன் பாண்டிச்சேரியில் தலைமறைவாய் இருக்கும் வ.வே. சுப்ரமணியரும் ஏனையோரும் நெருக்கமாக இருந்து இணைந்து செயல்பட்டுள்ளனர் என்பதை ஆங்கிலஅரசு மெய்ப்பித்தது. பாண்டிச்சேரி குழுவினர் குறித்தும் அவர்களது நடவடிக்கைகள் பற்றியும் காலனிய அரசு பெரும் சந்தேகம் கொண்டது. இத்தகையதோர் சூழ்நிலை தேசியவாதக் கருத்துகளைப் பரப்புரை செய்யவும் நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் இயலாத நிலையை ஏற்படுத்தியது. கொலையின் பின்விளைவாக காலனியரசு மேற்கொண்ட அடக்குமுறை நடவடிக்கைகளின் விளைவாகத் தமிழ்நாட்டில் தேசிய இயக்கம் செயல்வேகம் குறைந்த, மந்த கதியிலான ஒரு காலகட்டத்தை எதிர்கொண்டது. 1916இல் தன்னாட்சி இயக்கத்தையொட்டி அது ஒருவகையான புத்துயிர்ப்பைப் பெற்றது.

பாடச் சுருக்கம்

- வங்கப் பிரிவினையால் ஏற்பட்ட சுதேசி இயக்கங்கள் காலனிய எதிர்ப்பியக்க வரலாற்றில் முக்கியத் திருப்புமுனைகள் ஆகும்.
- அரசியல் பரப்புரைகளுக்குப் புதிய செய்முறைகளை வடிவமைத்ததோடு இவ்வியக்கம் சுதந்திரப்போராட்டத்தில் காந்தியடிகளின் காலப்பகுதி உட்பட ஒரு நீண்ட நெடிய எதிர்ப்பைத் தக்க வைப்பதற்கான ஊக்கத்தையும் கொடுத்தது.
- சுதேசி இயக்கத்தின்போது ஆங்கிலத்தில் உரையாற்றுவது மாற்றத்திற்கு உள்ளாகி சுதேச மொழிகளில் (வட்டார மொழிகளில்) சொற்பொழிவுகள் நிகழ்த்தப்பட்டது செய்திப் பரிமாற்றத்திலும் ஒரு புரட்சியை ஏற்படுத்தியது.
- சுதேசி இயக்கம் வன்முறையின் மீது நாட்டம் கொண்ட இளைஞர்கள் உருவாவதற்கும் வழி கோலியது.
- வரலாறு, இலக்கியம், நாட்டுப்பற்று, தேசியம் தொடர்பாக பிராந்திய மொழிகளில் உருவான கவிதைகள் ஆகியவை மீது ஆர்வத்தை ஏற்படுத்துவதில் சுதேசி இயக்கச் சூழல் செழிப்பான பங்களிப்பைச் செய்தது.
- தேசியவாதிகளின் மீது ஆங்கிலேயர்கள் வன்முறையைக் கட்டவிழ்த்து விட்டதால் தீவிர தேசியவாதிகள் தங்கள் கொள்கை முழக்கங்களை பரந்துபட்ட பொருளாதாரக் குறைபாடுகளோடும் பெருவாரியான பொதுமக்களோடும் இணைப்பதில் தோல்வியடைந்தனர்.
- இந்துக்களைத் திரட்டுவதற்காகப் பயன்படுத்தப்பட்ட மதமும் மதக்குறியீடுகளும் முஸ்லிம்களை அந்நியப்படுத்தின.

பயிற்சி

I. சரியான விடையைத் தேர்வு செய்யவும்.

1. சூரத்தில் நடைபெறவிருந்த காங்கிரஸ் மாநாட்டிற்கு காங்கிரஸின் அடுத்த தலைவராக தேர்ந்தெடுக்கப்படுவதற்கு யாருடைய பெயர் தீவிர தேசியவாதிகளால் முன்மொழியப்பட்டது?

   (அ) அரவிந்த கோஷ்

   (ஆ) தாதாபாய் நௌரோஜி

   (இ) ஃபெரோஸ் ஷா மேத்தா

   (ஈ) லாலா லஜபதி ராய்

2. பின்வரும் கூற்றுக்களைக் காண்க.

   (i) 1905இல் மேற்கொள்ளப்பட்ட வங்கப் பிரிவினை ஆங்கிலேயரின் பிரித்தாளும் கொள்கைக்கு மிகச் சிறந்த உதாரணமாகும்.

   (ii) 1905இல் நடைபெற்ற கல்கத்தா மாநாட்டில் சுரேந்திரநாத் பானர்ஜி பிரிட்டிஷ் பொருட்களையும் நிறுவனங்களையும் புறக்கணிக்க அழைப்பு விடுத்தார்.

   (iii) 1905 ஆகஸ்ட் 7இல் கல்கத்தா நகர அரங்கில் (Town Hall) நடைபெற்ற கூட்டத்தில் சுதேசி இயக்கம் குறித்த முறையான அறிவிப்பு வழங்கப்பட்டது.

   மேற்கண்ட கூற்றுக்களில் எது/எவை சரியானவை.

   (அ) (i) மட்டும்   (ஆ) (i) மற்றும் (iii) மட்டும்

   (இ) (i) மற்றும் (ii) மட்டும்   (ஈ) மேற்கண்ட அனைத்தும்

3. பின்வருவனவற்றைப் பொருத்தி சரியான விடையைத் தேர்க.

(அ) இந்தியப் பத்திரிகைச் சட்டம், 1910	–	1. சுய ஆட்சி
(ஆ) விடிவெள்ளிக் கழகம்	–	2. சார்ந்திருக்கும் நிலைக்கு எதிரான புரட்சி
(இ) சுயராஜ்யம்	–	3. தேசிய அளவிலான செயல்பாடுகளை நசுக்கியது
(ஈ) சுதேசி	–	4. கல்விக்கான தேசியக் கழகம்

	அ	ஆ	இ	ஈ
(அ)	3	1	4	2
(ஆ)	1	2	3	4
(இ)	3	4	1	2
(ஈ)	1	2	4	3

12th_History_TM_Unit_2.indd 30 02-01-2023 16:53:46

4. பின்வருவனவற்றுள் எந்த ஒன்று சரியாகப் பொருந்தியுள்ளது?

(அ) பங்கிம் சந்திர சாட்டர்ஜி – ஆனந்த மடம்
(ஆ) G.சுப்ரமணியம் – விடிவெள்ளிக் கழகம்
(இ) மிண்டோ பிரபு – பல்கலைக்கழகச் சட்டம், 1904
(ஈ) தீவிர தேசியவாத மையம் – சென்னை

5. கல்கத்தாவில் அனுசிலன் சமிதியை நிறுவியவர்
(அ) புலின் பிஹாரி தாஸ்
(ஆ) ஹேமச்சந்திர கானுங்கோ
(இ) ஜதிந்தரநாத் பானர்ஜி மற்றும் பரிந்தர் குமார் கோஷ்
(ஈ) குதிரம் போஷ் மற்றும் பிர.ஃபுல்லா சாக்கி

6. **கூற்று:** 1905 அக்டோபர் 16 துக்கநாளாக அனுசரிக்கப்பட்டது.
காரணம்: மேற்படி நாளில் வங்காளம் முறைப்படி இரண்டு மாகாணங்களாகப் பிரிக்கப்பட்டது.
(அ) கூற்று மற்றும் காரணம் சரி. காரணம் கூற்றை விளக்குகிறது.
(ஆ) கூற்று மற்றும் காரணம் சரி. ஆனால் காரணம் கூற்றை விளக்கவில்லை.
(இ) கூற்று சரி. காரணம் தவறு.
(ஈ) கூற்று தவறு. காரணம் சரி.

7. **கூற்று:** வ. உ. சிதம்பரம் சுதேசி கப்பல் நிறுவனத்தைத் தொடங்கினார்.
காரணம்: இந்தியக் கடற்கரைகளில் ஆங்கிலேயர்களின் முற்றுரிமையினை அவர் எதிர்த்தார்.
(அ) கூற்று மற்றும் காரணம் சரி. காரணம் கூற்றை விளக்குகிறது.
(ஆ) கூற்று மற்றும் காரணம் சரி. ஆனால், காரணம் கூற்றை விளக்கவில்லை.
(இ) கூற்று சரி; காரணம் தவறு.
(ஈ) கூற்று தவறு; காரணம் சரி.

8. சுப்ரமணிய பாரதி குறித்த பின்வரும் எந்த கூற்று தவறானது?
(அ) பாரதி சுதேசமித்திரன் இதழின் துணை ஆசிரியராக இருந்தார்.
(ஆ) பாரதி திலகரின் *Tenets of New Party* என்ற நூலை தமிழில் மொழிபெயர்த்தார்.
(இ) பாரதியின் குருமணி (ஆசிரியர்) சுவாமி விவேகானந்தராவார்.
(ஈ) பாரதி பெண்களுக்கான "சக்ரவர்த்தினி" என்ற இதழின் ஆசிரியராக இருந்தார்.

II குறுகிய விடையளிக்கவும்.

1. மிதவாத தேசியவாதிகளின் 'இறைஞ்சுதல் கொள்கை' (The Medicant Policy) என்றால் என்ன?
2. மகாதேவ் கோவிந்த் ரானடே சுதேசிக் கொள்கையினை எவ்வாறு விளக்குகிறார்?
3. பிரிட்டிஷ் இந்தியாவில் தீவிர தேசியவாதிகளின் மையமாக விளங்கிய தலைவர்களைக் கண்டறிக.
4. தீவிர தேசியவாதம் 1908க்குப் பின்னர் ஏன் குறைந்தது?
5. தேசிய இயக்கத்தை ஒடுக்க காலனிய அரசு மேற்கொண்ட அடக்குமுறைகள் யாவை?

III சுருக்கமாக விடையளிக்கவும்.

1. காங்கிரஸ் இரண்டாகப் பிளவுபடக் காரணமான சூரத் மாநாட்டின் செயல்முறைகள் குறித்து எழுதுக.
2. சுதேசி இயக்கத்தின் போது அதிகரித்த தனி நபர் வன்முறைகளுக்கான காரணங்களை எழுதுக.
3. பெருவாரியான மக்களை ஒன்றுதிரட்ட சமிதிகளால் பயன்படுத்தப்பட்ட பணிகளின் சிறப்பம்சங்கள் யாவை?
4. 1908இல் நடைபெற்ற கோரல் நூற்பாலை வேலை நிறுத்தம் பற்றி நீவீர் அறிவது யாது?
5. அலிப்பூர் வெடிகுண்டு வழக்கின் முக்கியத்துவம் குறித்து எழுதுக.
6. வ.உ. சிதம்பரத்தின் சுதேசி இயக்க முயற்சிகள் குறித்து எழுதுக.
7. கலெக்டர் ஆஷ் ஏன் வாஞ்சிநாதனால் கொல்லப்பட்டார்?

IV. விரிவான விடையளிக்கவும்.

1. தமிழ்நாட்டில் சுதேசி இயக்கத்தின் செயல்பாடுகள் குறித்து எழுதுக.
2. இந்திய தேசிய இயக்கத்தில் வ.உ. சிதம்பரத்தின் பங்கினைப் பற்றி எழுதுக.

V. செயல்பாடுகள்

1. சுப்ரமணிய பாரதியின் தொலைநோக்கு குறித்து சொற்பொழிவு ஒன்றை நடத்துக.
2. கப்பலோட்டிய தமிழன் என்ற திரைப்படத்தை திரையிட்டு காட்டுக.

மேற்கோள் நூல்கள்

1. Bipan Chandra, etal. *India's Struggle for Independence,* Penguin Books, New Delhi, 2016.
2. Sumit Sarkar, *Modern India 1885-1947, Pearson,* New Delhi, 2018.
3. Sekhar Bandopadhyay, *From Plassey to Partition and After: A History of Modern India, Orient BlackSwan,* Hyderabad, 2009.
4. A.R. Venkatachalapathy, 'In Search of Ashe: *'Ecnomic & Political Weekly, 9 Janauary 2009.*

A-Z கலைச்சொற்கள்

உட்கட்சி பூசல்	**factionalism**	difference of opinion or disagreement between two groups within a political organization.
அறிவு ஜீவிகள் / கற்றறிந்தோர்	**intelligentsia**	highly educated or the intellectual elite of a society
நீக்கம், ஒழிப்பு, ரத்து செய்தல்	**annulment**	invalidation, nullification
தனது நாட்டில் உற்பத்தி செய்த பொருள்	**Swadeshi**	made in one's own country
புறக்கணிப்பு	**Boycott**	refusal to take part in an activity or to buy a foreign product
முப்பெரும் தலைவர்கள்	**triumvirate**	a group of three persons dominating or holding control
அரசுக்கு எதிராக / ஆட்சி எதிர்ப்பு	**seditious**	Inciting people to rebel against the authority of a state
தண்டனை வரி	**punitive tax**	a tax intended as punishment

12th_History_TM_Unit_2.indd 32 02-01-2023 16:53:47

இணையச் செயல்பாடு

தீவிர தேசியவாதத்தின் எழுச்சியும் சுதேசி இயக்கமும்

இச்செயல்பாட்டின் மூலம் நீங்கள் இந்தியாவின் வரலாற்று மற்றும் அரசியல் வரைபடங்களை அறியலாம்.



படிநிலைகள்

படி – 1 : கீழ்க்காணும் உரலி/விரைவுக் குறியீட்டைப் பயன்படுத்தி இச்செயல்பாட்டிற்கான இணையப் பக்கத்திற்குச் செல்க.

படி – 2 : ‘World History’ என்பதனை சொடுக்கி தோன்றும் திரையில்; ‘India’ என்பதனை தேர்வு செய்யவும்.

படி –3 : தோன்றும் திரையில் ஒவ்வொரு தலைப்பாக தேர்வு செய்து பார்க்கவும். (Ex. 1903)

படி 1

படி 2

படி 3

உரலி : https://www.euratlas.net/history/index.html

*படங்கள் அடையாளத்திற்கு மட்டுமே.

*தேவையெனில் Adobe Flash ஐ அனுமதிக்க.

அலகு 3

இந்திய விடுதலைப்போரில் முதல் உலகப்போரின் தாக்கம்

கற்றலின் நோக்கங்கள்

கீழ்க்கண்டவற்றைப் பற்றி அறிந்துகொள்ள

- முதல் உலகப்போரால் உருவான நிலைமை: மிதவாத தேசியவாதிகள் மற்றும் தீவிர தேசியத்தன்மை கொண்டவர்கள் இணைந்து திலகர் மற்றும் அன்னிபெசண்ட் அம்மையாரின் தன்னாட்சி (ஹோம் ரூல்) இயக்கத்தின் மூலமாக ஆங்கிலேய ஆட்சிக்கு எதிராக ஒன்றுபட்டு போராட்டத்தை நடத்தியது.
- ஆங்கிலேயரின் அடக்கி ஆளும் நடவடிக்கைகள்: இந்திய பாதுகாப்புத்துறைச் சட்டம் இயற்றப்படுதல்.
- இந்து–முஸ்லிம் ஒற்றுமைக்கு வழிவகுத்த லக்னோ ஒப்பந்தம்.
- ஜாலியன் வாலாபாக் படுகொலை மற்றும் கிலாபத் இயக்கம் வழியாக இந்து–முஸ்லிம் நல்லிணக்கம்.
- இந்தியத் தொழிலாளர் இயக்கத்தில் முதல் உலகப்போர் மற்றும் ரஷ்யப் புரட்சியின் தாக்கம்

அறிமுகம்

இந்திய தேசிய அரசியலில் முதல் உலகப்போருக்கு முந்தைய பல நிகழ்வுகள் தாக்கத்தை ஏற்படுத்தின. 1905இல் ஜப்பான் ரஷ்யாவை வீழ்த்தியது. 1908இல் இளம் துருக்கியர்களும் 1911இல் சீன தேசியவாதிகளும் மேற்கத்திய வழிமுறைகள் மற்றும் சிந்தனைகளைப் பயன்படுத்தி தத்தமது அரசுகளை அகற்றினார்கள். முதல் உலகப்போருடன் இந்த நிகழ்வுகளும் 1916 மற்றும் 1920ஆம் ஆண்டுகளில் இந்திய தேசியத்துக்கானப் பின்னணியை உருவாக்கின.

சண்டைகள் பல பகுதிகளில் நடந்தபோதிலும் இந்தப் போரின் முக்கியக் களமாக ஐரோப்பா விளங்கியது. ஐரோப்பா, ஆப்பிரிக்கா மற்றும் மேற்கு ஆசியாவில் ராணுவ சேவை புரிய பெரும் எண்ணிக்கையில் இந்தியர்களை ஆங்கிலேயர்கள் பணிக்கு எடுத்தனர். இந்தப் போருக்குப்பின் புதிய சிந்தனைகளுடன் இந்தியா திரும்பிய இந்த வீரர்கள் இந்திய சமூகத்தில் தாக்கத்தை ஏற்படுத்தினர். வற்புறுத்தலின் காரணமாக 367 மில்லியன் பிரிட்டிஷ் பவுண்டுகளை இந்தியா, 229 மில்லியன் பிரிட்டிஷ் பவுண்டுகளில் நேரடி ரொக்கமாகவும் எஞ்சிய தொகையைப் போர்ச்செலவுகளைச் சமாளிக்க கடனாகவும் வழங்கியது. இதைத்தவிர 250 மில்லியன் பிரிட்டிஷ் பவுண்டுகள் மதிப்புக்குப் போருக்கானப் பொருட்களையும் இந்தியா அனுப்பியது. இதனால் பெருமளவில் பொருளாதார சிரமங்கள் ஏற்பட்டதால் இந்தியர்கள் அதிருப்தி அடைந்தனர்.

இந்திய தேசிய காங்கிரஸ் மிதவாத தேசியவாதிகள், தீவிரத் தேசியவாதிகள் என இருவேறு வகைகளில் பிரிந்த காரணத்தாலும் போரின்போது பிரிட்டிஷாரின் நலன்களுக்கு ஆதரவாக முஸ்லிம் லீக் செயல்பட்டதாலும் தேசிய அரசியல் தீவிரமற்று இருந்தது. 1916இல் திலகர் தலைமையில் தீவிரத் தேசிய தன்மையோடு செயல்பட்டவர்கள் காங்கிரசை கட்டுப்படுத்தினர். மேற்கத்திய இந்தியாவில் திலகர் தலைமையிலும் தென்னிந்தியாவில் டாக்டர் அன்னிபெசண்ட் அம்மையார் தலைமையிலும் தன்னாட்சி (ஹோம் ரூல்) இயக்கம் தொடங்கப்பட்டது. இந்தப் போரின் போது காங்கிரஸ் மீண்டும் ஒன்றுபட்டது. 1916இல் இந்துக்கள் மற்றும் முஸ்லிம்கள் இடையே கையெழுத்தான லக்னோ ஒப்பந்தம் இந்திய தேசியத்துக்கு மேலும் வலிமை சேர்த்தது.

இந்தப் போரின்போது தீவிர தேசியவாதிகளின் சிந்தனைகளை மேற்கத்தியப் புரட்சிகர கருத்துகள் பெருமளவில் ஆக்கிரமித்தன. எனவே அடக்குமுறைச் சட்டங்களை இயற்றியும் பயன்படுத்தியும் தேசிய இயக்கத்தைஅடக்கியாளஆங்கிலேயஅரசுமுயன்றது. கொண்டுவரப்பட்ட அடக்குமுறைச் சட்டங்களில் மிகக் கொடுமையானதாக ரௌலட் சட்டம் அமைந்தது. இந்தச் சட்டத்தை கடுமையாக விமர்சித்த இந்தியத் தலைவர்கள் அதற்கு எதிராக ஆர்ப்பாட்டங்களை நடத்தினர். சர்வதேச நிகழ்வுகளும் குறிப்பாக ரஷ்யப் புரட்சி போன்ற நிகழ்வுகளும் இந்தியாவின் மீது தாக்கத்தை ஏற்படுத்தின. முதல் உலகப்போரில் துருக்கி தோற்றதும், அதன்பின் கையெழுத்தான செவ்ரேஸ் உடன்படிக்கையின் கடுமையான விதிமுறைகளும் துருக்கியின் சுல்தானை (கலிபா) நிலைதாழ்த்திக் காட்டியது. இதன் விளைவாக கிலாபத் இயக்கம் தோன்றியது.

இந்தியாவின் விசுவாசத்துக்குப் பிரிட்டன் உரிய மதிப்பளிக்கும் என்று நம்பி இந்தியாவும் இந்தியர்களும் இந்தப் போரில் தீவிரமாகச் செயல்பட்டனர். ஆனால் ஏமாற்றமே மிஞ்சியது. அவ்வாறாக இந்தியாவின் சமூகம், பொருளாதாரம் மற்றும் அரசியலில் பலதரப்பட்ட பாதிப்புகளை இந்தப் போர் உண்டாக்கியது. இந்தப் பாடத்தில் தன்னாட்சி இயக்கத்தின் பங்கு, லக்னோ ஒப்பந்தம் கையெழுத்தாவதற்கான காரணிகள் மற்றும் அந்த ஒப்பந்தத்தின் அம்சங்கள், ஜாலியன் வாலாபாக் படுகொலையில் முடிவடைந்த ஆங்கிலேயர்களின் அடக்குமுறை நடவடிக்கைகள், கிலாபத் இயக்கம், முறைசார்ந்த தொழிலாளர் இயக்கத்தின் எழுச்சி ஆகியன குறித்து நாம் விவாதிக்கலாம்.

3.1 அகில இந்திய தன்னாட்சி (ஹோம் ரூல்) இயக்கம்

A.O. ஹியூம் உள்ளிட்ட பல வெளிநாட்டினர் நமது விடுதலைப் போரின் தொடக்க காலத்தில் முக்கியப் பங்கினை ஆற்றினர். இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் டாக்டர் அன்னிபெசண்ட் அம்மையார் இதேபோன்றதொரு முக்கியப் பணியை ஆற்றினார். அயர்லாந்தவரான டாக்டர் அன்னிபெசண்ட், பிரிட்டனில் இருந்தபோது அயர்லாந்தின் தன்னாட்சி இயக்கம், ஃபேபியன் சோஷலிசவாதிகள், குடும்பக் கட்டுப்பாட்டு இயக்கங்கள் ஆகியவற்றில் தீவிரப் பங்காற்றினார். பிரம்மஞான சபையின் (தியாசாபிகல் சொசைட்டி) உறுப்பினராக அன்னிபெசண்ட் அம்மையார் இந்தியாவுக்கு 1893இல் வந்தார். பனாரஸில் (வாரணாசியில்) மத்திய இந்துக் கல்லூரியை அவர் நிறுவினார். (பின்னர் இந்தக் கல்லூரி 1916ஆம் ஆண்டு பண்டித மதன்மோகன் மாளவியா மூலமாக பனாரஸ் இந்துப் பல்கலைக்கழகமாக மேம்படுத்தப்பட்டது). 1907இல் எச். எஸ். ஆல்காட் அவர்களின் மறைவுக்குப் பிறகு பிரம்மஞான சபையின் உலக அளவிலான தலைவராக பெசண்ட் அம்மையார் பதவி வகித்தார். பிரம்மஞான சபையின் கொள்கைகளை அதன் தலைமையகமான சென்னையின் அடையாறில் இருந்து தீவிரமாகப் பிரச்சாரம் செய்த அவருக்குக் கல்விகற்ற பல தொண்டர்களின் ஆதரவும் கிடைத்தது. ஜம்னாதாஸ் துவாரகாதாஸ், ஜார்ஜ் அருண்டேல், ஷங்கர்லால் பன்கர், இந்துலால் யக்னிக், சி.பி. இராமசாமி, பி.பி.வாடியா ஆகியோர் பெசண்ட் அம்மையாரின் ஆதரவாளர்கள்.

அன்னிபெசண்ட்


ஜார்ஜ் அருண்டேல்

1914இல் பிரிட்டன் முதல் உலகப்போரில் ஈடுபடும் அறிவிப்பை வெளியிட்டது. சுதந்திரம் மற்றும் ஜனநாயகத்துக்காகத் தான் பாடுபடுவதாகவும் அது தெரிவித்தது. பிரிட்டனின் போர் முயற்சிகளை இந்தியத் தலைவர்கள் நம்பிக்கையுடன் ஆதரித்தனர். இந்தியா பற்றிய பிரிட்டிஷாரின் நிலைப்பாட்டில் எந்த மாற்றமும் இல்லாததால் விரைவில் அவர்கள் ஏமாற்றம் அடைந்தனர். எனினும் இந்திய தேசிய காங்கிரஸ் மிதவாத தேசியவாதிகள் மற்றும் தீவிர தேசியவாதத்தன்மை உடையவர்கள் என்ற குழுக்களாகப் பிளவுபட்டதால், தன்னாட்சிக்கான அரசியல் சீர்திருத்தங்கள் குறித்து மேலும் வலியுறுத்த முடியவில்லை. மையநாடுகளை ஆதரித்து முதல் உலகப்போரில் துருக்கியின் சுல்தான் நுழைந்ததை அடுத்து பிரிட்டிஷார் முஸ்லீம் லீக்கை சந்தேகக்கண் கொண்டு பார்த்தனர்.

இந்த பின்னணியில் தான் அன்னிபெசண்ட் அம்மையார் இந்திய அரசியலில் நுழைந்தார். 1914இல் தி காமன்வீல் என்ற வாரந்திரியை அவர் தொடங்கினார். சமய சுதந்திரம், தேசியக் கல்வி, சமூக மற்றும் பொருளாதார சீர்திருத்தங்கள் ஆகியவற்றில் இந்த வாராந்திரி கவனம் செலுத்தியது. 1915இல் "*How India Wrought for Freedom*" என்ற தலைப்பிலான புத்தகத்தைப் பதிப்பித்தார். கடந்த காலத்தில் ஆழமாக வேரூன்றிய தேசிய விழிப்புணர்வின் தொடக்கங்களை அவர் இந்தப் புத்தகத்தில் விரிவாக எடுத்துரைத்தார்.

12th_History_TM_Unit_3.indd 35 02-01-2023 16:34:54

இங்கிலாந்தின் கடினமான தருணம் இந்தியாவின் வாய்ப்புக்கான தருணம் என்று அவர் முழக்கமிட்டார். சீர்திருத்தங்கள் குறித்து வலியுறுத்துமாறு இந்தியத் தலைவர்களை அவர் கேட்டுக்கொண்டார். இங்கிலாந்தில் பயணம் மேற்கொண்ட அவர் இந்திய விடுதலை குறித்து பல உரைகளை நிகழ்த்தினார். பிரிட்டன் நாடாளுமன்றத்தில் இந்தியக் கட்சி ஒன்றை ஏற்படுத்த முயன்று தோல்வி கண்டார். எனினும் அவரது பயணம் மூலம் இந்தியா குறித்த அனுதாபம் ஏற்பட்டது. இந்தியா திரும்பிய அவர், 1915 ஜூலை 14இல் நியூ இந்தியா என்ற தினசரியைத் தொடங்கினார். பம்பாயில் நிகழ்த்திய உரையில் தன்னாட்சி குறித்த தனது கொள்கையை அவர் வெளிப்படுத்தினார். "தன்னாட்சி என்பது நாட்டில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களைக் கொண்ட சபைகள் மூலமாகவும் அவர்கள் சபைக்கு கடமைப்பட்டவர்களாகவும் விளங்க நடைபெறும் ஆட்சியாகும்." ஆங்கிலேயக் காலனிகளைப் போன்று போருக்குப் பிறகு இந்தியாவுக்கு தன்னாட்சி கொடுக்கப்படவேண்டும் என்ற கருத்தைப் பரப்பவும் கோரிக்கையை வலியுறுத்தவும் அன்னிபெசண்ட் அம்மையார் பொதுக்கூட்டங்களையும் மாநாடுகளையும் நடத்தினார்.

அயர்லாந்தின் தன்னாட்சி இயக்கத்தின் அடிப்படையில் இந்தியாவில் தன்னாட்சி இயக்கத்தை துவக்கப்போவதாக அவர் 1915 செப்டம்பர் 28இல் முறைப்படி அறிவித்தார். மற்றொரு தனி இயக்கம் தொடங்கப்படுவதை மிதவாத தேசியவாதிகள் விரும்பவில்லை. தனது இயக்கம் வெற்றிபெற காங்கிரஸ் கட்சியின் அனுமதி தேவை என்பதை அவரும் அறிந்திருந்தார்.

திலகர், பெசண்ட் அம்மையார் ஆகியோரின் முயற்சிகளால் டிசம்பர் 1915இல் பம்பாயில் நடந்த காங்கிரஸ் அமர்வில் தீவிர தேசியத் தன்மையுடையவர்களை உறுப்பினர்களாகச் சேர்க்கும் வகையில் தனது விதிமுறைகளில் அக்கட்சி முறையாக திருத்தம் செய்தது. 1916 செப்டம்பர் மாதத்திற்குள் தன்னாட்சி இயக்கத்தை கையிலெடுக்குமாறு அந்த மாநாட்டில் காங்கிரஸ் கட்சியைப் பெசண்ட் கேட்டுக்கொண்டார். அவ்வாறு செய்யத்தவறினால், தாமே தன்னாட்சி இயக்கத்தை அமைக்கப்போவதாக அவர் தெரிவித்தார்.

ஒன்று திலகர் தலைமையிலும் மற்றொன்று பெசண்ட் அம்மையார் தலைமையிலும் என 1916இல் நாட்டில் இரண்டு தன்னாட்சி இயக்கங்கள் ஆரம்பிக்கப்பட்டன. இரு இயக்கங்களின் வரையறைகளும் தெளிவாக வகுக்கப்பட்டிருந்தன. தன்னாட்சி இயக்கத்தின் இரட்டைக் குறிக்கோள்கள்: பிரிட்டிஷ் ஆட்சியில் இந்தியாவில் தன்னாட்சியை ஏற்படுத்துவது மற்றும் தாய்நாடு பற்றிய பெருமையுணர்வை இந்திய மக்களிடையே ஏற்படுத்துவது ஆகியன அந்த இரண்டு குறிக்கோள்களாகும்.

(அ) திலகரின் தன்னாட்சி இயக்கம்

ஏப்ரல் 1916இல் பெல்காமில் நடந்த பம்பாய் மாகாண மாநாட்டில் இது நிறுவப்பட்டது. பம்பாய் நகரம் உட்பட மகாராஷ்டிரா, கர்நாடகா, மத்திய மாகாணங்கள், பெரார் ஆகிய பகுதிகளில் திலகரின் தன்னாட்சி இயக்கம் செயல்படும். திலகரின் இயக்கத்துக்கு ஆறு கிளைகள் ஒதுக்கப்பட்டன. அன்னிபெசண்ட் அம்மையாரின் இயக்கத்துக்கு இந்தியாவின் எஞ்சிய அனைத்துப் பகுதிகளும் ஒதுக்கப்பட்டன.

தன்னாட்சி குறித்த கோரிக்கைகளை தமது உரைகள் மூலம் திலகர் பிரபலப்படுத்தினார். மகாராஷ்டிரா மற்றும் கர்நாடகாவில் பிரபலமடைந்திருந்த அவரது இயக்கம், ஏப்ரல் 1917இல் 14 ஆயிரம் உறுப்பினர்களில் இருந்து 1918இன் தொடக்கத்தில் 32 ஆயிரம் உறுப்பினர்களாக அதிகரித்தது. தன்னாட்சி பற்றிய கொள்கைகளை பரப்பியதற்காக 1916 ஜூலை 23இல் தமது அறுபதாவது பிறந்த நாளில் திலகர் கைது செய்யப்பட்டார்.

தன்னாட்சி: மத்திய அல்லது பிரதேச அரசிடமிருந்து அதனைச் சார்ந்த அரசியல் பகுதிகளுக்கு, அங்கு வாழும் மக்கள் அதற்கு அரசியல் ரீதியாக விசுவாசமாக இருப்பார்கள் என்ற நிபந்தனையுடன் வழங்கப்படும் தன்னாட்சி அதிகாரத்தைக் குறிக்கிறது. பழங்கால ரோமானிய அரசிலும், நவீன ஆங்கிலேய அரசிலும் இது பொதுப்படையான அம்சமாக இருந்தது. 1880 களில் அயர்லாந்தில் தன்னாட்சி இயக்கம் முடுக்கம் பெற்றதை அடுத்து அயர்லாந்து அரசு சட்டத்தின் (1920) கீழ் வட அயர்லாந்தின் ஆறு நாடுகளிலும் பிறகு தெற்கில் ஆங்கிலோ–அயர்லாந்து ஒப்பந்தத்தின் (1921) கீழ் எஞ்சிய 26 நாடுகளிலும் தன்னாட்சி அமையப்பெற்றது.

(ஆ) பெசண்ட் அம்மையாரின் தன்னாட்சி இயக்கம்

காங்கிரஸ் கட்சியிடமிருந்து எந்த அறிகுறியும் தென்படாத காரணத்தால் செப்டம்பர் 1916ஆம் ஆண்டு மதராஸில் தன்னாட்சி இயக்கத்தை அன்னிபெசண்ட் தொடங்கினார். கான்பூர், அலகாபாத், பனாரஸ் (வாரணாசி), மதுரா, கள்ளிக்கோட்டை, அகமதுநகர் ஆகிய இடங்களில் இந்த இயக்கத்தின் கிளைகள்

12th_History_TM_Unit_3.indd 36 02-01-2023 16:34:54

அமைந்தன. இந்தியா முழுவதும் தீவிரப் பயணம் மேற்கொண்டு தன்னாட்சி குறித்த கருத்தை அவர் பரவச்செய்தார். இந்தியாவின் விசுவாசத்தின் விலை இந்தியாவின் விடுதலை என்று அவர் அறிவித்தார். காங்கிரஸ் கட்சியின் செயல்படாத நிலை குறித்து அதிருப்தி அடைந்த மிதவாத தேசிய காங்கிரசார் தன்னாட்சி இயக்கத்தில் இணைந்தனர். ஜவஹர்லால் நேரு, முகம்மது அலி ஜின்னா, பி. சக்கரவர்த்தி, ஜிதேந்திரலால் பானர்ஜி, சத்யமூர்த்தி, கலிக்குஸ்மான் ஆகியோர் இந்த இயக்கத்தில் உறுப்பினர்களாகத் தங்களை இணைத்துக்கொண்டதிலிருந்து இந்த இயக்கத்தின் பிரபலத்தை அறிய முடியும்.

மதராஸில் அன்னிபெசண்ட் அம்மையாரின் தன்னாட்சி இயக்கம் மிகவும் பிரபலம் அடைந்ததை அடுத்து மதராஸ் அரசு அதனை அடக்க நினைத்தது. இந்த இயக்கத்தின் கூட்டங்களில் கலந்துகொள்ள மாணவர்களுக்குத் தடை விதிக்கப்பட்டது. ஜூன் 1917இல் பெசண்ட் மற்றும் அவரது கூட்டாளிகள் பி.பி.வாடியா, ஜார்ஜ் அருண்டேல் ஆகியோர் அரசியல் காரணங்களுக்காக ஊட்டியில் சிறைபிடிக்கப்பட்டனர். அரசின் இந்த அடக்குமுறை தன்னாட்சி கோரிய ஆதரவாளர்களை வலுப்படுத்தியது;மேலும் அதிக உறுதியுடன் போராடத் தூண்டியது. பெசண்ட் அம்மையாருக்கு ஆதரவாக சர். எஸ். சுப்ரமணியம் அரசப் பட்டத்தை (knighthood) துறந்தார். முன்னர் இந்த இயக்கத்தில் இருந்து தனித்து இருந்த மதன் மோகன் மாளவியா, சுரேந்திரநாத் பானர்ஜி போன்ற தலைவர்கள் தங்களை தன்னாட்சி இயக்கத்தில் தீவிரமாக இணைத்துக்கொண்டனர். தலைவர்கள் விடுதலையாகாவிட்டால் சட்டமறுப்பு இயக்கத்தை அரசுக்கு எதிராகப் பயன்படுத்துவது குறித்து 1917 ஜூலை 28இல் கூடிய அகில இந்திய காங்கிரஸ் கமிட்டிக் கூட்டத்தில் திலகர் வலியுறுத்தினார். காந்தியடிகளின் உத்தரவின்பேரில் ஜம்னாதாஸ் துவாரகாதாஸ் மற்றும் ஷங்கர்லால் பன்கர் ஆகியோர் பெசண்ட் மற்றும் இதர தலைவர்களை சிறைபிடித்த நடவடிக்கைகளை ரத்து செய்யக்கோரி ஓராயிரம் நபர்களிடம் கையெழுத்து வாங்கி பெசண்ட் அம்மையார் சிறைபிடிக்கப்பட்ட இடத்துக்கு பேரணியாகச் சென்றனர். எதிர்ப்பு வலுத்ததை அடுத்து சிறைபிடிக்கப்பட்டத் தலைவர்கள் விடுதலை செய்யப்பட்டனர்.

தன்னாட்சி நிறுவனங்கள் மற்றும் பொறுப்பான அரசு என்பதே இந்தியாவில் பிரிட்டிஷ் ஆட்சியின் குறிக்கோள் என்று புதிய வெளியுறவு அமைச்சர் மாண்டேகு 1917 ஆகஸ்டு 20இல் அறிவித்தார். இந்த அறிக்கை ஒரே இரவில் பெசண்ட் அம்மையாரை விசுவாசிக்கு நிகராக மாற்றியது. செப்டம்பர் 1917இல் அவர் விடுதலையானபோது அவர் 1917இல் இந்திய தேசிய காங்கிரஸ் கல்கத்தா மாநாட்டிற்குத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

(இ) தன்னாட்சி இயக்கத்தின் முக்கியத்துவம்

காந்தியடிகளின் சத்தியாகிரக இயக்கங்கள் தொடங்கப்படுவதற்கு வழிவகுக்கும் வகையில் மக்களை ஒன்றுதிரட்ட தன்னாட்சி இயக்கங்கள் களம் அமைத்தன. காந்தியடிகளின் சத்தியாக்கிரகப் போராட்டங்களில் முதன்முதலில் ஈடுபட்டோரில் பலர் தன்னாட்சி இயக்க உறுப்பினர்கள். இந்த இயக்கத்தின் மூலமாக அமைக்கப்பட்ட கட்டமைப்புகளைக் காந்தியடிகளின் போராட்டங்களைப் பரப்புவதற்கு அவர்கள் பயன்படுத்தினர். அனைத்துவிதப் பிரிவுகளைத் தாண்டி காங்கிரஸ், முஸ்லிம் லீக், பிரம்மஞான சபையாளர்கள், தொழிலாளர் அமைப்பினர் என பலதரப்பட்ட உறுப்பினர்களைக் கொண்ட முதல் இந்திய அரசியல் இயக்கமாக தன்னாட்சி இயக்கம் விளங்கியது.

(ஈ) தன்னாட்சி இயக்கத்தின் வீழ்ச்சி

'Indian unrest' என்ற புத்தகத்தின் ஆசிரியர் வேலண்டைடன் சிரோலிக்கு எதிராக தாம் தொடுத்த அவதூறு வழக்கை நடத்துவதற்காக செப்டம்பர் 1918இல் திலகர் பிரிட்டனுக்குச் சென்றது மற்றும் உத்தேசிக்கப்பட்ட மாண்டேகு செம்ஸ்ஃபோர்டு சீர்திருத்தங்களை பெசண்ட் ஏற்றுக்கொண்ட பிறகு தன்னாட்சி இயக்கம் வீழ்ச்சி கண்டது.

பிரிட்டிஷ் அரசின் கீழ் இந்தியா தன்னாட்சி பெறுவது அல்லது கனடா, ஆஸ்திரேலியா ஆகியவற்றின் வழியில் தன்னாட்சிப் பகுதித் (டொமினியன்) தகுதியைப் பெறுவது ஆகியவற்றுக்காகப் பிரிட்டிஷ் நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவைக் கோருவதற்காக இந்திய காமன்வெல்த் லீக் என்று தன்னாட்சி இயக்கம் பெயர் மாற்றம் செய்யப்பட்டது. பின்னர் 1929இல் இந்திய லீக் என்று வி.கே. கிருஷ்ணமேனன் மாற்றம் செய்தார்.

3.2 போரின் தாக்கம்

முதல் உலகப்போருக்கு முந்தைய ஆண்டுகளில் இந்தியாவில் அரசியல் நிலைமை ஒழுங்கற்று இருந்தது. மிதவாத தேசியவாதிகள் மற்றும் முஸ்லிம் லீக்கின் ஆதரவை பெறும் நோக்கிலும் தீவிர தேசியவாதிகளைத் தனிமைப்படுத்தும் நோக்கிலும் பிரிட்டிஷார் 1909இல் மிண்டோ–மார்லி சீர்திருத்தங்களை நிறைவேற்றினர். மிதவாத தேசியவாதிகள் பொறுத்திருந்து பார்ப்பது

என்ற கொள்கையைப் பின்பற்றினர். தங்களுக்கு வழங்கப்பட்ட தனித் தொகுதிகளை முஸ்லிம் லீக் வரவேற்றது. 1913இல், இந்த லீக்கில் புதிய தலைவர்கள் சிலர் இணைந்தனர். காங்கிரஸ் கட்சியின் உறுப்பினராக ஏற்கனவே இருந்த முகமது அலி ஜின்னா, அவர்களில் முக்கியமானவர். அவர் முஸ்லிம்களுக்காக அதிக சீர்திருத்தங்களைக் கோரினார்.

மிண்டோ

மார்லி

இந்தியாவில் புரட்சிகர தேசிய செயல்பாட்டுக்கு உகந்த நிலைமைகளை முதல் உலகப்போர் உருவாக்கியது. போரில் பிரிட்டனின் சிரமத்தைத் தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்த புரட்சியாளர்கள் விரும்பினர். கதார் இயக்கம் அவற்றின் வெளிப்பாடுகளில் ஒன்றாகும்.

முதல் உலகப்போர் விடுதலைப்போரில் பெரும் தாக்கத்தைக் கொண்டிருந்தது. முதலில் பிரிட்டிஷ் அரசு இந்திய ஆதரவு பற்றிக் கவலைப்படவில்லை. மேற்காசியா மற்றும் ஆப்பிரிக்கா நோக்கி போர்ச்சூழல் நகர்ந்த பிறகு இந்திய ஆதரவை எதிர்பார்க்க பிரிட்டிஷார் நிர்ப்பந்திக்கப்பட்டனர். இந்தச் சூழலில் சீர்திருத்தங்களைக் கொண்டுவர பிரிட்டிஷ் அரசுக்கு நெருக்குதல் தர இந்தியத் தலைவர்கள் முடிவு எடுத்தனர். 1915இல் பம்பாயில் வருடாந்திர மாநாட்டை நடத்திக் கொண்டிருந்த காங்கிரசும் முஸ்லிம் லீக்கும் இதே அடிப்படையில் விவாதித்தன. அக்டோபர் 1916இல் இம்பீரியல் சட்டப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட இந்து மற்றும் முஸ்லிம் உறுப்பினர்கள் அரசப்பிரதிநிதிக்கு (வைசிராய்) எழுதிய கடிதத்தில் போருக்குப் பிந்தைய சீர்திருத்தங்கள் குறித்து வலியுறுத்தினர். இதற்கு பிரிட்டிஷ் அரசு அசைந்துகொடுக்கவில்லை. காங்கிரசும் முஸ்லிம் லீக்கும் 1916ஆம் ஆண்டு நவம்பர் மாதம் கல்கத்தாவில் சந்தித்து இந்த கடிதம் குறித்து விவாதித்தன. சட்டப்பேரவையின் கட்டமைப்பு, போருக்குப் பிந்தைய சூழலில் இரண்டு சமூகங்களுக்கும் அனுமதிக்கப்படவேண்டிய பிரதிநிதித்துவத்தின் எண்ணிக்கை ஆகியன குறித்து இரு கட்சிகளும் ஒப்புக்கொண்டன.

இதற்கு இணையாகத் திலகரும் அன்னிபெசண்ட் அம்மையாரும் தன்னாட்சி குறித்து அறிவுறுத்தினர். அவர்களது முயற்சிகளின் விளைவாகப் பம்பாய் மாநாட்டில் தீவிர தேசியத்தன்மை கொண்டவர்களைத் திரும்ப சேர்த்துக்கொள்ள ஒப்புக்கொள்ளப்பட்டு அதனைத்தொடர்ந்து காங்கிரசின் அமைப்பு விதிகளில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டன. காங்கிரஸ், முஸ்லிம் லீக், தன்னாட்சி இயக்கம் ஆகியன தங்களுடைய வருட மாநாடுகளை லக்னோவில் நடத்தியதால் 1916ஆம் ஆண்டு முக்கியத்துவம் பெற்றது. காங்கிரஸ் தலைவர் அம்பிகா சரண் மஜும்தார் தீவிர தேசியத்தன்மை

A. C. மஜும்தார்

சோஹன் சிங் பக்னாவைத் தலைவராகக் கொண்டு பசிபிக் பிரதேச இந்துஸ்தான் அமைப்பை சான்பிரான்சிஸ்கோவில் வசித்துவந்த லாலா ஹர்தயாள் 1913இல் நிறுவினார். இந்த அமைப்பு கதார் கட்சி என்று அழைக்கப்பட்டது. (உருது மொழியில் கதார் என்றால் கிளர்ச்சி என்று பொருள்). அமெரிக்கா மற்றும் கனடாவில் குடியேறிய சீக்கியர்களே பெரும்பாலும் இந்தக் கட்சியில் இடம்பெற்றிருந்தனர். 'கதார்' என்ற பத்திரிகையையும் இக்கட்சி வெளியிட்டது. 1913 நவம்பர் முதல் தேதி சான் பிரான்சிஸ்கோவில் இது பதிப்பிக்கப்பட்டு வெளியானது. பின்னர் உருது, பஞ்சாபி, இந்தி மற்றும் இதர மொழிகளிலும் அது வெளியானது.

லாலா ஹர்தயாள்

இந்திய சுதந்திரப் போராட்டத்தில் கதார் இயக்கம் மிக முக்கிய அத்தியாயமாகும். கோமகடமரு (Comagatamaru) என்று பெயரிடப்பட்ட கப்பல் இந்தியாவில் இருந்து குடியேறிவர்களுடன் கனடாவில் இருந்து திரும்பியது. இந்தியா திரும்பியவுடன் பிரிட்டிஷ் போலிசாருடன் ஏற்பட்ட மோதலில் அந்தக் கப்பலில் இருந்த பல பயணிகள் கொல்லப்பட்டனர் அல்லது கைது செய்யப்பட்டனர். இந்த நிகழ்வு இந்திய தேசிய இயக்கத்திற்கு ஆழமான வடுவை ஏற்படுத்தியது.

12th_History_TM_Unit_3.indd 38
02-01-2023 16:34:55

www.tntextbooks.in

கொண்டவர்களை வரவேற்றார். "பத்தாண்டு கால வலி தந்த பிரிவுக்குப் பிறகு ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு, ஒற்றுமை நீங்கிப் பிரிந்தால் அனைவருக்கும் தாழ்வு என்பதை இந்திய தேசிய காங்கிரஸ் உணர்ந்து, சகோதரர்கள் தங்களுடைய சகோதரர்களைக் கடைசியில் சந்தித்துவிட்டனர்..." தீவிர தேசியத்தன்மை கொண்டவர்கள் திரும்பியதை அடுத்து காங்கிரஸ் தனது பழைய சக்தியைப் பெற்றுவிட்டது.

லக்னோ ஒப்பந்தம் அல்லது காங்கிரஸ்–லீக் ஒப்பந்தம் என்று பிரபலமாக அழைக்கப்பட்ட ஒப்பந்தத்தின் கீழ் காங்கிரஸ் மற்றும் முஸ்லிம் லீக்–ஐ ஒன்றிணைப்பதில் அன்னிபெசண்ட் அம்மையாரும் திலகரும் முக்கியப் பங்காற்றினார்கள். இந்த ஒப்பந்தத்தின் போது ஜின்னா குறிப்பிடத்தக்க பங்காற்றினார். நவம்பர் 1916இல் கல்கத்தாவில் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒப்பந்தங்கள் டிசம்பர் 1916இல் நடந்த காங்கிரஸ் மற்றும் முஸ்லிம் லீக்கின் வருடாந்திர மாநாடுகளில் உறுதி செய்யப்பட்டன.

3.3 லக்னோ ஒப்பந்தத்தின் அம்சங்கள்

(i) நிர்வாகம் மற்றும் நிதி விஷயங்களில் மத்திய கட்டுப்பாட்டில் இருந்து மாகாணங்கள் சுதந்திரமாகச் செயல்படவேண்டும்.

(ii) மத்திய மற்றும் மாகாண சட்டமேலவைகளின் உறுப்பினர்களில் 4/5 பங்கு நபர்கள் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும், 1/5 பங்கு நபர்கள் நியமனம் செய்யப்பட வேண்டும்.

(iii) மாகாண மற்றும் மத்திய சட்டப்பேரவைகளின் 4/5 உறுப்பினர்கள் பரந்துபட்ட வாக்குப்பதிவின் மூலம் தேர்ந்தெடுக்கப்படவேண்டும்.

(iv) மத்திய நிர்வாக சபை உட்பட நிர்வாக சபை உறுப்பினர்களில் 1/2 பங்கு நபர்கள் அந்தந்த சபைகளின் மூலமாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட இந்தியர்களாக இருக்கவேண்டும்.

(v) மாகாணசபைத் தேர்தல்களில் முஸ்லிம்களுக்கு தனித்தொகுதிகள் வழங்க காங்கிரசும் ஒப்புக்கொண்டது. (மக்கள்தொகையில் தெரிவிக்கப்பட்ட விகிதங்களுக்கு அப்பால்) இந்து மற்றும் சீக்கிய சிறுபான்மையினருக்கு சில இடங்கள் வழங்கப்பட்ட பஞ்சாப் மற்றும் வங்காளம் தவிர அனைத்து மாகாணங்களிலும் அவர்களுக்கு சாதகமாக முன்னுரிமைகளை வழங்கவும் காங்கிரஸ் ஒப்புக்கொண்டது. கிலாபத் இயக்கம் மற்றும் காந்தியடிகளின் ஒத்துழையாமை இயக்கம் ஆகியவற்றில் இந்து–முஸ்லிம் ஒத்துழைப்புக்கு இந்த ஒப்பந்தம் வழியமைத்தது.

(vi) தங்களது சபைகள் நிறைவேற்றிய தீர்மானங்களுக்கு ஏற்ப மாகாண மற்றும் மத்திய அரசுகள் நடக்க கடமைப்பட்டுள்ளன. கவர்னர் ஜெனரல் அல்லது ஆளுநர் சபைகளின் தடுப்பாணை அதிகாரம் பெறும் பட்சத்தில் அந்தத் தீர்மானம் ஓராண்டுக்கும் குறைவான இடைவெளியில் மீண்டும் நிறைவேற்றப்படும் பட்சத்தில் அது செயல்பாட்டுக்கு வரும்.

(vii) இந்திய அரசுக்கும் வெளியுறவு அமைச்சருக்கும் உள்ள உறவுகளும் தன்னாட்சி (டொமினியன்) தகுதியுடைய பகுதியின் காலனி செயலருக்கும் இந்தியாவுக்கும் உள்ள உறவுகளும் ஒத்திருக்கவேண்டும். ஏகாதிபத்திய அரசு அலுவல்களுடன் தொடர்புடைய எவரும் சம நிலை பெற்றிருக்கவேண்டும்

இந்து–முஸ்லிம் ஒற்றுமைக்கு லக்னோ ஒப்பந்தம் வழிவகுத்தது. லக்னோ ஒப்பந்தத்தின் தலைமைச் சிற்பியான ஜின்னாவை "இந்து–முஸ்லிம் ஒற்றுமையின் தூதர்" என்று சரோஜினி அம்மையார் அழைத்தார்.

லக்னோ உடன்படிக்கையானது காங்கிரஸ் மற்றும் லீக்கில் இருந்த படித்த வகுப்பினர் ஒரு பொதுவான குறிக்கோளுடன் இணைந்து செயல்பட முடியும் என்பதை நிரூபித்தது. இந்த ஒற்றுமை கிலாஃபத் மற்றும் ஒத்துழையாமை இயக்கத்தின் போது அதன் உச்சத்தை அடைந்தது.

3.4 காலனி ஆதிக்க அரசின் அடக்குமுறை நடவடிக்கைகள்

காங்கிரசை ஒத்த தளத்தில் வன்முறையைக் கையில் எடுத்து ஆங்கிலேய ஆட்சியை அப்புறப்படுத்த முயற்சி செய்த புரட்சிகர குழுக்களும் உருவாகின. இந்திய விடுதலைப் போரில் புரட்சிகர இயக்கங்கள் முக்கியப்பங்கு வகித்தன. பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியில் தொடங்கி வங்கப்பிரிவினையின் காலகட்டம் வரை அது முடுக்கத்தைப் பிடித்தது. முழுமையான சுதந்திரம் வேண்டும் என்று முதன்முதலில் கோரிக்கையை புரட்சிகர அமைப்புகளின் அங்கத்தினர்கள் எழுப்பினர். மகாராஷ்டிரா, வங்காளம், பஞ்சாப் ஆகியன புரட்சிகர செயல்பாட்டின் தீவிரக் களமாக அமைந்தன. குறுகிய காலத்திலேயே சென்னை மாகாணமும் புரட்சிகர நடவடிக்கையின் ஒரு தீவிர களமாக இருந்தது.

2FXK7

12th_History_TM_Unit_3.indd 39 02-01-2023 16:34:55

வளர்ந்துவந்த தேசிய இயக்கத்தைக் கட்டுப்படுத்தும் வகையில், அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டது. தேசியவாதிகளின் நடவடிக்கைகள் பற்றியத் தகவல்களை இரகசியமாகச் சேகரிப்பதற்காக 1903இல் கர்சன் பிரபு குற்ற உளவுத்துறையை (CID) உருவாக்கினார். பத்திரிக்கைகள் (குற்றங்களுக்குத் தூண்டும்) சட்டம் (1908), வெடிபொருட்கள் சட்டம் (1908), அதன்பிறகு இந்திய பத்திரிகைகள் சட்டம் (1910), தேசத்துரோக கூட்டங்கள் தடுப்புச் சட்டம் (1911) ஆகிய சட்டங்கள் இயற்றப்பட்டன. வெளிநாடுகளில் இருந்த சில புரட்சியாளர்களின் தொடர்பில் சில இந்திய தேசியவாதிகள் இருந்ததாக பிரிட்டிஷார் சந்தேகப்பட்டனர். வெளிநாட்டினரின் நுழைவுக்கு கட்டுப்பாடுகளை விதிக்கும் வெளிநாட்டினர் அவசரச்சட்டம் 1914இல் இயற்றப்பட்டது. புரட்சிகர இயக்கங்களின் அடிப்படைக் கட்டமைப்பைத் தகர்க்கும் நோக்கில் இவற்றில் பெரும்பான்மையான சட்டங்கள் இயற்றப்பட்டன. கூட்டங்கள், தேசத்துரோக பிரசுரங்களைப் பிரச்சாரத்துக்காக அச்சிடுவது மற்றும் சுற்றுக்கு விடுவது ஆகியவற்றைத் தடுப்பது, சந்தேகத்துக்கிடமானவர்களைக் கைது செய்வது என காலனி ஆதிக்க அரசு நடவடிக்கைகளை மேற்கொண்டது.

3.5 இந்தியப் பாதுகாப்புக்கான சட்டம், 1915

முதல் உலகப்போரின்போது தேசியவாத மற்றும் புரட்சிகர நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்தும் நோக்கில் அவசர கிரிமினல் சட்டமாக இயற்றப்பட்ட இந்தச் சட்டம், இந்தியப் பாதுகாப்பு ஒழுங்குமுறைகள் சட்டம் என்று குறிப்பிடப்பட்டது. உள்ளூர் அரசு நியமித்த மூன்று ஆணையர்கள் அடங்கிய சிறப்புத் தீர்ப்பாயங்கள் சந்தேகத்துக்கு இடமானவர்கள் மீது வழக்குத் தொடர இந்தச் சட்டம் அனுமதித்தது. மீறுவோருக்கு இந்தச் சட்டத்தின் கீழ் வரும் விதிமுறைகளையும் உத்தரவுகளையும் மீறும் பட்சத்தில் மரண தண்டனை விதிப்பது; வாழ்நாள் முழுவதற்குமாய் நாடுகடத்துவது; பத்தாண்டுகள் வரையிலான சிறைத்தண்டனை ஆகியவற்றை விதிக்க தீர்ப்பாயத்துக்கு இச்சட்டம் அதிகாரமளித்தது. வழக்கு விசாரணை ரகசியமாக நடைபெற்றதால் முடிவுகள் மேல்முறையீட்டுக்குத் தகுதியில்லாதவையாகவும் இருந்தன. இந்தச் சட்டம் முதல் லாகூர் சதித்திட்ட வழக்கு விசாரணையின் போது பயன்படுத்தப்பட்டது. முதல் உலகப்போர் முடிவுற்றபின் இச்சட்டத்தின் அடிப்படை கூறுகளுடன் புதிதாக ரௌலட் சட்டம் உருவானது.

3.6 கிலாபத் இயக்கம்

கிலாபத் இயக்கம்

முதல் உலகப்போரில், நேசநாடுகளுக்கு எதிராக முக்கூட்டு நாடுகளுக்கு ஆதரவாக துருக்கி சுல்தான் களம் இறங்கி ரஷ்யாவைத் தாக்கினார். கலீபா மற்றும் இசுலாமிய புனிதத் தலங்களின் பொறுப்பாளராகத் துருக்கிய சுல்தான் விளங்கினார். போருக்குப் பிறகு துருக்கியின் நிலையைப் பலவீனப்படுத்த முடிவுசெய்த பிரிட்டன் செவ்ரெஸ் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டது. துருக்கியின் கிழக்குப்பகுதியில் இருந்த சிரியா, லெபனான் ஆகிய நாடுகள் பிரான்ஸின் கட்டுப்பாட்டிலும் பாலஸ்தீனமும் ஜோர்டனும் பிரிட்டிஷ் கட்டுப்பாட்டிலும் இடம்பெற்றன. கலீபாவின் ஆளுமையை முடிவுக்குக் கொண்டுவர கூட்டணிப்படைகள் அவ்வாறு முடிவு செய்தன.

கலீபாவின் அதிகாரத்தைத் துண்டாடுவது இசுலாம் மீதான பெரும் தாக்குதலாகக் கருதப்பட்டது. உலகம் முழுவதும் உள்ள முஸ்லிம்கள் கலீபா மீது அனுதாபம் கொண்டவர்கள் அதனால் இந்நடவடிக்கையை எதிர்க்க முடிவு செய்தனர். மௌலானா முகமது அலி, மௌலானா சௌஹத் அலி என்ற முஸ்லிம் சகோதரர்கள் கிலாபத் இயக்கத்தைத் தொடங்கினர். அவர்களின் தலைமையின் கீழ் இந்தியாவில் இருந்த முஸ்லிம்கள் ஒன்றுபட்டனர். ஆட்டோமன் அரசை ஆதரிப்பதையும் இந்தியாவில் பிரிட்டிஷ் ஆட்சியை எதிர்ப்பதையும் நோக்கங்களாகக் கொண்டு இந்த இயக்கம் தோன்றியது. மௌலானா அபுல் கலாம் ஆசாத், M.A. அன்சாரி, ஷேக் ஷௌகத் அலி சித்திக், சையது அதுல்லா ஷா புகாரி ஆகிய பல முஸ்லிம் தலைவர்கள் இந்த இயக்கத்தில் தங்களை இணைத்துக் கொண்டனர்.

மார்ச் 1920இல் பாரீசில் முகமது அலி கிலாபத் இயக்கத்தின் கோரிக்கைகளைத் தூதாண்மை அதிகாரிகளிடையே சமர்ப்பித்தார்:

12th_History_TM_Unit_3.indd 40 02-01-2023 16:34:55

1. துருக்கியின் சுல்தான் கலீபாவாக இடையூறின்றித் தொடரவேண்டும்.
2. இசுலாமியப் புனிதத் தலங்கள் சுல்தானிடம் ஒப்படைக்கப்பட்டு அவர் அதனைக் கட்டுப்படுத்தவேண்டும்.
3. சுல்தானிடம் போதுமானப் பகுதிகள் தரப்பட்டு இசுலாமிய மதத்தைப் பாதுகாக்க வழிவகை செய்யப்படவேண்டும்.
4. ஜாசிரத்–உல்–அரப் (அராபியா, சிரியா, ஈராக், பாலஸ்தீனம்) ஆகியன இவரின் இறையாண்மையின் கீழிருக்க வேண்டும்.

> தென்னாப்பிரிக்காவில் ஆற்றிய மனிதாபிமானப் பணிகளுக்காக காந்தியடிகளுக்கு கெய்சர்–இ–ஹிந்த் தங்கப்பதக்கம் வழங்கி சிறப்பிக்கப்பட்டது. 1906இல் ஆம்புலன்ஸ் படையில் இந்திய ஆர்வலர்களின் ஒரு அதிகாரியாகச் செயல்பட்ட அவரது சேவைகளைப் பாராட்டி ஜுலு போர் வெள்ளிப்பதக்கம் காந்தியடிகளுக்கு வழங்கப்பட்டது. 1899–1900களில் போயர் போரின்போது தூக்குபடுக்கை (Stretcher) கொண்டு செல்வோர் படையில் இந்திய ஆர்வலர்களின் துணைக் கண்காணிப்பாளராக சேவை புரிந்தமைக்காக போயர் போர் வெள்ளிப்பதக்கம் அவருக்கு வழங்கப்பட்டது. கிலாபத் இயக்கத்தின் தொடர்பில் ஒத்துழையாமை இயக்கத்தைக் காந்தியடிகள் தொடங்கியபோது, அனைத்துப் பதக்கங்களையும் திரும்ப ஒப்படைத்த அவர் இவ்வாறு தெரிவித்தார். "கடந்த ஒரு மாத காலமாக நடந்த நிகழ்வுகளைப் பார்க்கும்போது கிலாபத் இயக்க விஷயத்தில் ஏகாதிபத்திய அரசு நேர்மையற்ற, நியாயமற்ற வகையிலும் மற்றும் கிரிமினல் போலவும் நடந்துகொண்டதுடன், தங்கள் நேர்மையற்றத் தன்மையைப் பாதுகாக்கத் தவறுக்கு மேல் தவறு செய்தன. இத்தகைய அரசு மீதான மதிப்பையோ அல்லது அன்பையோ என்னால் இருப்பு வைக்க இயலவில்லை.

இந்த இயக்கத்தின் கோரிக்கைகளுக்கும் இந்தியாவிற்கும் தொடர்பில்லை என்றாலும் கலீபா பற்றிய கேள்வி மூலம் கிலாபத் இயக்கத் தலைவர்கள், பிரதேச, மொழி, வகுப்பு, பிரிவினைவாத வழிகளில் பிளவுபட்ட இந்திய முஸ்லிம் சமூகத்தை ஒன்றிணைக்க ஒரு அடையாளமாகப் பயன்படுத்தினார்கள். கெயில் மினால்டின் வார்த்தைகளில் சொல்லவேண்டும் என்றால், முழுமையான இந்திய இசுலாமிய அரசியல் மேம்பாட்டுக்கான வழியைத் திறக்க "முழுமையான இசுலாமிய அடையாளம் பயன்பட்டது". ஆங்கிலேயர்களுக்கு எதிராகக் களம் காணவும், இந்திய தேசியம் என்ற தேசிய நீரோட்டத்தில் முஸ்லிம்களை இணைக்கும் காரணியாகவும் விளங்குவதால் இதற்கு ஆதரவு தெரிவிக்க காந்தியடிகளுக்கு ஊக்கம் கிடைத்தது. இந்து–முஸ்லிம் ஒற்றுமையைப் பலப்படுத்த இதனை ஒரு வாய்ப்பாகக் காந்தியடிகள் கருதினார்.

கிலாபத் விஷயம் பல பிரிவினரால் பலவாறாக எடுத்துரைக்கப்பட்டது. உத்தரப்பிரதேசத்தில் இருந்த முஸ்லிம்கள் கிலாப் (எதிர்ப்பு) என்ற அர்த்தமுடைய உருது மொழி வார்த்தையை நிர்வாகத்துக்கு எதிரான பொதுக்கிளர்ச்சியின் அடையாளமாகப் பயன்படுத்தினார்கள். இவ்வாறே மலபாரைச் சேர்ந்த மாப்பிள்ளைகள் இதனை நிலப்பிரபுக்களுக்கு எதிரான கிளர்ச்சியாக உருமாற்றம் செய்தனர்.

மலபாரில் மாப்பிள்ளை கிளர்ச்சி

3.7 தொழிலாளர் இயக்கத்தின் எழுச்சி

இயந்திரங்களின் அறிமுகம், உற்பத்திக்கான புதிய முறைகள், சில பெரிய மாநகரங்களில் தொழிற்சாலைகளின் பெருக்கம் ஆகியவை காரணமாக ஊதியம் ஈட்டுவோராகத் தொழிற்சாலைப் பணியாளர்கள் என்ற புதிய வர்க்கத்தினர் உருவானார்கள். இந்தியாவில் பெரும்பாலும் கிராமங்களைச் சேர்ந்த தொழிற்சாலைப் பணியாளர்கள் முதலில் மிகப்பணிவுடனும் முறைசாராமலும் இருந்தனர். பம்பாயின் சோரப்ஜி ஷபூர்ஜி, மற்றும் என்.எம். லோக்காண்டே, வங்காளத்தின் சசிபாத பானர்ஜி ஆகியோர் தொழிற்சாலை பணியாளர்களின் நலன்களைப் பாதுகாப்பதற்காகத் தங்களின் குரல்களை எழுப்பினர்.

N. M. லோக்காண்டே

சசிபாத பானர்ஜி

சுதேசி இயக்கத்தின் (1905) பின்னணியில் இந்தியத் தொழிற்சாலைகள் செயல்பட ஆரம்பித்தன. போர்க் காலப் பொருட்களைத் தயாரித்த இந்திய தொழிற்சாலைகளுக்குப் பிரிட்டிஷார் போரின்போது ஊக்கம் தந்தனர். போர் தொடர்ந்து நடந்ததை அடுத்து அவர்களுக்கு அதிகப் பொருட்கள் தேவைப்பட்டன. அதனால் அதிக எண்ணிக்கையில் பணியாளர்கள் வேலைக்குச் சேர்க்கப்பட்டனர். போர் முடிவுக்கு வந்தவுடன் பணியாளர்கள் வேலையின்றித் தவித்ததோடு உற்பத்தியும் குறைந்தது. போருக்குப் பிந்தையச் சூழலில் விலைகளும் தாறுமாறாய் அதிகரித்தன. உலகம் முழுவதும் பரவிய இன்ஃபுளுயன்சா (Influenza) தொற்றுநோயின் தாக்கத்தின் பிடியில் இந்தியாவும் சிக்கித் தவித்தது. இதன் எதிரொளியாக தொழிலாளர்கள் தங்கள் உரிமைகளுக்காகப் போராடத் தொடங்கினர். தொழிலாளர்கள் நலன்களைப் பாதுகாக்கும் வகையில் தொழிற்சங்கங்கள் உருவாக்கப்பட்டன.

1917ஆம் ஆண்டின் போல்ஷ்விக் புரட்சியின் வெற்றி இந்திய தொழிலாளர்களின் மீது தாக்கத்தை ஏற்படுத்தியது. வகுப்புபேதம் பற்றிய விழிப்புணர்வும், அறிவார்ந்த சிந்தனையும் இந்தியத் தொழிலாளர்களின் உலகில் பெரிய மாற்றங்களை ஏற்படுத்தின. ஐரோப்பாவில் போரில் பங்கேற்ற இந்தியப் படைவீரர்கள் அங்கிருந்த தொழிலாளர்களின் மேம்பட்ட நிலைமை பற்றிய செய்திகளைக் கொண்டு சேர்த்தனர். போரால் ஏற்பட்டப் பொருளாதாரச் சிரமங்கள் காரணமாக ஏற்பட்ட தொழில் வீழ்ச்சி, வேலை கொடுப்போர் மற்றும் வேலை செய்வோருக்கிடையேயான பெரிய இடைவெளி, பல்வேறு நாடுகள் பங்கேற்புடன் சர்வதேசத் தொழிலாளர் அமைப்பு ஏற்படுத்தப்பட்டது, ஆகியன தொழிலாளர்களிடையே பெரிய விழிப்புணர்வை ஏற்படுத்தியது.

இந்தியாவில் தொழிலாளர் இயக்க வரலாற்றில் மதராஸ் முக்கியப் பங்காற்றியது. 1918இல் முதன்முறையாக அமைக்கப்பட்டத் தொழிற்சங்கமாக பி.பி.வாடியா அவர்களால் மதராஸ் தொழில் சங்கம் நிறுவப்பட்டது. பக்கிங்ஹாம், பெரம்பூர் கர்நாடிக் மில் ஆகியவற்றின் தொழிலாளர்கள் மோசமாக நடத்தப்பட்டதன் காரணமாக இந்தத் தொழிற்சங்கம் முக்கியமாக ஏற்பட்டது. அங்கு பணியாளர்களுக்கான பணி நிலைமைகள் மிக மோசமாக இருந்தது. மதிய உணவுக்கு குறுகிய கால இடைவெளி, தொழிலாளர்கள் மீது ஐரோப்பிய உதவியாளர்கள் அடிக்கடி நடத்தியத் தாக்குதல்கள், போதுமான ஊதியம் வழங்காதது ஆகியன இந்தத் தொழிற்சங்கம் அமையக் காரணமாக அமைந்தன. ஒட்டுமொத்தமாக பேரம் பேசுவதைப் பின்பற்றி வகுப்புப் போராட்டத்துக்குத் தொழிற்சங்கம் சார்ந்த கொள்கைகளை ஒரு ஆயுதமாக பயன்படுத்தத் தொழிற்சங்கம் முனைந்தது.

இந்த அலை இந்தியாவின் இதரப் பகுதிகளுக்கும் பரவியது. இந்த காலகட்டத்தில் பல தொழிற்சங்கங்கள் ஏற்படுத்தப்பட்டன. கல்கத்தா மற்றும் பம்பாயில் இந்தியக் கடற்படை வீரர்கள் சங்கம், பஞ்சாப் பத்திரிகை ஊழியர்கள் சங்கம், G.I.P. ரயில்வே பணியாளர்கள் சங்கம் பம்பாய், M.S.M. ரயில்வே ஊழியர் சங்கம், அஞ்சல் பணியாளர்கள் சங்கம், பம்பாயிலும் கல்கத்தாவிலும் துறைமுகப் பொறுப்புக் கழக ஊழியர் சங்கம் ஜாம்ஷெட்பூர் தொழிலாளர் சங்கம், ஜாரியாவில் இந்திய நிலக்கரிச் சுரங்க ஊழியர்கள் சங்கம் மற்றும் பல்வேறு ரயில்வேக்களின் ஊழியர் சங்கங்கள் உருவாக்கப்பட்டன. தொழிலாளர் இயக்கத்தை அடக்கும் நோக்கில், பணமுதலாளிகளின் உதவியோடு அரசு தொழிலாளர்களைக் கீழ் நிலையில் வைத்திருக்க அனைத்து வழிகளிலும் முயன்றது. வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டோரைக் கைது செய்வது, அவர்களின் வீடுகளைத் தீயிட்டுக் கொளுத்தியதோடு தொழிற்சங்கங்களுக்கு அபராதங்களையும் விதித்தனர். ஆனால் தொழிலாளர்கள் தங்கள் கோரிக்கைகளில் வலுவாக இருந்தனர்.

பணியாளர்களின் நிலைமை கண்டு இரக்கம்கொண்ட தேசியவாதத் தலைவர்களும் அறிவுஜீவிகளும் அவர்களைத் தொழிற்சங்கங்கள் மூலமாகச் செயல்பட வைக்க தீவிரம் காட்டினர். பணியாளர் வகுப்பின் அரசியல் வாழ்க்கைக்கு இவர்களது ஈடுபாடும் ஒரு காரணமாக அமைந்தது. பெரும்பான்மையான ஆலைகளின் உரிமையாளர்களாக ஐரோப்பியர்கள் இருந்ததால் அரசு அவர்களை ஆதரித்தது. அதன் காரணமாகவும் சுதந்திரப் போராட்டத்துக்கு வலு சேர்ந்தது.

1920 அக்டோபர் 30இல் 1,40,854 உறுப்பினர்களைக் கொண்ட 64 தொழிற்சங்கங்களைச் சேர்ந்த பிரதிநிதிகள் பம்பாயில் சந்தித்து லாலா லஜபதி ராயின் தலைமையில் அகில இந்தியத் தொழிற்சங்க காங்கிரஸை (AITUC) நிறுவினர். மோதிலால் நேரு, ஜவஹர்லால் நேரு, சி ஆர் தாஸ், வல்லபாய் பட்டேல், சுபாஷ் சந்திர போஸ் மற்றும் இந்திய தேசிய காங்கிரஸின் தேசியத் தலைவர்கள் பலர் இந்த அமைப்பை ஆதரித்தனர்.

தொழிற்சங்கங்கள் மெதுவாக தேசிய இயக்கத்தில் ஈடுபட்டன. ஏப்ரல் 1919இல் ஜாலியன் வாலாபாக் படுகொலை மற்றும் காந்தியடிகளின் கைதுக்குப் பிறகு அகமதாபாத் மற்றும் குஜராத்தின்

12th_History_TM_Unit_3.indd 42 02-01-2023 16:34:56

www.tntextbooks.in

பல பகுதிகளைச் சேர்ந்த உழைக்கும் வகுப்பினர் வேலைநிறுத்தங்கள், போராட்டங்கள் மற்றும் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டனர். அரசு அல்லது முதலாளிகளால் முதலில் தொழிற்சங்கங்கள் அங்கீகரிக்கப்படவில்லை. தொழிலாளர்களின் ஒற்றுமை மற்றும் அவர்களின் இயக்கத்தின் வலிமை காரணமாக அரசும் முதலாளிகளும் அவர்களை அங்கீகரிக்கக் கட்டாயப்படுத்தப்பட்டன. 1919–20இல் 107 ஆக இருந்த பதிவு பெற்ற தொழிற்சங்கங்களின் எண்ணிக்கை 1946–47இல் 1833 ஆக அதிகரித்தது.

பாடச் சுருக்கம்

- முதல் உலகப் போர் நடந்தது உட்பட இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் முதல் இரண்டு பத்தாண்டுகளில் நடந்த நிகழ்வுகள் இந்திய தேசிய அரசியலில் மிகப் பெரிய தாக்கத்தை ஏற்படுத்தின.
- காங்கிரஸில் ஏற்பட்ட பிளவு காரணமாக உருவான அரசியல் வெற்றிடம் டாக்டர் அன்னிபெசண்ட் அம்மையார் தலைமையில் தன்னாட்சி இயக்கம் தோன்ற வழியமைத்தது.
- இந்தியாவிற்குத் தன்னாட்சி வேண்டும் என்று திலகர் மற்றும் பெசண்ட் தலைமையிலான இரு தன்னாட்சி இயக்கங்களும் கோரின.
- போர் காரணமாக காங்கிரசும் முஸ்லிம் லீக்கும் ஒன்றாகச் சேர்ந்து செயல்படும் வாய்ப்பும் லக்னோ ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டதும், இந்து முஸ்லிம் ஒற்றுமைக்கு வித்திட்டன.
- போரின் போது ஆங்கிலேய அரசு, சுதந்திரப் போராட்ட நடவடிக்கைகளை ஒடுக்கும் நோக்கத்தோடு பல அடக்குமுறைச் சட்டங்களை இயற்றியது.
- துருக்கியின் மிகப்பெரும் தோல்வியும் மற்றும் அதன் மீது திணிக்கப்பட்ட அவமானம் தரும் அமைதி ஒப்பந்தமும் கிலாபத் இயக்கத்துக்கு வித்திட்டன. ரஷ்யப் புரட்சி இந்தியாவில் தொழிற்சங்க இயக்கம் வளர வழி அமைத்தது.
- காந்தியடிகளின் தலைமையில் புதிய வடிவிலான ஆர்ப்பாட்டத்தை தொடங்கும் களத்தை மறைமுகமாக முதல் உலகப்போர் உருவாக்கியது.

பயிற்சி

SV189

I. சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்.

1. தென்னிந்தியாவில் தன்னாட்சி இயக்கம் யாரால் துவக்கப்பட்டது?

   (அ) திலகர் (ஆ) அன்னிபெசண்ட்
   (இ) பி.பி. வாடியா (ஈ) எச்.எஸ். ஆல்காட்

2. பின்வருவனவற்றுள் அன்னிபெசண்ட் பற்றிய சரியான கூற்று எது?

   1. கர்னல் எச்.எஸ். ஆல்காட்டிற்குப் பிறகு பிரம்மஞான சபையின் உலகளாவிய தலைவராக அன்னிபெசண்ட் தேர்ந்தெடுக்கப்பட்டார்.
   2. 1914இல் அவர் காமன்வீல் என்ற வாராந்திரியை தொடங்கினார்.
   3. 1915ஆம் ஆண்டு "How India wrought for Freedom" என்ற தலைப்பிலான புத்தகத்தைப் பதிப்பித்தார்.

   (அ) 1 மற்றும் 2 (ஆ) 2 மற்றும் 3
   (இ) 1 மற்றும் 3 (ஈ) 1, 2 மற்றும் 3

3. **கூற்று:** ஜின்னாவை "இந்து–முஸ்லீம் ஒற்றுமையின் தூதர்" என்று சரோஜினி அம்மையார் அழைத்தார்.

   காரணம்: லக்னோ ஒப்பந்தத்தின் தலைமைச் சிற்பி ஜின்னா ஆவார்.

   (அ) கூற்று சரி. காரணம் கூற்றிற்கான விளக்கமல்ல.
   (ஆ) கூற்று சரி. காரணம் கூற்றிற்கான விளக்கம்.
   (இ) கூற்று தவறு. காரணம் சரி
   (ஈ) கூற்று மற்றும் காரணம் இரண்டும் தவறு.

4. பனாரஸ் இந்துப் பல்கலைக்கழகம் யாரால் நிறுவப்பட்டது?

   (அ) மகாத்மா காந்தியடிகள்
   (ஆ) மதன்மோகன் மாளவியா
   (இ) திலகர்
   (ஈ) பி.பி. வாடியா

5. 1916ஆம் ஆண்டு லக்னோ மாநாட்டின் முக்கியத்துவம்

   (அ) முஸ்லீம் லீக் எழுச்சி.
   (ஆ) காங்கிரஸ் மற்றும் முஸ்லீம் லீக் தற்காலிக இணைப்பு.
   (இ) முஸ்லீம் லீக்கின் தனித்தொகுதி கோரிக்கையை காங்கிரஸ் ஏற்றுக் கொண்டது.
   (ஈ) காங்கிரஸ் மற்றும் முஸ்லீம் லீக்கின் கூட்டமர்வில் ஜின்னாவின் எதிர்மறை போக்கு.

12th_History_TM_Unit_3.indd 43 02-01-2023 16:34:56

6. பின்வருவனவற்றைக் கீழே கொடுக்கப்பட்டுள்ள குறியீடுகள் உதவியுடன் பொருத்துக.

(அ) கதார் கட்சி	–	i. 1916
(ஆ) நியூ இந்தியா	–	ii. 1913
(இ) தன்னாட்சி இயக்கம்	–	iii. 1909
(ஈ) மிண்டோ–மார்லி சீர்திருத்தம்	–	iv. 1915

(அ) ii, iv, i, iii (ஆ) iv, i, ii, iii
(இ) i, iv, iii, ii (ஈ) ii, iii, iv, i

7. "Indian Unrest" என்ற புத்தகத்தின் ஆசிரியர்
(அ) லாலா லஜபதிராய்
(ஆ) வேலண்டைன் சிரோல்
(இ) திலகர்
(ஈ) அன்னிபெசண்ட்

8. கதார் கட்சி யாரால் நிறுவப்பட்டது?
(அ) லாலா லஜபதிராய்
(ஆ) ஏ.சி. மஜூம்தார்
(இ) லாலா ஹர்தயாள்
(ஈ) சங்கர்லால் பாங்கர்

9. அகில இந்திய தொழிற்சங்க காங்கிரஸின் முதல் தலைவர் யார்?
(அ) பி.பி. வாடியா
(ஆ) ஜவஹர்லால் நேரு
(இ) லாலா லஜபதிராய்
(ஈ) சி.ஆர். தாஸ்

II குறுகிய விடையளிக்கவும்.

1. 1903 – 1914 ஆகிய கால கட்டங்களில் தேசிய இயக்கம் வளர்ந்து வருவதைக் கட்டுப்படுத்த ஆங்கில அரசு மேற்கொண்ட அடக்குமுறை நடவடிக்கைகள் என்ன?
2. கிலாஃபத் இயக்கம் துவங்குவதற்கான பின்னணி என்னவாக இருந்தது?
3. அன்னிபெசண்ட் அம்மையாரால் வெளியிடப்பட்ட புத்தகம் மற்றும் வாராந்திரப் பத்திரிக்கைகளின் பெயர்களைக் கூறுக.
4. 1915ஆம் ஆண்டு இந்தியப் பாதுகாப்புக்கான சட்டம் பற்றி விவரிக்கவும்.

III சுருக்கமாக விடையளிக்கவும்.

1. தன்னாட்சி இயக்கத்தின் இரட்டைக் குறிக்கோள்களை பற்றி விவாதிக்கவும்.
2. இந்திய சுதந்திரப் போராட்டத்தின் ஒரு அத்தியாயமாக கதார் இயக்கம் கருதப்படுவது ஏன்?
3. 1920 மார்ச்சில் நடைபெற்ற பாரிஸ் அமைதி மாநாட்டில் கிலாஃபத் இயக்கத்தின் சார்பாக முன் வைக்கப்பட்ட கோரிக்கைகள் என்ன?
4. சென்னை தொழிற்சங்கத்தின் தாக்கம் மற்றும் முக்கியத்துவம் என்ன?

IV. விரிவான விடையளிக்கவும்.

1. லக்னோ ஒப்பந்தத்தின் முக்கிய அம்சங்களை முன்னிலைப்படுத்துக.
2. திலகர் மற்றும் அன்னிபெசண்ட் ஆகியோரின் கீழ் துவக்கப்பட்ட தன்னாட்சி இயக்கங்களின் செயல்பாடுகளை விளக்குக.

V. செயல்பாடு.

1. தற்கால சமூகப் பிரிவுகள் ஒழுங்கமைக்கப்படுவதற்குத் தொழிற்சங்கங்கள் ஏன் முக்கியமானவை என விவாதம் செய்தல்.
2. குழுச் செயல்பாடு: முக்கிய கூட்டமைப்பு மற்றும் தொழில் சங்கங்களை அடையாளங்கண்டு அவைகளின் நடவடிக்கைகளைப் பதிவு செய்தல்.

மேற்கோள் நூல்கள்

1. Bipan Chandra, *India's Struggle for Independence*, Penguin, 2016.
2. Sumit Sarkar, *Modern India: 1885–1947*, Pearson, 2014.
3. Sekar Bandyopadhyay, *From Plassey to Partition and After: A History of Modern India*, Orient BlackSwan, 2014.
4. Jaswant Singh, *Jinnah: India, Partition, Independence*. Rupa, 2009.
5. Ramachandra Guha, *Gandhi: The Years that Changed the World, 1914–1948*, Penguin, 2018.

இணையதள வளங்கள்

www.brittanica.com

12th_History_TM_Unit_3.indd 44 02-01-2023 16:34:57

கலைச்சொற்கள்

கடுமையான, கொடுமையான	**draconic**	very harsh and severe
காவலர் / ராணுவப் பிரிவு	**contingent**	a group of police or military personnel
இரகசியக் கூட்டம் / சதித்திட்டம்	**conspiracy**	a secret plan by a group of people to do something illegal
மிதவாத தேசியவாதி	**moderate**	avoiding extremes
வீரதிருத்தகைப்பட்டம்	**knighthood**	a person given a rank of honour by a British king or queen because of his or her special achievement
தீவிர தேசியவாதம்	**extremist**	a person who holds a radical view in politics or religion.
குறிப்பாணை	**memorandum**	a petition that is presented to a person or committee on a particular issue
குடிபுகுபவர்	**immigrant**	a person who arrives to take up permanent residence in a country

இணையச் செயல்பாடு

இந்திய விடுதலைப்போரில் முதல் உலகப்போரின் தாக்கம்

இச்செயல்பாட்டின் மூலம் முதல் உலகப்போரில் இந்தியாவின் பங்கினை அறியலாம்.



படிநிலைகள்

படி 1 : கீழ்க்காணும் உரலி/விரைவுக் குறியீட்டைப் பயன்படுத்தி இச்செயல்பாட்டிற்கான இணையப் பக்கத்திற்குச் செல்க.

படி 2 : தோன்றும் திரையில் கீழ்நோக்கி நகர்த்தி ‘Timeline’ என்பதை சொடுக்கவும்.

படி 3 : Timeline bar I சொடுக்கி நிகழ்வுகளை காண்க.

படி 1

படி 2



படி 3

உரலி : http://indiaww1.in/index.aspx

*படங்கள் அடையாளத்திற்கு மட்டுமே.

*தேவையெனில் Adobe Flash ஐ அனுமதிக்க.

12th_History_TM_Unit_3.indd 46 02-01-2023 16:34:58

அலகு 4 காந்தியடிகள் தேசியத் தலைவராக உருவெடுத்து மக்களை ஒன்றிணைத்தல்

கற்றலின் நோக்கங்கள்

கீழ்க்காண்பவற்றைப் பற்றி அறிந்துகொள்ளல்

- சம்பரான் இயக்கம் மற்றும் கேதா சத்தியாகிரகம்
- மாண்டேகு – செம்ஸ்ஃபோர்டு சீர்திருத்தங்கள்
- பிராமணரல்லாதார் இயக்கம் மற்றும் ஒத்துழையாமை இயக்கம்
- ஜாலியன் வாலாபாக் படுகொலை, சுயராஜ்ய கட்சி மற்றும் அதன் செயல்பாடுகள்
- சைமன் குழு, வட்ட மேசை மாநாடுகள்
- காந்தி – இர்வின் ஒப்பந்தம் மற்றும் அம்பேத்கரும் அரசியலும்

அறிமுகம்

மோகன்தாஸ் கரம்சந்த் காந்தி 1869இல் கடற்கரையோர நகரான போர்பந்தரில் பிறந்தார். 1915ஆம் ஆண்டு அவர் இந்தியா திரும்பியபோது தென்னாப்பிரிக்காவின் இனவாத அரசு விதித்த சமத்துவமில்லாத நிலைமைகளுக்கு எதிரான காந்தியடிகளின் போராட்டங்கள் ஒரு சாதனையாக இருந்தன. இந்திய தேசிய சக்திகளுக்கு உதவ வேண்டும் என்று காந்தியடிகள் உறுதியாக விரும்பினார். தென்னாப்பிரிக்காவில் இந்தியர்களுக்காக முன்னர் ஆதரவு திரட்டியபோது காங்கிரஸ் தலைவர்களுடன் அவர் தொடர்பில் இருந்ததால் காந்தியடிகளுக்கு இந்தியத் தலைவர்களுடன் தொடர்பு இருந்தது. கோபால கிருஷ்ண கோகலேவின் செயல்பாடுகள் மற்றும் கொள்கைகளால் ஈர்க்கப்பட்டு அவரைத் தனது அரசியல் குருவாக அடையாளம் கண்டார். இந்தியாவை விட்டு இருபது ஆண்டுகள் வெளியே இருந்த காந்தியடிகள் கோகலேவின் அறிவுரையை ஏற்று இந்தியா திரும்பிய உடன் நாட்டின் நிலைமையோடுத் தன்னைப் பொருத்திக்கொள்ளும் விதமாக நாடு முழுவதும் ஓராண்டு காலத்துக்குப் பயணம் மேற்கொண்டார். அகமதாபாத்தில் சபர்மதி ஆசிரமத்தை நிறுவிய அவர், தன்னாட்சி (ஹோம் ரூல்) இயக்கம் உள்ளிட்ட அரசியல் இயக்கங்களில் தீவிரப் பங்கேற்கவில்லை.

தென்னாப்பிரிக்காவில் இருந்தபோது இனவாத அடிப்படையில் செயல்பட்ட அந்நாட்டு அரசுக்கு எதிராக சத்யம் (உண்மை), அஹிம்சை (வன்முறையற்ற தன்மை) ஆகியவற்றின் அடிப்படையிலான சத்தியாகிரகப் போராட்டத்தைப் படிப்படியாக உருவாக்கினார். தீமை மற்றும் அநீதிக்கு எதிராக போராடியபோதிலும், ஒரு சத்தியாகிரகி தனது மனதில் அமைதியை நிலைநிறுத்துவதோடு தவறு செய்தவரை வெறுக்கக்கூடாது. எதிர்ப்பின் பாதையில் ஒரு சத்தியாகிரகி சிரமங்களை ஏற்றுக்கொள்வார் மற்றும் அவரது நடவடிக்கையில் வெறுப்புணர்வுக்கு இடமில்லை. அஹிம்சையும் உண்மையும் தைரியமானவர்கள் மற்றும் அச்சமற்றவர்களின் ஆயுதங்களாக விளங்கும். அவை கோழைகளின் ஆயுதங்கள் அல்ல. எண்ணப்போக்கு மற்றும் பழக்கம், நம்பிக்கை மற்றும் செயல்பாட்டுக்கு இடையே காந்தியடிகளுக்கு எந்தவித வேறுபாடுமில்லை.

4.1 காந்தியடிகளின் சத்தியாகிரக சோதனைகள்

அ) சம்பரான் இயக்கம் (1917)

சம்பரானில் இருந்த விவசாயிகளின் வேண்டுகோளை ஏற்று, இந்திய மக்களை ஒன்றிணைக்கும் முதல் முயற்சியைக் காந்தியடிகள் மேற்கொண்டார். அவர் போராட்டத்தைத்

12th_History_TM_Unit_4.indd 47 21-12-2022 18:56:36

www.tntextbooks.in

சம்பரானில் காந்தியடிகளின் தோற்றப்பொலிவு

துவங்குமுன், நிலைமை குறித்து விரிவாக ஆராய்ந்தார். பீகாரின் சம்பரான் மாவட்டத்தில் இருந்த கருநீலச்சாய (இண்டிகோ) விவசாயிகள் ஐரோப்பிய வர்த்தகர்களால் பெரிதும் ஏமாற்றப்பட்டனர். அவர்களிடம் இருந்த 3/20 பங்கு நிலத்தில் விவசாயிகள் கருநீலச்சாயத்தைக் கட்டாயம் விளைவிக்க வேண்டும். அதனையும் வர்த்தகர்கள் நிர்ணயிக்கும் விலைக்கே விற்கவேண்டும். இந்தக் கட்டமைப்பு விவசாயிகளைச் சுரண்டியதோடு அவர்களை வறுமையின் பிடியில் சிக்கவைத்தது. ராஜேந்திர பிரசாத், மஜாருல் ஹக், ஆச்சார்ய கிருபாளினி, மஹாதேவ தேசாய் போன்ற உள்ளூர் தலைவர்களுடன் காந்தியடிகள் விரிவான விசாரணை மேற்கொண்டார். உடனடியாக அந்த மாவட்டத்தை விட்டு வெளியேறவேண்டும் என்று பிரிட்டிஷ் அதிகாரிகள் காந்தியடிகளுக்கு உத்தரவிட்டனர். ஆனால் வெளியேற மறுத்த காந்தியடிகள், இந்த உத்தரவு நியாயமற்றது என்று மாவட்ட நிர்வாகத்திடம் வலியுறுத்தி உத்தரவை மீறுவதன் மூலம் ஏற்படும் விளைவுகளைச் சந்திக்க போவதாகவும் கூறினார்.

காந்தியடிகளையும் ஒரு உறுப்பினராகக் கொண்டு விசாரணைக் குழு ஒன்று அமைக்கப்பட்டது. ஏழை விவசாயிகளின் சிரமங்கள் குறித்து குழுவிடம் எடுத்துரைத்துப் புரியவைப்பதில் காந்தியடிகளுக்குச் சிரமம் ஏற்படவில்லை. அந்த அறிக்கை ஏற்றுக்கொள்ளப்பட்டு அமல்படுத்தப்பட்டதில் ஐரோப்பிய வர்த்தகர்களின் கட்டுப்பாட்டிலிருந்த கருநீலச்சாய விவசாயிகள் மீட்கப்பட்டனர். ஐரோப்பிய வர்த்தகர்கள் படிப்படியாக சம்பரானை விட்டே வெளியேறிவிட்டனர்.

ஆ) ஆலைத் தொழிலாளர்களின் வேலைநிறுத்தம் மற்றும் அகமதாபாத்தில் காந்தியடிகளின் உண்ணாவிரதம் (1918)

இவ்வாறாக காந்தியடிகள் தனது முதலாவது வெற்றியைத் தாய்மண்ணில் பதிவு செய்தார். விவசாயிகளின் நிலைமையை நெருக்கமாகப் புரிந்துகொள்ள இந்த போராட்டம் அவருக்கு வழிவகை செய்தது. அகமதாபாத் நகர மையத்தில் பணியாளர்களுக்காக மக்களை ஒன்றுதிரட்டும் பணி காத்திருந்தது. துணிஆலைப் பணியாளர்களுக்கும், ஆலை முதலாளிகளுக்கும் இடையே பிரச்சனை நிலவியது. காந்தியடிகள் இருதரப்பையும் சந்தித்துப் பேசினார். மிகக் குறைவான ஊதியம் பெற்ற பணியாளர்களின் கோரிக்கைகளை ஏற்க முதலாளிகள் மறுத்ததை அடுத்து 35 சதவீதம் ஊதிய உயர்வு வேண்டும் என்று கோரி வேலைநிறுத்தத்தில் ஈடுபடுமாறு காந்தியடிகள் அவர்களுக்கு அறிவுரை வழங்கினார். தொழிலாளர்களுக்கு ஊக்கம் தரும் வகையில் அவர் உண்ணாவிரதப் போராட்டத்தில் இறங்கினார். தொழிலாளர்களின் வேலைநிறுத்தமும் காந்தியடிகளின் உண்ணாவிரதமும் இறுதியில் தொழிலாளர்களின் கோரிக்கையை ஏற்கவேண்டிய நிலைக்கு ஆலை முதலாளிகளை நிர்ப்பந்தித்தது.

இ) கேதா போராட்டம் (1918)

கேதா மாவட்ட விவசாயிகள் பருவமழை பொய்த்ததன் காரணமாகச் சிரமத்தைச் சந்தித்தனர். 1918இல் நில வருவாய் வசூலை ரத்துசெய்யுமாறு காலனி ஆட்சி நிர்வாகத்திடம் அவர்கள் கோரினர். அரசின் பஞ்சகால விதியின்படி, பயிர்சாகுபடி சராசரியாக 25 சதவீதத்துக்கும் குறைவாக இருந்தால் பயிரிடுவோர் முழு நிலவரி ரத்துக்கு தகுதிபெறுவர். ஆனால் நிர்வாகத்தினர் இவ்விதியை அமல்படுத்த மறுத்துவிட்டு முழுமையாக பணத்தைச் செலுத்துமாறு துன்புறுத்தினர். பிளேக் நோயாலும் அதிக விலையேற்றத்தாலும் பஞ்சத்தாலும் பாதிக்கப்பட்ட விவசாயிகள் காந்தியடிகள் உறுப்பினராக அங்கம் வகித்த இந்தியப் பணியாளர் சங்கத்தை (Servants of India Society) உதவி கோரி அணுகினர். ஏழை விவசாயிகள் சார்பாக விதல்பாய் பட்டேலுடன் இணைந்து தலையிட்ட காந்தியடிகள் பணம் செலுத்துவதை நிறுத்திவிட்டு இந்த எதேச்சதிகாரம் மற்றும் பழிவாங்கும் நடவடிக்கையை எதிர்த்து சாகும்வரைப் போராட்டம் நடத்துமாறு அறிவுறுத்தினார். இளம் வழக்கறிஞரான வல்லபாய் பட்டேலும் இந்துலால் நாயக்கும் காந்தியடிகளுடன் இந்த இயக்கத்தில் இணைந்து விவசாயிகளை உறுதியாக இருக்குமாறு வேண்டினர். பயிர்களை எடுத்துக்கொள்வது, போராட்டம் நடத்தியவர்களின் சொத்துகளையும் கால்நடைகளையும் சொந்தமாக்கிக் கொள்வது, சில நேரங்களில் அவற்றில் சிலவற்றை ஏலம் விடுவது என அரசு அடக்குமுறைகளைக் கையாண்டது.

12th_History_TM_Unit_4.indd 48 21-12-2022 18:56:37



கேதா சத்தியாகிரகம்

எந்த விவசாயியால் பணம் செலுத்தமுடியுமோ அவர்களிடம் இருந்து மட்டுமே வருவாயை வசூல் செய்யவேண்டும் என்று அரசு நிர்வாகத்தினர் அறிவுறுத்தல்களை வெளியிட்டனர். இதனை அறிந்த காந்தியடிகள் போராட்டத்தை விலக்கிக்கொள்ள முடிவு செய்தார்.

காந்தியடிகள் தலைமையில் நடந்த மூன்று போராட்டங்களும் இந்திய நாடு எங்கிருக்கிறது என்ற உணர்வை அவருக்கு வழங்கும் விதமாக அமைந்தது. ஏழை விவசாயிகள், இந்தியாவின் மூலை முடுக்கில் வாழ்ந்த அனைத்து வகுப்புகள், சாதிகளைச் சேர்ந்த தொழிலாளர்களின் நலன்களைப் பாதுகாக்க இந்தப் போராட்டங்களின் வாயிலாக காந்தியடிகள் ஆதரவு திரட்டினார். காலனி ஆதிக்கவாத மற்றும் இந்தியாவைச் சேர்ந்த சுரண்டல்காரர்கள் இருதரப்பையும் எதிர்கொண்ட அவர் இருதரப்பிலும் பேச்சுகளை நடத்தினார். ஒடுக்கப்பட்டவர்களை ஒன்று திரட்டி அவர்களின் தலைவராகவும் அதே நேரத்தில் ஒடுக்கும் நபர்களுடனும் பேச்சுவார்த்தை நடத்தும் திறனும் பெற்று ஒரு தலைவராக அவர் தன்னை நிலைநிறுத்திக் கொண்டார். அவரை மக்களிடம் தலைவராகவும் மகாத்மாவாகவும் இந்த பண்புகள் நிலைநிறுத்தின.

பல்வேறு சாதி, பிரதேசங்கள், மதங்கள் ஆகியவற்றைச் சேர்ந்த இந்தியர்களுக்கு நலப்பணிகளில் பயிற்சி வழங்க இந்திய பணியாளர் சங்கத்தை கோபால கிருஷ்ண கோகலே 1905இல் நிறுவினார். பின்தங்கிய, ஊரக மற்றும் பழங்குடியின மக்களின் மேம்பாட்டுக்காகத் தன்னை அர்ப்பணித்துக்கொண்ட நாட்டின் முதலாவது மதச்சார்பற்ற அமைப்பு இதுவாகும். நிவாரணப் பணி, கல்வியறிவூட்டல் மற்றும் இதர சமூகக்கடமைகளில் உறுப்பினர்கள் தங்களை ஈடுபடுத்திக்கொண்டனர். ஐந்தாண்டு காலத்துக்கு பயிற்சி பெறவேண்டிய உறுப்பினர்கள் குறைவான சம்பளத்துக்குப் பணியாற்ற ஒப்புக்கொள்ளவேண்டும். இந்த அமைப்புக்குத் தலைமையகம் மகாராஷ்டிராவின் பூனாவிலும், சென்னை (மதராஸ்), மும்பை (பம்பாய்), அலகாபாத் மற்றும் நாக்பூரில் முக்கிய கிளைகளும் இருந்தன.

4.2 மாண்டேகு – செம்ஸ்ஃபோர்டு சீர்திருத்தங்கள்

இந்தியாவுக்கான பிரிட்டிஷ் வெளியுறவு அமைச்சர் எட்வின் மாண்டேகு–வும் அரசப்பிரதிநிதி (வைசிராய்) செம்ஸ்ஃபோர்டும் இந்தியாவுக்கான அரசியல்சாசன மாற்றங்களை அறிவித்தனர். அவையே பின்னர் 1919இன் இந்திய கவுன்சில்கள் சட்டம் என்று அழைக்கப்பட்டன. மாகாண சட்டப்பேரவைகளைப் பெரும்பான்மையாகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுடன் விரிவுபடுத்த இந்தச் சட்டம் வகைசெய்தது. இரட்டை ஆட்சியின் கீழ் மாகாணஅரசுகளுக்கு நிர்வாகத்தில் அதிகப் பங்கு வழங்கப்பட்டது. இந்தத் திட்டத்தின் கீழ் சட்டம் ஒழுங்கு, நிதி ஆகிய முக்கியமான துறைகள் ஆங்கிலேயருக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு அவர்கள் அனைவரும் ஆளுநர்களின் நேரடிக் கட்டுப்பாட்டின் கீழ்வந்தனர். சுகாதாரம், கல்வி, உள்ளாட்சி போன்ற இதர துறைகள் இந்தியப் பிரதிநிதிகளுக்கு மாற்றப்பட்டது. இத்தகைய மாற்றப்பட்ட துறைகளுக்குப் பொறுப்பேற்ற அமைச்சர்கள் சட்டப்பேரவைகளுக்குக் கடமைப்பட்டவர்களானார்கள். ஒதுக்கீடு செய்யப்பட்டத் துறைகளுக்குப் பொறுப்பேற்றவர்கள் சட்டப்பேரவைகளுக்குக் கடமைப்பட்டவர்கள் இல்லை. மேலும் சிறப்பு (மறுப்பானை) அதிகாரங்களின் கீழ் அந்தந்த மாகாணங்களின் ஆளுநர்கள் அமைச்சர்களை அதிகாரம் செய்ய இயலும். இதனால் இந்த அமைப்பு முழுதுமே நகைப்புக்கிடமாய் ஆகின. மத்திய சட்டப்பேரவை குறித்து விவரிக்கும் சட்ட அம்சம், இரண்டு அவைகளுடன் இரட்டைஅடுக்கு சட்டப்பேரவை மற்றும் மேலவையை உருவாக்கியது.

மத்திய சட்டப்பேரவையில் இருந்த 144 மொத்த உறுப்பினர்களில் 41 உறுப்பினர்கள் நியமனம் செய்யப்படவேண்டும். மாநிலங்களவை என்றழைக்கப்பட்ட மேலவையில் மொத்தம் இருந்த 60 உறுப்பினர்களில் 26 நபர்கள் நியமன உறுப்பினர்களாக இருந்தனர். கவர்னர் ஜெனரல் மற்றும் அவரது நிர்வாகக்கவுன்சில் மீது இரண்டு

அவைகளுக்கும் எந்தக் கட்டுப்பாடும் இல்லை. ஆனால் மாகாண அரசுகள் மீது மத்திய அரசுக்கு முழுக் கட்டுப்பாடு இருந்தது. இதன் விளைவாக, ஐரோப்பிய/ஆங்கிலேய அதிகாரிகளின் கைகளில் அதிகாரம் குவிந்திருந்தது. வாக்களிக்கும் உரிமையும் தொடர்ந்து கட்டுப்பாடுகளைக் கொண்டிருந்தது.

பிரிட்டனின் போர் முயற்சிகளுக்கு நிபந்தனையற்ற ஆதரவுகொடுத்த இந்தியாவின் பொதுநலன் மீது அக்கறை கொண்ட மக்கள் இன்னும் நிறைய எதிர்பார்த்தனர். இந்தத் திட்டம் 1918ஆம் ஆண்டு அறிவிக்கப்பட்டபோது இந்தியா முழுவதும் விமர்சனத்துக்கு உள்ளானது. 1918ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் பம்பாயில் நடந்த இந்திய தேசிய காங்கிரஸின் சிறப்பு அமர்வில் இந்தத் திட்டம் பற்றி விவாதிக்கப்பட்டது. இந்தத் திட்டம் ஏமாற்றத்தையும் அதிருப்தியையும் அளிப்பதாகக் காங்கிரஸ் தெரிவித்தது.

பொதுக்கருத்தை உருவாக்குவதில் தாங்கள் வழக்கமாகப் பின்பற்றிய ஆசைகாட்டி மோசம் செய்யும் கொள்கையை காலனியாதிக்க அரசு பின்பற்றியது. சீர்திருத்தங்களை முயன்று அதற்காக உழைக்கவேண்டும் என்று கோரிய மிதவாத/தாராளக் கொள்கையுடைய அரசியல் தலைவர்களின் குழு ஒன்று செயல்பட்டது. சுரேந்திரநாத் பானர்ஜி தலைமையிலான இந்தக் குழு பெரும்பான்மைக் கருத்தை எதிர்த்ததோடு இந்திய லிபரல் (தாராளமய) கூட்டமைப்பு என்ற பெயரில் தனது சொந்தக் கட்சியைத் தொடங்க காங்கிரசுக்கு வழியமைத்தது.

4.3 பிராமணரல்லாதார் இயக்கம்

பல்வேறு அடுக்குகள் கொண்ட இந்திய சமூகமும் அதனுள் இருந்த முரண்பாடுகளும் உயர் வகுப்பு ஆளுமையைக் கேள்வி கேட்கும் சாதி அமைப்புகள் மற்றும் இயக்கங்கள் தொடங்கப்பட ஏதுவாக அமைந்தன. உற்பத்தியின் காரணிகளை மேல் வர்க்கத்தினர் கட்டுப்படுத்திய நிலையில் வாழ்வாதாரத்தை நடுத்தர மற்றும் ஒடுக்கப்பட்டோர் சார்ந்திருந்தனர். பத்தொன்பதாம் நூற்றாண்டின் சமூக மற்றும் சமய சீர்திருத்த இயக்கங்களை ஆளுமைப்படுத்திய மற்றும் இணைந்து செயல்பட்ட தாராளமயமாக்கலும், மனிதாபிமானமும் சமூகத்தைப் பாதித்ததோடு அதனைச் சற்றுத் திருப்பிப்போட்டது. பத்தொன்பதாம் நூற்றாண்டின் கடைசி இருபத்தைந்தாண்டுகளில் இந்த விழிப்புணர்வுக்கான அறிகுறிகள் ஏற்கனவே தென்பட ஆரம்பித்துவிட்டன. வங்காளத்திலும் இந்தியாவின் கிழக்குப்பகுதிகளிலும் தொடங்கப்பட்ட நாமசூத்ரா இயக்கம், இந்தியாவின் வடமேற்கு பகுதியில் தொடங்கப்பட்ட ஆதிதர்மா இயக்கம், மேற்கு இந்தியாவில் சத்யசோதக் இயக்கம் மற்றும் தென்னிந்தியாவின் திராவிட இயக்கங்கள் இந்த நூற்றாண்டின் திருப்பத்தில் தங்கள் குரல்களை எழுப்பின. பிராமணர் அல்லாத தலைவர்களால் நடத்தப்பட்ட இந்த இயக்கங்கள் பிராமணர்கள் மற்றும் இதர உயர் வகுப்பினரின் மேன்மை குறித்துக் கேள்வி எழுப்பின.

ஜோதி ராவ் பூலே

1872ஆம் ஆண்டு ஜோதி ராவ் பூலேவின் புத்தகம் குலாம்கிரி என்ற தலைப்பில் முதலில் வெளிவந்தது. அவரது அமைப்பு, சத்யசோதக் சமாஜ், பிராமணியத்தின் கொடுங்கோல் மற்றும் சுரண்டல் ஆகியவற்றிலிருந்து ஒடுக்கப்பட்ட சாதியினரை விடுவிப்பதற்கான அவசியத்தை அடிக்கோடிட்டுக் காட்டியது. காலனித்துவ நிர்வாகிகள் மற்றும் கல்வி நிறுவனங்கள் ஆகியவை மறைமுகமாக இப்போக்கை ஊக்குவித்தன. காலனித்துவ காலத்தில் இந்நாட்டு மக்களுக்கென அறிமுகப்படுத்தப்பட்ட அனைத்து புதிய வாய்ப்புகளிலும் பிராமணிய ஆதிக்கம் அதிகரிக்கத் தொடங்கிய போது காலனிய அரசாங்கம் பத்தாண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பு அறிக்கைகளை வெளியிடத் தொடங்கியது. இந்த அறிக்கைகளில் சாதிகள் வகைப்படுத்தப்பட்டன. 'உள்ளூர் பொதுக் கருத்தினால் அங்கீகரிக்கப்பட்ட சமூக முன்னுரிமை'யின் அடிப்படையில் சாதிகளை வகைப்படுத்தி மக்கள்தொகை கணக்கெடுப்பு குறிப்பிட்ட போது சாதிகளுக்கு இடையே மோதல்கள் எழுந்தன. உரிமைகோரல்களும், அவற்றை எதிர்த்து உரிமையோடு மறுப்பதும் என இந்த அமைப்புகளின் தலைவர்கள் தாங்கள் முக்கியத்துவம் பெறுவதற்காகப் போராடத் துவங்கினர். பலர் புதிய அமைப்புக்களையும் தொடங்கினார்கள். இந்த முயற்சிகளுக்கு அப்போது உருவாகிய அரசியல் சூழ்நிலை மேலும் உதவியாக இருந்தது.

சமூக அடையாளத்தைப் பெறுவதற்குத் தங்கள் சாதிகளைப் போராட்டத்துக்கு ஒருங்கிணைக்க வேண்டும் என்று சாதிகளின் முன்னணித் தலைவர்கள் உணர்ந்தனர். அங்கீகாரத்தை எதிர்த்து அவர்களில் பலர், ஆண்டுகள் செல்லச் செல்ல, அவர்களது சாதி சார்ந்த மாணவர்கள் கல்வி பெறவும், கல்வி பெற்ற இளைஞர்கள் வேலைவாய்ப்புகளைப் பெறவும் உதவினர். இதனிடையே, வாக்குரிமை அரசியல் 1880களில் அறிமுகம் செய்யப்பட்டு இது போன்ற அமைப்புகளின் இடத்தை அவை நிரப்பின. சாதி விழிப்புணர்வு, சாதி ஒற்றுமை என்ற பெயரில்

12th_History_TM_Unit_4.indd 50 21-12-2022 18:56:37

சமூகப் பொருளாதார பதற்றங்களின் வெளிப்பாடாக இவற்றின் முடிவுகள் இருந்தன.

பிராமணரல்லாதார் இயக்கங்களில் இருந்து இரண்டு போக்குகள் வெளியாகின. கீழ்நிலை சாதிகளுக்குச் சமஸ்கிருதத்தைச் சொல்லிக் கொடுப்பது, மற்றொன்று அந்தக் காலகட்டத்தில் தீவிரமாக இருந்த ஏழைகளுக்கு ஆதரவாகவோ அல்லது முற்போக்குத் தொழிலாளர் மற்றும் விவசாயிகளுக்கு ஆதரவான இயக்கங்கள் ஆகியன செயல்பட்டன. வடக்கு மற்றும் கிழக்கு சாதி இயக்கங்கள் பெரும்பாலும் சமஸ்கிருதம் சார்ந்தும் மேற்கத்திய மற்றும் தெற்கத்திய இயக்கங்கள் பிளவுபட்டு அப்போது வளர்ந்துவந்த தேசியவாத மற்றும் திராவிட–இடதுசாரி இயக்கங்களைச் சேர்த்துக்கொண்டன. ஆனால், அனைத்து இயக்கங்களுமே பிராமண ஆதிக்கம் என்று குறிப்பிட்டு அதனை எதிர்த்துக் கடுமையாக விமர்சனம் செய்தன. தங்கள் அமைப்புகள் மூலம் நீதிவேண்டி அரசிடம் கோரிக்கை வைத்தன. பம்பாய் மற்றும் மதராஸ் மாகாணங்களில் அரசு சேவைகள் மற்றும் பொதுக் கலாச்சாரம் சார்ந்த துறைகளில் பிராமணர்கள் தெளிவாக ஆதிக்கம் செலுத்தியதன் விளைவு பிராமணர் அல்லாதோரின் அரசியலுக்கு வழிவகுத்தது.

தெற்கில் இந்த இயக்கத்தின் வடிவமைப்பு சற்று வித்தியாசமாக இருந்தது. பிராமணர்கள் ஆதிக்கத்திற்கு அதிகக் காரணம் அவர்கள் வெறும் 3.2 சதவீதம் மட்டுமே மக்கள் தொகையில் இடம்பெற்றிருந்தாலும் அவர்களில் 72 சதவீதம் பட்டதாரிகளாய் இருந்தனர். பிராமணரல்லாதார் சாதிகளைச் சேர்ந்தக் கல்வி கற்ற மற்றும் வர்த்தக சமூக உறுப்பினர்களின் சவால்களை அவர்கள் சந்திக்க நேர்ந்தது. அவர்கள் தொடக்கத்தில் மேல்குடி மக்களாக இருந்ததோடு அவர்களது சவால் 1916 இறுதியில் பிராமணரல்லாதார் உருவாக்கிய அறிக்கையில் எடுத்துரைக்கப்பட்டது. வரி செலுத்துவோரில் பெரும் பகுதியாகவும், பெரும்பான்மையாக ஜமீன்தாரர்களாகவும், நிலப்பிரபுக்களாகவும், வேளாண் விவசாயிகளாகவும் தாங்கள் இருந்தபோதிலும் அரசிடமிருந்து எந்த பலன்களையும் பெறவில்லை என்று அவர்கள் தெரிவித்தனர்.

இந்தியாவைப் பிரித்தாளும் சூழ்ச்சியில் பிராமணரல்லாதோரின் உண்மையான குறைகளைப் பயன்படுத்திக் கொள்ள காலனி ஆதிக்க அரசு முயன்றது. பம்பாய் மாகாண பிராமணேதரா பரிஷத், மதராஸ் மாகாண நீதிக்கட்சி ஆகியவைகளுக்கு இது குறைந்தபட்சம் 1930 வரை பொருந்தியது. தீவிரமான தலித் பகுஜன் இயக்கம் அம்பேத்கர் தலைமையிலும் சுயமரியாதை இயக்கம் தந்தை பெரியார் ஈ. வெ. ராமசாமி தலைமையிலும் உருவாகி சமூக நீதி சார்ந்து அடிப்படை மாற்றம் கோரும் இயக்கங்கள் இந்த இரண்டு பகுதிகளிலும் செயல்பட்டன.

அம்பேத்கர் மற்றும் பெரியார்

இந்தியாவின் கீழ்த்தட்டு மக்கள் விழிப்புணர்வு பெற்ற தேசியவாதிகளால் கூறிய தாராளமய ஜனநாயக கருத்துகளை அறிந்துகொள்ள முடியவில்லை. இந்தத் திருப்பங்களைத் தேசியவாதிகளின் ஒரு குழுவினர் முற்றிலுமாக நிராகரித்த நிலையில் அவர்களில் பெரும்பான்மையோர் குறிப்பாக அடிப்படை மாற்றம் விழைவோர் தீவிரத்தன்மையுடன் இந்த இயக்கங்களை எதிர்த்தனர். பிரிட்டிஷார், தேசவிரோத சக்திகள் போன்றவற்றுக்குக் கைத்தடிகள் என்று இந்த இயக்கங்களைச் சிலர் குறிப்பிட்டனர். காலனி அரசுக்கு எதிராகப் பூர்வாங்க தேசியவாதத் தலைவர்கள் எந்த மாதிரியான உத்தியைப் பயன்படுத்தினார்களோ அதே மாதிரியான உத்தியைப் பிராமணர் அல்லாத இயக்கத்தின் பூர்வாங்கத் தலைவர்களும் பின்பற்றத் தொடங்கினர்.

4.4 ஒத்துழையாமை இயக்கம்

அ) ரௌலட் சட்டம்

மிதவாத தேசியவாதிகளுக்கு முக்கியத்துவம் தருவதும் தீவிர தேசியவாதிகளைத் தனிமைப்படுத்துவதும் பிரிட்டிஷாரின் கொள்கையின் ஒரு பகுதியாக இருந்தது. 1919இல் இந்திய கவுன்சில்கள் சட்டம் மற்றும் ரௌலட் சட்டம் ஆகியன ஒரே ஆண்டில் இயற்றப்பட்டன. உலகப் போர் நடந்த கால கட்டத்தில் தீவிரத்தன்மையுடையோர் மற்றும் தேசபக்த புரட்சியாளர்களுக்கு எதிரான அடக்குமுறை நடவடிக்கைகள் தொடர்ந்தன. பலர் தூக்கில் தொங்கவிடப்பட்டனர் அல்லது நீண்ட காலத்துக்குச் சிறையில் அடைக்கப்பட்டனர். பொதுவாக மக்களிடையே போராட்ட எண்ணம்

ரௌலட்

வலுத்த நிலையில் இன்னும் பல அடக்குமுறை அதிகாரங்களுடன் தன்னைப் பலப்படுத்திக்கொள்ள அரசு விரும்பியது. மத்திய சட்டப்பேரவையின் ஒவ்வொரு உறுப்பினரும் இந்த மசோதாவை எதிர்த்த நிலையில் 1919இல் மார்ச் மாதம் ரௌலட் சட்டத்தை அரசு நிறைவேற்றியது. எந்தவித நீதிமன்ற விசாரணையுமின்றி எவரையும் சிறையில் அடைக்க அரசுக்கு இந்தச் சட்டம் அதிகாரமளித்தது.

காந்தியடிகளும் அவரது சகாக்களும் அதிர்ச்சி அடைந்தனர். காந்தியடிகள் நிறுவிய சத்தியாகிரக சபை, இந்தச் சட்டத்தை மீறுவது என்று முதன்முதலாக உறுதி ஏற்றது. கூட்டங்கள், அந்நியத் துணிகளைப் புறக்கணிப்பது, பள்ளிகளைப் புறக்கணிப்பது, கள்ளுக்கடைகளுக்கு முன் ஆர்ப்பாட்டங்களை நடத்துவது, மனுக்கள், போராட்டங்கள் ஆகியப் பழமையான ஆர்ப்பாட்ட முறைகளை கைவிட்டு புதுமையான முறை பின்பற்றப்பட்டது. தொழிலாளர்கள், கைவினைக் கலைஞர்கள், விவசாயிகள் ஆகியோரின் பெரும் பங்கேற்புடன் சத்தியாகிரகம் என்ற ஆயுதம் பயன்படுத்தப்பட்டது. காதி இதன் அடையாளமாகவும் பின்னர் தேசியவாதிகளின் உடையாகவும் மாறிப்போனது. மக்கள் விழிப்புணர்வு அடைந்து அரசியல் பணிகளில் தீவிரம் காட்டினால்தான் இந்தியாவில் சுயராஜ்யம் என்பது நடைமுறைக்கு வரும். 1919 மார்ச்–ஏப்ரல் மாதங்களில் ரௌலட் சட்டத்துக்கு எதிராக வேலைநிறுத்தத்தைக் கடைபிடிக்குமாறு காந்தியடிகள் அழைப்பு விடுத்தவுடன் நாடு முழுவதும் ஊக்கம் பிறந்தது. இந்துக்களையும் முஸ்லிம்களையும் ஒன்றிணைத்த கிலாபத் இயக்கத்தையும் இத்துடன் இணைத்தார்.

ஆ) ஜாலியன் வாலாபாக் படுகொலை

நாடு முழுவதும் நடந்த மக்கள் போராட்டங்கள் மற்றும் மக்களிடம் காணப்பட்ட மகத்தான தன்னெழுச்சி காரணமாக காலனி அரசு ஆத்திரமடைந்தது. 1919 ஏப்ரல் 13இல், அமிர்தசரஸ் நகரில் ஜாலியன் வாலாபாக் பகுதியில் நிராயுதபாணிகளான மக்கள் திரள் மீது மிகக் கொடுமையான அரசியல் குற்றங்கள் இழைக்கப்பட்டன. சத்தியபால், சாய்புதீன் கிச்லு ஆகியோரைக் கைது செய்ததற்கு எதிர்ப்புத் தெரிவித்து அமைதியான வகையில் ஆர்ப்பாட்டம் நடத்துவதற்காக இரண்டாயிரத்துக்கும் அதிகமான மக்கள் போராட்டக் களத்தில் குழுமியிருந்தனர். பஞ்சாபின் துணை நிலை ஆளுநராக மைக்கேல் ஓ டையரும், ராணுவக் கமாண்டராக ஜெனரல் ரெஜினால்டு டையரும் பதவி வகித்தனர். அவர்கள் இருவரும் தங்களுடைய அதிகாரங்களைப் பயன்படுத்தி ஆர்ப்பாட்டக்காரர்களுக்குப் பாடம் புகட்ட விரும்பினர். ஆர்ப்பாட்டக்காரர்கள் கூடியிருந்த இடத்துக்கு ஒரே ஒரு குறுகிய வாயில் மட்டுமே இருந்தது. அங்கு சிக்கிக்கொண்ட மக்களைக் குறிவைத்து எந்திரத் துப்பாக்கிகளில் குண்டுகள் தீரும் வரை சுடுமாறு ஜெனரல் டையர் உத்தரவிட்டார். அரசு தகவல்களின் படி உயிரிழப்புகள் 379 என்ற எண்ணிக்கையில் இருந்தபோதிலும் உண்மையில் ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் இறந்திருக்கக்கூடும். ராணுவச் சட்டம் பஞ்சாப் முழுவதும் அமல்படுத்தப்பட்ட நிலையில் மக்கள் சொல்லமுடியாத அளவுக்கு துயரங்களை சந்தித்தனர்.

இந்தக் கொடுமைகளைக் கண்டு நாடு முழுவதும் கொந்தளித்தது. பம்பாய், கல்கத்தா, டெல்லி, லாகூர் ஆகிய இடங்களில் ரௌலட் சட்டத்துக்கு எதிராகப் பெரிய அளவில் போராட்டங்கள் நடந்த நிலையில் அங்கு ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டன. பல நகரங்கள் மற்றும் மாநகரங்களில் வன்முறை நிகழ்வுகள் அரங்கேறின. இந்த கொடுமைகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்து இரவீந்திரநாத் தாகூர் உட்பட பல பிரபலங்கள் தங்களுக்கு வழங்கப்பட்ட பட்டங்களைத் துறந்தனர்.

ஜாலியன் வாலாபாக் படுகொலை

ஜாலியன் வாலாபாக் படுகொலைக்குப் பிறகு இரவீந்திரநாத் தாகூர் தனது அரசப் பட்டத்தை உடனடியாகத் துறந்தார். 1919 ஆம் ஆண்டு மே மாதம் 31 ஆம் தேதி அரசப்பிரதிநிதிக்கு (வைசிராய்) அனுப்பிய எதிர்ப்புக் கடிதத்தில் தாகூர் இவ்வாறு எழுதினார். "இணக்கமற்ற சூழல் நிலவும் வேளையில் அவமானத்தின் சின்னமாக இந்த மதிப்புக்குரிய பட்டம் திகழ்கிறது. மனிதர்களாகக் கூடக் கருத முடியாத நிலையில் மதிப்பிழந்து போன எனது நாட்டு மக்களுக்கு ஆதரவாக எனது தரப்பில் நான் மேற்கொள்ளும் செயலாக, எனக்கு வழங்கப்பட்ட அனைத்து சிறப்புப் பட்டங்களையும் திரும்ப ஒப்படைக்கிறேன்."

கிலாபத், பஞ்சாப் கொடுமை ஆகிய இரண்டு காரணங்களால் ஒத்துழையாமை இயக்கம் தொடங்கப்பட்டது. துருக்கி சுல்தான் மற்றும் இசுலாமிய புனிதத் தலங்கள் தொடர்பானது

12th_History_TM_Unit_4.indd 52 21-12-2022 18:56:37

கிலாபத் இயக்கம். ஜாலியன் வாலாபாக்கில் ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டு படுகொலை செய்யப்பட்ட நிகழ்வு பஞ்சாப் கொடுமை எனப்பட்டது. பிரிட்டிஷ் ஆட்சியாளர்களின் உறுதிமொழிகளுக்கு எதிராக இசுலாமிய புனிதத் தலங்களின் கட்டுப்பாட்டை இசுலாம் அல்லாத சக்திகள் தங்கள் கட்டுப்பாட்டில் எடுத்துக்கொண்ட நிலையில் ஜாலியன் வாலாபாக்கில் நடத்தப்பட்ட கொடுமைகளுக்குக் காரணமான ரெஜினால்டு டையர், மைக்கேல் ஓ டையர் இருவரையும் பிரிட்டிஷ் நீதிமன்றங்கள் குற்றங்களில் இருந்து விடுதலை செய்துவிட்டது.

காலசா ஆதரவற்றோர் காப்பகத்தில் வளர்க்கப்பட்ட சீக்கிய பதின்பருவ இளைஞரான உதம் சிங் இந்த நிகழ்வை தனது கண்களால் கண்டார். ஜாலியன் வாலாபாக் படுகொலைகளுக்குப் பழி தீர்க்கும் விதமாக 1940 மார்ச் 30இல் லண்டனின் காக்ஸ்டன் அரங்கில் மைக்கேல் ஓ டையரை உதம் சிங் படுகொலை செய்தார். லண்டனின் பெண்டோன்வில்லே சிறையில் உதம் சிங் தூக்கிலிடப்பட்டார்.

உதம் சிங்

இந்து – முஸ்லிம் ஒற்றுமை குறித்து அக்கறை கொண்ட காந்தியடிகளும் காங்கிரசும் பிரிட்டிஷ் ஆட்சியாளர்களால் ஏமாற்றப்பட்டதாக உணரப்பட்ட முஸ்லிம் தோழர்களுக்குத் துணையாக நின்றனர். மௌலானா சௌகத் அலி மற்றும் முகமது அலி என்ற சகோதரர்கள் மௌலானா அபுல் கலாம் ஆசாத் உடன் இணைந்து கிலாபத் இயக்கத்தின் முக்கியத் தலைவர்களாக விளங்கினர்.



அலி சகோதரர்கள்

இ) ஒத்துழையாமை இயக்கத்தின் தொடக்கம்

கிலாபத் மாநாட்டில், காந்தியடிகளின் வற்புறுத்தலின் பேரில் 1920 ஆகஸ்டு 31 முதல் ஒத்துழையாமை இயக்கத்தைத் தொடங்க முடிவு செய்யப்பட்டது. அரசு கல்வி நிறுவனங்கள் மற்றும் அரசு நீதிமன்றங்களைப் புறக்கணிக்கும் திட்டத்தை அலகாபாத்தில் கூடிய அனைத்துக் கட்சிக் கூட்டம் முடிவு செய்தது. 1920ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் கல்கத்தாவில் நடந்த காங்கிரஸ் சிறப்பு அமர்வில் காலனி ஆதிக்க அரசுடன் ஒத்துழையாமையைக் கடைபிடிப்பது என்ற காந்தியடிகளின் யோசனைகளை ஏற்றுக்கொள்ளும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. கிலாபத் மற்றும் பஞ்சாப் குறைகள் சரிசெய்யப்பட்டு தன்னாட்சி அரசு நிறுவப்படும் வரை இந்த ஒத்துழையாமையைக் கடைபிடிக்க உறுதி ஏற்கப்பட்டது.

ஒத்துழையாமை இயக்கத்தில் காந்தியடிகள்

பள்ளிகள், கல்லூரிகள், நீதிமன்றங்கள், அரசு அலுவலகங்கள், சட்டப்பேரவைகள், அந்நியப் பொருட்களைப் புறக்கணித்தல், அரசு வழங்கிய பட்டங்களையும் விருதுகளையும் திரும்ப ஒப்படைப்பது ஆகியன ஒத்துழையாமை இயக்கத்தில் சேர்க்கப்பட்டன. மாற்றாக, தேசியப்பள்ளிகள், பஞ்சாயத்துகள் ஆகியன அமைக்கப்பட்டு சுதேசிப் பொருட்கள் உற்பத்தி செய்யப்பட்டு பயன்படுத்தப்படும். வரிகொடா இயக்கம், சட்டமறுப்பு இயக்கம் போன்ற பல இயக்கங்களைப் பின்னர் இந்தப் போராட்டத்தில் இணைக்கவும் முடிவு செய்யப்பட்டது. 1920ஆம் ஆண்டு நாக்பூரில் நிகழ்ந்த காங்கிரஸ் அமர்வில் முந்தைய தீர்மானங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டன. மொழிசார்ந்த மாகாண காங்கிரஸ் கமிட்டிகளை அங்கீகரித்து அமைப்பதற்கு வகை செய்யும் மற்றொரு முக்கியத் தீர்மானம் நாக்பூர் மாநாட்டில் நிறைவேற்றப்பட்டது. இதனால் பெரும் எண்ணிக்கையிலானப் பணியாளர்கள் இந்த இயக்கத்தில் சேர்ந்தனர். காங்கிரஸின் அடிப்படையை விரிவாக்கும் நடவடிக்கையாகப் பணியாளர்கள் கிராமங்களுக்குச் சென்று 4 அணா (25 பைசா) என்கிற குறைவான கட்டணத்தில் கிராமத்தினரைக் காங்கிரஸில் சேர்க்கவேண்டும். இதனால் காங்கிரஸின் ஒட்டுமொத்த செயல்பாடுகள் மாற்றம் பெற்றன. நாட்டின் பெயரில் ஒன்றுசேர்ந்த மக்கள் தேசியப் போராட்டத்தில் பங்கேற்றனர். ஆனால் மக்கள் போராட்டத்தை எதிர்த்துப்

12th_History_TM_Unit_4.indd 53 21-12-2022 18:56:38

பழைமைவாதிகள் பலர் காங்கிரஸ் கட்சியில் இருந்து விலக வழி அமைத்தது. மேல் குடிக்கானது என்ற அடையாளத்தைப் பெற்றிருந்த காங்கிரஸ் கட்சி மெதுமெதுவே உண்மையான தேசிய அமைப்பு என்ற தோற்றத்தில் மக்கள் அமைப்பாக காந்தியடிகளின் தலைமையிலான காங்கிரஸ் மாறியது.

ஈ) காந்தியடிகளின் தலைமை ஏற்படுத்தியத் தாக்கம்

உள்ளூர் மக்களால் ஆயிரக்கணக்கான பள்ளிகள், நூற்றுக்கணக்கான கல்லூரிகள் மற்றும் வித்யாபீடங்கள் நிறுவப்பட்டன. பல முன்னணி வழக்கறிஞர்கள் தங்கள் தொழிலைக் கைவிட்டனர். ஆயிரக்கணக்கான பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்கள் அரசு நிறுவனங்களை விட்டு வெளியேறினர். தேசத்துரோக குற்றம் சாட்டப்பட்ட அலி சகோதரர்கள் கைது செய்யப்பட்டு சிறையிலடைக்கப்பட்டனர். சட்டமறுப்பு இயக்கத்தைத் தொடங்குமாறு மக்களுக்கு அந்தந்த பிரதேச காங்கிரஸ் கமிட்டிகள் அழைப்பு விடுத்தன. அரசு வழக்கம் போல் அடக்குமுறையைக் கையாண்டது. பாரபட்சமில்லாமல் கைது செய்யப்பட்டத் தொண்டர்கள் சிறையில் அடைக்கப்பட்டார்கள். இந்தியாவின் பல நகரங்களுக்கு 1921இல் வேல்ஸ் இளவரசர் மேற்கொண்ட பயணமும் புறக்கணிக்கப்பட்டது. இந்திய மக்களின் விசுவாச உணர்வை வேல்ஸ் இளவரசரின் பயணம் தூண்டும் என்று எதிர்பார்த்த காலனி ஆதிக்க அரசின் கணக்கு தவறாகப் போனது. நாடு முழுவதும் தொழிலாளர்களும் விவசாயிகளும் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டனர். இந்தியர்கள் ஒத்துழையாமை இயக்கத்தை வன்முறையற்ற வகையில் பின்பற்றினால் ஓராண்டுக்குள் சுயராஜ்யத்தைப் பெற்றுத்தருவதாக காந்தியடிகள் உறுதி கூறினார்.

போராட்டத்தின் இந்தக் கட்டத்தில் தென்னிந்தியா முன்னேறிச் சென்றது. ஆந்திர விவசாயிகள் ஜமீன்தார்களுக்கு வழங்கவேண்டிய வரிகளை நிறுத்திவைத்தனர். சிராலா–பெராலாப் பகுதியைச் சேர்ந்த அனைத்து மக்களும் வரி செலுத்த மறுத்துக் கூட்டம் கூட்டமாக நகரங்களைக் காலி செய்து வெளியேறினர். நூற்றுக்கணக்கான கிராம பட்டேல்களும் ஷான்போக்களும் தங்களது பதவியை ராஜினாமா செய்தனர். சி. இராஜாஜி, எஸ். சத்தியமூர்த்தி, தந்தை ஈ.வெ.ரா. பெரியார் ஆகிய தலைவர்கள் தலைமையில் தமிழ்நாட்டில் ஒத்துழையாமை இயக்கம் நடத்தப்பட்டது. கேரளாவில் ஜென்மி–க்களுக்கு எதிராக விவசாயிகள் போராட்டங்களை நடத்தினர்.

உத்தரப்பிரதேசம், வங்காளம், அசாம், பீகார், ஒரிசா (ஒடிசா) ஆகியவற்றின் பல பகுதிகளில் இருந்த கீழ் வகுப்பு மக்கள் இந்த போராட்டங்கள் காரணமாக தீவிரமாக அவமதிக்கப்பட்டதாக இந்திய அரசுத்துறைச் செயலாளருக்கு எழுதியக் கடிதத்தில் அரசப்பிரதிநிதி (வைசிராய்) ஒப்புக்கொண்டிருந்தார். இந்த இயக்கத்தின் தீவிரம் கண்டு ஊக்கம்பெற்ற காங்கிரஸ் தனது சிறப்பு மாநாட்டில் இவ்வியக்கத்தை இன்னும் தீவிரமாக்குவது பற்றி உறுதியுடன் கூறியது. அரசு ஏழு நாட்களுக்குள் பத்திரிக்கைச் சுதந்திரத்தை மீட்டு சிறைக்கைதிகளை விடுதலை செய்யாவிட்டால் பர்தோலியில் வரிகொடா பிரச்சாரங்கள் உட்பட சட்டமறுப்பு இயக்கத்தை தொடங்கப்போவதாக காந்தியடிகள் பிப்ரவரி 1922இல் அறிவித்தார்.

உ) சௌரி சௌரா சம்பவம் மற்றும் ஒத்துழையாமை இயக்கத்தைத் திரும்பப்பெறுதல்

நாடு விடுதலை அடைந்து சுயராஜ்யம் கிடைத்துவிடும் என்று பொதுமக்களும் தேசியவாதத் தொண்டர்களும் அதிக ஊக்கம் கொண்டு போராட்டத்தில் தீவிரமாகப் பங்கேற்றனர். காடுகளில் வசித்த பழங்குடிகள் உட்பட அனைத்து வகுப்பு மக்களையும் இது பாதித்ததோடு அவர்களை ஈர்க்கவும் செய்தது. கலவரங்கள் மற்றும் மோசமான வன்முறைகளும் நாட்டில் நிகழ்ந்தன. மலபார் மற்றும் ஆந்திராவில் இரண்டு வன்முறைக் கிளர்ச்சிகள் நடந்தன. கரையோர ஆந்திராவின் ராம்பா பகுதியில் அல்லூரி சீதாராம ராஜு தலைமையில் பழங்குடியினர் கிளர்ச்சி செய்தனர். மலபாரில் முஸ்லிம் (மாப்பிள்ளை) விவசாயிகள் ஆயுதமேந்தி உயர்வகுப்பு நிலப்பிரபுக்கள் மற்றும் பிரிட்டிஷாருக்கு எதிராகக் கிளர்ச்சியில் ஈடுபட்டனர்.

உத்தரப்பிரதேசத்தில் கோரக்பூர் மாவட்டத்தில் சௌரி சௌரா என்ற கிராமத்தில் மதுக் கடைகள் மற்றும் உள்ளூர் சந்தையில் அதிக விலைக்குப் பொருட்கள் விற்கப்படுவதைக் கண்டித்து ஒரு தன்னார்வக் குழு ஆர்ப்பாட்டங்களை நடத்தியது. 1922 பிப்ரவரி 5இல் 3,000 நபர்களுடன் நடந்த ஒரு காங்கிரஸ் கட்சிப் பேரணி மீது போலீசார் நடத்திய துப்பாக்கிச் சூட்டால் ஆத்திரமடைந்த ஆர்ப்பாட்டக் குழுவினர் காவல் நிலையத்தைக் குறிவைத்து தாக்குதல் நடத்தியதோடு அதை எரித்ததில் 22 போலீசார் உயிரிழந்தனர். இந்த நிகழ்வை அடுத்து காந்தியடிகள் ஒத்துழையாமை இயக்கத்தைத் திரும்பப்பெறுவதாக அறிவித்தார்.

தேசியவாதத் தொண்டர்களுக்கு ஏமாற்றம் தரும் விதமாக பர்தோலியில் இந்த முடிவை காங்கிரஸ் செயற்குழு ஏற்றுக்கொண்டது. இந்த முடிவை இளம் தொண்டர்கள் எதிர்த்த நிலையில் காந்தியடிகள் மீது நம்பிக்கை கொண்ட இதரத்

12th_History_TM_Unit_4.indd 54 06-01-2023 09:40:57

தொண்டர்கள் இது ஒரு தந்திரமான முடிவு என்று கருதினர். கைது செய்யப்பட்டு ஆறு ஆண்டுகள் சிறைத்தண்டனை பெற்ற காந்தியடிகள் பற்றி ஜவஹர்லால் நேருவும் சுபாஷ் சந்திர போஸும் கடுமையாக விமர்சனம் செய்தனர். இப்படியாக ஒத்துழையாமை இயக்கம் முடிவுக்கு வந்தது.

துருக்கி மக்கள் முஸ்தபா கமால் பாட்சா தலைமையில் கிளர்ந்தெழுந்து சுல்தானிடம் இருந்து அரசியல் அதிகாரத்தைப் பறித்து கலிபா என்ற நடைமுறையை ரத்து செய்துவிட்டு, மதமும் அரசியலும் இணைந்து பயணிக்க முடியாது என்று அறிவித்த நிலையில் கிலாபத் இயக்கம் தேவையற்றுப் போனது.

4.5 சுயராஜ்ய கட்சி மற்றும் அதன் செயல்பாடுகள்

சித்தரஞ்சன் தாஸ்

மோதிலால் நேரு

ஒத்துழையாமை இயக்கத்தைத் திரும்பப் பெற்ற பிறகு, அடுத்து என்ன என்ற கேள்வி எழுந்தது. சித்தரஞ்சன் தாஸ், மோதிலால் நேரு ஆகியோர் புதிய வழியில் செயல்பாட்டை அறிவித்தனர். தீவிர அரசியலுக்குத் திரும்பவேண்டும் என்றும் அதில் தேர்தல் அரசியலில் ஈடுபடுவது அடக்கம் என்றும் அவர்கள் விரும்பினார்கள். சீர்திருத்தம் பெற்ற சட்டப்பேரவையைக் கைப்பற்றி தேசியவாத உணர்வூட்டி அதன் செயல்பாடுகளை முடக்கும் ஆற்றலைத் தேசியவாதிகள் வெளிப்படுத்தினர். சுயராஜ்யம் வேண்டுவோர் மற்றும் மாற்றம் வேண்டுவோர் (Pro–changers) என்று இந்தக் குழு அழைக்கப்பட்டது. தமிழ்நாட்டில் சத்தியமூர்த்தி இந்தக் குழுவில் இணைந்தார்.

சத்தியமூர்த்தி

சட்டப்பேரவை நுழைவை எதிர்த்த மற்றொரு குழு காந்தியடிகளின் வழியைப் பின்பற்றி மக்களை ஒன்றுதிரட்டும் பணிகளில் ஆர்வம் காட்டியது. இந்தக் குழுவுக்கு இராஜாஜி, வல்லபாய் பட்டேல், இராஜேந்திர பிரசாத் ஆகியோர் தலைமை ஏற்றனர். எந்த மாற்றமும் தேவையில்லை என்று இந்த அணி வலியுறுத்தியது. இவர்கள் மாற்றம் விரும்பாதோர் (No–changers) என்று அழைக்கப்பட்டனர். தேர்தல் அரசியல் தேசியவாதிகளின் கவனத்தைத் திசை திருப்பும் என்றும் மக்களை ஒன்றுதிரட்டும் பணிகளில் இருந்து அவர்கள் விலகிச்செல்ல வைத்துவிடும் என்றும் அவர்கள் வாதிட்டனர். நூல் நூற்பது, மது அருந்தாமை, இந்து – முஸ்லிம் ஒற்றுமை, தீண்டாமையை ஒழிப்பது, ஊரகப்பகுதி மக்களை ஒன்று திரட்டி மக்கள் இயக்கங்களில் பங்கேற்கச் செய்வது ஆகிய காந்தியடிகளின் ஆக்கப்பணிகளைத் தொடர அவர்கள் விருப்பம் தெரிவித்தனர். மாற்றம் வேண்டுவோர் சுயராஜ்ய கட்சியை காங்கிரஸின் ஒரு பகுதியாகத் தொடங்கினார்கள். இரண்டு குழுக்களுக்கும் இடையே சமாதானம் ஏற்படுத்தப்பட்டு காங்கிரஸ் திட்டங்களில் இரண்டு குழுக்களும் ஈடுபடுத்தப்பட்டு காந்தியடிகள் ஆக்கப்பணிக்கு ஆதரவு தெரிவித்த நிலையில், அவரது தலைமையின் கீழ் ஒரு குழுவுக்கு மற்றொரு குழுவின் செயல்பாடுகள் துணை செய்யவேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டது.

மத்திய சட்டப்பேரவைக்கு நடந்த தேர்தல்களில் சுயராஜ்ய கட்சி சிறப்பாகப் பங்கேற்று 101 இடங்களில் 42 இடங்களைக் கைப்பற்றியது. மற்ற உறுப்பினர்களின் ஆதரவோடு காலனி ஆதிக்க ஆட்சியில் கொண்டுவரப்பட்ட மக்கள் விரோதச் சட்டங்களைத் தீவிரமாக எதிர்க்க முடிந்தது. 1919ஆம் ஆண்டுச் சட்டத்தின் குறைபாடுகள் குறித்து தெரிவிப்பதிலும் வெற்றி அடைந்தனர். காலம் செல்லச்செல்ல அவர்களுடைய முயற்சிகளும் ஊக்கமும் குறைந்து சுயநினைவுடனோ அல்லது சுயநினைவின்றியோ அரசு நியமித்த பல குழுக்களில் உறுப்பினர்களாக சேர்க்கப்பட்டதை ஏற்றனர்.

தேசிய அளவில் மக்கள் போராட்டம் நடைபெறாத நிலையில் பிரிவினைவாத சிந்தனைப்போக்கு அவர்களை ஆட்டிப்படைத்தது. அடிப்படைவாத சக்திகள் இடத்தை ஆக்ரமிக்கத் தொடர்ச்சியாகப் பல வகுப்புக்கலவரங்கள் நடந்தன. சுயராஜ்ய கட்சியும் பிரிவினைவாதத்தால் பாதிப்படைந்தது. இந்து நலன்களைப் பாதுகாக்கும் நோக்கில் அரசுக்கு ஒத்துழைக்கப் போவதாக ஒரு குழுவினர் ஆதரவாளர்கள் என்ற பெயரில் செயல்பட்டனர். முஸ்லிம் அடிப்படைவாதிகளும் தேசியப் போராட்டத்தில் தங்களுக்குக் கிடைத்த இடத்தைப் பிடித்துக்கொண்டு மதவாத உணர்வுகளைப் பரப்பத் தொடங்கினர்.

12th_History_TM_Unit_4.indd 55 21-12-2022 18:56:38

இடதுசாரித் தீவிரத்தன்மை கொண்டவர்களின் செயல்பாடுகளால் காந்தியடிகள் வேதனை அடைந்தார். மதவாதப் போக்கு அதிகரிப்பதைக் கட்டுப்படுத்தும் நோக்கில் காந்தியடிகள் 21 நாட்கள் உண்ணாவிரதத்தை மேற்கொண்டார்.

இடதுசாரி இயக்கம்

இதனிடையே சோஷலிசக் கருத்துகளும் அதன் ஆர்வலர்களும் தங்களுக்கான களத்தை அமைத்து விவசாயிகள் மற்றும் தொழிலாளர்களிடையே செயல்பட ஆரம்பித்தனர். இடதுசாரிகள் தொழிலாளர் மற்றும் விவசாய இயக்கங்களைத் தொடங்கினார்கள். காலனி ஆதிக்கவாதம் மற்றும் முதலாளித்துவத்தை விமர்சனம் செய்யும் மார்க்சீய சித்தாந்தம் வேரூன்றியது. தொழிற்சங்கங்கள் தவிர மாணவர்களையும் இளைஞர்களையும் ஒருங்கிணைப்பதில் அது பெரும் பங்காற்றியது. இடதுசாரி சித்தாந்தத்தைப் பரப்புவதில் ஜவஹர்லால் நேரு மற்றும் சுபாஷ் சந்திரபோஸ் ஆகியோர் இடதுசாரி சித்தாந்தங்களையும் பரப்புவதற்கு தங்கள் பங்களிப்பை நல்கினார்கள். காலனி ஆதிக்க சுரண்டல் மற்றும் உள்நாட்டில் முதலாளிகள் நடத்திய சுரண்டல் இரண்டுக்கும் எதிராகச் சண்டையிடவேண்டும் என்று அவர்கள் வாதிட்டனர். எஸ். ஏ. டாங்கே, எம். என். ராய், முஜாஃபர் அகமது ஆகியோர் கட்சியின் மூத்தத் தலைவரான தமிழ்நாட்டின் சிங்காரவேலர் உள்ளிட்ட தலைவர்களுடன் சேர்ந்து விவசாயிகள் மற்றும் தொழிலாளர் கட்சிகளைத் தொடங்கி வைத்தனர். கம்யூனிச சோஷலிசவாதிகள் மற்றும் புரட்சியாளர்களுக்கு எதிராகக் கடும் நடவடிக்கைகளை எடுத்த அரசு அவர்கள் மீது சதித்திட்ட வழக்குகளைத் தொடர்ச்சியாக கான்பூர், மீரட், காக்கோரி ஆகிய இடங்களில் பதிவு செய்தது.

பகத் சிங்

ராஜகுரு

இந்தக் காலகட்டத்தில் பகத் சிங், சந்திரசேகர் ஆசாத், ராஜகுரு, சுகதேவ் ஆகியோர் முக்கியப் பணியாற்றினர். நவஜவான் பாரத் சபை, இந்துஸ்தான் குடியரசு அமைப்பு ஆகியன தொடங்கப்பட்டன. ஆயிரக்கணக்கான இளம் ஆடவர் மற்றும் பெண்கள் காலனி ஆதிக்க ஆட்சிக்கு எதிரானவர்களாகவும் புரட்சியாளர்களாகவும் மாறினார்கள். இந்தியா முழுவதும் இளைஞர்கள் மற்றும் மாணவர் மாநாடுகள் நடத்தப்பட்டன. இதனிடையே ராம்பிரசாத் பிஸ்மில், அஷ்ஃபக்குல்லா ஆகிய இருவருக்கும் மரண தண்டனையும், வேறு 17 பேருக்கு நீண்டகால சிறைத் தண்டனையும் காக்கோரி சதித்திட்ட வழக்கில் வழங்கப்பட்டன. பகத் சிங், சந்திரசேகர் ஆசாத், ராஜகுரு ஆகியோர் லாலா லஜ்பத் ராய் கொல்லப்பட்டது மற்றும் காவல்துறை அராஜகத்தை எதிர்த்து, பிரிட்டிஷ் காவல்துறை அதிகாரி சாண்டர்ஸை கொன்றுவிட்டனர். இந்த அதிகாரி லாகூரில் நடத்தப்பட்ட தடியடிக்குத் தலைமை தாங்கியவர் என்பது குறிப்பிடத்தக்கது. மத்திய சட்டப்பேரவை அரங்குக்குள் 1929 ஏப்ரல் 8இல் பகத் சிங்கும், படுகேஷ்வர் தத்தும் வெடிகுண்டு ஒன்றை எறிந்தனர். 1929இல் மீரட் சதித்திட்ட வழக்கு பதியப்பட்டு மூன்று டஜன் கம்யூனிச தலைவர்கள் நீண்ட கால சிறைத் தண்டனைகளைப் பெற்றனர். அடுத்தப் பாடத்தில் இவை பற்றிய விவரங்கள் விரிவாக ஆராயப்பட்டுள்ளன.

சுகதேவ்

சந்திரசேகர் ஆசாத்

4.6 சைமன் குழு – நேரு அறிக்கை– லாகூர் காங்கிரஸ்

1929–30ஆம் ஆண்டில் அரசியல்சாசன சீர்திருத்தங்களின் முதல் தவணையை பிரிட்டிஷார் பரிசீலித்து அறிவிக்க வேண்டியிருந்தது. இதன் ஆயத்தத்தில் சட்ட உருவாக்கக் குழுவான சைமன் குழு நிறுவப்பட்டது. அதன் தலைவரான சைமனின் பெயரில் இந்தக் குழு அமைந்தது. வெள்ளையர்கள் மட்டுமே இந்தக் குழுவில் உறுப்பினர்களாக இருந்தனர். அது இந்தியர்களுக்கு அவமானமாகக் கருதப்பட்டது. 1927இல் மதராஸில் நடந்த காங்கிரஸ் வருடாந்திர மாநாட்டில் இந்தக் குழுவை புறக்கணிக்க முடிவு செய்யப்பட்டது. இந்து மகா சபையும் முஸ்லிம் லீக் அமைப்பும் இந்த முடிவுக்கு ஆதரவு தெரிவித்தன. இந்தியா தொடர்பான காலனி ஆதிக்க மனப்பான்மைக்கு சவால் விடுக்க பெரும்பான்மையான கட்சிகள்

12th_History_TM_Unit_4.indd 56 21-12-2022 18:56:38

ஒப்புக்கொண்டன. இதன் முடிவாக மோதிலால் நேரு அறிக்கை வெளியானது. எனினும் டிசம்பர் 1928இல் கல்கத்தாவில் கூடிய அனைத்துக் கட்சிகளும் வகுப்புவாதப் பிரதிநிதித்துவம் என்ற விஷயத்தை ஏற்கத் தவறின.

சைமனே திரும்பிச் செல்

சைமனே திரும்பிச் செல் ஆர்ப்பாட்டம்

சைமன் குழுவுக்கு எதிரான மிகப்பெரிய ஆர்ப்பாட்டம்தான் முக்கிய திருப்பமாக அமைந்தது. சைமன் குழு எங்குச் சென்றாலும் எப்போது சென்றாலும் ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்பட்டன. சைமனே திரும்பிப் போ முழக்கம் காதைப் பிளந்தது. போராட்டத்தின் அடுத்த கட்டத்துக்கு மக்கள் தயாராகி வருவதை இந்தப் போராட்டம் எடுத்துக்காட்டியது. டிசம்பர் 1928இல் கல்கத்தாவில் கூடிய காங்கிரஸ் மாநாட்டின்போது, இடதுசாரிகளை சாந்தப்படுத்தும் முயற்சியாக 1929இல் நடக்கவிருக்கும் அடுத்த மாநாட்டிற்கு ஜவஹர்லால் நேரு தலைவராக இருப்பார் என்று அறிவிக்கப்பட்டது. 1928இல் காங்கிரஸ் மாநாட்டுக்குத் தலைமை வகித்த மோதிலால் நேருவைத் தொடர்ந்து அவரது மகன் ஜவஹர்லால் நேரு 1929இல் நடந்த காங்கிரஸ் மாநாட்டுக்குத் தலைமை வகித்தார்.

லாகூர் காங்கிரஸ் மாநாடு–பூரண சுயராஜ்ஜியம்

இந்திய விடுதலை மற்றும் காங்கிரஸ் வரலாற்றில் காங்கிரஸ் கட்சியின் லாகூர் மாநாடு சிறப்பு வாய்ந்ததாகும். முழுமையான சுதந்திரம் அடைவது என்பதைக் குறிக்கோளாகக் காங்கிரஸ் கட்சி இம்மாநாட்டில் அறிவித்தது. 1929 டிசம்பர் 31இல் லாகூரில் மூவர்ணக் கொடி ஏற்றப்பட்டது. ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி 26ஆம் நாளை விடுதலை நாளாகக் கொண்டாடவும் முடிவு செய்யப்பட்டது. சட்டமறுப்பு இயக்கம் காந்தியடிகளின் தலைமையில் தொடங்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டது.

தண்டி யாத்திரை

இயக்கத்தின் ஒரு பகுதியாக காந்தியடிகள் தண்டி யாத்திரையை அறிவித்தார். அனைவருக்கும் அவசியமான பொருளான உப்பு மீது அநியாய வரி விதிக்கப்பட்டதை எதிர்த்து நடந்த ஆர்ப்பாட்டம் இதுவாகும். காலனி ஆதிக்க அரசு உப்பு மீது வரி விதித்ததோடு அதன் மீது ஆளுமை செலுத்திவந்தது. காந்தியடிகளின் சபர்மதி ஆசிரமத்தில் இருந்து குஜராத் கடற்கரையோரம் உள்ள தண்டி வரை 375 கிலோமீட்டர் தொலைவுக்குத் தண்டி யாத்திரை நடைபெற இருந்தது. அனைத்துப் பகுதிகளின் சமூகக் குழுக்களைச் சேர்ந்த 78 தொண்டர்களுடன் காலனி ஆதிக்க அரசுக்கு முன்னரே அறிவித்த பிறகு, காந்தியடிகள் யாத்திரையாக நடந்து தண்டியை 25 ஆவது நாளில் அதாவது 1930 ஏப்ரல் 6இல் சென்று அடைந்தார். இந்த நடைபயணத்தின் முழுமையான காலத்திலும் முழு உலகத்தின் கவனத்தை ஈர்க்கும் வகையில் பத்திரிக்கைகள் இது பற்றிய செய்திகளை வெளியிட்டிருந்தன. ஒரு பிடி உப்பைக் கையில் அள்ளி உப்புக்கு வரி செலுத்தும் சட்டத்தைத் தவிடுபொடியாக்கினார். அடக்குமுறைச் சார்ந்த காலனி ஆதிக்க அரசு மற்றும் அதன் அநியாய சட்டங்களுக்கு எதிராக இந்தியர்கள் ஒன்றுதிரண்டு அவற்றை ஏற்க மறுப்பதன் அடையாளமாக இந்த நிகழ்வு அமைந்தது.

காந்தியடிகளின் உப்புச் சத்தியாகிரக தண்டி யாத்திரை

வேதாரண்யம் உப்புச் சத்தியாகிரகம்

தமிழ்நாட்டில் இராஜாஜி தலைமையில் உப்பு சத்தியாகிரக யாத்திரை வேதாரண்யம் நோக்கி நடந்தது. திருச்சிராப்பள்ளியில் தொடங்கி 150 மைல்கள் தொலைவில் தஞ்சாவூர் மாவட்டத்தின் கரையோர கிராமமான வேதாரண்யம் வரை இந்த நடைபயணம் மேற்கொள்ளப்பட்டது. தமிழ்நாடு காங்கிரஸ் கட்சியின் தலைவராக அப்போது தான் இராஜாஜி

12th_History_TM_Unit_4.indd 57 21-12-2022 18:56:39



12th_History_TM_Unit_4.indd 58 21-12-2022 18:56:39

தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தார். 1930 ஏப்ரல் 13இல் ஆரம்பித்த இந்த நடைபயணம் ஏப்ரல் 28இல் முடிவடைந்தது.

நடைபயணத்தில் ஈடுபடுவோருக்கு அடைக்கலம் தந்தால் கடும் நடவடிக்கைகளைச் சந்திக்க நேரிடும் என்று தஞ்சாவூர் மாவட்ட ஆட்சித் தலைவராக இருந்த ஜெ.ஏ. தார்ன் எச்சரிக்கை விடுத்தார். ஆனாலும் சத்தியாகிரகத்தில் ஈடுபட்ட தொண்டர்களை மக்கள் இன்முகத்துடன் வரவேற்று உண்ண உணவும் இளைப்பாற இடமும் கொடுத்தனர். யாரெல்லாம் உணவும் உறைவிடமும் கொடுக்க தைரியத்துடன் முனைந்தார்களோ அவர்கள் மீது கடும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. கும்பகோணம், செம்மங்குடி, திருத்துறைப்பூண்டி, ஆகிய இடங்கள் வழியாக சென்ற சத்தியாகிரகத் தொண்டர்களுக்கு நல்ல வரவேற்பு அளிக்கப்பட்டது.

உப்புச் சத்தியாகிரகம் (வேதாரண்யம்)

வேதாரண்யம் இயக்கம் உண்மையில் தென்னிந்திய மக்களைத் தட்டியெழுப்பிக் காலனி ஆதிக்க ஆட்சிக்கு எதிராக விழிப்புணர்வை ஊட்டி போராட்டத்தில் பங்கேற்கத் தூண்டியது.

4.7 வட்ட மேசை மாநாடுகள்

சைமன் குழு தனது அறிக்கையை அரசிடம் சமர்ப்பித்தது. காங்கிரஸ், இந்து மகா சபை, முஸ்லிம் லீக் ஆகியன அதனைப் புறக்கணித்தன. இந்த அறிக்கையை ஏற்பதற்கு பிரிட்டிஷ் ஆட்சியாளர்கள் முயன்றனர். ஆனால் இந்தியத் தலைவர்களுடன் ஆலோசனைகள் இல்லாத நிலையில் இது பயனற்றுப் போகும். இந்த அறிக்கையைச் சட்டப்பூர்வமாகவும் நம்பிக்கைக்கு உரியதாகவும் ஆக்கும் நோக்கில் இந்தியக் கருத்தை உருவாக்கும் வல்லமை உடைய பலதரப்பட்ட தலைவர்களுடன் லண்டனில் ஒரு வட்டமேசை மாநாட்டைக் கூட்டவிருப்பதாக அரசு அறிவித்தது. ஆனால் சுதந்திரம் பெற்றே ஆக வேண்டும் என்ற கருத்தில் இந்த வட்ட மேசை மாநாட்டை புறக்கணிக்கப் போவதாகக் காங்கிரஸ் அறிவித்தது. காங்கிரஸ் பங்கேற்காவிட்டால் மாநாட்டை அரசு நடத்துவது பயனற்றுப்போகும் ஒரு நடவடிக்கை என்று அனைவரும் அறிந்திருந்தனர்.

காங்கிரசுடன் பேச்சுகள் தொடங்கின. 1931 மார்ச் 5இல் காந்தி–இர்வின் ஒப்பந்தம் கையெழுத்தானது. இந்தியாவில் சட்டமறுப்பு இயக்கத்தின் முடிவைக் குறிப்பதாக அது அமைந்தது. உலகம் தழுவிய விளம்பரத்தை இந்த இயக்கம் தந்தது. அரசப்பிரதிநிதி (வைசிராய்) இர்வின் இதனை முடித்து வைக்க வழி காண விரும்பினார். ஜனவரி 1931இல் காந்தியடிகள் சிறையில் இருந்து விடுதலை செய்யப்பட்டார். காந்தியடிகளும் இர்வின் பிரபுவும் ஒப்பந்தத்தின் அம்சங்கள் குறித்துப் பேச்சுவார்த்தை நடத்தினர். சத்தியாகிரக பிரச்சாரத்தைக் கைவிட காந்தியடிகள் உறுதி ஏற்றார். இந்த இயக்கத்தின்போது சிறையில் அடைக்கப்பட்ட பத்தாயிரக்கணக்கான இந்தியர்களை விடுதலை செய்ய இர்வின் ஒப்புக்கொண்டார்.

இரண்டாம் வட்ட மேசை மாநாட்டில் காந்தியடிகளின் பங்கேற்பு

காங்கிரஸின் ஒரேயொருப் பிரதிநிதியாக லண்டனில் அந்த ஆண்டு நடந்த இரண்டாவது வட்ட மேசை மாநாட்டில் காந்தியடிகள் கலந்துகொண்டார். உப்பைச் சுய பயன்பாட்டுக்குப் பயன்படுத்த மக்களை அனுமதிப்பது, வன்முறையில் ஈடுபடாத அரசியல் கைதிகளை விடுதலை செய்வது, சாராயம் மற்றும் அந்நியத்துணிகளை விற்கும் கடைகளின் முன் ஆர்ப்பாட்டங்களை நடத்த அனுமதிப்பது ஆகியவற்றுக்கு அரசு இணக்கம் தெரிவித்தது. காந்தி–இர்வின் ஒப்பந்தத்தைக் கராச்சியில் நடந்த காங்கிரஸ் மாநாடு ஏற்றுக்கொண்டது. பகத் சிங் மற்றும் அவரது தோழர்களுக்கு விதிக்கப்பட்ட மரண தண்டனையைக் குறைக்க அரசப்பிரதிநிதி (வைசிராய்) மறுத்துவிட்டார்.

12th_History_TM_Unit_4.indd 59 21-12-2022 18:56:39

காந்தியடிகள் இரண்டாவது வட்டமேசை மாநாட்டில் கலந்துகொண்ட போதும் அரசு அவரது கோரிக்கைகளை ஏற்க முன்வராமல் பிடிவாதம் செய்தது. வெறும் கையோடு அவர் திரும்பியதை அடுத்து சட்டமறுப்பு இயக்கத்தை மீண்டும் கையில் எடுப்பது என்று காங்கிரஸ் தீர்மானித்தது. பொருளாதார வீழ்ச்சி காரணமாக குறிப்பாக விவசாயிகள் உட்பட பொதுவாகவே நாட்டு மக்களின் பொருளாதார நிலைமை மோசமடைந்தது. நாடு முழுவதும் விவசாயிகளின் போராட்டங்கள் நடைபெற்றன. தொழிலாளர்கள் மற்றும் விவசாயிகளின் போராட்டங்களை இடதுசாரிகள் முன்னின்று நடத்தினார்கள். இந்த இயக்கத்தை முடக்க அரசு நினைத்தது. நேரு, கான் அப்துல் கபார் கான், இறுதியில் காந்தியடிகள் என அனைத்து முக்கியத் தலைவர்களும் கைது செய்யப்பட்டனர். காங்கிரஸ் இயக்கம் தடைசெய்யப்பட்டது. போராட்டங்களை அடக்குவதற்கு சிறப்புச் சட்டங்கள் இயற்றப்பட்டன.சுமார் ஒரு லட்சம் ஆர்ப்பாட்டக்காரர்கள் கைது செய்யப்பட்டு தேசியவாதம் தொடர்பான பிரசுரங்கள் அனைத்தும் சட்டத்துக்குப் புறம்பானவை என அறிவிக்கப்பட்டு பறிமுதல் செய்யப்பட்டன. இந்தப் போராட்டத்தில் பங்கேற்ற நிராயுதபாணிகளான மக்கள் மீது தீவிர வன்முறை கட்டவிழ்த்து விடப்பட்ட காலகட்டமாகும்.

இந்த இயக்கம் மெதுவாக மந்த நிலை அடைந்து மே 1933இல் அதிகாரப்பூர்வமாக நிறுத்தப்பட்டு பின்னர் மே 1934இல் முற்றிலும் முடிவுக்கு வந்தது.

4.8 டாக்டர் பி. ஆர். அம்பேத்கரின் தலைமை மற்றும் தனித்தொகுதிகளின் உருவாக்கம்

1920களில் ஒடுக்கப்பட்டவர்களின் போராட்டங்களின் மையப்புள்ளியாக டாக்டர் அம்பேத்கர் விளங்கினார். நாட்டின் மையப் பகுதியில் தீண்டாமை கொடுமைக்கு உள்ளாக்கப்பட்ட மஹர் சாதியில் ராணுவ வீரரின் மகனாகப் பிறந்த டாக்டர் அம்பேத்கர் அவரது சமூகத்தில் பத்தாம் வகுப்பை நிறைவு செய்த முதலாமவராகத் திகழ்ந்தார்.

அம்பேத்கரின் கல்வியும் அவர் பெற்ற பட்டங்களும்

எல்பின்ஸ்டன் கல்லூரியில் சேர்ந்த அம்பேத்கர் கல்வி உதவித்தொகை பெற்று 1912இல் பட்டதாரி ஆனார். பரோடா அரசரின் கல்வி உதவித்தொகை பெற்ற அவர் அமெரிக்கா சென்று பட்டமேற்படிப்புப் பட்டத்தையும், கொலம்பியா பல்கலைக்கழகத்தில் முனைவர் பட்டத்தையும் பெற்றார். சட்டம் மற்றும் பொருளாதார படிப்புக்களுக்காக அவர் லண்டன் சென்றார்.

அம்பேத்கரின் அறிவாற்றல் பலரது கவனத்தை ஈர்த்தது. 1916இல் மானுடவியல் தொடர்பான சர்வதேச மாநாட்டில் கலந்துகொண்டு 'இந்தியாவின் சாதிகள்' (*Castes in India*) என்ற தலைப்பில் ஆராய்ச்சிக் கட்டுரையைச் சமர்ப்பித்தார். இந்தக் கட்டுரை பின்னர் 'அரிய இந்தியப் புத்தகம்' (*Indian Antiquary*) என்ற தொகுப்பில் பதிப்பிக்கப்பட்டது. இந்தியாவில் ஒடுக்கப்பட்டோரிடையே திறமையுடையோரைத் தேடி வந்த பிரிட்டிஷ் அரசு இந்திய வாக்காளர்களுக்கு வாக்குரிமை பெற வயது மற்றும் தகுதி பற்றி தகவல் சேகரித்து வந்த சவுத்பொரோ குழுவுடன் கலந்துரையாட வருமாறு அவருக்கு அழைப்பு விடுத்தது.

இந்தக் கலந்துரையாடல்களின்போதுதான் அம்பேத்கர் முதன்முறையாக தனித் தொகுதிகள் பற்றி பேசினார். தீண்டாமை கொடுமைக்கு உள்ளாக்கப்பட்ட மக்களுக்கு தனித்தொகுதிகள் மற்றும் இடங்கள் ஒதுக்கீடு செய்யவேண்டும் என்று வாதிட்டார். இந்தத் திட்டத்தின்படி தீண்டாமை கொடுமைக்கு உள்ளாக்கப்பட்ட மக்கள் மட்டுமே அவர்களுக்கு என ஒதுக்கப்பட்ட தொகுதிகளில் வாக்களிக்க முடியும். தேர்தலில் போட்டியிடும் தீண்டாமை கொடுமைக்கு உள்ளாக்கப்பட்ட வேட்பாளர் தீண்டத்தக்க வாக்காளர்களைச் சார்ந்திருக்க நேரிட்டால், வாக்களிக்கும் பின்னவருக்குக் கடமைப்பட்டவராகவும் அவர் மாறவேண்டிய நிலைமை ஏற்படும் என்று அம்பேத்கர் கருதினார். அவர்கள் தீண்டாமை கொடுமைக்கு உள்ளாக்கப்பட்ட மக்களின் நலனுக்காகச் சுதந்திரமாகப் பணியாற்ற முடியாத நிலைமை ஏற்படும் என்றும் அவர் நினைத்தார். இட ஒதுக்கீடு பெறப்பட்ட இடங்களில் தீண்டாமை கொடுமைக்கு உள்ளாக்கப்பட்ட வாக்காளர்கள் மட்டுமே வாக்களித்தால் அவர்கள் தங்களின் உண்மையான பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்க முடியும்.

அம்பேத்கரின் தீவிரச் செயல்பாடு

அம்பேத்கர் புதிய பத்திரிக்கைகள் மற்றும் அமைப்புகளைத் தோற்றுவித்தார். மூக் நாயக் (வாய்பேச முடியாதவர்களின் தலைவர்) என்ற பத்திரிக்கை தனது கருத்துகளை வெளிப்படுத்துவதற்காகவும் பஹிஷ்கிரித் ஹிடாகரினி சபை (தனித்துவிடப்பட்டவர்களின் நலனுக்கான அமைப்பு) என்ற அமைப்பைத் தனது செயல்பாடுகளுக்காகவும் அவர் தொடங்கினார். பம்பாய் சட்டப்பேரவையின் உறுப்பினராக அவர் தீண்டாமை கொடுமைக்கு உள்ளாக்கப்பட்ட மக்களின் மீது விதிக்கப்பட்ட திறன்குறைபாடுகளைக் களைவதற்காக அயராது பாடுபட்டார். ஊருணிகள் மற்றும் கிணறுகளில் தீண்டாமை கொடுமைக்கு உள்ளாக்கப்பட்ட

12th_History_TM_Unit_4.indd 60 21-12-2022 18:56:39

மக்களுக்கு தரவேண்டிய அடிப்படை உரிமைகளை மீட்டுத்தர மஹத் சத்தியாகிரகம் என்ற அமைப்பைத் தொடங்கினார். அம்பேத்கரின் அறிவாற்றல் மற்றும் பொதுநடவடிக்கைகள் அனைவரின் கவனத்தையும் ஈர்த்தன. இந்திய தேசிய காங்கிரஸ் மற்றும் காலனி ஆதிக்க ஆட்சியின் அதிகாரிகளைக் குறிவைத்து அவரது நேரடித் தாக்குதல்கள் இருந்தன. இதனிடையே காங்கிரஸ் கட்சி மற்றும் காந்தியடிகளின் கீழ் சுதந்திரப் போராட்டம் ஒரு முடிவெடுக்கும் கட்டத்தை எட்டியது. பூரண சுதந்திரம் அல்லது முழுமையான விடுதலை என்பதற்காகப் போராடுவதைக் குறிக்கோளாக அறிவிக்கும் இறுதி நிலையைச் சுதந்திரப் போர் அடைந்தது.

மஹத் சத்தியாகிரகம்

தீண்டாமை கொடுமைக்கு உள்ளாக்கப்பட்ட மக்களுக்கு தனித் தொகுதிகள் பெறுவதில் அம்பேத்கர்

சுதந்திர இந்தியாவில் தீண்டாமை கொடுமைக்கு உள்ளாக்கப்பட்ட மற்றும் ஒடுக்கப்பட்டவர்களின் எதிர்காலம் குறித்து அம்பேத்கர் பெரிதும் கவலை அடைந்தார். காங்கிரசின் கட்டுப்பாட்டில் சாதி இந்துகளின் ஆதிக்கம் அதிகம் இருக்கும் என அவர் கவலையடைந்தார். அனைத்துக் கட்சி மாநாடுகள், சைமன் குழு, வட்டமேசை மாநாடு என அனைத்து இடங்களிலும் தனித் தொகுதிகள் வேண்டும் என்ற கோரிக்கையை அவர் மீண்டும் வலியுறுத்தினார். தீண்டாமை கொடுமைக்கு உள்ளாக்கப்பட்ட மக்களுக்கு தனித் தொகுதிகள் தருவது தேசிய இயக்கத்தை மேலும் வலுவிழக்கச் செய்யும் என்று காங்கிரசும் காந்தியடிகளும் கவலைப்பட்டனர். முஸ்லிம்கள் மற்றும் ஆங்கிலோ இந்தியர்களுக்குத் தனித்தொகுதிகள் மற்றும் இதர சிறப்பு நலன்கள் ஆகியன பிரிட்டிஷாரின் பிரித்தாளும் கொள்கையை வெற்றிகரமாக முன்னெடுத்துச் செல்ல வழியமைக்கும் என்று அவர்கள் வருத்தப்பட்டனர். தீண்டாமை கொடுமைக்கு உள்ளாக்கப்பட்ட மக்களை இந்துகளில் இருந்து அரசியல் ரீதியாகப் பிரிப்பது சமூகப் பாதிப்புகளை உருவாக்கும் என்று காந்தியடிகள் அச்சப்பட்டார்.

வகுப்புவாரி தொகுதி ஒதுக்கீடு

லண்டனில் நடந்த இரண்டாவது வட்டமேசை மாநாட்டில் கலந்து கொள்வதற்காகக் காந்தியடிகள் மற்றும் அம்பேத்கர் செல்வதற்கு முன் அவர்கள் இடையே தனித்தொகுதிகள் பற்றிய கருத்தில் நடந்த பேச்சுகள் தோல்வி அடைந்தன. வட்டமேசை மாநாட்டின்போது இருதலைவர்கள் இடையே இதே கருத்துக் குறித்து விவாதம் நடந்தது. பிரிட்டிஷ் பிரதமர் ராம்சே மெக்டொனால்டு இதில் தலையிட்டு முடிவெடுக்கவேண்டும் என்று இந்த கருத்தில் முடிவு எட்டப்படாமல் இருந்தது. ஆகஸ்ட் 1932இல் வகுப்புவாரித் தொகுதி ஒதுக்கீடுகள் குறித்து பிரிட்டிஷ் அரசு அறிவித்தது. இவ்வாறாக இடஒதுக்கீட்டுடன் கூடிய தனித்தொகுதிகள் பற்றிய அம்பேத்கரின் கோரிக்கைகள் ஏற்கப்பட்டன.

பூனா ஒப்பந்தம்

தீண்டத்தகாதோருக்குத் தனித் தொகுதிகள் வழங்கப்பட்டுள்ளதைத் தனது வாழ்நாள் முழுவதும் எதிர்க்கப்போவதாக மிகவும் வருத்தத்துடன் காந்தியடிகள் அறிவித்தார். தான் அடைக்கப்பட்ட எரவாடா சிறையில் அவர் சாகும் வரை உண்ணாவிரதம் இருக்க முயன்றார். காந்தியடிகளின் உயிரைக் காப்பாற்றும் அழுத்தம் அம்பேத்கருக்கு ஏற்பட்டது. ஆலோசனைகள், கூட்டங்கள், பிரார்த்தனைகள் அனைத்தும் நடத்தப்பட்டன. அதன் விளைவாகக் காந்தியடிகளுடன் சிறைச்சாலையில் நடந்த சந்திப்புக்குப் பிறகு வகுப்புவாரித் தொகுதி ஒதுக்கீடு திருத்தப்பட்டது. அம்பேத்கர் மற்றும் காந்தியடிகளுக்கு இடையே ஏற்பட்ட புதிய ஒப்பந்தம் பூனா ஒப்பந்தம் என்று அழைக்கப்பட்டது.

தீண்டாமை கொடுமைக்கு உள்ளாக்கப்பட்ட மக்களுக்கு தனித் தொகுதிகளைப் பறித்துக்கொண்டாலும் இடங்களின் ஒதுக்கீடு குறித்து உத்தரவாதமளிக்கப்பட்டது. இடஒதுக்கீடு பெற்ற தொகுதிகள் என்ற சட்ட அம்சம் அரசியல் சாசனத்தில் சேர்க்கப்பட்டு திருத்தங்கள் ஏற்படுத்தப்பட்டன. சுதந்திர இந்தியாவின் அரசியல் சாசனத்திலும் இது இடம்பெற்றது.

அம்பேத்கரும் கட்சி அரசியலும்

அம்பேத்கர் இரண்டு கட்சிகளை ஆரம்பித்தார். சுதந்திர தொழிலாளர் கட்சியை 1937–லும் பட்டியல் இனத்தவர் கூட்டமைப்பை 1942–லும் அவர் தொடங்கினார். அவரது போராட்டங்களை அங்கீகரித்த காலனி அரசு தனது ஆதரவை சமன்படுத்த அம்பேத்கரின் சேவைகளைப் பயன்படுத்தியது. 1942ஆம் ஆண்டு பாதுகாப்புத் துறை ஆலோசனைக் குழுவின் உறுப்பினராக

12th_History_TM_Unit_4.indd 61 21-12-2022 18:56:40

விடுதலைப் போராட்டத்தில் மக்களை ஒன்றிணைத்தல்



ஜாலியன் வாலாபாக் (பஞ்சாப்)	ஜாலியன் வாலாபாக் படுகொலை
சௌரி சௌரா (உத்திரப் பிரதேசம்)	ஒத்துழையாமை இயக்கம் நிறுத்தம்
தண்டி (குஜராத்)	சட்ட மறுப்பு இயக்கம்
சம்பரான் (பீகார்)	அவுரி விவசாயிகள் இயக்கம்
கேதா (குஜராத்)	விவசாயிகள் சத்தியாகிரகம்
அகமதாபாத் (குஜராத்)	பருத்தி ஆலை தொழிலாளர்கள் சத்தியாகிரகம்
மஹத் (மகாராஷ்டிரா)	மஹத் சத்தியாகிரகம்

12th_History_TM_Unit_4.indd 62 21-12-2022 18:56:42

அம்பேத்கர் நியமிக்கப்பட்டார். சில மாதங்களுக்குப் பிறகு அரசப்பிரதிநிதியின் (வைசிராய்) அமைச்சரவையில் அமைச்சராக இடம்பிடித்தார்.

நாட்டுக்கு அவர் ஆற்றிய சேவைகளுக்கு மகுடம் சூட்டும் விதமாக சுதந்திர இந்தியாவின் அரசியல்சாசன வரைவுக் குழுவின் தலைவராக அவர் தேர்ந்தெடுக்கப்பட்டார். சுதந்திரம் பெற்ற பிறகு நேரு அமைச்சரவையில் அவர் அமைச்சராக இடம் பெற அழைக்கப்பட்டார்.

பாடச் சுருக்கம்

- காந்தியடிகளின் அரசியல் நுழைவு, புதிய உயிர்த்துடிப்பை ஏற்படுத்துவதுடன், சம்பரான் மற்றும் கேதாவில் நடந்த விவசாய இயக்கங்கள், அகமதாபாத் ஆலைத் தொழிலாளர்கள் வேலைநிறுத்தம் ஆகியவற்றில் சத்தியாகிரகத்தைச் சோதித்துப் பார்த்தது ஒத்துழையாமை இயக்கத்தைத் தொடங்க அடிப்படையை அமைத்தது.
- 1919இல் இந்திய கவுன்சில் சட்டத்தின் கீழ் மாகாணங்களில் அறிமுகம் செய்யப்பட்ட இரட்டை ஆட்சியின் குறைபாடுகள், பிராமணர் அல்லாதோர் இயக்கங்கள் தேசிய நீரோட்டத்தில் தேசிய அரசியலுக்கு ஏற்படுத்திய சவால்கள் காங்கிரசை இக்காலகட்டத்தில் பாதித்தது.
- கிலாபத், ரெளலட் சட்டம் ஆகிய கருத்துகள் தொடர்பாக ஆர்ப்பாட்டங்கள் நடத்துமாறு காந்தியடிகள் விடுத்த அழைப்பு, அதற்கு பதிலடியாக ஜாலியன் வாலாபாக் படுகொலைக்கு வித்திட்ட பிரிட்டிஷ் அரசின் அடக்குமுறை நடவடிக்கைகள் ஆகியன ஒத்துழையாமை இயக்கத்தைத் தோற்றுவிக்க காங்கிரஸைத் தூண்டியது.
- செளரி செளரா நிகழ்வுக்குப் பிறகு ஒத்துழையாமை இயக்கத்தைத் திரும்பப்பெற்றது, சட்டப்பேரவைகளில் போராட்டங்களைத் தொடர்ந்த, குறுகிய காலமே செயல்பாட்டில் இருந்த சுயராஜ்ய கட்சியின் தோற்றம்.
- சைமன் குழுவையும் முதல் வட்டமேசை மாநாட்டையும் புறக்கணித்த காங்கிரஸ் இரண்டாம் வட்டமேசை மாநாட்டின் முடிவுகள் பலன்களைத் தராததால் சட்டமறுப்பு இயக்கத்தைத் தொடங்கி விடுதலைப் போராட்டத்தைத் தீவிரப்படுத்தியது.
- காந்தியடிகளின் தண்டி யாத்திரை, தமிழ்நாட்டின் வேதாரண்யம் நோக்கிய இராஜாஜியின் உப்புச் சத்தியாகிரக யாத்திரை ஆகியன மக்களைத் தேச நலனுக்காக ஒன்றுதிரட்டப் பெரிதும் உதவின.
- ஒடுக்கப்பட்ட மக்களின் ஒப்பற்றத் தலைவராக உருவெடுத்த அம்பேத்கர், தனித்தொகுதிகளுக்கான அவரது ஆதரவு, பிரிட்டிஷார் அளித்த வகுப்புவாரித் தொகுதி ஒதுக்கீடு, இதற்கு எதிர்ப்பு தெரிவித்துக் காந்தியடிகள் சாகும் வரை உண்ணாவிரதம் இருந்ததும், காந்தியடிகள் மற்றும் அம்பேத்கர் இடையே பூனா ஒப்பந்தம் கையெழுத்தானதுடன் உண்ணாவிரதப் போராட்டம் முடிவுக்கு வந்தது.

பயிற்சி

I. சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்.

1. காந்தியடிகளின் அரசியல் குரு யார்?

   (அ) திலகர் (ஆ) கோகலே

   (இ) W.C. பானர்ஜி (ஈ) M.G. ரானடே

2. தென்னாப்பிரிக்காவிலிருந்து திரும்பிய காந்தியடிகள் தனது வெற்றிகரமான முதலாவது சத்தியாகிரகப் போராட்டத்தைத் தொடங்கிய இடம்

   (அ) கேதா (ஆ) தண்டி

   (இ) சம்பரான் (ஈ) பர்தோலி

3. சைமன் கமிஷன் காங்கிரஸால் ஏன் புறக்கணிக்கப்பட்டது?

   (அ) சைமன் குழு அறிக்கையில் இந்தியாவிற்கு டொமினியன் அந்தஸ்து வழங்குவது குறித்த பரிந்துரை இல்லை.

   (ஆ) சிறுபான்மையினருக்குப் பாதுகாப்பு அளிக்கவில்லை.

   (இ) அக்குழுவில் இந்தியர்கள் இடம்பெறவில்லை.

   (ஈ) அது முழுச் சுதந்திரத்திற்கான வாக்குறுதியைக் கொண்டிருக்கவில்லை.

4. இந்தியாவின் மூவர்ணக் கொடி எப்போது ஏற்றப்பட்டது?

   (அ) டிசம்பர் 31, 1929 (ஆ) மார்ச் 12, 1930

   (இ) ஜனவரி 26, 1930 (ஈ) ஜனவரி 26, 1931

5. 1923இல் மோதிலால் நேரு மற்றும் சி.ஆர். தாஸ் –ஆல் தோற்றுவிக்கப்பட்ட கட்சியின் பெயர் என்ன?

   (அ) சுயராஜ்ய கட்சி

   (ஆ) கதர் கட்சி

   (இ) சுதந்திரா கட்சி

   (ஈ) கம்யூனிஸ்ட் கட்சி

6. பின்வருவனவற்றைப் பொருத்தி சரியான விடையைத் தேர்வு செய்க.

(அ) நாமசூத்ரா இயக்கம்	–	1. வடமேற்கு இந்தியா
(ஆ) ஆதிதர்ம இயக்கம்	–	2. தென்னிந்தியா
(இ) சத்யசோதக் இயக்கம்	–	3. கிழக்கிந்தியா
(ஈ) திராவிட இயக்கம்	–	4. மேற்கு இந்தியா

	அ	ஆ	இ	ஈ
(அ)	3	1	4	2
(ஆ)	2	1	4	3
(இ)	1	2	3	4
(ஈ)	3	4	1	2

7. ஒத்துழையாமை இயக்கத்தின் பல்வேறு நிலைகளைக் கால வரிசைப்படுத்துக.

(1) அமிர்தசரஸ் நகரில் பிரிட்டிஷ் படையால் ஆயுதம் ஏந்தாத மக்கள் மீது கொடிய தாக்குதல் நடத்தப்பட்டது.

(2) நீதிமன்ற விசாரணை இன்றி எவரையும் சிறையில் அடைக்க ரௌலட் சட்டம் கொண்டு வரப்பட்டது.

(3) சௌரி சௌரா வன்முறைச் சம்பவம் காந்தியடிகள் ஒத்துழையாமை இயக்கத்தை விலக்கிக் கொள்ள வழிவகுத்தது.

(4) கல்கத்தாவில் நடைபெற்ற சிறப்புக் கூட்டத்தில் பிரிட்டிஷ் அரசாங்கத்துடன் ஒத்துழையாமை என்ற காந்தியடிகளின் முன்மொழிவை ஏற்றுக் கொண்டது.

(அ) 2, 1, 4, 3　　(ஆ) 1, 3, 2, 4
(இ) 2, 4, 1, 3　　(ஈ) 3, 2, 4 ,1

8. பின்வரும் எந்த ஒன்று சரியாகப் பொருந்தவில்லை?

(அ) பஞ்சாப் துணை ஆளுநர்	–	1. ரெஜினால்டு டையர்
(ஆ) தலித் – பகுஜன் இயக்கம்	–	2. டாக்டர். அம்பேத்கர்
(இ) சுயமரியாதை இயக்கம்	–	3. ஈ.வெ.ரா. பெரியார்
(ஈ) சத்தியாகிரக சபை	–	4. ரௌலட் சட்டம்

9. பின்வரும் நிகழ்வுகளைச் சரியான கால வரிசைப்படி அமைத்து கொடுக்கப்பட்டுள்ள விடைகளிலிருந்து சரியானதைத் தேர்ந்தெடுக்கவும்.

(i) கேதா சத்தியாகிரகம்
(ii) சம்பரான் இயக்கம்
(iii) பிராமணரல்லாதார் இயக்கம்
(iv) வேதாரண்யம் உப்புச் சத்தியாகிரகம்

(அ) ii, iii, i, iv　　(ஆ) iii, ii, i, iv
(இ) ii, i, iv, iii　　(ஈ) ii, i, iii, iv

10. பின்வருவனவற்றுள் எது/எவை சரியானவை அல்ல.

(i) காந்தியடிகள் அகமதாபாத்தில் சபர்மதி ஆசிரமத்தை நிறுவினார்.
(ii) வல்லபாய் படேல் ஒரு வழக்கறிஞர்.
(iii) சைமன் குழுவினை முஸ்லீம் லீக் வரவேற்றது.
(iv) இரண்டாவது வட்டமேஜை மாநாட்டில் காந்தியடிகள் கலந்து கொண்டார்.

(அ) i　　(ஆ) i மற்றும் iv
(இ) ii மற்றும் iii　　(ஈ) iii மட்டும்

11. ஒத்துழையாமை இயக்கம் உள்ளடக்கியவை.

(அ) பள்ளி மற்றும் கல்லூரிகளைப் புறக்கணித்தல்
(ஆ) அரசு வழங்கிய பட்டங்களைத் திருப்பியளித்தல்
(இ) உண்ணாவிரதங்கள் கடைப்பிடிப்பதை எதிர்த்தல்
(ஈ) அரசுக்கு எதிரான சதிவேலைகளில் ஈடுபடுதல்

(அ) அ மற்றும் ஆ　　(ஆ) ஆ மற்றும் இ
(இ) அ மற்றும் ஈ　　(ஈ) இ மற்றும் ஈ

12. **கூற்று:** பி.ஆர். அம்பேத்கர் மஹத் சத்தியாகிரகத்தைத் தொடங்கினார்.

காரணம்: அவர் இந்துக்கள் மற்றும் முஸ்லீம்களை ஒருங்கிணைக்க முயன்றார்.

அ) கூற்று சரி. காரணம் கூற்றை விளக்குகிறது.
(ஆ) கூற்று சரி. காரணம் கூற்றை விளக்கவில்லை.
(இ) கூற்று சரி, காரணம் தவறு.
(ஈ) கூற்று தவறு, காரணம் சரி.

13. **கூற்று:** 1919இல் இந்தியக் கவுன்சில் சட்டம் மற்றும் ரௌலட் சட்டம் நிறைவேற்றப்பட்டது.

காரணம்: இது மிதவாத தேசியவாதிகளை அரவணைத்து தீவிர தேசியவாதிகளைத் தனிமைப்படுத்தும் பிரிட்டிஷாரின் கொள்கையின் ஒரு பகுதியாகும்.

12th_History_TM_Unit_4.indd 64　21-12-2022 18:56:42

www.tntextbooks.in

(அ) கூற்று மற்றும் காரணம் சரி. காரணம் கூற்றை விளக்குகிறது.

(ஆ) கூற்று மற்றும் காரணம் சரி. ஆனால் காரணம் கூற்றை விளக்கவில்லை.

(இ) கூற்று சரி, காரணம் தவறு.

(ஈ) கூற்று தவறு, காரணம் சரி.

14. கீழே குறிப்பிடப்பட்டுள்ள தலைவர்களில் சுயராஜ்ய கட்சியுடன் தொடர்பில்லாத தலைவர் யார்?

(அ) இராஜாஜி (ஆ) சித்தரஞ்சன் தாஸ்

(இ) மோதிலால் நேரு (ஈ) சத்யமூர்த்தி

15. காந்தியடிகளின் தண்டி யாத்திரை பயணம் சென்றடைந்த ஆண்டு

(அ) ஏப்ரல் 6, 1930 (ஆ) மார்ச் 6, 1930

(இ) ஏப்ரல் 4, 1939 (ஈ) மார்ச் 4, 1930

II குறுகிய விடையளிக்கவும்.

1. இந்தியா வந்த வேல்ஸ் இளவரசர் எவ்வாறு வரவேற்கப்பட்டார்?
2. காந்தியடிகளின் சம்பரான் சத்தியாகிரகத்தின் போது உடன் சென்ற உள்ளூர் தலைவர்கள் யாவர்?
3. இந்தியப் பணியாளர் சங்கம் ஏன் தோற்றுவிக்கப்பட்டது?
4. பகிஷ்கிரித் ஹிதகர்னி சபா குறித்து எழுதுக.
5. தேசியவாதிகளால் ரௌலட் சட்டம் ஏன் எதிர்க்கப்பட்டது?
6. பி.ஆர். அம்பேத்கரால் வழிநடத்தப்பட்ட மஹத் சத்தியாகிரகம் பற்றி அறிவது என்ன?
7. காந்தி–இர்வின் ஒப்பந்தத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டது எது?

III. சுருக்கமாக விடையளிக்கவும்.

1. ஜாலியன் வாலாபாக் படுகொலை குறித்து குறிப்பு எழுதுக.
2. மாகாணங்களில் இரட்டையாட்சி முறை பற்றி எழுதுக.
3. பூனா ஒப்பந்தத்தின் முக்கியத்துவம் யாது?
4. பிராமணரல்லாதார் இயக்க தலைவர்கள் காலனி அரசாங்கத்தைக் கையாள்வதில் தொடக்க கால தேசியவாதிகள் கடைப்பிடித்த அதே யுக்தியினை கையாண்டனர். விவரி.
5. மாற்றத்தை விரும்புவர்கள் – மாற்றத்தை விரும்பாதவர்கள் – வேறுபடுத்துக.
6. பிரதம அமைச்சர் ராம்சே மக்டோனால்டின் வகுப்புவாத அறிக்கையைப் பற்றி எழுதுக.
7. மூன்று வட்டமேசை மாநாடுகளின் முடிவின் தோல்விக்குப் பிறகு ஏன் காங்கிரஸ் தடைசெய்யப்பட்டது?

IV. விரிவான விடையளிக்கவும்.

1. ஒத்துழையாமை இயக்கத்தை நடைமுறைப்படுத்தும் சூழலையும் அதன் விளைவுகளையும் விவரி.
2. ஒத்துழையாமை இயக்கத்திலிருந்து சட்ட மறுப்பு இயக்கம் எவ்வழிகளில் மாறுபட்டிருந்தது?
3. இந்திய விடுதலைப் போரில் மகாத்மா காந்தியடிகளின் பங்கினை மதிப்பிடுக.
4. டாக்டர். அம்பேத்கரின் கல்விப்பணி குறித்து, குறிப்பாக ஒடுக்கப்பட்ட மக்களின் சமூக நீதிக்காக அவரின் செயலூக்கத்தை முதன்மைப்படுத்தி விளக்குக.

V. செயல்பாடு

1. காந்தியடிகளின் சகாப்தம் குறித்த நிகழ்வுகளின் காலகோடு ஒன்றை உருவாக்கவும்.
2. தற்போதைய சமூக அரசியல் மற்றும் பொருளாதார சூழலில் காந்தியடிகளின் இணக்கத்தை விவாதம் செய்.

மேற்கோள் நூல்கள்

1. Bipan chandra - *History of Modern India*
2. Dhananjay Keer - *Ambedkar Life and Mision*
3. Sumit Sarkar - *Modern India 1885-1947*
4. Bipan chandra - *India's struggle for Independence*
5. Bikhu parekh - *Gandhi*
6. Rajmohan Gandhi - *The Rajaji Story*
7. Christopher Jafferlot - *Analyzing and Fighting Caste Ambedkar and Untouchability.*

12th_History_TM_Unit_4.indd 65 21-12-2022 18:56:42

A-Z கலைச்சொற்கள்

பழிவாங்கும் எண்ணம்	**vindictiveness**	desire for revenge
கொடுங்கோன்மை / வல்லாட்சி	**tyranny**	crelty or oppression
இரட்டையாட்சி	**Dyarchy**	government shared by two different independent authorities
படிநிலை / வர்க்கப் படிநிலை	**hierarchial**	arranging, according to various criteria, into successive ranks or grades
மனிதநேயக் கோட்பாடு	**humanism**	system of thought giving importance to human rather than devine.
ஏகபோக உரிமை	**monopoly**	an exclusive control over the trade or service through exclusive possession.
கடையடைப்பு	**hartal**	the act of closing shops or suspending work
போர்க்குணம் வாய்ந்த	**martial**	warlike
வெடி பொருட்கள்	**ammunition**	quantity of bullets and shells
பிளவுண்டாக்குகிற	**fissiparous**	causing division

12th_History_TM_Unit_4.indd 66 21-12-2022 18:56:43

இணையச் செயல்பாடு

காந்தியடிகள் தேசியத் தலைவராக உருவெடுத்து மக்களை ஒன்றிணைத்தல்

இச்செயல்பாட்டின் மூலம் நீங்கள் மகாத்மா காந்தியடிகளின் அரிய புகைப்படங்கள், ஆவணங்கள் மற்றும் காணொலிகளின் தொகுப்புகளை அறியலாம்

படிநிலைகள்

படி 1 : கீழ்க்காணும் உரலி/விரைவுக் குறியீட்டைப் பயன்படுத்தி இச்செயல்பாட்டிற்கான இணையப் பக்கத்திற்குச் செல்க.

படி 2 : மொழியினை மாற்றி 'Mahatma's Collection' என்பதனை சொடுக்கவும்

படி 3 : 'Newspaper' என்பதை தேர்வு செய்து சொடுக்கி நிகழ்வுகளைக் காண்க.



படி 1

படி 2

படி 3

உரலி : http://gandhiworld.in/english/index.html

*படங்கள் அடையாளத்திற்கு மட்டுமே.

*தேவையெனில் Adobe Flash ஐ அனுமதிக்க.

12th_History_TM_Unit_4.indd 67 21-12-2022 18:56:44

அலகு 5

ஏகாதிபத்தியத்திற்கு எதிரான போராட்டங்களில் புரட்சிகர தேசியவாதத்தின் காலம்

கற்றலின் நோக்கங்கள்

கீழே குறிப்பிடப்பட்டவைகளோடு அறிமுகமாதல்

- கான்பூர் சதி வழக்கு
- மீரட் வழக்கு விசாரணை
- பகத் சிங் – கல்பனா தத்
- இந்திய தேசிய காங்கிரசின் கராச்சி கூட்டத்தொடர்
- மாபெரும் பொருளாதார மந்தநிலையும் இந்தியாவில் அதன் தாக்கமும்
- இந்தியாவில் தொழில் மேம்பாடு

அறிமுகம்

இந்திய தேசிய காங்கிரசில் இடதுசாரிகளின் செல்வாக்கும் படிப்படியாகச் சுதந்திரப் போராட்டத்தில் அது ஏற்படுத்திய தாக்கமும் 1920 களின் பிற்பகுதியில் கணிசமான அளவில் உணரப்பட்டது. இந்தியப் பொதுவுடைமைக் (கம்யூனிஸ்ட்) கட்சியானது எம்.என். ராய், அபானி முகர்ஜி, எம்.பி.டி. ஆச்சார்யா, முகமது அலி, முகமது ஷாஃபிக் ஆகியோரால் உஸ்பெகிஸ்தானிலுள்ள தாஷ்கண்டிலும் பின்னர் சோவியத் யூனியனிலும் 1920ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் உருவாக்கப்பட்டது. அது இந்தியாவில் ஏகாதிபத்தியத்திற்கு எதிரான போராட்டங்களில் ஒரு புதிய புரட்சிகர தேசியவாத சகாப்தம் தோன்ற வழிவகுத்தது.

ஏற்கெனவே இந்தியாவில் பல புரட்சிகர தேசியவாதக் குழுக்கள் செயல்பட்டுவந்தன. முன்னதாக சோவியத் ரஷ்யாவின் வடிவில் ஒரு கம்யூனிஸ்ட் அரசு அமைந்தது இந்தியாவில் ஆங்கிலேயருக்குப் பெரிதும் அச்சமூட்டியது. 1921 ஜூன் 3இல் முதல் புரட்சிகர தேசியவாதக் குழுவினர் பெஷாவருக்கு வந்தனர். கலகம் விளைவிப்பதற்காக இந்தியாவுக்கு ரஷ்ய கம்யூனிஸ்ட் இயக்கத்தினரான போல்ஷ்விக்குகள் வந்துள்ளனர் என்று குற்றம் சாட்டி, அவர்கள் உடனடியாகக் கைது செய்யப்பட்டனர். 1922–1927ஆம் ஆண்டுகளுக்கு இடையில் அவர்கள் மீது தொடர்ச்சியாக ஐந்து சதி வழக்குகள் தொடுக்கப்பட்டன. அவற்றுள் முதலாவது பெஷாவர் சதி வழக்கு ஆகும். இதனைத் தொடர்ந்து கான்பூர் (போல்ஷ்விக்) சதி வழக்கு 1924ஆம் ஆண்டிலும் மிகவும் பிரசித்தி பெற்ற மீரட் சதி வழக்கு 1929ஆம் ஆண்டிலும் தொடுக்கப்பட்டன. இதற்கிடையில், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி இந்திய மண்ணில் 1925இல் பம்பாயில் முறைப்படி தொடங்கப்பட்டது.

ஆங்கிலேயர் ஆண்டுவந்த இந்தியாவில் அப்போது சோசலிச லட்சியங்களை ஏற்றுக்கொண்ட பல்வேறு தேசபக்த புரட்சிகரக் குழுக்கள் செயல்பட்டுவந்தன. ஆனால் அவை கம்யூனிஸ்ட் கட்சிகள் அல்ல. இந்துஸ்தான் புரட்சிகர சோசலிசக் கூட்டமைப்பைச் சார்ந்த பகத்சிங் வங்காளத்தில் சிட்டகாங் படைத்தளத்தில் தொடர்ச்சியான தாக்குதலை ஏற்பாடு செய்த இந்திய குடியரசு இராணுவத்தைச் சேர்ந்த கல்பனா தத் ஆகிய இரண்டு புரட்சியாளர்கள் அடுத்த பகுதியில் கவனம் பெற உள்ளனர். இந்திய தேசிய காங்கிரசின் கராச்சி கூட்டத்தொடரும் அதில் நிறைவேற்றப்பட்ட புகழ் வாய்ந்த தீர்மானங்களும் – குறிப்பாக அடிப்படை உரிமைகளும் கடமைகளும் ஆகியனவற்றை அடுத்து நாம் பார்க்கவுள்ளோம். கடைசி இரண்டு தலைப்புகளும் உலகம் முழுவதும் நிலவிய மாபெரும் மந்தநிலை என்று பரவலாக அறியப்பட்ட

பொருளாதார மந்தநிலை குறித்தும் இந்தியாவிலும் தமிழ்ச் சமூகத்திலும் அது விளைவித்த தாக்கமும் இந்தியாவில் பதிவான தொழில் மேம்பாடும் அதன் விளைவுகளும் குறித்தவை ஆகும். மாபெரும் மந்தநிலையானது உழைக்கும் தொழிலாளர்கள், விவசாயிகளுக்கு ஒரு கடுமையான அடியைக் கொடுத்ததைத் தொடர்ந்து இந்தியச் சுதந்திரத்தின் மீது ஒரு குறிப்பிடத்தக்க வகையில் செல்வாக்கும் செலுத்தியது.

5.1 கான்பூர் சதிவழக்கு, 1924



கான்பூர் சதிவழக்கில் சிறைப்பட்டோர்

கம்யூனிஸ்ட் கொள்கைகள் பரவுவதைக் காலனிய ஆட்சியாளர்களால் மிகச் சாதாரணமாக எடுத்துக்கொள்ள முடியவில்லை. பம்பாய், கல்கத்தா, மதராஸ் ஆகிய பிரிட்டானியர் பிரதேசங்களிலும் ஒன்றுபட்ட பிரதேசத்தில் கான்பூர் போன்ற தொழில்மையங்களிலும் பல காலத்திற்கு முன்பே தொழிற்சாலைகள் வந்துவிட்ட லாகூர் போன்ற நகரங்களிலும் புரட்சிகர தேசியவாதம் பரவியது. அதன் விளைவாக சணல், பருத்தி ஆடைத் தொழிற்சாலைகளிலும் நாடெங்கிலுமுள்ள ரயில்வே நிறுவனங்களிலும் பல்வேறு நகராட்சிப் பணியாளர்கள் மத்தியிலும் தொழிற்சங்கங்கள் உருவெடுத்தன. குறிப்பாக அப்போது போல்ஷ்விசம் என்று அழைக்கப்பட்ட அரசியல் புரட்சிகர தேசியவாதத்தை நசுக்கும் பொருட்டு பிரிட்டிஷ் ஆட்சியாளர்களால் ஒடுக்குமுறைகள் மேற்கொள்ளப்பட்டன. 1924ஆம் ஆண்டின் கான்பூர் சதிவழக்கு அத்தகையதொரு நடவடிக்கையே ஆகும். அந்த வழக்கில் குற்றம் சாட்டப்பட்டவர்கள் கம்யூனிஸ்ட்களும் தொழிற்சங்கவாதிகளும் ஆவர்.

குற்றம் சாட்டப்பட்டவர்கள் ஆறுமாத கால அளவில் கைது செய்யப்பட்டனர். இந்திய தண்டனைச் சட்டம் 121 ஏ பிரிவின் கீழ் அவர்களுள் எட்டு பேர் "வன்முறையான புரட்சி ஒன்றின் மூலம் ஏகபோக பிரிட்டனிடமிருந்து இந்தியாவை முற்றிலும் பிரித்து பிரிட்டானிய இந்தியாவின் பேரரசரின் இறையாண்மைக்குக் குந்தகம் விளைவிப்பதாகக்" குற்றம் சாட்டப்பட்டுப் பல்வேறு சிறைகளுக்கு அனுப்பப்பட்டனர். இந்த வழக்கு

எம்.என்.ராய்

கான்பூர் சதிவழக்கில் ஆரம்பத்தில் 13 பேர் மீது குற்றம் சுமத்தப்பட்டது: 1) எம்.என்.ராய் 2) முசாபர் அகமது 3) சவுகத் உஸ்மானி 4) குலாம் ஹுசைன் 5) எஸ்.ஏ. டாங்கே 6) எம். சிங்காரவேலர் 7) ஆர்.எல்.சர்மா 8) நளினி குப்தா 9) ஷமுத்தின் ஹாசன் 10) எம். ஆர். எஸ். வேலாயுதன் 11) டாக்டர் மணிலால் 12) சம்பூர்ண நந்தா 13) சத்ய பக்தா. 8 பேர் மீதே குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது : எம். என். ராய், முசாபர் அகமது, எஸ்.ஏ. டாங்கே, நளினி குப்தா, குலாம் ஹுசைன், சிங்காரவேலர், சவுகத் உஸ்மானி, ஆர். எல். சர்மா. குலாம் ஹுசைன் அரசுத் தரப்புச் சாட்சியாக (அப்ரூவர்) மாறிவிட்டதால் அவர் விடுவிக்கப்பட்டார். எம். என். ராய், ஆர். எல். சர்மா ஆகியோர் முறையே ஜெர்மனியிலும் பாண்டிச்சேரியிலும் (ஒரு பிரெஞ்சுப் பிரதேசம்) இருந்ததால் நேரில் வரவழைக்காமல் குற்றப்பத்திரிகைகள் அனுப்பிவைக்கப்பட்டன. சிங்காரவேலர் மோசமான உடல்நிலை காரணமாகப் பிணையில் விடுவிக்கப்பட்டார். கடைசியாக, அந்தப் பட்டியலில் நால்வர் மட்டுமே எஞ்சியிருந்தனர்.

மாட்சிமை பொருந்திய அமர்வு நீதிபதி H.E. ஹோம்ஸ் முன்னிலையில் விசாரணைக்கு வந்தது. இவர் கோரக்பூர் அமர்வு நீதிபதியாகப் பணியாற்றியபோது சௌரிசௌரா வழக்கில் தொடர்பு கொண்டவர்களாகக் குற்றம் சாட்டப்பட்ட 172 விவசாயிகளுக்கு மரணதண்டனை விதித்துத் தீர்ப்பளித்துப் பிரசித்தி பெற்றவர்.

கான்பூர் சதிவழக்கில் முசாபர் அகமது, சவுகத் உஸ்மானி, நளினி குப்தா, எஸ். ஏ. டாங்கே ஆகியோர் நான்கு ஆண்டுகள் கடுங்காவல் தண்டனை அனுபவிப்பதற்காகச் சிறைக்கு அனுப்பப்பட்டனர். இதற்கிடையில், இந்த விசாரணையும் சிறைத் தண்டனையும் இந்தியாவில் கம்யூனிஸ்ட்களின் நடவடிக்கைகள் குறித்த விழிப்புணர்வை ஓரளவுக்கு ஊட்டியது. ஆங்கிலேயர் ஆண்ட இந்தியாவில், குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கு ஆதரவாக வழக்கறிஞர்களை அமர்த்தவும் நிதி திரட்டவும் 'கம்யூனிஸ்ட்களின் பாதுகாப்புக் குழு' ஒன்று உருவாக்கப்பட்டது. இவற்றுக்கு அப்பால், இந்தியாவின் மாநில மொழிப் பத்திரிகைகள் நீதிமன்ற நடவடிக்கைகளை மிக விரிவான முறையில் வெளியிட்டன.

12th History_TM_Unit_5.indd 69 02-01-2023 16:35:39

சதி வழக்கின் விசாரணையும் சில தலைவர்கள் கைது செய்யப்பட்டதும் புரட்சிகர தேசியவாதத்தின் உணர்வை மழுங்கடிப்பதற்குப் பதிலாகப் கம்யூனிஸ்ட்களின் நடவடிக்கைகளுக்கு உத்வேகத்தையே ஊட்டியது. டிசம்பர் 1925இல் இந்தியாவெங்கிலும் இருந்து வந்திருந்த பல்வேறு கம்யூனிஸ்ட்களின் குழுக்களின் மாநாடு ஒன்று நடந்தேறியது. இந்த மாநாட்டில் தமிழ்நாட்டிலிருந்து சிங்காரவேலர் சென்று கலந்துகொண்டார். அங்கிருந்துதான் பம்பாயைத் தலைமையிடமாகக் கொண்டு இந்திய கம்யூனிஸ்ட் கட்சி முறைப்படி நிறுவப்பட்டது.

எம். சிங்காரவேலர்

எம். சிங்காரவேலர் (18 பிப்ரவரி 1860 – 11 பிப்ரவரி 1946) மதராசில் பிறந்தார். இவர் இளமைக் காலத்தில் புத்தமதத்தைத் தழுவியவர். பிற கம்யூனிஸ்ட் இயக்கத் தலைவர்கள் பலரைப் போன்று இவரும் ஆரம்பத்தில் இந்திய தேசிய காங்கிரசில் இணைந்து செயல்பட்டவர். எனினும், சில காலத்திற்குப் பிறகு அவர் புரட்சிகர தேசியவாதப் பாதையைத் தேர்ந்தெடுத்தார். திரு. வி. கல்யாணசுந்தரத்துடன் இணைந்து தென்னிந்தியாவில் பல தொழிற்சங்கங்களை இவர் தோற்றுவித்தார். 1923ஆம் ஆண்டு மே மாதம் முதல் நாள் முதன்முறையாக நாட்டில் மே தினத்தைக் கொண்டாடினார். 1928ஆம் ஆண்டு தென்னிந்திய ரயில்வே வேலைநிறுத்தத்தை (பொன்மலை, திருச்சிராப்பள்ளி) ஏற்பாடு செய்ததில் இவர் முக்கியப் பங்கு வகித்தார். அதற்காகத் தண்டனை பெற்றார்.

5.2 மீரட் சதி வழக்கு, 1929

கம்யூனிஸ்ட்களின் செயல்பாடுகள்

1929ஆம் ஆண்டின் மீரட் சதி வழக்குதான் அனேகமாக, ஆங்கிலேய அரசினரால் தொடுக்கப்பட்ட அனைத்துக் கம்யூனிஸ்ட் சதி வழக்குகளிலும் பெரிதும் புகழ்பெற்றதாகும். 1920களின் பிற்பகுதி ஏராளமான தொழிலாளர் எழுச்சிகளைக் கண்டது. இந்த நிலையின்மைக் காலம் மாபெரும் பொருளாதார மந்தநிலையின் சகாப்தம் (1929 – 1939) வரை நீண்டது. தொழிற்சங்க நடவடிக்கைகள் பற்பல நகர்ப்புறங்களுக்குப் பரவி, தொழிலாளர் வேலைநிறுத்தங்களை ஏற்படுத்தியது. இந்தக் காலக்கட்டம் முழுவதிலும் உழைப்பாளி வர்க்கத்தை ஒருங்கிணைப்பதில் கம்யூனிஸ்டுகள் முக்கியப் பாத்திரத்தை வகித்தனர். 1927ஆம் ஆண்டு பிப்ரவரியிலும் செப்டம்பரிலும் நடைபெற்ற காரக்பூர் ரயில்வே பணிமனை வேலைநிறுத்தங்கள், 1928ஆம் ஆண்டு ஜனவரி, ஜூலை மாதங்களுக்கிடையில் நடைபெற்ற லில்லுவா ரயில் பணிமனை வேலைநிறுத்தம், 1928ஆம் ஆண்டின் கல்கத்தா துப்புரவுத் தொழிலாளர்களின் வேலைநிறுத்தம், 1929ஆம் ஆண்டு ஜூலை, ஆகஸ்ட் மாதங்களில் வங்காளத்தின் சணல் ஆலைகளில் நடைபெற்ற பல்வேறு வேலைநிறுத்தங்கள், 1928ஆம் ஆண்டு ஜூலையில் திருச்சிராப்பள்ளியின் பொன்மலை பணிமனையில் நடைபெற்ற தென்னிந்திய ரயில்வே வேலைநிறுத்தம், 1928 ஏப்ரலில் பம்பாயில் நடந்தேறிய ஜவுளித் தொழிலாளர் வேலைநிறுத்தம் ஆகியன குறிப்பிட்டுச் சொல்லத்தக்கச் சில வேலைநிறுத்தங்கள் ஆகும்.

அரசு ஒடுக்குமுறை

இந்த வேலைநிறுத்தங்களின் அலையாலும் கம்யூனிஸ்ட் செயல்பாடுகள் பரவுவதாலும் கவலை அடைந்த ஆங்கிலேய அரசு 1928ஆம் ஆண்டின் தொழிற்தகராறுகள் சட்டம், 1928ஆம் ஆண்டின் பொதுமக்கள் பாதுகாப்பு மசோதா ஆகிய இரு கொடுஞ்சட்டங்களை இயற்றியது. இவ்விரு சட்டங்களும் பொதுவாகப் பொதுமக்கள் உரிமைகளைக் கட்டுப்படுத்துவதற்கும் – குறிப்பாக தொழிற்சங்க நடவடிக்கைகளை அடக்குவதற்கும் உரிய அதிகாரங்களை அரசுக்கு அளிப்பதாக விளங்கியது. தொழிலாளர்கள், விவசாயிகள் மத்தியில் வலுவான கம்யூனிஸ்ட் செல்வாக்கு நிலவுவது கண்டு அரசு கவலை கொண்டது.

புரட்சிகர தேசியவாத இயக்கத்தை துடைத்தெறியத் தீர்மானித்த அரசு பல்வேறு ஒடுக்குமுறை நடவடிக்கைகளில் இறங்கியது. அவர்கள் பம்பாய், கல்கத்தா, பஞ்சாப், பூனா, ஒருங்கிணைந்த பிரதேசங்கள் போன்ற பிரிட்டிஷ் இந்தியாவின் பகுதிகளிருந்து கம்யூனிஸ்ட் கட்சியின் 32 முன்னோடிச் செயல்பாட்டாளர்களைக் கைது செய்தது. அவர்கள் அனைவரும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் உறுப்பினர்கள் அல்லர் எனினும் அவர்களில் பெரும்பாலானோர் தொழிற்சங்கச் செயல்பாட்டாளர்கள் ஆவார்கள். அவர்களில் குறைந்தபட்சம் 8 பேர் இந்திய தேசிய காங்கிரசைச் சேர்ந்தவர்கள். இந்தியாவில் கம்யூனிஸ்ட் கட்சியைக் கட்டியமைக்க உதவுவதற்கென பிரிட்டானிய கம்யூனிஸ்ட் கட்சியால் அனுப்பிவைக்கப்பட்ட பிலிப் ஸ்ப்ராட்,

12th History_TM_Unit_5.indd 70 02-01-2023 16:35:39

பான் ப்ராட்லி, லெஸ்டர் ஹட்சின்சன் ஆகிய பிரிட்டானிய கம்யூனிஸ்டுகள் மூவரும் கைது செய்யப்பட்டனர். கான்பூர் சதி வழக்கில் கைது செய்யப்பட்டவர்களைப் போன்று இவர்களும் இந்திய தண்டனைச் சட்டம் 121 ஏ பிரிவின் கீழ் குற்றம் சாட்டப்பட்டனர். கைது செய்யப்பட்ட 32 தலைவர்களும் மீரட்டுக்கு (அப்போது ஒருங்கிணைந்த பிரதேசத்தில் இருந்தது) கொண்டுவரப்பட்டுச் சிறையில் அடைக்கப்பட்டனர். காலனிய நிர்வாகத்தினரால் 'நிலைகுலைவிக்கும் விஷயங்கள்' (subversive materials) என்று விவரிக்கப்பட்ட புத்தகங்கள், கடிதங்கள், போன்ற கணிசமான ஆவணங்கள் பறிமுதல் செய்யப்பட்டுக் குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கு எதிரான சாட்சியங்களாக ஒப்படைக்கப்பட்டன.

விசாரணையை மீரட் நகரில் நடத்துவதென்று பிரிட்டானிய அரசு தீர்மானித்தது. (எடுத்துக்காட்டாக, குற்றம் சாட்டப்பட்டவர்களில் அதிகமானவர்கள் பிடிபட்ட பம்பாய் போன்ற இடங்களில் அல்லாமல்). எனவே அவர்கள் நடுவர் விசாரணை என்ற சலுகையைப் பெற முடிந்தது. நடுவர் விசாரணை குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கு அனுதாபத்தை உருவாக்கக் கூடும் என்று அவர்கள் அஞ்சினர்.

விசாரணையும் தண்டனையும்

இதற்கிடையில், இந்த வழக்கில் பாதுகாப்பு நடவடிக்கைகளை ஒருங்கிணைப்பதற்காக ஒரு தேசிய மீரட் சிறைவாசிகளின் பாதுகாப்புக் குழு ஒன்று உருவாக்கப்பட்டது. கே.எஃப். நாரிமன், எம்.சி. சக்லா போன்ற புகழ்பெற்ற வழக்கறிஞர்கள் குற்றம் சாட்டப்பட்டவர்கள் சார்பில் நீதிமன்றத்தில் வாதாடினர். காந்தியடிகள், ஜவகர்லால் நேரு போன்ற தேசியத் தலைவர்கள்கூடச் சிறைக்குச் சென்று குற்றம் சாட்டப்பட்டவர்களைப் பார்த்துவிட்டு வந்தனர். நமது சுதந்திரப் போராட்ட வரலாற்றில் இந்த வழக்கின் முக்கியத்துவத்தை இவையனைத்தும் காட்டுகின்றன.

கே.எஃப். நாரிமன்

எம்.சி. சக்லா

1929இல் நடைபெற்ற கைது நடவடிக்கைகளுக்கு நான்கு ஆண்டுகளுக்குப் பின்னர் 1933 ஜனவரி 16இல் மீரட் அமர்வு நீதிமன்றம் கடுமையான தீர்ப்பை வழங்கியது. 27 பேர் தண்டிக்கப்பட்டு வெவ்வேறு இடங்களுக்கு அனுப்பப்பட்டனர். விசாரணையின்போது, கம்யூனிஸ்டுகள் அரசியல் சித்தாந்தங்களை உருவாக்கியதன் மூலம் தங்கள் தரப்பைத் தங்களுக்கான பிரச்சார மேடையாகப் பயன்படுத்திக் கொண்டனர். அவை செய்தித்தாள்களில் பரவலாக வெளியாகி அதன்வழியாக லட்சக்கணக்கான மக்கள் கம்யூனிசச் சித்தாந்தம் குறித்தும் இந்தியாவில் கம்யூனிஸ்டுகளின் செயல்பாடுகள் குறித்தும் அறிந்துகொண்டனர். தீர்ப்புக்கு எதிராகக் கிளர்ச்சிகள் வெடித்தன. இங்கிலாந்து நாட்டினர் மூவர் இந்த வழக்கில் குற்றம் சாட்டப்பட்டதைத் தொடர்ந்து இந்த வழக்கு சர்வதேச அளவிலும் தெரியவந்தது. மிகவும் முக்கியமாக ரோமன் ரோலண்ட், ஆல்பர்ட் ஐன்ஸ்டீன் போன்றவர்களும் கூடக் குற்றம் சாட்டவர்களுக்கு ஆதரவாகக் குரல் கொடுத்தனர்.

தேசிய, சர்வதேச அழுத்தங்களின் காரணமாக, அவர்களின் கோரிக்கையைத் தொடர்ந்து ஜூலை 1933இல் தண்டனை வெகுவாகக் குறைக்கப்பட்டது.

5.3 பகத்சிங்கும் கல்பனா தத்தும்

பகத்சிங்கின் பின்புலம்

தேசியவாதத்தின் ஓர் ஒப்பற்ற நிலையைப் பகத்சிங் பிரதிநிதித்துவப்படுத்துகிறார். அவருடைய புரட்சிகர தேசியவாத நிலைப்பாடு, ஒரு தனித்த வழி என்ற அளவில் ஒட்டுமொத்த விடுதலை இயக்கத்தின் லட்சியங்களுக்காகப் பெரிதும் பாராட்டப்படுகிறது.

கிஷன்சிங் (தகப்பனார்), வித்யாவதி கவுர் (தாயார்) ஆகியோரின் மகனாக பகத்சிங், தற்போதைய பாகிஸ்தானின் ஒரு பகுதியான பஞ்சாப் மாநிலத்திலுள்ள லயல்பூர் மாவட்டம், ஜார்ன்வாலா என்ற இடத்தில் 1907 செப்டம்பர் 28இல் பிறந்தார். அவருடைய தகப்பனார் ஒரு தாராளவாதியாக இருந்தார். அவருடைய குடும்பத்தினர் சுதந்திரப் போராட்டக்காரர்களாக விளங்கினர். பகத்சிங்கின் 14ஆம் வயதில் ஜாலியன் வாலாபாக் படுகொலை நிகழ்ந்தது. அவர் தனது இளமைக் காலம் முதலாகவே, நவ்ஜவான் பாரத் சபா, ஹிந்துஸ்தான் ரிபப்ளிகன் அசோசியேஷன் ஆகிய அமைப்புகளில் தன்னை இணைத்துக்கொண்டார். இதில் இரண்டாவது அமைப்பு சச்சின் சன்யால், ஜோகேஷ் சட்டர்ஜி ஆகியோரால் தோற்றுவிக்கப்பட்டது. செப்டம்பர்

12th History_TM_Unit_5.indd 71 02-01-2023 16:35:39

"நான் படிக்க ஆரம்பித்தேன். என்னுடைய முந்தைய நம்பிக்கைகளும் தீர்மானங்களும் ஒரு குறிப்பிடத்தக்க அளவில் மாற்றத்திற்கு உள்ளானது. மிகவும் முக்கியமாக நமது முன்னோடிகளிடையே நிலவிய வன்முறைச் செயல்பாடுகள் மீதான மோகம் தீவிரமான சித்தாந்தங்களின் மூலம் மாற்றீடு செய்யப்பட்டது. இதில் மாயத்திற்கு இடமில்லை. கண்மூடித்தனமான நம்பிக்கைக்கும் இடமில்லை. யதார்த்தமான அணுகுமுறையே நமது ஒழுங்குமுறை ஆனது. தீவிரமான தேவை ஏற்படும் பட்சத்தில் மட்டுமே வன்முறையைக் கையாள்வது நியாயப்படுத்தக் கூடியதாக இருக்கும். அனைத்து வெகுஜன இயக்கங்களுக்கும் பொருந்தக்கூடிய ஒரு கொள்கையாக அஹிம்சை இருக்கும். வழிமுறைகள் ஏராளமாக இருக்கின்றன. நாம் எந்த லட்சியத்திற்காகப் போரிட்டோமோ அதன் தூய கருதுகோளே மிக முக்கியமானது." பகத்சிங்கின் "நான் ஏன் நாத்திகன் ஆனேன்?" என்னும் நூலிலிருந்து.

1928இல் அதனைத் தொடர்ந்து ஹிந்துஸ்தான் சோசலிஸ்ட் ரிபப்ளிகன் அசோசியேஷன் என்று பகத்சிங்காலும் அவரது தோழர்களாலும் பெயர் மாற்றம் செய்யப்பட்டு அவ்வமைப்புத் திருத்தியமைக்கப்பட்டது. 1917இல் ரஷ்யாவில் நடந்தேறிய அக்டோபர் புரட்சியும் சோசலிசச் சித்தாந்தங்களும் இந்தப் புரட்சியாளர்களிடையே பெரும் செல்வாக்கைச் செலுத்தியது. சந்திரசேகர ஆசாத், சிவராம் ராஜகுரு, சுகதேவ் தாபர் ஆகியோருடன் ஹிந்துஸ்தான் சோசலிஸ்ட் ரிபப்ளிகன் அசோசியேஷனின் தலைவர்களில் ஒருவராக பகத்சிங் விளங்கினார்.

பகத்சிங்கின் குண்டுவீச்சு

பகத்சிங்கின் பெயரை நாம் குறிப்பிடும்போதே நமது நினைவுக்கு வருகிற சித்திரம் அவர் 1929 ஏப்ரல் 8இல் மத்திய சட்டமன்றத்தில் குண்டு வீசிய நிகழ்வுதான். அந்தக் குண்டுகள் எவரையும் கொல்லவில்லை. ஆங்கிலேயர்களின் கொடுங்கோன்மைச் சட்டங்களுக்கு எதிரான ஒரு போராட்ட செயலாகச் செயல்பூர்வமான ஒரு நடவடிக்கையாகப் புரட்சியாளர்களால் அது கருதப்பட்டது. தொழிலாளர் வர்க்கத்திற்கு முற்றிலும் எதிரான ஒரு சட்டத்தைச் சட்டமன்றத்தில் நிறைவேற்றுவதற்காக அதற்கான தொழிற்தகராறுகள் மசோதாவை அறிமுகப்படுத்தும் நாளை அவர்கள் இதற்கெனத் தேர்ந்தெடுத்திருந்தனர்.

லாகூர் சதி வழக்கு

ராஜகுரு, சுகதேவ், ஜதீந்திரநாத் தாஸ் ஆகியோருடன் பகத்சிங்கும் மேலும் 21 பேரும் கைது செய்யப்பட்டனர். சாண்டர்ஸ் கொலை தொடர்பான விசாரணைக்கு அவர்கள் ஆளாக்கப்பட்டனர் (இந்த வழக்கு இரண்டாவது லாகூர் சதி வழக்கு என்று அறியப்படுகிறது). சிறையின் மோசமான நிலைமைகள், பாரபட்சமான நடவடிக்கைகள் ஆகியவற்றை எதிர்த்து உண்ணாவிரதம் மேற்கொண்ட ஜதீந்திரநாத் தாஸ் 64 நாட்களுக்குப் பின்னர் சிறையிலேயே மரணம் அடைந்தார். லாகூர் சதி வழக்கின் விசாரணைகள் முடியும்வரை குண்டு வீச்சு வழக்கின் தீர்ப்பு ஒத்திவைக்கப்பட்டிருந்தது. இந்த வழக்கில்தான் பகத்சிங், ராஜகுரு, சுகதேவ் ஆகியோருக்கு 1930 அக்டோபர் 7 அன்று மரண தண்டனை விதிக்கப்பட்டது.

ஜதீந்திரநாத் தாஸ்

தேசத்தின் விடுதலைக்காக மரணத்தை எதிர்கொள்ளும் தருணத்திலும் இந்தியாவின் எதிர்காலத்தைக் குறித்து நம்பிக்கையையும் துணிவையும் காட்டிப் பஞ்சாப் மாநில ஆளுநருக்கு அவர்கள் கடிதம் ஒன்றை அனுப்பினர். அந்தக் கடிதத்தில் "முதலாளித்துவம், ஏகாதிபத்தியம் ஆகியவற்றின் நாட்கள் எண்ணப்பட்டு வருகின்றன. இந்தப் போர் எங்களுடன் தொடங்கியதுமல்ல, எங்கள் வாழ்க்கையுடன் முடிவு பெறப்போவதுமல்ல.. நாங்கள் போர் தொடுத்ததால் போர்க் கைதிகள் ஆனோம் என்று உங்கள் நீதிமன்றத் தீர்ப்பு கூறுகிறது. அப்படியானால் எங்களைத் தூக்கிலிடுவதற்குப் பதிலாகச் சுட்டுக் கொல்லுங்கள்" என்று கோரப்பட்டிருந்தது.

பகத்சிங்கையும் அவருடன் இருந்த தேசபக்தர்களையும் புரட்சிகர தேசியவாதிகள் எனச் சில குறிப்புகள் விவரிக்கின்றன. அது ஒரு தவறான கருதுகோள் ஆகும். வரலாற்றுப் புகழ்பெற்ற பகத்சிங், பிற புரட்சிகர தேசியவாதிகளிடமிருந்து அவருடைய குழுவினர் எவ்விதம் வேறுபடுகின்றனர் என்று விளக்கம் அளித்துள்ளார். "புரட்சி என்பது வெறும் குண்டு எறிதலோ கைத்துப்பாக்கியால் சுடுவதோ அல்ல. புரட்சி என்பது மனிதகுலத்தின் பிரிக்க முடியாத உரிமை ஆகும். சுதந்திரம் என்பது அனைவரின் அழியாத பிறப்புரிமை ஆகும்.

12th History_TM_Unit_5.indd 72 02-01-2023 16:35:39

www.tntextbooks.in

உழைப்பாளிகள், சமூகத்தின் உண்மையான ஆதரவாளர்கள் ஆவர். இந்தப் புரட்சியின் பலிபீடத்தில் நாம் மாபெரும் லட்சியத்துக்காக அளிக்கும் எந்தத் தியாகமும் அதற்கு முன் பெரிதல்ல" என்று விசாரணையின்போது நீதிமன்றத்தில் அவர் கூறினார். இதனை உணர்த்தும் விதமாக அவர்களது தரப்பு அறிக்கையை விடுத்த பின்பு 'புரட்சி ஓங்குக' (Inquilab Zindabad) என்று அவர்கள் முழக்கமிட்டனர்.

லாகூர் சிறைச்சாலையில் 1931 மார்ச் 23 அன்று அதிகாலையில் பகத்சிங், ராஜகுரு, சுகதேவ் ஆகியோர் தூக்கிலிடப்பட்டனர். தங்கள் இறுதிமூச்சு அடங்கும்வரை ஆங்கிலேய ஏகாதிபத்தியத்திற்கு எதிராகப் 'புரட்சி ஓங்குக' என்று முழங்கியவாறு அவர்கள் தூக்குமரக் கொட்டடியை எதிர்கொண்டனர். தேசியத்தின் புரட்சிகரமான அணியினரான இந்தப் புரட்சியாளர்களின் ஆகச் சிறந்த தியாகம் இல்லாமல் விடுதலைப்போராட்டத்தின் வரலாறு முழுமை அடையாது. இது போன்ற வீரம் செறிந்த போராளிகளின் பட்டியலில் இடம்பெறும் இன்னொரு பெயர் கல்பனா தத்.

ஹிந்துஸ்தான் சோசலிஸ்ட் ரிபப்ளிகன் அசோசியேஷன் என்பது ஹிந்துஸ்தான் ரிபப்ளிகன் அசோசியேஷனின் புதுப்பிக்கப்பட்ட ஓர் அத்தியாயமே ஆகும். முதலாளித்துவ, ஏகாதிபத்திய அரசைத் தூக்கி எறிந்து புரட்சி ஒன்றின் மூலமாக ஒரு சோசலிசச் சமூகத்தை நிலைநாட்டுவதே அதன் குறிக்கோளாகும். ஹிந்துஸ்தான் சோசலிஸ்ட் ரிபப்ளிகன் அசோசியேஷன் லாகூரில் சாண்டர்ஸினைக் கொன்றது போன்ற பல நடவடிக்கைகளில் தன்னை ஈடுபடுத்திக்கொண்டது. 1928 டிசம்பர் மாதத்தில் லஜபதி ராய் மீது கொடுந்தாக்குதல் நடத்தியதற்கும் அதனைத் தொடர்ந்த ராயின் மரணத்திற்கும் பொறுப்பான லாகூர் காவல்துறைக் கண்காணிப்பாளர் ஜேம்ஸ் ஏ. ஸ்காட்டுக்குப் பதில் தவறுதலாக சாண்டர்ஸ் பலியானார். 1929, டிசம்பரில் இர்வின் பிரபு (1926 –1931 ஆம் ஆண்டுகளில் கவர்னர் ஜெனரலாகவும் வைஸ்ராயாகவும் இருந்தவர்) பயணம் செய்துகொண்டிருந்த ரயிலைக் கொளுத்தும் முயற்சியிலும் அவர்கள் ஈடுபட்டனர். 1930ஆம் ஆண்டில் பஞ்சாபிலும் உத்தரப்பிரதேசத்திலும் இதுபோன்ற எண்ணற்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

கல்பனா தத் (1913 – 1995)

கல்பனா தத்

1920களின் பிற்பகுதியில் கல்பனா தத் என்னும் ஓர் இளம்பெண் (கம்யூனிஸ்ட் தலைவர் பி. சி. ஜோஷியைத் திருமணம் செய்து கொண்ட பின்னர் கல்பனா ஜோஷி என்று அறியப்பட்டவர்) சிட்டகாங் ஆயுதப் படைத்தளத்தைத் துணிகரமாகத் தாக்கியதன் மூலம் இளம் நெஞ்சங்களில் தேசபக்தியைக் கனன்றெழச் செய்தவர்.

கல்பனா தத்தின் வீரத்தை அறிந்துகொள்வதற்கு, இந்த லட்சியங்களின்பால் அவரைப் போன்ற பெண்களை ஈர்த்த தேசியத்தின் புரட்சிகரத் தன்மையைக் குறித்து நீங்கள் அறிந்துகொள்ள வேண்டும். பிரிட்டிஷ் இந்தியாவில் பல புரட்சிக் குழுக்கள் இருந்தன என்று ஏற்கெனவே அறிந்துகொண்டீர்கள். தனித்தனியாக ஒவ்வொருவரைக் கொன்றொழிப்பது என்பதிலிருந்து சமூக அமைப்பில் மாபெரும் மாற்றத்தை ஏற்படுத்தும் நோக்குடன் கூட்டான நடவடிக்கைகளை மேற்கொள்வது என்பதாக இந்த அமைப்புகளின் தன்மை படிப்படியாக மாறியது.

சிட்டகாங் ஆயுதப் படைத் தாக்குதலின் புரட்சிகரத் தலைவரான சூரியா சென் "தனிப்பட்ட நடவடிக்கைகளின் இடத்தில் ஆயுதம் தாங்கிய போராட்டத்தை ஏற்பாடு செய்வது என்னும் பாதையை ஓர் அர்ப்பணிப்பு மிக்க இளைஞர் பட்டாளம் காட்டித்தர வேண்டும். அதன் போக்கில் நம்மில் பலர் இறக்க நேரிடும். ஆனால் அத்தகைய உன்னத நோக்கத்திற்கான நமது தியாகம் வீண் போகாது" என்று ஆனந்த குப்தாவிடம் கூறினார். 1920களின் நடுப்பகுதியில் யுகந்தர், அனுஷிலன் சமிதி போன்ற புரட்சிகரக் குழுக்கள் தேக்கமடைந்துவிட, அவற்றிலிருந்து புதிய குழுக்கள் தோன்றின. அவற்றுள் வங்காளத்தில் பள்ளிக்கூடம் ஒன்றில் ஆசிரியராகப் பணிபுரிந்த சூரியா சென்னின் தலைமையில் செயல்பட்ட குழு முக்கியமானதாகும். அவர் ஒத்துழையாமை இயக்கத்தில் தீவிரமாகப் பங்கெடுத்ததுடன், கதரையும் அணிந்துவந்தவர். அவருடைய குழு இந்திய தேசிய காங்கிரசின் சிட்டகாங் பிரிவுடன் மிகவும் நெருக்கமாக இணைந்து செயல்பட்டது.

12th History_TM_Unit_5.indd 73 02-01-2023 16:35:39

போர்த் தளவாடக்கிடங்குத் தாக்குதலின் போது தப்பித்த இருவர் 1932 ஜூன் 13இல் அரசுப் படைகளுக்கு எதிராக நேருக்கு நேர் மோதல் ஏற்பட்டபோது, கொல்லப்பட்டனர். அதே வேளையில் அவர்கள் தல்காட் கிராமத்தில் அரசுப்படைகளின் தளபதி கேப்டன் கேமரூனை ஒரு ஏழை பிராமண விதவையான சாவித்ரி தேவி என்பாரின் வீட்டில் கொன்றனர். இந்த சம்பவத்திற்குப் பிறகு அவ்விதவைப் பெண்மணி அவரது குழந்தைகளுடன் கைதுசெய்யப்பட்டார். விசாரணையின்போது அப்பெண்மணிக்கு வேண்டியளவு உதவி செய்வதாகத் தூண்டியும் அவரிடமிருந்து ஒரு வார்த்தையைக் கூட காவல்துறையால் பெற முடியவில்லை. படிப்பறிவற்ற ஏழையாயிருந்தும் தங்கம் போன்றப் பொருள்களுக்கு ஆசைப்படாமல் தயக்கமின்றி அத்தனைக் கொடுமைகளையும் பழியையும் தாங்கிக்கொள்ள முடிந்தது.

கல்பனா தத்தின் சுயசரிதையில் இருந்து.
(*Chittagong Armoury Raiders' Reminiscences*)

சிட்டகாங் ஆயுதப்படைத் தாக்குதல்


சூரியா சென்

சூரியா சென்னின் புரட்சிகரக் குழுவான இந்தியக் குடியரசு இராணுவம் ஐரிஷ் குடியரசுப் படைக்குப் பின் அதுபோன்று பெயர் சூட்டிக்கொண்டது. சிட்டகாங்கைக் கைப்பற்றுவதற்காக மறைந்திருந்து தாக்கும் கொரில்லா பாணி தாக்குதலை நடத்த அவர்கள் திட்டமிட்டனர். 1930 ஏப்ரல் 18 அன்று இரவில் சிட்டகாங் படைத்தளம் தாக்கித் தகர்க்கப்பட்டது. மாகாணத்தின் பிற பகுதிகளிலிருந்து தனிமைப்படுத்தும் முகமாக ரயில்வே உட்பட அனைத்துத் தகவல்தொடர்பு வலைப்பின்னல்களையும் துண்டிக்கும் பொருட்டு தந்தி, அலுவலகங்கள், படைத்தளங்கள், காவல்துறை முகாம்கள் ஆகியவற்றின் மீது அது போன்ற தாக்குதல்கள் தொடுக்கப்பட்டன. காலனிய நிர்வாகத்திற்கு நேரடியாகச் சவால் விடுக்கும் நோக்குடன் அது நடந்தேறியது.

புரட்சியாளர்கள் தேசியக்கொடியை ஏற்றி 'வந்தே மாதரம்', 'புரட்சி ஓங்குக' போன்ற கோஷங்களை முழங்கிக் குறிப்புணர்த்தினர். இந்தத் தாக்குதல்களும் எதிர்ப்பும் அடுத்த மூன்று ஆண்டுகளுக்குத் தொடர்ந்தன. பெரிதும் அவர்கள் கிராமங்களிலிருந்து செயல்பட்டனர். கிராமத்தினர் அவர்களுக்கு உணவும் உறைவிடமும் அளித்தனர். அதற்காக அவர்கள் காவலர்களால் பெரும் துன்பத்திற்கு ஆளாகினர். தொடர்ந்த நடவடிக்கைகளின் காரணமாக ஆயுதப்படைத் தாக்குதல் தொடர்பான விசாரணையும் நடைபெற்றது. சூரியா சென்னைக் கைது செய்ய மூன்று ஆண்டுகள் பிடித்தன. பிப்ரவரி 1933இல் அவர் கைதானார். பதினொரு மாதங்கள் கழித்து 1934 ஜனவரி 12இல் அவருக்குத் தூக்குத்தண்டனை நிறைவேற்றப்பட்டது. இந்த சிட்டகாங் தாக்குதலில் ஈடுபட்டவர்களில் கல்பனா தத்தும் ஒருவர் ஆவார்.

அதிரடி செயல்களில் பெண்கள்

நாட்டின் சுதந்திரத்திற்காகத் தங்களை அர்ப்பணித்துக்கொண்ட இளைஞர்கள் பலரைப் பிரதிநிதித்துவப்படுத்த பகத்சிங் போன்றோர் இருக்கின்ற அதே வேளையில், ஆணாதிக்கமிக்க இச்சமூகத்தில் தாய்நாட்டைக் காப்பதற்காய் இளம்பெண்களின் பிரதிநிதியாய் விடுதலைப்போரில் ஆயுதந்தாங்கி கல்பனா தத் போன்றோரும் பங்கேற்றனர். வெறும் செய்திகளை அங்குமிங்கும் எடுத்துச் செல்பவராய் மட்டுமின்றி, போரின் நேரடி நடவடிக்கைகளில் பங்கு பெற்று, துப்பாக்கிக் கொண்டு ஆண்களுடன் இணைந்து போராடினர்.

புரட்சிகர சிட்டகாங் இயக்கத்தில் தீவிரமாகப் பங்கேற்றதினால் கல்பனா தத் கைது செய்யப்பட்டார். தண்டனையாக சூர்யா சென்னும் கல்பனா தத்தும் வாழ்நாள் முழுதும் நாடுகடத்தப்பட்டனர். சுமத்தப்பட்டக் குற்றச்சாட்டு யாதெனில் "பேரரசருக்கு எதிரான போரை நடத்தியது." சிட்டகாங் ஆயுதக்கிடங்கு தாக்குதல் தொடங்கி அவர்கள் மீதான ஒட்டுமொத்த வழக்கு விசாரணையும் சிட்டகாங் ஆயுதக்கிடங்கு வழக்கு என அறியப்படுகிறது.

Chittagong Armoury Raiders' Reminiscences என்னும் தனது நூலில் சிட்டகாங்கின் புரட்சிகர இளைஞர்கள் நம்பிக்கையுடன் போரிட்டால் வெளியாட்களின் உதவியின்றி கூட அரசாங்கத்தை எதிர்த்துப் போராட முடியும் என்று நிரூபித்துள்ளதை நினைவூட்டுகிறார்.

5.4 இந்திய தேசிய காங்கிரசின் கராச்சி அமர்வு, 1931

இந்திய தேசிய காங்கிரஸ், புரட்சியாளர்களின் வன்முறைச் செயல்களுக்கு மாறாக, வன்முறையற்ற போராட்டங்களுக்கு மக்களை அணிதிரட்டியது. காந்தியடிகளின் தலைமையின் கீழ் காங்கிரஸ்

12th History_TM_Unit_5.indd 74 02-01-2023 16:35:39

விவசாயிகளின் பிரச்சினைகளுக்கு முன்னுரிமை அளித்தது. உலக அளவிலான பொருளாதார பெருமந்தநிலையால் விவசாயம் பெருமளவில் பாதிக்கப்பட்டு விவசாயிகளும் சொல்லொணாத் துயரத்தில் இருந்ததால் காங்கிரஸ் விவசாயிகளை அணிதிரட்டியது. தனது சட்டமறுப்பு இயக்கத்தின் ஒரு பகுதியாக காங்கிரஸ் குத்தகை செலுத்தா மற்றும் வரிசெலுத்தாப் போராட்டத்தைக் கடைபிடித்தது. பெருமந்த அழுத்தத்தினால் ஏற்பட்ட சமூக–பொருளாதாரத் தேவைகள் கராச்சியின் காங்கிரஸ் அமர்வில் தீவிரமாய் பேசப்பட்டது.

கராச்சி அமர்வு

விடுதலைப் போராட்டம் ஒரு புதிய வடிவம் பெற்றது. விவசாயிகள் கிசான் சபா எனப்படும் விவசாயிகள் சங்கத்தில் தங்களை இணைத்துக் கொண்டும் தொழிலாளர்கள் தொழிற்சங்கங்களில் இணைந்துகொண்டும் தங்களது பெரிய அளவிலான ஈடுபாட்டைச் சுதந்திரப் போராட்டக்களத்தில் உணர்த்தினர். 1930களில் இந்திய தேசிய காங்கிரஸ் ஒரு பெரும் மக்கள்கட்சியாக உருவெடுத்தது. நேருவின் தலைமையின் கீழ் வந்த காங்கிரஸ் சமூக மற்றும் பொருளாதாரநீதி அடிப்படையில் ஒரு சமத்துவ சமூகத்தைப் பற்றிப் பேச ஆரம்பித்தது.

மார்ச் 1931இல் நடந்த கராச்சி அமர்வு சர்தார் வல்லபாய் படேல் தலைமையில் அடிப்படை உரிமைகள் மற்றும் கடமைகளில் ஒரு தீர்மானத்தை நிறைவேற்றியதோடல்லாமல் சுதந்திர இந்தியாவின் பொருளாதார கொள்கை பற்றிய ஒரு பார்வையை வழங்கியது. பின் இதுவே சுதந்திர இந்தியாவிற்கான இந்திய தேசிய காங்கிரசின் கொள்கை அறிவிப்பு விளக்கமானது. இந்த உரிமைகளும் சமூக மற்றும் பொருளாதாரத் திட்டங்களும் உறுதிசெய்வது யாதெனில் அரசியல் சுதந்திரம் மற்றும் பொருளாதாரச் சுதந்திரம் என்பது பிரித்துப் பார்க்கமுடியாத ஒன்றாகும்.

அடிப்படை உரிமைகள் தீர்மானத்தை மேலோட்டமாய் பார்த்தால்கூட பிரிட்டிஷாரால் நமது அடிப்படை உரிமைகள் எப்படியெல்லாம் மறுக்கப்பட்டுள்ளது என்பதை அப்பட்டமாய்த் தெரிந்து கொள்ளமுடியும். அதனாலேயே அடிப்படை உரிமைகள் தீர்மானத்தில் முக்கிய இடம் பிடித்துள்ளன. கொடூரமான சட்டங்கள் போட்டும், அடக்குமுறைகளைக் கையாண்டும் மக்களின் சுதந்திரத்தைக் காலனியரசு நசுக்கியது. சுதந்திர இந்தியாவில் இந்திய தேசிய காங்கிரஸ் தான் வழங்க உறுதியளித்துள்ள உரிமைகள் பட்டியலில் காந்தியடிகளின் கொள்கைகளும் நேருவின் சோசலிச பார்வைகளும் இடம் பெற்றன. தற்போதைய சமூக உறவுகள், குறிப்பாகச் சாதி அமைப்பு மற்றும் தீண்டாமை நடைமுறை ஆகியவை பொது இடங்களிலும் நிறுவனங்களிலும் சமமான அணுகுமுறையை உறுதி செய்ய சவாலாய் இருந்தன.

அடிப்படை உரிமைகள், உண்மையில் இந்திய அரசமைப்பின் பகுதி IIIல் இடம்பெற்றுள்ளன. அவற்றுள் சில, பகுதி IVல் நாட்டின் அரசு வழிகாட்டு நெறிமுறைகளில் இடம்பெற்றுள்ளன.

5.5 உலகப் பெருமந்தமும் இந்தியாவில் அதன் தாக்கமும்

பங்குச் சந்தை வீழ்ச்சி,
அமெரிக்காவின் வால் தெரு (Wall Street)

உலகப் பெருமந்த நிலை 1929இல் இருந்து ஒரு பத்தாண்டாக நீடித்த ஒரு கடுமையான மற்றும் நீடித்தப் பொருளாதார நெருக்கடி ஆகும். மந்தமான பொருளாதார நடவடிக்கைகள், குறிப்பாகத் தொழிலகத்தில் உற்பத்திக் குறைப்பு, கதவடைப்பு, ஊதிய குறைப்பு, வேலையின்மை மற்றும் பட்டினி போன்ற நெருக்கடிகளுக்கு இட்டுச் சென்றது. வட அமெரிக்காவில் தொடங்கிய பொருளாதாரப் பெருமந்தமானது ஐரோப்பாவையும் உலகின் அனைத்துத் தொழில்துறை மையங்களையும் பாதித்தது. உலகம் அதன் காலனித்துவ ஒழுங்கினால் ஒருங்கிணைக்கப்பட்டிருந்ததால், அதன் பொருளாதார மண்டலத்தில் உலகின் ஒரு பகுதியில் ஏற்படும் வளர்ச்சியானது மற்ற பகுதிகளையும் பாதித்தன.

12th History_TM_Unit_5.indd 75 02-01-2023 16:35:40

அமெரிக்காவில் வால் தெருவில் (Wall Street) உண்டான (அமெரிக்கப் பங்குச் சந்தை அமைந்துள்ள இடம்) பெரும் அளவிலான பொருளாதார வீழ்ச்சி உலகையே உலுக்கியது. இது இந்தியாவையும் தாக்கியது. பிரிட்டிஷ் காலனித்துவம் இந்தியாவின் நிலைமையை மேலும் மோசமாக்கியது. பெருமந்தம் உற்பத்தித்தொழில், வேளாண் துறைகள் என இரண்டையும் பாதித்தது. தொழில்துறை மையங்களான பம்பாய், கல்கத்தா, கான்பூர், ஐக்கிய மாகாணம், சென்னை ஆகிய இடங்களில் ஊதியக் குறைப்புகள், வேலை முடக்கம் ஆகியவற்றிற்கு எதிராகவும் வாழ்க்கை நிலையை மேம்பாடடையச் செய்யக் கோரியும் தொழிலாளர் போராட்டம் வெடித்தது. வேளாண் துறையில், சணல் மற்றும் கச்சாப் பருத்தி போன்ற ஏற்றுமதி விவசாயப் பொருட்களின் விலைகள் அதலபாதாளத்தில் சரிந்தன. 1929–1930இல் ₹.311 கோடியாயிருந்த இந்திய ஏற்றுமதியின் மதிப்பு 1932–1933இல் ₹.132 கோடியாகச் சரிந்தது. எனவே, 1930களில் தோன்றிய கிசான் சபாக்கள் குத்தகைக் /வாடகைக் குறைப்புகள், கடன் பிடியிலிருந்து நிவாரணம், ஜமீன்தாரி முறை அகற்றப்படுதல் ஆகியவற்றிற்காகப் போராடியது.

இந்தியத் தொழில்துறைக்குக் கிடைத்த ஒரே நேர்மறைத் தாக்கம் குறைக்கப்பட்ட விலையில் கிடைத்த நிலங்கள் மற்றும் மலிவான ஊதியத்தில் கிடைத்த தொழிலாளர்கள். பிரிட்டனுடனும் பிற முதலாளித்துவ நாடுகளுடனும் ஏற்பட்ட பலவீனமான உறவுகளால் சில இந்திய தொழில்களில் வளர்ச்சியடைந்தன. ஆயினும் உள்ளூர் நுகர்வுக்கு முக்கியத்துவமளித்த தொழில்கள் மட்டுமே செழித்தோங்கியன.

5.6 இந்தியாவில் தொழில்துறை வளர்ச்சி

பிரிட்டிஷ் வணிகக் கொள்கையானது உள்நாட்டுத் தொழில்துறையைப் பெரும் எண்ணிக்கையாக்கியது. இந்தியாவைத் தொழில்மயமாக்குதல் பிரிட்டிஷ் கொள்கையின் ஒரு பகுதி அல்ல. மற்ற காலனிகளைப் போலவே இந்தியாவும் ஒரு மூலப்பொருள் கொள்முதல் செய்யும் பகுதியாகவும் உற்பத்திப்பொருட்களுக்கான சந்தையாகவும் கருதப்பட்டது.

இதுமட்டுமன்றி, முதல் உலகப்போரின் போதும் பொருளாதாரப் பெரும் மந்தம் போன்ற சில எதிர்பாராத சந்தர்ப்பங்கள் காரணமாகவும் இந்தியாவில் தொழில்துறை விரிவாக்கம் ஏற்பட்டது.

கவஸ்ஜீ நானாபாய் தவர்

1854இல் பம்பாயில் கவஸ்ஜீ நானாபாய் தவர் (1815–73) என்ற பார்சி இனத்தைச் சேர்ந்த இந்தியரே பருத்தி ஆலையை முதன்முதலில் தொடங்கினார். இது பாம்பே ஸ்பின்னிங் அண்ட் வீவிங் கம்பெனி என்று அறியப்பட்டது. நகரத்தின் முன்னணி வர்த்தகர்கள், பெரும்பாலும் பார்சிக்கள், இந்த முயற்சிக்குப் பங்களிப்புச் செய்தனர். அமெரிக்க உள்நாட்டுப் போர் (1861–65) பருத்தி விவசாயம் செய்தோருக்கு ஒரு வரம். ஆனால் உள்நாட்டுப் போருக்குப்பின் பிரிட்டன் அமெரிக்காவிலிருந்து தொடர்ந்து பருத்தி இறக்குமதி செய்ததால் இந்தியப் பருத்தி விவசாயிகள் துயரத்திற்குள்ளாயினர். ஆனால், ஐரோப்பியர்கள் பருத்தியின் மலிவான, அபரிதமான உற்பத்தியால் இந்தியாவில் ஜவுளித் தொழிற்சாலைகளைத் துவக்கினர், இந்தியத் தொழில் முனைவோரால் அகமதாபாத் ஜவுளி ஆலைகள் நிறுவப்பட்டதும், அகமதாபாத் மற்றும் பம்பாய் ஆகியவை பருத்தி ஆலைகளின் முக்கிய மையங்களாக மாறின. 1914ஆம் ஆண்டு வாக்கில், பம்பாய் மாகாணத்திற்குள் 129 நூற்பு, நெசவு மற்றும் பிற பருத்தி ஆலைகள் இருந்தன. 1875–76க்கும் 1913–14க்கும் இடைப்பட்ட காலத்தில் இந்தியாவில் பருத்தி ஜவுளி ஆலைகள் எண்ணிக்கை 47 லிருந்து 271 ஆக அதிகரித்தது.

இந்தியாவில் தொழில்துறையை நிறுவுவதில் ஒரு முக்கியமான மைல் கல் இந்தியாவின் இருப்புப்பாதை விரிவாக்கமும் புகைவண்டிப் போக்குவரத்து அதிகரித்ததுமேயாகும். முதல் பயணிகள் ரயில் 1853இல் பம்பாய்க்கும்

ஏப்ரல் 16, 1853, 3:35 பிற்பகல் அன்று இந்தியாவின் முதல் இரயில் பயணம் பம்பாயிலுள்ள போரி பந்தர் இரயில் நிலையத்திலிருந்து புறப்பட்டு 34 கி.மீ. தொலைவிலுள்ள தானே எனுமிடத்தைச் சென்றடைந்தது.

12th History_TM_Unit_5.indd 76 02-01-2023 16:35:40

www.tntextbooks.in

தானேவுக்குமிடையே இயங்கியது. இருபதாம் நூற்றாண்டின் முதல் பத்தாண்டில் இந்தியாவின் மிகப்பெரிய பொறியியல் தொழில் இரயில்வே ஆகும். பிரிட்டிஷாரால் நிர்வகித்து, ரயில்வே நிறுவனங்களால் நடத்தப்பட்ட இந்த நிறுவனத்தில் 1911இல் 98,723 நபர்கள் பணியில் இருந்தனர். இரயில்வே, இதரப் போக்குவரத்து மற்றும் தொலைத்தொடர்பு வசதிகளின் வருகை பல்வேறு துறைகளின் வளர்ச்சிக்கு உதவியது.

துவாரகநாத் தாகூர்

இந்தியாவில் பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதி மற்றும் இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் சணல் உற்பத்தி மற்றொரு தொழில் ஆகும். முதல் சணல் உற்பத்தி ஆலை கல்கத்தாவில் 1855இல் நிறுவப்பட்டது. சணல் தொழில் வளர்ச்சி மிகவும் விரைவாக இருந்ததால் 1914ஆம் ஆண்டில் கல்கத்தா மாகாணத்தில் மட்டும் 64 ஆலைகள் இருந்தன. இருப்பினும், பாம்பே துணி ஆலைகள் போலன்றி, இந்த ஆலைகள் ஐரோப்பியர்களுக்குச் சொந்தமானவை. பத்தொன்பதாம் நூற்றாண்டின் தொழில்துறை வளர்ச்சி முக்கியமாகப் பருத்தி, சணல் போன்ற பல துறைகளில் மட்டுப்படுத்தப்பட்டிருந்தாலும். இதனை மடைமாற்றப் பல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. உதாரணமாக, 1843இல் ரவீந்திரநாத் தாகூரின் தாத்தா துவாரகநாத் தாகூர் (1794–1847) என்பவரால் ராய்கஞ்ச் என்ற இடத்தில் பெங்கால் நிலக்கரி நிறுவனம் நிறுவப்பட்டது. 1892க்குப் பிறகு நிலக்கரி உற்பத்தித் துறையின் வளர்ச்சி வேகமெடுத்து முதல் உலகப்போரின் போது உச்சத்தையெட்டியது.

இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் இந்தியாவில் தொழில்துறை மாற்றுப்பாதையில் விரிவுபடத் தொடங்கியது. 1907இல் பீகாரிலுள்ள சாகி நகரில் டாடா குழுமத்தால் டாடா இரும்பு மற்றும் எஃகு நிறுவனம் (TISCO) – முதன்முதலில் சுதேசி இயக்கத்தின் ஒரு நிகழ்வாக அமைக்கப்பட்டது. இதற்கு முன்னர், 1875இல் ஐரோப்பியர்கள் குழு ஒன்று வங்காள இரும்பு நிறுவனத்தை நிறுவ முயற்சித்தது. இதைத் தொடர்ந்து 1889இல் வங்காள இரும்பு மற்றும் எஃகு ஆலை அமைக்கப்பட்டது. இருப்பினும், இந்தத் துறையில் உள்ள மற்ற முயற்சியாளர்களைவிட டாடா மிக உன்னத நிலையை

டாடா இரும்பு மற்றும் எஃகு நிறுவனம் (TISCO)

ஜே.என். டாடா

ஜே.என். டாடா எனப் பிரபலமாய் அறியப்பட்ட ஜாம்ஷெட்ஜி நுஸர்வஞ்சி டாடா (1839 – 1904), பரோடாவில் உள்ள நவ்சாரி என்ற இடத்தில் ஒரு பார்சி (ஜொராஷ்ட்ரியன்) வணிகக் குடும்பத்திலிருந்து வந்தவர். இந்தியாவின் முதல் வெற்றிகரமான தொழிலதிபர் இவர் என்பதால், இந்திய நவீனத் தொழிலகங்களின் தந்தை என அழைக்கப்படுகிறார். தனது தந்தையின் வியாபாரத்திற்கு உதவும் பொருட்டு, அவர் உலகம் முழுவதிலும் பயணம் மேற்கொண்டார். மேலும் அவருடைய அனுபவம் எதிர்கால முயற்சிகளுக்கு இது உதவியது. 1868இல் நிறுவப்பட்ட அவருடைய வர்த்தக நிறுவனம் டாடா குழுமம் என்றானது. ஒரு தேசியவாதியாய், குர்லா, பம்பாயில் உருவாக்கிய தனது நிறுவனம் ஒன்றிற்கு "சுதேசி" எனப் பெயரிட்டார். அவரது மகன்களான தோரப்ஜி டாடா மற்றும் ரத்தன்ஜி டாடா ஆகியோர் அவரது கனவுகளை நனவாக்கி வந்தனர். தோரப்ஜி டாடா அவரது தந்தையின் நீண்ட காலக் கனவான இரும்பு மற்றும் எஃகு நிறுவனத்தை 1907ஆம் ஆண்டில் நிறுவினார். இதற்காக அவர் இரண்டு ஆண்டுகள் அமெரிக்காவில் உள்ள அமெரிக்கன் இரும்புத் தொழிலகங்களில் உத்வேகத்துடன் நுணுக்கங்களைக் கற்றுத் தேர்ந்தார். ஒரு நீர்மின்சக்தி நிறுவனத்தை அமைப்பதற்கான அவரது மற்றொரு கனவு அவரது வாழ்நாளுக்குள் நிறைவேறவில்லையெனினும் 1910இல் மிகப்பெருமளவில் டாடா நீர்மின்சக்தி நிறுவனம் உதயமானது. தொலைநோக்குப் பார்வையுடன் இந்திய அறிவியல் கழகம் ஒன்றை பெங்களூரில் டாடா குழுமம் நிறுவியுள்ளது.

12th History_TM_Unit_5.indd 77 02-01-2023 16:35:40

அடைந்துள்ளது. அதன் உற்பத்தி 1912–13இல் 31,000 டன்னிலிருந்து 1917–18இல் 1,81,000 டன்னாக அதிகரித்துள்ளது.

முதல் உலகப் போர் நாட்டைத் தொழில் மயமாக்குவதற்கு ஒரு இடைக்காலத் தடையாய் இருந்தது. முதல் முறையாக, பிரிட்டனின் கிழக்கு நோக்கிய திட்டமிடலுக்கு ஜப்பான் சவாலாய் இருந்தது. பாரம்பரியமிக்க வர்த்தகப் பாதைகள் தாக்குதலுக்கு உள்ளாகலாமென்பதால் தன் தேவைகளைப் பூர்த்தி செய்ய இந்தியாவில் தொழில்துறையின் வளர்ச்சி அவசியம். எனவே, பிரிட்டன் தனதுக் கட்டுப்பாட்டிலிருந்த இந்திய முதலீட்டாளர்களுக்கு சில சலுகைகள் வழங்கியது. பிரிட்டிஷ் அரசாங்கத்தின் ஒப்பீட்டுத் தளர்வுக் கட்டுப்பாடு மற்றும் போரினால் கிடைத்த உள்நாட்டுச் சந்தை விரிவாக்கம், தொழில்மயமாக்கலை எளிதாக்கியது. முதல் முறையாக 1916இல் ஒரு தொழிற்துறை ஆணையம் நியமிக்கப்பட்டது. போர் காலத்தில் பருத்தி மற்றும் சணல் தொழில்கள் அதிக வளர்ச்சியைக் காட்டின. இக்காலத்தில் எஃகு தொழிற்துறையானது கணிசமான வளர்ச்சியைக் கொண்ட மற்றொரு துறை ஆகும்.

மேலும் வளர்ச்சியடைந்த தொழில் நிறுவனங்கள் காகிதம், வேதிப்பொருட்கள், சிமெண்ட், உரங்கள், தோல் பதனிடுதல், முதலியன. 1882ஆம் ஆண்டில் லக்னோவில் முதல் காகித ஆலை இந்திய முதலாளிகளால் – கூப்பர் பேப்பர் மில் என்ற பெயரில் அமைக்கப்பட்டது. இதைத் தொடர்ந்து ஐரோப்பியர்களால் இதகர் காகித ஆலை மற்றும் பெங்கால் காகித ஆலை நிறுவப்பட்டது. 1904இல் மதராஸ் நகரில் தென்னிந்திய தொழிற்சாலை நிறுவனம் சிமெண்ட் உற்பத்தியைத் தொடங்கியது. 19ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் தோல் பதனிடும் தொழிற்சாலைகள் தொடங்கப்பட்டன. 1860இல் கான்பூரில் அரசால் ஒரு தோல் பதனிடும் தொழிற்சாலை அமைக்கப்பட்டது. 1905இல் முதன் முதலாக இந்தியருக்குச் சொந்தமான தேசிய தோல் பதனிடும் தொழிற்சாலை ஒன்று கல்கத்தாவில் அமைக்கப்பட்டது. 19ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் மைசூர் கோலார் தங்கச் சுரங்கத்தில் தங்கம் வெட்டியெடுக்கும் பணி தொடங்கப்பட்டது.

RJCIH

போர்களுக்கு இடைப்பட்ட காலப்பகுதி உற்பத்தித் தொழில்களின் வளர்ச்சியைப் பதிவுசெய்துள்ளது. ஆச்சரியத்தக்கவகையில் பிரிட்டன் மற்றும் உலக சராசரியை விடவும் இந்தியத் தொழில்களின் வளர்ச்சி சிறப்பாக இருந்தது. 1923–24இல் ஒரு சிறிய தடுமாற்றத்திற்குப் பிறகு, நெசவுத் தொழில் சிறப்பாக செயல்படத் தொடங்கியது. போர்களுக்கு இடைப்பட்ட காலத்தில், தறிகள் மற்றும் சுழல் அச்சுக்கள் எண்ணிக்கையில் கணிசமாய் உயர்ந்தன.

1929–30களில் இந்தியாவால் 44 சதவீதம் வெளியில் இருந்து நுகர்வு செய்யப்பட்ட பருத்திப் பொருட்கள் 1933–34இல் பெருமந்தநிலைக்குப் பின்னர், 20.5 சதவிகிதமாகக் குறைந்துவிட்டது. வளர்ச்சியைப் பதிவு செய்த ஏனைய இரண்டு தொழில்கள் சர்க்கரை உற்பத்தியும் சிமெண்ட் உற்பத்தியும் ஆகும் போர்களுக்கு இடைப்பட்ட ஆண்டுகளில் கப்பல் தொழிலும் வளர்ச்சியைக் கண்டது. சிந்தியா நீராவிக் கப்பல் கம்பெனி லிமிடெட் (1919) ஏனையவற்றிற்கு முன்னோடியாக இருந்தது. 1939இல், அவர்கள் பிரிட்டிஷாரின் பம்பாய் நீராவிக் கப்பல் நிறுவனத்தையும் வாங்கிவிட்டனர். இந்த துறையில் எட்டு இந்திய நிறுவனங்கள் செயல்பட்டு வந்தன. இரண்டாம் உலகப் போருடன் ஒரு புதிய கட்ட உற்பத்தி துவங்கி, அது இயந்திர உற்பத்தி, விமானப் போக்குவரத்து, ரயில்பெட்டி, ரயில் எஞ்சின் உற்பத்தி மற்றும் பலவற்றிற்கான உற்பத்தித் தொழில்களாய் விரிவடைந்தது

பொருளாதாரப் பெருமந்தத்தின் போது தமிழ்நாட்டில் தொழில்துறை வளர்ச்சி



ஸ்டேன்ஸ் நூற்பு மற்றும் நெசவு ஆலை – கோயம்புத்தூர்

சென்னை மாகாணத்தில் தொழில்துறை வளர்ச்சி கணிசமானதாக இருந்தது. கோயம்புத்தூரில், 1896இல் ஸ்டேன்ஸ் மில் (கோயம்புத்தூர் நூற்பு மற்றும் நெசவு ஆலை) நிறுவப்பட்ட பின் வேறு எந்த ஆலைகளும் வரவில்லை. பொருளாதாரப் பெருமந்தத்தால் ஏற்பட்ட நிலத்தின் விலை வீழ்ச்சி, குறைந்த ஊதியத்தில் தொழிலாளர்கள், குறைந்த வட்டி விகிதத்தில் கடன் போன்றவை கோயம்புத்தூரில் ஜவுளித்துறையின் விரிவாக்கத்திற்கு வழிவகுத்தன. 1929–37களில்

www.tntextbooks.in

கோயம்புத்தூரில் இருபத்து ஒன்பது ஆலைகள் மற்றும் விதை நீக்கும் தொழிற்சாலைகள் தோன்றின. 1932இல் கோயம்புத்தூர் மாவட்டத்தில் மதுக்கரை என்ற இடத்தில் சிமெண்ட் தொழிற்சாலை தொடங்கப்பட்டது. இது மாநிலத்திற்கே ஊக்கம் தருவதாயிருந்தது. 1931 – 1936க்கு இடையில் மாகாணத்தில் உள்ள சர்க்கரை ஆலைகளின் எண்ணிக்கை இரண்டிலிருந்து பதினொன்றாய் உயர்ந்தது. இதே காலத்தில் அரிசி ஆலைகள், எண்ணெய் ஆலைகள் மற்றும் சினிமா நிறுவனங்களின் பெருக்கமும் அதிகரித்தது.

பாடச் சுருக்கம்

- 1920 – 30களில் உண்டான முற்போக்கு எழுச்சி, முற்றிலும் வேறுபட்ட தேசியவாதம்.
- இந்திய கம்யூனிஸ்ட் கட்சி நிறுவப்பட்டது மற்றும் கான்பூர் சதி மற்றும் மீரட் சதி வழக்குகளோடு கம்யூனிஸ்ட் நடவடிக்கைகள் முடிவுக்கு வந்தது
- இளம் பெண்களும் புரட்சிகர இயக்கங்களில் பங்கு பெற்றனர். அவ்விளம்பெண்களில் ஒருவர் கல்பனா தத் ஆவார்.
- பகத் சிங், ராஜகுரு, சுகதேவ் மற்றும் சூரியாசென் போன்ற பெரிய புரட்சியாளர்கள் இந்திய சுதந்திரத்திற்காகத் தங்கள் இன்னுயிரையே தியாகம் செய்தனர்.
- 1930களில் தோன்றிய பொருளாதாரப் பெருமந்தம் உலக அளவில் தாக்கத்தை ஏற்படுத்தியது. கிரேட் பிரிட்டனின் காலனியாக இருந்த இந்தியா மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்டது. பத்தொன்பதாம் நூற்றாண்டின் இரண்டாம் பாதியில் இருந்து போர்களுக்கு இடைப்பட்ட காலம் வரை இந்தியாவின் தொழில் வளர்ச்சியானது பிரிட்டனின் எந்தவிதமான ஆதரவுமின்றி தொடங்கப்பட்டு முதல் உலகப்போர் மற்றும் பின்னர் தோன்றிய பெருமந்தம் ஆகியவற்றையும் தாண்டி உன்னத நிலைமையை அடைந்துள்ளது.

பயிற்சி

I. சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்.

1. இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி எந்த ஆண்டு தொடங்கப்பட்டது?

   (அ) 1920 (ஆ) 1925 (இ) 1930 (ஈ) 1935

2. கல்பனா தத் எதனுடன் தொடர்புடையவர்?

   (அ) ஹிந்துஸ்தான் சோசலிஸ்ட் ரிபப்ளிகன் அசோசியேஷன்
   (ஆ) வங்காள சபை
   (இ) இந்தியக் குடியரசு இராணுவம்
   (ஈ) இவற்றில் எதுவுமில்லை

3. பின்வருவனவற்றைப் பொருத்துக

(அ) கான்பூர் சதி வழக்கு	–	1. அடிப்படை உரிமைகள்
(ஆ) மீரட் சதி வழக்கு	–	2. சூரியா சென்
(இ) சிட்டகாங் ஆயுதக்கிடங்கு கொள்ளை	–	3. 1929
(ஈ) இந்திய தேசிய காங்கிரசின் கராச்சி மாநாடு	–	4. 1924

   (அ) 1, 2, 3, 4 (ஆ) 2, 3, 4, 1
   (இ) 3, 4, 1, 2 (ஈ) 4, 3, 2, 1

4. கீழ்க்காண்பவர்களில் 64 நாட்கள் உண்ணாவிரதத்திற்குப் பிறகு சிறையில் உயிரிழந்தவர் யார்?

   (அ) புலின் தாஸ் (ஆ) சச்சின் சன்யால்
   (இ) ஜதீந்திரநாத் தாஸ் (ஈ) பிரித்தி வதேதார்

5. பின்வரும் கூற்றுகளில் பொருளாதாரப் பெரும் மந்தம் குறித்துச் சரியானவை.

   (i) இது வடஅமெரிக்காவில் ஏற்பட்டது.
   (ii) வால் தெருவில் ஏற்பட்ட வீழ்ச்சியானது பெரும் மந்தத்தை விரைவுபடுத்தியது.
   (iii) பெரும் மந்தம் வசதிபடைத்தவர்களை மட்டுமே பாதித்தது.
   (iv) விலை வீழ்ச்சி அடைந்ததால் பெரும் மந்தத்தின் போது சிறப்பான வாழ்க்கை முறையை தொழிலாளர்கள் அனுபவித்தனர்.

   (அ) i மற்றும் ii (ஆ) i, ii, மற்றும் iii
   (இ) i மற்றும் iv (ஈ) i, iii மற்றும் iv

6. முதலாவது பருத்தித் தொழிற்சாலை பம்பாயில் தொடங்கப்பட்ட ஆண்டு

   (அ) 1852 (ஆ) 1854
   (இ) 1861 (ஈ) 1865

7. கொடுக்கப்பட்ட குறிப்புகளை கொண்டு சரியான கூற்றைத் தேர்ந்தெடுக்கவும்.

   (i) "*Chittagong Armoury Raiders Reminiscences*" எனும் நூல் கல்பனா தத் என்பவரால் எழுதப்பட்டது.

12th History_TM_Unit_5.indd 79 02-01-2023 16:35:40

www.tntextbooks.in

(ii) கல்பனா தத் தாய்நாட்டின் விடுதலைக்காக ஆயுதம் தாங்கி போராடினார்.

(iii) கல்பனா தத் பேரரசருக்கு எதிராகப் போர் தொடுத்தார் எனக் குற்றஞ்சாட்டப்பட்டார்.

(அ) i மட்டும் (ஆ) i மற்றும் ii

(இ) ii மற்றும் iii (ஈ) அனைத்தும்

8. முதலாவது பயணிகள் இரயில் 1853இல் எந்த இடங்களுக்கு இடையே ஓடியது?

(அ) மதராஸ் – அரக்கோணம்

(ஆ) பம்பாய் – பூனா

(இ) பம்பாய் – தானே

(ஈ) கொல்கத்தா – ஹூக்ளி

9. கல்கத்தாவில் முதலாவது சணல் ஆலை தொடங்கப்பட்ட ஆண்டு ________

(அ) 1855 (ஆ) 1866

(இ) 1877 (ஈ) 1888

10. பின்வருவோரில் கான்பூர் சதி வழக்கில் கைது செய்யப்பட்டவர் யார்?

(அ) எம்.என். ராய் (ஆ) பகத் சிங்

(இ) எஸ்.ஏ. டாங்கே (ஈ) ராம் பிரசாத் பிஸ்மில்

11. கான்பூர் சதி வழக்குக் குறித்த பின்வரும் எந்த கூற்றுகள் சரியானவை?

(i) சணல் மற்றும் பருத்தி தொழிற்சாலைகளில் தொழிற்சங்கங்கள் தோன்றின.

(ii) இவ்வழக்கில் கம்யூனிஸ்ட்களும் தொழிற்சங்கவாதிகளும் குற்றஞ்சாட்டப்பட்டனர்.

(iii) இவ்வழக்கு நீதிபதி H.E. ஹோம்ஸ் என்பவரின் முன்பாக விசாரணைக்கு வந்தது.

(iv) விசாரணை மற்றும் சிறைத் தண்டனையானது இந்தியாவில் காங்கிரஸ் நடவடிக்கைகளில் விழிப்புணர்வை ஏற்படுத்தியது.

(அ) i, ii மற்றும் iii (ஆ) i, iii மற்றும் iv

(இ) ii, iii மற்றும் iv (ஈ) i, ii மற்றும் iv

II. குறுகிய விடையளிக்கவும்.

1. இந்தியாவில் கம்யூனிஸ்ட் கட்சியை உருவாக்க கிரேட் பிரிட்டனால் அனுப்பப்பட்ட மூன்று ஆங்கில கம்யூனிசவாதிகளின் பெயர்களைக் குறிப்பிடுக.
2. மீரட் சதி வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட குற்றவாளிகளுக்கு ஆதரவாக வாதாடிய வழக்கறிஞரை அடையாளப்படுத்துக.
3. புகழ்பெற்ற கோரக்பூர் நீதிபதியான H.E. ஹோம்ஸ் பற்றி நீவிர் அறிவது யாது?
4. இரண்டாவது லாகூர் சதி என்றறியப்படும் நிகழ்வு யாது?
5. இந்தியாவின் நவீன தொழிற்சாலையின் தந்தை என ஜே.என். டாடா அழைக்கப்பட காரணம் என்ன?

III. சுருக்கமாக விடையளிக்கவும்.

1. சிட்டகாங் ஆயுதப் படைத் தாக்குதலை நடத்த சூரியாசென் எவ்வாறு திட்டமிட்டார்?
2. டாடா இரும்பு மற்றும் எஃகு நிறுவனம் (TISCO) பற்றி குறிப்பு எழுதுக.
3. தென்னிந்தியாவில் தொழிற்சங்கங்களின் வளர்ச்சிக்காகச் சிங்காரவேலர் ஆற்றிய பங்களிப்புக் குறித்து எழுதுக.

IV. விரிவான விடையளிக்கவும்.

1. பகத்சிங்கின் புரட்சிகர தேசியவாதம் மற்றும் புரட்சிகர நடவடிக்கைகள் எவ்வாறு அவரைத் தூக்கு மேடைக்கு இட்டுச் சென்றது?
2. 1919–1939ஆம் ஆண்டுகளுக்கிடையில் காலனி ஆதிக்க இந்தியாவில் ஏற்பட்ட தொழில் வளர்ச்சியினைப் பற்றி எழுதுக.
3. பொருளாதாரப் பெரும் மந்தம் ஏற்பட்ட போது சமூக, பொருளாதார மற்றும் அரசியல் லட்சியங்கள் வெளிப்படுத்துவதில் இந்திய தேசிய காங்கிரசின் கராச்சி மாநாட்டின் முக்கியத்துவத்தை ஆய்வு செய்க.

V. செயல்பாடுகள்

1. குழுச் செயல்பாடு – இந்திய சுதந்திரப் போராட்டத்தில் பெண்களின் பங்களிப்புப் பற்றி குறிப்பு எழுதுக.
2. காந்தியடிகள் சகாப்தத்தின் போது தமிழ்நாட்டில் சுதந்திர போராட்ட நடவடிக்கைகளில் பெண்கள் ஆற்றிய பங்கு பற்றி ஒவ்வொரு மாணவனையும் குறிப்பெழுதி வர கூறுதல்.

மேற்கோள் நூல்கள்

1. Bipan Chandra, etal., *India's Struggle for Independence*, Penguin Books, New Delhi, 2016.
2. K.A. Manikumar, *A Colonial Economy in the Great Depression: Madras, 1929-37,* Orient Longman, 2002.

12th History_TM_Unit_5.indd 80 02-01-2023 16:35:41

3. Irfan Habib, *Indian Economy* 1858-1914, *A People's History of India*, Tulika Books, New Delhi. 2016.
4. Bhagat Singh, *Why I am an Atheist*, National Book Trust, New Delhi, 2006
5. *Cambridge Economic History of India*, Vol-2.
6. Kalpana Dutt, *Chittagong Armoury Raiders Reminiscences*, People's Publishing House Bombay, 1940.
7. *Documents of the Communist Movement in India, vol. II, Meerut conspiracy case* (1929), National Book Agency Calcutta

A-Z கலைச்சொற்கள்

பொதுவுடைமைக் கொள்கை	**Communism**	a political and economic system in which there is no private ownership of property or industry and people of all social classes are treated equally.
வலிமையின் மூலம் உடனடியாக அதிகாரத்தைக் கைப்பற்ற வேண்டும் என்ற கருத்துடையவர்	**Bolshevik**	a member of the majority faction of the Russian Communist Party, which seized power in the October Revolution of 1917.
அடிப்படை உரிமைகள்	**fundamental Rights**	civil liberties of the people.
பொருளாதாரப் பெருமந்தம்	**Great Depression**	a deep and prolonged economic crisis.
புரட்சிகர கோட்பாடு	**radicalism**	social or political movements that aim at fundamental change in the structure of society.
கடுமையான	**draconian**	severe.
சிவில் உரிமைகள்	**civil liberties**	personal freedom which cannot be denied without due process of law.

12th History_TM_Unit_5.indd 81 02-01-2023 16:35:41

அலகு 6

தேசியவாத அரசியலில் வகுப்புவாதம்

கற்றலின் நோக்கங்கள்

HFYW8

கீழ்க்காணும் அம்சங்களோடு அறிமுகமாதல்

- இந்திய சுதந்திரத்திற்கு முன் மதம் சார்ந்த தேசியவாதத்தின் தோற்றம்
- தங்கள் ஏகாதிபத்திய நலன்களை மேம்படுத்துவதற்காக பிரிட்டிஷார் கையாண்ட பிரித்தாளும் கொள்கை
- பிரிட்டிஷ் அரசு, முஸ்லிம்களுக்கு தனித்தொகுதிகளை வழங்கியதன் மூலம் முஸ்லிம் லீக்கும் ஜின்னாவும் முஸ்லிம்களுக்கான தனிநாடு கோரிக்கையை வலியுறுத்தக் காரணமாக அமைதல்
- இந்திய அரசாங்கச் சட்டம், 1935இன் கீழ் காங்கிரஸ் பதவிகளை ஏற்றுக்கொண்டதன் காரணமாக காங்கிரசுக்கும் முஸ்லிம் லீக்கிற்கும் இடையே இடைவெளி அதிகரித்தல்
- நேரடி நடவடிக்கை நாளிற்கு ஜின்னா விடுத்த அழைப்பு மற்றும் அதன் விளைவாக கல்கத்தாவில் ஏற்பட்ட வகுப்புவாத வன்முறை
- நாடு, இந்தியா மற்றும் பாகிஸ்தான் என இரண்டாகப் பிரிவினை செய்யப்படுதல்

அறிமுகம்

பிரிட்டிஷ் ஆட்சி ஏற்படுவதற்கு முன்பாக முகலாயர்கள் மற்றும் அவர்களின் முகவர்கள் நாட்டின் பெரும் பகுதிகளை ஆட்சி செய்தனர். ஆளும் வர்க்கங்களான இறையாண்மையுள்ள அரசுகள், நிலப்பிரபுக்கள், படைத்தளபதிகள் மற்றும் அலுவலர்கள் ஆகியோர் முஸ்லிம்களாக இருந்ததால் முஸ்லிம்களில் பெரும்பாலானோர் சில சலுகைகளை ஆளும் வர்க்கத்தினரிடமிருந்துப் பெற்றனர். அலுவலக மொழியாகவும் நீதிமன்ற மொழியாகவும் பாரசீகமொழி இருந்தது. ஆங்கிலேயர் படிப்படியாக அவற்றை மாற்றி ஒரு புதிய நிர்வாக முறையை அறிமுகப்படுத்தினர். பத்தொன்பதாம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் ஆங்கிலக் கல்வி முக்கியத்துவம் பெறத்தொடங்கியது. 1857ஆம் ஆண்டுப் பெரும்புரட்சியே ஆளும்வர்க்கத்தினரின் இறுதி வாய்ப்பாக அமைந்தது. புரட்சியின் கடுமையான அடக்குமுறைகளைத் தொடர்ந்து, முஸ்லிம்கள் தங்களது நிலம், வேலை உள்ளிட்ட வேறு பல வாய்ப்புகளையும் இழந்ததோடு வறுமை நிலைக்கும் தள்ளப்பட்டனர். இத்தகைய நிலைக்குத் தள்ளப்பட்டதை பொறுத்துக்கொள்ள முடியாத அவர்கள் சமூகத்திலிருந்து ஒதுங்கி வாழும் நிலை ஏற்பட்டது. மேலும் 1857ஆம் ஆண்டு பெரும்புரட்சிக்குப்பின் வாழ்ந்த முதல் தலைமுறையினர் சிலர் ஆங்கிலேயரின் அனைத்து நடவடிக்கைகளையும் வெறுத்தனர். மேலும் அவர்கள் ஆங்கிலேய காலனியக் கொள்கையால் ஏற்படுத்தப்பட்ட புதிய வாய்ப்புகளை பயன்படுத்திக்கொண்ட இந்தியர்களோடு போட்டியிட நேர்ந்ததால் சீற்றம் கொண்டனர். கல்வி கற்ற மேல்வகுப்பு இந்துக்கள் தேசிய உணர்வு பெற்று எழுந்ததைக் கண்ட ஆங்கிலேயர்கள் நடுத்தர வர்க்க முஸ்லிம்களை காங்கிரஸின் வளர்ச்சியை தடுத்து நிறுத்த ஒரு சக்தியாகப் பயன்படுத்தினர். அவர்கள் இத்தகைய சூழலைப் புத்திசாலித்தனமாக தங்களுக்குச்சாதகமாகப்பயன்படுத்திக்கொண்டனர். இப்பாடத்தில் நாம் மூன்று வகையான தேசியத்தின் போக்குகளை பற்றி அறிய உள்ளோம் அவையாவன: இந்திய தேசியம், இந்து தேசியம் மற்றும் முஸ்லிம் தேசியம் என்பவனவாகும்.

6.1 பிரிட்டிஷ் இந்தியாவில் வகுப்புவாதத்தின் தோற்றம் மற்றும் வளர்ச்சி

அ) இந்துமத மறுமலர்ச்சி

ஆரம்பகால தேசியவாதிகள் சிலர் தேசியவாதத்தை இந்துமத அடித்தளத்தில் மட்டுமே

12th_History_TM_Unit_6.indd 82 02-01-2023 16:36:17

உருவாக்கமுடியும் என்று நம்பினர். சர்வபள்ளி கோபால் குறிப்பிடுவது போல 1875இல் நிறுவப்பட்ட ஆரிய சமாஜத்தின் மூலம் அரசியலில் இந்து மறுமலர்ச்சிக்கான குரல் ஒலிக்கத் தொடங்கியது. ஆரிய சமாஜம் இந்து மதத்தின் உயரியத் தன்மைகளை உறுதியுடன் முன்வைத்தது. இந்து தேசியவாதிகளில் ஒருவராகத் தன்னை அடையாளம் கண்டுகொண்ட அன்னிபெசண்ட் அம்மையார் தனது கருத்துகளைப் பின்வருமாறு குறிப்பிட்டார்:

"பண்டைய மதங்களைப் புத்துயிர்ப்பு செய்து வலுப்படுத்தி, உயர்த்துவதே இந்தியர்களின் முதற்பணி ஆகும். இது கடந்த காலப் பெருமையுடன், ஒரு புதிய சுயமரியாதையையும், எதிர்காலத்தின் மீதான நம்பிக்கையையும், ஒரு தவிர்க்க இயலாத விளைவாகவும், தேச/நாட்டுப்பற்றுடன் கூடிய வாழ்வின் ஒரு பேரலையாகவும், நாட்டைப் புனரமைப்பதற்கானத் தொடக்கமாகவும் உருவாக்கப்பட வேண்டும்"

ஆ) முஸ்லிம் உணர்வின் எழுச்சி

சர்வபள்ளி கோபால் குறிப்பிடுவது போல, மறுபுறம் இஸ்லாம் அலிகார் இயக்கத்தின் வழியாகத் தன்னை வெளிப்படுத்திக் கொண்டது. பிரிட்டிஷார் அலிகார் கல்லூரியை ஏற்படுத்த சையது அகமதுகானுக்கு ஆதரவளித்ததும் முஸ்லிம் தேசியக்கட்சி தோன்றவும், முஸ்லிம் அரசியல் கருத்தியல் தோன்றவும் உதவியது. வாஹாபிகள் இஸ்லாமை அதனுடைய ஆதித்தூய்மைக்கு அழைத்துச் செல்லவும், அதன் உயிரை உருக்குலைத்துக் கொண்டிருப்பதாக அவர்கள் கருதிய சில மூடப்பழக்கங்களை முடிவுக்குக் கொண்டுவரவும் விரும்பினர். வாஹாபிகளில் தொடங்கி கிலாபத்காரர்கள் வரையானோர் அடிமட்டச் செயல்பாடுகளில் காட்டிய செயற்முனைப்பு முஸ்லிம்களை அரசியல் மயமாக்குவதில் முக்கியப் பங்காற்றியது.

வேறுபல காரணங்களாலும் முஸ்லிம் உணர்வு மேலோங்கத் தொடங்கியது. 1870களில் வங்காள அரசாங்கம், நீதிமன்றம் மற்றும் அலுவலகங்களில் உருதுக்குப் பதில் இந்தி மொழியை அறிமுகப்படுத்தியதும், பாரசீக அரேபிய எழுத்து வடிவத்திற்குப் பதில் நாகரி எழுத்து வடிவத்தைக் கொண்டு வந்தது, முஸ்லிம் தொழில்வல்லுநர்கள் மத்தியில் பீதியை ஏற்படுத்தியது.

இ) பிரிட்டிஷாரின் பிரித்தாளும் கொள்கை

கூட்டு இந்திய அடையாளம் ஒன்று உருவாவதைத் தடுப்பதே பிரிட்டிஷாரின் நோக்கமாக இருந்ததால், இந்தியர்களின் ஒருங்கிணைப்பு முயற்சிகளை முறியடிக்கத் தொடங்கினர். பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் பிரித்தாளும் கொள்கையைக் கையாண்டது. பம்பாய் ஆளுநர் எல்பின்ஸ்டோன், "பழைய ரோமானிய இலட்சியமான 'Divide et Impera' (பிரித்தாளுதல்) என்பது நமதாக வேண்டும்" என்று எழுதினார். வகுப்புவாதக் கலவரங்கள் நாட்டின் ஆளுகைக்குச் சவாலாக இருக்கும் என்று தெரிந்திருந்தபோதிலும் பிரிட்டிஷ் அரசாங்கம், வகுப்புவாதக் கருத்தியல் சார்ந்த அரசியலுக்கு சட்டபூர்வ அங்கீகாரத்தையும், கௌரவத்தையும் வழங்கியது.

எல்பின்ஸ்டோன்

ஈ) காங்கிரஸ் நடவடிக்கைகள்

ஆரிய சமாஜம் போன்ற இந்து அமைப்புகளில் நிறைய காங்கிரஸ்காரர்கள் ஈடுபட்டபோதிலும், காங்கிரஸ் தலைமை சமயச்சார்பற்றதாகவே இருந்தது. இந்திய தேசிய காங்கிரசின் மூன்றாவது கூட்டத்தில் பசுவதையைக் குற்றமென அறிவித்து, தீர்மானம் நிறைவேற்றப்பட வேண்டும் என சில காங்கிரஸ்காரர்கள் முயற்சிசெய்த போதிலும், காங்கிரஸ் தலைமை அத்தீர்மானத்தை ஏற்கவில்லை. காங்கிரஸ் கூட்டத்தில் ஒரு குறிப்பிட்ட வகுப்பினரை அல்லது இனத்தைப் பாதிக்கும் தீர்மானம் முன்மொழியப்படும்போது, அந்த வகுப்பைச் சார்ந்த உறுப்பினர்கள் எதிர்த்தால், எதிர்க்கும் உறுப்பினர்கள் சிறுபான்மையினராக இருந்தாலும் அத்தீர்மானத்தை நிறைவேற்றக்கூடாது என்ற முடிவுக்கு காங்கிரஸ் வந்திருந்தது.

உ) சையது அகமது கானின் பங்கு

அலிகார் இயக்கத்தின் நிறுவனரான சர் சையது அகமது கான், தொடக்கத்தில் காங்கிரசின் ஆதரவாளராக இருந்தார். பின்னர், அவர் சிந்தனை வேறுவிதமாக மாறத் தொடங்கியது. இந்துக்களால் ஆளப்படும் நாட்டில், சிறுபான்மையினரான முஸ்லிம்களுக்கு தக்க உதவிகள் கிடைக்காது என்று எண்ணினார். ஆனால், முஸ்லிம் தலைவர்களான பத்ருதீன் தியாப்ஜி, பம்பாயைச் சார்ந்த ரஹமதுல்லா சயானி, சென்னையைச் சேர்ந்த நவாப் சையது முகமது பகதூர், வங்காளத்தைச் சேர்ந்த ஏ.ரசூல் ஆகியோர் காங்கிரசை ஆதரித்தனர். ஆனால், வடஇந்தியாவில் பெரும்பான்மையான


சர் சையது அகமது கான்

முஸ்லிம்கள் சையது அகமதுகானின் வழியைப் பின்பற்றி பிரிட்டிஷாரை ஆதரிக்கத் தொடங்கினர். பிரதிநிதித்துவ அமைப்புகளின் அறிமுகம், அரசுப் பணிக்கான போட்டித் தேர்வுகள் போன்றவை முஸ்லிம்களின் பயத்தை அதிகரிக்கத் தொடங்கியதால் சையது அகமது கானும், அவரைப் பின்பற்றியவர்களும் அரசாங்கத்தோடு இணைந்து செயல்படத் தொடங்கினர். அரசாங்கத்தோடு இணக்கமாக செயல்படுவதன் மூலம் தனது இனத்திற்கு அரசாங்கத்திடமிருந்து பெரும்பங்கினை பெற்றுத்தர இயலும் என்றும், அப்படியில்லாதபட்சத்தில் தம் இனத்தவர்கள் சிறுபான்மையினர் என்பதால் எண்ணிக்கை அல்லது தகுதி அடிப்படையில் வழங்கப்படும் குறைவான அரசு வெகுமதியே கிடைக்கும் என்று எண்ணினார்.

இந்து–முஸ்லிம் விரிசலைக் குறைத்து அனைத்து வகுப்பினரின் உண்மையான குறைகளையும், தேவைகளையும் பிரிட்டிஷ் அரசாங்கத்திடம் எடுத்துச்செல்லும் முயற்சியாகவே 1885இல் இந்திய தேசிய காங்கிரஸ் தொடங்கப்பட்டது. ஆனால், சர் சையது அகமது கான் இலண்டன் பிரிவி கவுன்சிலிற்கு தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் இந்தியரான சையது அமீர் அலி போன்ற முஸ்லிம் தலைவர்கள் காங்கிரஸ், இந்துக்களை மட்டுமே பிரதிநிதித்துவப்படுத்தும் அமைப்பு என்று வாதிட்டனர். காங்கிரசின் முதல் கூட்டத்தில் பங்கேற்ற 72 பிரதிநிதிகளில் இரண்டு பேர் மட்டுமே முஸ்லிம்கள். மேலும், முஸ்லிம் தலைவர்கள் காங்கிரசில் முஸ்லிம்கள் பங்கேற்றால் அது ஆட்சியாளர்களிடையே அவர்கள் இனத்திற்குப் பாதகமான விளைவுகளை ஏற்படுத்தும் என்ற அடிப்படையில் காங்கிரசை முழுமையாக எதிர்த்தனர்.

ஊ) உள்ளாட்சி தேர்தல்களில் வகுப்புவாதம்

வகுப்புவாத உணர்வுகள் வளர்க்கப்பட்டதனால் ஏற்பட்ட எதிர்பாராத விளைவுகளை, மக்களாட்சி அரசியலில் சந்திக்க நேர்ந்தது. 1880களில் உள்ளாட்சி அமைப்புகள் வகுப்புவாத அரசியல் வளர்வதற்கு உதவின. நகராட்சி உறுப்பினர்கள் அதிக அதிகாரங்களைப் பெற்று தங்கள் அரசியல் நிலையை வலுப்படுத்திக் கொண்டார்கள். முஸ்லிம்கள் தலைமையேற்ற நகராட்சி வாரியங்களை இந்துக்களும், இந்துக்கள் தலைமையேற்ற நகராட்சி வாரியங்களை முஸ்லிம்களும் வலிந்து ஏற்றுக்கொள்ள வேண்டிய நிலை உருவானது.

லால் சந்த்

பஞ்சாப் இந்துசபையின் முதன்மைத் தகவல் தொடர்பாளராகவும், பின்னர் ஆரிய சமாஜத்தின் தலைவர்களுள் ஒருவருமாக இருந்த லால் சந்த் சில நகராட்சிகள் வகுப்புவாத அடிப்படையில் அமைக்கப்பட்டதை விளக்கியுள்ளார். "நகராட்சி உறுப்பினர்கள், நகராட்சித் தலைவரது நாற்காலியின் வலது மற்றும் இடது புறங்களில் இரு வரிசைகளாக அமர்ந்திருந்தனர். வலதுபுற வரிசையில் ஆரியவர்க்கத்தைச் சார்ந்த பழைய ரிஷிகளின் வம்சாவளியினரும், இடதுபுற வரிசையில் இஸ்லாமின் பிரதிநிதிகளும் அமர்ந்திருந்தனர். இவ்வாறு அமர்ந்திருந்ததன் மூலம் அவர்கள் நகராட்சியின் உறுப்பினர்களாக மட்டுமின்றி முகமதியர்களாகவும், இந்துக்களாகவும் இருப்பதையும் நினைவுபடுத்திக் கொண்டிருந்தனர்.

எ) காங்கிரசின் பலவீன கொள்கை

20ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் வங்காளத்தில் சுதேசி இயக்கம் (1905–06) தொடங்கப்பட்டபோது, அதை ஆதரித்த முஸ்லிம்கள் காங்கிரஸின் தரகர்கள் என்ற கண்டனத்திற்கு உள்ளாயினர். காங்கிரஸ் இத்தகைய வாதங்களை மறுத்து தக்க எதிர்வினை ஆற்றாமல் மௌனம் காத்ததால், வகுப்புவாத அரசியல் சக்திகள் மேலும் தூண்டப்பட்டன. அதே நேரத்தில், தேசியவாத முஸ்லிம்கள் தங்கள் ஊக்கத்தையும், நம்பிக்கையும் இழந்தனர்.

> "இந்து–முஸ்லிம் வகுப்புவாதம், நடுத்தர வகுப்புகளுக்கிடையே நடந்த மோதல்களின் விளைவே ஆகும். மனசாட்சியுள்ள இந்து மற்றும் முஸ்லிம் பொதுமக்கள் இத்தகைய வகுப்புவாதத்திலிருந்து முற்றிலும் விலகியே இருந்தனர்." – ஜவஹர்லால் நேரு

இருபதாம் நூற்றாண்டின் முதல் பதிற்றாண்டில் அரசியல் தீவிரவாதம் சமய பழமைவாதத்துடன் கைகோர்த்துக் கொண்டபோது மோசமான நிலைக்கு மாறத்தொடங்கியது. திலகர், அரவிந்த கோஷ் மற்றும் லாலா லஜபதி ராய் ஆகியோர் சமய அடையாளங்கள், திருவிழாக்கள் ஆகிய தளங்களை பயன்படுத்தி காலனித்துவ எதிர்ப்பு உணர்வை ஊட்டினர். கணபதி விழா மூலம் இந்துக்களை திரட்டுவதற்கு திலகர் மேற்கொண்ட முயற்சி மேலும் தீவிரப்படுத்திய மற்றொரு காரணியாகும். முஸ்லிம்களை திருப்திப்படுத்தும் கொள்கையை, இந்திய தேசிய காங்கிரஸ் பின்பற்றியதற்கு லால் சந்த் கடும் கண்டனம் தெரிவித்தார்.

12th_History_TM_Unit_6.indd 84 02-01-2023 16:36:17

6.2 அனைத்து இந்திய முஸ்லிம் லீக்கின் உருவாக்கம்

1906 அக்டோபர் 1இல் முஸ்லிம் பிரபுக்கள், ஆளும் வர்க்கத்தினர், சட்ட வல்லுநர்கள் மற்றும் சமூகத்தின் உயர்பிரிவினர் பெரும்பாலும் அலிகார் இயக்கத்தோடு தொடர்புடையவர்கள் ஆகிய 35 பங்கேற்பாளர்கள் ஆகாகான் தலைமையின் கீழ் சிம்லாவில் ஒன்று திரண்டு அப்போதைய அரசப்பிரதிநிதியான மிண்டோ பிரபுவிடம் தங்களது கருத்துக்களை முன்வைத்தனர். அவர்கள் அரசுப் பணிகளில் முஸ்லிம்களின் சதவீதத்தை உயர்த்துதல், உயர்நீதி மன்றங்களில் முஸ்லிம் நீதிபதிகளின் நியமனம் மற்றும் அரச பிரதிநிதியின் ஆலோசனைக் குழுவில் உறுப்பினராதல் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்தனர். இந்த சிம்லா மாநாடு அரசப்பிரதிநிதியிடமிருந்து எந்த ஒரு நல்ல தீர்மானத்தையும் முஸ்லிம்களுக்கு வழங்கவில்லையென்றாலும், இது அகில இந்திய முஸ்லிம் லீக் உருவாவதற்கு ஒரு ஊக்கியாக செயல்பட்டது எனலாம். முஸ்லிம்களின் நோக்கங்களுக்கு ஒரு பாதுகாப்பினை 1907ஆம் ஆண்டில் வழங்கியது. இவ்வியக்கத்தில் பெரும் ஜமீன்தார்களும், முன்னாள் நவாப்புகளும் மற்றும் முன்னாள் அதிகாரத்துவவாதிகள் ஆகியோரும் இதில் உறுப்பினர்களாக இருந்து செயலாற்றினர். இந்த லீக்கானது, வங்காளப் பிரிவினை, முஸ்லிம்களுக்கான தனித்தொகுதி கோரிக்கை மற்றும் அரசுப்பணிகளில் முஸ்லிம்களுக்கான பாதுகாப்பினை வலியுறுத்துதல் போன்றவற்றில் ஒத்துழைப்பை நல்கியது.

அனைத்து இந்திய முஸ்லிம் லீக்கின் நோக்கங்கள்

அனைத்து இந்திய முஸ்லிம் லீக்கானது, முதல் முறையாக முஸ்லிம்களுக்கென பிரத்தியேகமாக மையப்படுத்தப்பட்ட ஓர் அரசியல் கட்சியாக இருந்தது. அதன் நோக்கங்கள் பின்வருமாறு:

- இந்திய முஸ்லிம்கள், பிரிட்டிஷ் அரசிடம் உண்மையுடனும், நன்றியுடனும் நடந்துகொள்ள வேண்டுமென்ற உணர்வை அவர்களிடம் ஏற்படுத்துதல், மேலும் இந்த அமைப்பின் செயல்பாடுகள் குறித்து அரசுக்கு எழும் தவறான கருத்துக்களை நீக்குதல்.
- இந்திய முஸ்லிம்களின் விருப்பங்கள் மற்றும் அரசியல் உரிமைகள் ஆகியவற்றை மேம்படுத்துதல் மற்றும் பாதுகாத்தல், மேலும் தங்களது தேவைகள், உயர்ந்த லட்சியங்களை கண்ணியமான முறையில் அரசுக்குத் தெரிவித்தல்.
- இந்திய முஸ்லிம்கள் மற்ற இனத்தவரிடம் எவ்விதப் பகைமை பாராட்டுவதையும் முன்விரோதம் கொள்வதையும் தடுத்தல்

தொடக்கத்தில் நகர்ப்புற மேல்தட்டு மக்களுக்கான ஒரு அமைப்பாகவே அனைத்து இந்திய முஸ்லிம் லீக் இருந்தது. இருந்தபோதிலும், பிரிட்டிஷ் அரசின் ஒத்துழைப்பைப் பெற்று இந்திய முஸ்லிம்களுக்கான தனிப்பட்ட பிரதிநிதித்துவ உறுப்பாக இது மாறியது. உருவாக்கப்பட்ட மூன்றே ஆண்டுகளில் முஸ்லிம்களுக்கான தனித்தொகுதி பெறுவதை வெற்றிகரமாக சாதித்தது எனலாம். இது முஸ்லிம்களுக்கு அரசமைப்பு சார்ந்த அடையாளத்தை வழங்கியது. லக்னோ ஒப்பந்தம் (1916), முஸ்லிம்களின் தனி அரசியல் அடையாளத்திற்கான அலுவல் முத்திரையை முஸ்லிம் லீக்கிற்கு வழங்கியது.

> தனித் தொகுதி அல்லது வகுப்புவாரித் தொகுதி: இந்த வகையான முறையில் முஸ்லிம்கள் மட்டுமே முஸ்லிம் வேட்பாளருக்கு வாக்களிக்க முடியும். 1909 ஆம் ஆண்டு மிண்டோ-மார்லி சட்டம், பேரரசு சட்டமன்றத்தில் அலுவலரல்லாத 27 உறுப்பினர்களுக்கான இடங்களில் எட்டு இடங்களை முஸ்லிம்களுக்கு வழங்கியது. மாகாண சட்டமன்றங்களின் இடங்களை முஸ்லிம் வேட்பாளர்களுக்குப் பின்வருமாறு ஒதுக்கியிருந்தது. அவையாவன: மதராஸ் 4; பம்பாய் 4; வங்காளம் 5.

தனித்தொகுதியும் வகுப்புவாதப் பரவலும்

பிரிட்டிஷ் இந்தியஅரசு, வகுப்புவாதத்தை வளர்ப்பதற்கும் பரப்புவதற்கும் தனித்தொகுதி என்னும் முதன்மையான ஒரு நுட்பத்தை நடைமுறைப்படுத்தியது.

பிரிட்டிஷ் அதிகாரி ஒருவர் லேடி மிண்டோ அவர்களுக்கு அனுப்பிய குறிப்பின் வாயிலாக பிரிட்டிஷார் உள்நோக்கத்துடனேயே இத்தகைய செயலைச் செய்ததை அறியமுடிகிறது. "இன்று மிகப்பெரிய செயல் நடைபெற்றது என்பதை தங்களின் மேலான பார்வைக்கு நான் அனுப்புகிறேன். இத்தகைய ராஜதந்திர நடவடிக்கை இந்திய வரலாற்றில் நீண்டகாலத் தாக்கத்தை ஏற்படுத்தும். இது 62 மில்லியன் மக்கள் தூண்டிவிடப்பட்ட எதிர் முகாமில் சேர்ந்துவிடாமல் இழுத்துப்பிடிக்கும் முயற்சி என்பதைத் தவிர வேறில்லை".

தனித்தொகுதி அறிவிப்பு மூலம் ஆங்கிலேயரின் பிரித்தாளும் கொள்கை என்ற கோட்பாடு அரசமைப்பு

12th_History_TM_Unit_6.indd 85 02-01-2023 16:36:17

www.tntextbooks.in

சட்டத்தில் முறையாக நுழைந்து இந்துக்கள் மற்றும் முஸ்லிம்களை முழுமையாக அந்நியப்படுத்தியது.

6.3 அகில இந்திய இந்து மகாசபையின் எழுச்சி

அகில இந்திய முஸ்லிம் லீக் உருவாக்கப்பட்டதையும், 1909ஆம் ஆண்டு இந்தியக் கவுன்சில் சட்டம், அறிமுகப்படுத்தப்பட்டதையும் தொடர்ந்து ஒரு இந்து அமைப்பைத் தொடங்க வேண்டும் என்ற எண்ணம் பரவலாக எழுந்தது. அம்பாலாவில் நடைபெற்ற ஐந்தாவது பஞ்சாப் இந்து மாநாட்டிலும், பெரோஷ்பூரில் நடைபெற்ற ஆறாவது மாநாட்டிலும் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களின் தொடர்ச்சியாக 1915இல் இந்துக்களின் முதல் அகில இந்திய மாநாடு ஹரித்துவாரில் கூட்டப்பெற்றது. அங்குதான் டேராடூனைத் தலைமையிடமாகக் கொண்டு அகில இந்திய இந்து மகாசபை தொடங்கப் பெற்றது. இதனைத் தொடர்ந்து மாகாண இந்துசபைகள் அலகாபாத்தைத் தலைமையிடமாகக் கொண்டு ஐக்கிய மாகாணத்திலும் பம்பாயிலும், பீகாரிலும் தொடங்கப்பெற்றன. பம்பாயிலும், பீகாரிலும் இவ்வமைப்புகள் திறம்பட செயல்படவில்லை. சென்னையிலும் வங்காளத்திலும் ஓரளவிலான ஆதரவேயிருந்தது.

நகர்ப்புற இயல்பினை அதிகம் கொண்டிருந்த இம்மகாசபை வட இந்தியாவின் பெரும் வணிக நகரங்களில், குறிப்பாக அலகாபாத், கான்பூர், பனாரஸ், லக்னோ, லாகூர் போன்ற நகரங்களில் வீரியத்துடன் செயல்பட்டது. ஐக்கிய மாகாணத்திலும் பீகாரிலும் பெரும்பாலும் படித்த இடைத்தட்டு வர்க்கத்தைச் சேர்ந்த தலைவர்களால் இவ்வமைப்பு உருவாக்கப்பட்டிருந்தது. இவர்கள் காங்கிரசிலும் திறம்படச் செயல்பட்டனர். வகுப்புவாதிகளின் பிரிவினைவாத அரசியலைக் கிலாபத் இயக்கம் ஓரளவுக்கு ஒத்திபோட்டது. இதன்விளைவாக 1920–1922 ஆகிய ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலத்தில் இந்து மகாசபை செயல்படவில்லை.

அரசியலில் உலோமாக்கள் நுழைந்ததானது இந்துக்களிடையே ஆக்கிரமிப்புத் தன்மை கொண்ட, புத்துயிர் பெற்ற இஸ்லாமைப் பற்றிய அச்சத்தை ஏற்படுத்தியது. அலி சகோதரர்களைப் போன்ற முக்கிய முஸ்லிம் தலைவர்கள் கூட எப்போதும் கிலாபத் இயக்கத்தவர்களாகவே இருந்தனர். அடுத்தபடியாகத்தான் அவர்கள் காங்கிரஸ்காரர்களாய் இருந்தனர். கிலாபத் இயக்கத்தின்போது மத அடிப்படையில் மக்களைத் திரட்டும் பணியில் முஸ்லிம்கள் காட்டிய திறன், இந்துக்களை ஒன்று திரட்ட அதே பாணியைப் பின்பற்ற இந்து வகுப்பு வாதிகளைத் தூண்டியது. சுத்தி இயக்கம் ஒரு புதிய நிகழ்வாக இல்லாவிட்டாலும் கிலாபத் இயக்கத்திற்கும் பின்வந்த காலங்களில் அது புதிய முக்கியத்துவத்தைப் பெற்றது. 1921இல் வேல்ஸ் இளவரசரின் வருகையைப் புறக்கணிக்க மக்களைத் திரட்டுகையில், சுவாமி சிரத்தானந்தா பசுப்பாதுகாப்பைப் பரப்புரை செய்வதன் மூலம் இந்து மகாசபைக்கு புத்துயிர் அளிக்க முனைந்தார்.

முதல் உலகப்போருக்கு முன்னர் கலீஃபா, காபா (இஸ்லாமியச் சமயத்தின் புனிதமான இடம்) ஆகியவற்றின் நலன்களைப் பாதுகாப்பதாக இங்கிலாந்து வாக்குறுதி வழங்கியிருந்தது. ஆனால் முதல் உலகப்போரில் துருக்கியின் தோல்விக்குப் பின்னர் அவ்வாக்குறுதியை நிறைவேற்ற மறுத்துவிட்டது. திகைத்துப்போன முஸ்லிம் சமூகத்தினர் ஆங்கிலேயருக்குத் தங்கள் கோபத்தைக் காட்டவும், துருக்கியின் கலீஃபாவை பாதுகாக்கவும், கிலாபத் இயக்கத்தைத் தொடங்கினர்.

1921இல் நடைபெற்ற குருதி கொட்டிய மலபார் கிளர்ச்சியின் போது அங்கு முஸ்லிம் விவசாயிகள் ஆங்கிலேய ஆட்சியாளர்களுக்கு எதிராகவும் இந்து நிலப்பிரபுக்களுக்கு எதிராகவும் களமிறங்கியது இந்து மகா சபை தன்னுடையப் பிரச்சாரத்தை புதுப்பிக்க காரணமாயிற்று. அடிப்படையில் அது ஒரு விவசாயக் கிளர்ச்சியாக இருந்தாலும் தீவிர மத உணர்வுகள் கோலோச்சின. இதன் விளைவாக காந்தியடிகளே இந்நிகழ்வை இந்து முஸ்லிம் மோதலாகவே மதிப்பிட்டார். மலபாரில் நடைபெற்ற நிகழ்வுகளுக்கு முஸ்லிம் தலைவர்கள் பொது மன்னிப்பு கேட்க வேண்டுமென காந்தியடிகள் கோரிக்கை விடுத்தார்.

மலபார் கிளர்ச்சி, 1921

12th_History_TM_Unit_6.indd 86 02-01-2023 16:36:18

www.tntextbooks.in

அ) ஐக்கிய மாகாணத்தில் வகுப்புவாதம்

1922இல் ஒத்துழையாமை இயக்கம் நிறுத்தப்பட்டதும், 1924இல் கலீஃபா பதவி ஒழிக்கப்பட்டதும் முஸ்லிம்களிடையே பெருத்த ஏமாற்றத்தை ஏற்படுத்தியது. ஒத்துழையாமை இயக்கத்தின் பின் விளைவாகக் காங்கிரசுக்கும் கிலாபத்துக்கும் இடையேயான உறவு சிதைந்தது. 1919ஆம் ஆண்டுச் சட்டத்தின் அடிப்படையில் உருவாக்கப்பட்ட சுயாட்சி நிறுவனங்களில் தங்கள் அரசியல் கோரிக்கைகளுக்காக இந்துக்களும் முஸ்லிம்களும் போட்டியிட்டனர் அதிகாரத்திற்கும் பதவிகளுக்குமான இப்போட்டியின் விளைவாக புதிதாக வகுப்பவாத வன்முறைகள் பெருகின. ஆகஸ்ட் 1923இல் வாரணாசியில் நடைபெற்ற இந்து மகாசபையின் ஆறாவது மாநாட்டில் 968 பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். அவர்களில் 56.7 விழுக்காட்டினர் ஐக்கிய மாகாணத்தைச் சேர்ந்தவர்களாவர். ஐக்கியமாகாணம், பஞ்சாப், டெல்லி, பீகார் ஆகியவை 86. 8 விழுக்காட்டுப் பிரதிநிதிகளை அனுப்பி வைத்தன. சென்னை பம்பாய், வங்காளம் ஆகிய மூன்றும் 6.6 விழுக்காடு பிரதிநிதிகளை மட்டுமே அனுப்பி வைத்தன. 1920கள் காங்கிரசிற்கு சோதனைகள் மிகுந்த காலமாகும். இம்முறை ஐக்கிய மாகாணத்தில் ஏற்பட்ட வகுப்புவாதப் பதட்டத்திற்கு இந்து முஸ்லிம் தலைவர்களின் மத ஈடுபாடு மட்டும் காரணமல்ல. சுயராஜ்யவாதிகளுக்கும் தாராளவாதிகளுக்குமான (Liberal Party) அரசியல் போட்டிகளும் தூண்டுகோலாய் அமைந்தன.

மோதிலால் நேரு

M.M. மாளவியா

அலகாபாத்தில் மோதிலால் நேருவும் மதன்மோகன் மாளவியாவும் ஒருவரையொருவர் எதிர்த்தனர். 1923இல் நடைபெற்ற நகரசபைத் தேர்தலில் மோதிலால் நேருவின் குழுவினர் வெற்றி பெற்றதால், மாளவியாவின் அணியினைச் சேர்ந்தோர் மத உணர்வுகளைச் சுயநலத்திற்குப் பயன்படுத்தத் தொடங்கினர். விசாரணை மேற்கொண்ட மாவட்ட நீதிபதி குரோஸ்த்வெயிட் "மாளவியாவின் குடும்பத்தார் வேண்டுமென்றே இந்துக்களைத் தூண்டிவிட்டனர். இச்செயல் முஸ்லிம்களின் மீது எதிர்வினையாற்றியது" எனத் தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

ஆ) இந்து மகாசபை

வகுப்புவாதம் பஞ்சாபில் ஒரு வலுவான இயக்கமாக முழுமையாக நிலை கொண்டது. 1924இல் பஞ்சாப் மாகாணம் இந்து, முஸ்லிம் மாகாணங்களாகப் பிரிக்கப்பட வேண்டுமென லாலா லஜபதி ராய் வெளிப்படையாகக் கூறினார். அரசியல் களத்தில் இந்துமத மறுமலர்ச்சிக்கு ஆதரவான சக்திகளைப் பிரதிநிதித்துவப்படுத்திய இந்துமகாசபை 'அகண்ட இந்துஸ்தான்' என்னும் முழக்கத்தை முன் வைத்தது. இது முஸ்லிம் லீக்கின் தனித்தொகுதிக் கோரிக்கைக்கு எதிராக வைக்கப்பட்டதாகும். இந்து மகாசபை நிறுவப்பட்டதிலிருந்து சுதந்திரப் போராட்டத்தில் அதன் பங்கு முரண்பட்டதாகவே இருந்தது. ஆங்கிலேய ஆட்சியை ஆதரிக்காத இந்து மகாசபை, அதே நேரத்தில் தேசிய இயக்கத்திற்கும் தனது முழுமையான ஆதரவை நல்கவில்லை.

அந்நிய மேலாதிக்கத்திற்கு எதிராக அனைத்து வர்க்கங்களின், சமூகங்களின் ஆதரவைத் திரட்ட வேண்டிய அவசியம் காங்கிரசுக்கு இருந்தது. ஆனால் பல்வேறு சமூகங்களின் தலைவர்களால் சமய உணர்வுமிக்கக் குழுவினரின் ஆதரவை இழக்க நேரிடும் எனும் அச்சத்தின் காரணமாக சமயச் சார்பின்மை எனும் கோட்பாட்டை வலியுறுத்த முடியவில்லை. இக்காலகட்டத்தில் காந்தியடிகளின் தலைமையில் காங்கிரஸ் பல ஒற்றுமை மாநாடுகளை நடத்திய போதிலும் அவற்றால் பயன்களேதும் ஏற்படவில்லை.

இ) முஸ்லிம்களின் டெல்லி மாநாடும் அவர்களின் புதிய கருத்துருக்களும்

1927 மார்ச் 20இல் டெல்லியில் முஸ்லிம்களின் மாநாடு நடைபெற்றது. இம்மாநாட்டின் நிகழ்வுகள் ஒற்றுமைக்காக மேற்கொள்ளப்பட்ட முயற்சிகளின் உன்னத வெளிப்பாடாய் அமைந்தது. மாநாடு முன்வைத்த நான்கு கோரிக்கைகள் ஏற்றுக் கொள்ளப்பட்டால்,தனித்தொகுதிக் கோரிக்கையை தாங்கள் கைவிடுவதாக முஸ்லிம்கள் அறிவித்தனர். அந்நான்கு கோரிக்கைகள் வருமாறு 1. பம்பாயிலிருந்து சிந்துப் பகுதியைத் தனியாகப் பிரிப்பது 2. பலுச்சிஸ்தானையும் அதன் எல்லைகளையும் சீர்திருத்துவது 3. பஞ்சாபிலும் வங்காளத்திலும் மக்கள் தொகை அடிப்படையில் பிரதிநிதித்துவம் 4. மத்திய சட்டமன்றத்தில் முஸ்லிம்களுக்கு 33 விழுக்காடுகள் இட ஒதுக்கீடு.

டெல்லி முஸ்லிம் மாநாடு வடிவமைத்த புதிய கருத்துக்களை ஒப்புக்கொள்ளும்படி மோதிலால் நேருவும் எஸ். ஸ்ரீனிவாசனும் அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியை வற்புறுத்தினர். ஆனால் வகுப்புவாத உணர்வுகள் மிகவும் ஆழமாக வேர்விட்டிருந்ததால் இம்முன் முயற்சிகள் தோல்வியடைந்தன. இந்து முஸ்லிம் பிரச்சனை

12th_History_TM_Unit_6.indd 87 02-01-2023 16:36:18

சரோஜினி

மனிதர்களின் கைகளைத் தாண்டிச் சென்றுவிட்டதாகக் காந்தி கருத்துக் கூறினார். இவ்வாய்ப்பினைப் பயன்படுத்தி இச்சிக்கலைத் தீர்க்கத் தவறிய காங்கிரஸ், பிரச்சனையை நீட்டிக்கும் விதமாக இரண்டு குழுக்களை அமைத்தது. பம்பாயிலிருந்து சிந்துவை பிரிப்பது நிதியாதார அடிப்படையில் இயலும் என்பதைக் கண்டறிய ஒரு குழு, முஸ்லிம் பெரும்பான்மையைப் பாதுகாக்கும் ஒரு உத்தியாக விகிதாச்சாரப் பிரதிநிதித்துவம் குறித்து ஆய்வு மேற்கொள்ள மற்றொரு குழு என இரு குழுக்கள் அமைக்கப்பெற்றன. இரு பிரிவினருக்குமிடையே ஏற்பட்டிருந்த விரிசலைச் சுருக்குவதற்கான முயற்சிகளை ஜின்னா மேற்கொண்டிருந்தார். அவர் இந்து–முஸ்லிம் ஒற்றுமையின் தூதுவர் என சரோஜினியால் புகழாரம் சூட்டப்பெற்றவராவார். ஆனால் 1928இல் கல்கத்தாவில் கூடிய அனைத்துக் கட்சிக் கூட்டத்தில், இந்து மகாசபையின் உறுப்பினர்கள் திருத்தங்கள் அனைத்தையும் ஒப்புக்கொள்ள மறுத்து, ஒற்றுமைக்கான வாய்ப்புகள் அனைத்தையும் அழித்தபோது ஜின்னா, தான் கைவிடப்பட்டதாக வேதனையுற்றார். இதன் பின்னர் பெரும்பான்மையான முஸ்லீம் தலைவர்கள் காங்கிரஸிலிருந்து சிறப்பு சலுகைகளைப் பெறுவதைவிட ஆங்கிலேய அரசாங்கத்தை நாடுவது சாலச் சிறந்தது என உறுதியாக நம்பினர்.

> பிரிவினைவாத தேசியத்தின் வளர்ச்சி குறித்த தனது மன வேதனையை காந்தி பின்வருமாறு வெளிப்படுத்தினார்: "தனிமனிதர்களின் எண்ணிக்கையைப் போலவே பல மதங்கள் உள்ளன." ஆனால் தேசியத்தின் ஆன்மா குறித்த விழிப்புணர்வுள்ளவர்கள் மற்றவர்களின் மதங்களில் தலையிடமாட்டார்கள். இந்தியாவிலுள்ள அனைவரும் இந்துக்களாக மட்டுமே இருக்க வேண்டுமென இந்துக்கள் நம்பினால் அவர்கள் கனவுலகில் வாழ்கிறார்கள் என்றே பொருள். தங்கள் நாட்டை உருவாக்கிய இந்துக்கள், சீக்கியர்கள், முகமதியர்கள், பார்சிகள், கிறித்துவர்கள் ஆகிய அனைவரும் நாட்டின் சக மனிதர்களே. தங்களுடைய நலன்களுக்காக அவர்கள் ஒற்றுமையுடன் வாழ்ந்தாக வேண்டும். உலகத்தின் எந்தவொரு பகுதியிலும் ஒரு நாட்டுரிமையும் ஒரு மதமும் ஒரே பொருளைத் தருகிற வார்த்தைகளாக இல்லை. இந்தியாவில் அவ்வாறு எப்போதுமே இருந்ததில்லை.

ஈ) வகுப்புவாதத் தீர்வும் அதன் பின் விளைவுகளும்

பிரிவினைவாதத்தை ஊக்குவிப்பதில் ஆங்கில அரசு உறுதியாய் இருந்தது. இரண்டாவது வட்டமேஜை மாநாட்டுப் பிரதிநிதிகள் வகுப்புவாத அடிப்படையில்தான் தேர்வு செய்யப்பட்டனர். வட்ட மேஜை மாநாடுகளின் தோல்விக்குப் பின்னர் இங்கிலாந்து பிரதமர் ராம்சே மெக்டொனால்டு வகுப்புவாதத் தீர்வை அறிவித்தார். அது அரசியல் சூழலை மேலும் சீர்குலைத்தது.



V.D. சவார்க்கர்

1925இல் உருவாக்கப்பட்ட ராஷ்ட்ரிய சுயசேவா சங்கம் விரிவடைந்து கொண்டிருந்தது. அதன் உறுப்பினர் எண்ணிக்கை 1,00,000 மாக உயர்ந்தது. K.B.ஹெட்கேவர், V.D.சவார்க்கர், M.S.கோல்வாகர் ஆகியோர் இந்து ராஷ்டிரா எனும் கோட்பாட்டை மேலும் விரிவாக்கம் செய்யும் முயற்சிகளை மேற்கொண்டனர். "இந்துஸ்தானிலுள்ள இந்துக்கள் அல்லாத மக்கள் இந்து பண்பாட்டையும் மொழியையும் ஏற்றுக் கொள்ள வேண்டும்." அவர்கள் அந்நியர்களாக இருப்பதை நிறுத்திக் கொள்ள வேண்டும் அல்லது இந்து தேசத்திற்குக் கீழ்ப்படிந்தவர்களாகவும் உரிமை கோராதவர்களாகவும் இருத்தல் வேண்டும் என்று அவர்கள் வெளிப்படையாகவே கூறினர். "இந்துக்கள் ஆகிய நாங்கள் நாங்களாகவே ஒரு தேசமாக உள்ளோம்" என V.D.சவார்க்கர் உறுதிபடக் கூறினார். 1934 முதலாகவே தனது உறுப்பினர்கள் இந்துமகாசபையிலோ ஆர்.எஸ்.எஸ்.இயக்கத்திலோ இணைவதைக் காங்கிரஸ் தடைசெய்தது. ஆனால் டிசம்பர் 1938இல் தான் காங்கிரஸ் செயற்குழு இந்து மகாசபையில் உறுப்பினர்களாக இருப்பவர்கள் காங்கிரசில் உறுப்பினர்களாக இருக்கத் தகுதி இல்லாதவர்கள் என அறிவித்தது.

6.4 முதல் காங்கிரஸ் அமைச்சரவைகள்

இந்திய தேசிய காங்கிரஸின் தேசியவாதத்தை உருவகப்படுத்திய மகாத்மா காந்தி ஆரிய சமாஜமும், அலிகார் இயக்கமும் முன்வைத்த குறுகிய தேசியவாதத்தை மறுத்தார். மேலும் பல்வேறு மதங்களுக்கு அப்பாற்பட்ட, அவற்றைக் கடந்த ஓர் அரசியல் அடையாளத்தை தோற்றுவிக்க அவர் விரும்பினார். பல்வேறு சாயல்களைக் கொண்ட அரசு ஆதரவு பெற்ற வகுப்புவாத சக்திகள் இருந்த போதிலும் இந்தியாவில் அகில இந்திய தேசிய

12th_History_TM_Unit_6.indd 88
02-01-2023 16:36:18

காங்கிரஸ் பெரும் செல்வாக்குப் பெற்ற சக்தியாகத் திகழ்ந்தது. 1937இல் தேர்தல் நடைபெற்ற பதினோரு மாகாணங்களில் ஏழு மாகாணங்களில் காங்கிரஸ் வெற்றி வாகை சூடியது. மேலும் மூன்று மாகாணங்களில் மிகப்பெரும் கட்சியாகத் திகழ்ந்தது. முஸ்லிம் லீக்கின் செயல்பாடு மோசமாகவே அமைந்தது. மொத்த முஸ்லிம் வாக்குகளில் 4.8 விழுக்காடு வாக்குகளைப் பெறுவதில் மட்டுமே அது வெற்றி பெற்றது. காங்கிரஸ், மதச்சார்பற்ற மாபெரும் மக்கள் கட்சியாக எழுச்சி பெற்றது. ஆனால் அரசு அதற்கு இந்து அமைப்பு என்ற முத்திரையை இட்டது. முஸ்லிம் மக்களின் உண்மையான பிரதிநிதியாக முஸ்லிம் லீக்கை மட்டுமே முன்னிலைப்படுத்தியது. முஸ்லிம் லீக்கை காங்கிரசிற்கு சமமான சக்தியாகவே நடத்தியது.

6.5 மீட்பு நாளாகக் கடைப்பிடித்தல்

1939இல் இரண்டாம் உலகப்போர் வெடித்தது. இந்தியாவின் அரச பிரதிநிதியாக இருந்த லின்லித்கோ இந்தியாவும் போரில் இருப்பதாக உடனடியாக அறிவித்தார். காங்கிரசைக் கலந்தாலோசிக்காமல் இம்முடிவு எடுக்கப்பட்டதால் காங்கிரஸ் மிகவும் ஆத்திரமடைந்தது. காங்கிரஸ் செயற்குழு மாகாணங்களைச் சேர்ந்த காங்கிரஸ் அமைச்சர்கள் அனைவரும் ராஜினாமாச் செய்ய வேண்டுமென முடிவு செய்தது. காங்கிரஸ் அமைச்சர்களின் ராஜினாமாவைத் தொடர்ந்து மாகாண ஆளுநர்கள் சட்டமன்றங்களை தற்காலிகமாக நிறுத்தி வைத்த பின்னர் மாகாண நிர்வாகப் பொறுப்பைத் தாங்களே ஏற்றுக் கொண்டனர்.

காங்கிரஸ் ஆட்சி முடிவடைந்ததை மீட்பு நாளாக 1939 டிசம்பர் 22இல் முஸ்லிம் லீக் கொண்டாடியது. அன்று பல இடங்களில் முஸ்லிம்களுக்கு எதிராக காங்கிரஸ் மேற்கொண்ட செயல்களுக்கு எதிராகத் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. தேசியவாத முஸ்லிம்களின் செயல்பாடுகள் இஸ்லாமுக்கு எதிரானதென பெயரிடப்பட்டு சிறுமைபடுத்தப்பட்டன. இவ்வாறான சூழலில் 1940 மார்ச் 26இல் லாகூரில் முஸ்லிம் லீக், முஸ்லிம்களுக்கு தனிநாடு வேண்டுமென்ற கோரிக்கையைத் தீர்மானமாக நிறைவேற்றியது.

முதலில் ஜின்னாவோ, நவாப் ஜாஃபருல்லா கானோ முஸ்லிம்களுக்கு தனி நாடு உருவாக்குவது சாத்தியமாகும் என்று கருதவில்லை. இருந்தபோதிலும் 1940 மார்ச் 23இல் முஸ்லிம் லீக் பின்வருமாறு ஒரு தீர்மானத்தை நிறைவேற்றியது. தீர்மானத்தின் வாசகங்கள் பின்வருமாறு: "இது அகில இந்திய முஸ்லிம் லீக்கின், இந்த அமர்வின்

பாகிஸ்தான் என்ற எண்ணவோட்டம் 1940இல் முஸ்லிம் லீக் மேடைகளிலிருந்து வெளிப்பட்டாலும் பத்து ஆண்டுகளுக்கு முன்பாகவே கவிஞரும் அறிஞருமான முகமது இக்பாலால் சிந்திக்கப்பட்டதாகும். 1930இல் அலகாபாத்தில் நடைபெற்ற முஸ்லிம் லீக்கின் ஆண்டுமாநாட்டில்இக்பால்ஒருங்கிணைக்கப்பட்ட வடமேற்கு இந்திய முஸ்லிம் அரசைத் தான் காண விரும்புவதாகக் கூறினார். இது பின்னர் கேம்பிரிட்ஜ் மாணவர்களில் ஒருவரான ரகமது அலியால் வலுவாக வெளிப்படுத்தப்பட்டது. லீக்கின் அடிப்படைக் கோரிக்கையானது 'இரு நாடு கொள்கை' ஆகும். இதனை முதலில் சர் வாசிர் ஹசன் என்பவர்தான் 1937இல் நடைபெற்ற பம்பாய் லீக் மாநாட்டில் தனது தலைமை உரையில் குறிப்பிட்டார். இப்பரந்த கண்டத்தில் வாழும் இந்துக்களும் முஸ்லிம்களும் இரண்டு சமூகங்கள் அல்ல, ஆனால் பல வழிகளில் இரு நாட்டினராக கருதுதல் வேண்டும் என்றார்.


முகமது அலி ஜின்னா

ஒருங்கிணைந்த கருத்தாகும். கீழ்க்கண்ட கொள்கைகளைக் கொண்டிராத எந்தவொரு அரசியல் அமைப்புத் திட்டமும் இந்நாட்டில் செயல்பட இயலாது முஸ்லிம்களுக்கு ஏற்புடையதாகவும் இருக்காது. அதாவது நிலவியல் அடிப்படையில் நிர்ணயித்து அடுத்தடுத்து அமைந்துள்ள பகுதிகள் மண்டலங்களாக அவற்றின் எல்லைகள் வரையறை செய்யப்பட வேண்டும். தேவைக்கேற்றவாறு மாற்றப்பட்ட, நிலப்பகுதிகளைக் கொண்டவைகளாக அவைகள் அமைதல் வேண்டும். முஸ்லிம்களின் எண்ணிக்கையில் பெரும்பான்மையாக உள்ள பகுதிகள் சுதந்திரமான தனி மாநிலமாக அமைக்கப்பட வேண்டும்". பிரிட்டிஷ் அரசாங்கம் இந்தியாவை விட்டுச் செல்லும் முன் நாட்டை இந்திய யூனியன் மற்றும் பாகிஸ்தான் யூனியன் என பிரிவினை செய்ய வேண்டுமென்று முஸ்லிம் லீக் தீர்மானித்தது.

6.6 நேரடி நடவடிக்கை நாள்

1940களின் தொடக்கத்தில் இந்து மற்றும் முஸ்லிம் வகுப்புவாதங்கள் ஒன்றையொன்று ஊட்டி வளர்த்தன. 1942இல் நடைபெற்ற வெள்ளையனே வெளியேறு இயக்கத்தை முஸ்லிம் லீக் வெளிப்படையாகவே புறக்கணித்தது. 1946இல்

12th_History_TM_Unit_6.indd 89 02-01-2023 16:36:18

அரசியல் நிர்ணய சபைக்கு நடைபெற்ற தேர்தலில் முஸ்லிம் லீக் மத்திய சட்டமன்றத்தில் தனக்கென ஒதுக்கப்பட்ட 30 இடங்களிலும் வென்றதோடு, மற்ற மாகாணங்களில் ஒதுக்கப்பட்ட பெரும்பாலான இடங்களையும் வென்றது. காங்கிரஸ் கட்சி பொது தொகுதிகள் அனைத்தையும் வெற்றிகரமாக கைப்பற்றியது. ஆனால் ஒட்டுமொத்த பிரிட்டிஷ் இந்திய மக்களின் குரலாக ஒலிக்கும் கட்சி அதுமட்டுமே என்ற கருத்தை வலியுறுத்தும் வாய்ப்பை இழந்தது.

1946இல் அரசு செயலாளரான பெதிக் லாரன்ஸ் தலைமையில் மூன்று உறுப்பினர்களைக் கொண்ட அமைச்சரவைத் தூதுக்குழு காங்கிரஸ்–முஸ்லிம் லீக் இடையிலான பிணக்கைத் தீர்த்து அதிகாரத்தை ஒரு இந்திய நிர்வாக அமைப்பிடம் மாற்றம் செய்யும் நம்பிக்கையோடு புதுடெல்லி வந்தது. மூன்று உறுப்பினர்களில் ஒருவரான கிரிப்ஸ் அமைச்சரவைத் தூதுக்குழுவின் திட்ட வரைவு தயாரிப்பில் முக்கிய பங்காற்றினார். இத்திட்டமானது இந்தியாவிற்கு மூன்றடுக்கு கொண்ட கூட்டாட்சி முறையைப் பரிந்துரைத்தது, இந்த கூட்டாட்சி முறையில் டெல்லியிலுள்ள மத்திய அரசாங்கம் ஒருங்கிணைக்கப்பாளராகவும் வெளியுறவு விவகாரங்கள், தகவல்தொடர்பு, பாதுகாப்பு மற்றும் ஒன்றிய விவகாரங்களுக்கு மட்டுமான நிதி வழங்குதல் ஆகிய குறைந்தபட்ச, வரையறுக்கப்பட்ட அதிகாரங்களைக் கொண்டதாகவும் இருக்கும். இத்துணைக் கண்டத்தின் மாகாணங்கள் மூன்று பெரும் குழுக்களாக வகைப்படுத்தப்படும்: இந்துக்களை பெரும்பான்மையினராகக் கொண்ட மாகாணங்களான, பம்பாய் மாகாணம், மதராஸ் மாகாணம், ஐக்கிய மாகாணம், பீகார், ஒரிசா மற்றும் மத்திய மாகாணம்ஆகியன குழு – அ – வில் அடங்கும்; முஸ்லிம்களை பெரும்பான்மையினராகக் கொண்ட மாகாணங்களான பஞ்சாப், சிந்து, வடமேற்கு எல்லைப்புற மாகாணம் மற்றும் பலுச்சிஸ்தான் ஆகியன குழு – ஆ – வில் அடங்கும்; முஸ்லிம்களை பெரும்பான்மையினராகக் கொண்ட வங்காளமும் இந்துக்களை பெரும்பான்மையினராகக் கொண்ட அசாமும் குழு – இ – யில் அடங்கும். மத்திய அரசுக்கு ஒதுக்கப்பட்ட துறைகளைத் தவிர மற்ற அனைத்துத் துறைகளிலும் இந்த மாகாண அரசாங்கங்கள் தன்னாட்சி அதிகாரம் கொண்டு விளங்கும். இக்குழுவில் உள்ள சுதேச அரசுகள் பின்னர் அந்தந்த குழுக்களில் ஒருங்கிணைக்கப்பட்டு அவற்றின் அருகில் இருக்கும் மாகாணங்களோடு இணைக்கப்படும். உள்ளூர் மாகாண அரசுகள் தமது குழுவிலிருந்து வெளியேற வாய்ப்பு தரப்படும். ஆனால் அந்த மாகாண அரசின் பெரும்பான்மையான மக்கள் விரும்பினால் மட்டுமே அது சாத்தியமாகும்.

காங்கிரஸ் தலைவர்களும் ஜின்னாவும் அமைச்சரவைத் தூதுக்குழு திட்டத்தை ஏற்றுக்கொண்டனர். ஆனால் பல வாரங்கள் நடைபெற்ற இரகசிய பேச்சுவார்த்தைகளுக்குப் பின் 1946 ஜூலை 29இல் முஸ்லிம் லீக் அமைச்சரவைத் தூதுக்குழு திட்டத்தை நிராகரிப்பதாக அறிவித்ததோடு, இந்தியாவிலுள்ள அனைத்து முஸ்லிம்களையும் இதற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் ஆகஸ்ட் 16 அன்று 'நேரடி நடவடிக்கை நாளில்' ஈடுபடவும் அழைப்பு விடுத்தது. கல்கத்தாவில் நான்கு நாட்கள் கலவரங்களும் கொலைகளும் நடந்தேறின. இது கடுமையான வன்முறைத் தாக்குதல்களுக்கு இட்டுச் சென்றதோடு ஆயிரக்கணக்கான உயிரிழப்புகளும் ஏற்பட்டன. இதுவரை நாட்டைப் பிரிவினை செய்யும் முயற்சிக்கு எதிர்ப்பு தெரிவித்து வந்த காந்தியடிகள் முஸ்லிம் லீக்கின் பாகிஸ்தான் கோரிக்கையை ஏற்றார்.

வேவல் பிரபுவைத் தொடர்ந்து மௌண்ட்பேட்டன் பிரபு இந்தியாவின் அரச பிரதிநிதியாக பொறுப்பேற்றார். அதிகாரத்தை மாற்றித்தரவும் நாட்டின் பிரிவினையை நடைமுறைப்படுத்தவும் அவர் இந்தியா வந்தார்.

பாடச் சுருக்கம்

- பிரிட்டிஷ் இந்தியாவில் வகுப்புவாதம் சமய சீர்திருத்த இயக்கங்களோடு அடையாளப்படுத்தப்பட்டது, ஆரிய சமாஜம் மற்றும் பிரம்மஞான சபை போன்றவை இந்துமதத்தையும், வாஹாபி மற்றும் கிலாபத் இயக்கங்கள் இஸ்லாம் மதத்தையும் பிரதிநிதித்துவப்படுத்தின.
- பசு பாதுகாப்பு சங்கங்கள் பசுவதையைத் தடுப்பதற்கு எடுத்த முயற்சிகள் கலவரங்கள் ஏற்படவும், வகுப்புவாதம் பரவவும் வழிவகுத்தன.
- அரசியலில் மதம் பயன்படுத்தப்பட்டதும், வட இந்தியாவில் அது ஏற்படுத்திய தொடர் தாக்கங்களும் இந்துக்கள் மற்றும் முஸ்லிம்களிடையே பிரிவினையை ஏற்படுத்தியது.
- ஜின்னா தன் பிடிவாதத்தால் அமைச்சரவை தூதுக்குழுவின் திட்டத்தை ஏற்று ஒரு முடிவுக்கு வராமல் நேரடி நடவடிக்கை நாளுக்கு அழைப்பு விடுத்ததால் 1946இல் கல்கத்தாவில் உள்நாட்டுப் போர் போன்ற நிலை உருவாகி, இறுதியில் நாட்டினை இந்தியா, பாகிஸ்தான் என்று இரு நாடுகளாகப் பிரிவினை செய்யும் நிலைக்கு இட்டுச்சென்றது.

12th_History_TM_Unit_6.indd 90 02-01-2023 16:36:18

www.tntextbooks.in

பயிற்சி

I. சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்.

1. முகலாயர் காலத்தில் அலுவலக மற்றும் நீதிமன்ற மொழியாக விளங்கியது எது?
   (அ) உருது (ஆ) இந்தி
   (இ) மராத்தி (ஈ) பாரசீகம்

2. லண்டன் பிரிவிக் கவுன்சிலில் இடம்பெற்ற முதல் இந்தியர் _________
   (அ) ரஹமத்துல்லா சயானி
   (ஆ) சர் சையது அகமது கான்
   (இ) சையது அமீர் அலி
   (ஈ) பஃருதீன் தயாப்ஜி

3. **கூற்று:** 1870இல் வங்காள அரசாங்க ஆணை இஸ்லாமிய தொழில்வல்லுநர் குழுக்களிடையே ஐயங்களை ஏற்படுத்தியது.
   காரணம்: அவ்வாணை உருது மொழி பாரசீக – அரபி எழுத்து முறைக்குப் பதிலாக இந்தியைக் கொண்டு வந்தது.
   அ) கூற்று சரி ஆனால் காரணம் கூற்றை விளக்கவில்லை.
   (ஆ) கூற்று சரி காரணம் கூற்றை விளக்குகிறது.
   (இ) கூற்று தவறு காரணம் சரி.
   (ஈ) கூற்று, காரணம் இரண்டும் தவறு.

4. இரு நாடு கொள்கையை முதன்முதலில் கொண்டு வந்தவர் _________
   (அ) இராஜாஜி
   (ஆ) ராம்சே மெக்டொனால்டு
   (இ) முகமது இக்பால்
   (ஈ) சர் வாசிர் ஹசன்

5. 1937இல் நடைபெற்ற தேர்தலில் காங்கிரஸ் வெற்றி பெற்றது
   (அ) 12 மாகாணங்கள்
   (ஆ) 7 மாகாணங்கள்
   (இ) 5 மாகாணங்கள்
   (ஈ) 8 மாகாணங்கள்

6. காங்கிரஸ் ஆட்சி முடிவுக்கு வந்த நாளினை முஸ்லிம் லீக் மீட்பு நாளாக கொண்டாடியது
   (அ) 22 டிசம்பர், 1940 (ஆ) 5 பிப்ரவரி, 1939
   (இ) 23 மார்ச், 1937 (ஈ) 22 டிசம்பர், 1939

7. பின்வருவனவற்றைப் பொருத்தி சரியான விடையைத் தேர்வு செய்க.

பட்டியல் I	பட்டியல் II
(அ) அன்னிபெசண்ட்	– 1. அலிகார் இயக்கம்
(ஆ) சையது அகமது கான்	– 2. தயானந்த சரஸ்வதி
(இ) கிலாபத் இயக்கம்	– 3. பிரம்மஞான சபை
(ஈ) சுத்தி இயக்கம்	– 4. அலி சகோதரர்கள்

	அ	ஆ	இ	ஈ
(அ)	3	1	4	2
(ஆ)	1	2	3	4
(இ)	4	3	2	1
(ஈ)	2	3	4	1

8. பின்வரும் கூற்றுகளிலிருந்து சரியானவற்றைத் தேர்வு செய்க.
   (i) அலிகார் இயக்கத்தைத் தோற்றுவித்த சர் சையது அகமது கான் தொடக்கத்தில் காங்கிரசை ஆதரித்தார்.
   (ii) 1909இல் தோற்றுவிக்கப்பட்ட பஞ்சாப் இந்து சபையானது இந்துமத வகுப்புவாத அரசியலுக்கு அடித்தளமிட்டது.
   (அ) கூற்று (i) மற்றும் (ii) சரி
   (ஆ) கூற்று (i) சரி (ii) தவறு
   (இ) கூற்று (i) தவறு (ii) சரி
   (ஈ) கூற்று (i) மற்றும் (ii) தவறு

9. எப்போது முஸ்லிம் லீக் நேரடி நடவடிக்கை நாளை அனுசரித்தது?
   (அ) 25 டிசம்பர், 1942 (ஆ) 16 ஆகஸ்ட், 1946
   (இ) 21 மார்ச், 1937 (ஈ) 22 டிசம்பர், 1939

10. வேவல் பிரபுவிற்குப் பின்னர் பதவியேற்றவர்
   (அ) லின்லித்கோ (ஆ) பெதிக் லாரன்ஸ்
   (இ) மௌண்ட்பேட்டன் (ஈ) செம்ஸ்ஃபோர்டு

11. **கூற்று:** பிரிட்டிஷ் அரசாங்கம் வகுப்புவாதத்தை வளர்க்கவும் பரப்பவும் பின்பற்றியது தனித்தொகுதிக் கொள்கையாகும்
   காரணம்: மக்கள் இரண்டு தனித்தொகுதிகளாக பிரிக்கப்பட்டதால் வகுப்புவாத அடிப்படையிலேயே வாக்களித்தனர்.
   அ) கூற்று சரி, ஆனால் காரணம் கூற்றை விளக்கவில்லை.
   (ஆ) கூற்று சரி, காரணம் தவறு.
   (இ) கூற்று மற்றும் காரணம் தவறு.
   (ஈ) கூற்று சரி, காரணம் கூற்றை விளக்குகிறது.

12th_History_TM_Unit_6.indd 91 02-01-2023 16:36:18

12. பின்வருவனவற்றைப் பொருத்தி சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்.

(அ) இந்துமத மறுமலர்ச்சி – 1. M.S. கோல்வாக்கர்

(ஆ) கலீஃபா பதவி ஒழிப்பு – 2. ஆரிய சமாஜம்

(இ) லாலா லஜபதி ராய் – 3. 1924

(ஈ) ராஷ்டிரிய சுயசேவா சங்கம் – 4. இந்து – முஸ்லிம் மாகாணங்களாக பஞ்சாப் பிரித்தல்

	அ	ஆ	இ	ஈ
(அ)	2	4	3	1
(ஆ)	3	4	1	2
(இ)	1	3	2	4
(ஈ)	2	3	4	1

II குறுகிய விடையளிக்கவும்.

1. சர் சையது அகமது கான் பிரிட்டிஷ் அரசினை ஏன் ஆதரித்தார்?
2. தனித் தொகுதி முறையினை பற்றி எழுதுக?
3. ஆகாகான் தலைமையிலான முஸ்லிம் லீக் முன் வைத்த கோரிக்கைகள் என்ன?
4. 1923இல் வாரணாசியில் நடைபெற்ற ஆறாவது இந்து மகாசபை மாநாட்டைப் பற்றி குறிப்பு எழுதுக.

III சுருக்கமாக விடையளிக்கவும்.

1. 1921இல் நடைபெற்ற மலபார் கலகத்தைப் பற்றிய காந்தியடிகளின் கருத்து என்ன?
2. இஸ்லாமியர்களுக்காக மத்தியில் முதலில் அமைக்கப்பட்ட அரசியல் கட்சியின் நோக்கங்களை எழுதுக.
3. 1909ஆம் ஆண்டின் மின்டோ–மார்லி சீர்த்திருத்தங்களின் முக்கியத்துவத்தைக் கூறுக.
4. 1927ஆம் ஆண்டு டெல்லியில் நடைபெற்ற முஸ்லிம் லீக் மாநாட்டின் முன்மொழிவுகள் யாவை?

IV விரிவான விடையளிக்கவும்.

1. பிரிட்டிஷ் இந்தியாவில் வகுப்புவாதத்தின் தோற்றம் மற்றும் வளர்ச்சி குறித்து ஆய்வு செய்க.
2. ஆங்கிலேயர்களின் பிரித்தாளும் கொள்கை இந்திய தேசியத்தில் ஏற்படுத்திய தாக்கம் என்ன?
3. இந்து தேசியம், இஸ்லாமிய தேசியம் மற்றும் இந்திய தேசியம் ஆகியவை இந்தியப் பிரிவினைக்கு சமபங்காற்றியது எவ்வாறு?

V செயல்பாடு

1. 1875லிருந்து இந்தியாவில் நடைபெற்ற இந்து – முஸ்லிம் கலகங்களைத் தொகுத்து எழுதுக.
2. மதம் பொதுவெளிக்கு வரலாமா? – என்பது குறித்து விவாதம் செய்க.

மேற்கோள் நூல்கள்

1. Anil Seal, *The Emergence of Indian Nationalism*, Cambridge University Press, 1968.
2. S. Gopal, *British Policy in India, 1858-1905*, Cambridge University Press, 1992 (reprint).
3. K.N. Panikkar, *Communalism in India: A Perspective for Intervention* (New Delhi, Tulika, 1991)
4. Richard Gordon, "The Hindu Mahasabha and the Indian National Congress, 1915–1926", *Modern Asian Studies*, vol. 9, no. 2 (1975).
5. Chandini Saxena, "The Partition of India: Contestation, Appeasement and Culmination", *Proceedings of Indian History Congress*, Vol. 76 (2015).

A-Z கலைச்சொற்கள்

வகுப்புவாதம்	communalism	socio-political grouping based on religious or ethnic affiliation.
தேசியம் / நாட்டுப்பற்று	nationalism	the policy or doctrine of asserting the interests of one's own nation.
பிரித்தாளும் ஆட்சி	Divide and Rule	breaking up larger centres of power into small groups.
மீட்புவாதம்	revivalism	a desire to revive a former customs or practice
ஏகாதிபத்தியம்	imperialism	a policy of extending political or economic control by a powerful country over a weaker country.
இஸ்லாமியர் அல்லாத பிற சமயத்தினர் செலுத்திய வரி	jizya	the poll tax formerly paid by religious groups other than Muslims in Islamic empires
இஸ்லாமியச் சட்ட முறைமை	shariat	Islamic code of law based on Koran and the teachings of the Prophet
வகுப்புவாத தீர்ப்பு	communal award	a judgement based on religion

12th_History_TM_Unit_6.indd 92 02-01-2023 16:36:19

அலகு 7

இந்திய தேசிய இயக்கத்தின் இறுதிக்கட்டம்

கற்றலின் நோக்கங்கள்

கீழ்க்காணும் அம்சங்களோடு அறிமுகமாதல்

- கிரிப்ஸ் தூதுக்குழுவின் வருகையும் அதன் தோல்வியும்
- வெள்ளையனே வெளியேறு இயக்கமும் காந்தியடிகளின் 'செய் அல்லது செத்துமடி' முழக்கமும்
- சுபாஷ் சந்திர போசும் இந்திய தேசிய இராணுவமும்
- இராஜாஜியின் சமரச முன்மொழிவும் வேவல் திட்டமும்
- இராயல் இந்திய கடற்படையின் கலகம் (1946)
- மௌண்ட் பேட்டன் திட்டமும் இந்தியப் பிரிவினையும்

அறிமுகம்

இரண்டாம் உலகப்போரின் துவக்கமும் அதை தொடர்ந்து, மாகாணங்களில் வீற்றிருந்த காங்கிரஸ் அமைச்சரவைகளின் ஒப்புதல் பெறாமல் பிரிட்டிஷார் இந்தியாவைப் போரில் பங்கெடுக்க முடிவுசெய்ததையும் இந்திய தேசிய காங்கிரசையும் காந்தியடிகளையும் அரசியல்ரீதியாகத் தூண்டும் வகையில் அமைந்தது. தங்கள் எதிர்ப்பைப் பதிவுசெய்யும் விதமாக காங்கிரஸ் அமைச்சர்கள் பதவி துறந்தனர். காந்தியடிகள் அக்டோபர் 1940இல் தனிநபர் சத்தியாகிரகத்தைத் துவங்கியதன் மூலமாக காங்கிரஸ் இயக்கத்தின் மனவலிமையை உறுதிப்படுத்தினார். இதற்கிடையே, இந்திய தேசிய காங்கிரசின் தலைவராக சுபாஷ் சந்திர போஸ் தேர்ந்தெடுக்கப்பட்டது காந்தியடிகளை அதிர்ச்சியில் ஆழ்த்தியதால் சுபாஷ் தம் பதவியைத் துறந்தார். பின்னர் ஃபார்வர்ட் பிளாக் கட்சியைத் துவக்கினார். பிரிட்டிஷாரின் கைது நடவடிக்கையால் சுபாஷ் ஜெர்மனி மற்றும் சிங்கப்பூருக்கு தப்பிச் சென்று அங்கு இந்திய தேசிய இராணுவத்தை உருவாக்கி காங்கிரஸ் இயக்கத்திலிருந்து தனித்துப் புரட்சிகர நடவடிக்கைகளில் ஈடுபட்டார்.

அதிருப்தியிலிருந்த தேசியவாதிகளை அரவணைக்கும் பொருட்டு மார்ச் 1942இல் கிரிப்ஸ் தூதுக்குழு வருகைபுரிந்தது. ஆனால், அதன் முன்மொழிவில் எந்தப் பலனும் இருப்பதாகத் தெரியவில்லை. காந்தியடிகள் ஆகஸ்ட் 1942இல் 'வெள்ளையனே வெளியேறு இயக்கத்தை' நடத்த முடிவு செய்தார். ஆனால் பிரிட்டிஷாரோ காங்கிரசின் அனைத்துத் தலைவர்களையும் கைது செய்ததோடு, இயக்கத்தையும் இரும்புக்கரங்கொண்டு அடக்கினர். காந்தியடிகள் மே 1944 வரை சிறையில் கடும் நெருக்கடிகளுக்கு உட்படுத்தப்பட்டார். அதன்பின் வந்த அமைச்சரவைத் தூதுக்குழுவின் திட்டம் காங்கிரசாருக்கு ஏற்றுக் கொள்ளக்கூடியதாக இருந்தது. எனினும், பாகிஸ்தானின் உருவாக்கத்தை எதிர்பார்த்த ஜின்னாவும் அவர்தம் முஸ்லிம் லீக் கட்சியும் 'நேரடி நடவடிக்கை நாள்' என்று விடுத்த அறைகூவலில் கிழக்கு வங்காளத்தில் வன்முறை வெடித்துக் கிளம்பியது. கலவர பூமியாக மாறியிருந்த நவகாளியில் இருந்து காந்தியடிகள் தமது அமைதிப் பயணத்தைத் துவக்கினார். இராஜாஜியின் சமரச முயற்சியும் வேவல் திட்டமும் அதை நிறைவேற்றும் பொருட்டு கூடிய சிம்லா மாநாடும் பேச்சுவார்த்தை முடக்கத்தைச் சரி செய்ய தவறின. இதற்கிடையே, இராயல் இந்தியக் கடற்படை, கலகத்தில் ஈடுபட்டமை பிரிட்டிஷாரை வேகமாக விடுதலை வழங்கத் துரிதப்படுத்தியது. விடுதலை வழங்கவும் இந்தியா–பாகிஸ்தான் என்று இத்துணைக்கண்டம் பிரிக்கப்படுவதை மேற்பார்வையிடவும் மௌண்ட் பேட்டன் அரசப்பிரதிநிதி நியமிக்கப்பட்டார்.

12th_History_TM_Unit_7.indd 93 02-01-2023 16:36:59

தனிநபர் சத்தியாகிரகம்

இதற்கு முன்பு பெருவாரியான மக்களை உள்ளடக்கிய இயக்கங்களை நடத்திவந்த காந்தியடிகள், சர்வாதிகாரத்திற்கு எதிரான போரை வலுவிழக்கச் செய்யாமலிருக்கத் தனிநபர் சத்தியாகிரகம் என்ற வழியைக் கைக்கொண்டார். காந்தியடிகளால் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட சத்தியாகிரகிகளை அவர்களின் பேச்சுரிமையை மையப்படுத்தி போருக்கு எதிரானப் பிரச்சாரத்தை மேற்கொள்ள தூண்டினார். தேர்ந்தெடுக்கப்பட்ட சத்தியாகிரகிகள் தாங்கள் பிரச்சாரம் மேற்கொள்ளும் தேதி, நேரம், இடம் போன்ற தகவல்களை மாவட்ட நீதிபதிக்குத் தெரிவித்துவிட வரையறுக்கப்பட்டது. குறித்த நேரத்தில் சரியான இடத்தை வந்தடைந்த சத்தியாகிரகிகள் முழங்க வேண்டியதாவது: "பிரிட்டிஷாரின் போர் முயற்சிக்கு மனிதசக்தியாகவோ பணமாகவோ உதவிபுரிதல் தவறாகும். ஒரே உருப்படியான செய்கை என்பது வன்முறையைக் கைக்கொள்ளாமல் எல்லாவிதத்திலும் போர் முயற்சிகளை எதிர்ப்பதேயாகும்." இவ்வாறு பிரச்சாரம் செய்வதன் மூலம் கைதாவது அடுத்தகட்டமாகும்.

மகாராஷ்டிராவில் பாவ்னர் ஆசிரமம்

வினோபா பாவே மகாராஷ்டிரத்தில் அமைந்த தனது பாவ்னர் ஆசிரமத்தருகே 1940 அக்டோபர் 17இல் முதல் சத்தியாகிரகத்தை நடத்தியதின் வாயிலாக இவ்வியக்கம் தொடங்கப் பெற்றது. காந்தியடிகள் டிசம்பர் 1940இல் இவ்வியக்கம் முடிவுக்கு வந்ததாக அறிவித்தார். மேற்கொண்டு சில மாற்றங்களுக்கு உட்படுத்தப்பட்ட பின் மீண்டும் ஜனவரி 1941இல் குழு சத்தியாகிரகமாக உருவெடுத்தபோதும் அதை ஆகஸ்ட் 1941இல் திரும்பப் பெறுவதாக அறிவித்தார்.

ஆகஸ்ட் கொடை

தனிநபர் சத்தியாகிரகம் என்பது அரசபிரதிநிதி லின்லித்கோ பிரபுவின் ஆகஸ்ட் கொடைக்கு காங்கிரஸ் கொடுத்த பதிலடியாகும். லின்லித்கோ பிரபு 1940 ஆகஸ்ட் 8இல் அளிக்க முன்வந்ததாவது: வரையறுக்கப்படாத ஒரு தேதியில் டொமினியன் அந்தஸ்து, அதிகமான இந்தியர்களைக் கொண்டு அரசபிரதிநிதியின் குழுவை (செயற்குழு) விரிவாக்கம் செய்தல், இந்திய உறுப்பினர்களைக் கொண்ட போர் ஆலோசனைக் குழுவை உருவாக்குதல், சிறுபான்மையினரின் உரிமைகளைஅங்கீகரித்தல், போருக்குப் பின் இந்திய மக்கள் தங்களுக்கென்ற ஒரு அரசியல் சாசனத்தை இயற்ற உள்ள உரிமையை ஏற்று அதற்கு எதிர்காலத்தில் வாய்ப்பளிக்க உறுதியளித்தல் ஆகியவையாகும்.

லின்லித்கோ பிரபு

காங்கிரஸில் இருந்து போஸ் நீக்கப்படுதல்

ஆகஸ்ட் கொடை மிகத்தாமதமாக அறிவிக்கப்பட்டதால் அது குறித்துப் பேச்சு வார்த்தை நடத்தக் கூட காங்கிரசுக்கு நேரமில்லை. இக்காலகட்டத்தில் காங்கிரசும் தனது ஆதரவாளர் பின்புலத்தை வெகுவாக இழந்திருந்தது. அதன் உறுப்பினர் எண்ணிக்கை 1938–39இல் 4.5 மில்லியன் என்ற நிலையிலிருந்து 1940–41இல் 1.4 மில்லியன் என்ற அளவுக்குச் சரிந்திருந்தது. காங்கிரசிற்குள் சுபாஷ் சந்திர போஸ் ஓரங்கட்டப்பட்டதால் அவ்வமைப்பின் முக்கிய மேல்மட்டத் தலைவர்கள் அவரோடு ஒத்துழைக்க மறுத்தனர். அதனால் கல்கத்தாவில் கூடிய அனைத்து இந்திய காங்கிரஸ் கூட்டத்தில் போஸ் பதவித் துறப்பு செய்யவே, இராஜேந்திரப் பிரசாத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். போஸ் காங்கிரசிற்குள் செயலாற்ற விரும்பி ஃபார்வர்டு பிளாக் கட்சியை உருவாக்கினாலும், ஆகஸ்ட் 1939இல் அவர் காங்கிரசின் அனைத்துப் பொறுப்புகளில் இருந்தும் விடுவிக்கப்பட்டார்.

சுபாஷ் சந்திர போஸ்

லாகூர் தீர்மானம்

ஒருபுறம், தேதி அறிவிக்கப்படாத டொமினியன் அந்தஸ்து என்ற நிலைக்கும் போரில் பங்கெடுத்தால் அதன் முடிவிற்குப் பின் விடுதலை வழங்க வலியுறுத்திய இந்தியர்களின் நிலைப்பாட்டிற்கும் இடையே சுமூகமான தீர்வை எட்ட அனுமதிக்காத காலனிய அராஜகப்போக்கு சிக்கலை ஏற்படுத்திக் கொண்டிருந்தது என்றால் மறுபுறம் வேறொரு சிக்கல் முளைத்தது. அது இஸ்லாமியர்களுக்கான தனிநாடு கோரிக்கையாகும். இதன் துவக்கம் 1930களில் கிழக்கு மற்றும் வடமேற்கு இந்தியாவில் தனிப்பகுதி

12th_History_TM_Unit_7.indd 94 02-01-2023 16:36:59

அல்லது சில பகுதிகள் என்ற நிலையிலிருந்து 1940 மார்ச் 23இல் லாகூரில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் மூலம் இது ஒரு முக்கியக் கட்டத்தை எட்டியது.

இத்தகைய கோரிக்கையை முஸ்லிம் லீக் கட்சியும் அதன் ஆதரவாளர்களும் முன்வைக்க காலனி ஆட்சியாளர்களே தூண்டுதலாக இருந்ததற்கான ஆதாரங்கள் வெகுவாக உள்ளன. இத்தீர்மானத்தின் மூலம் பிரிட்டிஷார் போர் நடவடிக்கைகளில் காங்கிரசின் ஆதரவை வேண்டியபோதும் அவர்களோடு பேச்சுவார்த்தையை நிராகரிக்க ஒரு தெம்பை ஏற்படுத்திக் கொடுத்தது.

அமைப்புரீதியில் காங்கிரஸ் இக்கால கட்டத்தில் முன்னெப்போதும் இல்லாத வகையில் வலுவிழந்து காணப்பட்டது. அதன் தலைவர்கள் அச்சு நாடுகளின் – ஜெர்மனி, இத்தாலி, ஜப்பான் – கொள்கைக்கு எதிரான பிரிட்டிஷாரின் போர் என்பதால் தங்கள் ஆதரவை சர்வாதிகாரத்திற்கு எதிராகவும் மக்களாட்சியைப் பாதுகாக்கும் பொருட்டும் உறுதிசெய்ய வேண்டிய நிலை இருப்பதை உணர்ந்தனர். போஸ் ஒருவர் மட்டுமே நேசநாடுகளோடு ஒத்துழையாமல் அச்சு நாடுகளை ஆதரித்தார்.

இவையெல்லாம் 1940இன் முக்கிய போக்குகளாகும். ஜப்பான் தென்கிழக்கு ஆசியப் பகுதியில் முன்னேறி வந்ததும் பிரிட்டிஷ் படைகளின் வீழ்ச்சியும் நிலைமையைப் பெரிதும் மாற்றின. இதனால் விடுதலைக்கு ஒப்புதல் வழங்காமலேயே போர் முயற்சிகளில் இந்தியர்களின் ஒத்துழைப்பைப் பெறவேண்டிய அவசரமான சூழல் உதித்தது. போர்க்கால அமைச்சரவையைத் தலைமையேற்று நடத்திக்கொண்டிருந்த வின்ஸ்டன் சர்ச்சில், சர் ஸ்டாஃப்போர்டு கிரிப்ஸை காங்கிரசோடு பேச்சுவார்த்தை நடத்த அனுப்பிவைத்தார்.

7.1 கிரிப்ஸ் தூதுக்குழு

தென்கிழக்கு ஆசியாவில் ஜப்பானின் அத்துமீறல்

நேச நாடுகளுக்கு 1941ஆம் ஆண்டு மோசமானதாக விளங்கியது. பிரான்ஸ், போலந்து, பெல்ஜியம், நார்வே, ஹாலந்து ஆகிய நாடுகள் ஜெர்மனி வசம் சிக்கியதோடு பிரிட்டனும் பல பின்னடைவுகளை எதிர்கொண்டது. அவற்றுள் மிக முக்கியமானதாகக் கருதப்படுவது தென்கிழக்கு ஆசியாவிற்குள் ஜப்பான் படைநடத்திச் சென்றதேயாகும். இந்நிகழ்வு முத்துத் துறைமுகம் (Pearl Harbour) என்ற அமெரிக்க துறைமுகம் 1941 டிசம்பர் 7இல் தாக்கப்பட்ட சமகாலத்தில் நடந்தேறியது. அமெரிக்க அதிபரான ரூஸ்வெல்டும், சீனக் குடியரசுத்தலைவரான ஷியாங் கே–ஷேக்கும் ஜப்பானின் அதிரடிப்போக்கை நிறுத்த முனைந்தனர். அவர்களின் கண்காணிப்பு கவனத்திற்குள் இந்தியா சென்றதால், அவர்கள் பிரதமர் சர்ச்சிலை இந்திய மக்களின் முழு ஒத்துழைப்பைப் பெறக்கோரி அழுத்தம் கொடுத்தனர்.

ஜப்பானியப் படைகள் 1941இன் முடிவில் பிலிப்பைன்ஸ், இந்தோ–சீனா, இந்தோனேசியா, மலேசியா, பர்மா போன்ற பகுதிகளை மண்டியிட வைத்து இந்தியாவின் வடகிழக்கு எல்லை வழியாக நுழையத் தயாராயின. தென்கிழக்கு ஆசியாவின் வீழ்ச்சி பிரிட்டிஷாரையும், இந்திய தேசிய காங்கிரசையும் கவலை கொள்ளச் செய்தது. பிரிட்டிஷ் படைகள் எதிர்த்து நிற்கமுடியாமல் ஓடிப் போயின. பிரிட்டிஷ் இந்திய இராணுவத்தின் இந்திய வீரர்கள் ஜப்பானியப் படைகளின் தயவில் விடப்பட்டனர். பின்னர் உருவான இந்திய தேசிய இராணுவம் இந்நிலையில் இருந்தே கட்டியெழுப்பப்பட்டது. அது பற்றி விரிவாக இப்பாடத்தில் காண்போம் (தொகுதி 7.3). சர்ச்சில் கல்கத்தாவும், மதராசும் ஜப்பானியர் பிடியில் விழக்கூடும் என்று அஞ்சினார். காங்கிரஸ் தலைவர்களும் அவ்வாறே அச்சம் கொண்டதால் போர் நடவடிக்கைகளில் ஒத்துழைக்க வழிவகை செய்யும் ஒரு கௌரவமான வாய்ப்பை எதிர்பார்த்திருந்தனர்.

இச்சூழலில் டிசம்பர் 1941இல் கூடிய காங்கிரஸ் செயற்குழு போருக்குப் பின் விடுதலையையும், உடனடியாக முக்கியப் பிரிவுகளில் அதிகாரப் பகிர்வையும் உறுதியளிக்க பிரிட்டிஷ் அரசு முன்வந்தால் தாங்கள் ஒத்துழைப்பு நல்கத் தயார் என்ற தீர்மானத்தை நிறைவேற்றியது.

கிரிப்ஸ் வருகை

சர் ஸ்டாஃபோர்டு கிரிப்ஸ் தலைமையிலான பிரதிநிதித்துவக் குழு மார்ச் 1942இல் இந்தியா வந்தடைந்தது. சர்ச்சிலின் போர்க்கால அமைச்சரவையில் தொழிலாளர் கட்சியின் சார்பில் பங்கு வகித்தமையே கிரிப்ஸ் குழு மீது நம்பிக்கையை ஏற்படுத்தியது. இந்தியாவிற்குப் புறப்படும் முன்பாக அவர் பிரிட்டிஷாரின் கொள்கை நிலைப்பாடு இந்தியாவைப் பொறுத்தமட்டில் 'விரைவில் சுயாட்சியை உணர்த்தும் அரசுமுறையை நிறுவுதல்' என்று மொழிந்திருந்தார். ஆனால் அவர் பேச்சுவார்த்தையைத் துவக்குவதற்கு முன்பாக வெளியிட்ட வரைவில் விடுதலை பற்றிய உறுதியான நிலைப்பாடு ஏதும் இருக்கவில்லை.

12th_History_TM_Unit_7.indd 95 02-01-2023 16:36:59

www.tntextbooks.in

கிரிப்ஸின் முன்மொழிவு

சர் ஸ்டாஃப்போர்டு கிரிப்ஸ்

கிரிப்ஸ் டொமினியன் அந்தஸ்தையும் போருக்குப் பின் அரசியல் சாசன வரைவுக் குழுவை உருவாக்குதலையும் ஆதரித்தார். அரசியல் சாசன வரைவுக் குழு மாகாண சபைகளில் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களைக் கொண்டும் சுதேச அரசர்கள் கட்டுப்பாட்டில் இருந்த பகுதிகளில் இருந்து நியமிக்கப்பட்டவர்களைக் கொண்டும் ஏற்படுத்தப்படும் என்று சொல்லப்பட்டிருந்தது. மேலும் அதில் பாகிஸ்தான் பற்றியும் குறிப்பிடப்பட்டிருந்தது. ஏதாவது ஒரு மாகாணத்திற்குப் புதிய அரசியல் சாசனத்தை ஏற்றுக் கொள்ளத் தயக்கமிருந்தால், அம்மாகாணம் தனது எதிர்காலத்தை நிர்ணயிக்க பிரிட்டிஷ் அரசோடு தனிப்பட்ட ஒப்பந்தம் ஏற்படுத்த உரிமை இருப்பதாகக் கிரிப்ஸ் முன்மொழிவு அறிவித்தது. இவ்வரைவு பழைய வரைவுகளிலிருந்து எந்த மாற்றத்தையும் உள்ளடக்கியதாக யாருக்கும் தெரியவில்லை. இது பற்றி பின்னர் நேரு குறிப்பிடுகையில், "நான் முதன்முறையாக இவ்வரைவை வாசித்த போது, கடுமையான மன அழுத்தத்திற்கு உட்பட்டேன்" என்றார்.

கிரிப்ஸின் முன்மொழிவு நிராகரிக்கப்படல்

டொமினியன் அந்தஸ்து வழங்குவதென்பது ஏமாற்றமளிக்கக் கூடிய குறுகிய நடவடிக்கையாகும். மேலும் அரசியல் சாசன வரைவுக்குழுவில் பங்கெடுக்கும் சுதேசி அரசாட்சி நடைபெற்ற மாகாணங்களைச் சேர்ந்தோர் பிற மாகாணங்களைப் போல் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளுக்கு மாற்றாக உறுப்பினர்களால் நியமிக்கப்படும் முறையை காங்கிரஸ் நிராகரித்தது. இவை அனைத்துக்கும் மேலாக ஓங்கி நின்றது இந்தியப் பிரிவினை பற்றிய குழப்பமாகும். அதனால் பேச்சுவார்த்தை தோல்வி அடையக்கூடும் என்று எதிர்பார்க்கப்பட்டு அவ்வாறே நிகழ்ந்தது.

முத்துத்துறைமுகம் (Pearl Harbour) தாக்கப்பட்ட வேளையில் காங்கிரஸ் முன்னிருந்த சவால்கள்

துவக்கத்திலிருந்தே இந்திய தேசிய இயக்கத்தையும் குறிப்பாக காந்தியடிகளையும் சர்ச்சில் வெறுப்புணர்வோடே அணுகி வந்தார். போரில் இந்தியர்களின் ஒத்துழைப்பு தேவை என்ற போதும் சர்ச்சில் போக்கில் மாற்றம் ஏற்படவில்லை என்ற சூழலில் அமெரிக்காவும் சீனாவும் கடும் நெருக்கடி கொடுத்தன.

இதற்கிடையே இந்திய தேசிய காங்கிரசும் நிற்கதியற்ற நிலையில் விடப்பட்டிருந்தது. அந்நிலை இருவேறு வகைகளில் ஏற்பட்டிருந்தது: ஒருபுறம் விடுதலைக்கான எந்த உறுதியும் கொடுக்காமல் காலனிய அரசு இழுத்தடித்தது என்றால் மறுபுறம் சுபாஷ் சந்திர போஸ் அச்சு நாடுகளோடு கைக்கோர்த்து சுதந்திரப் போராட்டத்தை முன்னெடுத்துச் செல்ல நெருக்கடி கொடுத்தார். ஜெர்மனியில் இருந்து மார்ச் 1942இல் ஆசாத் ஹிந்து ரேடியோ மூலம் போஸ் இந்திய மக்களைத் தொடர்பு கொண்டு உரை நிகழ்த்தினார். இப்பின்புலத்தில் காந்தியடிகள் வெள்ளையனே வெளியேறு இயக்கத்தைத் துவக்கினார்.

7.2 வெள்ளையனே வெளியேறு இயக்கம்

காந்தியடிகள் மே 1942இல் இந்திய தேசிய காங்கிரசை அடுத்தகட்ட செயல்பாட்டிற்குத் தயார்படுத்தலானார். இம்முறை, பெரும் மக்கள் போராட்டத்தை முன்னெடுக்க காந்தியடிகள் முனைந்த நேரத்தில் இராஜாஜியும் நேருவும் தயக்கம் காட்டினர். ஒரு போராட்டத்திற்கு உகந்த சூழல் உருவாகி இருந்தது. பொருட்களின் விலை பல மடங்கு அதிகரித்ததோடு உணவு தானியங்களுக்குக் கடும் தட்டுப்பாடும் ஏற்பட்டது.

காங்கிரசின் வார்தா கூட்டம்.

இப்பின்புலத்தில் இந்திய தேசிய காங்கிரசின் செயற்குழு 1942 ஜூலை 14இல் வார்தாவில் சந்தித்தது. இக்கூட்டத்தில் நாடு தழுவிய சட்ட மறுப்புப் போராட்டம் நடத்த தீர்மானிக்கப்பட்டது. இத்தீர்மானத்தை ஏற்றுக் கொள்ள மறுத்த இராஜாஜியும் புலாபாய் தேசாயும் காங்கிரஸ் செயற்குழுவில் இருந்து பதவித் துறப்பு செய்தனர். நேருவும் அதே நிலைப்பாட்டைக் கொண்டிருந்தபோதும் செயற்குழுவின் பெரும்பான்மை முடிவுக்குக் கட்டுப்பட்டார்.

'செய் அல்லது செத்துமடி' எனும் முழக்கம்

கிரிப்ஸ் தூதுக்குழுவோடு ஏற்பட்டிருந்த கசப்பான அனுபவம் காந்தியடிகளையும் நேருவையும் முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு பிரிட்டிஷார் மீது நம்பிக்கை இழக்க வைத்தது. இதை காந்தியடிகள் 1942 மே 16இல் கூடிய பத்திரிகையாளர் சந்திப்பில்

12th_History_TM_Unit_7.indd 96 02-01-2023 16:36:59

மகாத்மா காந்தியடிகள்

வெளிப்படுத்தினார்: "இந்தியாவைக் கடவுளிடம் விட்டுவிடுங்கள், அது அதீதமான ஒன்றாக இருக்குமானால் அதை இயற்கையின் அராஜகப் போக்கில்கூட விட்டுவிடுங்கள். இவ்வரையறுக்கப்பட்ட ஒழுங்குமுறை கொண்ட அராஜகம் நீங்கிச் செல்வதால் முற்றிலும் தறிகெட்டு சட்டசீர்கேடு ஏற்பட்டாலும் அந்த ஆபத்தை எதிர்கொள்ள தயாராக இருக்கிறேன்." என்றார். அதன்பின் அவர் மக்களை நோக்கி 'செய் அல்லது செத்துமடி' என்று கூறி 'முடிவை நோக்கிய ஒரு சண்டையாகக்' கருதி தனது மறுப்பியக்கத்தைத் துவக்கினார்.

வெள்ளையனே வெளியேறு போராட்டங்கள்

காலனிய அரசு தாமதிக்காமல் காந்தியடிகள் உட்பட அனைத்துக் காங்கிரஸ் தலைவர்களையும் 1942 ஆகஸ்ட் 9 அன்று அதிகாலையில் கைதுசெய்து சிறையில் தள்ளியது. இந்தியமக்களும் தாமதிக்கவில்லை. விடியலின் முன்பே நடந்த கைது நடவடிக்கைகளைக் கண்டிக்கும் வகையில் அனைத்து மாகாணங்களிலும் கடையடைப்புகளும் காவல்துறையினரோடு வன்முறை மோதலும் பதிலடியாகத் தரப்பட்டது. இந்தியா முழுமையிலும் தொழிலாளிகள் வேலைநிறுத்த போராட்டத்தில் இறங்கினர். ஜாம்ஷெட்பூரில் உள்ள டாடா எஃகு தொழிற்சாலையில் வேலை நிறுத்தப் போராட்டம் ஆகஸ்ட் 20இல் துவங்கி 13 நாட்கள் நடைபெற்றது. அகமதாபாத்தின் ஜவுளித் தொழிற்சாலை ஊழியர்கள் மூன்று மாதங்களுக்கும் மேலாக வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டனர். இந்தியாவில் தொழிற்சாலைகளைக் கொண்ட அனைத்து நகர்ப்புறங்களும் சிறிது காலமாவது வேலை நிறுத்தப் போராட்டத்தை மேற்கொண்டன.

அரசாங்கத்தின் மனிதத்தன்மையற்ற அடக்குமுறை

காலனிய அரசு கடும் அடக்குமுறை உத்திகளையும் பல இடங்களில் காவல்துறையினரின் மூலம் துப்பாக்கிச் சூட்டையும் கைக்கொண்டது. எதிர்ப்பை ஒடுக்க இராணுவம் வரவழைக்கப்பட்டதிலிருந்து, எந்த அளவிற்கு எதிர்ப்பு இருந்திருக்கும் என்பதையும் அது சார்ந்த அடக்குமுறையையும் உணர்ந்து கொள்ள 57 பட்டாலியன் இராணுவ வீரர்கள் பயன்படுத்தப்பட்டதையும் சான்றாகக் கொள்ளலாம். சில இடங்களில் விமானப்படையைக் கொண்டு மக்கள் கலைக்கப்பட்டனர். நிலைமையின் தீவிரத்தையும் அதன் அழுத்தத்தையும் பிரிட்டிஷ் பிரதமர் சர்ச்சிலுக்கு விளக்க விழைந்த லின்லித்கோ பிரபு தாம் எதிர்கொண்ட எதிர்ப்பைப் பற்றி எழுதுகையில் 1857 ஆம் ஆண்டு புரட்சிக்குப் பின் கவலை கொள்ளவைக்கும் ஒரு வளர்ச்சி; எனினும், அதன் முக்கியத்துவத்தையும் வீரியத்தையும் இராணுவக் காரணங்களுக்காக உலகத்தின் பார்வையில் இருந்து மறைக்க வேண்டிய நிர்ப்பந்தம் உள்ளது' என்று குறிப்பிடுகிறார்.

எதிர்ப்பின் ஆரம்பகட்டம் நகர்ப்புறங்களை மையமாகக் கொண்டு தொழிலாளர்களையும், மாணவர்களையும் உள்ளடக்கியதாகவும், அது இரும்புக்கரங்கொண்டு அடக்கப்பட்டதாகத் தெரிந்தாலும் மக்கள் எழுச்சி அதோடு முழுமையடையவில்லை. இரண்டாம் நிலையில் அது கிராமப்புறங்களில் பரவியது. உணவு தானியங்களின் விலை ஏப்ரல் 1942இல் இருந்து அதே ஆண்டு ஆகஸ்டுக்குள் அறுபது புள்ளிகள் அளவில் ஏறியதே வெறுப்புக் கிளம்பக் காரணமாக அமைந்தது. மேலும் காங்கிரசிற்குள் இருந்த சோஷலிசவாதிகள் காவல்துறையினரின் ஆகஸ்ட் 9 நடவடிக்கையில் சிக்காமல் கிராமப்புறங்களுக்குள் தலைமறைவாக இருந்து கிராமத்து இளைஞர்களை கொரில்லா நடவடிக்கை மூலம் ஒருங்கிணைத்தார்கள்.

கட்டவிழ்ந்த வன்முறை

இவ்வியக்கம் செப்டம்பர் 1942லிருந்து தாக்குதல்களையும் அரசின் தொலைத்தொடர்பு வசதிகளான தந்திக்கம்பிகளையும் இருப்புப் பாதைகளையும் இரயில் நிலையங்களையும் நாசமாக்குவதையும் அரசு அலுவலகங்களுக்கு நெருப்பு வைப்பதையும் உத்தியாகக்கொண்டிருந்தது. இது நாடு முழுவதும் பரவியபோதும் கிழக்கு ஒருங்கிணைந்த மாகாணங்களிலும் பீகார், மகாராஷ்டிரா மற்றும் வங்காளப் பகுதிகளிலும் அதிதீவிரமாகப் பின்பற்றப்பட்டு வந்தது. புரட்சியாளர்கள் தங்கள் கட்டுப்பாட்டுக்குள் இருந்த பகுதிகளில் 'தேசியவாத அரசை' நிறுவிவிட்டதாக பறைசாற்றிக் கொண்டனர். இதன் ஒரு உதாரணமாக வங்காளத்தின் மிட்னாப்பூர் மாவட்டத்தில் செப்டம்பர் 1944 வரை ஏற்படுத்தப்பட்டிருந்த 'தம்லுக் ஜாட்டியா சர்க்கார்' (Tamluk Jatiya Sarkar) அரசைக் கூறலாம். சதாராவிலும் ஓர் இணை அரசாங்கம் செயல்பட்டது.

சோஷலிசவாதிகளான ஜெயபிரகாஷ் நாராயண், அச்சுத் பட்வர்தன், ஆஸப் அலி, யூசுப் மெஹ்ரலி, இராம் மனோகர் லோகியா போன்றோர் தலைமை தாங்கினர். காந்தியடிகள் 1943 பிப்ரவரி 10இல் சிறைச்சாலையில் துவக்கிய 21 நாட்கள் உண்ணாவிரதம் ஒரு திருப்புமுனையாக அமைந்து இயக்கத்திற்கு (சில நெறிமுறைகளுக்கு உட்பட்ட வன்முறைக்கும்) வலுவேற்றியது.

12th_History_TM_Unit_7.indd 97 02-01-2023 16:36:59

www.tntextbooks.in

இயக்கத்தின் பரவலும் அதன் தீவிரமும்

இயக்கத்தை ஒடுக்க பிரிட்டிஷார் பயன்படுத்திய வலுவைக்கொண்டே அதன் வேகமான பரவலையும், அது ஏற்படுத்திய தீவிரப்போக்கையும் புரிந்துகொள்ள முடிகிறது. கைதானவர்களின் எண்ணிக்கை 1943ஆம் ஆண்டின் முடிவில் 91,836 என்ற அளவை எட்டியது. அதே காலத்தில் காவல்துறையினரின் துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியானவர்களின் எண்ணிக்கை 1060 ஆனது. அரசின் 208 காவல் கண்காணிப்பு நிலைகளும் (out post) 332 இருப்புப்பாதை நிலையங்களும் 945 அஞ்சல் அலுவலகங்களும் முற்றிலுமாக அழிக்கப்படவும் சேதத்திற்கு உட்படுத்தப்படவும் இயக்க நடவடிக்கைகள் காரணமாக அமைந்தன. குறைந்தபட்சம் 205 காவல்துறை வீரர்களாவது தங்கள் பணியை விடுத்துப் புரட்சியாளர்களோடு கைக்கோர்த்தார்கள். ஆசம்கரின் ஆட்சியராக இருந்து புரட்சியாளர்களின் மீது போதுமான நடவடிக்கை எடுக்க தவறியதால் பணி நீக்கம் செய்யப்பட்ட R.H. நிப்ளெட் தனது நாட்குறிப்பில் குறித்து வைத்தப் பதிவின்படி 'பிரிட்டிஷார் காவல்துறையினரின்மூலமாகப்பலகிராமங்களைத் தீக்கிரையாக்கியதோடு பல மைல்களுக்குத் தீயைப் பரவவிட்டு 'வெள்ளை பயங்கரத்தை' அரங்கேற்றி அடக்குமுறையே ஆட்சிமுறை என்ற அளவுக்கு அக்காலகட்டத்தில் நடந்துகொண்டார்கள்' என்பதை அறிந்து கொள்ளமுடிகிறது. ஒரு கிராமத்தின் பொதுச்சொத்திற்குச்சேதம் ஏற்பட்டதால் கிராமமக்கள் அனைவரிடம் இருந்தும் அபராதம் பெறப்பட்டது.

இரகசிய வானொலி ஒலிபரப்பு

வெள்ளையனே வெளியேறு இயக்கத்தின் மற்றொரு சிறப்பம்சம் புரட்சியாளர்களால் வானொலி பயன்படுத்தப்பட்டமை ஆகும். பத்திரிகைச் சுதந்திரம் முற்றிலுமாகப் பறிக்கப்பட்ட நிலையில் புரட்சியாளர்கள் பம்பாய் நகரில் இரகசியமாக வானொலி ஒலிபரப்பு முறைமையை நிறுவினர். அதன் ஒலிபரப்பி (transmitter) ஓரிடத்தில் என்றில்லாமல் நகரின் பல்வேறு பகுதிகளுக்கு இடம் மாற்றப்பட்டுக்கொண்டே இருந்தது. இந்த இரகசிய வானொலி ஒலிபரப்பிற்கு வித்திட்டவர் உஷா மேத்தா என்பதோடு அதன் ஒலிபரப்பு மதராஸ் வரை கேட்கப்பட்டது என்பது குறிப்பிடப்பட வேண்டிய தகவலாகும்.

இதுவரை இல்லாத அளவிற்கு வெள்ளையனே வெளியேறு இயக்கம் காலனிய அரசுக்குப் பேரிடியாக சென்று விழுந்தது. இவ்வியக்கம் காங்கிரஸ், சோஷலிசவாதிகள், ஃபார்வர்டு பிளாக் கட்சி என்று அனைவரின் பங்களிப்பையும் உள்ளடக்கியதாகும். மேலும் இவ்வியக்கம் எந்நிலையிலும் எதிர்பார்த்திருக்க முடியாத அளவிற்கு மக்களின் பேராதரவைக் கொண்டுவந்து சேர்த்ததோடு அவர்களின் ஒற்றுமையை வெளிப்படுத்தி காலனிய ஆட்சியாளர்களுக்குத் தாங்கள் தவிர்க்க முடியாத பெரும் சக்தி என்ற உண்மையைப் பறைசாற்றியது.

காந்தியடிகளின் விடுதலை

உடல்நலம் சார்ந்த காரணங்களுக்காக 1944 மே 6இல் சிறையிலிருந்து விடுவிக்கப்பட்ட காந்தியடிகள் தனது ஆக்கபூர்வமானச் செயல் திட்டங்களை மேற்கொள்ளலானார். காங்கிரஸ் அமைப்பும் பொதுவெளிக்கு வராமல் தங்கள் பணியைச் செவ்வனே மேற்கொண்டதன் மூலம் வெள்ளையனே வெளியேறு இயக்க காலத்தின் தடையைச் சுமூகமாக எதிர்கொண்டது. இதற்கிடையே காலனிய அரசு மேற்கொண்டு பேச்சுவார்த்தை நடத்த ஒரு திட்டத்தை முன்வைத்தது. லின்லித்கோ பிரபுவிற்குப் பின் அக்டோபர் 1943இல் அரசபிரதிநிதிப் பதவியேற்ற ஆர்கிபால்டு வேவல் பிரபு அடுத்தகட்ட பேச்சுவார்த்தைச் சுற்றுக்கு ஆயத்தப்படுத்தலானார். இதனால் தெளிவாக வெளிப்பட்ட செய்தி ஒன்று தான்: பேச்சுவார்த்தை நடத்துவதைத் தவிர பிரிட்டிஷாருக்கு வேறு வழி இருக்கவில்லை.

7.3 நேதாஜி சுபாஷ் சந்திர போசும் இந்திய தேசிய இராணுவமும்

பிரிட்டிஷ் பேரரசிற்கு உட்பட்ட மலேயா, பர்மா போன்ற தென்கிழக்கு ஆசிய நாடுகளில் ஒரு பெரும் இந்தியப் படை நிறுத்தப்பட்டது. இப்படைகளால் ஜப்பானியப் படைகளுக்கு ஈடுகொடுத்து நிற்கமுடியவில்லை. தென்கிழக்கு ஆசியாவில் நிலைகொண்டிருந்த பிரிட்டிஷ் இந்தியப் படைகளின் அதிகாரிகள் அவர்களின் கீழிருந்த படைவீரர்களைப் போர்க்கைதிகளாய் விட்டு விட்டு ஓட்டம் பிடித்தனர்.

இந்திய தேசிய இராணுவத்துடன் போஸ்

12th_History_TM_Unit_7.indd 98 02-01-2023 16:37:00

www.tntextbooks.in

மலேயாவில் இவ்வாறு கைவிடப்பட்ட பிரிட்டிஷ் இந்திய இராணுவத்தின் அதிகாரியான கேப்டன் மோகன் சிங் ஜப்பானியர்களின் உதவியை நாடியபோது, அவர்களும் அதில் ஒரு நல்ல வாய்ப்பைக் கண்டார்கள். ஜப்பானும் சீனாவில் தனது காலனியை நிறுவ முனைந்ததேயொழிய இந்தியாவைப் பெரிதாகப் பொருட்படுத்தவில்லை. ஜப்பானின் கட்டுப்பாட்டில் இருந்த போர்க்கைதிகள் யாவரும் மோகன் சிங்கின் தலைமையின் கீழ் விடப்பட்டனர். ஜப்பானிடம் சிங்கப்பூர் வீழ்ந்ததால் மேலும் பல போர்க்கைதிகள் உருவானதில் மோகன் சிங்கின் கட்டுப்பாட்டில் இருந்த வீரர்களின் எண்ணிக்கை 45,000 என்ற அளவை எட்டியது. இவர்களில் இருந்து 40,000 பேரைத் தேர்ந்தெடுத்து 1942இன் இறுதியில் இந்திய தேசிய இராணுவத்தை மோகன் சிங் பலப்படுத்தினார். ஜப்பானியர்களின் ஆதிக்கத்திலிருந்த பகுதியில் வாழ்ந்த இந்தியர்கள் இந்திய தேசிய இராணுவத்தையும் மோகன் சிங்கையும் ஒரு பாதுகாவலராகப் பார்த்தாலும் அவருடன் இருந்த அதிகாரிகள் இந்திய தேசிய காங்கிரஸ் அழைப்புவிடுத்தாலொழிய இந்தியா மீது படைநடத்தி செல்லப்போவதில்லை என்ற நிலைப்பாட்டை எடுத்தனர்.

1943 ஜுலை 2இல் சுபாஷ் சந்திர போஸ் சிங்கப்பூர் சென்று சேர்ந்தார். அங்கிருந்து டோக்கியோ சென்று பிரதமர் டோஜோவைச் சந்தித்தார். ஆனால் இந்தியாவை ஆக்கிரமிக்கும் எண்ணம் ஜப்பானுக்கு இல்லை என்று ஜப்பானிய அரசர் அறிவித்தார். எனவே சிங்கப்பூருக்குத் திரும்பிய போஸ் 1943 அக்டோபர் 21இல் சுதந்திர இந்தியாவின் தற்காலிக அரசை ஏற்படுத்தினார். இத்தற்காலிக அரசு பிரிட்டன் மீதும் பிற நேச நாடுகள் மீதும் போர் அறிவிப்பு செய்தது. அச்சு நாடுகள் போசின் தற்காலிக அரசை தமது நட்பு வளையத்துக்குள் ஏற்றுக்கொண்டன.

போஸும் இந்திய தேசிய இராணுவமும்

போஸ் இராணுவம் சாராத சாதாரண மக்களையும் இந்திய தேசிய ராணுவத்தில் இணைத்ததோடு பெண்களுக்கான ஒரு படைப்பிரிவையும் ஏற்படுத்தினார். மருத்துவராகப் பணியாற்றியவரும் சென்னையைச் சேர்ந்த சுதந்திரப் போராட்ட வீரரான அம்மு சுவாமிநாதனின் மகளுமான டாக்டர் லட்சுமி, ராணி ஜான்சி என்ற படைப்பிரிவிற்குத் தலைமையேற்றார். சுபாஷ் சந்திர போஸ் 1944 ஜுலை 6இல் தனது ஆசாத் ஹிந்த் ரேடியோவின் மூலம் ரங்கூனிலிருந்து காந்தியடிகளை நோக்கிய ஒரு உரையை ஆற்றினார். காந்தியடிகளைத் "தேசத்தின் தந்தையே" என்று அழைத்த அவர் இந்தியாவின் கடைசி விடுதலைப் போருக்கு அவர்தம் ஆசியைக் கோரினார்.

வங்காள காங்கிரஸ் கமிட்டித் தலைவர் உட்பட்ட அனைத்துப் பதவிகளில் இருந்தும் ஆகஸ்டு 1939 இல் இந்திய தேசிய காங்கிரசால் விடுவிக்கப்பட்ட போஸ், தனக்கு ஆதரவு திரட்டி இந்தியா முழுவதும் சுற்றுப்பயணம் மேற்கொள்ளலானார். இந்திய பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் 1940 ஜுலை 3 அன்று கைது செய்யப்பட்ட அவர் தொடர் கண்காணிப்பில் வைக்கப்பட்டார். மேற்கொண்டு ஐரோப்பாவில் தொடர்ந்து நடந்தப் போரில் ஜெர்மனியே வெல்லும் என்று போஸ் நம்பினார். அவர் அச்சு நாடுகளோடு கைக் கோர்ப்பதன் மூலம் இந்தியா சுதந்திரம் பெறமுடியும் என்ற சிந்தனையை வளர்த்தெடுத்தார். கல்கத்தாவிலிருந்து 1941 ஜனவரி 16–17இன் நள்ளிரவில் தப்பிய அவர், காபூல் மற்றும் சோவியத் நாடு வழியாக ஒரு இத்தாலியக் கடவுச்சீட்டைக் கொண்டு மார்ச் மாதத்தின் கடைசியில் பெர்லின் சென்று சேர்ந்தார். அங்கு ஹிட்லரையும் கோயபல்ஸையும் சந்தித்தார். இரு நாசிச தலைவர்களும் பெரிதாக இந்திய ஆதரவு நிலைப்பாட்டை எடுக்கவில்லை என்றாலும் ஆசாத் ஹிந்த் ரேடியோவை உருவாக்க அனுமதி வழங்கினர். ஹிட்லரையும், அவருக்கு நெருக்கமான அரசியல் தலைவர்களையும் சந்தித்தபோதும் போஸால் பெரிய மாற்றத்தை உருவாக்க முடியவில்லை. போரில் ஜெர்மனிக்கு ஏற்பட்ட பின்னடைவை அடுத்து, போஸ் 1943 ஜுலையில் சிங்கப்பூர் சென்று சேர்ந்தார்.

போரில் அச்சு நாடுகளோடு இந்திய தேசிய இராணுவம்

இம்பாலை நோக்கிய ஜப்பான் படைகளின் நகர்வில் ஷா நவாஸால் வழி நடத்தப்பட்ட இந்திய தேசிய இராணுவத்தின் ஒரு பிரிவும் (battalion) பங்கெடுத்தது. இது அச்சு நாடுகளும் ஜப்பானியப் படைகளும் பின்னடைவைச் சந்தித்துக் கொண்டிருந்த 1944இன் பிற்பகுதியில் நடந்தேறியது. இம்பாலைக் கைப்பற்றும் முயற்சியில் ஜப்பான் வெற்றிப் பெற முடியாததைத் தொடர்ந்து 1945இன் நடுவில் அது பிரிட்டிஷ் படைகளிடம் சரணடைந்தது. கைது செய்யப்பட்ட ஷா நவாஸ் மீதும் அவரோடிருந்த வீரர்கள் மீதும் இராஜ துரோகக் குற்றம் சுமத்தப்பட்டது.

இந்திய தேசிய இராணுவம் மீதான விசாரணை

டெல்லியின் செங்கோட்டையில் இந்திய தேசிய இராணுவத்தின் மீது நடத்தப்பட்ட விசாரணையில்

12th_History_TM_Unit_7.indd 99 02-01-2023 16:37:00

www.tntextbooks.in

இந்திய தேசிய காங்கிரஸ் தனது மிகச் சிறந்த சட்ட நிபுணர்களைக் கொண்டு அவர்கள் சார்பாக வாதாடியது இந்திய வரலாற்றில் சிறப்பான ஒரு அம்சமாகும். காந்தியடிகளின் குரலுக்கு இசைந்து ஒத்துழையாமை இயக்கத்தின் பின்புலத்தில் 1920களின் ஆரம்பத்தில் தனது சட்டப்பணிகளைத் துறந்த ஜவஹர்லால் நேரு, நீண்ட இடைவெளிக்குப் பின் தனது கருப்பு அங்கியை அணிந்து இந்திய தேசிய இராணுவ வீரர்களின் சார்பில் வழக்கில் ஆஜரானார். இராணுவரீதியாக இந்திய தேசிய இராணுவம் பெரிய அளவில் சாதிக்கவில்லை என்ற போதும், அவர்கள் மீது நடத்தப்பட்ட விசாரணை பொது மக்களைப் பெரிதும் கவர்ந்ததோடு ஒரு தாக்கத்தையும் ஏற்படுத்தியது.

காலனிய அரசின் பிடிவாதமான முரட்டுப்போக்கு மற்றுமொரு பேரியக்கத்திற்கு மேடையமைத்துக் கொடுத்தது. இந்திய தேசிய காங்கிரசும் 1945 ஜூன் 25 முதல் ஜூலை 14 வரை நடைபெற்ற சிம்லா மாநாட்டில் எந்தவித முன்னேற்றமும் ஏற்படாததையடுத்து நேரடியாக மக்களைத் திரட்டும் பொருட்டு நாடு முழுவதும் பொதுக்கூட்டங்களை நடத்தியது. அண்மையில் இந்திய அரசியல் சட்டம், 1935இன் கீழ் தேர்தல் வருவதாக இருந்தாலும் இக்கூட்டங்களில் ஓட்டுக் கேட்பதைவிட பெரும்பாலும் இந்திய தேசிய இராணுவ விசாரணையைப் பற்றியே பேசப்பட்டது.

ஷா நவாஸ் கான்

P.K. ஷெகல்

G.S. தில்லான்

இப்பின்புலத்தில் காலனிய ஆட்சியாளர்கள்– ஷா நவாஸ் கான், P.K. ஷெகல் மற்றும் G.S. தில்லான் – ஆகிய இந்திய தேசிய இராணுவத்தின் மூன்று முக்கிய அதிகாரிகளைப் பிரித்தெடுத்து விசாரணை நடத்தியது. இந்திய நாட்டின் பத்திரிகைகள் யாவும் இவ்விசாரணையை உணர்ச்சிகரமாகப் பிரசுரித்ததோடு தலையங்கங்கள் அனைத்திலும் அவர்தம் விடுதலைக்காகக் கோரிக்கை வைத்தன. கடையடைப்புகளும் ஊர்வலங்களும் பொது வேலைநிறுத்தங்களும் இந்திய தேசிய இராணுவ வாரம் கடைபிடிக்கப்பட்டபோது நடந்தேறியதோடு வீரர்களின் உடனடி விடுதலையும் வலியுறுத்தப்பட்டது.

இம்மூன்று அதிகாரிகளைத் தேர்ந்தெடுத்ததின் மூலம் அனைத்து அரசியல் கருத்துப் பிரிவினைகளும் ஓரணியின்கீழ் வர வழியேற்பட்டது. அதுவரை வெள்ளையனே வெளியேறு இயக்கத்தில் இருந்து தங்களைத் தனிமைப்படுத்தி வைத்திருந்த முஸ்லிம் லீக், சிரோமணி அகாலி தளம், இந்து மகாசபை போன்ற அமைப்புகள் எதிர்ப்புக் கூட்டங்களில் கலந்து கொள்ள துவங்கியதோடு சிறைப்பட்ட வீரர்களின் வழக்குச் செலவிற்காக நிதி திரட்டவும் செய்தன. விசாரணை நீதிமன்றம் ஷெகல், தில்லான், ஷா நவாஸ் கான் ஆகியோரின் குற்றத்தை உறுதிப்படுத்தினாலும், முப்படைகளின் தளபதி (Commander–in–chief) அவர்களின் தண்டனையைக் குறைத்ததோடு 1946 ஜனவரி 6இல் அவர்களை விடுதலை செய்தார். இந்திய தேசிய இராணுவத்தின் விசாரணை பிப்ரவரி 1946இல் இந்திய தேசிய இயக்கத்தை மற்றுமொரு முக்கியமான நிகழ்வுக்கு எடுத்துச் செல்ல மேடையமைத்தது. அதன்படி இராயல் இந்தியக் கடற்படையின் (RIN) மாலுமிகள் கலகக் கொடியைத் தூக்கினர்.

7.4 இராயல் இந்திய கடற்படையின் கலகம்

போரினால் ஏற்பட்ட பொருளாதார பாதிப்பு விலைவாசி ஏற்றத்திலும் உணவு தானியப் பற்றாக்குறையிலும் போர்க்காலத் தொழிற்சாலைகள் மூடப்பட்டதின் மூலமாகவும் அதனால் ஏற்பட்ட ஆட்குறைப்பு மற்றும் வேலையில்லாத் திண்டாட்டத்தின் மூலமும் எதிரொலித்தது. இவையாவும் பிரிட்டிஷாருக்கு எதிரான உணர்வாகக் கிளம்பி ஏற்கனவே நிகழ்ந்து கொண்டிருந்த இந்திய தேசிய இராணுவ விசாரணை எதிர்ப்பு இயக்கங்களோடு கலந்தன.

HMIS தல்வார் என்ற போர்க்கப்பலில் மாலுமியாகப் பணியாற்றிய (ஆங்கிலத்தில் ரேட்டிங் என்று வழங்கப்பட்ட இப்பதவிப் பெயரே பல்வேறுபட்ட போர்கப்பல்களிலும் இராயல் இந்திய கடற்படையின் போர்கப்பல்களிலும் பணியாற்றிய மாலுமிகளைக் குறிப்பதாக அமைந்தது) B.C. தத் என்பவர் அக்கப்பலின் பக்கவாட்டில் 'வெள்ளையனே வெளியேறு' என்று எழுதினார். இதனையடுத்து அக்கப்பலில் மாலுமியாகப் பணியாற்றிய 1,100 மாலுமிகள் உடனடியாகப் போராட்டத்தில் இறங்கினர். ஆங்கிலேய அதிகாரிகளின் நிறவெறியையும் மோசமான உணவு வழங்கப்பட்டமையையும் பிற தரக்குறைவான செயல்பாடுகளையும் மாலுமிகள்

12th_History_TM_Unit_7.indd 100 02-01-2023 16:37:00

கண்டனம் செய்தனர். தத்தின் கைது நடவடிக்கை 1946 பிப்ரவரி 18இல் வெடித்துக் கிளம்பிய கலகத்திற்கு உந்துவிசையாக அமைந்தது. அதன் மறுநாள் கோட்டைக் கொத்தளத்தில் பணியிலிருந்த மாலுமிகளும் அதிக எண்ணிக்கையில் கலகத்தில் இணைந்ததோடு, பம்பாய் நகரை வாகனங்களில் வலம்வந்தவாறே காங்கிரஸ் கொடியை ஏந்தி அசைக்கவும் பிரிட்டிஷ் விரோதக் கூச்சல்களை எழுப்பி ஆரவாரிக்கவும் செய்தனர்.

இராயல் இந்தியக் கடற்படையின் கலகம்

விரைவில் பம்பாய் ஜவுளித் தொழிற்சாலை ஊழியர்களும் ஆதரவுப் போராட்டத்தில் இறங்கினர். பம்பாய் மற்றும் கல்கத்தாவின் தொழிற்சங்கங்கள் போராட்டத்தில் இறங்கியதில் இரு நகரங்களும் போர்முனைகள் போல் காட்சியளித்தன. நகர் முழுவதிலும் தடுப்பரண்கள் ஏற்படுத்தப்பட்டு முழுவீச்சில் பாதுகாப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டாலும், ஆங்காங்கே குறுகிய நேரச் சண்டைகள் நடந்தேறின. நாள்தோறும் வியாபாரிகள் கடைகளை அடைத்துச் சென்றதில் பொதுவான வர்த்தகம் பெரிதும் தடைப்பட்டது. இருப்புப்பாதைகளில் மக்கள் வந்து கூட்டமாக அமர்ந்ததில், இருநகரங்களிலும் இரயில் போக்குவரத்து நிறுத்தப்பட்டது. பம்பாயின் கலகச் செய்தி கராச்சியை அடைந்ததும் பிப்ரவரி 19இல் HMIS ஹிந்துஸ்தான் கப்பலின் மாலுமிகளும் கராச்சியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த பிறரும் மின்னல் வேகத்தில் போராட்டத்தைத் துவக்கினர். போராட்ட அலை கடற்படை முழுவதும் பரவியதால் 78 கப்பல்களிலும் 20 கரைசார்ந்த பணியிடங்களிலும் இருந்த 20,000 மாலுமிகள் 1946 பிப்ரவரி 18க்குப் பின் போராட்டத்தில் இறங்கியிருந்தனர். மாலுமிகளின் போராட்டத்திற்கு ஆதரவாக பம்பாய், பூனா, கல்கத்தா, ஜெசூர், அம்பாலா நகரங்களில் நிறுத்திவைக்கப்பட்டிருந்த இராயல் இந்திய விமானப்படை ஊழியர்களும் ஆர்ப்பாட்டத்தில் இறங்கினர். ஜபல்பூரில் நிலைகொண்டிருந்த இந்திய இராணுவச் சிப்பாய்களும் போராடலாயினர்.

போராட்டத்தில் ஈடுபட்ட மாலுமிகள் பல்வேறு துறைமுகங்களிலும் கப்பலின் முகட்டில் காங்கிரஸ், கம்யூனிஸ்ட், மற்றும் முஸ்லிம் லீக் கட்சிகளின் கொடிகளை ஒருங்கே கட்டியிருந்தனர்.

இவ்வனைத்தையும் காலனிய அரசு கடும் அடக்குமுறையை வெளிப்படுத்தியே எதிர்கொண்டது. உண்மையில் இக்கலகம் தலைவனில்லாத ஒன்றாகும் என்பதோடு மாலுமிகள் குறிப்பான எந்தத் திசையிலும் நகரவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கதாகும். பம்பாய், கல்கத்தா, மதராஸ் நகரங்களின் தொழிற்சங்கப் போராட்டங்கள் மாலுமிகளுக்கு ஆதரவாக வெளிப்பட்டுக் காலனிய ஆட்சிக்கு எதிரான உணர்வுக் குவியலாகத் தெரிந்தாலும் அவை நீண்டகாலம் நீடிக்க முடியாததால் இறுதியில் மாலுமிகள் சரணடைய வேண்டியதாயிற்று.

அப்போது பம்பாய் நகரில் இருந்த சர்தார் வல்லபாய் படேல் கலகத்தை முடிவிற்குக் கொண்டுவர முயற்சிகள் மேற்கொண்டார். எவ்வாறாயினும், இராயல் இந்தியக் கடற்படை மாலுமிகளின் போராட்டம் இந்திய தேசிய இயக்க வரலாற்றில் ஒரு உன்னதமானப் பக்கம் என்பதோடு ஒரு நீண்ட விடுதலைப் போராட்டத்தின் கடைசி அத்தியாயமாகவும் திகழ்கிறது.

7.5 இராஜாஜியின் முன்மொழிவும் வேவல் திட்டமும்

தனிநாடு கோரிக்கை

இவ்வளர்ச்சிகளுக்கிடையே மதவாதம் எழுப்பிய சவால்களும் முஸ்லிம் லீக்கின் தனிநாடு கோரிக்கையும் தொடர்ந்து கொண்டுதான் இருந்தன. முஸ்லிம் லீக் மார்ச், 1940இல் நிறைவேற்றிய லாகூர் தீர்மானத்தின்படி இந்தியாவில் இஸ்லாமியர்கள் சிறுபான்மையினர் என்ற நிலையிலிருந்து அவர்கள் ஒரு தனிநாடு என்ற நம்பிக்கைக்கு மாறிப்போயிருந்தனர். அச்சமயத்தின் ஒரே பிரதிநிதியாக முகமது அலி ஜின்னா தன்னை மட்டுமே நிலைநிறுத்திக் கொண்டார்.

இராஜாஜி திட்டம் (C.R. Formula)



இராஜாஜி

1944 ஏப்ரலில் காங்கிரஸ் தலைவர்கள் பலரும் சிறையில் இருந்த நிலையில் சுமூகமானத் தீர்வை எட்டும் பொருட்டு இராஜாஜி ஒரு முன்மொழிவுத் தீர்மானத்தை வழங்கினார். அதன் அம்சங்களாவன:

12th_History_TM_Unit_7.indd 101 02-01-2023 16:37:00

மார்ச் 23, 1940 இல் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் பின்வருமாறு கூறுகிறது: 'பூகோளரீதியில் தொடர்ச்சியாக அமையப்பெற்ற பகுதிகள் பிரிக்கப்பட்டும் தேவைக்கேற்ப இந்தியாவின் வடமேற்கிலும் கிழக்குப் பகுதியிலும் எண்ணிக்கை அளவில் இஸ்லாமியப் பெரும்பான்மை இருப்பது போன்றப் பகுதிகளை உருவாக்கி இவையாவற்றையும் இணைத்து தன்னாட்சியும் இறையாண்மையும் கொண்டவைகளாக மாற்றி அதிலிருந்து ஒரு தனி நாட்டை உருவாக்க வேண்டும்.' (மூலம்: சுமித் சர்க்கார், மாடர்ன் இந்தியா 1885–1947 (ஆங்கிலம்), பியர்சன், 2018, பக்கம் 324)

- போருக்குப் பின்பு ஒரு ஆணையத்தின் மூலம் இஸ்லாமியர்கள் முழுப் பெரும்பான்மையில் வாழும் தொடர் மாவட்டங்களைப் பிரித்தெடுத்து அங்கே வயதுத்தகுதி அடைந்தோரைக் கொண்டு வாக்கெடுப்பு நடத்தி பாகிஸ்தான் உருவாக்கம் பற்றிய முடிவை எடுத்தல் வேண்டும்.
- ஒருவேளை ஓட்டெடுப்பின் முடிவில் பிரிவினை உறுதிசெய்யப்பட்டால், அதிமுக்கிய பணிகளான பாதுகாப்பு, தொலைத்தொடர்பு போன்றவற்றை பொதுவில் செயல்படுத்த ஒப்பந்தம் ஏற்படுத்தல் வேண்டும்.
- எல்லையில் அமையப்பெற்ற மாவட்டங்களுக்கு இரு இறையாண்மைகொண்ட நாடுகளில் ஏதோ ஒன்றில் சேர்ந்து கொள்ள வாய்ப்பளிக்கப்பட வேண்டும்.
- இத்திட்டங்கள் யாவும் முழுமையான அதிகார மாற்றம் ஏற்பட்டபின் செயல்முறைக்குக் கொண்டு வரப்படுதல் வேண்டும்.

காந்தியடிகள் ஜூலை, 1944இல் சிறையிலிருந்து விடுவிக்கப்பட்ட பின் 'இராஜாஜி திட்டத்தை' அடிப்படையாகக் கொண்டு ஜின்னாவோடு பேச்சுவார்த்தை நடத்த முன்வந்தார். ஆனால் அந்தப் பேச்சுவார்த்தையில் எந்த முடிவும் எட்டப்படவில்லை.

வேவல் திட்டம்


வேவல் பிரபு

வேவல் பிரபு ஜூன், 1945இல் பேச்சுவார்த்தை நடத்த சிம்லா மாநாட்டைக் கூட்டினார். ஜவஹர்லால் நேரு, சர்தார் பட்டேல், அச்சமயம் காங்கிரஸ் இயக்கத்தின் தலைவராகப் பதவிவகித்த மௌலானா அபுல் கலாம் ஆசாத் போன்றவர்கள் மாநாட்டில் பங்கெடுப்பதற்காகச் சிறையிலிருந்து விடுவிக்கப்பட்டனர். சிம்லா மாநாட்டிற்கு முகாந்திரம் அமைக்கும் பொருட்டு மார்ச், 1945இல் லண்டன் சென்ற வேவல் பிரபு சர்ச்சிலிடம் போருக்குப் பின் எழும் நெருக்கடியைச் சமாளிக்க காங்கிரஸையும், முஸ்லிம் லீக்கையும் இணைத்து ஆட்சியமைக்க ஒப்புதல் பெற்றார்.

அனைத்துக் கட்சிப் பின்புலத்திலிருந்தும் தலைவர்களைத் தெரிந்து – அதிலும் குறிப்பாகக் காங்கிரஸ் மற்றும் முஸ்லிம் லீக்கின் தலைவர்களை – அவர்களின் முன்பாக அரசபிரதிநிதி வைத்த முன்மொழிவின்படி அரசபிரதிநிதி, முப்படைகளின் தளபதி (commander-in-chief), இந்தியாவின் சாதி இந்துக்கள், முஸ்லிம்கள் போன்றோருக்குச் சம அளவில் பிரதிநிதித்துவமும் பட்டியல் இனங்களுக்கென்று தனிப்பிரதிநிதித்துவமும் வழங்கப்பட்டு புதிய அரசியல் சாசனம் பற்றிய உரையாடலைத் துவக்கத் திட்டமிடப்பட்டது.

இம்முன்மொழிவு யாருக்கும் திருப்தியாக இல்லை. தீர்மானமெதையும் எட்டாமலேயே ஜூன் 25 முதல் ஜூலை 14 வரை நடந்த சிம்லா மாநாடு முடிவடைந்தது. குறிப்பாக அரசபிரதிநிதியின் குழுவிற்கு உறுப்பினர்களை அனுப்புவதில் இந்திய தேசிய காங்கிரசிற்கும், முஸ்லிம் லீக்கிற்கும் இருந்த உரிமை பற்றியப் பிரச்சனையை முன்வைத்தே பேச்சுவார்த்தை முறிவடைந்தது.


சிம்லா மாநாடு (1945)

முஸ்லிம் லீக் தனக்கு மட்டுமே இஸ்லாமியப் பிரதிநிதிகளை நியமிக்க உரிமை உள்ளது என்று வாதிட்டதோடு காங்கிரஸ் உயர்வகுப்பு இந்துக்களை மட்டுமே நியமிக்க முடியும் என்றும் அது ஒரு முஸ்லிமையோ ஒடுக்கப்பட்ட சமூகத்தவரையோ நியமிக்கக்கூடாதென்றும் வலியுறுத்தியது. இது மக்களை மேலும் இனவாரியாகப் பிரிக்கும்

12th_History_TM_Unit_7.indd 102 02-01-2023 16:37:00

முயற்சி என்றும் அனைத்து இந்திய மக்களையும் பிரதிநிதித்துவப்படுத்த காங்கிரஸிற்கு இருந்தத் தகுதியைக் குறைத்து மதிப்பிடுவதாகவும் கருதப்பட்டது. முஸ்லிம் லீக்கின் பங்களிப்பில்லாமல் ஒரு குழு முழுமைபெறாது என்று வேவல் பிரபு கருதியதால் அவர் சிம்லா பேச்சுவார்த்தையைக் கைவிட்டார்.

முஸ்லிம்களின் தேசிய அடையாளமானது 1940இன் லாகூர் தீர்மானத்துக்கும் 1945இன் சிம்லா மாநாட்டுக்கும் பின்னர் முழுமைப்பெற்று அதன் ஒரே நாயகராக ஜின்னா உறுதியாக நிலைப்பெற்றார். டெல்லியில் ஏப்ரல் 1946இல் நடந்த முஸ்லிம் லீக்கின் சட்டசபை உறுப்பினர்கள் மாநாட்டில் பாகிஸ்தான் ஒரு 'இறையாண்மை கொண்ட தனிநாடு' என்று வர்ணிக்கப்பட்டது. முதன்முறையாக அதன் பூகோள வரையறையையும் வெளிப்படுத்திய முஸ்லிம் லீக் வடகிழக்கில் வங்காளத்தையும், அசாமையும் போன்று வடமேற்கில் பஞ்சாப், வடமேற்கு எல்லை மாகாணம், சிந்து, பலுசிஸ்தான் ஆகிய முஸ்லிம் மக்கள் தொகை அதிகம் கொண்ட பகுதிகளைச் சுட்டிக்காட்டியது. இதை நிராகரித்த காங்கிரஸ் தலைவரான மௌலானா அபுல் கலாம் ஆசாத் அவர் சார்ந்த இயக்கம் முழு விடுதலை பெற்ற ஒருங்கிணைந்த இந்தியாவையே ஆதரிக்கும் என்றார்.

இவையாவும் ஜூன் முதல் ஜூலை 1945 வரையான காலத்தில் நடந்த சிம்லா மாநாட்டையொட்டி நடந்தேறிக் கொண்டிருந்த வேளையில் சர்ச்சில் பதவியிழந்து அவர் பொறுப்பில் தொழிலாளர் கட்சியைச் சேர்ந்த கிளெமெண்ட் அட்லி பதவிக்கு வந்தார். காலம் கணிசமாக மாறிப்போயிருந்தது. பிரிட்டிஷ் பிரதமரான அட்லி விடுதலையை உறுதி செய்ததோடு அதற்கான நடைமுறைகள் மட்டுமே எஞ்சி இருப்பதாய் அறிவித்தார்.

7.6 அமைச்சரவைத் தூதுக்குழு மற்றும் மௌண்ட் பேட்டன் திட்டம்

அமைச்சரவைத் தூதுக்குழு

இரண்டாம் உலகப்போருக்குப் பின் பெரும் மாற்றங்கள் ஏற்பட்டிருந்த சூழலில் அமைச்சரவைத் தூதுக்குழு உருவாக்கப்பட்டது. இந்திய நாட்டிற்கென்று நியமிக்கப்பட்டிருந்த அரசு செயலரான சர் ஸ்டாஃப்போர்டு கிரிப்ஸ், A.V. அலெக்ஸாண்டர், பெதிக் லாரன்ஸ் ஆகியோர்களை உறுப்பினர்களாகக் கொண்ட அந்தத் தூதுக்குழு மார்ச் 1946இல் இந்தியா வந்தடைந்து முழு அதிகார மாற்றத்தை ஏற்படுத்துவதற்குத் தேவையான அரசை உருவாக்க முனைந்தது. இத்தூதுக்குழு மாகாணங்களிலும், சுதேச அரசாட்சிக்கு உட்பட்ட பிரதேசங்களிலும் தேர்தல் நடத்தி அதன் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளைக் கொண்டு சுதந்திர இந்தியாவிற்கான அரசியல் சாசனத்தை உருவாக்கலாம் என்று முன்மொழிந்தது. இவ்வேளையில் இந்தியப்பிரிவினை பற்றிய சிந்தனைகள் ஏதும் முக்கியத்துவம் பெறவில்லை. எனினும் அதற்கு மாற்றாக வடகிழக்கு மற்றும் வடமேற்கு மாகாணங்களில் முஸ்லிம் லீக்கின் செல்வாக்கை நிறுவும் வகையில் கூட்டாட்சி போன்றதொரு அமைப்பையும், இந்தியாவின் பிறபகுதிகளைக் காங்கிரஸ் நிர்வகிக்குமாறும் யோசனை முன்வைக்கப்பட்டது.

இதற்கு 1946 ஜூன் 6இல் ஜின்னா ஒப்புதல் அளித்தார். இதற்கிடையே காங்கிரசும் அமைச்சரவைத் தூதுக்குழுவின் நோக்கத்தில் சட்டசபையை உருவாக்க இருந்தத் தீவிரத்தைப் புரிந்து கொண்டது. இது குறித்து 1946 ஜூலை 7இல் கூடிய அனைத்திந்திய காங்கிரஸ் குழுவில் பேசிய நேரு இந்திய தேசிய காங்கிரஸ் அந்த முன்மொழிவை ஏற்றுக் கொள்வதாகத் தெரியப்படுத்தினார். ஆனால், இதையடுத்து 1946 ஜூலை 29இல் பேசிய ஜின்னா முஸ்லிம் லீக் அம்முன்மொழிவை நிராகரிப்பதாக அறிவித்தார்.

நேரு மற்றும் ஜின்னா

நீண்ட கலந்தாலோசனைகளுக்குப் பின் 1946 ஜூன் 15இல் அரசபிரதிநிதி இடைக்கால அரசை நடத்த 14 பேருக்கு அழைப்புவிடுத்தார். அவ்வாறு அழைக்கப்பட்டவர்கள் காங்கிரஸ் சார்பாக ஜவஹர்லால் நேரு, வல்லபாய் படேல், இராஜேந்திர பிரசாத், இராஜாஜி மற்றும் ஹரி கிருஷ்ண மஹ்தப் ஆகியோரும் முஸ்லிம் லீக் சார்பாக முகம்மது அலி ஜின்னா, லியாகத் அலி கான், முகம்மது இஸ்மாயில் கான், குவாஜா சர் நஜிமுதீன் மற்றும்

www.tntextbooks.in

அப்துல் ரப் நிஷ்தர் ஆகியோரும், சீக்கியர்கள் சார்பாக சர்தார் பல்தேவ் சிங்கும், பார்சிகளின் சார்பில் சர் N.P. இஞ்சினியரும் ஒடுக்கப்பட்ட வகுப்பினர் சார்பாக ஜெகஜீவன் ராமும் இந்திய கிறித்தவர்கள் சார்பாக ஜான் மத்தாயும் ஆவர்.

இடைக்காலக் குழுவில் பங்கெடுக்க தங்களுக்கு வழங்கப்பட்ட ஐந்து இடங்களில் ஒன்றனுக்கு ஜாகிர் ஹூசைன் பெயரை காங்கிரஸ் முன்மொழிந்தது. இதற்கு 1946 ஜூலை 29இல் முஸ்லிம் லீக் எதிர்ப்பு தெரிவித்ததோடு தாங்கள் சட்டசபையில் பங்கெடுக்கப் போவதில்லை என்று அறிவித்தது. இதற்கு ஆங்கிலேய நிர்வாகம் கடுமையான எதிர்வினையாற்றியது. அரசபிரதிநிதி 1946 ஆகஸ்ட் 12 அன்று, தான் காங்கிரஸ் தலைவர் நேருவை அழைத்து இடைக்கால அரசை உருவாக்கப் போவதாகத் தெரிவித்தார். நேருவோடு கலந்தாலோசித்த பின் 1946 ஆகஸ்ட் 25இல் தேசிய இடைக்கால அரசின் 12 உறுப்பினர்களின் பெயர்களும் அறிவிக்கப்பட்டது. அவர்கள் நேரு உட்பட வல்லபாய் படேல், இராஜேந்திர பிரசாத், ஆசப் அலி, இராஜாஜி, சரத் சந்திர போஸ், ஜான் மத்தாய், சர்தார் பல்தேவ் சிங், சர் ஷா·ஃப்த் அகமது கான், ஜெகஜீவன் ராம், சையது அலி ஸாகீர் மற்றும் குவர்ஜி ஹொர்முஸ்ஜி பாபா ஆகியோர் ஆவர். மேலும் இரு இஸ்லாமியர்களின் பெயர்கள் பின்னர் அறிவிக்கப்படும் என்றும் கூறப்பட்டது.

ஐந்து இந்துக்கள், மூன்று முஸ்லிம்கள், பட்டியல் இனம், இந்திய கிறித்தவர்கள், சீக்கியர்கள், பார்சிகள் போன்றோரில் இருந்து தலா ஒரு நபர் என்ற அடிப்படையில் பட்டியல் அமைக்கப்பட்டிருந்தது. பின்னர் ஹரி கிருஷ்ண மஹ்தபின் இடத்தில் சரத் சந்திர போஸ் நியமிக்கப்பட்டார். அது போலவே பார்சி இனத்தில் N.P. இஞ்சினியர் இடத்தில் குவர்ஜி ஹொர்முஸ்ஜி பாபா நியமிக்கப்பட்டார். முஸ்லிம் லீக்கிற்கு ஒதுக்கப்பட்ட இடத்தில் காங்கிரஸ் தனது உறுப்பினர்களை நியமித்தது. அவர்கள் ஆசப் அலி, ஷாபத் அகமது கான், மற்றும் சையது அலி ஸாகீர் ஆகியோர்.

முஸ்லிம் லீக் 1946 ஆகஸ்ட் 16இல் நேரடி நடவடிக்கை செயலில் இறங்க இஸ்லாமியர்களுக்கு அறைகூவல் விடுத்தது. கல்கத்தாவிலும், டெல்லி உட்பட பிற பகுதிகளிலும் இரத்த ஆறு ஓடியது. ஒரு சில சீடர்களை அழைத்துக்கொண்ட காந்தியடிகள் கல்கத்தாவை வந்தடைந்து அங்கே பேலிகாத்தா என்ற மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்ட பகுதியின் புறக்கணிக்கப்பட்ட ஒரு வீட்டில் தங்க முடிவுசெய்தார். டெல்லியில் வீடுகளை

ROHTAS

The Sunday Statesman

PUBLISHED SIMULTANEOUSLY FROM CALCUTTA AND DELHI

CALCUTTA, SUNDAY, AUGUST 18, 1946

OVER 270 KILLED, 1,600 INJURED IN TWO DAYS

Communal Riots in Calcutta

Troops Called Out to Help Police

BY OUR STAFF REPORTER

"Lawlessness Shall Not Prevail"

Governor's Broadcast to Citizens

CONGRESS PLAN NOT TO BE UPSET

JINNAH CONDEMNS VIOLENCE

HOOLIGANS MUST BE PUNISHED BY LAW

Latest T... Propos...

Egypt Repor... Dispos...

நேரடி நடவடிக்கை நாளின் வன்முறைக் காட்சி

இழந்த இஸ்லாமியர்கள் தற்காலிக முகாம்களில் (புராணா கிலா என்ற பழையக் கோட்டை போன்ற இடங்களில்) தங்கவைக்கப்பட்டனர். டெல்லியை காந்தியடிகள் வந்தடைந்தபின் (1946 செப்டம்பர் 9) அவர் 'இஸ்லாமியர்களும் இந்தியர்களே! அதனால் அவர்களைப் பாதுகாப்பது இந்திய அரசின் பொறுப்பேயாகும்' (நேரு அச்சமயம் இடைக்கால அரசிற்குத் தலைமை ஏற்றிருந்தார்) என்று வலியுறுத்திய பின்பே டெல்லியின் அதிகாரமட்டம் அவர்களுக்கு உணவுப் பொருட்களை வழங்கி கழிவறை வசதியையும் ஏற்படுத்திக் கொடுத்தது.

உண்மையில் இப்பின்புலத்தில்தான் காங்கிரஸ் இடைக்கால அரசு உருவாக்கத்தை ஏற்றுக்கொண்டது. நேருவும் மற்ற பதினோரு நபர்களும் 1946 செப்டம்பர் 2இல் பதவியேற்றனர். அதன்பின் ஒரு இனக்கலவரம் வெடித்துக் கிளம்பியபோது அது பம்பாயையும், அகமதாபாத்தையும் கடுமையாகத் தாக்கியது. வேவல் பிரபு மற்றுமொரு சுற்றுப் பேச்சுவார்த்தையை நடத்தி நேருவின் ஆலோசனையைப் பெற்று மீண்டும் முஸ்லிம் லீக்கை இடைக்கால அரசில் பங்கெடுக்க அழைப்புவிடுத்தார். முஸ்லிம் லீக் அவரது அழைப்பை ஏற்றாலும் ஜின்னா அமைச்சரவையில் பங்கெடுக்க மறுத்துவிட்டார்.

இடைக்கால அமைச்சரவை 1946 அக்டோபர் 26இல் மறுசீரமைக்கப்பட்டது. முஸ்லிம் லீக் சார்பில் பங்குபெற்றோர் லியாகத் அலி கான், I.I. சுந்துரிகர், A.R. நிஷ்தர், கஸன்பர் அலி கான் மற்றும் ஜோகேந்திர நாத் மண்டல் ஆகியோர் ஆவர்.

ஆனால் காங்கிரசிற்கும் முஸ்லிம் லீக்கிற்கும் இடையிலான பகைமை குறையாமல் அது இடைக்கால அமைச்சரவைக் குழுவின் செயல்பாடுகளில் (உண்மையில் செயல்பாடற்ற நிலை) எதிரொலித்தது. லீக் அரசியல்சாசன

12th_History_TM_Unit_7.indd 104 02-01-2023 16:37:00

சபையை உருவாக்க ஒத்துழைக்கப் பிடிவாதமாக மறுத்து வந்தது. மற்றொருபுறம் நாடு கடுமையான இனக்கலவரத்தில் சிக்கிப் பெரும் வேதனையை ஏற்படுத்திக் கொண்டிருந்தது. கிழக்கு வங்காளத்தின் நவகாளி இனக்கலவரத்தால் சூறையாடப்பட்டிருந்தது. இடைக்கால அரசில் பங்கு பெற்ற லீக்கின் உறுப்பினர்கள் முறையான கூட்டம் துவங்குவதற்குமுன் நேரு அரசபிரதிநிதி முன்னிலையில் நடத்திய அலுவலகக் குறிப்புக்குட்படாத கலந்தாலோசனைக் கூட்டங்களைப் புறக்கணித்தனர். இடைக்கால அரசின் செயல்பாடுகளை உள்ளிருந்து கெடுக்கும் நோக்கம் கொண்டது போன்றே முஸ்லிம் லீக்கின் செயல்பாடுகள் அமைந்தன.

நவகாளியில் காந்தியடிகள்

காங்கிரஸ் ஜூலை–ஆகஸ்ட் 1946இல் நடந்த தேர்தலில் 210ற்கு 199 பொது இடங்களைப் பெற்றுப் பெரும் வெற்றியைக் குவித்தது போன்றே முஸ்லிம் லீக்கும் இஸ்லாமியருக்கு ஒதுக்கப்பட்ட இடங்களில் நன்கு வெற்றி பெற்றது. அதன் அணியில் 76 இடங்கள் இருந்தன. இஸ்லாமியருக்கு ஒதுக்கப்பட்ட மொத்த இடங்களில் ஒன்று நீங்கலாக 76 இடங்களை அது பெற்றிருந்தது. எனினும் சட்டசபையில் பங்கெடுப்பதைப் புறக்கணிக்க அது முடிவு செய்தது. ஆகவே 1946 டிசம்பர் 9இல் கூடிய முதல் சட்டசபையில் 207 உறுப்பினர்கள் மட்டுமே கலந்து கொண்டனர்.

இதற்கிடையே காங்கிரசிற்கும் முஸ்லிம் லீக்கிற்கும் முற்றிக் கொண்டே போன பிணக்கின் விளைவாக இடைக்கால அரசு சுமூகமாக நடக்கமுடியாமல் தவித்தது. வேற்றுமைகளைக் களையும் பொருட்டு அரசபிரதிநிதியின் தலைமையில் நடத்தப்படும் அலுவலகக் குறிப்புக்குட்படாத கூட்டங்களைத் தொடக்கத்திலிருந்தே நடத்த முடியவில்லை.

இவையாவற்றுக்கும் உச்சமாக மார்ச் 1947இல் லியாகத் அலி கான் தாக்கல் செய்த நிதிநிலை அறிக்கை அமைந்தது. தொழிற்சாலைகள் மீதும், தொழில்கள் மீதும் அடுக்கடுக்காகப் பல வரிகளைச் சுமத்திய நிதியமைச்சர் ஒரு ஆணையத்தின் மூலம் 150 பெரும் வர்த்தக அமைப்புகளின் செயல்பாடுகளையும் அவைகளின் மீது இருந்த வரிஏய்ப்புக் குற்றச்சாட்டுகளையும் விசாரிக்க நிர்பந்தித்தார். கான், அவரது அறிக்கையை 'சோஷலிஸ நிதிநிலை அறிக்கை' என்று வர்ணித்தார். இவரின் இந்த நடவடிக்கை காங்கிரஸை ஆதரித்த பெரும் வர்த்தகர்களை நேரடியாகக் குறிவைப்பதாகவே இருந்தது. அவரது நோக்கம் தெளிவானது: இந்தியப் பிரிவினையை ஏற்படுத்தத் தளம் அமைக்கும் விதமாக காங்கிரசும், லீக்கும் ஒன்றிணைந்த செயல்பாட்டின் மூலம் தேசம் விடுதலை பெறமுடியாது என்பதை உணரவைப்பதே அதுவாகும்.

பிரிட்டிஷ் பிரதமரான அட்லி 1947 பிப்ரவரி 20இல் பாராளுமன்றத்தில் வெளியிட்ட அறிக்கையின்படி இந்தியாவின் அடுத்தகட்ட நகர்வுக்கு வழி ஏற்படுத்தும் வகையில் பிரிட்டிஷார் ஜூன் 1948 வாக்கில் அந்நாட்டைவிட்டு வெளியேறுவதில் தீர்மானமாக இருப்பது உறுதி செய்யப்பட்டது. வேவல் பிரபு 1947 மார்ச் 22இல் அரசபிரதிநிதி பொறுப்பில் இருந்து விடுவிக்கப்பட்டு அப்பதவிக்கு மௌண்ட்பேட்டன் பிரபு நியமிக்கப்பட்டார்.

மௌண்ட்பேட்டன் திட்டம்

மௌண்ட்பேட்டன் பிரபு

மௌண்ட்பேட்டன் இந்தியப் பிரிவினையை ஏற்படுத்த ஒரு தெளிவான திட்டத்தைக் கொண்டிருந்தார். அதன்படி பஞ்சாபை மேற்கு–கிழக்காகப் பிரிப்பதும் (மேற்குப் பகுதி பாகிஸ்தானுக்கு வழங்கப்படும்), அது போன்றே வங்காளத்தைப் பிரித்து அதன் மேற்குப் பகுதியை இந்தியா வைத்துக்கொள்ளவும் கிழக்குப்பகுதியைப் பாகிஸ்தானின் அங்கமாக மாற்றவும் அம்சங்கள் இருந்தன. காங்கிரஸ் செயற்குழு 1947 மே 1இல் இந்திய பிரிவினைத் திட்டத்திற்கு உடன்படுவதாக மௌண்ட்பேட்டனிடம் தெரிவித்தது. இதையடுத்து லண்டன் சென்று திரும்பிய அரசபிரதிநிதி இந்திய பிரிவினைக்கான வரைவை வெளியிட்டதோடு பிரிட்டிஷார் குறித்த தேதிக்கு முன்பாகவே 1947 ஆகஸ்ட் 15இல் இந்தியாவைவிட்டு மொத்தத்தில் விலக விரும்புவதாகத் தெரிவித்தார். அவர் அறிவித்த

12th_History_TM_Unit_7.indd 105 02-01-2023 16:37:00

அன்றிலிருந்து 11 வாரங்களே இந்திய விடுதலைக்கு எஞ்சியிருந்தது. அனைத்திந்தியக் காங்கிரஸ் குழு 1947 ஜூன் 15இல் கூடிய போது கோவிந்த் பல்லப் பந்த் இந்தியப் பிரிவினைக்கான தீர்மானத்தை முன்னெடுக்க அது நிறைவேற்றப்பட்டது. நேரு, படேல் போன்றவர்களின் அதிகாரமட்ட வலியுறுத்தும் திறனும், காந்தியடிகளின் தார்மீக சக்தியுமே அனைத்திந்திய காங்கிரஸ் குழுவில் அத்தீர்மானம் வெற்றி பெறகாரணிகளாக அமைந்தன.

பல கொந்தளிப்பான சம்பவங்கள் மார்ச் 1946லிருந்து 1947 ஆகஸ்ட் 15 வரையிலான காலத்தில் நடந்தேறியதில் 1) அமைச்சரவைத் தூதுக்குழு நியமிக்கப்பட்டமை, 2) இடைக்கால அரசின் உருவாக்கம், 3) சட்டமன்றத்தின் தோற்றம், 4) காங்கிரசிற்கும், முஸ்லிம் லீக்கிற்குமிடையே ஏற்பட்ட பிளவு நாட்டின் பிரிவினைக்கும் இறுதியாக விடுதலைக்கும் இட்டுச்சென்றமை, போன்றவை மிகுந்த முக்கியத்துவம் பெறுகின்றன.

சுதந்திரத்திற்கான பயணம்

கொடுக்கப்பட்ட ஆண்டுகளிலிருந்து நடைபெற்ற நிகழ்வுகளைக் கண்டறிக.

பாடச் சுருக்கம்

- இந்திய விடுதலைப் போராட்டத்தின் இறுதிகட்டம் நவம்பர் 1940இல் போருக்கு எதிரான தனிநபர் சத்தியாகிரகத்தோடு துவங்கியது.
- இதில் அமைதியான சூழல் 1942இல் பிரிட்டிஷ் பேரரசை கடுமையான தாக்குதலுக்கு உட்படுத்திய வெள்ளையனே வெளியேறு இயக்கத்தின் முன்பான சிறுகாலம் மட்டுமே ஆகும்.
- கடுமையான அடக்குமுறை கட்டவிழ்த்து விடப்பட்டாலும், மக்களின் பெருவாரியான பங்களிப்பு குன்றிப்போகாமல் இருந்தமைக்கு இந்திய தேசிய இராணுவ விசாரணையும் இராயல் இந்திய கடற்படையின் கலகமுமே சான்றாக அமைந்துள்ளன.
- ஏழாண்டுகள் நீண்ட இப்போராட்ட காலத்தின் கருப்புப் பக்கங்கள் என்பன முஸ்லிம் லீக்கின் லாகூர் மாநாட்டில் முஸ்லிம்களுக்கு தனிநாடு என்று மேலோட்டமாகத் தோன்றி பின் வலிமையடைந்த பாகிஸ்தான் கோரிக்கையாகியது .
- இக்கோரிக்கையின் மூலமாகப் பிரிவினையோடு இணைந்த ஒரு விடுதலையும் இனக்கலவரத்தில் கணக்கில்லாதோர் படுகொலை செய்யப்பட்டதும் நடந்தேறின.
- மதச்சார்பின்மை என்ற சிந்தனைக்கு எழுந்த சவால்களோடே சுதந்திர இந்தியா பிறந்தது.

பயிற்சி

I. சரியான விடையைத் தேர்ந்தெடு.

1. தனிநபர் சத்தியாகிரகம் எப்போது தொடங்கியது?
   (அ) மார்ச் 23, 1940 (ஆ) ஆகஸ்ட் 8, 1940
   (இ) அக்டோபர் 17, 1940 (ஈ) ஆகஸ்ட் 9, 1942

2. பின்வருவனவற்றைப் பொருத்தி சரியான விடையைத் தேர்வு செய்க.
   (அ) இந்து–முஸ்லீம் கலவரம் –1. மோகன் சிங்
   (ஆ) ஆகஸ்ட் கொடை –2. கோவிந்த் பல்லப் பந்த்
   (இ) பிரிவினைத் தீர்மானத்தை முன்மொழிந்தவர் –3. லின்லித்கோ பிரபு
   (ஈ) இந்திய தேசிய இராணுவம் –4. நவகாளி

	அ	ஆ	இ	ஈ
(அ)	3	4	2	1
(ஆ)	4	2	1	3
(இ)	4	3	2	1
(ஈ)	3	2	4	1

3. கிரிப்ஸ் தூதுக்குழு யாருடைய ஆட்சியின் போது இந்தியாவிற்கு வருகை தந்தது?
   (அ) வேவல் பிரபு
   (ஆ) லின்லித்கோ பிரபு
   (இ) மௌண்ட்பேட்டன் பிரபு
   (ஈ) இவர்களில் யாருமில்லை

12th_History_TM_Unit_7.indd 107 02-01-2023 16:37:03

4. பின்வருவனவற்றைப் பொருத்தி சரியான விடையைத் தேர்வு செய்க.

(அ) அமெரிக்கக் குடியரசுத் தலைவர் – 1. டோஜா
(ஆ) சீனக் குடியரசுத் தலைவர் – 2. வின்ஸ்டன் சர்ச்சில்
(இ) பிரிட்டிஷ் பிரதமர் – 3. ஷியாங் கே ஷேக்
(ஈ) ஜப்பான் பிரதமர் – 4. எஃப்.டி. ரூஸ்வெல்ட்

	அ	ஆ	இ	ஈ
(அ)	1	4	3	2
(ஆ)	1	3	2	4
(இ)	4	3	2	1
(ஈ)	4	2	3	1

5. சுபாஷ் சந்திர போஸ் எந்த ஆண்டு காங்கிரஸிலிருந்து நீக்கப்பட்டார்?
(அ) 1938 (ஆ) 1939
(இ) 1940 (ஈ) 1942

6. மகாத்மா காந்தியடிகளின் "செய் அல்லது செத்துமடி" என எந்த நிகழ்வின்போது அழைப்பு விடுத்தார்?
(அ) சட்டமறுப்பு இயக்கம்
(ஆ) ஒத்துழையாமை இயக்கம்
(இ) வெள்ளையனே வெளியேறு இயக்கம்
(ஈ) இவை அனைத்தும்

7. வெள்ளையனே வெளியேறு இயக்கத்தின் போது பம்பாயில் இரகசிய வானொலி நிலையத்தை நடத்தியவர் யார்?
(அ) உஷா மேத்தா (ஆ) பிரீத்தி வதேதார்
இ) ஆசப் அலி (ஈ) கேப்டன் லட்சுமி

8. இந்திய தேசிய இராணுவப்படை வீரர்கள் சார்பாக நீதிமன்றத்தில் வாதாடியவர் யார்?
(அ) ஜவஹர்லால் நேரு
(ஆ) மோதிலால் நேரு
(இ) இராஜாஜி
(ஈ) சுபாஷ் சந்திர போஸ்

9. 1942இல் வெள்ளையனே வெளியேறு இயக்கம் தொடங்கப்பட்ட போது இந்தியாவின் அரசபிரதிநிதி யார்?
(அ) வேவல் பிரபு
(ஆ) லின்லித்கோ பிரபு
(இ) மௌண்ட்பேட்டன் பிரபு
(ஈ) வின்ஸ்டன் சர்ச்சில்

10. **கூற்று:** வெள்ளையனே வெளியேறு இயக்கம் அதன் குறிக்கோளை அடையவில்லை.
காரணம்: அப்போதைய பிரிட்டிஷ் அரசு கடுமையான அடக்கு முறையைப் பின்பற்றியது.
அ) கூற்று மற்றும் காரணம் சரி; காரணம் கூற்றை விளக்குகிறது
(ஆ) கூற்று மற்றும் காரணம் சரி; காரணம் கூற்றை விளக்கவில்லை.
(இ) கூற்று சரி ஆனால் காரணம் தவறு
(ஈ) கூற்று தவறு ஆனால் காரணம் சரி.

11. இந்திய தேசிய இராணுவம் எந்த நாட்டு உதவியுடன் நிறுவப்பட்டது?
(அ) ஜெர்மனி (ஆ) ஜப்பான்
(இ) பிரான்ஸ் (ஈ) அமெரிக்க ஐக்கிய நாடுகள்

12. இந்திய தேசிய இராணுவத்தின் பெண்கள் படைப்பிரிவின் பெயர் ________ ஆகும்
(அ) சுபாஷ் படைப்பிரிவு
(ஆ) கஸ்தூர்பா படைப்பிரிவு
(இ) கேப்டன் லட்சுமி படைப்பிரிவு
(ஈ) ஜான்ஸி ராணி படைப்பிரிவு

13. சுதந்திர இந்தியாவின் தற்காலிக அரசாங்கத்தைச் நேதாஜி சுபாஷ் சந்திர போஸ் எங்கு ஏற்படுத்தினார்?
(அ) இரங்கூன் (ஆ) மலேயா
(இ) இம்பால் (ஈ) சிங்கப்பூர்

14. இந்திய தேசிய இராணுவப் படை மீதான விசாரணை எங்கு நடைபெற்றது?
(அ) செங்கோட்டை, புதுடெல்லி (ஆ) பினாங்
(இ) வைஸ்ரீகல் லாட்ஜ், சிம்லா (ஈ) சிங்கப்பூர்

15. 1945இல் சிம்லா மாநாட்டைக் கூட்டிய அரசபிரதிநிதி
(அ) வேவல் பிரபு
(ஆ) லின்லித்கோ பிரபு
(இ) மௌண்ட்பேட்டன் பிரபு
(ஈ) கிளமண்ட் அட்லி

16. 1946இல் இடைக்கால அரசாங்கம் யாருடைய தலைமையில் அமைக்கப்பட்டது?
(அ) ஜவஹர்லால் நேரு
(ஆ) மௌலானா அபுல் கலாம் ஆசாத்
(இ) ராஜேந்திர பிரசாத்
(ஈ) வல்லபாய் படேல்

12th_History_TM_Unit_7.indd 108 02-01-2023 16:37:03

www.tntextbooks.in

17. சரியான வரிசையில் அமைத்து விடையைத் தேர்வு செய்க.
   (i) இந்தியதேசியஇராணுவம்தோற்றுவிக்கப்படுதல்
   (ii) இராயல் இந்திய கடற்படைக் கலகம்
   (iii) இந்திய தேசிய இராணுவம் மீதான விசாரணை
   (iv) இராஜாஜி திட்டம்
   (அ) ii, i, iii, iv (ஆ) i, iv, iii, ii
   (இ) iii, iv, i, ii (ஈ) iii, iv, ii, i

18. பின்வரும் நிகழ்வுகளின் சரியான வரிசையைத் தேர்வு செய்க.
   (i) இந்திய தேசிய இராணுவம் மீதான விசாரணை
   (ii) நேரடி நடவடிக்கை நாள்
   (iii) ஆகஸ்ட் கொடை
   (iv) தனிநபர் சத்தியாகிரகம்
   (அ) i, ii, iii, iv (ஆ) iii, i, ii, iv
   (இ) iii, iv, i, ii (ஈ) i, iii, iv, ii

19. இந்தியர் கைகளுக்கு அதிகாரம் மாற்றப்படும் என அறிவித்த பிரிட்டிஷ் பிரதமர் யார்?
   (அ) வின்ஸ்டன் சர்ச்சில்
   (ஆ) மௌண்ட்பேட்டன் பிரபு
   (இ) கிளமண்ட் அட்லி
   (ஈ) F. D. ரூஸ்வெல்ட்

20. பிரிட்டிஷார் எந்தக் காலத்திற்குள் இந்தியாவை விட்டு வெளியேற முடிவு செய்தனர்?
   (அ) ஆகஸ்ட் 15, 1947
   (ஆ) ஜனவரி 26, 1950
   (இ) ஜூன், 1948
   (ஈ) டிசம்பர், 1949

II குறுகிய விடையளிக்கவும்.

1. லாகூர் தீர்மானத்தின் முக்கியத்துவம் என்ன?
2. ஆகஸ்ட் கொடையின் சிறப்பைக் கூறுக?.
3. கிரிப்ஸ் முன்மொழிவைக் காங்கிரஸ் ஏன் நிராகரித்தது?
4. சிம்லா மாநாட்டின் பேச்சுவார்த்தைகள் ஏன் முறிந்தன?
5. கேப்டன் மோகன் சிங் எவ்வாறு இந்திய தேசிய இராணுவத்தை ஏற்படுத்தினார்?

III. சுருக்கமாக விடையளிக்கவும்.

1. வெள்ளையனே வெளியேறு இயக்கத்தில் பங்கேற்காத அமைப்புகளின் பெயரை எழுதுக.
2. சர் ஸ்டாஃபோர்டு கிரிப்ஸ் அவர்களின் முன்மொழிவுகளை விவாதிக்கவும்.
3. இந்திய தேசிய காங்கிரசிலிருந்து சுபாஷ் சந்திர போஸ் நீக்கப்பட்டதற்கானக் காரணங்களை விளக்குக.
4. 1946இல் ஏற்படுத்தப்பட்ட இடைக்கால அரசாங்கத்தில் இடம்பெற்ற முஸ்லீம் லீக் பிரதிநிதிகள் யாவர்?
5. எத்தகைய சூழ்நிலையில் காந்தியடிகள் வெள்ளையனே வெளியேறு இயக்கம் பற்றி சிந்தித்தார்?

IV. விரிவான விடையளிக்கவும்.

1. வெள்ளையனே வெளியேறு இயக்கத்தின் போக்கினை விவாதிக்கவும்.
2. சுதந்திரப் போராட்டத்தை இந்திய தேசிய இராணுவ விசாரணை எவ்வாறு தீவிரப்படுத்தியது?
3. இராஜாஜி திட்டம் பற்றி ஒரு பத்தி எழுதுக.
4. இந்திய விடுதலை இயக்க வரலாற்றில் கப்பற்படை கலகம் ஒரு சிறப்பான அத்தியாயம் என ஏன் கருதப்படுகிறது?

V. செயல்பாடுகள்

1. தமிழ் நாட்டிலுள்ள இந்திய தேசிய இயக்கத்தின் முக்கியத் தலைவர்கள் குறித்த விவரங்களையும் படங்களையும் குறிப்பேட்டில் வைக்கவும்.
2. உமது பகுதியிலிருந்து இந்திய தேசிய இராணுவத்தில் பணியாற்றிய நபர்களின் குடும்பப் பின்புலம் குறித்தப் பட்டியல் ஒன்றைத் தொகுக்கவும்.

மேற்கோள் நூல்கள்

- Bipan Chandra, et. al, *India's Struggle for Independence*, Penguin Books, New Delhi, 2016.
- Sumit Sarkar, *Modern India 1885-1947*, Pearson, New Delhi, 2018.
- Sekhar Bandopadhyay, *From Plassey to Partition and After: A History of Modern India*, Orient BlackSwan, Hyderabad, 2009.

12th_History_TM_Unit_7.indd 109 02-01-2023 16:37:03

A-Z கலைச்சொற்கள்

தன்னாட்சி அந்தஸ்து	**dominion status**	autonomous units within a political system having equal status, in every aspect of the domestic or external affairs
அச்சு நாடுகள்	**Axis Powers**	The "Axis powers" formally took the name after the Tripartite Pact was signed by Germany, Italy, and Japan.
போர்க் கைதிகள்	**prisoners of war**	fighters captured by the forces of the enemy, during an armed conflict
பிரிவினை	**partition**	the process of dividing a country into two or more separate countries.

அலகு 8

காலனியத்துக்குப் பிந்தைய இந்தியாவின் மறுகட்டமைப்பு

கற்றலின் நோக்கங்கள்

கீழ்க்காணும் அம்சங்களோடு அறிமுகமாதல்

- பிரிவினையின் அறைகூவல்கள் (சவால்கள்)
- அரசமைப்பு உருவாக்கம்: செயல்முறையும் உணர்வும்
- இந்திய ஒன்றியத்தில் சுதேச அரசுகளை ஒருங்கிணைத்தல்
- மொழி அடிப்படையில் மாநிலங்களை மறுசீரமைத்தல்
- அண்டை நாடுகளுடனான இந்தியாவின் உறவுகளும் உலக நிகழ்வுகளில் அதன் பங்கும்.

அறிமுகம்

காலனித்துவ ஆட்சியிலிருந்து கிடைத்த விடுதலைக்கு ஒரு விலை கொடுக்க வேண்டியிருந்தது. இந்தியப் பிரிவினை வங்காளம் மற்றும் பஞ்சாபின் மாகாணங்களை இரண்டாகப் பிரித்தது. பிரிவினையின்போது திட்டமிடப்படவில்லை என்றாலும், இந்துக்கள் கிழக்கு வங்காளத்திலிருந்து மேற்கு வங்காளத்திற்கும் இஸ்லாமியர்கள் பீகார் மற்றும் மேற்கு வங்காளத்தில் இருந்து கிழக்கு வங்காளத்திற்கும் இடம்பெயர ஆரம்பித்தனர், இதேபோல், மேற்கு பஞ்சாபில் இருந்த இந்துக்கள் மற்றும் சீக்கியர்கள் கிழக்கு பஞ்சாபிற்கும் கிழக்கு பஞ்சாபில் இருந்த முஸ்லிம்கள் மேற்கு பஞ்சாபிற்கும் குடிபெயர்ந்தனர். இந்தியாவிற்கும் பாகிஸ்தானுக்கும் இடையிலான எல்லைப் பகுதியில் அமைந்த கிராமங்கள் அவற்றில் வாழ்ந்த பெரும்பான்மை மதத்தினரைப் பொருத்துப் பிரிக்கப்பட்டன. முஸ்லிம்கள் பெரும்பான்மையாக இருந்த கிராமங்கள் பாகிஸ்தானுக்கு எனப் பிரிக்கப்பட்டன; இந்துக்கள் பெரும்பான்மையாக இருந்த கிராமங்கள் இந்தியாவோடு இணைக்கப்பட்டன. அந்த கிராமங்களில் வாழ்ந்த சிறுபான்மையினரைப் பொருத்தமட்டில் அதாவது பாகிஸ்தானுக்கு ஒதுக்கப்பட்ட கிராமங்களில் வாழ்ந்த இந்துக்களும் இந்தியாவிற்கு ஒதுக்கப்பட்ட கிராமங்களில் வாழ்ந்த முஸ்லிம்களும் சிறுபான்மையினராகவே வாழ வேண்டிய சூழல் ஏற்பட்டது. ஆறுகள் சாலைகள் மற்றும் மலைகள் ஆகியன எல்லை வகுப்பதில் முக்கிய அடையாளமாக கொள்ளப்பட்ட வேறு சில காரணிகள் ஆகும்.

முஸ்லிம்கள் பெரும்பான்மையாக உள்ள ஆனால், பாகிஸ்தான் நிலப் பகுதியோடு தொடர்ச்சியாக அமையாத கிராமங்களும், இந்துக்கள் பெரும்பான்மையாக இருந்த, ஆனால் இந்தியாவோடு நிலத்தொடர்ச்சியாக அமையாத கிராமங்களும் எந்த நாட்டோடு நிலத்தொடர்ச்சி உள்ளதோ அந்த நாட்டின் பகுதியாக இருந்துகொள்ள அனுமதிக்கப்பட்டன. இந்த நேரத்தில் ஒரு புதிய சிக்கல் எழுந்தது. இது பஞ்சாபில் தனி மத அடையாளம் கொண்டிருந்த சீக்கியர் தொடர்பானது. பாகிஸ்தானின் பகுதியாக அமையவுள்ள கிராமங்களில் சீக்கிய மக்கள் வசித்த போதிலும் அகாலி தளம் இந்தியாவோடு இணைந்திருக்க விரும்புவதாக அறிவித்தது

இந்தியாவிற்கு சுதந்திரம் அளிப்பதற்கு பிரிட்டன் எடுத்த விரைவான நடவடிக்கைகளின் போது இந்தியப் பிரிவினை சிக்கலான சூழ்நிலையை ஏற்படுத்தியது. இங்கிலாந்து பிரதமர் கிளமண்ட் அட்லி, 1947 பிப்ரவரி 20இல் லண்டனில் வெளியிட்ட அறிவிப்பில் பிரிட்டிஷ் அரசாங்கம் 1948 ஜூன் 30க்குள் இந்தியாவிற்குச் சுதந்திரம் அளித்துவிட்டு இந்தியாவை விட்டு வெளியேறும் என்று தெரிவித்தார். 1947 மார்ச் 22இல் வேவல் பிரபுவுக்குப் பதிலாக அரச பிரதிநிதியாக பதவிக்கு

www.tntextbooks.in

வந்த மௌண்ட்பேட்டன் பிரபுவின் நடவடிக்கைகள் இந்தியாவுக்கு அதிகாரம் மாற்றப்படுவதைத் துரிதப்படுத்தின. இந்த நிலையில், முஸ்லிம் லீக் கட்சியின் தலைமை பெரும்பகுதி முஸ்லிம் சமூகத்தின் ஆதரவைத் தன்கீழ் திரட்டியதன் மூலம், காங்கிரஸ் கட்சி அனைத்து இந்தியர்களையும் தான் பிரதிநிதித்துவப்படுத்துவதாகக் கோரியதைத் தகர்க்க முயன்றது. 1947 ஜூன் 3இல் மௌண்ட்பேட்டன் பிரபு, அட்லி அறிவித்த தினத்திற்கு முன்னதாகவே 1947 ஆகஸ்ட் 15 அன்று இந்தியாவிற்குச் சுதந்திரம் வழங்கப்படும் என்று அறிவித்தார். வகுப்புவாதப் பிரச்சனை, இருநாடு கோரிக்கை ஆகியவற்றின் அடிப்படையில் பிரிட்டிஷ் இந்தியாவின் அதிகாரத்தை இந்தியா – பாகிஸ்தான் என இரண்டு டொமினியன் அரசாங்கங்களிடம் பகிர்ந்து ஒப்படைப்பதே மௌண்ட்பேட்டன் திட்டமாகும். முன்மொழியப்பட்டபடி, வங்காளம் மற்றும் பஞ்சாபை பிரிவினை செய்து பாகிஸ்தானை உருவாக்கும் இந்தியப் பிரிவினையை இறுதியாக காங்கிரஸ் சமரசத்துடன் ஏற்றுக்கொண்டது. 1947 ஜூன் 14இல் மீரட்டில் நடைபெற்ற காங்கிரஸ் கூட்டத்தில் இந்தியப் பிரிவினையுடன் கூடிய சுதந்திரத்திற்கான மௌண்ட்பேட்டன் திட்டம் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

ஜவகர்லால் நேரு 1947 ஆகஸ்டு 14–15 இடைப்பட்ட நாளன்று நள்ளிரவில் அரசமைப்பு நிர்ணய சபை உறுப்பினர்களிடம் உரையாற்றினார். அதில் அவர் சுதந்திர இந்தியாவிற்கான திட்டத்தையும் அதன் லட்சியங்களையும் குறிப்பிட்டதோடு அத்தகைய பாதையை தேர்ந்தெடுத்ததற்கான தவிர்க்க முடியாத காரணங்களையும் பொருத்தமாக விளக்கினார். “நீண்ட காலத்திற்கு முன்னர் நாம் விதியோடு ஓர் ஒப்பந்தம் செய்தோம். இப்போது அந்த வாக்குறுதிகளை முழுமையாக அல்லது முழு அளவில் ஆனால் மிகவும் கணிசமாக மீட்கும் நேரம் வந்துவிட்டது.” ஆசிரியர்கள் ஜவகர்லால் நேருவின் முழு உரையையும் மாணவர்களைக் கேட்கச் செய்யலாம். அதற்கான இணைப்பு https://www.youtube.com/watch?v=Uj4TfcELODM

தொடக்கத்தில் பிரிவினையை மிகத் தீவிரமாக எதிர்த்த காந்தியடிகள் அது தவிர்க்க முடியாததாகிவிட்டதை ஏற்றுக்கொண்டார். காந்தியடிகள் இந்த மாற்றத்தை விளக்கினார்: பஞ்சாபிலும் வங்காளத்திலும் ஏற்பட்ட வன்முறைகளும் அதில் மக்களின் பங்கேற்பும் தன்னையும் காங்கிரசையும் பிரிவினையைத் தடுப்பதற்கான ஆற்றலற்றவர்களாக ஆக்கிவிட்டதாகத் தெரிவித்தார். துரதிர்ஷ்டவசமாக, காலனியக் கூட்டாளிகள் உருவாக்கிய வகுப்புவாதமும் பிரிவினையும் புதிதாகப் பிறந்த குழந்தையான இந்திய தேசத்தைப் பெரிதும் பாதித்தது. 1948 ஜனவரி 30இல் நிகழ்ந்த மகாத்மா காந்தியடிகளின் படுகொலை இதன் தொடக்கமாகும். புதிதாகப் பிறந்த குழந்தை நாடான நவீன இந்திய தேசம் இதன் சவால்களை தொடர்ந்து வந்த ஆண்டுகளில் எவ்வாறு எதிர்கொண்டது என்பதை இந்தப் பாடத்தில் நாம் அறியலாம்.

8.1 பிரிவினையின் விளைவுகள்

சுதந்திர இந்தியாவின் முன்னின்ற சவால்கள் பலவாகும். அவற்றுள் பிரிவினையைச் சமாளித்தல், பொருளாதாரத் திட்டமிடல் மற்றும் கல்வி முறையைச் சீரமைத்தல், (அடுத்த பாடத்தில் விளக்கப்பட்டுள்ளது) இந்திய விடுதலைப் போராட்டத்தால் கிளர்ந்தெழுந்த உயர்ந்த இலட்சியங்களை எதிரொளிக்கும் அரசமைப்பை உருவாக்குதல், 500க்கும் அதிகமான எண்ணிக்கையில் வெவ்வேறு பரப்பளவில் இருந்த சுதேச அரசுகளை இந்தியாவோடு ஒருங்கிணைத்தல், தேசிய அரசின் தேவைகளைப் பூர்த்தி செய்கிற, மக்களால் பேசப்படும் மொழிகள் அடிப்படையிலான வேறுபாட்டைத் தீர்த்து வைத்தல் போன்ற நாட்டின் தேவைகள் உள்ளடங்கும். மேலும், மக்களாட்சி, இறையாண்மை, சகோதரத்துவம் ஆகிய கோட்பாடுகளுக்கு இசைவான ஒரு வெளியுறவுக் கொள்கையை உருவாக்க வேண்டிய சவாலும் அடங்கும்.

முஸ்லிம் லீக், இந்து–முஸ்லிம் அடிப்படையில் இந்தியாவைப் பிரிவினை செய்வதற்கான கோரிக்கையை லாகூர் மாநாடு (மார்ச் 1940) முதலே தொடர்ந்து வலியுறுத்தி வந்தது. அந்தக் கோரிக்கைக்கான வடிவமும் செயலாக்கமும் 1947 ஜூன் 3இல் வெளியிடப்பட்ட மௌண்ட்பேட்டன் திட்டத்தில் இடம் பெற்றது. மௌண்ட்பேட்டன் அதிகார மாற்றத்திற்கான நாளை ஆகஸ்ட் 15, 1947 என்று அறிவித்ததால், மௌண்ட்பேட்டன் திட்ட வெளியீடு, இந்திய விடுதலை ஆகியவற்றுக்கான கால இடைவெளி வெறும் 72 நாட்கள் மட்டுமே.

சர் சிரில் ராட்க்ளிஃப்

இந்திய வரைபடத்தைப் பிரிவினைக்கேற்றவாறு மாற்றி வரைவதற்கு லண்டனிலிருந்து அனுப்பப்பட்ட வழக்கறிஞரான சர் சிரில் ராட்க்ளிஃப் இந்தியாவைப் பற்றிய எந்த முன்

12th_History_Unit_8_TM.indd 112 02-01-2023 16:37:25

www.tntextbooks.in

அனுபவமும் இல்லாதவராகவும் இந்திய நிலைமை புரியாதவராகவும் இருந்தார். அவர் உருவாக்கிய வரைபடத்தின் அடிப்படையில் எல்லைகளை வரையறுத்துக்கொள்ளும் பொறுப்பு 1947 ஆகஸ்ட் 15க்குப் பின் இந்தியா – பாகிஸ்தான் என்ற இரண்டு அரசமைப்பு நாடுகளிடம் ஒப்படைக்கப்பட்டது.

1947 ஜூலை 8இல் சர் சிரில் ராட்க்ளிஃப் இந்தியா வந்தடைந்தார். பஞ்சாப்–வங்காளம் ஆகிய இரண்டு எல்லை ஆணையங்களுக்கும் அவர் தலைமைப் பொறுப்பு வகித்தார். அவர் தலைமையில் அமைக்கப்பட்ட ஆணையத்தில் முஸ்லிம் சமூகம் மற்றும் இந்து சமூகத்தைச் சேர்ந்த தலா இரண்டு நீதியரசர்கள் இணைந்து பணியாற்றினர். இந்து மற்றும் முஸ்லிம் பெரும்பான்மையினர் வாழும் கிராமங்களை 1941ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி அடையாளம் கண்டறிய எல்லை ஆணையத்திற்கு ஐந்து வார கால அவகாசம் மட்டுமே இருந்தது. 1941ஆம் ஆண்டு மக்கள்தொகை கணக்கெடுப்பு இரண்டாம் உலகப்போரின் நடுவில் பரபரப்பாக நடத்தப்பட்டதால் பல தவறுகளை உள்ளடக்கியது என்ற கருத்து பரவலாக நிலவியது.

சீக்கிய சமூகத்தின் கோரிக்கைகளின் காரணமாக மேற்கு பஞ்சாபில் இருந்த கிராமங்களைச் சேர்ந்த சீக்கியர்களின் மக்கள்தொகையைப் பொருட்படுத்தாமல் சீக்கிய குருத்துவாரா இருந்த கிராமங்கள் இந்திய எல்லைக்குள் கொண்டுவரப்பட வேண்டும் என்ற கோரிக்கையை இரண்டு ஆணையங்களும் தங்கள் அறிக்கை மூலம் 1947 ஆகஸ்ட் 9இல் வெளியிட்டன. ராட்க்ளிஃப் எல்லைக்கோட்டின் அடிப்படையில் எல்லைகளை வரையறுக்கும் பணியைச் சுதந்திரம் வழங்கப்பட்டபின் இந்தியா – பாகிஸ்தான் ஆகிய நாடுகள் மேற்கொள்ளலாம் என்று மௌண்ட்பேட்டன் தீர்மானித்தார். நிர்வாகத்தைப் பொறுத்தமட்டில் இந்தியா–பாகிஸ்தான் நாடுகளுக்கான நில வரையறையோடு, 1947 ஆகஸ்ட் 14–15இல் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்ட போதிலும் இருநாட்டு மக்களுக்கும் அவர்கள் சுதந்திர தினத்தைக் கொண்டாடும் நாளில் புதிய வரைபட விவரம் தெரிவிக்கப்படவில்லை.

ராட்க்ளிஃப் அறிவிப்பு பல முரண்பாடுகளைக் கொண்டிருந்தது. மேற்கு பஞ்சாப் பாகிஸ்தானோடு இணையும் என்ற தீர்மானத்தை பஞ்சாப் மாகாணச் சட்டமன்றம் நிறைவேற்றியது. பாகிஸ்தானோடு நிலத்தொடர்ச்சியைக் கொண்டிருந்த மாகாணங்களான சிந்து, பலுசிஸ்தான், வடமேற்கு எல்லைப்புற மாகாணம் ஆகியவையும் இதைப் பின்பற்றி தீர்மானங்கள் நிறைவேற்றின. அதேபோல், வங்காள சட்டமன்றம் அந்த மாகாணத்தின் கிழக்குப் பகுதி பாகிஸ்தானில் சேரும் எனத் தீர்மானம் நிறைவேற்றியது.

1947 ஆகஸ்ட் 9இல் ராட்க்ளிஃப் அளித்த திட்டத்தின்படி அதுவரையில் பஞ்சாபின் பகுதியாக இருந்து வந்த 62,000 சதுர மைல்கள் கொண்ட நிலம் பாகிஸ்தானுக்கு கொடுக்கப்பட்டது. இந்தப் பகுதியின் மொத்த மக்கள் தொகை (1941ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி) 1.58 கோடியாகும். அவர்களில் 1.18 கோடி மக்கள் முஸ்லிம்கள் ஆவர். மேற்கு பஞ்சாபின் மக்கள் தொகையில் நான்கில் ஒரு பங்கு முஸ்லிம் அல்லாதோர் ஆவர். சர். ராட்கிளிஃப் செயல்படுத்திய மௌண்ட்பேட்டன் திட்டத்தின்படி அவர்கள் தொடர்ந்து பாகிஸ்தானின் சிறுபான்மையினராக இருப்பர். அதே போல் இந்தியாவின் பகுதியாக வரையறை செய்யப்பட்ட கிழக்கு பஞ்சாப் 37,000 சதுரடி நிலப்பரப்பும் 1.26 கோடி மக்கள் தொகையும் உடையதாக இருந்தது. இவர்களில் 43.75 இலட்சம் பேர் முஸ்லிம்கள் ஆவர். வேறுவிதமாக சொல்வதெனில் கிழக்கு பஞ்சாப் மக்கள் தொகையின் மூன்றில் ஒரு பகுதி முஸ்லிம்கள் ஆவர்.

இந்தியா மற்றும் பாகிஸ்தானில் இருந்த வங்காளப் பகுதியில் இனவாரியான மக்கள்தொகையும் சிக்கலாகவே இருந்தது. இந்தியாவின் பகுதியாக இருந்த மேற்கு வங்காளம் பரப்பளவில் 28,000 சதுரமைலுடன் 21,20,000 மக்கள் தொகை கொண்டதாக இருந்தது. அதில் 5,30,000 முஸ்லிம்கள் ஆவார். வேறுவிதமாக சொல்வதானால் பழைய வங்காள மாகாணத்தின் இந்தியப் பகுதி வங்காளத்தின் மொத்த முஸ்லிம் மக்கள்தொகையில் கால் பகுதி (1/4 பங்கை) கொண்டிருந்தது எனலாம். சர்.ராட்கிளிஃப் ஆணையம் பழைய வங்காள மாநிலத்தின் 49,400 சதுரமைல்களும் 3,91,00,000 மக்கள்தொகை கொண்ட பகுதியை பாகிஸ்தானுக்கு வழங்கியது. 1941ஆம் ஆண்டு கணக்கெடுப்பின் படி, 2,77,00,000 பேர் முஸ்லிம்கள் ஆவர். வேறுவிதமாக சொல்வதெனில் 29% பேர் இந்துக்கள். கிழக்குப் பாகிஸ்தான் (இதுவே 1971 டிசம்பரில் பங்களாதேஷ் ஆகியது) என்பது வங்காள மாகாணத்தின் பிரிக்கப்பட்ட கிழக்குப் பகுதி அஸ்ஸாமின் சில்கட் மாவட்டம், அப்பகுதியிலிருந்த குல்னா மாவட்டம், சிட்டகாங் குன்று பகுதி ஆகியவற்றைச் சேர்த்து உருவாக்கப்பட்டது. இந்தச் செயல்திட்டம் சரியான மாதிரி இல்லாமல் உருவாக்கப்பட்டது என்பதற்கு உதாரணமாக வங்காளத்தில் முஸ்லிம் மக்கள்தொகை அதிகமாக இருந்த முர்ஸிதாபாத், மால்டா, நாடியா ஆகிய மாவட்டங்களை சர். ராட்கிளிஃப் இந்தியாவிற்கு வழங்கியதிலிருந்து அறிந்து கொள்ளலாம்.

12th_History_Unit_8_TM.indd 113 02-01-2023 16:37:25

Partition: A poem by W.H. Auden

Unbiased at least he was when he arrived on his mission,
Having never set eyes on the land he was called to partition
Between two peoples fanatically at odds,
With their different diets and incompatible gods.
'Time,' they had briefed him in London, 'is short. It's too late
For mutual reconciliation or rational debate:
The only solution now lies in separation.
The Viceroy thinks, as you will see from his letter,
That the less you are seen in his company the better,
So we've arranged to provide you with other accommodation.
We can give you four judges, two Moslem and two Hindu,
To consult with, but the final decision must rest with you.'

Shut up in a lonely mansion, with police night and day
Patrolling the gardens to keep the assassins away,
He got down to work, to the task of settling the fate Of millions.
The maps at his disposal were out of date
And the Census Returns almost certainly incorrect,
But there was no time to check them, no time to inspect Contested areas.
The weather was frightfully hot,
And a bout of dysentery kept him constantly on the trot,
But in seven weeks it was done, the frontiers decided,
A continent for better or worse divided.

The next day he sailed for England, where he could quickly forget
The case, as a good lawyer must. Return he would not,
Afraid, as he told his Club, that he might get shot.

பிரிவினை: W.H. ஆடன் எழுதிய கவிதை

எல்லை வகுக்க வந்தபோது ராட்கிளிஃப் நடுநிலைதான்
என்றாலும் அவருக்குப் புதிது இந்த நாட்டுநிலைதான்
வெறிகொண்ட இரு இனத்திற்குமிடையே விலகியது ஒற்றுமை
இவர்களின் இரையிலும், இறையிலும் எவ்வளவோ வேற்றுமை
பணியை முடிக்க இலண்டன் விதித்திருந்த காலமோ கொஞ்சம்
சமரச முயற்சிக்கும், விவாத பயிற்சிக்கும் அதில் நேரமெங்கே எஞ்சும்
இப்போதைக்கு ஒரே வழி – அதுதான் "பிரிவினை" எனும் வலி
கோடுபோட வந்தவரிடமிருந்து கொஞ்சம் விலகி நிற்பதே உசிதம்
என்றெண்ணிய வைஸ்ராயின் ஏற்பாடுகளை விளக்கி நிற்குது கடிதம்
இரு முஸ்லிம், இரு இந்து என நீதிபதிகள் நால்வர்
இவர் கேட்டால் தக்க ஆலோசனைகள் சொல்வர்
ராட்கிளிஃப் முடிவே இறுதி – அதன்படி எல்லைக்கோடு உறுதி

அவர் தனியாய் தங்கிய வீட்டில் இரவும் பகலும் போலீஸ் பாதுகாப்பு
கொலைகாரர் நெருங்காமல் தோட்டமும், ஓட்டமுமாய் கண்காணிப்பு
அவர் வேலை செய்ய எழுந்தார் – மக்களின் விதியை எழுதத் துணிந்தார்
காலாவதியான தோராய வரைபடம் – ஆராய நேரமில்லை,
பாடாவதியான பழங்கணக்கெடுப்பு – சரிபார்க்க சமயமில்லை
இடங்களுக்கோ போட்டி – வானிலையோ வதைத்தது வாட்டி
வேலை செய்ய உடல்நிலை ஒத்துழைக்கவில்லை
என்றாலும், ஏழு வாரத்தில் வகுத்திட்டார் எல்லை

இங்கிருந்து இங்கிலாந்திற்கு அடுத்த நாள் கப்பலில் பயணமானார்
இங்கே நடந்ததை, அதைவிட வேகமாய் மறந்து போனார்
முடிந்த வழக்கை மறப்பதுதானே வழக்கறிஞர் வழக்கம்.
நன்றோ! தீதோ! பிரித்திட்டார் இந்தியத் துணைக் கண்டத்தை அன்று.
திரும்பிய பின் இங்கிலாந்து நண்பர்களிடம் சொல்லியது உண்டு
மீண்டும் இந்தியா சென்றால் தனக்குத் துப்பாக்கியில் கண்டம் என்று.

காலனி ஆட்சியாளர்கள் இந்திய வரைபடத்தை மறுவரைவு செய்து இரண்டு சுதந்திர அரசாங்கங்களை விட்டுச் சென்றனர். சரியான எல்லைகளைத் அவர்களே வகுத்துக்கொள்ளும்படி அந்த இரு அரசாங்கங்களிடமும் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டது. இரு நாடுகளிலும் (கிழக்கு மற்றும் மேற்கு பாகிஸ்தானில் இந்தியர்கள்; மேற்கு வங்காளம், கிழக்கு பஞ்சாப், ஐக்கிய மாகாணம் ஆகியவற்றில் முஸ்லிம்கள்) வாழ்ந்த சமயச் சிறுபான்மையினர் அந்தந்த நாடுகளில் தொடர்ந்து சமயச் சிறுபான்மையினராகவும் குடிமக்களாகவும் வாழவேண்டும் என்ற புரிதலின் அடிப்படையிலேயே இந்தியா பிரிவினை செய்யப்பட்டது.

பிரிவினைக்குப் பின் இந்தியாவில் 42 மில்லியன் முஸ்லிம்களும் பாகிஸ்தானில் 20 மில்லியன் முஸ்லிம் அல்லாதோரும் (இந்துக்கள், சிந்தியர்கள் மற்றும் சீக்கியர்கள்) இருந்தனர். இந்து–முஸ்லிம் வன்முறைக்கு இடையே ஏற்பட்ட உயிர்க் கொலைகள், அதிகாரப் பரிமாற்றம் எதிர்பார்த்ததுபோல் மென்மையாக நடைபெறாது என்பதை உணர்த்தியது. இந்திய இராயல் கப்பற்படைக் கலகம், ஐ.என்.ஏ. வழக்குகள் (முந்தைய பாடத்தைப்பார்க்கவும்) ஆகியவற்றின்போது நிலவிய இந்து–முஸ்லிம் ஒற்றுமை தற்போது குலைந்து வெடிக்கும் எரிமலை போல் மாறியிருந்தது. வகுப்புவாதக் கலவரங்கள் இந்தியாவெங்கும் நடைபெற்றன. குறிப்பாக, வங்காளம் மற்றும் பஞ்சாபில் அவை அதிகமாக இருந்தன.

இரண்டு தேசங்கள் உருவான பின்னும் பிரிந்தப்பகுதிகள் இரு பக்கமும் வாழ்ந்த சிறுபான்மையின மக்களை பயமும் பாதுகாப்பின்மையும் ஆட்கொண்டிருந்தன. இந்திய விடுதலைப் போராட்டத்தை முன்னின்று வழி நடத்தியவரும் காலனிய ஆட்சியாளர்களால் புறக்கணிக்க இயலாதவருமான காந்தியடிகள் இந்திய சுதந்திர தினமான 1947 ஆகஸ்டு 15 அன்று பிரிவினை வன்முறைகளுக்கு தன் எதிர்ப்பை உணர்த்தும் விதத்தில் புது தில்லிக்கு வெகுதொலைவில் உண்ணாவிரதம் இருந்தார். பிரிவினை ஏற்படுத்திய அச்சம் இரு பக்கத்திலும் இருந்த சிறுபான்மையினரை மறுபக்கத்திற்கு குடிபெயராலாமா என்று பயத்தோடு எண்ண வைத்தது.

வன்முறை பரவியபோது காவல்துறை வேடிக்கை பார்த்தது. இது இரு தேச சிறுபான்மையினரிடமும் இடம்பெயரும் எண்ணத்தை ஏற்படுத்தியது. ஆகஸ்டு 1947 முதல் நவம்பர் 1947 வரையிலான 4 மாத காலத்தில் 4.5 மில்லியன் மக்கள் மேற்கு பாகிஸ்தானிலிருந்து இந்தியாவிற்குக் குறிப்பாக கிழக்கு பஞ்சாப் நகரங்கள் மற்றும் புது தில்லிக்கு இடம் பெயர்ந்தனர். அதே நேரத்தில், 5.5 மில்லியன் முஸ்லிம்கள் இந்தியாவில் தங்கள் வீட்டை விட்டு (கிழக்கு பஞ்சாப் ஐக்கிய மாகாணம் மற்றும் தில்லி ஆகியவற்றிலிருந்து) இடம்பெயர்ந்து பாகிஸ்தானுக்குச் சென்றனர். நிலைமை சீரான பின் மீண்டும் தங்களது இடங்களுக்கே திரும்பி விடலாம் என்று நினைத்த மக்களும் பின்னால் திரும்ப முடியவில்லை. வங்காளத்தில் இரண்டு எல்லைகளிலும் கூட இந்த இடம்பெயர்வு நடைபெற்றது.

வரலாற்று அறிஞர் ஞானேந்திர பாண்டே கூற்றுப்படி, 1947–48இல் 5 இலட்சம் முஸ்லிம் அல்லாத அகதிகள் (இந்துக்கள் மற்றும் சீக்கியர்கள்) பஞ்சாப் மற்றும் தில்லிக்கு இடம்பெயர்ந்து கொண்டிருந்தனர். தில்லியில் வசித்த பல்லாயிரக்கணக்கான முஸ்லிம்கள் அவர்களது வீடுகளிலிருந்து காலி செய்யப்பட்டனர். வன்முறைக் கும்பலின் தாக்குதலிலிருந்து தப்ப செங்கோட்டை மற்றும் புராணஹிலா கோட்டைகளிலிருந்த முகாம்களில் மக்கள் தஞ்சம் புகுந்தனர். அகதி முகாம்கள் ஏற்படுத்தப்பட்டிருந்த போதிலும் அவற்றில் போதுமான தண்ணீர் மற்றும் சுகாதார வசதிகள் இல்லை.

இரண்டு நாடுகளிலும் குடிபெயர்ந்த குடும்பங்கள் விட்டுச் சென்ற சொத்துகள் ஆக்கிரமிக்கப்பட்டன. எல்லையைக் கடப்பதற்காக நின்ற அகதிகளின் நீண்ட வரிசை கஃபிலா (Kafila) எனப்பட்டது. நடந்து சென்ற அகதிகள் மாற்று வகுப்பைச் சார்ந்த வன்முறைக் கும்பலின் பழிவாங்கலுக்கு இலக்காயினர். பஞ்சாப்பின் புதிய எல்லையின் இருபுறத்திலும் ஓடிய இரயில்களில் பயணம் செய்தோர் கொலைகார கும்பலின் வெறிக்குப் பலியாயினர். வன்முறையில் உயிரிழந்தோர்களின் எண்ணிக்கை 2 இலட்சம் முதல் 5 இலட்சம் வரையிலாக இருக்க வேண்டும் என்றும் 15 மில்லியன் மக்கள் இடம் பெயர்ந்தனர் என்று கணக்கிடப்பட்டுள்ளது.

அகதிகளாக நகர்வு

www.tntextbooks.in

ஏப்ரல் 1950இல் கூட இருநாடுகளின் அரசியல் தலைமைகளும் இயல்பு நிலை திரும்ப வேண்டும் என்றும் தங்கள் வீடுகளைத் துறந்து வந்த இரு பக்கத்தினரும் அவர்கள் பகுதிகளுக்குத் திரும்ப வேண்டுமென்றும் விரும்பினர். 1950, ஏப்ரல் 8இல் நேரு மற்றும் லியாகத் அலி கான் கையெழுத்திட்ட தில்லி ஒப்பந்தம் இரு தரப்பிலும் உள்ள சிறுபான்மையினரின் நம்பிக்கையை மீட்டெடுப்பது பற்றி குறிப்பிட்டது. ஆனால், அதற்கேற்றாற்போல் நிலைமை சுமூகமாக இல்லை. ஒப்பந்தம் கையெழுத்தானபோதே மேற்கு பஞ்சாபிலிருந்து சென்றவர்களை கிழக்கு பஞ்சாபிலும், தில்லியிலும் தங்க வைத்து மறுவாழ்வு அளிப்பதற்கும் தொழிற்திறன் பயிற்சி அளிப்பதற்கும் இந்திய அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வந்தது. பிரிவினையின் போதான வன்முறை ஏற்படுத்திய காயங்கள் பல பதிற்றாண்டுகள் கழிந்தும் ஆறவில்லை. பல்வேறு இலக்கியப் படைப்புகள் பிரிவினை அதிர்ச்சியை விளக்கும் சான்றாதாரங்களாகத் திகழ்கின்றன.

நேருவுக்கும் இந்த தேசத்தின் அடிப்படைச் சட்டத்தை உருவாக்குவதில் முனைந்திருந்த அரசமைப்பு நிர்ணய சபைக்கும் பிரிவினை பெரும் சவாலாக நின்றது. பாகிஸ்தான் இஸ்லாமியக் குடியரசாக முடிவெடுத்த நிலையில் இந்தியா சமயச்சார்பற்ற மக்களாட்சிக் குடியரசுக்கான அரசமைப்பை உருவாக்கியது.

8.2 அரசமைப்பு உருவாக்கம்

இந்திய அரசமைப்பின் வரைவை இந்தியர்கள் தான் உருவாக்க வேண்டும்; பிரிட்டிஷ் பாராளுமன்றம் அல்ல என்ற கோரிக்கை இந்திய தேசிய காங்கிரசின் சார்பாக 1934இல் அதிகாரப்பூர்வமாக எழுப்பப்பட்டது. காலனிய அரசாங்கம் வெளியிட்ட வெள்ளை அறிக்கையைக் காங்கிரஸ் புறக்கணித்தது. இந்தியர்களே தங்களுக்கான அரசமைப்பை உருவாக்குவார்கள் என்ற அடிப்படைக் கருத்து 1922லேயே காந்தியடிகளால் முன்வைக்கப்பட்டது. தன்னாட்சி என்பது பிரிட்டிஷ் பாராளுமன்றத்தால் இந்தியர்களுக்கு வழங்கப்படும் கொடையாக இல்லாமல் இந்தியர்களால் சுதந்திரமாக தேர்ந்தெடுக்கப்பட்ட, இந்தியர்களின் விருப்பத்தை வெளிப்படுத்தும் பிரதிநிதிகளிடமிருந்து உருவாக வேண்டும் என்று காந்தியடிகள் தெரிவித்திருந்தார்.

இந்திய அரசாங்கச் சட்டம் 1935இன் அடிப்படையில் ஆகஸ்ட் 1946இல் மாகாண சட்டமன்றங்களுக்கான தேர்தல் நடைபெற்றது. மாகாண சட்ட மன்றங்கள் மத்திய சட்டமன்றத்தைத் தேர்ந்தெடுக்க அது அரசமைப்பு நிர்ணய சபையாக செயல்பட்டது. 1946இல் நடைபெற்ற மாகாண தேர்தலில் சொத்துரிமை உரியவர்களுக்கு மட்டுமே வாக்குரிமை என இருந்தது. வயதுவந்தோர் அனைவருக்குமான வாக்குரிமை என்ற தத்துவம் நடைமுறைக்கு வந்திருக்கவில்லை. தேர்தல் முடிவுகள் முஸ்லிம் பெரும்பான்மை தொகுதிகளில் முஸ்லிம் லீக் கட்சிக்கும் மற்ற இடங்களில் இந்திய தேசிய காங்கிரஸ் கட்சிக்கும் செல்வாக்கு இருந்ததை உணர்த்தின. முஸ்லிம் லீக் அரசமைப்பு உருவாக்கும் நடவடிக்கையிலிருந்து ஒதுங்கியிருந்து தனி நாடு கோரிக்கைக்கு அழுத்தம் கொடுக்கத் தொடங்கியது. காங்கிரஸ் அரசமைப்பு நிர்ணயசபையில் இடம்பெற்றது.

மாகாண சட்டமன்றங்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் அரசமைப்பு நிர்ணயசபைக்கான காங்கிரஸ் உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தனர். அரசமைப்பு நிர்ணய சபையில் காங்கிரஸ் (224 இடங்கள்) ஆதிக்கம் செலுத்திய போதிலும் கம்யூனிஸ்டுகளும் சோஷியலிஸ்டுகளும் குறைந்த எண்ணிக்கையில் இடம்பெற்றிருந்தனர். டாக்டர். பி.ஆர்.அம்பேத்கர், பம்பாயிலிருந்து அரசமைப்பு நிர்ணயசபைக்கு தேர்ந்தெடுக்கப்படுமாறு பார்த்துக் கொண்ட காங்கிரஸ் அவரை அரசமைப்பு வரைவுக் குழுவின் தலைவராகவும் தேர்ந்தெடுத்தது. காங்கிரஸ்தலைமைதன் கட்சியின் வல்லுநர்களோடு புகழ்பெற்ற அரசமைப்பு வழக்கறிஞர்களையும் அரசமைப்பு நிர்ணயசபையில் இடம்பெறச் செய்தது.

இந்திய தேசிய காங்கிரசால் கராச்சி கூட்டத்தில் (மார்ச் 1931) நிறைவேற்றப்பட்ட அடிப்படை உரிமைகள் தீர்மானத்தில் இடம் பெற்ற தன்னாட்சி என்பதன் பொருள் மற்றும் விடுதலைப் போராட்டத்தின் இலக்கியல் (idealism) ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டே இந்திய அரசமைப்பு உருவாக்கப்பட வேண்டும் என்ற நோக்கத்தில் காங்கிரஸ் மேற்கண்டவாறு அரசமைப்பு நிர்ணயசபையை உருவாக்கியது. குடிமக்களுக்கு அடிப்படை உரிமைகளையும் அரசு கொள்கைகளுக்கான வழிகாட்டு நெறிமுறைகளையும் நம்பிக்கையுடன் உறுதி செய்யும் ஓர் ஆவணமாக இந்திய அரசமைப்பு உருவாக்கப்படுவதற்கு இதுவே அடிப்படைக் காரணமாக அமைந்தது. இந்திய அரசமைப்பு இந்திய நாட்டிற்குச் சுதந்திரமான தேர்தல் ஆணையத்தையும் வயதுவந்தோர் அனைவருக்குமான வாக்குரிமையையும் உறுதி செய்தது. மேலும், இந்திய அரசமைப்பு மக்கள் பிரதிநிதிகளுக்குச் சட்டம்

12th_History_Unit_8_TM.indd 116 02-01-2023 16:37:26

இயற்றுவதில் இறையாண்மையை உறுதிபடுத்திய அதே அளவுக்கு நீதித்துறையின் சுதந்திரத் தன்மையையும் உறுதி செய்தது.

அரசமைப்பு நிர்ணயசபையின் உறுப்பினர்கள் உலகின் பல்வேறு அரசமைப்புகளின் அம்சங்களைக் கற்றுக் கொள்வதிலும் அவற்றை இந்திய அரசமைப்பு உருவாக்கத்திற்கு பயன்படுத்திக் கொள்வதிலும் எவ்வித தயக்கமும் காட்டவில்லை. அதே சமயத்தில் இந்திய அரசமைப்பு உருவாக்கம் என்பது பிற உலக நாடுகளின் அரசமைப்புகளைப் பார்த்து அப்படியே எழுதிவிடும் பணி அல்ல என்பதிலும் தெளிவாக இருந்தனர்.

1946, டிசம்பர் 13 அன்று ஜவகர்லால் நேரு இந்திய அரசமைப்புக்கான குறிக்கோள் தீர்மானத்தை அரசமைப்பு நிர்ணயசபையில் அறிமுகப்படுத்தினார். அரசமைப்பு நிர்ணய சபையின் முதல் கூட்டம் 1946 டிசம்பர் 9இல் நடைபெற்றது. இராஜேந்திர பிரசாத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.



இராஜேந்திர பிரசாத்

நேரு அறிமுகப்படுத்திய குறிக்கோள் தீர்மானம் இந்திய அரசமைப்பின் உணர்வு மற்றும் உள்ளடக்கத்திற்கான மிகச்சுருக்கமான அறிமுகமாக அமைந்தது. சபையால் ஏற்றுக்கொள்ளப்பட்ட இந்தத் தீர்மானத்தின் முக்கியத்துவத்தை இந்திய அரசமைப்பின் முகப்புரை, அடிப்படை உரிமைகள், அரசின் நெறிமுறைக் கோட்பாடுகள் ஆகியவற்றைப் பார்த்துப் புரிந்து கொள்ளலாம். இந்திய அரசமைப்பு 1949 நவம்பர் 26இல் அரசமைப்பு நிர்ணயசபையால் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

அரசமைப்பு நிர்ணயசபையின் கூட்ட அமர்வு

இந்திய அரசமைப்பு, இந்தியாவிற்கான ஒரு புதிய விடியலை உருவாக்கியதோடு இந்திய தொன்மையின் தொடர்ச்சியையும் நிறுவியது. அடிப்படை உரிமைகள் குறிக்கோள் தீர்மானத்தின் ஐந்தாம் பிரிவிலிருந்து உருவாக்கப்பட்டன. அதேபோல், இந்திய தேசிய காங்கிரசின் கராச்சி கூட்டத்தில் (பாடம்–5இல் குறிப்பிடப்பட்டுள்ளது) பட்டியலிடப்பட்ட உரிமைகளும், இதற்கு மூலங்களாய் அமைந்தன. இந்திய அரசமைப்பின் உணர்வு (The spirit of the Constitution) சுதந்திரப் போரின் அனுபவத்திலிருந்து பெறப்பட்டதாகும். அதே போல், அரசைமைப்பின் சட்டமொழி குறிக்கோள் தீர்மானத்திலிருந்தும் அதைவிட மிக முக்கியமாக ஐக்கிய நாடுகள் சபை 1948 டிசம்பர் 10இல் வெளியிட்ட அனைத்துலக மனித உரிமைகள் பேரறிக்கையிலிருந்தும் எடுக்கப்பட்டது.

8.3 சுதேச அரசுகளின் இணைப்பு

இந்திய அரசமைப்பு 1949 நவம்பர் 26இல் ஏற்றுக்கொள்ளப்பட்ட நிகழ்வைப் புதிதாய் பிறந்த தேசத்தின் துணிச்சலான புதிய பரிசோதனையின் தொடக்கம் எனலாம். இந்திய அரசமைப்பு நிர்ணய சபை ஏற்படுத்தப்பட்டு சுதந்திர இந்தியாவிற்கான அரசமைப்பு வரைவுப்பணி தொடங்கியபோதே தேசமும் அதன் தலைவர்களும் எதிர்கொள்ள வேண்டிய புதிய சவால்களாக இருந்தன. அவற்றுள், இந்தியப் பகுதிகள் அல்லது சுதேச அரசுகளை ஒன்றிணைப்பது முக்கியமானதாக இருந்தது.

சர்தார் வல்லபாய் படேல்

சுதேசஅரசுகளை இந்திய ஒன்றியத்துடன் இணைக்கும் பணி 1947 ஆகஸ்ட் 15 க்குள் விரைவாக முடிக்கப்பட்டது. காஷ்மீர், ஜுனாகத், ஹைதராபாத் ஆகியவற்றைத் தவிர மற்ற சுதேசஅரசுகள் அனைத்தும் இணைப்புறுதி ஆவணத்தில் (Instrument of Accession) கையெழுத்திட்டு பாதுகாப்பு, வெளியுறவு மற்றும் தகவல் தொடர்பில் இந்தியாவின் மைய ஆதிக்கத்தை ஏற்றுக்கொண்டன.

இந்தியாவின் ஏதேனும் ஒரு மாகாணத்தோடு சுதேசஅரசுகளை ஒருங்கிணைக்கும் பணி எளிதாகச் செய்துமுடிக்கப்பட்டது. டிசம்பர் 1945 மற்றும் ஏப்ரல் 1947 ஆகிய மாதங்களில் நடைபெற்ற அனைத்திந்திய மாநில மக்கள் மாநாட்டில், இந்திய அரசமைப்பு நிர்ணய சபையோடு இணைய மறுக்கும் மாநிலங்கள் இந்திய ஒன்றியத்தின் எதிரியாகக் கருதப்படும் என்ற அச்சுறுத்தலான அறிவிப்பே பல சுதேசஅரசுகள் இணைப்புறுதி ஆவணத்தில் கையெழுத்திட்டு இந்தியாவோடு இணைக்கப் போதுமானதாக இருந்தது. மேலும், இந்திய ஒன்றியத்தோடு இணையும்

12th_History_Unit_8_TM.indd 117 02-01-2023 16:37:26

சுதேச மன்னர்களுக்குத் தாராளமாக மன்னர் மானியங்களும் (Privy Purse to the Princes) வழங்கப்பட்டன. சுதேசஅரசுகளை இந்தியாவோடு நிறைவாக இணைக்கும் பணியை அப்போதைய இடைக்கால அமைச்சரவையில் உள்துறை அமைச்சராகவும் மாநில நிர்வாகங்களுக்கான அமைச்சராகவும் இருந்த சர்தார் வல்லபாய் படேல் திறம்பட செய்து முடித்தார். சுதேச அரசுகளை இந்திய ஒன்றியத்தோடு இணைப்பதற்கான உரிய அழுத்தத்தைக் கொடுத்ததில் மக்கள் இயக்கங்களுக்கும் முக்கியப் பங்கு உண்டு.

சுதேச அரசுகளின் இணைப்பில் முக்கியப் பங்கு வகித்த போராட்டங்களாக மூன்று போராட்டங்களைக் குறிப்பிடலாம். திருவாங்கூர் மாநிலத்தின் பொறுப்புஅரசாங்கம் வேண்டி அந்த மாநிலத்தின் திவான் ஆகிய சி.பி. இராமசாமியை எதிர்த்து நடத்தப்பட்ட புன்னப்புரா – வயலார் ஆயுதப் போராட்டம் முக்கியமானது. இன்னொரு முக்கியமான போராட்டம் பிரஜா மண்டல் மற்றும் ஒடிசாவில் நடந்த பழங்குடியினர் கிளர்ச்சிகள் (நீலகிரி, தெங்கனால் மற்றும் தல்சர்) இந்தியாவில் நடந்த இரண்டாவது முக்கிய சுதேச எதிர்ப்புப் போராட்டம் ஆகும். மைசூர் மகாராஜாவிற்கு எதிராக இந்திய தேசிய காங்கிரஸ் நடத்திய போராட்டங்களும் இந்திய சுதேச அரசுகளின் இணைப்புக்கு முக்கியப் பங்காற்றின.

இணைப்புறுதி ஆவணம்: இந்திய அரசாங்கச் சட்டம் 1935 கீழ் உருவாக்கப்பட்ட ஒரு சட்டப்பூர்வமான ஆவணம் ஆகும். இந்த ஆவணமே பிரிவினையின்போது இந்திய சுதேச அரசர்கள், இந்தியா அல்லது பாகிஸ்தான் ஆகிய ஏதேனும் ஒரு நாட்டுடன் இணைவதற்கான ஒப்பந்தமாகவும் பயன்படுத்திக் கொள்ளப்பட்டது.

ஹைதராபாத் நிஜாம் இந்திய ஆளுகைக்கு கீழ்ப்படிய மறுத்து, அவர் ஹைதராபாத் அரசை சுதந்திர அரசு என்று அறிவித்தார். ஜுனாகத் அரசர் மக்கள் விருப்பத்திற்கு எதிராக பாகிஸ்தானுடன் சேர விரும்பினார். இதே போல், காஷ்மீரின் இந்து அரசரான மகாராஜா ஹரிசிங் காஷ்மீர் சுதந்திர அரசாக இருக்குமென்று அறிவித்தபோது அந்நாட்டு மக்கள் தேசிய மாநாட்டுத் தலைமையில் 'காஷ்மீரைவிட்டு வெளியேறுங்கள்' என்ற போராட்டத்தை அரசருக்கெதிராக தொடங்கினர். காஷ்மீரிலும் பிற சுதேசஅரசுகளிலும் தோன்றிய இயக்கங்கள் நிலப்பிரபுத்துவத்தின் நலிவு மற்றும் அங்கு நிலவிய சமூக உறவுகளுக்கு எதிரானவையாகும்.

ஹைதராபாத் நிஜாம்

ஹைதராபாத் நிஜாம் விடுதலைப் பிரகடனம் செய்த 48 மணிநேரத்திற்குள் இந்தியா அங்கு காவல்துறை நடவடிக்கைகளைத் தொடர்ந்தது. ஹைதராபாத் நிஜாம் மற்றும் அவரது இராணுவமான இரசாக்கர்கள் மீது தங்கள் கோபத்தை வெளிப்படுத்தித் தெலங்கானா மக்கள் இயக்கத்தை கம்யூனிஸ்டுகள் வழிநடத்தினர் இதன் காரணமாக ஹைதராபாத் மீது காவல்துறை நடவடிக்கை எடுப்பதற்குச் சட்டப்பூர்வமான காரணம் வாய்த்தது எனலாம்.

1946 முதலே படேல் காஷ்மீர் மகாராஜாவோடு பேச்சுவார்த்தை நடத்தி வந்தபோதிலும், காஷ்மீர் அரசர் ஹரிசிங் இந்தியாவோடு இணைய மறுத்துவந்தார். எனினும், இந்திய விடுதலைக்குச் சில மாதங்களுக்குப் பின் (அக்டோபர் 1947) பாகிஸ்தானியர்கள் சிலர் காஷ்மீரைச் சூறையாடியபோது மகாராஜா ஹரிசிங்கால் அந்த நடவடிக்கையைத் தடுக்க முடியவில்லை. காஷ்மீர் அரசருக்கு உதவுவதற்காக, இந்திய இராணுவம் அனுப்பப்படுவதற்கு முன் காஷ்மீர் அரசர் இணைப்புறுதி ஆவணத்தில் கையெழுத்திட வேண்டும் என்பதில் படேல் உறுதியாக இருந்தார். இதன் விளைவாக, காஷ்மீர் சுதந்திர இந்தியாவின் ஒரு பகுதியானது. இந்த நிகழ்வின்போது தலைவர்கள் காஷ்மீர் மக்களுக்கு அளித்த உறுதிமொழிகளும் காஷ்மீர் மக்கள் மீதான அக்கறையும் அரசமைப்பு நிர்ணய சபையை ஜம்மு காஷ்மீருக்கு இந்திய அரசமைப்பின் உறுப்பு 370இன் படி தனி அந்தஸ்து வழங்கக் காரணமாயின.

மகாராஜா ஹரிசிங்

8.4 மொழி அடிப்படையில் மாநிலங்களின் மறுசீரமைப்பு

விடுதலைக்குப் பிந்தைய இந்தியாவின் உருவாக்கத்தில் முக்கியமான ஒரு அம்சம் மொழிவாரியாக மாநிலங்களை மறுசீரமைத்ததாகும். காலனிய ஆட்சியாளர்கள் இந்தியத்துணைக்கண்டத்தைநிர்வாகஅலகுகளாக அதாவது, இந்திய நிலப்பரப்பு மொழி, பண்பாடு

12th_History_Unit_8_TM.indd 118 02-01-2023 16:37:26

www.tntextbooks.in

ஆகியவற்றின் அடிப்படையில் அமையாத, நிர்வாக வசதிக்காக மட்டுமே பிரிக்கப்பட்ட மாகாணங்களாக விட்டுச் சென்றனர். விடுதலையும் அரசமைப்பு அடிப்படையிலான மக்களாட்சி கருத்தாக்கமும் மக்களை இறையாண்மை உள்ளவர்களாகவும் இந்தியாவை வெறும் நிர்வாகரீதியாக அணுகாமல், பன்முக கலாச்சாரம் கொண்ட தேசமாக, கூட்டாட்சித் தத்துவ அடிப்படையில் முழுமையாக அணுக வேண்டும் என்பதை வலுப்படுத்தின.

மொழிவாரி மாநில மறுசீரமைப்பு, இந்திய அரசமைப்பு நிர்ணய சபையின் 1947 மற்றும் 1949 இடைப்பட்ட ஆண்டுகளில் எழுப்பப்பட்டு விவாதிக்கப்பட்டது. ஆனால், அரசமைப்பு நிர்ணய சபை இது குறித்த விவாதத்தை இரண்டு காரணங்களுக்காக நிலுவையில் வைத்தது. மொழிவாரி மாநில மறுசீரமைப்பானது பெரும்பணி என்பது முதற் காரணம், இந்தியப் பிரிவினையும் அது தொடர்பான வன்முறைகளும் நிகழ்ந்து கொண்டிருக்கும் நேரத்தில் மொழிவாரியான மாநிலம் குறித்து விவாதம் மேலும் பிரச்சினைகளை உருவாக்கும் என்பது இன்னொரு காரணம்.

இந்திய அரசமைப்பு நடைமுறைக்கு வந்தபின் மொழிவாரி மாநில மறுசீரமைப்புக் கொள்கை படிப்படியாக நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்டது. 1956இல் ஆந்திரப்பிரதேச உருவாக்கத்தில் தொடங்கி 1966இல் பஞ்சாப் மாநிலத்தைப் பஞ்சாபி மொழி பேசும் பஞ்சாப் மாநிலம் மற்றும் அதிலிருந்து பிரிக்கப்பட்ட ஹரியானா மற்றும் இமாச்சலப்பிரதேச மாநிலங்கள் என மூன்றாகப் பிரித்ததில் முற்றுப்பெற்றது.

1920ஆம் ஆண்டு முதலே இந்திய விடுதலை இயக்கத்தோடு, மொழிவாரி மாநிலக் கோரிக்கை ஒன்றிணைந்திருந்தது. இந்திய தேசிய காங்கிரஸ் (1920ஆம் ஆண்டு) நாக்பூரில் நடைபெற்ற கூட்டத்தில் மொழி வாரியான மாகாண காங்கிரஸ் குழுக்கள் அமைக்கப்படுவதன் மூலம் மொழி அடையாளத்தின் அடிப்படையில் அமைந்த தேசிய அடையாளம் பாதுகாக்கப்படும் என்று உறுதியளித்தது.

1928இல் வெளியான நேரு அறிக்கை பிரிவு 86இல் பின்வருமாறு தெளிவாக குறிப்பிடப்பட்டிருந்தது. "நிதி மற்றும் நிர்வாக காரணங்களுக்கு உட்பட்டு, பெரும்பான்மை மக்கள் வாழும் இட அடிப்படையில் மாநிலங்களை மொழி வாரியாக மறு சீரமைப்பதற்கான கோரிக்கை நிறைவேற்றப்பட வேண்டும்".

1945ஆம் ஆண்டு மாகாண மற்றும் மத்திய சட்டமன்றங்களுக்கு நடைபெற்ற தேர்தலின்போது இந்திய தேசிய காங்கிரஸ் வெளியிட்ட தேர்தல் அறிக்கையில் மொழிவாரி மாகாணங்கள் பற்றிய கருத்து ஆணித்தரமாக இடம்பெற்றிருந்தது. "காங்கிரஸ் (இந்திய தேசத்திற்குள் வாழும்) ஒவ்வொரு குழுவின் சுதந்திரத்திற்கும் துணை நிற்பதோடு அந்த குழுக்களின் தனிப்பட்ட வாழ்வு, கலாச்சாரம் போன்றவற்றை மேம்படுத்த தேசத்திற்குள் மொழி மற்றும் கலாச்சார அடிப்படையில் மாகாணங்களை அமைக்கவும் துணை செய்யும்" என்று குறிப்பிட்டது.

அரசமைப்பு நிர்ணயசபைக்கான தேர்தல் முடிவடைந்து ஒரு மாதத்திற்குப்பின், 1946 ஆகஸ்ட் 31இல் பட்டாபி சீதாராமைய்யா ஆந்திரா மாகாணத்திற்கான கோரிக்கையை அரசமைப்பு நிர்ணயசபையின் முன் வைத்தார். "இந்த முழுப்பிரச்சனையை முதல் பிரச்சனையாகவும், முக்கியப் பிரச்சனையாகவும் எடுத்து அரசமைப்பு நிர்ணய சபை தீர்வு காண வேண்டும்" என்று அவர் குறிப்பிட்டார். மேலும், 1946, டிசம்பர் 8இல் ஒரு மாநாட்டிற்கு அவர் தலைமை தாங்கியபோது நிறைவேற்றிய தீர்மானத்தில் மொழிவாரி மாநில மறுசீரமைப்புக் கொள்கையை அரசமைப்பு நிர்ணயசபை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று வலியுறுத்தினார். இந்திய அரசாங்கத்தின் அறிவிக்கை ஒன்று, புதிய அரசமைப்பில் சிந்து, ஒரிசா (ஒடிசா) மாகாணங்கள் போல ஆந்திராவும் தனி அலகாகக் குறிப்பிடப்படும் என்று தெரிவித்ததோடு மட்டுமின்றி இந்திய அரசாங்கச் சட்டம் 1935 –லும் அவ்வாறே இடம்பெற்றது.

ஆனால், அரசமைப்பு வரைவுக்குழு ஆந்திராவிற்கான புவியியல் மாகாண எல்லைகள் வகுக்கப்படும் வரை ஆந்திராவைத் தனி அலகாக குறிப்பிட முடியாது என்று கருதியது. எனவே, 1948, ஜுன் 17இல் அரசமைப்பு நிர்ணயசபைத் தலைவர் இராஜேந்திர பிரசாத் மூவர் ஆணையம் ஒன்றை அமைத்தார். மொழிவாரி மாகாணங்கள் ஆணையம் என்றழைக்கப்பட்ட அது புதிய மொழிவாரி மாகாணங்களாக ஆந்திரம், கேரளம், கர்நாடகம், மகாராஷ்டிரம் ஆகியவற்றை உருவாக்குவது குறித்து ஆராய்ந்தது. 1948 டிசம்பர் 10இல் இந்த ஆணையத்தால் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கை மொழிவாரி மாகாண மறுசீரமைப்பு என்னும் கருத்தாக்கத்திற்கு எதிரான காரணங்களைப் பட்டியலிட்டது. முன்மொழியப்பட்ட நான்கு மாநிலங்களான ஆந்திரம், கேரளம், கர்நாடகம், மகாராஷ்டிரம் ஆகியவற்றை உருவாக்குவதற்கு எதிராக அந்த ஆணையம் கருத்துரைத்தது.

எனினும், மொழிவாரி மாகாணக் கோரிக்கை நின்றுவிடவில்லை. ஜெய்ப்பூர் மாநாட்டில் பட்டாபி சீதாராமையா தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட பின் இந்தக் கோரிக்கை மேலும் முக்கியத்துவம் வாய்ந்ததாக மாறியது. அதன் காரணமாக,

12th_History_Unit_8_TM.indd 119 02-01-2023 16:37:26

மொழிவாரி மாகாணக் கோரிக்கையை ஆராய ஜவகர்லால் நேரு, வல்லபாய் படேல் மற்றும் பட்டாபி சீதாராமையா ஆகிய மூவரையும் கொண்ட ஜே. வி.பி. குழு (J. V. P. Committee) அமைக்கப்பட்டது.


பட்டாபி சீதாராமையா

ஜே.வி.பி. குழு தனது அறிக்கையை 1949 ஏப்ரல் 1இல் சமர்ப்பித்தது. துரதிருஷ்டவசமாக இந்தக் குழுவும் மொழிவாரி மாகாண ஆணையத்தின் முடிவையே ஆதரித்தது. இந்தக் குழு மொழிவாரி மாகாணங்கள் "குறுகிய பிராந்தியவாதத்தை" வலியுறுத்துகின்றன என்றும், அது நாட்டின் மேம்பாட்டிற்கு "அச்சுறுத்தலாக" உருவாகக்கூடும் என்றும் தெரிவித்தது. ஜே.வி.பி. குழு "மொழியானது பிணைக்கும் ஆற்றலைக் கொண்டிருப்பதோடு பிரிக்கும் ஆற்றலும் உடையது" என்று குறிப்பிட்டபோதிலும், "நாட்டில் சாதகமான சூழ்நிலை உருவாகும் போது – மக்களின் சிந்தனைகள் அமைதிப்படும்போது, எல்லைகளை மாற்றி அமைத்து புதிய மாகாணங்களை உருவாக்கலாம் என்றும் அவ்வாறு உருவாக்குவது எளிதாகவும் அனைத்து அக்கறைகளுக்கும் நன்மை தருவதாகவும் அமையும்" என்றும் வலியுறுத்தியது.

ஜே.வி.பி. குழு தனது அறிக்கையின் முடிவுரையில் மொழிவாரி மாநில மறுசீரமைப்பிற்கு அது உகந்த நேரமல்ல என்று தெரிவித்தது. வேறுவிதமாக சொல்வதானால், மொழிவாரி மாநிலம் மறுசீரமைப்பிற்கான ஒருமித்தக் கருத்தை உருவாக்கும் பணி தற்காலிகமாக ஒத்திவைக்கப்பட்டது. அதே நேரத்தில் எதிர்காலத்தில் மாநிலங்களுக்கு இடையிலான எல்லைகளை மறுசீரமைக்கவும் இருக்கின்ற மாநிலங்களிலிருந்து புதிய மாநிலங்களை உருவாக்குவதற்குமான வழிவகைகளைத் திறந்து வைத்தது.

இந்திய அரசமைப்பை உருவாக்கியவர்கள் மாநில மறுசீரமைப்பு, மொழி அடிப்படையில்தான் அமைய வேண்டும் என்று குறுக்காமல் மாநில மறுசீரமைப்பை ஒத்துக்கொள்ளக்கூடிய வேறு காரணங்கள் அடிப்படையிலும் அமைக்கலாம் என பரந்த பார்வை கொண்டிருந்தனர்.

முதல் பொதுத் தேர்தல் முடிவடைந்த பின்னர் மீண்டும் மொழிவாரி மாநில கருத்தாக்கம் எழுச்சிபெற்றது. ஆந்திரா தனி மாநிலமாகப் பிரிக்கப்பட வேண்டும் என வலியுறுத்தி 1952 அக்டோபர் 19இல் சாகும் வரை உண்ணாவிரதத்தைத் தொடங்கிய பொட்டி ஸ்ரீராமுலு 1952 டிசம்பர் 15 அன்று இரவு காலமானார்.


பொட்டி ஸ்ரீராமுலு

இந்திய அரசமைப்பின் உறுப்பு 3 (Article 3) பின்வருமாறு தெரிவிக்கிறது

நாடாளுமன்றம் சட்டத்தின் மூலம் பின்வரும் நடவடிக்கைகளை எடுக்கலாம்.

(அ) ஒரு மாநிலத்திலிருந்து நிலப்பகுதியைப் பிரித்தோ அல்லது இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட மாநிலங்களை அல்லது மாநிலங்களின் பகுதிகளை இணைத்தோ அல்லது ஏதேனும் நிலப்பகுதியை மாநிலப் பகுதிகளோடு இணைத்தோ புதிய மாநிலத்தை உருவாக்கலாம்;

(ஆ) எந்த மாநிலத்தின் நிலப்பகுதியையும் அதிகரிக்கலாம்;

(இ) எந்த மாநிலத்தின் நிலப்பகுதியையும் குறைக்கலாம்;

(ஈ) எந்த மாநிலத்தின் எல்லையையும் மாற்றியமைக்கலாம்;

இதன் காரணமாக பசல் அலியைத் தலைவராகவும், கே.எம்.பணிக்கர் மற்றும் எச்.என். குன்ஸ்ரூ ஆகியோரை உறுப்பினராகவும் கொண்ட மாநில மறுசீரமைப்பு ஆணையம் அமைக்கப்பட்டது. இந்த ஆணையம் தனது அறிக்கையை 1955 அக்டோபரில் சமர்ப்பித்தது. இந்த ஆணையம் பின்வரும் மாநிலங்களைக் கொண்டதே இந்திய யூனியன் என்று வரையறுத்தது. மதராஸ், கேரளம், கர்நாடகம், ஹைதராபாத், ஆந்திரம், பம்பாய், விதர்பா, மத்தியபிரதேசம், இராஜஸ்தான், பஞ்சாப், உத்திரப்பிரதேசம், பீகார், மேற்கு வங்காளம், அஸ்ஸாம், ஒரிசா (ஒடிசா), ஜம்மு மற்றும் காஷ்மீர் ஆகியவையாகும். வேறுவிதமாகச் சொல்வதெனில் ஆணையத்தின் பரிந்துரைகள் நிர்வாகக் காரணங்கள் மற்றும் மொழிவாரி மாகாண கோரிக்கைகள் ஆகியவற்றிற்கிடையேயான சமாதான நடவடிக்கைகளாக அமைந்தன.

நேரு ஆட்சிக்காலத்தில் மொழிவாரி மாநில மறுசீரமைப்புக் கொள்கை, மாநில மறுசீரமைப்புச் சட்டமாக 1956இல் நிறைவேற்றப்பட்டு உறுதியுடன்

12th_History_Unit_8_TM.indd 120 02-01-2023 16:37:26

1956இல் இந்தியா
ஆப்கானிஸ்தான்
ஜம்மு காஷ்மீர்
இமாசலப் பிரதேசம்
சீனா
பஞ்சாப்
பாகிஸ்தான்
டெல்லி
நேபாளம்
பூட்டான்
உத்திரப் பிரதேசம்
அசாம்
ராஜஸ்தான்
பீகார்
திரிபுரா
மேற்கு வங்காளம்
மத்தியப் பிரதேசம்
மியான்மார்
ஒரிசா
பம்பாய்
ஆந்திரப் பிரதேசம்
பாண்டிச்சேரி
அரபிக் கடல்
வங்காள விரிகுடா
மைசூர்
பாண்டிச்சேரி
பாண்டிச்சேரி
மதராஸ்
கேரளா
லட்சத் தீவு, மினிக்காய் மற்றும் அமிந்திவி தீவுகள்
அந்தமான் நிக்கோபார் தீவுகள்
இலங்கை
அளவையில் இல்லை
இந்தியப் பெருங்கடல்

நடைமுறைப்படுத்தப்பட்டது. ஹைதராபாத்தை உள்ளடக்கிய ஆந்திரபிரதேசம் உருவானது. திருவாங்கூர், கொச்சின் அரசு மற்றும் மதராஸ் மாநிலத்தின் மலபார் மாவட்டம் ஆகியவற்றை உள்ளடக்கி கேரளம் உருவானது. மைசூர் அரசு மற்றும் பம்பாய், மதராஸ் மாநிலத்தின் பகுதிகளை உள்ளடக்கி கர்நாடகம் உருவானது. இவை அனைத்திலும் மொழி அடையாளமே மையக் கருத்தாக அமைந்தது.

குஜராத்தி மொழி பேசும் மக்களின் கோரிக்கையை நிறைவேற்றும் வகையில் மே 1960இல் மகாராஷ்டிராவிலிருந்து குஜராத் மாநிலம் உருவாக்கப்பட்டது. பஞ்சாபி சபாவால் முன்வைக்கப்பட்ட பஞ்சாப் மாநிலக் கோரிக்கை 1966 வரை பிரிவினை வாதமாகப் பார்க்கப்பட்டு வந்தாலும் 1966இல் பஞ்சாப் மாகாணம் பஞ்சாப், ஹரியானா, இமாச்சலப்பிரதேசம் என 3 மாநிலங்களாகப் பிரிக்கப்பட்டது. இதன் மூலம் 1920இல் இந்திய தேசிய காங்கிரசால் தொடங்கப்பட்ட மொழிவாரி மாகாண சீரமைப்பு முடிவுக்கு வந்தது.

8.5 இந்திய வெளியுறவுக் கொள்கை

சுதந்திர இந்தியாவின் வெளியுறவுக் கொள்கைக்கான அடிப்படைக் கோட்பாடுகள் இந்தியா விடுதலை அடைவதற்கு குறைந்தது முப்பது ஆண்டுகளுக்கு முன்பே உருவாக்கப்பட்டன எனலாம். இந்தக் கோட்பாடு விடுதலைப் போராட்டத்தின்போது படிப்படியாக வளர்ச்சியுற்றது. காலனியம் எந்த வடிவில் வந்தாலும் அதை எதிர்ப்பது என்பதே இந்தக் கோட்பாட்டின் அடிநாதமாகும். ஜவகர்லால் நேருவே இந்திய வெளியுறவுக் கொள்கையை முதன்மையான சிற்பி ஆவார்.

இந்திய வெளியுறவுக் கொள்கையின் அடிப்படைக் கோட்பாடுகள் பின்வருமாறு: காலனிய எதிர்ப்பு (அ) ஏகாதிபத்திய எதிர்ப்பு, இன ஒதுக்கலை எதிர்த்தல், இனவெறியை எதிர்த்தல், வல்லரசு நாடுகளுடன் அணி சேராமை, ஆப்பிரிக்க–ஆசிய ஒற்றுமை, பிறநாடுகளை ஆக்கிரமிக்காமல் இருத்தல், பிறநாடுகளின் உள்நாட்டு நிகழ்வுகளில் தலையிடாமல் இருத்தல், ஒரு நாடு மற்றொரு நாட்டின் இறையாண்மை மற்றும் நில எல்லையை மதித்தல், உலக அமைதி மற்றும் பாதுகாப்பை மேம்படுத்துதல், நாடுகளுக்கிடையேயான அமைதியை நிலைநிறுத்துவதில் வெற்றிடம் ஏற்படா வண்ணம் இரு நாடுகளும் சமநீதியைப் பாதுகாத்தல்.

இரண்டாம் உலகப்போருக்குப்பின், அமெரிக்கா (USA) மற்றும் சோவியத் ஒன்றியம் (USSR) ஆகிய இரு வல்லரசு நாடுகளுக்கிடையே ஏற்பட்ட பனிப்போர் காரணமாக இந்திய வெளியுறவுக் கொள்கைக்கு ஏற்பட்ட சிக்கலுக்கு இந்தியா அணிசேராக் கொள்கை மூலம் தீர்வு கண்டது.

அணிசேராக் கொள்கையின் விவரங்களைப் பார்ப்பதற்கு முன், விடுதலைக்குப் பின் இந்தியா சீனாவோடு கொண்டிருந்த உறவு குறித்துப் பார்க்கலாம். இந்தியா விடுதலைபெற்ற இரண்டு ஆண்டுகளுக்குப்பின் 1949இல் சீனா ஜப்பானியக் காலனிய விரிவாக்கத்திலிருந்து தன்னை விடுவித்துக்கொண்டது. இந்தியா, சீனாவோடு நீண்ட எல்லையைக் கொண்டிருந்ததால் நேரு சீனாவுடனான நட்புறவுக்கு அதிக முக்கியத்துவம் தந்தார்.

சீன மக்கள் குடியரசை 1950 ஜனவரி 1இல் முதன் முதலாக அங்கீகரித்த நாடு இந்தியா. காலனி ஆதிக்கத்தால் பெற்ற துன்பம், அதன் விளைவுகளான வறுமை மற்றும் பின்தங்கிய வளர்ச்சி ஆகிய அனுபவ ஒற்றுமைகளின் காரணமாக இந்தியாவும் சீனாவும் கைகோர்த்து உலகில் ஆசியாவிற்கோர் இடத்தை நிலைநிறுத்த முடியும் என்று நேரு கருதினார். ஐ.நா பாதுகாப்பு அவை கம்யூனிச சீனாவை உறுப்பினராக ஏற்க வேண்டுமென்று நேரு வலியுறுத்தினார். ஆனால், 1950இல் சீனா, திபெத்தை ஆக்கிரமித்த போது இந்தியா வருத்தமடைந்தது. இந்தியாவின் நம்பிக்கைக்குப் பாத்திரமாகச் சீனா நடந்துகொள்ளவில்லை என இந்தியா கருதியது. 1954இல் இந்தியா மற்றும் சீனாவிடையே கையெழுத்தான ஒப்பந்தம் சீனாவிற்கு திபெத் மீதிருந்த உரிமையை அங்கீகரித்தது. அத்தோடு இந்திய சீன உறவுக்கான கோட்பாடுகளாகப் பஞ்சசீலக் கொள்கையை வகுத்தது.

பஞ்சசீலக் கொள்கை

1. இரு நாடுகளும் ஒன்றுக்கொன்று அவற்றின் நில எல்லை மற்றும் இறையாண்மையை மதித்து நடத்தல்.
2. இரு நாடுகளும் ஒன்றையொன்று ஆக்கிரமிக்காமல் இருத்தல்.
3. ஒரு நாடு மற்றொரு நாட்டின் உள் நிகழ்வுகளில் தலையிடாமல் இருத்தல்.
4. இரு நாடுகளுக்கு இடையேயான சமத்துவம் மற்றும் ஒன்றுக்கொன்று பயனடைவதற்கான கூட்டுறவு.
5. சமாதான சகவாழ்வு

ஏப்ரல் 1955இல் நடைபெற்ற பாண்டுங் மாநாட்டில் சீனாவையும் அதன் தலைவரான

12th_History_Unit_8_TM.indd 122 02-01-2023 16:37:27

சூ – யென் – லாயும் முன்னிலைப்படுத்த நேரு சிறப்பான முயற்சிகள் எடுத்தார். ஆனால், 1959இல் சீன அரசாங்கம் பௌத்தர்களின் கிளர்ச்சியை ஒடுக்கியதால், பௌத்தர்களின் தலைவரான தலாய்லாமா ஆயிரக்கணக்கான அகதிகளுடன் திபெத்திலிருந்து வெளியேறி இந்தியாவில் தஞ்சம் புகுந்தார். இந்தியா, தலாய்லாமா–விற்கு தஞ்சம் வழங்கியது சீனாவை வருத்தமடையச் செய்தது. அதன் பின்னர், அக்டோபர் 1959இல் லடாக்கில் இருந்த கொங்காய் கணவாயில் காவல் இருந்த இந்தியப் படை மீது சீனா தாக்குதல் நடத்தியது. இதில் 5 இந்தியக் காவலர்கள் கொல்லப்பட்டனர், 12 பேர் கைதிகளாகப் பிடித்துச் செல்லப்பட்டனர்; பலகட்ட அளவில் பேச்சுவார்த்தை (நேரு மற்றும் சூ–யென் – லாய் உட்பட) நடைபெற்றபோதிலும் இந்திய– சீன உறவில் போதுமான முன்னேற்றம் ஏற்படவில்லை.



நேரு மற்றும் சூ – யென் – லாய்

1962இல் இந்திய சீனப் போர் ஏற்பட்டது. 1962, செப்டம்பர் 8இல் சீனப் படைகள் தக்லா மலைப் பகுதியில் தாக்குதல் நடத்தின. இதன் விளைவாக, இந்தியா சீனாவோடு இணைந்து ஆசிய மண்டலத்தை உருவாக்கும் கனவு தகர்ந்து போனது. இதனால், இந்திய சுயமரியாதைக்கு ஏற்பட்ட களங்கம், பங்களாதேஷ் போரில் சீனா மற்றும் அமெரிக்காவின் ஒத்துழைப்போடு போரிட்ட பாகிஸ்தானை தோற்கடித்த பின்பே துடைக்கப்பட்டு இந்தியாவின் சுய கௌரவம் நிலை நிறுத்தப்பட்டது.

உலகுக்கான இந்தியாவின் பங்களிப்பு, இந்திய சீன உறவு மற்றும் பஞ்ச சீலக் கொள்கையுடன் மட்டும் நிறைவடையவில்லை. வல்லரசு நாடுகளுடன் கூட்டு சேராத 'அணி சேராமை' என்ற கருத்தாக்கம் வலுப்பெறவும் பாண்டுங் மாநாடு உதவியது.

மார்ச் 1947இல் டெல்லியில் நேரு ஏற்பாடு செய்த ஆசிய உறவுக்கான மாநாட்டில் 20க்கும் மேற்பட்ட நாடுகள் கலந்து கொண்டன. ஆசிய நாடுகளின் விடுதலை மற்றும் உலகில் ஆசியாவின் நிலையை உறுதி செய்தல் என்பதே மாநாட்டின் மையக் கருத்தாகும். இத்தகைய மாநாடு மீண்டும் ஒரு முறை டிசம்பர் 1948இல் இந்தோனேசியாவில் மறு காலனியாக்கத்திற்கு உட்படுத்த விரும்பிய, டச்சுக்காரர்களுக்குப் பதில் கூறும் வகையில் நடத்தப்பட்டது. காலனி ஆதிக்க நீக்க முயற்சிகள் 1954இல் கொழும்பில் நடைபெற்ற ஆசியத் தலைவர்கள் மாநாட்டில் மேலும் முன்னெடுத்துச் செல்லப்பட்டது.இந்தமுயற்சிகளின்முத்தாய்ப்பாகவே 1955இல் இந்தோனேசியா நாட்டின் பாண்டுங் நகரில் ஆப்பிரிக்க, ஆசிய நாடுகளின் மாநாடு நடைபெற்றது. சில ஆண்டுகளுக்குப் பின் பெல்கிரேட் நகரில் இந்த நாடுகள் கூடி அணி சேரா இயக்கத்தைத் தோற்றுவிப்பதற்கான அடித்தளத்தை பாண்டுங் மாநாடு ஏற்படுத்திக் கொடுத்தது.

பாண்டுங் மாநாடு

சுதந்திர இந்தியாவின் வெளியுறவுக் கொள்கையின் சிற்பியான ஜவகர்லால் நேரு, எகிப்து அதிபர் நாசர் மற்றும் யூகோஸ்லாவியாவின் டிட்டோ ஆகியோருடன் இணைந்து 1961இல் அணுசக்தி ஆயுதக்குறைப்பு மற்றும் சமாதானத்திற்கான அழைப்பு விடுத்தார். அணிசேராமையின் முக்கியத்துவம் மற்றும் உலகத்துக்கு அதன் தேவைகுறித்து நேரு பின்வருமாறு குறிப்பிட்டார்.

"பாசிசம், காலனித்துவம், இனவாதம் அல்லது அணு குண்டு, ஆக்கிரமிப்பு மற்றும் அடக்குமுறை போன்ற அனைத்து தீய சக்திகளையும் பொறுத்தவரையில், நாம் மிகவும் உறுதியாகவும் ஐயத்திற்கு இடமின்றியும் அவற்றை எதிர்த்து நிற்கிறோம். பனிப்போர் மற்றும் அதுதொடர்பான இராணுவ ஒப்பந்தங்களிலிருந்து மட்டும் நாங்கள் விலகி நிற்கிறோம். ஆசிய மற்றும் ஆப்பிரிக்காவின் புதிய நாடுகளைத் தங்களது பனிப்போர் இயந்திரத்துக்குள் கட்டாயப்படுத்தித் தள்ளும் முயற்சிகளை எதிர்க்கிறோம். இல்லையெனில், நாம் தவறெனக் கருதும் அல்லது உலகத்துக்கோ, நமக்கோ தீங்கிழைக்கும் எந்தவொரு வளர்ச்சியையும் கண்டனம் செய்யலாம். அதற்கான, சந்தர்ப்பம் எழும்போதெல்லாம் நாம் அந்த சுதந்திரத்தைப் பயன்படுத்துவோம்".

12th_History_Unit_8_TM.indd 123 02-01-2023 16:37:27

www.tntextbooks.in

பாண்டுங் பேரறிக்கை

உலக அமைதியையும் ஒத்துழைப்பையும் மேம்படுத்துவதற்காக ஐ.நா.சாசனத்தின் 10 அம்சக் கோட்பாடுகளை உள்ளடக்கிய "பேரறிக்கை":

1. அடிப்படை மனித உரிமைகள் மற்றும் ஐ.நா. சாசனத்தின் நோக்கங்கள் மற்றும் கோட்பாடுகள் ஆகியவற்றை மதித்து நடத்தல்.
2. அனைத்து நாடுகளின் இறையாண்மை மற்றும் எல்லை ஒருமைப்பாட்டிற்கு மரியாதை அளித்தல்.
3. அனைத்து இனங்களின் சமத்துவத்தையும் பெரிய மற்றும் சிறிய அளவிலான அனைத்து நாடுகளின் சமத்துவத்தையும் அங்கீகரித்தல்.
4. மற்றொரு நாட்டின் உள் நிகழ்வுகளில் தலையீடு அல்லது தலையீடுகளில் இருந்து விலகுதல்.
5. ஒவ்வொரு நாட்டிற்கும் தன்னைப் பாதுகாத்துக்கொள்ள உரிமையுண்டு. தனியாகவோ அல்லது கூட்டாகவோ, ஐக்கிய நாடுகளின் சாசனத்திற்கு ஏற்ற விதத்தில் பாதுகாத்துக் கொள்ளலாம்.
6. (அ) வல்லரசுகளின் எந்தவொரு குறிப்பிட்ட நலன்களுக்கும் சேவை செய்வதற்கு கூட்டாகப் பாதுகாப்பு ஏற்பாடுகளை பயன்படுத்துவதில் இருந்து ஒதுங்கிக் கொள்ளல்.

   (ஆ) எந்தவொரு நாடும் பிறநாடுகளின் மீது அழுத்தங்களைச் செலுத்தாமல் ஒதுங்கி இருத்தல்.
7. ஆக்கிரமிப்பு அல்லது ஆக்கிரமிப்பு அச்சுறுத்தல்கள் அல்லது எந்த ஒரு நாட்டின் நில ஒருமைப்பாடு அல்லது அரசியல் சுயநிர்ணயத்துக்கு எதிரான செயல்களில் ஈடுபடாமல் விலகி இருத்தல்.
8. ஐக்கிய நாடுகள் சபையின் சாசனத்திற்கு இணங்க அனைத்து சர்வதேச முரண்பாடுகளையும் சமாதான வழிவகைகள், சமரசம், நடுவர் அல்லது நீதித்துறை தீர்வு போன்ற அமைதியான வழிமுறைகளில் தீர்த்துக் கொள்ளுதல்.
9. பரஸ்பர நலன்களையும் ஒத்துழைப்பையும் மேம்படுத்துதல்.
10. நீதி மற்றும் சர்வதேசக் கடமைகளை மதித்தல்.

பாடச் சுருக்கம்

- இந்திய துணைக்கண்டம், இந்தியா மற்றும் பாகிஸ்தான் என இரண்டு நாடுகளாகப் பிரிவினை செய்யப்பட்டதும் அதன் பின்னணியில் முன்னொருபோதும் இல்லாத அளவில் வகுப்புவாத வன்முறை வெடித்து, கடினமாக உழைத்துப் பெற்ற சுதந்திரத்திற்கு கடுமையான அச்சுறுத்தலாக மாறியது குறித்து விரிவாக விவாதிக்கப்பட்டுள்ளது.
- நேருவும் பட்டேலும் எடுத்த முயற்சிகளையும் மீறி எழுந்த சட்ட ஒழுங்குப் பிரச்சனை மற்றும் சொந்த நாட்டிலேயே அகதிகளின் நிலைக்குத் தள்ளப்பட்ட இடம்பெயர்ந்த மக்களை குடியமர்த்தும் பிரச்சினைகள் இயன்ற அளவுக்குத் தீர்க்கப்பட்டன.
- அரசமைப்பை உருவாக்குவது, இந்திய அரசுடன் சுதேச அரசுகளையும் ஒருங்கிணைப்பது, சில பலமான மற்றும் அறிவியல் காரணங்களின் அடிப்படையில் மாநிலங்களை மறுசீரமைத்தல், நாட்டிற்கான ஒரு நீண்டகால வெளியுறவுக் கொள்கையை உருவாக்குவது போன்ற சவால்கள் சிறப்பாக கையாளப்பட்டன. பல சிக்கல்கள் மற்றும் சவால்கள் இருந்தபோதிலும், சமூகத்தின் ஒவ்வொரு பிரிவினரையும் திருப்திபடுத்த முன்னுரிமை அளிக்கப்பட்டது.
- பல சுதேசஅரசுகள் இணைப்புறுதி ஆவணத்தில் கையெழுத்திட ஒத்துக் கொண்டபோதிலும், அத்துமீறிய திருவாங்கூர், ஹைதராபாத் மற்றும் காஷ்மீர் போன்றவை கடுமையான நடவடிக்கைகள் மூலம் இணைக்கப்பட்டன.
- அடிப்படைக் கோட்பாடுகளைக் கொண்ட வெளியுறவுக் கொள்கையை இந்தியா உருவாக்கியது. போரைத் தடுக்கவும் உலக சமாதானத்தை வளர்ப்பதற்கும் இந்தியா அணிசேராமை என்ற கருத்தாக்கத்தை உருவாக்கியது.

12th_History_Unit_8_TM.indd 124 02-01-2023 16:37:27

பயிற்சி

I. சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்.

1. பின்வருவனவற்றைப் பொருத்தி சரியான விடையைத் தேர்வு செய்க

(அ) ஜேவிபி குழு	–	1. 1928
(ஆ) சர் சிரில் ராட்கிளிஃப்	–	2. மாநில மறுசீரமைப்பு ஆணையம்
(இ) பசல் அலி	–	3. 1948
(ஈ) நேரு குழு அறிக்கை	–	4. எல்லை வரையறை ஆணையம்

	அ	ஆ	இ	ஈ
(அ)	1	2	3	4
(ஆ)	3	4	2	1
(இ)	4	3	2	1
(ஈ)	4	2	3	1

2. பின்வருவனவற்றைக் காலவரிசைப்படி அமைக்கவும்.

   (i) இந்திய சுதந்திரம் குறித்த அட்லியின் அறிவிப்பு

   (ii) நேருவின் தலைமையிலான இடைக்கால அரசாங்கம்

   (iii) மௌண்ட்பேட்டன் திட்டம்

   கீழே கொடுக்கப்பட்டுள்ள குறியீடுகளிலிருந்து விடையினை தேர்ந்தெடுக்கவும்.

   (அ) ii, i, iii (ஆ) i, ii, iii

   (இ) iii, ii, I (ஈ) ii, iii, i

3. பின்வருவனவற்றைப் பொருத்திச் சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்.

(அ) சீன மக்கள் குடியரசு	–	1. பெல்கிரேடு
(ஆ) பாண்டுங் மாநாடு	–	2. மார்ச் 1947
(இ) ஆசிய உறவுகள் மாநாடு	–	3. ஏப்ரல் 1955
(ஈ) அணிசேரா இயக்கத்தின் தோற்றம்	–	4. ஜனவரி 1, 1950

	அ	ஆ	இ	ஈ
(அ)	3	4	2	1
(ஆ)	4	2	3	1
(இ)	4	3	2	1
(ஈ)	3	2	4	1

4. பின்வரும் நிகழ்வுகளின் சரியான வரிசையைத் தேர்க

   (i) சீன மக்கள் குடியரசு

   (ii) சீனாவுடனான இந்தியப் போர்

   (iii) அரசமைப்பு நிர்ணயச் சபையின் கூட்டம்

   (iv) பஞ்சசீலக் கொள்கை

   (v) நேரு–லியாகத் அலி கான் ஒப்பந்தம்

   கீழே கொடுக்கப்பட்டுள்ள குறியீடுகளிலிருந்து விடையினை தேர்ந்தெடுக்கவும்.

   (அ) i, ii, iii, iv, v (ஆ) iii, i , v, iv, ii

   (இ) iii, iv, i, v, ii (ஈ) i, iii, iv, v, ii

5. மகாத்மா காந்தியடிகள் படுகொலை செய்யப்பட்ட நாள் ___________

   (அ) ஜனவரி 30, 1948

   (ஆ) ஆகஸ்ட் 15, 1947

   (இ) ஜனவரி 30, 1949

   (ஈ) அக்டோபர் 2, 1948

6. ஆந்திர மாநில கோரிக்கையினை முதன்முதலில் எழுப்பியவர் ___________

   (அ) பொட்டி ஸ்ரீராமுலு

   (ஆ) பட்டாபி சீத்தாராமையா

   (இ) கே.எம். பணிக்கர்

   (ஈ) டி. பிரகாசம்

7. அரசமைப்பு நிர்ணயச் சபையில் குறிக்கோள் தீர்மானங்களைக் கொண்டு வந்தவர்

   (அ) இராஜேந்திர பிரசாத்

   (ஆ) ஜவகர்லால் நேரு

   (இ) வல்லபாய் படேல்

   (ஈ) மௌலானா அபுல் கலாம் ஆசாத்

8. பி.ஆர். அம்பேத்காரை எந்த தொகுதியிலிருந்து தேர்ந்தெடுப்பதைக் காங்கிரஸ் உறுதி செய்தது?

   (அ) அமேதி (ஆ) பம்பாய்

   (இ) நாக்பூர் (ஈ) மகவ்

9. **கூற்று:** ராட்கிளிஃபின் எல்லை வரையறை அனைத்து வகையான முரண்பாடுகளையும் கொண்டிருந்தது.

   காரணம்: முரண்பாடுகள் இருப்பினும் அது அனைவராலும் ஒருமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

   (அ) கூற்று மற்றும் காரணம் சரி. காரணம் கூற்றை விளக்குகிறது.

   (ஆ) கூற்று மற்றும் காரணம் சரி. காரணம் கூற்றை விளக்கவில்லை.

12th_History_Unit_8_TM.indd 125 02-01-2023 16:37:27

www.tntextbooks.in

(இ) கூற்று சரி காரணம் தவறு.

(ஈ) கூற்று தவறு காரணம் சரி.

10. அரசமைப்பு நிர்ணய சபையின் முதல் கூட்டம் எப்போது நடைபெற்றது?

(அ) மார்ச் 22, 1949

(ஆ) ஜனவரி 26, 1946

(இ) டிசம்பர் 9, 1946

(ஈ) டிசம்பர் 13, 1946

11. அரசமைப்பு எப்பொழுது ஏற்றுக்கொள்ளப்பட்டது?

(அ) ஜனவரி 30, 1949

(ஆ) ஆகஸ்ட் 15, 1947

(இ) ஜனவரி 30, 1948

(ஈ) நவம்பர் 26, 1949

12. மொழிவாரி அடிப்படையில் அமைக்கப்பட்ட முதல் மாநிலம் ___________

(அ) காஷ்மீர் (ஆ) அஸ்ஸாம்

(இ) ஆந்திரா (ஈ) ஒரிஸா

II குறுகிய விடையளிக்கவும்

1. இணைப்புறுதி ஆவணம் பற்றி நீவிர் அறிவது யாது?
2. அரசமைப்பு நிர்ணய சபையின் அமைப்பினை விளக்குக?
3. அரசமைப்பின் ஷரத்து 370 ன் முக்கியத்துவம் என்ன?
4. ஹைதராபாத் சமஸ்தானத்தை இந்திய யூனியனுடன் சேர்க்க எடுக்கப்பட்ட காவல் துறை நடவடிக்கையினை எது நியாயப்படுத்தியது?
5. ஜேவிபி குழு பரிந்துரைகளின் முக்கியத்துவம் என்ன?

III சுருக்கமாக விடையளிக்கவும்.

1. காஷ்மீர் அரசர் எவ்வாறு இணைப்புறுதி ஆவணத்தில் கையெழுத்திட்டார்? .
2. இந்திய அரசமைப்பின் தனித்தன்மைகள் யாவை?
3. பிரிவினையால் ஏற்பட்ட கடுமையான விளைவுகளைச் சுட்டிக் காட்டுக.
4. பஞ்சசீலக் கொள்கையின் ஐந்து கோட்பாடுகளை விளக்குக.

IV. விரிவான விடையளிக்கவும்.

1. சுதேச அரசுகளை இந்திய ஒன்றியத்துடன் இணைப்பது தொடர்பாக ஏற்பட்ட பிரச்சினைகள் என்ன? அவற்றை எவ்வாறு திறமையாக படேல் மற்றும் நேரு கையாண்டனர் என்பதையும் விளக்குக.
2. 1920 முதல் 1956 வரை இந்திய மாநிலங்கள் மறுசீரமைக்கப்பட்டதின் பல்வேறு நிலைகளைக் கண்டறிக.
3. இந்திய வெளியுறவுக் கொள்கையின் அடிப்படைக் கோட்பாடுகள் யாவை? அணிசேரா இயக்கத்தில் ஆப்பிரிக்க ஆசிய நாடுகளை இணைத்ததில் பிரதமர் நேரு அவர்களின் பங்கினை விளக்குக.

V. செயல்பாடுகள்

1. அடையாள அரசியல் தொடர்பான சாதக பாதகங்கள் பற்றி விவாதிக்க சிறப்புக் கூட்டங்களை நடத்துக.
2. ஆசிரியர்கள் கோவிந்த் நிகலானியின் தொலைக் காட்சி படமான *Tamas* மற்றும் எம்.எஸ். சத்யுவின் "*Garam Hawa*" படத்தையும் ஆங்கில துணை தலைப்புகளுடன் திரையிடலாம்.
3. குஷ்வந்த் சிங்கின் *Train to Pakistan* என்ற சிறப்பான புத்தகத்தை இப்பாடப்பகுதி கருத்துகள் தொடர்பாக வாசிக்கலாம்.

மேற்கோள் நூல்கள்

1. Bipan Chandra, et. al., *India Since Independence*, Penguin, New Delhi, 2010.
2. Bipan Chandra, et. al., *India's Struggle for Independence*, Penguin Books, New Delhi, 2016 (Revised and Updated).
3. Sekhar Bandopadhyay, *From Plassey to Partition and After: A History of Modern India*, Orient BlackSwan, Hyderabad, 2009.

இணையதள வளங்கள்

1. Teachers may expose the students to what led to the UDHR and its content through the following URL https://www.humanrights.com/what-are-human-rights/brief-history/the-united-nations.html

12th_History_Unit_8_TM.indd 126 02-01-2023 16:37:28

A-Z கலைச்சொற்கள்

அரசமைப்பு	**constitution**	fundamental principles by which a state is governed.
முரண்பாடுகள்	**anomalies**	a deviation from the common rule, type, arrangement, or form.
மக்கள்தொகை சார்ந்த	**demographic**	of human population
அடையாளமாக, குறியீடாக	**symbolic**	serving as a symbol of something.
அரசமைப்பு நிர்ணய சபை	**constituent assembly**	is a body of representatives that is elected to formulate or change their country's Constitution
தன்னாட்சி அதிகாரம் கொண்ட	**autonomous**	Self governing; independent.
குறிக்கோள் தீர்மானங்கள்	**Objectives Resolution**	a resolution spelling out the
சுதேச அரசுகள்	**Princely states**	Indian rulers and their States under British rule
மன்னர் மானியம்	**privy purse**	the sum from the public revenues granted to the sovereign as compensation for their loss of kingdom
மொழிவாரி	**linguistic**	relating to language.

இணையச் செயல்பாடு

காலனியத்துக்குப் பிந்தைய இந்தியாவின் மறுகட்டமைப்பு

இச்செயல்பாட்டின் மூலம் நீங்கள் இந்திய அரசமைப்பு உருவானதைப் பற்றி அறியலாம்

படிநிலைகள்

படி 1: கீழ்க்காணும் உரலி/விரைவுக் குறியீட்டைப் பயன்படுத்தி இச்செயல்பாட்டிற்கான இணையப் பக்கத்திற்குச் செல்க.

படி 2 : கீழே சுழற்றி 'Click on Constitution making process' என்பதனை சொடுக்கவும்

படி 3 : 'Stages' என்பதை தேர்வுசெய்து அரசமைப்பு உருவான பக்கத்திற்கு செல்லவும்

உரலி : http://cadindia.clpr.org.in/

W1A6Z

*படங்கள் அடையாளத்திற்கு மட்டுமே.

*தேவையெனில் Flash Player அல்லது Java Script ஐ அனுமதிக்க.

12th_History_Unit_8_TM.indd 127 02-01-2023 16:37:28

www.tntextbooks.in

அலகு 9

ஓர் புதிய சமூக – பொருளாதார ஒழுங்கமைவை எதிர் நோக்குதல்

கற்றலின் நோக்கங்கள்

கீழ்க்காண்பனவற்றை புரிந்து கொள்ளுதல்

- சுதந்திரம் அடைந்தபோது இந்தியாவின் பொருளாதார நிலை
- இந்தியா ஒரு சமதர்ம, மக்களாட்சி நாடாதல் மற்றும் அதன் முக்கியத்துவம்
- வேளாண்மை, கிராமப்பொருளாதாரம் ஆகியவற்றை மேம்படுத்த மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள்
  - அ) நிலச்சீர்திருத்தங்கள் மற்றும் அவற்றின் விளைவுகள் குறித்த மதிப்பீடு
  - ஆ) பசுமைப்புரட்சியின் மூலம் தொழில் நுட்ப வளர்ச்சி
  - இ) ஊரக வளர்ச்சித் திட்டங்கள்
  - ஈ) ஊரக வேலைவாய்ப்புத் திட்டங்கள்
- தொழில்துறை வளர்ச்சி
  - அ) கனரகத் தொழில்களில் முதலீடு செய்வதற்கான உத்தி மற்றும் அடிப்படைக் கோட்பாடுகள்
  - ஆ) தொழில்களை முறைபடுத்தும் கொள்கைகள், சட்டங்கள் வாயிலாக தனியார் தொழில்களையும், நுகர்வையும் கட்டுப்படுத்துவதில் அரசு மற்றும் அரசாங்கத்தின் பங்கு
  - இ) பொதுத்துறையின் பங்கு
  - ஈ) தாராளமயமாக்கலும் அதற்குப் பிந்தைய நிலையும்
- இந்தியாவில் ஐந்தாண்டு திட்டங்கள்
- கல்வி – எழுத்தறிவில் ஏற்பட்ட முன்னேற்றமும் பள்ளிக் கல்வியின் விரிவாக்கமும்
- அறிவியல் மற்றும் தொழில்நுட்பம் – நாட்டில் அறிவியல் ஆராய்ச்சி மற்றும் தொழில்நுட்ப நிறுவனங்களின் வளர்ச்சி

அறிமுகம்

1947இல் இந்தியா விடுதலையடைந்தபோது நாட்டின் பொருளாதாரம் மிகவும் வலுவற்றதாகவும் பல பிரச்சனைகளையும் எதிர்கொண்டது. வறுமையின் அளவு மிக அதிகமாக இருந்தது. மக்கள் தொகையில் ஏறத்தாழ 80 விழுக்காட்டினர் கிராமப்புறங்களில் வாழ்ந்ததோடு தங்கள் வாழ்வாதாரத்திற்காக அவர்கள் வேளாண்மையைச் சார்ந்திருந்தனர். ஆங்கிலேயர் ஆட்சியின்போது கைவினைத் தொழில்கள் பெரும் பாதிப்புகளுக்கு உள்ளாகியதால் திறமைமிக்க கைவினைஞர்கள் பலர் தங்கள் வாழ்வாதாரத்தை இழந்தனர். இதன் விளைவாக வேளாண் துறையில் மக்கள் நெருக்கடி அதிகமானதோடு, வேளாண்மையிலிருந்து பெறப்படும் தனிநபரின் தலாவருமானமும் குறைந்தது. நில உடைமையாளர்கள் மற்றும் பயிரிடுவோர் அல்லது விவசாயிகளுக்குமிடையே நிலவிய நிலப்பிரபுத்துவ பிணைப்பு வேளாண்மையின் இயல்பாக இருந்தது. இவ்விவசாயிகள் நிலவுடைமை வர்க்கத்தாரால் சுரண்டப்பட்டனர்.

12th_History_TM_Unit_9_V2.indd 128 02-01-2023 16:38:03

www.tntextbooks.in

விடுதலைக்கு முந்தைய பதிற்றாண்டுகளில் தொழில்துறை வளர்ச்சியடைந்திருந்தது. ஆனால் அது மிக குறைவானதாகவே இருந்தது. டாட்டா இரும்பு எஃகுத் தொழிற்சாலை மட்டுமே நன்கறியப்பட்ட கனரக தொழிற்சாலையாகும். இதுதவிர பருத்தி நூல்நூற்றல், நெய்தல், வேதிப்பொருட்கள், காகிதம், சர்க்கரை, சணல், சிமெண்ட் ஆகியவை முக்கிய உற்பத்திப் பொருட்களாக இருந்தன. இத்தொழில்களுக்குத் தேவையான இயந்திரங்களைப் பொறியியல் துறை தயாரித்துக் கொடுத்தது. இருந்தபோதிலும் இத்துறை சிறியதாக இருந்ததோடு வேளாண்துறையில் தேவைக்கு அதிகமாக இருந்த தொழிலாளர்களுக்கு குறிப்பிடத்தக்க வேலைவாய்ப்பை வழங்கும் வலுவையும் பெற்றிருக்கவில்லை. உண்மையில் 1950இல் நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் தொழில் துறையின் பங்கு 13 விழுக்காடுகளாகவே இருந்தது. நுகர்வுக்கான உற்பத்திப் பொருட்களில் பெரும்பாலானவை இறக்குமதி செய்யப்பட்டன. இந்தியாவில் இருந்த அந்நிய நாட்டு நிறுவனங்களின் அலுவலகங்கள் சந்தைப்படுத்துதல், விற்பனை ஆகியவற்றில் மட்டுமே ஈடுபட்டதேயன்றி உற்பத்தியில் ஈடுபடவில்லை.

இவ்வாறாக புதிய இந்தியஅரசு பொருளாதாரத்தை வளர்த்தல், வேளாண்துறை நிலைமைகளை மேம்படுத்துதல், உற்பத்தித் துறையை விரிவாக்கம் செய்தல், வேலைவாய்ப்புகளைப் பெருக்குதல், வறுமையைக் குறைத்தல் போன்ற மாபெரும் கடமைகளை எதிர்கொண்டது.

சமதர்ம பாணியிலான சமூகம்

பொருளாதார வளர்ச்சியைப் பல வழிகளில் அடையலாம். சுதந்திரமான செயல்பாட்டு முறையைப் பின்பற்றுவது ஒரு முறையாகும்; அதுவே முதலாளித்துவப் பாதையாகும். மற்றொன்று சமதர்மப் பாதையைப் பின்பற்றுவதாகும். இந்தியா இரண்டாவது பாதையைத் தேர்வுசெய்தது. முந்தைய பாடத்தில் கூறியவாறு, இந்திய அரசியலமைப்பின் முகவுரையில் இந்தியா "ஒரு இறையாண்மை உடைய, சமதர்ம, மக்களாட்சி குடியரசு" என தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. சமதர்ம பாணியிலான வளர்ச்சியின் நோக்கங்கள்: ஏற்றதாழ்வுகளைக் குறைப்பது, சுரண்டலை ஒழிப்பது, செல்வம் ஓரிடத்தில் குவிக்கப்படுவதைத் தடுப்பது ஆகியனவாகும். சமூகநீதியானது அனைத்து குடிமக்களும் கல்வி மற்றும் வேலை வாய்ப்பில் சமவாய்ப்பைப் பெறுவதாகும். இது முக்கியமாக வளர்ச்சி தொடர்பான செயல்பாடுகளில் அரசின் செயல்திறன்மிக்க பங்கேற்பை இன்றியமையாததாக ஆக்குகிறது.


ஜவஹர்லால் நேரு

வேளாண்மையில் சமூக மற்றும் பொருளாதார நீதியானது விவசாயிகளுக்கு அதிகாரம் அளிக்கும் நிலச்சீர்திருத்தச் செயல்பாடுகள் மூலம் அடையப்படுதல் வேண்டும். தொழில்துறையில் அரசு பொதுத்துறையின் கீழ் முக்கியத் தொழில்களை உருவாக்குவதில் செயல்திறன் மிக்க பங்கை வகிக்கும். ஐந்தாண்டு திட்டங்களின் கீழ், இவையனைத்தையும் உள்ளடக்கிய முழுமையான திட்டமிடல் மூலமே சாதிக்க வேண்டும். இச்செயல் திட்டங்கள் சோவியத் ஒன்றியத்தின் விரைவான பொருளாதார வளர்ச்சி அனுபவங்களிலிருந்து பெறப்பட்டன. விரைவான வளர்ச்சியில் சோவியத் ஒன்றியம் பெற்ற வெற்றியை கண்டு நேரு வியந்தார், ஆகவே இச்செயல்பாட்டுத் திட்டத்தின், அடித்தளமாக இருந்த கருத்தியல் 'நேருவின் சமதர்மம்' எனக் குறிப்பிடப்படுகிறது.

வேளாண் கொள்கை

சுதந்திரம் பெற்றபோது இந்தியாவில் வேளாண்மையானது பல பிரச்சனைகளால் சூழப்பெற்றிருந்தது. பொதுவாக உற்பத்தி குறைவானதாக இருந்தது. மொத்த உணவு தானிய உற்பத்தி நாட்டுமக்கள் அனைவருக்கும் உணவளிக்கப் போதுமானதாக இல்லை. இதனால் அதிக அளவிலான உணவு தானியங்களை இறக்குமதி செய்யவேண்டியதிருந்தது. மொத்த மக்கள் தொகையில் 80 விழுக்காட்டினர் தங்கள் வாழ்வாதாரத்திற்கு வேளாண்மையைச் சார்ந்திருந்தனர். இந்நிலை தானாகவே தனிநபரின் வருமானத்தை மிகவும் குறைந்த நிலைக்குக் கொண்டு சென்றது. இத்தகைய சூழல் "மறைமுக வேலையின்மை" என அழைக்கப்படுகிறது. அதாவது மக்களில் பலர் வேறு தொழில்களுக்கு மாறி சென்றுவிட்டாலும் மொத்த உற்பத்தி அளவு மாறாமல் இருப்பதோடு வேளாண் பணிகளைத் தொடர்ந்து செய்ய உபரியாக உள்ள பணியாளர்கள் உண்மையில் தேவையில்லை. ஆகவே அவர்கள் நடைமுறையில் வேலையற்றவர்களே. கிராமப்புற மக்களிடையே வறுமையின் அளவு மிகவும் அதிகமாக இருப்பதோடு அவர்களில் பெரும்பாலானோர் வட்டிக்குக் கடன் கொடுப்போரிடம் பெருமளவு கடன் பட்டிருந்தனர்.

வேளாண்மையின் பின்தங்கிய நிலையை இரு காரணிகளோடு தொடர்புபடுத்திப் பார்க்கலாம். ஒன்று நிறுவன அடிப்படையிலானது, மற்றொன்று தொழில்நுட்பம் சார்ந்தது. நிறுவனம் சார்ந்த

12th_History_TM_Unit_9_V2.indd 129 02-01-2023 16:38:03

காரணிகள் என்பது, நிலவுடைமை வர்க்கத்தை சேர்ந்தோருக்கும் விவசாயத் தொழிலாளர் வர்க்கத்தைச் சேர்ந்தோருக்குமிடையே நிலவிய சமூக பொருளாதார உறவுகளைக் குறிப்பதாகும். தொழில்நுட்பக் காரணிகள் என்பது சிறந்த விதைகள், மேம்படுத்தப்பட்ட வேளாண்மை முறைகள், ரசாயன உரங்களைப் பயன்படுத்துதல், டிராக்டர் மற்றும் அறுவடை இயந்திரம் உள்ளிட்ட நீர்ப்பாசன வசதிகள் ஆகியவற்றோடு தொடர்புடையனவாகும். முதலில் நிறுவனம் சார்ந்த குறைகளைக் களைவது என முடிவெடுத்த அரசு, வேளாண் நிலைமைகளை மேம்படுத்துவதற்காக நிலச்சீர்திருத்தத் திட்ட நடவடிக்கைகளைத் தொடங்கியது. இந்நடவடிக்கைகள் குறித்து அரசு சில அடிப்படை அனுமானங்களைக் கொண்டிருந்தது. அவை: சமூக ரீதியாக ஒரு நியாயமான முறை உருவாக்கப்படும். அதன் பயனாக விவசாயிகள் வலிமை பெறுவதோடு நிலங்களின் உற்பத்தித் திறன் அதிகரிக்கும்.

9.1 நிலச்சீர்திருத்தங்கள் மற்றும் கிராமப்புற மறுசீரமைப்பு

இந்திய அரசியலமைப்பின்படி வேளாண்மை மாநில அரசுகளின் பட்டியலில் இடம் பெற்றுள்ளது. அதன்படி ஒவ்வொரு மாநிலமும் தனித்தனியாக நிலச்சீர்திருத்தங்கள் தொடர்பான சட்டங்களை இயற்றியாக வேண்டும். இவ்வாறு நிலச்சீர்திருத்தத்தின் அடிப்படை வடிவம் அனைத்து மாநிலங்களுக்கும் பொதுவாக இருந்தாலும், சில குறிப்பிட்ட வகைகள் சார்ந்த நிலச்சீர்திருத்தச் சட்டங்கள் இயற்றப்படுவதில் மாநிலங்களிடையே ஒரே சீரான தன்மையில்லை.

S4H75

ஜமீன்தாரிமுறை ஒழிப்பு

நாடு விடுதலை பெறுவதற்கு முன்னரே, ஜமீன்தாரிமுறை ஒழிப்பு இந்திய தேசிய காங்கிரசினுடைய அறிக்கையின் ஒரு பகுதியாக இடம் பெற்றிருந்தது. ஜமீன்தாரி என்றால் என்ன? ஜமீன்தார்கள் என்போர் யார்? ஜமீன்தார் என்பவர் நிலவுடைமையாளர் வகுப்பைச் சேர்ந்தோராவர். ஆங்கிலேயர் ஆட்சியின் போது, நிரந்தர நிலவரித் திட்டத்தின் கீழ் இடைத்தரகர்களாக நியமிக்கப்பட்ட இவர்கள் நிலவரியை அரசுக்குச் செலுத்திவந்தனர். இவர்கள் தங்கள் நிலங்களில் விவசாயம் செய்யும் விவசாயிகளிடமிருந்து குத்தகை வசூல் செய்து அரசுக்கு நிர்ணயம் செய்யப்பட்ட ஒரு தொகையை நிலவரியாக செலுத்தக் கடமைப்பட்டவர்கள் ஆவர். விவசாயிகளிடமிருந்து பெறப்படும் தொகைக்கு சட்டபூர்வமான வரம்பு இல்லையென்பதால் ஜமீன்தார்கள் பொதுவாக விவசாயிகளிடமிருந்து அதிக தொகையினை வசூலித்து அவர்களை வறிய நிலைக்கு உள்ளாக்கினர். பொதுமக்கள் கருத்தின்படி, ஜமீன்தார்கள் எனும் இவ்வகுப்பினர் நீதிநெறிமுறையற்றவர்கள், ஆடம்பர பிரியர்கள், பயனற்றவர்கள், சுயமாக சம்பாதிக்காத வருமானத்தில் வாழ்கின்றவர்கள் என்று கருதப்பட்டனர். அவர்களின் உரிமைகளை ஒழிப்பதும் நிலங்களை மீட்டு விவசாயிகளுக்குத் தருவதும் அரசின் ஒரு முக்கிய குறிக்கோளானது.

ஆங்கிலேயர்களால் மூன்று வகையான வருவாய் வசூல் முறை அறிமுகப்படுத்தப்பட்டது. வங்காளம் மற்றும் வடஇந்தியாவின் பெரும்பகுதிகளில் அறிமுகம் செய்யப்பட்ட நிரந்தர நிலவரித் திட்டத்தின் கீழ், நிலவரியை செலுத்தும் பொறுப்பு ஜமீன்தார்கள் எனப்படும் குத்தகைதாரர்களிடம் விடப்பட்டது. தென்னிந்தியாவில் ரயத்துவாரி (ரயத் என்றால் விவசாயி என்று பொருள்) முறையின் கீழ் விவசாயிகள் நிலவரியை நேரடியாக அரசாங்கத்திடம் செலுத்தினர். மூன்றாவது முறை நாட்டின் ஒரு சில இடங்களில் மட்டும் காணப்பட்ட மகல்வாரி முறை. இதில் நிலவரியைச் செலுத்துவது கிராமத்தின் கூட்டுப் பொறுப்பாகும்.

அரசியலமைப்பு உருவாக்கப்படுவதற்கு முன்பாகவே இந்தியாவின் பல மாகாணங்கள் ஜமீன்தாரி முறையை ஒழிக்கும் சட்டங்களை இயற்றின. 1949இல் உத்தரப்பிரதேசம், மத்திய பிரதேசம், பீகார், சென்னை, அஸ்ஸாம், பம்பாய் ஆகிய பகுதிகளில் இச்சட்டம் அறிமுகம் செய்யப்பட்டது. நிரந்தர நிலவரித் திட்டம் முதன் முதலில் அறிமுகமான வங்காளத்தில் 1955இல்தான் இச்சட்டம் இயற்றப்பட்டது. நிலங்கள் ஜமீன்தார்களிடமிருந்து எடுக்கப்பட்டு குத்தகைதாரர்களிடையே விநியோகம் செய்யப்பட்டது. மாநில சட்டமன்றங்கள் ஜமீன்தார்களுக்கு வழங்கப்படவேண்டிய இழப்பீட்டுத் தொகைகளையும் பரிந்துரை செய்தன.

நாட்டின் பல பகுதிகளைச் சேர்ந்த ஜமீன்தார்கள் ஜமீன் ஒழிப்பு சட்டங்களின் அரசியலமைப்பு சட்டபூர்வத் தன்மையை எதிர்த்து நீதிமன்றத்தை நாடினர். இதன் பின்னர் அரசு இரண்டு அரசியலமைப்புத் திருத்தங்களை நிறைவேற்றியது. 1951இல் முதல் திருத்தமும் 1955இல் நான்காவது திருத்தமும் மேற்கொள்ளப்பட்டன. இதன்படி ஜமீன்தார்கள் தங்களின் நிலங்கள் எடுத்துக் கொள்ளப்பட்டது குறித்தோ இழப்பீடு குறித்தோ கேள்வி கேட்கும் வாய்ப்பு இல்லாமல் போனது.

12th_History_TM_Unit_9_V2.indd 130 02-01-2023 16:38:03

www.tntextbooks.in

முடிவில் ஜமீன்தாரிமுறை ஒழிப்பு 1956இல் நிறைவு பெற்றது. இது மிகவும் வெற்றிகரமான நிலச்சீர்திருத்தமாகும். இதன் மூலம் 30 லட்சம் குடியானவர்களும் குத்தகைதாரர்களும் 62 லட்சம் ஹெக்டேர் நிலங்களுக்கு உரிமையாளர்களாயினர். ஜமீன்தார்களுக்கு உண்மையாக வழங்கப்பட்ட மொத்த இழப்பீட்டுத் தொகை ₹16,420 லட்சங்களாகும். இது வழங்கப்பட வேண்டிய மொத்த இழப்பீட்டுத் தொகையில் நான்கில் ஒரு பங்கேயாகும்.

இருந்தபோதிலும் இச்சீர்திருத்தத்தின் மூலம் திட்டமிடப்பட்ட நோக்கங்களில் ஒரு சிறு பகுதியை மட்டுமே எட்ட முடிந்தது. இந்நிலங்கள் தங்களது "தனிப்பட்ட விவசாயத்தின்" கீழிருந்தன என உரிமைகொண்டாடி ஜமீன்தார்களால் குடியானவர்களை வெளியேற்றிவிட்டு நிலங்களை எடுத்துக்கொள்ள முடிந்தது. இவ்வாறு ஜமீன்தாரி என்னும் அமைப்பு கலைக்கப்பட்டு விட்டாலும் பல நிலவுடைமையாளர்கள் தொடர்ந்து பெருமளவிலான நிலங்களைத் தங்கள்வசம் வைத்திருந்தனர்.

குத்தகை சீர்திருத்தம்

இந்தியாவில் பயிரிடப்படும் மொத்த நிலத்தில் ஏறத்தாழ 50 விழுக்காட்டு நிலங்கள் குத்தகை முறையின் கீழிருந்தன. குத்தகை என்பது குறிப்பிட்ட நிபந்தனைகளின் கீழ் விவசாயிகளால் நில உரிமையாளரிடமிருந்து நிலத்தைக் குத்தகைக்குப் பெறும் ஏற்பாட்டைக் குறிப்பதாகும். அனைத்துக் குத்தகைதாரர்களும் நிலமில்லா விவசாயிகள் அல்லர். பல சிறிய நிலவுடைமையாளர்கள் ஏனைய நிலவுடைமையாளர்களால் குத்தகைக்கு விடப்படும் நிலங்களைக் கூடுதலாகப் பெற்று விவசாயம் செய்யவிரும்பினர். சில பணம்படைத்த நிலவுடைமையாளர்களும் கூடுதலாக நிலங்களைக் குத்தகைக்குப் பெற்று விவசாயம் செய்தனர். பொதுவாகக் குத்தகை என்பது பொருளாக, நிலத்தில் விளைந்த விளைச்சலில் குறிப்பிட்ட பங்காகப் பெறப்பட்டது.

பெரும் நிலஉடமையாளர்கள் நிலத்தை குத்தகைதாரர்களுக்கு குத்தகைக்கு விடுவது என்பதை சாதாரணமாக செய்துவந்தனர். வழக்கமாக குத்தகை ஏற்பாடுகள் நீண்ட காலத்திற்குத் தொடர்ந்தது. நிலத்தின் சொந்தக்காரரால் பெறப்பட்ட குத்தகையானது நிலத்தின் விளைச்சலில் 50 விழுக்காடாகவோ அல்லது அதற்கு அதிகமாகவோ இருந்தது. இது மிக அதிகமாகும். குத்தகை ஒரு வழக்கமான நடவடிக்கையாதலால் ஒப்பந்தங்கள் அரிதாகவே பதிவு செய்யப்பட்டன. இவ்வாறு நீண்டகாலக் குத்தகைதாரர்கள் அனைவருக்கும் குத்தகை உரிமைகள் ஒருபோதும் மறுக்கப்பட்டதில்லை. எனினும் குத்தகைதாரர்கள் குறுகியகால அவகாசத்தில் தாங்கள் வெளியேற்றப்படலாம் என்பதால் அவர்கள் எப்போதும் ஓரளவு நிச்சயமற்ற நிலைமையிலேயே வாழ்ந்தனர்.

குத்தகை சீர்திருத்தமானது இரண்டு குறிக்கோள்களுடன் மேற்கொள்ளப்பட்டது. நில உடைமையாளரிடமிருந்து விவசாயிகளைப் பாதுகாப்பதன் மூலம் அவர்களுக்கு அதிகாரமளிப்பது, மற்றொன்று நிலத்தின் பயன்பாட்டுத்தன்மையை மேம்படுத்துவது, குத்தகைமுறை திறனற்றது எனும் கருத்தின் அடிப்படையில் இரண்டாவது குறிக்கோள் அமைந்தது. நிலத்தை மேம்படுத்துவதற்காக அதில் முதலீடு செய்யவேண்டும் எனும் அக்கறை நில உடைமையாளருக்கு அரிதாகவே ஏற்படும். தங்கள் நிலங்களிலிருந்து வருமானத்தைப் பெறுவதில் மட்டுமே அவர்கள் ஆர்வமாய் இருந்தனர். நிலத்தின்மீது உரிமையில்லாத ஆனால் அதிகக் குத்தகை கொடுத்துக் கொண்டிருக்கும் குத்தகைதாரர்களுக்கும் அவ்வாறான அக்கறையில்லை. நிலத்தில் முதலீடு செய்யும் அளவிற்கு அவர்களிடம் உபரிப் பணமுமில்லை.

குத்தகை சீர்திருத்த சட்டங்கள் மூன்று இலக்குகளைக் குறிவைத்து இயற்றப்பட்டன.

(i) குத்தகையை முறைப்படுத்துவது.

(ii) குத்தகைதாரர்களின் உரிமைகளை பாதுகாப்பது.

(iii) நிலவுடைமையாளர்களிடமிருந்து நிலங்களைப் பறிமுதல் செய்து அவற்றிற்கான உரிமையை குத்தகைதாரர்களுக்கு அளிப்பது.

மாநிலங்களில் குத்தகை முறைப்படுத்தப்பட்டு விளைச்சலில் நான்கில் ஒரு பங்காக இருந்தது, மூன்றில் ஒரு பங்காக மாற்றப்பட்டு சட்டங்கள் இயற்றப்பட்டன. ஆனால் இது ஒருபோதும் வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தப்படவில்லை. வேளாண்துறையில் தொழிலாளர்களின் எண்ணிக்கை உபரியாக இருக்கையில் நிலம் போதுமானதாக இல்லை. அளிப்பைக் காட்டிலும் தேவையின் அளவு அதிகமாக இருந்த சூழலில் விலைகளைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளால் பயனேதுமில்லை. மொத்தத்தில் அலுவலகப் பதிவுகள் எதுவுமில்லாமல் மறைமுகமாக குத்தகைத் தொகை உயர்த்தப்பட்டது.

குத்தகைதாரர்களின் உரிமைகளைப் பாதுகாக்கவும் குத்தகை உரிமையை

12th_History_TM_Unit_9_V2.indd 131 02-01-2023 16:38:03

மரபுரிமையாக்குவதற்கும் இயற்றப்பட்ட சட்டங்களும் வெற்றி பெறவில்லை. குத்தகை ஒப்பந்தங்கள் வாய்மொழியாகவே மேற்கொள்ளப்பட்டதோடு ஆவணங்களிலும் பதிவு செய்யப்படவில்லை. ஆகவே எந்த நேரத்திலும் நில உடைமையாளரால் தான் வெளியேற்றப்படலாம் என்ற அச்சத்திலேயே குத்தகைதாரர் வாழ நேர்ந்தது. குத்தகை சீர்திருத்தச் சட்டங்கள் அறிவிக்கப்பட்டபோது, பெரும்பாலான நிலவுடைமையாளர்கள் நிலங்களைத் திரும்பப் பெற்று 'சொந்தமாக விவசாயம்' செய்வதாகவும் குத்தகைதாரர்கள் தங்கள் நிலங்களில் வேலை செய்யும் தொழிலாளர்களே என்றும் கூறினர். ஒரு முழுமையான நடைமுறைப்படுத்தக்கூடிய நில உச்சவரம்புத் திட்டம் இல்லாத சூழலில் குத்தகை சீர்திருத்தங்கள் பயனற்றுப் போயின.

கேரளா மற்றும் மேற்கு வங்கம் ஆகிய மாநிலங்களில் நிலச்சீர்திருத்த நடவடிக்கைகள் குறிப்பிடத்தக்க வெற்றியடைந்தது. நிலப்பிரபுத்துவம் ஒழிக்கப்பட்டது. குறிப்பிடத்தக்க வகையில் வெற்றியைப் பெற்றாலும் குத்தகைதாரரை நிலத்தின் உரிமையாளராக ஆக்குவதற்கு மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் கலவையான முடிவுகளைக் கொண்டிருந்தன.

நில உச்சவரம்பு

நில உச்சவரம்பு என்பது தனிநபர்கள் அதிகபட்சம் எவ்வளவு நிலங்களைச் சொந்தமாக வைத்துக்கொள்ளலாம் என்பதை குறிப்பிடுகின்றது. இதனை நடைமுறைப்படுத்த 1950களுக்குப் பின்னர் சட்டங்கள் இயற்றப்பட்டன. தமிழ்நாட்டில் முதன்முறையாக 1961இல் நடைமுறைப்படுத்தப்பட்டது. 1972 வரை ஒரு 'நில உரிமையாளர்' எவ்வளவு நிலங்களைச் சொந்தமாக வைத்துக் கொள்ளலாம் என்பதற்கு உச்சவரம்பு நிர்ணயம் செய்யப்பட்டிருந்தது. 1972க்குப் பின்னர் அடிப்படை அலகானது 'குடும்பம்' என மாற்றப்பட்டது. இதனால் நில உரிமையாளர் தனது குடும்ப உறுப்பினர் ஒவ்வொருவரும் ஒரு குறிப்பிட்ட அளவு நிலங்களுக்கு உரிமையுடையவர்கள் என உரிமைகோர முடிந்தது. அந்நிலங்களின் அளவு நில உச்சவரம்பு நிர்ணயம் செய்த நிலத்தின் அளவைவிட மிகக் குறைவாகவே இருந்தது.

நிலத்தின் தரம் ஒரேமாதிரியாக இல்லாததால் நில உச்சவரம்புச் சட்டத்தின் கீழ் நிலங்களின் அளவை நிர்ணயம் செய்வது சிக்கல்கள் நிறைந்த பணியாக இருந்தது. நீர்ப்பாசன நிலங்கள், மானாவரி நிலங்கள், ஒருபோக நிலங்கள் மற்றும் இருபோக நிலங்கள் ஆகியனவற்றை வேறுபடுத்திப் பார்க்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது. அதே சமயத்தில் இச்சட்டத்தில் சிலவகையான நிலங்களுக்கு விதிவிலக்கும் அளிக்கப்படிருந்தன. அவையாவன, பழத்தோட்டங்கள், தோட்டங்கள் (காய்கறிகள், பூக்கள் விளையும் நிலங்கள்), மேய்ச்சல் நிலங்கள், அறக்கொடை, சமயம் சார்ந்த நிறுவனங்களுக்குச் சொந்தமான நிலங்கள், கரும்பு பயிரிடப்படும் பெருந்தோட்டங்கள் ஆகியவை இதில் அடங்கும். மிகப்பெரிய வெற்றியைப் பெற்றிருக்க வேண்டிய இந்த சீர்திருத்தம் நில உச்சவரம்புச் சட்டத்தில் வழங்கப்பட்ட சில விதிவிலக்குகளை சிலர் பயன்படுத்திய விதம் குறித்தும் நில ஆவணங்கள் திருத்தம் குறித்தும் விமர்சனங்கள் எழுந்தன.

இறுதியில் 65 லட்சம் ஹெக்டேர் நிலம் மட்டுமே உபரி நிலமாக கையகப்படுத்தப்பட்டது. இந்நிலம் 55 லட்சம் குத்தகைதாரர்களுக்கு தலா ஒரு ஹெக்டேருக்கு சற்றே கூடுதலான நிலம் விநியோகம் செய்யப்பெற்றது.

வினோபா பாவே

வினோபா பாவே தனது பூமிதான இயக்கத்தின் (Boodhan Movement) மூலம் பெரும்நிலவுடைமையாளர்கள் தங்களிடம் உபரியாக உள்ள நிலங்களைத் தாங்களாவே முன்வந்து வழங்க இணங்க வைத்த முயற்சிகள் மக்களின் கவனத்தைப் பெரிதும் கவர்ந்தது.

ஒட்டுமொத்த மதிப்பீடு

ஒட்டுமொத்தமாகப் பார்க்கையில் நிலச்சீர்திருத்தச் சட்டம் மிகப்பெரும் வெற்றியைப் பெறவில்லை. பொருளாதாரரீதியாக, நில உரிமையையும் பாதுகாப்பையும் பெற்ற வேளாண் குடிமக்களின் கீழ் வேளாண்துறை செழித்தோங்கும் என்ற கனவு கனவாகவே இருந்தது. மேலும் உணரத்தக்க அளவில் செயல்திறனில் முன்னேற்றம் எதுவும் ஏற்படவில்லை. அண்மைக்காலங்களில் ஏற்பட்ட தொழில்நுட்ப வளர்ச்சியினால் வேளாண்மை முன்னேறியுள்ளதால் அதிகம் திறமை வாய்ந்த நிலச் சந்தை ஒன்று செயல்படுவதாகத் தெரிகிறது. அது நீண்டகால வளர்ச்சிக்கு ஏதுவாக இருக்கும்.

சமூகநீதி என்ற பரிமாணத்தில், நிலப் பிரபுத்துவ முறையான ஜமீன்தாரி முறை ஒழிக்கப்பட்டதால் நற்பயனை அளித்துள்ளது. நிலச்சீர்திருத்த நடவடிக்கைகள் விவசாயிகளை, தங்கள் உரிமைகள் குறித்த அரசியல் விழிப்புணர்வு பெற்றவர்களாக மாற்றியதோடு அவர்களை அதிகாரம் மிக்கவர்களாகவும் மாற்றியுள்ளது.

12th_History_TM_Unit_9_V2.indd 132 02-01-2023 16:38:04

9.2 வேளாண்மையின் வளர்ச்சி

பசுமைப் புரட்சி

1960களின் இடைப்பகுதியில் இந்தியாவில் உணவு உற்பத்தியின் நிலை மிகவும் கவலையளிப்பதாக இருந்தது. உணவுப் பொருட்களை இறக்குமதி செய்வதற்காக நாடு மிகப் பெருமளவில் செலவு செய்தது. நிலச்சீர்திருத்தங்கள் விவசாய உற்பத்தியின் மீது எவ்விதத் தாக்கத்தையும் ஏற்படுத்தவில்லை. ஆகவே அரசு வேளாண்மையை மேம்படுத்த தொழில்நுட்பம் எனும் மாற்று வழிகளை நாடின. 1965இல் நீர்ப்பாசன வசதியுள்ள சில தேர்ந்தெடுக்கப் பகுதிகளில் அதிக மகசூலைத் தருகிற (உயர்ரக வீரிய வித்துகள் – HYV) கோதுமை, நெல் ஆகியன பயிரிடப்பட்டன.

மரபுசார்ந்த விவசாயத்தைப் போலல்லாமல், அதிக மகசூலைத் தருகிற விதை ரகங்களுக்கு அதிக நீரும் டிராக்டர் போன்ற இயந்திரங்களும் இரசாயன உரங்கள் மற்றும் பூச்சி கொல்லி மருந்துகள் ஆகியன தேவைப்பட்டன. தொடக்கத்தில் சோதனைமுயற்சித் திட்டங்களில் கிடைத்த வெற்றியின் விளைவாக நாடு முழுவதும் அதிக விளைச்சலைத் தருகின்ற வீரிய விதைகள் பயன்படுத்தப்பட்டன. பொதுவாக இம்முயற்சி பசுமைப் புரட்சி என்றே குறிப்பிடப்படுகிறது. இம்முறையில் இரசாயன உரங்களுக்கும் பூச்சிகொல்லி மருந்துகளுக்குமான தேவை மிகப் பெருமளவுக்கு அதிகரித்தால் அவை தொடர்பான தொழிற்சாலைகளும் வளர்ச்சி பெற்றன.

இந்தியாவில் பசுமைப் புரட்சி

இறுதியாக, இருபது ஆண்டுகளுக்குள்ளாகவே இந்தியா உணவுதானிய உற்பத்தியில் தன்னிறைவு பெற்றது. 1960–61இல் 35 மில்லியன் டன்களாக இருந்த மொத்த அரிசி உற்பத்தி 2011–12இல் 104 மில்லியன் டன்களாக உயர்ந்தது. இதே காலப்பகுதியில் கோதுமை உற்பத்தி 11 மில்லியன் டன்களிலிருந்து 94 மில்லியன் டன்களை எட்டியது. உற்பத்தித்திறனும் அதிகரித்தது. விவசாயிகளிடமிருந்த உபரி உணவு தானியங்களை விலைக்கு வாங்கிய அரசு பெருமளவிலான தானியக் கையிருப்பை ஏற்படுத்தி அவற்றை இந்திய உணவுக் கழகத்திற்குச் (Food Corporation of India – FCI) சொந்தமான சேமிப்புக் கிடங்குகளில் சேமித்து வைத்தது. இவ்வாறு சேமிக்கப்பட்ட உணவு தானியங்கள் பொது விநியோகத் திட்டத்தின் மூலம் (Public Distribution System – PDS) மக்களுக்குக் கிடைக்குமாறு செய்யப்பட்டு மக்களுக்கான உணவு பாதுகாப்பும் உறுதி செய்யப்பட்டது.

மற்றொரு சாதகமான அம்சம் யாதெனில் பால் மற்றும் முட்டை உற்பத்தியானது தொடர்ந்து அதிகரித்தது என்பதேயாகும். இதன் காரணமாக, அனைத்து வருமானக் குழுவினரின் உணவுப் பழக்கம் மேலும் பன்முகப்படுத்தப்பட்டது.

இந்தியாவில் உணவு உற்பத்தியை அதிகரிக்கச் செய்தது என்ற நிலையில் பசுமைப்புரட்சி மிகவும் வெற்றிகரமானதாக இருந்தபோதிலும், அது சில எதிர்மறையான விளைவுகளையும் ஏற்படுத்தியது. முதலாவதாக வசதிவாய்ப்புகள் நிறைந்த பகுதிகள், வசதிவாய்ப்புகள் குறைந்த பகுதிகள் ஆகியவற்றிற்கு இடையிலான ஏற்றதாழ்வுகளை அதிகரித்தது. காலப்போக்கில் விவசாயிகளிடையே அதிகஅளவில் ரசாயன உரங்களையும் பூச்சிக் கொல்லி மருந்துகளையும் பயன்படுத்தும் பழக்கம் ஏற்பட்டதன் விளைவாகச் சூழலியல் பிரச்சனைகள் தோன்றலாயின. நாட்டின் பல பகுதிகளில் மீண்டும் இயற்கை விவசாயத்திற்குத் திரும்பும் மனநிலை ஏற்பட்டுள்ளது. ஒரு குறிப்பிட்ட விலை கொடுத்த பின்னரே வளர்ச்சி ஏற்படுகிறது என்பது கற்றுக் கொள்ள வேண்டிய பாடமாகும்.

ஊரக வளர்ச்சித் திட்டங்கள் (RDP)

1970களில் தொழில் துறையிலும் வேளாண்மையிலும் வளர்ச்சி ஏற்பட்ட பின்னரும் வறுமை குறையவில்லை. வறுமையெனும் பிரச்சனை வளர்ச்சியால் தீர்த்துவிடும் என்ற அனுமானம் நிறைவேறவில்லை. மேலும் ஒட்டுமொத்த மக்கள் தொகையில் ஏறத்தாழ சரிபாதியினர் வறுமைக்கோட்டுக்குக் கீழே வாழ்வதாகக் கண்டறியப்பட்டது (ஒரு மனிதர் உயிர் வாழ்வதற்கு தேவைப்படும் கலோரிகளை வழங்கும் உணவுப்பண்டங்களை வாங்குவதற்கு அவர் எவ்வளவு செலவு செய்கிறார் என்பதே வறுமைக் கோட்டுக்கான வரையறை). வறுமைக் கோட்டுக்கு கீழுள்ளவர்களின் விழுக்காடு உயரவில்லை, ஆனால் மக்கள் தொகை பெருகுவதால் வறுமைக் கோட்டுக்கு கீழ் வாழும் மக்களின் எண்ணிக்கை தொடர்ந்து அதிகரித்த வண்ணமிருக்கிறது.

www.tntextbooks.in

கிராமப்பகுதிகள், நகரப்பகுதிகள் ஆகிய இரண்டிலும் வறுமை நிலவுகிறது. ஆனால் மக்கள் தொகையில் நான்கில் மூன்று பகுதியினர் கிராமப்புறங்களில் வாழ்வதால் கிராமப்புற வறுமை மிகவும்நெருக்கடிமிகுந்தபிரச்சனையாய்இருக்கிறது, எனவே உடனடி கவனம் தேவைப்படுகிறது. சில குறிப்பிட்ட சமூகக் குழுக்களான சிறு மற்றும் குறு விவசாயிகள், நிலமற்ற தொழிலாளர்கள் மற்றும் வளம்குன்றிய நிலங்களிலிருந்த ஒடுக்கப்பட்ட பிரிவினர், நீர்ப்பாசன வசதிகள் மற்றும் வளமான நிலமில்லா பகுதி மக்கள் ஆகியோரிடையே வறுமையின் அளவு மிக அதிகமாக உள்ளது.

கிராமப்புற வறுமையைப் போக்குவதற்காக அரசாங்கத்தால் முழுவீச்சில் ஊரக வளர்ச்சித் திட்டங்கள் அறிமுகம் செய்யப்பட்டன. சமூக வளர்ச்சித் திட்டங்கள், பஞ்சாயத்துராஜ் போன்ற உள்ளாட்சி நிறுவனங்களைப் புதுப்பிப்பது, சிறு குறு விவசாயிகளைப் போன்ற குறிப்பிட்ட குழுக்களை இலக்காகக் கொண்ட திட்டங்கள் ஆகியவை இதில் அடங்கும். கிராமப்புறக் குடும்பங்கள் விவசாயத்திலிருந்து பெறும் வருமானத்தை அதிகப்படுத்துவதற்கு வருமானத்திற்கான வேறு வழிகளை அமைத்துக் கொடுப்பதில் அதிக அக்கறை செலுத்தப்பட்டது. அவ்வாறான இரண்டு பெரும் திட்டங்கள் மிக விரிவாக கீழே விளக்கப்பட்டுள்ளன.

ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம் (IRDP) 1980 – 1999

1980இல் 'ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம்' என்ற பெயரில் ஓர் ஒருமுகப்படுத்தப்பட்ட திட்டம் அறிமுகம் செய்யப்பட்டது. கிராமப்புற குடும்பங்களின் பொருளாதார நிலையை உயர்த்துவதற்கு அவர்களுக்கு சில சொத்துக்களை வழங்குவது இத்திட்டத்தின் நோக்கமாகும். இதன் மூலம் அவர்கள் வறுமையிலிருந்து வெளியே வர இயலும். அது நிலத்தை மேம்படுத்துவதற்காகவோ, பால் உற்பத்திக்காகப் பசுக்கள் அல்லது ஆடுகளை வழங்குதல் அல்லது சிறிய கடைகள் வைக்கவோ அல்லது வேறு வணிகத் தொடர்பான வியாபாரங்கள் செய்வதற்கான உதவியாகவோ இருக்கலாம். நாட்டிலிருந்த 5011 ஊராட்சி ஒன்றியங்களிலும் இத்திட்டம் அறிமுகம் செய்யப்பட்டது. இதன் இலக்கு ஐந்து ஆண்டுகளில் (1980–1985), ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் ஆண்டொன்றுக்கு 600 குடும்பங்களுக்கு உதவிகள் வழங்குவது, இந்த உதவிகள் 15 மில்லியன் குடும்பங்களுக்கு சென்றடைவதை நோக்கமாகக் கொண்டிருந்தது.

இவ்வாறு வழங்கப்பட்ட மூலதன சொத்துகளுக்கான செலவு, மானியங்கள் மற்றும் கடன்கள் (மத்திய மற்றும் மாநில நிர்வாகம் தங்களுக்குள் சமமாகப் பகிர்ந்துகொள்கின்றன) ஆகியவை மூலம் ஈடு செய்யப்பட்டது. உதவியைப் பெறும் குடும்பத்தின் பொருளாதாரநிலைக்கு ஏற்றவாறு மானியங்களும் மாறுபட்டன. அவை சிறு விவசாயிகளுக்கு 25 விழுக்காடாகவும் குறு விவசாயிகள் மற்றும் விவசாயத் தொழிலாளர்களுக்கு 33.3 விழுக்காடாகவும், பழங்குடியினர் குடும்பங்களுக்கு 50 விழுக்காடாகவும் இருந்தன. தேர்ந்தெடுக்கப்பட்ட விவசாயக் குடும்பங்களுக்கு வங்கிகள் கடன் கொடுத்ததன் வழியாக சொத்துக்கான மூலதனச் செலவின் மீதி சரி செய்யப்பட்டது. 1999ஆம் ஆண்டு வரையில் 53.5 மில்லியன் குடும்பங்களை இத்திட்டம் சென்றடைந்தது.

விவசாயக் குடும்பங்களுக்கு வழங்கப்பட்ட சொத்துக்களில் 50 விழுக்காடு கால்நடைகளாகவும் (பால் உற்பத்தி) 25 விழுக்காடு விவசாயம் அல்லாத வேறு பணிகளுக்காகவும், 15 விழுக்காடு சிறிய அளவிலான நீர்ப்பாசனப் பணிகளுக்காகவும் விநியோகம் செய்யப்பட்டன. ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் பணிகள் பல பொருளாதார நிபுணர்களாலும், அரசு அமைப்புகளாலும் மதிப்பிடப்பட்டன. இத்திட்டத்தின் இறுதி விளைவைப் பற்றி பல ஆய்வுகள் நடத்தப்பட்டன.

பயனாளிகளைத் தெரிவு செய்வதில் தெளிவான நடைமுறையில்லாதது, ஒவ்வொரு குடும்பத்திற்குமான முதலீடு குறைவாக இருந்தது, திட்டத்தை நடைமுறைப்படுத்திய காலத்திற்குப் பிந்தைய தணிக்கையில்லாதது, பிராந்திய அளவில் வறுமைக்கோட்டிற்கு மேலே கொண்டுவருவதற்கான பயனாளிகளை அடையாளம் காணுவதில் ஏற்றதாழ்வு ஆகியவை முக்கிய பிரச்சனைகளாக இருந்தன.

இத்திட்டத்தால் அடையப்பட்ட குறிப்பிடத்தக்க வெற்றியைக் கருத்தில் கொண்டு கிராமப்புற ஏழைகளின் சுய வேலைவாய்ப்பை மேம்படுத்துவதற்கான ஒரு திட்டமாக 1999இல் இது மறுசீரமைக்கப்பட்டது.

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதிச் சட்டம், 2005 (MGNREGA)

இந்தியாவில் தொடர்ந்து பல ஆண்டுகளாக மேற்கொள்ளப்பட்ட தீவிர முயற்சிகளின் காரணமாக, வறுமைக் கோட்டுக்குக் கீழே வாழும் குடும்பங்களின் எண்ணிக்கை கணிசமாகக் குறைந்துள்ளது. அண்மைக் காலங்களில் விவசாயம் அல்லாத வேலைவாய்ப்புகளைப் பெருக்குவதன் மூலமாகவே

12th_History_TM_Unit_9_V2.indd 134 02-01-2023 16:38:04

www.tntextbooks.in

கிராமப்புற வறுமையை ஒழிக்கமுடியும் என்பது பரவலாக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. கடந்த பல ஆண்டுகளில் புதிய வேலை வாய்ப்புகளை உருவாக்குவதற்காகப் பல திட்டங்கள் அறிமுகம் செய்யப்பட்டன. அவைகளில் பல வேலைவாய்ப்பு உறுதித் திட்டத்துடன் இணைக்கப்பட்டுள்ளன. நம் நாட்டில் இன்றையஅளவில் இத்துறையில் செயல்படும் மிகப்பெரிய திட்டம் இதுவேயாகும்.



தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதிச் சட்டமானது (பின்னர் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டம் என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டது), கிராமப்புற ஏழைக் குடும்பங்களின் வாழ்வாதாரத்தை பாதுகாக்கும் நோக்கத்துடன் 2005இல் இயற்றப்பட்டது. ஒவ்வொரு குடும்பத்தைச் சேர்ந்த, வயதுவந்த உறுப்பினர்களுக்கு தனித்திறனற்ற உடல் உழைப்பு, வேலையைச் செய்ய விருப்பம் உடையவர்களுக்கு, ஒவ்வொரு ஆண்டும் 100 நாட்களுக்கு ஊதியத்துடன் கூடிய வேலையைக் கொடுப்பதன் மூலமே இதை வெற்றிகரமாகச் செய்தது. ஒவ்வொரு வருடமும் மூன்று மாதங்களுக்கு வேளாண் பணிகள் இல்லாத காலங்களில் வேலை எதுவும் கிடைக்காமலிருக்கும் கிராமப்புறம் சார்ந்த ஏழைக் குடும்பங்களுக்கு இத்திட்டம் ஓரளவு உதவுவதாக இருக்கும். இம்முயற்சியின் கீழ் மேற்கொள்ளப்படும் பணிகள் கிராமப்புறங்களில் சாலைகள், கால்வாய்கள், சிறிய நீர்ப்பாசன வேலைகள், மரபு சார்ந்த நீர் நிலைகளை மீட்டெடுத்தல் போன்ற நீண்ட காலம் பயன்தரும் செல்வங்களை உருவாக்கும்.

இதற்கு முந்தைய, இலக்கு நிர்ணயம் செய்யப்பட்ட ஊரக வளர்ச்சித் திட்டங்கள் வறுமைக் கோட்டிற்குக் கீழ்வாழும் குடும்பங்களைக் கண்டறிதலைஅடிப்படையாகக்கொண்டிருந்ததோடு தகுதிபெறாத குடும்பங்களும் தேர்வு செய்யப்பட்டதாக பல புகார்கள் எழுந்தன. மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதிச் சட்டம் அனைத்து கிராமப்புற குடும்பங்களுக்கும் பொருந்தக் கூடியதாகும். ஏனெனில் இது சுய இலக்கு கொண்ட ஒரு திட்டம் என்பதோடு கல்வித்தகுதி உடையவர்களோ, வசதியான பின்புலத்தைக் கொண்டவர்களோ குறைந்தபட்ச ஊதியத்திற்கு உடல் உழைப்பு வேலை செய்ய முன்வர மாட்டார்கள்.

இதற்கு முந்தைய வேலைவாய்ப்புகளை உருவாக்கும் திட்டங்களில் கிராமப்புற ஏழை மக்களுக்கு வேலையைக் கேட்டுப்பெறும் உரிமை தரப்படவில்லை. தங்களுக்கு வேலை வேண்டும் எனக் கேட்பதற்கு அவர்களுக்குச் சட்டபூர்வமான உரிமை தரப்பட்டதே இச்சட்டத்தின் குறிப்பிடத்தக்க அம்சமாகும். இத்திட்டம் கிராம பஞ்சாயத்துக்களால் நடைமுறைப்படுத்தப்படுகிறது. வேலைவேண்டுவோர் விண்ணப்பிக்க வேண்டும். அவர்களுக்கு வேலைக்கான அட்டை வழங்கப்படும். 15 நாட்களுக்குள்ளாக உள்ளாட்சித்துறை நிர்வாகிகள் அவர்களுக்கு வேலை வழங்க வேண்டும். இல்லையெனில் விண்ணப்பதாரர் வேலையில்லாதோருக்கான உதவித்தொகையைப் பெறுவதற்கு உரிமை உடையவராகிவிடுவார். வேலை நடைபெறும் இடமானது விண்ணப்பதாரரின் வீட்டிலிருந்து 5 கிலோ மீட்டர் தொலைவிற்குள் இருத்தல் வேண்டும்.

இப்பணியில் ஒப்பந்ததாரர்களை ஈடுபடுத்தக் கூடாது. இடைத்தரகர்கள் தங்களுக்கான லாபத்தை வேலை செய்வோரின் ஊதியத்திலிருந்து எடுத்துக் கொள்வதை தவிர்ப்பதற்காகவே இந்த ஏற்பாடு. வழங்கப்படும் ஊதியத்திற்கும் முதலீடு செய்யப்பட்ட மூலதனத்திற்குமான விகிதம் 60:40 ஆகும். வேலை செய்வோரில் மூன்றில் ஒரு பகுதியினர் பெண்களாக இருத்தல் வேண்டும். ஆண்கள் பெண்கள் இருவருக்கும் ஒரே மாதிரியான ஊதியம் வழங்கப்பட வேண்டும்.

மக்கள் நலத்திட்டங்களை முறையாக நடைமுறைப்படுத்துவது குறித்து ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. நேர்மறையான அம்சங்கள் என எடுத்துக் கொண்டால், தொழிலாளியின் பேரம்பேசும் சக்தி அதிகரித்ததால் வேளாண் வேலைகளுக்கான ஊதியம் உயர்ந்தது. விவசாய வேலைகள் இல்லாத காலப்பகுதியிலும் வறட்சியின் போதும் விவசாயத் தொழிலாளர்கள் நகரங்களுக்குக் குடிபெயர்வது இதனால் குறைக்கப்பட்டது. பெண்கள் பெருமளவில் இவ்வேலைகளில் பங்கேற்றுக் கொண்டிருப்பதும், இத்திட்டம் அவர்களை அதிகாரமிக்கவர்களாக மாற்றியிருப்பதும் இத்திட்டத்தின் மிக முக்கியப் பயன்களாகும்.

வெளிப்படைத்தன்மை மற்றும் சிக்கலற்ற பரிமாற்றத்தை உறுதிசெய்யும்பொருட்டு, தொழிலாளர்களுக்கான ஊதியம் அவர்களுடைய வங்கி அல்லது அஞ்சலகக் கணக்கில் நேரடியாகச் செலுத்தப்படுகிறது. குடிமைச் சமூகஅமைப்புகள், தன்னார்வ நிறுவனங்கள் ஆகியவற்றின் ஈடுபாட்டினாலும் அரசியல் பிரதிநிதிகளின்

12th_History_TM_Unit_9_V2.indd 135 02-01-2023 16:38:04

ஈடுபாட்டினாலும் குடிமைப் பணியாளர்களின் அதிகப் பொறுப்பு மிகுந்த மனப்பான்மையினாலும், தமிழ்நாடு, ஆந்திரா, ராஜஸ்தான் போன்ற மாநிலங்களில் இத்திட்டம் மிகச் சிறப்பாகச் செயல்படுகிறது. திட்டத்தின் செயல்பாட்டுத் திறன் 97 விழுக்காடு உயர்ந்துள்ளது.

இத்திட்டத்தின் கீழ் 2006 முதல் 2012 வரையிலுமான காலப்பகுதியில் ₹ 1,10,000 கோடிகள் நேரடியாக ஊதியமாக விநியோகம் செய்யப்பட்டுள்ளது. 1200 கோடி மனித வேலை நாட்கள் உருவாக்கப்பட்டுள்ளது. பல பின்னடைவுகள் இருந்தபோதிலும் கிராமப்புற ஏழைகள் மற்றும் குடிமை சமூகத்தினிடையே இருந்த உயர்ந்த அளவிலான விழிப்புணர்ச்சியினாலும் இத்திட்டத்தின் செயல்பாடு முன்னேற்றம் பெற்றுள்ளது. இத்திட்டம் மிகப்பெரும் அளவிலான செலவினத்தைக் கொண்டிருந்ததன் விளைவாக நிதிப்பற்றாக்குறை உயர்ந்து விட்டதாக சில விமர்சகர்கள் நினைத்தாலும் இத்திட்டம் பிரபலமானதாகவே உள்ளது. ஒவ்வொரு ஆண்டும், கிராமப்புறங்களில் நான்கில் ஒரு குடும்பம் இத்திட்டத்தில் பங்கேற்கிறது.

9.3 தொழிலக வளர்ச்சி

பொருளாதார வளர்ச்சிக்கு விரைவான தொழில்துறை வளர்ச்சியை ஊக்குவிக்கும் யோசனைக்கு இந்தியா உறுதியளித்தது. பல்வேறு வழிகளின் மூலம் வளர்ச்சியை அடைய முடியும். இந்தியா போன்ற அதிக மக்கள் தொகை கொண்ட நாடுகளில், பலவகை கச்சாப் பொருட்கள் கிடைக்கின்ற அல்லது விளைகின்ற, அதிக உழைப்பு மிகுந்த செயலாக்க தொழில்களும் தொழில்துறை வளர்ச்சிக்கு வழிவகுத்தது. இதற்கு மாற்றான காந்தியின் மாதிரி கிராமவளர்ச்சிக்கும் முக்கியத்துவம் கொடுத்தது. குடிசைத் தொழில்களின் மூலம் நுகர்வுப் பொருட்கள் உற்பத்தி செய்யப்பட்டால் அது கிராமப்புற வறுமையையும் வேலையின்மையும் அகற்றும் எனும் கருத்தை முன்வைத்தது.

ஆனால் அரசு பல்வகைப்பட்ட தொழில்களின் முன்னேற்றத்திற்காக மிகப்பெரிய அளவிலான கனரகத் தொழில்களை உருவாக்குவதில் கவனம் செலுத்தும் நேருவின் மாதிரியைக் கைக்கொண்டது. "சமதர்ம சமூகம்" எனும் அடிப்படைக் கொள்கைக்கு ஏற்றவாறு அரசுக்குச் சொந்தமான தொழிற்சாலைகள் அடங்கிய தொழில்துறையை வளர்ப்பதில் அரசு பெரும்பங்கு வகிக்கும். எஃகு உற்பத்திக்காகவும், இடைப்பட்ட பொருட்களான இயந்திரங்கள், வேதியியல் பொருட்கள், உரங்கள் போன்றவற்றிற்காகவுமே அரசு கனரகத் தொழில்களின் வளர்ச்சிக்கு முக்கியத்துவமளித்தது. சுரண்டும் தன்மை கொண்டதாகவும், மிகுந்த லாப நோக்கம் கொண்டதாகவும் ஒரு சிறிய முதலாளிகள் வர்க்கத்திற்கு மட்டும் பயனளிக்கக் கூடியதாக உள்ள தனியார் முதலீட்டைக் கட்டுப்படுத்த வேண்டும் என்பதே இவ்வளர்ச்சி மாதிரியின் சமூக நோக்கமாகும்.

தொழிற்கொள்கை

இந்நோக்கங்களை மேம்படுத்துவதற்காக தொடர்ச்சியான தொழிற்கொள்கை அறிவிப்புகள் ஏற்றுக்கொள்ளப்பட்டன. முதல் கொள்கை அறிக்கை 1948இல் அறிவிக்கப்பட்டது. இது தொழிலகங்களை நான்கு வகைகளாகப் பிரித்தது.

1. போர்த்துறை சார்ந்த தொழிலகங்கள் அரசின் முற்றுரிமைகளாக இருக்கும் (அணுசக்தி, ரயில்வே, ஆயுதங்கள், ராணுவத் தளவாடங்கள்).
2. தேசிய முக்கியத்துவம் வாய்ந்த 18 தொழிலகங்கள் (கனரக இயந்திரங்கள், உரம், வீரியமிக்க ரசாயனங்கள், போர்க்கருவிகள், மற்றவை) அரசின் கட்டுப்பாட்டின் கீழ் இருக்கும்.
3. பொதுத்துறை மற்றும் தனியார்துறை ஆகிய இரண்டிலும் இடம்பெறும் தொழிலகங்கள்.
4. தனியார்துறையைச் சேர்ந்த தொழிலகங்கள்.

1956இல் நிறைவேற்றப்பட்ட தொழில் கொள்கைத் தீர்மானமே மிகவும் உறுதியான கொள்கை அறிக்கையாகும். அது தொழிலகங்களை மூன்று வகைகளாகப் பிரித்தது. அட்டவணை 'அ' வில் இடம்பெற்ற தொழிலகங்கள் அரசின் முற்றுரிமையின் கீழிருந்தன; அட்டவணை 'ஆ' வில் இடம் பெற்ற தொழிலகங்கள் அரசு புதிய அலகுகளைத் தொடங்கலாம், ஆனால் தனியார் துறையினரும் தங்கள் அலகுகளை அமைக்கலாம் அல்லது விரிவாக்கலாம்; மீதமுள்ள தொழிலகங்கள் அட்டவணை 'இ' யில் இடம் பெற்றன.

1951இல் இயற்றப்பட்ட தொழில் வளர்ச்சி மற்றும் முறைப்படுத்துதல் சட்டம் தனியார் துறையைக் கட்டுப்படுத்துவதற்கு முக்கியமான கருவியாகும். இச்சட்டம் அரசிடமிருந்து உரிமம் பெறாமல் புதிய தொழிற்சாலைகள் நிறுவப்படக்கூடாது எனவும், இருக்கின்ற தொழிற்சாலைகளின் திறன் அதிகரிக்கப்படக் கூடாதெனவும் கட்டுப்பாடுகளை விதித்தது.

1973இல் வெளியிடப்பட்ட கொள்கை அறிக்கை, வளர்ச்சியில் காணப்படும் பிராந்திய

12th_History_TM_Unit_9_V2.indd 136 02-01-2023 16:38:04

ஏற்றத்தாழ்வுகளைப் போக்கும் நோக்கத்துடன் கிராமப்புறங்களிலும் பின்தங்கிய பகுதிகளிலும் செயல்படக்கூடிய பெரும் தொழில் நிறுவனங்களை ஊக்குவித்தது. 1977இல் வெளியான கொள்கை அறிக்கையானது சிறிது காலமே ஆட்சியிலிருந்த ஜனதா அரசாங்கத்தால் வடிவமைக்கப்பட்டது. அது ஊரக, கிராமப்புறங்களை மேம்படுத்துவதோடு சிறு தொழில்களின் வளர்ச்சியையும் குறிக்கோளாகக் கொண்டிருந்தது.

1980இல் காங்கிரஸ் அரசால் வெளியிடப்பட்ட கொள்கை அறிக்கையும் சமச்சீரான வளர்ச்சியைப் பேணுவதை இலக்காகக் கொண்டிருந்தது. மற்றபடி இந்த அறிக்கைகள் அனைத்தும் அரசுக்குச் சொந்தமான ஒரு வலுவான பொதுத்துறை மற்றும் தனியார் துறை மற்றும் குறிப்பாகப் பெரும் வணிக நிறுவனங்களின் மீதான கட்டுப்பாட்டைத் தொடர்ந்தன.

சந்தைப் பொருளாதாரத்தில் ஊடுருவிய பிற தலையீடுகளும் இருந்தன. தனியார் துறையில் தயாரிக்கப்படும் சிமெண்ட் போன்ற இடு பொருட்கள் பங்கீட்டு முறையின் (Ration) கீழ் கொண்டுவரப்பட்டன. தனிநபர்கள் வீடு கட்டுவதற்கும் அனுமதி பெற்றாக வேண்டியதிருந்தது. உரிமம் வழங்கல் கொள்கையின் கீழ் நுகர்பொருட்களின் உற்பத்தி கடுமையாகக் கட்டுப்படுத்தப்பட்டது. இது சமூகத்தில் வசதிமிக்கவர்கள், வசதியற்றவர்கள் ஆகியோரிடையே நுகர்விலுள்ள ஏற்றத்தாழ்வுகளை சமன்செய்யும் கருத்தியலின் வெளிப்பாடேயாகும். அதே சமயம் அரிதான மூலப்பொருட்களான எஃகு, சிமெண்ட் போன்றவை நீண்டகாலப் பொருளாதார வளர்ச்சிக்கு தேவைப்படும் போர்த்துறை சார்ந்த தொழில்களுக்குப் பயன்படுத்தப்படுவதை உறுதி செய்தது.

பல முக்கியத் தொழில்களும் சேவைகளும் தேசியமயமாக்கப்பட்டன. நிலக்கரிச் சுரங்கங்கள், பெட்ரோலிய நிறுவனங்கள், வங்கி மற்றும் ஆயுள் காப்பீட்டுச் சேவைகள் ஆகியன இதில் அடங்கும். அண்மைக் காலங்களில்தான் தனியாரும் இவ்வகையான நடவடிக்கைகளில் நுழைய அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

பொதுத்துறை

1951இல் இந்தியாவில் ஐந்து பொதுத்துறை நிறுவனங்களே இருந்தன. 2012இல் இந்த எண்ணிக்கை 225ஆக உயர்ந்தது. 1951இல் ₹29 கோடியாக இருந்த மூலதன முதலீடு 2012இல் 7.3 லட்சம் கோடிகளாக உயர்ந்தது. கனரகத் தொழிலில் பொதுத்துறை நிறுவனங்கள் உருவாக்கப்படுவதை மீண்டும் இரு முக்கிய அம்சங்கள் தீர்மானித்தன. முதலாவதாக கருத்தியல் நிலையில், அரசாங்கம் ஒரு சமதர்ம வளர்ச்சிக்கு உறுதியளித்தது, இது பொருளாதாரத்தின் மீது அரசின் அதிகளவிலான கட்டுப்பாட்டை உள்ளடக்கியிருந்தது. ஆனால் இரண்டாவது நடைமுறை சார்ந்தது, நடைமுறையில் கனரகத் தொழில்களை உருவாக்கவேண்டிய பொறுப்பை அரசே ஏற்க வேண்டியதிருந்தது. ஏனெனில் அவற்றை உருவாக்க மிக அதிகமான முதலீடு தேவைப்பட்டது. மேலும் இத்திட்டங்கள் உற்பத்தியைத் தொடங்குவதற்கு பல ஆண்டுகள் கால அவகாசம் எடுத்துக்கொள்ளும், அதனால் இவைகள் "நீண்டகட்டுமான காலத்திட்டங்கள்" (long gestation) என்றழைக்கப்பட்டன.

1950களில் இப்படியான முதலீடுகளைச் செய்யும் அளவுக்கு வாய்ப்பு வசதியோ, விருப்பமோ தனியார் துறையிடமில்லை. பிலாய் (சத்தீஸ்கர்), ரூர்கேலா (ஒடிசா), துர்காபூர் (மேற்கு வங்காளம்), பொக்காரோ (ஜார்கண்ட்) ஆகிய இடங்களில் எஃகுத் தொழிற்சாலைகளும், 1950களில் இங்கிலாந்து, ஜெர்மனி மற்றும் ரஷ்யா போன்ற நாடுகளின் ஒத்துழைப்பு மற்றும் தொழில்நுட்ப உதவியோடு பாரத மிகு மின் நிறுவனம் (Bharat Heavy Electricals Limited – BHEL), ஹிந்துஸ்தான் மெஷின் டூல்ஸ் போன்ற பொறியியல் தொழிற்சாலைகளும் நிறுவப்பெற்றன.

எஃகு ஆலை, பொக்காரோ

தொழில்துறை மற்றும் பொருளாதார வளர்ச்சியில் பிராந்திய ஏற்றதாழ்வுகளைக் குறைப்பதற்காக மூலப்பொருள் கிடைக்குமிடங்களுக்கு அருகில் இருக்க வேண்டிய தொழில்நிறுவனங்கள் பின்தங்கிய பகுதிகளில் அமைக்கப்பட்டன. பாரத மிகு மின் நிறுவனம் முதலில் போபாலில் நிறுவப்பட்டது. பின்னர் திருச்சிராப்பள்ளி, ஹைதராபாத், ஹரித்துவார் ஆகிய இடங்களிலும் நிறுவப்பெற்றது. இவ்வாறு எஃகுத் தொழிற்சாலைகள், ஒரிசா, பீகார் மற்றும் மேற்கு வங்காளம் ஆகிய மாநிலங்களின் பின்தங்கிய பகுதிகளில் நிறுவப்பெற்றன. பொதுத்துறை

12th_History_TM_Unit_9_V2.indd 137 02-01-2023 16:38:04

நிறுவனங்கள் தேசியக் கருவூலத்திற்கு தனது பங்களிப்பை நல்கியதால் சிறுகச்சிறுக சேமிக்கப்பட்ட அவைகளின் லாபத்தில் ஒரு பகுதி மத்தியஅரசுக்குச் சென்றது. இவ்வாறு பொதுத்துறையின் வளர்ச்சியானது நாட்டை தொழிற்திறன் கொண்டதாக உருவாக்கியதோடு பல சமூகப் பொருளாதாரத் தேவைகளையும் நிறைவு செய்தது.

பாரத மிகு மின் நிறுவனம், திருச்சிராப்பள்ளி

பொதுத்துறை தொழில் நிறுவனங்களில் ஏற்பட்ட நெருக்கடிகள்

1991இல் பொதுத்துறை சார்ந்த தொழில் நிறுவனங்கள் கடுமையான பிரச்சனைகளைச் சந்தித்துக் கொண்டிருப்பது தெளிவானது. ஒட்டுமொத்தமாக அவர்கள் லாபத்தைக் காண்பிக்கும் போது, லாபத்தில் கிட்டத்தட்ட பாதி பெட்ரோலிய நிறுவனங்களால் வழங்கப்பட்டது. பல தொழிற்சாலைகள் தொடர்ந்து நஷ்டங்களை ஏற்படுத்தின. பிரச்சனையின் ஒரு பகுதி போர்த்துறைசாராத துறைகளான சுற்றுலா, தங்கும் விடுதிகள், நுகர்வுப் பொருட்கள் (எடுத்துக்காட்டாக 1970களில் தொலைக்காட்சிப் பெட்டிகள் பொதுத்துறை நிறுவனங்களால் மட்டுமே தயாரிக்கப்பட்டன) போன்ற துறைகளிலும் பொதுத்துறை விரிவடைவதால் ஏற்படுகிறது.

பொதுத்துறை நிறுவனங்களின் செயல்பாட்டுக்கு பல்வேறு காரணிகளும் பங்களிப்பைச் செய்தன. நிறுவனங்கள் அமைக்கப்படவேண்டிய இடங்கள் குறித்து மாறுபட்ட கருத்துகள் எழுந்தன. கட்டுமானப் பணிகளை முடிப்பதில் ஏற்படும் தாமதத்தால் செலவுகள் அதிகமாகி அதிக மூலதன முதலீட்டை ஏற்படுத்தின. நிர்வாகச் செலவுகள் அனைத்து நேரங்களிலும் கட்டுக்கடங்கி இருப்பதில்லை, பொதுத்துறை நிறுவனங்களால் உற்பத்தி செய்யப்படும் இடைநிலை பொருட்கள் தனியார் துறையில் உள்ளீடுகளாகப் பயன்படுத்தப்படும்போது அர்த்தமற்றதாகிறது. பொதுத்துறை நிறுவனங்களில் தேவைக்கு அதிகமானோர் பணியமர்த்தப்பட்டனர். கனரகத் தொழிற்சாலைகளின் தொழில் நுட்பத்திற்கு அவ்வளவு அதிகமான தொழிலாளர்கள் தேவையில்லை. இதனால் நிறுவனங்களை இயக்குவதற்கான செலவு அதிகரித்தது. இப்பிரச்சனைகள் அனைத்தையும் அங்கீகரித்த அரசு 1991இல் நஷ்டங்களை ஏற்படுத்தக்கூடிய மற்றும் போர்த்துறைசாராத நிறுவனங்களில் செய்யப்பட்ட முதலீடுகளைத் திரும்பப்பெறும் திட்டத்தைத் (Disinvestment Programme) தொடங்கியது.

அனைத்து குறைபாடுகளுக்கு மத்தியிலும், கனரகத் தொழில்களை நிறுவுவதன் மூலமும் நீண்டகாலத் தொழில்துறைத் திறனை வளர்ப்பதில் கவனம் செலுத்துவதன் மூலமும் தொழில்மயமாக்கும் செயல்திட்டமானது இந்தியாவை நவீன, தொழில்துறை பொருளாதார நாடாக மாற்றுவதில் வெற்றிகண்டுள்ளது.

தாராளமயமாக்கம் – தொழில் கொள்கை அறிக்கை 1991

இறுதியாக 1991இல் இந்திய அரசு தன்னுடைய தொழில் கொள்கையில் ஒரு மாற்றத்தை அறிவித்தது. அது உரிமங்கள் வழங்கப்படுவதிலுள்ள கட்டுப்பாடுகளை நீக்குவதாகவும், தாராளமயமாக்கப்பட்ட பொருளாதாரத்தை நோக்கி நகர்வதாகவும், தனியார்துறையின் அதிகமான பங்கேற்பை அனுமதிப்பதாகவும் அமைந்தது. செயல்படாத தொழிற்சாலைகளை மூடுதல், முதலீட்டைத் திரும்பப்பெறும் கொள்கை ஆகியவற்றின் மூலம் பொதுத்துறையின் பங்கு குறைக்கப்பட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. இதனால் நாட்டில் பொருளாதாரம் குறித்த மனப்போக்கில் குறிப்பாக நுகர்வோரின் கண்ணோட்டத்தில் மிகப்பெரும் மாற்றம் உருவாயிற்று. பொருட்களும் சேவைகளும் கிடைப்பதன் மூலம், வளர்ந்து வரும் மத்தியதர வர்க்கம் ஆசைப்பட்ட உயர்ந்த வாழ்க்கைத்தரம் கிட்டியது என்பது மட்டுமல்லாமல் இப்போது குறைந்த வருமானம் கொண்ட குடும்பங்களாலும் கூட அப்பொருட்களை வாங்க முடிந்தது.

நேர்மறை கோணத்தில், தாராளமயமானது இந்தியாவை மிக அதிகமாக அந்நிய நாடுகளின் முதலீட்டினை ஈர்க்கும் இடமாக மாற்றியுள்ளது. மாநில அரசுகள் தொழில் செய்வதை எளிதாக்கும் வகையில் கட்டுப்பாடுகளைத் தளர்த்துவதாக விளம்பரம் செய்வதில் ஆர்வமாக உள்ளன. இவையனைத்தும் ஒரு செல்வச்செழிப்பான பொதுச்சூழலை ஏற்படுத்தியுள்ளது. ஒட்டுமொத்தப் பொருளாதாரம் குறித்த புள்ளி விவரங்களில் அது பிரதிபலிக்கின்றது.

எதிர்மறை விளைவுகளெனில் தாராளமயமாக்கலும் உலகமயமாக்கலும் அதிக

12th_History_TM_Unit_9_V2.indd 138 02-01-2023 16:38:04

ஊதியம் பெறுவோர்க்கும் குறைந்த ஊதியம் பெறுவோர்க்கும் இடையிலான ஊதிய ஏற்றதாழ்வுகளை அதிகரித்துள்ளது. பெரும் நிறுவனங்களில் ஊதிய உச்ச வரம்புகள் நீக்கப்பட்டுவிட்டதால், அந்நிறுவனங்களில் ஊதியம்பெறும் அதிகாரிகளுக்கும் குறைந்த ஊதியம் பெறுவோர்க்குமான ஏற்றத்தாழ்வுகள் விரிவடைந்துள்ளன. முறைசார்ந்த தொழில்களில் புதிய வேலைகளுக்கான வாய்ப்பு மிகக் குறைவாகவே உள்ளது. அப்படியான வாய்ப்புகள் முறைசாராத் தொழில்களில் அதிகம் உருவாகின்றன. அத்துடன் இவ்விரு துறைகளுக்குமிடையிலான ஏற்ற தாழ்வுகளும் அதிகரித்துவிட்டன.

இருந்தபோதிலும் தாராளமயமாக்கலின் அளவானது, சுதந்திரப் பொருளாதாரத்தை ஆதரிப்போர் மற்றும் இடதுசாரிப் பொருளாதார நிபுணர்கள் ஆகிய இருசாராருக்கும் மகிழ்ச்சியளிக்கவில்லை. முன்னேற்றப் பாதையில் இன்னமும் இருந்து கொண்டிருக்கும் தடைகளையும் ஏற்றதாழ்வையும் ஒழிப்பதற்காகச் சந்தை சக்திகளுக்கு மேலும் சுதந்திரம் வழங்கப்பட வேண்டுமென சுதந்திரப் பொருளாதாரத்தை ஆதரிப்போர் கூறுகின்றனர். தனியாருக்கு சுதந்திரம் வழங்கியதன் மூலம், சமூக நீதியையும் மக்கள் நலத்தையும் உறுதிப்படுத்தி, முன்னேற்ற வேண்டிய தனது பொறுப்பிலிருந்து அரசு விலகிக்கொண்டதாக சில பொருளாதார நிபுணர்கள் கவலை தெரிவித்தனர்.

9.4 ஐந்தாண்டு திட்டங்கள்

ஐந்தாண்டு திட்டங்களின் மூலமாக வளர்ச்சிக்குத் திட்டமிடுவதில் இந்தியா சோவியத் யூனியனின் முன்னுதாரணத்தைப் பின்பற்றியது. பொருளாதாரத்தை வளர்ப்பதற்கான திட்டங்களை வடிவமைப்பதற்காக 1950இல் திட்டக் குழு (Planning Commission) நிறுவப்பெற்றது. ஒவ்வொரு திட்டமும் பொருளாதாரத்தின் செயல்பாடுகளையும், எதிர்கால வளர்ச்சிக்கு கிடைக்கப்பெறும் மூலவளங்களையும் மதிப்பீடு செய்தது. அரசாங்கத்தின் முன்னுரிமைகளுக்கு ஏற்றவாறு இலக்குகள் நிர்ணயம் செய்யப்பட்டன. வேளாண்மை, தொழிலகம், ஆற்றல், சமூகத்துறைகள் மற்றும் தொழில்நுட்பம் மற்றும் முழுமையான பொருளாதார வளர்ச்சியை குறிக்கோளாகக் கொண்டு பல்வேறு துறைகளுக்கு நிதி ஒதுக்கீடுகள் செய்யப்பட்டன. தன்னிறைவுப் பொருளாதாரத்தை உருவாக்குவது திட்டமிடுதலின் அடிப்படை நோக்கங்களில் ஒன்றாக இருந்தது.

1951–56 வரையிலான காலப்பகுதி முதலாவது ஐந்தாண்டு திட்டத்திற்கானது. இதுவரையிலும் பன்னிரண்டு ஐந்தாண்டு திட்டங்கள் நிறைவேறியுள்ளன. இவை தவிர 1966–1969 வரை மூன்று ஓராண்டு திட்டங்களும் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன.

ஒரு திட்டத்திற்காக முன்மொழியப்பட்ட முதலீடு, பொதுத்துறை, தனியார்துறை ஆகிய இரு துறைகளுக்குமான முதலீடுகளைக் கணக்கில் எடுத்துக்கொண்டது. முதலாவது ஐந்தாண்டு திட்டத்திற்காக முன்மொழியப்பட்ட மொத்த முதலீடு ₹3870 கோடிகளாகும். பதினொன்றாவது ஐந்தாண்டு திட்டத்தில் இது 36.44 லட்சம் கோடிகளைத் தாண்டியது. அறுபது வருடங்களுக்குக் குறைவான காலப் பகுதியில் இந்தியப் பொருளாதாரம் எந்த அளவிற்கு வளர்ந்துள்ளது என்பதை இது சுட்டிக்காட்டுகிறது. இரண்டாவது மற்றும் ஆறாவது ஐந்தாண்டு திட்டங்களுக்கும் இடைப்பட்ட காலத்தில் மொத்தத் திட்ட முதலீடுகளில் பொதுத்துறையின் பங்கு 60 முதல் 70 விழுக்காடு வரை இருந்தது. அதன் பின்னர் பொதுத்துறையின் பங்கு படிப்படியாகக் குறைந்து மொத்தத் திட்ட முதலீட்டில் தனியார் துறை ஆதிக்கம் செலுத்தத் தொடங்கியது.

முதலாவது ஐந்தாண்டு திட்டம் (1951–56) வேளாண்மையை வளர்ப்பதிலும் குறிப்பாக வேளாண் உற்பத்தியிலும் கவனம் செலுத்தியது. மொத்த முதலீட்டில் 31 விழுக்காடுகள் வேளாண்மைக்கும் நீர்பாசனத்திற்கும் ஒதுக்கப்பட்டது. இதற்குப் பின்னர் தொழில் துறைக்கு முக்கியத்துவம் வழங்கப்பட்டது. மொத்த முதலீட்டில் வேளாண்மைக்கான பங்கு 20 விழுக்காட்டிற்கும் 24 விழுக்காட்டிற்கும் இடையே இருந்தது. பதினோறாவது ஐந்தாண்டு திட்டத்தில் இது 20 விழுக்காட்டிற்கும் குறைவாக இருந்தது. பொதுவாக மகலனோபிஸ் திட்டம் என அறியப்பட்ட இரண்டாவது ஐந்தாண்டு திட்டம் (1956–61) பொருளாதார முன்னேற்றத்தை அடைவதற்கு கனரகத் தொழிற்சாலைகளுக்கு முக்கியத்துவம் வழங்கியது. முதலாவது திட்டத்தில் 6 விழுக்காடாக இருந்த தொழில் துறையின் பங்கு இரண்டாவது திட்டத்திற்குப் பின்னர் 24 விழுக்காடாக உயர்ந்தது. ஆனால் இப்பங்கு ஆறாவது திட்டகாலம் முதல் குறைந்துகொண்டு வருகிறது. ஒருவேளை பொதுத்துறையில் செய்யப்படவேண்டிய

P.C. மகலனோபிஸ்

12th_History_TM_Unit_9_V2.indd 139 02-01-2023 16:38:05

முக்கிய முதலீடுகள் நிறைவு பெற்றிருக்கலாம். எரிபொருள் மின்சக்திக்கான முதலீட்டு ஒதுக்கீடு முதல் நான்கு திட்டங்களில் மிகக் குறைவாக இருந்தது. இதனால் நாட்டில் பெருமளவு மின்சாரத் தட்டுப்பாடு ஏற்பட்டது.

முதலிரண்டு திட்டங்களும் ஓரளவிற்கு மிதமான 4 விழுக்காடு வளர்ச்சியை இலக்காகக் கொண்டிருந்தன. இதைப் பொருளாதார நிபுணர்கள் "இந்து வளர்ச்சி விகிதம்" என அழைத்தனர். இந்த வளர்ச்சி விகிதங்கள் அடையப்பட்டதால் அவை வெற்றிபெற்ற திட்டங்களாகக் கருதப்பட்டன. பின் வந்த திட்டங்களில் பல்வேறு காரணங்களால் நிர்ணயிக்கப்பட்ட இலக்குகளை அடைய இயலவில்லை. நான்காவது திட்டத்திலிருந்து (1969–74) வறுமை ஒழிப்பிற்கு முக்கியத்துவம் வழங்கப்பட்டது. இதனால் திட்டமிடும் செயல்பாட்டில், சமூக நோக்கங்களும் இணைக்கப்பட்டன. ஆறாவது திட்டகாலத்திலிருந்து நிர்ணயிக்கப்பட்ட வளர்ச்சி இலக்குகள் அடையப்பட்டன.

எட்டாவது திட்ட காலத்தில் (1992–97) பொருளாதாரம் தாராளமயமாக்கப்பட்டது. அப்போதிருந்து வளர்ச்சி விகிதமானது 7 விழுக்காடுகளுக்கு அதிகமாகவேயுள்ளது. (ஒன்பதாவது திட்ட காலத்தில் ஏற்பட்ட சுணக்கம் நீங்கலாக) அனைவரையும் உள்ளடக்கிய, நியாயத்துடன் கூடிய, நீண்டகால வளர்ச்சிக்கு அதிக முக்கியத்துவம் வழங்கப்பட்டு வருகிறது.

இந்தியாவில் ஐந்தாண்டு திட்டங்களின் செயல்பாடுகள் குறித்து நேர்மறை மற்றும் எதிர்மறையான மதிப்பீடுகளும் உள்ளன.

சாதனைகள்

1. பொருளாதாரத்தை விரிவுபடுத்துதல்
2. தேசிய வருமானத்திலும் தனிநபர் வருமானத்திலும் குறிப்பிடத்தகுந்த வளர்ச்சி
3. தொழிற்சாலைகளின் உற்பத்தி அதிகரிப்பு
4. வேளாண்மையில் நவீன இடுபொருட்களைப் பயன்படுத்துவது அதிகரித்ததுடன் வேளாண் உற்பத்தியும் அதிகரித்தது
5. அதிகஅளவில் பன்முகப்படுத்தப்பட்டப் பொருளாதாரம்

> **உங்களுக்குத் தெரியுமா?**
>
> 1951ஆம் ஆண்டு முதல் 2017ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில் பன்னிரெண்டு ஐந்தாண்டு திட்டங்கள் செயல்படுத்தபட்டுள்ளன. இதில் பன்னிரெண்டாவது ஐந்தாண்டு திட்டமே (2012–2017) இறுதியான திட்டமாகும். 2015இல் திட்டக் குழு கலைக்கப்பட்டு அதற்குப் பதிலாக நிதி ஆயோக் (NITI Aayog) எனும் அமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது.

9.5 கல்வி, அறிவியல் மற்றும் தொழில்நுட்பம்

கல்வி

கல்வி மற்றும் சுகாதாரம் ஆகியவை சமூகத் துறையில் இடம் பெற்றிருப்பதோடு கல்வியின் நிலையும் சுகாதாரக் குறிப்பான்களுமே (Indicators) ஒரு நாட்டின் சமூகவளர்ச்சியை மதிப்பிடுவதற்கான அளவுகோல்களாக உள்ளன. இந்தியாவில் 1951இல் 18.3 விழுக்காட்டிலிருந்த எழுத்தறிவு நிலை 2011இல் 74 விழுக்காடாக உயர்ந்துள்ளது. ஆண்களில் 82 விழுக்காட்டினரும் பெண்களில் 65 விழுக்காட்டினரும் எழுத்தறிவு பெற்றுள்ளனர். ஒப்பிட்டுப் பார்க்கையில் எழுத்தறிவில் பெண்கள் பின்தங்கியிருந்தனர். தொடக்கக் கல்வி முதல் உயர்நிலைப் பள்ளி வரையிலான பள்ளிகளின் எண்ணிக்கை பெருமளவில் அதிகரித்தது. மேற்படிப்பு மையங்களின் எண்ணிக்கையும் பெருகிற்று. 2014–15இல் நாட்டில் 12.72 லட்சம் தொடக்க, உயர்தொடக்கப் பள்ளிகளும் 2.45 லட்சம் இடைநிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளும், 38,498 கல்லூரிகளும், 43 மத்தியப் பல்கலைக்கழகங்களும், 316 மாநிலப் பல்கலைக்கழகங்களும் 122 நிகர்நிலைப் பல்கலைக்கழகங்களும் 181 மாநில தனியார் பல்கலைக்கழகங்களும் செயல்பட்டன.

நகர மற்றும் கிராமப்புறங்களில் இடைநிற்கும் குழந்தைகள் பெரும்பாலும் ஏழைக் குடும்பங்களைச் சேர்ந்தோராகவே இருந்தனர். குறிப்பாகப் பெண் குழந்தைகளே இடைநிற்றலில் அதிகமாக இருந்தனர். சேர்க்கை விகிதத்திலும், இடைநிற்றல் விகிதத்திலும் மிகப்பெரும் பிராந்திய வேறுபாடுகள் காணப்பட்டன. ஆகவே பின்தங்கிய மாநிலங்களிலும், பகுதிகளிலும் பள்ளிக் கல்வியின் நிலை மோசமாகவே இருந்தது. இடைநிற்றல் பிரச்சனையை தீர்க்க அரசாங்கத்தினால், அனைவருக்கும் கல்வித் திட்டம் (சர்வ சிக்ஷா அபியான்–SSA), அனைவருக்கும் இடைநிலைக் கல்வித் திட்டம் (ராஷ்ட்ரிய மத்யமிக் சிக்ஷா அபியான்–RMSA) மற்றும் அண்மையில் ஒருங்கிணைக்கப்பட்ட திட்டமான ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி திட்டம் (சமக்ர சிக்ஷா அபியான்) போன்றவற்றின் மூலம் பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

12th_History_TM_Unit_9_V2.indd 140 02-01-2023 16:38:05

www.tntextbooks.in

அறிவியல் தொழில்நுட்பம்

இந்தியா, அறிவியல் ஆய்வு மற்றும் தொழில்நுட்ப நிறுவனங்களை வளர்த்தெடுப்பதில் பல முன்னேற்றங்களை எட்டியுள்ளது. விடுதலைக்கு முன்னர் இந்தியாவிலிருந்த ஒரேயொரு அறிவியல் ஆய்வு நிறுவனம் 1909இல் J.R.D. டாட்டா மற்றும் மைசூர் மகாராஜா ஆகியோரின் நிதியுதவியில் பெங்களூருவில் அமைக்கப்பட்ட இந்திய அறிவியல் நிறுவனம் (Indian Instititute of Science – IISc) மட்டுமேயாகும்.

இந்திய அறிவியல் நிறுவனம், பெங்களூரு

1945இல் முனைவர் ஹோமி J. பாபா என்பாரின் முன்னெடுப்பில், டாட்டா என்பவரின் நிதியுதவியுடன் டாட்டா அடிப்படை ஆராய்ச்சி நிறுவனம் (Tata Institute of Fundamental Research – TIFR) நிறுவப்பெற்றது. கணிதம் மற்றும் அறிவியல் ஆகிய துறைகளில் ஆய்வுகளை ஊக்குவிப்பதற்காக இது அமைக்கப்பட்டது. புனேயில் அமைக்கப்பட்ட தேசிய வேதியியல் ஆய்வகம் (National Chemical Laboratory), புதுதில்லியில் அமைக்கப்பட்ட தேசிய இயற்பியல் ஆய்வகம் (National Physics Laboratory) ஆகியவை நாடு விடுதலை பெற்ற காலத்தில் முதன்முதலாக அமைக்கப்பட்டவை ஆகும். அது முதலாக அறிவியல் துறையின் வானியற்பியல் (astrophysics), மண்ணியல் (geology) / நிலவியல் சார் இயற்பியல் (geo–physics), உயிரணு மற்றும் மூலக்கூறு உயிரியல் (cellular and molecular biology), கணித அறிவியல்கள் (mathamethical sciences) மற்றும் பல பிரிவுகளில் ஆய்வினை மேற்கொள்ளும் நிறுவனங்களின் எண்ணிக்கை தொடர்ந்து பெருகின.

அறிவியல் மற்றும் தொழிலக ஆய்வு மன்றம் (Council of Scientific and Industrial Research – CSIR) எனும் ஒரு குடையின் கீழ் பெரும்பாலான ஆய்வு நிறுவனங்கள் இயங்கி வருகின்றன. இவ்வமைப்பு (CSIR) பயன்பாட்டு அறிவியல் (Applied sciences) களங்களான இயந்திரங்கள், மருந்துகள், விமானங்கள் ஆகியவை குறித்த மேம்பட்ட ஆய்வினை முன்னெடுக்கிறது.

அணுசக்தி ஆணையமானது அணு அறிவியலின் வளர்ச்சிக்கு மைய முகமையாகத் (nodal agency) திகழ்கிறது. அணுசக்தி உற்பத்தி அணு ஆயுத உற்பத்தி ஆகிய இரண்டின் மீதும் கவனம் செலுத்தும். அது போர்த்திறம் சார்ந்த முக்கியத்துவம் பெற்றதாகும். அறிவியல் சார்ந்த ஆய்வுகளுக்காக பல நிறுவனங்களுக்கு அணுசக்தி ஆணையம் நிதியளிக்கிறது.

ஆய்வும் வளர்ச்சியும் குறிப்பிட்டுச் சொல்லும்படி விரிவடைந்திருக்கும் மற்றொரு துறை வேளாண்மை ஆகும். இத்துறையில் நடைபெறும் ஆய்வுகளை இந்திய வேளாண் ஆய்வுக் கழகம் (Indian Council of Agricultural Research – ICAR) ஒருங்கிணைக்கிறது. இதன் ஆய்வுகள், அடிப்படை வேளாண்மை குறித்து மட்டுமல்லாமல், துணை நடவடிக்கைகளாக மீன்வளர்ப்பு, வனங்கள், பால்வளம், தாவர மரபியல், உயிரி–தொழில்நுட்பம், பல்வேறு பயிர் வகைகளான நெல், உருளைக்கிழங்கு, கிழங்கு வகைகள், பழங்கள் மற்றும் பூச்சிகளைக் கட்டுப்படுத்துதல் ஆகிய நடவடிக்கைகளையும் இவ்வமைப்பு மேற்கொள்கிறது. வேளாண் பல்கலைக்கழகங்களும் கல்வி கற்பித்தல், வேளாண் நடைமுறைகள் குறித்த ஆய்வு ஆகியவற்றில் செயலூக்கத்துடன் ஈடுபட்டுள்ளன. இந்தியாவில் 67 வேளாண்மைப் பல்கலைக்கழகங்கள் உள்ளன. இவற்றில் 3 பல்கலைக்கழகங்கள் தமிழகத்தில் அமைந்துள்ளன.

IIT, சென்னை

இந்தியத் தொழில்நுட்ப நிறுவனங்கள் (Indian Institute of Technology – IITs) பொறியியலின் வெவ்வேறு பிரிவுகளுக்காக நிறுவப்பெற்ற சிறப்பு நிறுவனங்களாகும். முதல் IIT கரக்பூரில் நிறுவப்பெற்றது. தொடர்ந்து டெல்லி, பம்பாய், கான்பூர் மற்றும் சென்னை ஆகிய இடங்களில்

12th_History_TM_Unit_9_V2.indd 141 02-01-2023 16:38:06

உருவாக்கப்பட்டன. தற்சமயம் நமது நாட்டில் 23 IITகள் செயல்படுகின்றது. இவையல்லாமல் 31 தேசியத் தொழில் நுட்ப நிறுவனங்களும் (National Institute of Technology – NIT), 25 இந்திய தகவல் தொழில் நுட்ப நிறுவனங்களும் (Indian Institutes of Information Technology – IIIT) செயல்பட்டு வருகின்றன.

இத்தகைய முன்னேற்றங்கள் ஏற்பட்டிருந்தாலும் இந்தியாவில் அறிவியல் ஆய்வானது வளர்ந்த நாடுகள் மற்றும் சீனா அடைந்துள்ள முன்னேற்றங்களை எட்டிப்பிடிக்க இன்னும் நீண்டதூரம் பயணம் செய்தாக வேண்டுமென்பது பொதுவான கருத்தாகும். நாட்டில் அறிவியல் ஆய்வு நிறுவனங்கள் பல இருந்தும் கோட்பாட்டுக் கருத்துக் களத்தில் ஆய்வுப் பங்களிப்பு ஏமாற்றத்தை அளிப்பதாகவும் அரிதாகவும் உள்ளது.

பாடச் சுருக்கம்

- இந்தியா சுதந்திரம் பெற்ற நேரத்தில் பொருளாதார ரீதியில் வளர்ச்சி பெறாத நாடகவே இருந்தது. அரசியலமைப்பை வடிவமைத்தவர்கள் நாட்டை ஒரு சமதர்ம மக்களாட்சி நாடாக வளர்த்தெடுக்க முடிவு செய்தனர். எனவே சமூக நீதியை உறுதிப்படுத்துவதே அரசாங்கத்தின் முக்கியமான முன்னுரிமை வழங்கவேண்டிய பணியாயிற்று.
- வேளாண்துறையின் நிலையை முன்னேற்றுவதற்கு நடவடிக்கைகள் எடுப்பது அரசின் முன்னுரிமை தரப்பட வேண்டிய முதல் பணிகளில் ஒன்றாயிற்று. ஜமீன்தாரிமுறை ஒழிப்பு, குத்தகை சீர்திருத்தம், நில உச்சவரம்பு அமலாக்கம் ஆகியவை மூலம் நிறுவன ரீதியிலான பலவீனங்களை அகற்றும் சீர்திருத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. இவை ஓரளவு வெற்றி பெற்றாலும் உண்மையிலேயே வேளாண்துறை நிலைமைகளை முன்னேற்றிவிடவில்லை.
- 1960களில் கடுமையான உணவுதானியப் பற்றாக்குறை ஏற்பட்டது. இதனால் அரசாங்கம் வேளாண்மையை வளர்ப்பதற்காகத் தொழில்நுட்ப மாற்றுப்பாதைக்கு மாறியது. இதனால் அதிக விளைச்சலைத் தரும் வீரிய வித்துக்கள் அறிமுகம் செய்யப்பட்டன. நீர்ப்பாசனம், ரசாயன உரங்கள், பூச்சி கொல்லி மருந்துகள் ஆகியவற்றில் முதலீடுகள் செய்யப்பட்டன. இம்முயற்சிகள் இந்தியாவில் உணவுப் பாதுகாப்பை உறுதி செய்திருந்தாலும் சுற்றுச் சூழலின் மீது எதிர்மறையான தாக்கத்தை ஏற்படுத்தியது.
- ஏழ்மையில் வாழும் மக்களின் விகிதம், குறிப்பாகக் கிராமப் புறங்களில் குறையவில்லை. கிராமப்புற வறுமையைக் கையாள்வதில் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம் (IRDP) ஒரு கூட்டு முயற்சியாக இருந்தது. கிராமப்புற வறுமையின் அளவு குறையவில்லை, மக்கள்தொகைப் பெருக்கத்தின் காரணமாக வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழும் நபர்களின் எண்ணிக்கையும் குறையவில்லை.
- கிராமப்புறக் குடும்பங்களுக்கு சட்டபூர்வமாக வேலையைக் கேட்டுப்பெறும் உரிமையைக் கொடுத்த மகாத்மா காந்தி ஊரக வேலை வாய்ப்பு உறுதிச் சட்டம் தற்போது வேலை வாய்ப்புகளை உருவாக்கும் மிகப்பெரிய திட்டமாகும்.
- பிரதமர் நேரு ஒரு சமதர்ம சமூகத்தை உருவாக்குவதில் உறுதியாக இருந்தார். கனரக இயந்திரத் தொழிற்சாலைகளில் முதலீடு செய்வதன் மூலம் தொழில் வளர்ச்சியை அரசு வழி நடத்தும் என அறிவித்தார். மேலும் வளர்ச்சி குறித்த நீண்ட கால நோக்கங்களை உறுதிப் படுத்தவும் தனியார் தொழில் நிறுவனங்களின் முதலாளிகளின் சுரண்டலைத் தடுக்கும் பொருட்டும் அரசு தனியார் நிறுவனங்களைக் கட்டுப்படுத்தும் என அறிவித்தார்.
- அதிகமாக முதலீடு தேவைப்படும் எஃகு, கனரகப் பொறியியல் இயந்திரங்கள், கருவிகள் ஆகியவற்றை உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகள் நாட்டின் பல பகுதிகளில் நிறுவப்பெற்றன. இச்செயல்திட்டம் இந்தியாவை தொழில்ரீதியாகவளர்ச்சிஅடைந்தபொருளாதாரம் எனும் நிலைக்கு முன்னோக்கித் தள்ளியது. இருந்தபோதும் பல்வகைப் பொருள் உற்பத்தி சேவைகள் ஆகியவற்றை உள்ளடக்கிய பொதுத்துறையின் அதீத விரிவாக்கம் பெரும் நஷ்டங்களுக்கு இட்டுச் சென்றது. இந்நிலை முடிவில் அரசைப் பொருளாதாரத்தை தாராளமயமாக்கச் செய்ததோடு, உரிமங்கள் வழங்கும் முறைகளையும், கட்டுப்பாடுகளையும் கைவிடச் செய்ததோடு பொருளாதாரத்தை வழிநடத்த சுதந்திரச் சந்தை சக்திகளை அனுமதிக்கச் செய்தது.
- ஐந்தாண்டு திட்டங்களை வடிவமைக்கத் திட்டக்குழு உருவாக்கப்பட்டது. அது நாட்டின் மூலவளங்களை மதிப்பீடு செய்து, பொருளாதாரத்தின் ஒட்டு மொத்த வளர்ச்சிக்கும் பொருளாதாரத்தின் துணை துறைகளின் வளர்ச்சிக்குமான இலக்குகளை நிர்ணயித்தது. எழுத்தறிவிலும், நாட்டில் பள்ளிகளும் கல்லூரிகளும் நிறுவப்படுவதிலும் கணிசமான முன்னேற்றம் ஏற்பட்டது.

12th_History_TM_Unit_9_V2.indd 142 02-01-2023 16:38:06

- அறிவியல் ஆய்வு நிறுவனங்களின் (அடிப்படை மற்றும் பயன்பாடு) எண்ணிக்கை போற்றுதலுக்குரிய வண்ணம் அதிகரித்துள்ளது. இதுபோன்று பல்வேறு பொறியியல் பிரிவுகள் சார்ந்த கல்வியை வழங்குவதற்காக நாட்டின் பல பகுதிகளில் தொழில்நுட்ப நிறுவனங்கள் நிறுவப் பெற்றுள்ளன. இவைகளுக்கும் மேலாக தனியார் பொறியியல் கல்லூரிகளின் எண்ணிக்கை பல்கிப் பெருகியுள்ளது.

பயிற்சி

75NPS

I. சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்.

1. பின்வருவனவற்றை காலவரிசைப்படுத்துக .

(i) ஜமீன்தாரி முறை ஒழிப்புச் சட்டங்கள்

(ii) அதிக விளைச்சலைத் தரும் வீரிய ரக விதைகளின் பயன்பாடு

(iii) தமிழ்நாட்டின் முதல் நில உச்சவரம்புச் சட்டம்

கீழே கொடுக்கப்பட்டுள்ள குறியீடுகளிலிருந்து விடையினைத் தேர்வு செய்க.

(அ) ii, i, iii (ஆ) i, iii, ii

(இ) iii, ii, i (ஈ) ii, iii, i

2. இந்திய அரசாங்கம் __________ வகையான மேம்பாட்டிற்காக உறுதி பூண்டுள்ளது.

(அ) முதலாளித்துவ (ஆ) சமதர்ம

(இ) தெய்வீக (ஈ) தொழிற்சாலை

3. இந்திய அரசியலமைப்பில் முதலாவது திருத்தம் எப்போது மேற்கொள்ளப்பட்டது?

(அ) 1951 (ஆ) 1952 (இ) 1976 (ஈ) 1978

4. கொடுக்கப்பட்டுள்ள விடைக் குறிப்புகளைக் கொண்டு பின்வருவனவற்றைப் பொருத்தி சரியான விடையைத் தேர்வு செய்க.

(அ) தொழில் மேம்பாடு கொள்கைத் தீர்மானம்	-	1. 1951–56
(ஆ) இந்திய அறிவியல் நிறுவனம்	-	2. இரண்டாவது ஐந்தாண்டு திட்டம்
(இ) மகலனோபிஸ்	-	3. 1909
(ஈ) முதலாவது ஐந்தாண்டு திட்டம்	-	4. 1956

	அ	ஆ	இ	ஈ
(அ)	1	2	3	4
(ஆ)	3	1	4	2
(இ)	4	3	2	1
(ஈ)	4	2	3	1

5. நில சீர்த்திருத்தச் சட்டம் தமிழ்நாட்டில் இரண்டாவது முறையாக எப்போது நடைமுறைப்படுத்தப்பட்டது?

(அ) 1961 (ஆ) 1972

(இ) 1976 (ஈ) 1978

6. பூமிதான இயக்கத்தைத் தொடங்கியவர்

(அ) ராம் மனோகர் லோகியா

(ஆ) ஜெயப்பிரகாஷ் நாராயணன்

(இ) வினோபா பாவே

(ஈ) சுந்தர் லால் பகுகுணா

7. **கூற்று:** ஜமீன்தாரிமுறை ஒழிப்பு அதன் முக்கிய நோக்கத்தில் ஒரு பகுதியையே எட்டியது.

காரணம்: பல நிலச்சுவான்தாரர்கள் குத்தகைதாரர்களை வெளியேற்றி நிலம் அவர்களது சுயகட்டுப்பாட்டின் கீழ் வேளாண்மையில் உள்ளதாக உரிமை கோரினர்.

(அ) கூற்று மற்றும் காரணம் சரி. காரணம் கூற்றை விளக்குகிறது.

(ஆ) கூற்று மற்றும் காரணம் சரி. காரணம் கூற்றை விளக்கவில்லை.

(இ) கூற்று சரி. காரணம் தவறு.

(ஈ) கூற்று தவறு. காரணம் சரி.

8. தொழில் வளர்ச்சி மற்றும் ஒழுங்குமுறைச் சட்டம் எந்த ஆண்டு நிறைவேற்றப்பட்டது?

(அ) 1951 (ஆ) 1961

(இ) 1971 (ஈ) 1972

9. மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதியளிப்புச் சட்டம் எந்த ஆண்டு நிறைவேற்றப்பட்டது?

(அ) 2005 (ஆ) 2006

(இ) 2007 (ஈ) 2008

www.tntextbooks.in

10. எந்த ஆண்டு இந்திய பொதுத்துறை நிறுவனங்கள் கடும் நெருக்கடியைச் சந்தித்தன?

(அ) 1961 (ஆ) 1991

(இ) 2008 (ஈ) 2005

11. மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதியளிப்புச் சட்டம் (MGNREGA) எத்தனை நாட்கள் வேலைவாய்ப்பை ஒரு தனிநபருக்கு வழங்குகிறது?

(அ) 200 (ஆ) 150

(இ) 100 (ஈ) 75

12. டாட்டா அடிப்படை ஆராய்ச்சி நிறுவனம் எப்போது அமைக்கப்பட்டது?

(அ) 1905 (ஆ) 1921

(இ) 1945 (ஈ) 1957

13. 1951ஆம் ஆண்டில் இந்தியாவில் எத்தனை பொதுத்துறை நிறுவனங்கள் செயல்பட்டன?

(அ) 5 (ஆ) 7

(இ) 6 (ஈ) 225

II. குறுகிய விடையளிக்கவும்

1. நாடு விடுதலை அடைந்தபோது இந்திய பொருளாதாரத்தின் நிலைகள் குறித்து ஒரு குறிப்பு வரைக.
2. ஜவஹர்லால் நேரு தலைமையிலான புதிய அரசாங்கத்தின் முன்னிருந்த முக்கிய கடமைகள் யாவை?
3. சமதர்ம சமூக அமைப்பு என்பதைப் பற்றி நீவிர் அறிந்ததென்ன?
4. இந்தியா விடுதலை அடைந்ததைத் தொடர்ந்து பொதுத்துறை நிறுவனங்களை அமைப்பது தொடர்பாக வைக்கப்பட்ட இரண்டு முக்கிய கருத்துக்களை சுட்டிக் காட்டுக.
5. பூமிதான இயக்கம் பற்றி எழுதுக.

III. சுருக்கமாக விடையளிக்கவும்.

1. குத்தகை சீர்திருத்தங்களின் நோக்கங்கள் யாவை?
2. இந்தியாவில் பசுமைப் புரட்சியின் விளைவுகள் யாவை?
3. மத்திய அரசு 1980களில் கொண்டுவந்த ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தை விளக்குக.
4. இந்திய வேளாண்மையின் பின்தங்கிய நிலைக்கான காரணங்கள் யாவை?
5. பொதுத்துறை நிறுவனங்களின் குறைந்த செயல்பாட்டிற்கான காரணிகள் யாவை?

IV. விரிவான விடையளிக்கவும்.

1. ஊரக மறுசீரமைப்பு தொடர்பாக இந்திய அரசு பின்பற்றிய நடவடிக்கைகளை முன்னிலைப்படுத்துக.
2. சுதந்திர இந்தியாவில் ஏற்பட்ட கல்வி முன்னேற்றம் குறித்து மதிப்பிடுக.
3. முதல் இரண்டு ஐந்தாண்டு திட்டங்களின் சாதனைகளை மதிப்பிடுக.
4. இந்திய விடுதலைக்குப் பின் ஏற்பட்ட அறிவியல் ஆராய்ச்சி மற்றும் தொழில்நுட்ப நிறுவனங்கள் வளர்ச்சி குறித்து ஆய்க.

V. செயல்பாடு.

1. தாராளமயமாக்கல், உலகமயமாக்கல் மற்றும் தனியார்மயமாக்கல் கொள்கைகளில் நேர்மறை மற்றும் எதிர்மறை விளைவுகள் குறித்து வகுப்பறையில் விவாதம் நடத்தவும்.

மேற்கோள் நூல்கள்

1. Gaurav Dutt and Ashwani Mahajan Sundaram, *Indian Economy,* S. Chand and Co., 2015.
2. C.S. Murty, "Agrarian Relations and Policy", in Kanakalatha Mukund (ed.) *Andhra Pradesh Economy in Transition,* (1990), Centre for Economic and Social Studies and Booklinks Corporation, Hyderabad.
3. Official Websites of the Council for Scientific and Industrial Research (CSIR), Indian Council of Agricultural Research (ICAR) and Ministry of Human Resources Development (MHRD).

A-Z கலைச்சொற்கள்

சமதர்மக் கோட்பாடு	**socialism**	a political and economic theory which advocates that the means of production, distribution and exchange should be owned by the community as a whole.
மறுகட்டுமானம்	**reconstruction**	the process of rebuilding or creating something again.
ஆங்கிலேய அரசின் நில வருவாய் வசூலிக்கும் ஒரு முறை	**zamindari system**	a system of landholding and tax collection in British India.
குத்தகை	**tenancy**	occupancy of land, a house, under a lease or on payment of rent
சட்டமியற்றல்	**legislation**	the act of making or enacting laws.
நில உச்சவரம்பு	**land ceiling**	quantum of land to be owned by an individual or a family under the prescribed law
பொதுத்துறை	**public sector**	economic fields under the control of state
எழுத்தறிவு	**literacy**	the quality or state of being literate, especially the ability to read and write.

அலகு
10

நவீன உலகம்: பகுத்தறிவின் காலம்

கற்றலின் நோக்கங்கள்

கீழ்க்கண்டவற்றைப் பற்றி அறிந்துகொள்ளல்

- இத்தாலிய மறுமலர்ச்சி மற்றும் மேற்கத்திய ஐரோப்பாவுக்கு அதன் பரவல்
- புதிய நிலப்பரப்பையும் கடல் வழித்தடங்களையும் கண்டுபிடித்தல்
- வர்த்தகப் புரட்சியும் அதன் தாக்கமும்
- பிராட்டஸ்டன்ட் சீர்திருத்தம் மற்றும் கத்தோலிக்க எதிர் சீர்திருத்தம்
- மேற்கு ஐரோப்பாவில் முடியாட்சிகளின் எழுச்சியும் தேசிய அரசுகளின் தோற்றமும்

607FJ

அறிமுகம்

பதினைந்து மற்றும் பதினாறாம் நூற்றாண்டுகளில் நிகழ்ந்த மூன்று பெரும் நிகழ்வுகளாக மறுமலர்ச்சி, புவியியல் கண்டுபிடிப்புகள், சீர்திருத்த இயக்கங்களின் தோற்றம் ஆகிய மூன்று முக்கிய நிகழ்வுகளைக் குறிப்பிடலாம். இவை இடைக்காலம் தொடங்கி நவீனகாலம் வரையிலான மாற்றங்களைக் குறிக்கும் விதமாக அமைந்தன. மறுமலர்ச்சியின் சாரம் மனிதர்களுக்கும் இயற்கைக்கும் முக்கியமாக அமைந்த சமயம் இரண்டாம் இடத்துக்கு தள்ளப்பட்டதே எனலாம். மறுமலர்ச்சி நவீன உலகை உருவாக்குவதில் மிக முக்கிய தாக்கத்தை ஏற்படுத்தியது. ஐரோப்பாவின் புவியியல் சார்ந்த கற்பனைகளுக்கு அது ஊக்கமாக அமைந்தது. கொலம்பஸ் பெற்ற வெற்றியானது வெளிநாட்டு அமைப்புக்களுக்கு பெரிதும் ஊக்கமளிப்பதாக அமைந்தது. கத்தோலிக்க தேவாலயங்களுக்கு எதிரான கிளர்ச்சியாக உருவான சீர்திருத்தங்கள் சமய வரைபடத்தில் மாற்றங்களை உருவாக்கியதோடு சமயம் தொடர்பான அணுகுமுறைகளில் ஒரு பெரிய திருப்புமுனையை ஏற்படுத்தியது. முடியாட்சியை ஒருங்கிணைக்க மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் மற்றும் அதனை உறுதியாக்கும் நடவடிக்கைகளின் விளைவாக ஸ்பெயின், பிரான்ஸ் மற்றும் இங்கிலாந்து ஆகிய நாடுகளில் தேசிய அரசுகள் உருவாக வழியமைத்தன.

10.1 இத்தாலியில் ஏற்பட்ட மறுமலர்ச்சியும் மேற்கு ஐரோப்பியாவில் அதன் பரவலும்

மறுமலர்ச்சியின் முக்கியத்துவம்

லத்தீன் மூலத்தில் இருந்து உருவான மறுமலர்ச்சி (Renaissance) என்ற வார்த்தையின் பொருள் மறுபிறப்பு அல்லது புத்துயிர்ப்பு என்பதாகும். இது கிரேக்க மற்றும் ரோமானிய பகுதிகளில் செம்மொழிகளைக் கற்றல் தொடர்பாக திடீரென எழுந்த ஆர்வத்தை குறிப்பதாக அமைகிறது. எனினும் இந்த வளர்ச்சியின் போக்கில் மறுமலர்ச்சி என்பது பண்டைய கிரேக்க மற்றும் ரோமானிய செவ்வியல் இலக்கியங்களைக் கற்றல் என்பது மட்டுமல்லாமல் அதனை புத்துயிர்ப்பு பெறச்செய்வதாகவும் இருந்தது. அது கலை, இலக்கியம், அறிவியல், தத்துவம், கல்வி, சமயம் மற்றும் அரசியல் ஆகிய துறைகளில் புதிய சாதனைகளை உள்ளடக்கியதாக அமைந்தது. மறுமலர்ச்சி பல்வேறு கொள்கைகளை உள்ளடக்கியதாக இருந்தது. மனிதநேயம், ஐயுறவுவாதம், தனித்துவம் மற்றும் சமயச்சார்பின்மை ஆகியன அவற்றில் குறிப்பிடத்தக்கவையாக இருந்தன. சமயத்துறவிகள் மற்றும் பிரபுக்களின் பங்களிப்பாக இல்லாமல் சாதாரண மனிதர்களின் பங்களிப்பாக மறுமலர்ச்சி இருந்தது அதன் சிறப்பம்சமாகும்.

12th_History_TM_Unit_10_V2.indd 146 02-01-2023 16:38:30

மறுமலர்ச்சிக்கான காரணங்கள்

(i) சிலுவைப் போர்களின்போது (முஸ்லிம் ஆட்சியில் இருந்து புனித நிலத்தை மீட்பதை குறிக்கோளாகக் கொண்ட சமயப்போர்கள்) ஏற்பட்ட புதிய அனுபவங்கள் வாயிலாக வெனிஸ், பிளாரன்ஸ், ஜெனோவா, லிஸ்பன், பாரிஸ், இலண்டன், ஆன்ட்வெர்ப், ஹாம்பர்க் மற்றும் நூரெம்பர்க் ஆகிய சுதந்திரமான, வர்த்தக நகரங்கள் உருவானதும் அங்கே பல பயணிகள் வந்து சென்றதும் பிரான்ஸின் பாரிஸிலும், இங்கிலாந்தின் ஆக்ஸ்போர்டிலும் இத்தாலியின் போலோக்னோவிலும் பல்கலைக்கழகங்கள் நிறுவப்பட்டதும் மறுமலர்ச்சியின் பிறப்புக்குத் தேவையான தொடக்க நிலைமைகளை உருவாக்கின.

(ii) தத்துவார்த்த விவாதங்கள் பதினோறாம் நூற்றாண்டின் முற்பகுதியில் தொடங்கி, பல அறிவார்ந்த மக்களை உருவாக்கியது. பதின்மூன்றாம் நூற்றாண்டின் குறிப்பிடத்தக்க அறிவார்ந்த நபர்களில் முதன்மையானவர் ரோஜர் பேக்கன் (1214–1294) என்பவர் ஆவார். ஆக்ஸ்ஃபோர்டில் வசித்த ஆங்கிலப் பேராசிரியரான ரோஜர் பேக்கன் 'நவீன நடைமுறைச் சோதனை அறிவியலின் தந்தை' என அழைக்கப்படுபவர். அவர் மனிதகுலமானது சமயமரபு மற்றும் அதிகாரத்தினால் ஆட்சி செய்யப்படாமல் காரண காரியங்களால் ஆட்சி செய்யப்படவேண்டும் என்று விரும்பினார்.

ரோஜர் பேக்கன்

(iii) துருக்கியர்களுக்கு எதிரான போரில் மேற்கத்திய நாடுகளின் உதவியை நாடி பைசாண்டியப் பேரரசரிடம் இருந்து ஒரு கோரிக்கையுடன் 1393ஆம் ஆண்டில் கான்ஸ்டான்டிநோபிளைச் சேர்ந்த பிரபல அறிஞர் மானுவேல் கிரைசாலோரஸ் வெனிஸ் நகரத்துக்கு சென்று சேர்ந்தார். பிளாரன்ஸ் பல்கலைக்கழகத்தில் கிரேக்க இலக்கியத்தை பயிற்றுவிக்கும் பேராசிரியராக சேருமாறு கிரைசாலோரசுக்கு பணிவாய்ப்பு வழங்கப்பட்டது. பதினைந்தாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் பைசாண்டியத்தைச் சேர்ந்த இதர அறிஞர்களும் இத்தாலிக்கு குடிபெயர்ந்தனர். இந்த அறிஞர்களால் ஈர்க்கப்பட்ட இத்தாலிய அறிஞர்கள் பைசாண்டியத்தைச் சேர்ந்த கான்ஸ்டான்டிநோபிள் மற்றும் இதர நகரங்களுக்கு கையெழுத்துப்பிரதிகளைத் தேடி பயணம் மேற்கொண்டனர். 1413க்கும் 1423க்கும் இடைப்பட்ட ஆண்டுகளில் ஜியோவனி அவுரிஸ்பா என்ற அறிஞர் மட்டும், சோபோகில்ஸ், யூரிபைட்ஸ், தூசிடைட்ஸ் ஆகியோரின் படைப்புகள் உள்பட 250 கையெழுத்துப்பிரதி நூல்களை இத்தாலிக்கு கொண்டு வந்தார். 1453ஆம் ஆண்டு கான்ஸ்டான்டிநோபிளின் வீழ்ச்சிக்குப் பிறகு அங்கிருந்து வெளியேறிய செவ்வியல் அறிஞர்கள் மேற்கத்திய ஐரோப்பாவிற்கு சென்றதால் செவ்வியல் படைப்புகளை கற்கும் நடவடிக்கைகள் ஊக்கம் பெற்றன.

(iv) கிறித்தவ உலகத்துக்கு பைசாண்டிய உலகம் அறிஞர்களையும் தத்துவஞானிகளையும் மட்டும் கொடுக்கவில்லை, காகிதத்தையும் அது கொடுத்தது. உண்மையில் கி.மு. (பொ.ஆ.மு.) இரண்டாம் நூற்றாண்டில் சீனாவில் காகிதம் தோன்றியிருந்தாலும், ஜெர்மனிக்கு காகிதம் பதினான்காம் நூற்றாண்டில்தான் அறிமுகமானது. அதன் பிறகுதான் ஜோஹன்னஸ் குட்டன்பெர்க் என்பவரால் நகரும் தட்டச்சு மற்றும் அச்சகங்கள் கண்டுபிடிக்கப்பட்டது. அச்சுப்பணிக்குப் பிறகே உலகின் அறிவுசார்ந்த வாழ்க்கை மேலும் உத்வேகம் பெற்று அறிவு விரைவாகப் பரவியது.

மறுமலர்ச்சியின் தாயகமாக இத்தாலி

இத்தாலிய நகரங்களில் தொடங்கிய மறுமலர்ச்சி மேற்கத்திய ஐரோப்பாவின் இதர நகரங்களுக்கு பின்னர் பரவியது. இத்தாலியர்கள் தாங்கள் ரோமானிய மூதாதையர்களின் வழித்தோன்றல்கள் என்ற நம்பிக்கையைப் பாதுகாத்து வந்தனர். தங்கள் பாரம்பரியம் குறித்து அவர்கள் பெருமை கொண்டார்கள். லத்தீன் கிறித்தவ உலகத்தின் இதர பகுதிகளைக் காட்டிலும் இத்தாலியில் பெருமளவுக்கு சமயச்சார்பின்மை கலாச்சாரம் நடைமுறையில் இருந்தது. பழைய தேவாலயங்கள் மற்றும் ஓவியங்கள் இருண்டதாகவும் பழைய பாரம்பரியங்கள் தொல்லை தருவதாகவும் அவர்களுக்கு விளங்கின. தங்களுக்குப் பிடித்தமானவற்றைத் தேடும் முயற்சியில் அவர்கள் லத்தீன் மொழியில் எழுதப்பட்ட புத்தகங்களைக் கண்டுபிடித்தனர். லத்தீன் மொழியை ரோமானிய மூதாதையர்கள் எழுதியது போன்று அவர்கள் எழுதக் கற்றுக்கொண்டனர். மேலும் கிரேக்க மொழியையும் கற்ற அவர்கள் ஏதென்ஸ் நகர மக்களின் அருமையான, பெரிகிளிஸ் காலத்து படைப்புகளையும், கிரேக்க மற்றும் ரோமானிய கலாச்சாரங்களின் கடந்த காலப் படைப்புகளையும் கண்டுபிடித்தனர். சட்டம் மற்றும் தத்துவயியல் படிப்புகளுக்காகவே முதன்மையாக இத்தாலிய பல்கலைக்கழகங்கள் தோற்றுவிக்கப்பட்டன.

12th_History_TM_Unit_10_V2.indd 147 02-01-2023 16:38:30

மெடிசி குடும்பம்: இத்தாலிய நகரங்களில் ஒன்றான பிளாரன்ஸ் சக்திவாய்ந்த வர்த்தகக் குடும்பமான மெடிசி குடும்பம் மூலமாக ஆளுமை செய்யப்பட்ட காசிமோ டி மெடிசி என்பவர் இத்தாலி முழுவதும் வங்கிக்கிளைகளை நடத்தி வங்கித்துறையில் கொடிகட்டிப்பறந்ததோடு 1434 முதல் 1464ஆம் ஆண்டு வரை அரசு நிர்வாகத்தை மறைமுகமாக தனது கட்டுப்பாட்டில் வைத்திருந்தார். அவரது மறைவுக்குப் பிறகு அவரது பெயரன் லாரன்சோ அந்தப் பொறுப்பை ஏற்றுக்கொண்டு அரசைக் கட்டுப்படுத்தினார். லாரென்சோ அனைவராலும் "லாரென்சோ அற்புதமான மனிதர்" என்று அழைக்கப்பட்டார். இந்த காலகட்டத்தில் மைக்கேல் ஆஞ்சிலோ , லியானர்டோ டாவின்சி உள்ளிட்ட பல ஓவியக் கலைஞர்களுக்கு மெடிசி குடும்பம் ஆதரவு அளித்தது.

இத்தாலி மத்தியதரைக்கடல் பகுதியின் மையத்தில் அமைந்திருந்ததால் கிழக்கத்திய நாடுகளுடனான வர்த்தகத்தை புத்துயிர் பெறச் செய்ததில் இத்தாலிய நகரங்கள் பெரும்பயன் பெற்றன. பதினான்காம் நூற்றாண்டில் கடல்வழி வாணிகத்தில் ஈடுபட்ட இத்தாலிய நகரங்கள் அதிக செல்வம் ஈட்டின. பிளாரன்ஸில் மெடிசி குடும்பமும் மிலானில் ஸ்ஃபோர்ஸா குடும்பமும் மறுமலர்ச்சி காலத்தில் செல்வந்த குடும்பங்களாக உருவாகின.

இத்தாலிய மறுமலர்ச்சி காலத்தில் மிகச்சிறந்த ஓவியக்கலைஞர்களை ஆதரித்த பெருமை ஐந்தாம் நிக்கோலஸ், இரண்டாம் பயஸ், இரண்டாம் ஜூலியஸ் மற்றும் பத்தாம் லியோ ஆகிய போப்பாண்டவர்களையே சாரும்.

மறுமலர்ச்சியின் தாயகமாக பிளாரன்ஸ்

இலக்கியத்தில் மறுமலர்ச்சி

பதின்மூன்று மற்றும் பதினான்காம் நூற்றாண்டுகளிலேயே தாந்தே (1265–1321), பெட்ரார்க் என்ற இரண்டு பெரும் இத்தாலிய மொழி கவிஞர்களை பிளாரன்ஸ் உருவாக்கியிருந்தது. இடைக்கால கலாச்சாரத்தின் சுருக்கமாக தாந்தேயின் தெய்வீக இன்பியல் (Divine Comedy) திகழ்கிறது. காரணங்கள் மற்றும் இறை அருள் மூலமாக மனித குலம் இரட்சிப்பு பெறமுடியும் என்பது அதன் மேலான கருப்பொருளாகும். மனிதர்களின் அன்பு, நாட்டுப்பற்று, இயற்கை மீதான ஆர்வம் மேலும் சுதந்திரமான ஒன்றுபட்ட இத்தாலி நாடு என பல கருப்பொருட்களையும் அது உள்ளடக்கியிருந்தது.

தாந்தே

பெட்ரார்க்

பெட்ரார்க் (1304–1374) லத்தீன் மற்றும் இத்தாலிய மொழிகள் இரண்டிலும் படைப்புகளை உருவாக்கினார். மனிதநேயவாதிகளுள் முன்னோடியான இவர் 'இத்தாலிய மறுமலர்ச்சி இலக்கியத்தின் தந்தை' என்று கருதப்படுகிறார். பெட்ரார்க்கின் ஆராயும் மனமும் செவ்வியல் (கிரேக்க மற்றும் லத்தீன் மொழி) நூலாசிரியர்கள் மீதான ஈர்ப்பும், அவரை பயணிக்க வைத்தன. அவர் கிரேக்க மற்றும் ரோமானிய கையெழுத்துப்பிரதிகளைத் தேடி, சமயத்துறவிகள் நடத்திய நூலகங்களுக்கு சென்றார். சிசரோவின் கடிதங்களை அவர் மறுபடியும் கண்டுபிடித்தது பதினான்காம் நூற்றாண்டின் இத்தாலிய மறுமலர்ச்சியில் முக்கிய தருணமாக கருதப்படுகிறது.

பிளாரன்ஸ் நகரை சேர்ந்தவரான ஜியோவனி பொக்காசியோ (1313–1375), பிளேக் என்ற கருங்கொள்ளை நோயிலிருந்து தப்பிக்கும் பொருட்டு, பிளாரன்ஸ் நகருக்கு வெளியே ஒரு குடியிருப்பில், ஏழு இளம்பெண்களும் மூன்று இளைஞர்களும் தங்கியிருந்தபோது கூறியதாக எழுதப்பட்ட 100 கதைகளின் தொகுப்பை டெக்கமரான் என்ற தலைப்பில் புத்தகமாக வெளியிட்டார்.

பொக்காசியோ

நிக்கோலோ மாக்கியவல்லி (1469–1527)

நிக்கோலோ மாக்கியவல்லியின் 'தி பிரின்ஸ்' என்ற படைப்பு ஆட்சியாளர்களுக்கு அரசியல் வழிகாட்டியாக அமைந்தது. தாம் ஆளும் நாட்டின் அதிகாரம் மற்றும் பாதுகாப்பை பராமரிப்பது ஒரு ஆட்சியாளரின் தலையாய கடமை என்று அவர் கருத்துகொண்டிருந்தார். நீதி அல்லது கருணை அல்லது ஒப்பந்தங்களை பின்பற்றுவது ஆகியன இவரின் தலையாய கடமைக்கு குறுக்கே வரக்கூடாது. ஒவ்வொரு மனிதரும் சுயநலம் சார்ந்த நோக்கங்களைக் கொண்டிருப்பது

12th_History_TM_Unit_10_V2.indd 148
02-01-2023 16:38:30

மாக்கியவல்லி

இயல்பு மற்றும் நாட்டின் ஆட்சியாளர் குடிமக்களின் விசுவாசமும் பாசமும் எப்போதும் இருக்கும் என்று கருதிவிடக்கூடாது என்பதிலும் மாக்கியவல்லி உறுதியாக இருந்தார்.

'தி பிரின்ஸ்' என்ற நூலில் ஒரே நேரத்தில் மனிதனாக, மிருகமாக, சிங்கமாக, நரியாக மாறத் தெரிந்திருக்கவேண்டும் என்று மாக்கியவல்லி கூறுகிறார். 'எப்போது தமது செயல்பாடு தமக்கு எதிராக மாறக்கூடும் என்று தெரியாததால் தமது வாக்கை ஒருவர் காப்பாற்றமுடியாது; அதனால் சொல்லவும் கூடாது. எப்போதும் நேர்மையாக இருப்பது என்பது மிகவும் அனுகூலமற்றது; ஆனால் பக்திமானாக, உண்மையாக மனிதநேயத்துடன் பக்தியுடனும் இருப்பது போல் தோற்றமளிப்பது பலனளிக்கும், நல்லொழுக்க குணம் இருப்பது மிகவும் பலனளிக்கும்' என்று அவர் கூறுகிறார்.

கலையில் மறுமலர்ச்சி

லியானர்டோ டாவின்சி (1452–1519)

லியானர்டோ டாவின்சி

பிளாரன்ஸில் தாம் தீட்டிய அனைத்து ஓவியங்கள் பற்றியும் அவை எவ்வாறு ஒன்றுடன் ஒன்று தொடர்புடையன என்பது பற்றிய புரிதலையும் அறிய விரும்பிய ஒரு ஓவியர் இருந்தார். அவர் தான் பண்ணையில் வேலை பார்த்த ஒரு பணிப்பெண்ணின் மகனான லியானர்டோ டாவின்சி ஆவார். எனவே லத்தீன் மற்றும் கணிதத்தை அவர் சுயமாக கற்றுத் தேர்ந்தார். அவர் ஒரு சிற்பி, பெரிய சிந்தனையாளர் மற்றும் விஞ்ஞானி. கல்லறைகளில் இருந்து சடலங்களை எடுத்து அறுத்துப்பார்த்து மனித உடற்கூறுகளை பற்றி அறிந்து அவற்றை தமது ஓவியங்களில் சரியாக எடுத்துரைக்க முனைந்தார். மனித உடலில் இரத்த ஓட்டம் குறித்து முதன்முதலில் கண்டுபிடித்தவர் அவர். பலதரப்பட்ட திறமைகளைக் கொண்ட டாவின்சி 'மறுமலர்ச்சிகால மனிதர்' என்று அழைக்கப்பட அனைத்துத் தகுதிகளையும் கொண்டு திகழ்ந்தார்.

வர்ஜின் ஆஃப் தி ராக்ஸ், இறுதி விருந்து (Last Supper), மோனலிசா ஆகியன டாவின்சியின் மிகச் சிறப்பான படைப்புகளில் ஒன்றாகும்.



இறுதி விருந்து

மோனலிசா

வர்ஜின் ஆஃப் தி ராக்ஸ் என்ற ஓவியப்படைப்பில் கன்னி மேரி இருட்டில் இருந்து வெளியே வருவார், இளையவரான ஜானை பிராட்டஸ்டன்ட் கிறித்தவக் குழந்தையாகக் கொண்டிருப்பார். மிலானில் உள்ள டொமினிகன் துறவிகள் மடத்துக்காக இயேசு சிலுவையில் அறையப்படும் முன் அவரது சீடர்களுடன் உண்ட இறுதி விருந்தை (Last Supper) அவர் ஓவியமாகத் தீட்டினார். புகழ்பெற்ற மோனலிசா ஓவியம் பிளாரன்ஸைச் சேர்ந்த செல்வந்த வணிகரான பிரான்ஸிஸ்கோ டெல் ஜியோகோன்டோவின் மனைவி லிசா கெரார்டினியின் உருவமாக கருதப்படுகிறது. ஜியோகோன்டோ இதனை வெளியிட்டார்.

மைக்கேல் ஆஞ்சிலோ (1475–1564)

1460களில் பைபிளின் நாயகரான டேவிட்டின் உண்மையான தோற்றத்தை வெளிப்படுத்தும் சிறப்பான ஓவியத்தை முதன்முதலில் வரைந்த ஓவியர்களில் டொனடெல்லோவும் ஒருவராவார். மறுமலர்ச்சி காலத்தின் மிகப்பெரிய சிற்பியான மைக்கேல் ஆஞ்சிலோ டி லொடோவிகோ ப்யூனரோட்டி சைமோனியை அவரின் ஆளுமை பெரும்தாக்கத்தை ஏற்படுத்தியது. போப்புகளால் கட்டப்பட்ட ரோமில் உள்ள செயின்ட் பீட்டர்ஸ் தேவாலயம் மைக்கேல் ஆஞ்சிலோவால் நவீனமயமானது. இந்த செயின்ட் பீட்டர்ஸ் தேவாலயத்தில் உள்ள குவிமாடம், டேவிட்டின் உண்மைத் தோற்றத்தை வெளிப்படுத்தும் சிலை,

மைக்கேல் ஆஞ்சிலோ

சிஸ்டைன் தேவாலயம் (சிறிய பிரார்த்தனை அரங்கு) சுவர்களில் வரையப்பட்டுள்ள ஓவியங்கள் ஆகியன மறுமலர்ச்சி கால ஓவியத்தின் மிகச் சிறப்பான உதாரணங்கள். புகழ்பெற்ற பியட்டா என்ற கன்னி மரியாளின் சிலையையும் அவர் வடித்துள்ளார். கிறிஸ்து உயிரிழந்ததை அடுத்து கன்னி மரியாள் அவரது உடலுக்கு அருகே சோகமே வடிவாக இந்த சிலை வடிக்கப்பட்டிருக்கும். மத்திய இத்தாலியின் கெர்ரெராவில் இருந்து கொண்டுவரப்பட்ட ஒரே பளிங்குக்கல்லில் இந்த சிலை வடிக்கப்பட்டது.

ரபேல் (1483–1520)

ரபேலின் மிகச்சிறந்த படைப்பான மடோனாவும் குழந்தையும் என்ற பெயரிடப்பட்ட ஓவியமானது கன்னி மரியாளும் குழந்தை இயேசுவும் இருப்பதை சித்தரிப்பதாக உள்ளது. போப் இரண்டாவது ஜூலியஸின் நூலகச் சுவர்களில் பல சமயக் கருப்பொருள்களில் ரபேல் அவர்கள் வரைந்த ஓவியங்கள் அலங்கரித்தன. மறுமலர்ச்சி கால கலையின் சிறப்பை வெளிப்படுத்தும் வகையில் ஏதென்ஸ் பள்ளி குறித்த கருப்பொருள் அவற்றில் ஒன்றாகும். லியானர்டோ மற்றும் மைக்கேல் ஆஞ்சிலோ ஆகியோரின் ஓவியங்களுடன் அவர் தனது ஓவியங்களை வரைந்தார்.

ரபேல்

அறிவியல் மற்றும் தொழில்நுட்பம்

பதினைந்தாம் நூற்றாண்டிலிருந்து பதினேழாம் நூற்றாண்டு வரையிலான காலத்தின் போது அறிவியல் அதிவேக வளர்ச்சி பெற்று அறிவியல் புரட்சிக்கு வித்திட்டது. தேவாலய நிர்வாகம் கடவுளைக் கேள்விகேட்பது, சிந்திப்பது மற்றும் நடைமுறைச் சோதனைகளில் மக்கள் ஈடுபடுவதை விரும்பாததால் விஞ்ஞானிகள் தேவாலய நிர்வாகத்தை எதிர்த்துக்கொள்ள வேண்டியிருந்தது.

போலந்து நாட்டு விஞ்ஞானியான நிக்கோலஸ் கோபர்நிகஸ் (1473–1543), சூரியக் குடும்பத்தில் சூரியன் மையத்தில் உள்ளது; பூமியும் இதரக் கோள்களும் சூரியனை சுற்றிவருகின்றன என்ற சூரியமையக் கோட்பாட்டை (heliocentric) கண்டறிந்து வெளியிட்டார். இந்தக் கொள்கைக்கு மாறாக பூமியை மையமாகக் (geocentric) கொண்டு கோள்கள் செயல்பட்டதாக தேவாலய நிர்வாகம் கருத்துகொண்டிருந்தது. தேவாலயக் கருத்துக்கு எதிரான அனைத்தும் கிறித்தவக் கோட்பாடுகளுக்கு எதிரானதாகக் கருதப்பட்டன. தனது வாழ்நாளின் இறுதி வரை வான்வெளி வட்டங்களின் புரட்சி குறித்த ஆய்வுகளை வெளியிடுவதைத் தள்ளிப்போட்டுக் கொண்டே இருந்தார். பூமி சூரியனைச் சுற்றி வருவதாக வலியுறுத்திய ஜியார்டனோ புரூனோ என்ற இத்தாலியர் 1600இல் ரோமில், தேவாலய நிர்வாகத்தால் எரிக்கப்பட்டார்.

நிக்கோலஸ் கோபர்நிகஸ்

சூரியனை மையமாகக் கொண்டு கோள்கள் சுற்றும் சூரியமையக் கோட்பாட்டுக்கு மிக முக்கியமான வானியல் ஆதாரத்தை பிரபல வானியல் நிபுணர் கலிலியோ கலிலி (1564–1642) வெளியிட்டார். ஒரு தொலைநோக்கி கொண்டு வியாழன் கிரகத்தின் செயற்கைக்கோள்கள், சனிகிரகத்தின் சுற்றுவட்டங்கள், சூரியனின் புள்ளிகள் ஆகியவற்றை அவர் கண்டுபிடித்தார். பாதுவா பல்கலைக்கழகத்தில் (University of Padua)(வெனிஸ் குடியரசு) மருத்துவம் மற்றும் கணிதத்துக்கான பேராசிரியராக மெடிசி குடும்பத்தால் நியமிக்கப்பட்டார். அறிவியலை சமயத்தில் இருந்து பிரித்து வைக்கும் முயற்சிகளை அவர் மேற்கொண்டார். சூரியமையக் கோட்பாட்டின்படி, சூரியனை மையமாகக் கொண்டு கோள்கள் இயங்கும் கொள்கையை வெளியிட்ட கோபர்நிகஸின் கருத்துகளை அவர் ஏற்றார். தேவாலய நிர்வாகத்துக்கு எதிரான கருத்துகளைக் கூறியதாக வழக்கு தொடரப்பட்டு அவர் வீட்டுக்காவலில் வைக்கப்பட்டார்.


கலிலியோ கலிலி

பதினாறாம் நூற்றாண்டில் வாழ்ந்த அறிவியல் அறிஞர்களில் முக்கியமான மனிதராக வில்லியம் ஹார்வி (1578–1657) திகழ்ந்தார். அவர் மனித உடலில் இரத்த ஓட்டம் குறித்து இறுதியில் நிரூபித்தார்.

வில்லியம் ஹார்வி

12th_History_TM_Unit_10_V2.indd 150 02-01-2023 16:38:32

www.tntextbooks.in

மேற்கு ஐரோப்பாவில் மறுமலர்ச்சியின் பரவல்

இங்கிலாந்தில் மறுமலர்ச்சி

இத்தாலியில் மட்டுமல்லாமல் பிரான்ஸ், ஜெர்மனி உட்பட ஐரோப்பாவின் பெரும்பாலான பகுதிகளில் மறுமலர்ச்சி தனது தாக்கத்தை ஏற்படுத்தியிருந்தது. இங்கிலாந்தில் அது ஆழமான அடையாளத்தை ஏற்படுத்தியது. முதலாம் எலிசபெத் (1558–1603) அவர்களின் ஆட்சி 'எலிசபெத் காலம்' என்று அழைக்கப்பட்டது. ஆங்கில மறுமலர்ச்சியில் எலிசபெத் காலம் பல அறிஞர்களை உருவாக்கியது. வில்லியம் ஷேக்ஸ்பியர், கிறிஸ்டோபர் மர்லோவ், பிரான்ஸிஸ் பேக்கன் ஆகியோர் அவர்களில் குறிப்பிடத்தக்கவர்கள். ஆங்கில நாடக ஆசிரியரான கிறிஸ்டோபர் மார்லோவ், டிடோ, தி குயீன் ஆஃப் கார்தேஜ், டம்பர்லெய்ன் தி கிரேட் ஆகிய முக்கிய படைப்புகளை உருவாக்கியுள்ளார்.

முதலாம் எலிசபெத்

ஆங்கில இலக்கியத்தின் முடிசூடா மன்னர் வில்லியம் ஷேக்ஸ்பியர் ஸ்டிராட்போர்டு அபான் ஏவன் என்ற நகரத்தில் பிறந்த அவர் 38 நாடகங்களையும், அன்பு, கோபம், சோகமான நிகழ்வு, பொறாமை மற்றும் ஏமாற்றுதல் ஆகிய மனிதர்களின் பல்வேறு உணர்வுகள் குறித்த பல கவிதைகளையும் எழுதியுள்ளார். ஏஸ் யூ லைக் இட், தி டேமிங் ஆஃப் தி ஷ்ரூ மற்றும் மிட் சம்மர் நைட்'ஸ் டிரீம் ஆகியன அவரது நகைச்சுவை நாடகங்களாகும். ஒத்தெல்லோ, ஹாம்லெட், கிங் லியர், ரோமியோவும் ஜூலியட்டும் ஆகியன சோகமயமான நாடகங்களுக்கு உதாரணங்களாகும். லண்டனில் குளோப் அரங்கில் அரங்கேற்றப்பட்ட அவரது நாடகங்கள் பிரசித்தி பெற்றவையாகும். ஆங்கில மொழியின் மிகப்பெரிய தாக்கம் பெற்ற அவரது நாடகங்கள் தொழிற்புரட்சிக்குப் பிறகு பிரிட்டன் ஒரு அரசாங்கமாக உருவெடுத்த நிலையில் உலகம் முழுவதிலும் பரவின.

பிரான்ஸிஸ் பேக்கன் அவர்கள் 'அனுபவவாதத்தின் தந்தை' என்று கருதப்படுகிறார். தூண்டல் பகுத்தறிவு என்பதே (கொணர்முறை பகுத்தறிவுக்கு எதிர்ப்பதமாக, குறிப்பிட்ட விவரங்கள் அடிப்படையிலான பொதுக்கருத்து உருவாக்கம் மூலமான தர்க்க சிந்தனை வழியான அணுகுமுறை) விஞ்ஞான அறிவின் அடிப்படை என்று அவர் வாதிட்டார். லத்தீன் மொழியில் அவரால் எழுதப்பட்ட நோவும் ஆர்கனும் முக்கிய தத்துவப்படைப்பாக விளங்குகிறது. இயற்கையான கொள்கைகளை விவரித்து கற்கும் வழிமுறைகளை முறையான கவனிப்பில் நேரில் ஆய்வது பற்றி இந்த படைப்பு விளக்குகிறது.

10.2 கிழக்குப் பகுதிகளுக்கான புதிய கடல்வழித்தடங்களை கண்டுபிடித்தல்

துருக்கிய வெற்றிகளும் கான்ஸ்டான்டிநோபிளின் வீழ்ச்சியும் ஐரோப்பிய கடல்சார் கண்டுபிடிப்பு நாடுகளை கிழக்கத்திய நாடுகளுக்கு புதிய கடல்வழிகளைக் கண்டுபிடிக்க உத்வேகத்தையளித்தது. எனவே, அந்நாடுகள் உதுமானியர்களால் (ஆட்டோமன்கள்) கட்டுப்படுத்தப்பட்ட பழைய கடல் வழித்தடங்களைச் சார்ந்திருக்க விரும்பவில்லை. இந்த முயற்சிகள் மூலம் புதிய புவியியல் கண்டுபிடிப்புகளையும் அட்லாண்டிக் பெருங்கடலுக்கு அப்பால் புதிய உலகம் இருப்பதற்கான சாத்தியக்கூறுகளையும் ஐரோப்பியர்கள் அறியவந்தனர்.

R4JGI

கடல் ஆய்வுக்கு வழிவகுக்கும் பல காரணிகள்

(அ) சிலுவைப்போர்களின் போது போர்வீரர்கள் கிழக்கத்திய நாடுகளிலிருந்து பெரும் அளவில் பொருட்களை எடுத்துவந்தனர். மேற்கத்திய நாடுகளில் உணவைப் பதப்படுத்த உதவும் நறுமணப் பொருட்களை கிழக்கத்திய நாடுகளில் இருந்து எடுத்துச் செல்ல ஐரோப்பியர்கள் விரும்பினார்கள். அதுவரைக்கும் இந்தியா மற்றும் மற்ற கீழை நாடுகள் உள்ளிட்ட ஆசிய நாடுகளுடனான கடல்வழி வாணிபத்தை அராபியர்கள் அதுவரை கட்டுப்படுத்தி வந்தனர். ஆசியாவின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் இத்தாலியர்களுடன் பொருட்கள் பரிமாறிக் கொள்ளப்பட்டது. அந்தப் பொருட்களை வாங்கிய இத்தாலியர்கள் அவற்றை ஐரோப்பாவில் வர்த்தகம் செய்தனர். குறிப்பாக போர்த்துகல், ஸ்பெயின் ஆகிய ஐரோப்பிய நாடுகள் ஆசிய நாடுகளுடன் நேரடியாக வர்த்தகம் செய்ய விரும்பின. அதிக லாபம் கிடைக்கும் என்பதால் அவை புதிய கடல்வழித்தடங்களைக் கண்டுபிடிப்பதற்கு ஊக்கம் தந்தன. இந்த முடிவான பொருளாதாரக் காரணம் தான் புதிய வர்த்தக வழித்தடங்களை கண்டுபிடிப்பதற்கான உத்வேகத்தைக் கொடுத்தது.

(ஆ) கிழக்கத்திய நாடுகளில் இருந்து பொருட்களுக்கான தேவை அதிகரித்ததை

12th_History_TM_Unit_10_V2.indd 151 02-01-2023 16:38:33

www.tntextbooks.in

அடுத்து ஐரோப்பிய நாடுகள் அதிக லாபம் ஈட்டவும் கடல்வழி வர்த்தகத்தை கட்டுப்படுத்தவும் விரும்பின. எனவே அவர்கள் கடல் வழி ஆய்வில் முதலீடுகளைச் செய்ய விருப்பம் காட்டினர்.

(இ) 'முட்டாள்கள் தேர்தலில் போட்டியிடட்டும் சாதித்துக்காட்ட விரும்புபவர்கள் புது இடங்களுக்குச் சென்று ஆராயட்டும்' என்ற அந்தக் காலகட்டத்தின் சிந்தனைக்கு ஏற்ப பணமும் புகழும் கிடைக்க வாய்ப்பாக இருந்த சாதனை முயற்சிக்கு பலர் தூண்டப்பட்டனர்.

(ஈ) சமயத்தை (கிறித்தவ) பரப்பவேண்டும் என்ற ஆர்வம் புதிய நிலப்பரப்புகளை கண்டுபிடிக்க ஊக்கம் தந்தது. ஆரம்பநாட்களில் இது முதன்மைக் காரணமாக இருக்கவில்லை. அந்தக் காலத்தில் சீர்திருத்த இயக்கங்களின் கருத்துகளுடன் கடவுளைப் பற்றிய வார்த்தை பரவி முக்கியத்துவம் பெற்றது.

(உ) மறுமலர்ச்சியை அடுத்து தொழில்நுட்ப மேம்பாடு பல துறைகளில் ஏற்பட்டது. அதில் ஒன்றாக வரைபடங்களை (Map) உருவாக்கும் கார்ட்டோகிராபி என்ற துறையிலும் வளர்ச்சி ஏற்பட்டது. தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி (கிறித்து சகாப்தத்தில்) முதல் நூற்றாண்டில் டாலமியின் (Ptolemy) வரைபடம் மீண்டும் வரையப்பட்டது. மறுமலர்ச்சி கால புவியியல் வல்லுநர் ஜெரார்டஸ் மெர்கேட்டர் அட்சரேகை மற்றும் தீர்க்கரேகை பயன்படுத்தி வரைபடங்களை மாலுமிகள் பயன்படுத்த உருவாக்கினார்.

(ஊ) நீண்டதூர ஆபத்தான கடல் பயணங்களுக்கு புதிய மேம்படுத்தப்பட்ட கப்பல் வடிவமைப்பு பெரிதும் உதவியது. ஆழம் அதிகமில்லாத நீர்ப்பகுதியில் செல்லக்கூடிய இலகுரக காரவெல் கப்பல் கட்டமைப்பும் புதிய தொழில்நுட்ப கண்டுபிடிப்பாகும்.

(எ) துப்பாக்கிகள் மற்றும் இதர ஆயுதங்களைப் பயன்படுத்தியதனால் கடல்பயண ஆபத்துகள் குறைக்கப்பட்டன.

(ஏ) ஐரோப்பாவில் மாலுமிகளுக்கான திசைகாட்டி கருவி (Mariner's Compass) கண்டுபிடிக்கப்பட்டதால் அமைதியான இரவு மற்றும் ஒளிமயமான நட்சத்திரங்களின் உதவியால் மட்டுமே தாங்கள் பயணிக்கும் திசையை அறியவேண்டிய நிலைமையில் இனி மாலுமிகள் இல்லை.

மாலுமிகளின் திசைகாட்டி கருவி

போர்த்துகலின் முயற்சிகள்

ஐரோப்பாவின் தென்மேற்கு பகுதியில் உள்ள போர்த்துகல் நாட்டின் முன்முயற்சிகளால் கானரி, மெடீரா, அசோர் ஆகிய தீவுகளை முதல் ஆய்விலேயே சிறிய நாடான போர்த்துகல் கண்டுபிடித்தது. 1442இல் மாலுமி ஹென்றியால் அனுப்பப்பட்ட மாலுமிகள் ஆப்பிரிக்காவின் கடற்கரைப்பகுதியான கினியாவைச் சென்றடைந்தனர். பின்னர் 1488இல் பார்தோலோமியோ டயஸ் நன்னம்பிக்கை முனையை சுற்றிவந்தார்.

மாலுமி ஹென்றி

மாலுமி ஹென்றி என்பவர் போர்த்துகீசிய இளவரசர் ஆவார். அவர் கடலுக்குள் செல்லாத நிலையிலும், கடல்பயணம் குறித்த பள்ளி ஒன்றை போர்த்துகல் நாட்டின் சாக்ரெஸில் தொடங்கினார். வரைபடத்தை உருவாக்குபவர்கள், கப்பல் கட்டுவோர் மற்றும் கருவிகள் உருவாக்குவோர் ஆகியோரை வாடகைக்கு நியமித்து திட்டமிட்ட கடற்பயணங்களை மேற்கொள்ள மாலுமிகளுக்கு அவர் உதவினார்.

கிறிஸ்டோபர் கொலம்பஸ் (1451–1506)

ஜெனோவாவைச் சேர்ந்த இத்தாலியரான கிறிஸ்டோபர் கொலம்பஸ் ஸ்பானிய ஆட்சியாளர்கள் பெர்டினான்ட் மற்றும் இசபெல்லாவின் ஆதரவைப் பெறுவதற்கு முன் பல கடினமான சூழ்நிலைகளை கடக்க நேரிட்டது. 1492 ஆகஸ்ட் 3இல் கொலம்பஸ் காடிஸ் அருகே உள்ள பாலோஸ் துறைமுகத்திலிருந்து மூன்று சிறிய கப்பல்கள் (தி சாண்டா மரியா, தி பிண்ட்டா, தி நினா) மூலமாகப் பயணித்தார். 1492ஆம் ஆண்டில் இரண்டு மாதங்கள் மற்றும் ஒன்பது நாட்களுக்கான பயணத்துக்குப் பிறகு இந்தியா என்று அவரால் நம்பப்பட்ட நிலப்பகுதியை அவர் வந்தடைந்தார். ஆனால் உண்மையில் அது அமெரிக்கா எனும் ஒரு புதிய கண்டமாகும். தங்கம், பருத்தி, விந்தையான

கொலம்பஸ்

12th_History_TM_Unit_10_V2.indd 152 02-01-2023 16:38:33

மிருகங்கள் மற்றும் கிறித்தவ சமயத்தில் ஞானஸ்தானம் கொடுக்கப்பட வண்ணம் தீட்டப்பட்ட அகலமான கண்களுடன் இரண்டு இந்தியர்களுடன் ஸ்பெயின் சென்றுசேர்ந்தார். தான் கண்டுபிடித்த நிலப்பகுதி இந்தியா என்று அவர் தனது இறுதிக் காலம் வரை நம்பியதால் அவர்கள் இந்தியர்கள் என்று அழைக்கப்பட்டனர்.

வாஸ்கோடகாமா

வாஸ்கோடகாமா

கொலம்பஸ் பெற்ற வெற்றியைத் தொடர்ந்து வாஸ்கோடகாமா கிழக்குப் பகுதி நோக்கி தனது வரலாற்றுப் பயணத்தைத் (1497) தொடங்கினார். லிஸ்பனில் இருந்து நான்கு கப்பல்களில் பயணம் மேற்கொண்ட அவர் மொசாம்பிக் தீவை சென்றடைந்தார். பின்னர் அவர் மேலும் தெற்கே பயணம் செய்து கேரளாவின் கோழிக்கோடு அருகே உள்ள கப்பட் (கப்பக்கடவு) என்ற கடற்கரையை அடைந்தார். இந்தியாவின் ஒரு பகுதியை அடைந்த அவர் இந்தியாவுடனான நேரடி வர்த்தக வாய்ப்புகளை திறந்துவிட்டார். இந்தப் பயணம் இந்தியாவின் சில பகுதிகளை காலனி ஆதிக்கத்தின் கீழ் கொண்டுவர உதவியது. கோவா அவ்வாறான ஒரு பகுதியாகும்.

போப்பின் ஆணை (1493)

போர்த்துகல் நாட்டவர்கள் கடல் பயணங்களில் ஈடுபடுவது குறித்து ஸ்பெயின் அரசர்கள் அச்சம் கொண்டனர். போப் ஆறாம் அலெக்ஸாண்டர் என்பவரிடம் அவர்கள் இதற்கு ஒரு தீர்வு காணுமாறு கோரினார்கள். 1493ஆம் ஆண்டு, போப் ஒரு ஆணையை வெளியிட்டார். வெர்டி முனை தீவுகளுக்கு மேற்கே 320 மைல்கள் தொலைவில் கண்டம் விட்டு கண்டம் வடக்கு–தெற்கான ஒரு கோட்டினை வரைய இவ்வாணை வகை செய்தது. அந்தப் பிரகடனம் மேற்கில் செய்யப்படும் எந்தவொரு புதிய கண்டுபிடிப்பும் ஸ்பெயினுக்குச் சொந்தம் என்று கூறியது. போர்த்துகல் இந்த திட்டத்தால் மகிழ்ச்சி அடையவில்லை. அடுத்த ஆண்டே (1494) ஸ்பெயினுடன் டார்டெசில்லாஸ் ஒப்பந்தத்தில் அது கையெழுத்திட்டது. பாகுபடுத்தும் வடக்கு–தெற்கு கோடு என்ற கொள்கைத் திட்டத்தை மதித்தாலும் வெர்டி முனை தீவுகளுக்கு மேற்கே 1185 மைல்கள் தொலைவுக்கு தள்ளிப்போட்டது. மேலும் இந்தக் கோட்டுக்கு கிழக்கில் கண்டுபிடிக்கப்படும் அனைத்தும் போர்த்துகல் நாட்டுக்கு சொந்தம் என்று ஏற்றுக்கொண்டது. ஆறு ஆண்டுகளுக்குப் பிறகு 1500ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் இது போர்த்துகலின் கை ஓங்க வழிவகுத்தது. பெட்ரோ அல்வரெஸ் காப்ரல் பிரேசிலின் கிழக்குக் கடற்கரையோரத்தைச் சென்றடைந்து அதனை போர்த்துகல் நாடு உரிமை கொண்டாட வழிவகுத்தார்.

போர்த்துகல் நாட்டு பயணி பெட்ரோ காப்ரல்

1500இல் பெட்ரோ காப்ரல் மேற்குநோக்கி பயணித்து பிரேசிலை கண்டுபிடித்தார். இந்தத் தீவுக்கு உண்மையான சிலுவையின் தீவு (ஐலாண்ட் ஆஃப் தி ட்ரூ கிராஸ்)என்றுபெயரிட்டார். போர்த்துகலின் காலனியாக பிரேசில் மாறியது. எஞ்சிய வரலாறு 11ஆம் அத்தியாயத்தில் விளக்கப்பட்டுள்ளது.

பெட்ரோ காப்ரல்

வாஸ்கோடகாமா சென்ற வழியைப் பின்பற்றி இந்தியாவுக்குப் பயணித்த காப்ரல் கோழிக்கோட்டை சென்றடைந்தார். தொடக்கத்தில் போர்த்துகீசியர்களுக்கு ஆதரவாகச் செயல்பட்ட ஆட்சியாளர் சாமரின் ஒரு கோட்டையைக் கட்டி வர்த்தகம் செய்ய காப்ரலை அனுமதித்தார். எனினும் விரைவில் அராபிய வர்த்தகர்களுடன் கருத்துவேறுபாடுகள் ஏற்பட்டு ஒரு பெரிய வர்த்தகச்சாவடியை அரபு படைகள் தாக்கியதில் பல போர்த்துகீசிய படைவீரர்கள் கொல்லப்பட்டனர். போர்த்துகல் மேற்கொண்ட வலுப்படுத்தும் நடவடிக்கைகள் மூலமாக காப்ரல் பதிலடிகொடுத்தார். பத்து அராபிய கப்பல்களை கைப்பற்றிய அவர் அதில் இருந்த மாலுமிகளை சிரச்சேதம் செய்தார். தெற்கில் உள்ள இந்திய துறைமுக நகரான கொச்சினுக்கு (தற்போது கொச்சி) அவர் புறப்பட்டுச் சென்றார். அங்கு அவர் வரவேற்கப்பட்டு வர்த்தகம் செய்ய அனுமதிக்கப்பட்டார். கண்ணனூரில் (தற்போது கண்ணூர்) ஒரு துறைமுகத்தை நிறுவியபிறகு அவர் 1501 ஜனவரி 16இல் நறுமணப் பொருட்கள் நிரப்பப்பட்ட ஆறு கப்பல்களுடன் போர்த்துகலுக்கு பயணம் மேற்கொண்டார். எனினும் செல்லும் வழியில் இரண்டு கப்பல்கள் வழிதவறிப்போயின. இறுதியாக காப்ரல் 1501ஆம் ஆண்டு ஜூன் 23ஆம் தேதி நான்கு கப்பல்களுடன் போர்த்துகல் திரும்பினார்.

12th_History_TM_Unit_10_V2.indd 153 02-01-2023 16:38:34

www.tntextbooks.in

மெகல்லனின் கப்பல் பயணம்

போர்த்துகீசிய மாலுமியான பெர்டினான்ட் மெகல்லன் உலகை ஆராய ஸ்பெயின் நாட்டின் ஆதரவைப் பெற்றார். செவில்லேவில் இருந்து மேற்குநோக்கி 1519ஆம் ஆண்டு ஐந்து கப்பல்களுடன் புறப்பட்டார். தென்அமெரிக்காவின் முனையில் ஒரு நீர்ச்சந்தியை கண்டுபிடித்த அவர் அதற்கு 'மெகல்லன் நீர்ச்சந்தி' என்று பெயரிட்டார். அங்கிருந்து இந்த மாலுமிகள் குழு பெரிய தென் கடலைச் சென்று சேர்ந்தது. இந்தக் கடல் அமைதியாக இருந்ததால் அதற்கு பசிபிக் பெருங்கடல் என்று பெயரிட்டார் (Pacifico என்றால் ஸ்பானிய மொழியில் அமைதியானது என்று பொருள்). இந்தப் பயணத்தின்போது மெகல்லன் தனது இரண்டு கப்பல்களையும், நோய் காரணமாக பல மாலுமிகளையும் இழந்தார். பிலிப்பி தீவில் மெகல்லன் கொல்லப்பட்டார். இறுதியாக விட்டோரியா (விக்டோரியா) என்ற ஒரேயொரு கப்பல் மட்டும் 18 மாலுமிகளுடன் 1522இல் செவில்லேவுக்குத் திரும்பியது. உலகத்தை முதன்முதலாக சுற்றிய கப்பல் என்ற சிறப்பு விட்டோரியா கப்பலுக்குக் கிடைத்தது.

மெகல்லன்

துருக்கியர்கள், பிரெஞ்சுக்காரர்கள், ஆங்கிலேயர் மற்றும் ஜெர்மானியர்கள் ஆகியோர் ஆசியாவுக்கான புதிய கடல்வழித்தடங்களின் முக்கியத்துவத்தை அப்போது அறிந்திருக்கவில்லை. அமெரிக்காவை ஐரோப்பியர்கள் கண்டுபிடித்ததன் அரசியல் முக்கியத்துவத்தையும் அவர்கள் அறியவேண்டிய நிலைமையில் இருந்தார்கள். ஸ்பெயினைச் சேர்ந்த போர் வெற்றியாளரான ஹெர்னன் கார்ட்ஸ் என்பவர் ஒரு சில வீரர்களுடன் ஸ்பெயினுக்காக மெக்சிகோ பேரரசைக் கைப்பற்றினார். பனாமாவின் நிலச்சந்தியைக் கடந்த பிஸார்ரோ (1530) தென்அமெரிக்காவில் இன்கா பேரரசினை அழித்து பெரு என்ற மற்றொரு நாட்டைக் கைப்பற்றினார்.

இதர முக்கியமான ஐரோப்பிய பயணங்கள்

போர்த்துகீசிய மற்றும் ஸ்பெயின் நாட்டு கடற்பயணம் மேற்கொள்வோரை பின்பற்றி இதர ஐரோப்பிய நாடுகளும் உலகை வலம் வந்து புதிய நிலப்பகுதிகளைக் கண்டுபிடிக்க ஆர்வம் கொண்டன. உலகத்தின் பல புதிய நிலப்பகுதிகளை கண்டுபிடிப்பதற்காக இத்தாலிய கடற்பயணியான ஜான் கேபட் என்பவரை இங்கிலாந்து நியமித்தது. அவர் தனது பயணத்தின் போதே கனடாவை கண்டுபிடித்து அதனை ஆங்கிலேயக் காலனியாக மாற்றினார். மற்றொரு இத்தாலியரான ஜியோவனி டா வெர்ராசானோ பிரான்ஸ் நாட்டுக்காக நிலப்பகுதிகளை ஆராய்ந்தார். கிழக்கு கனடாவில் பிரான்ஸ் நாட்டுக்காக மாகாணங்களை இணைத்தார். ஹென்றி ஹட்சன் என்ற ஆங்கிலேய கடற்பயணி வட அமெரிக்காவில் இருந்து பசிபிக் பெருங்கடல் பகுதிக்கு பாதை காண முயன்றார். அவர் தனது முயற்சியில் தோல்வி அடைந்தாலும் அவர் அந்தப் பகுதியை ஆராய்ந்தார். அது தற்போது ஹட்சன் நதி என்ற பெயர் தாங்கி இருக்கிறது.

ஸ்பானிய ஆயுதங்களால் ஏற்பட்ட பேரழிவின் தாக்கம்: அஸ்டெக்குகள் போதுமான எண்ணிக்கையில் வீரர்கள் ஆயுதங்கள் மற்றும் எஃகு கத்திகளைக் கொண்டிருந்தாலும் ஒரேயொரு ஸ்பானிய வீரர் டஜன் கணக்கில் ஏன் நூற்றுக்கணக்கான எதிரிப்படை வீரர்களைக் கொல்லமுடியும். "அவர்கள் திடீரென, குத்திக் கிழித்துக் கொன்றனர்" ஐரோப்பிய ஆயுதங்களின் மோசமான விளைவு குறித்து ஒரு உள்நாட்டு வரலாற்றாசிரியர் இவ்வாறு குறிப்பிடுகிறார். மேலும் "மற்றவர்கள் ஒரே வீச்சில் சிரச்சேதம் செய்யப்பட்டனர். இதர வீரர்கள் கொலைக்களத்தில் இருந்து ஓடித்தப்பிக்க முயன்றனர். அவர்களின் குடல் அவர்களில் இருந்து கீழே விழுந்து கால்களைச் சுற்றிக்கொண்டது." சிறிய அம்மை பரவியதால் அஸ்டெக் வலு குறைந்து காணப்பட்டது. இதன் மூலம் கார்டெசுக்கு மறுபடியும் குழுக்களை ஒன்று சேர்க்க நேரம் கிடைத்தது. இதனால் இறுதி வெற்றியும் பெற்றனர் .

இங்கிலாந்திலிருந்து போட்டி அதிகமானதை அடுத்து ஸ்பெயின் மற்றும் இங்கிலாந்திற்கு இடையே மோதல் ஏற்பட்டது. ஸ்பெயின் எதிர்ப்புகளைத் தெரிவித்த நிலையிலும் கலிபோர்னியா பகுதியை பிரான்சிஸ் டிரேக் என்பவர் ஆங்கிலேயருக்காக இணைத்தார். இதனால் இரண்டு நாடுகளுக்கும் இடையே போர் மூண்டது. 1588இல் ஸ்பெயினின் அரசர் இரண்டாம் பிலிப் ஸ்பெயின் நாட்டு கப்பல் படையை 130 கப்பல்கள் மற்றும் 31,000 படைவீரர்களுடன் இங்கிலாந்துமீது போர் தொடுக்க அனுப்பினார். எனினும் ஆங்கிலேயர்கள் எளிதாக கையாளக்கூடிய தங்கள் படைகளின் நடவடிக்கையால் ஸ்பெயின் நாட்டுப் படையை (Spanish Armada) வீழ்த்தினார்கள். நவீன உலகில் ஒரு வலுவான சக்தியாக பிரிட்டிஷார் உருவெடுக்க இது காரணமாக அமைந்தது.

12th_History_TM_Unit_10_V2.indd 154 02-01-2023 16:38:34



12th_History_TM_Unit_10_V2.indd 155 02-01-2023 16:38:34

10.3 வர்த்தகப் புரட்சி

மறுமலர்ச்சி மற்றும் சீர்திருத்த நடவடிக்கைகளுடன் அடிப்படைப் பொருளாதார மாற்றங்களும் நிகழ்ந்தன. இந்த தொடர் பொருளாதார மாற்றங்களின் விளைவாக இடைக்காலத்தின் பிற்பகுதியில் இருந்த ஓரளவு நிலையான, உள்ளூர் நிலையிலான, இலாப நோக்கற்ற பொருளாதாரம், பதினான்காம் நூற்றாண்டு மற்றும் அதனை அடுத்து வந்த நூற்றாண்டுகளில் உலகளாவிய வலுவான முதலாளித்துவ நிலைக்கு மாற்றம் பெற்றது. வர்த்தகப் புரட்சி என்று அழைக்கப்பட்ட இது திடீரென நிகழ்ந்துவிடவில்லை படிப்படியாகவே நிகழ்ந்தது.

புரட்சியின் தொடக்கத்துக்கான காரணங்கள்

(அ) மத்தியதரைக்கடல் வர்த்தகம் இத்தாலிய நகரங்களால் கைப்பற்றப்பட்டது.

(ஆ) இத்தாலிய நகரங்கள் மற்றும் வடக்கு ஐரோப்பாவில் உள்ள வர்த்தக அமைப்பான ஹன்சீடிக் லீக் எனும் அமைப்பை (ஒரு வணிக சங்கம்) சேர்ந்த வர்த்தகர்கள் இடையே வர்த்தகம் செழிப்படைந்து மேம்பட்டது.

(இ) வெனிஸின் டூகா நாணயமும் பிளாரன்ஸின் ப்ளோரின் நாணயமும் அறிமுகம் செய்யப்பட்டது.

(ஈ) வர்த்தகம், கப்பல் மூலம் சரக்குப் போக்குவரத்து மற்றும் சுரங்கத் தொழில்மூலமாக ஈட்டப்பட்ட பெரும் தொகை சேர்ந்தது.

(உ) போர் சாதனங்களுக்கான தேவையும் அதிகம் வரி வசூலிக்கக்கூடிய சொத்தை உருவாக்கும் வகையில் வணிகத்தை மேம்படுத்த புதிய அரசர்கள் கொடுத்த ஊக்கம்.

ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட இந்தக் காரணிகளுடன் இத்தாலியக் கட்டுப்பாடு இன்றி கிழக்குப்பகுதிக்கு புதிய வழித்தடத்தை கண்டுபிடிக்க ஸ்பெயின் மற்றும் போர்த்துகீசிய வணிகர்கள் அளித்த ஊக்கம் வர்த்தகப் புரட்சிக்கு வித்திட்டன.

வர்த்தகப் புரட்சியின் முக்கிய விளைவுகள்

வங்கித்துறை வளர்ச்சி என்பது வர்த்தகப் புரட்சிக்கான முக்கிய காரணியாகும். வட்டிக்கு பணம் கொடுப்பது, வங்கித்துறை ஆகியன இடைக்காலத்தில் மரியாதை மிகுந்த தொழில் இல்லை என்று சமயத்தால் குறிக்கப்பட்டிருந்தன. ஆனால் 14ஆம் நூற்றாண்டில் லாபத்துக்காக பணத்தை கடனாக வழங்கும் தொழில் ஒரு நிறுவப்பட்ட வர்த்தக நடைமுறையாக மாறியது. வங்கித்துறை சார்ந்த நிறுவனங்களை இத்தாலிய நகரங்களின் மிகப்பெரிய வர்த்தக மையங்கள்தான் உண்மையில் நிறுவின. பதினைந்தாம் நூற்றாண்டில் வங்கித் தொழில் தெற்கு ஜெர்மனி மற்றும் பிரான்சுக்கு பரவியது. தனியார் நிதி நிறுவனங்களின் எழுச்சியை அடுத்து அரசு வங்கிகள் நிறுவப்பட்டன. 1657இல் பேங்க் ஆஃப் ஸ்வீடன் முதலில் நிறுவப்பட்டது. 1694இல் பேங்க் ஆஃப் இங்கிலாந்து நிறுவப்பட்டது.

சுரங்கத்தொழில், உருக்குதல் தொழில் ஆகிய புதிய தொழில்கள் வளர்ந்து தொழில்நுட்ப வளர்ச்சியால் மேலும் ஊக்கம் பெற்றன. வணிக அமைப்புகளிலும் மாற்றம் வந்தது. நெறிப்படுத்தப்பட்ட நிறுவனங்கள் உருவாகின. ஒரு பொதுக்காரணத்துக்காக வணிகர்கள் ஒன்றிணைந்து இத்தகைய நெறிப்படுத்தப்பட்ட கம்பெனியை உருவாக்கினார்கள். நெதர்லாந்து மற்றும் ஜெர்மனி இடையே வர்த்தகத்திற்காக நிறுவப்பட்ட மெர்ச்சன்ட் அட்வென்சரர்ஸ் என்ற ஆங்கிலேய கம்பெனி ஒரு நல்ல உதாரணமாகும்.

இடைக்காலத்தின் பிற்பகுதியில் கைவினைக் குழுக்களால் உருவாக்கப்பட்ட உற்பத்திமுறை செயலிழந்தது. பதினேழாம் நூற்றாண்டில் நெறிப்படுத்தப்பட்ட கம்பெனி என்பது கூட்டுப் பங்கு நிறுவனங்களாக புதிய வகையில் உருமாற்றம் பெற்றது. வரையறுக்கப்பட்ட பொறுப்புடன் கூட்டுப்பங்கு நிறுவனம் எனும் கருத்து டச்சு நாட்டின் கண்டுபிடிப்பு ஆகும். இது அதிக எண்ணிக்கையிலான மக்களிடையே அபாயங்களை (மற்றும் இலாபங்களை) பரப்புவதன் மூலம் பெரிய அளவிலான முதலீட்டை சாத்தியமாக்கியது.

பிந்தைய கட்டங்களில், வர்த்தக புரட்சியின் ஒரு பகுதியாக வணிகவியற் கொள்கை (வணிகவாதம் – mercantilism) என்றழைக்கப்பட்ட புதிய கோட்பாடுகளும் நடைமுறைகளும் ஏற்கப்பட்டன. தேசிய வளமையை மேம்படுத்துவது மற்றும் அரசின் அதிகாரத்தை அதிகரிப்பது ஆகியவற்றில் அரசின் தலையீட்டை உடையது வணிகவாதம் என்ற முறையாகும். தலையீட்டின் நோக்கம் வர்த்தகம் மற்றும் உற்பத்தியின் அளவை விரிவாக்குவது மட்டுமல்லாமல் அரசின் கருவூலத்துக்கு அதிக நிதியைக் கொண்டுவருவதும் ஆகும்.

நடுத்தரவர்க்கத்தை பொருளாதார அதிகாரம் பெற்றவர்களாக உயர்த்தியது வர்த்தகப் புரட்சியின் இதர முக்கியமான முடிவுகளாகும். வணிகர்கள், வங்கியாளர்கள், கப்பல் முதலாளிகள், முதன்மை

12th_History_TM_Unit_10_V2.indd 156 02-01-2023 16:38:34

முதலீட்டாளர்கள் மற்றும் தொழிற்துறை தொழில் முனைவோர் போன்ற பலரும் இந்த நடுத்தர வகுப்பு நிலையில் உள்ளடங்கினார்கள். அதிகரிக்கும் வளமையின் விளைவாகவும் நிலப்பிரபுத்துவத்துக்கு எதிராக அரசரை ஆதரிப்பதன் விளைவாகவும் அவர்கள் அதிக அதிகாரம் பெற்றனர்.

வர்த்தகப் புரட்சியின் முக்கிய எதிர்மறை விளைவாக அமைந்தது அடிமைத்தனம் மீண்டும் புத்துயிர் பெற்றதே ஆகும். ஐரோப்பிய சமூகத்தில் இருந்து அடிமைத்தனம் முதல் ஆயிரமாவது (மில்லினியம்) ஆண்டின் இறுதியில் முற்றிலுமாக காணாமல் போயிருந்தது. ஆனால் ஸ்பானிய, போர்த்துகீசிய மற்றும் ஆங்கிலேய காலனிகளில் சுரங்கம் மற்றும் தோட்டவிவசாயம் வளர்ச்சி கண்டதையடுத்து அடிமைகளை திறமையற்ற தொழிலாளர்களாக ஆளெடுக்கும் நடவடிக்கைகள் தொடங்கின. பூர்வீக அமெரிக்கர்களை வேலை வாங்குவது கடினமானதாக இருந்ததால் அவர்களை அடிமைகளாக்கும் முயற்சி தோல்வி கண்டது. ஆப்பிரிக்கர்களை இறக்குமதி செய்ததன் மூலம் இந்த பிரச்சனைக்கு தீர்வு காணப்பட்டது. டிரான்ஸ் அட்லாண்டிக் அடிமை வர்த்தகம் மூலமாக 1 கோடியே 10 லட்சத்துக்கும் அதிகமான ஆப்பிரிக்கர்கள் அமெரிக்காவுக்கு ஏற்றுமதி செய்யப்பட்ட மோசமான கதை நவீன உலகை உருவாக்குவதில் ஒரு அவமானச் செயலாக பதிவுபெற்றுள்ளது.

இறுதியாக, வர்த்தகப் புரட்சி தொழிற்புரட்சிக்கு வழியமைத்தது. முதலாளித்துவ வகுப்பை உருவாக்கியதன் விளைவாகவும் வர்த்தகர்களை அடிப்படையாகக் கொண்ட கொள்கையை பின்பற்றியதன் விளைவாகவும் உற்பத்திப் பொருட்களின் வளர்ச்சிக்கு ஊக்கம் கிடைத்தது. தொழிற்சாலை மூலமான உற்பத்திக்கு ஒரு சிறந்த உதாரணமாக பருத்தித் துணி உற்பத்தி விளங்கியது.

10.4 பிராட்டஸ்டன்ட் சீர்திருத்தமும் கத்தோலிக்க எதிர் சீர்திருத்த இயக்கமும்

இடைக்கால ஐரோப்பாவில் மக்களில் பெரும்பான்மையான கிறித்தவர்கள் கடவுளின் ஆற்றலில் நம்பிக்கை வைத்தார்கள். கடவுள் நம்பிக்கை உடைய கத்தோலிக்கர்கள் தேவாலயங்கள் தங்களுக்கும் கடவுளுக்கும் இடையே ஒரு ஊடகமாக செயல்படுவதை ஏற்றார்கள். பிறப்பு முதல் இறப்பு வரை பொதுமக்களுக்கு தேவாலயங்கள் தான் முக்கிய மையப்புள்ளியாக விளங்கியது. காலப்போக்கில் தேவாலயங்கள் வைத்திருந்த அதிகாரம் பன்மடங்காகப் பெருகியது. எனினும் ஐரோப்பாவின் மன்னர்களும் மக்களும் தேவாலயங்களின் கை ஓங்கிவருவதை உணர ஆரம்பித்தனர். போப்பாண்டவரின் அதிகாரத்துக்கு மதித்துநடக்காத, பின்பற்றாத ஒரு சில போக்குகளும் அவ்வப்போது இருந்தன. இந்த புதிய மாற்றத்தை வன்முறையால் கையாள வேண்டிய விசாரணைப் போக்கை தேவாலயம் உருவாக்கியது. தேவாலயங்களின் செயல்பாடுகளைக் கேள்விகேட்ட மக்களை இந்த விசாரணை அமைப்பு சமயவிரோதப்போக்கில் ஈடுபடுபவர்கள் மற்றும் பெண்களை சூனியக்காரிகள் என்று அடையாளப்படுத்தியது.

தேவாலயத்தின் எதேச்சதிகாரத்துக்கு எதிராக கிளர்ச்சி ஏற்படுத்தியவர்கள் பிராட்டஸ்டன்ட் (எதிர்ப்பாளர்கள்) என்றழைக்கப்பட்டனர். ஏனென்றால் அவர்கள் ரோமன் கத்தோலிக்க கிறித்தவர்களின் கொள்கைகளை எதிர்த்து கிளம்பியதால் அப்படி அழைக்கப்பட்டனர். இந்த இயக்கமே கிறித்தவ சீர்திருத்த இயக்கம் என்றானது. ஊழல் மற்றும் தேவாலயங்களின் எதேச்சதிகாரப் போக்குக்கு எதிரான பிரபலமான கிளர்ச்சியாகும். விசுவாசமான ரோமானிய தேவாலய ஆதரவாளர்கள் தேவாலயத்துக்குள் நடந்த சீர்கேடுகளைக் களைய சீர்திருத்தங்களை உள்ளிருந்தபடியே நடத்தினார்கள். இந்த சீர்திருத்த இயக்கம் 'எதிர் சீர்திருத்த இயக்கம்' என்று அழைக்கப்பட்டது. இது போராட்டம் நடத்தியவர்களுக்கு எதிராக உறுதியாக களம் கண்டது.

சீர்திருத்த இயக்கத்துக்கான காரணங்கள்

தேவாலய நிர்வாகத்தினரின் ஊழல்

பாவமன்னிப்பு வழங்கும் முறைக்கு பணம் பெற்றது (ஒருவரின் பாவத்தை மன்னித்து அவருக்கு புனிதத்தை வழங்கும் போப்பாண்டவரின் பாவமன்னிப்புக்கு பணம் பெற்றது), வேண்டியவர்களுக்கு வேலை வழங்குவது, தேவாலயப் பணிகளை பணத்துக்கு விற்பது ஆகியன தாக்குதலுக்கு உள்ளானது. போப்பாண்டவரிடம் பாவமன்னிப்பைப் பெற ஏழைகள் பணம் கொடுக்க நேரிட்டதால் அவர்கள் பணமின்றி தவித்தார்கள். ஆறாம் அலெக்ஸாண்டர், இரண்டாம் ஜூலியஸ், பத்தாம் லியோ ஆகிய சில போப்பாண்டவர்கள் இது போன்ற நடைமுறைகளால் ஆட்சியாளர்களிடம் சண்டையிட்டனர். போப் பத்தாம் லியோவுக்கு பணம் கொடுத்து மெயின்ஸின் ஆல்பர்ட் என்பவர் ஆர்ச்பிஷபாக பதவியேற்ற

போப் பத்தாம் லியோ

சம்பவமும் நடந்தது. போப்பாண்டவர் இந்தப் பணத்தை வசூலித்ததாகக் கூறப்பட்டதோடு அதில் பாதிப்பணம் செயின்ட் பீட்டர் பேராலயத்தைக் கட்ட பயன்படுத்தப்படும் என்றும் சொல்லப்பட்டது.

மெடிசி குடும்பம் போன்ற மிகப்பெரிய வர்த்தகக் குடும்பங்களின் உறுப்பினர்கள் தங்கள் சொத்தைப் பெருக்கவும் தங்களுக்கு முறைதவறிப் பிறந்த மகன்களுக்கு அந்தச் சொத்தை வழங்கவும் போப்பாண்டவர்களாக மாறினார்கள். பிஷப் பதவிகளில் அனுபவம் இல்லாத இளைஞர்கள் நியமிக்கப்பட்டனர். பல்வேறு தேவாலயங்களில் இருந்து வருமானம் பெற்ற பாதிரிமார்கள் அவற்றில் எந்த தேவாலயத்துக்கும் சென்றதில்லை. விவசாயிகள் இந்த தேவாலயத்தை அடக்கி ஆளும் நிலப்பிரபுவாகப் பார்த்தனர். பல இளவரசர்கள் தங்கள் பேராசை மிகுந்த கண்களை தேவாலயங்களின் பரந்துபட்ட சொத்துக்களின் மீது வைத்தனர்.

கிறித்தவ சீர்திருத்த இயக்கத்தின் பின் இருந்தவர்கள்

ஜான் வைகிளிஃப்

கிறித்தவ சீர்திருத்த இயக்கம் சில முன்னோடிகளைக் கொண்டிருந்தது. எராஸ்மஸ், தேவாலய வழக்கங்கள் மற்றும் போதனைகளுக்கு எதிராகப் போராட்டம் நடத்தினார். மடமையின் புகழ்ச்சி (The Praise of Folly, 1511) என்ற அவரது சிறந்த படைப்பு கிறித்தவ துறவிகள் மற்றும் இறையியல் போதகர்களையும் கேலி செய்தது. ஜான் வைகிளிஃப் மற்றும் ஜான் ஹஸ் ஆகியோர் அவருக்கு இரண்டு நூற்றாண்டுகளுக்கு முன்னால் சீர்திருத்தத்துக்காக உழைத்தவர்களாவர். கடவுளின் செய்தியை லத்தீன் மொழியில் போதனை செய்யாமல் மக்களின் மொழியில் போதித்தனர். ஜான் வைகிளிஃப் என்ற ஆங்கிலேய பாதிரியார் பைபிளை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்த முதல் மொழிபெயர்ப்பாளர் என்பதால் பிரபலமடைந்தார். அவர் தனது வாழ்நாளில் ரோமானிய தேவாலயத்தின் கோபத்தில் இருந்து தப்பிப் பிழைத்தார். ஆனால் 1415ஆம் ஆண்டு அவர் மறைந்து 31 ஆண்டுகளுக்குப் பிறகு அவரது உடலைத் தோண்டி எடுத்து அவரது எலும்புகளை எரியூட்டுமாறு கிறித்தவ திருச்சபை ஆணையிட்டது. இந்த ஆணை சிரத்தையுடன் பின்பற்றப்பட்டது.

வைகிளிஃபின் எலும்புகள் எரியூட்டப்பட்டாலும் அவரது கருத்துகளை ஒடுக்க முடியவில்லை. இந்த சம்பவம் குறித்த தகவல் பொஹிமியாவுக்கு பரவியது; ஜான் ஹஸ் இதனால் ஊக்கம் பெற்றார். பிரேக் பல்கலைக்கழகத்தின் தலைவராக இருந்த ஹஸ், தனது கருத்துகளுக்காக, தேவாலய நடவடிக்கைகளில் இருந்து போப்பாண்டவரால் ஒதுக்கி வைக்கப்பட்டார். அவர் தனது நகரில் பிரபலமாக இருந்ததால் பிரச்சனையின்றி தப்பித்தார். பேரரசர் அவர்களால் பாதுகாப்பாக தேவாலய சபைக் கூட்டம் நடந்துகொண்டிருந்த சுவிட்சர்லாந்தின் கான்டன்ட்டுக்கு அழைக்கப்பட்டார். ஹஸ் அங்கு சென்றார். தனது தவறை ஒப்புக்கொள்ளுமாறு அவருக்கு நெருக்கடி கொடுக்கப்பட்டது. அவர் மறுத்த நிலையில், அவரது பாதுகாப்புக்கு அவர்கள் உத்தரவாதம் தந்த நிலையிலும் உயிருடன் எரிக்கப்பட்டார்.

கிறித்தவ சீர்திருத்த இயக்கத்தை மூன்று சீர்திருத்தவாதிகள் மூன்று வெவ்வேறு இடங்களில் பிரபலப்படுத்தினார்கள். விட்டன்பெர்கில் மார்ட்டின் லூதர், சூரிச்சில் உல்ரிச் ஸ்விங்ளி மற்றும் ஜெனீவாவில் ஜான் கால்வின் ஆகியோர் அந்த மூவராவர்.

மார்ட்டின் லூதர் (1483–1546)

கிறித்தவப் பாதிரியாரான மார்ட்டின் லூதர் ரோமுக்கு எதிராக ஜெர்மனியில் கிளர்ச்சியில் ஈடுபட்டார். ரோமுக்கு பயணம் மேற்கொண்டபிறகு அவர் தேவாலயத்தின் ஊழல் மற்றும் ஆடம்பரம் குறித்து வருந்தினார். 95 குறிப்புகள் என்ற தலைப்பில் ரோமானிய தேவாலயத்திற்கு எதிராக அவர் 95 புகார்களை எழுதினார். அந்த புகார்களை விட்டன்பெர்கில் உள்ள தேவாலயத்தின் கதவில் ஆணி அடித்து தொங்கவிட்டார். தேவாலய சீர்திருத்தத்துக்காக அவர் சில ஆலோசனைகளை வழங்கினார். இந்த கருத்துகள் பரவுவதற்கு அச்சகத்தின் பணி மகத்தானதாக இருந்தது. பைபிள் மட்டுமே உன்னதமானது; போப்பாண்டவரோ அல்லது பிஷப்புகளோ இல்லை என்று அவர் வாதிட்டார். ஞானஸ்நானம் வழங்குவது மற்றும் புனித சமய சடங்கு ஆகிய இரண்டு மட்டுமே பைபிளால் ஏற்றுக்கொள்ளப்பட்டவை. கடவுளின் மீது இருக்கும் ஒருவரது நம்பிக்கையைப் பொறுத்து தான் இரட்சிப்பை அடையமுடியும் என்று அவர் கூறினார். இவ்வாறாக பிராட்டஸ்டன்ட் கிளர்ச்சி துவங்கியது. லூதர் பைபிளை ஜெர்மானிய மொழியில் மொழிபெயர்த்தார். லூதரன் பிராட்டஸ்டன்ட்கள் சில விதிகளையும் நெறிமுறைகளையும் வகுத்தனர். அவர்கள் போப்பாண்டவரின் அதிகாரத்தை ஏற்கவில்லை.

12th_History_TM_Unit_10_V2.indd 158
02-01-2023 16:38:34

www.tntextbooks.in

அவர்கள் தங்களுக்கு என்று தேவாலயங்களை நிறுவினார்கள், நிர்வாக அமைப்புகளை உருவாக்கினார்கள், பைபிளின் உன்னதம் பற்றி மட்டுமே நம்பினார்கள். பாதிரியார்களுக்கான விதிமுறைகள் தளர்த்தப்பட்டு அவர்கள் திருமணம் செய்துகொள்ள அனுமதிக்கப்பட்டனர்.

மார்ட்டின் லூதர் மற்றும் அவரது 95 குறிப்புகள்

வோர்ம்ஸ் சபையில் கலந்துகொள்ளுமாறு லூதருக்கு அழைப்புவிடுத்த போப்பாண்டவர் அவருடன் அமைதிப்பேச்சுகளில் ஈடுபட முயன்றார். அந்தப் பேச்சுகள் தோல்விகண்டன. இந்த வோர்ம்ஸ் சபையில் லூதரின் புத்தகங்கள் அனுமதி மறுக்கப்பட்டு எரிக்கப்பட்டன. புனித ரோமானிய அரசாங்கத்தின் சட்டத்துக்குப் புறம்பானவர் என்று பேரரசரால் அறிவிக்கப்பட்டார். மார்ட்டின் லூதரின் முற்போக்கான கருத்துகள் பலரை ஈர்த்தன. அவர்களில் ஒருவர் தான் வகுப்புகள் அற்ற சமூகத்துக்காகப் போராடிய தாமஸ் முன்ட்சர் ஆவார். இதனை அடுத்து ஜெர்மனியின் பல பகுதிகளில் விவசாய கிளர்ச்சி இயக்கங்கள் தோன்றின. எனினும் இந்த சண்டையில் நிலப்பிரபுக்களை ஆதரித்த மார்ட்டின் லூதர் விவசாயிகளின் இயக்கத்தை கைவிட்டார். பிராட்டஸ்டன்ட்கள் பிரபலம் அடைந்த நிலையில் ஜெர்மனியில் உள்நாட்டுப்போர் நிகழ்ந்தது. அந்தப்போரின் இறுதியில் வடஜெர்மனி பிராட்டஸ்டன்ட் நாடாக மாறியது. அதே நேரத்தில் தெற்குஜெர்மனி கத்தோலிக்க நாடாகத் தொடர்ந்தது.

ஸ்விங்கிளி (1484–1531)

சுவிட்சர்லாந்தில் உல்ரிச் ஸ்விங்கிளி என்பவர் இதே போன்ற இயக்கத்தை ஆரம்பித்தார். நெதர்லாந்து மனிதநேய ஆர்வலர் எராஸ்மஸ் என்பவரால் அவர் ஈர்க்கப்பட்டிருந்தார். இவர் லூதரின் சில கருத்துகளை ஏற்கவில்லை. ரொட்டியிலும் திராட்சை ரசத்திலும் கடவுள் இல்லை; நம்புபவரின் இதயத்தில் இயேசு கிறிஸ்து உயிர்வாழ்வதாக ஸ்விங்கிளி நம்பினார். அவர் கத்தோலிக்க தேவாலய நிர்வாகத்துக்கு எதிராக சீர்திருத்தக் கருத்துகளை கோடிட்டுக்காட்டும் 67 சீர்திருத்தக் கட்டுரைகளை எழுதினார். துறவிகள் பிரம்மச்சரியத்தை கடைபிடிப்பதை எதிர்த்த அவர் மடாலயங்கள் கட்டுவது, நோன்பிருப்பது, புனித யாத்திரை மேற்கொள்வது ஆகியவற்றையும் கடுமையாக எதிர்த்தார். பிராட்டஸ்டன்ட் இயக்கத்தை வலுவாக்க லூதரையும் ஸ்விங்கிளியையும் ஒன்றாக இணைப்பது குறித்த முயற்சிகள் தோல்வி கண்டன.

ஸ்விங்கிளி

இயேசு நாதரின் புனித இறுதி விருந்தை ஒத்த புனிதச் சமயச் சடங்கை கத்தோலிக்கர்கள் தங்கள் தேவாலயங்களில் பின்பற்றினார்கள். இயேசு கிறிஸ்து மேற்கொண்ட தியாகங்களை நினைவுகூரும் வகையில் இந்தச் சடங்கில் கத்தோலிக்க கிறித்தவர்கள் பங்கேற்றனர். ரொட்டியும் திராட்சை ரசமும் இயேசுவின் சதையும் இரத்தமும் என்று அவர்கள் நம்பி ஏற்றுக்கொள்கின்றனர்.

ஜான் கால்வின் (1509–1564)

ஜான் கால்வின்

பிராட்டஸ்டன்ட் இயக்கத்தின் பிற்கால தலைவர்களில் ஒருவர் ஜான் கால்வின் ஆவார். பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த பிராட்டஸ்டன்ட் ஆன அவர் தேவாலய நிர்வாகத்தின் நடவடிக்கைகளைஎதிர்த்தார். போப்பாண்டவரை எதிர்த்ததற்காக அவர் கிறித்தவ விரோத நடவடிக்கைகளுக்காக அவர் சபைக் கூட்டங்களிலிருந்து விலக்கி வைக்கப்பட்டார். அதன் பிறகு அவர் சுவிட்சர்லாந்தின் ஜெனீவாவில் குடியேறினார். 'கிறித்தவ சமய நிறுவனங்கள்' (*Institutes of the Christian Religion*) என்ற அவரது லத்தீன்மொழிப் புத்தகம் அவரது கருத்துகளை உள்ளடக்கியது. கால்வின் ஒரு மிகப்பெரிய ஒருங்கிணைப்பாளர். குறிப்பிட்ட காலத்துக்கு அவர் ஜெனீவா நகரையே கட்டுப்பாட்டில் வைத்திருந்தார். பைபிள் போதனைகளின் அடிப்படையிலான ஒரு கட்டுக்கோப்பான சமூகத்தைப் படைக்க அவர் பெரிதும் முயன்றார். கால்வீனியம் என்ற சமயப்பிரிவு அவரது வாழ்நாளிலேயே பிரபலம் அடைந்தது. ஐரோப்பாவின் இதர பகுதிகளுக்கு பரவிய நிலையில் பிரான்ஸில் ஹுயுக்நோக்கள் ஆகவும், இங்கிலாந்தில் பியூரிட்டன்கள் ஆகவும் ஸ்காட்லாந்தில் பிரஸ்பைட்டீரியன்கள் ஆகவும் அவர்கள் அடையாளம் காணப்பட்டனர்.

12th_History_TM_Unit_10_V2.indd 159 02-01-2023 16:38:35

ஆங்கிலேய சீர்த்திருத்தம்

இங்கிலாந்தில் சீர்த்திருத்த நடவடிக்கைகள் தத்துவ அறிஞர்களால் தொடங்கப்படாமல் மன்னராலேயே தொடங்கப்பட்டது. எட்டாம் ஹென்றி என்பவர் தேவாலய நிர்வாகத்தில் இருந்து அரசை பிரித்தார். ஆரம்பகாலங்களில் நம்பிக்கைமிகு கத்தோலிக்கராக இருந்த அவர் தனது தனிப்பட்ட தேவைகளுக்காக பிராட்டஸ்டன்ட்களை ஆதரித்தார் (ஆன்பொலின் என்ற வேறொரு பெண்ணை மறுமணம் செய்வதற்காக அராகன் அரசியும் அவரது மனைவியுமான கேதரின் என்பவரை விவாகரத்து செய்தார்). 1534இல் மேலாதிக்கச் சட்டம் (உன்னத சட்டம்) என்ற சட்டத்தை அவர் இயற்றி ரோம் உடனான இங்கிலாந்தின் தொடர்பை துண்டித்தார். ஆங்கிலிகன் தேவாலயத்தை நிறுவிய அவர் மடாலயங்கள் மற்றும் அனைத்து கிறித்தவ நிறுவனங்களுக்குச் சொந்தமான தேவாலய சொத்துக்களை பறிமுதல்செய்ய உத்தரவிட்டார். இந்த பிராட்டஸ்டன்ட் இயக்கம் பியூரிட்டன் இயக்கம் என்ற பெயரில் இங்கிலாந்தின் பல பகுதிகள் மற்றும் அதன் காலனிகளுக்கும் பரவியது.

சீர்திருத்த இயக்கத்தின் விளைவுகள்

அ) **ஐரோப்பிய நாடுகளில் பிரிவுகள்:** தேவாலய நிர்வாகத்தில் ஏற்பட்ட பிளவு அந்த நாட்டின் சமயவழிபாடுகளில் பிரிவுகளை ஏற்படுத்தியது. வடஜெர்மனி லூதரன் சபையாகவும் தென்ஜெர்மனி கத்தோலிக்கத்தை தொடர்வதையும் கொண்டன. இங்கிலாந்து பிராட்டஸ்டன்ட் ஆகவும் ஸ்காட்லாந்தும் அயர்லாந்து மக்களும் தீவிர கத்தோலிக்க ஆதரவாளர்களாக மாறினர்.

ஆ) **கல்வியறிவு:** சீர்திருத்த இயக்கத்தின் பல்வேறு சமய போதனைகளை அச்சிட அச்சகம் உதவியது. மேலும் பொதுமக்கள் படிப்பறிவு பெற்றனர். பைபிளை படித்து புரிந்துகொள்ள மக்களுக்கு ஊக்கம் தரப்பட்டது. உள்ளூர் மொழியை போதனைகளுக்கு பயன்படுத்தியதும் பைபிளை வேறு வட்டார மொழிகளுக்கு மொழிமாற்றம் செய்ததும் சாதாரண மக்களைச் சென்றடைவதற்கான புதிய வழிகளைக் காட்டின.

இ) **பெண்களின் நிலை:** தேவாலயங்களில் பிரம்மச்சரியத்தை கடைபிடிப்பதற்கு எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டதால் பிராட்டஸ்டன்ட் பாதிரியார்கள் திருமணம் செய்துகொண்டனர். இதனால் வீட்டிலும் தேவாலயங்களிலும் பெண்களின் நிலை வலுப்பெற்றது. பைபிளை படிக்குமாறு ஊக்கப்படுத்தப்பட்ட பெண்கள் பிராட்டஸ்டன்ட் வழிமுறையில் குழந்தைகளை வளர்க்கவும் ஊக்கம் பெற்றனர். இதனால் பெண்களின் கல்வியறிவு மேம்பட்டது.

ஈ) **அரசர்களின் அதிகாரம்:** எட்டாம் ஹென்றி போன்ற சில அரசர்களுக்கு, தேவாலயம் மற்றும் அரசு இரண்டுக்கும் தலைமைப் பொறுப்பை ஏற்று நடத்த இந்த சீர்திருத்த இயக்கம் அதிக அதிகாரங்களை வழங்கியது.

உ) **காலனிகளுக்கான போட்டி:** கத்தோலிக்கர்களும் பிராட்டஸ்டன்ட்களும் உலகின் இதர பகுதிகளில் வாழும் மக்களை தத்தமது பிரிவுகளுக்கு மாற்றம் செய்ய விரும்பினார்கள். தென்அமெரிக்காவில் ஸ்பானிய வெற்றியை அடுத்து ஜெசூட் துறவிகள் (கத்தோலிக்க சமயத்தை பரப்ப உருவான ரோமன் கத்தோலிக்கர்களின் புதிய பிரிவு) பியூரிட்டன்கள், கத்தோலிக்கர்கள், ஆங்கிலிகன்கள் ஆகியோர் தத்தமது தேவாலயங்களை வடஅமெரிக்காவின் 13 ஆங்கிலேய காலனிகளில் அமைத்தனர்.

ஊ) **கிறித்தவ சமயத்தின் பரவல்:** காலனிகளில் தங்கம் மற்றும் வெள்ளி கிடைத்ததை அடுத்து ஐரோப்பிய நாடுகள் கடற்பயணிகளை உலகின் பல பகுதிகளுக்கு கிறித்தவ இயக்கத் தொண்டர்கள் என்ற போர்வையில் அனுப்பியது. 'முதலில் கிறித்தவத் தொண்டு, பிறகு துப்பாக்கிப்படகு அதனை அடுத்து நிலத்தை ஆக்கிரமிப்பு' என்ற வரிசையில் அடுத்தடுத்த தலைமுறையினர் கத்தோலிக்கர்களின் சீர்திருத்த தடுப்பு நடவடிக்கைகளை எதிர்கொள்ளவேண்டியிருந்தது.

கத்தோலிக்க எதிர் சீர்திருத்தம்

இயேசு சங்கம்

இக்னேஷியஸ் லயோலா

பிராட்டஸ்டன்ட் இயக்கத்தின்வளர்ச்சியை கத்தோலிக்க சமயம் எச்சரிக்கை உணர்வு மற்றும் கவலையோடு கவனித்தது. மார்ட்டின் லூதர் பிரபலம் அடைந்த வேளையில் ஸ்பெயின் நாட்டைச் சேர்ந்த இக்னேஷியஸ்லயோலா என்பவர் பாரிஸ் (பிரான்ஸ்) என்ற இடத்தில் புதிய தேவாலய முறைமையை 1534 ஆகஸ்டு 15இல்

12th_History_TM_Unit_10_V2.indd 160 02-01-2023 16:38:35

ஏற்படுத்தினார். பிரம்மச்சர்யம், வறுமை, கீழ்ப்படிதல் ஜெருசலேமுக்கு புனிதப் பயணம் மேற்கொள்வது ஆகிய உறுதிமொழிகளைக் கடைபிடிக்க அவரும் அவரது ஆறு பல்கலைக்கழக மாணவர்களும் உறுதியேற்றனர்.

அவரின் மாணாக்கர்களில் ஒருவரான பிரான்சிஸ் சேவியர் இந்தியா மற்றும் ஜப்பானுக்கான கிறித்தவ மிஷனரி தொண்டராக பின்னாளில் மாறினார். ரோமானிய தேவாலயத்திற்கும் போப்பாண்டவருக்கும் உண்மையாக தொண்டாற்ற சிறந்த மக்களை உருவாக்கப் பயிற்சி வழங்கவே இந்த அமைப்பு தோற்றுவிக்கப்பட்டது. மக்களுக்கு கத்தோலிக்க சமயத்தைப் பயிற்றுவிக்க கல்வியை ஒரு சாதனமாக இந்த அமைப்பு பயன்படுத்தியது. கத்தோலிக்க சமயத்தை மேம்படுத்துவதற்காக அவர்கள் பல்வேறு கல்வி நிறுவனங்களை அமைத்தனர். இயேசு சங்கம் தேவாலயத்துக்கு உண்மையான சிறந்த தொண்டர்களை உருவாக்குவதில் வெற்றிபெற்றது. ஐரோப்பாவில் தேவாலயங்களின் தரத்தை உயர்த்த ஜெசூட்கள் என்று அழைக்கப்பட்ட இந்த பாதிரிமார்கள் உதவினார்கள்.

பிராட்டஸ்டன்ட் கிளர்ச்சியால் ஏற்பட்ட அச்சுறுத்தலை அடுத்து ரோமானிய தேவாலய நிர்வாகம் பின்பற்றிய நடவடிக்கைகளில் பெரும்பாலானவை தேவாலய நிர்வாகத்தின் தவறான வழிமுறைகளைக் களைதல், போப்பாண்டவரின் அதிகாரத்தை உறுதி செய்வது மற்றும் ஏழு திருவருட்சாதனங்கள் நம்பிக்கையை மீண்டும் ஏற்படுத்துவது (ஞானஸ்நானம், உறுதிபூசுதல், திருவிருந்து, பாவமன்னிப்பு, நோயில் பூசுதல், குருத்துவ துறவறம், திருமணம்) ஆகியனவாகும். எதிர் சீர்திருத்த இயக்கம் என்று இந்த இயக்கம் அழைக்கப்பட்டது. இதன் மூன்று முக்கிய நிகழ்வுகள் என்று குறிப்பிடவேண்டுமெனில், டிரெண்ட் கவுன்சில் , சமயவிசாரணை நீதிமன்றம் மற்றும் கத்தோலிக்க சமயத்தை பிரபலப்படுத்த புதிய சமயப்பள்ளிகளை நிறுவுவது என்பனவாகும்.

டிரெண்ட் கவுன்சில் (1545–1563)

போப் மூன்றாம் பால் கத்தோலிக்க தேவாலய நிர்வாகத்தைச் சீர்திருத்த கார்டினல்கள் என்ற சமயத்தலைவர்களை நியமித்தார். டிரெண்ட் கவுன்சில் 18 ஆண்டுகளில் மூன்று முறை சந்தித்து பைபிள் மீதான நம்பிக்கையை வெளிப்படுத்தியது. தேவாலய போதனைகள் மற்றும் இரட்சிப்பை அடைவதற்கான ஏழு திருஅருட்சாதனங்களை பின்பற்றுவது குறித்தும் நம்பிக்கை வெளியிட்டது. போப்பாண்டவரின் வானளாவிய அதிகாரத்தை உறுதி செய்வது, பாதிரிமார்களின் பிரம்மச்சர்யம் ஆகியன நிலைநிறுத்தப்பட்டன. தேவாலய பணிகளை விற்பது, வேண்டியவர்களுக்கு வேலை வழங்குவது, பிஷப்கள் தங்களின் கீழுள்ள தேவாலய அமைப்புக்களுக்கு செல்லாமல் இருப்பது போன்ற குறைகளை இந்தக் கவுன்சில் களைந்தது. திருஅருட்சாதனங்களில் சொல்லப்பட்டுள்ள அறிவுறுத்தல் பற்றிய கல்வியறிவு பற்றியும் டிரெண்ட் கவுன்சில் வலியுறுத்தியது. அனைத்து தேவாலயங்களிலும் கிறிஸ்து மற்றும் மேரியின் உருவ வழிபாட்டையும் சபை ஆதரித்தது. இந்த டிரெண்ட் கவுன்சில் யால் கத்தோலிக்க சமயம் நல்ல முறையில் ஒருங்கிணைக்கப்பட்டது.

டிரெண்ட் கவுன்சில்

சமயவிசாரணை நீதிமன்றம் (Inquisition)

நீதிவிசாரணைக்கான சிறப்பு தேவாலய நீதிமன்றங்கள் நிறுவப்பட்டு சமயவிரோத நடவடிக்கைகளில் ஈடுபடுவோர் தண்டனை பெற்றனர். சாட்டையடி தொடங்கி உயிருடன் எரிப்பது வரையான உத்திகளைக் கையாண்டு சமயவிரோதிகளை தனது தவறுகளை ஒப்புக்கொள்ள வைப்பது மற்றும் சமயவிரோதப் போக்கை கைவிடவைப்பது போன்றவை முக்கியமான வழிமுறைகளாகும். இது பிராட்டஸ்டன்ட்களை எதிர்கொள்ள ரோமானிய நீதிவிசாரணை அமைப்பு ஏற்படுத்தப்பட்டது. சூனியக்காரிகளை பிடித்து அழிப்பது பொது வழக்கமாக இருந்தது. விவாகரத்தான அல்லது தனித்து வாழும் பெண்கள் சூனியக்காரிகள் என அழைக்கப்பட்டதோடு அவர்களால் தான் பயிர் சாகுபடி இல்லை அல்லது நோய்கள் பரவின என்பன போன்ற குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டன. இத்தகைய பெண்கள் பிடிக்கப்பட்டு கொல்லப்பட்டனர். ஐரோப்பாவில் சுமார் 1 லட்சத்து 10 ஆயிரம் பேருக்கு எதிராக நீதிவிசாரணை நடந்ததாகவும் அவர்களில்

60 ஆயிரம் பேர் விசாரணையின் முடிவில் கொல்லப்பட்டதாகவும் சொல்லப்படுகிறது.

எதிர் சீர்திருத்த நடவடிக்கையின் விளைவுகள்

எதிர் சீர்திருத்த நடவடிக்கைகளின் விளைவாக, ஐரோப்பா சமய அடிப்படையில் பிரிக்கப்பட்டது. நாடுகளுக்குள்ளும், பல எண்ணிக்கையில் சமய நம்பிக்கை உடைய நாடுகளுடனும் போர்கள் மூண்டன. முப்பதாண்டுப் போரானது 1618 முதல் 1648ஆம் ஆண்டு வரை புனித ரோமானிய பேரரசின் பல்வேறு மாகாணங்களில் நடைபெற்றது இந்தப் பிரிவினைக்கு ஓர் உதாரணமாகும். பிராட்டஸ்டன்டுகளின் தேவாலயங்கள் கடுமையானவை; கத்தோலிக்க தேவாலயங்கள் மிகவும் அலங்காரமானவை. இரண்டு சமயக் குழுக்களும் தங்கள் சமய கருத்துகள் மற்றும் எண்ணங்களைப் பரப்பும் ஒரு சாதனமாக கல்வியைப் பயன்படுத்தின.

10.5 புதிய முடியாட்சிகளின் எழுச்சி / தேசிய அரசுகளின் தோற்றம்

நிலப்பிரபுத்துவ காலத்தில் மன்னர்கள் எதிரிகளுடனான போரின்போது ஆயுதங்களை வெடிபொருட்களைப் பெறுவது தொடர்பாக நிலப்பிரபுக்களுடன் ஒப்பந்தத்தை எட்டினார்கள். பதிலுக்கு அவர்களுக்கு அரசர்கள் வீரத்திருமகன் (knighthood) பட்டமும் வரிவசூல் இல்லாத நிலங்களையும் (fief) கொடுத்தார்கள். இத்தகைய பிரபுக்களுக்கு வரிவசூல் அற்ற நிலப்பகுதிகளை அரசர்கள் தங்களுக்கு ஆற்றிய சேவைகளுக்காக வழங்கினார்கள். இந்த உறவு இருதரப்புக்கும் உதவியாக அமைந்தது. மறுமலர்ச்சி மற்றும் சீர்திருத்த இயக்க காலத்தில் புதிய சக்திவாய்ந்த மன்னராட்சி அரசுகள் வலிமைபெற்றன. இந்தக்காலத்தில் பிரபுக்கள்–அரசர்கள் இடையே உறவு சரிவைச் சந்திக்கத் தொடங்கியது.

காரணங்கள்

நிலப்பிரபுத்துவ முறை வீழ்ச்சி

இந்த முறையில் இடைக்கால அரசர்கள் பிரபுக்களின் தயவில் இருந்தார்கள். அரசரின் எதிரிகளுடன் எந்த நேரத்திலும் கைகோர்க்கும் வகையில் பிரபுக்கள் ஆயத்தமாக இருந்தனர். அரச குத்தகை நிலங்கள் மீது அரசர்களுக்கு எந்தக் கட்டுப்பாடும் இருக்கவில்லை. பிரபுக்கள் தங்களுக்குச் சொந்தமான நிலங்களை வைத்திருந்ததோடு தங்களைப் பாதுகாத்துக்கொள்ள ராணுவத்தையும் வைத்திருந்தனர். இம்முறையின் கீழ் அரசரின் நிலையும், அதிகாரமும் குறைந்தே காணப்பட்டது.

இடைக்காலத்தில் ஐரோப்பாவைத் தாக்கிய கொள்ளை நோய் பிரபுத்துவ ஆட்சியை அதன் நடைமுறையை வலுவிழக்கச் செய்தது. பல்லாயிரக்கணக்கான விவசாயிகள், தொழிலாளர்கள் உயிரிழந்ததை அடுத்து பிரபுக்கள் தங்கள் வேலையாட்களை இழந்ததோடு வரிவருமானத்தையும் இழந்தனர். சிலுவைப்போர்களின்போது பெரும் எண்ணிக்கையில் பிரபுக்கள் உயிரிழந்தனர். புதிய மன்னராட்சியை உறுதிப்படுத்துவதில் நிலப்பிரபுத்துவ முறையின் வீழ்ச்சி முக்கியப் பங்காற்றியது.

வெடிமருந்து போன்ற போர்த்தொழில் நுட்பங்களின் பயன்பாடு மாற்றங்களைக் கொண்டுவந்தது. வீரத்திருமகன்களின் போர் உத்திகள் வலுவிழந்ததும் முப்பதாண்டுகாலப் போரின் போது முன்னரங்குக்கு வந்தது. வீரத்திருமகன்களைவிட ஆங்கிலேயர்களின் நீளமான வில்லும் வெடிமருந்தும் மிகப்பெரிய சேதத்தை ஏற்படுத்தியது.

தேவாலய நிர்வாகத்தின் புகழ் மங்குதல்

இடைக்காலத்தில் தேவாலயம் என்பது ஆதிக்கம் மிகுந்த நிறுவனமாக விளங்கியது. தனது கட்டுப்பாட்டின் கீழ் பல நிலப்பகுதிகளை அது கொண்டிருந்தது. மடாலயங்கள், கான்வென்ட் பள்ளிகள்,கட்டிடங்கள்ஆகியதேவாலயநிறுவனங்கள் அதிக அளவில் நிலப்பகுதிகளை கையகப்படுத்தின. இந்த நிலப்பகுதிகள் வரிவிலக்கு பெற்றிருந்தன. தேவாலய நிர்வாகம் தனது ஆளுகையின் கீழ் இருந்த மக்கள் மொத்த உற்பத்தியில் 10 சதவிகிதத்தை 'டைத்' வரியாக செலுத்த வேண்டும் என்று வரி விதித்தது. அரசை விட தேவாலய நிர்வாகம் வளம் கொழித்துக் காணப்பட்டது. தனது பொருளாதார மற்றும் சமய அதிகாரங்களைப் பயன்படுத்தி தேவாலய நிர்வாகம் அரசர்களைவிட அதிக முக்கியத்துவத்தைப் பெற்றது. தேவாலயம் தனக்கென்று தனி நீதித்துறையையும் வைத்திருந்தது. பிஷப்புகள், பாதிரியார்கள், கன்னியாஸ்திரிகள் போன்ற தேவாலய நிர்வாகிகள் தவறு செய்தால் அவர்களை தண்டிக்க தனி நீதிமன்றங்களும் அமைக்கப்பட்டன. அரச நீதிமன்றங்கள் இவர்களை தண்டிக்க முடியாது. இதனால் அரசர்களின் நீதிமன்றங்களுக்கு இருந்த அதிகாரத்தை விட இந்த தனி நீதிமன்றங்கள் அதிகாரம் அதிகம் பெற்றிருந்தன. இது மேலும் அரசர்களின் அதிகாரத்தைக் குறைத்தது. பிரபுக்கள் மற்றும் குடிமக்கள் முன்பாக அரசரை இழிவுபடுத்த அவரை கிறித்தவ சபைக் கூட்ட நடவடிக்கைகளில் இருந்து விலக்கிவைப்பது என்ற சக்திவாய்ந்த நடவடிக்கையை போப்பாண்டவர் மேற்கொண்டார்.

12th_History_TM_Unit_10_V2.indd 162 02-01-2023 16:38:36

போப் ஏழாம் கிரிகோரி

தனது கட்டளைகளை மதித்து நடக்காத ஜெர்மனியின் நான்காம் ஹென்றியை கிறித்தவ சபை நடவடிக்கைகளில் இருந்து விலக்கிவைத்து போப் ஏழாம் கிரிகோரி உத்தரவிட்டார். எனவே அரசர்கள் தேவாலய நிர்வாகத்துக்கு எதிரான நிலைப்பாட்டை எப்போதும் எடுக்கமுடியாத நிலை இருந்தது. ஆனால் கொள்ளை நோய்க்கான காரணங்களை தேவாலய நிர்வாகத்தால் விவரிக்க முடியாமல் போனதையடுத்து அதன் நிலை தாழ்ந்தது. போப்பாண்டவரின் அதிகாரம் குறித்து உயர் நிலையில் இருந்தவர்கள் அடிக்கடி கேள்வி எழுப்பினார்கள்.

ஸ்பெயின் தேசிய அரசாக உருவெடுத்தல்

அராபிய அரசர்களின் வழித்தோன்றல்களாகிய முஸ்லிம் மன்னர்களாகிய மூர்களின் கட்டுப்பாட்டில் ஸ்பெயினின் பெரும்பாலான பகுதிகள் இருந்தன. அராகன், காஸ்டைல் என இரண்டு முக்கிய அரசுகள் அங்கிருந்தன. ஸ்பெயின் நாட்டின் வரலாற்றில் ஒரு திருப்புமுனையாக அராகன் அரசர் பெர்டினான்ட், காஸ்டைல் இளவரசி இசபெல்லாவை மணமுடித்தார். மூர்களை விரட்டி அடிக்க ஒன்றிணைந்து போராடிய அவர்கள் ஸ்பெயினை இணைக்கவும் கடினமாக உழைத்தனர். 1479இல் அரசரும் அரசியும் தங்கள் கைகளில் அதிகாரத்தை எடுத்தனர். மன்னர், சபையில் இருந்து பிரபுக்களை நீக்கியதன் மூலம் அவர்களைக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவந்தார். ஸ்பெயின் ஒரு தனி நாடாக உருவெடுத்தது.

ஸ்பெயினை ஒன்றாக இணைத்து ஆட்சி செய்த பெர்டினான்ட்–இசபெல்லா இருவரும் மிக ஆழமான பற்றுகொண்ட கத்தோலிக்கர்கள் ஆவர். மூர்களின் ஆட்சியில் ஸ்பெயினின் பொருளாதாரத்தைக் கட்டுப்படுத்திய யூதர்கள் பெரும் சுதந்திரத்தை அனுபவித்தனர். இப்போது மூர்களும் யூதர்களும் கிறித்தவ சமயத்தை தழுவுமாறு கட்டாயப்படுத்தப்பட்டனர். ஸ்பெயின் நாட்டின் நீதிவிசாரணை அமைப்பை அரசர் அமைத்தார். அதன் மூலம் மதம்மாறிய யூதர்களும் மூர்களும் தீவிரக் கண்காணிப்பில் வைக்கப்பட்டனர். சமய நம்பிக்கை அற்றவர்கள் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு துன்புறுத்தப்பட்டு எரியூட்டப்பட்டனர். அரண்மனை தேவாலயத்தை விட அதிகாரம் அதிகம் பெற்றதாக விளங்கியது.

அமெரிக்காவுக்கான கடல்வழிப் பாதையை கொலம்பஸ் கண்டுபிடித்தது, இன்கா மற்றும் அஸ்டெக் அரசுகளை கைப்பற்றியது ஆகியன ஸ்பெயினின் வளம் அதிகரிக்க வழி செய்தது. இதனால் வளம்பெற்ற ஸ்பெயின் ஐரோப்பிய அரசியலில் முக்கியப் பங்காற்றத் தொடங்கியது.

இங்கிலாந்து தேசிய அரசாக உருவெடுத்தல்

அரச சிம்மாசனத்தை அடைய யார்க் குடும்பம் மற்றும் லன்காஸ்டர் குடும்பம் என இரண்டு அரச குடும்பங்களுக்கு இடையே மோதல் ஏற்பட்டது. இதன் விளைவாக ரோஜாப்பூக்கள் போர் நடந்தது (அவர்கள் முறையே வெள்ளை மற்றும் சிவப்பு ரோஜாக்கள் உடைய அடையாளக்குறிகளை அணிந்தனர், அதனால் இப்பெயர் பெற்றது). இந்த உள்நாட்டுப்போரில் ஹென்றி டியூடர் வெற்றி வாகை சூடி, இங்கிலாந்தில் புதிய அரசராட்சி அமைய வழிவகுத்தார். ஏழாம் ஹென்றி என்று பட்டம் சூட்டிக்கொண்ட அவர் யார்க் குடும்பத்தைச் சேர்ந்த எலிசபெத் உடன் திருமண ஒப்பந்தத்தில் ஈடுபட்டார். இதனால் இங்கிலாந்து ஒரு தேசிய அரசாக உருவெடுத்தது.

தனது ஆட்சிக்கு பிரபுக்களால் ஏற்பட்ட அச்சுறுத்தலை நீக்க ஏழாம் ஹென்றி முடிவு செய்தார். பிரபுக்கள் தங்களுக்கு என தனி முத்திரை, சீருடை, பராமரிப்பு உடைய ராணுவங்களை வைத்திருந்தனர். மன்னரானவுடன் ஹென்றி இந்த வழக்கத்தை ஒழித்தார். வர்த்தக வகுப்பினர் மற்றும் சில சிறுபான்மை பிரபுக்களின் ஆதரவுடன் நாடாளுமன்றத்தில் சட்டங்களை இயற்றினார். கிளர்ச்சி செய்யும் பிரபுக்களை அரச சபையின் விசாரணைக்கு உட்படுத்த நட்சத்திர சேம்பர் என்ற சிறப்பு நீதிமன்றத்தை அவர் ஏற்படுத்தினார். பிரபுக்களிடம் இருந்து அரசாங்கம் அபராதப்பணம் வசூலித்ததை அடுத்து அரச வருமானம் அதிகரித்தது. வரி வசூலிக்கும் உரிமையையும் நாடாளுமன்றம் அரசருக்கு வழங்கியது. 1485 முதல் 1509ஆம் ஆண்டு வரை ஆட்சி செய்த ஏழாம் ஹென்றி அரசாங்கத்தின் மீது முழு கட்டுப்பாட்டையும் பெற்றார்.

தனது மூத்த மகளை ஸ்காட்லாந்து இளவரசருக்கு மணம் முடித்த அவர் ஸ்காட்லாந்து உடனான உறவுகளை பலப்படுத்தினார். அவர் தனது மகன் ஸ்பெயினின் இளவரசியை திருமணம் செய்து கொண்டதன் மூலம் ஸ்பெயினுடனும் திருமண உறவைப் பேணி வந்தார்.

12th_History_TM_Unit_10_V2.indd 163 02-01-2023 16:38:37

பிரபுக்களைப் பின்பற்றுவோருக்கு அடையாளக்குறிகள் மற்றும் சீருடை வழங்கும் முறை நடைமுறைப்படுத்தப்பட்டது. பிரபுக்களின் சொத்துக்கள் தொடர்பான வழக்குகளை விசாரிக்க நட்சத்திர சேம்பர் என்ற பெயரில் நீதிமன்றத்தை ஏழாம் ஹென்றி உருவாக்கினார். நீதிமன்ற நடைமுறைகள் நடந்த வெஸ்ட்மினிஸ்டர் அரண்மனையின் மேல் சுவரில் நட்சத்திரங்கள் ஓவியமாக தீட்டப்பட்டிருந்ததால் இந்தப் பெயர்.

பிரான்ஸ் தேசிய அரசாக உருவெடுத்தல்

பிரான்சின் கிழக்கே உள்ள பர்கண்டி என்பது ஒரு சக்திவாய்ந்த நாடாகும். பெயரளவிற்கே பிரான்ஸ் அரசரின் கட்டுப்பாட்டின் கீழ் இருந்த கிளர்ச்சிமிகுந்த பகுதியான பர்கண்டியை ஆங்கிலேயர்கள் பிரான்சுக்கு எதிராக ஆக்கிரமித்தனர். பிரான்சின் வளமிக்க மேற்குப்பகுதிகளும் நீண்ட காலத்துக்கு ஆங்கிலேயரின் கட்டுப்பாட்டில் இருந்தது. பிரான்சை ஆண்ட வாலெசைய்ஸ் மரபு ஆங்கிலேயக் கட்டுப்பாட்டில் இருந்து பிரெஞ்சு பகுதிகளை மீட்கவும் வைத்திருக்கவும் போராடியது. பதினான்காம் நூற்றாண்டின் தொடக்கம் மற்றும் பதினைந்தாம் நூற்றாண்டின் இடைப்பகுதி வரை நீடித்த 100 ஆண்டுகள் போர் நடந்தது. இப்போர் நூறாண்டுப் போர் என்றழைக்கப்படுகிறது. இந்தப் போரில் பிரெஞ்சு அரசர் ஏழாம் சார்லசுக்காக ஜோன் ஆஃப் ஆர்க் என்ற பெயருடைய ஒரு இளம்பெண் வீரதீரமாகப் போரிட்டு ஆர்லியன்ஸ் போரை வென்றார். ஆர்லியன்ஸின் பணிப்பெண் (Maid of Orleans) என்ற பட்டம் ஜோன் ஆஃப் ஆர்க் மங்கைக்கு வழங்கப்பட்டது. எனினும் ஆங்கிலேயரால் கைப்பற்றப்பட்ட அவர், அசரீரி மூலம் வழிகாட்டப்பட்டதாக அவர் கூறியதற்காக நீதிமன்றத்தால் விசாரிக்கப்பட்டார். அவர் சூனியக்காரி என்று கண்டனம் செய்யப்பட்டு 1430இல் உயிருடன் எரிக்கப்பட்டார். (1920ஆம் ஆண்டு அவருக்கு கத்தோலிக்க திருச்சபை புனிதர் பட்டம் வழங்கியது).

ஜோன் ஆஃப் ஆர்க்கின் மறைவுக்குப் பிறகு நூறாண்டுகள் போரைத் தொடர்ந்த பிரெஞ்சு அரசு அதில் வெற்றி பெற்றது. ஆங்கிலேயர்களை நாட்டை விட்டு விரட்டிய பிறகு, ஏழாம் சார்லஸின் மகன் பதினோறாம் லூயி பர்கண்டி திரும்பினார். கிளர்ச்சி மிகுந்த இந்தப் பகுதி இறுதியாக 1483ஆம் ஆண்டு பிரான்சின் கட்டுப்பாட்டின் கீழ் வந்தது. பிரான்ஸ் ஒரு வலுவான மத்திய மன்னராட்சி நடைபெறும் அரசாக உருவெடுத்தது. பதினோறாம் லூயி பிரான்சை வலுப்படுத்தி ஒன்றுபடுத்தினார். முதன்முறையாக பிரான்ஸ் வரலாற்றில் அரசரின் கீழ் பிரபுக்களை சார்ந்திருக்காமல் ஒரு நிரந்தர ராணுவம் உருவாக்கப்பட்டது. அவரது அரச சபையில் பிரபுக்களை விட வழக்குரைஞர்கள் அதிகம் இருந்தனர். இதனால் அரச நடவடிக்கைகளில் பிரபுக்களின் ஆளுமை குறைந்தது.

பதினோறாம் லூயி

பாடச் சுருக்கம்

- இத்தாலிய மறுமலர்ச்சி மற்றும் மேற்கத்திய ஐரோப்பாவுக்கான அதன் பரவல் விவாதிக்கப்பட்டது.
- மறுமலர்ச்சிகால முக்கிய அறிஞர்கள், கலைஞர்கள் மற்றும் விஞ்ஞானிகளின் சிறப்பு குறிப்புகளுடன் இலக்கியம், கலை மற்றும் அறிவியலில் ஏற்பட்ட மறுமலர்ச்சி பற்றி விவரிக்கப்பட்டுள்ளது.
- பதினைந்தாம் மற்றும் பதினாறாம் நூற்றாண்டின் புவியியல் கண்டுபிடிப்புகளுக்கு காரணமான காரணிகள் குறித்து ஆராயப்பட்டது.
- போர்த்துகல் மற்றும் ஸ்பெயின் நாடுகளின் முக்கியப் பணி எடுத்துரைக்கப்பட்டது.
- கடல் பயணங்களில் இதர ஐரோப்பிய நாடுகளின் முயற்சிகளும் விவரிக்கப்பட்டன.
- வர்த்தகப் புரட்சியும் அதன் வீழ்ச்சியும் விளக்கப்பட்டன.
- சீர்திருத்த இயக்கத்தின் காரணங்கள் ஆராயப்பட்டன.
- மார்ட்டின் லூதர், ஸ்விங்கிளி, கால்வின் ஆகியோரின் பங்களிப்பு ஆங்கிலேய சீர்திருத்த இயக்கத்தின் பிரத்யேக இயல்பில் கவனம் செலுத்தி ஆராயப்பட்டது.
- கத்தோலிக்க திருச்சபையின் எதிர்–சீர்திருத்த நடவடிக்கைகள் மற்றும் அதன் தாக்கங்கள் விவரிக்கப்பட்டன.
- மேற்கு ஐரோப்பாவில் புதிய முடியாட்சிகளின் எழுச்சிக்கு வழிவகுத்த சூழ்நிலைகள் ஆராயப்பட்டன.
- ஸ்பெயின், இங்கிலாந்து, பிரான்ஸ் ஆகியவை தேசிய அரசுகளாக உருவானது பற்றி விவரிக்கப்பட்டது.

12th_History_TM_Unit_10_V2.indd 164 02-01-2023 16:38:37

www.tntextbooks.in

பயிற்சி

I சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்.

1. கீழ்க்கண்டவற்றில் எது சுதந்திரமான வர்த்தக நகரம் இல்லை?
   (அ) நூரெம்பெர்க் (ஆ) ஆன்ட்வெர்ப்
   (இ) ஜெனோவா (ஈ) செயின்ட் பீட்டர்ஸ்பர்க்

2. கீழ்க்கண்டவற்றில் எது சமயத்தை இரண்டாம் நிலைக்கு தள்ளியது?
   (அ) மறுமலர்ச்சி
   (ஆ) சமயச் சீர்திருத்தம்
   (இ) புவியியல் கண்டுபிடிப்பு
   (ஈ) வர்த்தகப் புரட்சி

3. கீழ்க்கண்ட போப்பாண்டவர்களில் இத்தாலிய மறுமலர்ச்சிக்கு ஆதரவாகச் செயல்படாதவர் யார்?
   (அ) ஐந்தாம் நிக்கோலஸ்
   (ஆ) இரண்டாம் ஜூலியஸ்
   (இ) இரண்டாம் பயஸ்
   (ஈ) மூன்றாம் பால்

4. வெளிநாட்டு நிறுவனங்களுக்கு எவருடைய வெற்றி பெரிதும் ஊக்கம் தந்தது?
   (அ) மார்க்கோ போலோ
   (ஆ) ரோஜர் பேக்கன்
   (இ) கொலம்பஸ்
   (ஈ) பார்தோலோமியோ டயஸ்

5. **கூற்று:** காகிதம் கி.மு (பொ.ஆ.மு) இரண்டாம் நூற்றாண்டில் சீனாவில் தோன்றியது.
   காரணம்: நகரும் அமைப்பிலான அச்சு இயந்திரத்தை ஜெர்மனி கண்டுபிடித்தது.
   (அ) கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி. காரணம் கூற்றை விளக்குகிறது.
   (ஆ) கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி. ஆனால் காரணம் கூற்றை விளக்கவில்லை.
   (இ) கூற்று சரி. காரணம் தவறு
   (ஈ) கூற்று தவறு. காரணம் சரி

6. பின்வருவனவற்றில் எது மறுமலர்ச்சி காலத்தில் உருவாக்கப்பட்ட ஒரு யோசனை அல்ல?
   (அ) பகுத்தறிவுவாதம் (ஆ) ஐயுறவுவாதம்
   (இ) அரசில்லா நிலை (ஈ) தனித்துவம்

7. நவீன செயல்முறை அறிவியலின் தந்தை எனக் கருதப்படுபவர் யார்?
   (அ) அரிஸ்டாட்டில் (ஆ) பிளாட்டோ
   (இ) ரோஜர் பேக்கன் (ஈ) லாண்ட்ஸ்டெய்னர்

8. மனிதகுலத்தை சமயமரபு அல்லது அதிகாரம் மூலமாக ஆட்சி செலுத்தாமல் காரணங்கள் மூலம் ஆட்சி செலுத்தவேண்டும் என்று விரும்பியவர் யார்?
   (அ) தாந்தே (ஆ) மாக்கியவல்லி
   (இ) ரோஜர் பேக்கன் (ஈ) பெட்ரார்க்

9. துருக்கியர்களுக்கு எதிரான போரில் மேற்கத்திய நாடுகளின் உதவியை நாடி இத்தாலிக்கு சென்றவர் யார்?
   (அ) ஜியோவனி அவுரிஸ்பா
   (ஆ) மேனுவல் கிரைசாலொரஸ்
   (இ) ரோஜர் பேக்கன்
   (ஈ) கொலம்பஸ்

10. **கூற்று:** கலிலியோ கலிலி தேவாலய விரோத போக்குக்காக கிறித்தவ திருச்சபையால் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டார்.
    காரணம்: சூரியனை மையமாக வைத்து கோள்கள் சுற்றுகின்றன என்ற கோபர்நிகஸின் சூரியமையக் கோட்பாட்டை அவர் ஏற்றார்.
    (அ) கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி. காரணம் கூற்றை விளக்குகிறது.
    (ஆ) கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி. ஆனால் காரணம் கூற்றை விளக்கவில்லை.
    (இ) கூற்று சரி. காரணம் தவறு
    (ஈ) கூற்று தவறு. காரணம் சரி.

11. கீழ்க்கண்டவற்றில் எது சரியான அறிக்கை அல்லது அறிக்கைகள்?
    அறிக்கை I: இத்தாலியர்கள் தாங்கள் பண்டைய வைக்கிங்கின் வழித்தோன்றல்கள் என்ற நம்பிக்கையை பாதுகாக்க முயன்றனர்.
    அறிக்கை II: துப்பாக்கிகள் மற்றும் வெடிமருந்து மூலமாக கடல் பயண ஆபத்துகள் குறைக்கப்பட்டன.
    அறிக்கை III: கிறித்தவ சமயத்தைப் பரப்பும் ஆர்வம் புதிய நிலப்பகுதிகளை கண்டுபிடிப்பதில் ஊக்கம் தந்தது.
    அறிக்கை IV: பெர்டினான்ட் மெகல்லன் மேற்குநோக்கிப் பயணித்து பிரேசிலைக் கண்டுபிடித்தார்.
    (அ) I, II மற்றும் III (ஆ) II மற்றும் III
    (இ) I மற்றும் III (ஈ) அனைத்தும் சரி

12th_History_TM_Unit_10_V2.indd 165 02-01-2023 16:38:37

www.tntextbooks.in

12. கீழ்க்கண்டவற்றில் எது லியானர்டோ டாவின்சியின் ஓவியம் இல்லை?
(அ) வர்ஜின் ஆஃப் தி ராக்ஸ்
(ஆ) இறுதி விருந்து
(இ) மோனலிசா
(ஈ) மடோனாவும் குழந்தையும்

13. போப்பாண்டவரால் கட்டப்பட்ட ரோமில் உள்ள செயின்ட் பீட்டர்ஸ் தேவாலயத்தை நவீனமயமாக்கியவர் யார்?
(அ) டோனடெல்லா
(ஆ) ரபேல்
(இ) லியானர்டோ டாவின்சி
(ஈ) மைக்கேல் ஆஞ்சிலோ

14. கீழ்க்கண்டவற்றில் எது சரியாக பொருத்தப்படவில்லை?
(அ) மார்லோவ் – டிடோ
(ஆ) ஷேக்ஸ்பியர் – கிங் லியர்
(இ) பிரான்சிஸ் பேக்கன் – நோவும் ஆர்கனும்
(ஈ) ரோஜர் பேக்கன் – டெக்கமரான்

15. **கூற்று:** துருக்கிய வெற்றிகளும் கான்ஸ்டான்டிநோபிளின் வீழ்ச்சியும் கிழக்குப் பகுதிக்கு ஒரு கடல் வழித்தடத்தை கண்டுபிடிக்க ஊக்கமாக இருந்தது.
காரணம்: கிழக்கில் இருந்து கிடைக்கும் பொருட்களின் தேவைகள் அதிகரித்ததால் கடல்வழி வாணிபத்தை கட்டுப்படுத்த ஐரோப்பிய நாடுகள் விரும்பின.
(அ) கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி. காரணம் கூற்றை விளக்குகிறது.
(ஆ) கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி. ஆனால் காரணம் கூற்றை விளக்கவில்லை.
(இ) கூற்று சரி காரணம் தவறு
(ஈ) கூற்று தவறு காரணம் சரி.

16. மெகல்லனின் மறைவுக்குப் பிறகு எந்தக் கப்பல் திரும்பியது?
(அ) சாண்டா மரியா (ஆ) பிண்ட்டா
(இ) நினா (ஈ) விட்டோரியா

17. ஸ்பெயினுக்காக மெக்சிகோவைக் கைப்பற்றியவர் யார்?
(அ) பெட்ரோ காப்ரல் (ஆ) கொலம்பஸ்
(இ) ஹெர்னன் கார்ட்ஸ் (ஈ) ஜேம்ஸ் குக்

18. இங்கிலாந்தில் எட்டாம் ஹென்றியால் மேலாதிக்கச் சட்டம் நிறைவேற்றப்பட்ட ஆண்டு எது?
(அ) 1519 (ஆ) 1532 (இ) 1533 (ஈ) 1534

19. **கூற்று:** கொள்ளை நோய்க்கான காரணங்களை விளக்க முடியாததால் கொள்ளை நோய் தேவாலயத்தின் நிலையை பலவீனப்படுத்தியது
காரணம் : போப்பாண்டவரின் அதிகாரம் பெரும் சவால்களை எதிர்கொண்டது.
(அ) கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி. காரணம் கூற்றை விளக்குகிறது.
(ஆ) கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி. ஆனால் காரணம் கூற்றை விளக்கவில்லை.
(இ) கூற்று சரி காரணம் தவறு
(ஈ) கூற்று தவறு காரணம் சரி.

20. ஏழாம் கிரிகோரியால் கத்தோலிக்க திருச்சபை நடவடிக்கைகளில் இருந்து விலக்கி வைக்கப்பட்ட ஆட்சியாளர் யார்?
(அ) ஏழாம் ஹென்றி
(ஆ) எட்டாம் ஹென்றி
(இ) இரண்டாம் ஹென்றி
(ஈ) நான்காம் ஹென்றி

II. குறுகிய விடையளிக்கவும்.

1. கிறித்தவ சீர்திருத்த இயக்கத்துக்கு எராஸ்மஸ் எவ்வாறு வழியமைத்தார்?
2. பிளாரன்ஸின் மெடிசி குடும்பம் பற்றி குறிப்பு வரைக.
3. 1493ஆம் ஆண்டின் போப்பின் ஆணை பற்றி நீவிர் அறிந்ததென்ன?
4. ஸ்பெயின் நாட்டு கப்பற்படையின் குறிப்பிடத்தகுந்த விளைவு என்ன?
5. வோர்ம்ஸ் சபையின் வெளிப்பாடு என்ன என்று தெரிவிக்கவும்.
6. நட்சத்திர சேம்பர் உருவாக்கப்பட்டதன் நோக்கம் என்ன? அது ஏன் அவ்வாறு அழைக்கப்பட்டது?
7. இடைக்காலத்தின் பிற்பகுதியில் நிலப்பிரபுத்துவ நடைமுறை ஏன் தோல்வி கண்டது?
8. ஸ்பெயினில் சமயவிசாரணை நீதிமன்ற அமைப்பு என்ன செய்தது?
9. டிரெண்ட் கவுன்சில் யின் பணி என்ன என்று எடுத்துரைக்கவும்.
10. வரலாற்றில் ஜோன் ஆஃப் ஆர்க் மங்கையினை நினைவு கூறப்படுவது ஏன்?

III. சுருக்கமாக விடையளிக்கவும்.

1. மறுமலர்ச்சியின் தாயகமாக இத்தாலி விளங்கியது ஏன்?
2. மறுமலர்ச்சி காலத்தில் இங்கிலாந்தில் ஏற்பட்ட இலக்கிய சாதனைகளை குறிப்பிடவும்.
3. இத்தாலிய மற்றும் ஆங்கிலேய கடல்பயணிகளின் சாதனைகள் என்ன?

12th_History_TM_Unit_10_V2.indd 166 02-01-2023 16:38:37

4. வர்த்தகப் புரட்சியின் எதிர்மறை விளைவுகள் என்ன?
5. ஐரோப்பாவில் எதிர்சீர்திருத்த இயக்கத்துக்கு இயேசு சங்கத்தின் பங்களிப்பு பற்றி விவாதிக்கவும்.
6. 1492இல் கொலம்பஸ் மேற்கொண்ட பயணம் பற்றி குறிப்பு வரைக.
7. போர்த்துகீசிய கடல்பயணி பெட்ரோ காப்ரல் இந்தியாவுக்கு மேற்கொண்ட பயணம் பற்றி குறிப்பிடுக.

IV. விரிவான விடையளிக்கவும்.

1. இத்தாலிய மறுமலர்ச்சிக்கு பிளாரன்ஸ் நகர மக்கள் ஆற்றிய பங்களிப்பை ஆராயவும்.
2. இங்கிலாந்து, பிரான்ஸ், ஸ்பெயின் ஆகியவை தேசிய அரசுகளாக உருவெடுத்தமை பற்றி ஒருங்கிணைந்த முறையில் ஆராயவும்.
3. கிழக்குப் பகுதிக்கு புதிய கடல் வழித்தடங்களை கண்டுபிடிப்பதில் போர்த்துகல் மற்றும் ஸ்பெயின் ஆகிய நாடுகளின் முன்முயற்சிகளை விவரிக்கவும். நவீன உலகின் பொருளாதார வரலாற்றில் ஏன் இது மிக முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வாக கருதப்படுகிறது?
4. பிராட்டஸ்டன்ட் சீர்திருத்த இயக்கத்துக்கான காரணங்கள் யாவை? ஜெர்மனியில் மார்ட்டின் லூதர் இந்த இயக்கத்தை எவ்வாறு ஒருங்கிணைத்தார்?

V. செயல்பாடுகள்.

1. பகுத்தறிவின் காலம் பற்றிய பொருள் மற்றும் முக்கியத்துவம் பற்றி ஆசிரியர்கள் மாணவர்களுடன் விவாதிக்க வேண்டும்.
2. உலக புறஎல்லை வரைபடத்தில் கொலம்பஸ், வாஸ்கோடகாமா, மெகல்லன் ஆகியோர் சென்ற கடல்வழித்தடங்களைக் குறிக்கவும்.
3. மறுமலர்ச்சி தொடர்பான வீடியோ பதிவுகளை மாணவர்கள் இணையத்தில் காணலாம்.
4. வட மற்றும் தென் அமெரிக்காவின் பூர்வகுடிகள் மீது ஐரோப்பியர்கள் நடத்திய இனப்படுகொலை குறித்த திரைப்படங்கள்/வீடியோ பதிவுகளை மாணவர்கள் காணலாம்.

மேற்கோள் நூல்கள்

- Peter Burke. *The Italian Renaissance*. Cambridge: Polity Press, 2010.
- Cameron Euan. *Early Modern Europe*. Oxford: Oxford University Press, 2001.
- E. H. Gombrich. *A Little History of the World*. London: Yale University Press, 2008.
- Stephen J.Lee *Aspects of European History 1494–1789*. London: Routledge, 1978.
- Edward McNall Burns, *Western Civilizations*, Vol. 2, New York: W.W. Norton, 1973.

மேலும் வாசிக்கத்தகுந்த நூல்

- நா. பக்தவத்சலு, புகுமுக வகுப்பு உலக வரலாறு. (கி.பி. 15ஆம் நூற்றாண்டிலிருந்து), தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம், சென்னை (ஆவணப் பதிப்பு: ஆகஸ்ட் – 2017).

இணையதள வளங்கள்

- https://www.history.com/topics/reformation/martin-luther-and-the-95-theses
- http://www.newworldencyclopedia.org/entry/John_Calvin
- http://www.bbc.co.uk/history/british/tudors/english_reformation_01.shtml kids.britannica
- http://www.vcsd.k12.ny.us/cms/lib/NY24000141/Centricity/Domain/941/Impact%20of%20the%20Reformation%202.ppt
- https://www.coreknowledge.org/wp-content/uploads/2017/03/CKHG-G5-U5-about-the-counter-reformation.pdf

12th_History_TM_Unit_10_V2.indd 167 02-01-2023 16:38:37

A-Z கலைச்சொற்கள்

சமய நம்பிக்கையின்மை, எதிலும் அவநம்பிக்கையாக இருத்தல்	**scepticism**	doubt about the truth of something, disbelief
வெறுப்புத் தருகிற, தொந்தரவூட்டுகிற	**irksome**	irritating, teasing
பகைத்துக்கொள்வது, விரோதமூட்டுவது	**antagonise**	act in opposition to, counteract
போலந்து நாட்டையோ, அதன் மக்களையோ, அதன் மொழியையோ குறிப்பிடுவது	**polish**	relating to Poland or its people or its language
மதங்களுக்கெதிரான கொள்கை	**heresy**	a belief that rejects the orthodox tenets of a religion
அறிவனைத்தும் அனுபவத்தால் பெறப்படுபவையே எனும் கோட்பாடு	**empiricism**	the doctrine that holds that the most reliable source of knowledge is from experience or experimentation
வரையறை, எல்லைப் பிரிவினை	**demarcation**	dividing line
பதிலடி கொடு, பழிவாங்கு	**retaliate**	revenge, avenge
ஒருவரிடத்தில் மற்றொருவரை அமர்த்து, தள்ளி வை	**supercede**	replace, take the place of
இலாபகரமான, ஆதாயமளிக்கிற	**lucrative**	producing a sizeable profit, money spinning
ஒப்புக்கொள்ள மறு, பொறுப்பைத் தட்டிக்கழி	**disavow**	refuse to acknowledge
பறிமுதல்	**confiscation**	seizure of property
(திருச்சபை) உட்பிளவு, பிரிவினைக் குழு	**schism**	a division, split
சமரசப்படுத்துதல், ஒத்துப்போதல்	**reconciliation**	restoring friendly relations
பின்பற்றுதல், கடைப்பிடித்தல்	**adherence**	faithfully following a party or religion
மறை மாவட்டம்	**diocese**	the territorial jurisdiction of a bishop
சமயத்துறை வினாவிடை ஏடு	**catechism**	religious instruction in question and answer form
திரும்பப்பெறல்	**recantation**	withdrawal of an early assertion
நீதி விசாரணை	**inquisition**	interrogation, cross-examination
கிறித்தவ திருச்சபை சார்ந்த	**ecclesiastical**	associated with church
கொந்தளிப்பான, கிளர்ந்தெழுகிற	**turbulent**	characterised by unrest, troubled

12th_History_TM_Unit_10_V2.indd 168 02-01-2023 16:38:37

www.tntextbooks.in

இணையச் செயல்பாடு

நவீன உலகம்: பகுத்தறிவின் காலம்

இந்த செயல்பாட்டின் மூலம் உலக நாடுகளில் உள்ள கலை மற்றும் ஓவிய வரலாற்றை படவிளக்கத்துடன் தெரிந்து கொள்ள முடியும்.

படிநிலைகள்

படி – 1 : URL அல்லது QR குறியீட்டினைப் பயன்படுத்தி இச்செயல்பாட்டிற்கான இணையப் பக்கத்திற்கு செல்க

படி – 2 : தோன்றும் உலக வரைபடத்தில் எதாவது ஒரு இடத்தை தேர்ந்தெடுக்கவும் (உதாரணம்: ஐரோப்பா), பின்னர் இடது பக்க மெனுவில் தோன்றும் காலவரிசையை எதாவது ஒன்றை சொடுக்கவும் (உதாரணம்: கி.பி.1400–1600)

படி – 3 : மறுமலர்ச்சி கால கலை மற்றும் ஓவியங்களை காண பக்கத்தின் கீழே சுழற்றவும்.

படி 1



படி 2



படி 3

உரலி: https://www.metmuseum.org/toah/chronology/

*படங்கள் அடையாளத்திற்கு மட்டுமே.

*தேவையெனில் Adobe Flash ஐ அனுமதிக்க.

12th_History_TM_Unit_10_V2.indd 169 02-01-2023 16:38:39

அலகு 11 புரட்சிகளின் காலம்

கற்றலின் நோக்கங்கள்

கீழ்க்கண்டவற்றைப் பற்றி அறிந்துகொள்ளல்

- அமெரிக்க விடுதலைப் போருக்கான காரணங்கள், அதன் போக்கு, விளைவுகள் ஆகியவற்றை அறிந்துகொள்ளல்
- பிரெஞ்சுப் புரட்சி, அதற்கான காரணங்கள், போக்கு, ஐரோப்பாவின் மீதும் உலக நாடுகளின் மீதும் ஏற்படுத்திய தாக்கத்தினைப் புரிந்துகொள்ளல்
- லத்தீன் அமெரிக்க புரட்சியினை புரிந்துகொள்ளல்
- முதலில் இங்கிலாந்திலும் பின்னர் ஜெர்மனி, அமெரிக்கா ஆகிய நாடுகளில் நடைபெற்ற தொழிற்புரட்சியின் தொடக்கத்தை அறிந்துகொள்ளல்

6AGU9

அறிமுகம்

நிலவியல் கண்டுபிடிப்புகள், மறுமலர்ச்சி, சமய மறுமலர்ச்சி, "முடியரசர்களின் காலம்" ஆகியவற்றின் காரணமாக, பதினெட்டாம் நூற்றாண்டின் தொடக்கத்தில், உலகம் முழுவதிலும், அரசியல், சமய, சமூக, பொருளாதார நிலைகள் மாற்றமடையத் தொடங்கின. பதினெட்டாம் நூற்றாண்டு முடிவடைகின்ற தருவாயில் இரு புரட்சிகள் நடைபெற்றன. அவை அமெரிக்க புரட்சி (1775–83), பிரெஞ்சுப் புரட்சி (1789–95) ஆகியனவாகும். இப்புரட்சிகள் முடியாட்சிமுறை சார்ந்த அரசாங்கங்களுக்கு பெரும் வீழ்ச்சியைக் கொடுத்ததோடு, அதற்குப் பின்னரான மனிதகுல வரலாற்றின்மீது நிலையான தாக்கத்தினையும் ஏற்படுத்தின. இப்புரட்சிகள் மக்களின் வாழ்க்கையில் பல மாற்றங்களை ஏற்படுத்தியது. அத்துடன் வேளாண்மையை அடிப்படையாகக் கொண்ட பொருளாதாரமானது ஆலையை அடிப்படையாகக் கொண்ட பொருளாதாரமாக மாற்றம்பெறும் புதிய காலகட்டத்தை அடைந்தது. மேற்சொல்லப்பட்ட, உலக முக்கியத்துவம் வாய்ந்த செய்திகளைப் புரிந்து கொள்ள இப்பாடம் நமக்கு உதவும்.

11.1 அமெரிக்க விடுதலைப் போர்

கண்டுபிடிப்புகளின் காலம் என்றறியப்படும் காலப்பகுதியில், துணிச்சல்மிக்க கடலோடிகள் புதிய உலகம் என்று சொல்லப்பட்ட நிலப்பகுதிகளில் ஆய்வு மேற்கொண்டதோடு, அரசர்களின் உதவியுடன் புதிய வணிகப்பாதைகளையும் கண்டுபிடித்தனர். இது மேம்பட்ட தொடர்புகளையும் லாபத்தையும் உறுதிப்படுத்தியது. புதிய இடங்களில் ஆய்வுகள் மேற்கொள்ளுதல், வணிக மையங்களை உருவாக்குதல், பின்னர் காலனிகளை ஏற்படுத்துதல் ஆகியவற்றில் தொடக்கத்தில் ஸ்பெயின், போர்த்துகல் ஆகிய நாடுகள் முன்னணி வகித்தாலும் இங்கிலாந்துதான் உலகம் முழுவதிலும் காலனிகளை ஏற்படுத்தி அவற்றை நீண்டகாலம் வெற்றிகரமாகவும் கட்டுப்படுத்தியது. வடஅமெரிக்காவில் ஆங்கிலேயர்களே முதன் முதலாக குடியேறினார்கள் என்றாலும், காலப்போக்கில் ஜெர்மானியர், ஸ்வீடன் நாட்டைச் சேர்ந்தோர், பிரெஞ்சுக்காரர்கள், இத்தாலியர்கள், டச்சுக்காரர்கள் ஆகியோரும் அமெரிக்கா சென்று குடியமர்ந்தனர். மிக விரைவாகப் பொருளாதார வளர்ச்சி ஏற்பட்டுக் கொண்டிருந்த ஒரு காலகட்டத்தில், ஐரோப்பிய மக்கட்தொகைப் பெருக்கத்தை புதியஉலகில் உருவாக்கப்பட்ட காலனிகள், தங்கள் பக்கம் ஈர்த்துக் கொண்டன.

மேபிளவர் கப்பல்

அரசர் முதலாம் ஜேம்ஸ் வெர்ஜினியாவிற்கு ஒரு குழுவை அனுப்பி வைத்தார். அவர்களால் 1607இல் அங்கு ஒரு காலனி நிறுவப்பட்டு ஜேம்ஸ்டவுன் என பெயரிடப்பட்டது. பின்னர் யாத்ரீகர்கள் இங்கிலாந்திலிருந்து மேபிளவர் எனும் கப்பலில் பயணித்து மாசாசூசெட்ஸில் உள்ள பிளைமவுத் எனும் இடத்தில் காலனியை உருவாக்கினர். படிப்படியாக ஏனைய குடியேற்றங்களும் நிறுவப்பட்டன. 1624இல் டச்சுக்காரர்கள் ஹட்சன் ஆற்றின் முகத்துவாரமருகே ஒரு குடியேற்றத்தை நிறுவி அதற்கு நியூ ஆம்ஸ்டர்டாம் எனப் பெயரிட்டனர். பின்னர் இது ஆங்கிலேயர்களால் கைப்பற்றப்பட்டு நியூ யார்க் என பெயர் மாற்றம் செய்யப்பட்டது. 1700களில் குடியேற்றநாடுகளின் மக்கள்தொகையில் அடிமைப்படுத்தப்பட்ட ஆப்பிரிக்கர்களின் விழுக்காடு அதிகரித்தது.1770 காலப்பகுதியில் இங்கிலாந்திற்குச் சொந்தமான 13 வடஅமெரிக்கக் குடியேற்றங்களில் 2 மில்லியனுக்கும் அதிக எண்ணிக்கையிலான மக்கள் வாழ்ந்து, பலவேலைகளையும் மேற்கொண்டனர்.

1587இல் சர் வால்டர் ராலே என்பார் வடகரோலினாவிற்கு அருகே இருந்த ரோவனோக் தீவில் ஒரு குடியேற்றத்தை ஏற்படுத்தி, கன்னிமை அரசியான ராணியார் முதலாம் எலிசபெத்தின் நினைவாக வெர்ஜினியா எனப் பெயரிட்டார். ஆனால் பூர்வகுடி இந்தியர்களின் வலுவான எதிர்ப்பால் தொடக்கத்தில் குடியேறிய பலர் இங்கிலாந்து திரும்பினர். சில ஆண்டுகள் கழித்து ஆங்கிலேய மாலுமிகள் அங்கு சென்றபோது குடியேற்றம் இருந்தற்கான எந்தச் சுவடும் அங்கில்லை. ரோவனோக் தீவு இழக்கப்பட்ட குடியேற்றமானது.

பதிமூன்று குடியேற்றங்களில் வாழ்க்கை

குடியேற்றங்கள் பெறப்பட்ட விதங்களிலும் அவற்றின் குணாதிசயங்களிலும் பெரும் வேறுபாடுகள் இருந்தன. அவை வடக்கு, தெற்கு குடியேற்றங்கள் எனப் பிரிக்கப்பட்டன. வளமிக்க நிலங்களை இயற்கையின் கொடையாகப் பெற்றிருந்த தென்பகுதியில் வேளாண்மையே வாழ்வின் அடிப்படை ஆதாரமாகத் திகழ்ந்தது. ஆப்பிரிக்காவிலிருந்து கொண்டுவரப்பட்ட அடிமைகளே அப்பெருந்தோட்ட நிலங்களில் பணிசெய்தனர். அந்நிலங்களில் பருத்தி, கோதுமை, புகையிலை ஆகியன முக்கியமாக விளைவிக்கப்பட்டன. மற்றொருபுறத்தில் வடபகுதிகள் வளமான விளைநிலங்களைக் கொண்டிருக்கவில்லை. அவை மர அறுவை ஆலைகளையும், கப்பல் கட்டும் நிலையங்களையும் தானிய அரவை ஆலைகளையும் உருவாக்கிக் கொண்டன. இரும்பும் துணியும் உற்பத்தி செய்யப்பட்டன. துறைமுகங்கள் கடல்சார் வணிகத்தை மேம்படுத்தின.

அட்லாண்டிக் கடலைக் கடந்த அடிமை வணிகம் மனிதகுல வரலாற்றில் படிந்த கறையாகும். பதினேழாம் நூற்றாண்டு பிறந்தபோது போர்த்துகீசியர்கள் ஆப்பிரிக்க அடிமை வர்த்தகத்தைத் தொடங்கினர். ஏனைய கிறித்துவ ஐரோப்பிய நாடுகளும் உடனடியாக பின் தொடர்ந்தன. அமெரிக்காவுக்குக் கொண்டுவரப்பட்ட முதல் அடிமைகள் 1619இல் ஒரு டச்சுக் கப்பலில் வந்தனர். "சந்தேக குணமில்லாத நீக்ரோக்களை" ஆப்பிரிக்காவில் கைப்பற்றி புதிய உலகிலுள்ள (அமெரிக்கா) பெருந்தோட்டங்களில் வேலை செய்ய அவர்களை விற்பதன் மூலம் பெரும் பணம் சம்பாதிக்க இயலும் என உணர்ந்த முதல் ஆங்கிலேயர் ஜான் ஹாக்கின்ஸ் ஆவார். அவருடைய செழிப்பான வெற்றி, பெரும் லாபம் ஆகிய காரணங்களால் முதலாம் எலிசபெத் அரசியால் நைட் பட்டம் சூட்டப்பட்டார். 11 மில்லியன்களுக்கும் மிகையான ஆப்பிரிக்கர்கள் அடிமைகளாக அமெரிக்காவைச் சென்றடைந்தனர் என மதிப்பிடப்பட்டுள்ளது.

நிலையற்ற ஐரோப்பிய வாழ்க்கைச் சூழலினால் சலிப்புகொண்ட மக்கள் ஒரு சுதந்திரமான வாழ்க்கை வாழவேண்டும் என்பதற்காகவே குடியேற்றங்களுக்கு வந்தனர். அவர்கள் மத சுதந்திரத்தை அனுபவிக்க விரும்பினர். மேலும் தாங்கள் விரும்பிய மதத்தைப் பின்பற்ற விரும்பினர். (எ.கா. தூய்மைவாதிகள் – Puritans) குடியேற்ற நாடுகள் ஆங்கிலேய அரசால் பணியமர்த்தப்பட்ட ஆளுநர்கள் எனும் ஆங்கிலேயப் பிரதிநிதிகளால் ஆளப்பட்டன. ஆளுநர்கள் பாராளுமன்றத்திற்கு இணையான ஒரு சபையையும் (Assembly) பெற்றிருந்தனர். பெண்களுக்கு வாக்குரிமை

12th_History_TM_Unit_11_V2.indd 171 02-01-2023 16:39:15



மறுக்கப்பட்டிருந்தது. ஆண்களிலும்கூட, சொந்தமாக நிலம் வைத்திருப்போர், வரி கட்டுவோர் ஆகியோர் மட்டுமே வாக்களிக்க முடிந்தது. தொடக்கத்தில் அவர்கள் அமெரிக்க இந்தியர்கள் என்றழைக்கப்பட்ட அமெரிக்காவின் பூர்வகுடி மக்களோடு இணக்கமான உறவைக் கொண்டிருந்தனர். (அப்போது அவர்கள் செவ்விந்தியர்கள் என ஏளனமாகக் குறிப்பிடப்பட்டனர்) ஆனால் காலப்போக்கில் பூர்வகுடிகள் நிலங்களை இழந்தோர்களாக ஆக்கப்பட்டனர் அல்லது அழித்தொழிக்கப்பட்டனர்.

பூர்வகுடிகளுடன் ஐரோப்பியரின் மோதல்கள்

1492இல் கிறிஸ்டோபர் கொலம்பஸ் கரீபியனை அடைந்த தருவாயில் அமெரிக்க பகுதிகளில் 10 மில்லியன் பூர்வகுடிகள் வாழ்ந்து வந்தனர். ஆனால் 1900இல் அவர்களின் எண்ணிக்கை 3,00,000 கீழாகக் குறைக்கப்பட்டது. பூர்வகுடிகளை அழித்தொழிக்க ஐரோப்பியர்கள் பின்பற்றிய தந்திரங்களில் ஒன்று நோய்களைப் பரப்புவதாகும். 1763இல் ஏற்பட்ட பெரும் எழுச்சி பென்சில்வேனியாவிலிருந்த ஆங்கிலப் படைகளை அச்சுறுத்தியது. தேவைப்படும் பொருட்கள் குறைவாக இருந்ததால் கவலையும் சில பூர்வகுடி அமெரிக்கர்களின் வன்முறைச் செயல்களால் சினமும் கொண்டிருந்த வட அமெரிக்காவிலிருந்த ஆங்கிலப் படைகளின் தளபதிசர்ஜெப்ரிஆம்ஹர்ஸ்ட்பென்சில்வேனியாவில், பிட் கோட்டையிலிருந்த கர்னல் ஹென்றி போகே என்பாருக்கு "போர்வைகளின் மூலமாக செவ்விந்தியர்களிடையே நோய்களைப் (அம்மை) பரப்பும் முயற்சியை நீங்கள் நன்றாகச் செய்யலாம். மேலும் ஒதுக்கத்தக்க இவ்வினத்தை வேரோடு பிடுங்கி எறிய வேறு முறைகள் அனைத்தையும் முயற்சி செய்யவும்" என எழுதினார். இதன் விளைவாக ஏற்கனவே அம்மை நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு சொந்தமான அவர்கள் பயன்படுத்திய போர்வைகள் செவ்விந்திய பூர்வகுடிகளிடையே விநியோகம் செய்யப்பட்டன. காலனியவாதிகள் தங்கம் தேடும் முயற்சியில் (1848) பழங்குடி மக்களின் கிராமங்களில் பதுங்கியிருந்து கொடூரமாகத் தாக்கினர். குடியேற்றவாதிகளுக்கும் அமெரிக்க பூர்வ குடிகளுக்குமிடையே பல போர்கள் வெடித்து பெருமளவிலான உயிர்ச்சேதத்திற்கும், சொத்துப்பறிப்புக்கும், அடக்குமுறைக்கும் அப்பட்டமான இனவாதத்திற்கும் இட்டுச் சென்றது.

அமெரிக்க விடுதலைப் போர்: காரணங்கள்

காலனிய ஆட்சி: நாவாய் சட்டங்கள்

காலனிகளைத் தனது நாட்டின் பகுதிகளாகவே கருதிய இங்கிலாந்து, காலனி மக்களின் நலன்களைப் புறக்கணித்துத் தனது நலன்களுக்காகவே ஆட்சி செய்தது. நாவாய் சட்டங்கள் எனும் சட்டங்களை இயற்றியதன் மூலமாக இங்கிலாந்து தனது காலனி நாடுகளின் அனைத்துப் பொருட்களும் ஆங்கிலக் கப்பல்களின் மூலமாகவே ஏற்றுமதி செய்யப்பட வேண்டுமென கட்டாயப்படுத்தியது. காலனி நாடுகள் ஜவுளி போன்ற ஒரு சில பொருட்களை உற்பத்தி செய்வதைக் கட்டுப்படுத்தியும் தடுத்தும் சட்டங்கள் இயற்றப்பட்டன.

12th_History_TM_Unit_11_V2.indd 172 02-01-2023 16:39:15

ஏழாண்டுப் போர் (1756–63)

ஏழாண்டுப் போரில் இங்கிலாந்து தலையிட்டது இங்கிலாந்திற்கு எதிரான காலனிநாடுகளின் கிளர்ச்சிகளின் நேரடி விளைவாகும். போரின்போது காலனி நாடுகளின் சட்டமன்றங்கள் தாய்நாடு எதிர்பார்த்த மாதிரியான ஒத்துழைப்பை நல்கவில்லை. குறைந்த அளவிலான பொருட்களின் விநியோகத்தை மட்டும் ஏற்றுக்கொண்டு வாக்களித்த அவைகள் அமெரிக்கர்கள் பயன்படுத்தும் சில பண்டங்களின் மீது இங்கிலாந்து வரிவிதிக்க மேற்கொண்ட முயற்சிகளை எதிர்த்தன. இதனிடையே கனடாவை இங்கிலாந்து கைப்பற்றியதும் பிரெஞ்சுக்காரர்கள் குறித்த அச்சம் நீங்கியதும் இங்கிலாந்தைப் பாதுகாப்பாக இருப்பதாக உணர வைத்தது. மாறாக இந்நிகழ்வுகள் காலனி நாடுகளை அச்சங்கொள்ளச் செய்ததோடு, எப்போதுமில்லாத வகையில் இங்கிலாந்தின் கட்டளைகளுக்கு அவை அடிபணிய மறுத்தன.

காலனி நாடுகளின் மீதான வரிவிதிப்பு

சர்க்கரை, சர்க்கரைப்பாகு ஆகியவற்றின் மீது வரிவிதிப்பு

ஏனைய ஐரோப்பிய நாடுகளோடு மேற்கொள்ளப்பட்ட நிரந்தர போர்களால் ஏற்பட்ட பொருளாதாரச் சிக்கல்களைத் தீர்ப்பதற்காக இங்கிலாந்து தனது காலனி நாடுகளின் மீது புதிய வரிகளைச் சுமத்தியது. முதல் வரியானது 1764இல் சர்க்கரையின் மீதும் சர்க்கரையின் துணைப் பொருளான சர்க்கரைப்பாகின் மீதும் விதிக்கப்பட்டது. வடஅமெரிக்காவிலிருந்த அனைத்து காலனிகளும் இவ்வரியைச் செலுத்த கட்டாயப்படுத்தப்பட்டன. குடியேற்ற நாடுகள் "பிரதிநிதித்துவம் இல்லையேல் வரியுமில்லை" எனும் முழக்கத்தை எழுப்பி இதை எதிர்த்தன.

முத்திரைச் சட்டம்

1765இல் முத்திரைகள் மீதான புதிய வரிச்சட்டமொன்று அறிமுகம் செய்யப்பட்டது. இதன் மூலம் குடியேற்ற நாடுகளின் மக்கள் சட்டத் தொடர்புடைய அனைத்து ஆவணங்களிலும் வருவாய் முத்திரைகளை ஒட்டவும் முத்திரைகளை பயன்படுத்த வரிசெலுத்தவும் கட்டாயப்படுத்தப்பட்டனர். குடியேற்ற நாடுகளின் மக்கள் அவற்றை வாங்குவதற்கு மறுக்கவே ஆங்கில வணிகர்கள் குடியேற்றநாட்டு அரசுகளை அச்சட்டத்தை விலக்கிக்கொள்ள வற்புறுத்தின.

டவுன்ஷெண்ட் சட்டம்

1766இல் முத்திரைச் சட்டம் ஒழிக்கப்பட்டாலும் அடுத்த ஆண்டிலேயே ஒரு சட்டம் அறிமுகமானது. இதன்படி இங்கிலாந்திலிருந்து இறக்குமதி செய்யப்படும் சில பண்டங்களின் மீது வரிகள் விதிக்கப்பட்டது. இங்கிலாந்தின் நிதியமைச்சரான டவுன்ஷெண்ட் இச்சட்டத்தை நடைமுறைப்படுத்தியதால் அவர் பெயரிலேயே இச்சட்டம் டவுன்ஷெண்ட் சட்டமென அறியப்படலாயிற்று.

பாஸ்டன் படுகொலை (1770)

1770இல் இங்கிலாந்தின் புதிய பிரதமரான நார்த் பிரபு தேயிலையின் மீதான வரியைத் தவிர ஏனைய பொருட்களின் மீதான வரிகளை நீக்கினார். இங்கிலாந்துப் பாராளுமன்றத்திற்கு குடியேற்ற நாடுகளின் மீது, நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ வரிவிதிக்கும் உரிமை உண்டு என்பதை உறுதிப்படுத்தவே தேயிலையின் மீதான வரி நீக்கப்படாமல் தொடர்ந்தது. பாஸ்டன் நகர வீதிகளில் ஆங்கிலப் படைகள் அணிவகுத்துச் சென்றபோது அமெரிக்கர்கள் ஆங்கிலேயரை விமர்சனம் செய்தனர். சினம் கொண்ட ஆங்கிலப்படைகள் அமெரிக்க மக்களுக்கு எதிராகச் துப்பாக்கிச்சூடு நடத்தின. இந்த பாஸ்டன் படுகொலை ஆங்கில அரசின் ஏகாதிபத்திய மற்றும் வலுச்சண்டை செய்யும் இயல்புகளை வெளிச்சத்திற்கு கொண்டு வந்தது.

பாஸ்டன் தேநீர் விருந்து (1773)

பாஸ்டன் படுகொலையைத் தொடர்ந்து பூர்வகுடி அமெரிக்கர்களைப் போல வேடம் தரித்த 100 கிளர்ச்சியாளர்கள் பாஸ்டன் துறைமுகத்தில் தேயிலையைக் கொண்டு வந்திருந்த மூன்று கப்பல்களில் ஏறி 342 பெட்டிகளைக் கடலுக்குள் வீசி எறிந்தனர். இந்நிகழ்வு பாஸ்டன் தேநீர் விருந்து என அழைக்கப்பட்டது.

இங்கிலாந்துப் பாராளுமன்றம் கடுமையான எதிர் நடவடிக்கைகளை மேற்கொண்டது. கேஜ் எனும் தளபதி மாசாசூசெட்ஸின் ஆளுநராகப்



பாஸ்டன் தேநீர் விருந்து

12th_History_TM_Unit_11_V2.indd 173 02-01-2023 16:39:15

பணியமர்த்தப்பட்டார். காலனிகளை அடக்கி ஒடுக்கும்படி ஆணை பிறப்பிக்கப்பட்டு படைகளும் அனுப்பி வைக்கப்பட்டன.

பொறுத்துக்கொள்ள முடியாத சட்டங்கள் (1774)

பாஸ்டன் தேநீர் விருந்து நிகழ்வால் சினம் கொண்ட இங்கிலாந்துப் பாராளுமன்றம் பாஸ்டன் துறைமுக மசோதாவை நிறைவேற்றியது. அதன்படி கடலில் வீசப்பட்ட தேயிலைக்கான ஈட்டுத்தொகை காலனி மக்களால் வழங்கப்படும் வரை பாஸ்டன் துறைமுகம் மூடப்படுமென அறிவிக்கப்பட்டது. இரண்டாவதாக மாசாசூசெட்ஸ் அரசுச் சட்டத்தை இங்கிலாந்துப் பாராளுமன்றம் நிறைவேற்றியது. அதன்படி மாசாசூசெட்ஸின் தேர்தெடுக்கப்பட்ட சட்டமன்றம் கலைக்கப்படவும், ராணுவ ஆளுநர் கேஜ் என்பவரின் அதிகாரம் அதிகரிக்கப்படவும் வழிவகை செய்யப்பட்டது. மூன்றாவதாக நீதி நிர்வாகச் சட்டம் இயற்றப்பட்டு கடுமையான குற்றங்களைச் செய்தவர்கள் எனக் குற்றம் சாட்டப்பட்ட ஆங்கில அதிகாரிகளை வேறு காலனிகளிலோ அல்லது இங்கிலாந்திலோ வைத்து விசாரிக்க அனுமதி வழங்கியது. நான்காவதாக இயற்றப்பட்ட பொறுத்துக்கொள்ள முடியாத சட்டம் ஏற்கனவே நடைமுறையில் இருந்து விலக்கிக் கொள்ளப்பட்ட படைவீரர்கள் தங்குமிடச் சட்டம் என்பதன் மறுபதிப்பாகும். இச்சட்டம் காலியாகவுள்ள கட்டடங்களில் ஆங்கிலப்படைகள் தங்கிக்கொள்ள அனுமதி வழங்கியது. அடக்குமுறைச் சட்டங்கள் என்றும் அறியப்பட்ட இப்பொறுக்க முடியாத சட்டங்கள் (1774) காலனிகளிடையே பெரும் வன்முறை அலைகளை ஏற்படுத்தியது.

கியூபெக் சட்டம்

1774இல் இங்கிலாந்துப் பாராளுமன்றத்தால் இயற்றப்பட்ட கியூபெக் சட்டத்தின்படி, ஒஹியோ மற்றும் மிசிசிபி ஆகிய இரு நதிகளுக்கு இடைப்பட்ட நிலப்பகுதி கியூபெக்கிற்கு வழங்கப்பட்டது. இதனால் நியூயார்க், பென்சில்வேனியா, வெர்ஜினியா ஆகிய அரசுகள் கோபம் கொண்டன. ஏனெனில் இதே நிலப்பகுதி இக்காலனியரசுகளுக்கு அரச பட்டயத்தின் மூலம் முன்னரே வழங்கப்பட்ட பகுதிகளாகும். மேலும் இப்புதிய பகுதியில் பிரெஞ்சுக் குடிமைச் சட்டங்களும், ரோமன் கத்தோலிக்க மதமும் செயல்பட இங்கிலாந்து அனுமதித்ததன் மூலம் பிராட்டஸ்டன்ட் காலனிகளையும் கோபம் கொள்ளச் செய்தது.

1774இல் இயற்றப்பட்ட பொறுத்துக்கொள்ள முடியாத சட்டங்களின் விளைவாக குடியேற்ற நாடுகள், பிலடெல்பியாவில் முதன்முதலில் பொது மாநாட்டைக்கூட்டின. ஜார்ஜியா நீங்கலாக மாநாட்டில் கலந்துகொண்ட ஏனைய குடியேற்றங்களின் பிரதிநிதிகள் பொறுத்துக்கொள்ள முடியாத சட்டங்கள் நீக்கப்படவேண்டுமென கோரிக்கை வைத்தனர். அதுவரையிலும் ஆங்கிலேயப் பொருட்களைப் புறக்கணிப்பது என்றும் காங்கிரஸ் (மாநாடு) முடிவு செய்தது. அவர்கள் இங்கிலாந்து அரசர் மூன்றாம் ஜார்ஜுக்கு கோரிக்கை மனுவொன்றை ஒரு ஆலிவ் கிளையோடு (அமைதி நடவடிக்கைகள்) அனுப்பி வைத்தனர். இதுவே ஆலிவ் கிளை விண்ணப்பமென அழைக்கப்பட்டது. ஆனால் அரசர் அமைதியை ஏற்படுத்த மறுத்துவிட்டார்.

போர் வெடித்தல்

இதே சமயத்தில் 1775இல் மாசாசூசெட்ஸில் உள்ள லெக்சிங்டன் என்ற இடத்தில் விவசாயிகள் ஆங்கிலேயரோடு போரிட்டு பின்னர் பங்கர் குன்றிலிருந்த ஆங்கிலப் படைகளை முற்றுகையிடுவதற்காகப் பாஸ்டனை நோக்கி விரைந்தனர். 1776 ஜூலை 4இல் 13 குடியேற்ற நாடுகளும் இங்கிலாந்திடமிருந்து விடுதலை பெறுவதாக அறிவித்தன. சுதந்திரப் பிரகடனத்தை வடித்ததில் முக்கியப் பங்காற்றியவர் தாமஸ் ஜெபர்சன் ஆவார். அது அமெரிக்க ஐக்கிய நாடுகள் எனும் பெயரில் ஒரு சுதந்திர நாட்டின் வரலாறு தொடங்கியதை சுட்டிக் காட்டியது.

தாமஸ் ஜெபர்சன்

சுதந்திரப் பிரகடனம் (1776)

குடியேற்ற நாடுகள் சுதந்திர நாடுகளாக இருத்தல் வேண்டும் எனும் கருத்தை முன் மொழிந்தவர் ரிச்சர்டு லீ ஆவார். பிரகடனத்தை எழுதுவதற்கு வரைவுக்குழுவொன்று அமைக்கப்பட்டது. அக்குழு தாமஸ் ஜெபர்சன், பெஞ்சமின் பிராங்கிளின் மற்றும் ஜான் ஆடம்ஸ் ஆகியோரையும் உள்ளடக்கிய உறுப்பினர்களைக் கொண்டிருந்தது.

ஆங்கிலேயப் படைகளுக்கு வில்லியம் ஹோவ் தலைமைதாங்க அமெரிக்கப்படைகளுக்கு ஜார்ஜ் வாஷிங்டன் தலைமையேற்றார். போரின் தொடக்கக் கட்டங்களில் ஹோவ் வாஷிங்டனை புரூக்ளின், நியூயார்க், நியூஜெர்சி ஆகிய இடங்களில் தோற்கடித்து வெற்றிகளை ஈட்டினார். பின்னர் வாஷிங்டன் தனது திட்டமிடப்பட்ட போர்த்

12th_History_TM_Unit_11_V2.indd 174 02-01-2023 16:39:16

தந்திரங்களின் வாயிலாக ஆங்கிலப் படைகளைத் தோற்கடித்தார். 1777இல் சரடோகா போர் முனையில் ஆங்கிலேயப் படைத்தளபதி ஜெனரல் புர்கோய்ன் சரணடைய நிர்ப்பந்திக்கப்பட்டார். இறுதியில் 1781இல் யார்க்டவுன் என்ற இடத்தில் இங்கிலாந்துப் படைகள் அமெரிக்க படைகளிடம் சரணடைந்தன. இவ்வெற்றியோடு வடக்கேயிருந்த குடியேற்றங்கள் சுதந்திரம் பெற்றன. ஆனால் போர் முடிகின்ற தருணம் வரையிலும் ஹோவ் நியூயார்க்கை தன்வசமே வைத்திருந்தார்.

அமெரிக்க சுதந்திரப் போர்

குடியேற்ற நாடுகளுடன் ஐரோப்பிய சக்திகளின் ஒருமைப்பாடு

அமெரிக்க சுதந்திரப்போரின் போது இங்கிலாந்துடன் நட்புறவு கொண்டிராத ஐரோப்பிய நாடுகள் அமெரிக்கக் குடியேற்ற நாடுகளை ஆதரிப்பதென முடிவு செய்தன. பிரஷ்யா, ஸ்வீடன், டென்மார்க் உள்ளிட்ட வட ஐரோப்பிய நாடுகள் இங்கிலாந்திற்கு எதிராக ஆயுதமேந்திய நடுநிலைமையை உருவாக்கின. ஒருபுறம் தனது எதிரி நாடுகளின் பகைமையையும் மறுபுறத்தில் நடுநிலை நாடுகளின் எதிர்ப்பையும் எதிர்கொள்ள நேர்ந்ததால் இங்கிலாந்து பெருங்குழப்பத்தில் ஆழ்ந்தது.

பிரெஞ்சுக்காரர்களும் அவர்களைத் தொடர்ந்து ஸ்பானியரும் டச்சுக்காரர்களும் இவ்விடுதலைப் போரில் அமெரிக்கக் குடியேற்ற நாடுகளுக்கு உதவினர். கனடாவை இழந்ததற்குப் பழிவாங்குவதாகவே பிரான்ஸ் அமெரிக்கர்களுக்கு உதவியது. குடியேற்ற நாடுகளுக்கு உதவி செய்வதற்காக அட்லாண்டிக் பெருங்கடலை கடந்து சென்ற பிரான்ஸ் நாட்டின் தன்னார்வத் தொண்டர்கள் தனிமனித சுதந்திரம் குறித்த கருத்துக்களோடு நாடு திரும்பினர். அக்கருத்துக்கள் அவர்களை போர்பன் மன்னர்களின் கட்டுப்பாடுகளைச் சகித்துக்கொள்ள முடியாதவர்களாக மாற்றின.

தாமஸ் (டாம்) பெயின், பொது அறிவு (Common Sense)

ஆங்கிலேயரான தாமஸ் பெயின் 'பொது அறிவு' (1776) எனத் தலைப்பிடப்பட்ட துண்டு பிரசுரமொன்றை எழுதினார். அதில் பெயின் குடியேற்ற நாடுகளின் கோரிக்கைகளை நியாயப்படுத்தி விவாதங்களை எழுதியிருந்தார். சுதந்திரம் குறித்து ஹாப்ஸ், லாக், வால்டேர், ரூசோ ஆகியோர் கூறிய கருத்துக்களைத் தேர்ந்தெடுத்த அவர் அவற்றை சாதாரண மக்களும் புரிந்து கொள்ளும் விதத்தில் எழுதியிருந்தார். 1,50,000 பிரதிகள் விற்பனையான இத்துண்டு பிரசுரம், மக்களின் மீது கிளர்ச்சியூட்டும் தாக்கத்தை ஏற்படுத்தியது.

பணம் படைத்த வணிகர்களும், பெரும் நிலவுடைமையாளர்களும் ஆங்கில அரியணைக்கு விசுவாசிகளாக இருந்தனர். பெரும் எண்ணிக்கையிலான, குறிப்பாக நியூயார்க், பென்சில்வேனியா ஆகிய பகுதிகளைச் சேர்ந்த மக்களின் மீதும் செல்வாக்கு பெற்றிருந்தனர். குடியேற்ற நாடுகளைச் சேர்ந்த மக்கள் இரு பிரிவினராகப் பிரிந்தனர். 'நாட்டுப்பற்றாளர்கள்' என்ற பிரிவினர் விடுதலை வேண்டினர். 'விசுவாசிகள்' என்ற பிரிவினர் இங்கிலாந்து அரியணைக்கு விசுவாசமாக இருக்க விரும்பினர். டோரிகள் (Tories) என்றழைக்கப்பட்ட விசுவாசிகள் ஆங்கிலிகன் திருச்சபையை சேர்ந்தவர்களாய் இருந்ததால் ஆங்கில ஆட்சியையே விரும்பினர். எனவே விடுதலைப் போருக்கு இடையில் ஒரு உள்நாட்டுப் போரும் தவிர்க்க இயலாமலாயிற்று.

பாரிஸ் உடன்படிக்கை

போரைத் தொடர்வதால் பயனேதுமில்லை என இங்கிலாந்துப் பாராளுமன்றம் 1783இல் முடிவு செய்தது. பிரதமர் நார்த் பிரபு தனது பதவியை ராஜினாமா செய்தார். அரசர் ஜார்ஜ், மக்கள் சபை மீதான தனது கட்டுப்பாட்டை இழந்தார். புதிய பிரதமர் ராக்கிங்ஹாம் பிரபு அமைதிப் பேச்சுவார்த்தையைத் தொடங்கினார். 1783இல் இங்கிலாந்துக்கும் அமெரிக்காவுக்குமிடையே பாரிசில் அமைதி உடன்படிக்கை கையெழுத்தானது. ஜார்ஜ் வாஷிங்டன் (1732–1799) அமெரிக்காவின் முதல் குடியரசுத்தலைவரானார். அமெரிக்காவை உருவாக்கியவர்களில் ஒருவரான அவர் முதலில்

ஜார்ஜ் வாஷிங்டன்

www.tntextbooks.in

ஒரு சிறந்த இராணுவத் தளபதியாகவும், பின்னர் மதிநுட்பம் நிறைந்த அரசியல்வாதியாகவும் அமெரிக்க புரட்சியில் முக்கியப் பங்கு வகித்தார்.

பாரிஸ் உடன்படிக்கை கையெழுத்தாதல்

உடன்படிக்கையின் முக்கிய சரத்துக்கள்

- 13 குடியேற்ற நாடுகளின் சுதந்திரத்தையும் அமெரிக்க ஐக்கிய நாடுகள் எனும் பெயரில் ஒரு புதிய நாடு உருவானதையும், இங்கிலாந்து அங்கீகரித்தது.
- மேற்கே மிசிசிபி ஆற்றை எல்லையாகவும், தெற்கே 31வது இணைகோட்டை எல்லையாகவும் கொண்ட பகுதிகள் அமெரிக்க ஐக்கிய நாடுகளுக்குச் சொந்தமாயின.
- மேற்கிந்திய தீவுகள், இந்தியா, ஆப்பிரிக்கா ஆகியவற்றில் இங்கிலாந்திற்குச் சொந்தமாயிருந்த சில பகுதிகளை பிரான்ஸ் பெற்றது.
- ஸ்பெயின் இங்கிலாந்திடமிருந்து புளோரிடாவைப் பெற்றது.
- ஹாலந்தும் இங்கிலாந்தும் போருக்கு முன்பு நிலவிய நிலையை அப்படியே பேணின.

அமெரிக்க புரட்சியின் முக்கியத்துவம்

- அமெரிக்க புரட்சி உலக வரலாற்றில் பல அணுகுமுறைகளை (Avenues) ஏற்படுத்தியது.
- மக்களாட்சி, குடியரசு போன்ற கோட்பாடுகள் மேலும் விரிவாகப் பரவலாயின.
- அரசியல், சமூக மாற்றங்கள் ஜனநாயகத்தையும் சமத்துவத்தையும் அடிப்படையாக கொண்டிருந்தன.
- குடியேறியவர்கள் அனைவருக்கும் அமெரிக்க ஐக்கிய நாடுகள் சுதந்திரத்தையும் வாய்ப்புகளையும் வழங்கும் நாடானது.
- கல்வியின் முக்கியத்துவம் சிறப்பிடத்தைப் பெற்றது.
- கூட்டாட்சிக் கோட்பாடு பரவலானது.
- அமெரிக்க புரட்சி காலனியாதிக்கத்திற்கு ஒரு பின்னடைவாகும். தங்கள் காலனிய எஜமானர்களுக்கு எதிராக குடியேற்ற நாடுகளின் விடுதலைக்கான கோரிக்கை உலகின் பல்வேறு பகுதிகளில் பரவியது.
- ஒவ்வொரு தனி மனிதருக்கும் பேச்சு சுதந்திரம், மத சுதந்திரம் மற்றும் சமவாய்ப்பு ஆகியன வழங்கப்பட்ட சுதந்திர சமுதாயம் உருவாவதற்கு இப்புரட்சி வழிகோலியது.

11.2 பிரெஞ்சுப் புரட்சி

பதினெட்டாம் நூற்றாண்டில் ஐரோப்பா பல்வேறு வம்சாவளிகளைச் சேர்ந்த முடியரசர்களால் ஆளப்பட்டது. அவ்வரசர்கள் முழுமையான அதிகாரம் செலுத்தினர். அவர்கள் நிலப்பிரபுக்கள், சமய குருமார்கள் ஆகியோருடன் பாரம்பரியமான உரிமைகளை அனுபவித்தனர். பிரான்சில் சாதாரண மக்கள் வரி செலுத்துவதைப் போல நிலப்பிரபுக்களும் மதகுருமார்களும் வரி செலுத்தவில்லை. இச்சூழலில்தான் பிரெஞ்சுப் புரட்சி நடைபெற்றது. அப்புரட்சி சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் ஆகியவற்றிற்கு ஆதரவளித்தது.

பதினெட்டாம் நூற்றாண்டில் பிரான்ஸ்

பதினாறாம் லூயி மற்றும் மேரி அன்டாய்னட்

பிரெஞ்சுப் புரட்சிக்கு முன்னர் பிரான்சின் அரசியல் சமூக முறைகள் பண்டைய ஆட்சிமுறை என்றழைக்கப்பட்டது. ஆங்கில மொழியில் பழைய ஒழுங்கமைவு (old order) என்று பொருள். இவ்வாட்சியின் கீழ் ஒவ்வொருவரும் ஒரு பிரிவைச் (எஸ்டேட்–Estate) சேர்ந்தவர்களாய் இருந்தனர். அனைத்து உரிமைகளும் அந்தஸ்தும் மதகுருமார்கள், நிலப்பிரபுக்கள், மூன்றாவது பிரிவைச்சேர்ந்த பொதுமக்கள் ஆகிய மூன்று படிநிலைகளின் வழியே கீழிறங்கியது. போர்பன் அரசவம்சத்தைச் சேர்ந்த இளம் வயதுடைய பதினாறாம் லூயி எனும் மன்னரால் பிரான்ஸ் ஆளப்பட்டது. அவர் ஆஸ்திரிய இளவரசியான மேரி அன்டாய்னட் என்பவரை மணம் முடித்திருந்தார். அரசர் முழுமையான அதிகாரத்தைப் பெற்றிருந்தார். அவர் ஆடம்பரமான வாழ்க்கைமுறையை மேற்கொண்டார். ஏழை மக்களின் மீது வரி விதித்த அரசு, பணம்படைத்தோர் மீது வரி விதிக்கவில்லை.

விளைச்சல் பொய்த்துப் போனதால் உணவுப் பற்றாக்குறை ஏற்பட்டு பட்டினியால் அவதியுற்று மன அமைதி இழந்து, தங்கள் அரசர் மீதும்

12th_History_TM_Unit_11_V2.indd 176
02-01-2023 16:39:16

அரசாங்கத்தின் மீதும் எரிச்சல்கொண்ட பாரிஸ் நகரக் கும்பல் 1789 ஜூலை 14இல் பாஸ்டில் கோட்டையைத் (சிறைச்சாலை) தகர்த்தது. பாஸ்டில் சிறை தகர்ப்பானது உலக வரலாற்றில் ஒரு புதிய காலம் தொடங்கிவிட்டதைச் சுட்டிக் காட்டியது. இப்புரட்சி வெடிப்பதற்கு பல காரணங்கள் இருந்தன.

பாஸ்டில் சிறை தகர்ப்பு

விவசாயிகளின் நிலை

பிரெஞ்சு சமூகத்தில் பெரும்பகுதியாக இருந்தவர்கள் விவசாயிகளே ஆவர். அவர்கள் கொத்தடிமைகளாக இருந்தனர். வாரத்தில் சில நாட்கள் ஊதியம் ஏதுமின்றி தங்கள் பிரபுக்களுக்காக அவர்கள் வேலைசெய்ய வேண்டியிருந்தது. பிரபுவின் அனுமதியில்லாமல் அவர்களால் திருமணம் செய்யவோ நிலங்களை விற்கவோ முடியாது. இவைகளுக்கும் மேலாக ரொட்டி தயாரிப்பதற்கு தனது அடுமனையைப் பயன்படுத்திய விவசாயிகளிடம் கட்டணம் வசூலிக்கும் உரிமையையும், விவசாயிகளுக்குச் சொந்தமான ஆடு, மாடுகளின் மேல் வரி விதிக்கும் உரிமையையும் பிரபுக்கள் பெற்றிருந்தனர். ஒரு விவசாயி தன்னுடைய வருமானத்தில் 80 விழுக்காட்டை பலவிதமான வரி வசூலிப்பாளர்களிடம் வரியாகச் செலுத்தினார் என மதிப்பிடப்பட்டது. அவர்களில் "மூன்றில் ஒரு பகுதியினர் ஆண்டின் மூன்றில் ஒரு பகுதி நாட்களில் மூன்றாம் தர உருளைக் கிழங்கு தவிர உண்பதற்கு வேறெதுவுமின்றி இருந்தனர்" – என கார்லைல் எழுதியுள்ளார்.

மூன்று பிரிவுகள்

பிரெஞ்சு சமூகம் மூன்று முக்கியப் பிரிவுகளைக் (எஸ்டேட்டுகள்) கொண்டிருந்தது. அவை முறையே மதகுருமார்கள், நிலப்பிரபுக்கள் (நிலங்களைக் கொண்ட உயர் குடிகள்), உரிமைகளற்ற சாதாரண மக்கள் ஆகியனவாகும். மதகுருமார்களும், பிரபுக்களும் சிறப்புரிமைகளை அனுபவித்தனர். அரசரால் விதிக்கப்பட்ட பல வரிகளிலிருந்து அவர்கள் விலக்களிக்கப்பட்டிருந்தனர். சிறப்பு உரிமைகளின் காரணமாய் முதலிரண்டு பிரிவைச் சார்ந்தவர்களுக்கு வரிவிலக்கு அளிக்கப்பட்டிருந்ததால், மூன்றாம் பிரிவைச் சேர்ந்தவர்களே வரிவிதிப்பின் கொடுமைகளை எதிர்கொள்ள நேர்ந்தது. திருச்சபையால் வசூலிக்கப்பட்ட டைத் எனும் வரி, டெய்ல் எனும் பெயரில் செலுத்தப்பட்ட நிலவரி, காபெல் எனும் உப்பின் மீதான வரி, புகையிலையின் மீதான வரி, ஆகியவை முக்கியமான வரிகளாகும்.

நிலமானியமுறை சட்டங்களை விவசாயிகளால் தாங்களாக மட்டுமேயிருந்து எதிர்க்க இயலவில்லை. எனவே அவர்கள் வெளியே இருந்து உதவியும், தலைமையும் வரவேண்டுமென எதிர்பார்த்தனர். எழுச்சிபெற்றுக் கொண்டிருந்த பூர்ஷ்வாக்கள் (நடுத்தர வர்க்கத்தினரின் தொகுப்பு) தங்கள் பொருளாதார உயர்நிலைக்கு இணையான அரசியல் அதிகாரத்தைப் பெற விரும்பினர். இப்பூர்ஷ்வாக்களே தலைமையேற்று பிரெஞ்சுப் புரட்சி நடைபெற கருவியாய்ச் செயல்பட்டனர்.

பூர்ஷ்வா வகுப்பு கல்வியறிவு பெற்ற இடைத்தட்டு மக்களைக் கொண்டிருந்தது. எழுத்தாளர்கள், மருத்துவர்கள், ஆசிரியர்கள் வழக்கறிஞர்கள், நீதிபதிகள், குடிமைப் பணியாளர்கள் ஆகியோர் இவ்வகுப்பை உருவாக்கினர்.

நிதி நிர்வாகச் சீர்கேடு

அண்டை நாடான ஆங்கிலப் பேரரசுடன் பிரான்ஸ் தொடர்ந்து போர் மேற்கொண்டதால் கருவூலத்திற்குப் பெருஞ்செலவை ஏற்படுத்தியது. இங்கிலாந்துடனும் பிரஷ்யாவுடனும் மேற்கொள்ளப்பட்ட ஏழாண்டுப் போரில் பிரான்ஸ் பெருந்தொகையைச் செலவழித்தது. அதைக் காட்டிலும் அதிகமான தொகையை அமெரிக்கா இங்கிலாந்துடனான போரில் செலவு செய்தது. பிரான்ஸ் தனது சக்திக்கு மீறிய மிகப்பெரும் உதவிகளை அமெரிக்கக் குடியேற்ற நாடுகளுக்குச் செய்தது. வட்டிக்குக் கடன் கொடுப்போரிடமிருந்து அரசு பெற்ற கடன்தொகை அதிகமானதால், பெற்ற கடன்களுக்கு அரசு அதிகமாக வட்டி செலுத்த வேண்டியதாயிற்று. கடன்களை அடைப்பதற்காக அரசு சாதாரண மக்களின் மீது அதிக வரிகளைச் சுமத்தியது. வரி செலுத்துவதிலிருந்து தங்களுக்கு அளிக்கப்பட்டிருந்த வரிவிலக்கை, பிரபுக்களும் மதகுருமார்களும் தாங்களாகவே முன்வந்து விட்டுக் கொடுத்து அரசைக் காக்கத் தயங்கினர். அரச சபையின் ஊதாரித்தனமும், பதினாறாம் லூயி மன்னரின் திறமையின்மையும் நிலைமைகளை மேலும் சிக்கலாக்கின.

12th_History_TM_Unit_11_V2.indd 177
02-01-2023 16:39:17

www.tntextbooks.in

அறிவார்ந்த மக்களின் பங்கு

1789 புரட்சிக்கு மிக முன்னதாகவே கருத்துக் களத்தில் புரட்சி நடைபெற்று விட்டது. அறிவொளிச் சிந்தனைகளால் எழுச்சியூட்டப்பட்டிருந்த அறிவார்ந்த மக்கள் (பிரெஞ்சு மொழியில் philosophes என்றழைக்கப்பட்டனர்) அனைத்து அறிவுத்துறைகளையும் காரணகாரியங்களோடு பார்க்கத் துவங்கினர். பிரெஞ்சுப் புரட்சி வெடிப்பதற்காக சமூகத்தை தயார் செய்ததில் அவர்கள் முக்கியப் பங்கு வகித்தனர். வால்டேர், ரூசோ ஆகியோரின் எழுத்துக்கள் புரட்சிக்கு ஒரு தூண்டுகோலாக அமைந்தன. 'சட்டங்களின் சாரம்' (The Spirit of Laws) எனும் தனது நூலில் மாண்டெஸ்கியூ (1689–1755) அதிகாரங்கள் அனைத்தும் ஓரிடத்தில் குவிக்கப்படுவதை எதிர்த்தார். அதிகாரங்கள் சட்டமியற்றுதல், சட்டங்களை செயல்படுத்துதல், நீதித்துறை என பிரிக்கப்பட வேண்டுமெனக் கூறினார். வால்டேர் (1694–1778) "பதினான்காம் லூயியின் காலம்" (The Age of Louis XIV) என்ற தனது நூலில் பிரெஞ்சுக்காரர்களின் மதம்சார்ந்த மூட நம்பிக்கைகளை எதிர்த்ததோடு முடியாட்சி மன்னர்களின் கீழ் நடைபெற்ற பிரெஞ்சு நிர்வாகத்தையும் விமர்சித்தார். ரூஸோ (1712–1778) தான் எழுதிய 'சமூக ஒப்பந்தம்' (Social Contract) எனும் நூலில், ஆள்வோர்க்கும் ஆளப்படுவோருக்குமான உறவு ஓர் ஒப்பந்தத்தால் கட்டுப்படுத்தப்பட வேண்டுமென வாதிட்டார். ஆள்பவர் நியாயமான முறையில் ஆட்சி செய்தால் அவர் மக்களால் மதிக்கப்படுவார் என்றும் ஆள்பவர் ஒப்பந்தத்திற்கு மாறாக நேர்மையற்ற முறையில் ஆட்சிபுரிந்தால் அவர் தண்டிக்கப்பட வேண்டும் என்றும் கூறினார். ஆங்கிலத் தத்துவ ஞானியான ஜான் லாக் "அரசாங்கத்தின் இரு ஆய்வுக் கட்டுரைகள்" (Two Treatises of Government) எனும் நூலில் தெய்வீக உரிமைக் கோட்பாட்டையும் வரம்பற்ற முடியாட்சியையும் எதிர்த்தார். தீதரோ என்பவரும் மற்றவர்களும் வெளியிட்ட கலைக்களஞ்சியத்தில் (Encyclopedia) இது போன்ற கருத்துக்களும் இடம் பெற்றிருந்தன.

ரூஸோ எழுதிய சமூக ஒப்பந்தம் எனும் நூல், "மனிதன் பிறக்கும் போது சுதந்திரமானவனாகப் பிறக்கிறான். ஆனால் அனைத்து இடங்களிலும் சங்கிலிகளில் பிணைக்கப்பட்டுள்ளான்" எனும் புகழ்பெற்ற தொடக்க வரிகளைக் கொண்டுள்ளது. இவ்வரிகளுக்காகவே அவர் போற்றப்படுகிறார்.

ரூசோ வால்டேர் மாண்டெஸ்கியூ

பிரெஞ்சுப் புரட்சி

தொடக்கம்

1789 மே மாதத்தில் பிரெஞ்சு பாராளுமன்றம் (முப்பேராயம் / Estate General) கூட்டப்பட்டதிலிருந்து பிரெஞ்சுப் புரட்சி தொடங்கியது. அரசாங்கம் எதிர்கொண்ட நிதிப் பிரச்சனைகளால் முப்பேராயத்தைக் கூட்டுவது அவசியமாயிற்று. முப்பேராயத்தின் கூட்டம் வெர்செய்ல்ஸ் மாளிகையில் நடைபெற்றது. முதலிரண்டு சமூகப் பிரிவுகளான மதகுருமார்கள், நிலப்பிரபுக்கள் ஆகிய பிரிவுகள் ஒவ்வொன்றும் 300 பிரதிநிதிகளை அனுப்பி வைத்தது. மூன்றாவது பிரிவு பெரும்பாலும் வணிகர்களையும் கல்வி கற்றவர்களையும் உள்ளடக்கிய 600 பிரதிநிதிகளை அனுப்பி வைத்தது. இவர்கள் முதலிரண்டு பிரிவுகளைச் சேர்ந்த பிரதிநிதிகளின் பின்புறம் நிற்க வைக்கப்பட்டனர். இம்முப்பேராயக் கூட்டத்தில் எவ்வாறு பிரதிநிதிகள் வாக்களிப்பது எனும் கேள்வியெழுந்தது. ஒவ்வொரு பிரிவினருக்கும் ஒரு வாக்கு எனும் மரபு சார்ந்த முறை அப்படியே தொடர்ந்து பின்பற்றப்பட வேண்டுமென பதினாறாம் லூயி விரும்பினார். ஆனால் சமூகத்தின் மூன்றாம் பிரிவைச் சேர்ந்த பிரதிநிதிகள் ஒவ்வொரு உறுப்பினருக்கும் ஒரு வாக்கு எனும் கோரிக்கையை முன் வைத்தனர்.

டென்னிஸ் மைதான உறுதிமொழி

மிராபு

அபே சீயஸ்

சமூகத்தின் மூன்றாம் பிரிவைச் சேர்ந்த பிரதிநிதிகளின் கோரிக்கை நிராகரிக்கப்பட்டதால் அவர்கள் 1789 ஜூன் 17இல் தேசிய சட்டமன்றத்தைக் கூட்டினர். பின்னர் அவர்கள் முப்பேராயத்தை விட்டு வெளியேறி 1789 ஜூன் 20இல் டென்னிஸ் மைதானத்தில் ஒன்று கூடினர்.

12th_History_TM_Unit_11_V2.indd 178 02-01-2023 16:39:17

www.tntextbooks.in

அரசரின் அதிகாரங்கள் குறைக்கப்படவேண்டும், புதிய அரசியலமைப்பு உருவாக்கப்படவேண்டும். அதுவரை கலைந்து செல்லப் போவதில்லை என உறுதிமொழி எடுத்தனர். "இதுவே டென்னிஸ் மைதான உறுதிமொழி" ஆகும். இவ்வெதிர்ப்பில் அவர்களுக்கு மிராபு எனும் பிரபுவும் அபே சீயஸ் எனும் மதகுருவும் தலைமை தாங்கினர்.

டென்னிஸ் மைதான உறுதிமொழி

பாஸ்டில் தகர்ப்பு

மூன்றாம் பிரிவுப் பிரதிநிதிகள் தேசிய சட்டமன்றத்தை அமைக்கும் பணியில் முழு வீச்சில் ஈடுபட்டிருந்தபோது, சாதாரண மக்கள் அத்தியாவசியப் பொருட்களின் விலையேற்றம், பணம் படைத்த வணிகர்களின் தானியப் பதுக்கல் ஆகியவற்றால் துயரங்களுக்கு உள்ளாயினர். உணர்ச்சிவயப்பட்ட பெண்கள் சந்தைப் பகுதியை முற்றுகையிட்டு கிளர்ச்சி செய்தனர். அமைதியின்மையைக் கண்ணுற்ற அரசர் பாரிஸ் நகர வீதிகளுக்கு செல்லும்படி படைகளுக்குக் கட்டளையிட்டார். இதனால் கோபம் கொண்டு, வெகுண்டெழுந்த மக்கள் பாரிஸ் நகரின் முக்கியச் சிறைக்கூடமான பாஸ்டில் சிறையை 1789 ஜூலை 14இல் தகர்த்து கைதிகளை விடுவித்தனர்.

பிரான்சில் இப்போதும் ஜூலை 14 பாஸ்டில் நாளாக அல்லது பிரெஞ்சு தேசிய தினமாகக் கொண்டாடப்படுகிறது.

தேசிய சட்டமன்றம்

பாஸ்டில் சிறை தகர்ப்பால் ஊக்கம் பெற்ற தேசிய சட்டமன்றம், நிலமானிய முறையை ஒழித்தது. நிகழ்வுகளின் திசை திருப்பத்தால் அதிர்ந்துபோன அரசர் தேசிய சட்டமன்றம் தோற்றுவிக்கப்பட்டதை ஏற்றுக் கொண்டார். திருச்சபை தனது உரிமைகளைக் கைவிடும்படியும் டைத் வரியை நீக்கும் படியும் அறிவுறுத்தப்பட்டது. 1791இல் தேசிய சட்டமன்றம் அரசியலமைப்பை உருவாக்கியது. அதன்படி அரசரின் அதிகாரங்கள் குறைக்கப்பட்டன. புதிய அரசியலமைப்பு மூன்று வெவ்வேறு அங்கங்களைப் பரிந்துரைத்தது. அவை சட்டமியற்றல், சட்டங்களை நடைமுறைப்படுத்துதல், நீதித்துறை ஆகியனவாகும். மேலும் தேசிய சட்டமன்றத்தின் உறுப்பினர்கள் தேர்வாளர்கள் எனப்படும் குழுவினரால் மறைமுகமாகத் தேர்ந்தெடுக்கப்படுவர் என்றும், இத்தேர்வாளர்கள் 25 வயது நிரம்பப்பெற்ற, வரி செலுத்துகின்ற ஆண் வாக்காளர்களால் வாக்களிக்கப்பட்டு தேர்ந்தெடுக்கப்படுவர் என்றும் புதிய அரசியல் அமைப்பு கூறியது. இதனால் குடிமக்களில் பெரும்பாலோர் வாக்களிக்கும் உரிமையைப் பெறவில்லை.

அரசியலமைப்பு உருவாக்கம்

அரசியலமைப்பானது, தேசிய அரசியலமைப்பு நிர்ணய சபையால் உருவாக்கப்பட்டது. 1789 ஆகஸ்டு 26இல் மனிதன் மற்றும் குடிமகனின் உரிமைப் பிரகடனம் ஏற்றுக்கொள்ளப்பட்டது. அரசரைச் சட்டத்தின் ஆட்சிக்குத் துணையாய் இருக்கச் செய்த இப்பிரகடனம் தனிமனித உரிமைகளையும் கூட்டு உரிமைகளையும் வரையறை செய்தது. சட்டம் ஏற்றுக்கொள்ளும் வழக்குகள் தவிர்த்து (உறுப்பு எண் 7) ஏனைய வழக்குகளைக் காரணம் காட்டி எந்தவொரு மனிதரையும் குற்றம் சாட்டவோ, கைது செய்யவோ, சிறையிலடைக்கவோ கூடாதென இது

மனித, குடிமக்கள் உரிமைப் பிரகடனம், ஒரு முகவுரையையும் 17 பிரிவுகளையும் கொண்டுள்ளது. முதல் பிரிவு "மனிதர்கள் பிறக்கும் போது சுதந்திரத்துடனும் உரிமைகளில் சமமானவர்களாகவும் உள்ளனர்" என்ற வாசகத்தைக் கொண்டுள்ளது. சுதந்திரம், சொத்துக்களுக்கான பாதுகாப்பு, அடக்குமுறைக்கு எதிர்ப்பு என விவரிக்கப்பட்டுள்ள உரிமைகளைப் பாதுகாப்பதே "அரசியல் ரீதியாக ஒன்றுபடுவதின்" நோக்கமாக இருக்க வேண்டும் என இப்பிரகடனம் குறிப்பிடுகிறது. மேலும் இறையாண்மையும் சட்டமும் "பொது விருப்பம்" என்பதிலிருந்து உருவாக வேண்டுமெனவும் அறிவிக்கிறது. பேச்சு சுதந்திரத்தையும் மத சுதந்திரத்தையும் பாதுகாத்து அது சட்டத்தின் முன் அனைவரும் சமமாக நடத்தப்பட வேண்டுமென வற்புறுத்துகிறது. அனைத்து மக்களும் தங்கள் வருவாய் ஆதாரங்களுக்கு ஏற்றவாறு வரி செலுத்த வேண்டுமென உறுதிபடக் கூறுகிறது. 1791இல் உருவாக்கப்பட்ட அரசியல் அமைப்பிற்கு இப்பிரகடனம் ஒரு முகவுரையாக அமைந்தது.

12th_History_TM_Unit_11_V2.indd 179 02-01-2023 16:39:17

கூறியது. மேலும் பொது மக்களின் ஒப்புதலின்றி வரிகளை உயர்த்தக் கூடாதெனவும் குறிப்பிட்டது (உறுப்பு எண் 14) "அனைத்து மனிதர்களும் பிறப்பில் சுதந்திரமாகவும் உரிமைகளில் சமமாகவும் உள்ளனர்" என பிரகடனம் செய்யும் உறுப்பு 1இல் தாமஸ் ஜெபர்சனின் செல்வாக்கை உய்த்துணர முடியும்.

பிரெஞ்சுப் புரட்சியில் பெண்கள் தனிச்சிறப்பு வாய்ந்த பங்கினை வகித்தனர். பாரிஸ் நகரின் ஏழ்மையான பகுதிகளைச் சார்ந்த பெண்கள், 20,000 ஆயுதமேந்திய ஆண்கள் உடன்வர வெர்செய்ல்ஸ் மாளிகைக்கு அணிவகுத்துச் சென்றனர். அரண்மனைக்குள் புகுந்த அவர்கள் அரசரைத் தங்களுடன் பாரிஸ் நகருக்கு வரும்படி கட்டாயப்படுத்தினர். பாரிஸில் அவர் மக்களின் கண்காணிப்பில் வைக்கப்பட்டார். பல பெண்கள் தீவிர அரசியல் செயல்பாட்டாளர்களாகத் திகழ்ந்தனர். மனிதன் மற்றும் குடிமக்களின் உரிமைகள் பிரகடனத்தில் பெண்கள் ஒதுக்கப்பட்டதால் அதன் மீது மனநிறைவு கொள்ளாத ஒலிம்பே – டி கோஜஸ் எனும் பெண்மணி, பெண் சமத்துவத்தை முன் வைத்து பெண்கள் மற்றும் குடிமகன் உரிமைகள் எனும் அறிவிப்பை எழுதினார்.

வெர்செய்ல்ஸ் நோக்கிப் பெண்களின் அணிவகுப்பு

ஆஸ்திரியாவிற்கும் பிரஷ்யாவிற்கும் எதிராகப் போர்

ஒருபுறம் அரசியல் அமைப்புக்கு கட்டுப்பட்ட முடியாட்சிக்கு ஒத்துக்கொண்ட அரசர் மறுபுறம் ரகசியமாக ஆஸ்திரியா, பிரஷ்யா ஆகிய நாடுகளிடம் உதவிவேண்டினார். பிரான்சில் நடைபெறும் நிகழ்வுகளை அண்டை நாட்டு அரசுகள் கவலையுடன் கவனித்து வந்தன. பொது மக்களின் எழுச்சி முடியாட்சி முறைக்கு முற்றுப்புள்ளி வைத்துவிடும் என அஞ்சிய அந்நாடுகள் புரட்சியைக் கட்டுப்படுத்த பிரெஞ்சு அரசுக்கு உதவியாகப் படைகளை அனுப்பி வைத்தன. இதே சமயத்தில் தேசிய சட்டமன்றம் ஆஸ்திரியா, பிரஷ்யா ஆகியவற்றுக்கு எதிராகப் போர் அறிவிப்பு செய்தது. இதைக் கேள்விப்பட்டவுடன் பிரான்சின் பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த மக்கள் அந்நியப்படைகளை எதிர்கொள்ள ஒருங்கிணைந்தனர். மார்செய்ல்ஸ் எனும் இடத்திலிருந்து ஒரு மக்கள் கூட்டம் மார்செய்லைஸ் எனும் பாடலைப் பாடிக் கொண்டே பாரிஸ் நோக்கிப் புறப்பட்டது.

> மார்செய்ல்ஸ் எனும் இடத்திலிருந்து பிரெஞ்சுப் படைகளுக்கான ஒரு பாடலை (1792) ரூஜெட் டி லிஸ்லே என்பார் இயற்றினார். அது லா மார்செய்லைஸ் என அறியப்பட்டது. 1795 ஜூலை 14இல் இயற்றப்பட்ட சட்டத்தின்படி இப்பாடல் பிரான்சின் தேசியகீதமாக அறிவிக்கப்பட்டது.

குழுக்களின் தோற்றம்

தேசிய சட்டமன்றம் உருவாக்கப்பட்ட பின்னரும் கூட, சாதாரண மக்களின் துன்பங்கள் தொடர்கதையாகவே இருந்தன. அதிக எண்ணிக்கையிலான சாதாரண மக்களுக்கு வாக்களிக்கும் உரிமை வழங்கப்படாததால், பெரும்பான்மையான மக்கள் சட்டமன்றத்தை பணம் படைத்தவர்களின் இடமாகவே பார்த்தனர். பாரிஸ் நகரின் புதிய ஆயுத அதிகாரமானது இடைத்தட்டு மக்களிடையே இருந்து திரட்டப்பட்ட தேசிய பாதுகாவலர்கள் எனும் படையின் கைவசமிருந்தது. அமெரிக்க சுதந்திரப் போரில் பிரெஞ்சு அரசாங்கத்தின் அதிகாரபூர்வ ஆலோசகராகச் செயல்பட்ட லஃபாயட் என்பவரே இதன் தலைவராவார். அரசர், முந்நாள் உயர்குடியினர், இடைத்தட்டு மக்கள், பாரிஸ் நகர மக்கள் கூட்டம் ஆகிய அனைவரும் இணைந்து பாஸ்டில் வீழ்ச்சியின் முதலாமாண்டு நினைவு விழாவைக் கொண்டாடிய போது ஒரு பொதுவான விடுதலைபெற்ற உணர்வும் மகிழ்ச்சியும் நிலவியது. ஆனால் இவ்வொற்றுமை நீண்ட காலம் நீடிக்கவில்லை. மனநிறைவு பெறாத மக்கள் தாங்கள் எதிர்கொள்ளும் பிரச்சனைகள் குறித்து விவாதம் செய்ய அரசியல் குழுக்களை உருவாக்கத் தொடங்கினர். அவ்வாறு உருவாகி பாரிஸ் நகரில் புகழ்பெற்று விளங்கிய குழு ஜேக்கோபியன் குழு (Club) என்பதாகும். சமூகத்தில் ஏழ்மை நிலையில் இருந்தவர்கள், சிறு வியாபாரிகள், கைவினைஞர்கள், பணியாளர்கள், கூலி வேலை செய்யும் தொழிலாளர் ஆகியோர் இதில் உறுப்பினர்களாய் இருந்தனர். அவர்களின் தலைவர் மாக்ஸ்மிலியன் ரோபஸ்பியர் ஆவார். பிரபுக்கள் வகுப்பைச் சேர்ந்தோர் வழக்கமாக அணியக்கூடிய முட்டுக் கால்களின் கீழ் இழுத்துக் கட்டக் கூடிய காற்சட்டைகளுக்குப் பதிலாக ஜேக்கோபியர்கள் நீளமான கோடுகளைக் கொண்ட காற்சட்டைகளை அணிந்தனர். தங்களை வேறுபடுத்திக் காட்டிக்

12th_History_TM_Unit_11_V2.indd 180 02-01-2023 16:39:17

www.tntextbooks.in

கொள்வதற்காக "முட்டுக்குக்கு கீழ் காற்சட்டையைக் கட்டிக் கொள்ளாதவர்கள்" என தங்களைத் தாங்களே அழைத்துக் கொண்டனர். டாண்டன் எனும் வழக்கறிஞர் கார்டிலியர் கிளப்பில் செல்வாக்குப் பெற்றுத் திகழ்ந்தார்.

லஃபாயட்

ரோபஸ்பியர்

டாண்டன்

கிரோண்டியர்களும் ஜேக்கோபியர்களும்

லஃபாயட்டியின் அரசியல் அமைப்புக்குக் கட்டுப்பட்ட முடியாட்சி இரண்டு ஆண்டு காலம் பிரெஞ்சு அரசியல் களத்தில் கோலோச்சியது. 1791 ஜூனில் பாரிசிலிருந்து தப்பித்து, எல்லையைக் கடந்து அங்கே கூடியிருக்கும் எதிர்புரட்சிப் படைகளுடன் இணைவதற்காக மன்னர் மேற்கொண்ட முயற்சியைக் குடியானவர் படையொன்று முறியடித்தது. இருந்தபோதிலும் உணவுப் பண்டங்களுக்கான பற்றாக்குறையும் விலையேற்றமும் வேலையில்லாத் திண்டாட்டமும் கைவினைஞர்களையும் சிறு வணிகர்களையும் தொழிலாளர்களையும் நம்பிக்கை இழக்கச் செய்தது ஏமாற்றத்தின் எல்லைக்கு இட்டுச் சென்றது. மக்கள் பொங்கியெழுவதை அடக்குமுறையால் கட்டுப்படுத்த இயலவில்லை. அரசாங்கத்தை நடத்திய மிதவாதிகள் தங்களுக்குள்ளேயே வேறுபட்டனர். ஜோக்கோபியன் குழுவிற்குள் இருந்த கிரோண்டியர்கள் (அவர்களின் ஒரு தலைவர் பிரிசாட் என்ற பெயரால் பிரிசாடினியர்கள் என்றும் அழைக்கப்பட்டனர்) ரோபஸ்பியரைப் போலவோ, டாண்டனைப் போலவோ அதி தீவிரவாதிகளாக இல்லை. அவர்களுக்குள்ளே பல கருத்து வேறுபாடுகளிருந்தாலும் ரோபஸ்பியரைத் தவிர மற்றவர்கள், அந்நிய சக்திகளுக்கு எதிரான ஒரு போர் செய்வதன் மூலம் நிலைமைகளைச் சீராக்கலாம் என நம்பினர். அவ்வாறான போர் புரட்சிக்கான கதவுகளைத் திறந்து வைக்குமென ரோபஸ்பியர் வாதாடினார். ஆனால் கிரோண்டியர்கள் அரசருடன் இசைந்து ஒரு அரசாங்கத்தை உருவாக்கியதையோ, பின்னர் 1792 ஏப்ரலில் ஆஸ்திரியாவுக்கும் பிரஷ்யாவுக்கும் எதிராகப் போர் அறிவிப்புச் செய்ததையோ அவரால் தடுக்க இயலவில்லை.

தேசியப் பேரவை (National Convention)

கிரோண்டியர்கள் திட்டம் பேரிடராக முடிந்தது. கோபம் கொண்ட ஜேக்கோபியன் குழு உறுப்பினர்கள் பதினாறாம் லூயியின் அதிகாரபூர்வமான வசிப்பிடமான டியூலரிஸ் அரண்மனைக்குள் புகுந்தனர். காவலர்களைக் கொன்று அரசரைச் சிறைப்பிடித்தனர். புதிதாக உருவான சட்டமன்றமான தேசியப் பேரவை அரசரைச் சிறையில் அடைக்கவும் நாட்டிற்குப் புதிய தலைவரைத் தேர்ந்தெடுக்கத் தேர்தல் நடத்தவும் வாக்களித்தது. தேர்தலில் 21 வயதிற்கு மேற்பட்ட அனைவரும் செல்வத்திலும், அந்தஸ்திலும் எந்த வேறுபாடும் இல்லாமல் வாக்களிக்கும் உரிமையைப் பெற்றனர்.

செப்டம்பர் படுகொலைகள்

முடியாட்சி தூக்கி எறியப்பட்ட பின்னர் சிறையில் அடைக்கப்பட்டிருந்த அரசியல் கைதிகள் எதிர்புரட்சியாளர்கள் தீட்டிய சதியொன்றில் இணையப் போவதாக மக்கள் நம்பினர். இதன் விளைவாக மக்கள் கூட்டம் சிறைச்சாலைகளைத் தாக்கின. அரச குடும்ப ஆதரவாளர்கள் எனக் கருதப்பட்ட அனைவரும் கேள்வி முறையின்றி கொல்லப்பட்டனர். 1792 செப்டம்பர் 2இல் பாரிஸ் நகரில் அபே சிறையில் தொடங்கிய இப்படுகொலை நகரின் ஏனைய சிறைகளிலும் மேற்கொள்ளப்பட்டு அடுத்து வந்த நான்கு நாட்களுக்கும் தொடர்ந்தது. செப்டம்பர் படுகொலைகள் எனப் பின்னர் அழைக்கப்பட்ட இந்நிகழ்வில் மொத்தம் 1,200 கைதிகள் கொல்லப்பட்டனர். புரட்சியின் பயங்கரத்திற்கு ஆதாரமாக இப்படுகொலைகள் பற்றிய செய்திகள் ஏனைய நாடுகளில் பரவின. இதற்கு கிரோண்டியர்கள் தங்களின் அதிதீவிர எதிரிகளைக் குறிப்பாக மாரட், டாண்டன், ரோபஸ்பியர் ஆகியோரைக் குற்றம் சாட்டினர்.

தேசியப் பேரவையின் பணிகள்

1792 செப்டம்பர் 20இல் புரட்சிப் படையினர் ஊடுருவி வந்த பகைவர்களை வால்மி எனுமிடத்தில் எதிர்கொண்டு நிறுத்தினர். மறுநாள் புதிய சட்டமன்றமான தேசியப்பேரவை முடியாட்சியை ஒழித்து பிரான்ஸ் ஒரு குடியரசு என அறிவித்தது.

1793 ஜனவரி 21இல் அரசர் பதினாறாம் லூயி மக்கள் தீர்ப்பாயத்தின் முன்னர் கொண்டுவரப்பட்டு கில்லட்டின் கொலைக்கருவியில் கொல்லப்பட்டார். தனது மக்களுக்கு எதிராக அயல்நாட்டவரின் உதவியைக் கோரியதே அவர் செய்த குற்றமாகும். இதன் பின்னர் விரைவில் மேரி அன்டாய்னெட்டும் சிரச்சேதம் செய்யப்பட்டார்.

12th_History_TM_Unit_11_V2.indd 181 02-01-2023 16:39:18

பதினாறாம் லூயிக்கு மரண தண்டனை நிறைவேற்றப்படல்

இச்சூழ்நிலையில் நகர்ப்புறங்களிலும் கிராமப்புறங்களிலும் ஒரு சேரப் பசித்துயரம் பெருகியது. விலைகளைக் கட்டுப்படுத்தும்படியும், மக்களுக்கு உணவு தானிய விநியோகங்களை முறைப்படுத்தும்படியும் ஊகவணிகர்களுக்கும் பதுக்கல்காரர்களுக்கும் எதிராக நடவடிக்கை எடுக்கும்படியும் பாரிஸ் நகர மக்கள் கோரிக்கை வைத்தனர். பாரிஸ் நகர மக்களின் நியாயமான கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்கான முயற்சிகளை முன்னெடுக்காத தேசியப் பேரவை, மாறாக இராணுவத்தை ஏவி மக்களைத் தாக்கியது. படைத்தளபதிகளில் பலர் எதிரணியில் சேர்ந்து கொண்டதால் படைகள் தொடர்ந்து தோல்விகளைச் சந்தித்தன. மேற்கு பிரான்சின் வெண்டி பகுதியில் நம்பிக்கை இழந்த விவசாயிகள் முடியாட்சி ஆதரவாளர்களுடன் கைகோர்த்தனர். முடிவாக (1793 மே 29) மிதவாதிகளும் முடியரசு ஆதரவாளர்களும் லியான்ஸ் (Lyons) பகுதியைக் கைப்பற்றினர். இப்பகுதி பட்டு ஆலைத் தொழில் நன்கு செயல்பட்ட பகுதியாகும். மேலும் இப்பகுதியில் ஜெர்மனி, இத்தாலி ஆகிய நாடுகளிலிருந்து பணம் படைத்த வணிகர்கள் பலர் குடியேறியிருந்தனர்.

ஜேகோபியன்களின் ஆட்சி

புரட்சி தொடங்கியது முதல் கடந்த நான்கு ஆண்டுகளில் ஏற்பட்டிருந்த நன்மைகளை இழப்பதற்கு ரோபஸ்பியர் விரும்பவில்லை. எனவே அவர் தன்னுடைய சர்வாதிகார ஆட்சியைத் தொடங்கினார். ஜேகோபியர்கள், கிரோண்டியர் குழுவின் தலைவர்களை சிரச்சேதம் செய்யும் கில்லட்டின் இயந்திரத்திற்கு அனுப்பி வைத்தனர். டாண்டனும் கில்லட்டினுக்கு அனுப்பப்பட்டார்.

1793க்கும் 1794க்கும் இடைப்பட்ட காலம் தீவிர சீர்திருத்தங்களுக்கான காலமாகும். 1794 பிப்ரவரி 4இல் ஜேக்கோப்பியர்கள் அதிகம் இருந்த சட்டமன்றம் பிரான்சின் அனைத்துப் பகுதிகளிலும் அடிமைமுறையை ஒழித்து ஆணை பிறப்பித்தது. மக்கள் பெரும் ஊதியத்திற்கு உச்சவரம்பு விதிக்கப்பட்டது. ரொட்டி, இறைச்சி போன்ற உணவுப் பண்டங்கள் பங்கிட்டு விநியோகம் (Ration) செய்யப்பட்டன. பண்ணைப் பொருட்களுக்கான விலையை அரசாங்கம் நிர்ணயம் செய்தது. 'சார்', 'மேடம்' எனும் சொற்களுக்குப் பதிலாக ஆண் குடிமகன், பெண் குடிமகள் எனும் வார்த்தைகள் பயன்பாட்டிற்கு வந்தன. திருச்சபைகள் போன்ற சமயம் சார்ந்த இடங்கள் இராணுவ முகாம்களாக மாற்றப்பட்டன. அரசாங்கமும், சமூகத்தின் அடித்தளமும் அளவுக்கு மேலாக தீவிரமயமாக்கப்பட்டதால் கோபம் கொண்ட உறுப்பினர்கள் ரோபஸ்பியருக்கு எதிராகவே திரும்பினர். அவரும் குற்றம் சாட்டப்பெற்று 1794இல் தூக்கிலிடப்பட்டார்.

டாக்டர் ஜோசப் – இக்னேஸ் கில்லட்டின் என்பார் ஒரு பிரெஞ்சு மருத்துவராவார். அவர் ஒரு கட்டுரையில் மரண தண்டனை வழங்கப்பட்ட குற்றவாளிகளை விரைவாகக் கொல்லும் இயந்திரம் குறித்து எழுதினார். அதுபோன்ற இயந்திரத்தை அவர் கண்டுபிடிக்காவிட்டாலும் அதற்கு அவர் பெயரே வைக்கப்பட்டது. கண்டுபிடித்தவர் ஆண்டனி லூயி எனக் கூறப்படுகிறது.

இயக்குநர் குழு

ரோபஸ்பியரை பதவியைவிட்டு தூக்கியவர்களாலும் நீண்ட நாட்கள் அதிகாரத்தில் இருக்க முடியவில்லை. புரட்சியை வெறுத்தவர்கள் பாரிஸ் நகரின் வீதிகளை ஆக்கிரமித்து புரட்சிகர சிந்தனைகளை ஆதரித்தவர்களையெல்லாம் தாக்கினர். 1795 ஏப்ரல் மற்றும் மே மாதங்களில் இரண்டு கிளர்ச்சிகள் ஏற்பட்டன. புதிதாக உருவாயிருந்த தெர்மிடோரியன் எனும் குழுவுக்கு விசுவாசமாயிருந்த படைகளால் அவைகள் நசுக்கப்பட்டன. இதனிடையே எமிகிரஸ்கள் (Emigres) நாடு திரும்பத் தொடங்கினர். அவர்கள் விரைவில் முடியாட்சி மீட்கப்படுமென தற்பெருமை பேசினர்.

எமிகிரஸ் (Emigres): அரசியல் காரணங்களுக்காக தங்கள் சொந்த நாட்டிலிருந்து வெளியேறி மற்றொரு நாட்டில் குடியேறுவோரை எமிகிரஸ் என்பர். பிரான்சின் அன்றைய சூழலில் புரட்சியைத் தொடர்ந்து வந்த ஆண்டுகளில் நாட்டை விட்டு ஓடிய பிரபுக்களை எமிகிரஸ் என அழைத்தனர்.

12th_History_TM_Unit_11_V2.indd 182 02-01-2023 16:39:18

1795 அக்டோபரில் முடியாட்சி ஆதரவாளர்கள் பாரிஸ் நகர வீதிகளில் தாங்களாகவே ஒரு கிளர்ச்சியை அரங்கேற்றினர். ஒரு காலத்தில் ஜேகோபியராக இருந்தவரும், ராணுவத்தில் முன்னேறிக் கொண்டிருக்கும் அதிகாரியுமான நெப்போலியன் போனபர்ட் படைகளுக்குத் தலைமையேற்று கிளர்ச்சியாளர்களுக்கு உதவி செய்யக் களமிறங்கினார். ரத்தம் சிந்துவதற்கு அஞ்சிய தெர்மிடோரியன்கள் ஐந்து நபர்களைக் கொண்ட இயக்குநர் குழுவிடம் அதிகாரத்தை ஒப்படைக்க இசைந்தனர். நான்கு வருட காலத்தில் ஏதாவது ஒன்றை சாக்காகக் கொண்டு நெப்போலியன் அதிகாரம் மிக்கவரானார். 1799இல் நெப்போலியன் ராணுவப் புரட்சியை அரங்கேற்ற அது அவருக்கு அனைத்து அதிகாரங்களையும் நல்கியது. 1804இல் நெப்போலியன் தன்னைப் பிரான்சின் பேரரசராகப் போப்பாண்டவரைக் கொண்டு முடிசூட்டச் செய்தார்.

புரட்சியாளர்கள் தோற்கடிக்கப்பட்டிருக்கலாம், ஆனால் புரட்சியினுடைய பாரம்பரியத்தின் பெரும் பகுதி நவீன உலகை வடிவமைக்க தொடர்ந்து வாழ்ந்தது.

பிரெஞ்சுப் புரட்சியின் தாக்கம்

- பிரெஞ்சுப் புரட்சி பிரான்சில் மட்டுமல்லாது ஐரோப்பாவின் அனைத்துப் பகுதிகளிலும் ஆழமான தாக்கத்தை ஏற்படுத்தியது. பத்தொன்பதாம் நூற்றாண்டையும் இருபதாம் நூற்றாண்டின் தொடக்கப் பகுதியையும் சேர்ந்த காலனிய எதிர்ப்பு, அறிவார்ந்த மக்களின் இயக்கங்களுக்கும் கூட ஊக்கமளித்தது.
- பிரெஞ்சுப் புரட்சி பிரான்சில் பதினாறாம் லூயியின் ஆட்சியை ஒரு முடிவுக்குக் கொண்டு வந்தது.
- சமூக சமத்துவமின்மையைக் குறைத்தது. பிறப்பின் அடிப்படையில் சமூகத்தின் சில பிரிவினருக்கு வழங்கப்பட்டிருந்த உரிமைகள் பறிக்கப்பட்டன.
- இப்புரட்சி தேர்தல் உரிமைகளுடன் குடியரசு தன்மையிலான அரசு முறையை அறிமுகம் செய்தது.
- நிலமானிய முறை ஒழிக்கப்பட்டது.
- அடிமை முறை முற்றிலுமாக ஒழிக்கப்படுவதற்கு சில ஆண்டுகள் ஆனாலும் பிரெஞ்சுப் புரட்சி அடிமை முறையை ஒழித்தது.
- திருச்சபை தனது உயர்நிலையை இழந்தது. அது அரசுக்குக் கீழ் எனும் நிலையை அடைந்தது. மதச் சுதந்திரம், மத சகிப்புத்தன்மையும் நிலை பெற்றன.
- மனிதன் மற்றும் குடிமக்கள் உரிமைப் பிரகடனம் தனிப்பட்ட, கூட்டு உரிமைகள் ஆகியவற்றின் முக்கியத்துவத்தை வெளிச்சத்திற்குக் கொண்டு வந்தது.
- அரசின் மூன்று உறுப்புகளான சட்டமியற்றல், நடைமுறைப்படுத்தல், நீதித்துறை ஆகியன முக்கியத்துவம் பெற்றன. ஒன்றையொன்று கண்காணித்துச் சமநிலைப்படுத்திக் கொண்டன. இந்த ஏற்பாடு ஒரு குறிப்பிட்ட மையத்தில் அதிகாரங்கள் குவிக்கப்படுவதைத் தடை செய்தது.
- ஐரோப்பா முழுவதிலும், கொடுங்கோல் ஆட்சியை ஒழித்து சமத்துவ சமூகத்தை நிறுவ முடியும் எனும் நம்பிக்கையைப் பிரெஞ்சுப் புரட்சி மக்களுக்கு வழங்கியது.

11.3 இலத்தீன் அமெரிக்காவில் புரட்சிகள்

பதினாறாம் நூற்றாண்டில் இலத்தீன் அமெரிக்க பகுதிகள் ஸ்பானியர்களால் கைப்பற்றப்பட்டன. மேலும் போர்த்துகீசியரும் பிரெஞ்சுக்காரர்களும் அங்கு சென்றனர். இன்கா, அஸ்டெக்குகள் போன்ற தென்அமெரிக்க பண்பாடுகளின் அரசியல் அதிகாரம் இக்காலனியாதிக்கச் சக்திகளால் சிதிலமாக்கப்பட்டன. அங்கிருந்த மத நம்பிக்கைகளை ஒரு முடிவுக்குக் கொண்டு வந்த காலனியாதிக்கச் சக்திகள் அப்பகுதிகளில் கத்தோலிக்க மதத்தை அறிமுகம் செய்தன. இலத்தீன் அமெரிக்காவில் காலனியாதிக்கவாதிகளின் ஆட்சியானது கொடூரமானதாக இருந்தது. அது இனப்படுகொலைகள் மற்றும் பூர்வகுடி மக்கள் கணக்கில்லாமல் கொன்று குவிக்கப்படுதல் போன்றவற்றால் அடையாளப்படுத்தப்பட்டது. பூர்வகுடி மக்கள் காலனிய முதலாளிகளின்

குடியேறியவர்களின் அட்டூழியங்கள்

12th_History_TM_Unit_11_V2.indd 183 02-01-2023 16:39:18

www.tntextbooks.in

பண்ணைகளிலும் சுரங்கங்களிலும் அடிமைகளைப் போல வேலைகள் செய்யவேண்டியிருந்தது. காலனியாதிக்கவாதிகள் சர்க்கரை, காபி, தங்கம், வெள்ளி ஆகியவற்றை ஐரோப்பிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்தனர்.

இலத்தீன் அமெரிக்கா இன்று மத்திய அமெரிக்காவிலும் தென்அமெரிக்காவிலுமுள்ள மெக்சிகோ, பிரேசில், அர்ஜென்டினா, பெரு, சிலி, வெனிசுலா மற்றும் கரீபியன் நாடுகள் போன்ற பல நாடுகளைக் கொண்டுள்ளது.

ஹைட்டியர்களின் புரட்சி

முந்நாளில் செயின்ட் – டோமிங்கோ (பிரெஞ்சுக்காரர்கள் தங்கள் காலனிகளை அவ்வாறு அழைத்தனர்) என்றறியப்பட்ட ஹைட்டி, கரீபியன் கடலில் இருந்த மிக வளமான பிரெஞ்சுக் காலனியாகும் (1659 – 1804). அது ஐரோப்பாவின், ஏனைய கரீபியன், அமெரிக்கக் காலனிகளின் மொத்த சர்க்கரை உற்பத்தியைக் காட்டிலும் அதிக சர்க்கரையை உற்பத்தி செய்யும் பண்ணைகளைக் கொண்டிருந்தது. இத்தீவின் பூர்வகுடி மக்கள் தங்கத்திற்காகச் சுரங்கங்கள் தோண்ட கட்டாயப்படுத்தப்பட்டனர். ஐரோப்பிய நோய்களாலும் கொடூரமான பணியிடச் சூழலினாலும் இம்மக்கள் பேரழிவுக்குள்ளாயினர். பதினாறாம் நூற்றாண்டின் இறுதியில் இம்மக்கள் உண்மையிலேயே மறைந்து போனார்கள். மேற்கு ஹிஸ்பானியோலா பகுதியைச் சேர்ந்த நில உரிமையாளர்கள் அதிகமான எண்ணிக்கையில் ஆப்பிரிக்க அடிமைகளை இறக்குமதி செய்தனர். 1789இல் 5,56,000 என மதிப்பிடப்பட்ட செயின்ட் டோமிங்கோவின் மக்கள் தொகை 5,00,000 ஆப்பிரிக்க அடிமைகளையும், 32,000 காலனியவாதிகளையும் (வெள்ளை இன மக்கள்), 24,000 சுதந்திர அஃப்ராஞ்சிகள் (affranchis) அல்லது முலாட்டோக்கள் (ஆப்பிரிக்க ஐரோப்பியரின் வழிவந்த கலப்பினக் கருப்பு நிற மக்கள்) மக்களையும் கொண்டிருந்தது.

வின்சென்ட் ஓஜ்

பாஸ்டில் சிறை வீழ்த்தப்பட்டது எனும் செய்தியைத் தொடர்ந்து முடியாட்சியரின் ஆளுநருக்கு எதிராக ஆயுதமேந்திய எதிர்ப்பு ஒன்று நடைபெற்றது. முலாட்டோபிரிவைச் சேர்ந்த வின்சென்ட் ஓஜ் என்பவர் காலனிகளில் மேற்கொள்ளப்பட வேண்டிய சீர்திருத்தங்களுக்காகப் பாரிஸின் நகரச் சட்டமன்றத்தின் ஆதரவைத் திரட்டிக் கொண்டிருந்தார். 1790இன் இறுதியில் அவர் தலைமையில் கிளர்ச்சி நடைபெற்றது. ஆனால் கிளர்ச்சி ஒடுக்கப்பட்டு அவர் கைது செய்யப்பட்டு தூக்கிலிடப்பட்டார். 1791 மே மாதத்தில் பிரான்சின் புரட்சி அரசாங்கம் வசதி படைத்த முலாட்டோக்களுக்குக் குடியுரிமை வழங்கியது. அவர்கள் சொந்தமாக அடிமைகளைக் கொண்டிருந்தனர். ஆனால் ஹைட்டியின் ஐரோப்பியக் குடிமக்கள் இச்சட்டத்தை மதிக்கவில்லை. இரண்டு மாதங்களுக்குள்ளாக ஐரோப்பிய வெள்ளை இனத்தாருக்கும் முலாட்டோக்களுக்குமிடையே ஆங்காங்கே மோதல்கள் வெடித்தன. கருப்பின அடிமைகளைப் பொறுத்த மட்டிலும், எந்த மாற்றமும் இல்லாமல் அவர்கள் தொடர்ந்து உழைத்து, துயருற்று மாள்வர் என அனைவரும் கருதினர். ஆனால் அனைவரும் வியப்படையும் வண்ணம், ஆகஸ்டு மாதத்தில் ஆயிரக்கணக்கில் அடிமைகள் கிளர்ச்சியை மேற்கொண்டனர்.

ஐரோப்பிய வெள்ளையினத்தவர் அடிமைகளின் கிளர்ச்சியை அடக்குவதற்காக முலாட்டோக்களுடன் சமாதான முயற்சிகளை மேற்கொண்டனர். இதனிடையே 1792 ஏப்ரலில் பிரெஞ்சு தேசியப் பேரவை அனைத்து முலாட்டோக்களுக்கும் குடியுரிமை வழங்கியது. போட்டியும் பகைமையும் கொண்ட குழுக்களிடையே

12th_History_TM_Unit_11_V2.indd 184 02-01-2023 16:39:18

www.tntextbooks.in

நாடு நாசமானது. அது சாண்டோ டொமிங்கோவில் இருந்த ஸ்பானிய குடியேற்றவாசிகள் அல்லது ஜமைக்காவிலிருந்த பிரிட்டிஷ் துருப்புக்களின் பிடியில் இருந்தது. 1793இல் அமைதியைப் பராமரிப்பதற்காகப் பிரெஞ்சு அரசாங்கம் லெகர் – ஃபெலிசிட் சோன்டோனாக்ஸ் எனும் ஆணையர் ஒருவரை அனுப்பி வைத்தது. அவர் தன்னுடைய படையில் சேர்ந்த அடிமைகள் அனைவருக்கும் சுதந்திரம் வழங்கினார். விரைவில் அவர் அடிமைமுறையை ஒட்டு மொத்தமாகவே ஒழித்தார். இம்முடிவைப் பின்னர் பிரெஞ்சு அரசாங்கம் அதிகாரபூர்வமாக உறுதி செய்தது.

டூசையின்ட் எல்' ஓவர்ச்சர்

1790களின் இறுதிப் பகுதியில் முன்னர் அடிமையாக இருந்தவரும், படைத்தளபதியுமான டூசையின்ட் எல்' ஓவர்ச்சர் என்பவர் பல பகுதிகளைத் தனது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்தார். இவருடைய படைகளின் கட்டுபாட்டின் கீழிருந்த செயின்ட் டோமிங்கோவை மீட்பதற்கு நெப்போலியன் 12,000 படை வீரர்களை கப்பலில் அனுப்பி வைத்தார். இதனைத் தொடர்ந்து நடந்த போர் நீண்ட, இரத்தக்களரியான போராக அமைந்தது. போரின் ஒரு கட்டத்தில் பிரெஞ்சு படைகள் வெற்றி பெற்றுவிடும் நிலை ஏற்பட்டது. தொஸ்செயிண்ட் எதிரியோடு சமாதானம் செய்துகொள்ள வாய்ப்பிருப்பதாகத் தவறாக நம்ப வைக்கப்பட்டார். பின்னர் அவர் கடத்திச் செல்லப்பட்டு கொல்லப்பட்டார். இச்சூழலில் அவரின் முந்நாள் படைத்தளபதி டெசலைன்ஸ் நிலமையைக் கட்டுக்குள் கொண்டுவந்து கருப்பின மக்களின் எதிர்ப்பை ஒழுங்கமைத்தார். நெப்போலியனின் படைகள் அவரால் தோற்கடிக்கப்பட்டன. ஹைட்டி 1804இல் செயின்ட் – டோமிங்கோ கருப்பின மக்களின் சுதந்திர நாடானது.

வெனிசுலா, நியூ கிரனடா (தற்போது கொலம்பியா)

ஹைட்டியர்களின் புரட்சியால் ஊக்கம் பெற்ற வெனிசுலாவின் அடிமை மக்கள் 1790களில் கிளர்ச்சிகளை மேற்கொண்டனர். கிரியோல் (கலப்பின ஐரோப்பியர்கள், கருப்பின மக்களின் வழிவந்தோர்) எனப்பட்ட இன மக்கள் தங்களின் பெருந்தோட்டப் பொருளாதாரத்திற்கு லாபம் நல்கும் சுதந்திர வணிகத்தை மேலும் விரிவாக்கம் செய்ய நினைத்தனர். அதே சமயம் ஸ்பானியர்களின் கட்டுப்பாடு நீக்கப்பட்டுவிட்டால் புரட்சிகள் ஏற்பட்டு தங்களுடைய அதிகாரமும் சிதைக்கப்பட்டுவிடுமோ எனவும் அஞ்சினர். எனவே அவர்கள் நியூ கிரனடாவிலுள்ள ஆளுநருக்கு மிகவும் விசுவாசமிக்க ஒரு பிரிவை உருவாக்கினர்.

இதனிடையே திறமையற்ற ஸ்பெயின் நாட்டு அரசர் நான்காம் சார்லஸ் தனது மகன் பெர்டினான்டுக்குச் சாதகமாக அரியணையைத் துறந்தார். ஆனால் அவர்கள் இருவரையும் சிறையிலடைத்த நெப்போலியன் தனது சகோதரர் ஜோசப் என்பவரை 1808இல் ஸ்பெயினின் அரசனாக்கினார். சார்லசும் பெர்டினான்டும் பதவி நீக்கம் செய்யப்பட்டதால் ஸ்பெயினில் ஆறாண்டு காலத்திற்கு நிலையான அரசு என்பது இல்லாமலானது. ஸ்பெயினில் ஏற்பட்ட அரசியல் குழப்பம் அதன் காலனிகளுக்குத் தங்கள் உரிமைகளை உறுதிப்படுத்திக் கொள்ளும் வாய்ப்புகளை வழங்கியது. விரைவில் நாட்டுப்பற்றுமிக்க புரட்சியாளர்கள் புரட்சியரசுகளை நிறுவினர். அவ்வரசுகள் 1810இல் சில சமூகப் பொருளாதார சீர்திருத்தங்களை அறிமுகம் செய்தன.

சைமன் பொலிவர்

வெனிசுலாவில் சைமன் பொலிவரின் தலைமையிலான நாட்டுப்பற்றாளர்கள் தாங்கள் ஸ்பெயினிடமிருந்து விலகிவிட்டதாக அடுத்த ஆண்டில் வெளிப்படையாக அறிவித்தனர். இதனிடையே 1812இல் ஏற்பட்ட பூகம்பம் நாட்டுப்பற்றாளர்களின் வசமிருந்த பகுதிகளில் பெரும் சேதத்தை ஏற்படுத்தியது. இதை வாய்ப்பாகக் கொண்டு ஸ்பெயின் அரசின் விசுவாசப் படையினர் நாட்டுப்பற்றாளர்களின் படைகளைத் தாக்கி, சைமன் பொலிவரையும் ஏனையோரையும் நியூ கிரனடாவில் தஞ்சம்புகச் செய்தனர். (ஆளுநரின் ஆட்சிப் பகுதியில் இதயப் பகுதியாக இப்பகுதி இருந்தது).

1813இல் மீண்டும் புதிய படையோடு வெனிசுலா திரும்பிய பொலிவர் "மரிக்கும் மட்டிலும் போர்" எனும் முழக்கத்துடன் போரைத் தொடங்கினார். ஜோஸ் தாமஸ் போவெஸ் என்பாரின் தலைமையில் போரிட்ட விசுவாசிகள் பொலிவரை தாய்நாட்டை விட்டு துரத்துவதில் மீண்டும் வெற்றி பெற்றனர். 1815வாக்கில் வெனிசுலாவிலும் ஸ்பானிய தென்அமெரிக்கா முழுவதும் சுதந்திரப் போராட்டங்கள் அனைத்தும் ஏறத்தாழ மரித்துப்போனது போலக் காணப்பட்டது. ஏழாம் பெர்டினான்டால் அனுப்பி வைக்கப்பட்ட பெரும்படை வெனிசுலாவையும் நியூ கிரனடாவின்

12th_History_TM_Unit_11_V2.indd 185 02-01-2023 16:39:19

பெரும் பகுதியையும் மீண்டும் கைப்பற்றுவதில் வெற்றி பெற்றன. 1816இல் பொலிவரால் மேற்கொள்ளப்பட்ட மற்றொரு படையெடுப்பும் தோல்வியைத் தழுவியது.

ஆனால் அடுத்த ஆண்டில் (1817) மிகப்பெரிய அளவிலான புத்துயிர் ஊட்டப்பெற்ற சுதந்திரப் போராட்டம் உதயமானது. நாட்டின் வட பகுதிகளில் வெற்றி பெற்ற இப்போராட்டம் ஆன்டிஸ் மலைப் பகுதிகளிலும் பரவியது. போராட்டங்களுக்குப் பின்னர் சைமன் பொலிவர் ஒரு வலிமை மிகுந்த இராணுவ, அரசியல் சக்தியாக உருவானார். இத்தருணத்தில் லானெரோ (llanero) என்னும் கலப்பினத்தை சேர்ந்த மேய்ச்சல் சமூகத்தார் ஜோஸ் அன்டோனியா பயஸ் என்பவரின் தலைமையில் விடுதலைப் போராட்டத்தில் இணைந்தனர். 1818–19இல் நாட்டுப்பற்றாளர்களின் படைகள்பெற்ற வெற்றிகளில் இவர்கள் அளப்பரிய பங்களிப்புச் செய்தனர். கிழக்கு ஆன்டிஸ் மலைப்பகுதிவரை தன்னுடைய படைகளை நடத்திச் சென்ற பொலிவர் போயகா போர்க்களத்தில் தனது பகைவர்களை படுதோல்வி அடையச் செய்தார்.

போயகா போர்

நாட்டின் வட பகுதிகளில் பெற்ற வெற்றிகளை ஒருங்கிணைத்து வலுப்படுத்துவது சிரமமான பணியாயிற்று. 1819இல் பொலிவரால் அங்கோஸ்டுரா என்ற இடத்தில் கூட்டப்பட்ட மாநாட்டில், இன்றைய வெனிசுலா, கொலம்பியா, பனாமா, ஈக்வடார் ஆகியவை உள்ளிட்ட ஒன்றியத்திற்கு பொலிவரே குடியரசுத்தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். ஆனால் அப்பகுதியில் நிலவிய கடுமையான வேறுபாடுகள் முந்நாள் ஸ்பானியக் காலனிகளை ஒரே நாடாக, இலத்தீன் அமெரிக்க ஐக்கிய நாடுகள் என மாற்றம் பெறவேண்டும் என்ற பொலிவரின் நம்பிக்கையைச் சிதைத்தன. மேலும் வெனிசுலாவின் கணிசமான பகுதியும், கொலம்பியாவின் ஆன்டிஸ் மலைப்பகுதியும் ஒட்டு மொத்த ஈக்வடாரும் அரசு விசுவாசிகளின் ஆதரவாளர்கள் வசமிருந்தன. 1820இல் நிலைமை சாதகமாக மாறின. அரசருடைய படையெடுப்பில் பங்கேற்பதற்காக கேடிஸ் எனுமிடத்தில் காத்திருந்த படைகள் புரட்சியில் இறங்கின. இதனைத்தொடர்ந்து 1821இல் நியூ கிரனடாவும், வெனிசுலாவும் விடுதலை பெற்றன. அதே ஆண்டில், கொலம்பியாவின் குகுடா எனும் நகரில் நடைபெற்ற மாநாட்டில் மென்மேலும் மையப்படுத்தப்பட்ட கிரான் கொலம்பியாவின் தலைவராக பொலிவரை தேர்வு செய்தது.

சைமன் பொலிவர்: பொலிவர் கராகஸ் பகுதியின் கிரியோல் வகுப்பைச் சேர்ந்த பழமை வாய்ந்த உயர்குடும்பத்தைச் சேர்ந்தவர். ஒரு கொள்கையாளராக, இராணுவத்தலைவராக அவர் விடுதலை இயக்கத்திற்கு அடிப்படை முக்கியத்துவம் வாய்ந்தவராகத் திகழ்ந்தார். தன்னுடைய புகழ்பெற்ற 'ஜமைக்கா கடிதம்' (Jamaica Letter) எனும் கடிதத்தில் (1815இல் நாட்டைவிட்டு வெளியேற்றப்பட்ட நிலையில் எழுதப்பட்டது) நாட்டுப்பற்றாளர்கள் பலமுறை தோற்கடிக்கப்பட்ட நிலையிலும் கூட சுதந்திரத்தின்பால் தனக்கிருந்த தளராத நம்பிக்கையை வலியுறுத்தினார். ஸ்பானியர்களின் காலனியாதிக்கத்தை விமர்சித்த அவர், தன்னாட்சியுடன் கூடிய மையப்படுத்தப்பட்ட குடியாட்சி அரசை நிறுவுவதே முந்தைய காலனிகளுக்கு இருக்கும் ஒரே பாதை எனக் கருதினார். முடிவாக அவர் விரும்பிய குடியாட்சியானது குழு ஆட்சியாகும் (Oligarchic). ஒரு நாடு இனங்களால் துண்டுபடுமேயானால் அங்கே ஒழுக்கம் நிறைந்த அரசு செயல்பட வாய்ப்பில்லை என நம்பினார். பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பாதியிலும் இருபதாம் நூற்றாண்டிலும் கூட லத்தீன் அமெரிக்க விடுதலை இயக்கங்களுக்கும் இடது சாரிகளுக்கும் உத்வேகமூட்டும் ஒரு சக்தியாகவே பொலிவர் திகழ்ந்துள்ளார்.

மெக்சிகோ புரட்சி

மெக்சிகோவின் சுதந்திரம் தாமதமாகவே பெறப்பட்டது. மெக்சிகோவில் 'கிரியோல்' மற்றும் 'தீபகற்பத்தினர்' (Penisulars) என இரு அதிகாரம் மிக்க சமூகப்பிரிவினர் இருந்தனர். இவர்கள் ஸ்பெயினிலோ அல்லது போர்த்துகல்லிலோ பிறந்த காலனியாதிக்கத் தலைவர்களாவர். மெக்சிகோ சமூகத்தின் அதிகாரமிக்க பிரிவினருக்கு ஸ்பெயினிடமிருந்து பிரிந்தால் தங்களின் பாரம்பரிய செல்வாக்கையும் அதிகாரத்தையும் இழக்கும் நிலையிருந்தது. 1808–1810க்கும் இடைப்பட்ட காலத்தில், இப்பகுதியில் ஸ்பெயினின் அதிகாரத்தைப் பாதுகாப்பதற்காக தீபகற்பத்தினர் வலுச்சண்டைகளை மேற்கொண்டனர். ஸ்பானிய

12th_History_TM_Unit_11_V2.indd 186 02-01-2023 16:39:19

அரசர் இல்லாத நிலையில் அரசு நிர்வாகத்தை எவ்வாறு நடத்துவது என்ற கேள்விக்கு விடைகாண ஒரு மாநாட்டைக் கூட்டுவது எனும் முடிவை மெக்சிகோ நகரின் முக்கிய பிரிவினரான தீபகற்பத்தினர் எதிர்த்தனர். அவர்கள் ஆளுநரை அகற்றிவிட்டு கிரியோல்களைக் கொடுமைப்படுத்தினர். தங்களால் மேலாதிக்கம் செலுத்த இயலும் எனத்தெரிந்த திறமைகுன்றிய ஆளுநர்களை வரவேற்றனர். எப்படி இருந்தபோதிலும் தீபகற்பத்தினரின் இம்முயற்சிகளால் சுதந்திரப் போராட்டம் உதயமாவதைத் தடுக்க முடியவில்லை.

மிகுவல் ஹிடல்கோ

ஜோஸ் மரியா மோர்லோஸ்

மிகுவல் ஹிடல்கோ எனும் கத்தோலிக்கப் பாதிரியாரே மெக்சிகோவின் புரட்சிக்குத் தலைமையேற்றார். ஏழை மக்களுக்கு ஆதரவாக இருந்த அவர் பூர்வகுடி அமெரிக்கர்களின் ஏழ்மையான வாழ்க்கைச்சூழல் கண்டு அவர்கள் மீது அனுதாபம் கொண்டார். டோலோரஸ் திருச்சபையில் அவர் ஆற்றிய உணர்ச்சிகரமான சொற்பொழிவுகளில் மெக்சிகோவின் விடுதலையைக் கோரினார். ஸ்பெயின், கிரியோல்களின் படைகளுக்கு எதிராக மெஸ்டிசோ இன மக்களைக் கொண்ட புரட்சிப்படையொன்றுக்கு அவர் தலைமையேற்றார். இருந்தபோதிலும் அவர் 1811இல் தோற்கடிக்கப்பட்டு கொல்லப்பட்டார். பின்னர் இவ்வியக்கத்திற்குத் தலைமையேற்ற ஜோஸ் மரியா மோர்லோஸ் 1813இல் ஸ்பெயினில் இருந்தவாறே சுதந்திரப் பிரகடனம் செய்தார். அவரும் 1815இல் தோற்கடிக்கப்பட்டார்.

மெக்சிகோவைச் சேர்ந்த கிரியோல்கள் அல்லது செல்வச்செழிப்புமிக்க வணிகர்கள் ஸ்பெயின் நாட்டு அரசியல் நிகழ்வுகளைக் கண்காணித்து வந்தனர். ஸ்பெயினில் முடியாட்சியை அகற்றிவிட்டு, புதியதோர் அரசியல் அமைப்பை உருவாக்குவதற்காக ஒரு இயக்கம் தயாராகிக் கொண்டிருந்தது. இது தங்களின் அதிகாரத்தைக் குறைத்துவிடும் என்று எண்ணிய கிரியோல்கள் 1821இல்சுதந்திரப்பிரகடனம்செய்தனர்.இதில்வியப்பு யாதெனில் இச்சுதந்திரப் பிரகடன இயக்கத்திற்கு தலைமையேற்ற இராணுவ அதிகாரிதான் முன்னர் மரியா மோர்லோசை தோற்கடித்தவராவார். தன்னையே பேரரசராக அறிவித்துக் கொண்ட இவருடைய கொடிய ஆட்சி 1824இல் அகற்றப்பட்டது. மெக்சிகோ தன்னைத்தானே ஒரு குடியரசாக அறிவித்துக் கொண்டது.

பிரேசிலின் சுதந்திரம்

பிரேசில் போர்த்துகலின் ஒரு காலனியாக இருந்தது. 1808இல் நெப்போலியன் போர்த்துகலின் மீது படையெடுத்தபோது போர்த்துகலின் அரசர் டாம் ஜோவோ (ஆறாம் ஜான்) பிரேசிலுக்குத் தப்பியோடினார். அங்கே அவர் நிலச் சீர்திருத்தங்களை அறிமுகம் செய்தல், இராணுவத்தை உருவாக்குதல், மருத்துவ, கலைக் கல்லூரிகளை நிறுவுதல் போன்ற நடவடிக்கைகளை மேற்கொண்டு பிரேசிலை அனைத்து அம்சங்களிலும் முன்னேற்றமடையச் செய்தார். நெப்போலியன் தோற்கடிக்கப்பட்ட பின்னரும் போர்த்துகீசிய அரசர் தொடர்ந்து பிரேசிலில் தங்கியிருந்தார். ஆனால் அவருடைய அதிகாரத்திற்கு எதிராக சவால்கள் தோன்றியபோது, காலனியான பிரேசிலை தனது மகன் டாம் பெட்ரோவின் கைகளில் ஒப்படைத்துவிட்டு போர்த்துகல் சென்றுவிட முடிவு செய்தார்.

டாம் பெட்ரோ

பிரேசிலின் மேட்டுக்குடி மக்கள் ஆப்பிரிக்க அடிமைகளைச் சார்ந்திருந்தனர். அது போர்த்துகல் உடனான தொடர்ந்த உறவுக்கு சாதகமாய் அமைந்தது. பெருந்தோட்டங்களின் உரிமையாளர்கள் ஆப்பிரிக்க அடிமை வணிகத்தைச் சார்ந்திருந்தனர். அவ்வணிகத்தைப் போர்த்துகல் கட்டுப்படுத்தியது. 1800இல் பிரேசிலின் மொத்த மக்கள் தொகையில் ஏறத்தாழப் பாதி மக்கள் அடிமைகளாக இருந்தனர். இதனால் கிரியோல்கள் அரசியல் முன் முயற்சிகளில் தயக்கங்காட்டவும் அதன் விளைவாக சமூகத்தில் தங்களைக் காட்டிலும் கீழானவர்களின் மீதான கட்டுப்பாட்டினை இழப்பதற்கும் வாய்ப்பிருந்தது. ஆகவே போர்த்துகல்லில் இருந்த அதிகாரிகள் பிரேசிலில் ஜோ மேற்கொண்ட சீர்திருத்தங்களுக்கு ஒரு முற்றுப்புள்ளி வைத்தனர். டாம் பெட்ரோவையும் போர்த்துகல்லுக்குத் திரும்பிவரக் கோரினர். இருந்தபோதிலும் டாம் பெட்ரோ பிரேசிலின் சுதந்திரத்தை அறிவித்துவிட்டு அங்கேயே

12th_History_TM_Unit_11_V2.indd 187 02-01-2023 16:39:19

தங்கிவிட முடிவு செய்தார். 1822இல் பிரேசில் போர்த்துகல்லிடமிருந்து விடுதலைபெற்றது. தென்அமெரிக்காவில் அரசியல் அமைப்பிற்கு கட்டுப்பட்ட முதல் முடியரசாக அது மாறியது. முதலாம் பெட்ரோ அதன் முதல் பேரரசர் ஆவார்.

ஏனைய புரட்சிகள்

சான் மார்ட்டின்

அர்ஜென்டினாவின் விடுதலை வீரர் சான் மார்ட்டின், சிலியின் விடுதலை வீரரான பெர்னார்டோ ஓ ஹிகின்ஸ் என்பாருடன் இணைந்தார். இருவரும் இணைந்து 1818இல் சிலிக்கும் 1820இல் பெரு நாட்டிற்கும் விடுதலை பெற்றுத் தருவதில் வெற்றி பெற்றனர். பொலிவரும் சான் மார்ட்டினும் ஈக்வடாரில் உள்ள குவாயாகில் துறைமுகத்தில் லத்தீன் அமெரிக்காவின் ஒருங்கிணைப்புக்கான எதிர்கால நடவடிக்கைகள் குறித்து விவாதிக்கச் சந்தித்தனர். ஐரோப்பிய பாணியிலான, அரசியலமைப்புக்கு உட்பட்ட முடியாட்சி அரசு அமைக்கப்பட வேண்டுமென சான் மார்ட்டின் விரும்பினார். பொலிவர் குடியாட்சி அரசு முறை அமைவதை விரும்பினார். அவர்களிடையே ஒருமித்த கருத்து ஏற்படவில்லை. இதனிடையே ஓய்வு பெற்ற சான் மார்ட்டின் முழு அதிகாரத்தையும் பொலிவரிடம் ஒப்படைத்தார். 1826 காலப்பகுதியில் அனைத்து தென்அமெரிக்கக் காலனிகளுக்கும் பொலிவர் சுதந்திரம் பெற்றுக்கொடுத்தார்.

காலனிகள் அனைத்தும் சுதந்திரம் பெற்ற பின்னர், அனைத்து இலத்தீன் அமெரிக்க நாடுகளையும் ஒருங்கிணைத்து கிரான் கொலம்பியா எனும் பெயரில் ஒரே நாடாக மாற்ற பொலிவர் முயற்சி மேற்கொண்டார். ஆனால் மலைகளையும் காடுகளையும் கொண்ட கரடு முரடான நிலவியல் அமைப்பினாலும், அதிகாரப் போட்டிகளாலும் அவரது கனவு நனவாகாமல் போயிற்று. பெரும்பான்மையான தென்அமெரிக்க நாடுகள் தங்களைக் குடியரசுகளாக அறிவித்துக் கொண்டாலும் ஸ்பெயினின் ஆதிக்கத்திலிருந்து விடுதலை அடைந்தாலும், அவைகள் பெருமளவில் அந்நிய நாடுகளையே சார்ந்துள்ளன. பத்தொன்பதாம் நூற்றாண்டின் போக்கில் அமெரிக்காவும் பிரான்சும் மெக்சிகோவின் மீது படையெடுத்தன. அர்ஜென்டினா, சிலி போன்ற நாடுகளின் மீது இங்கிலாந்து தொடர்ந்து தனது மேலாதிக்கச் செல்வாக்கை நீண்டகாலம் வரை கொண்டிருந்தது. ஒவ்வொரு லத்தீன் அமெரிக்க நாட்டிலும் கருத்து வேறுபாடு கொண்ட குழுக்கள் எதிரெதிர் தாராளவாதக் கட்சிகளையும் பழமைவாதக் கட்சிகளையும் நடத்தி நடுநிலையற்ற, ஏற்றதாழ்வுகளைக் கொண்ட சமூகக்கட்டமைப்பை பாதுகாக்கின்றன. ஒரு பக்கம் சகலவிதமான உரிமைகளையும் பெற்றுள்ள மிகப்பெரும் நில உடைமையாளர்கள் மறுபுறம் உரிமைகளற்ற கடுமையான வறுமையில் வாடும் சாதாரண மக்கள் என்பதே அச்சமூகங்களின் குணாதிசயமாக உள்ளது.

இருபதாம் நூற்றாண்டில் குறிப்பாக இரண்டாவது உலகப் போருக்குப் பின்னர், அமெரிக்கா தனக்குச் சாதகமான, வளைந்து கொடுக்கக்கூடிய சர்வாதிகார அரசுகள் மூலம் (வாழைப்பழ குடியரசுகள் என குறிப்பிடப்படுகின்றன) இந்நாடுகளைக் கட்டுப்படுத்துவதால் தென்அமெரிக்கா இடர்ப்பாடுகள் நிறைந்த கண்டமாகவேயுள்ளது.

11.4 தொழிற்புரட்சி

பிரெஞ்சுப் புரட்சியின் பின்விளைவில், நெப்போலியன் பிணையப்பணம் பெறுவதற்காக ஒட்டுமொத்த ஐரோப்பாவையும் தன்வசம் வைத்திருந்தபோது, மனிதகுல வரலாற்றின் மீது தாக்கத்தை ஏற்படுத்துவதை தனது விதியாகக் கொண்ட மற்றொரு புரட்சி இங்கிலாந்தில் நடைபெற்றுக் கொண்டிருந்தது. அதுவே தொழிற்புரட்சியாகும். தொழிற்புரட்சி என்பது பெருமளவிலான பொருட்களை மிகப்பெரும் ஆலைகளில் உற்பத்தி செய்யும் முறையைப் பின்பற்றுதலைக் குறிக்கிறது. இது கைவினைஞர்களின் குடிசைத் தொழிற்கூடங்களிலோ அல்லது பட்டறைகளிலோ பொருட்களைத் தயாரிப்பது எனும் பழைய முறைக்கு எதிரானது.

பருத்தித் தொழிற்சாலைகளில் புரட்சியை ஏற்படுத்திய சில முக்கியமான கண்டுபிடிப்புகளின் தோற்றமே தொழிற்புரட்சியின் முதல் கட்டமாகும். நீராவியின் பயன்பாடானது நிலக்கரியைப் பயன்படுத்தி இரும்பை உருக்கும் பழைய முறையைக் கைவிடச் செய்தது. நிலக்கரி, இரும்புத் தொழிற்சாலைகள் மிக வேகமாக வளர்ந்தன. பின்பு செய்திப் பரிமாற்றத்திற்கான வழிவகைகளில் பெரும் மாற்றங்கள் ஏற்பட்டன. இடம் விட்டு இடம் செல்லக்கூடிய முதல் பயணிகள் ரயில் (1830), நீராவிப்படகு, மின்சாரத் தந்தியின் பயன்பாடு (1835) ஆகியவை நடைமுறைக்கு வந்தன. ஒரு நூறாண்டு காலத்தில் இங்கிலாந்து முற்றிலுமாக மாற்றப்பட்டது.

12th_History_TM_Unit_11_V2.indd 188 02-01-2023 16:39:19

இரண்டாவது தொழிற்புரட்சியானது (1870–1914) எஃகு உற்பத்தியிலும் பெட்ரோலியம், மின்சாரம் ஆகிய துறைகளிலும் புதிய முறைகளை எதிர்கொண்டது. ஒட்டுமொத்த ஐரோப்பாவும் வட அமெரிக்காவும் இக்காலப்பகுதியில் முதல் கட்டத் தொழிற்புரட்சியின் தாக்கத்தினை உணரத் தொடங்கின.

சிறப்புக் கூறுகள்

தொழிற்புரட்சியின் இன்றியமையாத கூறு, அறிவியல் தொழிலில் புகுத்தப்பட்டதுதான். இரும்பு, எஃகு ஆகியவற்றின் பயன்பாடு நிலக்கரி மற்றும் நீராவி போன்ற ஆற்றலுக்கான புதிய மூலப்பொருட்களின் பயன்பாடு, உற்பத்தியை அதிகரிக்கச்செய்த புதிய இயந்திரங்களின் கண்டுபிடிப்பு, ஆலைமுறை என்றழைக்கப்பட்ட வேலைகளை ஒழுங்கு செய்த புதியமுறைகள் ஆலைகளில் நடைமுறைபடுத்தப்பட்ட வேலை பிரிவினை, சிறப்புத் தொழிற்திறன் முறைகள், போக்குவரத்திலும் செய்தித் தொடர்புகளிலும் ஏற்பட்ட முன்னேற்றங்கள் ஆகியவை பேரளவிலான பொருட்கள் உற்பத்தி செய்யப்படுவதை சாத்தியமாக்கியது.

இங்கிலாந்தில் தொழிற்புரட்சி ஏற்பட்டதற்கான காரணங்கள்

பல்வேறு காரணங்களினால் தொழிற்புரட்சி முதன் முதலாக இங்கிலாந்தில் தொடங்கியது.

அ) வணிகப்புரட்சியின் தாக்கம்: வியாபார, வணிகத் துறைகளில் ஏற்பட்ட புரட்சிகரமான மாற்றங்கள், முதலாளிகள் எனும் புதிய வர்க்கத்தை உருவாக்கியது. இவர்கள் தங்களிடமிருந்த உபரிச் செல்வத்தை முதலீடு செய்வதற்கான வாய்ப்புகளைத் தொடர்ந்து தேடினர். இதன் விளைவாக உற்பத்தித் துறையின் வளர்ச்சிக்குத் தேவையான முதலீடு தாராளமாக கிடைத்தது.

ஆ) கடல் கடந்து காலனிகளை உருவாக்கும் போட்டியில் இங்கிலாந்து தாமதமாக இணைந்தாலும், காலப்போக்கில் இங்கிலாந்து மேலாதிக்கம் பெற்றது. ஸ்பெயின், போர்த்துகல், பிரான்ஸ் போன்ற ஐரோப்பிய சக்திகளை அது தோற்கடித்தது. 18ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் உலகின் நான்கில் ஒரு பகுதி இங்கிலாந்தின் காலனிகளாக இருந்தது. அது உலக மக்கள் தொகையில் 25 விழுக்காட்டு மக்களை (ஆப்பிரிக்கா, அமெரிக்கா, ஆசியா) ஆட்சி செய்தது. இதனால் இக்காலனி நாடுகளில் ஆலைப்பொருட்களுக்கான தேவை வளர்ந்து கொண்டேயிருந்தது.

இ) இங்கிலாந்தில் மக்கள்தொகை வளர்ச்சிக்கு ஏற்றவாறு சந்தைகளும் விரிவடைந்தன. 1600இல் நான்கு மில்லியன்களாக இருந்த இங்கிலாந்தின் மக்கள்தொகை 1700இல் ஆறு மில்லியன்களாகவும் பதினெட்டாம் நூற்றாண்டின் முடிவில் ஒன்பது மில்லியன்களாகவும் பெருகியது.

ஈ) பல்வேறு காலனிகளின் குறிப்பாக இந்தியாவின் செல்வங்கள் சுரண்டப்பட்டு இங்கிலாந்திற்குக் கொண்டுசெல்லப்பட்டது. அதனால் தொழிற்சாலைகளில் முதலீடு செய்யத் தேவையான மூலதனம் தாராளமாகக் கிடைத்தது.

உ) ஏனைய ஐரோப்பிய நாடுகளுடன் ஒப்பிடுகையில் இங்கிலாந்து மிகவும் தாராளத்தன்மை கொண்ட நாடாக இருந்தது. அதன் அரசியல் உறுதித்தன்மை தொழில்களின் வளர்ச்சிக்குச் சாதகமான சூழலை உருவாக்கியது.

ஊ) நிலக்கரி, இரும்பு போன்ற மூல வளங்கள் இங்கிலாந்தில் அதிக அளவில் கிடைத்ததென்பது தொழிற் வளர்ச்சிக்கு மற்றுமொரு காரணமாகும். 1800இல் இங்கிலாந்து பத்து மில்லியன் டன் நிலக்கரியை அல்லது உலகின் மொத்த நிலக்கரி உற்பத்தியில் 90 விழுக்காட்டினை உற்பத்தி செய்தது.

எ) தொழிற்புரட்சிக்கு முன்பு வேளாண்மையிலும் இங்கிலாந்து விரைவான முன்னேற்றத்தைப் பதிவு செய்திருந்தது. இயந்திரமயமாக்கலின் மூலமாக அதிகஅளவிலான நிலங்கள் வேளாண்மையின் கீழ் கொண்டுவரப்பட்டன. செல்வச் செழிப்பு மிக்க நில உரிமையாளர்களின் கட்டுப்பாட்டின் கீழ் சிறிய அளவிலான நிலங்கள் ஒருங்கிணைக்கப்பட்டு பெரும் பண்ணைகளாக மாற்றப்பட்டன. புதிய வேளாண்மைத் தொழில் நுட்பங்களுடன் பயிர்சுழற்சி முறையும் அறிமுகமானதால் வேளாண் உற்பத்தி அதிகமானது. ஆனால் இது விவசாயத் தொழிலாளர்களிடையே வேலையில்லாத் திண்டாட்டத்தை ஏற்படுத்தியது. அனைத்தும் இழந்து திவாலாகிப்போன விவசாயிகள் நகரங்களுக்குக் குடிபெயர்ந்தனர். பதினெட்டாம் நூற்றாண்டின் இடைப்பகுதியிலிருந்து இவ்வாறு சென்றவர்களே பல்வேறு தொழிற்சாலைகளுக்குப் பெருமளவிலான உழைப்பாற்றலை வழங்குவோராய் இருந்தனர்.

ஏ) தனது கடற்கரைப்பகுதி முழுவதிலும் இங்கிலாந்து சிறப்பாக நிறுவப்பட்டிருந்த துறைமுகங்களைக் கொண்டிருந்தது. அது

12th_History_TM_Unit_11_V2.indd 189 02-01-2023 16:39:19

உள்நாட்டு மற்றும் பன்னாட்டு வணிகத்தை எளிதாக்கியது.

ஐ) நிலப்பகுதியிலிருந்து சற்றே தொலைவில் அமைந்திருந்த இங்கிலாந்தின் புவியியல் அமைவிடமும், அந்நியர் படையெடுப்புகளிலிருந்து சற்றே பாதுகாப்பாக அமைந்திருந்தமையும் தொழிற்புரட்சி ஏற்படுவதற்கு மற்றுமொரு காரணமாக அமைந்தது.

ஒ) இங்கிலாந்துத் தீவுகளில் நிலவிய மிதமான தட்பவெப்பநிலை பருத்தியிழைத் துணி உற்பத்திக்கு உகந்ததாக இருந்தது.

தொழிற்புரட்சி காலத்தைய முக்கியக் கண்டுபிடிப்புகள்

தொழிற்சாலை அமைப்பு

தொழிற்புரட்சிக்கு முன்னர் பொருள்களின் உற்பத்தியானது தொழிற்கூடங்களிலோ அல்லது தொழிலாளர்களின் குடிசைகளிலோ நடைபெற்றது. மண்பாண்டத்தொழில் செய்வோர், சக்கரங்கள் தயாரிப்போர், வண்டிகள் செய்வோர், நூற்போர், நெசவு செய்வோர் தங்களின் திறன்களையும் வலுவையும் கொண்டு விரும்பிய பொருட்களை உற்பத்தி செய்தனர். புதிய கண்டுபிடிப்புகளின் வருகைக்குப் பின்னர் இப்பணிகளை இயந்திரங்கள் செய்தன. இயந்திரங்களைக் குறிப்பிட்ட இடைவெளிகளில் இயக்குவதற்கு தனித்திறன் பெற்ற அல்லது ஓரளவு திறன் பெற்ற தொழிலாளர்கள் தேவைப்பட்டனர். தொழிற்சாலைகள் பெருமளவிலான பொருட்களை உற்பத்தி செய்யுமிடமாயிற்று.

பருத்தித் தொழிற்சாலைகள்

பருத்தித் தொழிலில்தான் முதன்முதலாக தொழிற்சாலைகள் நிறுவப்பட்டன. நூற்பு இயந்திரம், நூற்புச் சட்டகம், பறக்கும் நாடா, கிராம்டன் மியூல் எனும் நூற்கும் இயந்திரம் ஆகியவை கண்டுபிடிக்கப்பட்டதின் காரணமாக இது சாத்தியமாயிற்று. பறக்கும் நாடா 1733இல் ஜான் கே என்பவரால் கண்டுபிடிக்கப்பட்டது. இக்கண்டுபிடிப்புக்கு முன்னர் நெசவு செய்பவர் தனது கையிலிருக்கும் நாடாவிலுள்ள நூலை, தனக்கு முன்பாக நீளவாக்கில் இருக்கும் நூல்களுக்கிடையே (பாவு) மெதுவாகச் செலுத்தி எடுக்க வேண்டும். பறக்கும் நாடா கண்டுபிடிக்கப்பட்ட பின்னர் இப்பணி வேகமாக நடைபெற்று நெசவு செய்பவரின் உற்பத்தி இருமடங்காயிற்று. 1764இல் ஸ்பின்னிங் ஜென்னி எனும் நூற்பு இயந்திரம் ஜேம்ஸ் ஹார்கிரீவ்ஸ் என்பவரால் கண்டுபிடிக்கப்பட்டது. பாரம்பரிய முறையின்படி ஒரே ஒரு இழையை மட்டுமே நூற்க இயலும். ஆனால் இந்த இயந்திரம் ஒரே நேரத்தில் எட்டு இழைகளைப் பின்னி நூற்றது. ரிச்சர்டு ஆர்க்ரைட் என்பவரால் 1769இல் உருவாக்கப்பட்ட நீர்ச்சட்டகம் என்ற இயந்திரத்தால் ஒரே சமயத்தில் 128 நூல்களை நூற்க முடிந்தது. ஸ்பின்னிங் ஜென்னியையும் நீர்ச்சட்டகத்தையும் இணைத்து சாமுவெல் கிராம்டன் மியூல் எனும் இயந்திரத்தைக் கண்டுபிடித்தார். இவ்வியந்திரத்தின் மூலம் நெசவுமுறையைப் பெருமளவில் கட்டுக்குள் வைத்துக்கொள்ள முடிந்ததோடு ஒரே நேரத்தில் பல்வகைப்பட்ட நூல்களையும் நூற்க முடிந்தது.



ஸ்பின்னிங் ஜென்னி

இங்கிலாந்து 1700இல் 500 டன் பருத்தியை மட்டுமே இறக்குமதி செய்தது. நூற்றல், நெசவு செய்தல் ஆகியவற்றில் புதிய கண்டுபிடிப்புகள் செய்யப்பட்டதோடு, ஜவுளியானது ஆலைகளில் அதிகமாக உற்பத்தியானதைத் தொடர்ந்து கச்சாப் பருத்திக்கான தேவை வியப்பூட்டும் அளவுக்கு உயர்ந்தது. 1860 முதல் ஒவ்வொரு ஆண்டும் இங்கிலாந்து 5,00,000 டன் பருத்தியை இறக்குமதி செய்தது. பத்தொன்பதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இங்கிலாந்தின் ஜவுளித் தொழிற்சாலைகளின் மையமான மான்செஸ்டர் 'காட்டன்பொலிஸ்' எனும் புனைப் பெயரைப் பெற்றது.

இரும்புத் தொழிற்சாலைகள்

பாரம்பரியமாக இரும்பானது இரும்புத் தாதுவை காய்ச்சி உருக்கி வடித்தெடுக்கப்பட்டது. இதற்குப் பெருமளவிலான கரி தேவைப்பட்டது. கரி விறகினை எரிப்பதன் மூலம் பெறப்பட்டது. 1700 வாக்கில் காடுகள் அழிக்கப்பட்டதன் விளைவாக கரி உற்பத்திக்கான மூலப்பொருள் வெகுவாகக் குறைந்தது. 1709இல் இங்கிலாந்தால் இப்பிரச்சனையை ஓரளவு தீர்க்க முடிந்தது. அப்போது ஆபிரகாம் டர்பி எனும் டெர்பிஷயரைச் சேர்ந்த நிலக்கரிச் சுரங்க உரிமையாளர் இரும்புத்தாதுவை

12th_History_TM_Unit_11_V2.indd 190 02-01-2023 16:39:19

உருவாக்குவதற்கு நிலக்கரியைப் பயன்படுத்தலாம் என்பதைக் கண்டறிந்தார். ஆனால் சுரங்கங்களில் நிறைந்துவிடும் நீர் நிலக்கரியை எடுப்பதற்கு முக்கியத்தடையாய் இருந்தது. 1712இல் முதன்முதலாக தாமஸ் நியூகோமென் நிலக்கரிச் சுரங்களிலிருந்து நீரை வெளியேற்றுவதற்கு நீர் ஏற்றும் இயந்திரத்தை உருவாக்கினார். 1769இல் ஜேம்ஸ்வாட் இதை மேலும் மேம்படுத்தினார். அவரும் தொழில் முனைவோராய் இருந்த மாத்யூ பவுல்ட்டனும் இணைந்து 500 நீராவி இயந்திரங்களைத் தயாரித்தனர். அவைகள் புதிய தொழிற்சாலைகளுக்குத் தேவையான ஆற்றலை விநியோகம் செய்ய பயன்பட்டன. ஆற்றல் மூலம் இயக்கப்படும் இயந்திரங்களின் வருகையோடு ஆலைமுறையானது விரிவான அளவில் ஏற்றம் பெற்றது.

சுரங்கங்களில் இருந்து நிலக்கரியை எடுக்கும் நியூகோமென் இயந்திரம்

நிலக்கரி புகையற்றது. மேலும் கரியைக் காட்டிலும் அதிக வெப்பத்தைத் தரவல்லது. இதன் காரணமாக இரும்புத் தொழிற்சாலைகள் நிலக்கரிச் சுரங்கங்களின் அருகே அமைக்கப்பட்டன. அதிக அளவிலான இரும்பு உற்பத்தியால் வீட்டு உபயோகப் பொருட்களான கரண்டிகள், தட்டுகள் ஆகியன இரும்பினாலே செய்யப்பட்டன. ஆலைகளும்கூட வலுவான இரும்பு தூண்களையும் சட்டங்களையும் பயன்படுத்திக் கட்டப்பட்டன.

> மிகப்பெரும் கட்டுமானங்களில் இரும்பு பயன்படுத்தப்படுவதைக் கண்டு ஈர்ப்புக்குள்ளான பிரெஞ்சுக்காரர்கள் 1889இல் 324 மீட்டர் உயரமுள்ள ஈபில் கோபுரத்தை (Eiffel Tower) பாரிசில் எழுப்பினர்.

நீராவி இயந்திரங்கள்

நீராவி இயந்திரங்களுக்கு முன்னதாகவே நீராவிப்படகானது போக்குவரத்து சாதனமாக இயங்கின. 1802இல் கிளைடு கால்வாயின் கழிமுகத்தில் ஒரு நீராவிப்படகு இயங்கியது. 1804இல் முதல் ரயில் என்ஜின் உருவாக்கப்பட்டது. 1830இல் லிவர்பூலுக்கும் மான்செஸ்டருக்கும் இடையே இருப்புப்பாதை திறக்கப்பட்டது. ஜார்ஜ் ஸ்டீபன்சன்னுடைய "ராக்கெட்" என்ற ரயில் என்ஜின் ஒரு மணி நேரத்தில் முப்பது மைல்களுக்கும் மேலான வேகத்தில் இயங்கியது. அக்காலத்தில் இது கற்பனை செய்து பார்க்கமுடியாத ஒன்றாகும்.

ராக்கெட் – நீராவி என்ஜின்

1807இல் ராபர்ட் புல்டன் எனும் அமெரிக்கர் முதல் வெற்றிகரமான நீராவிப்படகினை உருவாக்கினார். 1838 ஏப்ரலில் சைரஸ், கிரேட் வெஸ்டர்ன் எனும் முதல் நீராவிக்கப்பல்கள் அட்லாண்டிக் கடலைக் கடந்தன. ஆங்கிலேயப் பொறியாளரான இசாம்பார்டு கிங்டம் புருனல் 1843இல் "SS கிரேட் பிரிட்டன்" என்ற முழுவதும் இரும்பினால் செய்யப்பட்ட கப்பலை உருவாக்கினார். இக்கப்பல் சுழல்விசை இயக்கத்தின் மூலம் முன்னோக்கிச் செலுத்தப்பட்டது. இதற்கு முன்னர் சுழல் விசைக்குப் பதிலாக துடுப்புச் சக்கரங்களே பயன்படுத்தப்பட்டன.

சாலைகள்

உற்பத்தியின் பெருக்கத்தைத் தொடர்ந்து நல்ல சாலைகளைப் பெற்றிருப்பது முக்கியமாயிற்று. ஆனால் சாலைகள் மோசமாக இருந்ததால் பயண நேரம் அதிகமானதோடு பெருமளவு முயற்சியும் தேவைப்பட்டது. மிகப்பெரும் தொழிலதிபர்கள் கொடுத்த அழுத்தத்தின் காரணமாகச் சாலைகளைப் பராமரிப்பதற்கென ஆட்கள் நியமனம் செய்யப்பட்டனர். இவர்கள் சாலைகளை சரியாகப்

12th_History_TM_Unit_11_V2.indd 191 02-01-2023 16:39:20

பராமரிப்பதற்காக மக்களிடமிருந்து சாலைவரி வசூலித்தனர். ஜான் லவுடன் மெக்காடம் என்பவர்தான் குறைந்தசெலவில் வலுவான சாலைகள் அமைக்கும் முறையைக் கண்டுபிடித்தார்.

மெக்காடமயமாக்குதல் என்பது உடைக்கப்பட்ட கற்களைப் பரப்பி அதன்மேல் அடுத்தடுத்த அடுக்குகளாகக் கற்களைப் பரப்பி அதன்மேல் உருக்கப்பட்ட தாரை ஊற்றுவதாகும்.

ஜான் மெக்ஆடம்

1835இல் முதல் மின் தந்திமுறை நடைமுறைக்கு வந்தது. பதினாறு ஆண்டுகளுக்குப் பின்னர் இங்கிலாந்திற்கும் பிரான்சுக்குமிடையே கடலடித் தந்தி வடம் அமைக்கப்பட்டது. ஒரு சில ஆண்டுகளில் தந்தி முறை உலகம் முழுவதும் பரவியது. மிகப்பெரும் வடிவத்தாலான புகை போக்கிகளைக் கொண்ட நவீன ஆலைகள் மான்செஸ்டர், லங்காஷயர், ஸ்காட்லாந்தின் கிளாஸ்கோ ஆகிய நகரங்களின் நிலப்பரப்பை ஆக்கிரமித்தன. 1750இல் இங்கிலாந்தில் உள்ள லண்டன், எடின்பர்க் ஆகிய இருநகரங்களில் 50,000த்திற்கும் அதிகமான மக்கள் வசித்தனர். 1851இல் இதைப்போன்ற நகரங்களின் எண்ணிக்கை 29 ஆனது.

தொழிற்புரட்சியின் இரண்டாம் கட்டம்: ஜெர்மனியிலும் அமெரிக்காவிலும்

தொழிற்புரட்சியின் இரண்டாம் கட்டத்தைச் சேர்ந்த அரிய கண்டுபிடிப்புகளில்



தொழில் நகரம் – மான்செஸ்டர்

பெருபான்மையானவை தனிப்பட்ட கண்டுபிடிப்பாளரின் மூளையில் இருந்து உதிக்காமல் இயற்பியல் வேதியியல் ஆய்வாளர்களின் பரிசோதனைச் சாலைகளிலிருந்து வெளிவந்தன. தானியங்கி எந்திரங்களின் அறிமுகம், பேரளவு உற்பத்தியின் பெருமளவுப் பெருக்கம், உற்பத்திச் செயல்பாட்டில் மிக நுண்ணிய அளவிலான வேலைப் பிரிவினை ஆகியவை இரண்டாம் கட்டத் தொழிற்புரட்சியின் ஏனைய இன்றியமையாக் கூறுகளாகும்.

பதினெட்டாம் நூற்றாண்டு முழுவதிலும் மேற்கு ஐரோப்பாவில் சீரான தொழில் வளர்ச்சியும் பெருமளவிலான வணிக நடவடிக்கையும் ஏற்பட்டன. வங்கித் தொழிலின் வளர்ச்சியும், சாலைகள், கால்வாய்கள் என உள்நாட்டுப் போக்குவரத்தில் ஏற்பட்ட முன்னேற்றங்களும் இதற்குச் சான்றுகளாகும். பிரான்சிலும் பிரஷ்யாவிலும் அரசின் ஆதரவில் ஆலைகள் இருந்தன. லெ குருசாட்டில் அமைந்திருந்த கண்ணாடித் தொழிற்சாலையும், சைலீசியாவின் பட்டு உற்பத்தியும் மிக முக்கியமானவை. ஐரோப்பியக் கண்டத்தின் வணிக, தொழில் முன்னேற்றம் நெப்போலியனின் போர்களால் தடைப்பட்டது. அமைதி ஏற்பட்ட பின்னர் இங்கிலாந்தின் இயந்திரங்கள் பிரான்சிலும் ஜெர்மனியிலும் மிகச் சுதந்திரமாக அறிமுகமாயின. நெப்போலியனின் வீழ்ச்சிக்குப் பின்னர் வந்த முப்பது ஆண்டுகளில் மேற்கு ஐரோப்பா முழுவதிலும் நீராவி ஆற்றல் மிக விரைவாகப் பயன்பாட்டிற்கு வந்தது. 1847காலப்பகுதியில் பாரிஸ், லியான்ஸ், மார்சிலெஸ், போர்டியாக்ஸ், தௌலௌஸ் போன்ற பிரான்சின் நகரங்களில் மிகப்பெரும் ஆலைகள் உருவாயின. ஆங்கிலேய அறிவியல் அறிஞரான மைக்கேல் ஃபாரடே மின்சாரக் கண்டுபிடிப்பிற்கான கருத்துருவைக் கண்டறிந்தார். சில ஆண்டுகளுக்குப் பின்னர் அமெரிக்கக்கண்டுபிடிப்பாளர் தாமஸ் ஆல்வா எடிசன் தான் கண்டுபிடித்த ஒளிரும் மின்சார பல்புகளை வீடுகளில் பயன்படுமாறு மேம்படுத்தினார். இதனால் 1870களில் மின்விசை உற்பத்திக் கருவிகள் உருவாக்கப்பட்டன. அதனால் மின்சாரம் பொதுப்பயன்பாட்டிற்கு வருவது சாத்தியமானது.

ஜெர்மனியில் பிரஷ்யாவின் தலைமையில் செயல்பட்ட நாடுகள் செய்தொழில்களிலும் தொழில் உற்பத்தியிலும் இங்கிலாந்தின் தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தின. சுதந்திர வணிகத்தைப் பொதுக் கொள்கையாகக் கொண்ட, நாடுகள் அங்கம் வகிக்கும் ஸோல்வரெய்ன் எனும் அமைப்பு பிரஷ்யாவில் உருவாக்கப்பட்டது. இதனால் சுங்கச் சாவடிகள் அகற்றப்பட்டன.

12th_History_TM_Unit_11_V2.indd 192 02-01-2023 16:39:20

www.tntextbooks.in



டீசல் என்ஜின்



ருடால்ப் டீசல்

1871இல் ஜெர்மனி இணைக்கப்பட்டது வேகமான தொழில் வளர்ச்சிக்கு வித்திட்டது. மின்சாரத்தின் கண்டுபிடிப்பும் பயன்பாடும் அத்துடன் ருடால்ப் டீசல் கண்டுபிடித்த டீசல் என்ஜினும் சேர்ந்து ஜெர்மனியை ஐரோப்பியாவில் மோட்டார்வாகன உற்பத்தியின் தலைமைவகிக்கும் நாடாக மாற்றியது. டெய்ம்லர், பென்ஸ் ஆகிய இரு மோட்டார் வாகனங்கள் ஜெர்மனியிலும், உலகத்திலும் பிரபலமான அடையாளச் சின்னங்களாயின. ஜெர்மனி இரும்பு எஃகுத் தொழிலில் தனது முத்திரையைப் பதித்தது. வேளாண்மையில் ரசாயனப் பொருட்கள் பயன்படுத்தப்படுவதற்கும், ஜவுளி ஆலைகளில் சாயம் பயன்படுத்தப்படுவதற்கும், மின்சார சாதனங்கள் உற்பத்தியிலும் ஜெர்மனி தனது பங்களிப்பைச் செய்தது.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியில் ஜெர்மனி, மிகப் பெருமளவில் தொழில்மயமான நாடாக உருவானது. தொழிற்புரட்சியின் தாயகமான இங்கிலாந்தை மிஞ்சி அமெரிக்காவின் போட்டியாளராகத் தன்னை நிலைநாட்டியது. மின்சாரத்தில் ஜெர்மனியின் சீமன்ஸ் போன்ற நிறுவனங்கள் ஏனைய நாடுகளில் இருந்த தங்களைப் போன்ற நிறுவனங்களைக் காட்டிலும் மேம்பட்டவைகளாகத் திகழ்ந்தன. வேதியியலில் பொட்டாசியம் உப்பு தயாரிப்பு, சாயம், மருத்துவப் பொருட்கள் உற்பத்தி, செயற்கை பொருட்கள் ஆகியவற்றில் ஜெர்மனி முன்னணி வகித்தது. பேயர், ஹோசெட் போன்ற நிறுவனங்கள் ஜெர்மனியின் இரசாயனத் தொழிலுக்குத் தலைமை தாங்கின.

வெர்னர் வான் சீமன்ஸ்

அமெரிக்காவில் தொழிற்புரட்சி

பத்தொன்பதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் அமெரிக்க ஐக்கிய நாடுகள் பெருமளவில் ஒரு விவசாய நாடாகவே விளங்கிற்று. காலனிகளின் எண்ணிக்கை அதிகமானதற்கு ஏற்றவாறு மக்கள் தொகையும் பெருகியது. ஆலையை இயக்குவதில் அனுபவம் பெற்றிருந்த ஆங்கிலக் குடிமகனான சாமுவெல் சிலேட்டர் அமெரிக்காவின் ரோட் ஐலென்டைச் சேர்ந்த தொழில் அதிபரும், ஏற்கனவே ஒரு ஆலையை இயக்குவதில் வெற்றிபெற முடியாமல் இருந்தவருமான மோசஸ் பிரவுன் என்பவருடன் இணைந்து பணிசெய்ய விரும்பினார். பிரவுனும் அதற்கு இசைந்ததன் விளைவாக அவ்வாலை 1793இல் செயல்படத் துவங்கியது. அதுவே அமெரிக்காவின் நீர் உருளையால் இயக்கப்பட்ட முதல் ஜவுளி ஆலையாகும். 1800இல் தொழில் முனைவோர் பலர் சிலேட்டரின் ஆலையைப் போன்றே பல ஆலைகளை உருவாக்கினர். அமெரிக்க குடியரசுத்தலைவரான ஆண்ட்ரூ ஜேக்சன், சிலேட்டரை "அமெரிக்கத் தொழிற்புரட்சியின் தந்தை" எனப் போற்றினார்.



சாமுவெல் சிலேட்டர்

அமெரிக்காவின் உள்நாட்டுப் போருக்கு முன்னதாகவே சாமுவெல் F.B. மோர்ஸ் தந்தி முறையையும், எலியாஸ் ஹோவ் என்பவர் தையல் இயந்திரத்தையும் கண்டுபிடித்தனர். உள்நாட்டுப் போருக்குப் பின்னர் தொழில்மயமாதல் மிகவும் விரைவாக நடைபெற்றது. 1869இல் மக்களையும், கச்சாப் பொருட்களையும் முடிவுற்றப் பொருட்களையும் கொண்டு செல்வதற்காக கண்டங்களைக் கடந்து செல்லும் ரயில்பாதை அமைக்கும் பணி முடிவுற்றது. தாமஸ் ஆல்வா எடிசனால் கண்டுபிடிக்கப்பட்ட மின்சார பல்பும் (1879) அலெக்ஸாண்டர் கிரகாம் பெல்லால் கண்டுபிடிக்கப்பட்ட தொலைபேசியும் (1876) மொத்த உலகையே மாற்றியது.



தாமஸ் ஆல்வா எடிசன்



அலெக்ஸாண்டர் கிரகாம் பெல்

12th_History_TM_Unit_11_V2.indd 193 02-01-2023 16:39:20

ஒரு கிராமிய சமூகமாக இருந்த அமெரிக்காவை, ஒரு நகர்ப்புற சமூகமாக மாற்றம் பெறச் செய்யும் செயல்பாட்டினைத் தொழிற்புரட்சி வேகப்படுத்தியது. பண்ணைகளில் வளர்ந்த இளம் வயது மக்கள் நகரங்களில் வாய்ப்புகள் அதிகமாக கிடைத்தால் நகரங்களுக்குச் சென்றனர். முன்னெப்போதும் இருந்திராத அளவில் நகரமயமாதலும் ஆட்சிப்பரப்பு விரிவாக்கமும் அமெரிக்காவில் நடைபெற்றது. அதன் விளைவாக 1860–1900 ஆகிய ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலத்தில் பதினான்கு மில்லியன் மக்கள் அமெரிக்காவிற்கு வந்தனர். பல்வகைப்பட்ட தொழிற்சாலைகளில் தொழிலாளர்களாக வேலை செய்தனர்.

தொழிற்புரட்சியின் தாக்கம்

- மறுமலர்ச்சி மக்களின் வாழ்க்கையைப் பற்றிய அணுகுமுறையை மாற்றியமைத்தது எனில், தொழிற்புரட்சி விவசாய காலம் தொட்டு அவர்கள் வாழ்ந்த வாழ்க்கையின் பாதையையே மாற்றியது. ஆலைகள் இயந்திரமயமானதின் விளைவாக உற்பத்தி மிகப்பெருமளவிற்குப் பெருகியது. அதனால் செல்வமும் பெருகியது. ஆனால் அவ்வாறு பெருகிய செல்வம் புதிய தொழிற்சாலைகளின் முதலாளிகளாய் இருந்த சிறு குழுவுக்கே சென்றது.
- தொழிற்புரட்சி உற்பத்தியில் இருந்த பிரச்சனைகளைத் தீர்த்து வைத்தது. ஆனால் புதிதாக உருவாக்கப்பட்ட செல்வத்தை விநியோகிப்பதில் ஏற்பட்ட பிரச்சனைகளை அதனால் தீர்க்க இயலவில்லை.
- இயந்திரங்களைப் பயன்படுத்தி பொருளுற்பத்தி செய்வோர்கள் கைவினைத் தொழில்களைப் பாழ்படுத்தினர். ஆயிரக்கணக்கான கைவினைஞர்களும் நெசவாளர்களும் வேலையற்றவர்களாயினர்.
- தொழிற்புரட்சியின் முதற்கட்டத்தில் இயந்திரங்கள் அறிமுகமானபோது பெண்கள், குழந்தைகள் ஆகியோரிடமிருந்து மலிவான விலையில் உழைப்பு பெறப்பட்டதால் உடல் வலுமிக்க ஆண்கள் வேலைகளிலிருந்து வெளியேற்றப்பட்டனர். மேலும் பல தொழிற்சாலைகளும் சுரங்கங்களும் ஆபத்து நிறைந்தவையாயும் சுகாதாரமற்றவையாகவும் இருந்தன.
- தொழிற்புரட்சியின் மிக முக்கியமான விளைவு ஆலை முதலாளிகள், ஆலைத் தொழிலாளர்கள் என இரண்டு வர்க்கங்கள் உருவாக்கப்பட்டதுவே தங்கள் உற்பத்திப் பொருட்களைப் பாதுகாக்கக் காப்புவரி விதிப்பது, தொழிலாளர்களின் போராட்டங்களை ஒடுக்குவது ஆகிய இவ்விரு விஷயங்களைக் கடந்து ஏனையவற்றில் அரசு தலையிடுவது முதலாளிகளுக்கு ஒவ்வாமையாக இருந்தது. வலிமையான பொருளாதார வளர்ச்சிக்கு, புதிய முயற்சிகளுக்கு முழுமையான சுதந்திரம் வழங்கப்படுவது, முற்றிலும் இன்றியமையாதது என முதலாளிகள் வற்புறுத்திக் கூறினர்.
- ஆலைத் தொழிலாளர் என்ற புதிய வர்க்கம் அவ்வளவு எளிதாகத் துன்பங்களை, ஏற்றுக்கொள்ளவில்லை. நெப்போலியப் போர்களின் இறுதியில் வலுவான எதிர்ப்பலைகள் வீசத் துவங்கின. இயந்திரங்களை உடைப்பது, பெரும் எண்ணிக்கையில் ஆர்ப்பாட்டங்கள் மேற்கொள்வது, தொழிலாளர் சங்கங்கள் உருவாக்குவது என பலகட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

பீட்டர்லூ படுகொலை: 1819ஆம் ஆண்டு தொழிலில் மந்தநிலையும் உணவுப்பொருட்களின் விலையேற்றமும் ஏற்பட்ட ஆண்டாகும். பெண்களும் குழந்தைகளும் உட்பட 60,000 அதிருப்தியுற்ற மக்கள் ஹென்றி ஹன்ட் எனும் தீவிரவாதத் தலைவரின் தலைமையில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். அவர்களில் யாரும் ஆயுதம் வைத்திருக்கவில்லை. ஆர்ப்பாட்டமும் அமைதியான முறையில் நடைபெற்றது. கூட்டத்தின் எண்ணிக்கையையும் அவர்களின் மனநிலையையும் கண்டு பீதியடைந்த அதிகாரிகள் மான்செஸ்டர் யோமனரி எனும் தன்னார்வ குதிரைப்படை காவலர்களைக் கொண்டு கூட்டத்தினரைத் தாக்க உத்தரவிட்டனர். 700க்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்தனர், 17 நபர்கள் கொல்லப்பட்டனர். ஹனட்டும் ஏனைய தீவிரவாதத் தலைவர்களும் கைது செய்யப்பட்டு, விசாரிக்கப்பட்டு, தண்டனை வழங்கப்பட்டது.

டோல்புடில் குற்றவழக்கு: இங்கிலாந்தின் விக் அரசாங்கம் தொழிலாளி வர்க்கத்தாரிடையே வளர்ந்து வரும் அதிருப்தியைக் கண்டு அச்சம் கொண்டு, 1834இல் அறிவிக்கப்பட்ட ஊதிய வெட்டுக்கு

12th_History_TM_Unit_11_V2.indd 194 02-01-2023 16:39:20

எதிராக தொழிலாளர்களை ஒன்று திரட்டியதற்காக ஆறு டோல்புடில் தொழிலாளர்களைக் கைது செய்தது. அவர்கள் குற்றவாளிகள் என தீர்ப்பளிக்கப்பட்டு, தண்டனையாக ஏழு வருடங்களுக்கு ஆஸ்திரேலியாவில் இருந்த தண்டனைக் காலனிக்கு நாடு கடத்தப்பட்டனர். அவர்கள் ஆறுபேரும் தொழிலாளர்களுக்காக உயிர்துறந்த தியாகிகள் ஆயினர்.

அமெரிக்காவில் மாபெரும் இருப்புப்பாதை வேலை நிறுத்தம் (1877): ஆலைகளில் நிலவிய மோசமான வேலைச் சூழல், பலமணி நேர வேலை, குறைந்த ஊதியம், பெண்களும் குழந்தைகளும் சுரண்டப்பட்டது உட்பட அனைத்தும் சேர்ந்து அமெரிக்காவில் தொழிற்சங்கங்கள் உருவாகப் பங்களிப்பு செய்தன. உள்நாட்டு போருக்குப் பின்னர் தொழிலாளர்கள் வேலை நிறுத்தங்களை நடத்தினர். அவற்றில் மிகப்பெரும் வேலை நிறுத்தம் 1877இல் நடைபெற்ற இருப்புப்பாதைத் தொழிலாளர் வேலை நிறுத்தமாகும். நீண்ட பொருளாதார மந்தம் நிலவிய சூழலில் இருப்புப்பாதைத் தொழிற்சாலைகளில் மேற்கொள்ளப்பட்ட ஊதியவெட்டு வேலை நிறுத்தத்திற்கு இட்டுச் சென்றது. அமைதிப் பாதுகாப்புக் குழுவினர், தேசியக் காவலர்கள், ஐக்கிய அரசின் இராணுவம் ஆகிய அமைப்புகளால் வேலைநிறுத்தம் நசுக்கப்பட்டது.

ஹேமார்கெட் படுகொலை: 1886 மே 4இல் சிக்காகோ நகரின் ஹேமார்கெட் சதுக்கத்தில், தொழிலாளர்கள் தங்கள் எதிர்ப்பைத் தெரிவித்தனர். நாளொன்றுக்கு எட்டு மணிநேர வேலை எனும் கோரிக்கைக்குப் போராடும் தொழிலாளர்களுக்கு ஆதரவாகவும் முந்தைய தினம் நடைபெற்ற போலீஸ் தாக்குதலில் பல தொழிலாளர்கள் கொல்லப்பட்டதற்கும் எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையிலும் அமைதியான ஊர்வலம் தொடங்கியது. காவலர்கள் கூட்டத்தைக் கலைக்க முற்படுகையில் யாரோ ஒருவர் டைனமைட் குண்டை போலீசார் மீது வீசினார். குண்டு வெடிப்பைத் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச் சூடு ஆகியவற்றில் ஏழு காவல்துறை அதிகாரிகளும் நான்கு பொதுமக்களும் கொல்லப்பட்டனர். எண்ணற்றோர் காயமடைந்தனர். ஹேமார்கெட் நிகழ்வை நினைவு கொள்ளும் வகையில் 1887 மே 1 தொழிலாளர் தினமாக அல்லது மே தினமாக அல்லது உலக உழைப்பாளர் தினமாகக் கடைப்பிடிக்கப்படுகிறது.

பாடச் சுருக்கம்

- இங்கிலாந்தின் தாங்கிக்கொள்ள முடியாத அடக்குமுறை சார்ந்த வரிவிதிப்புப்படி நடவடிக்கைகளும், காலனி மக்களின் எதிர்ப்பும் இவை எவ்வாறு அமெரிக்க விடுதலைப் போர் வெடிப்பதற்கு இட்டுச்சென்றது என்பதும் எடுத்துரைக்கப்பட்டுள்ளன.
- விடுதலைப் போரின் போக்கும் அதன் விளைவுகளும் இப்புரட்சியின் முக்கியத்துவமும் மதிப்பிடப்பட்டுள்ளன.
- விவசாயிகளின் துயர நிலை, பிரெஞ்சு அரசாங்கத்தின் திவாலான கருவூலம், அறிவார்ந்த மக்களின் புரட்சிகரமான கருத்துக்கள் எவ்வாறு 1789ஆம் ஆண்டு பிரெஞ்சுப் புரட்சிக்கு இட்டுச் சென்றன என்பது விளக்கப்பட்டுள்ளது.
- தேசிய சட்டமன்றம் உருவாக்கப்பட்டதும் அது வெளியிட்ட மனிதன் மற்றும் குடிமக்கள் உரிமைப் பிரகடனமும் விவரிக்கப்பட்டுள்ளது.
- பிரெஞ்சு அரசருக்கு மரண தண்டனை நிறைவேற்றப்படல், முடியாட்சி ஒழிப்பு, ஜேக்கோபியர்களின் ஆதிக்கத்திலிருந்த தேசியப் பேரவை மேற்கொண்ட பணிகள் ஆகியன விரித்துரைக்கப்பட்டுள்ளன.
- பிரான்சின் கட்டுப்பாட்டிலிருந்த செயின்ட் டோமிங்கோவில் ஏற்பட்ட புரட்சி, அதனைத் தொடர்ந்து லத்தீன் அமெரிக்க நாடுகளான வெனிசுலா, கொலம்பியா, மெக்சிகோ, பிரேசில் ஆகியனவற்றில் நடந்த புரட்சிகள் சிறப்பு கவனத்துடன் விளக்கப்பட்டுள்ளன.
- இங்கிலாந்தில் நடைபெற்ற தொழிற்புரட்சியின் இன்றியமையாக் கூறுகளும் கண்டுபிடிக்கப்பட்ட இயந்திரங்கள், ஜவுளி, இரும்பு ஆலைத் தொழில்களில் நீராவியின் பயன்பாட்டால் ஏற்பட்ட புரட்சிகரமான மாறுதல்கள், போக்குவரத்து, செய்திப் பரிமாற்றம் ஆகியவற்றில் நடந்த மாற்றங்கள் குறித்து கூறப்பட்டுள்ளன.
- மேற்கு ஐரோப்பாவில் குறிப்பாக ஜெர்மனியிலும், அமெரிக்க ஐக்கிய நாடுகளிலும் நடைபெற்ற இரண்டாவது தொழிற்புரட்சி ஆய்வு செய்யப்பட்டுள்ளது.
- தொழிற்புரட்சியின் தாக்கமும், அணி திரட்டப்பட்ட தொழிலாளர் இயக்கங்களின் மீது இங்கிலாந்திலும் அமெரிக்காவிலும் மேற்கொள்ளப்பட்ட அரசு வன்முறை ஆகியன தொடர்புபடுத்தப்பட்டுள்ளன.

பயிற்சி

26810

I சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்.

1. வட அமெரிக்காவில் முதன் முதலில் குடியேறிய ஐரோப்பியர்கள் ________

   (அ) போர்த்துகீசியர் (ஆ) ஸ்பானியர்

   (இ) டேனியர் (ஈ) ஆங்கிலேயர்

2. நியூ ஆம்ஸ்டர்டாமிற்கு ________ என மறுபெயர் சூட்டப்பட்டது.

   (அ) வாஷிங்டன் (ஆ) நியூயார்க்

   (இ) சிக்காகோ (ஈ) ஆம்ஸ்டர்டாம்

3. **கூற்று:** ஆங்கிலேயர் நாவாய்ச் சட்டங்களை இயற்றினர்

   காரணம்: காலனி நாடுகளின் உற்பத்திப் பொருட்கள் ஆங்கிலேயக் கப்பல்களின் மூலமாக மட்டுமேஏற்றுமதிசெய்யப்படவேண்டுமென்பதைச் இச்சட்டம் கட்டாயப்படுத்தியது.

   (அ) கூற்று, காரணம் இரண்டும் சரி. காரணம் கூற்றை விளக்குகிறது.

   (ஆ) கூற்று, காரணம் இரண்டும் சரி. ஆனால் காரணம் கூற்றை விளக்கவில்லை.

   (இ) கூற்று சரி. காரணம் தவறு

   (ஈ) கூற்று தவறு. காரணம் சரி.

4. **கூற்று:** 1770இல் இங்கிலாந்து தேயிலையைத் தவிர ஏனைய பொருட்களின் மீதான வரிகளை ரத்து செய்தது.

   காரணம்: காலனி நாடுகளின் மீது நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ வரிவிதிக்கும் உரிமை ஆங்கிலேய பாராளுமன்றத்திற்கு உண்டு என்பதை உறுதிப்படுத்தவே தேயிலையின் மீதான வரி தக்கவைத்துக் கொள்ளப்பட்டது.

   (அ) கூற்று, காரணம் இரண்டும் சரி. காரணம் கூற்றை விளக்குகிறது.

   (ஆ) கூற்று, காரணம் இரண்டும் சரி. ஆனால் காரணம் கூற்றை விளக்கவில்லை.

   (இ) கூற்று சரி. காரணம் தவறு.

   (ஈ) கூற்று தவறு. காரணம் சரி.

5. பாஸ்டன் தேநீர் விருந்து நிகழ்வு ________ இல் நடைபெற்றது.

   (அ) 1775 (ஆ) 1773 (இ) 1784 (ஈ) 1799

6. **கூற்று:** ஜார்ஜியா தவிர ஏனைய காலனிகளைச் சேர்ந்த பிரதிநிதிகள் பொறுத்து கொள்ளமுடியாதச் சட்டங்கள் நீக்கப்பட வேண்டுமெனக் கோரினர்.

   காரணம்: அதுவரையிலும் ஆங்கிலப் பொருட்களைப் புறக்கணிப்பது என காங்கிரஸ் முடிவு செய்தது.

   (அ) கூற்று, காரணம் இரண்டும் சரி. காரணம் கூற்றை விளக்குகிறது.

   (ஆ) கூற்று, காரணம் இரண்டும் சரி. ஆனால் காரணம் கூற்றை விளக்கவில்லை.

   (இ) கூற்று சரி. காரணம் தவறு.

   (ஈ) கூற்று தவறு. காரணம் சரி.

7. கீழ்க்காணும் கூற்றுகளில் எது / எவை சரியானது / சரியானவை.

   கூற்று I: 1776 ஜூலை 4இல் பதின்மூன்று காலனிகளும் இங்கிலாந்திடமிருந்து விடுதலை பெற்றதாக அறிவித்தன.

   கூற்று II: சுதந்திரப் பிரகடனத்தைத் தயாரித்ததில் தாமஸ் ஜெபர்சன் மிக முக்கியப் பங்கினை வகித்தார்.

   (அ) I (ஆ) II

   (இ) இரண்டும் தவறு (ஈ) இரண்டும் சரி

8. அமெரிக்க சுதந்திரப் போரில் ஆங்கில படைகளுக்குத் தலைமை தாங்கியவர்

   (அ) ரிச்சட்டு லீ (ஆ) ஜார்ஜ் வாஷிங்டன்

   (இ) வில்லியம் ஹோவே (ஈ) ராக்கிங்காம்

9. கீழ்க்காணும் கூற்றுகளில் எது / எவை சரியானது / சரியானவை?

   கூற்று I: பிரெஞ்சு சமூகத்தின் பெரும்பகுதி விவசாயிகளால் ஆனது.

   கூற்று II: பிரெஞ்சு விவசாயிகள் பண்ணை அடிமைகளாய் இருந்தனர்.

   கூற்று III: வாரத்தில் சில நாட்களில் விவசாயிகள் தங்கள் பிரபுக்களுக்காகச் சம்பளம் பெற்றுக் கொண்டு வேலை செய்தாக வேண்டும்.

   (அ) I மற்றும் II (ஆ) II மற்றும் III

   (இ) I மற்றும் III (ஈ) அனைத்தும் சரி

10. டென்னிஸ் மைதான உறுதிமொழிக்கு இட்டுச் சென்ற எதிப்புக்குத் தலைமையேற்ற பிரபு ________ ஆவார்.

    (அ) மாரட் (ஆ) டாண்டன்

    (இ) லஃபாயட் (ஈ) மிராபு

12th_History_TM_Unit_11_V2.indd 196 02-01-2023 16:39:21

11. **கூற்று:** வளர்ந்து கொண்டிருந்த பூர்ஷ்வாக்கள் தங்கள் சமூகத்தகுதிக்கு நிகரான அரசியல் அதிகாரம் வேண்டினர்.

காரணம்: அரசாங்கத்தில் செல்வாக்குப் பெற வேண்டுமென அவர்கள் விரும்பினர்.

(அ) கூற்று, காரணம் இரண்டும் சரி. காரணம் கூற்றை விளக்குகிறது.

(ஆ) கூற்று, காரணம் இரண்டும் சரி. ஆனால் காரணம் கூற்றை விளக்கவில்லை.

(இ) கூற்று சரி. காரணம் தவறு.

(ஈ) கூற்று தவறு. காரணம் சரி.

12. கீழே கொடுக்கப்பட்டுள்ள குறிப்புகளைப் பொருத்தி சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்.

(அ) மாண்டெஸ்கியூ	1. ஜேகோபியர்கள்
(ஆ) வால்டர்	2. ஆங்கிலேய நாட்டுத் தத்துவவாதி
(இ) பயங்கர ஆட்சி	3. பதினான்காம் லூயியின் காலம்
(ஈ) ஜான் லாக்	4. சட்டங்களின் சாரம்

(அ) 1 3 4 2 (ஆ) 4 3 1 2

(இ) 4 1 2 3 (ஈ) 1 4 3 2

13. பாஸ்டில் சிறை தகர்ப்பு ________ இல் நடந்தது.

(அ) 1789, ஜூன் 5 (ஆ) 1789, ஜூலை 14

(இ) 1789, நவம்பர் 11 (ஈ) 1789, மே 1

14. பிரெஞ்சுப் புரட்சியின் போது அறிவிக்கப்பட்ட மனிதன் மற்றும் குடிமக்கள் உரிமைகள் பிரகடனம் பெண்களைத் தவிர்த்துவிட்டதால் அதன் மேல் ________ அதிருப்தி கொண்டிருந்தார்.

(அ) ஒலிம்பே டி கோஜெஸ்

(ஆ) மேரி அன்டாய்னெட்

(இ) ரோஜெட் டி லிஸ்லி

(ஈ) ரோபஸ்பியர்

15. பதினாறாம் லூயியின் அதிகாரபூர்வமான வசிப்பிடமாக இருந்தது.

(அ) வெர்செய்ல்ஸ் (ஆ) தௌலன்

(இ) மார்செய்ல்ஸ் (ஈ) டியூலெர்ஸ்

16. ________ தொடக்கத்தில் செயின்ட் டோமிங்கோ என அறியப்பட்டது.

(அ) மெக்சிகோ (ஆ) பனாமா

(இ) ஹைட்டி (ஈ) ஹவானா

17. மெக்சிகோவில் புரட்சிக்குத் தலைமையேற்றவர் ________.

(அ) சைமன் பொலிவர்

(ஆ) ஜோஸ் மரியா மோர்லோ

(இ) பெர்டினான்டு டி லெஸ்ஸெப்ஸ்

(ஈ) மிகுவல் ஹிடல்கோ

18. அர்ஜென்டினாவை விடுதலையடையச் செய்தவர் ________.

(அ) சான் மார்ட்டின்

(ஆ) டாம் பெட்ரோ

(இ) பெர்னார்டோ ஓ ஹிக்கின்ஸ்

(ஈ) மரினா மோர்லஸ்

19. ________ நகரம் 'காட்டன்பொலிஸ்' எனும் புனைப் பெயரைப் பெற்றது.

(அ) மான்செஸ்டர் (ஆ) லங்காசயர்

(இ) லிவர்பூல் (ஈ) கிளாஸ்கோ

20. கீழே கொடுக்கப்பட்டுள்ள குறிப்புகளைப் பொருத்தி சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்.

(அ) மைக்கேல் பாரடே	1) ஆர்க்ரைட்
(ஆ) எலியாஸ் ஹோவே	2) ராபர்ட் புல்டன்
(இ) நீர்ச் சட்டகம்	3) மின்சாரம்
(ஈ) நீராவிப் படகு	4) தையல் இயந்திரம்

	அ	ஆ	இ	ஈ
(அ)	1	3	4	2
(ஆ)	1	4	2	3
(இ)	3	4	1	2
(ஈ)	3	4	2	1

II. குறுகிய விடையளிக்கவும்.

1. வட அமெரிக்காவின் ஐரோப்பியக் காலனிகள் பூர்வகுடி மக்கள் மீது எத்தகைய தாக்கத்தினை ஏற்படுத்தின?
2. பாஸ்டன் தேநீர் விருந்து குறித்து நீங்கள் அறிந்ததென்ன?
3. அமெரிக்க விடுதலைப் போருக்குத் தாமஸ் பெயினின் அறிவுத்திறன் சார்ந்த பங்களிப்பு என்ன?
4. சரடோகா போரின் முக்கியத்துவத்தைக் குறிப்பிடுக.

5. பண்டைய ஆட்சி முறையின் மூன்று எஸ்டேட்டுகளை விவாதிக்கவும்.
6. மனிதன் மற்றும் குடிமக்களின் உரிமைப் பிரகடனத்தின் சாரம்சத்தை அடிக்கோடிட்டுக் காட்டவும்.
7. இலத்தீன் அமெரிக்க விடுதலைக்கு சைமன் பொலிவரின் பங்களிப்பை சுருக்கமாய் வரைக.
8. தொழிற்புரட்சியின் சிறப்புக்கூறுகளை முன்னிலைப்படுத்திக் காட்டவும்.
9. சாமுவெல் சிலேட்டர் ஏன் அமெரிக்கத் தொழிற்புரட்சியின் தந்தையெனக் கருதப்படுகிறார்?
10. பீட்டர்லூ படுகொலையின் பின்னணி யாது?

III. சுருக்கமாக விடையளிக்கவும்.

1. 1783இல் கையெழுத்திடப்பட்ட பாரிஸ் உடன்படிக்கையின் முக்கியச் சரத்துக்களை விவாதிக்கவும்.
2. அமெரிக்க புரட்சியின் முக்கியத்துவத்தை பகுப்பாய்வு செய்க.
3. "1789ஆம் ஆண்டு புரட்சிக்கு நீண்ட காலத்திற்கு முன்னதாகவே கருத்துக்களின் களத்தில் ஒரு புரட்சி நடந்தது" – விளக்குக.
4. "செப்டம்பர் படுகொலைகள்" எதனால் ஏற்பட்டது?
5. தென்அமெரிக்காவில் முதன்முதலாகப் பிரேசிலில் அரசியலமைப்பு சார்ந்த முடியாட்சி அரசு அமைந்ததற்கான சூழ்நிலைகளை எடுத்துரைக்கவும்.
6. தொழிற்புரட்சியின் இரண்டாம் கட்டத்தில் ஜெர்மனியில் நடந்தது என்ன?

IV. விரிவான விடையளிக்கவும்.

1. அமெரிக்க விடுதலைப் போருக்கான காரணங்கள், அதன் போக்கு, விளைவுகள் குறித்து விவாதிக்கவும்.
2. பாஸ்டில் சிறை தகர்ப்பு முதல் ரோபஸ்பியர் கொல்லப்பட்டது வரையிலுமான பிரெஞ்சுப் புரட்சியின் போக்கினை வரைக.
3. "அமெரிக்க புரட்சியும் பிரெஞ்சுப் புரட்சியும் ஹைட்டியில் புரட்சி ஏற்படத் தூண்டுகோலாய் அமைந்தன". இக்கூற்றை உறுதிப்படுத்தவும்.
4. தொழிற்புரட்சி ஏன் முதலில் இங்கிலாந்தில் தொடங்கிற்று? நவீன சமூகத்தின் மீது அது என்ன தாக்கத்தை ஏற்படுத்தி உள்ளது?

V செயல்பாடுகள்.

1. அமெரிக்க புரட்சி வெற்றிபெறாமல் போயிருந்தால் என்ன நடைபெற்றிருக்கக்கூடும் என்பது குறித்து ஒரு கலந்துரையாடலுக்கு ஏற்பாடு செய்யலாம்.
2. பண்டைய ஆட்சி முறையின் மூன்று எஸ்டேட்டுகளைப் போல் மாணவர்களை மூன்று அணிகளாகப் பிரித்து, பதினாறாம் லூயியால் மே, 1789இல் கூட்டப்பட்ட தேசிய சட்டசபை போன்ற மாதிரிச் சட்டசபையின் அமர்வை நடத்திப் பார்க்கலாம்.
3. இயந்திரங்களும் தொழிற்சாலைமுறையும் அறிமுகமான சூழலில் இங்கிலாந்தில் கைவினைத்தொழில்கள் எவ்வாறு சீரழிந்தது என்பதை மாணவருக்கு உணர்த்தி, அதைப் போன்றதொரு சூழ்நிலை ஆங்கிலக் காலனியாட்சி நிறுவப்பட்ட பின்னர் இந்தியாவில் ஏற்பட்டதையும் எடுத்துரைக்கவும்.

மேற்கோள் நூல்கள்

- William Doyle, *The Oxford History of the French Revolution*, Oxford University Press, 1989.
- Edward McNall Burns, *Western Civilizations*, Vols. 1 & 2, New York: W.W. Norton, eighth edition, 1973.
- Thomas H. Holloway, *A Companion to Latin American History*, Blackwell, 2011.
- Jeremy D. Popkin, *A Short History of the French Revolution*, Routledge, 2018.
- Chris Harman, *A People's History of the World*, Delhi: Orient Longman, 2007.
- Gordon S Wood, *The American Revolution: A History*, Modern Library, 2002.
- *Encyclopaedia Britannica*

மேலும் வாசிக்கத்தகுந்த நூல்

- A. J. கிரான்ட், ஐரோப்பா – கடந்த ஐந்து நூற்றாண்டுகாலச் சரித்திரம், தமிழாக்கம்: வை. விருத்தகிரீசன், தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம், சென்னை (ஆவணப் பதிப்பு: ஆகஸ்ட் – 2017).

12th_History_TM_Unit_11_V2.indd 198 02-01-2023 16:39:21

A-Z கலைச்சொற்கள்

துணிவான சாகசங்கள்	**adventurous**	willing to undertake any task involving risks
அட்லாண்டிக் கடலுக்கு அப்பால்	**transatlantic**	across the Atlantic Ocean
16, 17 ஆம் நூற்றாண்டுகளில் கோட்பாட்டிலும் வழிபாட்டிலும் எளிமை வேண்டுமெனக் கோரிய ஆங்கிலேய புராட்டஸ்டண்டுகள்; தூய நெறியினர்	**Puritans**	English Protestants in the 16th and 17th centuries who demanded the simplification of doctrine and worship
முற்றிலும் அழி, நிர்மூலமாக்கு	**extirpate**	destroy completely
படுகொலை	**massacre**	mass murder
துணை உற்பத்திப் பொருள், துணை விளைபொருள்	**byproduct**	a product made during the manufacture of something else / a secondary product
நகல் / பிரதி	**replica**	an exact copy or model of something
முன்பிருந்த நிலை	**status quo**	the existing state of affair
நடுத்தரவகுப்பினர்/ உற்பத்திக் காரணிகளையும் சமூகத்தின் பெரும்பான்மையான செல்வத்தையும் தங்களிடம் கொண்டுள்ள முதலாளி வர்க்கம்	**bourgeoisie**	the middle class / the capitalist class who own means of production and possess most of society's wealth

அலகு 12

ஐரோப்பாவில் அமைதியின்மை

கற்றலின் நோக்கங்கள்

கீழ்க்காணும் அம்சங்களோடு அறிமுகமாதல்

- சமதர்ம (சோஷலிசம்) சிந்தனையின் எழுச்சியையும், பொதுவுடைமை (கம்யூனிசம்) கருத்துகளின் தோற்றத்தையும் அறிதல்
- இங்கிலாந்தின் மக்கள் உரிமை சாசன இயக்கத்தைப் பற்றி தெளிதல்
- பிரான்சில் நிகழ்ந்த ஜூலை (1830) மற்றும் பிப்ரவரி (1848) புரட்சிகளின் முக்கியத்துவத்தை விளங்கிக் கொள்ளல்
- மாஸினி, கவூர், கரிபால்டி போன்றவர்கள் இத்தாலிய ஒருங்கிணைப்பிற்காக ஆற்றிய பங்களிப்பை உணர்ந்து கொள்ளல்
- ஜெர்மனியின் ஐக்கியத்தை நிறுவ பிஸ்மார்க் மேற்கொண்ட 'இரத்தமும் இரும்பும்' கொள்கையைப் புரிந்து தெளிதல்
- ஜெர்மனி மற்றும் அமெரிக்காவில் 1873 முதல் 1896 வரையுள்ள காலத்தில் ஏற்பட்ட நீண்ட பெருமந்தத்தையும் அதன் விளைவுகளையும் அறிதல்

அறிமுகம்

பத்தொன்பதாம் நூற்றாண்டில் பிரான்ஸ் நாட்டில் நடந்த பல முன்னேற்ற நிகழ்வுகள் ஐரோப்பிய கண்டம் முழுதும் ஒரு தாக்கத்தை ஏற்படுத்தியது. ஆஸ்திரியா, ரஷ்யா, பிரஷ்யா, பிரான்ஸ் ஆகிய நாடுகளுக்கிடையே 'புனித கூட்டணியை' உருவாக்கி அதன் மூலம் ஐரோப்பாவில் எழுந்த மக்களாட்சி உணர்வையும், தேசியவாதப் போக்கையும் ஒடுக்க முனைந்த 'ஆஸ்திரிய–ஹங்கேரியின்' பிரதம அமைச்சர் கிளெமென்ஸ் வான் மெட்டர்னிக்கின் வரலாற்று சிறப்புமிக்க கூற்றானது: "பிரான்ஸ் தும்மினால், ஐரோப்பாவிற்கு ஜலதோஷம் பிடிக்கும்.' அவ்வாறாயின் பிரான்சில் மும்முறை புரட்சி வெடித்த ஆண்டுகளான 1789, 1830, மற்றும் 1848களில் பிரான்ஸ் தும்மியதாகவே கருத்தில் கொள்ளவேண்டும். சுதந்திர சிந்தனையின் தோற்றுவாயிலாக 1789இல் நிகழ்ந்த பிரெஞ்சுப் புரட்சியின் தாரக மந்திரங்களாக 'சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம்' ஆகியவை திகழ்கின்றன. புரட்சி வெளிப்படுத்திய சக்தியையும், அது வளர்த்தெடுத்த சிந்தனைகளையும் புரட்சியின் நிகழ்விலேயே நெப்போலியன் போனபர்ட் உடைத்தெறிந்தார். சில ஆண்டுகளுக்கு அவரது ஆட்சி வெற்றிகரமான பாதையில் நகர்ந்தது. எனினும் கடல்வெளியில் பிரிட்டிஷாரின் ஆதிக்கத்தை அவரால் சரிக்க முடியாமலேயே போனதால், 1805இல் அவரது கடற்படை மோசமான தோல்வியைச் சந்தித்தது. ஸ்பெயின் நாடு 1808இல் நெப்போலியனுக்கெதிராகக் கிளர்ந்தெழுந்ததோடு, வெலிங்டன்தலைமையிலானபிரிட்டிஷ்படைப்பிரிவு ஒன்று பிரெஞ்சுப்படைகளை அத்தீபகற்பத்திலிருந்து வெளியேற்றியது. நெப்போலியன் 600,000 வீரர்களைக் கொண்ட பெரும்படைப்பிரிவுடன் 1812இல் ரஷ்யா மீது போர்தொடுத்து கடுமையான சரிவை எதிர்கொண்டார். நெப்போலியன் பட்டம் துறந்து (1814) எல்பாவிற்கு நாடு கடத்தப்பட்டாலும், கடைசி முயற்சியாக 1815இல் மீண்டும் பிரான்சிற்கு திரும்பி அதிகாரத்தை மீட்க முயன்றார். ஆனாலும் அவர் பெல்ஜியத்தில் அமையப்பெற்ற வாட்டர்லூவில் பிரிட்டிஷ், பெல்ஜிய மற்றும் பிரஷ்ய கூட்டுப்படைகளால் தோற்கடிக்கப்பட்டார். இறுதியாக மேற்கு அட்லாண்டிக்கில் வெகுதொலைவில் அமைந்திருந்த செயின்ட் ஹெலனா தீவில் தனிமையில் சிறைவைக்கப்பட்ட நெப்போலியன் 1821இல் அங்கேயே இறந்தார்.

12th_History_TM_Unit_12_V2.indd 200 20-12-2022 14:54:52

நெப்போலியன் போனபார்ட்

நெப்போலியனின் வீழ்ச்சிக்குப் பின்வந்த நாற்பதாண்டுகளில் நிலையற்ற ஒரு அமைதியே நிலவியது. 1854 முதல் 1871 வரையான காலத்தில் போர் மூண்டெழ இரு காரணிகள் வழியமைத்துக் கொடுத்தன. முதலாவதாக சொல்லப்படுவது மன்னராட்சி மீண்டமைந்ததும் புரட்சிக்காலத்தில் ஒழிக்கப்பட்ட நியாயமற்ற சலுகைகள் மீண்டும் தலைதூக்கியதுமாகும். பழையநிலைக்குத் திரும்பியவுடன் கடந்தகாலம் புகட்டியப் பாடங்களை மறந்து ஆட்சியாளர்கள் மீண்டும் சர்வாதிகாரத்தை நோக்கிய இலக்குகளை முன்வைக்கலாயினர். இரண்டாவதாக வியன்னா காங்கிரசில் பங்கெடுத்த இராஜதந்திரிகள் தேசம்சார்ந்த கோட்பாடுகளைப் புறந்தள்ளி பின்பற்றமுடியாத பூகோள எல்லைகளை நிர்ணயித்திருந்ததுமாகும்.

வியன்னா காங்கிரஸ் (1815)

மெட்டர்னிக்கின் தலைமையில் செயலாற்றிக் கொண்டிருந்த முடியரசை ஆதரிக்கும் முன்னேற்றம் விரும்பா பழமைவாத சக்திகள் ஐரோப்பியக் கூட்டிணைவின் (Concert of Europe) வாயிலாக கொடுங்கோன்மை முறையை கையாளத்துவங்கின. சுதந்திர இயக்கங்கள் கடுமையாக ஒடுக்கப்பட்டன. வெளிநாடுகளின் துணைகொண்டு மக்களின் எழுச்சி ஒடுக்கப்பட்ட வகையில் நேப்பிள்ஸில் (1820) ஆஸ்திரியப் படைகளைக் கொண்டும், ஸ்பெயினில் (1822) பிரான்சின் படைகளைக் கொண்டும் அடக்குமுறை கட்டவிழ்த்து விடப்பட்டது. ஐரோப்பாவின் ஒரு நாட்டில்கூட சொற்ப சுதந்திரத்திற்கான இடம்

www.tntextbooks.in

இருக்கவில்லை. ஆனபோதிலும் அமெரிக்கப் புரட்சியும், பிரெஞ்சுப் புரட்சியும் மக்களாட்சி பற்றியும், அரசியல் சுதந்திரம் பற்றியுமான கருத்துக்களை செழுமைப்படுத்தியதில் அவை வெகுவாக அறியப்பட்டு, விடுதலை வேட்கைமிக்க சிந்தனையாளர்களால் ஆதரிக்கப்படலாயின. முற்போக்கு சிந்தனையாளர்களும் தாராளமயக் கோட்பாட்டாளர்களும் மக்களாட்சியின் நற்தன்மை மீது பெரும்நம்பிக்கை கொண்டிருந்ததோடு அதை அடைந்துவிட முயற்சி மேற்கொள்ளலானார்கள். ஆனால் மக்களாட்சி வறுமையை ஒழிக்கவும், வர்க்கபேதங்களை நீக்கவும் தெளிந்த தீர்வுகளை முன்வைக்கவில்லை. ஆக, பத்தொன்பதாம் நூற்றாண்டின் ஐரோப்பா 'முதலாளித்துவம் மற்றும் ஏகாதிபத்தியம், தேசியவாதம் மற்றும் எல்லைகடந்த தேசியவாதம், செழுமை மற்றும் வறுமை' என பலவற்றின் விநோதமான கூட்டுக்கலவையாக விளங்கியது.

தொழிற்புரட்சி குடியிருப்போடு இணைந்த தொழில்முறைக்கு முற்றுப்புள்ளி வைத்ததோடு தொழிலாளர்களை தொழிற்சாலைகளுக்கருகே குடியமர நிர்ப்பந்தித்தது. நீண்ட வரிசையிலான குடியிருப்புகள் அவர்களுக்காகக் கட்டப்பட்டன. கூலியோ ஏற்றுக்கொள்ளமுடியாத அளவில் மிகக்குறைவு. வேலை நேரமோ பதினைந்து முதல் பதினெட்டு மணிநேரம் வரை என்று மிகஅதிகமாக அமைந்தது. பெண்களும் குழந்தைகளும் அதிக எண்ணிக்கையில் பணியில் அமர்த்தப்பட்டார்கள். தொழிற்சாலைகள் சொற்ப எண்ணிக்கையிலான முதலாளிகளின் உரிமையாக இருந்ததோடு அவற்றின் நோக்கம் தங்குதடையில்லாமல் லாபம் குவிப்பதாகவே இருந்தது. ஆரம்பகட்டத்தில் ஒருங்கிணைக்கப்படாமலிருந்த தொழிலாளர்கள் தங்கள் முதலாளிகளின் கருணையை முழுதும் நம்பி வாழ்ந்தனர். ஒருங்கிணைந்த அமைப்புமுறையும் ஒற்றுமையும் தொழிலாளர்களிடையே ஏற்படாதவரையில் நிரந்தரமான முன்னேற்றம் என்பது சாத்தியமில்லை என்று அவர்கள் குறுகியகாலத்திலேயே உணர்ந்தார்கள். ஆகவே அவர்கள் தொழிற்சங்கங்களை ஏற்படுத்த விழைந்தனர். அவ்வாறு தொழிற்சங்கங்கள் தோன்றிய முதற்கட்டத்தில் அவற்றை அரசாங்கங்கள் சட்டவிரோதமானவை என்றே அறிவித்தன. இதற்கு முந்தைய பாடத்தில் சொல்லப்பட்ட முக்கியத்துவம் வாய்ந்த தலைவர்கள் பலரும் சிறையிலடைக்கப்படவோ, நாட்டைவிட்டு விரட்டியடிக்கப்படுதலுக்கோ உள்ளானார்கள். எனினும் 1824இல் தொழிற்சங்கங்களுக்கு சட்டஅங்கீகாரம் கிடைத்தது. தொழிற்சங்கங்களின் அபரிமிதமான வளர்ச்சியைத் தொடர்ந்து, முதலாளித்துவத்திற்கு மாற்றானதொருமுறை சிந்தனையளவில் வலுப்பெற்று அதுவே சோஷலிசமாக வடிவம் கொண்டு நாடுகளைச் சாடவும், தொழிலாளர் நலன் காக்கவும் எனப் பலருக்கும் வழிகாட்டியது. பிரான்சின் பாரிஸ் கம்யூன் போலவே, இங்கிலாந்தின் தொழிலாளர் வர்க்கம் மக்கள் உரிமை சாசன (சார்டிஸ்ட்) இயக்கமாக உருவெடுத்து முதலாளித்துவத்திற்கு பெரும் சவாலாக நின்று போராடியபோது முதலாளிகள் முதலாளித்துவ நாட்டின் துணைகொண்டு தொழிற்சங்கங்களை ஒடுக்க மேற்கொண்ட நடவடிக்கைகளை உள்ளடக்கிய கூறுகளை இப்பாடம் எடுத்தியம்புகிறது.

மெட்டர்னிக்

ஐரோப்பியக் கூட்டிணைவு (Concert of Europe): நெப்போலியனின் சகாப்தத்திற்கு பிற்பட்ட காலத்தில் ஐரோப்பாவின் முக்கிய சக்திகளான ஆஸ்திரியா, பிரஷ்யா, ரஷ்யா, இங்கிலாந்து ஆகிய நாடுகளால் உருவாக்கப்பட்ட இவ்வமைவு ஐரோப்பாவில் ஒழுங்கை நிலை நிறுத்திடவும், அதிகார சமநிலையைக் காத்திடவும் பாடுபட்டது. மெட்டர்னிக்கின் சகாப்தம் (1815 – 1848) என்று சொல்லப்பட்ட காலத்தில், முன்பிருந்த நிலையைப் பாதுகாக்கும் நோக்கத்தை வெளிப்படுத்திக் கொண்ட பெரும்சக்திகள் இவ்விணைவின் ஊடாக உள்நாட்டுக் கலவரத்தால் அச்சுறுத்தப்பட்ட நாடுகளின் விவகாரத்தில் தலையிட்டு இணைவின் ஒட்டுமொத்த முடிவை அந்நாடுகளின் மீது திணித்தது.

நெப்போலியனின் ஆட்சியில் இத்தாலி மூன்று அரசியல் பிரிவுகளாகப் பகுக்கப்பட்டது. ஒற்றுமையை முன்னோக்கிய இந்நகர்விற்கு 1815இல் நடந்த வியன்னா காங்கிரசில் முற்றுப்புள்ளி வைக்கப்பட்டது. எட்டு மாநிலங்கள் உருவாக்கப்பட்டு வடக்கு இத்தாலி முழுமையாக ஜெர்மன்மொழி பேசும் ஆஸ்திரியர்கள் வசம் ஒப்படைக்கப்பட்டது. ஜெர்மனியும் அதுபோலவே 38 மாநிலங்களின் கூட்டமைப்பாக ஏற்படுத்தப்பட்டு ஆஸ்திரியாவின் தலைமையில் டயட் அமைப்பால் நிர்வகிக்கப்படலானது. ஆயினும் இத்தாலியிலும், ஜெர்மனியிலும் தேசிய உணர்வு மங்கிவிடவில்லை. இத்தாலியும், ஜெர்மனியும் அவர்களின் எல்லைகளுக்குள் ஒன்றுபட்டு தனியான நாடுகளாக உருவெடுத்தன.

12th_History_TM_Unit_12_V2.indd 202 20-12-2022 14:54:53

12.1 சோஷலிச சிந்தனையின் எழுச்சியும், பொதுவுடைமை சிந்தனையின் பிறப்பும்

நவீனகால அடிப்படையில் சோஷலிச சிந்தனை இயலாட்சி ஆதரவாளர்கள் (Physiocrats) அல்லது பொருளாதார நிபுணர்களால் உணவு மற்றும் சரக்கு ஆகியவற்றின் உற்பத்தியையும், விநியோகத்தையும் குறித்த விசாரணை ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. கற்பனையுலகு குறித்த சிந்தனையாளரான (Utopian Thinker) எட்டியன்–கேப்ரியல் மொராலி (Etienne–Gabriel Morally) 1755இல் தானியற்றிய நூலான கோட் டே லா நேச்சர் (Code de la Nature) என்பதில் தனியுடைமையைக் கண்டனத்திற்கு உட்படுத்தியதோடு சமூகத்தைப் பொதுவுடைமை அமைப்பாக மாற்றவேண்டி ஒரு முன்மொழிவை வெளிப்படுத்தினார். பத்தொன்பதாம் நூற்றாண்டில் சோஷலிசவாதிகள் என்று அறியப்பட்ட கூட்டு சிந்தனையாளர்கள் (Collectivist Thinkers) யாவருக்கும் இவரே முன்னோடியாகத் திகழ்கிறார். பிரெஞ்சுப் புரட்சி நடந்த காலத்தில் செல்வாக்கு பெற்றுத்திகழ்ந்த அரசியல் கிளர்ச்சியாளரான ஃபிராங்கோய்ஸ் பபேஃப் (Francois Babeuf) புரட்சி விவசாயிகள், தொழிலாளர்களின் தேவைகளை வெளிக்கொணரவில்லை என்றதோடு தனியுடைமையை ஒழித்து நிலங்களைப் பொதுவுடைமையாக்க வேண்டும் என்று வாதிட்டார்.

எட்டியன்–கேப்ரியல் மொராலி

கற்பனைவாத சோஷலிசம் (Utopian Socialism)

ஐரோப்பாவில் ஆரம்பகட்டத்தில் தோன்றிய சோஷலிசவாதிகள் யாரும் புரட்சியாளர்கள் அல்லர். அவர்கள் சமூகத்தில் உள்ள அனைவரும் வேலைகளை பகிர்ந்துகொண்டு அது போலவே அவர்களின் முயற்சியால் விளைந்த உற்பத்தியைப் பகிர்ந்துகொள்ளும் ஒரு கூட்டுறவுமுறை சமூகத்தை முன்மொழிந்தார்கள். தங்களுக்கு முன்பாக வாழ்ந்த சோஷலிசவாதிகளை குறிப்பிடவே கார்ல் மார்க்சும் (Karl Marx). ஃபிரெட்ரிக் ஏங்கல்சும் (Fredrich Engels) கற்பனைவாத சோஷலிசம் என்ற சொல்லாடலைப் பயன்படுத்துகிறார்கள். அவ்வாறான கற்பனைவாத சோஷலிசம் உற்பத்திக்கான கருவிகளை கூட்டுடைமையாகக் கொள்ளும் மாதிரி சமூகத்தைப் பரிந்துரைத்தது. வறுமையும் வேலையில்லாத் திண்டாட்டமும் இல்லாத ஒரு சோஷலிச சமூகம் பிறக்கும் என்ற தொலைநோக்குச் சிந்தனையை அவர்கள் ஊக்குவித்தார்கள். அவர்கள் ஏற்படுத்திய தாக்கத்தால் ஐரோப்பாவிலும், அமெரிக்காவிலும் பல மாதிரி சமூகங்கள் (model communes) உருவாயின. க்ளாட்–ஹென்றி செயின்ட்–சைமன் (Claude–Henri Saint Simon), ஃபிரங்கோய்ஸ்–மேரி–சார்லஸ்–ஃபூரியர் (Francois–Marie–Charles–Fourier), இராபர்ட் ஒவன் (Robert Owen) ஆகியோர் சிறப்புமிக்க கற்பனைவாத சோஷலிஸ்டுகள் ஆவர்.

க்ளாட் ஹென்றி செயின்ட்–சைமன் (1760–1825)

செயின்ட் சைமன் பிரிட்டிஷாருக்கு எதிராக அமெரிக்க சுதந்திரப் போரில் பங்கேற்ற ஒரு பிரெஞ்சு உயர்குடிமகனாவார். விஞ்ஞானத்திலும், முன்னேற்றத்திலும் பெரும் நம்பிக்கை கொண்டிருந்த அவர் தன் சமகால பிரெஞ்சு சமூகம் நிலப்பிரபுத்துவத்தின் பிடியில் சிக்கியிருப்பதாக விமர்சித்தார். சமூகக் கட்டமைப்பில் சமயகுருக்களின் இடத்தை விஞ்ஞானிகளைக் கொண்டு நிரப்பவேண்டும் என்று பரிந்துரைத்தார். மேலும் அவர் வெளிப்படுத்திய எண்ணவோட்டத்தில் அரசியல் செல்வாக்குகொண்ட சொத்துடைமையாளர்கள் தங்களின் நிலையை ஏழைகளுக்கு எதிராக தக்கவைத்துக்கொள்ள அறிவுப்பாதையின் வளர்ச்சியை முடக்குவதன் மூலமாகவே சாதித்துக் கொள்வதாகக் கருதினார். தனது நூலான புதிய கிறித்தவத்தில் (New Christianity) ஏழைகளை அரவணைக்க கிறித்தவக் கொள்கைகளைப் பின்பற்ற வலியுறுத்தினார்.

செயின்ட் சைமன்

சார்லஸ் ஃபூரியர் (1772–1837)

சார்லஸ் ஃபூரியர் ஆரம்பகால கற்பனைவாத சோஷலிஸ்டுகளில் ஒருவராவார். அவர் சமூக சூழலே மனித இனத்தின் கவலைகளுக்கு முதல் காரணம் என்று நம்பினார். அனைவருக்கும் குறைந்தபட்ச தேவைகள் கிடைத்துவிட்டால் அதனூடாக சமூக மற்றும் பொருளாதார ஏற்றதாழ்வுகளை கடந்துவிடமுடியும் என்று வாதிட்டார். மனித இயல்பு நன்மையையே உள்ளடக்கியது என்று கூறிய அவர் 'முதற் பாவம்'


சார்லஸ் ஃபூரியர்

12th_History_TM_Unit_12_V2.indd 203 20-12-2022 14:54:53

என்ற சமய மரபை மறுத்தார். நல்லிணக்கமே அகிலத்தின் சட்டவிதி என்று உணர்ந்த அவர் இயற்கைக்குப் பொருந்தும் மெய்யான யாவும், சமூகத்திற்கும் மெய்யானதாகவேத் திகழும் என்று கண்டார். நல்லிணக்கமும், தன்னிறைவும் கொண்ட ஃபலான்ஸ்டெரெஸ் (Phalansteres) என்ற பெயர் விளங்கும் கூட்டுறவு சமூகத்தை அவர் யூகித்தார். அச்சமூகத்தில் லாபமும், இழப்பும் சமமாகப் பகிர்ந்துகொள்ளப்படவும் அவர் விழைந்தார்.

இராபர்ட் ஓவன் (1771–1858)

மான்செஸ்டர் நகரின் தொழிற்சாலை அதிபர்களில் மனிதாபிமானம் கொண்டவராக இராபர்ட் ஓவன் திகழ்ந்தார். தொழிற்சாலை ஊழியர்களின் கொடுமையான வாழ்க்கைச் சூழலைக் கண்டு அதிர்ச்சியடைந்த அவர், அவரது தொழிற்சாலையில் அவர்களின் மேம்பாட்டிற்காகப் பலசீர்திருத்தங்களைஅறிமுகப்படுத்தினார்.அவரது தொழிற்சாலையில் பத்து வயதிற்கு குறைந்த குழந்தைகளைப் பணியமர்த்த அவர் மறுத்தார். காலப்போக்கில் அவர் தனியுடைமையையும், லாபநோக்கையும் விமர்சித்தார். தொழில் மற்றும் வேளாண் உற்பத்தியை கூட்டாகச் செயல்படுத்தும் ஒரு கூட்டுறவு சமூகத்தை அவர் வலியுறுத்தினார். 1818இல் தான் வெளியிட்ட நூலான 'சமூகத்தின் ஓர் புதிய பார்வை' (A New View of Society) என்பதில் தேசிய கல்வி கொள்கை, வேலைவாய்ப்பற்றோருக்கு பொதுப்பணி வழங்கல், வறுமை ஒழிப்பு சட்டங்களில் சீர்திருத்தம் போன்றவற்றை விவாதித்தார். அவரது முயற்சியின் விளைவாக பிரிட்டிஷ் பாராளுமன்றம் 1819ஆம் ஆண்டு தொழிற்சாலை சட்டத்தை இயற்றியது. மேலும் இராபர்ட் ஓவன் 1820களின் மத்தியில் சமூக சமத்துவத்தையும், கூட்டுறவையும் முன்னிறுத்தி ஒரு பெரும் கற்பனைவாத சோஷலிச கோட்பாட்டை உருவாக்கினார். அவரது பிற செயல்பாடுகளாக கிராண்ட் நேஷனல் கன்சாலிடேட்டட் ட்ரேட் யூனியனை (Grand National Consolidated Trade Union, 1834) உருவாக்கியதையும் வெவ்வேறு கூட்டுறவு அமைப்புகளுக்கு (Cooperative Congresses, 1831–1835) செயல்வடிவம் கொடுத்தமையையும் கூறலாம்.

இராபர்ட் ஓவன்

இரவலர் சட்டங்கள் (Poor Laws): பிரிட்டனில் எலிசபெத் அரசியின் ஆட்சிக் காலத்தில் இரவலர் சட்டங்கள் இயற்றப்பட்டு (1597–98) அதன் மூலமாக வயது முதிர்ந்தோருக்கும், நோயாளிகளுக்கும், ஏழை சிறார்களுக்கும், ஆற்றலிருந்தும் வேலைவாய்ப்பில்லாமல் தவித்தோருக்கும் நிவாரணம் வழங்கப்பட்டது.

பியர்ரி–ஜோசப் பிரௌதன் (1809–1865)

பிரெஞ்சு அரசின்மைவாத சிந்தனையாளராகக் (anarchist) கருதப்படும் பிரௌதன் சோஷலிச சிந்தனை செழுமைபெற முக்கியப் பங்காற்றியுள்ளார். இதற்கு முன்பான கற்பனைவாத சோஷலிஸ்டுகள் போல நடுத்தரவர்க்கத்தைச் சார்ந்தவராயல்லாமல் பிரௌதன் உழைக்கும் வர்க்கத்தில் பிறந்து வளர்ந்தவராவார். கூட்டுறவு சமூக அமைப்பினால் உத்வேகம் பெற்ற அவரும் பிற அரசின்மைவாத சிந்தனையாளர்களும் அரசை எதிர்த்தும், புரட்சியில் நம்பிக்கை கொண்டும் விளங்கினர். "உடைமை என்றால் என்ன?" என்ற தலைப்பில் அவர் வெளியிட்ட துண்டுப்பிரசுரத்தில் "உடைமைகள் யாவும் திருடப்பட்டவையே" என்று குறிப்பிட்டார். சமூக அமைப்பை தொழிலே நிர்ணயிக்கவேண்டும் என்று நம்பிய அவர் அனைத்து வகை அரசுகளும் அடக்குமுறை தன்மை கொண்டவையே என்றும் கருதினார். தேசிய அரசுகளின் இடத்தில் தன்னாட்சி கொண்ட கூட்டு சமூகங்களின் கூட்டமைப்பு தோன்றவேண்டுமென வலியுறுத்தினார். அவர் 1848–49 காலத்தில் தேசிய மன்றத்தின் உறுப்பினராக இருந்துபெற்ற அனுபவம் அதிருப்தியையே ஏற்படுத்தியிருந்தது. பத்தொன்பதாம் நூற்றாண்டின் மத்தியில் அவரது சிந்தனைகள் பிரான்ஸ் நாட்டின் உழைக்கும் மக்களிடையே செல்வாக்கு பெற்றுத் திகழ்ந்தன. அவர் வகுத்த பாதையைப் பின்பற்றிய சிலர் 1864இல் 'அறுபதுகளின் அறிக்கை' என்ற ஒன்றை வெளியிட்டார்கள். இவ்வறிக்கை 1789இன் பிரெஞ்சு புரட்சி அரசியல் சமத்துவத்தை மட்டுமே ஏற்படுத்தியதென்றும், பொருளாதார சமத்துவத்தை ஏற்படுத்தவில்லை என்றும் அறிவித்தது. அவர்கள் உழைக்கும் வர்க்கத்தை உழைப்பாளிகளே பிரதிநிதித்துவப்படுத்த வேண்டும் என்று வலியுறுத்தினார்கள். பிரான்சின் பாராளுமன்றத்திற்கு 1863இல் நடந்த தேர்தலில் அவர்கள் மூன்று உழைக்கும் வர்க்கத்தைச் சேர்ந்த

பிரௌதன்

12th_History_TM_Unit_12_V2.indd 204 20-12-2022 14:54:53

வேட்பாளர்களைப் போட்டியிட வைத்தபோது அவர்கள் தோல்வியையே அடைந்தார்கள். பொது வேலைநிறுத்தத்தின் மூலமாக அரசைக் கவிழ்த்து அதனிடத்தில் மக்களாட்சி முறையில் தெரிவுசெய்யப்பட்ட கூட்டுறவு குழுக்கள் ஆட்சியிலமர்த்தப்பட வேண்டும் என்று நினைத்த ரஷ்யாவின் அரசின்மைவாத சிந்தனையாளரான மைக்கேல் அலெக்ஸாண்டரோவிச் பகுனினை பிரௌதனின் சிந்தனைகளே பெரிதும் ஆட்கொண்டது.

அரசின்மைவாதம்: அடக்குமுறையைப் பயன்படுத்தாமல் தன்னார்வ, கூட்டுறவின் அடிப்படையில் அரசையும், சமூக நிறுவனங்களையும் ஒழித்து, அரசில்லா நிலையே மேம்பட்டது என எண்ணும் கொள்கை.

லூயி ஜீன் ஜோசப் சார்லஸ் பிளாங்க் (1811–1882)

தனக்கென அறிவுத்தளத்தில் தனி செல்வாக்கை ஏற்படுத்திக்கொண்ட பிரெஞ்சு சோஷலிசவாதியான லூயி பிளாங்க், 1839இல் ரெவ்யூ டூ ப்ராக்ரஸ் (Revue du Progres) என்ற ஆய்விதழைத் துவக்கி அதில் மேம்பட்ட சமூக சிந்தனைகளை முன்வைத்தார். அவரது முக்கியமான கட்டுரை 'தொழிலாளர்களின் அமைப்பு' (Organisation of Labour) என்ற தலைப்பில் 1839ஆம் ஆண்டு தொடராக வெளிவந்தது. அவரது எழுத்துக்களின் வாயிலாக தேசிய நிதியில் தொழிலாளர்களால் நடத்தப்படும் "சமூக பணிமனைகளின்" மூலம் அனைவருக்கும் வேலைவாய்ப்பு உறுதி செய்யப்பட்டு அதன்வழியே படிப்படியாக சோஷலிச சமூகத்தை எட்டமுடியும் என்று அறிவுறுத்தினார். அரசு அதிகாரத்தின் துணை இல்லாமல் சோஷலிச சமூகத்தை எட்டமுடியாது என்றும் லூயி பிளாங்க் வாதிட்டார். பிரான்ஸ் நாட்டில் 1848இல் உருவான தற்காலிக அரசின் உறுப்பினராகப் பங்குவகித்த அவர் தனது செல்வாக்கைப் பயன்படுத்தி வேலைவாய்ப்பற்றோருக்கான பணிமனைகளை உருவாக்கி தேவைப்பட்டோருக்கு பணி கிடைக்க வழிவகை செய்தார்.

லூயி பிளாங்க்

கார்ல் மார்க்சும், அறிவியல் சார்ந்த சோஷலிசமும்

கார்ல் மார்க்சும் (1818–1883) பிரெட்ரிக் ஏங்கல்சும் (1820–1895) சோஷலிச சிந்தனைக்கு



கார்ல் மார்க்ஸ்

பிரெட்ரிக் ஏங்கல்ஸ்

அரும் பங்களிப்பை வழங்கியுள்ளார்கள். காலப்போக்கில் அவர்களது சிந்தனைகள் மார்க்சியம் அல்லது கம்யூனிசம் (பொதுவுடைமை) என்று வழங்கப்படலாயின. அவர்களோ சோஷலிசம் சார்ந்த அவர்களது சிந்தனைகளை அறிவியல் சார்ந்த சோஷலிசம் என்றே குறிப்பிட்டார்கள். மார்க்சும், ஏங்கல்சும் 1848ஆம் ஆண்டின் புரட்சி நடந்த சமகாலத்தில் தங்களின் கம்யூனிஸ்ட் மேனிபெஸ்டோ (The Communist Manifesto) என்ற நூலை வெளியிட்டார்கள். அதில் மிகவும் புகழ்பெற்ற தொழிலாளர்களைத் திரட்டும் கூக்குரலான "உலகத் தொழிலாளர்களே ஒன்றுபடுங்கள்! நீங்கள் இழப்பதற்கு ஏதுமில்லை, அணிந்திருக்கும் விலங்குகளைத் தவிர" என்பது இடம்பெற்றிருந்தது.

நிலப்பிரபுத்துவத்தை எவ்வாறு முதலாளித்துவம் மாற்றியமைத்ததோ அதேவழியில் முதலாளித்துவத்தை சோஷலிசம் மாற்றியமைக்கும் என்று மார்க்ஸ் நம்பினார். சமூகத்தில் வேலை கொடுக்கும் நிலையில் இருக்கும் வசதிபடைத்தோருக்கும் வேலை பெறவேண்டிய நிலையில் இருக்கும் வறிய மக்களுக்குமிடையே ஒரு தொடர் முரண்பாடு இருந்துகொண்டிருப்பதாக மார்க்ஸ் நம்பினார். கல்விநிலை மேம்பாடே, பணியமர்த்தப்பட்ட பெருந்திரளான மக்கள் தங்களின் வர்க்க உணர்வால் உந்தப்பட்டு அது போன்றே ஆளும் வர்க்க உணர்வோடு வாழும் சிறுபான்மை மக்களை எதிர்க்கும்நிலையை ஏற்படுத்தும் என்று அவர் கருதினார். எவ்வாறாயினும் வர்க்க உணர்வு கொண்ட தொழிலாளர்கள் அதிகாரத்தைக் கைப்பற்றி புதிய சமூக அமைப்பிற்கு அடித்தளமமைப்பார்கள் என்று அவர் ஒரு தீர்க்கதரிசியைப் போன்று கூறினார்.

முதலாளித்துவத்தின் மீதான தமது விமர்சனத்தை முன்வைத்து தாஸ் கேப்பிடல் (Das Kapital) நூலின் முதல் தொகுதியை 1867இல் கார்ல் மார்க்ஸ் வெளியிட்டார். இந்நூலில் உழைக்கும் வர்க்கத்தை (Proletariat) முதலாளி வர்க்கம் (Bourgeoisie) சுரண்டுவதை கார்ல் மார்க்ஸ் அழுந்தக் கூறியுள்ளார்.

12th_History_TM_Unit_12_V2.indd 205 20-12-2022 14:54:54

1864இல் அவரது சிந்தனையின் தாக்கத்தால், பன்னாட்டு உழைக்கும் ஆண்களின் சங்கம் (International Working Men's Association) என்ற அமைப்பு உருவானது. பன்னாட்டு உழைக்கும் மக்களின் கூட்டமைப்பை ஏற்படுத்துவதே அதன் நோக்கமாக விளங்கியது. இப்பன்னாட்டு உழைப்பாளரமைப்பில் மிதவாதிகள் கலந்துவிடாமலும் ஃபெர்டினான்ட் லசால், பகுனின் போன்ற சோஷலிசவாதிகள் நுழைந்துவிடாமலும் மார்க்ஸ் எச்சரிக்கையோடு முனைந்து செயல்பட்டார். பன்னாட்டு அமைப்பை ஒருங்கிணைக்க அவர் மேற்கொண்ட முயற்சிகள் பலனளிக்காமல் 1876இல் அது முழுவதுமாக சரிந்தது. எனினும் ஐரோப்பாவில் தோன்றிய பல சோஷலிச கட்சிகளாவன: 1875இல் ஜெர்மானிய சமூக மக்களாட்சி கட்சி, 1879இல் பெல்ஜிய சோஷலிச கட்சி, 1871இல் பாரிஸ் கம்யூன் மற்றும் 1905இல் உருவான சோஷலிச கட்சி. இரண்டாம் பன்னாட்டு அமைப்பு 1889இல் பாரிஸில் உருவாகி முதலாம் உலகப் போர் துவங்கும்வரை சோஷலிச இயக்கங்களின் மீது தன் செல்வாக்கைச் செலுத்திக் கொண்டிருந்தது.

இங்கிலாந்தில் சாசனத்துவம் (Chartism)

மக்கள் உரிமை சாசன இயக்கம்

இங்கிலாந்தின் உழைக்கும் வர்க்கம் அங்கு செயல்பட்டு வந்த சார்டிஸ்ட் இயக்கத்தை பின்புலமாக அமைத்துக் கொண்டது. மக்கள் உரிமை சாசன இயக்கம் என்பது ஒரு கலகமோ, கிளர்ச்சியோ அல்ல. அது அமைப்புரீதியாக உருவாக்கப்பட்ட இயக்கமாகும். 1830இல் பிரெஞ்சு புரட்சியின் தாக்கமானது இங்கிலாந்தில் போராட்ட வடிவம்பெற்று தொழிலாளர் கிளர்ச்சியாக மாறியது. கிளர்ச்சியின் வெவ்வேறு போக்குகள் இணைந்து மக்கள் உரிமை சாசன இயக்கமாக நிலைகொண்டு எழுந்தது. சாசனத்துவவாதிகள் தங்களது சிந்தனைகளை ஏழை மனிதனின் பாதுகாவலன் (The Poor Man's Guardian), பட்டயம் (The Charter), வடக்கத்திய நட்சத்திரம் (The Northern Star), சார்டிஸ்ட் சுற்றறிக்கை (The Chartist Circular) போன்ற இதழ்களின் வாயிலாக பிரச்சாரம் செய்தனர். 1837இல் துவங்கப்பட்ட அதன் முக்கியப் பத்திரிகையான வடக்கத்திய நட்சத்திரம் குறுகிய காலத்தில் விநியோக அளவில் டைம்ஸ் பத்திரிகையை சமன்செய்தது. அதில் வெளியான கட்டுரைகளின் தகவல்கள் ஒவ்வொரு தொழிற்சாலைப்பகுதிகளிலும் அமைந்திருந்த பட்டறைகளிலும் பொது விடுதிகளிலும் எழுத்தறிவுபெறாதோருக்காக படித்துக் காட்டப்பட்டது.



வில்லியம் லவெட்

1838–39க்கு இடைப்பட்ட காலத்தில் நடைபெற்ற கூட்டங்களில் நூற்றுக்கணக்கில், ஆயிரக்கணக்கில் தொழிலாளர்கள் பெருந்திரளாகக் கலந்து கொண்டார்கள். லண்டன் உழைக்கும் ஆண்களின் சங்கத்தைச் சேர்ந்த வில்லியம் லவெட் என்பவர் சாசனத்துவவாதிகள் விரும்பிய தேர்தல் சீர்திருத்தங்களை ஆறு முக்கிய அம்சங்களாகக் கொண்டு மக்களின் பட்டயம் ஒன்றைத் தயாரித்து கொடுத்திருந்தமையை இக்கூட்டங்களில் அறிமுகப்படுத்தியதோடு அது ஆழ்ந்த ஆய்விற்கும் உட்படுத்தப்பட்டது. அவ்வாறான ஆறு முக்கிய அம்சங்கள் கீழ்வருமாறு:

1. அனைவருக்கும் வாக்குரிமை.
2. அச்சுறுத்தலைத் தவிர்ப்பதற்காக வாக்குச்சீட்டுகள் மூலம் வாக்களித்தல்.
3. வேட்பாளர்களுக்கு சொத்துத்தகுதி நிர்ணயிக்கலாகாது.
4. ஏழைகள் தேர்தலில் போட்டியிடவும் பதவிகளில் இடம்பெறவும் வழிவகைசெய்யும் முகமாக மக்களவைக்குத் தேர்வு செய்யப்பட்டவர்களுக்கு நிதி சலுகைகளை வழங்குதல்.
5. சம அளவிலான தேர்தல் மாவட்டங்களையும், சம அளவிலான பிரதிநிதித்துவத்தையும் வழங்கல்.
6. வருடாந்திரப் பாராளுமன்றம்.

மக்களிடையே கொந்தளிப்பு ஏற்படக்கூடும் என்ற வதந்திகளால் பீதியடைந்த அரசு, தொழிற்சாலை இருந்த பகுதிகளுக்கு இராணுவத்தை அனுப்பியது. லங்காஷயர் நகரின் தொழிலாளர்கள் 1842ஆம் ஆண்டு வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டதோடு தொழிற்சாலைதோறும் சென்று பிற தொழிலாளர்களையும் தங்களோடு

12th_History_TM_Unit_12_V2.indd 206 20-12-2022 14:54:54

இணைந்துகொள்ள வற்புறுத்தியதன் வாயிலாக போராட்ட எல்லையை விரிவுபடுத்தி நிலைமையைத் தீவிரமடையச் செய்தார்கள். பிரான்சில் 1848இல் ஏற்பட்ட பிப்ரவரி புரட்சியின் தாக்கம் ஐரோப்பா முழுமைக்கும் பரவியபோது பெருந்திரளான தொழிலாளர்கள் மோதலுக்குத் தயாரானார்கள். அரசும் கீழ் நடுத்தரவர்க்க மக்களின் துணையோடு விடாப்பிடியாக நின்றது. தெற்கு லண்டனில் அமையப்பெற்ற கென்னிங்டன் நகரில் 50,000 என்ற அளவில் தொழிலாளர்கள் கலந்துகொண்டபோது சாசனத்துவவாத தலைவர்களும் தீர்மானமான ஒரு முடிவெடுக்கத் தடுமாறினார்கள். அதற்கிடையே அவர்களில் பெரும்பான்மையானோரை கைதுசெய்ததோடு லண்டன் நகரின் பாதியை ஆயுதம் ஏந்தியோர் கட்டுப்பாட்டில் இருக்கும் முகாமாகவே அரசு மாற்றியிருந்தது.

பல்வேறு குழுக்களின் மாறுபட்ட கருத்துக்களின் புகலிடமாக சாசனத்துவவாதம் திகழ்ந்தது. அதன் தலைவர்கள் ஆட்சியில் இருந்துகொண்டிருப்போரை அரவணைத்துச்செல்ல நினைப்போர் என்ற ஒரு வகையாகவும், அவர்களைத் தூக்கியெறிய நினைப்போர் என்ற மற்றொரு வகையாகவும் பிரிந்து இருந்தார்கள். சாசனத்துவவாதம் வெற்றிபெறாவிடினும் 1832இன் சீர்திருத்த சட்டத்தில் அதன் கோரிக்கைகள் இடம்பெறவில்லை என்றாலும் அதற்குப்பின் கொண்டுவரப்பட்ட 1867ஆம் மற்றும் 1884ஆம் ஆண்டுகளின் பாராளுமன்ற சீர்திருத்த சட்டங்களில் கணிசமான அளவிற்கு அதன் கருத்துகள் உட்கொண்டுவரப்பட்டன.

ஜூலை புரட்சி (1830)

போர்பன் மன்னரான பத்தாம் சார்லஸ் 1830 ஜூலை 26 அன்று நான்கு அவசர சட்டங்களை வெளியிட்டு அவற்றின் மூலமாக பிரதிநிதிகளின் அவையை (Chamber of Deputies) கலைக்கவும் பத்திரிகைச் சுதந்திரத்தை ஒடுக்கவும் தேர்தல் சட்டங்களை மாற்றியமைப்பதன் வாயிலாக நான்கில் மூன்று பங்கு பேருக்கு ஒட்டுரிமையை இல்லாததாக்கவும் அவைக்கான பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்க புதிய தேர்தல்களை அறிவிக்கவும் செய்தார். இதனால் 1795க்குப் பின் பாரிஸ் நகர மக்கள் வெகுண்டெழுந்து பெருந்திரளாகப் பொதுவெளிக்கு வந்து நின்றார்கள். அரசரின் படைகளால் கிளர்ச்சியைக் கட்டுக்குள் கொண்டுவர முடியவில்லை. வெளிநாட்டிற்குப் புலம்பெயர பத்தாம் சார்லஸ் அறிவுறுத்தப்பட்டு அவரது இடத்தில் அவரது உறவினரான ஆர்லியன்ஸ் நகர லூயி ஃபிலிப் நடுத்தர மக்களின் ஆதரவோடு பதவிக்குக்

ஜூலை புரட்சி

பத்தாம் சார்லஸ்

கொண்டுவரப்பட்டார். இந்த உத்தி பிரான்சில் கைகொடுத்தது. ஆனால் ஐரோப்பாவின் பிற பகுதிகளில் கிளர்ச்சி தொடர்ந்து வெடித்தவாறே இருந்தது. புரட்சி நெதர்லாந்தில் வெற்றி பெற்றதையடுத்து, அங்கே பெல்ஜியம் பிரிக்கப்பட்டு தனியான சுதந்திர நாடாக்கப்பட்டது. துருக்கியர்களின் ஆட்சியதிகாரத்தில் சிக்கிப் போராடிக் கொண்டிருந்த கிரேக்கர்கள் பெரும்சக்திகளின் ஆதரவைப்பெற்று 1832இல் விடுதலை அடைந்தார்கள். ஆனால் ரஷ்ய சார் மன்னருக்கு எதிரான போலந்து நாட்டினரின் போராட்டம் தோல்வியை அடைந்தது.

பிப்ரவரி புரட்சி (1848)

பிப்ரவரி புரட்சி

பாரிஸ் நகரில் தாமாக உதித்த மக்களின் எழுச்சி சீர்திருத்தத்தைக் கோரி கோஷமிட்ட (Vive de la reforme என்ற முழக்கம்) ஓசை அவர்களின் தேசப்பற்றை பறைசாற்றியதோடு அவ்வோசை படைவீரர்களிடையே பரவவும்

12th_History_TM_Unit_12_V2.indd 207 20-12-2022 14:54:55

லூயி ஃபிலிப்

அரண்மனையையும் அதன் அவை கட்டடங்களையும் ஊடுருவியதால் 1848இன் பிப்ரவரி மாதத்தில் வேறு வழியின்றி மன்னர் லூயி ஃபிலிப் பதவிதுறந்து நாட்டைவிட்டகன்றார். எதிர்ப்பாளர்கள் பிரெஞ்சு நாட்டின் புரட்சிக்கவிஞர் லாமார்டினின் பின் அணிதிரண்டனர். சிறிது காலத்தில் லூயி பிளாங்கும் அவர்களை வந்து சேர்ந்தார். அனைத்து ஆண்களுக்கும் ஒட்டுரிமை என்ற அடிப்படையில் ஏப்ரல் 1848இல் நடத்தப்பட்ட தேர்தல்களில் மிதவாதிகள் அதிக எண்ணிக்கையில் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். சோஷலிசவாதிகளில் சொற்பமானவர்களே தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். புதிதாகப் பதவியேற்ற சபையினர் சமூக ஒழுங்கிற்கு ஆபத்து ஏற்படக்கூடும் என்ற வாதத்தை முன்வைத்து லூயி பிளாங்கின் முயற்சியால் உருவாக்கப்பட்ட பட்டறைகளை மூடினர். தொழிலாளர்கள் அதற்குத் தக்க பதிலடி கொடுத்ததோடு அரசை எதிர்க்கவும் துணிந்தனர். ஜூன் 24–26ஆம் தேதிகளுக்கிடையே ஆயிரக்கணக்கான மக்கள் கொல்லப்படவும் பதினோராயிரம் புரட்சியாளர்கள் சிறையிலடைக்கப்பட்டும், நாடுகடத்தப்பட்டும் தண்டிக்கப்பட்டார்கள். இக்காலம் 'இரத்தந்தோய்ந்த ஜூன் தினங்கள்' (Bloody June Days) என்று குறிப்பிடப்படுகின்றன. சட்டசபை இயற்றியப் புதிய அரசியல்சாசனத்தின்படி தேர்தல்கள் நடத்தப்பட்டன. நெப்போலியன் போனபார்ட்டின் மருமகனான லூயி நெப்போலியன் குடியரசுத்தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு டிசம்பர் 1848இல் பதவியேற்றார். நீண்டகாலம் செல்வதற்குள் அவர் ஒரு பொது வாக்கெடுப்பை நடத்தி அதன் வாயிலாக ஜனவரி 1852இல் தனக்குத்தானே பிரான்ஸ் நாட்டின் பேரரசராக முடிசூட்டிக்கொண்டார். தனக்கு மூன்றாம் நெப்போலியன் என்ற சிறப்புப்பெயரையும் சூட்டிக்கொண்டார்.

1848ஆம் ஆண்டு தேசியவாதத்திற்கு குறிப்பிடும்படியான வெற்றிகரமான ஆண்டாய் அமைந்தது. ஐரோப்பாவின் இடைத்தரகராகவும் தேசியவாதத்தின் பெரும் எதிரியாகவும் கருதப்பட்ட மெட்டர்னிக் மாறுவேடத்தில் வியன்னாவைவிட்டு வெளியேற நிர்ப்பந்திக்கப்பட்டார். ஹங்கேரி நாடும், பொஹிமியா நாடும் தேசிய விடுதலை அடைந்துவிட்டதாகப் பிரகடனப்படுத்திக் கொண்டன. மிலான் ஆஸ்திரியர்களை வெளியேறச் செய்தது. வெனிஸ் விடுதலைபெற்ற குடியரசாக மாறியது. சார்டினியாவின் மன்னரான சார்லஸ் ஆல்பர்ட் ஆஸ்திரியா மீது போர்ப்பிரகடனம் செய்தார். சர்வாதிகாரப்போக்கு சிறிது காலம் மறைந்தது போன்ற பிம்பம் ஏற்பட்டது. ஆனால் உண்மையில் அவ்வாறு நிகழவில்லை. கோடைக்காலம் நெருங்கும் வேளையில் மன்னர்கள் புரட்சியாளர்கள் மீது தாக்குதலைத் தொடுக்க ஆரம்பித்து வெற்றிகரமாக பெர்லின், வியன்னா, மிலான் போன்ற பகுதிகளில் பரவிக்கொண்டிருந்த மக்களாட்சி கோரிய இயக்கங்களை ஒடுக்கினர். அடுத்த ஓராண்டில் கண்டம் முழுவதும் எதிர்–புரட்சி வெற்றிகரமாகப் பரவியது.

தெற்கு மற்றும் கிழக்கு ஐரோப்பாவில் தேசியவாதம்

ஐரோப்பாவில் தேசிய ஒருமைப்பாட்டைக் கண்டடைந்த நாடுகளில் முதலாவதாய் பிரான்ஸ், ஸ்பெயின், இங்கிலாந்து ஆகிய நாடுகள் திகழ்ந்தன. கலைகளுக்கும், எழுத்துலகிற்கும் அரிய கொடைகளை வழங்கிய இத்தாலி இவ்வரசியல் மாற்றங்களில் பங்கெடுக்கவில்லை. இத்தாலியின் நகரங்களான ரோம், ஃபிளாரன்ஸ், வெனிஸ், நேப்பிள்ஸ், மிலான் போன்றவை குறுநிலங்களின் தலைநகரங்களாக அமைந்திருந்தன. அதனால் இவை அவ்வப்போது பேரரசுகளுக்குப் பலியாகும் சூழல் நிலவியது. இது தவிர, புத்துயிர்ப்புக்காலம் என்பது அறிவுசார்ந்த சுதந்திரத்தை முன்னிறுத்தியதேயன்றி அது அரசியல் விடுதலையை உள்ளடக்கியதல்ல. ஆக இத்தாலியின் குறுநாடுகள் பலவகையில் விழிப்புணர்வு கொண்டவையாகத் திகழ்ந்தாலும் அவற்றில் ஃபிளாரன்ஸின் மெடிஸி போன்றும், மிலானின் கொரூர விஸ்கான்டி, மத்திய இத்தாலியின் சீஸர் போர்ஜியா போன்றவர்களால் கொடுங்கோல் ஆட்சியே நடத்தப்பட்டு வந்தது. இத்தாலியின் உண்மைநிலையே ஜெர்மனிக்கும் பொருந்தக்கூடியதாக இருந்தது. புனித ரோமானியப் பேரரசு என்பது பெயரளவில் மட்டுமே பேரரசாக விளங்கியது. செயல்பாட்டளவில் ஜெர்மனி முந்நூறுலிருந்து நானூறு வரையான தனிநாடுகளைக் கொண்டதாக விளங்கியது. மன்னர்களே இந்நாடுகளை நிலப்பிரபுத்துவ அராஜகத்திலிருந்து காப்பாற்றி தேசங்களாக வடிவம் கொடுத்தார்கள். தேசிய அரசுகளாக ஏற்றம் பெறத்தேவையான சூழல் தேசியவாதம் பரவிய பத்தொன்பதாம் நூற்றாண்டில்தான் இத்தாலியிலும் ஜெர்மனியிலும் ஏற்பட்டது.

இத்தாலிய இணைப்பு

நெப்போலியனின் காலத்திற்கு முன்பான இத்தாலி சிற்றரசுகளையும், குறுநில மன்னர்களையும் மட்டுமே உள்ளடக்கிய ஒன்றாக சீரற்றுத் திகழ்ந்தது. நெப்போலியன் அதனை மூன்று

12th_History_TM_Unit_12_V2.indd 208 20-12-2022 14:54:55

www.tntextbooks.in

பிரிவுகளாக ஏற்படுத்தினார். ஒருமையைப் பேணக்கூடிய இந்நடவடிக்கை வியன்னா காங்கிரசால் அழிக்கப்பட்டது. எட்டு மாநிலங்களாகப் பிரிக்கப்பட்ட இத்தாலியின் வடக்குப் பகுதி ஜெர்மன்மொழி பேசும் ஆஸ்திரியர்களின் வசம் ஒப்படைக்கப்பட்டது. பத்தொன்பதாம் நூற்றாண்டின் இத்தாலி 'பன்னிரெண்டு பெரு மாநிலங்களையும் பல குறுநிலங்களையும்' உள்ளடக்கியதாக இருந்தது. இத்தாலி 'வெறும் பூகோள வெளிப்பாடே' என்று மெட்டர்னிக் குறிப்பிட்டார். வடமேற்கில் பிரான்சின் எல்லையையொட்டி அமையப்பெற்றிருந்த பியட்மாண்ட்–சார்டினியப் பேரரசு இத்தாலியை ஒருங்கிணைப்பதில் முக்கியப் பங்காற்றியது. அதன் கிழக்கில் அமைந்திருந்த லம்பார்டி மற்றும் வெனிஷியா பகுதிகள் ஆஸ்திரியப் பேரரசின் கட்டுப்பாட்டில் இருந்தன. குறுந்தேசங்களான டஸ்கனி, பார்மா, மொடினா ஆகியவற்றையும் அது தன் கட்டுக்குள் வைத்திருந்தது. மத்தியில் இருந்த போப்பாண்டவரின் நாடுகள் ரோமானிய கத்தோலிக்கத் திருசபையின் கட்டுப்பாட்டுக்குள் இருந்தன. தெற்கில் வீற்றிருந்த இரு சிசிலிய அரசுகள் அல்லது நேப்பிள்சும் சிசிலியும் போர்பன் குடும்ப வம்சத்தின் கட்டுப்பாட்டில் இருந்தது.

நெப்போலியனின் ஆட்சி ஒரே சீரான நிர்வாகத்தை வழங்கியமையால் இத்தாலியில் முதன்முறையாக ஒருமைப்பாட்டுணர்வு ஏற்பட்டது. இத்தாலியில் எழுந்த தேசியவாத ஆர்வத்தை வியன்னா காங்கிரஸ் அரசாட்சியை மீண்டும் நிறுவியதன் வாயிலாகவும், சிறு இராஜ்ஜியங்களை உருவாக்கியதன் மூலமாகவும் மடைமாற்றம் செய்தது. சுதந்திர கருத்துக்களையும், நாட்டுப்பற்றையும் வலியுறுத்திய கார்பொனாரி (Carbonari) போன்ற இரகசிய குழுக்கள் 1820களில் அதிகமாகப் பரவியது. தாராளமயவாத கருத்துக்களையும், தேசியவாதத்தையும் இக்குழுக்கள் உயிர்த்தெழச் செய்தன. நேப்பிள்ஸ், பியட்மாண்ட், லம்பார்டி ஆகியப் பகுதிகளில் புரட்சி வெடித்தது. ஆயினும் அவை ஆஸ்திரியாவால் ஒடுக்கப்பட்டன.

பிரான்சில் 1830இல் நடந்த புரட்சியின்சாயலில் மொடினா, பார்மா, மற்றும் போப்பாண்டவரின் கட்டுப்பாட்டில் இருந்த பகுதிகளில் கிளர்ச்சி

12th_History_TM_Unit_12_V2.indd 209 20-12-2022 14:54:55

www.tntextbooks.in

வெடித்தாலும் அவையும் ஆஸ்திரியாவால் ஒடுக்கப்பட்டன. அது போன்றே 1848இல் பிரான்சின் பிப்ரவரி புரட்சியைத் தொடர்ந்து இத்தாலியின் மாநிலங்களான பியட்மாண்ட்–சார்டினியா, சிசிலி, போப்பாண்டவரின் பகுதிகள், மிலான், லம்பார்டி, வெனிஷியா ஆகிய பகுதிகளில் மக்களின் கிளர்ச்சி மீண்டும் வெடித்தது. அதன் விளைவாக சிசிலி, பியட்மாண்ட்–சார்டினியா மற்றும் போப்பாண்டவரின் பகுதிகளில் தாராளக்கூறுகளைக் கொண்ட அரசியல்சாசனம் வழங்கப்பட்டது. புரட்சியால் உந்தப்பட்ட பியட்மாண்ட்–சார்டினியப் பகுதிகளின் மன்னரான சார்லஸ் ஆல்பர்ட் லம்பார்டி மற்றும் வெனிஷியா மீது படையெடுத்தார். எனினும், ரஷ்யப் படைகளின் உதவியைப் பெற்ற ஆஸ்திரியா அவரைத் தோற்கடித்தது. ஆஸ்திரியாவின் ஆக்கிரமிப்பில் இருந்து பியட்மாண்ட்–சார்டினியாவைக் காத்த சார்லஸ் ஆல்பர்ட் வீழ்ச்சிக்குரிய பழியைத் தான் ஏற்றுக்கொண்டு பட்டம் துறந்ததோடு தனது மகனான இரண்டாம் விக்டர் இம்மானுவேலை அரசராக்கினார். பியட்மாண்ட்–சார்டினியா தோல்வியை அடைந்ததுபோலப் பல குறு இராஜ்ஜியங்களில் எழுந்த கிளர்ச்சிகள் ஒடுக்கப்பட்டாலும், தாராளவாத கருத்துக்களும், தேசியவாதமும் தாக்குப்பிடித்து நின்றன.

மாஸினி, கவுன்ட் காமிலோ டி கவூர், க்யூசுப் கரிபால்டி ஆகிய மூவரும் இத்தாலிய ஒருங்கிணைவிற்கான முக்கிய ஆளுமைகள் ஆவர். கவூர் மூளையாகவும் மாஸினி ஆன்மாவாகவும் கரிபால்டி வாட்படையாகவும் நின்று இத்தாலியை ஒருங்கிணைத்தார்கள் என்றே கருதப்படுகிறது. .

மாஸினி (1805–1872)

க்யூசுப் மாஸினி இத்தாலிய ஒருங்கிணைவிற்கு அடித்தளமிட்டார். ஜெனோவாவில் ஒரு வசதியான குடும்பத்தில் பிறந்த அவர் சட்டம் பயின்று பட்டம் பெற்றார். இளம் வயதிலேயே அரசியலின்பால் ஈர்க்கப்பட்ட அவர் இத்தாலி தேசத்தின் விடுதலையை வலியுறுத்தினார். கார்பொனாரியின் கலகச் செயல்பாடுகளில் தொடர்புகொண்டிருந்ததற்காக அவர் கைதுசெய்யப்பட்டார். காலப்போக்கில் திரைமறைவு செயல்பாடுகளிலிருந்துத் தம்மை விடுவித்துக்கொண்ட அவர் மன்னராட்சிக்கு எதிராக திறந்தவெளிப் பிரச்சாரத்தில் ஈடுபடுவதால் பயனுண்டு என்று நம்பலானார். பெரும் நாகரிகத்தின் எச்சமாக விளங்கிய இத்தாலியால் உலகின் பிறபகுதிகளுக்கு சீரிய தலைமைத்துவத்தை வழங்க முடியும் என்றும் அவர் நம்பினார். இளம் இத்தாலி இயக்கத்தை 1831இல் துவங்கிய அவரிடம் இத்தாலியை குடியரசாக்கும் குறிக்கோள் இருந்தது. இத்தாலிய ஒருங்கிணைவிற்காகப் பாடுபட்ட காரணத்திற்காக நாடு கடத்தப்பட்டிருந்த அவர், 1848ஆம் ஆண்டு வடக்கு இத்தாலியில் புரட்சி வெடித்த சூழலைப் பயன்படுத்தி ரோமிற்கு திரும்பினார். போப்பாண்டவர் வெளியேற்றப்பட்டு குடியரசு பிரகடனப்படுத்தப்பட்டபின் பொறுப்பேற்ற மூவரடங்கிய நிர்வாகக்குழுவில் மாஸினியும் பங்குபெற்றார். ஆனால் 1848ஆம் ஆண்டின் புரட்சி தோல்வியுற்று பிரெஞ்சு நாட்டாரின் உதவியோடு போப்பாண்டவர் மீண்டும் ரோமில் அரியணையேறியபின், மாஸினி பிரச்சாரத்திலும் அடுத்தகட்ட திட்டங்களை வகுத்தலிலும் ஈடுபடலானார்.

மாஸினி

கவுன்ட் கவூர் (1810 – 1861)

இத்தாலிய தேசிய சிந்தனைகளால் உந்தப்பட்டவர்களில் கவுன்ட் கவூரும் ஒருவர். அவர் 1847இல் ஒரு செய்தித்தாளைப் பிரசுரித்தார். இல் ரிசார்ஜிமென்டோ (IL Risorgimento) என்ற அச்செய்தித்தாளின் பெயரே இத்தாலிய ஒருங்கிணைவு இயக்கத்தைக் குறிப்பிடும் சொல்லாடலாக உருவானது. கொள்கை மற்றும் இலக்கிய இயக்கங்களை உள்ளடக்கிய ரிசார்ஜிமென்டோ (இத்தாலிய உணர்வின் மீள் உயிர்ப்பு) இத்தாலிய மக்களிடையே தேசிய உணர்வு ஏற்றம்பெற உதவியது. கவூர் சார்டினியாவின் பிரதம அமைச்சராகப் பதவியேற்று இத்தாலியின் ஒருங்கிணைவிற்காக அரும்பாடுபட்டார். அவர் போரையும், இராஜதந்திரத்தையும் ஒருங்கே பயன்படுத்தி சார்டினியாவின் தலைமையில் இத்தாலிய ஒருங்கிணைவை ஏற்படுத்த முயன்றார். அயல்நாடுகளின் ஆதரவின்றி இத்தாலிய ஒருங்கிணைவு சாத்தியமில்லை என்பதை அவர் உணர்ந்தார். லம்பார்டியிலிருந்தும் வெனிஷியாவிலிருந்தும் ஆஸ்திரியாவை வெளியேற்ற பெரும்சக்திகளின் துணை அவருக்குத் தேவைப்பட்டது. அதனால் பியட்மாண்ட்–சார்டினியாவை கிரிமியப் போரில் பங்கெடுக்கவைத்து அதன் வாயிலாக உலகநாடுகளின் கவனத்தை ஈர்ப்பதோடு இங்கிலாந்து மற்றும் பிரான்ஸ் நாடுகளின்

கவுன்ட் கவூர்

12th_History_TM_Unit_12_V2.indd 210 20-12-2022 14:54:55

ஆதரவைப்பெற எண்ணினார். அவர் ஜூலை 1858இல் மூன்றாம் நெப்போலியனோடு ஏற்படுத்திய ஒப்பந்தத்தின்படி பிரான்ஸ் நாடு பியட்மாண்ட்–சார்டினியாவை ஆஸ்திரியாவிற்கு எதிராக ஆதரிப்பதென்றானது.

ஆஸ்திரியாவுடனான போர், 1859

ஆஸ்திரியாவின் எல்லையருகே படைகளைக் குவித்து அந்நாட்டைப் போரில் ஈடுபட கவூர் தூண்டினார். ஆஸ்திரியா படைகளை விலக்கிக்கொள்ள விதித்த காலக்கெடு முடிந்தபின்பும் கவூர் அசையாதிருந்தார். அதன் விளைவாக ஏப்ரல் 1859இல் ஆஸ்திரியா தனது தாக்குதலை பியட்மாண்ட்–சார்டினியா மீது தொடுத்தது. பிரான்சின் படைகளோடு இணைந்த பியட்மாண்ட்–சார்டினியப் படைகள் ஆஸ்திரியாவைத் தோற்கடித்தன. சால்ஃபெரினோ போரில் அவர்களடைந்த வெற்றி மிக முக்கியத்துவம் வாய்ந்ததாகும். ஆனால் போரைத் தொடர்ந்து நடத்தாமல் 1859 ஜூலை 11 அன்று வில்லா ஃபிராங்கா என்னும் இடத்தில் பிரான்சின் மூன்றாம் நெப்போலியன் ஆஸ்திரியப் பேரரசர் இரண்டாம் பிரான்சிஸ் ஜோசப்புடன் ஒரு அமைதி உடன்படிக்கையை ஏற்படுத்திக் கொண்டார். பிரான்சின் மாற்றத்தால் ஏமாற்றமடைந்த கவூர் தனது பதவியை இராஜினாமா செய்தார். பின்னர் பியட்மாண்ட்–சார்டினியாவும் ஆஸ்திரியாவும் 1859ஆம் ஆண்டு நவம்பரில் ஸூரிச் உடன்படிக்கையை ஏற்படுத்திக்கொண்டன. அதன்படி லம்பார்டியை விட்டுக்கொடுத்த ஆஸ்திரியா வெனிஷியாவை தன்னகப்படுத்திக் கொண்டது.

கவூர் மீண்டும் 1860இல் பிரதம அமைச்சராகப் பதவியேற்றார். பொதுவாக்கெடுப்பின் வாயிலாக பியட்மாண்ட்–சார்டினிய இராஜ்ஜியத்தோடு பார்மா, மொடினா, டஸ்கனி ஆகியவை இணைக்கப்பட்டன. அதுபோலவே பொதுவாக்கெடுப்பின் மூலமாக சவாய், நைஸ் பகுதிகள் பிரான்ஸ் நாட்டின் கட்டுப்பாட்டுக்குள் சென்றன.

கரிபால்டியும் தெற்கு இத்தாலியப் படையெடுப்பும்

கரிபால்டி

க்யூசுப் கரிபால்டி (1807–1882) கொரில்லா போர்முறை உத்தியைக் கைக்கொண்டு இத்தாலியின் ஒருங்கிணைவில் முக்கியப் பங்காற்றினார். மாஸினியின் இளம் இத்தாலி இயக்கத்தில் சேர்ந்த அவர் அதன் கருத்துக்களால் உத்வேகம் அடைந்தார். மாஸினி பியட்மாண்டில் நடத்திய கலகத்தில் கலந்துகொண்ட அவர், அதன்பின் தென்அமெரிக்காவில் அடைக்கலமானார். அங்கே இருந்த போராளிகளோடு இணைந்து ரியோ கிராண்ட் பகுதியையும், உருகுவே பகுதியையும் அர்ஜென்டினாவின் ஆக்கிரமிப்பிலிருந்து மீட்கப் பாடுபட்டார். அதனால் அவர் 'இரு உலகங்களின் நாயகன்' என்று அழைக்கப்படுகிறார். மேலும் அவர் 1843ஆம் ஆண்டு 'இத்தாலியப் படையணி' (Italian Legion) என்ற அமைப்பைத் துவங்கினார். தன்னார்வத் தொண்டர்களை உள்ளடக்கிய இப்படையமைப்பு 'செஞ்சட்டையினர்' என்றும் அழைக்கப்படலானது.

கரிபால்டி முடியாட்சிக்கு எதிராகப் போராடிக்கொண்டிருந்த சிசிலிய மக்களின் அழைப்பை ஏற்றார். அவர் 1000 தன்னார்வலர்களோடு ஜெனோவா துறைமுகத்திலிருந்து கிளம்பி சிசிலியை சென்று சேர்ந்தார். சிசிலியின் கடற்கரையில் இரகசியமாகக் கால்பதித்த அவர்கள் தங்கள் வசமிருந்த உயிர்களுக்குச் சேதமேற்படாமல் 20000 படைவீரர்களைக் கொண்ட நேப்பிள்சின் ஒரு பெரும் படைப்பிரிவைத் தோற்கடித்தனர். அதன்பின் நேப்பிள்சை ஊடுருவி உள்ளூர் மக்களின் ஆதரவோடு அரசப்படைகளைத் தோற்கடித்தனர். எனினும், கரிபால்டியின் வெற்றிப்பயணத்தின் நோக்கத்தை சந்தேகித்த கவூர் பியட்மாண்டின் படைகளையனுப்பி அவர் ரோமை தாக்கிவிடாமல் தடுத்தார். தனது படையெடுப்பின் வெற்றியை மன்னர் இரண்டாம் விக்டர் இம்மானுவேலிடம் சமர்ப்பித்த கரிபால்டி தனது எஞ்சிய வாழ்வை அவரது சொந்த மண்ணான காப்ரிரா (Caprera) தீவில் செலவிட முடிவெடுத்துப் பின்வாங்கினார்.

சிசிலி, நேப்பிள்ஸ், மற்றும் போப்பாண்டவரின் பகுதிகளில் பொதுவாக்கெடுப்பு நடத்தப்பட்டு அவை பியட்மாண்ட்–சார்டினியாவோடு இணைக்கப்பட்டன. போரின் முடிவில் ஆஸ்திரிய நாடு வெனிஷியா மீதும் போப்பாண்டவர் ரோம் மீதும் கட்டுப்பாட்டை நிறுவினர். இத்தாலியின் எஞ்சிய பகுதிகள் பியட்மாண்டோடு ஒருங்கிணைக்கப்பட்டன. பாராளுமன்றம் மே 1861இல் மன்னர் இரண்டாம் விக்டர் இம்மானுவேலை இத்தாலியின் ஆட்சியாளராகப் பிரகடனப்படுத்தியது. 1866இல் நடைபெற்ற ஆஸ்திரியப்–பிரஷ்யப் போரில் பிரஷ்யாவோடு

அரசர் இரண்டாம் விக்டர் இம்மானுவேல்

12th_History_TM_Unit_12_V2.indd 211 20-12-2022 14:54:56

இத்தாலி இணைந்து செயல்பட்டமையால் அது வெனிஷியாவை பரிசாகப் பெற்றுக்கொண்டது. பிரெஞ்சுப் படைகள் 1871இல் நடந்த பிராங்கோ–பிரஷ்யப் போரில் பின்னடைவைச் சந்தித்து ரோமைவிட்டு அகன்றதால் அந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொண்ட இத்தாலி ரோமை இணைத்துக்கொண்டது. இவ்வாறாக இத்தாலிய இணைவு முழுமைபெற்றது.

ஜெர்மானிய இணைப்பு

J.G. ஃபிக்ட்

ஒரே மொழி என்ற அடிப்படையிலும் இன்னபிற பண்புகளின் பொதுப்பின்புலமிருந்தும் ஜெர்மானிய மக்கள் பல குறுந்தேசங்களாகவே தொடர்ந்து பிரிந்து வாழ்ந்து வந்தார்கள். அறிஞர் பெருமக்களான ஜோஹன் வான் ஹெர்டர் (1744 – 1803), பிரைட்ரிக் ஷெலிகெல் (1772 – 1829) போன்றோர் ஜெர்மானியர்களின் உன்னதமான கடந்தகாலத்தைச் சுட்டிக்காட்டி சிந்தனையளவில் ஒரு ஜெர்மானிய தேசத்தை வரையறுத்தார்கள். சாதாரண மக்களின் கலாச்சாரத்தின் படைப்பே நாகரிகமாக ஏற்றம் பெற்றதாகக் கருதிய ஹெர்டர் ஜெர்மானிய வாழ்வியலின் (Volkgeist) தனித்துவத்தை கருத்தியலாகப் படைத்தார். ஜெர்மானிய தேசத்தை நோக்கி J.G. ஃபிக்ட் (J.G. Fichte) ஒரு தொடர் சொற்பொழிவையாற்றினார். ஏனைய பல வாழ்வியல் தனித்துவத்தைக் காட்டிலும் ஜெர்மானிய வாழ்வியல் முறையின் தனித்துவம் மேன்மையானது என்ற கருத்தை அவர் பரப்பினார் இக்கருத்து ஜெர்மானியர்களிடையே தேசிய உணர்வைத் தூண்டவும் வளர்த்தெடுக்கவும் வழிவகை செய்தது.

நெப்போலியனின் காலத்திற்கு முந்தைய ஜெர்மனி 360 குறுநிலங்களாகப் பிரிந்துகிடந்தது. நெப்போலியன் ரைன் கூட்டாட்சியை (Confederation of Rhine) ஏற்படுத்தியதன் விளைவாக அவரையும் அறியாமல் ஜெர்மானிய தேசியஉணர்வு அழுத்தம்பெற காரணமாக விளங்கினார். அதுவே முதன்முறையாக ஜெர்மானிய உணர்வு ஏற்பட காரணமாக அமைந்தது. எனினும் வியன்னா காங்கிரஸ் 39 நாடுகளின் கூட்டமைப்பாக ஜெர்மனியை மாற்றி அதனை ஆஸ்திரியாவின் கட்டுப்பாட்டில் கொடுத்தது.

ஃபிக்ட் தனது சொற்பொழிவுகளை வழங்கிக்கொண்டிருந்த சமகாலத்தில் ஆஸ்திரியா ஜெர்மானிய கூட்டு நாடுகளில் பரந்துவிரிந்த பிரஷ்யாவின் பகுதிகளை ஆக்கிரமித்துக் கொண்டிருந்தது. அது பிரஷ்யாவிற்கு தங்கள் பழையகாலப் புகழினை மீட்டெடுக்க உதித்த உணர்விற்குப் புத்துயிர் அளித்தது. அதனால் அது தனது இராணுவத்தை மறுகட்டமைத்து பலப்படுத்தியது. பணிவழங்கலானது தகுதியை முன்னிறுத்தியதாக இருந்ததேயன்றி உயர்குடிபுகழின் பின்புலத்தைக் கொண்டதாக இருக்கவில்லை. தாராளமயத்தையும் நவீனத்துவத்தையும் இணைத்த தேசியவாதப்போக்கின் வேகம் பிரஷ்யாவில் உச்சம் பெற்றது.

பிரஷ்யா 1834இல் ஸோல்வரெய்ன் (Zollverein) என்ற சுங்க ஐக்கியத்தை (Customs Union) வெற்றிகரமாய் ஏற்படுத்தியது. ஆஸ்திரியாவின் கட்டுப்பாட்டில் இருந்த பகுதிகள் நீங்கலாக மற்ற ஜெர்மானிய பகுதிகள் 1840களில் இணையவும் அவையாவும் ஒரு பொதுப்பொருளாதார நிர்வாகத்தின் கீழ்வரவும் தகுந்தசூழல் உருவானது. 1848இல் மக்கள் கொடுத்த அழுத்தத்தால் தேர்தல் மூலம் தேர்ந்தெடுக்கப்படும் சட்டசபைமுறை அறிமுகப்படுத்தப்பட்டது. அதே ஆண்டு ஃப்ராங்க்பர்ட் அவை கூட்டப்பட்டது. இதில் தெரிந்தெடுக்கப்பட்ட பெரும்பான்மையான உறுப்பினர்கள் ஜெர்மானிய தேசத்தைக் கட்டியெழுப்ப முடியுமென்று நம்பிய தாராளவாதிகள் ஆவர். அவர்கள் ஜெர்மன் தேசத்தை உள்ளடக்கும் உந்துசக்தி எது என்ற கேள்வியில் மாறுபட்ட கருத்துக்களைக் கொண்டிருந்தார்கள். 'மாபெரும் ஜெர்மனி' (Great Germany) என்ற சிந்தனையை முன்வைத்த பிரதிநிதிகள் ஹங்கேரி நீக்கப்பட்ட ஆஸ்திரியாவையும் உள்ளடக்கி, அதிக எண்ணிக்கையில் ஜெர்மன்மொழி பேசுவோரின் ஒருங்கிணைந்த நாடாக்கி அதன் மன்னராக ஆஸ்திரிய அரசருக்கு முடிசூட்டவேண்டும் என்று நினைத்தார்கள். 'சிறிய ஜெர்மனி'யை (Little Germany) ஆதரித்தப் பிரதிநிதிகள் ஆஸ்திரியா முற்றிலுமாக ஒதுக்கப்பட்டுபிரஷ்யமன்னருக்குமுடிசூட்டவேண்டும் என்று நினைத்தார்கள். இறுதியாக ஆஸ்திரியா சட்டசபையில் பங்கெடுப்பதிலிருந்து பின்வாங்கியது. சட்டசபையில் அரசியல்சாசனம் இயற்றப்பட்டு அதன் நீட்சியாக சிறிய ஜெர்மனியைக் கோரியோர் பிரஷ்ய மன்னரான பிரெட்ரிக் வில்லியம்மை அரசியல்சாசன அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்பட்ட மன்னராகப் பதவியேற்க அழைப்புவிடுத்தனர். சட்டசபை வழங்கிய மன்னர் பதவி என்ற கருத்தாக்கத்தில் உடன்பாடு கொள்ளாத பிரஷ்ய மன்னர் அவ்வழைப்பை ஏற்க மறுத்துவிட்டார்.

12th_History_TM_Unit_12_V2.indd 212 20-12-2022 14:54:56

பிஸ்மார்க்

பிரஷ்யாவின் பிரதம அமைச்சர் பதவிவகித்த ஆட்டோ வான் பிஸ்மார்க் (Otto von Bismarck) பிரஷ்யாவின் தலைமையில் ஜெர்மானியப் பகுதிகள் ஒருங்கிணைக்கப்பட வேண்டுமென்ற நோக்கோடு அதனை வலுப்படுத்தினார். ஒருங்கிணைவை அடைவதற்கு அவர் 'இரத்தமும், இரும்பும்' என்ற வலுவான கொள்கையைக் கைக்கொண்டார். ஜெர்மானிய ஒருங்கிணைவை ஆஸ்திரியாவுடனும் பிரான்சுடனும் மோதாமல் அடைவது சாத்தியமில்லை என்று அவர் புரிந்துகொண்டிருந்தார். இராஜதந்திர நகர்வுகளின் வாயிலாக ஆஸ்திரியாவுடனும் பிரான்சுடனும் முரண்போக்கைக் கைக்கொள்ளலானார். ரஷ்யாவுடன் பேச்சுவார்த்தைகளைத் துவங்கிய அவர் பிரஷ்யாவிற்கும் ஆஸ்திரியாவிற்கும் இடையே போர்ஏற்பட்டால் அந்நாடு தலையிடாது என்பதை உறுதிசெய்து கொண்டார். அதன்பின் ஜெர்மானிய ஒருங்கிணைவை அடைய மூன்று போர்களை நடத்தும்படி ஆயிற்று.

பிஸ்மார்க் குறிப்பிட்டதாவது: வெறும் சொற்பொழிவுகளாலும், பெரும்பான்மையினரின் தீர்மானங்களினாலும் நெடுநாளைய பெரும் பிரச்சனைகளைத் தீர்த்துவிட முடியாது, மாறாக அது இரத்தத்தினாலும், இரும்பினாலுமே சாத்தியமாகும்.

ஷ்லெஸ்விக் – ஹால்ஸ்டின் சிக்கல்

ஷெல்ஸ்விக்கும், ஹோல்ஸ்டினும் டென்மார்க்கின் கட்டுப்பாட்டில் இருந்த இரு ஜெர்மானிய மாநிலங்களாகும். இவ்விரு பகுதிகளையும் (Duchies) 1863இல் டென்மார்க் மன்னர் தனது அரசுடன் இணைத்தார். பிஸ்மார்க் ஆஸ்திரியாவுடன் சேர்ந்து ஒரு கூட்டு நடவடிக்கையை மேற்கொண்டு டென்மார்க்கை எதிர்க்க முன்மொழிந்தார். அதன்படி 1864இல் ஆஸ்திரியா, பிரஷ்யாவின் கூட்டுப்படைகள் டென்மார்க்கைப் போரில் தோற்கடித்தன. வியன்னா உடன்படிக்கையின் கீழ், டென்மார்க் அவ்விரு பகுதிகளையும் பிரஷ்யா–ஆஸ்திரியாவிடம் ஒப்படைத்தது. ஆனால் ஷெல்ஸ்விக், ஹால்ஸ்டின் பகுதிகளின் எதிர்காலம் பற்றிய கேள்வி பெரும் சர்ச்சையைக் கிளப்பியது. ஆஸ்திரியா அவற்றை ஜெர்மானிய கூட்டமைப்போடு இணைக்க விழைந்தபோது, பிரஷ்யா அவற்றை தனியான நிர்வாகத்தின்கீழ் கொண்டுசெல்ல நினைத்தது. பின்னர் 1865இல் நடத்தப்பட்ட காஸ்டெய்ன் மாநாட்டின் வழிகாட்டுதலின்படி ஹால்ஸ்டின் ஆஸ்திரியாவின் கட்டுப்பாட்டில் வைக்கப்படுவதென்றும் ஷெல்ஸ்விக்கை பிரஷ்யாவிடம் ஒப்படைப்பதென்றும் ஆனது. அதிகமான ஜெர்மானிய மக்கள்தொகையைக் கொண்டிருந்த ஹால்ஸ்டின் பிரஷ்யாவின் நிலவமைப்புக்குள்ளும் சிக்கியிருந்ததால் ஆஸ்திரியா ஹோல்ஸ்டினை நிர்வகிப்பதில் சிரமங்களை எதிர்கொண்டது. இச்சிக்கலை ஆஸ்திரியா ஜெர்மானியக் கூட்டமைப்பின் மையமான டயட்டில் முறையிட முடிவெடுத்தபோது அது காஸ்டெய்ன் மாநாட்டின் சரத்துக்களை மீறுவதானது. இறுதியில் பிரஷ்யப் படைகளை ஹோல்ஸ்டினுக்கு அனுப்பிய பிஸ்மார்க் அதனை முற்றுகையிடப் பணித்தார்,

ஆஸ்திரிய–பிரஷ்யப் போர், 1866

ஆஸ்திரிய–பிரஷ்யப் போர்

தனது இராஜதந்திர செயல்பாடுகளின் வாயிலாக பிரான்ஸ் மற்றும் ரஷ்யாவின் நடுநிலையை பிஸ்மார்க் உறுதி செய்துகொண்டார். பின்னர் ஆஸ்திரியாவை வெனிஷியப் பகுதியைவிட்டு அப்புறப்படுத்த விரும்பிய அவர் பியட்மாண்ட்–சார்டினியாவின் ஆதரவைப் பெற்றார். பெரும் சக்திகள் எதுவும் ஆஸ்திரியாவிற்கு ஆதரவளிக்காது என்பதனை உறுதி செய்துகொண்ட பிஸ்மார்க் பிரஷ்யாவை தாக்க ஆஸ்திரியாவைத் தூண்டும் செயல்களில் ஈடுபட்டார். இவ்வாறு நடந்த ஆஸ்திரிய–பிரஷ்யப் போர் 'ஏழு வாரப் போர்' என்றும் குறிப்பிடப்படுகிறது. பிரஷ்யா ஆஸ்திரியாவை பொஹிமியாவிலுள்ள சடோவா அல்லது கொனிக்ராட்ஸ் போரில் தோற்கடித்தது. பிரஷ்யப் படைகள் ஆஸ்திரியாவிற்குள் நுழைந்து வியன்னாவை வீழ்த்த எத்தனித்தபோது பிஸ்மார்க் அதனை எதிர்த்தார். பிரேக் உடன்படிக்கை மூலம் போருக்கு முடிவுகாணப்பட்டது. ஆஸ்திரியா ஜெர்மானியக் கூட்டமைப்பிலிருந்து விலகியது. வடக்கில் அமையப்பெற்றிருந்த நாடுகள் யாவும் பிரஷ்யாவின் தலைமையில் வடக்கு ஜெர்மானியக்

12th_History_TM_Unit_12_V2.indd 213 20-12-2022 14:54:56

கூட்டமைப்பை ஏற்படுத்திக்கொண்டன. தோல்வியடைந்தாலும், பிரஷ்யாவை ஆதரித்தமைக்காக இத்தாலிக்கு வெனிஷியா பரிசாக அளிக்கப்பட்டது. இவ்வாறான வடக்கு ஜெர்மானிய கூட்டமைப்பில் மெய்ன் நதியின் வடக்கே வீற்றிருந்த 22 மாநிலங்கள் உள்ளடக்கப்பட்டிருந்தன. ஒரு புதிய அரசியல் சாசனம் 1867 ஜூலை 1இல் செயல்பாட்டிற்கு வந்தது. பிஸ்மார்க் தன் திட்டத்திற்கு ஈர்க்கும் முகமாக வடக்கு ஜெர்மானிய கூட்டமைப்பிற்கு தெற்கே இருந்த மாநிலங்களோடு நட்பு பாராட்டினார்.

பிராங்கோ-பிரஷ்யப் போர், 1870-71

பிஸ்மார்க் தெற்கு ஜெர்மானிய மாகாணங்களை ஒன்றிணைக்கும் பொருட்டு பிரஷ்யாவிற்கும், பிரான்சிற்குமிடையே பிளவை ஏற்படுத்த தனது கவனத்தைச் செலுத்தினார். அதற்கான வாய்ப்பு ஸ்பானிய அரசுரிமை வாரிசுப் பிரச்சனை தோன்றியபோது ஏற்பட்டது. ஸ்பெயினில் ஏற்பட்ட ஒரு புரட்சிக்குப்பின் இராணி இஸபெல்லா வெளியேற்றப்பட்டு பிரஷ்ய மன்னரின் உறவினரான இளவரசர் லியோபால்டிற்கு அரியணை வழங்கப்பட்டது. இந்நகர்வால் பிரான்ஸ் கொந்தளித்தது. போர்ச்சூழல் உருவானபோது இளவரசர் லியோபால்ட் அரியணையை ஏற்கமறுத்தார். இதனால் பிஸ்மார்க் ஏமாற்றமடைந்தார்.

பிராங்கோ-பிரஷ்யப் போர்

மற்றொரு வாய்ப்பு பிரெஞ்சு வெளியுறவுத்துறை அமைச்சரான கிரமான்ட் பிரஷ்ய மன்னரை எம்ஸ் நகரில் சந்தித்த சந்தர்ப்பத்தில் உருவானது. அமைச்சர் பிரஷ்யாவை ஸ்பானிய அரியணைக்கு எப்போதும் உரிமைகோராது என்ற வாக்குறுதியை ஏற்குமாறு பணித்தார். இது குறித்து பிரஷ்ய மன்னர்

12th_History_TM_Unit_12_V2.indd 214 20-12-2022 14:54:57

பிஸ்மார்கிற்கு தந்தி அனுப்பினார். அதை பிரெஞ்சுக்காரர்கள் தங்கள் அமைச்சர் சிறுமைப்படுத்தப்பட்டார் என்று கருதவும், பிரஷ்யர்கள் தங்கள் மன்னர் மதிக்கப்படவில்லை என்று நினைக்கவும் தக்கபடி பிஸ்மார்க் மாற்றியமைத்தார். இதனால் எம்ஸ் தந்தி பிராங்கோ பிரஷ்யப் போர் தோன்ற வழிவகுத்தது.

மூன்றாம் நெப்போலியன்

பிரான்ஸ் நாடானது பிரஷ்யா மீது போர்ப்பிரகடனம் செய்தது. செடானில் நடந்த போரில் (1870 செப்டம்பர் 2) பிரான்ஸ் தோல்வியடைந்தது. பிரெஞ்சு மன்னரான மூன்றாம் நெப்போலியன் சரணடைந்தார். எனினும், பிஸ்மார்க் பாரிஸ் வரை சென்று அதைக் கைப்பற்றினார். போர் 1871இல் ஏற்படுத்தப்பட்ட பிராங்க்பர்ட் உடன்படிக்கையின் வாயிலாக முடிவிற்குக் கொண்டுவரப்பட்டது. பிஸ்மார்க் கடுமையான பல சரத்துகளை பிரான்சின் மீது திணித்தார். அல்சேஸ் – லொரைன் பகுதிகளை விட்டுக்கொடுக்க நேர்ந்த பிரான்ஸ் பெருந்தொகையைப் போர் இழப்பீடாகவும் கொடுக்கும்படி ஆயிற்று. வெர்செய்ல்ஸ் அரண்மனையில் பிரஷ்ய மன்னர் முதலாம் வில்லியம் வடக்கு ஜெர்மானிய கூட்டமைப்பிற்கும், தெற்கத்திய ஜெர்மானிய மாகாணங்களுக்கும் மன்னராக அறிவிக்கப்பட்டார். இவ்வாறு இராஜதந்திர உத்திகளையும், போர் நடவடிக்கைகளையும் கொண்டு ஜெர்மானிய ஒருங்கிணைவு சாத்தியப்படுத்தப்பட்டது.

பிரான்சில் மூன்றாம் குடியரசு உருவாக்கம்

செடானில் நடந்த போருக்குப்பின் நெப்போலியன் கைது செய்யப்பட்டதன் தொடர்ச்சியாக பாரிஸ் நகரத்தின் குடியரசுவாதிகள் சிலரால்அவரதுஅரசு கவிழ்க்கப்பட்டது.புதியஅரசியல் சாசனத்தை உருவாக்கும் வரை நாட்டை ஆளும் பொறுப்பு தற்காலிக அரசிடம் விடப்பட்டது. தேசிய சட்டவரைவு மன்றத்திற்கான தேர்தல்கள் பிப்ரவரி 1871இல்நடத்தப்பட்டது.தேர்ந்தெடுக்கப்பட்டவர்களில் பெரும்பான்மையானோர் முடியாட்சியின் ஆதரவாளர்களாகத் திகழ்ந்தார்கள். இதனால் பிரெஞ்சு மக்கள் மன்னராட்சியை விரும்பினார்கள் என்று கொள்வதைவிட அவர்கள் அமைதியை நேசித்தார்கள் என்பதே சரியாகும். மன்னராட்சி ஆதரவாளர்களும் ஒத்த கருத்துடையவர்களாக விளங்கவில்லை என்பதால் நான்கு ஆண்டுகள் வீணடிக்கப்பட்டு எத்தகைய அரசு பதவியேற்க வேண்டும் என்ற கேள்விக்கு விடை தெரியாத நிலையே தொடர்ந்து கொண்டிருந்தது. இறுதியாக, ஜனவரி 1875இல் தேசியமன்றம் கூடி மக்களாட்சியை நிறுவுவதாக முடிவு செய்யப்பட்டது. இதுவே பிரான்சில் மூன்றாம் குடியரசு உருவாக வழிவகுத்தது.

பாரிஸ் கம்யூன், 1871

பெருந்தொகையைப் பெற எண்ணியும், அல்சேஸ் மற்றும் லொரைன் பகுதிகளைத் தனதாக்கிக்கொள்ள முடிவெடுத்தும் பிரஷ்யப் படைகள் பாரிஸ் நகரை முற்றுகையிட்டன. கடுமையான நெருக்கடியின்கீழ் பசிபட்டினியோடும், குளிருக்கு இதமூட்டக்கூடிய அடுப்பிற்கு விறகு கொண்டுவர முடியாமலும் பிரெஞ்சு மக்கள் ஐந்து மாதங்கள் வரை முற்றுகையைத் தாக்குப்பிடித்தார்கள். கடும் விலைவாசி ஏற்றத்தால் பணியாளர்களும், கைவினைஞர்களும் அவர்தம் குடும்பங்களும் மிகமோசமாகப் பாதிக்கப்பட்டார்கள். தேசியமன்றத்தில் பெரும்பான்மையாக மன்னராட்சி ஆதரவாளர்கள் வீற்றிருந்தமை பாரிஸ் நகர மக்கள் மனதைக் கசப்படையச்செய்தது. மேலும் தலைமைக்கு தையர்ஸ் என்ற 71 வயது மனிதரை நியமித்தமை குடியரசின்மீது மக்களை ஏமாற்றங் கொள்ளச் செய்தது. பாரிஸ் மீண்டும் ஆயுதமேந்தியது. முறையான இராணுவம் பிரஷ்யாவுடன் ஏற்பட்ட ஒப்பந்தத்தின்கீழ் கலைத்து விடப்பட்டமையால் பாரிசின் மக்களே ஆயுதமேந்தலானார்கள். தேசியப் பாதுகாவலர்கள் (National Guard) என்ற உழைக்கும் வர்க்கத்தின் சிறப்பான ஓர் அமைப்போடு இணைந்து அவர்கள் இராணுவ வீரர்களை சூழ்ந்து கொண்டார்கள். லெக்கோம்ட் என்ற பெயர்கொண்ட இராணுவத் தலைவர்களில் ஒருவர் கூட்டத்தை நோக்கிச் சுட மும்முறை உத்தரவிட்டார். ஆனால் உத்தரவை ஏற்காமல் வீரர்கள் அசையாது நின்றார்கள். கூட்டம் இராணுவவீரர்களை சகோதரர்களாகப் பாவித்து அவர்களின் துணையோடு லெக்கோம்டையும், அவரது

பாரிஸ் கம்யூன்

12th_History_TM_Unit_12_V2.indd 215 20-12-2022 14:54:57

அதிகாரிகளையும் கைது செய்தார்கள். அந்நாளில் தையர்சும், அவரது அரசும் தலைநகரைவிட்டு அகன்றார்கள். உலகின் மிகச்சிறந்த நகரங்களில் ஒன்று ஆயுதமேந்திய உழைப்பாளர்களின் வசம் இருந்தது.

அடுமனையில் (Bakery) இரவுப்பணியைத் தடைசெய்தும் தொழில் பட்டறைகளோ, தொழிற்சாலைகளோ உரிமையாளரால் மூடப்பட்டிருந்தால் அதனைத் தொழிலாளர்களைக் கொண்டு திறக்கவும் விதவைகளுக்கு ஓய்வூதியம் வழங்கவும் குழந்தைகளுக்குக் கட்டணமில்லாக் கல்வியைக் கொடுக்கவும் முற்றுகை காலத்தில் வாங்கப்பட்ட கடன்களை வசூலிக்கவிடாமல் தடுத்தும் கம்யூன் நடவடிக்கையில் இறங்கியது. இதற்கிடையே மக்களாட்சியின் அரசு கம்யூனை ஒடுக்க ஆயுதப்படையை முடுக்கியது. அது போர்க்கைதிகளை விடுவிக்க பிஸ்மார்க்கை வலியுறுத்தி வெற்றி கண்டது. வெர்செய்ல்ஸ் நகரில் விடுவிக்கப்பட்ட போர்க்கைதிகளோடு புதிதாக கிராமப்புறங்களில் இருந்து பணியமர்த்தப்பட்ட வீரர்களை இணைத்தார்கள். தேசியப் பாதுகாவலர் அமைப்பிலும், கம்யூனிலும் பிளாங்குவிஸ்டுகளும், பிரௌதனிஸ்டுகளுமே அதிக எண்ணிக்கையில் இருந்தார்கள். மார்க்சால் பாரிசின் நிகழ்வுகள்மீது தாக்கம் செலுத்தமுடியவில்லை. சிறிதுகாலத்தில் கம்யூன் தையர்ஸால் வீழ்த்தப்பட்டது. அதன்பின் கட்டுக்கடங்காத வன்முறை நிகழ்வுகள் அரங்கேறின. கம்யூனுக்காக முன்னின்றோர் யாவரும் விசாரணையில்லாமல் சுட்டுக் கொல்லப்பட்டார்கள். ரோந்துப்பணியில் ஈடுபட்ட படைகள் ஏழை மக்களை இரக்கமின்றி கொன்று குவித்தது. இவ்வன்முறைச் சம்பவங்களில் 20,000 முதல் 30,000 நபர்கள் வரை கொல்லப்பட்டிருக்கலாம் என்று கணிக்கப்படுகிறது. கம்யூனின் உறுப்பினர்களாக இருந்த 40,000 நபர்களில் 5,000 நபர்கள் நாடுகடத்தப்பட்டும், 5,000 நபர்கள் சிறையிலடைக்கப்பட்டும் தண்டிக்கப்பட்டார்கள்.

கம்யூனைப்பற்றிக் குறிப்பிடும் மார்க்ஸ் இவ்வாறு மொழிகிறார்: "அது முதலாளித்துவத்தின் புதிய உலகம் அதுவரை சந்தித்திராத பெரும் சவால்களை பிரதிநிதித்துவப்படுத்துவதோடு அதற்கு எதிராக உருவான வர்க்கத்திற்குப் பெரும் உந்துசக்தியாகவும் விளங்குகிறது.

நீண்டகால பெருமந்தம் (1873–1896)

உலகம் அதுவரை காணாத பொருளாதாரப் பாய்ச்சலை 1865 முதல் 1873 வரையிலான காலத்தில் கண்டது. ஜெர்மனியின் ஒருங்கிணைவு 1870 முதல் 1873 வரையிலான காலத்தில் பெரும் பொருளாதார ஏற்றத்திற்கு வழிவகுத்தது. இக்காலத்தில் 857 புது வர்த்தகநிறுவனங்கள் உருவாக்கப்பட்டன. ஜெர்மானிய வரலாற்றில் இணையற்ற வளர்ச்சியாக அது கருதப்பட்டது. இருப்புப்பாதைப் போக்குவரத்து 1865 முதல் 1875 வரையான காலத்திற்கிடையே ஏறக்குறைய இரட்டிப்பானது. பல்லாயிரம் ஜெர்மானியர்கள் தங்களின் தேசப்பற்றை வெளிக்காட்டவும், ஜெர்மானியப் பேரரசின் மீதுகொண்ட நம்பிக்கையைப் பறைசாற்றவும் முதன்முறையாகப் பங்குச்சந்தையில் முதலீடு செய்தனர்.

உள்நாட்டுப்போரின் முடிவில் அமெரிக்க ஐக்கிய நாடும் பெரிய வியாபார நிறுவனங்களின் எண்ணிக்கை அதிகரித்த வகையிலும், வேளாண்மையில் சிறப்பான வளர்ச்சியை ஏற்படுத்திய வகையிலும், தேசந்தழுவிய தொழிற்சங்கங்களின் தோற்றத்தாலும் பல பொருளாதார மாற்றங்களுக்கு உட்பட்டிருந்தது. அந்நாட்டில் 1870 முதல் 1900 வரையான காலத்தை போலியான பொருளாதார பகட்டுக் காலம் (Gilded Age) என்றே குறிப்பிடுகின்றனர். தொழில்மயத்தின் அதிவேகப் பரவலால் கூலியும் மெய்யாகவே அதிகரித்து 1860 முதல் 1890 வரையான காலத்திற்குள் 60 விழுக்காடு வளர்ச்சியைக் காட்டியது. ஓர் ஆண்டின் கூலி ஒரு தொழிலாளிக்கு (ஆண்கள், பெண்கள், குழந்தைகள் உட்பட்ட அனைவரையும் உள்ளடக்கியது) சராசரியாக $380 ஆக 1880இல் இருந்து $564 என்ற அளவிற்கு 1890இல் ஏறியிருந்தது. எனினும் போலியான பொருளாதார பகட்டுக் காலத்தில் லட்சக்கணக்கான ஏழை மக்கள் வறுமைசூழ்ந்த பகுதிகளிலிருந்து அமெரிக்க ஐக்கிய நாட்டிற்கு புலம்பெயர்ந்ததால் வறுமையும், ஏற்றதாழ்வும் அன்றாட சமூக வாழ்வின் அங்கமாகவே இருக்கத்தான் செய்தன. சிலரிடம் மட்டுமே அதிகமான செல்வங்கள் குவிந்துகிடப்பது வெளிப்படையாகவேத் தெரியவும் செய்தது.

அதன்பின் பெருமந்தம் ஏற்பட்டது. வியன்னா பங்குச்சந்தை மே, 1873இல் வீழ்ச்சியுற்றதே அதை சுட்டும்விதமாக அமைந்தது. இப்பெருமந்தம் உலகளாவிய ஒன்றாக இருந்து 1896 வரை தொடர்ந்தமையால் நீண்டகாலப் பெருமந்தம் என்று வர்ணிக்கப்படுகிறது. அது ஐரோப்பாவையும், அமெரிக்காவையும் மிகக்கடுமையாகப் பாதித்தது. அமெரிக்க இருப்புப்பாதை நிறுவனம் திவாலானது. ஜெர்மானியப் பங்குகளின் மதிப்பு 60 சதவிகிதம் வரை சரிந்தது. விலைகளின் வீழ்ச்சியால் விவசாயமும் பெரும் பாதிப்புக்குள்ளானது. பல்வேறு நாடுகளும் போட்டிச்சூழலைத் தவிர்க்கும் பொருட்டு இறக்குமதி செய்யப்படும் பொருட்கள் மீது பாதுகாப்புக் கட்டணங்களை விதித்தன.

12th_History_TM_Unit_12_V2.indd 216 20-12-2022 14:54:57

1873ஆம் ஆண்டைய பீதி

போலியான பொருளாதார பகட்டுக் காலமாகச் சொல்லப்படும் காலம் உழைக்கும் வர்க்கம் தீவிரமாக ஒன்று திரட்டப்பட்ட சகாப்தம் துவங்கிய காலமுமாகும். சோஷலிசமும், தொழிலாளர் இயக்கங்களும் பல நாடுகளில் பரந்துவிரிந்து ஏற்றம்பெறலாயின. தொழில் முதலாளித்துவம் (Industrial Capitalism) அமெரிக்க ஐக்கிய நாட்டில் உச்சத்திலிருந்த காலத்தில் சராசரியாக ஆண்டுக்கு 100,000 தொழிலாளர்கள் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டார்கள். உதாரணமாக 1892இல் 164,000 தொழிலாளர்கள் 1,298 வேலைநிறுத்தப் போராட்டங்களில் அந்நாடு முழுவதும் கலந்து கொண்டார்கள். தொழிலாளர்களின் ஊதியம், வேலை நேரம், பணிச்சூழல் போன்றவற்றை நெறிப்படுத்தித் தொழிலாளர் நலன்காக்கும் முனைப்போடு பல தொழிற்சங்கங்கள் தோன்றின.

தொழிற்சங்கங்களின் எழுச்சியோடு இசைந்து செல்லமுடியாத முதலாளிகள் தொழிலாளர்களுக்கெதிரான நடவடிக்கைகளில் ஈடுபட்டார்கள். சோஷலிசவாதிகள் துன்புறுத்தல்களுக்கு உள்ளானார்கள். கார்னேஜி எஃகு வர்த்தக நிறுவனத்திற்கு (Carnegie Steel Company) சொந்தமான ஹோம்ஸ்டெட் எஃகு பட்டறையில் (Homestead Steel Works) 1892இல் நடந்த போராட்டம் தொழிற்சங்கத்தில் உறுப்பினராக இருந்த தொழிலாளர்களுக்கும், கம்பெனியால் பணிக்கப்பட்ட நபர்களுக்கும் துப்பாக்கிச்சண்டை வரை போனது. அரசு வர்த்தக நிறுவனத்தை ஆதரித்ததால் எஃகு நிறுவனத் தொழிலாளர்கள் சரிவை எதிர்கொண்டார்கள். இதுபோலவே 1894இல் அமெரிக்க இருப்புப்பாதை தொழிற்சங்கம் பங்குபெற்ற புல்மேன் வேலைநிறுத்தப் போராட்டம் ஆயுதமேந்திய காவலரையும் நிறுவனத்தால் நியமிக்கப்பட்ட பிங்கர்டன் தனியார் உளவு நிறுவனத்தாரையும் கொண்டு நிர்வாகத்தால் ஒடுக்கப்பட்டது.



புல்மேன் வேலைநிறுத்தப் போராட்டம்

ஜெர்மனியில் சோஷலிச ஜனநாயக கட்சி (Socialist Democratic Party) மக்கள் செல்வாக்குடன் ஏற்றம் பெற்றுக் கொண்டிருந்தது. ஆனால் சோஷலிசத்தின் வளர்ச்சியைக் கட்டுப்படுத்தும் முகமாக பிஸ்மார்க் சோஷலிச–விரோத சட்டங்களை அறிமுகப்படுத்தினார். பிஸ்மார்க்கின் இச்சட்டங்களையும் கடந்து சோஷலிச கட்சி மக்களின் ஆதரவைப்பெற்று வளர்ச்சியடைந்தன. சோஷலிச தொழிற்சங்கங்களும், சோஷலிச ஜனநாயக கட்சியும் சோஷலிச–விரோத சட்டங்கள் 1890களுக்குப்பின் ரத்துசெய்யப்பட்டபோது தடையில்லாமல் செயலாற்ற முடிந்தது. ரெய்க்ஸ்டாகில் (Reichstag) 1887இல் 3 சதவிகிதமாக இருந்த சோஷலிச ஜனநாயக கட்சியின் இருப்பு 1903 வாக்கில் 20 சதவீதமாக முன்னேறியது.

மகளிர் தீப்பெட்டி தொழிலாளர் போராட்டம்

பிரிட்டனில் 1880ஆம் ஆண்டு, பிரையாண்ட் மற்றும் மே தீப்பெட்டி தொழிற்சாலைகளில் பெண்களாலும், பதின்பருவ சிறுமிகளாலும் நடத்தப்பட்டு புகழடைந்த 'மகளிர் தீப்பெட்டி தொழிலாளர்' போராட்டம் வெற்றியடைந்தது. லண்டனின் துறைமுகத்தில் 1889ஆம் ஆண்டு கப்பல் செப்பனிடும் பட்டறை (dockyard) தொழிலாளர் போராட்டம் வெடித்தது. கார்டினல் மேனிங் போராளிகளின் சார்பில் உரிமையாளர்களுடன் பேச்சுவார்த்தையில்

12th_History_TM_Unit_12_V2.indd 217 20-12-2022 14:54:57

ஈடுபட்டார். ஆனால் 1890களில், அமெரிக்க ஐக்கிய நாட்டைப் போன்றே, பிரிட்டிஷ் முதலாளிகள் தொழில்முறைப் போராட்ட ஒழிப்பாளர்களைக் கொண்டு புதிய சங்கங்களை ஒடுக்கியதோடு, தொழிலாளர்களைப் பட்டினியில் நசித்தும், தாமாக முன்வந்து தொழிற்சாலையை மூடியும் அவர்களை பீதியடைய வைத்திருந்தார்கள்.

பாடச் சுருக்கம்

- மக்களாட்சி கோரி தாராளவாதமும், தேசியவாதமும் கைகோர்த்தமையும், தொழிற்புரட்சி உழைப்பாளர் இயக்கங்களுக்கு ஏற்றமளித்ததும் சோஷலிசம் பரவ வழி ஏற்படுத்திக் கொடுத்தமையும் விளக்கப்பட்டுள்ளது.
- ஆரம்பகால சோஷலிசவாதிகள் மற்றும் மார்க்ஸ் போன்றோரின் பங்களிப்பு பற்றி விவரிக்கப்பட்டுள்ளது.
- இங்கிலாந்தின் மக்கள் உரிமை சாசன இயக்கம் பற்றியும் அது கவலை கொள்ளும் வகையில் தனது இலக்குகளை அடையாமல் முடிவை எட்டியதும் பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளது.
- மேற்கு ஐரோப்பாவில் 1830ஆம் மற்றும் 1848ஆம் ஆண்டுகளில்புரட்சிகள்தேசியவாதத்தைஎவ்வாறு தாராள சிந்தனையில் இருந்து பிரித்தெடுத்து முரட்டுப்பாதையில் கொண்டுசென்றது என்று அழுத்தமாகக் கூறப்பட்டுள்ளது.
- இத்தாலியிலும் ஜெர்மனியிலும் தேசியவாதம் ஏற்றமடைந்து அவை எவ்வாறு தனியரசுடைய நாடுகளாய் உருவாயின என்பது தெளிவுபடுத்தப்பட்டுள்ளது.
- முதலாளித்துவத்திற்குள் ஒளிந்திருந்த பலவீனங்கள் எவ்வாறு 1873 முதல் 1896 வரையான காலத்தில் நீண்ட பெருமந்தமாக வடிவம் கொண்டது என்பதும் தொழிலாளிகளின் போராட்ட உணர்வு எவ்வாறு இரக்கமின்றி முதலாளிகளால் அரசின் துணையோடு ஒடுக்கப்பட்டது என்பதும் பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளது.

பயிற்சி

D1600

I சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்.

1. நெப்போலியன் முதன்முறை நாடுகடத்தப்பட்டு சிறை வைக்கப்பட்ட இடம் ________ ஆகும்.
   (அ) எல்பா (ஆ) செயின்ட் ஹெலனா
   (இ) கார்சிகா (ஈ) வாட்டர்லூ

2. பிரிட்டிஷ், பெல்ஜிய மற்றும் பிரஷ்யக் கூட்டுப் படைகளால் நெப்போலியன் தோற்கடிக்கப்பட்ட வாட்டர்லூ அமையப்பெற்ற இடம் ________
   (அ) பிரான்ஸ் (ஆ) ஜெர்மனி
   (இ) பெல்ஜியம் (ஈ) இத்தாலி

3. **கூற்று:** கற்பனைவாத சோஷலிஸ்டுகள் உற்பத்திக் கருவிகளைப் பொதுவில் கொண்ட மாதிரி சமூகங்களைப் பரிந்துரைத்தனர்.
   காரணம்: அவர்கள் வறுமையும், வேலையில்லா திண்டாட்டமும் ஒழிந்த சோஷலிச சமூகத்தை வளர்த்தெடுக்கும் தொலைநோக்குப் பார்வையைக் கொண்டிருந்தனர்.
   (அ) கூற்றும் காரணமும் சரி. காரணம் கூற்றை விளக்குகிறது.
   (ஆ) கூற்றும் காரணமும் சரி. ஆனால் காரணம் கூற்றை விளக்கவில்லை.
   (இ) கூற்று சரி. காரணம் தவறு.
   (ஈ) கூற்று தவறு. காரணம் சரி.

4. இங்கிலாந்தில் தொழிற்சங்கங்களுக்கு சட்ட அங்கீகாரம் வழங்கப்பட்ட ஆண்டு ________ .
   (அ) 1815 (ஆ) 1822 (இ) 1824 (ஈ) 1827

5. கீழே கொடுக்கப்பட்டுள்ள குறியீடுகளில் சரியானவற்றை தெரிவு செய்துப் பொருத்துக
   (அ) புதிய கிறித்தவம் 1) வில்லியம் லவெட்
   (ஆ) 'சமூகத்தின் ஓர் புதிய பார்வை' 2) லூயி பிளாங்க்
   (இ) ரெவ்யூ டு ப்ராக்ரஸ் 3) செயின்ட் சைமன்
   (ஈ) மக்களின் பட்டயம் 4) இராபர்ட் ஓவன்
   (அ) 2, 3, 4, 1 (ஆ) 3, 4, 2, 1
   (இ) 1, 4, 3, 2 (ஈ) 3, 1, 2, 4

6. மார்க்சும், ஏங்கல்சும் தங்களின் கம்யூனிஸ்ட் மேனிபெஸ்டோ என்ற நூலை ________ ஆண்டில் வெளியிட்டனர்.
   (அ) 1842 (ஆ) 1848 (இ) 1867 (ஈ) 1871

7. **கூற்று:** மக்கள் உரிமை சாசன இயக்கம் ஒரு கலவரமோ, புரட்சியோ அல்ல.
   காரணம்: அது தொழிலாளர் வர்க்கத்தின் கட்டுப்படுத்தப்பட்ட இயக்கமாகும்.
   (அ) கூற்றும், காரணமும் சரி. காரணம் கூற்றை விளக்குகிறது.
   (ஆ) கூற்றும், காரணமும் சரி. ஆனால் காரணம் கூற்றை விளக்கவில்லை.
   (இ) கூற்று சரி. காரணம் தவறு.
   (ஈ) கூற்று தவறு. காரணம் சரி.

12th_History_TM_Unit_12_V2.indd 218 20-12-2022 14:54:58

8. சாசனத்துவவாதிகளின் முக்கியத்துவம் பெற்ற செய்தித்தாள் _______ ஆகும்.
(அ) ஏழை மனிதனின் பாதுகாவலன்
(ஆ) பட்டயம்
(இ) வடக்கத்திய நட்சத்திரம்
(ஈ) இல் ரிசார்ஜிமென்டோ

9. நெப்போலியன் போனபார்ட்டின் மருமகனான லூயி நெப்போலியன் சூடிக் கொண்ட பட்டம் _______ என்பதாகும்.
(அ) இரண்டாம் நெப்போலியன்
(ஆ) மூன்றாம் நெப்போலியன்
(இ) ஆர்லியன்ஸின் கோமகன்
(ஈ) நான்காம் நெப்போலியன்

10. கோட் டெ லா நேச்சர் என்ற நூலின் ஆசிரியர் _______ ஆவார்.
(அ) சார்லஸ் ஃபூரியர்
(ஆ) எட்டியன்–கேப்ரியல் மோராலி
(இ) செயின்ட் சைமன்
(ஈ) பகுனின்

11. **கூற்று:** தேசியவாதத்திற்கு 1848ஆம் ஆண்டு தனித்துவமான வெற்றிகள் கிடைத்த ஆண்டாகும்.
காரணம்: சர்வாதிகாரம் மறைந்தது போன்ற பிம்பம் சிறிது காலத்திற்குத் தோன்றியது.
(அ) கூற்றும், காரணமும் சரி. காரணம் கூற்றை விளக்குகிறது.
(ஆ) கூற்றும், காரணமும் சரி. ஆனால் காரணம் கூற்றை விளக்கவில்லை.
(இ) கூற்று சரி. காரணம் தவறு.
(ஈ) கூற்று தவறு. காரணம் சரி.

12. இரண்டாம் பன்னாட்டு அமைப்பு _______ நகரில் துவக்கப்பட்டது.
(அ) பாரிஸ் (ஆ) பெர்லின்
(இ) லண்டன் (ஈ) ரோம்

13. இளம் இத்தாலி இயக்கம் _______ ஆண்டு துவக்கப்பட்டது.
(அ) 1822 (ஆ) 1827 (இ) 1831 (ஈ) 1846

14. பார்மா, மொடினா, டஸ்கனி ஆகிய பகுதிகள் _______ க்குப் பிறகு பியட்மாண்ட்–சார்டினியா இராஜ்ஜியத்தோடு இணைக்கப்பட்டது.
(அ) பொதுவாக்கெடுப்பு
(ஆ) சார்லஸ் ஆல்பர்டின் படையெடுப்பு
(இ) சால்ஃபரினோ உடன்படிக்கை
(ஈ) வில்லா ஃப்ராங்கா உடன்படிக்கை

15. "இரு உலகங்களின் நாயகன்" என கொண்டாடப்பட்டவர் _______ ஆவார்.
(அ) சார்லஸ் ஆல்பிரட்
(ஆ) பிஸ்மார்க்
(இ) மூன்றாம் நெப்போலியன்
(ஈ) கரிபால்டி

16. _______ இடையே ஏழு வாரப் போர் நடந்தது.
(அ) டென்மார்க், பிரஷ்யா
(ஆ) பியட்மாண்ட்–சார்டினியா, ஆஸ்திரியா
(இ) பிரான்ஸ், பிரஷ்யா
(ஈ) ஆஸ்திரியா, பிரஷ்யா

17. பிராங்கோ–பிரஷ்யப் போர் உருவாகக் காரணமாக விளங்கியது _______ ஆகும்
(அ) காஸ்டெய்ன் மாநாடு
(ஆ) எம்ஸ் தந்தி
(இ) பிரேக் உடன்படிக்கை
(ஈ) அல்சேஸ், லொரைன் பகுதிகளைக் கட்டுப்படுத்துவதில் எழுந்த சர்ச்சை

18. ஜெர்மன் தேசத்திற்கு தொடர் சொற்பொழிவுகளை வழங்கியவர் _______ ஆவார்.
(அ) ஜோஹன் வான் ஹெர்டர்
(ஆ) பிரைட்ரிக் ஷெலிகெல்
(இ) J.G. ஃபிக்ட்
(ஈ) ஆட்டோ வான் பிஸ்மார்க்

19. **கூற்று:** J.G. ஃபிக்ட் ஜெர்மானியர்களிடையே தேசியவாதத்தை ஊட்டினார்.
காரணம்: ஃபிக்ட் இளம் இத்தாலி இயக்கத்தை சேர்ந்தவர் ஆவார்.
(அ) கூற்றும் காரணமும் சரி. காரணம் கூற்றை விளக்குகிறது.
(ஆ) கூற்றும் காரணமும் சரி. ஆனால் காரணம் கூற்றை விளக்கவில்லை.
(இ) கூற்று சரி. காரணம் தவறு.
(ஈ) கூற்று தவறு. காரணம் சரி.

20. கீழே கொடுக்கப்பட்டுள்ள குறியீடுகளில் சரியானவற்றைத் தெரிவுசெய்து பொருத்துக

(அ) மெட்டர்னிக்	1) பியட்மாண்ட்–சார்டினியாவின் ஆட்சியாளர்
(ஆ) பத்தாம் சார்லஸ்	2) பிரெஞ்சு வெளியுறவுத்துறை அமைச்சர்
(இ) கிரமான்ட்	3) பிரெஞ்சு மன்னர்
(ஈ) சார்லஸ் ஆல்பர்ட்	4) ஆஸ்திரிய–ஹங்கேரியின் பிரதம அமைச்சர்

(அ) 1, 3, 4, 2 (ஆ) 4, 2, 1, 3 (இ) 4, 1, 2, 3 (ஈ) 4, 3, 2, 1

12th_History_TM_Unit_12_V2.indd 219 20-12-2022 14:54:58

II. குறுகிய விடையளிக்கவும்.

1. எதனால் 1848ஆம் ஆண்டின் ஜூன் 24 முதல் 26 வரையான காலம் 'இரத்தந்தோய்ந்த ஜூன் தினங்கள்' எனக் கொள்ளப்படுகின்றன?
2. மெட்டர்னிக் சகாப்தத்தில் ஐரோப்பியக் கூட்டிணைவு (Concert of Europe) எத்தகைய பங்காற்றியது என்பதனை விளக்குக.
3. இத்தாலியை மெட்டர்னிக் "வெறும் பூகோள வெளிப்பாடே" என ஏன் கூறினார்?
4. இரவலர் சட்டங்கள் பற்றி விவரமாக எழுதுக.
5. 1864இல் துவங்கப்பட்ட முதல் பன்னாட்டு உழைக்கும் ஆண்களின் சங்கம் ஆற்றிய பங்கை விளக்குக.
6. கார்பொனாரி இத்தாலிய ஐக்கியத்திற்கு செய்த தொண்டுகளை முன்வைத்து குறிப்பு வரைக.
7. ஃபிராங்கோய்ஸ் பபேஃப் என்பவர் யார்?
8. ஸோல்வரெய்ன் (Zollverein) எனப்படுவதன் முக்கியத்துவம் யாது?
9. போலியான பொருளாதார பகட்டுக் காலம் பற்றி நீவீர் அறிவதை கூறுக.
10. அமெரிக்கப் பொருளாதார வரலாற்றில் 1873ஆம் ஆண்டின் முக்கியத்துவம் யாது?

III சுருக்கமாக விடையளிக்கவும்.

1. பிரான்ஸ் தும்மினால், ஐரோப்பாவிற்கு ஜலதோஷம் – தெளிவுபடுத்துக.
2. "சோஷலிச கருத்துக்கள் உருப்பெற தொழில்புரட்சியே முகாந்திரம் அமைத்தது" – ஆதாரப் பின்புலத்தோடு உறுதிப்படுத்துக.
3. தனது தொழிற்சாலையில் பணியிலிருந்த ஊழியர்களின் முன்னேற்றத்திற்கு இராபர்ட் ஓவன் மேற்கொண்ட முன்னோடி தன்மையிலான நடவடிக்கைகளை மதிப்பிடுக.
4. பிரான்சில் 1830இல் நடந்த ஜூலை புரட்சி ஐரோப்பாவின் பிற பகுதிகளை எவ்வாறெல்லாம் பாதித்ததென்பதை எடுத்தெழுதுக.
5. பாரிஸ் கம்யூனை நோக்கி வழிநடத்திச்சென்ற சம்பவங்களின் அடிச்சுவட்டை ஆராய்க.
6. ஏழை மக்களும் உழைக்கும் வர்க்கமும் ஏற்றம்பெற பாரிஸ் கம்யூன் எடுத்த நடவடிக்கைகளை விவாதத்திற்கு உட்படுத்துக.
7. பிரிட்டனிலும், அமெரிக்காவிலும் நீண்டகால பெருமந்த காலத்தில் உருவான தொழிலாளர் வர்க்கப் போராட்டங்கள் பற்றி குறிப்பு வரைக.

IV. விரிவான விடையளிக்கவும்.

1. பத்தொன்பதாம் நூற்றாண்டின் முக்கியத்துவம் பெற்ற கூட்டு சிந்தனையாளர்களை (Collectivist Thinkers) அடையாளப்படுத்தி அவர்கள் சோஷலிச சிந்தனையை செழுமையாக்க ஆற்றிய பங்கைக் கூறுக.
2. 1848ஆம் ஆண்டில் நடந்த பிரெஞ்சுப் புரட்சி ஐரோப்பாவின் பிற பகுதிகளில் அரசியல் தோல்விகளை ஏற்படுத்தியமை குறித்து விவாதித்து எழுதுக.
3. இத்தாலிய இணைவு எவ்வாறு சாத்தியமாக்கப்பட்டது?
4. ஒருங்கிணைந்த ஜெர்மனியின் உண்மையான வடிவமைப்பாளர் பிஸ்மார்க்கே என ஏன் சொல்லப்படுகிறது?

V. செயல்பாடுகள்.

1. ஐரோப்பாவில் நெப்போலியன் போனபார்ட் நடத்திய முக்கியமான போர்கள் பற்றிய தகவல்களை மாணவர்கள் சேகரிக்கலாம்.
2. 1830ஆம் ஆண்டின் ஜூலைப் புரட்சியையும் 1848ஆம் ஆண்டின் பிப்ரவரி புரட்சியையும் ஒப்பிடலாம்.
3. தேசியவாத எதிர்ப்பையும் புரட்சி–விரோதப் போக்கையும் கருத்தாக்கமாகக் கொண்டிருந்த மெட்டர்னிக் மூன்று தசாப்தங்களுக்கு மேலாக எவ்வாறு ஐரோப்பாவில் செல்வாக்கு மிக்கவராகத் திகழ்ந்தார் என்பதனை அலசலாம்.
4. அமெரிக்க ஐக்கிய நாடு அதிவேகப் பொருளாதார வளர்ச்சியைக் காட்டிய போலியான பொருளாதார பகட்டுக் காலத்தின்போது ஏன் அந்நாட்டில் பல மக்கள் வறுமைநிலையிலேயே வாழ்ந்தார்கள் என்பதைக் கண்டுபிடிக்க முனையலாம்.

மேற்கோள் நூல்கள்

- Edwards Mcnall Burns, ed., *World Civilizations: Their History and their Culture*, vol. II, W.W. Norton & Co., New York, 1991.
- Albert S.Lindemann, *A History of Modern Europe: From 1815 to the Present*, Wiley-Balckwell, West Sussex, UK, 2013.
- B.V. Rao, *History of Modern Europe, A.D. 1789-2013*, Sterling Publishers, New Delhi, 2014.
- Chris Harman, *A People's History of the World, Orient Longman*, 2007.
- *Encyclopaedia Britannica*

12th_History_TM_Unit_12_V2.indd 220 20-12-2022 14:54:58

A-Z கலைச்சொற்கள்

குழப்பம், கலவரம்	**turmoil**	confusion, disorder, unrest
சகோதரத்துவம்	**fraternity**	brotherhood
வளர்த்தல்	**foster**	nurture, grow, bring up
நாடு கடத்து; நாடு கடத்தல்	**exile**	deport or expel from a country
எதேச்சதிகாரமாக, சர்வாதிகாரமாக	**despotically**	in a harsh and oppressive manner
வசிப்பிடம்	**tenement**	dwelling, residence
மிகவும் வெறுக்கத்தக்க	**abominably**	in an offensive and hateful manner
அடக்கி வைக்கப்படாத, தடையற்ற	**unbridled**	not controlled
கொள்கையில்லாத, பழிபாவங்களுக்கு அஞ்சாத	**unscrupulous**	without principles
இயற்கைமுறை அரசாட்சி வேண்டுமென்பவர்	**physiocrat**	one who believes that the inherent natural order governing society is based on land.
கண்டனம் தெரிவி, நிராகரி	**denounce**	reject, condemn
கற்பனையுலகு	**utopia**	ideally perfect state, an imaginary place considered to be perfect
சமயக்கொள்கை, அரசியல் கோட்பாடு	**dogma**	a belief especially political or religious one.
எதிர்நோக்கு	**envisage**	predict or foresee
மாற்று, விருப்பேற்பு	**recourse**	choice, alternative
முரண்பாடு, குரோதம்	**antagonism**	hostility
முன்னறிவித்தல், தீர்க்கதரிசனம்	**prophesy**	prediction, forecast
வாக்குரிமை	**suffrage**	right to vote, franchise
அச்சுறுத்தல், மிரட்டல்	**intimidation**	frightening, terrorising
கிளர்ச்சி, கலகம்	**insurrection**	revolt, uprising
பதவி, அரியணை போன்றவற்றைத் துற	**abdicate**	resign from one's office or step down from the throne; fail to fulfill responsibility
திரளாக நுழை	**swarmed**	moved in
பதிலடி கொடு	**retaliate**	make an attack in return for a similar attack
பொது வாக்கெடுப்பு	**plebiscite**	referendum poll
தாக்குதலின் முழுவலிமை	**brunt**	full force of a blow or an attack
பெருக்கம், பல்கிப் பெருகுதல்	**proliferation**	rapid increase in the number

12th_History_TM_Unit_12_V2.indd 221 20-12-2022 14:54:58

அலகு 13

ஏகாதிபத்தியமும் அதன் தாக்கமும்

கற்றலின் நோக்கங்கள்

கீழ்க்காணும் அம்சங்களோடு அறிமுகமாதல்

- சந்தையைக் கைப்பற்றும் நோக்கில் ஏகபோக தொழில்முறையும், நிதியும் ஏற்படுத்திக் கொண்ட கூட்டணியின் சூழலில் எழுந்த ஏகாதிபத்தியத்தைக் குறித்து அறிதல்
- காலனிகளை உருவாக்க ஏற்பட்ட போட்டியும் அதனால் நாடுகளுக்கிடையே எழுந்த முரண்போக்குகளும் முதல் உலகப்போருக்கு வழிவகுத்தல் பற்றி அறிந்து தெளிதல்
- முதல் உலகப்போர் உருவானதற்கான காரணங்கள், போக்குகள், மற்றும் விளைவுகள் போன்ற கூறுகளை அலசி ஆராய்தல்
- ரஷ்ய புரட்சியையும் அதன் முக்கியத்துவத்தையும் புரிந்து கொள்ளல்
- 1930களின் பொருளாதாரப் பெருமந்தத்தை உள்ளார்ந்து உணர்தல்
- இத்தாலியிலும், ஜெர்மனியிலும் பாசிச எதிர்–புரட்சி நேர்ந்தமையை மதிப்பீட்டிற்கு உட்படுத்துதல்

அறிமுகம்

பதினெட்டாம் நூற்றாண்டு முழுவதும் தொழிற்துறை நிலையான வளர்ச்சியை எதிர்கொண்டதோடு வணிக நடவடிக்கைகளும் தீவிரமடைந்தன. இதன் விளைவாக ஐரோப்பா ஒரு ஆதிக்க சக்தியாக ஏற்றம் கொண்டதோடு ஆசியாவும் ஆப்பிரிக்காவும் காலனிகளாக மாற்றப்பட்டு சுரண்டலுக்கு உட்படுத்தப்பட்டன. முதலாளித்துவத்தின் உலகளாவிய தலைமைபீடத்தை இங்கிலாந்து தக்கவைத்துக் கொண்டது போன்ற மெய்பிம்பம் ஐரோப்பாவினுள் எழுந்தது. போக்குவரத்திலும், தகவல் தொடர்பிலும் 1870 முதல் 1914 வரையிலான காலத்தில் ஏற்பட்ட புரட்சி உலகப் பொருளாதாரத்தை வளர்த்தெடுத்தது. நீராவிகப்பல்களும், தந்தி கம்பிகளும் கண்டங்களை ஒருபுறம் இணைக்க மறுபுறம் உட்பகுதிகளை துறைமுகங்களோடு இருப்புப்பாதைப் போக்குவரத்து இணைத்தது. ஐரோப்பாவிலிருந்தும் அமெரிக்க ஐக்கிய நாட்டிலிருந்தும் நிதி இடம்பெயர்ந்து உலக வணிகத்தை மேம்படுத்தியது. சந்தைகளுக்கும் மூலப்பொருள்களுக்குமான தேவை விரிவடைந்துகொண்டே சென்றதால் முதலாளித்துவ சக்திகளும் போட்டி மனப்பான்மையோடு சுரண்டலை முன்னிறுத்திய தங்களின் இராஜ்ஜியத்தை விரிவடையச் செய்ய களமிறங்கினார்கள். சந்தைகளுக்கான தேடுதலும் கடுமையான வியாபாரப் போட்டியும் அதிகமான காலனியப் பகுதிகளை கட்டுப்படுத்தும் முனைப்பில் விளைந்த சண்டைகளும், போட்டி நாடுகளை முரண்பாடுகளுக்குள் மூழ்கச் செய்தது.

தனது தகுதிக்கேற்ற சரியான மரியாதையைப் பிறநாடுகள் வழங்கவில்லை என்ற உணர்வு, அதிலும் குறிப்பாக பிரிட்டனைப் பொறுத்தமட்டில் ஜெர்மனியை சமரசப்படுத்த முடியாத போக்கைக் கொண்ட நாடாக்கியது. கடைசியில் பரஸ்பர நம்பிக்கையின்மையும், இறுக்கம் நிறைந்த சூழலும் முதல் உலகப்போருக்கு இட்டுச்சென்றது. போரில் ஜெர்மனியும், அதன் கூட்டுநாடுகளும் தோற்கடிக்கப்பட்டு அதன்பின் வெர்செய்ல்சில் (1919) அமைதி ஏற்படுத்தும் பொருட்டு ஒரு மாநாடு கூட்டப்பட்டது. தீர்வுகளில் சிறப்பான ஒன்றாக விளங்கியது பன்னாட்டு சங்கத்தை ஏற்படுத்தியதும் அதனூடாக எதிர்காலத்தில் உலக அமைதியை நிலைநிறுத்த உறுதிகொள்ளல் என்பதுமாகும். முதல் உலகப்போர் நடைபெற்றுக் கொண்டிருந்த வேளையில் அதனால் ஏற்பட்ட பணவீக்கமும் உணவுப் பற்றாக்குறையும் ரஷ்யாவில் புரட்சியை வெடிக்கச் செய்தது. மற்றொருபுறம் அமைதி

உடன்படிக்கை ஏற்படுத்திய அதிருப்தி, அரசியல் நிலையற்றத்தன்மை, பொருளாதார பெருமந்தத்தின் தாக்கம் ஆகியவை இத்தாலியிலும், ஜெர்மனியிலும் பாசிச அரசுகளின் உருவாக்கத்திற்கு வழிவகுத்தது.

13.1 ஏகாதிபத்தியத்தின் தோற்றம்

தொழில் மூலதன ஆதிக்கமும் தடையற்ற வணிகத்திற்கான ஆலோசனையும்

பதினேழாம் நூற்றாண்டில் ஒரு நாட்டின் பெருமையானது அதன் வணிகத்தைக் கொண்டே நிர்ணயிக்கப்படுவதாகக் கருதப்பட்டது. இதனால் இயல்பாகவே நாட்டின் ஆர்வமும் வியாபார வர்க்கத்தின் ஆர்வமும் ஒத்திருந்தன. தொழிற்புரட்சிக்கு வித்திட்ட மூலதன குவிப்பே வணிக காலம் (1600–1700) முழுவதிலும் ஐரோப்பாவில் வியாபித்து நின்றது. முக்கிய சக்திகளான ஹாலந்து, பிரான்ஸ், இங்கிலாந்து போன்றவை காலனிய ஆதிக்க தேசங்களாக உருவெடுத்ததோடு கடல்கடந்து பரந்துவிரிந்த சந்தைகளைக் கொண்டவைகளாகவும் திகழ்ந்தன. எனினும் இங்கிலாந்தே தொழிற்புரட்சியின் பலன்களை முதலாவதாக முழுவதுமாகப் பயன்படுத்தி பெரும்சக்தியாக வெளிவந்தது. ஆரம்பத்தில் ஏற்றுமதி சந்தைகள் அந்நாட்டிற்கு ஐரோப்பாவினுள்ளே அமைந்திருந்தன. ஆனால் மற்றநாடுகள் தொழில்மயத்தில் இறங்கியவுடன் மிகைஉற்பத்தி செய்யப்பட்ட பொருள்களை ஏற்றுமதிக்குட்படுத்த ஏற்ற சந்தைகளைக் கண்டுபிடிக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது.

வணிக காலம்

துவக்கத்தில் இருந்தே வணிகவாதம் கடும் தாக்குதலுக்கு உள்ளாகி வந்தது. பிரான்சில் தொழில்களுக்கு அளவுகடந்த கட்டுப்பாடு விதிக்கப்பட்டமை, பின்னர் அனைத்துக் கட்டுப்பாடுகளையும் மொத்தத்தில் தளர்த்தக் கோருமளவிற்குச் சென்றது. பிரான்சின் இயலாட்சி ஆதரவாளர்கள் (Physiocrats) தடையற்ற வாணிபத்தை நடைமுறைப்படுத்தக் கோரினார்கள். டெ கௌர்னே என்ற பிரெஞ்சு வணிகர் உருவாக்கிய அரசின் தடையற்ற (Laissez–faire) என்னும் சொல் உலகளாவியப் பிரபலமானது.

ஆடம் ஸ்மித்

ஸ்காட்டிய தத்துவஞானியும், பொருளாதார அறிஞருமான ஆடம் ஸ்மித் 1776இல் *An Inquiry into the Nature and Cause of the Wealth of Nations* எனும் தனது நூலில் வணிக வர்க்கத்தின் காலனியக் கொள்கைகளை விமர்சித்து தடையற்ற வணிகத்தையும், தடையில்லாத சந்தைகளையும் வரவேற்றார். அக்காலத்தைய அரசியல் தலைவர்களை ஸ்மித்தின் நாடுகளின் செல்வம் பெரிதும் கவர்ந்ததோடு பத்தொன்பதாம் நூற்றாண்டை தடையற்ற வணிகத்தின் காலமாக உருவாக்கவும் வழிவகுத்தது.

தனது ஏகபோக வணிகத்தால் பெரும் லாபம் சம்பாதித்திருந்த இங்கிலாந்து 1833இல் தடையற்ற வணிகக்கொள்கையை நடைமுறைப்படுத்த முடிவுசெய்தது. இங்கிலாந்தின் இம்முடிவைப் பின்பற்றி பெல்ஜியம், நெதர்லாந்து, நார்வே, பியட்மாண்ட், போர்த்துகல், ஸ்பெயின், ஸ்வீடன் ஆகிய நாடுகளும் தடையற்ற வியாபாரக்கொள்கையை ஏற்றுக்கொண்டன. இதன் விளைவாக வணிகத்தடங்கள் சுருங்கவும் மேற்கு ஐரோப்பிய நாடுகளின் பொருளாதாரம் ஏற்றமும் பெறலாயிற்று. தடையற்ற போட்டியை உள்வாங்கி வளர்ந்த முதலாளித்துவம் (அரசின் கட்டுப்பாடோ, முறைப்படுத்தலோ இல்லாத தடையற்ற வணிகத்தை கொள்கையாகக் கொண்டு) பின்னர்

விலையையும், தயாரிப்பையும் கட்டுப்படுத்துவதற்காக ஒரு பொருளின் தயாரிப்பாளர்கள் அனைவருமோ அல்லது பெரும்பகுதியினரோ கூடி உருவாக்குவதே அறக்கட்டளையாகும். அமெரிக்க ஐக்கிய நாட்டில் கனரக தொழிற்சாலைகள் யாவும் அறக்கட்டளை–சங்கம் (Trust–Association) மூலமாகவே நிர்வகிக்கப்பட்டு அவற்றின் தயாரிப்பில் மூலப் பொருள்களை எடுப்பதில் துவங்கி தயாரித்து முடிக்கப்பட்ட பொருள்களை வெளியேற்றுவது வரை கட்டுப்படுத்தியது. ஒரு தனிப்பட்ட நிறுவனத்தின் அங்கமாக செயல்பட்டு தாங்கள் விற்பனை செய்யும் பொருள்களில் போட்டியை வரையறைப்படுத்த உருவாக்கப்படும் அமைப்பே கார்டெல் ஆகும். ஜெர்மானிய தயாரிப்பாளர்களின் செயல்திறனை உலக வணிகத்தில் பெரிதும் மேம்படுத்தியதால் கார்டெல்கள் செழித்துப் பரவின.

ஏகபோக முதலாளித்துவமாக வடிவெடுத்தது. மார்க்சின் பார்வையில் போட்டியென்கிற போரில் சிறு வணிகங்கள், பெரு வணிகங்களால் நசுக்கப்படவோ, மேலும் விரிவுபடுத்திக்கொள்ளும் நோக்கோடு உள்வாங்கப்படவோ உள்ளாயின. பத்தொன்பதாம் நூற்றாண்டின் மத்தியில் கூட்டு வணிகமுறையும் (Partnership), கூட்டுப் பங்கு வர்த்தக முறையும் (Joint Stock Company), தளர்ந்து அறக்கட்டளைகளுக்கும் (Trust), அதன்பின் கார்டெல்களுக்கும் (Cartel) வழியேற்படுத்தின. வலிமைபெற்ற அறக்கட்டளைகளும், கார்டெல்களும் அரசிடம் மிகுந்த செல்வாக்குக் கொண்டிருந்தன.

13.2 காலனியப் பரவலும் போரைநோக்கிய பாதையும்

அ) மூலப்பொருள்கள் மற்றும் உற்பத்தி செய்யப்பட்டப் பொருள்களுக்கான சந்தை, காலனியப் பரவலுக்கு வழி ஏற்படுத்துதல்

பத்தொன்பதாம் நூற்றாண்டின் இரண்டாம் பாதியில் பல நாடுகளும் மிகைஉற்பத்தி செய்யப்பட்ட பொருள்களால் எழுந்த பிரச்சனையை தீர்ப்பதற்காக வெளிசந்தையை தேடும் கட்டாயத்தில் இருந்தன. இப்பிரச்சனைக்கான நிரந்தரத்தீர்வை இங்கிலாந்தின் அனுபவ வழி பார்க்கும்போது காலனிய நாடுகளைத் தங்களின்கீழ் கொண்டிருப்பதே சரி என்று விளங்கியது. மிகைஉற்பத்திக்கான சந்தையாக இருப்பது நீங்கலாக காலனியப் பிரதேசங்கள் மற்றொரு நோக்கத்தையும் நிறைவு செய்யக்கூடும். பெரும் உற்பத்தியில் ஈடுபட அதிக அளவிலான தானியங்கள், பருத்தி, ரப்பர், கச்சா எண்ணெய், தாதுக்கள் போன்ற மூலப்பொருள்களும் தேவைப்பட்டன. தொழிற்சாலை முதலாளிகள் இதற்காக வேறு நாடுகளைச் சார்ந்திருக்க விரும்பவில்லை. அவர்கள் முலப்பொருள்களின் விளைச்சல் ஏற்படும் மூலாதாரத்தையே தங்களின் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்க எண்ணம் கொண்டார்கள். முதலாளிகள் சந்தைகளை உருவாக்கக் கொண்ட விருப்பமும், மூலப்பொருள்கள் விளையும் பகுதிகளைக் கட்டுப்படுத்த காட்டிய முனைப்புமே ஏகாதிபத்தியத்தைக் கட்டியெழுப்ப முக்கியப் பங்காற்றின.

இங்கிலாந்து 1870களுக்குப்பின் பிரான்ஸ், பெல்ஜியம், இத்தாலி, ஜெர்மனி போன்ற மிகைஉற்பத்தி செய்த நாடுகளோடு பொருள்களை விற்கும் சந்தைகளைக் கொண்ட காலனிய நாடுகளை கட்டுப்படுத்துவதில் போட்டியில் இறங்கியது. அமெரிக்காவின் முறை 1898இல் அது ஸ்பெயினை தோற்கடித்து பிலிப்பைன்ஸை தனது கட்டுப்பாட்டில் கொண்டுவந்தபோது ஏற்பட்டது. இதில் சுவாரஸ்யமான ஒன்று என்னவென்றால், இந்தியா, சீனா, ஆப்பிரிக்கா ஆகிய எந்த நாட்டிலானாலும் ஒருங்கிணைப்பிற்கான முதல் முயற்சியை ஏகாதிபத்திய முகவரோ, சமயப் பணியாளர்களோ, ஏகபோக அந்தஸ்தைக் கொண்ட வியாபார நிறுவனமோதான் மேற்கொண்டுள்ளார்கள். இருபது ஆண்டுகளுக்கும் குறைந்த காலத்தில் மத்திய ஆப்பிரிக்கா முழுவதும் பிரிட்டன், பிரான்ஸ், ஜெர்மனி, பெல்ஜியம், போர்த்துகல், இத்தாலி ஆகிய நாடுகளால் பங்குவைத்துக் கொள்ளப்பட்டது.

ஆப்பிரிக்காவின் 10 சதவீத அளவிலான இடங்களே 1876இல் ஐரோப்பாவின் கட்டுப்பாட்டில்

ஆப்பிரிக்காவை பிரித்தல்: பெல்ஜிய மன்னரான இரண்டாம் லியோபால்ட் 1876இல் தனது சர்வதேச ஆப்பிரிக்க சங்கத்தின் வாயிலாக ஆய்வுநடத்தி மிகச்சிறந்த ரப்பர் விளையும் பகுதியை அடையாளப்படுத்தி தன் நாட்டோடு இணைத்த பகுதியே தற்காலத்தில் பெல்ஜிய காங்கோ என்றழைக்கப்படுகிறது. அதுபோன்றே பிரெஞ்சுக்காரர்களும் டுனிஸ் பகுதியை தன்னுடன் இணைக்கும் எண்ணம் கொண்டிருந்த இத்தாலியர்களின் அதிருப்தியை சம்பாதிக்கும் விதமாக 1881ஆம் ஆண்டு அப்பகுதியில் ஆய்வுப்பயணம் மேற்கொண்டு தங்கள் வசப்படுத்தினார்கள். இதுபோன்றே 1891இல் ஐவரி கோஸ்ட்டையும், 1892இல் டஹோமேயையும் (Dahomey), 1895இல் மடகாஸ்கரையும் ஆக்கிரமித்துக் கொண்டார்கள். பிரிட்டன் தென் ஆப்பிரிக்காவின் நடாலையும் டிரான்ஸ்வாலையும் இணைத்துக்கொண்டதோடு ஆப்பிரிக்காவின் பிற பகுதிகளையும் இணைத்தது. பிரிட்டன் 1883ஆம் ஆண்டு எகிப்தின் மீது தனது கட்டுப்பாட்டை நிறுவியது. கோல்ட் கோஸ்ட் காலனிகள், உகாண்டா, சான்சிபார், கிழக்கு ஆப்பிரிக்காவின் சில பகுதிகள் ரொடீஷியா போன்றவை அடுத்தடுத்து பிரிட்டிஷ் இராஜ்ஜியத்தின் அங்கங்களாயின. ஜெர்மனி 1884றகும் 1890க்கும் இடைப்பட்ட காலத்தில் டோகோலாந்து, கேமரூன், ஜெர்மானிய தென்–மேற்கு ஆப்பிரிக்கா, ஜெர்மானிய கிழக்கு ஆப்பிரிக்கா ஆகிய பகுதிகளை ஆக்கிரமித்துக் கொண்டது. அந்நூற்றாண்டின் முடிவில் நில ஆக்கிரமிப்பிற்கான போட்டி இருண்ட கண்டம் என்று வர்ணிக்கப்படும் ஆப்பிரிக்கா முழுமையும் பெரும் ஐரோப்பிய சக்திகளுக்கிடையே பிரித்துக் கொள்ளப்பட வழி ஏற்படுத்தியது. லைபீரியா, மொராக்கோ, அபிசீனியா ஆகிய நாடுகளே இணைக்கப்படாமல் எஞ்சி நின்றன.

12th_History_TM_Unit_13_V2.indd 224 02-01-2023 16:39:54

இருந்தது. ஆனால் 1900இல் ஏறக்குறைய ஆப்பிரிக்கா முழுமையும் காலனிய ஆதிக்கத்திற்கு உட்படுத்தப்பட்டிருந்தன. பிரிட்டன், பிரான்ஸ், பெல்ஜியம் ஆகிய நாடுகள் பெருவாரியான பகுதிகளை எடுத்துக்கொண்டு எஞ்சிய சொற்பப்பகுதிகளை ஜெர்மனியும், இத்தாலியும் எடுத்துக்கொள்ள விட்டுவிட்டன. பிரிட்டன், பிரான்ஸ், ரஷ்யா, ஜெர்மனி ஆகிய நாடுகள் சீனாவிற்குள்ளும் தத்தம் "செல்வாக்கிற்குட்பட்ட கோளங்களை" உருவாக்கி எடுத்துக்கொண்டன. ஜப்பான், கொரியாவையும் தைவானையும் எடுத்துக்கொண்டது. பிரான்ஸ் இந்தோ–சீனாவை கைப்பற்றியது; அமெரிக்க ஐக்கிய நாடு பிலிப்பைன்ஸை ஸ்பெயினிடமிருந்து எடுத்துக்கொண்டது, பிரிட்டனும் ரஷ்யாவும் ஈரானை பங்கு வைத்துக்கொள்ள முடிவுசெய்தன.

பிற இடங்களில் நிகழ்ந்தது போன்றே காலனியப் பகுதிகளை உருவாக்கும் முனைப்பில் ஆப்பிரிக்காவிலும் பெரும் போர்கள் நடத்தப்பட்டு அதன் பூர்வீககுடிகள் தோற்கடிக்கப்பட்டார்கள். புதிய வகை ஆயுதங்களான ப்ரீச்–லோடிங் துப்பாக்கியும், கேட்லிங் எந்திரத் துப்பாக்கியும் (Breech–loading rifles and gatling machine guns) போரைத் தங்களுக்கு சாதகமாகத் திருப்பும் திறனை ஐரோப்பியப் படையினருக்கு வழங்கின.

ஆ) ஏகபோக முதலாளித்துவம் முழுமையான ஏகாதிபத்தியத்திற்கு கொண்டு செல்லப்படல்

ஏகபோக தொழில்கள் முதலாளிகளுக்குப் பெரும் லாபத்தைக் குவித்தன. இதன் விளைவாக மிகையாகப் பணம் குவியத்துவங்கியது. தொழிற்சாலைகளின் உரிமையாளர்கள் முதலீடுகளை ஏற்றுமதி செய்தால் அவை அதிகமான லாபத்தை ஈட்டும் என்று உணர்ந்தார்கள். இம்மிகைப் பணத்தை இருப்புப்பாதைக்கும், மின்சார உற்பத்திக்கும், சாலைகளுக்கும் அதீத தேவை இருந்த காலனிய நாடுகளில் முதலீடு செய்தார்கள். நேரடி முதலீடு நீங்கலாக கடனாகவும் பணத்தை அனுப்ப 'தாய் நாடு' முன்வந்தது. இதனால் இங்கிலாந்து இருப்புப்பாதை தண்டவாளங்கள் போடவும் இரயில் பெட்டிகள், இரயில் எந்திரம், போன்றவற்றை வாங்கவும் கடன்கொடுத்ததால் அப்பணம் மீண்டும் இங்கிலாந்து கொண்டு செல்லப்பட்டு அங்கிருந்த உற்பத்தியாளர்களிடம் அவர்களின் லாபத்தை முன்னிறுத்தி தேவைப்படும் பொருள்கள் வாங்கப்பட்டன. இதனால் முதலீடு செய்வோரும், உற்பத்தியாளர்களும் காலனிய அமைப்புமுறை தங்களுக்குச் சாதகமாக இருப்பதை உணர்ந்தார்கள். இதுவே நிதிக்கும் தொழிலுக்கும் உள்ள கூட்டு என்று பொருளாதார அறிஞர்கள் கூறுகிறார்கள். தொழிலுக்கும், நிதிக்குமிடையே ஏற்பட்ட இக்கூட்டு பொருள்சந்தையிலும், முதலீடானது சந்தையிலும் லாபத்தை அடிப்படியாகக்கொண்டு செயல்படுவதே ஏகாதிபத்தியத்தின் முக்கிய குணநலனாகும்.

ஆங்கிலப் பொருளாதார நிபுணரானஜான்A.ஹாப்சன் ஏகாதிபத்தியத்தை இவ்வாறு வரையறுக்கிறார்: ஏகாதிபத்தியம் என்பது தொழிலை கட்டுப்படுத்துவோர் தங்கள் செல்வங்கள் சென்றுசேரும் பாதையை விசாலப்படுத்தி அயல்நாட்டு சந்தைகளையும், அயல்நாட்டு நிதியையும் பயன்படுத்தி தாங்கள் உள்ளூரில் விற்க முடியாத பொருள்களையும், சந்தைப்படுத்த முடியாத மூலதனத்தையும் பயன்பாட்டிற்குக் கொண்டுவர எடுக்கும் முயற்சியே என்கிறார்.


ஜான் A. ஹாப்சன்

இ) பாதுகாப்புவாதமும், அது ஏற்படுத்திய அரசியல் பிணக்குகளும்

வியன்னாவிலும் நியூயார்க்கிலும் 1870இன் மத்தியிலேற்பட்ட நிதிவீழ்ச்சி ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலும் முழுமையான பொருளாதாரப் பெருமந்தத்தை உருவாக்கின. பெருமந்தம் உற்பத்தியையும் விலைகளையும், கூலியையும் கடுமையாக பாதித்தது. மேற்கு ஐரோப்பிய நாடுகளின் சந்தையில் குறைந்த விலை கொண்ட தானியங்கள் வந்துசேர்ந்து ஏற்கனவே விலைவீழ்ச்சியால் பாதிக்கப்பட்டிருந்த உள்ளூர் உற்பத்தியாளர்களுக்கு மேலும் இக்கட்டைக் கொடுத்தது. மக்கள் தடையற்ற வணிகத்தின் ஞானத்தை கேள்விக்குட்படுத்தினார்கள். நிலைமையை கட்டுப்படுத்தும் முகமாக ஜெர்மனி பாதுகாப்பு நடவடிக்கைகளை துரிதப்படுத்தியது. தொழிற்சாலை பொருள்களின் இறக்குமதிக்கும், வேளாண் பொருள் இறக்குமதிக்கும் கட்டணம் விதிக்கும் விதமாக 1879இல் கட்டணச் சட்டத்தை ஏகாதிபத்திய ஜெர்மனிக்குள் நடைமுறைப்படுத்தியது. விரைந்து பிறநாடுகளும் இந்நடவடிக்கையை பின்பற்றின. பிரிட்டன் தனது காலனிய வியாபார முன்னுரிமையை மாற்றிக்கொள்ள வழியிருந்ததால் அது பிரான்சோடும், ஜெர்மனியோடும் 1898ஆம் ஆண்டு ஏற்படுத்திய வணிக உடன்படிக்கைகளை ரத்து செய்தது. வெவ்வேறு ஐரோப்பிய சக்திகளும் கட்டண நடவடிக்கையிலும், பதில்–கட்டண நடவடிக்கையிலும் இறங்கியதால் பாதுகாப்புவாதம் உச்சமடைந்ததோடு அது அரசியல்

12th_History_TM_Unit_13_V2.indd 225 02-01-2023 16:39:54

முரண்பாடுகளுக்கும் வழியேற்படுத்தியது. இம்முரணால் விளையும் சிக்கல் என்பது படைபலத்தைச் சார்ந்தே அமையும் என்பது பேரரசுகளை நிர்வகித்த தலைமைக்குத் தெளிவாகத் தெரிந்திருக்கவே செய்தது. அதனால் தங்களின் ஆயுத பின்புலத்தை பலப்படுத்த போட்டியிட்டதில் போருக்குரிய சூழ்நிலைகள் இயல்பாகவே தோன்றத்தொடங்கின.

13.3 முதல் உலகப்போர்

அ) போருக்கு முந்தைய அதிகார அரசியல்

ஐரோப்பா

புதிய நூற்றாண்டு பிறந்தபோது அக்கண்டத்தில் ஜெர்மனியே தொழிற்துறையில் மேம்பட்ட நாடாக விளங்கியது. எனினும் உலகின் பெருவாரியான பகுதிகளை பிற ஏகாதிபத்திய சக்திகளே தங்கள் கட்டுப்பாட்டில் கொண்டிருந்தன. மன்னர் இரண்டாம் கெய்சர் வில்லியமின் காலத்தில் ஜெர்மனியும் தனது ஆட்சியின் கீழ் அதிகமான காலனிகளை கொண்டிருக்க விரும்பியது. அது வட ஆப்பிரிக்காவை கட்டுப்படுத்தும் லட்சியம் கொண்டிருந்தது. ஜெர்மானிய முதலாளிகளும், ஏகாதிபத்தியவாதிகளும் கிழக்கு திசை நோக்கிய விரிவை விரும்பியதால் அரசும் பெர்லின் முதல் பாக்தாத் வரை இருப்புப்பாதையை உருவாக்கி ஆட்டோமன் பேரரசை பொருளாதார அடிப்படையில் கட்டுப்படுத்தும் கடமை கொண்டிருப்பதாகக் கருதியது.

கெய்சர் இரண்டாம் வில்லியம்

பிராங்கோ–பிரஷ்யப் போர்

1871இல் நடந்த பிராங்கோ–பிரஷ்யப் போரில் பிரான்ஸ் தான் இழந்த அல்சேஸ் மற்றும் லொரைன் பகுதிகளைத் திரும்பப்பெற்றுவிடும் குறிக்கோள் கொண்டிருந்தது. அந்நாடு தாதுவளம் மிக்க மொராக்கோ பகுதியை ஆப்பிரிக்காவில் இருந்த தனது பேரரசின் பகுதியாக மாற்ற நினைத்தது. ரஷ்ய நாடு மத்தியதரைக் கடல் பகுதியை அணுகவும், இஸ்தான்புல்லை தனதாக்கிக் கொள்ளவும் வழிவகை செய்யும் என்பதால் பாஸ்போரஸ் பகுதியையும், டார்டெனெல்ஸ் பகுதியையும் (அச்சமயம் துருக்கியின் கட்டுப்பாட்டில் இருந்தது) தான் கொள்ள நினைத்தது. துருக்கி ஐரோப்பாவில் இருந்து ஒதுக்கப்பட்டால் பால்கன் பகுதி மீது தான் உரிமை கோரலாம் என ரஷ்யா திட்டம் தீட்டியது. இத்தாலிய வெளியுறவுக் கொள்கையின் அடிநாதமே ஆஸ்திரியாவிற்கும், துருக்கி நாட்டிற்கும் விரோதமானதாகும். இத்தாலிய மக்கள்தொகையை அதிகமாகக் கொண்டிருந்த டிரையஸ்ட் மற்றும் ஏட்ரியாட்டிக் கடற்கரைப்பகுதி மீது ஆஸ்திரியாவின் கட்டுப்பாடு உறுதியற்ற ஒன்றாகவே திகழ்ந்தது. இத்தாலி ட்ரிப்போலியையும், பிற வட ஆப்பிரிக்கப் பகுதிகளையும் ஆக்கிரமிப்பதை துருக்கி தடுத்தது பிரிட்டனைப் பொறுத்தவரை பெரும் தொழில் வளர்ச்சியையும், நீண்டு பரவிய பேரரசையும் கொண்டிருந்தபோதும் குறைந்த விலையிலான ஜெர்மன் பொருள்களும், அமெரிக்க ஐக்கிய நாட்டின் பொருள்களும் இதன் சந்தையில் ஆக்கிரமித்ததால் அந்த வகையில் இவ்விரு நாடுகளோடு போட்டியிடவேண்டிய அவசியம் அதற்கு இருந்தது.

ஆசியா

மெய்ஜி சகாப்தத்தில் (1867–1912) படித்து கல்வியறிவுபெற்ற மக்களைக் கொண்ட ஜப்பானில் தொழில்வளம் பெருகியதோடு, அம்மக்களிடையே ஆக்கிரமிப்பு அடிப்படையிலான தேசியவுணர்வு ஊற்றெடுத்து தாங்களும் உலகசக்திகளில் ஒன்றாகத் திகழவேண்டும் என்ற லட்சியம் உருவானது. இதனால் சீனாவை பிடிக்கும் போட்டியில் ஜப்பானும் களமிறங்கியது. அப்போது சுதந்திர நாடாக இருந்த கொரியா மீது ஜப்பான் படையெடுத்து அங்கிருந்த சீனப் படைகளை விரட்டியது. அதன்பின் நடந்த சீனா–ஜப்பானியப் போரின் முடிவில் ஏற்படுத்தப்பட்ட ஷிமனோசெகி உடன்படிக்கையின்படி (Treaty of Shimonoseki) ஜப்பானிற்கு ஃபார்மோசா, ஆர்தர் துறைமுகம், லியோடுங் தீபகற்பம் (Liaotung Peninsula) ஆகிய பகுதிகள் வழங்கப்பட்டன. சிறிய நாடான ஜப்பான், சீனாவை போரில் தோற்கடித்தமை (1894–95) உலகை ஆச்சரியத்தில் ஆழ்த்தியது. ஜப்பானின் இந்த திடீர் வளர்ச்சியைக் கண்டு அஞ்சிய ஐரோப்பிய சக்திகள் ஜப்பானை லியோடுங் தீபகற்பத்தை ஒப்படைக்கும்படி செய்தன. இந்த "மூவர் தலையீட்டை" (Triple Intervention – பிரான்ஸ், இங்கிலாந்து, ரஷ்யா ஆகிய நாடுகள் 1895இல் செய்த குறுக்கீடு) சினத்தோடு எதிர்கொண்ட ஜப்பான் மிகப்பெரிய போர்த்தளவாடத் திட்டத்தை வகுத்தது.

பெரும் சக்திகளின் வசீகர வட்டத்தில் ஜப்பான்

சீனா-ஜப்பானியப் போரைக்காட்டிலும் ஜப்பான் ரஷ்யாவை 1904-05இல் நடந்த போரில் தோற்கடித்ததை பெரும் முக்கியத்துவம் கொண்டதானது. "மூவர் தலையீட்டை" தொடர்ந்து ரஷ்யா தெற்கு மஞ்சூரியாவை ஆக்கிரமித்தது. ஜப்பான் 1902ஆம் ஆண்டில் இங்கிலாந்தோடு ஒரு கூட்டணியை ஏற்படுத்தி அதன் வாயிலாக ரஷ்யாவை தமது படைகளை விலக்கிக்கொள்ள வலியுறுத்தியது. ரஷ்யா ஜப்பானை குறைத்து மதிப்பிட்டிருந்தது. 1904இல் போர் வெடித்துக் கிளம்பியது. ரஷ்ய-ஜப்பானியப் போரான இதில் ஜப்பான் வெற்றிபெற்று அமெரிக்க ஐக்கிய நாட்டின் மத்தியஸ்தத்தின் கீழ் போர்ட்ஸ்மவுத் உடன்படிக்கையை கையெழுத்திட்டு ஆர்தர் துறைமுகத்தை மீண்டும் பெற்றது. இப்போரின் வாயிலாக ஜப்பான் பெரும் சக்திகளின் வசீகர வட்டத்தில் நுழைந்தது.

1905க்குப் பின்னர் ஜப்பான் பின்பற்றிய வலுத்த-கர இராஜதந்திரம்

ஒரு முக்கியத்துவம் வாய்ந்த ஜப்பானிய தூதர் கொரிய நாட்டைச் சேர்ந்த ஒருவரால் படுகொலை செய்யப்பட்டது ஜப்பானுக்கு 1910இல் கொரியா மீது படையெடுக்க காரணமாக அமைந்தது. சீனாவில் 1912இல் மஞ்சு வம்சத்தின் வீழ்ச்சிக்குப்பின் நேர்ந்த குழப்பம் ஜப்பானுக்கு தனது எல்லையை விரிவுபடுத்திக் கொள்ள மற்றொரு சந்தர்ப்பத்தை வழங்கியது. ஜப்பான் 1915ஆம் ஆண்டு புதிதாக உருவாகியிருந்த சீன குடியரசின் தலைவரான யுவான் ஷிகாய் முன்பு 21 நிர்ப்பந்தங்களை சமர்ப்பித்தது. இந்நிர்ப்பந்தங்களில் ஜெர்மானியர்களுக்கு சீன கடலோர மாகாணமான ஷாண்டுங்கில் வழங்கப்பட்டிருந்த உரிமையை தங்களுக்கு மாற்றிக் கொடுக்கவும், மஞ்சூரியாவில் ஜப்பானின் ஆதிக்கத்தை அங்கீகரிக்கவும், சீன அரசிற்கு ஜப்பானிய ஆலோசகர்களை நியமிக்கவும் கோரப்பட்டிருந்தது. பெருவாரியான ஜப்பானின் கோரிக்கைகளுக்கு சீனா உடன்படும்படியானது.

ஆ) போருக்கான காரணங்கள்

i) கூட்டணிமுறையின் பரிணாமம்

கூட்டணி முறையின் தோற்றம் 1870களில் இருந்து துவங்கியதாகத் தெரிகிறது. அதன் முதல் வடிவமைப்பாளர் பிஸ்மார்க் ஆவார். பிரான்ஸ் நாடு அல்சேசையும், லொரைனையும் இழந்தமைக்குப் பழிவாங்கக்கூடும் என்று பிஸ்மார்க் எதிர்பார்த்தார். அதனால்பிரான்சைதனிமைப்படுத்தஅவர் தீர்மானம் கொண்டார். எனினும் ஜெர்மனி, ஆஸ்திரியா, ரஷ்யா ஆகிய நாடுகளை இணைத்து அவர் 1873இல் உருவாக்க நினைத்த மூன்று பேரரசர்களின் கழகம் தோல்வியையே சந்தித்தது. ஆனால் தனது எல்லைக்குள்ளும், வெளியிலும் ஸ்லாவ்களிடமிருந்து பிரச்சனையை எதிர்நோக்கியிருந்த ஆஸ்திரியா மட்டும் ஜெர்மனியோடு ஆழ்ந்த புரிதலை விரும்பியதால் அந்நாட்டுடன் மட்டும் பிஸ்மார்க்கால் வலுவான உறவை ஏற்படுத்திக்கொள்ள முடிந்தது. இக்கூட்டணி 1882இல் இத்தாலியையும் தன்னகத்தே இணைத்ததால் மூவர் கூட்டணியாக விரிவடைந்தது.

பிஸ்மார்க்

ஜெர்மனியின் நகர்விற்கு எதிர்நகர்வை முன்வைக்க விழைந்த பிரான்ஸ் 1894ஆம் ஆண்டு ரஷ்யாவோடு ஒரு இரகசிய இராணுவ ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டது. அதன்படி பிரான்சையோ, ரஷ்யாவையோ தாக்க ஜெர்மனியோ அல்லது ஜெர்மனியின் மேற்பார்வையில் ஆஸ்திரியாவோ, இத்தாலியோ முற்பட்டால் இருநாடுகளும் பரஸ்பரமாக உதவிக்கொள்வது என்று முடிவுசெய்யப்பட்டது. இதற்கிடையே தனது தனிமையை தூக்கி எறிந்த பிரிட்டன் ஜப்பானோடு ஒரு கூட்டணியை ஏற்படுத்திக்கொண்டது. பிரான்ஸ் ரஷ்யாவின் கூட்டு நாடு என்பதால் ஜப்பான் பிரிட்டனோடு (1902) நெருக்கம் கொள்வதை விரும்பியது. ஆங்கிலோ-ஜப்பானியக் கூட்டால் சுதாரித்த பிரான்ஸ், பிரிட்டனின் நட்பைக் கோரி மொராக்கோ, எகிப்து சார்ந்த பிணக்குகளைத் தீர்க்க முன்வந்தது. இது 1904இல் 'நாடுகளுக்குள் ஒத்துப்போகிற நட்புறவை' (Entente Cordiale) விளைவித்தது. மொராக்கோவில் பிரான்சை தன்னிச்சையாக செயல்படவிடுத்து பிரிட்டன் எகிப்தை ஆக்கிரமித்தமைக்கு பிரான்சின் அங்கீகாரத்தைப் பெற்றது. தொடர்ந்து 1907இல் பிரிட்டன் ரஷ்யாவோடு ஒரு ஒப்பந்தத்தை ஏற்படுத்தி பாரசீகத்தை செல்வாக்கிற்குட்பட்ட கோளங்களாகப் பிரித்தது. இவ்வாறு பிரிட்டன், பிரான்ஸ், ரஷ்யா ஆகிய நாடுகளை அங்கமாகக் கொண்டு முக்கூட்டு நட்பு (Triple Entente) உருவாக்கப்பட்டது.

ஐரோப்பாவின் பெரும் சக்திகள் 1907ஆம் ஆண்டில் இரு எதிரெதிர் முகாம்களாக மூவர் கூட்டணி (ஜெர்மனி, ஆஸ்திரிய-ஹங்கேரி, இத்தாலி) என்றும், முக்கூட்டு நட்பு (பிரிட்டன், பிரான்ஸ், ரஷ்யா) என்றும் உருவெடுத்து நின்றன.

12th_History_TM_Unit_13_V2.indd 227 02-01-2023 16:39:54

ii) 1905 முதல் 1913 வரை ஏற்பட்ட நெருக்கடிகள்

மொராக்கோ

இங்கிலாந்தோடு ஏற்பட்ட புரிதலை முன்னிறுத்தி (Entente Cordiale, 1904) பிரான்ஸ் மொராக்கோவில் தனது திட்டங்களுக்கு செயல்வடிவம் கொடுக்க நினைத்தது. ஒரு பிரெஞ்சு தூதுக்குழு 1905இல் மொராக்கோவின் ஃபெஸ் (Fez) நகரை வந்தடைந்து அதை பிரான்சின் பாதுகாப்பிற்குட்பட்ட (Protectorate) பகுதியாகவே கருதி செயல்பட்டது. இதற்கு ஜெர்மனி தனது எதிர்ப்பைத் தெரிவித்தது. இந்த சர்ச்சையை ஐரோப்பிய மாநாடு ஒன்றனுக்கு எடுத்துச்செல்ல பிரான்ஸ் உடன்பட்டது. அல்ஜியர்ஸில் நடந்த அம்மாநாட்டில் எந்தப்பலனும் ஏற்படவில்லை. எனினும் பிரிட்டன் ஜெர்மனிக்கு எதிராக பிரான்சை ஆதரித்தமை தெளிவுபட்டது.

அகாதிர், 1911

ஓராண்டுக்குள் பிரான்ஸ் மீண்டும் மொராக்கோவில் சுறுசுறுப்பாக செயல்படத் துவங்கியது. இம்முறை ஜெர்மானியர்கள் மொராக்கோவின் துறைமுகமான அகாதிருக்கு தங்களின் துப்பாக்கி பொருத்திய படகான பேந்தரை அனுப்பி அவர்களுக்கு அப்பகுதியில் இருந்த ஆர்வத்தை தெளிவுபடுத்தினார்கள். பிரிட்டனிடம் இருந்து வரவிருந்த அச்சுறுத்தல்களை கருத்தில் கொண்டு இப்பிரச்சனையை மேற்கொண்டு வளர்க்க ஜெர்மனி விரும்பவில்லை. எனினும் பிரான்ஸ் மொராக்கோவில் தனது நிலையை தக்கவைத்துக் கொள்வதற்காக மேற்கு ஆப்பிரிக்காவில் ஜெர்மனிக்கு தாராளமானப் பல சலுகைகளைக் கொடுத்தது.

போஸ்னிய சிக்கல்

ஆஸ்திரிய–ஹங்கேரி அதுவரை ஆஸ்திரியாவின் பாதுகாப்பில் இருந்த போஸ்னியாவையும் (செர்பிய மக்களை உள்ளடக்கியது), ஹெர்ஸிகோவினாவையும் 1908இல் திடீரென இணைப்பதாக அறிவித்ததினால் தொடர் சிக்கல்கள் தோன்றின. ரஷ்யப் போர்கப்பல்கள் பாஸ்போரஸ் மற்றும் டார்டெனெல்ஸ் பகுதிகள் வழியாக மத்தியதரைக்கடலுக்கு தடையின்றிச்செல்ல கடற்பாதை ஏற்படுத்திக் கொள்வதற்காக அந்நாடு மேற்கொண்ட உத்தியே இந்நகர்வாகும். இதனால் துருக்கியர்கள் சினமடைந்தாலும் அவர்கள் செய்வதறியாதிருந்தார்கள். கொந்தளிப்பிற்குள்ளான செர்பியா, ரஷ்யாவிடம் உதவிகோரியது. ஆனால் ஜப்பானுடன் நடத்தியப் போரின் பாதிப்புகளில் இருந்து மீளமுடியாமல் இருந்த ரஷ்யா தான் ஆஸ்திரிய–ஹங்கேரியை எதிர்த்தால் ஜெர்மனியின் கோபத்திற்கு உள்ளாக நேரிடும் என்பதால் இதில் தலையிட விரும்பாமல் இருந்தது. ஆகவே செர்பியாவும், ரஷ்யாவும் தங்களுக்கு அனுகூலமான நேரத்தை எதிர்நோக்கி காத்திருக்கும்படி ஆயிற்று.

பால்கன் போர்கள்

பதினெட்டாம் நூற்றாண்டின் முற்பாதியில் துருக்கி தென்மேற்கு ஐரோப்பாவில் சக்திவாய்ந்த ஒரு நாடாகத் திகழ்ந்தது. அதன் இராஜ்ஜியம் பால்கன் பகுதிகளில் விரிந்து ஹங்கேரி முதல் போலந்து வரை சென்றது (பால்கன் பகுதி என்பது மத்தியதரைக்கடல் மற்றும் கருங்கடலுக்கு இடைப்பட்ட தென்கிழக்கு ஐரோப்பியப் பகுதியாகும்). பதினெட்டாம் நூற்றாண்டின் பிற்பாதியில் துருக்கி எதிர்கொண்ட அரசியல் மற்றும் பொருளாதார நிலையற்றத்தன்மை கிரீஸ் துவங்கி பல நாட்டினரும் துருக்கியின் கட்டுப்பாட்டை உடைத்து அந்நாட்டின் பகுதிகளைப் பிரித்தெடுக்க வழிசெய்தது.

முதலாம் பால்கன் போர்

மாசிடோனியாவை ஆக்கிரமிப்பதற்காக ரஷ்யா, கிரீஸ், செர்பியா, பல்கேரியா, சிறிதுகாலத்திற்குப்பின் மான்டிநீக்ரோ ஆகிய நாடுகள் 1912ஆம் ஆண்டின் மார்ச் மாதத்தில் உருவாக்கியதே பால்கன் ஐக்கியமாகும் (Balkan League). மாசிடோனியாவின் மக்கள் பல்வேறு இனப் பின்புலத்தை கொண்டவர்களாக விளங்கினர். போர் அக்டோபர் 1912இல் துவங்கி இரண்டே மாதத்திற்குள்ளாகவே துருக்கியர்களின் எதிர்ப்பை முறித்தது. ஐரோப்பிய மாகாணங்களிலிருந்து துருக்கியர்கள் விரட்டியடிக்கப்பட்டார்கள். ஆனால் பிரச்சனை வென்றெடுத்த பிரதேசங்களை பிரித்துக்கொள்ளும்போது ஏற்பட்டது. இறுதியாக மே 1913இல் கையெழுத்திடப்பட்ட லண்டன் உடன்படிக்கையின்கீழ் மாசிடோனியா பிரிக்கப்பட்டு அல்பேனியா என்ற புதிய நாடு உருவாக்கப்பட்டது.

இரண்டாம் பால்கன் போர்

வெற்றிபெற்ற நாடுகள் மாசிடோனியாவை பிரிக்கும் முடிவில் சண்டையிட்டுக் கொண்டன. பல்கேரியர்கள் தங்களின் கூட்டு நாடுகளான செர்பியாவையும், கிரீசையும் தாக்கினாலும் தோல்வியே கிடைத்தது. துருக்கியர்கள் இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி தாங்கள் இழந்திருந்த ஏட்ரியநோப்பிளை மீண்டும் எடுத்துக்கொள்ள முனைந்தார்கள். இரண்டாம் பால்கன் போர் ஆகஸ்ட் 1913இல் புக்காரெஸ்ட் உடன்படிக்கையை கையெழுத்திட்டதோடு முடிவுக்கு வந்தது.

பால்கன் சிக்கலிலிருந்து இரண்டு கூறுகள் வெளிவருகின்றன. முதலாவதாக பல்கேரியர்கள் தாங்கள் வஞ்சிக்கப்பட்டதாக உணர்ந்து அதற்காக செர்பியர்களை பழிவாங்க துடித்தனர். இரண்டாவதாக செர்பியர்கள் மிதமிஞ்சிய வெற்றிக்களிப்பில் திளைத்தார்கள். இக்காலம் முதற்கொண்டு ஆஸ்திரியர்களுக்கு எதிரான போராட்டங்கள் செர்பியாவிலும், அதன் அண்டை நாடான போஸ்னியாவிலும் மிகுந்த தீவிரவாதத்தன்மை கொண்டதாக மாறியது.

உடனடிக் காரணங்கள்

ஃபிரான்ஸ் ஃபெர்டினான்ட்

பால்கன் சம்பவங்களின் உச்சகட்டம் போஸ்னியாவின் செராஜிவோவில் நிகழ்ந்தது. ஆஸ்திரிய–ஹங்கேரியின் பேரரசர் ஃபிரான்ஸ் ஜோசப்பின் (Franz Joseph) வாரிசும், ஆர்ச்டியூக் அந்தஸ்தில் இருந்தவருமான ஃபிரான்ஸ் ஃபெர்டினான்ட் (Franz Ferdinand) 1914 ஜூன் 28 அன்று போஸ்னியாவில் மாணவராக இருந்த செர்பிய நாட்டைச் சேர்ந்த பிரின்சிப் என்பவரால் படுகொலை செய்யப்பட்டார். இந்தப் படுகொலை செர்பிய நாட்டின் தூண்டுதலினால்தான் நடந்ததாக ஆஸ்திரியா குற்றம்சாட்டியது. ஒரு மாதகாலத்தில் இறுதியறிக்கை (ultimatum) ஒன்றினை பெல்கிரேடுக்கு அளித்து அதனை நிபந்தனையில்லாமல் சரணடைய ஆஸ்திரியா வலியுறுத்தியது. செர்பியா கொடுத்த விளக்கத்தையும், மத்தியஸ்தம் புரிய ஜெர்மனி மேற்கொண்ட முயற்சிகளையும் ஆஸ்திரியா புறந்தள்ளியது. பிரிட்டன் போரை பரவாமல் ஒடுங்க செய்ய முயன்றது. ஆஸ்திரியா ஜூலை 28 அன்று செர்பியா மீது போர்ப்பிரகடனம் செய்து பெல்கிரேடை குண்டுவீசித் தாக்கியது. செர்பியாவிற்கு ஆதரவாக ரஷ்யா படைகளைத் திரட்டி குறுக்கிடக் கருதினாலும் அதற்கு முன்பு ஜெர்மனி தனது தாக்குதலைத் தொடுத்தது. அது ஆகஸ்ட் 1 அன்று ரஷ்யா மீதும், அதன் நட்பு நாடான பிரான்ஸ் மீதும் போரை பிரகடனம் செயதது.

போரில் நேரடியாகப் பங்கெடுக்க பிரிட்டன் தயக்கம் காட்டியது. ஆனால் ஆகஸ்ட் 3 அன்று பிரிட்டிஷாரின் உதவியை நாடி பெல்ஜிய மன்னரிடத்திலிருந்து கோரிக்கை ஒன்று வந்தது. பெல்ஜியம் எந்த கூட்டு நாடுகளுக்கும் ஆதரவு நல்காமல் தனித்திருந்து வந்த நாடாகும். ஆயினும் அதனை ஜெர்மனி தாக்கியது. பெல்ஜியத்தின் நடுநிலையை ஜெர்மனி கலைத்தமை தீவிரக் கண்ணோட்டத்திற்கு உட்படுத்தப்பட்டது. பிரிட்டன் ஆண்டாண்டுகளாக கடைபிடித்துவரும் கொள்கையில் பெரும் சக்திகள் எவையும் பெல்ஜியத்தின் கடற்கரையை தனது பாதுகாப்பிற்கு எதிராக பயன்படுத்திவிடக்கூடாது என்பதும் அதற்கு முக்கியமானதாகும். இத்தேசிய பாதுகாப்புக் கொள்கையை அடிப்படையாகக் கொண்டு பிரிட்டன் ஜெர்மனியை எதிர்த்துப் போரிட முடிவெடுத்தது. இதையடுத்து ஆகஸ்ட் 3 அன்று ஜெர்மனியை உடனடியாக பெல்ஜிய மண்ணைவிட்டு வெளியேறக் கூறி இறுதியறிக்கை ஒன்றை பிரிட்டன் அனுப்பியது. பிரிட்டனும், ஜெர்மனியும் ஆகஸ்ட் 4 முதல் போரை துவங்கின.

இ) போரின் போக்கு

போர் பரவுதல்

போரில் பிரிட்டன் இறங்கியதிலிருந்து மிக குறுகிய காலத்தில் பிற நாடுகளும் சண்டையிடத் தயாராகிவந்தன. செர்பியாவுக்கு ஆதரவாக ஆகஸ்ட் 7 அன்று மான்டிநீக்ரோ களமிறங்கி ஆஸ்திரியாவை எதிர்த்தது. இரண்டு வாரங்களில் தூரக்கிழக்கு பிரதேசங்களிலிருந்த ஜெர்மனியின் பகுதிகளை ஆக்கிரமிக்கும் நோக்கோடு ஜப்பான் ஜெர்மனி மீது போர்ப்பிரகடனம் செய்தது. அக்டோபர் மாதத்தில் கருங்கடலில் இருந்த ரஷ்யாவின் துறைமுகங்கள் மீது துருக்கி குண்டுகளை வீசியது. முக்கூட்டு நாடுகள் (Triple Entente Powers), ஆஸ்திரிய மற்றும் துருக்கியப் பகுதிகளைக் கொடுக்க வாக்களித்தமையால் மே 1915 வரை நடுநிலைவகித்த இத்தாலியும் போரில் இறங்கியது.

மைய நாடுகளும் நேச நாடுகளும்

போரில் இறங்கிய நாடுகள் மைய நாடுகள் என்றும் நேச நாடுகள் என்றும் இருவகைகளாகப் பிரிக்கப்பட்டன. ஜெர்மனி, ஆஸ்திரிய–ஹங்கேரி, துருக்கி, பல்கேரியா ஆகிய நாடுகள் மைய நாடுகள் எனப்பட்டன.

K39AW

மைய நாடுகளை எதிர்த்த ஒன்பது நாடுகளாவன ரஷ்யா, பிரான்ஸ், பிரிட்டன், இத்தாலி, அமெரிக்க ஐக்கிய நாடு, பெல்ஜியம், செர்பியா, ருமேனியா, கிரீஸ் ஆகியவைகளாகும். பெருவாரியான அமெரிக்கர்கள் நடுநிலைவகிப்பதையே விரும்பியதால் அமெரிக்க ஐக்கிய நாடு முதல் மூன்று ஆண்டுகளுக்கு தார்மீக அளவிலான ஆதரவையும் பொருளுதவியையும் (விலைமதிப்பில்லா) தளவாடங்களையும் பிரிட்டனுக்கும் பிரான்சுக்கும் நல்கியது.

12th_History_TM_Unit_13_V2.indd 229 02-01-2023 16:39:54


முதல் உலகப்போரின் போது ஐரோப்பா
வ
கி
தெ
மே
அளவையில் இல்லை
ஆசியா
காஸ்பியன் கடல்
கருங்கடல்
துருக்கி
கலிபோலி
ஏஜியன் கடல்
கிரீஸ்
ரஷ்யா
மாஸ்கோ
செயின்ட் பீட்டர்ஸ்பர்க்
பிரெஸ்ட்-லிடோவ்ஸ்க்
ருமேனியா
பல்கேரியா
செர்பியா
ஆஸ்திரிய-ஹங்கேரி
போஸ்னியா செராஜிவோ
இத்தாலி
ரோம்
ஜெர்மனி
டானென்பர்க்
வெர்டூன்
பாரிஸ்
காம்ப்ராய்
சோம்
மார்னே
போர்டியாக்ஸ்
பிரான்ஸ்
பெல்ஜியம்
லண்டன்
பிரிட்டன்
லூசிடானியா கப்பல் மூழ்குதல்
வடகடல்
ஜட்லாந்து
பால்டிக் கடல்
ஸ்வீடன்
நார்வே
பின்லாந்து
ஆர்க்டிக் பெருங்கடல்
அட்லாண்டிக் பெருங்கடல்
மத்தியதரைக் கடல்
ஸ்பெயின்
மாட்ரிட்
போர்ச்சுகல்
மொராக்கோ
ஆப்பிரிக்கா
மைய நாடுகள்
நேச நாடுகள்

www.tntextbooks.in

எல்லைகளில் நிகழ்ந்த போர்கள்

மேற்கு திசை, 1914

தாங்கள் நடுநிலைவகித்தும் தங்கள் மீது தாக்குதல் நடத்தியமைக்கு ஜெர்மானியர்களுக்கு முறைமையான கண்டனத்தைப் பதிவுசெய்ததைத் தவிர்த்து பெல்ஜிய நாட்டால் வேறெதுவும் செய்யமுடியவில்லை. இதனால் முன்னேறி வரும் ஜெர்மானியப் படைகளை தடுத்து நிறுத்தும் சுமைகலந்தப் பொறுப்பானது பிரான்ஸ் நாட்டின் மீது விழுந்தது. பிரான்சால் பெருமளவில் படையெடுத்து வந்து கொண்டிருந்தவர்களைத் தடுத்துநிறுத்த முடியவில்லை. ஜெர்மன் படைகளின் முதல் பிரிவு பாரிஸ் நகரிலிருந்து இருபது மைல்கள் தொலைவு வரை நெருங்கி வந்தது. பயங்கொண்ட பிரெஞ்சு அரசு போர்டியாக்ஸ் (Bordeaux) நகருக்குப் புலம்பெயர்ந்தது.

கிழக்கு திசை, 1914

கிழக்கு திசையில் ரஷ்யப்படைகள் பிரஷ்யாவின் கிழக்குப்பகுதி வரை ஊடுருவிச் சென்றன. டானென்பர்க் போரில் வான் ஹிண்டன்பர்க்கின் போர்த்திறத்தால் ரஷ்யா பேரிழப்புகளைச் சந்தித்தது. பின்னர் ஜெர்மானிய ஜெனரல் ஹிண்டன்பர்க் ரஷ்யர்களின் போலந்தை தாக்கப்படையெடுத்துச்சென்றார். இரு திசைகளிலும் பொறியில் சிக்கியது போன்ற நிலையிலிருந்த ஜெர்மனிக்கு கிழக்கில் தனது வெற்றிகள் யாவையும் ஒருங்கிணைத்துக் கொண்டு செல்லுமளவிற்குப் போதுமான பொருள்வளம் இருக்கவில்லை.

கிழக்குப்புறத்தில் நடந்த சண்டைகளில் நேச நாடுகளுக்குப் பேரழிவு ஏற்பட்டாலும் அது எதிரிகளின் கவனத்தை திசைதிருப்பவும், பிரான்ஸ் நாடு எதிர்கொண்ட அழுத்தத்தில் இருந்து அதனை விடுவிக்கவும் வாய்ப்பினை ஏற்படுத்தியது. மார்னே (Marne) போரில் (1914 செப்டம்பர் 6–13) பிரான்ஸ் முன்னேறிவந்த ஜெர்மனியின் படைகளை வெற்றிகரமாக தடுத்து நிறுத்தியது. ஜெர்மானியர்கள் செப்டம்பர் 13 அன்று ஏறக்குறைய ஐம்பது மைல் தொலைவிற்கு புறந்தள்ளப்பட்டிருந்தார்கள். இவ்வாறு பாரிஸ் நகர் காக்கப்பட்டது.

ஜெர்மானிய காலனிகள் தாக்கப்படல்

கடலில் பிரிட்டன் கொண்டிருந்த கட்டுப்பாடு ஜெர்மனியை அதன் காலனிய நாடுகளுக்கு அவசரகால உதவிகள் எதையும் எடுத்து செல்லமுடியாதபடி செய்தது. அதனால் ஜெர்மானிய கிழக்கு ஆப்பிரிக்கா நீங்கலாக பிறபகுதிகள் போர் துவங்கிய சில மாதங்களிலேயே ஆக்கிரமிக்கப்பட்டிருந்தன.

மேற்கு திசை, 1915

பிரான்சை நிர்மூலமாக்க ஜெர்மனி எடுத்த முதல் முயற்சி தோற்றதும், மேற்கு திசையிலிருந்த எதிர் படைகள் ஆங்கில கால்வாய் முதல் சுவிட்சர்லாந்து வரையான 650 கிலோமீட்டர் தூரத்திற்கு குழிதோண்டி அகழிப் போர்முறையைக் கைக்கொண்டது, முள்வேலியின் பின்னிருந்து இருதரப்பும் எந்திரத் துப்பாக்கிகளையும் பீரங்கிகளையும் கொண்டு தாக்கிக் கொண்டே நான்கு ஆண்டுகள் 'முற்றுகைப் போரை' (War of Attrition) நடத்தின.

அகழிப் போர்முறை: தோட்டாக்களும், குண்டுகளும் பறந்து கொண்டேயிருந்த போர்க்களங்களை உள்ளடக்கிய முதல் உலகப்போர் எழுப்பிய ஆபத்தான சூழல் வீரர்களைத் தங்கள் உடலையும், உயிரையும் பாதுகாக்கும் பொருட்டு நிலத்தைத்தோண்டி அதனுள் அடைக்கலம் தேட வைத்தது. துருப்புகளால் தோண்டப்பட்ட அகழிகளோ, குழிகளோ அவர்களை குண்டுகள் வெளியிட்ட தீயிலிருந்து பாதுகாக்க உதவின. ஜெர்மானியர்கள் தங்கள் காலாட்படைப் பிரிவிற்கு நன்றாகத் தோண்டப்பட்ட அகழிகளையும், அதில் மின்சாரம் மற்றும் படுக்கை வசதிகளையும் செய்து கொடுத்தது. உலகப்போரை அடையாளப்படுத்தும் அகழி முறையானது இரண்டு முதல் நான்கு அகழிகள் ஒன்றனுக்கு இணையாக மற்றொன்று செல்வதேயாகும். ஒவ்வொரு அகழியையும் எதிரிகள் சுட்டாலும் சில அடிகளுக்கு மேல் தோட்டா செல்லமுடியாதபடி நேர்கோட்டில் இல்லாமல் வளைந்துநெளிந்து வடிவமைத்திருந்தனர். அகழிகளின் முக்கிய வரிசைகள் ஒன்றோடு ஒன்று இணைக்கப்படவும், பின்புறத்தில் தொடர் இணைப்பு அகழிகளும் ஏற்படுத்தப்பட்டு அதன் வாயிலாக உணவு, வெடிபொருள்கள், புதிய துருப்புகள், கடிதங்கள், ஆணைகள் போன்றவை பரிமாற்றம் செய்யப்பட்டன.

சோம் (Somme) மற்றும் வெர்டூனில் (Verdun) நடந்த போர்கள், 1916

நீண்டகாலம் பெரிய அளவில் நடத்திச் செல்லப்படும் போர் பிரெஞ்சுக்காரர்களின் மனவுறுதியை குலைத்துவிடும் என்று ஜெர்மானியர்கள் கருதினார்கள். அதனால் புகழ்பெற்ற படையரணாக விளங்கிய வெர்டூனை 1916ஆம் ஆண்டின் பிப்ரவரி முதல் ஜூலை வரையான காலத்தில் அவர்கள் தாக்கினார்கள். இருதரப்பிலும் இழப்புகள் கடுமையாக இருந்தன. பிரான்சின் முக்கியப் பகுதி தாக்கப்பட்டபோது

12th_History_TM_Unit_13_V2.indd 231
02-01-2023 16:39:58

அதன் முக்கிய பாரம் பிரிட்டன் மீது விழுந்தது. ஜெர்மானியர்களுக்கு எதிரான பிரிட்டிஷாரின் தாக்குதல் சோம் நதிக்கரையில் நடந்தது. இரண்டு மில்லியன் மக்கள் கலந்துகொண்ட வெர்டூன் போரும், அதன்பின் நடந்த சோம் போருமே நேச நாடுகளின் பக்கமாக அதிர்ஷ்டத்தைத் திருப்பின.

ஜட்லாந்து, 1916

மிக முக்கியத்துவம் வாய்ந்த கடற்போர் மே 1916இல் டென்மார்க்கின் ஜட்லாந்து தீபகற்பத்திற்கு அருகில் நடந்தது. இப்போர் முடிவுபடாத ஒரு போராக இருந்தது. ஜட்லாந்து போர் முதல் உலகப்போரின் மிகப் பெரும் கடற்போராக நினைவில் கொள்ளப்படுகிறது. கடற்படைப் போர்கள் ஜெர்மானிய அரசு நீர்மூழ்கி கப்பல்களுக்கு தடையேற்படுத்தும் (Blockade) நோக்கம் கொண்ட நேச நாடுகளின் கப்பல்களைத் தடையில்லாமல் தாக்க அதிகாரம் வழங்கியபின் நின்றுபோனது.

Q கப்பல்களும் U படகுகளும்: முதல் உலகப்போரின் காலத்தில் ஜெர்மனி கொண்டிருந்த மிக அச்சுறுத்தும் ஆயுதம் நீர்மூழ்கிகள் அல்லது U–படகுகளாகும். பிரிட்டனின் கப்பல்கள் அனைத்தையும் மூழ்கடிக்கும் உத்தியை ஜெர்மானியர்கள் கடைபிடித்தார்கள். ஒரே மாதத்தில் 880,000 டன்கள் கனத்திற்கு கப்பல்கள் மூழ்கடிக்கப்பட்டிருந்தன. Q–கப்பல்கள் பிரிட்டனின் ஜெர்மனிக்கான பதிலடியாகும். பிரிட்டன் 200க்கும் மேற்பட்ட நீராவி கப்பல்களையும், மீன்பிடி கப்பல்களையும், சரக்கு படகுகளையும் கொண்டு வாணிப நடவடிக்கையை மேற்கொள்வது போன்று ஒரு மாயபிம்பத்தை ஏற்படுத்தி U–படகுகள் விளைவித்த ஆபத்துகளை எதிர்கொண்டது. பிரிட்டன் இக்கப்பல்களின் வாயிலாக ஜெர்மனியை தாக்குதலைத் தூண்டச்செய்து பின் மறைத்து வைக்கப்பட்டிருக்கும் ஆயுதங்களையும் படைபலத்தையும் கொண்டு பதிலடி கொடுக்கும் உத்தியைக் கையாண்டது.

கிழக்கு திசையில் போர், 1917

ரஷ்ய சார் மன்னரின் ஆட்சி பிப்ரவரி 1917இல் கவிழ்க்கப்பட்டமை கிழக்குப்புறத்தில் மத்திய சக்திகளுக்குப் பெரும் திருப்புமுனையாக அமைந்து அதன்பின் ஜெர்மனி தனது கவனத்தை மேற்குப்புறமாக குவிக்க வழிவகை செய்தது. அமைதியை விரும்பிய சோவியத் ரஷ்யா (1918 மார்ச் 3) ஜெர்மனியோடு பிரெஸ்ட்–லிடோவ்ஸ்க் உடன்படிக்கையில் கையெழுத்திட்டது.

கலிபோலி படையெடுப்பு 1915–16: டார்டெனெல்ஸ் படையெடுப்பு என்றும் கூறப்படும் இப்படையெடுப்பு தோழமை நாடுகளால் ஐரோப்பாவிலிருந்து ரஷ்யாவிற்கு செல்லும் கடற்வழிப் பாதையைக் கட்டுப்படுத்தும் நோக்கோடு நடத்தப்பட்டு தோல்வியில் முடிந்தது. போதுமான உளவு தகவல்களை சேகரிக்காததும் போரிடும் பகுதியின் தன்மையைத் தெளிவாகப் புரிந்து கொள்ளாததும் துருக்கியர்களின் கடும் எதிர்ப்பும் ஒருசேர்ந்து படையெடுப்பின் வெற்றியைத் தடுத்தன. தாங்கள் துவங்கிய இடத்திலிருந்து சிறிதளவே முன்னேறி கடும் சேதங்களை சந்தித்தும் அக்டோபர் மாதத்தின் பாதி வரை தோழமை நாடுகள் தவித்துக் கொண்டிருந்தன.

காம்ப்ராய் போர் (Battle of Cambrai): (நவம்பர்–டிசம்பர் 1917) பிரிட்டிஷாரால் அதிகஅளவில் டாங்கி வகை பீரங்கிகள் பயன்படுத்தப்பட்டமை பிரான்சின் காம்ப்ராயில் நடந்தப் போரிலாகும். திடீரென 340 டாங்கிகள் போர்முனையில் தோன்றியதும் ஜெர்மானியர்கள் பெரும் திகைப்பிற்கு உள்ளானார்கள்.

போரில் அமெரிக்காவின் நுழைவு

நீர்மூழ்கிகளின் படையெடுப்பு உக்கிரமானபோது அமெரிக்கர்கள் போரில் நுழைந்தார்கள். பிரிட்டிஷாரின் லைனர் வகை கப்பலான லூசிடானியா (Lusitania) மே 1915இல் ஜெர்மானிய நீர்மூழ்கி கப்பலால் மூழ்கடிக்கப்பட்டபோது அதிலிருந்த 128 அமெரிக்கர்கள் மாண்டனர். ஏறக்குறைய இரண்டாண்டுகளுக்கு நடுநிலைவகித்து சமாளித்துக் கொண்டிருந்த குடியரசுத்தலைவர் உட்ரோ வில்சன் இறுதியாக அமெரிக்க மக்கள் கொடுத்த அழுத்தத்திற்கு இணங்கி ஏப்ரல் 1917இல் ஜெர்மனி மீது போர்ப்பிரகடனம் செய்தார். தனது அளவிடமுடியாத வளங்களோடு அமெரிக்காப் போரில் இறங்கியது நேச நாடுகளின் வெற்றியை முன்பே உறுதி செய்தது போலாயிற்று.



லூசிடானியா

12th_History_TM_Unit_13_V2.indd 232 02-01-2023 16:39:58

www.tntextbooks.in

நட்பு நாடுகளால் ஜெர்மனி கைவிடப்படல்

மன்னர் பிரான்சிஸ் ஜோசப்பை தொடர்ந்து அரியணை ஏறிய பேரரசர் சார்லஸ் 1918 நவம்பர் 3 அன்று கையெழுத்திட்ட போர்நிறுத்த ஒப்பந்தம் ஆஸ்திரியாவை அதிகாரமட்டத்தில் இருந்து வெளியேற்றியது. போர் நிறைவுபெற ஒரு சில வாரங்களே இருந்த சூழலில், ஜெர்மனியின் நட்பு நாடுகளனைத்தும் அதனைக் கைவிட்டு விலகின. முதலில் சரணடைய முன் வந்த நாடு பல்கேரியாவாகும். துருக்கியர்கள் போர்நிறுத்த ஒப்பந்தம் ஒன்றில் கையெழுத்திடவே விரும்பினர். ஜெர்மனி இயலவே இயலாத விஷயமான தனித்தநிலையில் போரை முன்னெடுத்துச்செல்லும் நிலைக்குத் தள்ளப்பட்டது. அதன் துருப்புகளின் மனவுறுதி மிகவும் சரிவுற்றிருந்தது. தோழமை நாடுகள் ஏற்படுத்தியிருந்த தடுப்பரண்கள் ஜெர்மானிய மக்களுக்கு பெரும் சிரமங்களைக் கொடுத்தன. கெய்சர் அரியணையைத் துறந்து ஹாலந்திற்கு ஓட்டம் பிடித்தார். இதற்கிடையே சோஷலிச கட்சியின் தலைவரான ஃபிரெடிரிக் எபர்ட் (Fredrich Ebert) ரெய்க்ஸ்டாகில் (Reichstag) தற்காலிக அரசின் தலைமையை ஏற்று போர்நிறுத்த ஒப்பந்தம் ஒன்றில் கையெழுத்திட பேச்சுவார்த்தையைத் துவங்கினார். ஜெர்மனி நவம்பர் 11 அன்று சரணடைவதாக கையெழுத்திட்டது.

(ஈ) பாரிஸ் அமைதி மாநாடு

பாரிஸ் அமைதி மாநாடு

அமைதி மாநாடு ஜனவரி 1919இல் பாரிசில் துவங்கியது. நடைபெற்ற பேச்சுவார்த்தைகளில் உட்ரோ வில்சன் (அமெரிக்க ஐக்கிய நாடு), லாய்ட் ஜார்ஜ் (இங்கிலாந்தின் பிரதம அமைச்சர்), மற்றும் ஜார்ஜஸ் கிளெமென்ஸ் (பிரான்சின் பிரதம அமைச்சர்) ஆகியோர் முக்கியப் பங்காற்றினர். உட்ரோ வில்சனின் 14 சரத்து திட்டமே அமைதி பேச்சுவார்த்தைக்கு அடிப்படையாக அமைந்தது.

மற்றொரு போருக்கான அச்சுறுத்தும் சூழல் எழுந்ததால் ஜெர்மன் அரசு இச்சரத்துக்களை ஏற்றுக்கொள்ள கட்டாயப்படுத்தப்பட்டது. அமைதி உடன்படிக்கை 1919 ஜுன் 28 அன்று வெர்செய்ல்சில் உள்ள கண்ணாடி மாளிகையில் (Hall of Mirrors) கையெழுத்திடப்பட்டது.

குடியரசுத்தலைவர் உட்ரோ வில்சனின் முன்மொழிவு உள்ளடக்கியவைகளாவது: 1. திறந்த உடன்படிக்கைகள் வெளிப்படையாகவே உருவாக்கப்படுதல். 2. கட்டுப்பாடுகள் யாவும் கடல்வெளியில் தளர்த்தப்படல். 3. நாடுகளுக்கிடையே பொருளாதாரத் தடைகள் அகற்றப்படல். 4. போர்த்தளவாட உற்பத்தி குறைக்கப்படல். 5. காலனி சார்ந்த சிக்கல்களை சம்மந்தப்பட்ட மக்களின் விருப்பமறிந்து பாரபட்சம் காட்டாமல் தீர்விற்கு உட்படுத்தல். 6. ரஷ்யா தனக்கு ஏற்றதாகக்கருதும் எத்தகைய அரசையும் நிறுவ அதற்கு வாய்ப்பளிப்பதோடு அவ்வரசை பிறநாடுகள் ஏற்றுக்கொள்ளவும், ஆதரிக்கவும், வரவேற்கவும் செய்தல். 7. பெல்ஜியத்தை மீண்டும் சுதந்திர நாடாக்குதல். 8. அல்சேசையும், லொரைனையும் பிரான்சிடமே மீண்டும் ஒப்படைத்தல். 9. இத்தாலிய எல்லையை தேசிய அடிப்படையில் மறுநிர்ணயித்தல் 10. தேசிய சுயநிர்ணயம். 11. ருமேனியா, செர்பியா, மான்டிநீக்ரோ ஆகியவை மீண்டும் உருவாக்கப்பட்டு செர்பியாவிற்கு கடலை அடைய வழி ஏற்படுத்தல். 12. துருக்கி மக்களை தன்னாட்சி கொண்ட வளர்ச்சி முறைக்கு கொண்டு செல்வதோடு கருங்கடல் நீர்ச்சந்தியிலிருந்து மத்தியதரைக்கடல் வரை "நிரந்தரமாக திறந்துவிடல்." 13. போலிஷ் மக்களுக்கென்றே சுதந்திரமான போலந்து உருவாக்கப்பட்டு அதற்கு கடல் தொடர்பு ஏற்படுத்துதல். 14. பன்னாட்டு சங்கத்தை ஏற்படுத்தல்.

தனித்தனியான உடன்படிக்கைகள் வரையப்பட்டு அவற்றை நேச நாடுகள் ஆஸ்திரியாவுடனும் (செயின்ட் ஜெர்மெய்ன் உடன்படிக்கை), ஹங்கேரியுடனும் (டிரையனான்), பல்கேரியாவுடனும் (நியூலி), துருக்கியுடனும் (செவ்ரெஸ்) கையெழுத்திட்டுக் கொண்டன. துருக்கியோடு ஏற்படுத்தப்பட்ட ஒப்பந்தத்தை (செவ்ரெஸ் உடன்படிக்கை) சுல்தான் ஏற்றுக்கொண்டாலும், கமால் பாஷாவும், அவரது தொண்டர்களும் அதை எதிர்த்ததால் அது தோற்றது.

(உ) வெர்செய்ல்ஸ் ஒப்பந்தத்தின் கூறுகள்

வெர்செய்ல்ஸ் ஒப்பந்தத்தின் கூறுகள் சுருக்கமாகக் கீழ்வருமாறு: அல்சேசையும், லொரைனையும் ஜெர்மனி பிரான்சிடம் ஒப்படைக்க வேண்டும். சார் பள்ளத்தாக்கின் நிலக்கரி சுரங்கங்கள் பிரான்சிடம் வழங்கப்பட வேண்டும். சார் பகுதி 1935 வரை பன்னாட்டு சபையால் நிர்வகிக்கப்பட்டு, அதன்பின் பொது வாக்கெடுப்பின் வாயிலாக அப்பகுதி தொடர்ந்து பன்னாட்டு சபையால்

12th_History_TM_Unit_13_V2.indd 233 02-01-2023 16:39:58

நிர்வகிக்கப்படுவதா அல்லது ஜெர்மனியிடம் திரும்ப ஒப்படைக்கப்படுவதா அல்லது பிரான்சுக்கு பரிசளிப்பதா என்று முடிவெடுக்கப்பட வேண்டும். ரஷ்யா, ஆஸ்திரியா, ஜெர்மனி ஆகிய நாடுகளுக்குள் பிரிந்து கிடந்த போலந்து மாகாணங்களை ஒன்றிணைத்து பால்டிக் கடல்வெளிக்கு ஜெர்மானிய துறைமுகமான டான்சிக்கை (Danzig) உள்ளடக்கிப் பாதையமைத்து, அதனை பன்னாட்டு சபையின் அரசியல் கட்டுப்பாட்டில் விடுக்கவேண்டும். உரிமைகள், பட்டங்கள், கடல்வெளியில் ஜெர்மனி வைத்திருந்த பகுதிகள் யாவையும் தோழமை நாடுகளுக்கு விட்டுக்கொடுக்கக் கட்டாயப்படுத்தப்பட்டது. ஜெர்மானிய காலனிகள் யாவும் பன்னாட்டு சபையின் கட்டாயத்திற்குள் கொண்டுவரப்பட வேண்டும்.

பிரான்ஸ் மீதும், பெல்ஜியம் மீதும் புதிய தாக்குதலைத் தவிர்க்கும் பொருட்டு ரைன் பள்ளத்தாக்கில் அரண் அமைக்கவோ, படைகளைக் குவிக்கவோ ஜெர்மனிக்கு தடைவிதிக்கப்பட்டது. தோழமை நாடுகள் ரைன்லாந்தை ஆக்கிரமிக்க முடிவுசெய்யப்பட்டது. ரைன் நதியின் கிழக்குக்கரைப்பகுதிகள் இராணுவக் கட்டுப்பாடுகளிலிருந்து விடுவிக்கப்படுவதென்றானது. கிழக்கு ஐரோப்பாவில் பிரெஸ்ட்–லிடோவ்ஸ்க் உடன்படிக்கையின்கீழ் ரஷ்யா ஜெர்மனிக்கு விட்டுக்கொடுத்த மாகாணங்களான பின்லாந்து, எஸ்டோனியா, லாட்வியா, லிதுவேனியா ஆகியவற்றை சுதந்திர குடியரசுகளாக மாற்றவும் உத்தேசிக்கப்பட்டது. ஏறக்குறைய ஒரு நூற்றாண்டு காலத்திற்கு தனது இருப்பை இழந்திருந்த போலந்து பல போலிஷ் மாகாணங்களை இணைத்ததின் வாயிலாகப் புத்துயிர் பெற்றது.

ஜெர்மனி நிராயுதபாணியாக்கப்பட்டு அதன் நீர்மூழ்கிக் கப்பல்களையும், போர்க்கப்பல்களையும் இழக்கச் செய்யப்பட்டது. இராணுவப் பயன்பாட்டிற்காகவோ, கப்பற்படையின் தேவைக்கென்றோ ஜெர்மனி விமானங்களைக் கொண்டிருக்கக்கூடாது என்றதோடு அதன் தரைப்படை அதிகாரிகளையும், பிறப் பணியாளர்களையும் சேர்த்து 100,000 என்ற எண்ணிக்கையைத் தாண்டக்கூடாதென்றும் வரையறுக்கப்பட்டது. ஜெர்மனியும், ஆஸ்திரியாவும் ஐக்கியமாதல் தவிர்க்கப்பட்டு ஜெர்மனி ஆஸ்திரியாவின் சுதந்திரத்தை அங்கீகரிக்க வற்புறுத்தப்பட்டது.

ஜெர்மனியும் அதன் கூட்டு நாடுகளுமே போரில் விளைந்த இழப்புகளுக்கும், சேதங்களுக்கும் பொறுப்பெனக் கொள்ளப்பட்டது. போர் சேதங்கள் 1921இல் கணக்கிடப்பட்டு 33 பில்லியன் டாலர்கள் என மதிப்பிடப்பட்டது.

ஜெர்மானியப் பேரரசர் இரண்டாம் வில்லியம் மீது நன்னடத்தையை மீறியமை, ஒப்பந்தங்களின் புனிதத்தன்மையை மதிக்கத் தவறியமை போன்ற உச்சபட்ச குற்றங்கள் சுமத்தப்பட்டது. அவரை ஒரு தீர்ப்பாயத்தின் மூலம் விசாரிக்க முடிவுசெய்யப்பட்டது. ஆனால் நெதர்லாந்து அரசு பேரரசரை ஒப்படைக்க மறுத்துவிட்டதால் விசாரணை நடத்த எடுக்கப்பட்ட முடிவு கைவிடப்பட்டது.

13.4 ரஷ்யப் புரட்சியும் அதன் பாதிப்புகளும்

அறிமுகம்

முதல் உலகப்போரின் மிக முக்கிய விளைவு ரஷ்யப் புரட்சியாகும். ரஷ்ய சார் மன்னரின் அரசு முதல் உலகப்போர் ஏற்படுத்திய அழுத்தங்களை தாக்குப்பிடிக்க முடியாமல் திண்டாடியது. மக்கள் உணவின்றி தவித்தனர். நகரங்களும், சிற்றூர்களும் தொழிலாளர்களால் நிறைந்து வழிந்தபோது அவர்களுக்கு இருக்க இடமோ, உண்ண உணவோ வழங்க யாருமில்லாதநிலை உருவானது. முதல் புரட்சி (பிப்ரவரி புரட்சி) 1917ஆம் ஆண்டின் மார்ச் மாதத்தில் பெட்ரோகிரேட் நகரில் வேலைநிறுத்தங்களோடும், ஆர்ப்பாட்டங்களோடும் நடைபெற்றது. ஆனால் முதல் புரட்சி ரஷ்யாவின் எந்த ஒரு பிரச்சனையையும் தீர்க்கவில்லை. ரஷ்ய முடியாட்சி தூக்கியெறியப்பட்டாலும் இடைக்கால அரசு போரைத் தொடர்ந்து நடத்தவே செய்தது. இதனால் நவம்பர் மாதத்தில் இரண்டாவது பெரும் புரட்சி (அக்டோபர் புரட்சி) நடந்தேறி லெனின் தலைமையிலான போல்ஷ்விக் அமைப்பு அதிகாரத்தைக் கைப்பற்றி ரஷ்யாவில் பொதுவுடைமை அரசை நிறுவியது.

பிப்ரவரி புரட்சி

12th_History_TM_Unit_13_V2.indd 234 02-01-2023 16:39:58

அ) புரட்சியின் காரணிகள்

சார்களின் சர்வாதிகார ஆட்சி

பத்தொன்பதாம் நூற்றாண்டில் ரஷ்யா தொடர்ச்சியாக சில சர்வாதிகார சார் மன்னர்களின் ஆட்சிக்குட்பட்டு பின்தங்கிய நிலையிலேயே இருந்தது. ரஷ்யப் பொருளாதாரமும், சமூகமும் இவர்களின் ஆட்சியின்கீழ் தேங்கி வளர்ச்சியடையாமலிருந்தன. அடிமை வர்க்கத்தினர் ஒடுக்கப்பட்டு வருந்தத்தக்க வாழ்க்கை முறையைக் கொண்டிருந்தனர். யூத–ஒடுக்குமுறை உச்சத்திற்கு சென்று யூத மக்கள் கொன்று குவிக்கப்பட்டார்கள். தங்களின் கசப்புணர்வை பதிவுசெய்ய ஜனநாயக வெளிகள் இல்லாத நிலையிருந்தது. அறிஞர் பெருமக்கள், பல்கலைக்கழகப் பேராசிரியர்கள், மாணவர்கள், விஞ்ஞானிகள் மற்றும் எழுத்தாளர்கள் போன்றோர் தங்களின் கருத்துக்களை வெளிப்படுத்தியதற்காக சிறையிலடைக்கப்படவும் நாடுகடத்தப்படவும் இன்னபிற வகையிலும் இன்னல்களுக்கு ஆட்படுத்தப்பட்டார்கள். சார் அரசாட்சியின் வீழ்ச்சியை அனைத்து தரப்பினரும் ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

லெனின்

விளாடிமிர் இலிச் லெனின் (1870 – 1924): லெனின் மத்திய வோல்கா பகுதியில் பிறந்தார். அவரது மூத்த சகோதரர் 1887ஆம் ஆண்டு சார் மன்னரைக் கொலல முயன்ற குற்றத்திற்காகத் தூக்கிலிடப்பட்டார். கார்ல் மார்க்சின் சிந்தனைகளால் உந்தப்பட்ட லெனின் வெகுஜன நடவடிக்கையின் மூலமாகவே விடுதலை அடையமுடியும் என்று நம்பினார். அவர் செயின்ட் பீட்டர்ஸ்பர்க் நகரில் ஆலை ஊழியர்களின் வாசகவட்டத்திற்கு மார்க்சியம் குறித்து வகுப்புகள் எடுத்து காலத்தை செலவழித்துக் கொண்டிருந்தார். அவர் 1895இல் கைதுசெய்யப்பட்டு சைபீரியாவில் சிறைவைக்கப்பட்டார். பின்னர் 1900இல் விடுவிக்கப்பட்ட அவர் ஐரோப்பாவின் பெரு நகரங்களில் ஒரு விடுதியிலிருந்து மறுவிடுதிக்கென்று புலம்பெயர்ந்து கொண்டேயிருந்தார். இடதுசாரிகளில் இருந்து காங்கிரசிற்கு தேர்வு செய்யப்பட்ட 43 உறுப்பினர்களைக் கொண்ட முக்கிய கட்சியான சமூக ஜனநாயக கட்சி 1903இல் லண்டனுக்கு புலம்பெயர்ந்தது. அங்கு அமைப்பு, உத்தி போன்ற பிரச்சனைகளை முன்னிறுத்தி காங்கிரஸ் பிளவுபட்டது. போல்ஷ்விக் என்னும் ஒரு சிறு பெரும்பான்மையினை (போல்ஷின்ஸ்ட்வோ) லெனின் ஆதரிக்க அதுவே பின்னர் போல்ஷ்விக் கட்சியாக உருவெடுத்தது. சிறுபான்மையாக இருந்த அவரது எதிரணியினர் மென்ஷ்விக்குகள் என்றழைக்கப்பட்டார்கள்.

வேளாண்குடிகளின் நிலை

ரஷ்ய சமூகம் விவசாயத்தைப் பின்புலமாக கொண்டதாகும். ஏறக்குறைய மக்கள் தொகையின் சரிபாதி நிலத்தோடு பிணைக்கப்பட்ட அடிமைகளாகவே விளங்கினார்கள் ரஷ்ய விவசாயிகள் வாரத்தில் ஒருசில நாட்களாவது அங்கிருந்த நிலக்கிழார்களின் நிலத்தில் கூலியின்றி வேலை செய்ய கட்டாயப்படுத்தப்பட்டும், அவர்களின் அனுமதியைப் பெற்ற பின்பே திருமணஉறவை ஏற்படுத்திக் கொள்ளவும் நிர்பந்திக்கப்பட்டனர். சிறு குற்றங்களுக்காக அடிமைகள் கடுந்தண்டனைகளைப் பெற்றார்கள். மன்னர் முதலாம் நிக்கோலஸின் ஆட்சிக்காலத்தில் ரஷ்யாவின் பல்வேறு பகுதிகளில் ஐநூறுக்கும் மேற்பட்ட கலவரங்கள் அடிமைகளால் நடத்தப்பட்டாலும் அவர்கள் கொடூரமான முறையில் நசுக்கப்பட்டார்கள். மன்னர் இரண்டாம் அலெக்ஸாண்டர் 1861இல் விடுதலைஆணை ஒன்றைப் பிறப்பித்து அவர்கள் யாவரையும் அடிமைநிலையிலிருந்து விடுவித்தார். ஆனால் அவர்கள் மேற்கொண்டு வாழ்க்கையை முன்னெடுத்துச் செல்ல ஆதாரமாக இருக்கக்கூடிய நிலம் அவர்களுக்கு வழங்கப்படவில்லை. இதனால் புரட்சிக்கான எரிபொருளாக விவசாயிகள் விளங்கினார்கள்.

தொழில்வளர்ச்சி தேக்கமும், பின்தங்கிய சூழலில் தொழிலாளர் வாழ்க்கையும்

ரஷ்யா காலதாமதமாகவே தொழிற்துறையை உருவாக்கியது. இதனால் பிற ஐரோப்பிய நாடுகளைக் காட்டிலும் அது பின்தங்கியேயிருந்தது. ரஷ்ய ஊழியர்கள் ஒடுக்குமுறைக்கு உட்படுத்தப்பட்டிருந்தார்கள். தொழிற்சங்கங்களும், வேலைநிறுத்தங்களும் முற்றிலுமாக தடை செய்யப்பட்டிருந்தன. ரஷ்யாவின் தொழிலாளர் வர்க்கம் தங்கள் எதிர்ப்பை வெளிப்படுத்த ஏதாவது ஒரு வாய்ப்பு கிடைக்காதா எனக் காத்திருந்தனர்.

நிகிலிசவாதிகளின் பங்கு

ரஷ்ய நாட்டை எதிர்த்து இரக்கத்திற்கு சிறிதும் இடங்கொடுக்காமல் போரைத்துவக்கிய இளையோரையும் தீவிரவாத செயல்பாட்டு முறையை ஆதரிப்போரையும் உயர்குடிப்பிறப்பை

12th_History_TM_Unit_13_V2.indd 235 02-01-2023 16:39:59

சாராதோர்களையும் அவர்களின் எதிரிகள் நிகிலிசவாதிகள் என்று அழைத்தார்கள். மன்னர் இரண்டாம் அலெக்ஸாண்டரை கொலை செய்ய எடுக்கப்பட்ட முதல் முயற்சி தோற்கவும், அதனைத் தொடர்ந்து நடத்தப்பட்ட எண்ணிலா விசாரணைகளில் சந்தேகத்துக்குரிய இருபால் அறிவார்ந்த மக்களையும் நிகிலிசவாதிகள் என்று புனைந்து அவர்களை சைபீரிய சிறைக்கு அனுப்பியபோதும் புரட்சி நடவடிக்கைகள் ரஷ்யாவில் குறையாமல் தொடர்ந்துகொண்டே இருந்தது. பாதிக்கப்பட்ட சிறுபான்மையினரான யூதர்களும் போலந்து நாட்டு பூர்வகுடியினரும் வந்துசேர துவங்கியதும் புரட்சிப்படையின் எண்ணிக்கை வேகமாகப் பெருகியது.

பல்லாண்டுகால கட்டியெழுப்புதலின் வடிவமான சமூக அமைப்பை எதிர்க்கும் உணர்வின் பிரதிநிதித்துவமே நிகிலிசமாகும். நிகிலிசம் நாட்டின் அரசு, கிறித்தவ ஆலயம், குடும்பம் போன்ற நிறுவனங்கள் கொண்டிருந்த அதிகாரத்தை மறுத்தது. அதன் நம்பிக்கைகள் விஞ்ஞான அடிப்படையிலான உண்மையைச் சுற்றியே அமைந்திருந்தன.

மார்க்சியமும் அதன் தாக்கமும்

சோஷலிசப் புரட்சிக்கு, உழைக்கும் மக்கள் (Proletariat) எவ்வாறு அவசியமோ அது போலவே நடுத்தர மக்களின் (Bourgeoisie) இருப்பும் கட்டாய முன்தேவை என மார்க்சும், ஏங்கல்சும் கருதினர். பின்தங்கிய ரஷ்யாவில் ஒரு வெற்றிகரமான சோஷலிசப் புரட்சி ஏற்பட வாய்ப்பிருப்பதாக அவர்கள் கருதவில்லை. எனினும், அரசின்மைவாதம் போன்ற பிற தீவிரவாதப்போக்கு கொண்ட சோஷலிச சிந்தனைகளைவிட ஒடுக்கப்பட்ட வாழ்க்கைச்சூழல் அமையப் பெற்றிருந்தவிடத்தில் மார்க்சியமே செழித்து வளர்ந்தது. அதனால் மார்க்சிய கூட்டமே வலுப்பெற்று முன்னேற பெரும் நிறுவன ஆற்றல் கொண்டிருந்த லெனின் அதன் கவர்ந்திழுக்கும் திறன் பெற்ற தலைவரானார்.

சார் மன்னர் இரண்டாம் நிக்கோலசின் சர்வாதிகாரம்

ரோமனோவ் வம்சத்தை சேர்ந்த சார் மன்னர் இரண்டாம் நிக்கோலஸ் அரசாட்சி அனுபவம் சிறிதும் இல்லாதிருந்தார். அவரது மனைவியான அலெக்ஸாண்ட்ரா ஆதிக்க மனோபாவம் கொண்டவர் என்பதோடு நிக்கோலஸ் அவரின் ஆழ்ந்த தாக்கத்தின் கீழிருந்தார். காலனிய விரிவாக்கப் போட்டியில் விடுபட்டுவிடக்கூடாது என்று கருதிய நிக்கோலஸ் அதற்காக மஞ்சூரியாவிற்குள் நுழையும்பொருட்டு 1904இல் தூண்டியமையே ஜப்பானை எதிர்த்த போராக சென்றுமுடிந்தது. ரஷ்யாவின் தோல்வி அந்நாட்டினுள் வேலை நிறுத்தங்களையும் கலவரங்களையும் உருவாக்கியது. சார் மன்னர் மீதான எதிர்ப்பு வலுத்தது.

இரண்டாம் நிக்கோலஸ்

அருட்தந்தை கேப்பன் 1905 ஜனவரி 23 அன்று பெண்கள், குழந்தைகள் மற்றும் பிற மக்கள் கலந்துகொண்ட ஒரு பேரணியை நடத்தினார். பிரதிநிதித்துவ அடிப்படையிலான தேசிய சட்டமன்றத்தையும், வேளாண் மற்றும் தொழிற்துறை கொள்கைகளில் மாற்றத்தையும் கோரி ஆயுதம் ஏந்தாமல் அமைதியாக ஊர்வலம் நகர்ந்து கொண்டிருந்தது. ஆனால் காவல்துறையினரும், இராணுவவீரர்களும் அவர்களை நோக்கி சுட்டனர். தாக்குதலில் நூற்றுக்கணக்கானோர் செத்துமடிந்தனர்; ஆயிரக்கணக்கானோர் குண்டடிபட்டனர். இச்சம்பவம் (இரத்த ஞாயிறு (Bloody Sunday) என்று பொதுவில் அடையாளப்படுத்தப்பட்ட சம்பவம்) கலவரத்திற்கும் வேலைநிறுத்தங்களுக்கும் கட்டுப்பாடற்ற வன்முறை நிகழ்வுகளுக்கும் வழிவகுத்து மாஸ்கோவின் கவர்னர் ஜெனரல் குண்டுவீசி கொல்லப்படும் வரை நீண்டது.

நிக்கோலஸ் ஒரு அரசியல் சாசனத்தை வழங்கவும் டூமா என்ற பாராளுமன்றத்தை உருவாக்கவும் நிர்ப்பந்திக்கப்பட்டார். இவற்றால் திருப்தியடையாத இடதுசாரி கட்சியினர் செயின்ட் பீட்டர்ஸ்பர்க் நகரில் சோவியத் (council) என்னும் தொழிலாளர் பிரதிநிதி அவையை உருவாக்கினர். இது போன்ற சோவியத்துகள் பிற நகரங்களிலும் உருவாக்கப்பட்டன. டூமா நடுத்தர மக்களுக்காக அரசில் குரல் கொடுத்தது. இதனால் மிதவாதிகள் அரசுக்கு ஆதரவு நல்கினாலும் இடதுசாரிகள் எதிர்ப்பைத் தொடர்ந்தார்கள். ஆனால் டூமா எப்போதெல்லாம் சார் மன்னரின் முடிவுகளை எதிர்த்ததோ அப்போதெல்லாம் அது கலைக்கப்பட்டு மறுதேர்தல் நடத்தப்பட்டது. அரசின் கொள்கைகளில் மாற்றம் காணாமலே நான்காவது டூமா 1917ஆம் ஆண்டின் புரட்சியோடு கலைக்கப்பட்டது.

சார் மன்னர் எதிர்ப்பும், டூமா கலைப்பும்

பிரான்சோடும் பிரிட்டனோடும் இணைந்து ரஷ்யா செயலாற்றிக் கொண்டிருந்ததால் முதல்

12th_History_TM_Unit_13_V2.indd 236 02-01-2023 16:39:59

உலகப்போரின் துவக்கத்தில் மன்னராட்சி தற்காலிகமாய் பலம் பெற்றிருந்தது. தனது அரண்மனைக்குள் புரட்சி மேற்கொள்ளப்பட்டு மாற்றங்கள் நிகழப்போவதாக கிளம்பிய புரளிகளை நம்பிய மன்னர் நிக்கோலஸ் தானே படைகளின் உச்ச தளபதியாக (Commander-in-Chief) பொறுப்பேற்று நிலைமையை மேலும் குழப்பினார். அரண்மனை நிகழ்வுகளிலும் சார் மன்னர் மீதும் சார் அரசியார் மீதும் செல்வாக்குக் கொண்டிருந்த ரஸ்புட்டின் என்பவர் கொல்லப்பட்டதும் (1916) மேலும் குழப்பங்கள் வலுத்தன. செயின்ட் பீட்டர்ஸ்பர்க் சோவியத்தின் உறுப்பினர்கள் கைது செய்யப்பட்டார்கள்.

புகழ்பெற்ற கிளர்ச்சிகள்

சோஷலிஸ்டுகள் 1917 பிப்ரவரி 23 அன்று சர்வதேச உழைக்கும் பெண்கள் தினத்தை அனுசரித்துக் கொண்டிருந்தபோது சார் மன்னர் யாராலும் அசைக்கமுடியாவண்ணம் தம் நிலையைத் தக்கவைத்துக் கொண்டிருந்தார். ஆனால் மார்ச் 2 அன்று அவர் அரியணை இறங்கும் நிலை ஏற்பட்டது. வேலைநிறுத்தப் போராட்டத்திற்கு யாரும் அழைப்பு விடுக்கவில்லையென்றபோதும் இராணுவத்தில் பணிபுரியும் கணவர்களைக் கொண்ட பெண் ஜவுளி தொழிலாளர்கள், உணவுப் பற்றாக்குறையை எதிர்கொண்டதால் வேலைநிறுத்தப் போராட்டத்தில் இறங்கவும், ரஷ்யப் பேரரசின் தலைநகரானப் பெட்ரோகிரேட் நகரின் வீதிகளில் பேரணி செல்லவும் சூழ்நிலை அவர்களை உந்தித்தள்ளியது. "பணியாளர்களுக்கு உணவு" என்ற கோரிக்கையை முன்னிறுத்தி தீவிரவாத மனநிலை கொண்ட ஆயிரக்கணக்கான பெண் ஊழியர்கள் வீதிகளில் போராடிக் கொண்டே தொழிற்சாலைப் பணியாளர்களை நோக்கி "வெளியே வாருங்கள்!" "பணிபுரிவதை நிறுத்துங்கள்!" என்று உரத்த குரலெழுப்பினர். இதன் எதிரொலியாக மறுநாள் (பிப்ரவரி 24) நகரின் 400,000 ஊழியர்கள் போராட்டக்களத்தில் இறங்கினர்.

சார் மன்னர் பதவி இறங்குதல்

அரசு இராணுவத்தைக் கொண்டு வேலைநிறுத்தப் போராட்டத்தை ஒடுக்க முயன்றது. ஆனால் வேலைநிறுத்தப் போராட்டமும், பேரணிகளும் நான்காம் நாளை எட்டியபோது இராணுவப் பணிமனைகளிலும் கலகம் வெடித்தது. சார் மன்னர் இராணுவ சட்டத்தை நடைமுறைப்படுத்தினார். ஆனால் அவரது ஆணையை ஒலிபரப்ப ஒருவர்கூடப் பணியில் இல்லாத சூழலில் நகரில் இச்செய்தி பரவவில்லை. சார் மன்னர் பெட்ரோகிரேட் நகருக்குத் திரும்ப முயன்றார். அவர் வந்த புகைவண்டியை இருப்புப்பாதை ஊழியர்கள் வழியிலேயே தடுத்துநிறுத்தினர். இதனால் அச்சங்கொண்ட பெட்ரோகிரேடின் சில இராணுவ தளபதிகளும் பிற தலைவர்களும் சார் மன்னரை பதவிதுறக்க அறிவுறுத்தினர். மக்களின் எழுச்சி நடந்து ஒரு வாரகாலம் சென்றநிலையில் மார்ச் 15 அன்று மன்னர் இரண்டாம் நிக்கோலஸ் பதவி துறந்தார்.

இடைக்கால அரசு

அரசின் செயல்பாடுகளை எடுத்து நடத்த இரு இணை அமைப்புகள் இருந்தன. முதலாவதானது சொத்துடைமையாளர்களைப் (Propertied Class) பிரதிநிதித்துவப்படுத்தி பழைய அரசின் டூமாவில் அங்கம் வகித்த நடுத்தர வர்க்க அரசியல்வாதிகளைக் கொண்டது. மற்றொன்றானது தொழிலாளர்களை பிரதிநிதித்துவப்படுத்தும் தொழிலாளர் குழு அல்லது சோவியத் அமைப்பின் உறுப்பினர்களைக் கொண்டது. சோவியத் உறுப்பினர்கள் தலைமறைவாயிருந்த இடதுசாரிகளின் செல்வாக்கிற்கு உட்பட்டே செயல்பட்டார்கள். டூமாவில் இருந்தவர்கள் சோவியத்துகளின் ஒப்புதலைப்பெற்று இடைக்கால அரசை நிறுவினார்கள். இம்முடிவில் சோவியத்துக்குள் அதிக எண்ணிக்கையிலிருந்த மென்ஷ்விக்குகளால் கொள்ளப்பட்டதேயன்றி சிறுபான்மை போல்ஷ்விக்குகள் முடிவெடுக்காமலிருந்தார்கள். லெனினின் வரவால் அங்கிருந்த நிலைமை முற்றிலுமாக மாறியது.

இடைக்கால அரசின் தோல்வி

புரட்சிவெடித்தபோது லெனின் சுவிட்சர்லாந்தில் இருந்தார். தொடர்ந்து போராடுதலையே லெனின் விரும்பினார். "அனைத்து அதிகாரங்களும் சோவியத்துகளுக்கே" என்ற அவரின் தாரகமந்திரம் தொழிலாளர் தலைவர்கள் யாவரையும் அவர் பக்கம் திருப்பியது. போர்க்காலப் பற்றாக்குறைகளால் பாதிக்கப்பட்ட மக்களை 'ரொட்டி, அமைதி, நிலம்' என்ற முழக்கம் ஈர்த்தது.

ஆனால் இடைக்கால அரசு இருபெரும் தவறுகளைப் புரிந்தது. நில மறுவழங்கல் குறித்த கோரிக்கையின் முடிவை அது காலதாமதப்படுத்தியதோடு போரைத் தொடர்ந்து நடத்துவது குறித்த விஷயங்களிலும் இழுத்தடித்தது. ஏமாற்றமடைந்த விவசாய வீரர்கள் தங்களின் பணியை விடுத்து நில ஆக்கிரமிப்பாளர்களோடு சேர்ந்துகொண்டார்கள். இது போல்ஷ்விக்குகள் தலைமையில் பெட்ரோகிரேடில் நடந்து கொண்டிருந்த கிளர்ச்சியைத் தீவிரப்படுத்தியது. அரசு

ப்ராவ்தா என்ற செய்தித்தாளை தடைசெய்ததோடு பின்லாந்தில் மறைந்திருந்த லெனின் தவிர பிற போல்ஷ்விக்குகளை கைதுசெய்தது. லியோன் ட்ராட்ஸ்கியும் கைது செய்யப்பட்டார். தாராளவாதிகளும் மிதவாத சோஷலிஸ்டுகளும் ஏற்படுத்திக்கொண்ட கூட்டணியின் பின்புலத்தில் கெரன்ஸ்கி பிரதம அமைச்சரானார். ஆட்சிக்கவிழ்ப்பு முயற்சி ஒன்றை எதிர்கொண்ட கெரன்ஸ்கி அரசையும், சோவியத்துகளையும் ஒடுக்கி நீக்க நினைத்தார். ஆனால் அவரது முயற்சிகள் சோவியத்துகளால், அதிலும் குறிப்பாக மக்களிடையே பிரபலமடைந்து கொண்டிருந்த போல்ஷ்விக்குகளால் முறியடிக்கப்பட்டன

ப்ராவ்தா என்ற ரஷ்ய சொல்லுக்கு "மெய்" என்று பொருள். இதுவே சோவியத் ஐக்கியத்தின் பொதுவுடைமை கட்சிக்குரிய அங்கீகரிக்கப்பட்ட செய்தித்தாளாக 1918 முதல் 1991 வரை இருந்தது.

லெனின் தலைமையில் போல்ஷ்விக்குகள் பொறுப்பேற்றுக்கொள்ளுதல்

அக்டோபர் மாதத்தில் லெனின் போல்ஷ்விக் மத்தியகுழுவிடம் உடனடியாக ஒரு புரட்சியை நடத்துமாறு அறிவுறுத்தினார். ட்ராட்ஸ்கி முழுமையான செயல்திட்டமொன்றைத் தயாரித்தார். குளிர்கால அரண்மனை, பிரதம அமைச்சரின் தலைமைச் செயலகம் உள்ளிட்ட அரசின் முக்கியத்துவம் வாய்ந்த கட்டடங்கள் யாவும் நவம்பர் 7 அன்று ஆயுதமேந்திய ஆலை ஊழியர்களாலும், புரட்சிப்படைகளாலும் கைப்பற்றப்பட்டன. புது பொதுவுடைமை அரசு 1917 நவம்பர் 8 அன்று பதவியேற்றது. அதன் தலைவராக லெனின் வீற்றிருந்தார். போல்ஷ்விக் கட்சியின் பெயர் ரஷ்ய கம்யூனிச கட்சி என்று மாற்றப்பட்டது.

புரட்சியின் விளைவுகள்

பிரெஸ்ட்–லிடோவ்ஸ்க் உடன்படிக்கை

இடைக்கால அரசின் வீழ்ச்சிக்கு மிக முக்கியமான காரணியாக அது உலகப் போரில் இருந்து பின்வாங்காமல் இருந்ததே என லெனின் கருதினார். இதனால் லெனின் உடனடியாக அமைதி ஏற்படுத்துவதற்கான நடவடிக்கைகளில் இறங்கினார். புது அரசை நிர்மாணிப்பதில் தன் முழுகவனத்தை செலுத்திக் கொண்டிருந்த அவர் மத்திய சக்திகள் விதித்த கடுமையான நெறிமுறைகளை உதாசீனப்படுத்தினார். அதனால், பிரெஸ்ட்–லிடோவ்ஸ்க் உடன்படிக்கை மார்ச் 1918இல் கையொப்பமானது.

ரஷ்யப் புரட்சி ஏற்படுத்திய பாதிப்புகள்

புரட்சி உலகம் முழுவதிலும் வாழும் மக்களின் நினைவுகளில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது. பல்வேறு நாடுகளிலும் பொதுவுடைமை கட்சி உருவாக்கப்பட்டது. சோவியத் ஐக்கியம் காலனி ஆட்சிக்குட்பட்ட நாடுகளை தங்களின் விடுதலைக்காகப் போராட அறிவுறுத்தி அந்நாடுகளுக்குத் தேவையான உதவிகளைச் செய்தது. நிலவுடைமை சீர்திருத்தம், சமூகநலன், தொழிலாளர் உரிமைகள், பாலின சமத்துவம் போன்ற முக்கியத்துவம் பெற்ற கூறுகள் உலகம் முழுவதும் விவாதப்பொருளானது.

புரட்சிக்குப்பின் வந்த பத்தாண்டுகளில் அந்நாடு காட்டிய அதிவேக வளர்ச்சி வளர்ந்துவரும் நாடுகளுக்கெல்லாம் உத்வேகமளித்ததோடு, முதலாளித்துவத்திற்கு மாற்றான ஒரு முறையையும் அறிமுகப்படுத்தியது. எழுத்தறிவின்மையும், வறுமையும் மிக குறுகிய காலத்தில் ஒழிக்கப்பட்டன. தொழிற்துறையும், வேளாண்மையும் பாராட்டப்படுமளவிற்கு முன்னேற்றம் காட்டியதோடு பொருளாதாரப் பெருமந்தம் உலகின் பிற பகுதிகளைக் கடுமையாக பாதித்தபோது ஐக்கிய ரஷ்யாவை அது எந்தவகையிலும் பாதிக்கவில்லை. பெண்களுக்கு சமஉரிமை வழங்கப்பட்டது. தொழிற்துறையும், வங்கிகளும் நாட்டுடைமையாக்கப்பட்டன. நிலம் சமூகவுடைமையாகக் கொள்ளப்பட்டு ஏழ்மை நிலையிலிருந்த விவசாயிகளுக்குப் பிரித்து வழங்கப்பட்டது.

13.5 பன்னாட்டு சங்கம்

அமெரிக்க குடியரசுத்தலைவர் உட்ரோ வில்சனின் சிந்தனையில் உதித்ததே பன்னாட்டு சங்கம் ஆகும். வில்சன் உலக நாடுகள் யாவும் கூடி ஒத்துழைப்பை நல்கி உலக அமைதியை காக்க முற்படுவதற்கான தளம் ஒன்று இருப்பதன் அவசியத்தையுணர்ந்து அதனை ஏற்படுத்த விரும்பினார். பாரிஸ் அமைதி மாநாட்டின்போது முதல் உலகப்போர்நிறுத்த உடன்படிக்கைகள் அனைத்தையும் உள்ளடக்கி

12th_History_TM_Unit_13_V2.indd 238 02-01-2023 16:39:59

சங்கம் ஏற்படுத்துவதற்குரிய பொதுஆவணம் (Covenant) உருவாக்கப்பட்டது. அவர் ஜெர்மனியின் தோல்வியைத் தொடர்ந்து இராணுவவாதம் மறுக்கப்படவும், அதையடுத்து உறவுகளை சீரற்ற அதிகார சமநிலைக்குத் தள்ளாமல் சுமுகமாகக் கொண்டு செல்லும் வகையில் உறுப்புநாடுகளின் அமைப்பு உருவாக்கப்படவும் வேண்டும் என நினைத்தார். அதனால் வில்சன் தனிப்பட்ட ஆர்வம் கொண்டு இச்செயல் நடந்தேறுவதைக் காண முற்பட்டார்.

பன்னாட்டு சங்கம்

அமைப்பு மற்றும் அங்கம்

இவ்வமைப்பிற்கான அரசியல் சாசனத்தை ஏற்படுத்தும்போது அமெரிக்கா மற்றும் பிரிட்டனின் சிந்தனைகளே மேலோங்கி நின்றன. சங்கம் ஐந்து உறுப்புகளைக் கொண்டிருந்தது: அவை பொதுச்சபை, குழு, செயலகம், நிரந்தர நீதிமன்றம் மற்றும் பன்னாட்டு தொழிலாளர் அமைப்பு ஆகியவைகளாகும். ஒவ்வொரு உறுப்புநாடும் அவையில் பிரதிநிதித்துவம் கொண்டிருந்தன. அவையின் உறுப்பினர்கள் பொதுக்கொள்கைகள் குறித்து விவாதித்து முடிவுகளை ஒருமனதாக எடுக்க முற்பட்டனர். குழுவே சங்கத்தின் நடைமுறைப்படுத்தும் (Executive) உறுப்பாக விளங்கியது. பிரிட்டன், பிரான்ஸ், இத்தாலி, ஜப்பான், அமெரிக்க ஐக்கிய நாடு ஆகியவையே குழுவின் நிரந்தர உறுப்பினர்களாக ஆரம்பத்தில் பிரகடனப்படுத்தப்பட்டன. ஒவ்வொரு உறுப்பினருக்கும் ஒரு வாக்கு மட்டுமே என்ற நிலையில், அனைத்து முடிவுகளும் ஒரு மனதாக எடுக்கப்பட வேண்டும் என்பதால், நடைமுறையில் சிறுதேசங்களும் தடுப்பதிகாரம் (Veto power) கொண்டிருந்தன.

செயலகம்

பன்னாட்டு சங்க செயலகம் ஜெனீவாவில் அமைக்கப்பெற்று அதன் முதல் பொதுச்செயலர் பதவியை பிரிட்டனின் சர் எரிக் ட்ரம்மோன்ட் ஏற்றுக்கொண்டார். தி ஹேக் நகரில் பன்னாட்டு நீதிமன்றம் அமைக்கப்பட்டது. பன்னாட்டு தொழிலாளர் அமைப்பு ஒரு செயலகத்தையும், ஒரு பொது மாநாட்டையும் உள்ளடக்கியதாக இருந்ததோடு, ஒவ்வொரு நாட்டிற்கும் நான்கு பிரதிநிதித்துவத்தை வழங்கியிருந்தது.

சங்கத்தின் குறிக்கோள்கள்

பன்னாட்டு சங்கத்தின் இருமுனை குறிக்கோள் என்பது போரைத் தவிர்ப்பதும், உலக அமைதியை நிலைநிறுத்தி பொருளாதார மற்றும் சமூகத் தளங்களில் ஒத்துழைப்பை மேம்படுத்துவதுமாகும். சங்கம் எந்த ஒரு சிக்கலையும் பெரிதாக்கிவிடாமல் ஆரம்பகட்டத்திலேயே சமரசப்படுத்தியும், மத்தியஸ்தராக செயல்பட்டும் தீர்க்க முனைந்தது. மத்தியஸ்தத்தை மீறி போர் ஏற்பட்டால் போர்தொடுப்போர் மீது உறுப்புநாடுகள் முதலில் பொருளாதாரத் தடைகளை விதித்தும், பின் இராணுவத்தடையை விதித்தும் செயலாற்ற வேண்டும் என கொள்ளப்பட்டது. இக்குறிக்கோளை எட்ட ஆரம்பம் முதற்கொண்டே சிக்கல் ஏற்படக் காரணமாக கூறப்படுவது மூன்றுப் பெரும் சக்திகளான அமெரிக்க ஐக்கிய நாடு (உறுப்பினராகமல் இருந்தது), ஜெர்மனி (தோற்கடிக்கப்பட்ட நாடு) மற்றும் ரஷ்யாவின் பங்கெடுப்பு இல்லாமல் போனதேயாகும். ஜெர்மனி 1926லும் ரஷ்யா 1934லும் சங்கத்தில் இணைந்தன. ஆனால் ஜெர்மனி 1933இல் உறுப்பினர் பதவியை இராஜினாமா செய்துவிட, ரஷ்யாவோ 1939இல் சங்கத்திலிருந்து வெளியேற்றப்பட்டது.

சங்கத்தின் செயல்பாடுகள்

சங்கம் 1920 முதல் 1925 வரையான காலத்தில் பல சிக்கல்களைத் தீர்த்துவைக்க அழைக்கப்பட்டிருந்தாலும் குறிப்பாக மூன்று பிரச்சினைகளை அது வெற்றிகரமாக அணுகியிருந்தது. ஆலந்து தீவுகளின் இறையாண்மை மீது ஸ்வீடனும், பின்லாந்தும் 1920இல் உரிமைகோரி சர்ச்சையைக் கிளப்பின. சங்கம் அத்தீவு பின்லாந்தையே சென்றுசேர நெறி ஏற்படுத்தியது. அடுத்த ஆண்டு மேல்புற சைலேசியாவை முன்னிறுத்தி போலந்தும், ஜெர்மனியும் சர்ச்சையைக் கிளப்பியபோது சங்கம் அதில் தலையிட்டு வெற்றிகரமாகத் தீர்த்துவைத்தது. மூன்றாவது சிக்கல் 1925இல் கிரீசுக்கும், பல்கேரியாவிற்கும் இடையே நடந்ததாகும். கிரீஸ் பல்கேரியா மீது படையெடுத்தபோது சங்கம் போர்நிறுத்த ஆணையை வெளியிட்டு ஆக்கிரமிப்பை நிறுத்தியது. விசாரணை மேற்கொண்ட பின் கிரீசை நஷ்டஈடு வழங்க ஆணையிட்டது.

சர்வதேச அபினி பரிமாற்றத்தைக் குறைத்ததிலும், ஏழ்மையிலிருந்த நாடுகளில் ஆபத்தான நோய்கள் பரவுதலைத் தடுத்ததிலும் சிறப்பான பங்காற்றி சங்கம் தன் இருப்பை

www.tntextbooks.in

நியாயப்படுத்திக் காட்டியது. அதன் முகமைகள் தொழிலாளர் குறித்தும், வணிக சூழல் குறித்தும் பெருமளவில் தரவுகளை உலகம் முழுவதிலுமிருந்தும் சேமித்துவைத்தன. சர்ச்சைக்குரியப் பகுதிகளில் அது பொதுவாக்கெடுப்பு நடத்தியதோடு அகதிகளுக்கு வாழ்விடம் கிடைக்கத் துணைபுரிந்தது. பன்னாட்டு சட்டங்கள் இயற்றப்பட துவக்க நடவடிக்கைகளை மேற்கொண்டது.

அத்துமீறல் சம்பவங்கள்

ஐரோப்பிய சக்திகள் எதிர்கொண்ட முக்கியமானப் பிரச்சினைகளில் ஒன்று ஆயுதவொழிப்பை சென்றடைவது பற்றியதாகும். சங்கத்தின் குழு 1925ஆம் ஆண்டு ஓர் ஆணையத்தை நியமித்து ஆயுதவொழிப்பு மாநாட்டை நடத்தப் பணித்தது. ஆனால் அவ்வாறான மாநாடு 1932ஆம் ஆண்டுதான் நடத்தப்பட்டது. இம்மாநாட்டில் பிரான்சுக்கு சமமாக ஆயுதம் வைத்துக்கொள்ளும் அந்தஸ்தை ஜெர்மனி கோரியது நிராகரிக்கப்பட்டது. இதனால் அம்மாநாட்டிலிருந்தும், சங்கத்திலிருந்தும் ஹிட்லர் ஜெர்மனியை வெளிக்கொணர்ந்தார்.

வில்னாவை 1920இல் போலந்து ஆக்கிரமித்தபோது சங்கத்தால் ஏதும் செய்யமுடியாமல் போயிற்று. இத்தாலிக்கும், கிரீசுக்கும் 1923இல் போர் அபாயம் மூண்டபோது, இத்தாலியர்கள் சங்கத்தின் மத்தியஸ்தத்திற்கு கட்டுப்பட மறுத்தனர். ஜப்பான் செப்டம்பர் 1931இல் மஞ்சூரியாவை தாக்கியபோது சங்கம் அதற்குக் கண்டனம் தெரிவித்தது. இதனால் ஜெர்மனியின் வழியில் ஜப்பானும் தனது உறுப்பினர் பொறுப்பை இராஜினாமா செய்தது. இத்தாலி எத்தியோப்பியாவை தாக்கியபோது சங்கம் தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டது. தடை நடைமுறைக்கு வந்தபோது அதை எதிர்த்து இத்தாலி 1937இல் இராஜினாமா செய்தது.

இதற்குப்பின் சங்கம் ரைன்லாந்து, ஆஸ்திரியா, செக்கோஸ்லோவாகியா, போலந்து போன்ற பகுதிகளில் சிக்கல் ஏற்பட்டபோதெல்லாம் எதுவும் செய்ய இயலாமல் வெறும் பார்வையாளராக மட்டுமே இருந்தது. அதன் கடைசி முடிவென்பது பின்லாந்தை ரஷ்யா தாக்கியதற்காக அதனை டிசம்பர் 1939இல் சங்கத்தைவிட்டு வெளியேற்றியதேயாகும். அதன்பின் சபை மீண்டும் கூடாமலேயே 1946இல் பன்னாட்டு சங்கம் கலைக்கப்பட்டது.

தோல்விக்கான காரணங்கள்

சங்கம் முதல் உலகப்போரில் வென்றோருக்கான மன்றம் போன்றே தோற்றம் கொண்டிருந்தது. உலகளாவிய உறுப்பினர்களைக் கொண்டிருந்தாலும் அது ஐரோப்பிய இராஜதந்திரத்தின் மையமாகவேத் திகழ்ந்தது.

அரசியல் சர்ச்சைகளில் அனைத்து உறுப்பினர்களின் ஒருமனதான முடிவு தேவை எனக் கொள்ளப்பட்டது. அதற்கென்று தனி இராணுவபலம் இல்லாதிருந்ததால் அதனுடைய முடிவுகளை நடைமுறைப்படுத்த முடியவில்லை.

இவ்வமைதி அமைப்பை நிறுவியோர் தேசியவுணர்வின் வீரியத்தைக் குறைத்து மதிப்பிட்டதாகவேத் தெரிகிறது. "கூட்டுப் பாதுகாப்பு" எனும் கொள்கைக்கு செயல்வடிவம் கொடுப்பதில் சிக்கல் ஏற்பட்டது.

பன்னாட்டு சங்கம் ஓர் திறன் குறைந்த அமைப்பை போல் அதிகாரத்தை செயல்படுத்த முடியாமல் இருந்தது. அது முழுக்க உறுப்புநாடுகளின் நல்லெண்ணத்தையும் நேர்மறை அணுகுமுறையையுமே சார்ந்திருந்தது. சர்வாதிகார தலைவர்களால் ஆளப்பட்ட இத்தாலி, ஜப்பான், ஜெர்மனி போன்ற நாடுகள் சங்கத்தின் கட்டளைகளுக்கு இணங்க மறுத்தபோது பிரிட்டனும் பிரான்சும் மட்டுமே சங்கத்தின் முக்கிய சக்திகளாக செயலாற்றும் நிலை ஏற்பட்டது. ஆனால் சங்கம் வில்சனின் சிந்தனையில் உதித்த ஒன்று என்பதால் இவ்விரு நாடுகளுமே ஆர்வத்தோடு அதில் செயலாற்றவில்லை.

13.6 பொருளாதாரப் பெருமந்தம்

அமெரிக்க ஐக்கிய நாட்டின் பங்குச்சந்தை வீழ்ச்சியைத் தொடர்ந்து ஏற்பட்டப் பொருளாதார மந்தநிலை பன்னாட்டு தன்மை கொண்டு உலக பொருளாதாரத்தையே கடுமையான சறுக்கலுக்கு உட்படுத்தியது. முதல் உலகப்போரில் ஐரோப்பிய நாடுகள் ஈடுபட்டுக்கொண்டிருந்த வேளையில் அமெரிக்கா தனக்குரிய சந்தைகளை ஆக்கிரமித்துக் கொண்டும், முதலீட்டிற்கான தளத்தை விரிவுபடுத்தி அதனூடாக தனது தொழிற்துறையையும், வேளாண்துறையையும் செழுமைப்படுத்திக் கொண்டும் இருந்தது. போரின் முடிவில் அமெரிக்கா உலகின் மிக செல்வச்செழிப்பான நாடாக உருவாகியிருந்தது.

போர் அதீதமான கடன் சுமையை ஒவ்வொரு ஐரோப்பிய நாட்டின் மீதும் ஏற்றியிருந்தது. போரால் பாதிக்கப்பட்டிருந்த ஐரோப்பிய நாடுகளுக்கு அமெரிக்கா பெருமளவு கடன் வழங்கியிருந்தது. அமெரிக்காவிலிருந்து வெளியேறிய முதல் புது முதலீட்டுத் தளங்களைக் கண்டுகொண்டு அங்கு போய்ச்சேர்ந்தது. ஆனால் இம்முதலீடுகள் எதிர்பார்த்த

12th_History_TM_Unit_13_V2.indd 240 02-01-2023 16:40:01

விளைவுகளை சிலகாலம் சென்ற பின்பே விளைவிக்கும். இதற்கிடையே உள்நாட்டில் ஏற்பட்ட வணிகச்சரிவின் காரணமாக வெளியில் கொண்டு செல்லப்பட்ட முதலீடுகள் வேறுவழியின்றி திரும்பப் பெறப்பட்டன. அமெரிக்க முதலீடுகள் திரும்பப் பெறப்பட்டதால் ஏற்றுமதிகளின் அளவும், மதிப்பும் உலகளாவியப் பெரும்சரிவை எதிர்கொண்டன. இதனால் ஏற்பட்ட விளைவுகளை அமெரிக்கப் பங்குச் சந்தை வீழ்ச்சி தீவிரப்படுத்தியது.

அமெரிக்க ஐக்கிய நாட்டின் பங்குச்சந்தை வீழ்ச்சி

பங்குச்சந்தை வீழ்ச்சி

முதலாவது மாபெரும் பங்குச்சந்தை வீழ்ச்சியானது 1929 அக்டோபர் 24 அன்று ஏற்பட்டது. இதனால் அதிகமான மக்கள் தங்கள் வசமிருந்த பங்குகளை விற்று சந்தையிலிருந்து வெளியேறினார்கள். ஆனால் பங்குகளை வாங்குவோர் யாருமில்லை. இதனைத் தொடர்ந்து அமெரிக்க வங்கிகள் பேரிழப்பைக் கண்டன. அமெரிக்க நிதியாளர்கள் வெளிநாடுகளில் செய்துவைத்திருந்த முதலீடுகளைத் திரும்பப்பெற நிர்ப்பந்திக்கப்பட்டார்கள். ஜெர்மனிக்கு அமெரிக்கா கொடுக்கவிருந்த கடனை நிறுத்தியதால் அங்கிருந்த இரு பெரும்வங்கிகள் வீழ்ச்சியுற்றன. வெளிநாடுகளில் செயல்பட்டுக் கொண்டிருந்த வங்கிகளுக்கு தாராளமாகக் கடன் வழங்கி வந்த இங்கிலாந்து வங்கியும் (Bank of England) திவாலானது.

பெருமந்தத்தின் பாதிப்புகள்

செலவு குறைப்பு, அதிகமான வரிவிதிப்பு போன்ற அவசரகால நடவடிக்கைகளை மேற்கொண்டும் இங்கிலாந்தின் நிலைமையில் முன்னேற்றம் ஏற்படவில்லை. பெருமந்தத்திற்கு எதிர்வினையாற்றவும், உள்ளூர் சந்தையைக் காக்கவும் ஒவ்வொரு நாடும் தனிப் பாதுகாப்புக் கொள்கையை உருவாக்கிக் கொண்டதோடு தங்களின் பணமதிப்பை குறைத்துக்கொள்ளவும் செய்தன. பணமதிப்பிறக்கம் கடன்வழங்குவோரை கடனளிப்பதை நிறுத்திக்கொள்ளத் தூண்டியது. இதனால் உலகளாவிய கடன் புழக்கம் சுருங்கியது. வெவ்வேறு நாடுகளால் கைக்கொள்ளப்பட்ட இத்தற்காப்பு நடவடிக்கை உலகப் பொருளாதார சுழற்சியில் எதிர்பாராத கடும் வீழ்ச்சியை விளைவித்தது. அதன் பாதிப்புகள் ஆழமாகவும், நீண்டகாலம் நீடித்ததாகவும் இருந்ததால் பொருளாதார நிபுணர்களும்,வரலாற்றாசிரியர்களும் இந்நிகழ்வைப் பொருளாதாரப் பெருமந்தம் என்று குறிப்பிடுகிறார்கள்.

அரசியலில் நிகழ்ந்த மாற்றங்கள்

பெருமந்தம்பல நாடுகளிலும்அரசியல்நிலையில் மாற்றங்களை விளைவித்தது. இங்கிலாந்தில் 1931இல் நடைபெற்ற தேர்தலில் தொழிலாளர் கட்சி தோற்கடிக்கப்பட்டது. அமெரிக்காவில் பெருமந்தத்திற்கு முந்தைய வளமான ஏற்றத்திற்குக் காரணமானோர் என பெருமைபெற்ற குடியரசு கட்சி மந்தத்திற்குப் பின் தொடர்ச்சியாக இருபது ஆண்டுகளுக்கு ஆட்சியமைக்க முடியாமல் போனது. நாம் கீழே காணப்போவது போல பாசிச கட்சிகள் ஜெர்மனியிலும், இத்தாலியிலும் அரசு அதிகாரத்தைத் தங்கள் வசமாக்கிக் கொண்டன. தென் அமெரிக்காவின் அர்ஜென்டினா, பிரேசில், சிலி ஆகிய நாடுகளிலும் அரசுமாற்றம் நிகழ்ந்தது.

13.7 பாசிசவாதமும் நாசிசவாதமும் தோன்றுதல்

முதல் உலகப்போரைத் தொடர்ந்து ஐரோப்பிய கண்டத்தில் இருந்த நாடுகள் எதிர்கொண்ட சிக்கல் என்பது தமது அரசும், பொருளாதார முறையும் நிலமானியப் பின்புலத்தை கொண்ட பிரபுக்கள், தொழிலதிபர்கள், நிதியாளர்கள் போன்றோரால் நிர்வகிக்கப்படுவதா அல்லது இவையாவும் சேர்ந்த கூட்டுக் கலவையாலான ஒன்றாலா என்பதேயாகும். இவ்வுயர் வர்க்கங்களை சேர்ந்த எவரும் மக்களின், குறிப்பாக விவசாயக் குடிகள் தொழிலாளர் போன்றோரின், ஆதரவைப் பெற்றிருக்கவில்லை. புதிதாக உதித்த சூழலில் சாமானிய மக்கள் தங்களை ஒடுக்குவோரைத் தூக்கியெறிய வாய்ப்புள்ளமையை உணர்ந்துகொண்டார்கள். ரஷ்யாவில் நடுத்தர வர்க்கம் (Bourgeoisie) 1917ஆம் ஆண்டு அரசை சர்வாதிகார முறைக்கு மாற்றிய சிறிது காலத்தில் அவர்களே போல்ஷ்விக்குகளால் மாற்றப்பட்டார்கள். பிரிட்டனில் எழுந்த சூழலைக் கைக்கொள்ள தொழிலாளர் கட்சி பொதுநல அரசை நிறுவியது. இத்தாலி, ஜெர்மனி போன்ற நாடுகள் எதிர்கால வெற்றியை இலக்காகக் கொண்டு துவக்கத்தில் மக்கள் இயக்கம் போன்று செயலாற்றிப் பின் பாசிசப் பாதைக்கு மாறின.

12th_History_TM_Unit_13_V2.indd 241 02-01-2023 16:40:01

(அ) இத்தாலியின் பாசிசப் போக்கு

மேற்கு ஐரோப்பாவில் பழைய ஆட்சிமுறைக்கு எதிராகத் திரும்பிய முதல் நாடு இத்தாலியே ஆகும். முதல் உலகப்போரின்போது இத்தாலி ஐந்தரை மில்லியன் நபர்களை களத்திலிறக்கியதில் 700,000 நபர்கள் கொல்லப்பட்டார்கள். போரில் பங்கெடுத்தமையால் ஏற்பட்ட செலவினங்களும் மிக அதிகமானதாக இருந்தது. சோஷலிசவாதிகளும், ஆஸ்திரிய கத்தோலிக்க சார்புகொண்டோரும் ஆதரவளிக்காத இப்போரில் நாடு கடும் சேதங்களைச் சந்தித்தது. வெர்செய்ல்ஸ் உடன்படிக்கையின் கீழ் சொற்ப ஆதாயத்தையே இத்தாலி நாடு அடைந்திருந்ததால் தேசியவாதிகளும் அதிருப்தியடைந்திருந்தனர். போர் பணவீக்கத்தையும் அது விளைவித்த விலையேற்றம், ஊகத்தொழில் பாதிப்புகள், லாபமீட்டும் நோக்கத்தின் பெருக்கம் போன்றவற்றையும் ஒருங்கே கொண்டுவந்து சேர்த்தது. கண்டன ஆர்ப்பாட்டங்களும், வேலை நிறுத்தங்களும் அதிகமாயின. வெர்செய்ல்ஸ் அவமானத்திற்கு ஆட்சியாளர்களே காரணமென மக்கள் கருதினார்கள்.

சோஷலிச அமைப்புகளின் எழுச்சி

துயரங்கள் கூடியபோது, அங்கே சோஷலிச சிந்தனை பரவத் தொடங்கியது. இத்தாலிய சோஷலிஸ்டுகள் 1918இல் சர்வதேச பொதுவுடைமையோடு இணையவாக்களித்தார்கள். தேர்தல்கள் நவம்பர் 1919இல் நடந்தபோது அவர்கள் பிரதிநிதிகள் அவைக்கு மூன்றில் ஒரு பங்கு இடங்களைப் பெற்றிருந்தார்கள். தீவிரவாதப்போக்கு கிராமப்புறங்களிலும் செல்வாக்கு பெற்றது. பெரும் நிலவுடைமைகளை உடைத்தெறியும் நோக்கோடு சிகப்பு சங்கங்கள் பல தோன்றி நிலக்கிழார்களை வாடகையைக் குறைத்துக்கொள்ள நிர்ப்பந்தித்தன. நிலவுடைமையாளர் வர்க்கத்திற்கு தங்களின் சொத்துக்களைப் பறிமுதல் செய்யும் நோக்கு பாசிசவாதிகளுக்கு இல்லாமல் போனதால் அது அவர்களுக்கு குறைந்தபட்ச ஆபத்தை மட்டுமே ஏற்படுத்தக்கூடிய ஒன்றாகக் காட்சியளித்தது.

முசோலினி ஏற்றமடைதல்

பெனிட்டோ முசோலினி (1883–1945) ஒரு இரும்புக்கொல்லரின் மகனாகப் பிறந்தார். ஆரம்பக்கல்வி ஆசிரியராகத் தேர்ச்சிபெற்ற அவர் மேற்கொண்டு படிப்பதற்காக சுவிட்சர்லாந்திற்கு சென்று சோஷலிசப் பார்வைக்கொண்ட பத்திரிகையாளரானார். முன்னணி சோஷலிச தினசரிப் பத்திரிகையான அவந்தியில் (Avanti) ஆசிரியராகப் பணியேற்றார். 1919இல் பாசிசக் கட்சி உருவாக்கப்பட்டவுடன் அதில் உடனடியாக முசோலினி இணைந்தார். பாசிசவாதம் அதிகாரசக்தி, வலிமை, ஒழுக்கம் போன்றவற்றை தாங்கிநின்றதால் தொழிலதிபர்கள், தேசியவாதிகள், முன்னாள் படைவீரர்கள், நடுத்தர வர்க்கத்தினர், அதிருப்தி கொண்ட இளைஞர்கள் போன்றோர் அதற்கு ஆதரவு நல்கினர். பாசிசவாதிகள் தடையின்றி வன்முறையில் ஈடுபட்டு தங்களின் எதிரிகளை கத்தி, பெருந்தடிகள், துப்பாக்கி போன்ற ஆயுதங்களைக் கொண்டு தாக்கினர்.

முசோலினி

போரின் முடிவில் எழுந்த ஒழுங்குமுறைக் குலைவுகளை சரிசெய்ய பாராளுமன்ற முறையிலான அரசு திணறியதால் அதன் வீழ்ச்சியிலிருந்தே பாசிச சர்வாதிகாரம் தோன்றியது. ஜனநாயக கட்சியின் தலைவர்கள் தீர்க்கமான பார்வையோடும், உறுதியோடும் செயலாற்ற தவறியமையே முசோலினியின் வெற்றிக்கு வழிவகுத்தது. பொதுவுடைமைவாதிகளுக்கும், அவர்களின் எதிர்தரப்பினருக்குமிடையே எழுந்த பிணக்குகள் உள்நாட்டுப் போருக்கு வழிவகுத்த நிலையில் கருப்புசட்டை அணிந்த பாசிசவாதிகள் (கருஞ்சட்டையினர்) ரோமில் நடத்திய பேரணியே (அக்டோபர் 1922) அதைத் தவிர்க்கக் காரணமாக விளைந்தது. அவர்களின் பலத்தால் ஈர்க்கப்பட்ட மன்னர் மூன்றாம் இம்மானுவேல் முசோலினியை ஆட்சியமைக்க அழைத்தார்.

பாசிசவாதம்: பாசிசம் என்ற பதத்தின் மூலச்சொல்லான பாசஸ் என்னும் லத்தீன் சொல் ரோமானிய தேசத்தின் அதிகாரத்தைக் குறிக்கும் தடிகளால் சூழப்பட்ட கோடாரியைச் சுட்டுவதாகும்.

பாசிசம் என்பது ஒருவகையான தீவிர அதிகாரம் கொண்ட தேசியவாதம் கலந்த சர்வாதிகார சக்தியையும், அதனால் வலுப்பெற்ற எதிரிகளை ஒடுக்கும் தன்மையையும், சமூகத்தையும், பொருளாதாரத்தையும் மையப்படுத்தும் போக்கையும் உள்வாங்கி இருபதாம் நூற்றாண்டின் துவக்கத்தில் ஐரோப்பாவில் முக்கியத்துவமடைந்த ஒன்றாகும்.

முசோலினியின் கீழ் பாசிசவாதிகள்

வாக்காளர்களை அச்சுறுத்தி 1924ஆம் ஆண்டின் தேர்தல்களில் 65 சதவீத வாக்குகளைப்

12th_History_TM_Unit_13_V2.indd 242 02-01-2023 16:40:01

பெற்று பாசிசவாதிகள் வெற்றி பெற்றிருந்தனர். தேர்தலின் நேர்மை பற்றிக் கேள்வியெழுப்பிய மட்டியோட்டி (Matteotti) என்னும் சோஷலிச தலைவர் கொலை செய்யப்பட்டார். இதனால் எதிர்கட்சிகள் பாராளுமன்றத்தைப் புறக்கணித்து தங்கள் எதிர்ப்பைப் பதிவுசெய்தன. முசோலினி எதிர்கட்சிகளுக்கு தடைவிதித்தும், பத்திரிகை சுதந்திரத்திற்கு தடை விதித்தும் நிலைமையைக் கட்டுப்படுத்தினார். எதிர்கட்சித் தலைவர்கள் கொல்லப்படவோ, கைது நடவடிக்கைக்கு உட்படவோ ஆளானார்கள்.

இத்தாலியின் இரண்டாம் தலைவன் (Il Duce) என்று தனக்குப் பட்டமளித்துக் கொண்ட முசோலினி 1926இல் சட்டமியற்றும் அதிகாரம் கொண்ட சர்வாதிகாரியாக உருவெடுத்திருந்தார். வேலை நிறுத்தங்களுக்கும் தொழிற்சாலையடைப்புக்கும் (lockout) தடைவிதித்து சட்டமியற்றினார். தொழிற்சங்கங்களும், ஊழியர்களும் வாரியங்களுக்குள் (Corporation) எடுத்துச் செல்லப்பட்டு அதனூடாக அவர்களின் ஊதியம், பணிச்சூழல் சார்ந்த பிரச்சினைகள் அணுகப்பட்டன. விடுபட்ட பிற மக்களும் தொழில் அடிப்படையில் வாரியங்களாகப் பிரிக்கப்பட்டு நிர்வகிக்கப்பட்டார்கள். இவை தொடர்ந்து கூட்டமைப்பாக்கப்பட்டு வாரியத்துறை அமைச்சரால் கண்காணிக்கப்பட்டன.

பாராளுமன்றம் 1938இல் கலைக்கப்பட்டு அது பாசிச கட்சியையும் வாரியங்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் அமைப்பாக மாற்றியமைக்கப்பட்டது. இப்புதிய ஏற்பாடு பொருளாதாரத்தின் மீது முசோலினியின் சர்வாதிகாரப் பிடியை இறுகச் செய்ததோடு நிர்வாகத்தையும் ஆயுதப் படைகளையும் அவரது எதிர்ப்பில்லா தலைமையின் கீழ் கொண்டுபோய்ச் சேர்த்தது. இவ்வாறாக முசோலினி பாராளுமன்ற அரசையும் தொழிற்சங்கங்களையும் பிற ஜனநாயக அமைப்புகளையும் ஒழித்தார்.

முசோலினி போப்பாண்டவரோடு உடன்படிக்கை ஏற்படுத்துதல்

பாசிச கட்சிக்கு மதிப்பை சம்பாதிக்கும் நோக்கோடு முசோலினி வாட்டிகன் நகருக்கு தனிநாடு அங்கீகாரம் வழங்கி ரோமன் கத்தோலிக்க திருச்சபையைத் தன்பக்கம் ஈர்த்தார். இதற்கு கைமாறாக கத்தோலிக்க திருச்சபை இத்தாலியப் பேரரசை அங்கீகரித்தது. இத்தாலியின் தேசிய சமயமாக ரோமன் கத்தோலிக்க மரபு ஏற்றுக்கொள்ளப்பட்டு பள்ளிகளில் சமயக்கல்வி கட்டாயமாக்கப்பட்டு ஆணை பிறப்பிக்கப்பட்டது. மேற்கூறியவற்றை உள்ளடக்கிய லேட்டரன் உடன்படிக்கை (Lateran Treaty) 1929இல் கையெழுத்திடப்பட்டது.

லேட்டரன் உடன்படிக்கை

பொருளாதாரப் பெருமந்தத்தின் காலம்

அமெரிக்க ஐக்கிய நாடு 1929ஆம் ஆண்டு மிகப்பெரும் நிதி மற்றும் வணிக வீழ்ச்சிக்கு உள்ளானது. உலகின் பிற பாகங்களில் இதன் பாதிப்பு மிக மோசமாக வெளிப்பட்டது. ஐரோப்பிய வாணிபமும் நிதிநிலையும் 1931இல் முழுதும் முடங்கிப்போயின. இக்காலகட்டத்தில் பாசிச அரசு தனக்கு எந்த பாதிப்பும் இல்லை என பொதுப்பணித்துறையை சுட்டிக்காட்டிப் பெருமை கொண்டாலும் இக்காலத்தில் புதிய பாலங்கள், சாலைகள், கால்வாய்கள், மருத்துவமனைகள், பள்ளிகள் போன்றவை எழுப்பப்பட்டாலும் அதனால் வேலையில்லாத் திண்டாட்டப் பிரச்சினையைத் தீர்க்க முடியவில்லை. உலக நாடுகள் சங்கத்தின் வீழ்ச்சி 1935ஆம் ஆண்டையொட்டிய காலத்தில் உறுதியானவுடன் முசோலினி இத்தாலிக்கென ஒரு பெரும் பொருளாதாரப் பேரரசை உருவாக்கும் எண்ணங்கொண்டு எத்தியோப்பியா மீது படையெடுத்தார். இது பொருளாதாரச் சிக்கல்களிலிருந்து மக்களின் கவனத்தைத் திசைதிருப்ப உதவியது. முசோலினியின் வெற்றி ஐரோப்பாவின் பிற பகுதிகளிலிருந்த ஆளும் வர்க்கத்தின் வியப்பை பெற்றது. அவர்களில் மூனிச் பகுதியை மையமாக அமைத்துப் புகழ்பெற்றுக் கொண்டிருந்தவரும், தேசியவாதியும், யூத எதிர்ப்பாளருமானவர் ஒருவர்: அவரே அடால்ஃப் ஹிட்லர்.

(ஆ) போருக்குப் பிந்தைய ஜெர்மனி

பாசிசவாதம் ஜெர்மனியில் ஏற்றம் பெறப் பலகாரணிகள் உள்ளன. அவற்றுள் முதன்மையானது போரில் தோற்கடிக்கப்பட்டமையால் எழுந்த அவமானமாகும். ஜெர்மனி 1871 முதல் 1914 வரையான காலத்தில் பொருளாதாரம், அரசியல் மற்றும் கலாச்சாரத் தளங்களில் பல சாதனைகளை நிகழ்த்தியிருந்தது. ஜெர்மனியின் பல்கலைக்கழகங்கள், அதன்

12th_History_TM_Unit_13_V2.indd 243 02-01-2023 16:40:01

விஞ்ஞானம், தத்துவம், இசை ஆகியவை உலகப்புகழ் பெற்றிருந்தன. பிரிட்டனையும் அமெரிக்க ஐக்கிய நாட்டையும் தொழில் உற்பத்தியின் பல்வேறுப் புலங்களில் ஜெர்மனி விஞ்சி நின்றது. இதனைத் தொடர்ந்தே உலகப்போரின் பெரும் தோல்வி அதனைச் சூழ்ந்தது. ஜெர்மானிய மக்கள் விரக்தியடைந்தார்கள். வெர்செய்ல்ஸ் ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்ட நஷ்டஈடும், பிற சரத்துக்களும் பெரும் அதிருப்தியையும், சிரமத்தையும் ஏற்படுத்தின. சூழ்நிலையைப் பயன்படுத்திக்கொள்ள விழைந்த பிற்போக்கு சக்திகள் அரசில் அங்கம் வகித்த சோஷலிஸ்டுகளும் யூதர்களுமே தேசத்திற்கெதிராகச் செயலாற்றியதாகவும் அவர்களே தோல்வியை விளைவித்தவர்கள் என்றும் பரப்புரையாற்றின.

ஜெர்மனி எப்போதுமே ஒரு இராணுவ தேசமாகவே இருந்துள்ளது. இராணுவம் பாதுகாப்பின் சின்னமாக மட்டுமல்லாமல் தேசப்பெருமையின் அடையாளமாகவும் விளங்கியது. இச்சூழலில் முதல் உலகப்போரின் முடிவில் ஏற்பட்ட ஜெர்மனியின் தோல்வியும், அதைத் தொடர்ந்த அவமானமும் ஜெர்மானியர்களுக்குப் பேரதிர்ச்சியை ஏற்படுத்தியது. அவர்களின் ஏமாற்றத்தைப் பொருளாதாரப் பெருமந்தம் ஆழப்படுத்தியதோடல்லாமல் குடியரசு கட்சி அரசின் மீதும் அதீத வெறுப்புணர்வை வளர்த்தது.

1920களில் ஜெர்மனி

முதல் உலகப் போருக்குப் பின் ஜெர்மனியில் பல கட்சிகளின் கூட்டணியில் மக்களாட்சி அரசுகள் நடைபெற்றது. 1919 முதல் 1925 வரை எபெர்ட் (Ebert) என்னும் சோஷலிசவாதி தலைமையிலும் அதன்பின் 1929 வரை லிபரல் டெமாக்ரடிக் கட்சியின் ஸ்ட்ரெஸிமண் (Stresemann) தலைமையிலும் ஜெர்மனி நிர்வகிக்கப்பட்டது. நாஜிக்கள் 1933இல் ஏற்றம் பெறும்வரை சென்ற இக்காலம் வெய்மர் குடியரசு (Weimar Republic) என்றழைக்கப்படுகிறது.

ஹிட்லர்

இடைப்பட்ட இக்காலத்தில் சராசரியான ஒரு ஜெர்மன் குடிமகன் போர் இழப்பீடு கொடுத்து கடன்சுமையில் தத்தளித்து வறுமைக்குட்பட்டிருந்த நாட்டில் அன்றாட வாழ்க்கைப்பிரச்சனை பற்றி மட்டுமே சிந்திக்க முடிந்தது. பிரெஞ்சுக்காரர்கள் 1923இல் ரூர் பகுதியில் ஆக்கிரமிப்பு நடத்தியமையால் கொதிப்படைந்த தொழிலாளர்கள் தங்கள் எதிர்ப்பைக் காட்டும் விதமாக வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டனர். இது சில திரைமறைவு செயல்பாடுகள் பரவ வாய்ப்பையும் ஏற்படுத்திக் கொடுத்தது. பெர்லின் நகரில் குடியரசு கட்சியின் அரசுக்கு எதிராக லூடன்டார்ஃப் என்பவர் முன்னாள் படைவீரர்களை மறைமுகச் செயல்பாடுகளுக்காகத் திரட்டியிருந்தார். மற்றொன்று மூனிச் நகரில் முன்னாள் படைத்துறை அலுவலர் (corporal) ஒருவரின் தலைமையில் செயலாற்றி வந்தது. அவர் தேசிய சோஷலிச ஜெர்மன் தொழிலாளர் கட்சியை (National Socialist German Worker's Party) நிறுவிய அடால்ஃப் ஹிட்லர் ஆவார்.

ஜெர்மானிய பாசிசத்தின் பரிணாம வளர்ச்சி

முதல் உலகப்போரின்போது ஹிட்லர் பவேரிய இராணுவத்தில் பணியாற்றினார். யூதர்கள் மீதும், மார்க்சியவாதிகள் மீதும் அவர் உள்ளார்ந்த வெறுப்பைக் கொண்டிருந்தார். தேர்ந்த பேச்சாளரான அவர், தனது உரையை கேட்போரின் உணர்வுகளைத் தொடும் திறன் கொண்டிருந்தார். ஹிட்லர் 1923இல் பல ஆபத்துக்களுக்கிடையே பவேரியாவில் அதிகாரத்தைக் கைப்பற்ற முனைந்தார், சரியாகத் திட்டமிடப்படாமல் மூனிச்சின் புறநகர் பகுதிகளில் அவர் நடத்த முயன்ற தேசிய புரட்சி அவரை சிறைக்குள் கொண்டு சேர்த்தது. சிறையில் இருக்கும் காலத்தில் அவர் தனது அரசியல் சிந்தனைகளை மையமாகக் கொண்டு 'எனது போராட்டம்' (மெய்ன் காம்ப் – Mein Kampf) என்ற சுயசரிதை நூலை எழுதினார்.

ஜெர்மானிய அரசின் பலவீனத்தை வெளிப்படுத்தும் இரு சம்பவங்கள் 1929இல் நடந்தேறின. ஸ்ட்ரெஸிமணின் மரணம் ஒரு அரசியல் வெற்றிடத்தை உருவாக்கியிருந்தது. நியூயார்க் பங்குச்சந்தையில் நேர்ந்த வீழ்ச்சி பொருளாதார மந்தத்தை ஏற்படுத்தியதோடு அமெரிக்க ஐக்கிய நாட்டை தாம் ஜெர்மனிக்கு வழங்கியிருந்த கடன்களை குறித்த காலத்திற்கு முன்பே வசூலிக்க நிர்ப்பந்தித்தது. உலகப் பொருளாதாரப் பெருமந்தம் 1931இல் வலுவிழந்த நிலையிலிருந்த ஜெர்மனியை தன்பிடிக்குள் சிக்கவைத்தது. பொதுவுடைமை கட்சி 1932இல் நடந்த குடியரசுத்தலைவர் தேர்தலில் 60,00,000 வாக்குகளைப் பெற்றது. இதனால் சுதாரித்துக்கொண்ட முதலாளிகளும் நிலவுடைமையாளர்களும் பாசிசவாதத்தின் பக்கம் சரிந்தனர். அதை நன்கு பயன்படுத்திக்கொண்ட ஹிட்லர் ஆட்சியதிகாரத்தைக் கைப்பற்றினார்.

12th_History_TM_Unit_13_V2.indd 244 02-01-2023 16:40:01

மூன்றாவது ரெய்ச் (ஹிட்லரின் நாஜி அரசு)

சமூக ஜனநாயகவாதிகளோடு பொதுவுடைமைவாதிகள் இணைந்துப் பணியாற்ற விரும்பாததால் குடியரசு கட்சியின் அரசு வீழ்ச்சியுற்றது. இதனைத்தொடர்ந்து தொழிலதிபர்கள், வங்கி உரிமையாளர்கள், அரசப் பாரம்பரியப் பின்புலம் கொண்டவர்கள் ஆகியோர் ஹிட்லரை தங்கள் கட்டுப்பாட்டின் கீழ் வைத்துக் கொள்ள விழைந்து 1933ஆம் ஆண்டு குடியரசுத்தலைவர் வான் ஹின்டன்பர்கை (Von Hindenberg) அணுகி அவரை பிரதம அமைச்சராகப் (Chancellor) பணித்தார்கள். மூன்றாவது ரெய்ச் (Third Reich) என்று குறிப்பிடப்படும் ஹிட்லரின் நாஜிஅரசு ஜெர்மனியில் முதல் உலகப்போருக்குப் பின்பு ஏற்படுத்தப்பட்ட பாராளுமன்ற மக்களாட்சி முறைக்கு முற்றுப்புள்ளி வைத்தது.

ஹிட்லர் வெய்மர் குடியரசின் கொடியை அகற்றி அவ்விடத்தில் தேசிய சோஷலிசத்தின் ஸ்வஸ்திகா சின்னத்தைப் பதித்தார். ஜெர்மனி முழுமையாகவே ஒரு மையப்படுத்தப்பட்ட அரசாக மாற்றப்பட்டது. நாஜி கட்சி நீங்கலாகப் பிறகட்சிகள் சட்டத்திற்குப் புறம்பானவையாக அறிவிக்கப்பட்டன. பழுப்பு நிற சட்டையும், முழங்கால் வரையிருக்கும் காலணியும் (jackboot) அணிந்த அதிரடிப்படையினரின் எண்ணிக்கை நாளுக்குநாள் உயர்ந்துகொண்டே சென்றது. ஹிட்லரின் இளைஞரணி ஏற்படுத்தப்பட்டு, தொழிலாளர் முன்னணி உருவாக்கப்பட்டது. தொழிற்சங்கங்கள் ஒழிக்கப்பட்டு அதன் தலைவர்கள் கைதுசெய்யப்பட்டனர். தொழிலாளர்களனைவரும் ஜெர்மானிய தொழிலாளர் முன்னணியில் உறுப்பினர்களாக சேரக் கட்டாயப்படுத்தப்பட்டார்கள். வேலைநிறுத்தங்கள் சட்டத்திற்குப் புறம்பானவைகளாக்கப்பட்டும் ஊதியத்தை அரசே நிர்ணயித்தும் ஜெர்மானிய தொழிலாளர் முன்னணியை கொண்டு நாஜிக்களே தொழிற்சாலைகளைக் கட்டுப்படுத்தவும் என்பதான நிலை உருப்பெற்றது. பத்திரிகை, நாடக அரங்கு, திரைப்படம், வானொலி மற்றும் கல்வி போன்றவை அரசின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டன.

நாஜி கட்சியின் பரப்புரையை, மக்களின் கருத்தோட்டத்தைத் திட்டமிட்டு திசைதிருப்பும் ஆற்றல் கொண்டிருந்த ஜோசப் கோயபெல்ஸ் (Josef Goebbels) தலைமையேற்று வழிநடத்தினார். ஒருமுறை அவர் 'எந்தப் பொய்யும் மீண்டும் மீண்டும் சொல்லப்படும்போது உண்மை என நம்பப்படும்' என்றார். கெஸ்டபோ (Gestapo) என்ற நாட்டின் இரகசியப்போலீஸ் பிரிவை ஹிம்லர் (Himmler) கட்டுப்படுத்தியதோடு ஹிட்லரின் மெய்க்காவலர்களையும் அவரே நியமித்தார்.

நாஜிக்களின் யூதக் கொள்கை

உள்ளபடியே செயலாற்றிக்கொண்டிருந்த ஒடுக்குமுறைகளோடு ஹிட்லரின் அரசு யூதர்களை ஒடுக்கும் கொள்கையைப் பின்பற்றியது. யூதர்கள் அரசுப்பணிகளிலிருந்து நீக்கப்படவும், பல்கலைக்கழகங்களில் ஒதுக்கப்பட்டும், குடியுரிமை மறுக்கப்பட்டும் சிரமத்திற்கு உட்படுத்தப்பட்டார்கள். யூதர்களின் வியாபாரங்கள் முடக்கப்பட்டு அவர்களின் நிறுவனங்கள் தாக்கப்பட்டன. இரண்டாம் உலகப் போர் துவங்கியபோது யூதர்கள் குவிமுகாம்களிலும் மின்சாரவேலியாலும் காவற்கோபுரங்களாலும் சூழப்பட்ட குறுகலான இருப்பிடங்களிலும் சிறைவைக்கப்பட்டு சரியான உணவு வழங்கப்படாமல் கட்டாய ஊழியத்திற்கு உட்படுத்தப்பட்டார்கள். இவையாவும் யூதர்களைக் கொல்லும் களங்களாக மாற்றப்பட்டு விஷவாயு அறைகள் போன்ற தொழில்முறை உயிரெடுக்கும் உத்திகளைக் கொண்டிருந்தன. 'இறுதியான தீர்வு' (Final Solution) என்று நாஜிக்களால் குறிப்பிடப்படும் இந்த நடவடிக்கையின்கீழ் ஐரோப்பாவில் 6 மில்லியன் யூதர்கள் கொல்லப்பட்டார்கள். யூதர்கள் நீங்கலாக நாடோடி குழுக்கள் மற்றும் மனநிலை பிறழ்வுகொண்டோர் ஆகியோரும் கொல்லப்பட்டனர். ஹிட்லரை எதிர்த்தப் பல்லாயிரக்கணக்கான ஜெர்மானியர்களும் கொல்லப்பட்டார்கள்.

வெர்செய்ல்ஸ் ஒப்பந்தத்தின் சரத்துகளை மீறுதல்

ஹிண்டன்பர்க் ஆகஸ்ட் 1934இல் இறந்ததும் ஹிட்லர் பிரதம அமைச்சராக மட்டுமல்லாமல் குடியரசுத்தலைவராகவும் ஆயுதப்படைகளின் தலைமைத் தளபதியாகவும் பொறுப்பேற்றார். நாஜி கட்சி 1938இல் இராணுவத்தின் மீதான தனது பிடியை இறுக்கியது. ஹிட்லரின் வெளியுறவுக் கொள்கையானது ஜெர்மனியின் ஆயுதப்படை வலிமையை அதிகரிப்பதும் நாட்டின் பெருமையை சீர்குலைத்த வெர்செய்ல்ஸ் உடன்படிக்கையின் சரத்துகளை மீறுவதையுமே அடிப்படையாகக் கொண்டிருந்தது. அவர் வேண்டுமென்றே வெர்செய்ல்ஸ் ஒப்பந்தத்தை முறிக்க (பின்வரும் பாடத்தில் அது விவாதிக்கப்படுகிறது) எடுத்துக்கொண்ட முயற்சிகளே இரண்டாம் உலகப் போர் வெடிக்கக் காரணமாயிற்று.

பாடச் சுருக்கம்

- வணிகவாதத்திலிருந்து தொழில் முதலாளித்துவத்திற்கும், அதன்பின் நிதி முதலாளித்துவத்திற்கும் என ஏற்பட்டுக் கொண்டிருந்த மாற்றம் ஏகாதிபத்தியத்தில் நிலைகொண்டது விளக்கப்பட்டுள்ளது.

12th_History_TM_Unit_13_V2.indd 245 02-01-2023 16:40:02

www.tntextbooks.in

- மிகை உற்பத்தியை விற்பதற்கு, மூலப்பொருள்களைக் கொள்முதல் செய்வதற்கு மேற்கொள்ளப்பட்ட முயற்சிகளையும் அதற்காக காலனிய நாடுகளைத் தேடுவதிலும் அதை முன்வைத்து ஐரோப்பாவின் பெரும் சக்திகளிடையே மோதல் ஏற்பட்டதையும் பற்றி விவாதிக்கப்பட்டுள்ளது.
- ஜப்பான் ஆசியாவில் ஒரு ஏகாதிபத்திய சக்தியாக உருவெடுத்தது பற்றியும் அதன் விரிவாக்கக் கொள்கை பற்றியும் கூறப்பட்டுள்ளது.
- ஐரோப்பா இரு போர்முகாம்களாக வடிவெடுத்து கூட்டணியாகவும், எதிர்–கூட்டணியாகவும் பிரிந்து நின்றமை விவரிக்கப்பட்டுள்ளது.
- ஜெர்மனியின் முரட்டுப்போக்கு, தனது பிரதேசங்களான அல்சேசையும் லொரைனையும் ஜெர்மனி ஆக்கிரமித்தமையால் பிரான்ஸ் கொண்ட பகையுணர்வு, ஜப்பானின் விரிவாக்கக்கொள்கை, பால்கன் பகுதியில் ஏற்பட்ட அதிகாரமைய அரசியல் போன்றவை எவ்விதம் முதல் உலகப்போருக்கு வழிவகுத்தனவென்பது விளக்கப்பட்டிருக்கிறது.
- எல்லைகளில் நடந்த போர்களும் பிற பிராந்தியங்களில் நடத்தப்பட்ட போர்களும் விபரமாகச் சொல்லப்பட்டுள்ளது.
- ரஷ்யப் புரட்சிக்கான காரணங்கள், போக்குகள், விளைவுகள் போன்றவை ஆராயப்பட்டுள்ளது.
- ஜெர்மனி நீர்மூழ்கிகளை ஏவியதன் பின் அமெரிக்கா போரில் தலையிட்டமையும் அதனைத்தொடர்ந்து தோழமைநாடுகள் இறுதியான வெற்றியினை அடைந்தமையும் சொல்லப்பட்டுள்ளது.
- பாரிஸ் அமைதி ஒப்பந்தம் குறித்தும் போரின் முடிவுகள் பற்றியும் உள்ளார்ந்த தகவல்கள் கொடுக்கப்பட்டுள்ளன.
- பன்னாட்டு சங்கம் பற்றியும் உலக அமைதியை நிலைநாட்ட அது ஆற்றிய பங்கு பற்றியும் விமர்சனநோக்கில் எடுத்தியம்பப்பட்டிருக்கிறது.
- பாசிச அரசுகளின் ஏற்றம் மற்றும் இறக்கம் ஆகியவை பற்றி விபரமாக சொல்லப்பட்டுள்ளது.

பயிற்சி

I சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்.

1. ஜெர்மனியின் முன்னேறி வந்துகொண்டிருந்த படைகளை பிரான்ஸ் வெற்றிகரமாக தடுத்து தோற்கடித்த போரின் பெயர் என்ன?

   (அ) மார்னே போர் (ஆ) டானென்பர்க் போர்

   (இ) வெர்டூன் போர் (ஈ) சோம் போர்

2. 'அரசின் தடையற்ற' (Laissez Faire) என்னும் பதத்தை உருவாக்கியவர் ________ ஆவார்.

   (அ) ஜான் A. ஹாப்சன் (ஆ) கார்ல் மார்க்ஸ்

   (இ) ஃபிஷர் (ஈ) கௌர்னே

3. *An Inquiry into the Nature and Cause of the Wealth of Nations* என்ற நூலை எழுதியவர் ________ ஆவார்.

   (அ) ஆடம் ஸ்மித் (ஆ) தாமஸ் பைன்

   (இ) குஸ்னே (ஈ) கார்ல் மார்க்ஸ்

4. இங்கிலாந்து ________ ஆம் ஆண்டில் தடையற்ற வணிகக் கொள்கையைப் பின்பற்றத் துவங்கியது.

   (அ) 1833 (ஆ) 1836 (இ) 1843 (ஈ) 1858

5. **கூற்று:** பத்தொன்பதாம் நூற்றாண்டின் இரண்டாவது பாதியில் பல நாடுகள் மிகைஉற்பத்தியால் பிரச்சனைகளை எதிர்கொண்டன.

   காரணம்: மிகைஉற்பத்தி, நாடுகளை புதிய சந்தைகளைக் கண்டுபிடிக்க அழுத்தங்கொடுத்தது.

   (அ) கூற்றும் காரணமும் சரி. காரணம் கூற்றை விளக்குகிறது

   (ஆ) கூற்றும் காரணமும் சரி. ஆனால் காரணம் கூற்றை விளக்கவில்லை

   (இ) கூற்று சரி. காரணம் தவறு

   (ஈ) கூற்று தவறு. காரணம் சரி

6. 1879ஆம் ஆண்டில் ________ கட்டண சட்டத்தை இயற்றியது.

   (அ) ஜெர்மனி (ஆ) பிரான்ஸ்

   (இ) பிரிட்டன் (ஈ) அமெரிக்க ஐக்கிய நாடு

7. ________ க்குப் பின் ஷிமனோசெகி ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டது.

   (அ) ரஷ்ய–ஜப்பனியப் போர்

   (ஆ) இரண்டாம் அபினிப் போர்

   (இ) இரண்டாம் ஆங்கிலோ–சீனப் போர்

   (ஈ) சீன–ஜப்பானியப் போர்

8. போர்ட்ஸ்மவுத் ஒப்பந்தம் ஏற்படும் பொருட்டு மத்தியஸ்தம் புரிந்த நாடு ________ ஆகும்.

   (அ) ஸ்பெயின் (ஆ) பிரிட்டன்

   (இ) அமெரிக்க ஐக்கிய நாடு (ஈ) பிரான்ஸ்

12th_History_TM_Unit_13_V2.indd 246 02-01-2023 16:40:02

9. எந்த நாடு 21 நிர்ப்பந்தங்களை புதிதாக உருவாக்கப்பட்ட சீன குடியரசின் தலைவர் முன் சமர்ப்பித்தது?

(அ) பிரான்ஸ் (ஆ) ரஷ்யா

(இ) ஜப்பான் (ஈ) பிரிட்டன்

10. ________ஐ அடிப்படையாகக் கொண்டு அல்பேனியா எனும் புதுநாடு உருவாக்கப்பட்டது.

(அ) புக்காரெஸ்ட் உடன்படிக்கை,1913

(ஆ) வெர்செய்ல்ஸ் உடன்படிக்கை, 1919

(இ) லண்டன் உடன்படிக்கை, 1913

(ஈ) செயின்ட் ஜெர்மெய்ன் உடன்படிக்கை

11. கீழ்க்காண்பனவற்றுள் எந்நாடு மையநாடுகள் சக்தியில் அங்கம் வகிக்கவில்லை?

(அ) பல்கேரியா

(ஆ) ஆஸ்திரிய–ஹங்கேரி

(இ) துருக்கி

(ஈ) மான்டிநீக்ரோ

12. பாரிசை நெருங்கிக்கொண்டிருந்த தாக்குதலை உணர்ந்து பிரெஞ்சு அரசு ________ பகுதிக்கு நகர்ந்து சென்றது.

(அ) மார்செல்லிஸ் (ஆ) போர்டியாக்ஸ்

(இ) லியோன்ஸ் (ஈ) வெர்செய்ல்ஸ்

13. கீழ்க்காண்பனவற்றுள் வெர்செய்ல்ஸ் ஒப்பந்தத்தின் பகுதியாக கருதப்படாதது எது?

(அ) ஜெர்மனி அல்சேஸ் மற்றும் லொரைன் பகுதிகளை பிரான்சிடம் ஒப்படைக்க வேண்டும்

(ஆ) சார் பள்ளத்தாக்கு பிரான்சிற்கு வழங்கப்பட வேண்டும்

(இ) ரைன்லாந்தை தோழமை நாடுகள் ஆக்கிரமித்துக் கொள்ளவேண்டும்

(ஈ) டான்சிக் போலந்தின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு செல்லப்பட வேண்டும்

14. கீழ்க்காண்பனவற்றுள் சரியாகப் பொருத்தப்படாத ஒன்றைச் சுட்டுக.

(அ) விடுதலை ஆணை – இரண்டாம் அலெக்ஸாண்டர்

(ஆ) இரத்த ஞாயிறு – இரண்டாம் நிக்கோலஸ்

(இ) ரஷ்யாவில் 500 அடிமைகளின் கலவரங்கள் – முதலாம் நிக்கோலஸ்

(ஈ) பிரெஸ்ட்–லிடோவ்ஸ்க் உடன்படிக்கை – மூன்றாம் அலெக்ஸாண்டர்

15. **கூற்று:** பன்னாட்டு சங்கம் அதிகாரத்தை செயல்படுத்த முடியாத நிலையில் இருந்தது.

காரணம்: "கூட்டுப் பாதுகாப்பு" என்ற கொள்கையை மெய் வழக்கத்திற்குள் நடைமுறைப்படுத்த முடியவில்லை.

(அ) கூற்றும் காரணமும் சரி. காரணம் கூற்றை விளக்குகிறது

(ஆ) கூற்றும் காரணமும் சரி. ஆனால் காரணம் கூற்றை விளக்கவில்லை

(இ) கூற்று சரி. காரணம் தவறு

(ஈ) கூற்று தவறு. காரணம் சரி

16. **கூற்று:** உலகையே கடுமையாக பாதித்தப் பொருளாதார பெருமந்தம் சோவியத் ரஷ்யாவை பாதிக்கவில்லை.

காரணம்: நிலம் சமூக உடைமையாக அறிவிக்கப்பட்டு ஏழை மக்களுக்குப் பிரித்து வழங்கப்பட்டது.

(அ) கூற்றும் காரணமும் சரி. காரணம் கூற்றை விளக்குகிறது

(ஆ) கூற்றும் காரணமும் சரி. ஆனால் காரணம் கூற்றை விளக்கவில்லை

(இ) கூற்று சரி. காரணம் தவறு

(ஈ) கூற்று தவறு. காரணம் சரி

17. பன்னாட்டு சங்கத்தின் முதல் பொது செயலாளரான எரிக் ட்ரம்மோன்ட் ________ நாட்டைச் சேர்ந்தவர் ஆவார்.

(அ) பிரான்ஸ் (ஆ) தென்னாப்பிரிக்கா

(இ) பிரிட்டன் (ஈ) அமெரிக்க ஐக்கிய நாடு

18. பன்னாட்டு சங்கம் ________ ஆம் ஆண்டு கலைக்கப்பட்டது.

(அ) 1939 (ஆ) 1941

(இ) 1945 (ஈ) 1946

19. ஹிட்லரை ஜெர்மனியின் பிரதம அமைச்சராக நியமித்தவர் யார்?

(அ) ஜெனரல் லூடன்டார்ஃப்

(ஆ) வான் ஹிண்டன்பர்க்

(இ) ஜெனரல் ஸ்மட்ஸ்

(ஈ) ஆல்ஃபிரட் வான் பெத்மண்

20. முசோலினி ஆசிரியராகப் பணியாற்றிய பத்திரிகையின் பெயர் யாது?

(அ) அவந்தி (ஆ) ப்ராவ்தா

(இ) மார்க்சிஸ்ட் (ஈ) மெய்ன் காம்ப்

II. குறுகிய விடையளிக்கவும்.

1. ஜெர்மனி பிரான்சை தனிமைப்படுத்த முனைந்ததேன்?
2. பிரிட்டனுக்கும் பிரான்சுக்குமிடையே 1904இல் கையெழுத்திடப்பட்ட நாடுகளுக்கிடையே நட்புறவின் (Entente Cordiale) முக்கியத்துவம் யாது?
3. பால்கன் சிக்கலின் விளைவுகள் உள்ளடக்கிய சிறப்புக்கூறுகளை எழுதுக.
4. "மூவர் தலையீடு" எனப்படுவது யாது?
5. முதல் உலகப்போரின் காலத்தில் கிழக்கு திசையில் வான் ஹிண்டன்பர்க் ஆற்றியப் பங்கை விளக்குக.
6. ஜட்லாந்துப் போரின் முக்கியத்துவம் பற்றி எடுத்தியம்புக.
7. நிகிலிசம் என்றால் என்ன?
8. கிரீசிற்கும் பல்கேரியாவிற்குமிடையே 1925இல் எழுந்த சர்ச்சையை பன்னாட்டு சங்கம் எவ்வாறு தீர்த்துவைத்தது?
9. லேட்டரன் உடன்படிக்கை எவ்வாறு முசோலினியின் அதிகாரத்திற்கு சட்டரீதியான அங்கீகாரம் வழங்கியது?
10. மூன்றாவது ரெய்ச் என்றால் என்ன?

III. சுருக்கமாக விடையளிக்கவும்.

1. முதல் மொராக்கோ சிக்கல் எவ்வாறு நிகழ்ந்தது?
2. அகழிப் போர் எவ்வாறு நடத்தப்பட்டது?
3. மிக ஆபத்தான U–படகுகள் மற்றும் Q–கப்பல்கள் பற்றி நீவீர் அறிந்தது என்ன?
4. போரில் அமெரிக்கா நுழைந்தபிறகு நிகழ்ந்தவற்றை வரிசைக்கிரமமாக எடுத்துக் கூறுக.
5. ரஷ்யப் புரட்சி அந்நாட்டிற்கு வெளியில் ஏற்படுத்திய பாதிப்புகளை விளக்குக.
6. பன்னாட்டு சங்கம் வெற்றிகரமாக முடித்துவைத்த சிக்கல்கள் பற்றி குறிப்பு வரைக.
7. பொருளாதார பெருமந்தம் எவ்வாறு அரசியல் தளத்தில் தாக்கத்தை வெளிப்படுத்தியது என்பதனை விளக்குக.

IV. விரிவான விடையளிக்கவும்.

1. முதல் உலகப்போரின் காரணங்களையும், விளைவுகளையும் கணக்கிடுக.
2. "மார்க்ஸ் தீப்பொறியை வழங்கவும், அதை லெனின் தீபமாக ஏற்றினார்" – தெளிவுபடுத்துக.
3. வெர்செய்ல்ஸ் ஒப்பந்தம் ஜெர்மனியைப் பொறுத்தமட்டில் கடுமையானதாகவும், அவமானப்படுத்தக்கூடியதாகவும் தெரிந்தது – இக்கூற்றினுக்கான ஆதாரப்பின்புலத்தை உறுதிப்படுத்துக.
4. முசோலினியும், ஹிட்லரும் பாசிச அரசுகளை முறையே இத்தாலியிலும் ஜெர்மனியிலும் நிறுவ சாதகமான சூழல் எழுந்தமையை விளக்குக.

V. செயல்பாடுகள்.

1. இணையத்தில் (You Tube) இருக்கும் முதல் உலகப்போர் தொடர்பான காணொளிகளை மாணவர்களுக்குத் தெரியப்படுத்தலாம்.
2. முதல் உலகப்போருக்கு முன்பும் பின்பும் வரைபடத்தில் நிகழ்ந்துள்ள மாற்றங்களை ஒப்பிட்டு போர் நடந்த பகுதிகளைக் குறிக்க மாணவர்களுக்கு ஆசிரியர்கள் உதவலாம்.
3. பன்னாட்டு சங்கத்தின் வெற்றி, தோல்விகளை மாணவர்களைக் கொண்டு விவாதிக்கச் செய்யலாம்.
4. கூகுளில் கிடைக்கும் கான் அகாடமியின் பாசிசவாதம் பற்றிய காணொளிக் காட்சிகளை மாணவர்களும், ஆசிரியர்களும் பயன்படுத்திக் கொள்ளலாம்.

மேற்கோள் நூல்கள்

- R.D. Cornwell, *World History in the Twentieth Century* (London: Longman, 1972).
- Edward McNall Burns, *Western Civilizations*, vol. 2 (New York: W.W. Norton, 1972).
- Richard Overy (ed.) *Complete History of the World* (London: Harper Collins, 2007).
- Chris Harman, *A People's History of the World* (New Delhi: Orient Longman, 2007).
- H.A. Davies, *An Outline History of the World* (Oxford: Oxford University Press, 2006).
- K.A. Manikumar, *A Colonial Economy in the Great Depression: Madras (1929–1937)*, (Hyderabad: Orient Longman, 2003).

மேலும் வாசிக்கத்தகுந்த நூல்

- டாக்டர் மு. ஆரோக்கியசாமி, ஐரோப்பிய வரலாறு (கி.பி. 1450 முதல் 1970 வரை), தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம், சென்னை (ஆவணப் பதிப்பு: ஆகஸ்ட் – 2017).

A-Z கலைச்சொற்கள்

கடுமையான திடீர் தாக்குதல்	**onslaught**	a sudden and severe onset of trouble
வணிகவாதம்	**Mercantilism**	the theory that trade generates wealth and a government should encourage it by protecting domestic trade from foreign competition.
பேரழிவை ஏற்படுத்தும் வெடிபொருட்கள்	**ammunition**	any nuclear, chemical or biological material that can be used as a weapon of destruction
மீன்பிடிப் படகு	**trawler**	a fishing boat
தற்காலிகப் போர் நிறுத்தம்	**armistice**	a formal agreement to stop fighting for a particular time.
சட்டஒப்பந்தம்	**covenant**	agreement by legal deed
பண்ணையாள்	**serf**	a person who is tied to the land and to its holder, the land lord.
வெறுக்கத்தக்க	**abominable**	detestable, hateful
பாட்டாளி வர்க்கம்	**proletariat**	working class
அரசு இல்லாத கூட்டு முயற்சியில் உருவாக்கப்படும் சமுதாயத்தில் நம்பிக்கை	**anarchism**	belief in the abolition of state and organisation of society on a voluntary, cooperative basis without recourse to force or compulsion
பதவி துறத்தல்	**abdication**	a formal resignation and renunciation of power, stepping down
பறிமுதல் செய்தல்	**confiscation**	seizure of property
குண்டாந்தடி	**cudgel**	a short, thick stick used as a weapon
முழங்கால் வரையிருக்கும் காலணி	**jackboot**	a heavy military boot extending above the knee
பித்துப்பிடித்த	**lunatic**	a person who is mentally ill
ரத்து செய்தல், ஒழித்தல்	**annulling**	abolishing, invalidating

இணையச் செயல்பாடு

ஏகாதிபத்தியமும் அதன் தாக்கமும்

இந்த செயல்பாட்டின் மூலம் முதல் உலகப்போர் நிகழ்வுகளை துல்லியமாக தெரிந்து கொள்ள முடியும்.

படிநிலைகள்

படி – 1 : URL அல்லது QR குறியீட்டினைப் பயன்படுத்தி இச்செயல்பாட்டிற்கான இணையப் பக்கத்திற்கு செல்க

படி – 2 : திரையில் தோன்றும் படத்தில் "Enter" ஐ சொடுக்கவும், பின்னர் கீழ்ப்பகுதியில் இருக்கும் காலக்கோட்டில் எதாவது ஒரு ஆண்டை தேர்வு செய்யவும் (உதாரணம்: 1914)

படி –3 : முதல் உலகப்போர் பற்றிய தகவல்களை ஒவ்வொன்றாக அறிய திரையில் தோன்றும் உலக வரைபடத்தில் ஏதாவது ஒரு படத்தொகுப்பை தேர்ந்தெடுக்கவும்.

படி 1

படி 2

படி 3

உரலி: https://www.abmc.gov/sites/default/files/interactive/interactive_files/WW1/index.html

4QTC5

*படங்கள் அடையாளத்திற்கு மட்டுமே.

*தேவையெனில் Adobe Flash ஐ அனுமதிக்க.

12th_History_TM_Unit_13_V2.indd 250 02-01-2023 16:40:04

அலகு 14

இரண்டாம் உலகப்போரும் காலனிய நாடுகளில் அதன் தாக்கமும்

கற்றலின் நோக்கங்கள்

கீழ்க்காணும் அம்சங்களோடு அறிமுகமாதல்

- இரண்டாம் உலகப்போருக்கான காரணங்கள், அதன் போக்கு மற்றும் விளைவுகள்
- சீனப் புரட்சி
- இந்தோனேசியா மற்றும் பிலிப்பைன்சில் உருவான தேசியவாத இயக்கங்களும் சுதந்திரத்திற்கான போராட்டங்களும்

1M3FQ

அறிமுகம்

முதல் உலகப்போருக்குப் பின் கூட்டுப் பாதுகாப்பை முன்னிறுத்தி உருவாக்கப்பட்ட பன்னாட்டு அமைப்பு தகர்ந்தது. 1939 செப்டம்பரில் ஐரோப்பா, மீண்டும் ஒரு பெரும் போரை எதிர்கொண்டது. 1939 முதல் 1945 வரை நடந்த போர், இதற்குமுன் 1914 முதல் 1918 வரை நடந்த உலகப்போரை விஞ்சியதாக இருந்தது. இதற்கு ஜப்பான் எடுத்த நிலைப்பாடும் முக்கியக் காரணங்களில் ஒன்றாகும். அதன் விளைவாக கடுமையான அளவிற்கு உயிரிழப்பும், பொருள் சேதமும், போர்செலவினங்களும் ஏற்பட்டது. இரண்டாம் உலகப்போருக்குப் பின் காலனிய நாடுகளில் ஒரு கொந்தளிப்பு ஏற்பட்டு தேசியவாத கிளர்ச்சிகள் சூடுபிடித்தன. இதனால் ஆசியாவிலும், ஆப்பிரிக்காவிலும் காலனியாதிக்க நீக்கம் தொடங்கியது. தென்கிழக்கு ஆசியாவில், டச்சு ஒரு தோல்வியுற்ற போரை நடத்தியது, ஆனால் இறுதியாக முந்தைய டச்சு காலனி நாடாக இருந்த கிழக்கிந்தியத் தீவுகளான இந்தோனேசியாவுக்கு 1949இல் விடுதலை அறிவிக்கப்பட்டது. இப்பாடம் இந்தோனேசியாவிலும், அமெரிக்க காலனியான பிலிப்பைன்ஸ் நாட்டிலும் ஏற்பட்ட முன்னேற்றங்களை அணுகுபொருளாக எடுத்துவிளக்குகிறது. சீனாவில் ஊழல்வாதிகளும், திறமையற்றவர்களுமாக இருந்த தேசியவாதிகளை மக்கள் புறந்தள்ளினார்கள். அங்கு நடந்த உள்நாட்டுப் போரின் விளைவாக மா சே–துங்கின் தலைமையில் சீன மக்கள் குடியரசு உருவாக வழிவகுத்தது.

14.1 இரண்டாம் உலகப்போர்: காரணங்கள்

போரின் துவக்கத்தில் பிரிட்டனும், பிரான்சும் ஜெர்மனியை எதிர்த்ததும் இத்தாலி துவக்கத்தில் நடுநிலைவகித்து பின் ஜெர்மனியை ஆதரித்ததும் கொடுத்த தோற்றமானது முதல் உலகப்போரின் இரு அணிகளை நினைவூட்டக்கூடியதாக விளங்கியது. குறிப்பிடத்தக்க வேறுபாடு என்னவென்றால், ஜப்பான் மேற்கத்திய சக்திகளுக்குப் பதிலாக ஜெர்மனியுடன் இணைந்தது. போர் தொடங்கி இரண்டு ஆண்டுகள் கடக்கும் வரை ரஷ்யாவும், அமெரிக்கா ஐக்கிய நாடும் எந்த ஒரு பிரச்சனையிலும் தலையிடவில்லை. இரண்டாம் உலகப்போரின் காலத்தில் போர்முறைகள் பெரும் மாற்றத்திற்கு உள்ளாகியிருந்தன. அகழியை அடிப்படை உத்தியாக கொண்ட போர்முறை மறைந்து வான்வெளி குண்டு வீசும் முறை ஆக்கிரமித்தது. போருக்காக ஆயுதம் ஏந்தியோரையும், சாதாரண குடிமக்களையும் இரண்டாம் உலகப்போர் பிரித்துப் பார்க்கத் தவறியது. அதனால் போரினால் பாதிக்கப்பட்டோர் எண்ணிக்கை மிக அதிகமாகவே இருந்தது.

போர் மூள்வதற்கான சூழ்நிலைகளைப் பற்றி நாம் முதலில் அறிவோம்.

அ) அமைதி உடன்படிக்கையின் நியாயமற்ற தன்மை

முதல் உலகப்போரின் முடிவில் ஜெர்மனியின் மீது பல கடுமையான விதிமுறைகள் சுமத்தப்பட்டன.

அதன் கட்டுப்பாட்டில் இருந்த காலனிய நாடுகள் பிரித்தெடுக்கப்பட்டதால் அதன் படையளவு மோசமாக சுருங்கியது. அல்சேஸ் மற்றும் லொரைன் பகுதிகளை பிரான்சிடம் விட்டுக் கொடுக்கவும், சார் பள்ளத்தாக்கில் அந்நாடு தற்காலிகமாகப் படைகளை நிறுத்திக் கொள்ளவும் ஜெர்மனி ஒப்புதல் வழங்க நிர்ப்பந்திக்கப்பட்டது. தொழிற்சாலைகள் நிறைந்த பகுதியான சைலேசியாவை போலந்திடம் ஒப்படைக்கவும் ஜெர்மனி கட்டாயப்படுத்தப்பட்டது. மேலும் செலுத்தவே இயலாத ஒரு தொகையை (6,600 மில்லியன் பவுண்டுகள்) போர் இழப்பீடாகவும் ஜெர்மனியிடம் கோரப்பட்டது. இத்தகைய கூறுகள் தங்களுக்கு அநியாயம் இழைக்கப்பட்டதாக ஜெர்மனிக்குள் எண்ண அலை ஏற்படவும் அதன் பின்தொடர்ச்சியாக நாஜி கட்சியின் அரசியல் வெற்றிக்கும் வழிவகுத்தது. இத்தாலியும் இத்தாலிய மக்கள் தொகையை அதிகமாகக் கொண்ட பகுதியாக கருதப்பட்ட டால்மேஷியாவை அதனிடமிருந்து பிரித்தெடுத்து புதிதாக உருவான யுகோஸ்லோவியாவிடம் ஒப்படைத்ததால் பாதிக்கப்பட்டிருந்தது. சிறு குடியரசாக மாற்றப்பட்ட ஆஸ்திரியா, ஜெர்மனியோடு இணைந்தால் பிரான்சு நாட்டிற்கு ஆபத்து ஏற்படக்கூடும் என்பதால் அது ஜெர்மனியிடமிருந்து பிரித்து வைக்கப்பட்டது.

(ஆ) பன்னாட்டு சங்கத்தின் (League of Nations) தோல்வி

மற்றொரு போரைத் தவிர்க்கும் நோக்கோடு பன்னாட்டு அமைப்பாக உருவாக்கப்பட்ட பன்னாட்டு சங்கம் காலப்போக்கில் வெற்றி பெற்றவர்களின் கூட்டணியானதோடு அது தோல்வியடைந்தவர்களுக்கு எதிரானதாகவும் தோன்றத் துவங்கியது. வெர்செய்ல்ஸ் ஒப்பந்தம் கையெழுத்தானபோதே அடுத்த போருக்கான விதைகள் தூவப்பட்டன.

1918 முதல் 1933 வரையிலான காலத்தில் போரைத் தவிர்க்கும் எண்ணத்தோடு தொடர் மாநாடுகள் நடத்தப்பட்டது. ஐரோப்பிய சக்திகள் 1925இல் ஸ்விஸ் நாட்டின் நகரான லோக்கர்னோவில் கூடி பேசியபோது ஜெர்மனியும் பிரான்சும் வெர்செய்ல்ஸ் ஒப்பந்தத்தில் உள்ளபடி ரைன் எல்லையை மதித்து நடக்க ஒப்புக்கொண்டன. இதற்கு அடுத்ததாகப் பலவகையிலும் பாராட்டப்பட்டது 1928இல் கையெழுத்திடப்பட்ட கெல்லாக்–பிரையாண்ட் (Kellogg–Briand) ஒப்பந்தம் ஆகும். அக்காலகட்டத்தில் பன்னாட்டு சங்கத்தில் அமெரிக்க ஐக்கிய நாடு உறுப்பினராகவில்லை என்றபோதும் அது கூட்டத்தில் கலந்து கொண்டது. இவ்வுடன்படிக்கையின் விளைவாக உலக நாடுகள் அனைத்தும் 'போரை கைவிடுவது

கெல்லாக்–பிரையாண்ட் உடன்படிக்கை

என்பதை தங்களின் தேசிய கொள்கையாக' ஏற்க உறுதிமொழி எடுத்துக்கொண்டன. ஆனால் இவ்வுறுதிமொழியை பின்பற்றாத நாடுகள் மீது நடவடிக்கை எடுக்குமளவிற்கு பன்னாட்டு சங்கம் அதிகாரம் கொண்டிருக்கவில்லை.

ஹிட்லர் பதவியேற்ற 1933ஆம் ஆண்டு ஜெனீவாவில் பன்னாட்டு சங்கம் ஆயுதக்குறைப்பு மாநாடு ஒன்றை நடத்தியது. பிரான்சிற்கு இணையாக ஜெர்மனியும் மறுஆயுதமயமாக்கல் கோரிக்கை விடுத்ததே பிரச்சனையாக எழுந்தது. பிரெஞ்சுக்காரர்கள் இந்த கோரிக்கைக்கு உடன்பட மறுத்துவிட்டனர், அதே நேரத்தில் பிரிட்டன் ஜெர்மனியின் கோரிக்கையை ஏற்கத் தயாராக இருந்தது. பிரான்சின் மறுப்பிற்கு பதிலடியாக ஹிட்லர் அம்மாநாட்டிலிருந்தும், பன்னாட்டு சங்கத்திலிருந்தும் ஜெர்மனியை விலக்கிக் கொண்டார். தனது முடிவை பொது வாக்கெடுப்பிற்கு உட்படுத்திய ஹிட்லருக்கு சாதகமாக ஜெர்மானிய மக்களின் பெரும் ஆதரவு குவிந்தது. இதனால் ஊக்கமடைந்த ஹிட்லர் மார்ச், 1935இல் கட்டாய இராணுவ சேவையை வலியுறுத்தி அதன் வாயிலாக ஐந்து லட்சம் என்ற பெரும் அளவிலான எண்ணிக்கையில் இளைஞர்களைக் கொண்ட இராணுவத்தை உருவாக்கப் போவதாக அறிவித்தார். இந்நிகழ்வே வெர்செய்ல்ஸ் ஒப்பந்தம் மீறப்பட்ட முதல் செயலாக அமைந்தது. பிரிட்டன், பிரான்ஸ் மற்றும் இத்தாலி ஆகிய நாடுகள்

ஆயுதக் குறைப்பு மாநாடு, ஜெனீவா

12th_History_TM_Unit_14_V2.indd 252 02-01-2023 16:40:36

பன்னாட்டு சங்கத்தில் கூடி ஜெர்மனியின் போக்கைக் கண்டித்தனவேயன்றி வேறு எதுவும் செய்யமுடியவில்லை. பிரிட்டன் ஜெர்மனியோடு கப்பற்படை ஒப்பந்தம் ஒன்றை ஏற்படுத்திக் கொள்ள முனைப்புக் காட்டியது. அதன்படி, பிரிட்டனின் கப்பற்படை கட்டுமானப் பணிகளில் 35 சதவீதம் வரை ஜெர்மனி பெறுவதற்கு வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டது.

இத்தாலி எத்தியோப்பியா மீது 1935இல் படையெடுத்தது. பேரரசர் ஹேல் செலாஸி (Haile Selassie) பன்னாட்டு சங்கத்தில் முறையிட்டும் எந்தப் பயனும் இருக்கவில்லை.

இ) 1930களில் ஏற்பட்ட பொருளாதாரப் பெருமந்தம்

இரண்டாம் உலகப்போர் துவங்க முக்கியமான பொருளாதார காரணம் பெருமந்தமே ஆகும். பெருமந்தம் பொருளாதார தேசியவுணர்வை அதிகப்படுத்தியது. வேலைவாய்ப்பின்மையாலும், தொழில் தேக்கத்தாலும் பாதிக்கப்பட்ட அரசுகள் இறக்குமதி செய்யப்படும் பொருட்கள் மீது அதிக வரியைத் திணித்து அதன் வாயிலாக உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட பொருட்களின் நுகர்வையும் அதை சார்ந்த சந்தையையும் பாதுகாக்க முனைந்தன. இதன் விளைவாக, விரிவாக்க கொள்கைக்கு வழியேற்படுத்தியதோடு பிரச்சனையைத் தீர்க்க அண்டை நாடுகள் மீது படையெடுப்பதே தீர்வு என்ற நிலைக்கு கொண்டுசென்றது. இதன் முதல் நகர்வை ஜப்பானே மேற்கொண்டது. அது 1931இல் உலகப் பொருளாதார சிக்கலை எதிர்கொள்ள சீனாவில் மஞ்சூரியாவின் வடக்குப் பகுதிகளை ஆக்கிரமித்தது. ஜப்பானிய ஏற்றுமதியில் பட்டுத்துணிக்கான மூலப்பொருட்களும் பருத்தி ஆடைகளும் எதிர்கொண்ட சரிவை நிலைப்படுத்த மஞ்சூரியாவை ஆக்கிரமித்தால் அதை சந்தையாக மாற்றிக்கொள்ளலாம் என்று ஜப்பானிய இராணுவவாதிகள் அறிவுறுத்தியதால் அந்நாடு போர் நடவடிக்கையில் இறங்கியது.

ஈ) ஜெர்மானிய பெரு வியாபாரிகளின் எதிர்பார்ப்பும், தேசப்பற்றாளர்களின் மனக்குறையும்

பிரிட்டன், பிரான்ஸ், அமெரிக்க ஐக்கிய நாடு மற்றும் சோவியத் நாடு ஆகியவை உலகத்தின் பெரும் நிலப்பரப்புகளை தங்களின் காலனிகளாகக் கொண்டிருந்தன. ஐரோப்பிய கண்டத்தில் பெரும் தொழிற்தேசமான ஜெர்மனியோ காலனிகள் ஏதும் கொண்டிருக்கவில்லை. இதுவே ஜெர்மனியின் பெருவியாபார அமைப்புகளை வெர்செய்ல்ஸ் ஒப்பந்தத்தின் கூறுகளை உடைக்கத் தூண்டுவதாக அமைந்தது. ஜெர்மனி போலந்திடம் இழந்த பகுதிகளையும் ஜெர்மன் மொழி பேசும் ஆஸ்திரிய நாட்டையும் சூடட்டன்லாந்து என்ற செக் நாட்டு எல்லையில் அமைந்தபகுதிகளும் ஜெர்மனியோடு இணைத்துக்கொள்ள விரும்பியது. நாஜி ஆட்சியில் பெருவியாபார அமைப்புகளும், நாஜி கொள்கைகளும் இணக்கமானப் போக்கைக் கொண்டிருந்தன.

பிரிட்டன், பிரான்ஸ், அமெரிக்க ஐக்கிய நாடு மற்றும் சோவியத் நாடு ஆகியவற்றின் சாம்ராஜ்யம் பூமியின் நிலப்பரப்பில் நான்கில் ஒரு பகுதியை உள்ளடக்கியதாக இருந்தது. ஒப்பீட்டளவில் ஜெர்மனி, இத்தாலி, ஜப்பான் ஆகியவை சிறியனவாகவே தோன்றின. ஜெர்மானிய தேசபக்தி கொண்டோர் ஒரு ஜெர்மானியனின் வாழ்விடமாக சராசரியாக .004 சதுர மைல்களே உள்ளது என்பதையும், அதே வேளையில் சராசரியாக ஒரு பிரிட்டானியனால் ஏகாதிபத்தியத்திற்கு உட்பட்ட மூன்று சதுர மைல்களில் உள்ள வளங்களையும், பொருளாதார வாய்ப்புகளையும் பயன்படுத்திக்கொள்ள முடிகிறது என்பதனையும் சுட்டிக்காட்டினார்கள்.

உ) முசோலினியின் விரிவாக்கக் கொள்கை

சோமாலிலாந்து, எரித்ரியா, லிபியா போன்ற நாடுகளை தன்னகத்தே வளைத்துக் கொண்ட முசோலினியின் இத்தாலி, எத்தியோப்பியாவை இணைக்கவும் அல்பேனியாவை யுகோஸ்லோவியாவிடம் இருந்து பிரித்தெடுக்கவும் சந்தர்ப்பம் பார்த்துக்கொண்டிருந்தது. இராணுவ அரசின் முதலாளித்துவமாக பொருளாதாரத்தை கட்டமைத்த அந்நாடு ஆயுதம் தாங்கிய விரிவாக்கத்தை ஆதரித்தது. ஆயுத தொழிற்சாலைகளுக்கு தேவையான மூலப்பொருட்களைப் பெறுவதற்கு இருந்த ஒரே வழி பிற நாடுகள் மீது படையெடுப்பதே என்ற நிலை இருந்தது.

முசோலினி மற்றும் ஹிட்லர்

முசோலினியின் எத்தியோப்பியப் படையெடுப்பை பிரிட்டனும் பிரான்சும் கண்டித்ததால் ஹிட்லருக்கு இத்தாலியோடு

12th_History_TM_Unit_14_V2.indd 253 02-01-2023 16:40:36

நெருங்கிய நட்பை வளர்த்துக்கொள்ள வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்தது. இதுவே ரோம்–பெர்லின் அச்சின் துவக்கமாக அமைந்தது.

ஊ) ஜப்பானின் ஏகாதிபத்திய கொள்கை

ஜெர்மனியின் அணுகுமுறையை கிழக்கு ஆசியாவில் ஜப்பான் பின்பற்றியது. அது ஏற்கனவே தைவானையும், கொரியாவையும் காலனிகளாக உருவாக்கிக் கொண்டதோடு மஞ்சூரியாவையும் கட்டுப்படுத்தியது. இராணுவம் ஆட்சியை கவிழ்த்து அரசை கைப்பற்றிய (1936க்குப் பின்) அதன் பேராசை நிறைந்த பார்வை டச்சு கிழக்கிந்தியப் பகுதிகள் மீதும், பிரிட்டிஷ் காலனியாதிக்கத்தின் கீழிருந்த மலேயா, சிங்கப்பூர் போன்ற பகுதிகள் மீதும், இந்தோ–சீனாவில் அமையப்பெற்ற பிரெஞ்சு காலனிகள் மீதும் அமெரிக்க ஐக்கிய நாடுகள் வசமிருந்த பிலிப்பைன்ஸ் பகுதி மீதும் விழுந்தது.

எ) போர் உருவாகுதலில் ஹிட்லரின் பொறுப்பு

(i) ஸார் பகுதியை ஜெர்மனியோடு இணைத்தது

வெர்செய்ல்ஸ் உடன்படிக்கையின்படி ஜனவரி 1935இல் ஸார் பகுதியில் பொது வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும். அப்பகுதி மக்கள் தாங்கள் ஜெர்மனியுடனோ, பிரான்சுடனோ அல்லது பன்னாட்டு சங்கத்தின் கட்டுப்பாட்டிலோ இருக்கப் போவதை அவர்களே முடிவுசெய்ய வேண்டும். வாக்களித்தவர்களில் தொன்னூறு சதவீத நபர்கள் ஜெர்மனியோடு இணைவதையே விரும்பினார்கள். அதனால் மார்ச் 1935இல் ஸார் பகுதி ஜெர்மனியோடு இணைக்கப்பட்டது. இது ஹிட்லருக்கு பெரும் மனவலிமையை ஊட்டியது.

(ii) ரைன்லாந்து இணைக்கப்படல்

வெர்செய்ல்ஸ் ஒப்பந்தத்தின் கீழ் ஜெர்மனி தனது இராணுவத்தை ரைன்லாந்தில் இருந்து விலக்கிக்கொள்ள ஒப்புக்கொண்டதையும் மீறி 1936இல் ஹிட்லர் மீண்டும் அப்பகுதியில் இராணுவத்தை குவிக்கலானார். பிரெஞ்சுக்காரர்கள் கண்டித்திருந்தால் ஜெர்மானியர்கள் பின்வாங்கி இருக்கக்கூடும். பிரெஞ்சுப் படைபலம் ஜெர்மனியை காட்டிலும் வலுவாக இருந்தாலும் பொருளாதாரப் பெருமந்தம் ஏற்படுத்திய பாதிப்பும், அதனால் அரசியல் நிலையற்றத்தன்மையால் ஏற்பட்ட பாதிப்பால் பிரதம அமைச்சரான எடூவார்ட் டலாடியர் (Edouard Daladier) பதவி விலகுமளவிற்கு சென்றதாலும் பிரான்சினால் வெர்செய்ல்ஸ் ஒப்பந்த முறிவில் ஜெர்மனி ஈடுபட்டதை எதிர்க்க வலிமையற்று இருந்தது.

ஜெர்மனியின் ஆக்கிரமிப்பில் ரைன்லாந்து

(iii) ஆஸ்திரியாவை ஜெர்மனியோடு வலுக்கட்டாயப்படுத்தி இணைத்தது

ஹிட்லர் ஆஸ்திரியாவில் பிறந்ததால் அது ஜெர்மனியின் ஒருபகுதியாக இருப்பதையே அவர் விரும்பினார். ஹிட்லர் ஆஸ்திரிய பிரதம அமைச்சரான ஸ்கூஸ்னிக்கை (Schuschnigg) பிப்ரவரி 1938இல் பவேரிய ஆல்ப்ஸ் மலையில் இருந்த நகரான பெர்க்டஸ்காடனுக்கு (Berchtesgaden) கலந்துரையாடும் நிமித்தமாக அழைத்தார். அந்நிகழ்வில் ஆஸ்திரிய பிரதம அமைச்சர் நாஜி கட்சியை அவர் நாட்டில் அங்கீகாரமளிக்கவும் அந்நாட்டுப் பொருளாதாரத்தை ஜெர்மனியோடு இணைக்கவும் தவறினால் படையெடுப்பை எதிர்கொள்ள நேரிடும் என்ற ஒற்றை தெரிவு வழங்கப்பட்டு எச்சரிக்கை விடப்பட்டார். ரோம்–பெர்லின் அச்சின் உருவாக்கத்தோடு ஆஸ்திரியா இத்தாலியின் ஆதரவை இழந்திருந்தது. வேறு வழி தெரியாத ஸ்கூஸ்னிக் அந்த முதல் தெரிவை ஏற்றுக்கொள்ள உடன்பட்டார். ஹிட்லரின் நிர்ப்பந்தத்தால் இது குறித்துப் பொதுவாக்கெடுப்பு நடத்தப்போவதாக வெளியிடப்பட்டதனை புறந்தள்ளிய ஆஸ்திரிய பிரதம அமைச்சர், அந்நாட்டில் நாஜி அரசை ஏற்படுத்தினார். அதன்பின் ஜெர்மானிய படைகள் வியன்னாவிற்குள் நுழைந்து அந்நாட்டின் மீது கட்டுப்பாட்டை நிறுவ ஆரம்பித்தன.

(iv) சூடட்டன்லாந்து ஆக்கிரமிப்பு

ஐரோப்பாவின் முக்கிய சக்திகளிடமிருந்து எந்த எதிர்ப்பையும் எதிர்கொள்ளாத ஹிட்லர் தனது பார்வையை செக்கோஸ்லோவாக்கியா மீது திருப்பினார். ஜூன் 1938இல் ஹிட்லர் சூடட்டன்லாந்தை ஆக்கிரமிக்கும் தனது நோக்கை இராணுவத்திற்கு ஆணைகள் வாயிலாக தெரிவித்தார். சூடட்டன்லாந்தில்

12th_History_TM_Unit_14_V2.indd 254 02-01-2023 16:40:36

வாழும் ஜெர்மானியர்கள் மிக மோசமாக ஒடுக்கப்படுகிறார்கள் என்பது போன்றதொருப் பிரச்சாரத்தை தெளிந்த முறைமையுடன் நாஜி கட்சிப் பரப்பியது. பிரான்சையும், செக்கோஸ்லோவாக்கியாவையும் கலந்து பேசிய பிரிட்டிஷ் பிரதம அமைச்சர் நெவில் சாம்பர்லின், பாதிக்கு மேல் ஜெர்மானிய மக்கள் தொகையை உள்ளடக்கிய பகுதிகளை ஜெர்மனியிடம் ஒப்படைக்க இசைந்தார். ஆனால் போரை விரும்பிய ஹிட்லரோ அதை ஏற்க மறுத்தார். இது குறித்த பொதுவாக்கெடுப்பை நடத்துவதையும் அவர் விரும்பவில்லை. அதனால் அத்தகையப் பொதுவாக்கெடுப்பு நடத்தப்படுவதற்கு முன்னரே அவர் சூடட்டன்லாந்தை தனது இராணுவத்தை கொண்டு ஆக்கிரமித்தார்.

மூனிச் ஒப்பந்தம்

லண்டனில் எழுந்தப் பெருவாரியான எண்ணவோட்டம் ஹிட்லருக்கு எதிரான போரை நாடியதாகவே இருந்தது. ஆனால் சாம்பர்லினும், பிரெஞ்சு பிரதம அமைச்சரும் 'சமரசப்படுத்தல்' (appeasement) என்ற கொள்கையை முன்னிறுத்தி எவ்வாறாயினும் அமைதியை நிலைநிறுத்த முயன்றனர். அதைத் தொடர்ந்து நடந்த மூனிச் மாநாட்டில் பிரிட்டன், பிரான்ஸ், ஜெர்மனி மற்றும் இத்தாலி ஆகிய நாடுகளின் பிரதம அமைச்சர்கள் கூடிப்பேசி ஹிட்லர் அக்டோபர் 1இல் நிர்ப்பந்தித்தது போல சூடட்டன்லாந்தை ஜெர்மானியப் படைகள் ஆக்கிரமித்துக் கொள்ளலாம் என்றும் செக்கோஸ்லோவாக்கியாவின் பகுதிகளை போலந்திற்கும், ஹங்கேரிக்கும் பிரித்துக் கொடுப்பது என்றும் முடிவு செய்யப்பட்டது.

மூனிச் ஒப்பந்தம்

(V) செக்கோஸ்லோவாக்கியாவிற்கு எதிரான அத்துமீறிய தாக்குதல்

செக் நாட்டினர் தாங்கள் ஏமாற்றப்பட்டதாக உணர்ந்தார்கள். செக்கோஸ்லோவாக்கியாவின் புதிய எல்லைகள் மூனிச் மாநாட்டில் நான்கு சக்திகளால் உத்தரவாதம் அளிக்கப்பட்டன சாம்பர்லினின் கூற்றுப்படி இந்நகர்வு ஐரோப்பாவில் மிகப் பெரும் போரைத் தவிர்க்க உதவியதாகக் கருதப்பட வேண்டும். ஆனால் ஸ்லோவாக்கினருக்கும், செக் இன மக்களுக்கும் இடையே ஏற்பட்ட முரண் போக்கை காரணம்காட்டி ஹிட்லர் செக்கோஸ்லோவாக்கியாவிற்குள் ஜெர்மானியப் படைகளை அனுப்பினார்.

நாஜி–சோவியத் உடன்படிக்கை

பிரிட்டனும் பிரான்சும் போலந்து நாட்டிற்கு கொடுத்த நம்பிக்கை வாக்குறுதிகள் ரஷ்யாவின் உதவியில்லாமல் வலுவிழந்தவைகளாக கருதப்பட்டன. 1939இன் முன்கோடை காலத்தின் போது பிரிட்டனும் பிரான்சும் ரஷ்யாவுடன் பேச்சுவார்த்தையைத் துவக்கலாயின. பரஸ்பர நம்பிக்கை இல்லாததாலும், ஜெர்மனியோடு ரஷ்யா போரில் ஈடுபட விரும்பாததாலும், பேச்சுவார்த்தையில் எந்த முன்னேற்றமும் ஏற்படவில்லை. ரஷ்யர்கள் தங்களது பகுதிகளுக்கு பாதுகாப்பையும் அமைதியையும் விரும்பினர். இவ்விரண்டையும் ஜெர்மனி உறுதிப்படுத்த முன் வந்ததால் ஆகஸ்ட் 1939இல் க்ரெம்ளின் நகரில் நாஜி–சோவியத் (ஆக்கிரமிப்பு தவிர்ப்பு) உடன்படிக்கை கையெழுத்தானது. இவ்வுடன்படிக்கையின் இரகசிய சரத்துகளாவன: கிழக்கு ஐரோப்பாவை ஜெர்மனி–ரஷ்யாவின் செல்வாக்கிற்குட்பட்ட பகுதியாக கருதுவதும், போலந்தை பிரித்துக் கொள்வதும் என்பதாகும்.

நாஜி–சோவியத் ஒப்பந்தம்

(vi) போலந்து மீது படையெடுப்பும், போரின் துவக்கமும்

ஐரோப்பா முழுவதையும் ஆக்கிரமிக்கும் நோக்கம் கொண்டிருந்த ஹிட்லர் முதலில் 1939 செப்டம்பர் 1இல் போலந்து நாடு தனது நட்பு நாடுகளான பிரிட்டன் மற்றும் பிரான்சுடன் இணைந்து தன் நாட்டை சுற்றி வளைத்து தரைமட்டமாக்கத் திட்டம்



12th_History_TM_Unit_14_V2.indd 256 02-01-2023 16:40:37

www.tntextbooks.in

தீட்டுவதாகவும் போலந்தில் வாழும் ஜெர்மானிய இனத்தை அந்நாடு ஒடுக்குவதாகவும் குற்றம் சுமத்தி அந்நாட்டின் மீது படையெடுத்தார். இரண்டு நாட்களில் பிரிட்டன் விடுத்த இறுதி எச்சரிக்கையில் குறிப்பிட்டிருப்பதாவது: ஜெர்மானியப் படைகள் போலந்தில் இருந்து வெளியேறாவிட்டால், பிரிட்டனும் ஜெர்மனியும் போர்முனையில் சந்திக்க நேரும் என்பதேயாகும். பிரிட்டன் விடுத்த இறுதி எச்சரிக்கை புறந்தள்ளப்பட்டதால் இரண்டாம் உலகப்போர் மூண்டது.

ஹிட்லர்

போரின் பல்வேறு நிலைகள்

ஐரோப்பாவில் போர்

போர் துவங்கிய சில ஆண்டுகளில் ஜெர்மனி தடுத்து நிறுத்தமுடியாத சக்தியாக வடிவம் கொண்டிருந்தது. இரண்டே வாரங்களில் போலந்து தோற்கடிக்கப்பட்டது. மாஸ்கோவில் 1939 செப்டம்பரில் செய்துகொள்ளப்பட்ட இரண்டாவது ஒப்பந்தத்தின் வாயிலாக அந்நாட்டை சோவியத்தும் ஜெர்மனியும் பிரித்துக் கொண்டன. 1940 ஏப்ரலில் ஜெர்மனி நார்வே நாட்டை ஆக்கிரமித்தது. இவ்விணைப்பால் தனது நாட்டிற்கு ஸ்வீடனில் இருந்து இரும்புத்தாது வருவதை ஹிட்லர் உறுதி செய்து கொண்டதோடு பிரிட்டனை தாக்க வசதியாக கடற்படை தளத்தையும் விமானப்படை தளத்தையும் பெற்றுக்கொண்டார். தனது பிலிட்ஸ்க்ரீக் (Blitzkrieg என்னும் மின்னல் வேக வான்வெளி தாக்குதல்) தாக்குதல் முறையில் 1940 மே 10இல் நெதர்லாந்து, லக்ஸம்பர்க், பெல்ஜியம், மற்றும் பிரான்சு ஆகிய நாடுகள் மீது ஜெர்மனி தாக்குதலைத் தொடுத்தது.

ஆறே வாரங்களில் அனைத்து நாடுகளும் தோற்கடிக்கப்பட்டு ஐரோப்பிய கண்ட நிலப்பரப்பில் இருந்து பிரிட்டன் வெளியேற்றப்பட்டது. ஏறக்குறைய 198,000 பிரிட்டிஷ் துருப்புகளும், 140,000 நேச நாடுகளின் துருப்புகளும் அதிலும் குறிப்பாக பிரெஞ்சு துருப்புகள் (1940 மே–ஜூனில்) டங்கிர்க் (Dunkirk) கடற்கரைக்கு கடும் துப்பாக்கி முழக்கங்களுக்கிடையே விரட்டப்பட்டு அங்கிருந்து படகுகளிலும், சிறு கப்பல்களிலும் புறப்படும்படியான நிலை ஏற்பட்டது. அவ்வாறு டங்கிர்க்கிலிருந்து வெளியேற்றப்பட்ட வீரர்களே நாட்டைவிட்டு அகன்று பாசிசவாதிகளுக்கு எதிராக பிரெஞ்சு அரசை நடத்திக் கொண்டிருந்த இராணுவ ஜெனரல் டி காலின் தலைமையிலான சுதந்திர பிரெஞ்சுப் படையின் கருவாக செயல்பட்டார்கள். டங்கிர்க் வெளியேற்ற

டங்கிர்க் வெளியேற்றம்

சம்பவம் நிகழ்ந்திருக்காவிட்டால் பிரிட்டனால் ஜெர்மனியின் நாசவேலை பாதிப்புகளுக்குட்பட்ட நாடுகளை மீண்டும் ஒன்று திரட்ட முடியாமலே போயிருக்கும்.

ஹிட்லரின் வெற்றியை கண்ட இத்தாலி ஜெர்மனியோடு இணைந்து 1940 ஜூனில் பிரான்ஸ் மீதும், செப்டம்பரில் எகிப்து மீதும் படையெடுத்தது. இச்சமயத்தில் ஜப்பானும் அச்சு நாடுகளோடு கைகோர்த்தது. பிரிட்டன் அமைதி நடவடிக்கையை முன்னெடுக்கும் என்று ஹிட்லர் எதிர்பார்த்திருந்தார். ஆனால் சாம்பர்லினைத் தொடர்ந்து பிரதம அமைச்சர் பதவிக்கு வந்த சர்ச்சில் சமரசம் ஏற்படுத்திக் கொள்ள மறுத்தார். சரணடைவதை வலியுறுத்த முனைந்த நடவடிக்கைகளாக ஜெர்மானிய விமானப்படை முன்தெரிவு செய்யப்பட்ட இலக்குகளான துறைமுகங்கள், விமானத்தளங்கள் மற்றும் தொழிற்பேட்டைகள் போன்றவற்றின் மீது தாக்குதல் தொடுத்தது. 1940 செப்டம்பரில் லண்டன் மீது குண்டு வீசப்பட்டது, இந்நிகழ்வு பிலிட்ஸ் நடவடிக்கை (Operation Blitz) என்று அறியப்படுகிறது. 1940 அக்டோபர் முதல் லண்டன் மீதும், பிற தொழில் நகரங்கள் மீதும் இரவு நேரத்தில் குண்டு வீச்சு தாக்குதல் என்பது வழக்கமான ஒன்றாக மாறிப்போனது. எனினும் ராடார் கருவியை கண்டுபிடித்தமையால் தூரத்தில் வரும் விமானங்களின் வழித்தடத்தை அறிந்த இராயல் விமானப்படையின் விமானங்கள் (ஸ்பிட்ஃபயர் மற்றும் ஹறிக்கேன் போன்றவை) ஜெர்மானிய குண்டுவீச்சு விமானங்களைத் தாக்கி அவற்றிற்குப் பேரழிவை ஏற்படுத்தின. பிரிட்டன் போரில் (1940 ஜூலை முதல் அக்டோபர் வரை வான்வெளியில் நிகழ்ந்தவை) ஹிட்லர் தனது முதல் தோல்வியை சந்தித்தார். எனினும் ஜெர்மனியின் U–வகை படகுகள் (ஜெர்மானிய நீர்மூழ்கி கப்பல்களில் ஒரு வகை) அட்லாண்டிக் கடலில் நிகழ்த்தியப் போர் பிரிட்டனின் வணிகத்தைப் பெரிதும் பாதித்தது.

12th_History_TM_Unit_14_V2.indd 257 02-01-2023 16:40:37

www.tntextbooks.in



ஜெர்மன் U–படகு

1940 நவம்பரில் ரஷ்யாவை தாக்கலாம் என்று ஜெர்மனி எடுத்த முடிவு பால்கன் (ஏப்ரல்) பகுதியில் யுகோஸ்லோவியாவிற்கும், கிரீஸ் நாட்டிற்கும் எதிராக மேற்கொள்ளப்பட்டப் பிரச்சாரத்தால் ஒத்திவைக்கப்பட்டது. சோவியத் மீதான படையெடுப்பு 1941 ஜூன் 22இல் துவங்கியது. பல தொடர் வெற்றிகளுக்குப் பின்னர் ஜெர்மன் படைகள் லெனின்கிராடையும், மாஸ்கோவையும் நெருங்கின. 1941இல் ஹிட்லரின் பேரரசு ஐரோப்பாவில் உச்சத்தை அடைந்தது.

ஜெர்மனியின் ஆட்சி பரவிய இடங்கள் யாவும் அடக்குமுறைக்கும் மனிதத்தன்மையற்றப் போக்கிற்கும் சுரண்டலுக்கும் உட்படுத்தப்பட்டன. பிரான்சு முதல் ரஷ்யா வரை எழுபது லட்சத்திற்கும் அதிகமான ஐரோப்பியர்கள் கொத்தடிமைகளாக்கப்பட்டு ஜெர்மனிக்கு கொண்டு செல்லப்பட்டார்கள். ஜெர்மனியின் போர் செலவுகளில் மூன்றில் ஒரு பங்கு ஆக்கிரமிக்கப்பட்ட ஐரோப்பியப் பகுதிகளில் இருந்து வசூலிக்கப்பட்டது. நாஜி பேரினவாத வன்முறை யூதர்கள், பொதுவுடைமைவாதிகள் மற்றும் நாடோடிகள் போன்றோர் மீது கட்டவிழ்த்துவிடப்பட்டது. யூதர்கள் குவித்திணி (வதை) முகாம்களில் (Concentration Camps) சிறைவைக்கப்பட்டு அறுபது லட்சம் என்ற அளவிற்கு அரசால் ஆதரவளிக்கப்பட்ட இனப்படுகொலைக்கு தொழில்முறை கொல்லும் உத்தி மூலமாக (Holocaust என்று சொல்லப்படுகிறது) உட்படுத்தப்பட்டார்கள்.

ஆசியாவிலும் பசிபிக்கிலும் நிகழ்ந்த போர்

சோவியத் நாட்டில் ஜெர்மனி அடைந்த வெற்றிகள் ஜப்பானியத் தலைவர்களை தென்கிழக்கு ஆசியா மற்றும் பசிபிக் பகுதிகள் மீதும் படையெடுக்கத் தூண்டியது. 1941 நவம்பரில் அமெரிக்க ஐக்கிய நாட்டின் மீது போர் தொடுக்கும் முடிவு எடுக்கப்பட்டது. டிசம்பர் 7ஆம் நாள் ஜப்பானிய விமானப்படை ஹவாய் தீவுகளில் அமைந்திருந்த அமெரிக்க கடற்படைத் தளமான பேர்ல் துறைமுகம் (Pearl Harbour) மீது குண்டுவீசித் தாக்குதல் நடத்தி பெரும் சேதத்தை விளைவித்தது. அதன்பின் ஜப்பான் ஆங்கிலேய காலனியப் பகுதிகளான பர்மா, மலேயா, சிங்கப்பூர் (மிகவும் வெட்கக்கேடான முறையில் இப்பகுதியின் மக்களை ஜப்பானியரின் கருணையில் விடுத்து ஆங்கிலேயர்கள் தப்பி ஓடினர்) மற்றும் டச்சு கிழக்கிந்தியப் பகுதிகளையும் ஆக்கிரமித்தது.

பேர்ல் துறைமுக சம்பவமும் அதன் தோல்வியும்

ஜப்பான் பேர்ல் துறைமுகம் மீது நிகழ்த்திய தாக்குதல் அமெரிக்க மக்களின் நெஞ்சுரத்தை மங்கச் செய்வதற்கு மாறாக அவர்களை செயலில் இறங்கத் தூண்டியது. அதுவரை பொதுக்கருத்தின்படி போரில் தலையிடாமல் இருந்த அந்நாடு ஜப்பானின் மீது போர்ப் பிரகடனம் செய்து முழுமையான உலகப்போருக்கு வழிவகுத்தது. பிரிட்டனும், சீனாவும் அமெரிக்க ஐக்கிய நாட்டோடு கைகோர்த்தன. இத்தாலியும் ஜப்பானும், ஜெர்மனியோடு இணைந்த சூழலில் அமெரிக்க குடியரசுத் தலைவரான ரூஸ்வெல்ட் கடன்–குத்தகை முறையின் (Lend–Lease System) கீழ் பாசிசத்தை எதிர்க்கும் நாடுகளுக்கு உதவுவதாக உத்திரவாதம் அளித்திருந்தார். அமெரிக்க ஐக்கிய நாட்டின் நேரடி ஈடுபாட்டின் வாயிலாக நேச நாடுகள் அனைத்தும் இணைந்து கொண்டு வந்திருந்ததைவிட அதிகமான வாகனங்களும் கப்பல்களும் விமானங்களும் வந்து சேர்ந்ததால் அவற்றின் பொருள்வள தளம் அகலமானது. 1942 ஆகஸ்டில் மெக் ஆர்தர் தலைமையிலான அமெரிக்கப் படைகள் பசிபிக் பகுதியில் முக்கிய நடவடிக்கைகளை மேற்கொண்டன. ஜப்பானிய கப்பற்படை தலைவரான யமமோடா திட்டமிட்ட கடற்போர் பெரும் தோல்வியில் சென்று முடிந்தது.

பேர்ல் துறைமுகம் மீதான தாக்குதல்

அமெரிக்க ஐக்கிய நாட்டின் கப்பற்படை மிட்வே கடற்போரில் (1942 ஜூன் 4–7) ஜப்பானிய

12th_History_TM_Unit_14_V2.indd 258 02-01-2023 16:40:37

கடற்படையை தோல்வியுறச் செய்தது, நேச நாடுகளுக்கு அலை தங்களுக்கு சாதகமாக திரும்புகிறது என்ற எண்ணத்தை உருவாக்கியது. சாலமோன் தீவுகளில் நடந்த குவாடல்கனல் போரில் இராணுவமும் கடற்படையும் இணைந்து பல மாதங்கள் (1942 ஆகஸ்ட் 7 முதல் 1943 பிப்ரவரி 9 வரை) தாக்குதலைத் தொடர்ந்தன. இப்போரும் ஜப்பானியர்களுக்கு பெரும் தோல்வியாகவே முடிந்தது. அதன்பின் அமெரிக்க ஐக்கிய நாட்டின் படைகள் பிலிப்பைன்ஸ் பகுதியை மீட்டுக் கொண்டதோடு ஜப்பானியர்கள் தாங்கள் கைப்பற்றிய பகுதிகளிலிருந்து படிப்படியாக வெளியேற்றப்பட்டனர். 1944இல் பிரிட்டிஷ் படைகளும் இந்தியப் படைகளும் இணைந்து இந்தியாவின் வட-கிழக்குப் பகுதியின் வழியாக நுழைய ஜப்பானியர்கள் மேற்கொண்ட முயற்சிகளை முறியடித்தன. அதன்பின் அப்படைகள் சீனாவோடு இணைந்து ஜப்பானை பர்மாவிலிருந்து விரட்டியதோடு மலேயாவையும், சிங்கப்பூரையும் தங்களின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்தார்கள்.

ஸ்டாலின்கிராட் போர், 1942

ஜெர்மனியின் மின்னல் வேக தாக்குதல் உத்தி ஆரம்பகட்டத்தில் சோவியத் ரஷ்யாவிலும் வெற்றியை வழங்கியது. ஆனால் ஜெர்மானியப் படைகளால் மாஸ்கோ வரை சென்றுசேர முடியவில்லை. அது உலக வரலாற்றில் கடுமையாக இரத்தம் கொட்டியப் போரை ஸ்டாலின்கிராடில் எதிர்கொண்டது. ஆயுதங்களையும், டிராக்டர் வகை இழுவை எந்திரங்களையும் அதிக அளவில் தயார் செய்துகொண்டிருந்த மிகப் பெரும் தொழில் நகரான ஸ்டாலின்கிராட் வெற்றிக்கனியாக தங்களுக்கு கிடைக்கும் என்று ஹிட்லர் எண்ணியிருந்தார். மேலும் எண்ணெய் வளம் மிக்க காகசஸ் பகுதியின் மீதும் அவரது கண்கள் படர்ந்திருந்தன. அனைத்திற்கும் மேலாக செல்வாக்கு கொண்ட சோவியத் தலைவரான ஜோசப் ஸ்டாலினின் பெயர் கொண்ட நகரை ஆக்கிரமிப்பது தனது பெருமையை உயர்த்தும் என்று ஹிட்லர் கருதினார். ஆனால் ஜெர்மானிய இராணுவத்தால் நீண்ட காலத்திற்கு ஸ்டாலின்கிராடை தங்களின் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்க முடியாது என்பது தெளிவாகத் தெரிந்த பிறகும், ஹிட்லர் பின்வாங்க மறுத்தார். உத்திக்காக மேற்கொள்ளும் பின்வாங்கல்கூட நாஜி சிந்தனையின் கௌரவத்திற்கு இழுக்கு ஏற்படுத்திவிடக்கூடும் என்று அவர் அஞ்சினார். அதனால் தேசிய உணர்வால் உத்வேகம் பெற்று ஓய்வில்லாமல் தாக்குதலைத் தொடுத்த ரஷ்ய படைகளின் முன் கடுங்குளிருக்கும் பசிக்கும் மரணத்துக்கும் தனது வீரர்களை ஹிட்லர் கொடுத்தார். சோவியத் நாடு (1942ஆம் ஆண்டு) கோடைகாலத்தில் கொடுத்த பதிலடி நிலைமையை அதன் பக்கம் திருப்பியது. இராணுவ வரலாற்று ஆசிரியர்கள் பலரும் போரின் போக்கை ஸ்டாலின்கிராட் போரே மாற்றி அமைத்தது என்று எழுதுகிறார்கள்.

ஸ்டாலின்கிராட் போர்

ரஷ்யாவின் சிகப்புப் படைகள் நடத்திய "பெரும் தேசாபிமானப் போரில்" அடைந்த வெற்றி அதன் பாதையை பெர்லின் நோக்கித்திருப்பியது. நேச நாடுகளான பிரிட்டன், பிரான்ஸ், அமெரிக்காவோடு இணைந்த சோவியத்நாடு கூட்டாக ஜெர்மனியை தோற்கடித்ததால் ஐரோப்பாவில் இரண்டாம் உலகப்போருக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டது. ஒரு புள்ளிவிபர கணக்கின்படி போரில் 2 கோடி ரஷ்யர்கள் உயிர் நீத்திருந்தார்கள் (அதில் 1 கோடியே 30 லட்சம் இராணுவ வீரர்களும், 70 லட்சம் சாதாரணக் குடிமக்களும் அடங்குவர்).

முசோலினியின் வீழ்ச்சி

1942இன் இறுதியில் வட ஆப்பிரிக்காவின் எல் அலாமினில் ஜெர்மனி அடைந்த பின்னடைவே நேச நாடுகளுக்கு நம்பிக்கையை கொடுத்த முதல் சம்பவமாகும். எர்வின் ரோமல் தலைமையில் ஜெர்மன்-இத்தாலியக் கூட்டுப் படைகள் பிரிட்டிஷ் படைகளை எதிர்த்து வட ஆப்பிரிக்காவின் பாலைவனத்தில் நடத்திய எல் அலாமெய்ன் போரில் ஜெர்மனி மே 1943இல் சரணடைந்தது. பின்னர் நேசநாடுகளின் படைகள் சிசிலியின் மீது படையெடுத்தன. முசோலினியிடம் 1922இல் அதிகாரத்தை ஒப்படைத்த அதே மன்னரான மூன்றாம் விக்டர் இம்மானுவேல் மீண்டும் பொறுப்பேற்றதோடு அவருடன் ஜெனரல் படோக்லியோவும் பதவியேற்று அமைதியை ஏற்படுத்த நடவடிக்கை எடுக்கலாயினர். முசோலினி வீட்டுக்காவலில் வைக்கப்பட்டார். ஜெனரல் படோக்லியோவின் அரசு சிசிலியில் 1943 செப்டம்பர் 3இல் முறையாக சரணடைவதாக கையெழுத்திட்டுக் கொடுத்தது.

1943இல் நேசநாடுகள் இரு உச்சநிலை மாநாடுகளை நடத்தின. ஜனவரி மாதத்தில் சர்ச்சிலும் ரூஸ்வெல்டும் காசாபிளாங்காவில் சந்தித்துப் பேசினர். அங்கே அவர்கள் ஏறக்குறைய நான்கு ஆண்டுகளாக (1940–1944) ஜெர்மனியின் ஒரு மாகாணமாகவே மாறிப் போயிருந்த பிரான்ஸ் மீது படையெடுக்கும் முடிவை ஓராண்டிற்கு ஒத்திப்போட்டார்கள். (பிரான்சை ஆக்கிரமித்திருந்த ஜெர்மானியர்கள் வசம் 60 படைப் பிரிவுகள் இருந்தன) இரண்டாவது மாநாடு பாரசீகத்தில் அமைந்த டெஹ்ரான் நகரில் நடந்தபோது அதில் ஸ்டாலினும் பங்கெடுத்தார். அங்கு திட்டமிடப்பட்ட உத்தியின்படி பிரான்ஸ் மீது ஆங்கிலேய–அமெரிக்க கூட்டுப் படைகள் 1944 ஜூன் 6இல் தாக்குதல் தொடுப்பது என்று முடிவுசெய்யப்பட்டது. நேச நாடுகளின் படைகளுக்கு உச்சதளபதி அமெரிக்க ஜெனரல் ஐசன்ஹோவர் ஆவார்.

ஆங்கிலேய–அமெரிக்க படைகளின் படையெடுப்பும் ட்ரெஸ்டன் மீது குண்டு வீச்சும்

ஐசன்ஹோவரின் தலைமையை ஏற்ற நேச நாடுகளின் படைகள் பிரான்சின் நார்மண்டி மீது படையெடுத்தன. அப்பகுதியை ஆக்கிரமித்திருந்த ஜெர்மானியப் படைகள் அப்புறப்படுத்தப்பட்டு 1944 ஆகஸ்ட் 25இல் பாரிஸ் விடுவிக்கப்பட்டது. செப்டம்பர் மாதத்தின் துவக்கத்தில் நேச நாடுகள் பிரான்சு முழுமையிலும் கட்டுப்பாட்டை நிறுவியதோடு பெல்ஜியத்தையும் ஆக்கிரமித்தன. நேச நாடுகளின் குண்டு வீச்சு (1945 பிப்ரவரி 13–15) ஜெர்மனியின் ட்ரெஸ்டன் நகரை முற்றிலுமாக அழித்தது. இக்காலக்கட்ட தாக்குதல்கள் ஜெர்மனிக்கு எதிரான 'திகிலூட்டும் குண்டுவீச்சுக்களாகவே' (terror bombing) அடையாளப்படுத்தப்பட்டன. இச்சமயத்தில் 6,00,000 ஜெர்மன் குடிமக்கள் கொல்லப்பட்டார்கள். படிப்படியாக ஜெர்மானியப் படைகள் பின்னுக்குத் தள்ளப்பட்டன. ஆனாலும் அவர்களின் எதிர்ப்பு தொடர்ந்ததால் மேலும் ஓராண்டுக்குப் போர் நீடித்தது.

1945இல் ஜெர்மனி மீதான இறுதி தாக்குதல் மேற்கு மற்றும் சோவியத் படைகளை மத்திய ஜெர்மனி முழுவதும் நேருக்கு நேர் கொண்டு வந்தது. ஹிட்லர் மத்திய பெர்லினில் மறைந்திருந்த பதுங்குகுழியை 1945 ஏப்ரல் 30இல் சோவியத் படைகள் நெருங்கின. ஹிட்லர் தற்கொலை செய்து கொண்டார். பெர்லின் மே 2ஆம் நாள் சோவியத் வசமானது. சோவியத் படைகள் அதற்கு முன்பாகவே கிழக்கு ஐரோப்பாவையும், போலந்தையும் தங்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்திருந்தன.

அணுகுண்டுகள் வீச்சும் இரண்டாம் உலகப்போரின் முடிவும்



ஜப்பான் மீது அணுகுண்டு தாக்குதல்

ஜெர்மனி தோற்கடிக்கப்பட்டாலும், ஜப்பானின் இராணுவ தளபதிகள் சரணடைய மறுத்தார்கள். இறுதியாக அமெரிக்க ஐக்கிய நாடு 1945 ஆகஸ்ட் 6இல் ஹிரோஷிமா நகர் மீது அணுகுண்டு வீசிவிட்டு அதிலிருந்து மூன்று நாட்கள் கழித்து (ஆகஸ்ட் 9) நாகசாகி நகர் மீது மற்றொரு அணுகுண்டை வீசியது. அணுகுண்டு தயாரிக்கும் போட்டியில், அமெரிக்க ஐக்கிய நாடு ஜெர்மனியை முந்தியது. ஜப்பான் உடனடியாக சரணடைந்ததில் இரண்டாம் உலகப்போர் முடிவுற்றது. ஏறக்குறைய 60,000 முதல் 80,000 வரையிலான மக்கள் குண்டு விழுந்த கணத்திலேயே ஹிரோஷிமா நகரில் மாண்டதாகவும், குண்டு ஏற்படுத்திய கதிர்வீச்சின் பாதிப்பில் அந்த ஆண்டு முடிவதற்குள் மேலும் 1,40,000 மக்கள் இறந்ததாகவும் கணக்கிடப்பட்டுள்ளது. ஆபத்தான கதிர்வீச்சின் காரணமாக புற்றுநோய் (இரத்தப்புற்று) தாக்கியும், பிற நோய்களாலும் தொடர்ந்து வந்த பதிற்றாண்டுகளில் இறப்பு எண்ணிக்கை 2,00,000 தாண்டியது.

போரின் காரணங்களை விளக்கும் வரலாற்று ஆசிரியர்கள் பல்வேறு காரணங்களை கூறுவதில் வேறுபட்டு நிற்கிறார்கள். முரட்டுத்தனமானதாகவும் பழிவாங்கும் நோக்குள்ளதாகவும் இருந்த வெர்செய்ல்ஸ் ஒப்பந்தத்தை சிலர் சுட்டுகிறார்கள். அத்தகையோர் ஜெர்மனி அவ்வொப்பந்தத்தின் சரத்துகளை மாற்ற முனைந்ததனைக் கொண்டு அந்நாட்டின் பக்கம் உள்ள நியாயத்தை கோடிட்டுக் காட்டுகிறார்கள். மற்றும் சிலர் பிரான்சும், பிரிட்டனும் கடைப்பிடித்த சமரசப் போக்கைச் சாடுகிறார்கள். வேறு சிலர் பிரிட்டனும் பிரான்சும் சோவியத் நாட்டோடு ஒப்பந்தம் ஏற்படுத்த முடியாமல் போனதைக் குறை கூறுகிறார்கள். இந்நாடுகள் சோவியத் நாட்டை நம்பத் தயங்கியதோடு 1934 முதல் கூட்டுப் பாதுகாப்பை முன்னிறுத்தி அது கொடுத்த முன்மொழிவுகளுக்கு பதிலளிக்காமலும்

12th_History_TM_Unit_14_V2.indd 260 02-01-2023 16:40:38

இழுத்தடித்தன. எனினும் பெரும்பான்மையான வரலாற்று ஆசிரியர்கள் ஜெர்மனியையும் ஹிட்லரையுமே போர் ஏற்படப் பொறுப்பாகக் கருதுகிறார்கள். நாடுபிடிக்கும் ஆசையையும், பேரினவாத (ஆரிய) தூய்மைக் கருத்தியலையும் அடித்தளமாக அமைத்து, நேர்மையும் இரக்கமுமற்ற ஆக்கிரமிப்புக் கொள்கையை கூறுகளாக கொண்ட தேசியவாதம், ஆறு ஆண்டுகளுக்கு உலகப் பேரிழப்பை ஈன்ற போரை நோக்கி வழிநடத்தி சென்றதாகவும் அவர்கள் கருதுகிறார்கள். 'இரண்டாம் உலகப்போர் ஹிட்லரின் போரே. அவரே திட்டமிட்டார், துவங்கினார், இறுதியாக இழக்கவும் செய்தார்'.

அமைதியை நிலைநிறுத்தல்

குடியசுத் தலைவர் ரூஸ்வெல்டும், பிரதம அமைச்சர் சர்ச்சிலும் இணைந்து வழங்கிய அறிக்கையான அட்லாண்டிக் பட்டயமே அமைதி நடவடிக்கையை வழிநடத்த அடிப்படையாக அமைந்தது. அதன் முக்கிய கூறுகள் பின்வருமாறு:

1) மக்களின் ஒப்புதல் இல்லாமல் பிரதேச சீரமைப்புகள் ஏற்படுத்தலாகாது.

2) அரசைத் தேர்ந்தெடுக்க முழுஉரிமை கொண்டவர்கள் குடிமக்களே.

3) அனைத்து நாடுகளுக்கும் வணிகத் தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்ளவும், உலகின் பிற பகுதிகளில் கிடைக்கும் மூலப் பொருட்களைப் பெறுவதிலும் சமத்துவத்தை ஏற்படுத்துதல்.

4) தடையில்லாமல் கடல்கடந்து செல்வதற்கான சுதந்திரத்தை உறுதிப்படுத்துதல்.

5) ஆக்கிரமிப்பு அச்சுறுத்தலை ஏற்படுத்தும் நாடுகளை ஆயுதக்குறைப்பிற்கு உட்படுத்துதல்.



சர்ச்சில் – ட்ரூமன் – ஸ்டாலின்

இது நீங்கலாக வேறு அமைதி மாநாடுகள் ஏதும் நடத்தப்படவில்லை. போட்ஸ்டாம் சந்திப்பில் பிரிட்டன், சோவியத் நாடு, அமெரிக்க ஐக்கிய நாடு ஆகியவற்றை பிரதிநிதித்துவப்படுத்தி முறையே சர்ச்சில், ஸ்டாலின், ட்ரூமன் ஆகியோர் கலந்து கொண்டு ஐந்து பெரும் சக்திகளின் – ஏற்கனவே குறிப்பிடப்பட்ட மூன்று பெரும் சக்திகளோடு சீனாவும், பிரான்சும் சேர்க்கப்பட்டு – வெளியுறவுத்துறை அமைச்சர்களின் குழுவை ஏற்படுத்தி அமைதியை நிலைநிறுத்தத் தேவையான பணிகளைத் தொடர ஒப்புக்கொள்ளப்பட்டது. இக்குழுவே ஐரோப்பாவில் அமைதி ஏற்படுத்த அங்கீகரிக்கப்பட்ட முக்கிய முகமையாக கருதப்படலானது. இத்தாலி ஹங்கேரி, பெல்ஜியம் மற்றும் ருமேனியா ஆகியவற்றோடு ஏற்படுத்தப்பட இருந்த அமைதி உடன்படிக்கையை இத்தாலியோடும், ஜெர்மனியோடும் தீர்வை எட்டுவதற்கு முன்பே இறுதிப்படுத்த முடிவுசெய்யப்பட்டது. பிரிட்டன், அமெரிக்க ஐக்கிய நாடு, சோவியத் நாடு மற்றும் பிரான்ஸ் ஆகியவை இத்தாலியோடு ஏற்படுத்தவிருந்த ஒப்பந்தத்தின் சரத்துகளை வரைவது என்றும், அதுபோல பெரும் மூன்று நாடுகள் கூடி மூன்று பால்கன் பகுதிகளுக்கான ஒப்பந்தத்தை வரைவது என்றும், பிரிட்டனும், சோவியத் நாடும் பின்லாந்துக்கான ஒப்பந்தத்தை வரைவது என்றும் முடிவு செய்யப்பட்டது. இதன்பின் வரையப்பட்ட ஒப்பந்தங்கள் யாவும் ஒரு பொதுக்குழுவின் முன்வைப்பது என்றும் ஆனது.

அமைதி மாநாடு, 1946

பாரிஸ் நகரில் அமைந்த லக்ஸம்பர்க் அரண்மனையில் 1946 ஜூலை 26 முதல் அக்டோபர் 15 வரை 21 நாடுகளைச் சேர்ந்த 1500 பிரதிநிதிகள் கலந்து கொண்ட அமைதி மாநாடு நடைபெற்றது. ஆழ்ந்த கலந்தாலோசனைகளுக்குப் பிறகு கொண்டு வரப்பட்ட பரிந்துரைகள் வெளியுறவுத்துறை அமைச்சர்களின் மறுஆய்விற்குப் பின் சில மாறுதல்களுக்கு உட்படுத்தப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டன.

இத்தாலிய அமைதி உடன்படிக்கை: ட்ரிஸ்டியை குறித்த சர்ச்சை பல ஆண்டுகளுக்கு இழுபறியை ஏற்படுத்தியது. இத்தாலி ட்ரிஸ்டியை கோரியது. சோவியத் யூனியன் அதை யுகோஸ்லோவிய நாட்டிற்கு வழங்குவதாக வாக்களித்திருந்தது. இறுதியாக 1954இல் ட்ரிஸ்டியை A மண்டலம் என்றும் B மண்டலம் என்றும் பிரித்தனர். அதனடிப்படையில் A மண்டலம் இத்தாலிக்கும் B மண்டலம் யுகோஸ்லோவியாவிற்கும் பிரித்து வழங்கப்பட்டது. இத்தாலி கொடுக்க வேண்டிய நஷ்ட ஈடாக $ 260,000,000 நிர்ணயிக்கப்பட்டது (இதில் பெரும் பகுதி தொகை கிரீசையும், யுகோஸ்லாவியாவையும் சென்றடைந்தது).

ரஷ்யா பெற்ற இழப்பீடு: ஹங்கேரி, பெல்ஜியம் மற்றும் ஃபின்லாந்து ஆகிய நாடுகள் ரஷ்யாவிற்கு $100,000,000 கொடுக்க வேண்டும் என்றானது. பல்கேரியா யுகோஸ்லாவியாவிற்கு $25,000,000மும், கிரீசிற்கு $4,000,000 கொடுக்க வரையறுக்கப்பட்டது. ருமேனியா தான் 1919இல் பெற்றுக்கொண்ட பெசரேபியாவையும் பின்னர் இணைத்துக் கொண்ட புகோவினாவையும் ரஷ்யாவிடம் மீண்டும் ஒப்படைக்க ஒப்புக்கொண்டது. பெல்ஜிய உடன்படிக்கைகள் டான்யூப் மீது கட்டணமில்லாப் பயணம் மேற்கொள்ள வழிவகை செய்தது. ஆனால் அதனை ரஷ்யா தடுத்தது. ஒப்பந்தங்கள் 1947 செப்டம்பர் 15 முதல் நடைமுறைக்கு வந்தன. ஆனால் அதன் சரத்துகள் முறியடிக்கப்படுதலுக்கோ, புறக்கணிக்கப்படுதலுக்கோ உள்ளாயின.

ஆஸ்திரியா: ஆஸ்திரியாவின் தென் கரிந்தியப் பிராந்தியத்தில் ஒரு பகுதியின் மீது யுகோஸ்லோவியா உரிமை கோரியதால் சர்ச்சைகள் கிளம்பின. இழப்பீடாக யுகோஸ்லோவியா $150,000,000மும் கோரியது. ஜெர்மனியின் சொத்துக்களின் மதிப்பீடு குறித்த சர்ச்சை அதனை கணிப்பதற்காக நியமிக்கப்பட்ட ஆணையத்தால் 85 முறை கூடியும் அப்பணியை செய்து முடிக்க முடியவில்லை என்ற நிலையில் தொடர்ந்தது. ரஷ்யாவிற்குத் தரப்படவேண்டிய இழப்பீட்டிற்காக ஆஸ்திரியாவின் எண்ணெய் வளங்களையும், கப்பல் போக்குவரத்து வசதியையும் பயன்படுத்திக்கொள்ள வழிவகை செய்து கொடுத்ததோடு, இழப்பீடாக நிர்ணயிக்கப்பட்ட $150,000,000 தொகையை ஆறு வருடங்களில் படிப்படியாக கொடுத்துமுடிக்கும் வரை அதற்கு ஈடான ஜெர்மனியின் சொத்துக்களை அந்நாடு பயன்படுத்திக்கொள்ளவும் உரிமை வழங்கப்பட்டது. ஆஸ்திரியா ஒரு சுதந்திர, இறையாண்மை கொண்ட, மக்களாட்சியைப் பின்பற்றும் நாடாக்கப்பட்டு 1938இல் ஜெர்மனியோடு வலுக்கட்டாயமாக இணைக்கப்படுவதற்கு முன்பிருந்த அதே எல்லைகளோடு மறுநிர்ணயம் செய்யப்பட்டது. தன்பங்கிற்கு ஆஸ்திரியா ஜெர்மனியோடு அரசியல்ரீதியாகவோ, பொருளாதார அடிப்படையிலோ எந்த தொடர்பும் கொள்ளக்கூடாது என்பதற்கு உடன்பட்டது.

ஜெர்மனி: பெர்லினுக்கு அருகாமையில் அமைந்திருந்த போட்ஸ்டாமில் நடைபெற்ற மாநாட்டில் வழங்கப்பட்ட அறிவிப்பின்படி அறியப்படுவதாவது: 1. கிழக்குப் பிரஷ்யாவை இரண்டு பிரிவுகளாகப் பிரித்தல்: வடபகுதி சோவியத்தையும், தென்பகுதி போலந்தையும் சேருவது. 2. முன்பு சுதந்திரப் பகுதியாக இருந்த டான்சிக் நகரை போலந்து பெற்றது. ஜெர்மனியின் இராணுவ சக்தி முழுமையாக ஒழிக்கப்பட்டு அதனை நான்கு தொழில் மண்டலங்களாகப் பிரித்து ஒவ்வொன்றும் சோவியத் யூனியன், பிரிட்டன், அமெரிக்க ஐக்கிய நாடுகள் மற்றும் பிரான்ஸ் ஆகியவற்றின் கட்டுப்பாடுகளுக்குள் விட முடிவுசெய்யப்பட்டது. இவ்வாறு போருக்கு முன்பாக இருந்த ஜெர்மனியின் பெரும் பகுதிகள் ரஷ்யாவிற்கும் போலந்திற்கும் பிரித்து வழங்கப்பட்டன. ரஷ்ய மண்டலத்தின் இதயமாக பெர்லின் விளங்கினாலும் நாட்டின் பிற பகுதிகள் நான்கு ஆக்கிரமிப்பு மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டன. ஜெர்மன் ஜனநாயக குடியரசு (German democratic Republic) 1949 ஏப்ரலில் சோவியத் மண்டலத்தைச் சேருவதாக அறிவிக்கப்பட்டது. நேட்டோ (NATO) ஜெர்மானிய கூட்டாட்சி குடியரசை (Federal Republic of Germany) அங்கீகரிக்க முன்வந்தது. செப்டம்பர் மாதத்தில் புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட பாராளுமன்றம் ஜெர்மானிய கூட்டாட்சி குடியரசில் செயல்பாட்டுக்கு வந்தது.

போலந்து

போலந்து மேற்குப்புறமாக 200 மைல்களுக்கு உள்வாங்கி கிட்டத்தட்ட 69,000 சதுர மைல்கள் வரை சோவியத்திடம் இழந்து மேற்கு திசையில் இழந்ததை காட்டிலும் சற்று குறைவான பகுதிகளை ஜெர்மனியிடம் இருந்து பெற்றது. போலந்து தனது கிழக்கு மாகாணங்களை ரஷ்யாவிடம் ஒப்படைப்பதோடு, சோவியத் பாதுகாப்புக்குட்பட்ட போலந்து அரசாங்கம், துருவங்களிலிருந்து ஜனநாயக தலைவர்களை இணைப்பதன் மூலம் மறுசீரமைக்க வேண்டும் என்று முடிவு செய்யப்பட்டது.

ஜப்பான்

குடியரசுத்தலைவர் ரூஸ்வெல்ட், பிரதம அமைச்சர் சர்ச்சில் மற்றும் தேசியவாத சீனாவின் ஜெனரல்இஸிமோ சியாங் கே–ஷேக் ஆகியோர் நவம்பர் 1943இல் கெய்ரோவில் கூடி ஜப்பானியப் பேரரசின் எதிர்காலத்தைப் பற்றிய முடிவையெட்ட முயன்றனர். கொரியா நீங்கலாக ஜப்பான் சீனாவிடமிருந்து கவர்ந்த மற்ற பகுதிகளை சீனக்குடியரசுவிடமே ஒப்படைப்பதென்று ஏற்கப்பட்டது. கொரியா விடுதலை பெற்று சுதந்திர நாடாக அறிவிக்கப்படவுமிருந்தது. ஜப்பான் 1931ஆம் ஆண்டு முதல் பிடித்துவைத்திருந்த அனைத்துப் பகுதிகளை மட்டுமல்லாமல் பார்மோசாவையும் (தைவான்), பசிபிக் கடலில் பல பதிற்றாண்டுகளுக்கு முன் பிடித்துவைத்திருந்த தீவுகளையும் ஒப்படைக்க வேண்டும் என்று முடிவு கொள்ளப்பட்டது.

www.tntextbooks.in

சர்ச்சில் – ரூஸ்வெல்ட் – ஸ்டாலின்

கிரிமியாவில் உள்ள யால்டாவில் நடந்த மாநாட்டிற்குப் (பிப்ரவரி 1945) பின் முப்பெரும் தலைவர்கள் ரூஸ்வெல்ட், சர்ச்சில், மற்றும் ஸ்டாலின் ஜெர்மனியின் நிபந்தனையற்ற சரணடைவிற்கான திட்டத்தை அறிவித்ததோடு, போருக்குப்பின் ஜெர்மனியையும் அதன் நட்பு நாடுகளையும் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவது குறித்த முறைமைபற்றியும், ஐக்கிய நாட்டு சபையை ஏற்படுத்தி அமைதியை காப்பது குறித்தும், பொருளாதார அமைப்பை உருவாக்குவதும், மொத்தமாக பிரெட்டன் வுட்ஸ் அமைப்பு என்று அறியப்பட்டது. உலக வங்கி, பன்னாட்டு நிதியம் (International Monetary Fund), வியாபாரம் மற்றும் கட்டணங்களுக்கானப் பொது உடன்படிக்கை (General Agreement on Trade and Tariff) போன்றவற்றை உருவாக்கி அவற்றின் மூலமாக போரில் பொருளாதார அழிவைச் சந்தித்த நாடுகளை மறுசீரமைக்க உதவுதல் பற்றியும் தெளிவுபடுத்தினர். முதல் உலகப்போருக்குப் பின் நேர்ந்தது போன்று அல்லாமல் இம்முறை ரூஸ்வெல்ட் ஐக்கிய நாட்டு சபையை உலக அமைதி அமைப்பில் அங்கம் வகிக்கும் வகையில் நிர்ப்பந்திக்க தீர்மானமாக இருந்தார்.

இரண்டாம் உலகப்போரின் முடிவுகள்

இரண்டாம் உலகப்போர் எதிர்பார்த்திருக்காதப் பல சிரமங்களைக் கொடுத்தது. ஏறக்குறைய 6 கோடி நபர்கள் இறந்ததோடு பெரும் நகரங்களான வார்சா, கீவ், டோக்கியோ மற்றும் பெர்லின் போன்றவை தரைமட்டமாக்கப்பட்டிருந்தன. ஐரோப்பாவின் பெரும்பான்மையான முக்கிய துறைமுகங்கள் பலவும் அழித்தொழிக்கப்பட்டது போன்று ஆசியாவிலும் பல துறைமுகங்கள் அழிவை சந்திக்கவும், பாலங்கள் உடைக்கப்படவும், இருப்புப்பாதை இயந்திரங்களும், பெட்டிகளும் உருத்தெரியாமல் அழிவைச் சந்தித்தன. லட்சக்கணக்கான மக்கள் தங்கள் வீடுகளை இழந்தார்கள். பெரும் சக்தி என்ற நிலையில் இருந்து ஜெர்மனி வீழ்ந்தது. ஐரோப்பா தனது அந்தஸ்தையும், கௌரவத்தையும் இழந்தது. பொருளாதாரம் சரிந்து நொறுங்கியது. உலகின் இரு ஆதிக்க சக்திகளாக அமெரிக்க ஐக்கிய நாடும் சோவியத் ரஷ்யாவும் உருவாகியிருப்பது தெளிவுபட்டது. இரு சக்திகளுக்குமிடையே நிலவிய சித்தாந்தப் பிளவானது போருக்குப் பின் தேவைப்பட்ட ஒத்துழைப்பை எவ்வாறு பாதித்தது என்பதை அடுத்த பாடத்தில் காண்போம்.

பிரிட்டனின் கௌரவம் உயர்ந்தது போன்று தெரிந்தாலும் அதன் வளங்கள் குறைந்து, பேரரசின் எல்லைகள் சுருங்கியதில் உலக சக்தி என்ற நிலையை அது இழந்தது. ஐரோப்பாவில் பல நாடுகளில் தொடர்ந்துகொண்டிருந்த மன்னராட்சிக்கு அது முடிவுகட்டியது. ருமேனியா, யுகோஸ்லோவியா, பல்கேரியா மற்றும் இத்தாலி ஆகிய நாடுகளில் முடியாட்சி ஒழிக்கப்பட்டது. பிரிட்டன் நீங்கலாக முடியாட்சி டென்மார்க், நார்வே, ஸ்வீடன், ஹாலந்து மற்றும் பெல்ஜியம் ஆகிய நாடுகளில் அது தொடர்ந்தாலும் அதன் தன்மை அரசியல்சாசனத்திற்கு கட்டுப்பட்டதாகவே மாறிப்போயிருந்தது.

உலக அமைதிக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்திய பாசிச சிந்தனையை வீழ்த்த உலக நாடுகள் யாவும் ஒன்று கூடின. நேச நாடுகளின் வெற்றிக்குப்பின் சாமானிய மக்கள் போர் நடவடிக்கைகளுக்கு நல்கிய ஆதரவும் தலைதூக்கி நின்றது. பாசிசத்திற்கு எதிரான போர் அடித்தள மக்களை அதிகாரத்தில் பங்குபெறச் செய்தது. போர்க்காலத்தில் பலரும் கூடி எதிர்கொண்ட துயரங்களும் புரிந்த தியாகங்களும் மக்களாட்சி மீது நம்பிக்கையை வலுப்படுத்தியதோடு, அனைத்து குடிமக்களுக்கும் அடிப்படைத் தேவைகளை நிறைவு செய்யவேண்டியப் பொறுப்பை அரசுகளுக்கு உணர்த்தியது. உதாரணமாக 1945இன் கோடைக்காலத்தில் பிரிட்டனில் தேர்ந்தெடுக்கப்பட்ட தொழிலாளர் கட்சி ஒரு பொதுநல அடிப்படை கொண்ட நாட்டை (Welfare State) உருவாக்குவதில் தீவிரம் காட்டியது. விபத்து, நோய், வயதுமுதிர்ச்சி, வேலைவாய்ப்பின்மை போன்ற பிரச்சனைகளை எதிர்கொள்வோருக்கு துணைபுரிவதே பிரிட்டன் அரசின் பொறுப்பாக கருதப்படலானது. பெண்கள் போரின்போது எதிர்கொண்ட துயரங்களையும் அவர்களின் பங்களிப்பையும் கௌரவிக்கும் விதமாக அவர்களின் உரிமைக்கான தளம் விரிவுபடுத்தப்பட்டது. பிரான்சிலும் இத்தாலியிலும் பெண்களுக்கு நீண்டகால காத்திருப்பிற்குப்பின் இறுதியாக வாக்குரிமை வழங்கப்பட்டது.

போரின் முக்கியத்துவம் வாய்ந்த விளைவு காலனிய நாடுகளில் நிகழ்ந்த மாற்றமேயாகும்.

12th_History_TM_Unit_14_V2.indd 263 02-01-2023 16:40:38

உலகெங்கும் நடந்த மக்களாட்சியை முன்வைத்த போராட்டங்கள் தேசியவாத சக்திகளை சுதந்திரப் போராட்டத்தை தீவிரப்படுத்த தூண்டியது. போரின் ஆரம்பகட்டத்தில் ஜப்பான் மேற்கத்திய நாடுகளை தென்கிழக்கு ஆசியாவில் தோற்கடித்தமையும், அது போலவே பிரிட்டனும், பிரான்சும் ஜெர்மனியால் தோற்கடிக்கப்பட்டமையும் வெள்ளையர்களும் அவர்தம் நாடும் தோற்கடிக்கப்படகூடியவையே என்ற தெளிவான சமிக்ஞையை ஏற்படுத்தியது. பழைய பேரரசுகளும் அவைகளுக்கான காலம் முடிவை எட்டிவிட்டதை உணர்ந்து கொண்டன. உதாரணமாக இந்தோனேஷியத் தீவுக் கூட்டத்தில் ஒரு பெரும் படையை நிர்வகிப்பதில் உள்ள சிரமங்களை டச்சு நாட்டினர் உணர்ந்து கொண்டனர். இந்தோ–சீனாவில் பிரான்சு முதலில் பிரிட்டனின் ஆதரவோடும், பின்னர் அமெரிக்க ஐக்கிய நாட்டின் துணையோடும், விடுதலை வழங்கப்பட்ட பகுதியை மீண்டும் கட்டுக்குள் கொண்டுவர கடுமையாக முயன்றது. ஆனால் பிரெஞ்சுப் படைகள் தோற்கடிக்கப்பட்டு 1954இல் அவர்கள் வெளியேற்றப்படவும் ஆளானார்கள். தங்களின் உலக ஏகாதிபத்திய சக்தியை மீண்டும் நிலைநிறுத்த 1956இல் பிரான்சும், பிரிட்டனும் சூயஸ் கால்வாய் பிரச்சனையின் வாயிலாக முயன்றபோது அதுவும் தோற்றது. பின்னர் வியட்நாமை எதிர்த்த அமெரிக்க ஐக்கிய நாட்டின் போர் அதற்கு வெட்கித் தலைகுனியும் நிலையையே ஏற்படுத்தியது.

14.2 சீனப் புரட்சி 1949

மிக நீண்டவரலாற்றைக் கொண்ட சீனா பல்வேறு வரலாற்று காலங்களில் ஐரோப்பாவைக் காட்டிலும் மிகவும் மேம்பட்ட ஒரு நாடாகும். ஆனால் 1900வாக்கில் சீனா பலநிலைகளிலும் பின் தங்கியிருந்தது. அதன் வீழ்ச்சிக்கு குறிப்பிடத்தக்க காரணம் என்னவென்றால் 1650ஆம் ஆண்டு முதல் அந்நாட்டை மிக நீண்டகாலமாக ஆண்டுவந்த மஞ்சு அரசின் நேர்மையற்ற மற்றும் திறமையற்றதுமான ஆட்சிமுறையே ஆகும். கற்றுத் தேர்ந்து அதிகார மையமாக விளங்கிய மாண்டரின்கள் என்றழைக்கப்பட்ட நிலக்கிழார்கள் வர்க்கம், அந்நாட்டின் நிலை அவ்வாறே தொடர்ந்து தாங்கள் பெற்றுவந்த சலுகைகளுக்கு பாதிப்பில்லாமல் இருப்பதையே விரும்பியது. விவசாயம் சார்ந்த பெருவாரியான மக்கள் அதிகமான வாடகையாலும், வரிகளாலும், நிலப் பற்றாக்குறையாலும் பாதிக்கப்பட்டிருந்தனர். விவசாய உற்பத்தி தேக்கமடைந்தது. பயிரிடப்பட்ட பகுதிகள் மக்கள்தொகை அடர்த்தி நிறைந்ததாக அமைந்திருந்ததோடு பெருவாரியான வேளாண் நிலங்கள் ஒரு ஏக்கருக்கும் குறைவானதாகவே இருந்தன. சீனாவில் நிலக்கரியும் இரும்புத்தாதுவும் தேவைக்கு மிதமிஞ்சி இருந்தாலும் தொழில் வளர்ச்சி மிக மெதுவான ஒன்றாகவே இருந்தது.

தைபிங் கிளர்ச்சி

அரசியல் மற்றும் பொருளாதார அடக்குமுறையானது பத்தொன்பதாம் நூற்றாண்டில் பல எழுச்சிகளுக்கு வழிவகுத்திருந்தது. அதில் மிகவும் தீவிரமானது தைபிங் கிளர்ச்சியாகும் (1850–1864). அதனை ஒடுக்க அரசிற்கு பதினான்கு ஆண்டுகள் பிடித்தது என்பதே அரசின் பலவீனத்தைக் காட்டுவதாகும். வளர்ந்துவரும் ஐரோப்பிய நெருக்கடியானது பிரிட்டிஷாரில் துவங்கி பிரெஞ்சு, ஜெர்மானிய, ரஷ்ய மற்றும்

தைபிங் (பெரும் அமைதி என்று பொருள்) **கிளர்ச்சி** ஒரு விவசாய கிளர்ச்சியாக மட்டுமே துவங்கியது. ஆனால் விரைவில் அது ஹங் ஷியு–சுவான் என்ற வேளாண் பின்புலத்தைக் கொண்ட பள்ளி ஆசிரியரின் தலைமையில் ஒரு புரட்சி இயக்கமாகவே வடிவெடுத்தது. அவர் மக்களிடையே சமத்துவம், நிலத்தை சமமாக பகிர்தல், பழைய சமூக வேற்றுமைகளுக்கு முடிவுகட்டல் போன்ற கருத்துக்களை எடுத்துச் சென்றார். 1853இல் இவ்வியக்கத்தின் உறுப்பினர் எண்ணிக்கை இரண்டு மில்லியன் என்ற அளவை எட்டி நான்கிங் பகுதியை வெற்றிகரமாக தங்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு சென்றதோடு நாட்டின் 40 சதவீதப் பகுதிகளை தனிநாடாக பாவித்து இயக்கமே நிர்வகிக்கலானது. ஆனால் தைபிங்கின் தலைமை விவசாய குடிகளின் ஏற்றத்திற்கு எந்த நடவடிக்கையும் எடுக்காமலே இருந்தது. மறுசீரமைக்கப்பட்ட சீனப் பேரரசின் படைகள், பிரிட்டனாலும், பிரான்சாலும் வழங்கப்பட்ட நவீன ஆயுதங்களைக் கொண்ட பிரிட்டிஷ் இராணுவ அதிகாரியான மேஜர் கோர்டன் தலைமையில் கிளர்ச்சி ஒடுக்கப்பட்டது. நான்கிங் 1864இல் மீண்டும் பேரரசோடு இணைக்கப்பட்டது.

12th_History_TM_Unit_14_V2.indd 264 02-01-2023 16:40:38

அமெரிக்க நாடுகளின் கட்டாயத்தினால் சீனா வெளிநாடுகளுக்கு அதன் துறைமுகங்களில் வணிக உரிமையை வழங்கும் நிலையேற்பட்டது. பிரிட்டிஷார் இருமுறை சீனர்களுடன் போர் புரிந்தனர் (அபினிப் போர்). இக்காலகட்டத்தில் சீனா தைபிங் கிளர்ச்சியை ஒடுக்க தனது சக்தி முழுமையையும் செலுத்திக் கொண்டிருந்ததால் அது வெளிநாடுகளை தடுத்து நிறுத்த இயலாத சூழலை உருவாக்கியது. ஹாங்காங்கிலிருந்து ஆர்தர் துறைமுகம் வரையான பரந்துவிரிந்த பரப்பு ஐரோப்பியர்களின் கட்டுப்பாட்டுக்குள் சென்றது. அதிலும் செழுமைக்கு பெயர்பெற்ற துறைமுகமாக ஷாங்காய் மாறிப்போயிருந்தது.

முதல் அபினிப் போர்

புதிதாக நவீனயுகத்திற்குள் நுழைந்த ஜப்பான் 1894ஆம் ஆண்டு முதல் தனது ஆதிக்க செயல்களை துவங்கியதும் சீனாவின் வலுவிழந்த நிலையை தெளிவுப்படுத்துவதாகவே அமைந்தது. பார்மோசா ஜப்பானை சென்றுசேரவும், கொரியா சுதந்திரமடையவும் 1895இல் கையெழுத்திடப்பட்ட அமைதி உடன்படிக்கையே காரணமாக அமைந்தது. அதன்பின் ஆயிரக்கணக்கான ஐரோப்பிய வியாபாரிகள் சீன வணிகத்தில் சுரண்டலைக் கையாண்டார்கள். கிறித்தவ சமயபோதகர்கள் சீனாவில் கால்பதித்து உள்நாடு வரை தங்கள் நம்பிக்கையைப் பரப்பினார்கள். ஐரோப்பியர்களின் செயல்பாடுகளும் அவர்கள் உள்ளூர் நிர்வாகத்தில் மேற்கொண்ட குறுக்கீடுகளும் சீனர்களுக்கு அவர்கள் மீது வெறுப்பைப் பெற்றுத் தந்தது. வெளிநாட்டினர் மீது வெறுப்பு உச்சத்தில் இருந்த 1900ஆம் ஆண்டின் காலகட்டத்தில் தொடர்ந்து இரு விளைச்சல் தோல்வியும், மஞ்சள் ஆற்றின் வெள்ளத்தால் நேர்ந்த இழப்புகளும் வந்துசேர்ந்தன. இதையடுத்து பாக்ஸர் கிளர்ச்சி வெடித்தது.

அபினிப் போர்கள் : சீனாவில் போதைக்கு உள்ளானோரின் இறப்பால் ஏற்பட்ட மனித இழப்பின் அளவு எல்லையை மீறியபோது சட்டத்திற்குப் புறம்பான அபினி வியாபாரத்தை ஒடுக்க சீன அரசு முயன்றது. பிரிட்டிஷ் வணிகர்களே சீனாவில் அபினி விநியோகத்தின் முதன்மை ஆதாரமாக இருந்தனர். முதலாம் அபினிப் போரின் (1842) இறுதியில் கையெழுத்திடப்பட்ட நான்கிங் உடன்படிக்கை பிரிட்டனுக்கு சீனாவின் கதவுகளைத் திறந்துவிட்டது. சீனா ஹாங்காங்கை விட்டுக் கொடுத்ததோடு இழப்பீடாக ஒரு தொகையையும் வழங்கியது.

முதல் போர் சீன அதிகாரிகள் கான்டன் துறைமுகத்தில் நிறுத்தப்பட்டிருந்த பிரிட்டிஷாரின் பதிவுசெய்யப்பட்ட ஆரோ (Arrow) என்ற கப்பல் ஒன்றின் மாலுமிகளை கள்ளகடத்தல் குற்றத்திற்காக கைது செய்தமைக்காகவே மூண்டது. கப்பல் சீனர்களுக்கு சொந்தமானது என்பதோடு அதில் இருந்த மாலுமிகளும் சீனர்களே. ஆனால் ஹாங்காங் அரசு கொடுத்த அனுமதியின் பெயரில் பிரிட்டிஷ் கொடி பறக்கவிடப்பட்டிருந்தது. அனுமதி அளிக்கப்பட்டிருந்த காலவரம்பும் முடிவடைந்திருந்தது. ஆனபோதிலும் ஏதாவது ஒரு வாய்ப்பை ஏற்படுத்தி போர் நெருக்கடி கொடுத்தால் அதன் வாயிலாக அதிக சலுகைகள் பெற்றுவிடலாம் என்று எதிர்பார்த்துக் கொண்டிருந்த பிரிட்டன் இந்நிகழ்வின் எதிரொலியாக தனது போர்கப்பல் ஒன்றை அனுப்பியது. போர் மூண்ட காலகட்டத்தில் தனது நாட்டின் சமயபோதகர் ஒருவர் சீனாவில் கொல்லப்பட்டதாக (பிப்ரவரி 1856) காரணம்காட்டிய பிரான்சும் பிரிட்டனோடு இணைந்து தாக்குதல் தொடுத்தது. இம்முறை பிரிட்டிஷாரையும், பிரெஞ்சுக்காரர்களையும் உள்ளடக்கிய படை பீகிங்கின் கோடைக்கால அரண்மனையை அழித்தது. இறுதியாக 1860இல், சீனா பிரிட்டனின் உயர்வான படைபலத்திற்கு கட்டுப்பட்டு பெய்ஜிங் ஒப்பந்தத்தை ஏற்படுத்திக் கொண்டது. அது சீனாவின் துறைமுகங்கள் வியாபாரத்திற்கு திறக்கப்படவும், யாங்ட்சே வரை வெளிநாட்டுக் கப்பல்கள் செல்லவும், சமய போதகர்கள் தடையின்றி தங்களுடைய பணியை மேற்கொள்ளவும் வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுத்தது. மிக முக்கியமாக அது சீனாவில் பிரிட்டிஷார் சட்டத்திற்கு உட்பட்டு அபினி வியாபாரம் மேற்கொள்ள வசதி செய்தது.

பாக்ஸர் கிளர்ச்சி (1899–1901) : பாக்ஸர் என்பது ஈஹிகுவான் என்ற சீன இரகசிய சங்கத்தை குறிக்க அயல்நாட்டினர் பயன்படுத்திய சொல்லாகும் (Yihequan எனும் பதம் "நியாயம் மற்றும் ஒருமைப்பாட்டின் கரம்" என்ற பொருள் கொண்டது). பாக்ஸர்கள் பல்வேறு பின்புலத்தைக் கொண்டவர்களாக இருந்தாலும் பெரும்பான்மையானோர் இயற்கை சீற்றத்தால் பாதிக்கப்பட்ட ஷான்டுங் மாகாணத்தை பிறப்பிடமாக கொண்ட விவசாயிகளேயாவர். பாக்ஸர்களின் முக்கிய குறிக்கோள் என்பது மஞ்சு வம்சத்தை முடிவிற்குக் கொண்டு வருவதோடு முறைகேடாக சலுகைகளைப் பெற்று வந்த மேற்கத்தியர்களை சீனாவைவிட்டு அப்புறப்படுத்துவதுமாகும். பாக்ஸர்கள் தேவாலயங்களையும், அயல்நாட்டினரின் வீடுகளையும் தீக்கிரையாக்கி கிறித்தவ சமயத்தை தழுவிய சீனர்களைப் பார்த்த இடத்திலேயே கொன்று குவித்தார்கள். பன்னாட்டுப் படை ஒன்று பீகிங் நகரை சூறையாடியதில் பேரரசியும் அவர்தம் அவையாரும் ஓட்டம்பிடித்தனர். ஏறக்குறைய 100,000 மக்கள் மடிந்தனர். இறந்தோரில் பெரும்பான்மையானோர் சாதாரண குடிமக்கள் என்பதும், அதில் ஆயிரக்கணக்கான சீன கிறித்தவர்களும், 200 முதல் 250 வரையான அயல் நாட்டினரும் (பெரும்பாலும் சமய போதகர்கள்) அடங்குவர் என்பதும் கவனிக்கத்தக்கது.

பாக்ஸர் கிளர்ச்சி

பாக்ஸர் கிளர்ச்சி 1901 செப்டம்பர் 7இல் கையெழுத்திடப்பட்ட பாக்ஸர் முதன்மை குறிப்போடு (Boxer Protocol) முறையான முடிவிற்கு வந்தது. இதன்படி பெய்ஜிங் நகரைச் சுற்றி அரணாக அமைந்திருக்கும் கோட்டைகள் அனைத்தும் அழிக்கப்பட வேண்டும் என்றானது. பாக்ஸர்களும் கிளர்ச்சியில் ஈடுபட்ட சீன அதிகாரிகளும் தண்டிக்கப்பட்டனர். அயல்நாட்டு தூதரகங்கள் தங்களின் சுயபாதுகாப்பிற்காக பெய்ஜிங்கில் படைகளை நிறுத்திக் கொள்ள அனுமதிக்கப்பட்டனர். இரண்டு ஆண்டுகளுக்கு சீனா ஆயுதங்களை இறக்குமதி செய்யக்கூடாதெனவும், போரில் பாதிக்கப்பட்ட நாடுகளுக்கு $330 மில்லியனுக்கும் மேலான ஒரு தொகையை சீனா இழப்பீடாக வழங்கவும் முதன்மை குறிப்பு சரத்துகளைக் கொண்டிருந்தது.

1911 அக்டோபர் மாதம், வூச்சங்கில் நிறுத்தப்பட்டிருந்த துருப்புகள் கலகத்தில் இறங்கியதே புரட்சி முறையாக துவங்கியதற்கான அறிகுறியாக கொள்ளப்படுகிறது. கலகக்காரர்கள் விரைந்து வூச்சங்கின் நாணயச்சாலையையும் ஆயுதக்கிடங்கையும் கையகப்படுத்தியவுடன் ஒவ்வொரு நகராக மஞ்சுக்கள் மீது போர்ப் பிரகடனம் செய்தார்கள். புரட்சி யாங்சே பள்ளத்தாக்கில் வெடித்துக் கிளம்பி விரைவாகவே மத்திய மற்றும் தென் சீனாவின் பெரும் பகுதிக்குப் பரவியது. புரட்சியில் ஈடுபட்டிருந்த மாகாணங்கள் 1912இல் புத்தாண்டுப் பிறப்பின்போது நான்கிங்கை தலைநகராகக் கொண்டு ஒரு குடியரசு பிறந்துவிட்டதாக பிரகடனப்படுத்தின. இக்கலகச் செய்தியை அறிந்த சன் யாட்–சென் ஷாங்காய் நகரை வந்தடைந்ததும் அங்கே அவர் சீன குடியரசின் தற்காலிக குடியரசுத் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டார். மஞ்சுக்களின் ஆட்சியில் அமைச்சராக பதவி வகித்த யுவான் ஷி–காயை, குழந்தையாகஇருந்தபேரரசரின்பிரதிநிதிபுரட்சியை அடக்கும் பொறுப்பை ஏற்க அழைப்புவிடுத்தார். ஆனால் மக்களின் எண்ணப்போக்கை உணர்ந்த யுவான் பேரரசரை பதவிதுறக்க வலியுறுத்தினார்.

1912 பிப்ரவரி 12இல் பதவிதுறத்தலுக்கான அரசாணையை வெளியிட்டு மஞ்சு வம்சம் (ஷிங் அரசு) சீன அரசியல் காட்சியில் இருந்து விடைபெற்றது. தொடர்ந்து வந்த மாதத்தில் இராணுவ கட்டுப்பாட்டை யுவானே வைத்துக் கொண்டிருந்ததால் தேசிய நலன் கருதி அவருக்கு சாதகமாக சன் யாட்–சென் இராஜினாமா செய்தார்.

யுவான் ஷி–காயின் செல்வாக்கற்ற தன்மை

தனது நான்கு வருட நிர்வாக காலத்தில் யுவான் ஷி–காய் தான் ஜனநாயகத்திற்கும் குடியரசிற்கும் விரோதமானவர் என்பதை நிரூபித்தார். அவர் கோமின்டாங்கையே தடை செய்யுமளவிற்குச் சென்று அதன் ஆட்சி நடந்த மாகாணங்களை எல்லாம் தன்வசப்படுத்த முயன்றார். யுவான் 1913 அக்டோபர் 10இல் சீன குடியரசின் முழுமையான குடியரசுத் தலைவராக பதவியேற்றார். சரியாக

12th_History_TM_Unit_14_V2.indd 266 02-01-2023 16:40:39

www.tntextbooks.in

சன் யாட்-சென் (1866-1925)

ஒரு ஏழ்மையான குடும்பத்தில் பிறந்த டாக்டர் சன் யாட்-சென் ஒரு மிஷன் பள்ளியில் பயின்று பின் மருத்துவரானார். அரசியலில் அவர் கொண்ட ஆர்வம் அவரை கிங் அரசிற்கு எதிரான 1895ஆம் ஆண்டின் கிளர்ச்சியில் ஈடுபட தூண்டியது. அக்கிளர்ச்சி தோற்றதால் சன் யாட்-சென் அடுத்த பதினாறு ஆண்டுகளை நாடுதுறந்து கழிக்கும்படி ஆயிற்று. சீன மாணவர்களிடமும், வெளிநாடு வாழ் சீனர்களிடமும் அவரது புரட்சிகர கருத்துக்களைப் பரப்புவதில் தனது நேரத்தை செலவிட்டார். அவர் 1905ஆம் ஆண்டு டோக்கியோ நகரில் உருவாக்கிய அரசியல் கட்சி கோமின்டாங் அல்லது தேசிய மக்கள் கட்சி என்று ஆனது.

சன் யாட்-சென் மூன்று சித்தாந்தங்களை வலியுறுத்தினார்: தேசியவாதம், ஜனநாயகம், மற்றும் சோஷலிஸம். சன் யாட்-சென் 1894ஆம் ஆண்டு சீன மறுமலர்ச்சி சங்கத்தை உருவாக்கி அதில் அவர்களின் பெருமைக்கு விதிவிலக்காக சீனா மீது அயல்நாடுகளால் திணிக்கப்பட்ட "சமநிலை மீறிய இரு ஒப்பந்தங்களை" சுட்டிக் காட்டினார். இச்சங்கம் அதிவேகத்தில் வளர்ந்ததோடு அதிக அளவில் இளைஞர்களை ஈர்த்தது. அது 1912ஆம் ஆண்டு தனது பெயரை கோ-மின்-டாங் என்று மாற்றிக் கொண்டது. இவ்வமைப்பின் உந்து சக்தியாக விளங்கிய சன் யாட்-சென் ஒரு குடியரசை விரும்பினாரேயன்றி அரசியல் சாசனத்திற்கு உட்பட்ட மன்னராட்சியை அல்ல.

மூன்று மாதங்களுக்குப்பின் அவர் தேசிய அவையை கலைத்துவிட்டு அதனிடத்தில் "அரசியல் குழு" ஒன்றை உருவாக்கி அதன் வழியே 'பொருத்தமான அரசியல்சாசனத்தை' (Constitutional Compact) வரைவிக்கவைத்து குடியரசுத் தலைவர் பதவியை சர்வாதிகாரமிக்கதாக மாற்றினார். இதனால் யுவான் அவரது ஆயுட்காலம் முழுவதும் குடியரசுத் தலைவராக பதவிவகிக்க வழி ஏற்படுத்தப்பட்டது. மஞ்சூரியா மற்றும் ஷாண்டுங்கின் பொருளாதார கட்டுப்பாட்டை ஜப்பான் கொண்டிருக்கவேண்டும் என்ற ஜப்பானிய கோரிக்கையை அவர் ஏற்றுக்கொண்டபோது யுவான் மக்களின் வெறுப்புக்கு ஆளானார். 1916ஆம் ஆண்டு யுவான் இறந்தபின் ஒரு புதிய குடியரசுத் தலைவர் நியமிக்கப்பட்டார். அடுத்த பன்னிரண்டு ஆண்டுகளுக்குப் பெயரளவில் மட்டுமே நடுவண் தன்மை கொண்டதாக அரசு விளங்கியது. அது சீர்குலைவின் காலமானது. அதே சமயம் சீனாவின் வடபகுதியில் மார்க்சிய சிந்தனை வலுப்பெறவும், கடற்கரை நகரங்களான ஷாங்காய்க்கும், கான்டனுக்குமிடையே சன் யாட்-சென்னின் செயல்பாடுகள் சூடுபிடிக்கவும் செய்தது.

சீனாவின் பொதுவுடைமைக் கட்சி

முதல் உலகப்போரின் காலத்தில் யுவான் ஷி-காய் மறைந்ததும், வெவ்வேறு அதிகாரபலமும் போட்டி மனோபாவமும் கொண்ட சீன இராணுவத் தலைவர்களால் நாடு பிளவுபட்டது. அறிவார்ந்த மக்கள் பலரும் அமெரிக்க ஐக்கிய நாட்டின் தாராளவாத கொள்கை மீது நம்பிக்கை கொண்டு அதுவே இச்சிக்கலை தீர்க்க சரியான வழி என்று கருதினர். ஆனால் அவர்கள் எதிர்பார்த்திருந்தப் பலன்கள் கிடைக்கவில்லை என்றானதும் ஏமாற்றமடைந்தனர். லட்சக்கணக்கான மக்கள் தங்களின் ஏமாற்றத்தை பேரணிகள் நடத்தியும், ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டும் வெளிப்படுத்தினாலும் மாணவர்களே இவற்றுள் தலையாயப் பணிகளை மேற்கொண்டார்கள். ரஷ்யப் புரட்சி 1917இல் வெடித்து கிளம்பியதன் பாதிப்பில் அறிவார்ந்த மக்கள் மத்தியில் மார்க்ஸ், லெனின் போன்றவர்களின் எழுத்துக்களும், உரைகளும் பிரபலமாயின. சீனாவின் வளர்ந்துவரும் தொழில்துறை தொழிலாளர் வர்க்கம் வலிமையைப் பெற்று வேலை நிறுத்தங்கள் மற்றும் புறக்கணிப்புகள் மூலம் அதை வெளிப்படுத்தியதால் மார்க்சிய சிந்தனை மீது அவர்களுக்கு ஆர்வம் ஏற்பட்டது. 1918ஆம் ஆண்டில் மார்க்சியத்தைப் படிப்பதற்கான ஒரு சங்கம் பீகிங் பல்கலைக்கழகத்தில் உருவாக்கப்பட்டது. அதன் பயிலரங்குகளில் பங்கெடுத்த மாணவர்களில் இளம் உதவி நூலகரான மா சே-துங்கும் ஒருவர்.

சீனாவில் 1922ஆம் ஆண்டு தொடர் வேலை நிறுத்தங்கள் வெடித்தன. இராணுவ சட்டப் பிரகடனம் நடைமுறையில் இருந்தும் ஹாங்காங்கில் ஏறத்தாழ 2,000 மாலுமிகள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர். சிறிது காலத்தில் 1,20,000 தொழிலாளர்கள் கலந்து கொண்ட பொது வேலை நிறுத்தமாக உருப்பெற்று முதலாளிகளே அமைதி கோரும் நிலைக்கு கொண்டு வந்து நிறுத்தியது. ஹாங்கொங்கில் பிரிட்டிஷ் காவலர்களுக்கும் பிரிட்டிஷாருக்கு சொந்தமான ஆலையின் ஊழியர்களுக்கும் இடையே நடந்த மோதலில் சண்டையையே தொழிலாகக் கொண்ட ஒருவன் சுட்டதில் 35 இரயில்வே ஊழியர்கள் கொல்லப்பட்டது

12th_History_TM_Unit_14_V2.indd 267 02-01-2023 16:40:39

மட்டுமன்றி தொழிற்சங்க கிளை செயலர் ஒருவர் தூக்கிலிடப்பட்டார். இத்தகைய ஒடுக்குமுறை நடவடிக்கைகள் தொழிலாளர் வர்க்கத்தின் இயக்கத்தை தற்காலிகமாக மிதப்படுத்தியதேயன்றி அவர்களின் எதிர்ப்புணர்வை ஒழித்துவிடவில்லை. மாறாக அது வர்க்க உணர்வை அதிகப்படுத்தியது.

மா சே-துங் (1893-1976)

தென்-கிழக்கு சீனாவில் அமைந்த ஹுனான் பகுதியில் மாவோ பிறந்தார். அவரது தந்தையார் ஒரு வசதியான விவசாயி என்பதோடு அவர் மஞ்சு அரசவழியின் தீவிர ஆதரவாளர் ஆவார். மாவோ புரட்சி நடந்த ஆண்டில் (1911) சாங்ஷாவில் இருந்த இளையோர் கல்லூரியில் சேர்ந்தார். அவர் புரட்சிப் படையில் சேர்ந்தாலும் சாங்ஷாவில் அமையப்பெற்ற ஆசிரியப் பயிற்சி கல்லூரியில் சேரும் பொருட்டு அதிலிருந்து வெளியேறினார். அங்கே 1918 வரை இருந்த மாவோ நூலகத்தில் நீண்ட நேரத்தினை செலவிட்டார். பின்னர் பீகிங்கிற்குப் பயணப்பட்ட அவர் பீகிங் பல்கலைக்கழகத்தில் உதவி நூலகராகப் பொறுப்புவகித்தார். அதற்கு அடுத்த ஆண்டு முழுமையான அரசியல் செயல்பாட்டாளராக மாறிய மாவோ, ஹுனானில் அமைப்பாளராக பொறுப்பேற்றதோடு தீவிர பொதுவுடைமைவாதியாகவும் உருப்பெற்றார்.

இதற்கிடையே சன் யாட்-சென் அரசியல் சாசன அடிப்படையில் ஒரு அரசை நிறுவியிருந்தார். ஆனால் அதன் நிலை வலுவற்றதாக இருந்தது. அதனால் அவர் தனது கோமின்டாங்கை மறுசீரமைக்க சோவியத் நாட்டின் உதவியைக் கோரினார். சோவியத் நாடு மைக்கேல் பரோடினை சீனாவுக்கு அனுப்பியது. தேர்ந்த பொதுவுடைமைவாதியான பரோடின் கோமின்டாங்கை மறுசீரமைப்பிற்கு உட்படுத்தி அதை மையப்படுத்தப்பட்ட மக்கள் கட்சியாக்கியதோடு ஒரு புரட்சிப் படையை உருவாக்கவும் உதவினார். சோவியத் அதிகாரிகளின் துணை கொண்டு கான்டனில் வம்போவா இராணுவக்கழகம் உருவாக்கப்பட்டது. அதன் முதல் இயக்குனராக சியாங் கே-ஷேக் பதவியேற்றார். சீன பொதுவுடைமை கட்சிக்கும், கோமின்டாங்கிற்கும் ஏற்பட்ட கூட்டணியால் சூ-யென் லாய் அக்கழகத்தில் அரசியல் செயல்பாடுகளுக்கான பொறுப்பு ஊழியராக்கப்பட்டார்.

கோமின்டாங்கும் சியாங்க் கே-ஷேக்கும்

1925ஆம் ஆண்டு சன் யாட்-சென் மறைந்த பின் கோமின்டாங் பொதுவுடைமை கட்சி போன்று அமைக்கப்பட்டதேயொழிய அதன் கொள்கைகள் பொதுவுடைமை சிந்தனையை உள்ளடக்கியதாகஇல்லை. கோமின்டாங்கின் தலைவராக சியாங் கே-ஷேக் இருந்தபோது பொதுவுடைமை கட்சி மா சே-துங் மற்றும் சூ-யென் லாயின் கட்டுப்பாட்டில் இருந்தது. பொதுவுடைமைவாதிகளின் செல்வாக்கு தொழிலாளர்கள் மற்றும் விவசாயிகளிடையே பெருகி அதன் இராணுவத்திற்கு வெகுவாக ஆட்களைப் பெற்றது. கோமின்டாங் நிலக்கிழார்கள் மற்றும் முதலாளிகளின் ஆர்வங்களை பிரதிநிதித்துவப்படுத்துவதாக இருந்தது.

சியாங் கே-ஷேக்

'வடக்கத்தியப் பயணம்' என்று அறியப்படும் அணிதிரண்டப் பயணத்தை கான்டன் நகரில் துவக்கிய சியாங் கே-ஷேக் 1925ஆம் ஆண்டின் கடைசியில் ஹாங்கோ நகரை கைப்பற்றினார். 1927 மார்ச் மாதத்தில் பயணம் ஷாங்காய் நகரை நெருங்கிக் கொண்டிருந்தபோது 6,00,000 ஊழியர்கள் எழுச்சிபெற்று பொது வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டதோடு அவர்களின் தொழிற்சங்கங்கள் நகரின் கட்டுப்பாட்டை தங்கள் வசம் கொண்டு வந்தன. சியாங் கே-ஷேக் ஏற்கனவே கான்டன் நகரில் ஊழியர்கள் இயக்கத்தை கடுமையாக ஒடுக்கியிருந்ததோடு பொதுவுடைமைவாத செயல்பாட்டாளர்கள் பலரையும் கைது செய்தும், அவர்களின் தொழிற்சங்கங்களை மோசமாக அச்சுறுத்தவும் செய்திருந்தார். ஷாங்காய் நகரில் வெற்றிக்களிப்பில் இருந்த போராட்ட சக்திகளிடமிருந்து நகரின் கட்டுப்பாட்டைப் பெற்றுக்கொண்ட அவர் சூழ்ச்சியாக குற்றப் பின்புலம் கொண்ட கும்பல்களையும், சீன வியாபாரிகளையும், அயல்நாட்டு சக்திகளின் பிரதிநிதிகளையும் இணைத்து விடியலுக்குமுன்பான எதிர்பாராத தாக்குதலை முக்கியமான இடதுசாரி தொழிற்சங்க அலுவலகங்களின் மீது தொடுக்கவைத்தார். தொழிலாளர்களது காவல்காரர்களின் ஆயுதங்கள் பறிக்கப்பட்டதோடு அவர்களது தலைவர்களும் கைது செய்யப்பட்டனர். அதை தொடர்ந்து ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது எந்திரத் துப்பாக்கி கொண்டு சுடப்பட்டதில் ஆயிரக்கணக்கான செயல்வீரர்கள் எதிர்த்துப் போராடி இறந்தனர். செல்வாக்குமிக்க வியாபாரிகளும், நிதியாளர்களும் கொடுத்த அழுத்தத்தில் சியாங் கே-ஷேக் கோமின்டாங் கட்சியிலிருந்த அனைத்து பொதுவுடைமைவாதிகளையும் வெளியேற்றினார். அவர் 1928இல் பீகிங் நகரை வெற்றிகரமாக

12th_History_TM_Unit_14_V2.indd 268 02-01-2023 16:40:39

www.tntextbooks.in

ஆக்கிரமித்தார். சீனாவில் மீண்டும் ஒரு நடுவண் அரசு உருவானது. ஆனால் அடுத்த 18 ஆண்டுகளுக்கு அவரது அரசு ஊழல் மலிந்ததாகவும், வன்முறை கும்பல்களின் பிடியில் சிக்கியும் சீரழிந்தது.

கோமின்டாங்கின் பிடி நகர்புறங்களில் இறுக்கமாக இருப்பதை உணர்ந்த மாவோ, விவசாயக்குடிகளை ஒன்று திரட்டுவதில் தனது கவனத்தைச் செலுத்தினார். கியாங்ஸிக்கும் ஹுனானுக்குமிடைப்பட்ட காடுகளால் சூழப்பெற்ற மலைப்பகுதிகளில் அவர் தஞ்சமடைந்தார். இப்பகுதியில் மாவோவும், அவரது தோழர்களும் அடுத்த ஏழு ஆண்டுகளுக்கு இருந்தனர். அடியோடு அழித்தொழிக்கும் நோக்கோடு ஐந்து படையெடுப்புகளை கோமின்டாங் நடத்தி இருந்தாலும் அவர்களால் அம்மலைப் பகுதியில் ஊடுருவ முடியவில்லை என்பதோடு மாவோவின் படைபலம் நாளுக்கு நாள் விரிவடைந்தது. பொதுவுடைமைவாதிகளுக்கு இப்புதுதளத்தில் சியாங் கே-ஷேக்கின் தாக்குதல்களில் இருந்து பாதுகாப்பு கிடைத்ததோடு ஜப்பானியர்களிடமிருந்து தொடர்ச்சியாக எழுந்து கொண்டிருந்த அச்சுறுத்தல்களில் இருந்தும், போரையே தொழிலாக கொண்டிருந்த கிழார்களிடமிருந்தும் பாதுகாத்துக் கொள்ள வாய்ப்பாக இருந்தது.

நீண்ட பயணம் 1934

நீண்ட பயணம்

பொதுவுடைமைவாதிகளின் நிலைகளைச் சுற்றி வளைத்து சியாங் கே-ஷேக் அரண் எழுப்பியிருந்ததால் மாவோ பாதுகாப்பை கருத்தில் கொண்டு ஹுனானை விட்டு அகல முடிவுசெய்தார். இதையடுத்து 1934இல் பொதுவுடைமை இராணுவம் மேற்கொண்டதே 'நீண்ட பயணம்' என்றழைக்கப்படுகிறது. அணிவகுத்து சென்றோர் வழிநெடுகிலும் கோமின்டாங் இராணுவத்தாலும், போர்க்கிழார்களின் படைகளாலும், தோழமையற்ற பழங்குடியினர்களாலும் தொடர் துயரங்களுக்கு ஆளானார்கள். கோமின்டாங் படையினரின் எந்திர துப்பாக்கியின் உக்கிரமும், காதுகளை செவிடாக்கும் ஆற்றின் சீற்றங்கொண்ட ஓசையும் நகர்ந்து கொண்டிருந்தோருக்கு பெரும் அச்சுறுத்தலை ஏற்படுத்தியது. கிளம்பி சென்ற 1,00,000 நபர்களில் 1935ஆம் ஆண்டின் பிற்பகுதியில் ஏறக்குறைய 6,000 மைல்கள் என்ற தூரத்தை கடந்து 20,000 நபர்களே வடக்கு ஷேன்ஸியை வந்தடைந்தார்கள். அங்கு மேலும் பல பொதுவுடைமைவாத இராணுவங்கள் அவர்களோடு இணைந்ததில் 1937ஆம் ஆண்டுவாக்கில், மா சே-துங் 10 மில்லியன் மக்களின் ஆட்சியாளரானார். ஷேன்ஸி மற்றும் கன்ஸூவில் அமைந்த கிராமங்களில் மாவோ தொழிலாளர்கள் மற்றும் விவசாயிகள் குழுக்களை அமைத்து பொதுவுடைமைவாதிகள் சீனாவில் ஆட்சியை கைப்பற்றுவதற்கான அடித்தளத்தை ஏற்படுத்தினார்.

ஜப்பானிய ஆக்கிரமிப்பும் அதன் பின்னடைவும்

ஜப்பானியர்கள் மஞ்சூரியாவை இராணுவத் தளமாகக் கொண்டு சீனாவின் வடக்கு மாகாணங்களைத் தொடர்ந்து ஆக்கிரமித்துக் கொண்டிருந்தார்கள். மாவோ ஜப்பானியர்களை எதிர்க்கும் பொருட்டு சில காலம் சியாங்க் கே-ஷேக்கின் கோமின்டாங்கை அரவணைத்து செல்லவேண்டும் என்று நினைத்தார். நடைமுறை சூழலுக்கேற்ற இந்நிலைப்பாட்டால் பொதுவுடைமைவாதிகள் மீதான தாக்குதல் படிப்படியாக குறைந்தது. எனினும் ஜப்பானியர்களின் விரிவாக்கத் திட்டத்தை முறியடிக்க கடுமையான நடவடிக்கைகளைப் பின்பற்ற முடிவுசெய்யப்பட்டது. எனினும், கோமின்டாங்கின் படைகள் எளிதாக வீழ்ந்ததால் இரண்டாம் உலகப்போரின்போது கிழக்கு சீனாவின் பாதியை ஜப்பான் ஆக்கிரமித்துக் கொண்டது. சியாங் கே-ஷேக் தனது தலைநகரை சுங்கிங் நகருக்கு மாற்ற நிர்பந்தம் ஏற்பட்டது.

பொதுவுடைமைவாதிகளின் வெற்றி

மாவோ

ஹிரோஷிமா மற்றும் நாகசாகியில் அணுகுண்டு வீசியதால் 1945இல் ஜப்பான் சரணடைவதாக அறிவித்தவுடன் சீனாவில் இருந்த இரு அணிகளும் ஜப்பானின் கட்டுப்பாட்டில் இருந்த பகுதிகளை ஆக்கிரமிக்க உடனடி நடவடிக்கையில் இறங்கினர். இப்போட்டியின் போக்கைக் கண்ட அமெரிக்க ஐக்கிய நாடு இரு அணிகளையும்

12th_History_TM_Unit_14_V2.indd 269 02-01-2023 16:40:39

பேச்சுவார்த்தையில் ஈடுபட அறிவுறுத்தியது. 1946இல் தளபதி ஜார்ஜ் மார்ஷல் இருமுறை போர் நிறுத்தப் பேச்சுவார்த்தைக்கு அழைத்தும் எந்தப் பயனும் இல்லாமல் போனது. அமெரிக்க ஐக்கிய நாடு வழங்கிய பெரும் ஆதரவால் கோமின்டாங் அரசு பொது நிர்வாகத்தையும் துறைமுகங்களையும் தகவல் தொடர்பையும் தனது கட்டுப்பாட்டில் வைத்துக் கொண்டது. ஆனால் வேளாண் பின்புலத்தைக் கொண்ட கோமின்டாங்கின் வீரர்கள் ஏமாற்றத்தோடும் அதிருப்தியோடும் இருந்தார்கள். இதற்கு மாறாக மாவோவின் படை மனவுறுதியுடனும் மிகுந்த ஒழுக்கத்துடனும் திகழ்ந்தது. உள்நாட்டுப் போர் வெடித்தவுடன் சியாங் கே–ஷேக்கின் படைகள் சிதைவடைந்ததுடன் அதன் தளபதிகள் கட்சிமாறவும் துவங்கினார்கள். நகரங்கள் ஒன்றன்பின் ஒன்றாக விழத் துவங்கின. சியாங் கே–ஷேக் 1949ஆம் ஆண்டின் இறுதியில் முக்கிய நிலப்பகுதியை விட்டு அகன்று தைவானில் தஞ்சம் புகுந்தார். சீன மக்கள் குடியரசு 1949இல் நிறுவப்பட்டது.

14.3 இந்தோனேஷியாவிலும், பிலிப்பைன்சிலும் நடந்த விடுதலை போராட்டங்கள்

இந்திய சுதந்திரத்தைத் தொடர்ந்து வந்த மாவோவின் வெற்றி காலனிய நாடுகளில் ஏகாதிபத்திய சக்திகள் தோற்கடிக்கப்படகூடியவைதான் என்ற செய்தியை தெளிவுபடுத்தியது. ஆனால் தென்கிழக்காசியாவில், அதிலும் குறிப்பாக பிலிப்பைன்ஸ் மற்றும் இந்தோனேஷியாவில் தேசியவாதம் ஆரம்பகட்டத்தில் தேங்கி நின்றதோடு 20ஆம் நூற்றாண்டின் துவக்கம் வரை சுய–அரசை நிர்ணயிப்பது குறித்து பெரிய முன்னேற்றம் ஏதும் இருக்கவில்லை. மூன்றரை ஆண்டுகளுக்கு ஜப்பானிய ஆக்கிரமிப்பின் விளைவாக ஐரோப்பிய ஏகாதிபத்திய சக்திகளின் கௌரவத்தை கணிசமாக கீழிறக்கியதோடு ஆக்கிரமிப்புக்குட்பட்ட நாடுகளில் தேசிய இயக்கங்கள் வலுப்பெறவும், சக்திகொள்ளவும் செய்தன. ஆனால் ஜப்பான் 1945இல் தோற்கடிக்கப்பட்ட பின், மேற்கத்திய சக்திகள் தங்களின் பழைய எல்லைப் பகுதிகளுக்கு திரும்ப முனைந்தன. அவர்கள் மீண்டும் காலனிய ஆட்சியாளர்களாகவே பொறுப்புவகிக்க முயன்றபோது குறுகிய காலத்திலேயே அது உண்மைக்குப் புறம்பானதென தெரியத் துவங்கியது. இதன் விளைவாக டச்சுக்காரர்களும் அமெரிக்கர்களும் உலகப்போருக்குப் பின் எழுந்த பொதுவுடைமை தலைமைத்துவத்திடம் அதிகாரம் சென்றுவிடாத வகையில் நண்பர்களாக தெரிந்த மிதவாத தேசாபிமானிகளிடம் பொறுப்பை ஒப்படைக்கும் முயற்சியை மேற்கொண்டனர்.

கிழக்கிந்திய தீவுகள் (இந்தோனேஷியா)

1640ஆம் ஆண்டிலிருந்தே ஜாவா, சுமத்ரா ஆகிய பகுதிகளை டச்சுக்காரர்கள் ஆக்கிரமித்து வந்தனர். பத்தொன்பதாம் நூற்றாண்டின் இரண்டாவது பாதியில் அவர்கள் கிழக்கிந்திய தீவுகளின் வெளிசுற்று தீவுகளையும் ஆக்கிரமிக்கலானார்கள். பத்தொன்பதாம் நூற்றாண்டின் போது டச்சுக்காரர்கள் அரசியல் அதிகாரத்தை விரும்பாமல் பொருளாதார கட்டுப்பாட்டை மட்டுமே முதன்மையாக விரும்பினர். அத்தீவுகளில் பெரும்பான்மையான மக்கள் மீன் பிடித்தலையும் விவசாயத்தையுமே தொழிலாகக் கொண்டிருந்தனர். ஐரோப்பியர்களுக்கு சொந்தமான கரும்பு, புகையிலை, தேயிலை மற்றும் காபி தோட்டங்களில் பலரும் பணியமர்த்தப்பட்டிருந்தனர். இத்தோட்டங்களில் செய்யப்பட்டிருந்த அதிக அளவிலான முதலீடுகளும் எண்ணெய் (1900) கண்டுபிடிக்கப்பட்டப்பின் மேற்கொள்ளப்பட்ட பிற முதலீடுகளும், அவை விளைவித்த ஏற்றுமதிகளும் இறக்குமதிகளும் இப்பகுதியை டச்சுக்காரர்களுக்கு முக்கியமானதாக ஆக்கியது.

டச்சு காலனிய ஆட்சி

கிழக்கிந்திய தீவுகளில் தேசியவாத இயக்கம் பிலிப்பைன்ஸ் நாட்டை விட மிகவும் தாமதமாக உருவானது. இதற்கு டச்சுக்காரர்கள் மேற்கத்திய கல்வியை காலதாமதமாக அறிமுகப்படுத்தியதே காரணமாகும். பிலிப்பைன்ஸில் யூரோசியன்கள் (ஐரோப்பிய–ஆசிய கலப்பினத்தார்) தங்களை சொந்த மண்ணின் பிரச்சனைகளோடு இனங்கண்டு கொண்டதோடு தேசிய இயக்கத்தின் தலைமைப் பொறுப்பையும் ஏற்றனர். மாறாக டச்சுக்காரர்கள் இன முன்விரோதமின்றி பூர்வீககுடிகளுடன் திருமண உறவை ஏற்படுத்திக்கொண்டு யூரோசியன்களையும் அவர்களின் சமூகத்திற்குள் அரவணைத்துக் கொண்டார்கள். யூரோசியன்களும்

12th_History_TM_Unit_14_V2.indd 270 02-01-2023 16:40:39

தங்களின் எண்ணங்கள் டச்சுக்காரர்களோடு ஒத்திருப்பதாகவே உணர்ந்தார்கள்.

தேசியவாதத்தின் எழுச்சி

கிழக்கிந்திய தீவுகளில் தெளிவான தேசியவாதத்தை வெளிப்படுத்திய முதல் நிகழ்வென்பது 1908ஆம் ஆண்டு உள்ளூர் அரசியல் சங்கமான போய்டி ஓடோமா (உயர் முயற்சி Boedi Oetomo) எனும் அமைப்பு உருவாக்கப்பட்டதிலிருந்தே துவங்குகிறது. இச்சங்கம் முதல் டச்சு மருத்துவப் பள்ளியின் மாணவர்களால் அவர்களின் மூத்த மாணவரான வஹிதின் சுதுரோஹூசோடோ (Wahidin Sudurohusodo) என்பவரின் திட்டத்தின்படி ஏற்படுத்தப்பட்டது. உள்ளூர் அறிஞர் பெருமக்களே நாட்டின் கல்வி மேம்பாட்டிற்கான வழிகாட்டும் தலைவர்களாக திகழவேண்டும் என்பதை பறைசாற்றுவதே இச்சங்கம் உருவாக்கப்பட்டதன் நோக்கமாகும். ஜாவாவின் குடிமைப் பணியாளர்களையும் மாணவர்களையும் உள்ளடக்கிய அமைப்பான இது ஒரு கலாச்சார அமைப்பாக மாறியது. ஆனால் சற்று காலத்தில் போய்டி ஓடோமா செயலிழந்த நிலை ஏற்படவே, சரேகத் இஸ்லாம் (Sarekat Islam என்னும் முஸ்லிம் கூட்டியக்கம்) என்ற செல்வாக்குப் பெற்ற அரசியல் சமூக அமைப்பு தோன்றியது.

சீனர்களின் பொருளாதார ஆதிக்கத்தை எதிர்க்கவே சரேகத் இஸ்லாம் அமைப்பு உருவாக்கப்பட்டது. ஆனால் படிப்படியாக அது ஒரு சோஷலிச மற்றும் தேசியவாத அமைப்பாக உருக்கொண்டது. 1916இல் சுயாட்சிக்கான தீர்மானத்தை அது நிறைவேற்றியது. இரண்டு ஆண்டுகளில் அதன் உறுப்பினர் எண்ணிக்கை 3,50,000 என்ற நிலையிலிருந்து இரண்டரை மில்லியனாக வளர்ந்தது. ரஷ்யப் புரட்சி 1917இல் ஏற்படுத்திய தாக்கத்தில் சரேகத் இஸ்லாம் அமைப்பினுள் இருந்தப் பொதுவுடைமைவாதிகள் அமைப்பை தங்கள் கட்டுப்பாட்டில் கொண்டு செல்ல முயன்றார்கள். அம்முயற்சி தோற்றதால் அவர்கள் சரேகத் இஸ்லாமை விட்டு வெளியேறி 1919ஆம் ஆண்டு இந்தோனேஷிய பொதுவுடைமை கட்சியை உருவாக்கினர்.

கட்சி அரசியல்

ஏற்கனவே உள்ளாட்சி அமைப்புகளுக்கான அதிகாரப் பகிர்வை வலியுறுத்தும் விதமாக அதிகாரப்பரவல் சட்டம் (Decentralisation Law) 1903இல் இயற்றப்பட்டது. அதனடிப்படையில் மாகாண சபைகள் (Provincial Councils) அடுத்த ஆண்டு ஏற்படுத்தப்பட்டன. ஆனால் அவ்வரசில் இந்தோனேஷியர்கள் எந்தப் பங்கும் ஆற்றவில்லை. தேசியவாதிகளின் எதிர்ப்பால் டச்சு அரசு வோக்ஸ்ராட் (Volksraad, 1918) என்னும் மக்களின் பாராளுமன்றத்தை வெல்டெவ்ரெடன், படாவியா (ஜகார்தா), ஜாவா ஆகிய இடங்களில் ஏற்படுத்தியது, அவை 1942ஆம் ஆண்டு வரை செயலாற்றின.

1920களின் போது பொதுவுடைமைவாதிகளும் சரேகத் இஸ்லாம் அமைப்பும் தேசிய இயக்கத்தில் யார் ஆதிக்கம் செலுத்துவது என்ற நிலையில் போட்டியிட்டுக் கொண்டிருந்தனர். தலைமைத்துவத்திற்கான இப்போட்டியில் பொதுவுடைமைவாதிகளே வெற்றிபெற்றனர். அவர்கள் 1926–27ஆம் ஆண்டுகளில் நடத்திய வேலை நிறுத்தப் போராட்டம் மேற்கு ஜாவா மற்றும் சுமத்ராவில் பெரும் கிளர்ச்சியாக உருவெடுத்தது. உடனடியாக அடக்கப்பட்டது. ஆயிரக்கணக்கானோர் கைது செய்யப்பட்டதால் இது பொதுவுடைமைவாதிகளுக்கு தற்காலிகமான ஒரு பின்னடைவாகவே இருந்தது.

சுகர்னோ

ஏறக்குறைய இதன் சமகாலத்தில் சுகர்னோ என்ற இளம் பொறியாளர் இந்தோனேஷிய தேசிய கட்சியை நிறுவினார். நாட்டில் உதித்த இந்த மூன்றாவது அணி, மேற்கத்திய வாழ்க்கை முறையைக் கொண்டிருந்த மதச்சார்பற்ற வர்க்கத்தினரால் ஆதரிக்கப்பட்டது. ஆனால் 1931ஆம் ஆண்டு காவல்துறை இதன் தலைமை அலுவலகத்தை சோதனைக்குட்படுத்தியது. சுகர்னோ கைது செய்யப்பட்டு அவரது கட்சியும் கலைக்கப்பட்டது.

டச்சு ஒடுக்குமுறையும் ஜப்பானிய ஆக்கிரமிப்பும்

1930களில் ஏற்பட்ட பொருளாதார மந்தநிலையை அடுத்து வேலையின்மை, ஊதிய குறைப்பு மற்றும் அதிகரித்த ஆர்ப்பாட்டங்கள் ஆகியவற்றின் விளைவாக எழுந்த தேசியவாதத்தை தடுக்க அரசாங்கம் அடக்குமுறை மற்றும் பத்திரிகை தணிக்கைக்கு முயன்றது. சுகர்னோவும் பிற தேசியவாத தலைவர்களும் 1942ஆம் ஆண்டு வரை சிறையில் வாடினர். கிழக்கிந்திய தீவுகளில் 1942 மார்ச்சில் டச்சுக்காரர்கள் ஜப்பானியர்களிடம் சரணடைந்தார்கள். ஜப்பானியர்களை எதிர்த்த சிலர் இரகசிய எதிர்ப்பு அமைப்புகளை ஒருங்கிணைக்க முற்பட்டார்கள். இதற்கு மாறாக சுகர்னோ, ஹட்டா போன்ற தலைவர்களால்

12th_History_TM_Unit_14_V2.indd 271 02-01-2023 16:40:39

வழிநடத்தப்பட்ட சிலர் விடுதலை அடைய சிறந்த வழி ஜப்பானியர்களை ஆதரிப்பதே என்று கருதினார்கள். இறுதிகட்டப்போரில் ஜப்பானியர்கள் விடுதலை வழங்குவதற்குரிய விதிமுறைகள் குறித்து இந்தோனேஷிய தலைவர்களுடன் பேச முடிவெடுத்தனர்.

விடுதலை அடைதல்

ஜப்பானியர்கள் வெளியேற்றப்பட்ட பின், போட்ஸ்டாம் மாநாட்டு முடிவின்படி 1945 செப்டம்பரில் பிரிட்டிஷ் படைகள் கிழக்கிந்திய தீவுகளில் வந்திறங்கின. அவர்கள் பெரும்பாலும் டச்சுக்காரர்களை உள்ளடக்கிய 2,00,000 போர் கைதிகளை விடுவித்தனர். சுகர்னோவின் ஆட்சி நிலவிய ஜாவா, சுமத்ரா நீங்கலாக கிழக்கிந்திய தீவுகளின் பிற பகுதிகளை டச்சுக்காரர்கள் மறுஆக்கிரமிப்பு செய்தனர். டச்சுக்காரர்கள் சுகர்னோவின் ஆட்சியை அங்கீகரிக்க மறுத்தனர். அவரோ குடியரசுத் தலைவர் பதவியைத் துறக்க முன்வரவில்லை. இதனால் பிரிட்டிஷ் ஆக்கிரமிப்புப் படைகள் தலையிட்டு பேச்சுவார்த்தை நடத்த முயற்சி மேற்கொண்டதன் விளைவாக டச்சு–இந்தோனேஷிய ஒப்பந்தம் உருவானது. இதன் விளைவாக, ஜாவா மற்றும் சுமத்ராவை விடுதலை பெற்ற குடியரசாக டச்சுக்காரர்கள் ஏற்றுக்கொண்டதோடு, பிற தீவுகளை கூட்டாட்சி முறையில் இணைத்து இந்தோனேஷிய ஐக்கிய நாடு உருவாக்கப்பட்டது. எனினும் டச்சுக்காரர்கள் இருமுறை இந்தோனேஷியாவின் அமைதியைத் தகர்க்க முயன்றனர், ஆனால் இந்தியப் பிரதமர் ஜவஹர்லால் நேருவின் தலைமையில் வெளிவந்த உலக கருத்தோட்டமும், ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்புக் குழுவும் கொடுத்த அழுத்தம் காரணமாகவும் 1949ஆம் ஆண்டின் இறுதியில் இந்தோனேஷியாவிற்கு சாதகமான தீர்வு வழங்கப்பட்டது. தி ஹேக்கில் நடைபெற்ற வட்டமேசை மாநாட்டில் விடுதலை பெற்ற இந்தோனேஷியாவின் அரசியலமைப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டது. 1949 டிசம்பரில் இந்தோனேஷியா விடுதலைபெற்ற நாடானது.

அமைதி ஒப்பந்தத்தில் கையொப்பமிடல்

பிலிப்பைன்ஸ்

மன்னர் ஐந்தாம் சார்லஸின் மகனான ஸ்பானிய இளவரசர் பிலிப்பின் பெயர் சூட்டப்பட்ட ஏறக்குறைய 7,000 தீவுகளின் கூட்டமே பிலிப்பைன்ஸ் ஆகும். கிழக்கிந்திய தீவுகள் போன்றே பிலிப்பைன்ஸிலும் பதினாறாம் நூற்றாண்டில் இருந்தே ஐரோப்பியரது ஆட்சி நடைபெற்று வந்தது. மிகுவெல் லோப்பஸ் டெ லெகாஸ்பின் (Miguel Lopez de Legazpiin) 1565 பிப்ரவரி மாதத்தில் கால்பதித்தது முதற்கொண்டே இங்கு ஸ்பானிய காலனிய ஆட்சி துவங்கிவிட்டது. இதைத் தொடர்ந்து ஸ்பானியர்கள் 300 ஆண்டுகள் ஆட்சிசெலுத்தி தங்களின் மொழி, கலாச்சாரம், சமயம் போன்றவற்றை உள்நாட்டு மக்கள் மீது திணித்தனர். தேசியவுணர்வு பிலிப்பைன்ஸ்வாசிகளிடம் பிற பகுதிகளில் தோன்றுவதற்கு முன்பே தோன்றியது. கவைட் (Cavite) ஆயுதக்கிடங்கில் (1872 ஜனவரி 20இல்) 200 பிலிப்பினோ துருப்புகள் மற்றும் ஊழியர்கள் நடத்திய கவைட் கிளர்ச்சியை காட்டுமிராண்டித்தனமாகக் கையாண்ட செயலானது தேசியவுணர்வை வளர்த்தெடுக்க பெரிதும் உதவியது. பிலிப்பைன்ஸ் நாட்டின் அறிவார்ந்த மக்கள் கைது செய்யப்பட்டு குறுகியகால விசாரணைக்குப் பின்னர் மூன்று குருக்கள் (ஜோஸ் பர்கோஸ், ஜசின்டோ சமோரா மற்றும் மரியானோ கோமஸ் ஆகியோர்) பொதுவெளியில் தூக்கிலிடப்பட்டு தியாகிகளானார்கள்.

ஸ்பானிய–அமெரிக்கப் போர்

கியூபா மீதான அமெரிக்காவின் ஆர்வத்தால் எழுந்த அமெரிக்காவிற்கும் ஸ்பெயினுக்கும் இடையிலான சர்ச்சை ஸ்பானிய–அமெரிக்கப் போருக்கு வழிவகுத்தது. உள்நாட்டில் அழுத்தம் அதிகரித்துக் கொண்டிருந்ததால் கியூபாவிற்கு குறைந்தபட்ச உள்ளாட்சி அதிகாரத்தை வழங்க ஸ்பெயின் ஏற்கனவே முடிவுசெய்திருந்தது. ஆனால் அமெரிக்க ஐக்கிய நாட்டின் காங்கிரஸ் கியூபாவில் நிறுத்தப்பட்டிருந்த ஸ்பெயினின் ஆயுதப்படைகளை உடனடியாக திரும்பப்பெற வற்புறுத்தியது. மேலும் காங்கிரஸ் ஆயுதப்படைகளை திரும்பப்பெறும்

12th_History_TM_Unit_14_V2.indd 272 02-01-2023 16:40:40

நடவடிக்கையை உறுதிசெய்து கொள்ளும் பொருட்டு படைபலத்தை பிரயோகிக்கவும் தனது நாட்டிற்கு அதிகாரம் வழங்கியிருந்தது. ஸ்பெயின் இழுத்தடித்துக் கொண்டிருந்ததால் 1898 ஏப்ரல் 25இல் அமெரிக்க நாடு போர் அறிவிப்பு செய்தது. தூரத்தில் வீற்றிருக்கும் வலுவான எதிரியான அமெரிக்காவை எதிர்கொள்ள ஸ்பெயின் தனது இராணுவத்தையோ, கடற்படையையோ தயார் நிலையில் வைத்திருக்கவில்லை. ஆகவே அமெரிக்கா எளிமையாக வென்றது. ஸ்பெயின் பாரிஸ் ஒப்பந்தத்தின் கீழ் (1898 டிசம்பர் 10இல் கையெழுத்திடப்பட்டது) கியூபா மீது கொண்டிருந்த அனைத்து உரிமைகளையும் விட்டுக்கொடுத்ததோடு குவாமையும், போர்டோரிக்கோவையும் அமெரிக்காவிற்கு தாரைவார்த்தது மேலும் பிலிப்பைன்சின் மீது கொண்டிருந்த இறையாண்மையையும் ஸ்பெயின் விட்டுக்கொடுத்தது.

அகுயினால்டோவும், பிற கவைட் தலைவர்களும் ஸ்பானியப் படைகளை எதிர்த்துப் பல போர்களிலும் சிறப்பான வெற்றிகளை அடைந்து ஸ்பானியர்களை விரட்டியடித்திருந்தனர். அகுயினால்டோ 1898 மே 28இல் 18,000 துருப்புக்களை கொண்டபடை ஒன்றை திரட்டி சிறிய ஸ்பானிய காவற்படையை எதிர்த்து அலபன், இமுஸ், கவைட் போன்ற பகுதிகளில் சண்டையிட்டார். அலபனின் வெற்றிக்குப் பின்னர் முதன்முறையாக கவைட் நூவோவில் (Cavite Nuevo என்னும் தற்கால கவைட் நகரம்) அமைந்த டிட்ரோ கவைட் டெனோ (Teatro Caviteno) என்னும் இடத்தில் 300 கைது செய்யப்பட்ட ஸ்பானிய துருப்புக்களின் முன்பும் பிலிப்பினோ புரட்சியாளர்களின் முன்பும் பிலிப்பைன்சின் கொடியை எமிலியோ அகுயினால்டோ பறக்கவிட்டார். மலோலோஸ் அரசியல்சாசன பிரகடனத்தை அறிவித்து எமிலியோ அகுயினால்டோ புதிய குடியரசின் முதல் குடியரசுத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். எமிலியோ அகுயினால்டோ 1901 மார்ச் 23இல் அமெரிக்கப் படைகளால் கைது செய்யப்படும் வரை முதல் குடியரசு தாக்குப்பிடித்து பின் கலைக்கப்பட்டது.

எமிலியோ அகுயினால்டோ

பிலிப்பைன்ஸ் நாட்டின் தேசியவாதிகள் கியூபா மட்டுமே அமெரிக்காவிற்கு சர்ச்சைக்குரிய பகுதி என்ற எண்ணம் கொண்டிருந்தனர். ஆனால் குறுகிய காலத்திலேயே அவர்கள் ஒரு தலைமைக்கு மாற்றாக மற்றொரு தலைமையின் கீழ் தங்கள் தேசம் கொண்டு செல்லப்பட்டிருப்பதை உணர்ந்து கொண்டார்கள். ஸ்பானிய–அமெரிக்கப் போரால் வெறுப்படைந்திருந்த அவர்கள் கொரில்லா போர் முறையை கைக்கொள்ளலானார்கள். பிலிப்பைன்சின் தேசியவாதிகள் அமெரிக்க அரசிற்கு கொடுத்த எதிர்ப்பிற்கு அந்நாட்டில் போதுமான அளவு ஆதரவுப் பரப்புரையாளர்கள் இருந்தமையால் அவ்வரசு பிலிப்பைன்ஸில் பிரதிநிதித்துவ அமைப்புகளை விரைந்து ஏற்படுத்த முனைந்தது. அமெரிக்க ஆட்சியின் ஆரம்பத்தில் (1902) முதன்மையான காலனிய நிறுவனங்கள் யாவும் தோற்றுவிக்கப்பட்டன: ஆங்கில வழி கல்வி முறை, தேர்வுகள் அடிப்படையில் குடிமைப்பணி, மாகாண நீதிமன்றங்களை உள்ளடக்கிய நீதித்துறையை உருவாக்கல், தேர்தல் மூலம் நகராட்சி மற்றும் மாகாண அரசுகளை நிறுவுதல் இறுதியாக தேசிய அவைக்கு தேர்தல்கள் நடத்தி தேர்ந்தெடுத்தல் போன்றவைகள் அதில் உள்ளடங்கும். 80 உறுப்பினர்களைக் கொண்ட தேசிய அவைக்கு நடைபெற்ற தேர்தலில் தேசியவாத கட்சியே பெரும்பான்மை பெற்றது.

தேசியவாத கட்சி சுயாட்சியைத் தொடர்ந்து கோரியது. அக்கட்சியின் தலைவரான குவிசோன் கூறுகையில், 'பிறரின் ஆட்சி சொர்க்கமாகவே இருந்தால் கூட அதைவிட நரகமேயானாலும் எங்களை நாங்களே நிர்வகிக்க விரும்புகிறோம்' என்றார். பொருளாதாரப் பெருமந்த காலமான 1930களில் இடதுசாரிகளின் தொடர் கிளர்ச்சிகள் ஏற்பட்டன. பர்திதோ கொமுனிஸ்டா ங்க் பிலிப்பினாஸ் (PKP என்று சுருக்கமாக குறிப்பிடப்படும் Partido Komunista ng Pilipinas என்னும் இடதுசாரி கட்சி) என்ற 1930களில் உருவாக்கப்பட்ட கட்சியை அமெரிக்க ஐக்கிய நாட்டின் காலனிய அதிகாரிகள் சட்டத்திற்குப் புறம்பானதென்று தடைசெய்தார்கள். இருப்பினும் பொதுவுடைமைவாதிகள் அமெரிக்க ஐக்கிய நாட்டை, உள்நாட்டில் சுயாட்சி ஏற்படுத்த இணங்கச் செய்தார்கள்.

பிலிப்பைன்ஸ் நாட்டினருக்கு பத்தாண்டுகளில் அதிகாரத்தை வழங்க 1934ஆம் ஆண்டு இயற்றப்பட்ட டைடிங்ஸ்–மெக்டஃப்பி சட்டம் (Tydings–McDuffie Act என்னும் பிலிப்பைன்ஸ் சுதந்திர சட்டம்) வழியேற்படுத்தியது. இடைப்பட்ட காலத்தில் அமெரிக்க ஐக்கிய நாடு பிலிப்பைன்ஸில் தனது இராணுவத்தளத்தை பராமரித்துக் கொள்ளவும், வெளியுறவுக் கொள்கைகளை கட்டுப்படுத்தவும்

12th_History_TM_Unit_14_V2.indd 273 02-01-2023 16:40:40

பர்திதோ கொமுனிஸ்டா ங்க் பிலிப்பினாஸும் (பிலிப்பைன்ஸ் பொதுவுடைமை கட்சி) ஹக் கிளர்ச்சியும்: அமெரிக்க அரசால் பர்திதோ கொமுனிஸ்டா ங்க் பிலிப்பினாஸ் அமைப்பு சட்டத்திற்கு புறம்பானது என ஆரம்பத்தில் தடைவிதிக்கப்பட்டிருந்தாலும் பின்னர் அது சட்டரீதியான அங்கீகாரம் பெற்று ஜப்பானிய ஆதிக்கத்தை எதிர்த்த மக்களின் படை எனப்படும் ஹக்பாலாஹப்பின் தலைமைப் பொறுப்பை தக்கவைத்துக் கொண்டது. ஹக்பாலாஹப் ஒரு வலுவான கொரில்லா அமைப்பாக உருவான காலகட்டத்தில் மறு–ஆக்கிரமிப்பை முடித்து திரும்பிக் கொண்டிருந்த அமெரிக்கப்படைகள் பர்திதோ கொமுனிஸ்டா ங்க் பிலிப்பினாஸின் உறுப்பினர்களையும், ஹக் என்றழைக்கப்பட்ட பொதுவுடைமைவாத விவசாயிகளையும் அவர்கள் போர்க்காலத்தில் தோழர்கள் என கருதியவர்களே தாக்கினார்கள். அரசின் படைகளால் ஹக்குகளின் பகுதிகள் தாக்குதலுக்கு உள்ளானதால் பர்திதோ கொமுனிஸ்டா ங்க் பிலிப்பினாஸ் கொரில்லா போர் முறையை கையாண்டது. ஆரம்பத்தில் அதை தற்காப்பு அடிப்படையில் மட்டுமே கைக்கொண்டார்கள். ஆனால் 1950 முதல் அக்கட்சி அதிகாரத்தை பெறும் உத்தியாக அதைப் பயன்படுத்திக் கொண்டது. எனினும் 1950களின் மத்தியில் பிலிப்பைன்ஸ் அரசு அமெரிக்க ஐக்கிய நாட்டின் ஆதரவைப் பெற்று "ஹக் கிளர்ச்சியை" ஒடுக்கியது.

முடியும் என்றிருந்தது. இச்சட்டம் அடுத்த ஆண்டு (1935) பொதுவாக்கெடுப்பின் மூலமாக ஒப்புதலுக்குட்படவும் இருந்தது. குவிசோன் 1935 முதல் 1941 வரை குடியரசு தலைவராக பொறுப்புவகித்தார். பேர்ல் ஹார்பரை தாக்கியவுடன் ஜப்பான் பிலிப்பைன்ஸையும் தாக்கியது. அமெரிக்க ஐக்கிய நாட்டின் வரலாற்றில் பிலிப்பைன்ஸ் மீது ஜப்பான் போர் தொடுத்தமையே மோசமான இராணுவ தோல்வியாக கருதப்படுகிறது. கொல்லப்பட்ட 1,00,000 நபர்களில் 23,000 பேர்கள் அமெரிக்க இராணுவப் பணியாளர்கள் என்பதோடு எஞ்சியோர் பிலிப்பைன்ஸ் நாட்டினர் ஆவர்.

குவிசோன்

பிலிப்பைன்சின் விடுதலை

ஜப்பானியர்களின் ஆக்கிரமிப்பை முடிவுக்குக் கொண்டு வந்தவுடன், அமெரிக்க ஐக்கிய நாடு சட்டப்பூர்வமாக தான் கொடுத்திருந்த வாக்குறுதியை நிறைவேற்றியது. தேர்தல்கள் ஏப்ரல் 1946இல் நடத்தப்பட்டு 1946 ஜூலை 4இல் பிலிப்பைன்ஸ் விடுதலை பெற்ற நாடானது. பிலிப்பைன்சை விட்டு அகன்றாலும் அமெரிக்க ஐக்கிய நாடு 1946 முதல் 1954 வரையிலான காலத்தில் ஹக்குகளுக்கெதிராக இராணுவப் பயிற்சியும், நிதியுதவியும் நல்கி வந்தது. காலம் முழுவதும் பிலிப்பைன்ஸ் அமெரிக்க ஐக்கிய நாட்டின் நம்பிக்கையைப் பெற்ற நட்பு நாடாகவே இருந்துவந்துள்ளது. அமெரிக்க ஐக்கிய நாட்டின் ஆதிக்கத்தின் கீழ் 1954ஆம் ஆண்டு உருவான தென் கிழக்கு ஆசிய ஒப்பந்த அமைப்பில் (South East Asian Treaty Organisation – SEATO) அங்கம் வகிக்கும் மூன்று ஆசிய நாடுகளில் பிலிப்பைன்சும் ஒன்றாகும்.

பாடச் சுருக்கம்

- வெர்செய்ல்ஸ் அமைதி ஒப்பந்தத்தின் நீதியற்ற தன்மை, பன்னாட்டு சங்கத்தின் தோல்வி, 1930களில் தோன்றிய பொருளாதாரப் பெருமந்தம், பாசிச சக்திகளான இத்தாலி, ஜெர்மனி, ஜப்பான் போன்றவைகளின் விரிவாக்கக் கொள்கை இரண்டாம் உலகப்போரை விளைவித்தல் உள்ளிட்ட அம்சங்கள் விவரிக்கப்பட்டுள்ளது.
- பேர்ல் துறைமுகம் மீது ஜப்பான் நடத்திய தாக்குதல், ஸ்டாலின்கிராட் போரும், ட்ரெஸ்டன் குண்டுவீச்சும், ஹிரோஷிமா, நாகசாகியில் அணுகுண்டு வீசப்படுதல் போன்றவை முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளன.
- அச்சு நாடுகள் மற்றும் அவர்தம் கூட்டு நாடுகளோடு ஏற்படுத்தப்பட்ட அமைதித் தீர்வுகள், ஐக்கிய நாட்டு சபையின் உருவாக்கம் மற்றும் போரின் மொத்த விளைவுகள் பற்றி ஆராயப்பட்டுள்ளது.

12th_History_TM_Unit_14_V2.indd 274 02-01-2023 16:40:40

www.tntextbooks.in

- சீன வேளாண்குடிகளின் துயரங்கள் மற்றும் மஞ்சுக்கள் கடைபிடித்த திறந்தவெளிக் கொள்கை அந்நாட்டை அயல்நாட்டு சக்திகளான பிரிட்டன், பிரான்ஸ் போன்றவை அவரவர் செல்வாக்கிற்கு உட்பட்ட கோளங்களாகப் பிரிக்க வழியேற்படுத்தியமை விளக்கப்பட்டுள்ளது.
- கிறித்தவ சமயத்தின் பரவல் பற்றியும், சீன நிர்வாகத்தில் வெளிநாட்டாரின் குறுக்கீடு குறித்தும், சீனப் பகுதிகளை ஜப்பானியர் ஆக்கிரமித்தவுடன் அங்கே ஊற்றெடுத்துப் பரவிய தேசியவுணர்வு புரட்சிக்கு வழிநடத்தி சென்றமை பற்றியும் எடுத்துரைக்கப்பட்டுள்ளது.
- சன் யாட்–சென்னும், மா சே–துங்கும் சீன மக்களை மஞ்சு வம்சத்திற்கு எதிராக திரட்டி மக்களின் ஆட்சியை நிறுவியதில் ஆற்றியப் பங்கு விவரிக்கப்பட்டுள்ளது.
- மாவோவின் நீண்ட பயணமும், அதைத் தொடர்ந்த நிகழ்வுகளும் சீனாவில் பொதுவுடைமை அரசு ஏற்பட வழிவகுத்தமை தெளிவுபடுத்தப்பட்டுள்ளது.
- இந்தோனேஷியா மற்றும் பிலிப்பைன்ஸ் நாடுகளின் விடுதலைப் போராட்ட வரலாற்றின் சுவடுகள் படம்பிடித்துக் காட்டப்பட்டுள்ளன.
- மூன்று வருடங்களுக்கு மேலாக ஜப்பானின் ஆக்கிரமிரப்பிற்கு உட்பட்ட இப்பகுதிகளில் தேசிய இயக்கம் பிறந்து இந்தோனேஷியாவிலும், பிலிப்பைன்சிலும் காலனிய ஆட்சி தூக்கிவீசப்பட்டமை எடுத்தியம்பப்பட்டுள்ளது.

பயிற்சி

I சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்.

1. கீழ்க்காண்பனவற்றுள் இரண்டாம் உலகப்போர் உருவாக எது காரணமாக இருக்கவில்லை?

   (அ) ஜெர்மனியோடு ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தின் நீதியற்ற தன்மை

   (ஆ) பன்னாட்டு சங்கத்தின் தோல்வி

   (இ) 1930களில் ஏற்பட்ட பொருளாதாரப் பெருமந்தம்

   (ஈ) காலனிய நாடுகளில் ஏற்பட்ட தேசிய விடுதலை இயக்கங்கள்

2. கெல்லாக்–பிரையாண்ட் ஒப்பந்தம் ________ ஆண்டில் கையெழுத்தானது.

   (அ) 1927 (ஆ) 1928 (இ) 1929 (ஈ) 1930

3. **கூற்று:** ஆயுதக்குறைப்பு மாநாடு பன்னாட்டு சங்கத்தால் ஜெனீவாவில் நடத்தப்பட்டது.

   காரணம்: பிரான்சுக்கு சமமாக ஜெர்மனி தளவாடங்களை கொண்டிருக்க முயல்வது பேச்சுவார்த்தைகளின் ஒரு முக்கிய அம்சமாக தோன்றியது.

   (அ) கூற்றும், காரணமும் சரி. காரணம் கூற்றை விளக்குகிறது

   (ஆ) கூற்றும், காரணமும் சரி. ஆனால் காரணம் கூற்றை விளக்கவில்லை

   (இ) கூற்று சரி. காரணம் தவறு

   (ஈ) கூற்று தவறு. காரணம் சரி

4. சீனாவிடமிருந்து மஞ்சூரியாவை ஜப்பான் எந்த ஆண்டு படையெடுத்து கைப்பற்றியது?

   (அ) 1931 (ஆ) 1932 (இ) 1933 (ஈ) 1934

5. பத்தொன்பதாம் நூற்றாண்டின் முடிவில் ஐரோப்பியக் கண்டத்திற்குள் தொழிற்துறையில் வலிமையான சக்தியாக ________ நாடு உருவாகியிருந்தது.

   (அ) பிரான்ஸ் (ஆ) ஸ்பெயின்

   (இ) ஜெர்மனி (ஈ) ஆஸ்திரியா

6. வெர்செய்ல்ஸ் ஒப்பந்தத்தின் சரத்துகளின்படி ஜனவரி 1935இல் ________ பகுதியில் பொதுவாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும் என்று முடிவானது.

   (அ) சூடட்டன்லாந்து (ஆ) ரைன்லாந்து

   (இ) சார் (ஈ) அல்சேஸ்

7. **கூற்று:** இரண்டாம் உலகப்போரின் காலத்தில் போர் முறைகள் பெரிதும் மாற்றமடைந்திருந்தன.

   காரணம்: அகழிப் போர்முறை ஒதுக்கப்பட்டு விமான குண்டுவீச்சு பிரபலமானது.

   (அ) கூற்று, காரணம் சரி. காரணம் கூற்றை விளக்குகிறது.

   (ஆ) கூற்று, காரணம் சரி. ஆனால் காரணம் கூற்றை விளக்கவில்லை.

   (இ) கூற்று சரி. காரணம் தவறு.

   (ஈ) கூற்று தவறு. காரணம் சரி.

12th_History_TM_Unit_14_V2.indd 275 02-01-2023 16:40:40

8. ஜெர்மனி 1939இல் ஆக்கிரமிப்பு தவிர்ப்பு ஒப்பந்தம் ஒன்றை ________ நாட்டோடு ஏற்படுத்திக் கொண்டது.

(அ) ஆஸ்திரியா (ஆ) இத்தாலி
(இ) ரஷ்யா (ஈ) பிரிட்டன்

9. பேர்ல் துறைமுகத்தை ஜப்பான் தாக்குவதற்குத் திட்டம் வகுத்தவர் ________ ஆவார்.

(அ) யாமமோடோ
(ஆ) ஸ்கூஸ்னிக்
(இ) இரண்டாம் கெய்சர் வில்லியம்
(ஈ) ஹிரோஹிடோ

10. குடியரசுத் தலைவர் ரூஸ்வெல்ட் அறிமுகப்படுத்திய கடன்–குத்தகை முறை ________ வகையில் உதவிபுரிந்தது.

(அ) பாசிச சக்திகளை எதிர்த்துப் போராடிக் கொண்டிருக்கும் நாடுகளுக்கு கூடுதல் வீரர்களை அனுப்புதல்
(ஆ) யூதர்களை ஹிட்லரின் படைகள் கட்டவிழ்த்துவிட்ட கொலைவெறித் தாக்குதலில் இருந்து பாதுகாத்தல்
(இ) தோழமை நாடுகளின் வளங்களைப் பெருக்கி, அவர்களுக்குத் தேவையான ஆயுதங்களையும், வெடிபொருட்களையும் வழங்குதல்
(ஈ) இரண்டாம் உலகப்போரில் காயமடைந்தோருக்கு மருத்துவ வசதிகளை ஏற்படுத்துதல்

11. அமெரிக்க ஐக்கிய நாட்டின் படைகளை ஆகஸ்ட் 1942இல் பசிபிக் பகுதியில் தலைமையேற்று வழிநடத்தியவர் ________ ஆவார்.

(அ) மெக் ஆர்தர் (ஆ) ஐசன் ஹோவர்
(இ) ஜெனரல் டி கால் (ஈ) ஜார்ஜ் மார்ஷல்

12. ஜப்பானிய கடற்படையை அமெரிக்க ஐக்கிய நாட்டின் கடற்படை தோற்கடித்தமை ________ போரிலாகும்.

(அ) பிரிட்டன் (ஆ) குவாடல்கனல்
(இ) எல் அலாமின் (ஈ) மிட்வே

13. ஜெர்மானியப் படைகள் முதல் பின்னடைவைச் சந்தித்தது ________ என்னுமிடத்தில் ஆகும்.

(அ) போட்ஸ்டாம் (ஆ) எல் அலாமின்
(இ) ஸ்டாலின்கிராட் (ஈ) மிட்வே

14. கீழ்க்காண்பனவற்றுள் போட்ஸ்டாம் மாநாட்டின் அறிவிப்புகளில் அடங்காத ஒன்று எது?

(அ) கிழக்கு பிரஷ்யா இரு பகுதிகளாகப் பிரிக்கப்பட வேண்டும்: அதில் வடக்குப் பகுதி சோவியத் நாட்டையும், தென் பகுதி போலந்தையும் சென்று சேரும்.
(ஆ) முன்பு சுதந்திர நகரமாக இருந்த டான்சிக் போலந்தின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு சேர்க்கப்படும்.
(இ) ஜெர்மனி நான்கு தொழில்மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டு, பிரித்தெடுக்கப்பட்ட ஒவ்வொரு பகுதியும் முறையே சோவியத் நாடு, பிரிட்டன், அமெரிக்க ஐக்கிய நாடு, பிரான்ஸ், ஆகியவைகளின் கட்டுப்பாட்டில் விடப்படும்.
(ஈ) ட்ரிஸ்டியை A மண்டலம் என்றும் B மண்டலம் என்றும் பிரிப்பதென்றானது. A மண்டலம் இத்தாலிக்கு கொடுக்கப்படவும், B மண்டலம் யுகோஸ்லோவியாவிற்கு வழங்கப்படவும் முடிவு செய்யப்பட்டது.

15. கீழ்க்காண்பனவற்றுள் இரண்டாம் உலகப்போரின் விளைவுகளில் சேராத ஒன்று எது?

(அ) இரண்டாம் உலகப்போர் ஐரோப்பாவிலிருந்த பல முடியரசுகளுக்கு மரண அடி கொடுத்தது.
(ஆ) பிரிட்டனில் தொழிலாளர் கட்சி ஒரு பொதுநல அடிப்படை கொண்ட நாட்டை உருவாக்கியது.
(இ) பாசிசவாதத்திற்கு எதிரான போராட்டம் ஏகாதிபத்தியத்திற்கு வெற்றியை வழங்கியது.
(ஈ) அமெரிக்க ஐக்கிய நாடும், சோவியத் நாடும் இரு வல்லரசுகளாக உருவெடுத்தன.

16. கீழே பொருத்தப்பட்டிருப்பவையில் சரியான இணைகள் எது?

(1) ஜெனரல் டி கால் – பிரான்ஸ்
(2) ஹேல் செலாஸி – எத்தியோப்பியா
(3) ஜெனரல் படோக்லியோ – ஜப்பான்
(4) அட்மிரல் யாம்மோடோ – இத்தாலி

(அ) (1) மற்றும் (2) (ஆ) (2) மற்றும் (3)
(இ) (3) மற்றும் (4) (ஈ) அனைத்தும்

17. பிரான்ஸ் இரண்டாம் அபினிப் போரில் பங்கெடுத்தது

(அ) பிரிட்டனுக்கு உதவிபுரிவதற்காக
(ஆ) பிரான்சுக்கென தனி செல்வாக்கின் கோளத்தை உருவாக்கிக் கொள்வதற்காக
(இ) சமய செயல்பாடுகளுக்கு அனுமதிகோரும் பொருட்டு
(ஈ) ஓபிய வணிகத்தில் ஈடுபடும் உரிமையை பிரான்ஸ் நாட்டினர் நிலைநாட்டுவதற்காக

18. மஞ்சு வம்சத்தின் காலம் ________ ஆண்டு வரை நீடித்தது.

(அ) 1908 (ஆ) 1911 (இ) 1912 (ஈ) 1916

12th_History_TM_Unit_14_V2.indd 276 02-01-2023 16:40:40

19. ஸ்பானிய–அமெரிக்கப் போர் ________ சர்ச்சையை முன்னிறுத்தி 1898ஆம் ஆண்டில் நடைபெற்றது.

(அ) கியூபா (ஆ) பிலிப்பைன்ஸ்

(இ) போர்ட்டோ ரிக்கோ (ஈ) படாவியா

20. **கூற்று:** பிலிப்பைன்ஸ் 4 ஜூலை 1946ஆம் ஆண்டு விடுதலையடைந்தது.

காரணம்: அமெரிக்க ஐக்கிய நாட்டின் ஆதிக்கத்தின் கீழான தென் கிழக்கு ஆசிய உடன்படிக்கை அமைப்பில் பிலிப்பைன்ஸ் இணைந்தது.

(அ) கூற்று, காரணம் சரி. காரணம் கூற்றை விளக்குகிறது.

(ஆ) கூற்று, காரணம் சரி. ஆனால் காரணம் கூற்றை விளக்கவில்லை.

(இ) கூற்று சரி. காரணம் தவறு.

(ஈ) கூற்று தவறு. காரணம் சரி.

II. குறுகிய விடையளிக்கவும்.

1. கெல்லாக்–பிரையாண்ட் உடன்படிக்கையின் முக்கியத்துவத்தை எடுத்தியம்புக.
2. பன்னாட்டு சங்கத்திலிருந்து 1933ஆம் ஆண்டில் ஜெர்மனி ஏன் வெளியேறியது?
3. ரோம்–பெர்லின் அச்சின் உருவாக்கத்திற்குப் பின்புலமாக அமையப்பெற்றது எது?
4. மூனிச் ஒப்பந்தத்தின் கூறுகள் யாவை?
5. டங்கிர்க் வெளியேற்றம் குறித்து நீவீர் அறிவது யாது?
6. பேர்ல் துறைமுகத்தை ஜப்பான் தாக்கியதன் முக்கியத்துவத்தை முன்னிலைப்படுத்தி எழுதுக.
7. அட்லாண்டிக் பட்டயத்தின் சிறப்புக் கூறுகளைப் பட்டியலிடுக.
8. நான்கிங் ஒப்பந்தத்தின் முக்கியத்துவத்தை ஆய்க.
9. பிலிப்பைன்ஸில் 1902இல் நிறுவப்பட்ட அமெரிக்க ஆட்சியின் உடனடி விளைவுகள் யாவை?
10. கவைட் கிளர்ச்சியின் முக்கியத்துவத்தை மதிப்பிடுக.

III. சுருக்கமாக விடையளிக்கவும்.

1. ஸ்டாலின்கிராடை ஆக்கிரமிப்பதற்கு ஹிட்லர் ஏன் அதிக அக்கறை கொண்டார்? அது அவரின் "வாட்டர்லூவாக" மாறிப்போனது எவ்வாறு என்பதனை சுட்டுக.
2. நேச நாடுகள் ஜெர்மனி மீது குண்டுவீசி தாக்கியது பயங்கர தாக்குதல் பிரச்சாரங்களுக்கு அடையாளமாக அமைந்தது – விளக்குக.
3. ஹக் கிளர்ச்சியின் முக்கியத்துவம் யாது?
4. இரண்டாம் உலகப்போரின் முக்கிய விளைவுகளை முன்னிலைப்படுத்துக.
5. சீனாவில் நிகழ்ந்த பாக்ஸர் கிளர்ச்சி பற்றிய குறிப்புகளைத் தருக.
6. சீன தேசிய அரசியலில் கோமின்டாங் கட்சியின் பங்கை விவாதத்திற்கு உட்படுத்துக.
7. இந்தோனேஷிய விடுதலைக்கு சுகர்னோ ஆற்றியப் பங்கை மதிப்பிடுக.

IV. விரிவான விடையளிக்கவும்.

1. இரண்டாம் உலகப்போரின் விதைகளை வெர்செய்ல்ஸ் ஒப்பந்தமே தூவியது என்பதனை தகுந்த காரணத்தோடு விளக்குக.
2. இரண்டாம் உலகப்போர் ஏற்பட ஜெர்மனியும், ஹிட்லரும் எந்த அளவிக்குக் காரணமாவார்கள் என்பதனை ஆய்ந்து கூறுக.
3. சீனாவில் பொதுவுடைமை அரசு உருவாக மா சே–துங்கின் பங்களிப்பை விவரித்து எழுதுக.
4. இந்தோனேஷியா மற்றும் பிலிப்பைன்ஸ் நாடுகளின் விடுதலைப் போராட்டங்களில் பொதுவான மற்றும் வேறுபட்ட கூறுகளை ஒப்பிட்டாய்ந்து எழுதுக.

V. செயல்பாடுகள்.

1. பேர்ல் ஹார்பர் (Pearl Harbour) மற்றும் ப்ரம் ஹியர் டு எடர்னிட்டி (From Here to Eternity) போன்ற திரைப்படங்களை மாணவர்கள் காண ஏற்பாடு செய்யலாம்.
2. "அமெரிக்க ஐக்கிய நாடு இரண்டாம் உலகப்போரின்போது ஜப்பானின் மீது அணுகுண்டை வீசித் தாக்குவது நியாயமானதுதான் என நினைத்ததா?" – மாணவர்கள் விவாதிக்கலாம்.
3. உலக புறஎல்லை (World outline Map) வரைபடத்தில் இரண்டாம் உலகப்போரில் பங்கெடுத்த நாடுகள், போர் நடைபெற்ற முக்கியமான பகுதிகள் போன்றவற்றை குறிக்க ஆசிரியர்கள் மாணவர்களுக்கு வழிகாட்டலாம்.
4. போர் தளபதிகளான யுவான் ஷி காய், மெக் ஆர்தர், ஜார்ஜ் மார்ஷல், படோக்லியோ போன்றவர்களின் வரலாற்றை மட்டுமல்லாது புரட்சிகர / தேசியவாத தலைவர்களான ஹங்க் ஹஸ்யு–சுவான், அகுயினால்டோ போன்றவர்களின் சரிதையையும் மாணவர்கள் அறிய முனையலாம்.

மேற்கோள் நூல்கள்

- H.A. Davies, *An Outline History of the World*, Oxford University Press, 2006.
- Edward McNall Burns, *Western Civilizations*, vol. 2, W.W. Norton, New York, 1972
- R.D. Cornwell, *World History in the Twentieth Century*, Longman, 1972.
- Richard Overy (ed.), *Complete History of the World*, Harper Collins, 2007
- Amry Vandebosch, "Nationalism in Netherlands East Indies," *Pacific Affairs*, vol.4, no. 12, 1931.
- Eric Hobsbawm, *Age of Extremes: The Short Twentieth Century 1914-1991*, Abacus, 1994.
- Chris Harman, A *People's history of the World*, Orient Longman, 2007.
- *Encyclopaedia Britannica*

கலைச்சொற்கள்

போரில் தோற்ற நாடு மற்றொரு நாட்டிற்கு அது ஏற்படுத்திய சேதத்திற்காக வழங்கும் இழப்பீட்டுத் தொகை	**reparation**	payments made by a defeated nation after a war to pay for damages it caused to another nation
இராணுவ ஆட்கள் மற்றும் ஆயுதக் குறைப்பு	**disarmament**	reduction of military forces and weapons
உடன்படிக்கையை மீறு	**breach**	go against the treaty, violate
சமாதானப்படுத்துதல்	**appeasement**	conciliation
ஓரிடத்திலிருந்து வெளியேற்றுதல்	**evacuation**	removing a person or persons from a place.
ஊக்கம் கொள்ளச் செய்தல், துணிவூட்டல்	**embolden**	give the courage to do something
சித்திரவதை முகாம்	**concentration camp**	a place where large numbers of people are kept as prisoners in extremely bad condition
பழிவாங்கும் இயல்புடைய	**vindictive**	revengeful
போரிடுகிற, மூர்க்கத்தனமான	**belligerent**	one eager to fight; aggressive
முன்னெப்போதுமில்லாத, முன் சம்பவிக்காத	**unprecedented**	never done, never known before
அடக்கு, ஒடுக்கு	**quell**	crush, suppress
போரில் தோற்றவர் மீது கோரப்படும் இழப்பீட்டுத் தொகை	**indemnity**	obligation of an individual or a nation to bear the losses of another incurred in a war.
கப்பல்/ விமானப் பணியாளர் குழு	**crew**	staff who work on board a ship or aircraft
நம்பிக்கைத் துரோகமாய்	**treacherously**	in a disloyal and faithless manner
வெளிப்பாடு	**manifestation**	appearance or demonstration
தளர்வடை, செயல் இழ	**languish**	to exist in an unpleasant condition
தவிர்க்க, தட்டிக்கழிக்கத் தந்திரம் செய்தல்.	**dodge**	to trick to evade
விவாதத்தின்மூலம் இணங்கச் செய்	**persuade**	convince someone to do something through reasoning or argument.
பறிமுதல் செய்தல், கைப்பற்றுதல்	**seizure**	capture, takeover, annexation

12th_History_TM_Unit_14_V2.indd 278 02-01-2023 16:40:41

இணையச் செயல்பாடு

இரண்டாம் உலகப்போரும் காலனிய நாடுகளில் அதன் தாக்கமும்

இந்த செயல்பாட்டின் மூலம் இரண்டாம் உலகப்போர் நிகழ்வுகளை துல்லியமாக தெரிந்து கொள்ள முடியும்.

படிநிலைகள்

படி – 1 : URL அல்லது QR குறியீட்டினைப் பயன்படுத்தி இச்செயல்பாட்டிற்கான இணையப் பக்கத்திற்கு செல்க

படி – 2 : திரையில் தோன்றும் படத்தில் "Enter" ஐ சொடுக்கவும், பின்னர் கீழ்ப்பகுதியில் இருக்கும் காலக்கோட்டில் எதாவது ஒரு ஆண்டை தேர்வு செய்யவும் (உதாரணம்: 1939)

படி –3 : முதல் உலகப்போர் பற்றிய தகவல்களை ஒவ்வொன்றாக அறிய திரையில் தோன்றும் உலக வரைபடத்தில் ஏதாவது ஒரு படத்தொகுப்பை தேர்ந்தெடுக்கவும்.

படி 1

படி 2



படி 3

உரலி: https://www.abmc.gov/sites/default/files/interactive/interactive_files/WW2/index.html

*படங்கள் அடையாளத்திற்கு மட்டுமே.

*தேவையெனில் Adobe Flash ஐ அனுமதிக்க.

12th_History_TM_Unit_14_V2.indd 279 02-01-2023 16:40:42

அலகு 15

இரண்டாம் உலகப்போருக்குப் பிந்தைய உலகம்

கற்றலின் நோக்கங்கள்

கீழ்க்காண்பனவற்றோடு அறிமுகமாகிக் கொள்வது

- இரண்டாம் உலகப்போருக்குப் பின்னரான காலப்பகுதியில் இருதுருவ உலகம் தோன்றுதல்
- போருக்குப் பின்னர் அமெரிக்காவின் நிதியளிப்பில் ஐரோப்பா புனரமைக்கப்படுதலும் பனிப்போரின் தொடக்கமும்
- கருத்தியல் அடிப்படையில் இரு வேறுபட்ட முகாம்கள் உருவாவதற்கு இட்டுச்சென்ற இராணுவ உடன்படிக்கைகள். அமெரிக்க ஐக்கிய நாடுகள் தலைமையேற்ற நேட்டோ, சோவியத் ரஷ்யாவின் தலைமையிலான வார்சா ஒப்பந்த நாடுகள்
- மூன்றாம் உலக நாடுகளும் அணிசேரா இயக்கமும்
- ஐ.நா சபையும் உலகப் பிரச்சனைகளைத் தீர்த்து வைப்பதில் அதன் பங்கும்
- ஐரோப்பிய யூனியன் உருவாக்கப்படுதலும் ஒருங்கிணைக்கப்படுதலும்
- சோவித் யூனியனின் வீழ்ச்சியும் பனிப்போரின் முடிவும்

VTEZP

அறிமுகம்

இரண்டாம் உலகப் போரானது (1939 – 1945) நேச நாடுகளுக்கும் அச்சு நாடுகளுக்குமிடையே நடைபெற்றது. இங்கிலாந்து, பிரான்ஸ் மற்றும் ரஷ்யா ஆகிய நாடுகள் நேசநாடுகள் எனும் முகாமை அமைத்தன. 1941இல் பேர்ல் துறைமுகம் (Pearl Harbour) தாக்கப்பட்ட பின்னர் அமெரிக்காவும் இவ்வணியில் இணைந்தது. ஜெர்மனி, இத்தாலி மற்றும் ஜப்பான் ஆகியவை அச்சு நாடுகளாகும். நேசநாடுகளிடையே கருத்தியல் அடிப்படையிலான வேறுபாடுகள் நிலவியபோதும் ஜெர்மனியின் பாசிசமும் அந்நிய நாடுகளுடன் போர் செய்வதில் அது கொண்டிருந்த தணியாத தாகமும் அவைகளை இணைந்து பணியாற்றக் கட்டாயப்படுத்தின. சோவியத் யூனியன் கம்யூனிச நாடாக இருந்தமையால் அதனோடு இணைந்து செயல்படுவதில் அமெரிக்காவிற்கும் இங்கிலாந்திற்கும் சிரமங்கள் இருந்தன.

இரண்டாவது உலகப்போரின் இறுதியில் அமெரிக்காவும் சோவியத் ரஷ்யாவும் வல்லரசுகளாக உருவாயின. கருத்தியல் ரீதியிலான செல்வாக்கைப் பெறுவதற்கு இரு நாடுகளுமே முயற்சித்ததால் இவ்விரு நாடுகளும் பரஸ்பர சந்தேகமும் நம்பிக்கையின்மையும் கொண்டிருந்தன. இரு நாடுகளும் தங்கள் கருத்தியலைக் கட்டாயப்படுத்தியோ அல்லது ஆர்வமூட்டி தன்வசப்படுத்துதல் மூலமாகவோ பரப்ப முயன்றன. புதிதாக உருவாகியிருந்த இருதுருவ உலகில் பெரும்பாலான நாடுகள் அமெரிக்காவுடனோ அல்லது சோவியத் ரஷ்யாவுடனோ அணி சேர்ந்தாக வேண்டியநிலை ஏற்பட்டது. இந்தியா உட்பட பல ஆசிய–ஆப்பிரிக்க நாடுகள் எந்த அணியிலும் சேராதிருக்கவே விரும்பின. இவ்வாறான நாடுகள் ஒன்றிணைந்து அணிசேரா இயக்கத்தை உருவாக்கின. (Non Alignment Movement – NAM)

முதல் உலகப் போரைக் காட்டிலும் இரண்டாம் உலகப்போர் மிக அதிகமான அழிவையும் புலப்பெயர்ச்சியையும் ஏற்படுத்தியது. ஆகவே உலகத் தலைவர்கள் எதிர்காலத்தில் இதுபோன்ற ஒரு போர் ஏற்படா வண்ணம் தடுப்பதற்கு உலக அளவில் ஒரு அமைப்பு இருக்க வேண்டியதின் அவசியத்தை உணர்ந்தனர். இதன் விளைவாக 1945இல் ஐக்கிய நாடுகள் சபை உருவாக்கப்பட்டது. உறுப்பு நாடுகளிடையே ஏற்படும் பிரச்சனைகளைத் தீர்த்துவைப்பதில் ஐக்கிய நாடுகள் சபை தனது

12th_History_TM_Unit_15_V2.indd 280 02-01-2023 16:41:06

பங்கினையாற்றி வருகிறது. ஆனால் பனிப்போர் சூழ்நிலை ஐக்கிய நாடுகள் சபையை சுதந்திரமாகவும் வெற்றிகரமாகவும் செயல்படவிடாமல் தடுத்தது. இரண்டாம் உலகப்போர் ஐரோப்பியப் பொருளாதாரத்தை பாழ்படுத்தியதோடு மேற்கு ஐரோப்பாவின் பல நகரங்களை பேரழிவுக்கு உள்ளாக்கியது. தொடக்கத்தில், சிதைந்துபோன பொருளாதாரத்தை புனரமைப்பதற்காக ஐரோப்பிய நாடுகள் ஒன்றிணைய வேண்டியது அவசியமானது. இதுவே நாளடைவில் ஒரு வலுவான கூட்டு ஏற்படுவதற்கு வழிகோலியது.

இப்பாடத்தில் இரண்டு அதிகாரக் குழுக்கள் உருவானது தங்களது செல்வாக்கு மண்டலத்தை விரிவடையச் செய்ய அவைகள் மேற்கொண்ட தந்திரங்கள், அணிசேரா இயக்கத்தின் தோற்றம், பிரச்சனைகளை தீர்ப்பதில் ஐ.நா. சபையின் பங்கு, போருக்குப் பின்னர் ஐரோப்பாவில் மேற்கொள்ளப்பட்ட புனரமைப்பு நடவடிக்கைகளும் ஐரோப்பிய ஒன்றியம் உருவாக்கப்படுதல் மற்றும் இறுதியாக சோவியத் யூனியனின் வீழ்ச்சியைத் தொடர்ந்து பனிப்போர் முடிவுக்கு வந்தது ஆகியவை விவாதிக்கப்பட்டுள்ளன.

15.1 ஐரோப்பாவில் போருக்குப் பிந்தைய நிலைமைகள்

முதல் உலகப் போரைக் காட்டிலும் இரண்டாவது உலகப்போர் பேரழிவு மிக்கதாக இருந்தது. 60 மில்லியன் பொதுமக்கள் கொல்லப்பட்டனர். திட்டமிடப்பட்ட இன அழிப்பில் நாஜிகள் 6 மில்லியன் ஐரோப்பிய யூதர்களைக் கொன்றனர். மில்லியன் கணக்கான மக்கள் வீடற்றவர்களாகவும் அகதிகளாகவும் ஆக்கப்பட்டனர். இப்போர் விவசாய நிலங்களையும் தொழிற்சாலைகளையும் அழித்தது. வார்சா, கீவ், டோக்கியோ மற்றும் பெர்லின் போன்ற மாபெரும் நகரங்கள் முற்றிலும் பாழாயின. போருக்கு முன்னர் பன்னாட்டு அரசியல் அரங்கில் செல்வாக்குடன் உலா வந்த இங்கிலாந்தும் பிரான்சும் நிலைகுலைந்தன. போருக்குப் பிந்தைய ஐரோப்பாவின் நிலை உணவு மற்றும் மூலப்பொருட்களின் பற்றாக்குறையுடன் கவலைக்கிடமானதாக இருந்தது. வேலையின்மை விகிதங்கள் அதிகரித்தன.

போருக்குப் பிந்தைய, உற்பத்திப்பொருட்கள் தொடர்பாக நிலவிய சூழல் முதலாளித்துவ நாடுகளின் தடையற்ற வணிகக் கொள்கைக்குச் சவாலாக அமைந்தது. பல ஐரோப்பிய நாடுகள் தங்கள் மக்களின் நலன்களை மேம்படுத்துவது எனும் உறுதிப்பாட்டுடன் சமூக நல அரசுகளாக மாறின. ஆளுகின்ற அரசுகள் மேற்கொண்ட நடவடிக்கைகளில் மனநிறைவு பெறாத துயருற்ற மக்கள் சோசலிச இயக்கங்களை ஆதரிக்கத் தலைப்பட்டனர். குறிப்பாக கம்யூனிச இயக்கம் செயல்துடிப்புடன் விளங்கிய கிரீஸ், துருக்கி ஆகிய நாடுகளில் நிலைமை அவ்வாறுதான் இருந்தது. இடதுசாரி சார்புகொண்ட இயக்கங்களையும், கட்சிகளையும் சோவியத் யூனியன் ஆதரித்தது. 1948 காலப்பகுதியில் கிழக்கு ஐரோப்பாவில் குறிப்பாக ருமேனியா, பல்கேரியா மற்றும் ஹங்கேரி ஆகிய நாடுகளில் சோவியத் ரஷ்யா இடதுசாரி அரசுகளை நிறுவியது. யுகோஸ்லோவியாவில் நடத்தப்பட்ட தேர்தலில் ஏற்கனவே டிட்டோவின் தலைமையில் ஒரு கம்யூனிச அரசு உருவாகியிருந்தது. கிழக்கு ஐரோப்பாவில் கம்யூனிசம் வலிமையடைந்ததால் மேற்கு ஐரோப்பாவிலும் சோவியத் யூனியனின் செல்வாக்கில் இருந்த கட்சிகள் ஆட்சியைக் கைப்பற்றிவிடுமோ எனும் அச்சத்தினால் அமெரிக்காவும் இங்கிலாந்தும் கவலை கொண்டன.

இரு–துருவ உலகம் உருவாதல்

ஜெர்மனியின் தோல்வியைத் தொடர்ந்து, 1945 ஜூலையில், ஜெர்மனியின் எதிர்காலம் குறித்து விவாதிப்பதற்காக முதலில் ஸ்டாலின், ட்ரூமன் மற்றும் சர்ச்சில் ஆகியோரும் பின்னர் சர்ச்சிலுக்குப் பதிலாக கிளமெண்ட் அட்லியும் பெர்லினுக்கு அருகேயுள்ள போட்ஸ்டாம் எனுமிடத்தில் சந்தித்தனர். இச்சந்திப்பின் போது ட்ரூமன் சர்ச்சிலிடம் அணுகுண்டு கண்டுபிடிக்கப்பட்டதைப் பற்றி கூறினார். இச்சந்திப்பு நடந்த சில நாட்கள் கழித்து ஜப்பானிய நகரங்களான ஹிரோஷிமா, நாகசாகி ஆகியவற்றின் மீது அணுகுண்டுகளை அமெரிக்கா வீசியது. ஜப்பானியப் பேரரசர் ஹிரோஹிட்டோ தனது நிபந்தனையற்ற சரணடைதலை அறிவித்தார். சோவியத் ரஷ்யாவிடம் தகவல் தெரிவிக்காமலே இக்குண்டு வீச்சு மேற்கொள்ளப்பட்டதால் இந்நடவடிக்கை இருநாடுகளுக்கிடையிலான அரசியல் விவேக நடவடிக்கைகளில் வெற்றிடத்தை ஏற்படுத்தியது. 1949இல் சோவியத் ரஷ்யா அணுகுண்டை தயாரித்துவிட்டது.

இதுசமயம், உலக வங்கி மற்றும் பன்னாட்டு நிதியம் (International Monetary Fund–IMF) ஆகியவற்றை உருவாக்குவது தொடர்பாக அமெரிக்காவிற்கும் சோவியத் ரஷ்யாவிற்கும் இடையே கருத்து வேறுபாடுகள் எழுந்தன. 1946 பிப்ரவரி 22இல் மாஸ்கோவில் இருந்தவரும் அமெரிக்க

ஜார்ஜ் கென்னன்

12th_History_TM_Unit_15_V2.indd 281 02-01-2023 16:41:06

விவகாரங்களுக்குப் பொறுப்பு வகித்தவருமான ஜார்ஜ் கென்னன் அமெரிக்க அரசாங்கத்திற்கு 8,000 வார்த்தைகள் கொண்ட தந்தியொன்றை அனுப்பினார். 'நீண்ட தந்தி' என்றறியப்பட்ட இத்தந்தியில் அவர் முதலாளித்துவ உலகத்துடன் நீண்டகால, அமைதியான சமாதான சகவாழ்வை மேற்கொள்ளும் வாய்ப்பை சோவியத் யூனியன் பார்க்கவில்லை என உறுதியாகக் கூறி, உலக நாடுகளில் கம்யூனிசம் "விரிவாக்கத்தை கட்டுப்படுத்துவது" சிறந்த உத்தியாக இருக்கமுடியும் எனக் குறிப்பிட்டிருந்தார்.

1946 மார்ச் மாதத்தில் அமெரிக்காவின் மிசௌரி மாநிலத்தில் ஃபுல்டன் எனுமிடத்தில் உரை நிகழ்த்துவதற்காக அழைக்கப்பட்டிருந்த சர்ச்சில், சோவியத் யூனியன் கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் கம்யூனிச அரசுகளை நிறுவிய செயல்பாடுகளைக் கண்டனம் செய்தார். அவர் "பால்டிக்கிலுள்ள ஸ்டெடின் முதல் ஏட்ரியாட்டிக்கிலுள்ள டிரஸ்டி வரை இரும்புத் திரையொன்று போடப்பட்டுவிட்டது" என அறிவித்தார். கம்யூனிசத்திற்கு எதிராக உறுதியாக நிற்கின்ற மேற்கு ஐரோப்பிய நாடுகளைக் கொண்ட கூட்டணியொன்றிற்கு அழைப்பு விடுத்தார். சர்ச்சில் ஆற்றிய உரை பனிப்போருக்கான சைகையாகக் கருதப்படுகிறது. சர்ச்சிலை 'போர்விரும்பி' என ஸ்டாலின் விமர்சனம் செய்தார். சர்ச்சிலின் இரும்புத்திரை பேச்சிற்குப் பின்னர் கிழக்கு ஐரோப்பிய நாடுகள் மீதான சோவியத் யூனியனின் பிடி மேலும் இறுகியது. 1947இன் இறுதிக்குள் செக்கோஸ்லோவாக்கியா தவிர ஏனைய பகுதிகள் அனைத்தும் கம்யூனிச ஆட்சியின் கீழ் கொண்டுவரப்பட்டன.

ஃபுல்டனில் சர்ச்சில்

பெர்லின் முற்றுகையும் கிழக்கு ஜெர்மனி மற்றும் மேற்கு ஜெர்மனி உருவாதலும்

யால்டா மற்றும் போட்ஸ்டாம் மாநாடுகளில் மேற்கொள்ளப்பட்ட முடிவின்படி பெர்லினைத் தலைநகராகக் கொண்ட ஜெர்மனி நான்கு மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டன. அவை அமெரிக்க மண்டலம், இங்கிலாந்து மண்டலம், பிரெஞ்சு மண்டலம் மற்றும் சோவியத் ரஷ்யா மண்டலம் என்பனவாகும். 1948இன் தொடக்கத்தில் மூன்று மேற்கு மண்டலங்களும் ஒருங்கிணைக்கப்பட்டது. மார்ஷல் திட்டத்தின் காரணமாக அப்பகுதி வேகமாக முன்னேறி மேம்பாடடைந்தது. இதற்கு பதில்நடவடிக்கையாக மேற்கு பெர்லினுக்கும் மேற்கு ஜெர்மானியப் பகுதிகளுக்கும் இடையிலான தொடர்புகள் சோவியத் ரஷ்யாவை நெருக்கடிக்கு உள்ளாக்கியது. 1948 ஜூனில் மேற்கு பெர்லினுக்கும் மேற்கு ஜெர்மனிக்கும் இடையிலான அனைத்து சாலை, ரயில் போக்குவரத்துகளை சோவியத் யூனியன் துண்டித்தது. பெர்லினுடன் வான்வழியாகத் தொடர்புகொள்வது என மேலைநாடுகள் முடிவுசெய்தன. பேரளவிலான பொருட்செலவில் 11 மாதங்களாக மேற்கு பெர்லினுக்குத் தேவையான பொருட்கள் அனைத்தும் விமானங்கள் மூலமாக அனுப்பி வைக்கப்பட்டன. 1949 மே மாதத்தில் சோவியத் ரஷ்யா நிலவழித் தொடர்புகள் மீதான தடையை நீக்கியது. அதன்பின் பிரச்சனையும் தீர்ந்தது. மேற்கத்திய சக்திகள் அதுசமயம் ஒருபடி மேலே சென்று 1949 ஆகஸ்ட் மாதத்தில் ஜெர்மனி கூட்டாட்சிக் குடியரசை (FRG – The Federal Republic of Germany) உருவாக்கியது. (இது மேற்கு ஜெர்மனி என பரவலாக அழைக்கப்பட்டது). 1949 அக்டோபரில் சோவியத் ரஷ்யா ஜெர்மன் ஜனநாயகக் குடியரசை (GDR – The German Democratic Republic) உருவாக்கின. (இது கிழக்கு ஜெர்மனி என பரவலாக அறியப்பட்டது). ஜெர்மனி பிரிக்கப்பட்டதே உண்மையான பனிப்போரின் தொடக்கத்திற்கான குறியீடு எனில், 1990இல் நடைபெற்ற ஜெர்மனியின் மறுஇணைப்பு பனிப்போர் முடிவுற்றதன் குறியீடாகும்.

பெர்லின் முற்றுகையும் விமான உதவியும்

15.2 கெடுபிடிப்போர் (பனிப்போர்)

1947 ஏப்ரல் 16இல் அமெரிக்க குடியரசுத் தலைவரின் ஆலோசகரான பெர்னார்ட் பரூச் என்பவர் கொலம்பியாவில் அரசு மாளிகையில் உரை நிகழ்த்துகையில், இரண்டாவது

12th_History_TM_Unit_15_V2.indd 282 02-01-2023 16:41:07

உலகப்போருக்குப் பின்னர், அமெரிக்காவிற்கும் சோவியத் யூனியனுக்கும் இடையே நிலவிய உறவை விவரிப்பதற்குப் "பனிப்போர்" (Cold war) எனும் சொல்லைப் பயன்படுத்தினார் (இச்சொல்லை உருவாக்கியவர் புகழ்பெற்ற ஆங்கிலேய எழுத்தாளரும் "விலங்குப் பண்ணை" (Animal Farm) எனும் நூலின் ஆசிரியருமான ஜார்ஜ் ஆர்வெல் என்பவராவார்). ஆயுதங்கள் இல்லாத போரான இப்பனிப்போர் கருத்தியல் ரீதியிலான போராகும்.

1945 முதல் 1991 வரையிலான காலப்பகுதியில் வல்லரசுகளின் வெளியுறவுக் கொள்கைகளைப் பனிப்போரே வரையறை செய்தது. இக்காலகட்டத்தில் இவ்விரு சக்திகளுமே நிரந்தரமான போருக்கு ஆயத்தமாக இருந்தன. அமெரிக்கா தனது பொருட்களுக்கான திறந்தவெளி சந்தையை மேம்படுத்தவும் பொதுவுடைமைத் தத்துவத்தின் பரவலைக் கட்டுப்படுத்தவும் விரும்பியது. மற்றொருபுறத்தில் சோவியத் ரஷ்யா பொதுவுடைமைத் தத்துவத்தைப் பரப்பவும், தனது கோட்பாடுகளுடன் இணைந்து செல்லும் எல்லைப்புற நாடுகளுடன் நட்புணர்வைப் பேணவும் விருப்பம் கொண்டது. தங்களது குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்கு இவ்விரு சக்திகளும் ஆறு முக்கிய உத்திகளைக் கையாண்டன. அவை பொருளாதார உதவி, இராணுவ ஒப்பந்தங்கள், பரப்புரை செய்தல், உளவறிதல், நேரடியாக மோதாமல், மோதலின் விளிம்புவரை செல்லுதல் மற்றும் மறைமுகப் போர் ஆகியனவாகும்.

பனிப்போர் செயல்திட்டங்கள்

அ) பொருளாதார உதவி

ட்ரூமன் திட்டம்

1945இல் கிரீஸில் ஒரு உள்நாட்டுப்போர் வெடித்தது. பல ஆண்டுகளாக கிரீசுக்கு ஆதரவு தந்த இங்கிலாந்து தனது சொந்தப் பொருளாதாரப் பிரச்சனைகளின் காரணமாக ஆதரவை விலக்கிக் கொண்டது. சிலகாலம் கழித்துத் துருக்கியிலும் பிரச்சனை ஏற்பட்டதால் கம்யூனிஸ்டுகள் தங்கள் கட்டுப்பாட்டை அங்கு ஏற்படுத்த முயன்றனர். கிரீசிலும் துருக்கியிலும் இனிமேற்கொண்டு பொதுவுடைமைவாதிகளின் கிளர்ச்சிகளைத் தன்னால் எதிர்கொள்ள இயலாதெனவும், பிரச்சனைகளை மார்ச் 31இல் இருந்தவாறே விட்டுவிட்டுப் போவதாகவும் 1947இல் இங்கிலாந்து அமெரிக்காவிடம் கூறியது. இச்சூழலில் அமெரிக்கா செயல்பட முடிவுசெய்தது. குடியரசுத் தலைவர் ஹாரி. எஸ். ட்ரூமன் கிரீசுக்கும் துருக்கிக்கும் ஆதரவாகச் செயல்பட முடிவுசெய்தார். எந்த நாடுகளில் கம்யூனிச கொள்கையினால் மேலாதிக்கம் செலுத்தப்படுகிறதோ அந்நாடுகளுக்குப் பொருளாதார மற்றும் ராணுவ உதவிகளை வழங்கப்போவதாக உறுதியளித்தார். இது கம்யூனிசத்தைக் கட்டுப்படுத்தும் அமெரிக்காவின் கொள்கையை வரையறை செய்தது. ட்ரூமன் கோட்பாடு எனப் பரவலாக அறியப்பட்ட இக்கோட்பாடு பனிப்போர் முடியும் வரை கோலோச்சியது.

ட்ரூமன் மற்றும் மார்ஷல்

மார்ஷல் திட்டம்

கிரீஸ் மற்றும் துருக்கியில் பெற்ற அனுபவத்தில், கம்யூனிசத்தைக் கட்டுப்படுத்துவதில் அமெரிக்க டாலரின் மதிப்பு என்ன என்பதை அமெரிக்கா புரிந்து கொண்டது. எனவே கம்யூனிசத்தின் பரவலைக் கட்டுப்படுத்துவதில் அதே திசை வழியில் பயணிப்பது என அமெரிக்கா முடிவு செய்தது. 1947 ஜூன் மாதத்தில் குடியரசுத்தலைவர் ட்ரூமனின் கீழிருந்த அரசுச் செயலரான ஜார்ஜ். C. மார்ஷல் ஒரு பொருளாதாரத் திட்டத்தை வகுத்தார். இரண்டாம் உலகப்போரால் பாதிக்கப்பட்ட ஐரோப்பிய நாடுகளுக்கான இத்திட்டத்தை அவர் ஐரோப்பிய மீட்புத் திட்டம் என அழைத்தார். "எங்களின் கொள்கை எந்த நாட்டிற்கும் எதிரானதல்ல அல்லது எந்தக் கோட்பாட்டிற்கும் எதிரானதல்ல. ஆனால் பசி, வறுமை, விரக்தி மற்றும் குழப்பங்கள் ஆகியவற்றிற்கு எதிரானது" என மார்ஷல் அறிவித்தார். இதனடிப்படையில் ஐரோப்பிய நாடுகளுக்குப் பொருளாதார உதவிகள் வழங்கப்பட்டன. மார்ஷல் திட்டத்தின் பெயரால் அடுத்து வந்த நான்கு ஆண்டுகளில் 13,000 மில்லியன் டாலர்கள் மேற்கு ஐரோப்பிய நாடுகளுக்கு வழங்கப்பட்டது. 1948இல் பதினாறு ஐரோப்பிய நாடுகளும் ஜெர்மனியின் மூன்று மேற்கு மண்டலங்களும் சேர்ந்து ஐரோப்பியப் பொருளாதாரக் கூட்டுறவு (Organisation for European Economic Cooperation – OEEC) எனும் அமைப்பை உருவாக்கின. மார்ஷல் திட்டம் நான்காண்டுகளுக்கு நீடித்தது (1948 – 1952). சோவியத் ரஷ்யாவின் வெளியுறவு அமைச்சரான மோலோடோவ் மார்ஷல் திட்டத்திற்கு "டாலர் ஏகாதிபத்தியம்" என கேலிப்பெயர் சூட்டினார்.

www.tntextbooks.in

சோவியத் யூனியனின் பார்வையில் மார்ஷல் திட்டமானது அமெரிக்காவின் செல்வாக்கைப் பரப்பும் சூழ்ச்சியாகவே கருதப்படுகிறது.

மோலோடோவ் திட்டம்

மார்ஷல் திட்டத்திற்குப் பதிலளிக்கும் வகையில் சோவியத் ரஷ்யா கோமின்பார்ம் (The Cominform) எனும் அமைப்பை 1947 செப்டம்பரில் உருவாக்கியது. இவ்வமைப்பில் ஐரோப்பிய நாடுகளின் அனைத்து கம்யூனிஸ்ட் கட்சிகளின் பிரதிநிதிகளும் அங்கம் வகித்தனர். கம்யூனிஸ்ட் அல்லாத நாடுகளுடனான வணிக உறவுகளைத் தடுக்கமுயன்ற இவ்வமைப்பு உறுப்பு நாடுகளிடையே கருத்தியல் ரீதியிலான, பொருட்கள் சார்ந்த தொடர்புகளை உருவாக்க முயன்றது. 1949இல் சோவியத் ரஷ்யா மோலோடோவ் திட்டம் எனும் பெயரில் தனது பொருளாதாரத் திட்டத்தை முன்வைத்து, சோவியத் யூனியன், அதனை சார்ந்த நாடுகள் ஆகியவற்றின் பொருளாதாரக் கொள்கைகளை ஒருங்கிணைப்பதற்காகக் கோமிகன் (Comecon) அதாவது 'பரஸ்பர பொருளாதார உதவிக் குழு' எனும் அமைப்பு உருவாக்கப்பட்டது.



ஜோசப் ஸ்டாலின் மற்றும் மோலோடோவ்

ஆ) இராணுவ ஒப்பந்தங்கள்

இராணுவ ஒப்பந்தங்களின் மூலம் போர் முக்கியத்துவம் வாய்ந்த உறவுகளை உருவாக்கிக் கொள்ளுதல், தங்கள் முகாமை விரிவடையச் செய்து கொள்வதற்காக இரு சக்திகளும் பின்பற்றிய மற்றுமொரு குறிப்பிடத்தக்க தந்திரமாகும். 1948இல் கிழக்கு ஐரோப்பாவில் செக்கோஸ்லோவாக்கியா மட்டுமே ஜனநாயக நாடாக இருந்தது. அது முதலாளித்துவ முகாமைச்சேர்ந்த நாடுகளுக்கும் சோவியத் யூனியனுக்குமிடையே இடைப்படு நாடாக இருந்தது. அங்கு 1948 மே மாதத்தில் நடைபெற்ற தேர்தல்களில் கம்யூனிஸ்ட் கட்சி வெற்றி பெற்றது. இவ்வெற்றி மேற்கு ஐரோப்பிய நாடுகளை மேலும் அச்சமடையச் செய்தது.

நேட்டோ நாடுகள் – வட அட்லாண்டிக் ஒப்பந்தம் (NATO)

அமெரிக்காவுடன் நட்புறவு கொண்டிருந்தாலும் மேற்கு ஐரோப்பிய நாடுகள் தாங்கள் பாதுகாப்பாக இல்லை என்றே உணர்ந்தன. செக்கோஸ்லோவாக்கியாவில் கம்யூனிஸ்டுகள் பெற்ற வெற்றி அவர்களின் அச்சத்தை அதிகரித்தது.

> 1952 நவம்பர் 1இல் பசுபிக் பகுதியின் மார்ஷல் தீவுகளில் எலுஜெலாப் அட்டோல் எனுமிடத்தில் அமெரிக்கா, 'மைக்' எனப் பெயரிடப்பட்ட உலகின் முதல் ஹைட்ரஜன் அணுகுண்டை வெடித்துப் பரிசோதனை செய்தது. மூன்றாண்டுகளுக்குப் பின்னர், 1955 நவம்பர் 22இல் சோவியத் யூனியன் தனது முதல் ஹைட்ரஜன் குண்டை வெடித்துப் பரிசோதனை செய்தது.

இதனைத் தொடர்ந்து மேற்கு ஐரோப்பிய நாடுகள் ஒரு கூட்டுப் பாதுகாப்புத் தீர்வை ஏற்படுத்திக் கொள்வதில் விருப்பம் கொண்டன. 1948 மார்ச்சில் கிரேட் பிரிட்டன், பிரான்ஸ், பெல்ஜியம், நெதர்லாந்து மற்றும் லக்சம்பர்க் ஆகிய நாடுகளின் பிரதிநிதிகள் பிரஸ்ஸல்ஸ் நகரில் சந்தித்து உடன்படிக்கை ஒன்றில் கையெழுத்திட்டனர். அவ்வொப்பந்தம் இராணுவ, அரசியல், பொருளாதார மற்றும் பண்பாட்டுத் துறைகளில் கூட்டுச் செயல்பாட்டுக்கு வழிவகுத்தது. சிலகாலங்களுக்குப் பின்னர் அமெரிக்கா, இத்தாலி, கனடா, ஐஸ்லாந்து, டென்மார்க், நார்வே, அயர்லாந்து மற்றும் போர்த்துகல் ஆகிய நாடுகளும் மேற்குறிப்பிட்ட ஐந்து பிரஸ்ஸல்ஸ் உடன்படிக்கை நாடுகளுடன் இணைந்து நேட்டோ அமைப்பை உருவாக்கின. இவ்வமைப்பில் அங்கம் வகிக்கும் உறுப்புநாடுகள் அனைத்தும் தங்களில் யாராவது ஒருவர் தாக்கப்பட்டால் அத்தாக்குதல் அனைவர் மேலும் தொடுக்கப்பட்ட தாக்குதலாகக் கருதுவதற்கு ஒத்துக்கொண்டன. மேலும் அந்நாடுகள் தங்கள் படைகளை நேட்டோவின் கூட்டுத் தலைமையின்

நேட்டோ சந்திப்பு – 1950

12th_History_TM_Unit_15_V2.indd 284 02-01-2023 16:41:07

கட்டுப்பாட்டின் கீழ் வைத்தன. ஆனால் இக்கூட்டுப் பாதுகாப்பு ஏற்பாடு ஐரோப்பாவிலோ அல்லது வட அமெரிக்காவிலோ நடைபெறும் தாக்குதலுக்கு மட்டுமே பொருந்தும். காலனி நாடுகளில் நடைபெறும் மோதல்கள் இதனுள் அடங்காது. 1952இல் கிரீஸ் மற்றும் துருக்கி நேட்டோவில் சேர்த்துக் கொள்ளப்பட்டன. 1955இல் மேற்கு ஜெர்மனியும் இவ்வமைப்பில் இணைந்தது.

வார்சா உடன்படிக்கை அமைப்பு (Warsaw)

மேற்கு ஜெர்மனி நேட்டோ அமைப்பில் உறுப்பினரானதை ஒரு நேரடி பயமுறுத்தலாகப் பார்த்த சோவியத் ரஷ்யா எதிர் நடவடிக்கைகளை மேற்கொண்டது. 1955 மே மாதத்தில் சோவியத் யூனியனும் அதன் ஏழு ஐரோப்பிய நட்பு நாடுகளும் பரஸ்பர நட்பு, "ஒத்துழைப்பு மற்றும் பரஸ்பர உதவி ஒப்பந்தம்" எனும் உடன்படிக்கையில் கையெழுத்திட்டன. போலந்தின் தலைநகரான வார்சாவில் இது கையெழுத்திடப்பட்டதால் இது வார்சா உடன்படிக்கை எனப் பெயரிடப்பட்டது. சோவியத் யூனியன் அல்பேனியா, போலந்து, ருமேனியா, ஹங்கேரி, கிழக்கு ஜெர்மனி, செக்கோஸ்லோவாக்கியா மற்றும் பல்கேரியா ஆகிய நாடுகளே வார்சா உடன்படிக்கை உறுப்பு நாடுகளாகும். உறுப்பு நாடுகளில் ஏதேனும் ஒரு நாடு வெளிநாட்டுப் படைகளால் தாக்கப்படுமேயானால் ஏனைய உறுப்பு நாடுகள் தாக்கப்பட்ட நாட்டைப் பாதுகாக்க உதவிக்கு வரவேண்டுமென இவ்வுடன்படிக்கை கூறியது. சோவியத் யூனியனைச் சேர்ந்த மார்ஷல் இவான் எஸ். கோனெவ் என்பாரின் தலைமையில் ஒருங்கிணைக்கப்பட்ட ராணுவம் உருவாக்கப்பட்டது. 1991ஆம் ஆண்டு சோவியத் யூனியனின் சரிவு வரை வார்சா ஒப்பந்தம் செயல்பட்டது.



மத்திய மற்றும் கிழக்கு ஐரோப்பிய நாடுகள் மாநாடு

சீட்டோ (தென் கிழக்கு ஆசிய நாடுகளின் உடன்படிக்கை அமைப்பு) (SEATO)

1949இல் சீனா, மாவோவின் தலைமையில் கம்யூனிஸ்ட் நாடானது. கம்யூனிசம் சீனாவிலிருந்து கொரியாவிற்குப் பரவியது. ஆசியப் பகுதிகளில் கம்யூனிசம் பரவுவதை கண்டு அமெரிக்கா, ஆஸ்திரேலியா மற்றும் நியூசிலாந்து ஆகிய மூன்று நாடுகளும் 1951 செப்டம்பரில் முத்தரப்பு ராணுவ உடன்படிக்கை ஒன்றைச் செய்து கொண்டன. (இது ANZUS உடன்படிக்கை என அழைக்கப்படுகிறது) 1954இல் அமெரிக்கா தேசிய சீனா என்றறியப்பட்ட தைவானுடன் பரஸ்பர ராணுவ உடன்படிக்கையில் கையெழுத்திட்டது. இதன்படி தைவான் கம்யூனிஸ்ட் சீனாவால் தாக்கப்பட்டால் அமெரிக்கா தைவானுக்கு உதவி செய்யும்.

1954 செப்டம்பரில் அமெரிக்கா, பிரான்ஸ், கிரேட் பிரிட்டன், நியூசிலாந்து, ஆஸ்திரேலியா, பிலிப்பைன்ஸ், தாய்லாந்து மற்றும் பாகிஸ்தான் ஆகிய நாடுகள் தென்கிழக்கு ஆசிய நாடுகளின் உடன்படிக்கை எனும் அமைப்பை நிறுவின. சீட்டோ (SEATO) எனும் இவ்வமைப்பு ஆசிய பசிபிக் பிராந்தியத்தில் நேட்டோவின் பிரதியாக அமைந்ததாகும். ஆனால் பிலிப்பைன்ஸ், தாய்லாந்து ஆகிய இரண்டு தென்கிழக்கு ஆசிய நாடுகளைத் தவிர ஏனைய நாடுகள் இவ்வுடன்படிக்கையில் பங்கேற்க மறுத்துவிட்டன. இவ்வுடன்படிக்கையின் தலைமையிடம் பாங்காக்கில் செயல்பட்டது. சீட்டோ ஒரு ஆலோசனை மன்றமாக மட்டுமே செயல்பட்டது. உள்நாட்டில் ஏற்படும் ஆபத்துக்களைப் பொறுத்தமட்டிலும் சம்பந்தப்பட்ட நாடுகளே அவற்றை எதிர்கொள்ள வேண்டும். சீட்டோ அமைப்பானது நேட்டோவைப் போல செல்வாக்குப் பெற்ற அமைப்பாக இல்லை. வியட்நாம் போர் முடிந்த நிலையில் 1977இல் சீட்டோ கலைக்கப்பட்டது.

சீட்டோ (SEATO) மாநாடு, மணிலா

மத்திய கிழக்கு ஆசிய உடன்படிக்கை (CENTO)

1955ஆம் ஆண்டு பிப்ரவரியில் ஈராக் மற்றும் துருக்கி ஆகிய இரு நாடுகளும் பாக்தாத்தில் "பரஸ்பர ஒத்துழைப்பு உடன்படிக்கையொன்றில்" கையெழுத்திட்டன. அப்பகுதியிலுள்ள அனைத்து நாடுகளும் இவ்வமைப்பில் உறுப்பினர்

12th_History_TM_Unit_15_V2.indd 285 02-01-2023 16:41:07

ஆகலாம். ஏப்ரல் மாதத்தில் கிரேட் பிரிட்டன் இவ்வுடன்படிக்கையில் இணைந்தது. அதனைத் தொடர்ந்து பாகிஸ்தானும் ஈரானும் இணைந்தன. கம்யூனிசவாதிகளின் செல்வாக்கை தடுப்பதே பாக்தாத் உடன்படிக்கையின் நோக்கமாக இருந்தது. மத்திய கிழக்குப் பகுதியில் 1958இல் வரிசையாக நடைபெற்ற பல நிகழ்வுகள் அப்பிராந்தியத்தின் நிலைத்தன்மையை அச்சத்திற்கு உள்ளாக்கின. அவைகளில் முக்கியமானவை எகிப்து–சிரியா இணைப்பு, ஈராக்கில் ஏற்பட்ட புரட்சி, லெபனானில் ஏற்பட்ட உள்நாட்டு கிளர்ச்சி ஆகியனவாகும். இந்நிகழ்வுகளின் விளைவாக அமெரிக்கா லெபனானின் அரசியலில் தலையிட்டது. பாக்தாத் உடன்படிக்கையின் உறுப்பு நாடுகளில் ஈராக் தவிர ஏனைய நாடுகள் அமெரிக்காவின் தலையீட்டை அங்கீகரித்ததால் ஈராக் உடன்படிக்கையிலிருந்து விலகியது. இதன் விளைவாகப் பாக்தாத் உடன்படிக்கையில் உள்ள மற்ற நாடுகள் ஒருங்கிணைந்து சென்டோ (Central Treaty of Organisation – CENTO) அமைப்பை உருவாக்கின. துருக்கியின் அங்காரா நகரத்திற்கு இதன் தலைமையிடம் மாற்றப்பட்டது. இவ்வமைப்பை அமெரிக்கா தொடர்ந்து ஆதரித்தது. ஆனால் இவ்வமைப்பில் உறுப்பு நாடாக இணையவில்லை. 1979இல் ஏற்பட்ட ஈரானிய புரட்சி, அரசர் ஷாவின் ஆட்சியைத் தூக்கியெறிந்தது. அதனைத் தொடர்ந்து ஈரானும் அமைப்பிலிருந்து வெளியேறியது. அமைப்பு வலுவாகச் செயல்படவில்லை என்பதால் அதே ஆண்டில் பாகிஸ்தானும் விலகியது. 1979இல் இவ்வமைப்பு அதிகாரபூர்வமாகக் கலைக்கப்பட்டது.

இ) பரப்புரை செய்தல்

பனிப்போரின்போது அமெரிக்காவும் சோவியத் ரஷ்யாவும் தங்கள் கருத்தியலைப் பற்றி புகழ்பாடவும் எதிரிகளின் சிந்தனைகளையும் மதிப்பீடுகளையும் விமர்சனம் செய்யவும் பரப்புரை செய்வதை ஒரு சக்திவாய்ந்த கருவியாகப் பயன்படுத்தின. அமெரிக்கா குறித்துப் பெருமை கொள்ளத்தக்க அனைத்துக் கருத்துகளும் மதிப்பீடுகளும் திரைப்படங்கள், காணொளி, இசை, இலக்கியம் மற்றும் கலை ஆகியவை மூலமாகப் பரப்பப்பட்டன. முதலாளித்துவத்தை மேம்படுத்த தத்துவமாக முன்வைத்த அமெரிக்கா, ஒரு அரசியல் மற்றும் சமூகப் பொருளாதார கருத்தியல் என்ற அளவில் கம்யூனிசத்தைக் கண்டனம் செய்தது. மாறாக சோவியத் ரஷ்யாவில் சோஷலிசம் என்ற அமைப்பினுள் கூட்டு உழைப்பும் கூட்டுத் தலைமையுமே சிறந்தவை என ஊக்குவிக்கப்பட்டன. ஜனநாயகமும் சந்தைப் பொருளாதாரமும் முதலாளித்துவத்தின் சுரண்டல் தன்மையை மறைப்பதற்கான முகப்புத்தோற்றமே என விமர்சிக்கப்பட்டன.

ஈ) உளவறிதல்

CIA தலைமையகம்

இரு வல்லரசுகளுமே பரஸ்பரம் இராணுவ ரகசியங்கள் குறித்த செய்திகளையும், ஏனைய முக்கிய ஆவணங்கள் பற்றிய விபரங்களைச் சேகரிக்கவும் உளவறிதல் (அ) ஒற்றறிதல் முறையை முக்கியக் கருவியாகப் பயன்படுத்தின. பனிப்போரின் போது இருவல்லரசுகளும் வலுவான உளவுத்துறை – சேகரிக்கும் அமைப்புகளை பராமரித்தன. அமெரிக்காவின் உளவு நிறுவனமான மத்திய புலனாய்வு முகமை (Central Inteligence Agency – CIA) 1947இல் நிறுவப்பட்டது. சோவியத் யூனியனின் உளவு நிறுவனமான KGB (Komite Gposudars Tvennoy Besopasnbosti or committee for National Security) 1954இல் உருவாக்கப்பட்டது. இந்த உளவறிதல் போர் பெருமளவில் சந்தேகத்தையும் வெறுப்பையும் தூண்டியது. உளவாளிகளைக் கதாநாயகர்களாகவும் வில்லன்களாகவும் கொண்டு பரபரப்பாகப் பேசப்பட்ட பல திரைப்படங்களும், நாவல்களும் இக்காலத்தில் வெளியிடப்பட்டன. (எ. கா. ஜேம்ஸ் பாண்ட் திரைப்படங்கள்)

KGB அலுவலகம்

உ) போரின் விளிம்பு வரை செல்வது

போரின் விளிம்புவரை செல்வது (போர் செய்வதல்ல) எனும் இச்சொல்லாடல் பனிப்போர் காலத்தில் நிலையாக பயன்படுத்தப்பட்டது. அமெரிக்காவின் அரசுச் செயலாளர் ஜான் பாஸ்டர் டல்லஸ் 1956இல் 'லைப்' (Life) எனும் பத்திரிகைக்குக் கொடுத்த பேட்டியில்

12th_History_TM_Unit_15_V2.indd 286 02-01-2023 16:41:08

இச்சொல்லாடலைப் பயன்படுத்தினார். அரசியல் விவேகத்தில் "போரின் விளிம்பு வரை (போரின் தொடக்க முனை) செல்வதற்கு நீங்கள் அச்சம் கொண்டால் நீங்கள் தோற்றவர்களாவீர்கள்" எனக் கூறினார் இதற்கு எடுத்துக்காட்டாக ஒரு நிகழ்வைக் கூறலாம். 1962இல் கியூபாவில் சோவியத் யூனியன் அணு ஆயுதங்களைச் சுமந்து செல்லும் ஏவுகணைகளை நிறுவியது. அணு ஆயுதப் போர் ஏற்பட்டுவிடுமோ எனும் நிலை ஏற்பட்டது. இதற்குப் பதிலடியாக அமெரிக்க கடற்படைகள் கியூபாவை முற்றுகையிட்டன. இறுதியில் பல கட்டப் பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்ட பின்னர் கியூபாவிலிருந்த ஏவுகணைகள் அகற்றப்பட்டன.

போரின் விளிம்பு வரை செல்வதென்பது, ஒரு நிகழ்வு, தனக்குச் சாதகமாக முடியவேண்டும் என்பதற்காக ஆபத்தான நிகழ்வுகளை உண்மையான போர் நடைபெறுவதற்கான விளிம்புவரை நகர்த்திச் செல்வதாகும். பன்னாட்டு அரசியலில், வெளியுறவுக் கொள்கைகளில், இராணுவ உத்திகளில் இது இடம் பெறுகின்றது. இது அணு ஆயுதப் போர் குறித்த அச்சத்தையும் உள்ளடக்கியதாகும்.



கியூபா ஏவுகணை சிக்கல்

ஊ) மறைமுகப் போர்கள் (சார்புப் போர்கள்)

அமெரிக்காவும் சோவியத் ரஷ்யாவும் பனிப்போரின் ஒரு பகுதியாக மறைமுகப் போர்களில் ஈடுபட்டன. இதற்கு மிகச் சிறந்த எடுத்துக்காட்டுகள், பனிப்போரின்போது நடைபெற்ற கொரியப் போரும் (1950–1953) வியட்நாமியப் போர்களுமாகும் (1955–1975). இவ்விருபோர்களிலும் வட கொரியாவிலும், வடவியட்நாமிலும் இருந்த கம்யூனிச அரசுகளுக்குச் சோவியத் யூனியன் ஆதரவளித்தது. அமெரிக்கா தென் கொரியாவிற்கும் தென் வியட்நாமிற்கும் துணையாக நின்றது. இப்போர்களின் விளைவாகப் பெருமளவிலான உயிர்ச் சேதங்களுக்கும், பொருள் நஷ்டங்களும் ஏற்பட்டதோடு, இப்போர்கள் உள்நாட்டுப் போர்களாகவும் மாறின. இப்போர்களின் போது பன்னாட்டு அளவிலான பொதுக்கருத்துகளும் திரட்டப்பட்டன. வியட்நாம் நாட்டிற்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட எதிர்ப்புகள் அமெரிக்க, மேற்கு ஐரோப்பிய நாடுகளின் அரசியல், சமூகம் மற்றும் பண்பாடு ஆகியவற்றின் மீது ஆழமான தாக்கத்தை ஏற்படுத்தின.

15.3 மூன்றாம் உலக நாடுகளும் அணிசேரா இயக்கமும்

இரண்டாம் உலகப்போருக்குப் பின்னரான சூழலில் ஆசியா, ஆப்பிரிக்கா மற்றும் லத்தீன் அமெரிக்கா ஆகியனவற்றைச் சேர்ந்த பல காலனிய நாடுகள் ஏகாதிபத்திய ஆட்சியிலிருந்து விடுதலை பெற்றன. அமெரிக்காவும் சோவியத் யூனியனும் பின்பற்றிய பனிப்போர் உத்தியைக் கண்டு இப்புதிய சுதந்திர நாடுகள் கவலை கொண்டன. இவ்வதிகார முகாம்களை ஏகாதிபத்தியத்தின் மற்றொரு வடிவமாகவே இந்நாடுகள் கருதின. இவ்விரு முகாம்களோடும் தங்களை அடையாளப்படுத்திக் கொள்ள அவை விரும்பவில்லை. இந்நாடுகள் தங்களை மூன்றாம் உலக நாடுகள் என்று அழைத்துக் கொண்டன. "மூன்றாம் உலக நாடுகள்" எனும் இச்சொல்லாடலை பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த வரலாற்றிஞரும், மக்கள் தொகை ஆய்வாளருமான ஆல்பிரட் சாவே என்பார் 1952இல் உருவாக்கினார். மூன்றாம் உலகநாடுகள் தங்கள் வெளியுறவுக் கொள்கைகளில் சுதந்திரமான மற்றும் நடுநிலையான கொள்கையைப் பின்பற்ற விரும்பின.

அணி சேராக் கொள்கை (NAM)

1955ஆம் ஆண்டு இந்தோனேசியாவின் பாண்டுங் என்ற இடத்தில் நடைபெற்ற முதல் ஆசிய–ஆப்பிரிக்க மாநாட்டில், பெரும்பாலும் புதிதாக விடுதலையடைந்த எகிப்து, இந்தியா, இந்தோனேசியா, ஈராக் மற்றும் சீன மக்கள் குடியரசு உட்பட 29 ஆசிய, ஆப்பிரிக்க நாடுகள் கூடின. காலனியாதிக்கம், இன ஒதுக்கல் மற்றும் பனிப்போரால் வளர்ந்துவரும் பதட்டம் ஆகியவற்றை இம்மாநாடு கண்டனம் செய்தது. "உலக அமைதி மற்றும் ஒத்துழைப்பு ஆகியவற்றின் மேம்பாட்டிற்கான பிரகடனம்" ஒன்றை இம்மாநாடு வெளியிட்டது. இப்பிரகடனம், நேருவின் பஞ்சசீலக் கொள்கையையும் பனிப்போருக்கு எதிரான நடுநிலை வகிக்கும் கூட்டு உறுதிமொழியையும் உள்ளடக்கியிருந்தது. பாண்டுங் மாநாட்டில் முடிவு செய்யப்பட்ட பத்து கொள்கைகளும்

www.tntextbooks.in

பின்னர் அணிசேரா இயக்கத்தின் வழிகாட்டு நெறிகளாயின. Non–Alignment (அணிசேரா) எனும் வார்த்தை முதன் முதலில் V.K கிருஷ்ணமேனன் என்பவரால் ஐக்கிய நாடுகள் சபையில் 1953இல் உரையாற்றுகையில் உருவாக்கப்பட்டது.

பாண்டுங் மாநாடு

பாண்டுங் மாநாட்டின் பத்துக் கொள்கைகளின் அடிப்படையில் இவ்வமைப்பின் முதல் மாநாடு 1961இல் யுகோஸ்லோவியாவின் தலைநகரான பெல்கிரேடில் நடைபெற்றது. அணிசேரா இயக்கத்தை நிறுவியதில் ஐந்து உறுப்பினர்கள் சிறப்புப் பங்கினை வகித்தனர். அவர்கள்: ஜவகர்லால் நேரு (இந்தியா), சுகர்னோ (இந்தோனேசியா), கமால் அப்துல் நாசர் (எகிப்து), குவாமி நுக்குருமா (கானா) மற்றும் ஜோசிப் பிரோஷ் டிட்டோ (யுகோஸ்லோவியா) ஆகியோராவர். அணிசேரா இயக்கத்தின் நோக்கம் "உலக அரசியலில் ஒரு சுதந்திரமான பாதையை உருவாக்குவதாகும்". ஏகாதிபத்தியம், காலனியாதிக்கம் ஆகியவற்றிற்கு முற்றுப்புள்ளி வைத்தல் பன்னாட்டு அமைதியையும் பாதுகாப்பையும் மேம்படுத்துதல், ஆயுதக் குறைப்பு,

முதல் அணிசேரா மாநாடு, பெல்கிரேட்

இனவாதத்தையும் இனப்பாகுபாட்டையும் முடிவுக்குக் கொண்டுவருதல் ஆகிய முக்கிய நோக்கங்களை உள்ளடக்கியதாகும். பெல்கிரேடு மாநாட்டின் முடிவில் வெளியிடப்பட்ட அறிக்கை வல்லரசுகளுடன் இராணுவ ஒப்பந்தங்கள் மேற்கொள்வதையும், தங்கள் நாட்டின் பகுதிகளில் இராணுவத் தளங்களை அமைப்பதற்கு வல்லரசுகளை அனுமதிப்பதையும் தடை செய்தது.

அணிசேரா இயக்கத்தை முன்னெடுத்தவர்கள், 1955ஆம் ஆண்டு பாண்டுங் மாநாட்டில் கீழே குறிப்பிடப்பட்டவற்றை இயக்கத்தின் இலக்குகளாகவும், நோக்கங்களாகவும் நிர்ணயம் செய்தனர்.

- அடிப்படை மனித உரிமைகளை மதித்தல். ஐக்கிய நாடுகள் சபையின் சாசனத்தின் கொள்கைகளையும் நோக்கங்களையும் மதித்தல்.
- அனைத்து நாடுகளின் இறையாண்மையையும் அவற்றின் எல்லைப்பரப்பு ஒருமைப்பாட்டையும் மதித்தல்.
- சிறியவை, பெரியவை என்றில்லாமல் அனைத்து இனங்களும், அனைத்து நாடுகளும் சமம் என அங்கீகரித்தல்.
- அடுத்த நாட்டின் உள்விவகாரங்களில் தலையிடாமலும் குறுக்கீடு செய்யாமலும் இருத்தல்.
- ஐ.நா சபையின் சாசனத்திற்கு இணங்க ஒவ்வொரு நாடும் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தன்னைப் பாதுகாத்துக் கொள்ளும் உரிமையைப் பெற்றுள்ளதை மதித்தல்.
- வல்லரசு நாடுகளில் ஏதாவது ஒன்றின் குறிப்பிட்ட நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வதற்காக கூட்டுப்பாதுகாப்பு உடன்படிக்கைகளைப் பயன்படுத்தாதிருத்தல்.
- எந்த நாடாக இருந்தாலும் அதன் அரசியல் சுதந்திரம், எல்லைப்பரப்பு ஒருமைப்பாடு ஆகியவற்றிற்கு அச்சத்தை ஏற்படுத்தும், இராணுவ நடவடிக்கைகள், வலியச்சென்று தாக்குதல் போன்ற நடவடிக்கைகளைத் தவிர்த்தல். ஒருநாடு மற்றநாடுகளுக்கு எதிராக நெருக்கடிகளை தருதல் என்பதைப் பயன்படுத்தக் கூடாது.
- அனைத்துப் பன்னாட்டுப் பிரச்சனைகளுக்கும் அமைதியான வழியில் தீர்வு காணப்பட வேண்டும். பேச்சுவார்த்தைகள், சமாதானம், நடுவர் தீர்ப்பு, சட்டங்களின் வழியிலான தீர்ப்பு அல்லது சம்பந்தப்பட்ட இரு நாடுகளும் விரும்புகிற, ஐ.நா. சபை சாசனத்திற்கு

12th_History_TM_Unit_15_V2.indd 288 02-01-2023 16:41:08

இணக்கமான, வழிகள் ஆகியவற்றின் மூலம் தீர்வு காணப்பட வேண்டும்.

- பரஸ்பர அக்கறை, ஒத்துழைப்பு ஆகியவற்றை மேம்படுத்துதல்.
- நீதி மற்றும் பன்னாட்டு கட்டுப்பாடுகளுக்கு மதிப்பளித்தல்.

பனிப்போரின்போது அணிசேரா இயக்கம் அமெரிக்க, சோவியத் யூனியன் ஆகிய இரு அதிகார முகாம்களுக்கு ஒரு மாற்றாகச் செயல்பட்டது. சோவியத் யூனியனின் சரிவோடு அணிசேரா இயக்கம் தேவையற்றதானது.

நேருவின் பஞ்சீலக் கொள்கை:

1) நாடுகளிடையே இறையாண்மை, எல்லைப் பரப்பு குறித்த பரஸ்பர மரியாதை
2) பரஸ்பரம் ஆக்கிரமிப்பு இல்லாத நிலை
3) பரஸ்பரம் ஒருநாடு மற்றொன்றின் உள்நாட்டு விவகாரங்களில் தலையிடாமலிருத்தல்
4) சமத்துவம் மற்றும் பரஸ்பர நன்மை
5) சமாதான சகவாழ்வு

15.4 ஐ.நா. சபையும் உலகளாவிய பிரச்சனைகளும்

பன்னாட்டு சங்கம் (League of Nations) தோல்வியுற்றதை இரண்டாவது உலகப்போர் மெய்ப்பித்தது. இதைப் போன்று மற்றொரு போர் நடைபெறாமலிருக்க ஒரு வலுவான அமைப்பை உருவாக்க வேண்டியதன் அவசியத்தை உலகத் தலைவர்கள் உணர்ந்தனர். வாஷிங்டன் நகரில், ஜார்ஜ்டவுன் பகுதியில் உள்ள டம்பார்டன் ஓக்ஸ் எனும் மாளிகையில் சீனா, சோவியத் யூனியன், அமெரிக்கா மற்றும் இங்கிலாந்து ஆகிய நாடுகளின் பிரதிநிதிகள் ஒன்று கூடி (1944 ஆகஸ்டு 21 முதல் அக்டோபர் 7 முடிய) உலக அமைப்புக்கான ஓர் செயல்திட்டத்தை உருவாக்கினர். 1943இல் மாஸ்கோ பிரகடனம் பன்னாட்டு சங்கத்திற்குப் பதிலாகப் பன்னாட்டு அளவில் ஒரு அமைப்பு உருவாக்கப்பட வேண்டியதன் அவசியத்தை அங்கீகரித்தது. இதனைத் தொடர்ந்து 1945 பிப்ரவரியில் நடைபெற்ற யால்டா மாநாட்டில் பாதுகாப்பு சபையில் வாக்களிக்கும்முறை குறித்தும் வேறுசில பிரச்சனைகள் பற்றியும் கேள்விகள் எழுப்பப்பட்டன. 1945 ஏப்ரல் மாதம் சான்பிரான்சிஸ்கோவில் நடைபெற்ற மாநாட்டில் இவை தொடர்பான விவாதங்களும் பேச்சுவார்த்தைகளும் நடத்தப்பட்டு ஐக்கிய நாடுகள் சபையின் சாசனம் இறுதி செய்யப்பட்டது.

யால்டா மாநாடு

டிரிக்வே லை

ஐக்கிய நாடுகள் சபை 1945 அக்டோபர் 24இல் 51 உறுப்பினர்களோடு உதயமானது. பொது சபை, பாதுகாப்பு சபை, பொருளாதார மற்றும் சமூக அவை, தர்மகர்த்தா அவை, பன்னாட்டு நீதிமன்றம் மற்றும் ஐ.நாவின் தலைமைச் செயலகம் ஆகியவை இவ்வமைப்பின் முக்கிய அங்கங்களாகும். நார்வே நாட்டின் வெளியுறவுத்துறை அமைச்சரான டிரிக்வே லை ஐ.நா.வின் முதல் பொதுச் செயலராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். மேற்சொல்லப்பட்ட முக்கிய அங்கங்கள் தவிர ஐ.நா.சபை 15 சிறப்பு நிறுவனங்களை கொண்டுள்ளது. பன்னாட்டு தொழிலாளர் சங்கம் (ILO–ஜெனிவா), உணவு மற்றும் வேளாண்மை அமைப்பு (FAO–ரோம்), பன்னாட்டு நிதியம் (IMF–வாஷிங்டன்), ஐக்கிய நாடுகளின் கல்வி, அறிவியல் மற்றும் பண்பாட்டு அமைப்பு (யுனெஸ்கோ UNESCO–பாரிஸ்), உலக சுகாதார அமைப்பு (WHO–ஜெனிவா), உலக வங்கி (வாஷிங்டன் D.C.) ஆகியவை சில முக்கியமான நிறுவனங்களாகும்.

உலகளாவிய பிரச்சனைகளைத் தீர்ப்பதில் ஐ.நா. சபையின் பங்கு

"போர்கள் மனிதர்களின் மனங்களிலிருந்து தொடங்குவதால் அம்மனிதர்களின் மனங்களில்தான் அமைதிக்கான பாதுகாப்புகளும் கட்டப்பட வேண்டும்" (ஐ.நா.சபை சாசனத்தின் முகவுரை)

12th_History_TM_Unit_15_V2.indd 289 02-01-2023 16:41:08

ஐ.நா. சபை தலைமையகம்

ஐ.நா. சபை தலைமையகம், நியூயார்க்

ஐக்கிய நாடுகள் சபையின் உதயமும் பனிப்போரின் தொடக்கமும் ஒரேசமயத்தில் நடைபெற்றன. இக்காலகட்டத்தில் போர்களைத் தடுப்பதில்ஐ.நா.சபைமுக்கியப்பங்காற்றியது.ஆனால் பாதுகாப்பு சபையின் நிரந்தர உறுப்பினர்களே பிரச்சனைகளில் ஈடுபட்டவர்களாக இருந்ததால் ஐ.நா.சபை ஒரு மௌனமான பார்வையாளராகவே இருந்தது. ஐ.நா. சபை ஒரு இராணுவத்தைப் பெற்றுள்ளது. அது ஐ.நா. அமைதிகாக்கும் படை என அறியப்படுகிறது. அப்படைக்குத் தேவையான வீரர்களை உறுப்புநாடுகள் அனுப்பி வைக்கின்றன. ஐ.நா. சபையின் படைவீரர்கள் வெளிர் நீலநிற தலைக்கவசம் அணிவதால் அவர்கள் 'நீல தலைக் கவசத்தினர்' என அழைக்கப்படுகின்றனர்.

பாலஸ்தீன பிரச்சனை

இரண்டாம் உலகப்போருக்குப் பின்னர் யூதர்கள் தங்களுக்கு பாலஸ்தீனத்தில் ஒரு தாயகம் வேண்டுமெனக் கோரினர். அராபியர்கள் இதை எதிர்த்தனர். அப்பிரச்சனை ஐ.நா. சபையின் முன் வைக்கப்பட்டது. 1947 மே மாதம் ஐ.நா. சபையின் பொது சபை தீர்மானமொன்றை நிறைவேற்றி, அதன் மூலம் பாலஸ்தீன பிரச்சனை குறித்து விசாரித்து பரிந்துரைகள் வழங்க ஐ.நா. சபையின் பாலஸ்தீனத்திற்கான சிறப்பு குழுவொன்றை (UNSCOP) அமைத்தது. இச்சிறப்புக் குழுவின் அறிக்கையின்படி அராபியர்கள் 85 விழுக்காட்டு நிலப்பகுதிகளையும் யூதர்கள் 5.8 விழுக்காட்டு நிலப்பகுதியையும் சொந்தமாகக் கொண்டிருந்தனர். இவ்வுண்மைகளைப் பொருட்படுத்தாது, பாலஸ்தீனம் இரு நாடுகளாகப் பிரிக்கப்பட வேண்டுமெனவும் பெரும்பான்மை அராபியர்கள், யூதர்கள் குடியேறுவதற்கான நிலங்களை ஒப்படைக்க வேண்டுமெனவும் இக்குழு பரிந்துரை செய்தது. முன்மொழியப்பட்ட இச்செயல் திட்டத்தின்படி அராபியர்களுக்கு 45 விழுக்காடு நிலங்களைக் கொண்ட நாடும் 55 விழுக்காடு

அரபு அகதிகள்

நிலப்பரப்பைக் கொண்ட யூதநாடும் உருவாகும் நிலை ஏற்பட்டது. இதன்படி 1948 மே 14இல் இஸ்ரேல் எனும் புதிய நாடு உருவாக்கப்பட்டது.

தேசிய சீனாவை அங்கீகரித்தல்

சியாங்–கே–ஷேக் – ரூஸ்வெல்ட் – சர்ச்சில்

1949இல் சீனாவின் முதன்மை நிலப்பகுதியில் மா சே துங் கம்யூனிச அரசை உருவாக்கிய சூழலில் அங்கிருந்து பார்மோசா தீவுக்குத் தப்பிச்சென்ற சியாங்–கே–ஷேக் அங்கு தேசிய சீன அரசை உருவாக்கி தலைமை ஏற்றார். இந்நிலையில் பாதுகாப்பு சபையில் இடம் பெற்றுள்ள தேசிய சீனாவின் பிரதிநிதி அகற்றப்பட்டு அவ்விடத்தில் கம்யூனிஸ்ட் சீனாவின் பிரதிநிதி அமர்த்தப்பட வேண்டுமென சோவியத் யூனியன் கோரிக்கை வைத்தது. கோரிக்கை ஏற்றுக்கொள்ளப்படாத நிலையில்சோவியத்ரஷ்யா,பாதுகாப்புசபையையும் ஐ.நா. சபையின் ஏனைய அமைப்புகளையும் புறக்கணிக்க முடிவுசெய்தது. முடிவில் 1971இல் தான் சீன மக்கள் குடியரசு பாதுகாப்பு சபையில் நிரந்தர உறுப்பினரானது.

கொரியப் போர் (1950 – 1953)

1910ஆம் ஆண்டு முதல் கொரியா ஜப்பானால் ஆட்சி செய்யப்பட்டது. 38வது இணை கோட்டை மையமாகக்கொண்டு கொரியா 1945இல் இரண்டு மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டது. மொத்த

12th_History_TM_Unit_15_V2.indd 290
02-01-2023 16:41:09

மக்கள்தொகையில் மூன்றில் ஒரு பகுதியையும் பெரும்பாலுமான தொழிற்சாலைகளும் அமைந்திருந்த வடக்கு மண்டலம் சோவியத் ரஷ்யாவால் கைப்பற்றப்பட்டது. மக்கள்தொகையில் மூன்றில் இரண்டு பகுதி மக்களையும் வளமிக்க வேளாண் விளைநிலங்களையும் கொண்டிருந்த தென் மண்டலத்தை அமெரிக்கா தனது கட்டுப்பாட்டில் வைத்திருந்தது. தென்கொரியாவில் ஐ.நா. சபையின் மேற்பார்வையில் நடத்தப்பட்ட தேர்தலில் சிங்மேன் ரீ என்பவர் குடியரசுத் தலைவரானார். வட கொரியாவில் கிம் இல் சுங் தலைமையில் மக்கள் ஜனநாயகக் குடியரசு எனும் பெயரில் கம்யூனிச அரசை ரஷ்யா உருவாக்கியது. இதன் பின்னர் அமெரிக்காவும் ரஷ்யாவும் தங்கள் படைகளை அங்கிருந்து விலக்கிக் கொண்டன. தொடர்ந்து தென்கொரியாவின் குடியரசுத் தலைவர் இராணுவ நடவடிக்கை மூலம் ஒட்டுமொத்த நாட்டை ஒன்றிணைப்பதே தனது குறிக்கோள் என வெளிப்படையாக அறிவித்தார். 1950 ஜூன் 25இல் வடகொரியப் படைகள் தென்கொரியாவின் மீது படையெடுத்தபோது வெளிப்படையான போர் தொடங்கியது.

கொரியப் போர்

உடனடியாக பாதுகாப்பு சபை கூடியது. சோவியத் யூனியன் பங்கேற்காத நிலையில் போர் உடனடியாக நிறுத்தப்பட வேண்டுமெனத் தீர்மானம் நிறைவேற்றியது. இப்பிரச்சனையில் உதவிசெய்யும்படி ஐ.நா. சபையின் உறுப்பு நாடுகள் கேட்டுக்கொள்ளப்பட்டன. பதினாறு உறுப்பு நாடுகள் படை கொடுத்து உதவியதுடன் நாற்பத்தைந்து நாடுகள் பலவகைப்பட்ட உதவிகளைச் செய்தன. ஐ.நா. சபையின் படைகளுக்கு அமெரிக்கத் தளபதி மெக் ஆர்தர் தலைமையேற்றார். 1950 ஆகஸ்ட் மாதத்தில் பாதுகாப்பு சபைக்கு சோவியத் யூனியன் திரும்பியநிலையில் அமெரிக்காவின் முன்முயற்சியில், பொது சபை அவசரமாகக் கூடி, அமைதிக்காக ஒன்றுபடுகிறோம் என்ற சமாதானத் தீர்மானத்தை நிறைவேற்றியது. இதன்மூலம் பாதுகாப்பு சபையானது ஒரு நெருக்கடியில் உடன்பாட்டை எட்டமுடியாவிட்டால், அவசரமாகத் தேவைப்படும் பட்சத்தில் பொது சபை இராணுவத்தை பயன்படுத்தும் பரிந்துரையைச் செய்யலாம் எனும் முன்னுதாரணத்தை தெளிவாக ஏற்படுத்தியது. இத்தீர்மானம் சட்டத்திற்குப் புறம்பானது என சோவியத் ரஷ்யா நினைத்தது. 1953 ஜூலையில் போர் நிறுத்த உடன்பாடு கையெழுத்தானதோடு இப்போர் முடிவுற்றது. மேலும் இப்போர் பொது சபையின் முக்கியத்துவத்தை அதிகரிக்கச் செய்தது.

சூயஸ் கால்வாய் பிரச்சனை, 1956

சூயஸ் கால்வாய்

சூயஸ் கால்வாய், செங்கடலை மத்தியதரைக் கடலோடு இணைக்கிறது. எகிப்திய பாஷாவின் அனுமதியோடு பெர்டினான்ட் டி லெசெப்ஸ் எனும் பிரெஞ்சுக்காரர் இக்கால்வாயைக் கட்டினார். விரைவில் கால்வாயின் மீதான உரிமை இங்கிலாந்தின் கைகளுக்கு மாறியது. ஆசியாவிற்கும் ஐரோப்பாவிற்கும் இடையிலுள்ள மிக முக்கிய இணைப்பே இக்கால்வாய்தான். 1956 ஜூலை மாதத்தில் எகிப்தின் குடியரசுத்தலைவராக இருந்த கமால் அப்துல் நாசர் சூயஸ் கால்வாயை தேசியமயமாக்கினார். அதுவரை அக்கால்வாய் ஆங்கிலோ – பிரெஞ்சு சூயஸ் கால்வாய் கழகம் எனும் தனியார் நிறுவனத்திற்குச் சொந்தமாக இருந்தது. இதன் விளைவாக அக்டோபர் 29இல் இஸ்ரேலியப் படைகள் சினாய் தீபகற்பம் மீது படையெடுத்தன. மறுநாள் பிரிட்டிஷ் மற்றும் பிரான்ஸ் ஆகிய நாடுகளின் போர் விமானங்கள் எகிப்தின் விமானத் தளங்களின் மீது குண்டுகள் வீசின. 1956 நவம்பர் 5இல் பிரிட்டிஷ் மற்றும் பிரான்ஸ் ஆகியவற்றின் படைகள் எகிப்தின் துறைமுக நகரமான செய்த்தில் இறங்கின. இப்பிரச்சனை பாதுகாப்பு சபைக்கு கொண்டு செல்லப்பட்டது. ஆனால் பிரிட்டனும், பிரான்சும் மறுப்பாணையைப் (Veto) பயன்படுத்தி தீர்மானத்தைத் தடுத்தன. இச்சூழலில் சோவியத் யூனியனும் படையெடுக்குமோ என ஐயம் கொண்ட பொது சபை அமெரிக்காவின் முன்முயற்சியில்

அவசரக்கூட்டமொன்றைக் கூட்டி எகிப்தின் மீதான படையெடுப்பைக் கண்டனம் செய்தது. இதனால் இஸ்ரேல், கிரேட் பிரிட்டன் மற்றும் பிரான்ஸ் ஆகிய நாடுகள் போரை நிறுத்தின. எகிப்திலிருந்து தங்கள் படைகளை விலக்கிக்கொள்வது என முடிவு செய்தன. பொது சபையானது ஐக்கிய நாடுகள் சபையின் அவசரப் படை (UNEF) எனும் படையை உருவாக்க வாக்களித்தது. இப்படை மோதலில் ஈடுபடும் படையல்ல மாறாக அமைதி காக்கும் படை ஆகும். பிரச்சனையோடு தொடர்புடைய இரு தரப்பினரின் சம்மதத்தின் பெயரிலேயே இப்படை அனுப்பப்படும். டிசம்பர் 22இல் ஐ.நா.சபையின் படைகள் பிரிட்டிஷ் மற்றும் பிரெஞ்சுப் படைகளையும் மற்றும் இஸ்ரேலியப் படைகளையும் 1957இல் மார்ச் மாதத்தில் வெளியேற்றின. நாசர் அராபிய, எகிப்திய தேசியவாதத்தின் வெற்றியாளராகவும், கதாநாயகனாகவும் வலம் வந்தார்.

ஹங்கேரி சிக்கல், 1956

ஹங்கேரிய புரட்சி

ஸ்டாலினுடைய ஆட்சியின்போது பிரதமராக நியமிக்கப்பட்ட ஹங்கேரியின் தலைவரான ரகோசி 1953இல் பதவி நீக்கம் செய்யப்பட்டார். இதன் விளைவாக இம்ரே நேகி என்பவர் அதிபராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். ஆனால் அவருக்கு அவருடைய அரசாங்கத்தின் ஆதரவுமில்லை, ரஷ்யாவும் அவருக்கு ஆதரவாக இல்லை. ரகோசி தொடர்ந்து பொதுவுடைமை கட்சியைத் தனது கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருந்தார். எழுத்தாளர்களும் அறிவார்ந்த மக்களும் அவருக்கு எதிரான எதிர்ப்புக்குத் தலைமையேற்று, ரகோசியை பதவி விலகக்கோரினர். ரகோசி 1956 ஜூலையில் அதிகாரத்திலிருந்து நீக்கப்பட்ட பின்னரும் எதிர்ப்பு தொடர்ந்து நீடித்தது. அக்டோபர் 23இல் ஒருசில அறிவார்ந்த மக்களால் திட்டமிடப்பட்ட கிளர்ச்சி புதாபெஸ்ட்டில் வெடித்தது. அமைதியான ஆர்ப்பாட்டமாகத் தொடங்கிய அது விரைவில் சோவியத் ரஷ்யாவிற்கும் அதன் கைப்பாவையான ஹங்கேரியின் அரசுக்கும் எதிரான தேசிய எழுச்சியாக உருவெடுத்தது. அக்டோபர் 26இல் இம்ரே நேகி மீண்டும் அதிபராவதை ரஷ்யா ஏற்றுக் கொண்டது. அவர் அதிபராகப் பொறுப்பேற்றதும் பலகட்சிமுறையை அறிமுகம்செய்து ஒரு கூட்டணியாட்சியை நிறுவினார். இதனால் கோபம் கொண்ட சோவியத் ரஷ்யா ஹங்கேரிக்குள் நவம்பர் 4இல் படைகளை அனுப்பி கிளர்ச்சியை ஒடுக்கியது.

சூயஸ் கால்வாய்ப் பிரச்சனையில் எகிப்தின்மீது ஆங்கிலேய – பிரெஞ்சு – இஸ்ரேலியத் தாக்குதல் நடைபெற்ற அதே சமயத்தில்தான் ஹங்கேரிய கிளர்ச்சியும் நடைபெற்றது. இப்பிரச்சனை பாதுகாப்பு சபைக்கு எடுத்துச்செல்லப்பட்டது. பாதுகாப்பு சபை உடனடியாக ரஷ்யப்படைகள் ஹங்கேரியை விட்டு விலக வேண்டுமெனத் தீர்மானித்தது. ரஷ்யா தனது மறுப்பாணை மூலம் இத்தீர்மானத்தை நிறைவேற்றவிடவில்லை. தொடர்ந்து அதே தீர்மானம் பொது சபையில் நிறைவேற்றப்பட்டது. ஆனால் அத்தீர்மானத்தால் பயனேதும் ஏற்படவில்லை. ஹங்கேரிக்கு எதிராக ரஷ்யா மேற்கொண்ட நடவடிக்கைகளை ஐ.நா. சபை தனது செல்வாக்கால் கட்டுப்படுத்த முடியாமல் போனது. ஒரு வலிமை மிகுந்த நாடு ஐ.நா. சபையை மீறி செயல்படுவதில் உறுதியாக இருந்தால் ஐ.நா. சபையால் எதையும் செய்யவியலாது என்பதை இந்நிகழ்வு உணர்த்தியது.

இத்துடன் ரஷ்ய அதிபர் குருச்சேவின் ரகசியப்பேச்சு அம்பலமானது. இந்நிகழ்வுகள் பன்னாட்டளவில் கம்யூனிச இயக்கத்தின் மேல் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது. உலகம் முழுவதிலும் எண்ணிக்கையில் அதிகமானோர் குறிப்பாக எழுத்தாளர்களும் அறிவார்ந்த மக்களும் கம்யூனிஸ்ட் கட்சிகளிலிருந்து விலகினர்.

அரபு–இஸ்ரேல் போர்

1947 நவம்பரில் பாலஸ்தீனத்தை அராபியர் நாடு, யூதர்கள் நாடு என இரண்டாகப் பிரிப்பதற்கு ஐ.நா.சபை வாக்களித்து முடிவுசெய்த உடனேயே பாலஸ்தீனத்தில் அராபியர்களுக்கும் யூதர்களுக்கும் இடையே போர் மூண்டது. பாலஸ்தீனத்திலிருந்து ஆங்கிலப் படைகள் வெளியேறிய பின்னர் (மே 15, 1948) இஸ்ரேல் தன்னை சுதந்திர நாடாக அறிவித்தது. இதுசமயம் ஐ.நா. சபையின் பொதுக்குழு 1947–48 போரில் அகதிகளான பாலஸ்தீனியர்களுக்கு தங்கள் வீடுகளுக்குத் திரும்பவும், ஏற்பட்ட இழப்புகளுக்கு இழப்பீடு பெறவும் உரிமை உண்டென மீண்டும் உறுதி செய்து தீர்மானம் நிறைவேற்றியது. இதனால் போரும் முடிவுக்கு வந்தது. அடுத்த ஆண்டில் இஸ்ரேல் ஐ.நா. சபையில் உறுப்பினரானது. இஸ்ரேல் உருவாக்கப்பட்டதன் தொடக்கத்திலிருந்தே ஐ.நா.

12th_History_TM_Unit_15_V2.indd 292 02-01-2023 16:41:09

சபை அரசியல் முடிவுகள் எடுப்பதில் ஓரளவே ஈடுபாடு கொண்டது. ஐ.நா.சபையின் அமைதிகாக்கும் படை எகிப்து–இஸ்ரேல் எல்லையில் முகாமிட்டிருந்தது. அகதிகள் தங்கள் வீடுகளுக்குத் திரும்பும் காலம் வரும் வரை அவர்களுக்கு உதவுவதற்காக ஐ.நா. சபையின் அகதிகளுக்கான நிவாரண மற்றும் பணி நிறுவனம் (UNRWA) நிறுவப்பட்டது.

1966 வாக்கில் அமெரிக்கா இஸ்ரேலுக்கு புதிய ரக போர் விமானங்களையும் ஏவுகணைகளையும் வழங்கத்தொடங்கியது. அதன் விளைவாக பனிப்போர் மத்திய கிழக்கில் பாதம் பதித்தது. ஐ.நா.சபை காட்சியிலிருந்து காணாமல் போனது. அடுத்து வந்த சில மாதங்களில் இஸ்ரேலுக்கும் அதைச் சுற்றியுள்ள அரபு நாடுகளுக்குமிடையே பதட்டம் அதிகரித்தது. 1967ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் இஸ்ரேலுக்கும் சிரியாவிற்கும் இடையில் பீரங்கிப் பரிமாற்றங்கள் இருந்தன. சிரியாவின் கடற்கரைக்குச் சற்றுதொலைவில் அமெரிக்காவின் ஆறாவது கப்பற்படை நிலைகொண்டது. இச்சூழலில் எகிப்தியப் பகுதிக்குள்ளிருந்த ஐ.நா.வின் படைகளையும், பார்வையாளர்களையும் இஸ்ரேலிய எல்லைக்கு அனுப்பும்படி ஐ.நா. சபையை எகிப்திய அதிபர் நாசர் அறிவுறுத்தினார். படைநகர்வு குறித்து அவர் கேட்கஇயலாது என ஐ.நா. சபை நாசருக்கு பதிலளித்தது. ஆகவே ஐ.நா. வின் படைகள் ஒட்டுமொத்தமாக எகிப்திலிருந்து விலக்கிக் கொள்ளப்படவேண்டும் எனக் கேட்டுக் கொள்ளும் ஒரு வாய்ப்பு மட்டுமே அவருக்கிருந்தது. இதனைத் தொடர்ந்து 1967 மே 23இல் எகிப்து டைரன் கடலிடுக்கு (நீர்ச்சந்தி) வழியாக இஸ்ரேலின் கப்பல்கள் பயணப்படுவதற்குத் தடைவிதித்தது. ஜூன் மாதத் தொடக்கத்தில் இஸ்ரேல் எகிப்தைத் தாக்கியது. கெய்ரோ நகரின் விமானத்தளங்களிலிருந்த விமானப்படை விமானங்கள் முற்றிலுமாக அழிக்கப்பட்டன.

அரபு – இஸ்ரேல் போர்

ஆறாம் நாள் போரின் முடிவில் பாலஸ்தீனியர்கள் மீதமிருந்த பகுதிகளான மேற்குக் கரை, காஜா முனை மற்றும் கிழக்கு ஜெருசலேம் ஆகியவற்றைக் கைப்பற்றியதோடு, சிரியாவின் கோலன் குன்றுப் பகுதிகளையும் எகிப்தின் சினாய் பகுதிகளையும் இஸ்ரேல் கைப்பற்றிக் கொண்டது. இருநூற்று ஐம்பதாயிரத்திற்கும் மேற்பட்ட பாலஸ்தீனியர்கள் வெளியேறக் கட்டாயப்படுத்தப்பட்டனர். ஒரு மில்லியனுக்கும் அதிகமானமோர் இன்றும் இஸ்ரேலின் இராணுவக் கட்டுப்பாட்டின் கீழ் இருக்கின்றனர். பாலஸ்தீனப் பிரச்சனையானதுஅகதிகள் பிரச்சனை என்ற கோணத்தில் மட்டுமே அணுகப்பட்டது. அது பாலஸ்தீனர்களின் தேசிய உரிமைகளை மீண்டும் ஆதரிப்பது என்ற கண்ணோட்டத்தில் அணுகப்படுவதில்லை. ஐ.நா. சபையின் தீர்மானம் சந்தேகத்திற்கிடமில்லாமல் இஸ்ரேலியப் படைகள் கைப்பற்றிய பகுதிகளிலிருந்து வெளியேற வேண்டுமெனக் கூறியது. பாதுகாப்பு சபையில் இடம்பெற்றுள்ள நான்கு நாடுகளே இத்தீர்மானத்தை வரைந்தன. பாலஸ்தீனியர்களின் உரிமைகள் குறித்து மிகக் குறைவான குறிப்புகளே இடம்பெற்றுள்ளமை, இச்செயல்பாடுகளில் அமெரிக்காவின் செல்வாக்கை உணர்த்தியது.



பாலஸ்தீன விடுதலை இயக்கம்: 1964க்கு முன்பு இரகசிய எதிர்ப்பியக்கங்களாக செயல்பட்ட பல்வேறு பாலஸ்தீனக் குழுக்களை ஒருங்கிணைப்பதற்காக பாலஸ்தீன விடுதலை இயக்கம் (Palestine Liberation Organisation – PLO) 1964இல் உருவாக்கப்பட்டது. 1967ஜூனில் நடைபெற்ற அரபு–இஸ்ரேல் போருக்குப் பின்னர் இவ்வமைப்பு முக்கியத்துவம் பெற்றது. 1990களில் அமைதிப் பேச்சு வார்த்தைகளுக்குள் அடியெடுத்து வைப்பதற்கு முன்பு 1980கள் முடிய PLO இஸ்ரேலுடன் நீண்ட நெடிய தற்காப்பு கொரில்லாப் போர்களில் ஈடுபட்டிருந்தது. யாசர் அராபத் இவ்வமைப்பின் மகத்தான தலைவராவார்.

1967ஆம் ஆண்டுப் போரைத்தொடர்ந்து பல ஆண்டுகள் இஸ்ரேல் – பாலஸ்தீன மோதல்களை முற்றிலுமாகத் தீர்த்து வைப்பதற்கு, மோதல்களோடு தொடர்புடைய அனைவரும் பங்கேற்கும் (யாசர் அராபத்தின் தலைமையில் இயங்கிய பாலஸ்தீன விடுதலை இயக்கம் உட்பட) பன்னாட்டு அமைதி மாநாட்டை தனது ஆதரவில் நடத்த ஐ.நா சபை மீண்டும் மீண்டும் முயற்சித்தது. ஒவ்வொரு முறையும் தடுப்பாணை அதிகாரம் மூலம் அமெரிக்கா அம்முயற்சிகளைத் தடுத்தது. பனிப்போர் சூழலில் இப்பகுதியில் பதட்டங்களை அதிகரிப்பதிலும் அல்லது கட்டுப்படுத்துவதிலும் மாஸ்கோவும் வாஷிங்டனும் மிகப்பெரும் பங்கு வகித்தன.

15.5 ஐரோப்பிய சமூக அமைப்பின் ஒருங்கிணைப்பும் விரிவாக்கமும்

நாம் முன்னர் பார்த்தவாறு, கம்யூனிசத்தைக் கட்டுப்படுத்துவது என்ற தனது கொள்கையைப் பின்பற்றி அமெரிக்கா, போரினால் சீரழிக்கப்பட்ட ஐரோப்பிய நாடுகள் தங்களுடைய பொருளாதாரத்தைப் புனரமைத்துக் கொள்ள உதவிகள் செய்வதற்காக ட்ரூமன் கோட்பாட்டையும் மார்ஷல் திட்டத்தையும் முன் வைத்தது. 1948ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் ஐரோப்பியப் பொருளாதார ஒத்துழைப்பு நிறுவனம் (OEEC) எனும் அமைப்பு உருவாக்கப்பட்டது. இவ்வமைப்பு ஐரோப்பியப் புனரமைப்புத் திட்டத்தின் (ERP) ஆதரவில் செய்யப்படும் மார்ஷல் திட்ட உதவிகள் வழங்குவதை மேற்பார்வை செய்தது. ஐரோப்பியப் பொருளாதார ஒத்துழைப்பு நிறுவனம், அமெரிக்கா செய்யும் உதவியைத் தனது 16 உறுப்பு நாடுகளுக்குப் பிரித்துக் கொடுத்தது. இந்நாடுகளுடன் அமெரிக்க வணிக நிறுவனங்கள் மேற்கொண்டிருந்த வணிகத்தை மேம்படுத்துவற்காக, இந்நாடுகள் தங்களிடையே செயல்படுத்தி வந்த காப்பு வரிகளை நீக்கும்படி அமெரிக்கா கூறியது. அமெரிக்காவிடமிருந்து மேலும் நிதி உதவியைப் பெறும் நோக்கத்தில் காப்பு வரிகளை நீக்கச் சம்மதித்த நாடுகள் 1949 முடிய சுதந்திர வணிகத்தைப் பின்பற்றின. அமெரிக்கா செய்த உதவியின் விளைவாய் மேற்கு ஐரோப்பிய நாடுகள் 1950இல் போருக்கு முந்தைய உற்பத்தி அளவை எட்டின. பெற்ற வெற்றிகள் மேலும் அவைகளை முன்னேறச்செய்தன. ஐரோப்பியம் பொருளாதார ஒத்துழைப்பு நிறுவனம் (OEEC) ஐரோப்பிய பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் வளர்ச்சி நிறுவனம் எனப் பெயர் மாற்றம் பெற்றது. 1961இல் அமெரிக்காவும் கனடாவும் இவ்வமைப்பில் தொடக்ககால உறுப்பினர்களாகச் சேர்த்துக் கொள்ளப்பட்டன. 1964இல் ஜப்பான் இவ்வமைப்பில் இணைந்தது.



OEEC சாசனம்

இன்று உலகத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்து முப்பத்தியேழு நாடுகள் ஐரோப்பியப் பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் வளர்ச்சி நிறுவனத்தில் உறுப்பினர்களாக உள்ளன. அவைகளில் பெரும்பாலானவை வளர்ந்த நாடுகளாகும். அவை சுதந்திர சந்தைப் பொருளாதாரம் மற்றும் மக்களாட்சி ஆகிய கோட்பாடுகளில் உறுதிப்பாடு உடைய நாடுகளாகும். இவ்வமைப்பின் தலைமையகம் பாரிஸில் உள்ளது.

ஐரோப்பிய ஒன்றியத்தை நோக்கி

ஐரோப்பிய மன்றம்

இரண்டாவது உலகப் போருக்குப் பின்னரான காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட தனித்தன்மை வாய்ந்த முடிவுகளில் 'மேற்கு ஐரோப்பிய நாடுகளை ஒருங்கிணைப்பது' என்பதும் ஒன்றாகும். 1949 மே மாதத்தில் பத்து நாடுகள் லண்டனில் சந்தித்து ஐரோப்பிய மன்றம் (Council of Europe) எனும் அமைப்பை உருவாக்க கையொப்பமிட்டன. இவ்வமைப்பின் தலைமையிடம் ஸ்ட்ராஸ்பர்க்கில் அமைக்கப்பட்டது. உறுப்பு நாடுகளின் வெளியுறவுத்துறை அமைச்சர்களைக் கொண்ட ஒரு குழுவையும் அந்நிய நாடுகளின் பாராளுமன்றங்களிலிருந்து தருவிக்கப்பட்ட உறுப்பினர்களைக் கொண்ட ஆலோசனைக் குழுவொன்றையும் கொண்டதாக இவ்வமைப்பு நிறுவப்பட்டது.

ஐரோப்பிய நிலக்கரி, எஃகு சமுதாயம் (ECSC)

பிரான்சின் வெளியுறவுத்துறை அமைச்சரான ராபர்ட் ஷுமன் பிரான்சுக்கும் ஜெர்மனிக்கும் இடையே சமரசம் ஏற்பட்டால் அது இருநாடுகளுக்கும் நன்மை பயப்பதோடு ஐரோப்பாவின் போருக்குப்

12th_History_TM_Unit_15_V2.indd 294 02-01-2023 16:41:09

www.tntextbooks.in

ஷுமன்

கொன்ட்ராட்

பிந்தைய புனரமைப்பிற்கும் நன்மையயக்கும் என உணர்ந்தார். 1950 மே 9இல் அவர் ஷுமன் திட்டம் என்றறியப்பட்ட ஒரு திட்டத்தை முன் வைத்தார். அத்திட்டத்தில் இரு நாடுகளின் நிலக்கரி மற்றும் எஃகு ஆகியவற்றின் கூட்டு உற்பத்தியை, நாடுகள் கடந்த வலுவான, உயர்மட்ட ஆணையம் எனும் கட்டமைப்பிற்குள் வைத்து நிர்வகிக்கப்பட வேண்டுமென முன்மொழிந்தார். துறைகள் பொருளாதார ஒருங்கிணைப்புக்கான இத்திட்டம் பரஸ்பர ஆர்வத்தை உருவாக்கி இரு நாடுகளையும் தானாகவே இணைத்தது. மேற்கு ஜெர்மனியின் அதிபரான கொன்ட்ராட் அடினவர் மேற்கத்திய நாடுகளோடு நெருக்கத்தை ஏற்படுத்திக் கொள்வதற்கான இத்திட்டத்தை வரவேற்றார்.

ECSC உறுப்பினர்கள்

1951 ஏப்ரல் 18இல் பிரான்ஸ், மேற்கு ஜெர்மனி, இத்தாலி, நெதர்லாந்து, பெல்ஜியம் மற்றும் லக்சம்பர்க் ஆகிய நாடுகள் ஒருங்கிணைந்து பாரிஸில் உடன்படிக்கை ஒன்றிலும் கையெழுத்திட்டதால் ஐரோப்பிய நிலக்கரி, எஃகு சமுதாயம் (ECSC) உருவானது. இவ்வாறு ஆறு நாடுகளுக்கிடையே நிலக்கரி, இரும்பு, எஃகு ஆகியவற்றின் வணிகத்திலிருந்த அனைத்து வரிகளும் தடைகளும் நீக்கப்பட்டன. ஐரோப்பிய நிலக்கரி, எஃகு சமுதாயத்தின் உருவாக்கமே ஐரோப்பிய ஒருங்கிணைப்பை நோக்கி எடுத்துவைக்கப்பட்ட முதல் அடியாகும். பிரிட்டன் தனது நாட்டின் தொழிற்சாலைகளை நாட்டிற்கு வெளியேயுள்ள ஒரு ஆணையத்திடம் ஒப்படைக்க விரும்பாததால் இவ்வமைப்பில் இணைய மறுத்தது. முதல் ஐந்து ஆண்டு காலத்தில் எஃகு உற்பத்தி ஐம்பது விழுக்காடுகள் அதிகமானதே இவ்வமைப்பின் வெற்றிக்குச் சான்றாகும். இவ்வெற்றிகளால் அனைத்துப் பொருட்களையும் இதைப் போலவே உற்பத்தி செய்து மேலும் முன்னோக்கிச் செல்ல அந்நாடுகள் முடிவு செய்தன. சுங்க வரிகளையும் ஒதுக்கீடுகளையும் படிப்படியாக நீக்கிவிட்டால் சுதந்திரமான போட்டியும், பொதுச்சந்தையும் உருவாகுமென பெல்ஜியத்தின் வெளியுறவுத்துறை அமைச்சரான ஸ்பாக் கூறினார். ஐரோப்பிய நிலக்கரி எஃகு சமுதாய அமைப்பைச் சேர்ந்த ஆறு நாடுகள் ரோமில் மேற்கொண்ட உடன்படிக்கையின் மூலம் ஐரோப்பிய பொருளாதாரச் சமுதாயம் (European Economic Community – EEC) அல்லது ஐரோப்பிய பொதுச் சந்தை (European Common Market – ECM) பிரஸ்ஸல்சை தலைமையிடமாகக் கொண்டு உருவாக்கப்பட்டது. இங்கிலாந்து இதில் இணையவில்லை.

ஐரோப்பிய பொருளாதார சமுதாயம் (EEC)

EEC அமர்வு

ஐரோப்பியப் பொருளாதார சமுதாயமானது, பொருட்கள், சேவைகள், மூலதனம், உழைப்பு ஆகியவை ஓரிடம்விட்டு வேறிடம் செல்வதற்கு இருந்த தடைகளைக் களைந்தது. சந்தைப் போட்டிகளைக் கட்டுப்படுத்தியப் பொதுக் கொள்கைகளையும் அல்லது தனியார் ஒப்பந்தங்களையும் இவ்வமைப்பு தடைசெய்தது. ஒரு பொது வேளாண் கொள்கையும் (Common Agricultural Policy – CAP) ஒரு பொது வெளிநாட்டு வணிகக் கொள்கையும் தோற்றுவிக்கப்பட்டன. இதற்குப் போட்டியாக பிரிட்டன், டென்மார்க், நார்வே, சுவீடன், சுவிட்சர்லாந்து, ஆஸ்திரியா மற்றும் போர்த்துகல் ஆகிய நாடுகள் அங்கம் வகித்த ஐரோப்பிய சுதந்திர வணிகச் சங்கம் (European Free Trade Association – EFTA) எனும் அமைப்பை இங்கிலாந்து 1960இல் உருவாக்கியது. பொதுவான பொருளாதாரக் கொள்கைகள் இல்லாமல் போனதாலும் இந்நாடுகளின் உள்விவகாரங்களில்

12th_History_TM_Unit_15_V2.indd 295 02-01-2023 16:41:10

தலையீடு செய்யும் அதிகாரம் பெற்ற அமைப்புகள் இல்லை என்பதாலும் இவ்வமைப்பு தொடக்கம் முதல் வலிமை குன்றியதாகவே இருந்தது.

1961இல் இங்கிலாந்து ஐரோப்பியப் பொருளாதார சமுதாயத்தில் இணைவதற்கு முடிவு செய்தது. இங்கிலாந்தின் பொருளாதாரம் பலவீனமாக இருந்ததால் அதன் வருகையை பிரான்சின் குடியரசுத்தலைவர் சார்லஸ் டீ கோலே எதிர்த்தார். பின்னர் அவர் பதவி விலகியவுடன் இங்கிலாந்தின் பிரதமர் எட்வர்டு ஹீத் தனது திறமைமிக்க அரசியல் விவேகத்தின் மூலம் இவ்வமைப்பில் இணைவதற்கு வழி ஏற்படுத்தினார். 1973 ஜனவரி 1இல் அயர்லாந்து, டென்மார்க் ஆகிய நாடுகளுடன் இங்கிலாந்தும் இவ்வமைப்பில் இணைந்தது.

ஒற்றை ஐரோப்பியச் சட்டம் (SEA)

1987 ஜூலை 1இல் நடைமுறைக்கு வந்த ஒற்றை ஐரோப்பிய சட்டம் ஐரோப்பிய பொருளாதார சமுதாயத்தினுடைய நோக்கத்தின் எல்லைகளை விரிவடையச் செய்தது. இது உறுப்பு நாடுகள் தங்களுக்கு இடையிலான அயலுறவுக் கொள்கையில் மேலும் தீவிரமாக ஒருங்கிணைந்து செயல்படவேண்டுமெனக் கூறியது. இச்சட்டத்தின்படி ஒவ்வொரு உறுப்பு நாட்டிற்கும் அதன் மக்கட்தொகையின் அடிப்படையில் பல வாக்குகள் வழங்கப்பட்டன. ஒரு சட்டம் நிறைவேற்றப்பட வேண்டுமென்றால் மொத்த உறுப்பினர்களில் தோராயமாக மூன்றில் இரண்டு பகுதி உறுப்பினர்களின் வாக்குகள் தேவை. இப்புதிய செயல்முறை ஐரோப்பிய பாராளுமன்றத்தின் அதிகாரத்தை அதிகரிக்கச் செய்தது. இது 1952 முதல் நடைமுறைக்கு வந்தது குறிப்பாக பாராளுமன்றத்தால் நிராகரிக்கப்பட்ட மசோதாக்கள் அமைச்சர் குழுவின் ஒட்டுமொத்த ஒப்புதலைப் பெற்றால் சட்டமாக்கப்படலாம்.

ஐரோப்பிய ஒன்றியம் (EU)

ஐரோப்பிய பொருளாதார சமுதாயத்தைச் சேர்ந்த உறுப்பினர்கள் ஒன்றிணைந்து 1991 டிசம்பரில் மாஸ்ட்ரிக் உடன்படிக்கையில் கையெழுத்திட்டனர். இதன் வாயிலாக 1993இல் ஒற்றைச் சந்தையுடன் ஐரோப்பிய ஒன்றியம் நிறுவப்பட்டது. ஐரோப்பிய ஒன்றியம் உருவாக்கப்பட்ட பின்னர் ஒன்றிய உறுப்பினர்கள் வெளியுறவுக் கொள்கை, உள்நாட்டுப் பாதுகாப்பு போன்ற ஏனைய துறைகளிலும் இணைந்து பணியாற்றினர். இவ்வுடன்படிக்கை ஒரே ஐரோப்பியப் பணமான யூரோ உருவாக்கப்படுவதற்கு வழிவகுத்தது. 2017இல்

ஐரோப்பிய ஒன்றியத்தின் கொடி – யூரோ நாணயம்

பிரிட்டன் இவ்வமைப்பிலிருந்து வெளியேறியது. (பிரிட்டனின் வெளியேற்றம்(exit), பிரெக்ஸிட் Brexit" என்றழைக்கப்படுகிறது. தற்போது ஐரோப்பிய ஒன்றியத்தில் 27 நாடுகள் அங்கம் வகிக்கின்றன. இதன் தலைமையகம் பெல்ஜியம் நாட்டின் பிரஸ்ஸல்சில் அமைந்துள்ளது.

பனிப்போரின் முடிவு

உலக அளவில் அமெரிக்காவும் சோவியத் ரஷ்யாவும் இரு துருவப் பன்னாட்டுக்கட்டமைப்பை உருவாக்கியிருந்தன. தொடக்கத்தில் சோவியத் யூனியனின் ராணுவத் திறன் வலிமை குன்றியதாகவேயிருந்தது. ஆனால் 1969வாக்கில் சோவியத் யூனியன், அணு ஆயுதத் திறனில் அமெரிக்காவுக்குச் சரிநிகரானது. பரஸ்பரம் உறுதி செய்யப்பட்ட அழிவு (Mutual Assured Destruction – MAD) என்பது இரு சக்திகளையுமே அச்சத்திற்குள்ளாக்கியது. மேலும் அணு ஆயுதப் போட்டி இரு நாடுகளுக்கும் மிகப்பெரும் செலவினத்தை ஏற்படுத்தியது. வரவு செலவுத் திட்டங்களில் பாதுகாப்பிற்கு ஒதுக்கப்படும் பெருமளவிலான நிதி ஒதுக்கீடு இரு நாடுகளுக்கும் இக்கட்டான பொருளாதார நிலைகளை ஏற்படுத்தியது. ஐரோப்பாவில் நடைபெற்ற வலுவான ஆயுதக் குறைப்பு இயக்கங்கள் ஆளுகிற அரசுகளுக்கு அழுத்தம் கொடுத்தன. இவை வல்லரசுகளை பேச்சுவார்த்தைக்கு இட்டுச் சென்றன.

1960களின் பிற்பகுதி முதல் 1970களின் பிற்பகுதி வரையிலான காலப்பகுதி மனக்கசப்பு நீங்கிய (தற்காலிகப் பகைமைத் தவிர்த்த காலம்) காலப்பகுதியென அறியப்பட்டது. இக்காலப் பகுதியில் அமெரிக்காவிற்கும் சோவியத் ரஷ்யாவிற்குமிடையே ஒத்துழைப்பு வணிகமும் அதிகரித்தது. போர்திறம் வாய்ந்த ஆயுதங்கள் கட்டுபாட்டுப் பேச்சுவார்த்தைகள் (Strategic Arms Limitation Talks SALT 1972 & 1979) போர்திறம் வாய்ந்த ஆயுதக் குறைப்பு உடன்படிக்கைகள் (Strategic Arms Reduction Treaties START, 1991)

12th_History_TM_Unit_15_V2.indd 296 02-01-2023 16:41:10

ஆகியன ஒத்துழைப்பும், சகவாழ்வும் நிறைந்த காலத்தின் வருகையை முன்னறிப்புச் செய்தது.

அமெரிக்க உச்சி மாநாட்டில் கோர்பசேவ் உடன் ரொனால்டு ரீகன்

1985இல் மிகைல் கோர்பசேவ் சோவியத் ரஷ்யாவின் அதிபராகத் தேர்ந்தெடுக்கப்பட்டதைத் தொடர்ந்து சோவியத் யூனியனில் வியக்கத்தக்க அரசியல், சமூக மாற்றங்கள் ஏற்படலாயின. கோர்பசேவ் சீர்திருத்தங்கள் மேற்கொள்வதில் உறுதிப்பாட்டுடன் இருந்தார். 1986 பிப்ரவரியில் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநாட்டில் அரசியல், பொருளாதார மறுகட்டமைப்பின் (பிரெஸ்த்ட்ரோகியா–Perestroika) அவசியம் குறித்து விளக்கியதோடு, ஒளிவுமறைவற்ற அல்லது வெளிப்படையான (கிளாஸ்நாஸ்ட்–glasnost) காலம் உருவாக வேண்டுமெனவும் கூறினார். பிரெஸ்த்ட்ரோகியாவின் மூலம் அவர் பல நிறுவனங்களின் மீதிருந்த மையப்படுத்தப்பட்ட கட்டுப்பாடுகளைத் தளர்த்தினர். விவசாயிகளும், பொருள் உற்பத்தியாளர்களும், வணிகர்களும் எதை உற்பத்தி செய்வது, எவ்வளவு உற்பத்தி செய்வது எவ்வளவு விலை வைப்பது என்பதை அவர்களே முடிவு செய்ய அனுமதி வழங்கப்பட்டது.

சோவியத் யூனியனின் நிர்வாகக் கட்டமைப்பை ஜனநாயகப்படுத்துவதற்காக கோர்பசேவால் உருவாக்கப்பட்ட கோட்பாடே கிளாஸ்நாஸ்ட் என்பதாகும். சோவியத் யூனியனின் அரசியல் கட்டமைப்பில் பல அடிப்படை மாற்றங்கள் நிகழ்ந்தன. கம்யூனிஸ்ட் கட்சியின் அதிகாரம் குறைக்கப்பட்டது. சட்டமன்ற உறுப்பினர் பதவிக்குப் பல வேட்பாளர்கள் போட்டியிடும் தேர்தல் முறை நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்டது. அரசு அலுவலர்கள் விமர்சனம் செய்ய அனுமதி வழங்கப்பட்டனர். செய்திகளை சுதந்திரமாகப் பரப்புவதற்கு கிளாஸ்நாஸ்ட் மூலம் ஊடகங்களுக்கு அனுமதி வழங்கப்பட்டது. மக்கள் தாங்கள் நினைத்ததை பேசும் சுதந்திரம் பெற்றனர். அரசுக்கு எதிரான செய்திகளைப் பேசினால் கைது செய்யப்படுவோமோ, நாட்டைவிட்டு வெளியேற்றப்படுவோமோ என மக்கள் கவலை கொள்ளத் தேவையில்லாமல் போயிற்று. இக்கோட்பாடுகள் சோவியத் யூனியனில் புரட்சிகர தாராளவாத அலைகளை உருவாக்கிய அதே சமயத்தில், அவையே சோவியத் யூனியனின் சிதைவுக்கும் காரணமாயிற்று.

போரிஸ் யெல்ட்சின்

ஜிம்மி கார்ட்டர்

பனிப்போர் காலகட்டத்தில் 1989ஆம் ஆண்டு ஒரு திருப்புமுனையாகும், அவ்வாண்டில் போலந்து நாட்டில் சதந்திரமாகத் தேர்தல்கள் நடைபெற்றன. அத்தேர்தலில் போலிஷ் ஒருமைப்பாட்டு இயக்கம் (Polish Solidarity Movement) எனும் கட்சி வெற்றி பெற்றது. கம்யூனிஸ்டுகள் முற்றிலுமாகத் தோற்கடிக்கப்பட்டனர். ஜூலை மாதத்தில் ஐரோப்பிய மன்றத்தில் உரை நிகழ்த்துகையில், கோர்பசேவ் தனக்கு முன்னர் அதிபராக இருந்த பிரஷ்னேவின் கோட்பாடுகளைத் தான் நிராகரிப்பதாகக் கூறினார். மேலும் "நட்பு நாடுகளோ, கூட்டு சேர்ந்திருக்கும் நாடுகளோ அல்லது எந்த நாடுகளாக இருந்தாலும் அந்நாடுகளின் உள்விவகாரங்களில் தலையிடுவது அல்லது அவற்றின் இறையாண்மையைக் கட்டுப்படுத்த முயற்சிப்பது அனுமதிக்க முடியாது" என்றும் கூறினார். 1989 நவம்பரில் பனிப்போரின் மிகமுக்கியச் சின்னமாக விளங்கிய பெர்லின்சுவர் இடிக்கப்பட்டது. 1989 நவம்பர் மாதத்தின் இறுதிப் பகுதியில் மேற்கு ஜெர்மனியின் அதிபரான ஹெல்மட் கோல், நட்பு நாடுகளைக் கலந்தாலோசிக்காமலே திடீரென கிழக்கு ஜெர்மனியில் சுதந்திரமாகத் தேர்தல்கள் நடைபெறுவதற்கான பத்து அம்சத் திட்டத்தை அறிவித்தார். தொடர்ந்து ஜெர்மனியின் இணைப்புக்கும் அழைப்பு விடுத்தார். 1989இன் இறுதியில் கிழக்கு ஐரோப்பா முழுவதிலும் மக்கள் எழுச்சிகள் ஏற்பட்டன. பல்கேரியா தவிர்த்து ஏனைய கம்யூனிச நாடுகளின் தலைவர்கள் பதவிநீக்கம் செய்யப்பட்டனர். மெதுவாகக் கிழக்கு ஐரோப்பியநாடுகள் கம்யூனிசத்துடன் கொண்டிருந்த இணைப்பைத் துண்டித்துக் கொண்டன. இந்நிகழ்வுகளை அறிகுறியாக

எடுத்துக்கொண்ட சோவியத் குடியரசுகள் 1990இன் இடைப்பகுதியில் தங்களைச் சுதந்திர நாடுகளாக அறிவித்துக் கொண்டன. 1991டிசம்பர் 8இல் சோவியத் யூனியன் சிதைந்தது. டிசம்பர் 25இல் கோர்பசேவ் பதவி விலகினார். போரிஸ் யெல்ட்சின் ரஷ்யக் குடியரசின் குடியரசுத் தலைவரானார். சோவியத் யூனியனின் சிதைவோடு பனிப்போரும் ஒரு முடிவுக்கு வந்தது.

போரிஸ் யெல்ட்சின் (1931 – 2007) 1961இல் பொதுவுடைமைக் கட்சியில் சேர்ந்த இவர் 1968இல் கட்சியின் முழுநேர ஊழியரானார். எழுபதுகளில் பரவலாக அறியப்பட்டவரான இவர் கட்சியில் முக்கியப் பதவிகளை வகிக்கத் தொடங்கினார். கோர்பசேவ் பதவிக்கு வந்த பின்னர் அவர் மாஸ்கோ கட்சி அமைப்பிலுள்ள ஊழல்களைக் களைவதற்காக போரிஸ் யெல்ட்சினை (1985) தேர்ந்தெடுத்தார். 1986இல் யெல்ட்சின் பொலிட்பீரோவின் (சோவியத் யூனியனின் உயர்மட்ட கொள்கை முடிவு செய்யும் அமைப்பு) உறுப்பினராக உயர்த்தப்பட்டார். விரைவில் அவர் மாஸ்கோவின் மேயராக நியமிக்கப்பட்டார். கட்சி கூட்டங்கள் சீர்திருத்தப் பணிகள் மிக மெதுவாக நடைபெறுவதாக இவர் விமர்சனம் செய்ததால் கோர்பச்சேவின் எதிர்ப்பைச் சம்பாதித்தார். நிர்வாகம் ஜனநாயகப்படுத்தப்படவேண்டும், பொருளாதாரம் சீர்திருத்தப்படவேண்டும் எனும் கருத்துக்களை அவர் முன்வைத்ததால் சோவியத் வாக்காளர்களிடையே பிரபலமானார். 1989 மார்ச்சில் சோவியத் யூனியனின் புதிய பாராளுமன்றமான மக்கள் பிரதிநிதிகள் சபையில் ஒரு இடத்தைப் பெறுவதில் வெற்றி பெற்றார். ஓராண்டுக்குப் பின்னர், 1990 மே 29இல் கோர்பச்சேவின் விருப்பத்திற்கு எதிராக சோவியத் பாராளுமன்றம் யெல்ட்சினை ரஷ்ய குடியரசின் தலைவராகத் தேர்ந்தெடுத்தது. இவரே சோவியத் யூனியனின் வீழ்ச்சிக்குப் பின்னர் 1991இல் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் தலைவரானார்.

பாடச் சுருக்கம்

- இரண்டாம் உலகபோரின் பிந்தைய சூழலில், நிலைகுலைந்து போன மேற்கு ஐரோப்பியப் பொருளாதாரமும், வல்லரசுகளாக எழுச்சி பெற்றுக்கொண்டிருந்த அமெரிக்கா, சோவியத் ரஷ்யா ஆகியவற்றுடன் இரு–துருவ உலகம் உருவானதும் விளக்கப்பட்டுள்ளன.
- பொருளாதார உதவி, இராணுவ உடன்படிக்கைகள் ஆகியவற்றின் மூலம் தங்கள் மேலாதிக்கத்தை நிறுவப் போட்டியிட்டுக் கொண்டிருந்த வல்லரசுகளின் உத்திகள் விவாதிக்கப்பட்டுள்ளன.
- அமெரிக்காவின் மார்ஷல் திட்டம், அதற்குப் பதிலாக சோவியத் ரஷ்யாவின் மோலோடோவ் திட்டம், நேட்டோ உருவாக்கப்படுதல், அமெரிக்காவின் இவ்வெதிர்ப்புக்கு எதிர்வினையாக சோவியத் ரஷ்யா தனது நட்பு நாடுகளுடன் வார்சா ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டது ஆகியன அடிக்கோடிட்டுக் காட்டப்பட்டுள்ளது.
- மூன்றாவது உலக நாடுகளும் அவைகளின் அணிசேரா இயக்கமும் விவரிக்கப்பட்டுள்ளன.
- ஐக்கிய நாடுகள் சபையும் உலகளாவிய பிரச்சனைகளை குறிப்பாக கொரியப் பிரச்சனை சூயஸ் கால்வாய் சிக்கல், அராபிய இஸ்ரேல் போர் ஆகியவற்றைத் தீர்த்து வைப்பதில் அதுவகித்த பங்கு ஆகியவை எடுத்துரைக்கப்பட்டுள்ளன.
- ஐரோப்பிய ஒற்றுமையின் பரிணாம வளர்ச்சியின் உச்சமாக ஐரோப்பியப் பொருளாதார சமுதாயம் நிறுவப்பட்டதும் அது ஐரோப்பிய ஒன்றியமாக மாறிய வளர்ச்சிப் போக்கும் விவரிக்கப்பட்டுள்ளது.
- சோவியத் யூனியனின் வீழ்ச்சியுடன் பனிப்போர் முடிவுற்றது பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளது.

12th_History_TM_Unit_15_V2.indd 298 02-01-2023 16:41:10

பயிற்சி

RA6OQ

I சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்

1. 1947இன் இறுதியில் கிழக்கு ஐரோப்பாவில் சோவியத் ரஷ்யாவின் செல்வாக்கிலிருந்து விடுபட்டிருந்த ஒரே நாடு ________

   (அ) கிழக்கு ஜெர்மனி

   (ஆ) செக்கோஸ்லோவாக்கியா

   (இ) கிரீஸ்

   (ஈ) துருக்கி

2. **கூற்று:** ஸ்டாலின் சர்ச்சிலை ஒரு போர் விரும்பி என விமர்சித்தார்.

   காரணம்: கம்யூனிசத்திற்கு எதிராக மேற்கு ஐரோப்பிய நாடுகள் கூட்டுசேர வேண்டுமென சர்ச்சில் முன்னதாக அழைப்பு விடுத்திருந்தார்.

   (அ) கூற்று, காரணம் இரண்டும் சரி. காரணம் கூற்றை விளக்குகிறது.

   (ஆ) கூற்று காரணம் இரண்டும் சரி. ஆனால் காரணம் கூற்றை விளக்கவில்லை.

   (இ) கூற்று சரி. காரணம் தவறு.

   (ஈ) கூற்று தவறு. காரணம் சரி.

3. 'பனிப்போர்' எனும் சொல்லை உருவாக்கியவர்

   (அ) பெர்னாட் பரூச் (ஆ) ஜார்ஜ் ஆர்வெல்

   (இ) ஜார்ஜ் கென்னன் (ஈ) சர்ச்சில்

4. **கூற்று:** மார்ஷல் திட்டத்தை "டாலர் ஏகாதிபத்தியம்" என சோவியத் வெளியுறவுத் துறை அமைச்சர் இகழ்ந்தார்.

   காரணம்: சோவியத்தின் கண்ணோட்டத்தில் மார்ஷல் திட்டமென்பது அமெரிக்காவின் செல்வாக்கைப் பரப்புவதற்கான சூழ்ச்சியே ஆகும்.

   (அ) கூற்று, காரணம் இரண்டும் சரி. காரணம் கூற்றை விளக்குகிறது.

   (ஆ) கூற்று காரணம் இரண்டும் சரி. ஆனால் காரணம் கூற்றை விளக்கவில்லை.

   (இ) கூற்று சரி. காரணம் தவறு.

   (ஈ) கூற்று தவறு. காரணம் சரி.

5. மார்ஷல் உதவித் திட்டத்தின் குறிக்கோள் ________

   (அ) ஐரோப்பியப் பொருளாதாரத்தை மறுகட்டுமானம் செய்வது

   (ஆ) முதலாளித்துவத் தொழில் முயற்சிகளைப் பாதுகாப்பது

   (இ) ஐரோப்பாவில் அமெரிக்காவின் மேலாதிக்கத்தை நிறுவுவது

   (ஈ) சோவியத் ரஷ்யாவிற்கு எதிராக இராணுவக் கூட்டமைப்பை உருவாக்குவது

6. ட்ரூமன் கோட்பாடு ________ பரிந்துரைத்தது

   (அ) கம்யூனிசம் பரவுவதைத் தடுப்பதற்கான நிதியுதவி

   (ஆ) காலனிகளிலுள்ள கிளர்ச்சியாளர்களுக்கு ஆயுதங்கள் வழங்குவது

   (இ) கிழக்கு ஐரோப்பிய நாடுகளின் உள்விவகாரங்களில் தலையிடுவது

   (ஈ) அமெரிக்கத் தளபதியின் தலைமையின் கீழ் ஐ.நா சபைக்கு நிரந்தரப் படையை உருவாக்குவது

7. கீழ்க்காண்பனவற்றை காலவரிசைப்படி ஒழுங்கு செய்யவும்.

   1) வார்சா உடன்படிக்கை 2) சென்டோ

   3) சீட்டோ 4) நேட்டோ

   (அ) 4 2 3 1 (ஆ) 1 3 2 4

   (இ) 4 3 2 1 (ஈ) 1 2 3 4

8. ________ பாக்தாத் உடன்படிக்கையின் குறிக்கோளாக இருந்தது.

   (அ) மத்திய கிழக்கில் இங்கிலாந்தின் தலைமையைப் பாதுகாப்பது

   (ஆ) அப்பகுதி சார்ந்த எண்ணெய் வளங்களைச் சுரண்டுவது

   (இ) கம்யூனிஸ்டுகளின் செல்வாக்கைத் தடுப்பது

   (ஈ) ஈராக் அரசை வலிமை குன்றச் செய்வது

9. லெபனானில் அமெரிக்கா தலையிட்டதை ________ எதிர்த்தது

   (அ) துருக்கி (ஆ) ஈராக்

   (இ) இந்தியா (ஈ) பாகிஸ்தான்

10. "மூன்றாம் உலகம்" எனும் பதத்தை உருவாக்கியவர் ________ ஆவார்.

    (அ) ஆல்பிரட் சாவே (ஆ) மார்ஷல்

    (இ) மோலோடோவ் (ஈ) ஹாரி ட்ரூமன்

11. பொருத்திப் பார்த்து, கீழே கொடுக்கப்பட்டுள்ள விடைகளில் சரியானதைத் தேர்வு செய்க

(அ) இந்தோனேசியா	1. ஜவகர்லால் நேரு
(ஆ) எகிப்து	2. டிட்டோ
(இ) கானா	3. குவாமி நுக்ருமா
(ஈ) யுகோஸ்லோவியா	4. கமால் அப்துல் நாசர்
(உ) இந்தியா	5. சுகர்னோ

12th_History_TM_Unit_15_V2.indd 299 02-01-2023 16:41:10

www.tntextbooks.in

	அ	ஆ	இ	ஈ	உ
(அ)	5	3	4	2	1
(ஆ)	1	3	2	4	5
(இ)	5	4	3	2	1
(ஈ)	1	2	3	4	5

12. அணிசேரா இயக்கத்தின் முதல் உச்சி மாநாடு ________ல் நடைபெற்றது
   (அ) பெல்கிரேடு (ஆ) பெய்ஜிங்
   (இ) பாண்டுங் (ஈ) பாலி
13. **கூற்று:** பன்னாட்டு சங்கம் ஒரு தோல்வி என்பதை இரண்டாம் உலகப்போர் நிரூபித்தது.
   காரணம்: மற்றொரு போர் ஏற்படாவண்ணம் தடுக்க ஒரு சக்திவாய்ந்த அமைப்பை உருவாக்க வேண்டியதன் அவசியத்தை தலைவர்கள் உணர்ந்தனர்.
   (அ) கூற்று, காரணம் இரண்டும் சரி. காரணம் கூற்றை விளக்குகிறது.
   (ஆ) கூற்று காரணம் இரண்டும் சரி. ஆனால் காரணம் கூற்றை விளக்கவில்லை.
   (இ) கூற்று சரி. காரணம் தவறு.
   (ஈ) கூற்று தவறு. காரணம் சரி.
14. ஐக்கிய நாடுகள் சபை 1945 அக்டோபர் 24இல் ________ உருவானது.
   (அ) 100 உறுப்பினர்களுடன்
   (ஆ) 72 உறுப்பினர்களுடன்
   (இ) 51 உறுப்பினர்களுடன்
   (ஈ) 126 உறுப்பினர்களுடன்
15. பின்வரும் கூற்றுகளில் எக்கூற்றுகள் சரியானவை?
   கூற்று I: ஐக்கிய நாடுகள் சபையின் தோற்றம் பனிப்போரின் தொடக்கத்துடன் ஒருங்கே நடைபெற்றது.
   கூற்று II: பனிப்போர் காலக்கட்டத்தில், போர்கள் நிகழாமல் தடுப்பதில் ஐ.நா சபை முக்கிய பங்காற்றியது.
   கூற்று III: பாதுகாப்பு சபையின் நிரந்தர உறுப்பினர்கள் தொடர்புடைய பிரச்சனைகளில் ஐ.நா சபை மௌனமான பார்வையாளராகவே இருந்தது.
   (அ) I,II (ஆ) II,III
   (இ) I, III (ஈ) மேற்கூறப்பட்ட அனைத்தும்
16. சூயஸ் கால்வாய் செங்கடலை ________ இணைக்கிறது.
   (அ) ஏடன் வளைகுடாவுடன்
   (ஆ) காம்பே வளைகுடாவுடன்
   (இ) மத்தியதரைக் கடலுடன்
   (ஈ) அரபிக் கடலுடன்
17. ஐ.நா சபையின் முதல் பொதுச் செயலாளர் டிரிக்வே லை ________ சேர்ந்தவராவார்.
   (அ) பர்மா (ஆ) ஜப்பான்
   (இ) சிங்கப்பூர் (ஈ) நார்வே
18. **கூற்று:** 2017இல் பிரிட்டன் ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து வெளியே செல்வதாக (Exit) அறிவித்தது.
   காரணம்: பிரிட்டனின் வெளியேற்றம் 'பிரெக்ஸிட்' (Brexit) என அழைக்கப்படுகிறது.
   (அ) கூற்று, காரணம் இரண்டும் சரி. காரணம் கூற்றை விளக்குகிறது.
   (ஆ) கூற்று காரணம் இரண்டும் சரி. ஆனால் காரணம் கூற்றை விளக்கவில்லை.
   (இ) கூற்று சரி. காரணம் தவறு.
   (ஈ) கூற்று தவறு. காரணம் சரி.
19. கிளாஸ்நாஸ்ட் குறிப்பது ________
   (அ) ஒளிவுமறைவற்ற வெளிப்படைத் தன்மையை
   (ஆ) சோவியத் கம்யூனிச கட்சியை ஜனநாயகப்படுத்தப்படுவதை
   (இ) சோவியத் ஐக்கிய பாராளுமன்றம் மறுகட்டமைப்புச் செய்யப்படுவதை
   (ஈ) பொதுவுடைமைத் தத்துவத்திற்குப் புத்துயிர் அளிப்பதை
20. சோவியத் யூனியன் ________ இல் சிதறுண்டது.
   (அ) நவம்பர் 17, 1991 (ஆ) டிசம்பர் 8, 1991
   (இ) மே1, 1991 (ஈ) அக்டோபர் 17, 1991

II. குறுகிய விடையளிக்கவும்

1. அமெரிக்கா, சோவியத் யூனியன் ஆகியவற்றின் உளவு நிறுவனங்களைக் குறிப்பிடவும்.
2. கம்யூனிசத்தைக் கட்டுக்குள் வைத்தல் எனும் கோட்பாட்டை விளக்குக.
3. ஐ.நா சபையில் நிறைவேற்றப்பட்ட "அமைதிக்காக இணைகிறோம்" எனும் தீர்மானத்தின் சிறப்பினைக் குறிப்பிடவும்
4. 'கோமிங்பார்ம்' குறித்து நீங்கள் அறிவதென்ன?
5. பனிப்போர் காலகட்டத்தைச் சேர்ந்த 'மறைமுக' போர்களுக்கு எடுத்துக்காட்டுகள் தருக.
6. ஹங்கேரியச் சிக்கலின் பின்னணி யாது?
7. ஷூமன் திட்டம் என்றால் என்ன?
8. பிரெஸ்த்ட்ரோகியா கோட்பாட்டின் பொருட் சுருக்கதைக் கூறுக.

12th_History_TM_Unit_15_V2.indd 300 02-01-2023 16:41:10

www.tntextbooks.in

III. சுருக்கமாக விடையளிக்கவும்.

1. அமெரிக்காவால் கட்டுப்படுத்தப்பட்ட நேட்டோவுக்கான பதில் நடவடிக்கையே சோவியத் ரஷ்யாவின் வார்சா உடன்படிக்கை விளக்குக.
2. ஐ.நா சபையின் சாசனம் முடிவாக ஏற்றுக் கொள்ளப்பட்டதன் பல்வேறு கட்டங்கள் குறித்து எழுதுக.
3. நேட்டோ உருவாக்கப்பட்டதின் பின்னணியைக் கண்டறியவும்.
4. சூயஸ் கால்வாய் சிக்கல் குறித்து சுருக்கமாக வரைக
5. நேட்டோவைப் போல ஏன் சீட்டோ (SEATO) பிரபலமடையவில்லை?

IV. விரிவான விடையளிக்கவும்

1. அணிசேரா இயக்கத்தின் இலக்குகளையும் நோக்கங்களையும் கோடிட்டுக் காட்டவும்.
2. அரபு–இஸ்ரேலிய முரண்பாட்டின் தோற்றத்தை விவாதிக்கவும். தொடர்ந்து ஏற்பட்ட நிகழ்வுகள் எவ்வாறு இரு நாடுகளுக்கிடையே 1967இல் பெரும் போர் ஏற்படக் காரணமாயிற்று என்பதை விளக்கவும்.
3. "பாதுகாப்புக்கவுன்சிலின் நிரந்தர உறுப்பினர்கள் தொடர்பு கொண்டுள்ள பிரச்சனைகளில் ஐ.நா சபை மௌனமான பார்வையாளராகவே இருந்தது "பனிப்போர் காலத்து அனுபவங்களின் வாயிலாக இக்கூற்றை விளக்கமாக எடுத்துரைக்கவும்.
4. போரிஸ் யெல்ட்சினின் அரசியல் வளர்ச்சியைக் குறிப்பாக சோவியத் யூனியனின் வீழ்ச்சியில் அவர் வகித்த பங்கின் மீது கவனம் குறித்து விவரிக்கவும்.

V. செயல்பாடுகள்

1. ஐக்கிய நாடுகள் சபை தினத்தன்று (அக்டோபர் 24) மாணவர்களை ஒரு மாதிரி பொது சபை அமர்வை நடத்தச் செய்து இப்பாடத்தில் விவரிக்கப்பட்டுள்ள ஏதேனும் ஒரு பிரச்சனை குறித்து விவாதம் நடத்தச் செய்யலாம்.
2. மாணவர்களை இரு அணிகளாகப் பிரித்து முதலாளித்துவத்தை ஆதரித்தும் எதிர்த்தும் பட்டிமன்ற நிகழ்ச்சி நடத்தலாம்.
3. ஐக்கிய நாடுகள் சபை 1948 டிசம்பர் 10இல் வெளியிட்ட மனித உரிமைப் பிரகடன சாசனத்தை ஆசிரியர்களும் மாணவர்களும் ஆய்வு செய்யலாம்.

மேற்கோள் நூல்கள்

- Dan Stone (ed.), *The Oxford Handbook of Post-War European History,* 2012.
- Norman Lowe, *Mastering Modern World History,* Palgrave Master Series, 2013.
- Peter Calvocoressi, *World Politics Since 1945,* Longman, 2008.
- Hans J. Morgenthau, *Politics among Nations: The Struggle for Power and Peace,* McGraw-Hill, 1993.
- Arjun Dev & Indira Arjun Dev, *History of the World,* Orient BlackSwan, 2009.
- *Encyclopaedia Britannica.*

12th_History_TM_Unit_15_V2.indd 301 02-01-2023 16:41:11

www.tntextbooks.in

A-Z கலைச்சொற்கள்

போரை ஆதரிப்பவர் அல்லது மற்ற நாடுகள் மீது ஆதிக்கத்தை விரும்புபவர்	**warmonger**	a person who advocates war or aggression towards other countries
வசீகரம், வசப்படுதல், ஈர்த்தல்	**enticement**	attraction, temptation
அழித்தது, சூறையாடியது	**devastated**	destroyed, ruined
தகர்த்தது	**shattered**	exhausted, smashed
பேரழிவுமிக்க, பெருங்கேடு விளைவிக்கின்ற	**catastrophic**	disastrous, terrible, dreadful
இனப்படுகொலை	**genocide**	mass slaughter, indiscriminate killing
சரமாரிக் குண்டுவீச்சுத் தாக்குதல்	**bombardment**	a continuous attack with bombs, shells or other missiles
ஒற்றறிதல், வேவுபார்த்தல், ஒற்றர்களைக் கொண்டு எதிரியையோ அல்லது எதிரி நாட்டையோ நெருக்கமாய் கண்காணித்தல்	**espionage**	surveillance; the practice of using spies for close observation of an enemy or enemy country.
போரில் ஈடுபடா ராஜதந்திரம்	**brinkmanship**	the practice of trying to achieve an advantageous outcome by pushing a dangerous event to the brink of active conflict.
மாற்றாக, பதிலாள்	**surrogate**	substitute; represent on behalf of others
கிளர்ச்சி, ஆட்சியை எதிர்த்து கிளர்ந்தெழுதல்	**insurgency**	violent struggle of a group of people who refuse to accept their government's power
பெருங்குழப்பம், ஒழுங்கற்ற நிலை	**chaos**	complete disorder and confusion
வெடி	**detonate**	explode
முத்தரப்பு	**tripartite**	involving three parties or consisting of three parts
சூழ்ச்சி, நிலைமையைச் சாதகமாக்கிக் கொள்ள எடுக்கும் நடவடிக்கை	**ploy**	tactic or trick, action intended for turning a situation to one's own advantage
மக்கள்தொகை ஆய்வாளர்	**demographer**	a person who engages in population studies.
சமரச முயற்சி	**reconciliation**	the process of making two opposite sides agree
குறிப்பிட்ட நோக்கத்திற்காக ஒதுக்கிவை	**earmark**	keep for a particular purpose
மேலாதிக்கம்	**hegemony**	dominance, supremacy

12th_History_TM_Unit_15_V2.indd 302 02-01-2023 16:41:11

www.tntextbooks.in

இணையச் செயல்பாடு

இரண்டாம் உலகப்போருக்குப் பிந்தைய உலகம்

இந்த செயல்பாட்டின் மூலம் பனிப்போர் வரலாற்றை பற்றிய படத்தொகுப்புகளை அறிந்து கொள்ள முடியும்

படிநிலைகள்

படி – 1 : URL அல்லது QR குறியீட்டினைப் பயன்படுத்தி இச்செயல்பாட்டிற்கான இணையப் பக்கத்திற்கு செல்க

படி – 2 : திரையின் மேலே உள்ள மெனுவில் மொழியை மாற்றம் செய்யவும், பின்னர் தேடுபொறியில் "cold war" என்பதை தட்டச்சு செய்யவும்

படி –3 : பனிப்போர் பற்றிய நிகழ்வுகளை வரிசையாக காண திரையின் கீழே தோன்றும் காலக்கோட்டை நகர்த்தவும்



படி 1

படி 2

படி 3

உரலி: https://www.cvce.eu/en

PY3TG

*படங்கள் அடையாளத்திற்கு மட்டுமே.

*தேவையெனில் Adobe Flash ஐ அனுமதிக்க.

12th_History_TM_Unit_15_V2.indd 303 02-01-2023 16:41:13

காலக்கோடு

1 அலகு = 10 ஆண்டுகள்

இந்திய தேசிய இயக்கத்தின் முக்கிய நிகழ்வுகள் (1900–1950)

1900

1905 – வங்கப் பிரிவினை / சுதேசி இயக்கம்
1906 – முஸ்லீம் லீக்
1907 – சூரத் பிளவு
1909 – மிண்டோ – மார்லி சீர்திருத்தம்

1910

1911 – ஆஷ் படுகொலை
1915 – இந்து மகாசபையின் முதலாவது மாநாடு ஹரித்துவாரில் நடைபெறல்
1916 – தன்னாட்சி இயக்கம் / லக்னோ உடன்படிக்கை
1917 – சம்பரான் இயக்கம்
1919 – மாண்டேகு – செம்ஸ்போர்டு சீர்திருத்தம் / ரௌலட் சட்டம் / ஜாலியன் வாலாபாக் படுகொலை

1920

1920 – ஒத்துழையாமை இயக்கம்
1921 – மலபார் கலகம்
1922 – சௌரி சௌரா நிகழ்ச்சி

1930

1930 – தண்டி யாத்திரை
1931 – காந்தி – இர்வின் ஒப்பந்தம்
1932 – வகுப்புவாரி தொகுதி ஒதுக்கீடு / பூனா ஒப்பந்தம்
1937 – மாகாணங்களில் முதலாவது காங்கிரஸ் அமைச்சரவை

1940

1940 – ஆகஸ்ட் கொடை / லாகூர் தீர்மானம்
1942 – கிரிப்ஸ் தூதுக்குழு / வெள்ளையனே வெளியேறு இயக்கம்
1945 –வேவல் திட்டம் / சிம்லா மாநாடு
1946 – அமைச்சரவைத் தூதுக்குழு / நேரடி நடவடிக்கை / இடைக்கால அரசாங்கம் / இராயல் இந்தியக் கடற்படையின் கலகம்
1947 – இந்தியா விடுதலை அடைதல்

1950

1950 – இந்தியா குடியரசு நாடாக மாறுதல்

12th_History_TM_Unit_Timeline_NEW.indd 304 1/6/2022 1:58:59 AM

காலக்கோடு

1 அலகு = 10 ஆண்டுகள்

உலக வரலாற்றில் முக்கிய நிகழ்வுகள் (1900–1950)

1900

1910

1914 – முதலாம் உலகப் போர் தொடக்கம்

1916 – சோம் போர் / வெர்டூன் போர் / ஜட்லாந்து போர்

1917 – ரஷ்யப் புரட்சி / காம்ப்ராய் போர்

1918 – பிரெஸ்ட்–லிடோவ்ஸ்க் உடன்படிக்கை / முதல் உலகப் போர் முடிவு

1919 – பாரிஸ் அமைதி மாநாடு / வெர்செய்ல்ஸ் உடன்படிக்கை

1920

1920 – பன்னாட்டு சங்கம் தோற்றம்

1928 – கெல்லாக்–பிரையாண்ட் உடன்படிக்கை

1929 – பொருளாதாரப் பெருமந்தம் / லேட்டரன் உடன்படிக்கை

1930

1933 – ஆயுதக் குறைப்பு மாநாடு

1938 – மூனிச் ஒப்பந்தம்

1939 – நாஜி–சோவியத் (ஆக்கிரமிப்பு தவிர்ப்பு) ஒப்பந்தம் / இரண்டாம் உலகப் போர் தொடக்கம்

1940

1940 – டங்கிர்க் வெளியேற்றம்

1941 – பேர்ல் துறைமுக சம்பவம்

1942 –மிட்வே கடற்போர் / ஸ்டாலின்கிராட் போர்

1943 – எல் அலாமெய்ன் போர் / முசோலினியின் வீழ்ச்சி

1945 – இரண்டாம் உலகப் போர் முடிவு / ஐக்கிய நாடுகள் சபை தோற்றம்

1946 – பாரிஸ் அமைதி மாநாடு

1949 – சீனப் புரட்சி

1950

மேல்நிலை இரண்டாம் ஆண்டு – வரலாறு
பாடநூல் ஆசிரியர்கள் மற்றும் மேலாய்வாளர்கள் குழுவினர்

பாடக்குழுத் தலைவர்

முனைவர் ஆ. இரா. வேங்கடாசலபதி
பேராசிரியர்
சென்னை வளர்ச்சி ஆராய்ச்சி நிறுவனம்
சென்னை

பாடக்குழு இணைத் தலைவர்

முனைவர் கா.அ. மணிக்குமார்
மேனாள் பேராசிரியர், வரலாற்றுத்துறை
மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்
திருநெல்வேலி

பாடநூல் ஆசிரியர்கள்

முனைவர் உகன் பூட்டியா
உதவிப் பேராசிரியர், வரலாற்றுத்துறை
எஸ்.ஆர்.எம். பல்கலைக்கழகம்
அமராவதி, ஆந்திரப்பிரதேசம்

முனைவர். மாவேந்தர் சிங்
உதவிப் பேராசிரியர்
எஸ்.ஆர்.எம். பல்கலைக்கழகம்
அமராவதி, ஆந்திரப்பிரதேசம்

K. அசோக்
உதவிப் பேராசிரியர், வரலாற்றுத்துறை
சென்னை கிறித்துவக் கல்லூரி
தாம்பரம், சென்னை

S. சந்திரசேகர்
மேனாள் பேராசிரியர், வரலாற்றுத்துறை
பெங்களூர் பல்கலைக்கழகம், பெங்களூரு

முனைவர். E.K. சாந்தா
தனிநிலை ஆராய்ச்சியாளர்
சிக்கிம் பல்கலைக்கழக வளாகம், சிக்கிம்

முனைவர் கா.அ. மணிக்குமார்
மேனாள் பேராசிரியர், வரலாற்றுத்துறை
மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்
திருநெல்வேலி

முனைவர். V. கிருஷ்ண ஆனந்த்
இணைப் பேராசிரியர், வரலாற்றுத்துறை
சிக்கிம் பல்கலைக்கழகம், சிக்கிம்

முனைவர். கனகலதா முகுந்த்
மேனாள் பேராசிரியர்
பொருளாதாரம் மற்றும் சமூக ஆய்வுகள் மையம்
ஐதராபாத்

முனைவர் S. B. தர்சனா
உதவி. பேராசிரியர்
தமிழக மத்திய பல்கலைக்கழகம்
திருவாரூர்.

முனைவர். வெங்கட ராமானுஜம்
இணைப் பேராசிரியர்
சென்னை கிறித்துவக் கல்லூரி, சென்னை

பாட ஆய்வாளர்கள்

முனைவர் கோ. ஜெயக்குமார்
இணைப் பேராசிரியர்
பெரியார் ஈ.வே.ரா. கல்லூரி
திருச்சிராப்பள்ளி

முனைவர் அ. தென்னரசு
இணைப் பேராசிரியர் & துறைத் தலைவர்
அரசு கலைக் கல்லூரி, சேலம்

முனைவர் ஜெ. முருகன்
உதவிப் பேராசிரியர்
அறிஞர் அண்ணா அரசு கலைக் கல்லூரி
ஆத்தூர், சேலம் மாவட்டம்

முனைவர் தே. ச. சரவணன்
துணை இயக்குநர்
தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல்
பணிகள் கழகம், சென்னை

பாட ஆலோசகர் மற்றும் வல்லுநர்

முனைவர் பொன். குமார்
இணை இயக்குநர் (பாடத்திட்டம்)
மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும்
பயிற்சி நிறுவனம், சென்னை

சு. கோமதி மாணிக்கம்
பட்டதாரி ஆசிரியர்
அரசு மேல்நிலைப் பள்ளி
பழைய பெருங்களத்தூர், சென்னை

பெ. பாலமுருகன்
முதுகலை ஆசிரியர்
அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளி
தம்மம்பட்டி, சேலம் மாவட்டம்

வி. வேல்முருகன்
பட்டதாரி ஆசிரியர்
அரசு மேல்நிலைப் பள்ளி
வெள்ளாளகுண்டம், சேலம் மாவட்டம்

அ. ஜாபர் அலி, முதுகலை ஆசிரியர்
அரசு மேல்நிலைப் பள்ளி
கீரிப்பட்டி, சேலம் மாவட்டம்

க.வேலு,
பட்டதாரி ஆசிரியர்
அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளி,
தலைவாசல், சேலம் மாவட்டம்

சகோ. லூர்துமரியாள், முதுகலை ஆசிரியர்
புனித ஜோசப் மகளிர் மேல்நிலைப் பள்ளி
சூரமங்கலம், சேலம்

க. கார்த்திகேயன், முதுகலை ஆசிரியர்
கே.ஏ. நாச்சியப்பா அரசு ஆண்கள்
மேல்நிலைப் பள்ளி, கொங்கணாபுரம், சேலம்

ஜா. ஷகிலா, முதுகலை ஆசிரியர்
பாத்திமா மகளிர் மேல்நிலைப் பள்ளி
ஓமலூர், சேலம் மாவட்டம்

சி. பார்த்திபன், முதுகலை ஆசிரியர்
அரசு மேல்நிலைப் பள்ளி
சுக்கம்பட்டி, சேலம் மாவட்டம்

வெ. உமாமகேஸ்வரி, முதுகலை ஆசிரியர்
எம்.என்.எஸ். அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளி
ஆட்டையாம்பட்டி, சேலம் மாவட்டம்

க. சாரதா, முதுகலை ஆசிரியர்
அரசு மேல்நிலைப் பள்ளி
அழகப்பம்பாளையம் புதூர், சேலம்

ர. தனலட்சுமி, முதுகலை ஆசிரியர்
அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளி
நங்கவள்ளி, சேலம் மாவட்டம்

க. அய்யாதுரை, முதுகலை ஆசிரியர்
அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளி
மேச்சேரி, சேலம் மாவட்டம்

முனைவர் க.சுரேஷ், பட்டதாரி ஆசிரியர்
குமார ராஜா முத்தையா மேல்நிலைப் பள்ளி
அடையாறு, சென்னை

இந்நூல் 80 ஜி.எஸ்.எம். எலிகண்ட் மேப்லித்தோ தாளில் அச்சிடப்பட்டுள்ளது.
ஆப்செட் முறையில் அச்சிட்டோர்:

பாட ஒருங்கிணைப்பாளர்கள்

த. சீனிவாசன், முதல்வர்
மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம்
கிருஷ்ணகிரி

பெ. சுரேஷ்,
முதுகலை ஆசிரியர் (வரலாறு)
அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளி
ஆத்தூர், சேலம் மாவட்டம்

தமிழாக்கம்

முனைவர் S. இரவிச்சந்திரன்
இணைப் பேராசிரியர் (ஓய்வு)
ராஜுஸ் கல்லூரி, ராஜபாளையம், விருதுநகர்

இரா. இராஜ்குமார் பாலசுப்பிரமணியன்
நாடாளுமன்ற மொழிபெயர்ப்பாளர் (தமிழ்), புதுதில்லி

வினோத் வின்செண்ட் ராஜேஷ், உதவிப் பேராசிரியர்
மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழக
உறுப்புக் கல்லூரி, திருநெல்வேலி

முனைவர் க. மா. வேணுகோபால்
மொழிபெயர்ப்பாளர்
பத்திரிகை தகவல் தொடர்பு அலுவலகம், சென்னை

முனைவர் தே. ச. சரவணன், துணை இயக்குநர்
தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம்
சென்னை

ICT ஒருங்கிணைப்பாளர்

து. நாகராஜ்
அரசு மேல்நிலைப் பள்ளி
ராப்பூசல், புதுக்கோட்டை மாவட்டம்

EMIS தொழில்நுட்பக் குழு

இரா.மா.சதீஸ்
மாநில ஒருங்கிணைப்பாளர் தொழில்நுட்பம்,
கல்வி மேலாண்மை தகவல் முறைமை,
ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வி இயக்ககம்.

இரா. அருண் மாருதி செல்வன்,
தொழில்நுட்ப திட்டபணி ஆலோசகர்,
கல்வி மேலாண்மை தகவல் முறைமை,
ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வி இயக்ககம்.

க. ப. சத்தியநாராயணா,
தகவல் தொழில்நுட்ப ஆலோசகர்,
கல்வி மேலாண்மை தகவல் முறைமை,
ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வி இயக்ககம்.

தட்டச்சர்

இரா. மோகனாம்பாள்
வேளச்சேரி, சென்னை

கலை மற்றும் வடிவமைப்பு குழு

ஓவியம்

V. வினோத் குமார்
N. R. யுவராஜ்
பக்கிரிசாமி அண்ணாதுரை

பக்க வடிவமைப்பாளர்கள்

காமாட்சி பாலன் ஆறுமுகம்
ச. அசோக் குமார்
ர. பாலசுப்ரமணி
மா. செல்வக்குமார்
கோபிநாத் ரகுபதி

அட்டை வடிவமைப்பு

கதிர் ஆறுமுகம்

தரக்கட்டுப்பாடு

ராஜேஷ் தங்கப்பன்
ஜெரால்டு வில்சன்
அருண் காமராஜ் பழனிசாமி

ஒருங்கிணைப்பு

ரமேஷ் முனிசாமி

12th_Author_page_Format_2.indd 306 1/6/2022 1:19:14 AM

குறிப்புகள்

12th_Author_page_Format_2.indd 307 1/6/2022 1:19:14 AM

குறிப்புகள்

12th_Author_page_Format_2.indd 308 1/6/2022 1:19:14 AM